தமிழரசு

தமிழ்நாடு அரசின் மாதம் இருமுறைத் தமிழ் ஏடு ஜூலை 1-1970-3

TAMIL NADU ARCHIVES
LIBRARY
17 JUL 1970
MADRAS-8

17 JUL 1970

இவர்கள் எதிர்கால இன்பத்திற்கு

தமிழ்நாடு அரசு பரிசுத் திட்டத்திற்கு நீங்கள் வழங்கும் ஒவ்வொரு ரூபாயும் இவர்களின் மகிழ்ச்சிக்கு அள்ளித் தருவதாகும் ... எதிர்காலத்தை நோக்கியுள்ள இளஞ்சிறுர்களுக்கு நல்ல ஆரோக்கியம், கல்வி மற்றும் வீடுகள் உருவாக அந்தப் பணம் அரசாங்கத் திட்டங்களில் முதலீடு செய்யப்படுகிறது. அத்துடன் நீங்கள் செலவு செய்யும் ஒவ்வொரு ரூபாய்க்கும், அதிகபட்ச எண்ணிக்கையுள்ள பரிசுகளை அடைவதற்கு மகத்தான வாய்ப்பு இருக்கிறது என்பதையும் மறந்துவிட வேண்டாம்.

அடுத்த குலுக்கலுக்கான பரிசுகளின் மொத்தத் தொகை : ரூ. 17,50,000

ஒவ்வொரு வரிசைக்கும் முதல் பரிசு : ரூ. 1,00,000

குலுக்கல் தேதி: 25-7-1970

தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டுத் திட்டம்
இதுவரை உருவாக்கிய புதிய லட்சாதிபதிகள் = 172 பேர்

பரிசுச் சீட்டுகள் விற்பனை விறுவிறுப்பாக நடைபெறுகிறது.
ஒரு சீட்டின் விலை ஒரே ஒரு ரூபாய்தான்!

இன்றே வாங்குங்கள்
தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு

வெளியீடு: இயக்குநர், தமிழ்நாடு அரசு செய்தி விளம்பரத்துறை, சென்னை-9

3



தமிழரசு

மலர் 1] 1-7-1970 [இதழ்

JL
V2llm1N70
N70.1
69585

வணக்கம்

அன்பார்ந்த பெருமக்களே !

நீங்கள் இந்த இதழைப் படிக்கும்போது மற்ற கருத்திதழ்களிலிருந்து இது மாறுபட்டிருப்பதைக் காண்பீர்கள். இதுவரை அரசாங்கத்தின் பல்வேறு துறைகள், தத்தம் ஆக்கப் பணிகளை எடுத்துக்காட்டும் பல்வேறு இதழ்களை வெளியிட்டு வந்தன. அவை அனைத்தையும் ஒருங்கிணைத்து, ஒரே கருத்திதழாகத், 'தமிழரசு' வெளியிடப்பட்டு, இப்போது உங்கள் கரங்களில் தவழ்கிறது. இந்த ஒருங்கிணைப்புக் கருத்தைக் கூறி, இதற்கு ஊக்கமும் ஊட்டினர்கள் நமது முதலமைச்சர் அவர்கள், அவர்களுக்கு எங்கள் ஆழ்ந்த நன்றி.

கருத்தைக் கவரும் வகையிலும், மாதம் இருமுறை இதன் வருகையை நீங்கள் ஆவலோடு எதிர்பார்க்கும் முறையிலும், "தமிழரசு" தரத்திலும் செறிவிலும் உயர்ந்து விளங்குமாறு செய்ய எல்லா முயற்சிகளும் மேற்கொள்வோம். இந்த இதழ் விரிந்து பரவிட உங்கள் ஒத்துழைப்பை வேண்டுகிறோம். "தமிழரசு" இதழ் இன்னும் சிறந்து விளங்குமாறு செய்ய உங்கள் எண்ணங்களை வரவேற்கிறோம்.

"தமிழரசு" முதல் இதழுக்கு வாழ்த்துச் செய்தி அனுப்பியவர்களுக்கும், அன்புள்ளத்தோடு ஆதரவு தந்தவர்களுக்கும் எங்கள் நன்றி உரியது. "அரசாங்கம் நடத்துகிற பத்திரிகை, சுவையான ஏடாக இருக்குமா?" என்று ஐய வினா எழுப்புவோருக்குப் "பொறுத்திருந்து பாருங்கள்!" என்று மட்டும் இப்போது அடக்கத்துடன் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

— ஆசிரியர்

வெற்றி பெறுக!

தமிழ்நாடு அரசாங்கத்தின் பல்வேறு துறைகளிலிருந்து வெளிவரும் பல இத[illegible]லாக, அதிகார பூர்வ ஏடாக "தமிழ் அ[illegible] இதழ் 1970 ஜூலை 1-ந்தேதி முதல் வெளிவருவதை அறிய மகிழ்ச்சியடைகிறேன்.

பல்வே[illegible] அலுவல்களை, குறிப்பாக [illegible] அபிவிருத்தியும் ஒருமுகமாக மக்கள் அ[illegible] இது [illegible] இருக்கும் என்பதால் இது [illegible] எடுக்கப்பட்ட நடவடிக்கையாகும். இ[illegible] இருமுறை இதழ், பரவலாக வி[illegible] மக்கள் நலப் பணிகளுக்குப் பொதுமக்களின் ஆதரவையும் ஒத்துழைப்பையும் பெற்றுத்தரும் [illegible].

புதிய இதழ் வெற்றிகரமாகப் பணியாற்ற என் வாழ்த்துக்கள்.

சர்தார் உஜ்ஜல்சிங்
ஆளுநர், தமிழ்நாடு

உங்கள் கைகளில்...

முதல்வர் வாழ்த்துகிறார்

'தமிழரசு' தமிழ்த் திங்களிருமுறை [illegible]
[illegible]
அரசு உழைத்து [illegible]
[illegible] வெற்றிகளைக் [illegible]
[illegible] இந்த ஏடு
[illegible] பல்வேறு துறை [illegible]
[illegible] இது!
கடமைகள் - [illegible] - [illegible]
[illegible]
[illegible]
[illegible]

உழைப்புக்கு உரம் -
களைப்புக்கு ஆறுதல் -
நினைப்புக்குத் தெம்பு -
நெஞ்சுக்கு வலிவு -

இந்தத் 'தமிழரசு' [illegible]
வழங்கும் வண்ணம் [illegible], [illegible]
பெரிது [illegible]
காண வேண்டுமென்று என் ஆசையை
[illegible]
[illegible]
முதல் இதழ் உங்கள் கைகளில்!

நான் [illegible]!
[illegible]
[illegible]
[illegible] இந்த இதழ் [illegible]!
உங்கள் வாழ்த்துக்கள் என்
[illegible]
[illegible]
வாழ்க தமிழரசு!

வணக்கம்
மு. கருணாநிதி
27/6/70

எம் கடன் பணிசெய்து

கல்வி அமைச்சர்

நாவலர். இரா. நெடுஞ்செழியன்

"தமிழக அரசு!", "தமிழக அரசு!!" என்று எண்ணும்போதெல்லாம் நம் சிந்தை இனிக்கிறது; சொல்லும் போதெல்லாம் நம் வாய் இனிக்கிறது; கேட்கும் போதெல்லாம் நம் செவி இனிக்கிறது! நமது சிந்தைக்கும், செவிக்கும், சொல்லுக்கும் அப்படிச் சுவை ஏற்றிய பெருமை, திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஒப்பற்ற ஒருபெருந் தலைவராகவும், தமிழகத்தின் ஈடும் எடுப்பும் அற்ற முதல்வராகவும் விளங்கிய பேரறிஞர் அண்ணா அவர்களைச் சாரும்.

வீழ்ச்சியுற்றுக் கிடந்த தமிழகத்திற்கு எழுச்சியூட்டி, விசையொடிந்த உடலுக்கு வன்மை ஊட்டி, காழ்ச்சிந்தை மறச்செயல்கள் ஆற்றிக் கடல் போலச் செந்தமிழைப் பெருக்கித், தமிழகத் தாய்க்குப் புதுப் பொலிவையும் வலிவையும் ஊட்டியவர் அறிஞர் அண்ணா அவர்கள் ஆவார்கள். பெயர் இழந்து, பொலிவு இழந்து, வளம் இழந்து, வாழ்வு இழந்து கிடந்த தமிழகத்திற்குத் 'தமிழ்நாடு' என்ற இயற் பெயரை நிலைநாட்டிவிட்டு, அந்தக் காட்சியைக் கண்டு களித்துவிட்டுதான் மறைந்தார் பேரறிஞர் அண்ணா!

1969ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 14ஆம் நாள் பொங்கல் நாளன்றுதான் நமது மாநிலம் 'தமிழ்நாடு' என்று பெயர் பெற்றது; நமது அரசு 'தமிழக அரசு' என்று புகழ் பெற்றது. அறிஞர் அண்ணா அவர்கள் கலந்து கொண்ட கடைசிப் பொதுக்கூட்டமும் அன்றுதான் நடந்தது. தாம் ஆற்ற வேண்டிய கடமையை ஆற்றிவிட்டோம் என்ற களிப்போடுதான் அறிஞர் அண்ணா அவர்கள் மறைந்தார்கள்.

சென்ற மூன்று ஆண்டுக்காலத்தில் தமிழக அரசு ஆற்றி வந்துள்ள பணிகளை விரித்தால் அகன்று கொண்டே போகும்; தொகுத்தால் எஞ்சுவன பலவாக இருக்கும்.

தமிழக அரசு நிலையான உறுதியான ஒரு அரசாக விளங்கி, சட்டம்—அமைதி—ஒழுங்கு ஆகியவற்றைக் காப்பாற்றுவதில் முன்னணியில் நிற்கிறது.

கல்வி வளர்ச்சி—தொழில் வளர்ச்சி—வேளாண்மைப் பெருக்கம் ஆகியவற்றில் சுட்டிக்காட்டத் தக்க அளவு முன்னேற்றத்தை ஏற்படுத்தியுள்ளது; ஏழை எளிய மக்களுக்கு ஏராளமான அளவில் கல்விச் சலுகைகள் அளிக்கப்பட்டிருக்கின்றன; கல்விச் சாலைகள் பரவலாக நிறுவப்பட்டிருக்கின்றன; ஆசிரியர்களின் நலன்கள் பெருமளவுக்குப் பேணப்பட்டிருக்கின்றன; பிற்பட்டோர்—தாழ்த்தப்பட்டோர்க்கான வசதி—வாய்ப்புக்கள் பெருக்கப்பட்டிருக்கின்றன; மருத்துவ வசதிகள் விரிவாக்கப்பட்டிருக்கின்றன; விளைவுபெருக, உற்பத்திமிக, சாலைகள் ஏற்பட, மின்சாரம் கிடைக்க, குடிநீர் சேர திட்டங்கள் பல தீட்டப்பட்டு நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

மக்களுக்குக் கவலையற்ற—வாட்டமற்ற—வருத்தமற்ற—மனநிறைவு கொண்ட—மனமகிழ்ச்சி கொண்ட ஒரு வாழ்வு ஏற்பட வேண்டும் என்பதிலேதான் அறிஞர் அண்ணா அவர்களின் தலைமையில் இயங்கிய தமிழக அரசும், கலைஞர் கருணாநிதி அவர்கள் தலைமையில் இயங்கிவரும் தமிழக அரசும் தொடர்ந்து தொண்டாற்றி வருகின்றன.

'எம் கடன் பணி செய்து கிடப்பதே' என்ற குறிக்கோளை உள்ளத்தில் கொண்டுதான் தமிழக அமைச்சரவை தொண்டாற்றி வருகிறது. தமிழக அரசின் குறிக்கோளையும்—திட்டங்களையும்—பணிகளையும் விளக்கிக் காட்டிப் பொதுமக்களின் உறவையும், தொடர்பையும் உறுதிப்படுத்திப் பொது மக்களுக்கு உறுதுணையாக நிற்கவே 'தமிழரசு' உங்களை நாடி வருகிறது; வரவேற்று மகிழ்வீர்களாக!

முயற்சி!

நிதியமைச்சர்

நாட்டகத்தே வாழும் மக்கள் வாழ்வினை மலரச் செய்து அவர்களை அறிவிலும், ஆற்றலிலும் மிக்கோராய்க் காண்பதே மக்களாட்சியின் பெரு நோக்கம். இவ்வரிய நோக்கத்தினைச் செயல் படுத்தும் முறையால் பேரறிஞர் அண்ணா வழி செல்லும் நமது அரசு ஒவ்வொரு துறையிலும் பெருமைப்படத் தக்க செயல்கள் பலவும் ஆற்றி வருகிறது.

அரசின் ஆக்கப் பணிகளை மக்கள் தெளிவுற அறிந்து கொள்ளவும் அப்பணிகளில் தங்களையும் ஈடுபடுத்திக் கொள்ளவும், தங்களது மேலான கருத்துக்களை அரசிற்கு அவ்வப்போது எடுத்தியம்பவும் ஏற்றதோர் நல்லிதழாக 'தமிழரசு' இயங்க இருப்பது கண்டு அளவிலா மகிழ்ச்சி கொள்ளுகிறேன். அரசின் சார்பில் தனித்தனியே பல இதழ்கள் வெளியிடுவதை ஒருங்கிணைத்து, 'தமிழரசு' என்ற எழிலேட்டை மலரச் செய்த நமது மாண்புமிகு முதல்வர் அவர்களின் இந்தப் புது முயற்சியைத் தமிழ் மக்கள் பெரிதும் வரவேற்பார்கள் என்பதில் சந்தேகமில்லை.

எல்லோரது நல்லிதயங்களிலும் சிறப்பிடம் பெறுவதே தனது அளப்பரிய வெற்றி எனக் கண்டு அவ்வழி பீடு நடை போட்டுச் செல்ல வாழ்த்துகிறேன்.

கே. ஏ. மதியழகன்

நல்வாழ்த்துக்கள்

திருமதி சத்தியவாணிமுத்து

வேளாண்மை அமைச்சர்

23.6.70

தமிழ் நாட்டில் நடைபெறும் ஆட்சி மக்களுக்காக நடைபெறும் மக்களாட்சி. மக்கள் நன்மையைக் குறிக்கோளாகக் கொண்டு நடைபெறும் இந்த அரசின் சாதனைகள் பொதுமக்களுக்கு விளக்கமாக அறிவிக்கப்பட வேண்டும்.

இந்த நோக்கத்திற்காக துவக்கப்பட்டுள்ள 'தமிழரசு' இதழ் சிறப்பாகச் சேவை செய்ய எனது நல்வாழ்த்துக்கள்.

சத்தியவாணி முத்து

தெளிவூட்ட...

9

— பிற்பட்டோர் நல அமைச்சர் —

பேரறிஞர் அண்ணா அவர்கள் கண்ட திமுக அரசு, ஆட்சித் துறையிலே ஒப்பற்ற மறுமலர்ச்சியை அரசியல் உலகம் பாராட்டும்படியாக ஏற்படுத்தியிருக்கிறது. அண்ணாவின் பாதையைப் பின்பற்றி நமது முதல்வர் மாண்புமிகு கலைஞர் அவர்களுடைய - அரசு மக்களின் வாழ்வில் செழிப்பை உருவாக்குவதிலே சிறப்பாக தன் கருத்தாக நிறைவேற்றி வருவதை நாடு அறிந்திருக்கிறது. நல்லோர் பாராட்டி வருகிறார்கள். இந்தியத் துணைக் கண்டத்தில் தமிழகம் இன்று முன்னோடியாக விளங்கி பல்வேறு நலத் திட்டங்களை உருவாக்கியும் நிறைவேற்றியும் வழிகாட்டியாக இருந்து வருகிறது என்று கூறின் மிகையாகாது.

தமிழக அரசு மக்கள் அரசாங்கமாகும் — அதிலும் குறிப்பாக பிற்படுத்தப்பட்ட மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், பாட்டாளிகள் ஆகியோரின் நிரந்தரமான நல்வாழ்வுக்காக ஆற்றிவரும் பணியிலே ஆதாரங்களையும் புள்ளி விவரங்களுடனும், இப்பணிகளின் முழு நோக்கங்களும் போக்கும் உட்பட நிறைவோடு மக்களுக்கு தெளிவூட்ட 'தமிழரசு' பயன்படுகிறது. அதன் பணி வெல்க வெல்க என்று கூறி வாழ்த்துகிறேன்.

அன்புள்ள

என். வி. நடராசன்

[illegible]! வாழ்த்துங்கள்!

திரு. ப. உ. சண்முகம்.

வாருங்கள்!
வாழ்த்துங்கள்!

அரசின் கொள்கைகளை
விளக்கி, நேர்மையாகவும்
பார்வையாகவும் இதழாக்கி
வெளியிட வேண்டுமென்று
நமது முதல்வர் துணிவோடு
எடுத்துக்கொண்ட முயற்சிக்கு
கனிவோடு காத்திருக்கும்
மக்கள் வரவேற்பர், வாழ்த்
துவார் என்று நம்புகிறேன்.

ப.உ. சண்முகம்.

[illegible] கருவி

தொழிலமைச்சர்

மக்களாட்சியில், அரசின் செயல் திட்டங்களை அனைவருக்கும் தெரிவிப்பது இன்றியமையாததாகும். மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்துவதற்கும், வறுமையைப் போக்கி வளத்தினைப் பெருக்குவதற்கும், தமிழக அரசு அரும்பாடுபட்டு அரிய பல திட்டங்களை உருவாக்கி, செயல்படுத்தி வருகின்றது. இத்தகைய மாபெரும் முயற்சிகள் மக்களின் கூட்டுறவின்றி வெற்றிபெற முடியாது. எனவே, அரசின் திட்டங்களும் செயல்களும் பொது மக்களுக்கு அறிவிக்கப்பட வேண்டும்.

ஜனநாயக ஆட்சி முறையில் பேச்சும் எழுத்தும் அரிய ஆயுதங்களாகும். வறுமை மிகுந்த நமது நாட்டில் எத்தனையோ செயல் திட்டங்களை உருவாக்கி மக்களது வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கும், நாட்டின் செல்வம் பெருகிடச் செய்வதற்கும், செயல்படுத்தினாலும் மக்களுக்கு எளிதில் மனநிறைவளிப்பது கடினம். செயல் படுத்தும் திட்டங்களையும் மக்களுக்கு விளக்கிக் கூற மறந்தோமானால் ஆட்சி இயந் திரம் பயனற்றதாகிவிடும்—மக்களது உணர்ச்சிகளைத் தூண்டி அரசின் திட்டங் களுக்கு ஒத்துழைப்புக் கிடைக்காது செய்வது எளிதாகிவிடும். அரசின் கருத்துக்களை, செயல் திட்டங்களைத் தாங்கி வரவிருக்கும் இந்த இதழ் மிகுந்த பயனளிக்கும்.

இந்த நன்னோக்குடன் தொடங்கப்படும் "தமிழரசு" மக்களாட்சியின் திறனையும், பயனையும் மக்களுக்கு எடுத்துக்காட்டி அவர்களது ஒத்துழைப்பைப் பெறும் ஒப்பற்ற கருவியாக உயர்ந்து விளங்க வேண்டுமென வாழ்த்துகிறேன்.

செ. மாதவன்

கொள்கை வழி நிற்க!

திரு. எஸ்.ஜே.சாதிக்பாட்சா.

பொதுப்பணி அமைச்சர்

தமிழக அரசின் சாதனைகள் பற்றி
மக்களுக்கு விளக்கும் வகையில்
"தமிழரசு" இதழ் மாதமிருமுறை
வெளிவருவது அறிந்து பெரு
மகிழ்ச்சி அடைகிறேன்.

அரசின் கொள்கைகளை
தமிழக மக்களுக்கு எடுத்துச்
சொல்லுவது பத்திரிகைகளின்
கடமையாகும் இக்காலத்தில்
மிக அவசியமாகும்.

பேரறிஞர் அண்ணா அவர்களின்
கொள்கை வழி நின்று கலைஞரின்
ஆட்சியின் சாதனைகளை "தமிழரசு"
இதழ் சிறப்பாக எடுத்துக் காட்ட
எனது நல் வாழ்த்துக்கள்

சாதிக் பாட்சா.

22.6.7

செய்தி

திரு. மா. முத்துசாமி.



"அறிவும் நல் [illegible]
அழகின் தூண்டா விளக்கே
செந்தமிழ் மக்கள் எண்ணம்
செழித்திட ஊற்றி ஊற்றி
அரிய செயல்கள் சேர்த்துக்
இமயம் துலக்கச் செய்வாய்
இருளை கிழிக்கும் வெண்ணிலா உன்
[illegible] ஞாலம் காணும்"

பத்திரிக்கைகளுக்குரிய [illegible] பாவேந்தர் பாடியுள்ள பாடல் இது!
இவ்விலக்கணத்திற்கு ஒரு [illegible] [illegible] [illegible]
விளங்குகிறது "தமிழரசு"!
வளமை தமிழ்மண்ணில் வேரோடித் தழைத்துள்ள [illegible] புதியதோர் [illegible] தமிழரசு.
தமிழ்நாடு அரசின் [illegible] [illegible] [illegible] புதிய திட்டங்களையும் [illegible]
[illegible], அரசு [illegible] [illegible] மக்களுக்கேற்ற செய்திகளை!
சாதனைகளையும் மக்களுக்கேற்ற [illegible] [illegible],
துறைகளையும், பயன்தரும் [illegible] அனைத்தையும், [illegible]
[illegible], [illegible] அறிந்தும், [illegible] புதிய
வகை [illegible] [illegible] [illegible] [illegible] புதிய
வழி பத்திரிகை இது!
மக்களாட்சி முறையை அமைத்தளித்த தமிழ்மண்ணில்
புதிய [illegible] [illegible] [illegible] பணி [illegible]
[illegible] [illegible] 'தமிழரசு' தோன்றியது மகிழ்ச்சிக்குரியதாகும்!
திங்கள் இருமுறை ஏடாக வெளிவரும் 'தமிழரசு'
செய்தித்துறைக்கு ஒரு படைக்கலன் — அறிவுக்கனல்!
அத்துறைக்குப் பொறுப்பேற்றுள்ள தமிழக [illegible]
மாண்புமிகு கலைஞர் அவர்களின் தலைமையில் தமிழரசை
அன்போடு [illegible] அனைவரோடும் [illegible] செய்யும்
எண்ணரும் அன்பை [illegible] [illegible] "வாழ்க தமிழரசு!
வளர்க அதன் புகழ்!" என வாழ்த்தி மகிழ்வோமாக!

22-6-70.

தமிழரசே நீ வாழ்க!

திரு. சி.பா. ஆதித்தனார்.

[illegible]

தமிழரசே, நீ வாழ்க

மாதம் இருமுறை மலரும் "தமிழரசு" என்ற வெளியீடு தமிழ் மக்களுக்கு, செய்தித்துறையினர் அளிக்கும் இன்பவிருந்தாகும்.

அரசின் பற்பல துறைகளிலிருந்து வெளியாகிக் கொண்டிருந்த, ஏழு பத்திரிகைகள், ஒருங்கிணைந்து, "தமிழரசு" என்ற புதிய வடிவத்தைப் பெற்றுள்ளன. சிதறிக் கிடந்த மலர்கள் மாலையாகின்றன.

அரசினரால் வெளியிடப்படும் ஏடுகள், சுவையற்றவைகளாகக் காட்சியளிப்பதுண்டு. அதற்கு மாறாக, நறுமணம் வீசி "தமிழரசு" மக்களின் இதயத்தைக் கவர்ந்திடும். வளர்க தமிழரசு.

சி.பா. ஆதித்தனார்



விளக்க...

திரு. கே. ஷ. சுப்பையா.

[illegible]

'தமிழரசு' என்ற மலரில் அரசாங்கத்தின் சாதனைகளை [illegible] இருமுறை [illegible] இதழ் வெளிவருவது அறிந்து [illegible] மகிழ்ச்சியடைகிறேன். சிறந்த அரசு [illegible] அண்ணா அவர்களின், 'ஒன்றே குலம், ஒருவனே தேவன்' என்ற [illegible] நாட்டு மக்களுக்கு [illegible] [illegible] எத்தனையோ.

மக்களுக்கு [illegible] செய்து தருவதில் அரசாங்கம் சிறப்பாக சேவை செய்து வருகிறது. [illegible] மக்கள் நல [illegible] மக்களுக்கு கடந்த 1969 [illegible] வரை 4334 [illegible] திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு பொது மக்களுக்கு அளிக்கப்பட்டுள்ளன. [illegible] இந்த ஆட்சி இது போல் சிறப்பான [illegible] சேவைகள் மேலும் பல ஆற்றும் என்பதில் சந்தேகமில்லை.

சாதனைகளை மக்களுக்கு விளக்கும், 'தமிழரசு' [illegible] வாழ்த்துகிறேன்.

கே. சுப்பையா

2367.

"தமிழரசு" என்னும் பெயரில், அரசு
ஏடு வெளிவருவது கண்டு மிக்க
மகிழ்ச்சி அடைகிறேன். அரசின்
பல்வேறு துறைகள் ஆற்றும் பணிகள்
நாட்டு மக்களுக்கு நல்ல முறையில்
விளக்கிட இதழ் பெரும்பயன்
படுமென நம்புகிறேன்
வெற்றி பெற என் இதயம் கனிந்த
வாழ்த்துக்கள்

ஓ.பி. ராமன்
25/6/70.

அன்றைத் தமிழ் [illegible] ஏறு, பொற்கோ தமிழகம் வளமனைத்திலும்
பூக்காடாய் மாறும் தன்னேரில்லாத் தமிழக அரசு பல்துறை வளர்ச்சிப் பணியாற்றி
வருகிறது. தலைவர் பெரியார் தலைவன் பேரறிஞர் அண்ணா மறைந்தபின்னும்,
[illegible] அடிகோல், பல்வேறு பணிகளால் தமிழகம் [illegible] சிறப்புற்று
[illegible] [illegible] [illegible] [illegible].

[illegible] [illegible] [illegible] [illegible] பல்வேறு, [illegible]
[illegible] [illegible] [illegible] [illegible] தனி [illegible]
[illegible] [illegible] [illegible] [illegible]
[illegible] [illegible] [illegible] [illegible]
[illegible] [illegible]

[illegible] [illegible] [illegible] [illegible] [illegible] பணியாற்றும் தமிழக
[illegible] [illegible] [illegible] [illegible] 'தமிழரசு' [illegible]
[illegible] [illegible] [illegible] [illegible]

பொதுப்பணி, [illegible], [illegible] [illegible]
தமிழகத்தின் புதுப்படையாம் 'தமிழரசு' [illegible]
வேண்டும்!

புத்தரசு வெல்க!
பொன்னேடு வாழ்க!

அன்பன்
கா. வேழவேந்தன்

ஒப்பந்தம்

திரு. சி.பி. சிற்றரசு.

ஆள்வோர் ஆளப்படுவோர் இடையே ஏற்படுகிற புனித ஒப்பந்தத்தையே அரசு என்கிறோம். ஒரு காலத்தில் ஆண்டவர்கள் ஆளப்படுவோர்களாகவும், ஆளப்படுவோர் ஆள்பவராகவும் மாற்றியமைப்பதையே மக்களாட்சி என்கிறோம். எந்தத் தரப்பிலாகிலும் ஒப்பந்தங்கள் மீறப்படுமானால் கிளர்ச்சிகள் தோன்றக் காரணமாகின்றன என்கின்றனர் வல்லுநர்கள். தேவைகள் மலையாய்க் கிடைப்பது மடுவாய்விடும் போதும் கிளர்ச்சிகள் தோன்றுகின்றன. ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை நடக்கும் பொதுத் தேர்தலில் கொடுப்பவன் வாங்குபவனாக, வாங்குபவன் கொடுப்போனாக மாறுகிறான் என்பதை உணர்ந்த நாம், எல்லாரும் ஒற்றுமையாகச் சுமக்கும் சுமையாக அரசைக் கருதுவோமானால் அழிவில்லை. ஆக்கம் நிலைபெறும், ஊக்கம் பிறக்கும், எல்லார்க்கும் எல்லாம் என்று நம் முன்னோர்கள் நமக்காகச் செய்து கொண்ட புனித ஒப்பந்தத்தில் புதிய கையெழுத்திடுவோம். வாழ்க 'தமிழரசு!'

இங்ஙனம்,
சி.பி.சிற்றரசு



நீதிக்கு நீதி

மன்பதை காக்கும் தென்புலங் காவல்
என்முதல் பிழைத்தது; கெடுகஎன் ஆயுள்!
யானே அரசன்? யானே கள்வன்!

என்று, "தேராமன்னா!" என விளித்து நீதிகேட்டு நின்ற கற்புக்கரசி கண்ணகியிடம் கூறி, நெறி பிறழ்ந்தமைக்காக அக்கணமே உயிர்நீத்தான் பாண்டியன் நெடுஞ்செழியன். என்றுமுள தென்மொழியை வளர்த்து வந்த மதுரையில், நீதிக்கு உயிர்நீத்த மாமன்னன் மதுரையில் இன்று நீதிக்கு நீதி (மன்றம்) கண்டிட்டது கலைஞர்தம் மாட்சி நிறைந்த நல்லாட்சி.

கூடல் மதுரையில் இன்று வானளாவி நிற்கும் புதிய நீதிமன்றக் கட்டிடத்திற்கு, மறைந்த முதல்வர் மாபெரும் ஓர் யுகத் தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்கள் 1967, ஏப்ரல் 16 அன்று அடிக்கல் நாட்டினார். அப்போது அவர் "சட்டத்துடன் எனக்குள்ள தொடர்பு மகிழ்ச்சியாக இல்லாவிட்டாலும், சட்ட வல்லுநர்களுடன் உள்ள தொடர்பு, உறவு மகிழ்ச்சியாக இருக்கிறது" என்று அகமகிழ்ந்து குறிப்பிட்டார்.

"சட்டம் இயற்றுவதில் நிதானமும், இயற்றுவதில் உறுதியும் வேண்டும்" என்று அன்று குறிப்பிட்ட பொழுது, சட்ட நிபுணர்களுக்கு மட்டுமன்றி, தனக்கும் சட்டமியற்றுமிடத்தில் உள்ள கழக ஆட்சிக்குமே ஒரு சம்பிராதாயத்தை உண்டாக்கிக் கொண்டார். 1966ல் தஞ்சைத் தரணியில் நடந்த மாணவர் இந்தி எதிர்ப்பு மாநாட்டில் அண்ணா பேருரை ஆற்றுகையில் கலைஞர் தாமதமாக வந்ததால்,

"நான் பேச்சை முடித்துக் கொண்டு வேறு ஊருக்குச் செல்கிறேன். தம்பி கருணாநிதி நான் விட்ட இடத்திலிருந்து தொடங்குவார்" என்று கூறி முடித்தார். அன்று அண்ணா அடுத்த ஊருக்குப் போகும்போது அவ்விடத்தைஏற்று உரையாற்றினார் கலைஞர். இன்று அவர் அடுத்த உலகத்திற்குசென்றுவிட்ட பின்னால் அவர் விட்ட இடத்தை ஏற்று விவேகத்துடன் தமிழக முதல்வராகப் பணிபுரிகின்றார். அண்ணா அன்று தன் கைப்பட அடிக்கல் நாட்டிய (மதுரை நீதி மன்றக் கட்டிடத்தை இம்மாதம் 14ஆம்நாள் புலிக்கொடிக்குச் சொந்தக்காரர் தமிழக முதல்வர் கலைஞர், நீதிபதி திரு. வீராச்சாமி அவர்கள் தலைமையில் திறந்திட்டார்.

நாயக்கர் கால ஆட்சியில் நீதி பரிபாலனம் எப்படி நடந்தது என்பது சுவைமிக்க ஒன்றாகும். பாளையக்காரர்களே அவ்வப்பகுதிகளில் அவ்வப்போது உண்டாகும் குற்றங்களைத் தீர விசாரித்து தண்டனை விதித்தனர். கொலை, கொள்ளை போன்ற பெருங்குற்றங்களுக்கு சிரம் அறுத்தல் எனும் கடுந்தண்டனை வழங்கப்பட்டது. நிலத்தகராறு சொத்துப் பிரிவினை போன்ற வழக்குகளை ஊர்ப்பஞ்சாயத்து கூட்டி வாதிப்பிரதிவாதங்களைக் கேட்டு கடவுள்முன் சத்தியம் செய்யச் சொல்லி நீதி

வழங்கி முடிவு காண்பர். தலைநகரங்களில், இன்றைய நீதிமன்றம் போன்ற அமைப்பை நாயக்க மன்னர்கள் ஏற்படுத்தி இருந்தனர். வெள்ளையரிடம் இருந்து இந்தியா விடுபட்ட பின்னரும் பல நாட்கள் வரை நீதிமன்ற அமைப்பு இன்று போல், அமையவில்லை. இராணுவச் சட்டப்படி கலகக்காரர்களையும், கொள்ளைக்காரர்களையும் தண்டித்தனர். ஆனால் ஏனைய குற்றவாளிகளை மாவட்ட ஆட்சித் தலைவரே விசாரித்து நீதி வழங்கி வந்தார். 1802ல் கார்ன் வாலிஸ் பிரபு கொண்டு வந்த சட்டத்திற்குப் பிறகுதான் இன்றுள்ள நீதித்துறை நிர்வாகம் ஆரம்பம் ஆயிற்று. மாவட்ட ஆட்சித் தலைவருக்குள்ள நீதித்துறை அதிகாரம் ரத்துச் செய்யப்பட்டதால் இராமநாதபுரத்தில் முதல்மாவட்ட நீதிமன்றம் அமைக்கப் பட்டது. மாவட்ட அளவில் முடிந்ததும் திருச்சியில் அமைந்த ''புரவின்சியல் கோர்ட்''டில் அப்பீல் செய்யலாம். இதற்கிடையில் இராமநாதபுரத்தில் இருந்த நீதிமன்றம் மதுரைக்கு மாற்றப்பட்டது. பின்னர் 1816 ஆம் ஆண்டில் புரவின்சியல் கோர்ட்டுகள் சில இடங்களில் அமைக்கப்பட்டன. மாவட்ட நீதி மன்றங்கள் அதிக புதிய அதிகாரங்களுடன் செயல்படத், தற்போதுள்ள மாவட்ட நீதிமன்றங்களும், உயர் நீதிமன்றங்களும் 1873 ஆண்டுச் சட்டப்படி ஏற்பட்டன.

திருமலை நாயக்கர் அரண்மனை

நாயக்கர் கால ஆட்சியில் ஏற்படுத்தப்பட்ட திருமலை நாயக்கர் மகால் அன்றைய நீதி பரிபாலனத்திற்குப்பெரிதும் பயன்படுத்தப்பட்டு வந்தது. அதற்கேற்ப நல்ல முறையில் அமைந்திருந்தது அம் மகால். ஆங்கிலேயேர் ஆட்சியின் போது ஆரம்ப காலத்தில் இராணுவவீரர்கள் உறைவிடமாகப் பயன்படுத்தப்பட்டது. பின்னர் தண்டனை பெற்ற கைதிகளுக்கான காகிதத் தொழிற்சாலை அமைந்து இருந்ததாக 1821 ஆம் ஆண்டு ஆய்வுப்படி தெரிகிறது.

1837ல் கைத்தறி நெசவாளர்கள் அவர்களது வேலைக்குப் பயன்படுத்தினர். 1857ல் அங்கே மாவட்ட நீதிமன்றம், துணை நீதிமன்றம் முதலியன அமைக்கப் பட்டன. 1858ல் ஏற்பட்ட பேய் மழையால் திருமலை நாயக்கர் படுக்கையறையாகப் பயன் படுத்திய அறையின் மேற்குப் பகுதி சுவர் பழுதுபட்டது.

வைகையின் வடகரையில்

மகால் இடிந்து விழும் நிலையிலிருப்பதை அறிந்து, இடம் மாற்றம் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. எனினும் இரு மாவட்டங்களின் நீதிமன்றங்களும் அங்குதான் தொடர்ந்து நடைபெற்று வந்தன. ஆனால் கழக அரசு பதவி ஏற்ற சில மாதங்களிலேயே பேரறிஞர் அண்ணா அவர்களால், 1967 ஏப்ரல் 16ம் நாள் கால் கோள்விழா எடுக்கப்பட்டது. புதிதாக கட்டப்பட்டுள்ள நீதிமன்றங்கள், மதுரைக்கு வடக்கே பொய்யாக் குலக்கொடி என புகழ் படைத்த வைகையாற்றின் வடகரையில் மேலூர் செல்லும் பெருவழியின் வடசரகத்தில் செங்குளம் கண்மாய் நிலப் பரப்பில் 14 ஏக்கர் பரப்பளவில் வண்ணக் கலையழகுத் தோற்றத்துடன் அரும் பெரும் கட்டடங்களாக ஏறத்தாழ 35 லட்ச ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டது.

மொத்தம் 27 கோர்ட்டுகள் இவ்வழகிய மூன்றடுக்குக் கட்டிடத்தில் இன்று அமைந்துள்ளன. தபால் நிலையம், ஸ்டேட் பாங்க், தொலை பேசித் தொடர்பகம், உணவகம் ஆகிய நவீனவசதிகள் அமைக்கப்பட்டு நகருக்கு அழகுத் தோற்றமாய் அமைந்துள்ளது.

தேரோடும் மதுரையில் திருவிழா

மதுரையும், இராமநாதபுரமும் மறவர் புலம் என்பர். வரலாற்றால் ஒன்றிணைந்து வாழ்ந்த இப்பகுதியில் இன்று, நீதி பரிபாலனமும் இணைந்து அமைந்து மதுரையில் செயல்படுகிறது. இப்பகுதி வாழ் மக்களின் நீண்டநாள் வேண்டுகோளாய் அமைந்த நீதிமன்றக் கட்டிட வேட்கை இக் கழக அரசில் இனிதே நிறைவேறி உள்ளது. இம்மாதம் 14ம்நாள் தமிழக முதல்வர் இப் புதிய கட்டிடத்தைத் திறந்து வைத்தார். திருவிழாக் கோலங் கொண்டிருந்த மதுரையில் அவரது பேருரையில்

''அரசு என்பது அழகான தேர். அதை இழுக்கிற நேரத்தில் நீதி முட்டுக்கட்டையாக இருக்கக் கூடாது. நீதி முட்டுக் கட்டையாக இல்லாமல் சறுக்குக் கட்டையாக இருக்க வேண்டும்.'' என்று தலைமை ஏற்ற நீதிபதிக்கும் வழக்கறிஞர்களுக்கும் வேண்டுகோள் விடுத்திட்டார்.

அண்ணா சிலை

இந்தியாவில் இருக்கிற அரசியல் மேதைகளால் மாத்திரமல்லாமல் இந்தத் தரணியில் உள்ள அரசியல் மேதைகளாலும் பாராட்டப் படுபவராக விளங்கிய பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் இந்தக் கட்டிடம் கட்டுவதற்கான ஒப்புதலை உடனடியாகத் தந்தார்கள். ''நன்றி

(தொடர்ச்சி 60ம் பக்கம்)



கூவம் செல்வோமே!*

நீர் இறைக்கும் இயந்திரங்கள் 'தடதட'வென ஒலிக்கின்றன. தரையைச் சமன்படுத்தும் 'புல்டோசர்' இயந்திரங்களின் 'கரகர' ஓசை அருகில் செல்லும் மக்களின் கவனத்தைக் கவருகிறது. சூரிய உதயத்திற்கு முன்பே ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் எறும்பு போல சுறுசுறுப்பாக வேலை செய்கிறார்கள்.

ஆம்! சென்னை நகருக்கு அழகூட்டும் திட்டமாகிய கூவம் சீரமைப்புத் திட்ட வேலைகள் வெகு தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

நகரக் கழிவுகளாலும் சாக்கடை நீராலும் நாற்றத்தைப் பரப்பி வந்தது கூவம் ஆறு. நாற்றத்தை ஒழிக்க, நறுமணம் பரப்பத் தமிழக அரசு திட்டமிட்டது. அழகுமிகுந்த சென்னை நகரில் அவலட்சணமாக இருந்த இந்த ஆற்றைச் சீரமைக்க சுமார் ஒருகோடியே 10 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் அரசாங்கம் திட்டமிட்டுச் செயலாற்றி வருகிறது.

நல்ல நீர்

இத்திட்டத்தின்படி கூவத்தில் நடக்கும் ஆக்கப்பணிகள் என்ன? சென்னை மாநகராட்சியின் புதை வடிகால் திட்டத்தின்படி கூவத்தில் சேரும் சாக்கடைகள் அனைத்தும் அடைக்கப்படுகின்றன. எண்ணூர் அனல் மின் நிலையத்தில் இருந்து கிடைக்கும் நல்ல நீர் பக்கிங்ஹாம் கால்வாய் வழியாகக் கொண்டுவரப் பட்டு கூவத்தில் நிரப்பப்படுகிறது.

நாற்றம் ஒழிகிறது! நறுமணம் கமழ்கிறது! நாற்றத்தை ஒழிப்பதோடு வேலை முடிந்து விடுகிறதா? இல்லை! பணி தொடர்கிறது. ஆற்றின் இருமருங்கிலும் காங்கிரீட் பாதை; சின்னஞ்சிறு அலைகள் தவழும் கூவத்தின் தென்றலை நுகர்ந்து கொண்டே இருபுறங்களிலும் அழகுநடைபோடலாம். நுங்கம்பாக்கம் ரயில் நிலையத்தில் இருந்து கடற்கரை வரை சலசலக்கும் ஆற்றிலே ஓடும் படகுகளில் ஏறி உல்லாச பவனி வரலாம்.

கடற்கரை அருகிலே நீச்சல்குளம், படகு களப் உண்டு. அதை அடுத்து போர் நினைவுச்சின்னத்தின் பக்கத்தில் வண்ண மலர்ப் பூஞ்சோலை!

நாறிக்கிடந்த கூவத்தின் கரையிலே நறுமணப் பூந்தென்றல் வீசுகிறது. பச்சைப்பசேல் என்ற புல்வெளிகள் பார்ப்பவர் மனதிற்குப் பரவச மூட்டுகின்றன.

கூவம் சீரமைப்புத் திட்டம் இரண்டு நிலைகளாகப் பிரித்துப் பூர்த்தி செய்யப்பட்டு வருகிறது.

இரு நிலைகள்

முதல் நிலை வேலையில் முகத்துவாரத்தில், கால்வாய்க்கு மதகு (Regulator) அமைக்கப்பட்டு கடற் பாலத்துடன் மணல்வாரி கட்ட வேண்டிய மூன்று மதகு சுவர்களில் இரண்டு கட்டி முடிக்கப்பட்டன. மூன்றுவது சுவர் கட்டும் வேலை தீவிரமாக நடந்து வருகிறது. கட்டப்பட்டுள்ள இரு மதகு சுவர்களின்மீது பாலம் அமைக்கும் வேலை நடைபெற்று வருகிறது. இந்த வேலைகளின் படி ஆற்று நீர் சீரா ஓடும்படி செய்யப்படுகிறது.

நீச்சல் குளம்

இரண்டாம் கட்ட வேலையில் நீரோட்டத்தைக் கால்வாய்ப் படுத்

நக்சலைட் பாணி வேலைகளையும், நாச சக்திகளின் தீய நடவடிக்கைகளையும், மலர்க்கரம் கொண்டு அணைத்து யாரும் மகிழ்ச்சி தெரிவிக்க மாட்டார்கள்.

இந்திரா காங்கிரசார் நடத்திய ஒரு மாநாட்டில், நாச வேலைகள் சதி வேலைகளை மத்திய சர்க்காரிலே இருக்கின்ற ஆட்சி, தன்னுடைய இரும்புக் கரத்தால் அடக்கும் என்கிற வல்லமை பொருந்திய வாக்கியத்தை அவர்கள் வெளியிட்டதை நான் பத்திரிகையில் படித்தேன்.

ஆகவே நல்லவர்களை அரவணைத்துக் கொள்ள கரும்புக் கரமும்—நல்லவைகளைத் தருவதற்குத் திருக்கரமும் — நாச வேலைகளைத் தடுக்க, இரும்புக் கரமும் ஆட்சியில் உள்ளவர்களுக்கு மிகமிகத் தேவை''

—கலைஞர்.

துதல் பூங்கா, புல்வெளிகள், பாதைகள், நீச்சல்குளம் படகு கிளப் அமைத்தல் முதலியவைகளாகும்.

நுங்கம்பாக்கம் இருப்புப்பாதை பாலத்தில் இருந்து கடற்கரைக்கு அருகில் உள்ள நேப்பியர் பாலம் வரை கூவம் ஆறு கால்வாய்ப்படுத்தும் வேலை தீவிரமாக நடந்துவருகிறது. மொத்தம் 5 மைல் 3 பர்லாங் தூரத்தில் 3 மைல் 6 பர்லாங் கால்வாய்ப்படுத்தும் வேலை முடியும் நிலையில் உள்ளது.

கால்வாய்ப்பகுதியின் கரைகளைப் பாதுகாக்க தடுப்புச் சுவர்கள் கட்ட வேண்டியுள்ளது. இதற்கு 6 லட்சம் சிமெண்டு பலகைகள் தேவை. இவற்றில் 4 லட்சம் சிமிண்டு பலகைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. இதுவரை சுமார் 16,000 அடிகள் வரை இருகரைகளுக்கும் தடுப்புச் சுவர் கட்டப்பட்டுள்ளது.

அண்ணா சதுக்கத்தின் அருகில் படகு கிளப் ஒன்று கட்டப்படுகிறது. இதில் ஓய்வு அறை சிற்றுண்டிச்சாலைக்கான இடம் முதலியன உண்டு. படகு கிளப்பிற்கான வேலைகளில் 70 சதவிகிதம் முடிந்து விட்டது.

பூங்கா வேலை முடிந்தது

படகு கிளப்பிற்கு அடுத்தாற்போல அமையவிருக்கும் நீச்சல் குளத்தின் வேலைகள் விரைவாக நடந்து வருகின்றன. கூவம் சீரமைப்புத் திட்டத்தில் மிக முக்கியமானது ஆற்றின் கரையோரத்தில் வசித்து வந்த குடிசை வாழ் மக்களுக்குத் தீப்பிடிக்காத வீடுகள் அமைத்துக் கொடுத்ததாகும். சீரமைப்பு வேலைகளையொட்டி குடிசைவாழ் மக்களில் 170 பேர்களுக்குத் தீப்பிடிக்காத வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. இன்னும் 72 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன.

போர் நினைவுச்சின்னத்தின் அருகில் பூங்கா அமைக்கும் வேலை முடிந்து விட்டது. பூங்காவில் புதிய சிலைகள் பல வைக்கப்பட்டுள்ளன. நீர் எடுக்கும் மங்கை, போலீஸ்காரர், அகத்தியர், தண்ணீர் பாய்ச்சும் சிறுவன் ஆகிய சிலைகள் வைக்கப்பட்டுள்ளன. ஓய்வு வேண்டுவோர், உல்லாசம் விரும்புவோர் இன்றே கூவம் பூங்காவுக்குச் செல்லலாம்.

அழகு சிறக்கும் கூவத்தின் காட்சிகள் காணலாம்.

நம்மை உன்னிப்பாகக் கவனிக்கிறார்கள்

ஒரு காலத்தில் இந்தியாவில் மகாராஜாக்களும் கயிறு வித்தை செய்யும் மந்திரவாதிகளும்தான் இருக்கிறார்கள் என்று நினைக்கும் நிலைமை இருந்தது. ஆனால் இன்று நம்மை பற்றி மிகச் சிறு விஷயங்களைக் கூட அயல் நாட்டில் கவனிக்கிறார்கள். லண்டன் பி. பி. சி. (பிரிட்டிஷ் ஒலிபரப்புத் துறை) அவர்கள் கேட்ட கேள்விகள் உண்மையிலேயே என்னை பிரமிக்க வைத்தன. அவ்வளவு பெரிய காங்கிரஸ் கட்சியை தி. மு. கழகம் எப்படித் தோற்கடிக்க முடிந்தது; தமிழகத்தில் நிலையான ஆட்சி நிலவும் ரகசியம் என்ன; இங்கு வரப்போகும் முதலமைச்சர் உடல் நிலை எப்படி இருக்கிறது? —போன்ற கேள்விகள் நம்மைப் பற்றி அவர்கள் மிக உன்னிப்பாகக் கவனித்து வருகிறார்கள் என்பதை விளக்கின.

— அமைச்சர் வேழவேந்தன்

23

ஏழையர்க்கு வீட்டுமனை-நிலப்பட்டா

ஏழைமக்கள் வாழ்வை மையமாக வைத்துத் தான் சட்டங்கள் தீட்டப்பட வேண்டும் என்பது பேரறிஞர் அண்ணா அவர்கள் வகுத்துக் கொடுத்த வழி.

நமது நாடு விவசாய நாடு, நிலம் நமது முக்கியமான உற்பத்திச் சாதனம். உற்பத்திச்சாதனம் நாட்டின் உடைமையாக இருக்க வேண்டும் என்பது சமதர்மச் சித்தாந்தம்.

யாருக்கும் தீங்கு செய்யாமல் வன்முறைக்கு இடமில்லாமல் அமைதியான முறையில் சமதர்மச் சித்தாந்தத்தைச் செயல்படுத்தப் புரட்சிகரமான மாறுதல்களைச் செய்து வருகிறது தமிழக அரசு.

தமிழ்நாடு சட்ட மன்றத்தில் 15 ஏக்கர் உச்சவரம்பு முடிவு அறிவிக்கப்பட்ட விதம், இது உண்மையான நிலச் சீர்திருத்தச் சட்டம் என்பதையும் இதனால் மிகுபயன் விளைவது உறுதி என்பதையும் கோடிட்டுக் காட்டுவதாக உள்ளது.

முந்தைய அரசாங்கம் 30 ஏக்கர் உச்சவரம்புச் சட்டம் கொண்டு வந்தது. ஆனால் சுமார் 10 ஆண்டுக் காலமாக அது பற்றியே பேசப்பட்டு வந்ததனால், அதிகப்படியாக இருந்த நிலங்கள் உறவினர் உற்றாருக்கு மாற்றப்பட்டுக் கடைசியில் உச்சவரம்புச் சட்டம் மூலம் பகிர்ந்து அளிக்க நிலம் அதிகமில்லாமல், அச்சட்டம் ''மிச்ச வரம்பு''ச் சட்டமாகப் போய் விட்டது. அத்தகைய நிலைமை நேராமல் சட்டத்தின் முழுப்பயனையும் பெற்றுச் சமூக நீதிக்கு வழிகோலும் முறையில் தற்போதைய 15 ஏக்கர் உச்சவரம்புச் சட்டம் கொண்டுவரப்பட்டது.

15 ஏக்கர் உச்சவரம்புச் சட்டத்தினால் கிடைக்கக் கூடிய பயன்களை முதல்வர் கலைஞர் அவர்கள் அண்மையில் விளக்கமாக எடுத்துரைத்தார்கள்: ''நம்முடைய தமிழ் நாட்டில் இருக்கிற மக்கள்தொகை சுமார் 4 கோடி என்றால் உச்சவரம்புச் சட்டத்தால் பாதிக்கப்படக் கூடியவர்கள் ஏறத்தாழ 30,000 பேர்கள்தான். 15 ஸ்டாண்டர்டு ஏக்கராவுக்கு மேல் 17 ஸ்டாண்டர்டு ஏக்கர் வைத்திருந்தால் அதில் 2 ஸ்டாண்டர்டு ஏக்கர் நிலத்தை அரசு எடுத்துக் கொள்ளும். 30 ஏக்கர் வைத்திருந்தால் 15 ஏக்கரை விட்டுவிட்டு, 15 ஏக்கரை அரசு ஏடுத்துக் கொள்ளும்.

இப்படிச் சராசரி ஒவ்வொருவரிடமிருந்தும் குறைந்தது 6 ஸ்டாண்டர்டு ஏக்கர் வீதம், 30,000 பேர்களிடமிருந்து கிடைப்பதாக—எடுத்துக் கொள்வதாக வைத்துக் கொண்டால் கிட்டத்தட்ட 2 லட்சம் ஏக்கர் நிலம் அரசாங்கத்துக்குக் கிடைக்கும். சட்டத்தில் உள்ளபடி ஈட்டுத்தொகை தந்து அரசு எடுத்துக் கொள்ளும்

மாவட்டத்தின் பெயர்	1968 - 69ல் வழங்கப்பட்ட மனைப்பட்டா	1970 மார்ச் முடிவு வரை வழங்கப் பட்ட மனைப்பட்டா
செங்கற்பட்டு	3,975	9,678
வட ஆர்க்காடு	4,474	11,818
தென் ஆர்க்காடு	5,903	22,996
தஞ்சாவூர்	770	11,034
திருச்சிராப்பள்ளி	936	16,426
மதுரை	316	3,537
இராமநாதபுரம்	37	661
திருநெல்வேலி	1,143	1,201
கன்னியாகுமரி	—	—
சேலம்	789	3,224
தர்மபுரி	54	3,484
கோயம்புத்தூர்	2,799	9,413
நீலகிரி	92	—
மொத்தம்	21,288	93,472

	மாவட்டத்தின் பெயர்	1967—68ல் வழங்கப்பட்ட நிலங்கள் (ஏக்கரில்)	1968—69ல் வழங்கப்பட்ட நிலங்கள் (ஏக்கரில்)	1969—70ல் வழங்கப்பட்ட நிலங்கள் (ஏக்கரில்)
1.	செங்கற்பட்டு	1,971	1,384	13,271
2.	தென் ஆர்க்காடு	3,867	8,477	15,269
3.	வட ஆர்க்காடு	6,727	12,405	15,752
4.	தஞ்சாவூர்	400	348	11,810
5.	திருச்சி	2,207	3,932	18,689
6.	மதுரை	1,047	1,665	16,259
7.	இராமநாதபுரம்	2,065	11,179	24,904
8.	திருநெல்வேலி	626	1,241	26,695
9.	சேலம்	1,947	6,714	11,621
10.	தர்மபுரி	1,120	3,802	11,150
11.	கோயம்புத்தூர்	853	704	10,394
12.	நீலகிரி	16	—	—
	மொத்தம்	22,847	51.852	1,55,813

அந்த 2 லட்சம் ஸ்டாண்டர்டு ஏக்கர் நிலத்தைத் தலைக்கு ஒரு ஏக்கர் என்று கொடுத்தால் கூட 2 லட்சம் ஏழைகளுக்கு அந்த நிலத்தினை வழங்க முடியும். ஆளுக்கு ஒரு ஏக்கர் என்று தனித் தனியாகக் கூட்டுறவு முறையில் விவசாயிகளை எல்லாம் சேர்த்து அமைப்புகளை உருவாக்கலாமா என்பதெல்லாம் விரைவில் தெளிவாக்கப்படும் என்றும் முதல்வர் குறிப்பிட்டார்.

தமிழ் நாடு அரசாங்கம் செயல்படுத்தி வரும் நிலம் வழங்கும் திட்டத்தின் கீழ் 1972 ஆம் ஆண்டு முடிவுக்குள் நிலமில்லாத ஏழைகள் அரிசன மக்கள் முதலியோருக்கு 2,65,000 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டு விடும். வழங்குவதற்கென்று மொத்தம் உள்ள 4,34,000 ஏக்கர் நிலத்திலிருந்து இது தரப்படுகிறது. இந்த நிலத்தில் 1,69,000 ஏக்கர் தரிசு நிலமாகும். 1968–69ல், ஏழை மக்களுக்கு 21,288 வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டன. 1969 ஜூன் மாதத்திலிருந்து 1970 மார்ச் வரை உள்ள காலத்தில் 93,472 வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டன.

விவசாய நிலம் இல்லாத ஏழைகளுக்கு நிலம் வழங்கும் வகையில் 1967–68ல் 22,847 ஏக்கர் நிலங்கள் தரப்பட்டன. 1968-69ல் விவசாய நிலம் வழங்குவதற்கான குறிக்கோள் அளவு 50,000 ஏக்கர்; 1969–70க்கு குறிக்கோள் அளவு ஒரு லட்சம் ஏக்கர். இந்தக் குறிக்கோள் நிறைவேற்றப்பட்டது.

கடந்த மூன்று ஆண்டுகளில் மாவட்ட வாரியாக வழங்கப்பட்ட விவசாய நில விவரம் மேலே உள்ளது.

விவசாயத்துக்கு ஒதுக்கப்படுவதற்காக இன்னும் 4.34 லட்சம் ஏக்கர் நிலங்கள் இருப்பதாக வருவாய்த் துறை வாரியம் தெரிவித்துள்ளது. 3.63 லட்சம் ஏக்கர் தரிசும் 71,000 ஏக்கர் புறம்போக்கும் இதில் அடங்கும். 1970-71ல் 1.45 லட்சம் ஏக்கர் வழங்க, வாரியம் பரிந்துரை செய்திருக்கிறது. இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

சாகுபடிக்கான நிலங்களை ஒதுக்குவது சம்பந்தமாக மாவட்டங்களில் தனி அலுவலர்களடங்கிய 51 யூனிட்டுகள் பணியாற்றி வருகின்றன.

சென்னை மாநகரிலும், மாநகரை ஒட்டி 20 மைல் சுற்று வட்டாரத்துக்கும் உள்ள பகுதிகளிலும் 750 சதுர அடிக்கு மேற்பட்ட நிலங்களை ஒதுக்கவோ, குத்தகைக்குத் தரவோ தடை உள்ளது. இத்தடையை நீக்கும் விஷயம், அரசாங்கத்தின் ஆய்வில் உள்ளது.

மாநிலத்தில் நகரங்களிலும் கிராமப் புறங்களிலும் வீடு இல்லாத ஏழை மக்களுக்கு முடியுமான அளவு மனை நிலங்கள் வழங்கும் திட்டப்படி 1968–69ல் மொத்தம் 21,288 பேருக்கு மனை நிலங்கள் வழங்கப் பட்டன. 1969–70ல் இந்த வகையில் முனைப்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு 1970 மார்ச் வரை மொத்தம் 93,472 பேர்களுக்கு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டன. மாவட்ட வாரியாக மனைப்பட்டா வழங்கப்பட்ட விவரம் முன் பக்கம் இருக்கிறது.

மக்களின் குறைகளை அரசு அலுவலர்கள் நேரில் கேட்டு, குறைகளை உடனுக்குடன் நீக்க வழி செய்துள்ள மனு நீதித் திட்டம், பட்டா மனையும் பட்டா நிலமும் வழங்குவதில் சிறப்பாகப் பயன்பட்டு வருகிறது. மனுநீதித் திட்டத்தின் கீழ் அலுவலர்கள் மாதம் ஒரு முறை 1500 கிராமங்கள் வீதம் சென்று மக்களின் முறையீடுகளைப் பெற்று வருகின்றனர். இதில் முதலிடம் பெறுவது பட்டா வழங்கும் கோரிக்கையும் அதை உடனடியாக நிறைவேற்றுவதுமேயாகும்.



1969 செப்டம்பர் முதல் 1970 மார்ச் வரை மனு நீதித் திட்டத்தின் கீழ் மக்களிடமிருந்து வந்த 1,38,000 மனுக்களில் அலுவலர்கள் அந்தந்தத் தலத்திலேயே 17,457 மனுக்கள் மீது முடிவு எடுத்தனர். பின்னர் ஆய்வுசெய்து 47,999 மனுக்கள் மீது மக்களுக்குச் சாதகமான முடிவு தெரிவிக்கப்பட்டது.

சமூக நீதியைக் கருதி, நிலத்தில் உழுவோரின் உரிமையை ஒட்டி, தற்போதைய தமிழக அரசு, பொறுப்பேற்ற பின்பு இந்த மூன்றாண்டுக் காலத்தில் கீழ்த் தஞ்சை விவசாயக் கூலி நிர்ணய சட்டம், புதுக்கோட்டையில் இனும் ஒழிப்பு சாகுபடியாளர் யார், குத்தகைதாரர்கள் யார் என்பதை வரையறுக்கும் சட்டம், குத்தகைதாரர்கள் பதிவுச் சட்டம் முதலிய பல சட்டங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. விரிவான நிலச் சீர்திருத்தச் சட்டம் தயாராகிக் கொண்டிருக்கிறது என்பதையும் தமிழக நிதி அமைச்சர் அண்மையில் அறிவித்தார்.

அம்மை நோய் அடங்குகிறது!

தமிழகம், உலகின் வளர்ச்சியடைந்த நாடுகளின் நிலையை எய்தியிருக்கிறது—அம்மை நோய் ஒழிப்பில்! வரலாற்றிலேயே முதல் தடவையாக அம்மை நோய் பரவுவது அறவே தடுக்கப்பட்டுவிட்டது. உயிர்ச்சேதத்தையும், வாழ்நாளெல்லாம் மாறாத சிதைவுகளையும், ஏற்படுத்தி வந்த இந்த நோயை ஒழிப்பதில் தமிழகம் மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டியாக உள்ளது.

தொற்று நோயான அம்மை நோய் எல்லா நாடுகளையும் போல இத்துணைக் கண்டத்திலும் நீண்ட காலமாக இருந்து வருகிறது. அம்மை குத்திக் கொள்வதன் காரணமாக அமெரிக்க, ஐரோப்பிய நாடுகள் அம்மை நோயிலிருந்து விடுபட்டுள்ளன. புதிதாக வளர்ச்சி பெற்று வரும் நாடுகளில் தான் அம்மை நோய் ஒரு மாபெரும் பிரச்னையாக இருந்து வருகிறது. அவற்றுள் 80 சதவிகிதம் இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் இருந்து வந்தது.

சில மாநிலங்களில் அதிகமாகவும் சிலவற்றில் குறைவாகவும் இந்தியாவின் எல்லா மாநிலங்களிலும் இந் நோய் இருந்து வருகிறது. தமிழ்நாடும் இதற்கு விதிவிலக்கல்ல. அம்மை நோய் கடந்த 20 ஆண்டுகளாக அதிக அளவில் இருந்த வந்த போதிலும் 1963ல் இருந்து இன்று வரை தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வரும் அம்மை ஒழிப்புத் திட்டத்தால் மாநிலத்தில் நோய் முற்றிலும் ஒழிக்கப்பட்ட நிலை எய்த முடிந்தது.

உயிர்ச்சேதம்

அம்மை குத்திக் கொள்வது சட்டபூர்வமாக கட்டாயமாக்கப் பட்டுள்ளது. ஆண்டாண்டு தோறும் ஆயிரக்கணக்கானோருக்கு அம்மை குத்தப்படுகிறது. இருந்த போதிலும் அம்மை நோயால் உயிர்ச்சேதம் ஏற்பட்டு வந்தது. 1960ல் வல்லுநர் குழுவின் பரிந்துரையின் பேரில் அம்மை ஒழிப்பு முன்னோடித் திட்டம் செங்கல்பட்டு மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டது. அம்மைநோய் ஒழிப்புக்கான தேசியத் திட்டத்தின் கீழ் மாநிலம் முழுதும் இத்திட்டம் செயல்பட வேண்டிய தன் அவசியத்தையும், வழிமுறைகளையும் இது வகுத்துத் தந்தது.

பிறந்த ஆறு மாதங்களுக்குள் குழந்தைகளுக்குக் கட்டாயமாக அம்மை குத்தப்படவேண்டும் என்றாலும், மக்களின் அறியாமையால் அநேக குழந்தைகளுக்கு அம்மை குத்தப்படுவதில்லை. ஆனால் குத்திக் கொள்ளாமல் இருந்தவர்கள் தான் பின்னர் இந்த நோயால் பாதிக்கப்பட்டார்கள்.

அம்மைப்பால் தயாரிப்பதிலும் தமிழகம் முன்னேடியாக இருக்கிறது. கிங் நிறுவனத்தில் தயாரிக்கப்படும் அம்மைப்பால் மிகச் சிறந்ததாகும். ஆனல் இங்கு தயார் செய்யப்படும் அம்மைப்பால் மாநிலத்தில் பல்வேறு பகுதிகளுக்கு அஞ்சல் மூலம் செல்வதற்குள் வீரியத்தை இழந்து விடுவதாகத் தெரிய வந்ததால் தற்போது அவற்றை திரவ மூலத்தில் அனுப்புவதில்லை. குளிர் நிலையில் வைக்கப்பட்டு உலர்த்தப்பட்ட அம்மைப் பால்தான் இன்று வெளியூர்களுக்கு அனுப்பட்டு வருகிறது.

அம்மை ஒழிப்புக்கான தேசியத் திட்டத்தின் கீழ் 1963ல் ஈராண்டு வேலைத்திட்டம் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தை வேறு பல மாநிலங்கள் தொடங்கிக் கைவிட்ட போதிலும் தமிழகம் இதனைத் தொடர்ந்து செயல்படுத்தி வருகின்றது. இடையில் விட்டிருந்த மாநிலங்கள் இதன் தேவையை உணர்ந்து மீண்டும் தொடங்கியுள்ளன.

ஈவரும் இறக்கவில்லை

தமிழ்நாட்டு அரசாங்கம் தொடர்ந்து நிறைவேற்றி வந்த இந்தத் திட்டம் சிறந்த பலனைத் தந்திருக்கிறது. வரலாற்றிலேயே முதன்முதலாகத் தமிழகத்தில் அம்மை நோய் முழு அளவில் ஒழிக்கப் பட்டுள்ளது. 1969ல் இம்மாநிலத்தில் அம்மை நோயால் எவரும் இறக்கவில்லை. தேசிய அளவிலான அம்மைநோய் ஒழிப்புத் திட்டத்தின் கீழ் நன்கு செயல்பட்டு தமிழகம் வெற்றி பெற்றுள்ளதை உலக சுகாதார நிறுவனம் பாராட்டியுள்ளது.

அம்மை நோய் ஒழிப்பில் தமிழகம் அடைந்த வெற்றிக்கு முக்கியமான காரணங்கள் பின்வருமாறு:—

1. இம்மாநிலத்தில் அம்மை ஒழிப்புத் திட்டம் 1963—ல் இருந்து இடைவிடாது செயல்படுத்தப்படுகிறது.

2. இடையூறின்றி முறையாக அன்றுமுதல் இன்று வரை இப்பணி சிறப்பாகக் கண்காணிக்கப் பட்டுவருகிறது.

3. குளிர்நிலையில் வைக்கப்பட்ட உலர்ந்த வீரியமுள்ள அம்மைப் பால் உபயோகிக்கப் படுகிறது. இதனை கிங் நிறுவனம் தயாரித்து வழங்குகிறது.

4. தேசிய அளவில் தொடரப்பட்ட முதல் சுகாதாரக் கல்வித் திட்டம் இம்மாநிலத்திலும் தொடரப்பட்டது.

இத்திட்ட இலக்கை உளத்தில் கொண்டு பணியாளர்கள் ஊக்குவிக்கப்பட்டார்கள். மக்கள் ஒத்துழைப்புடன் இத்திட்டம் இன்று மாபெரும் வெற்றியை, அடைந்துள்ளது.

மக்கள் ஒத்துழைப்பு

அம்மை குத்திக்கொள்ள அஞ்சியவர்களும் இன்று தாங்களே முன் வந்து குழந்தைகளுக்கு அம்மை குத்திச் செல்கின்றனர். சென்னை மாநகரில் குழந்தை பிறந்த மூன்று நான்கு நாட்களில் அம்மை குத்திக் கொள்வது வழக்கமாகி வருகின்றது. மாநிலம் எங்கும் பணிபுரியும் அலுவலர்கள் தங்கள் கடமையை மக்கள் ஒத்துழைப்போடு சரிவரச் செய்து திட்ட இலக்கில் நல்ல வெற்றி அடைந்துள்ளனர். அண்டை மாநிலங்கள் அம்மை ஒழிப்பில் முழு வெற்றி காணும் வரை தமிழகம் இத்திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்தி வரும்.

தாய்மார்கள், தம் குழந்தைகளுக்கு அம்மை குத்துவதை ஒரு நடைமுறைப் பழக்கமாக்கிக் கொண்டால், அம்மை நோய் இங்கு அறவே தலைகாட்டாது செய்துவிடலாம். அம்மை நோயை அடியோடு ஒழித்து விடலாம் என்பதை வளர்ச்சியடைந்த நாடுகள் நிரூபித்துக் காட்டியிருப்பது போல இன்று நாமும் நிரூபித்துக் காட்டி உள்ளோம். எனவே அம்மை ஒழிப்பில் பெற்ற பெரும் வெற்றி நின்று நிலைக்க, அம்மை நோயிலிருந்து தொடர்ந்து நம் தமிழ்நாடு முழுதும் விடுபட பணியாளர்களும் மக்களும் தொடர்ந்து இணைந்து செயல்படுவது இன்றியமையாததாகும்.

அம்மை ஒழிப்பு—
ஒரு கணக்கு :

ஆண்டு	மரணமுற்றேர்
1963	2,559
1965	824
1966	230
1967	71
1968	28
1969	இல்லை!

ஆலங்குளத்தில் அரசு சிமெண்ட்

ஜூன் திங்கள் 14ம் நாள். இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள ஆலங்குளம் விழாக்கோலம் பூண்டு நிற்கிறது. தமிழக முதல்வர் திரு. மு. கருணாநிதி அவர்களும், கல்வி அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்களும் தொழில் அமைச்சர் திரு. செ. மாதவன் அவர்களும் வருகை தருகிறார்கள்.

வரவேற்பு வளைவுகள், அமைச்சர் பெருமக்களை எதிர்கொண்டு அழைக்கின்றன.

பாதையின் இருமருங்கிலும் பூப் போன்ற சிறுமியர் மலர்கள் தூவி அமைச்சர்களை வரவேற்கின்றனர்.

வட்டாரத்து மக்களெல்லாம் உள்ளம் உவகை கொள்ளப் பூரித்து நிற்கின்றனர்.

இந்தச் சிற்றூரில் இத்தகைய பேருவகை ஏன்? விழா ஏன்?

முதல் தொழிற்கூடம்

ஆங்குதான் ரூ. 6.77 கோடி செலவில் துவங்கப்பட்ட மிகப் பிரமாண்டமான தமிழ் நாடு அரசாங்கத்தாரின் சிமிண்ட் தொழிற்சாலை அமைக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் ஏற்கனவே ஆறு சிமிண்ட் தொழிற்சாலைகள் உள்ளன. இருப்பினும் இந்தத் தொழில்கூடத்திற்கு உள்ள தனிப் பெருமை, இது அரசாங்கத்தினரால் துவக்கப்பட்ட முதல் சிமிண்ட் தொழிற்கூடமாகும். எனவேதான் இந்தக் கோலகல விழா.

இந்த சிமிண்ட் தொழிற்சாலைக்குத் தேவையான சுண்ணாம்புக் கற்களைத் தோண்டி எடுக்க அரசு வாங்கியுள்ள நிலத்தின் பரப்பளவு 1,416 ஏக்கர்கள். தொழிற்கூடமும், குடியிருப்புகளும் உள்ள பகுதியின் அளவு 287 ஏக்கர்கள்.

நாள் ஒன்றுக்கு 1200 டன்

இந்தத் தொழிற்கூடத்தில் இரு காளவாய்கள் இருக்கும். முதல் காளவாய் இப்போது இயங்குகிறது. இது, தினம் 600 டன் சிமிண்ட் தயாரிக்கும். தற்போதைய ஆண்டு உற்பத்தி 4 லட்சம் டன் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இரண்டாவது காளவாய் விரைவில் உற்பத்தியைத் துவங்கும். அதன்பின் ஒரு நாள் உற்பத்தி 1200 டன் சிமிண்டாக உயரும்.

ஆலங்குளத்தில் நடைபெற்ற விழாவில் முதல்வர் அவர்கள் சிமிண்ட் தொழிற்சாலையின் மாதிரி ஆலையைத் திறந்து வைத்து சிமிண்ட் உற்பத்தியைத் துவக்கி வைத்தார்கள். கல்வி அமைச்சர் அவர்கள் விழாவிற்குத் தலைமை தாங்கினார்கள்.

தொழில் அமைச்சர் அவர்கள் ஒரு பொத்தானை அமுக்கியதும் சிமிண்டு மூட்டைகள் ஒன்றன்பின் ஒன்றாக வந்து அருகில் நின்ற லாரியை நிரப்பின. அத்துடன் விற்பனையைத் துவக்கி விட்டதற்கு அறிகுறியாக சிறிய சிமிண்ட் மூட்டைகளைத் தொழில் அதிபர்கள் மூவருக்குத் தொழில் அமைச்சர் வழங்கினர்.

புதிய சகாப்தம்

இந்தத் தொழிற்சாலை தொடக்கத்துடன், தமிழகத்தில் சிமிண்ட் உற்பத்தியில் ஒரு புதிய சகாப்தம் துவங்கியுள்ளது. ஒரு நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு அடிப்படையான தேவை சிமிண்ட் ஆகும். கட்டிடங்கள் கட்டுவதற்கு அவை இன்றியமையாதவை என்பதோடு வேளாண்மைக்கும் அவை பேருதவியாக அமைந்துள்ளன. வளம் பெருக்கிடும் நீர்ப்பாசன அணைகள், போக்குவரத்திற்கான சாலைகள், தொழிற்கூடங்கள், வீடுகள், பள்ளிகள், மருத்துவமனைகள், இவை அனைத்தும் நிறுவிட சிமிண்ட் பயன்படுகிறது என்பதனை அனைவரும் அறிவர்.

ஆயினும் வெளிநாட்டுடன் ஒப்பிடும் போது நாம் மிகவும் பின் தங்கியிருக்கிறேம். நமது நாட்டில் ஒரு நபர் பயன்படுத்தும் சராசரி சிமிண்ட் அளவு 22 கிலோகிராம் ஆகும் (1966 நிலவரப்படி). ஆனல் சுவிட்சர்லாந்தில் இந்த அளவு 700 கி. கிராமாகவும், மேற்கு ஜெர்மனியில் 563 ஆகவும், பெல்ஜியத்தில் 463 ஆகவும், பிரான்சு நாட்டில் 451 ஆகவும், இத்தாலியில் 426 ஆகவும், கனடாவில் 498 ஆகவும், ஜப்பானில் 365

ஆகவும், அமெரிக்காவில் 342 ஆகவும் இங்கிலாந்து நாட்டிலே 305 ஆகவும் உள்ளது.

இந்தியத் துணைக் கண்டத்தைப் பொருத்தவரை, நாம் முன்னணியிலேயே நிற்கிறோம். இந்தியாவிலே ஆண்டு ஒன்றுக்கு 170 லட்சம் டன் சிமிண்ட் உற்பத்தி ஆகிறது என்றால் நம்முடைய மாநிலத்தில் 27 லட்சம் டன் உற்பத்தி செய்யப்படுகிறது. ஆந்திரம் 17 லட்சம் டன்னும், மைசூர் ஏறத்தாழ 16 லட்சம் டன்னும் உற்பத்தி செய்கின்றன. அதாவது நமது உற்பத்தி சதவீதம் அகில இந்திய உற்பத்தித் திறனில் 14.5 சதவீதமும், தென்மாவட்ட உற்பத்தித் திறனில் 43 சதவீதமும் ஆகும்.

தென்மாவட்டங்களைப் பொருத்தவரை நமது தேவைக்கு அதிகமாகவே உற்பத்தி உள்ளது. அதாவது சுமார் 20 லட்சம் டன் உபரியாக விழும் அளவிற்கு அதிக உற்பத்தி செய்கிறோம். இவை மேற்கு வங்காளம், பஞ்சாப், அரியானா ஆகிய மாநிலங்களுக்கு அனுப்பப்படுகின்றன. இந்த சிமிண்ட் எல்லா மாநிலத்திலும் ஒரே விலையில் விற்கவேண்டுமென்று ஒரு திட்டத்தை மத்திய அரசு அமுல் படுத்தியிருந்தது.

முதல்வரின் வெற்றி

ஆனால் சிமிண்ட் உபரியாக உற்பத்தியாவதால் 1970 ஜனவரி முதல் இந்த சிமிண்ட் கண்ட்ரோலை நீக்கிவிட மத்திய அரசு தீர்மானித்தது. அவ்வாறு கண்ட்ரோல் நீக்கப்பட்டிருந்தால் அது தமிழக சிமிண்ட் தொழில்களைப் பெரிதும் பாதித்திருக்கும். இதனை அறிந்த தமிழக முதல்வர், இந்தியப் பிரதமரிடம் பலமுறை எடுத்துரைத்து முடிவில் வெற்றி கண்டார். முதல்வரின் முயற்சியினால் தமிழகத்தில் சிமிண்ட் தொழில் பாதிக்கப்படாத சூழ்நிலை உருவாகியுள்ளது.

கண்ட்ரோலை மட்டும் நம்பியிராமல், சிமிண்டினைப் பயன்படுத்தக் கூடிய அளவில் நமது திட்டங்களும் அமைந்துள்ளன,

தமிழக முதல்வர் அவர்கள் 14-6-68 விழாவில் கூறியதுபோல் ''இப்போது நான்காவது திட்டம் நடைமுறைக்கு வரத்தொடங்கியிருக்கிறது. உற்பத்தி செய்யும் சிமிண்டையெல்லாம் பயன்படுத்த ஏராளமான வாய்ப்புகள் உள்ளன.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால் வீராணம் திட்டத்தின் மூலம் சென்னைக்குக் காவிரித் தண்ணீரைக் கொண்டு வருகிற திட்டத்திற்கு 22 கோடி ரூபாய் செலவாகிறதென்றால் அதில் சிமிண்டிற்கு மாத்திரம் 7 கோடி ரூபாயாகும்.

வீராணம் திட்டம் மட்டுமல்ல. 13 கோடி ரூபாயில் அரசின் சார்பில் குடிநீர்த் திட்டத்தையும் நிறைவேற்றியாக வேண்டும். அதற்கும் ஏராளமான சிமிண்ட் தேவைப்படும்.''

வெளிநாட்டுக்கு ஏற்றுமதி

அதுமட்டுமல்ல. 1968-69 ஆண்டில் இந்தியாவிலிருந்து வெளிநாட்டிற்கு ஏற்றுமதியான சிமிண்டில் பாதி தமிழகத்தின் பங்காகும். தமிழ் நாட்டின் சிமிண்ட் ஏற்றுமதியை ஊக்குவிக்க ஏற்கனவே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. சிமிண்ட் கண்ட்ரோலரும், ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேசனும் இதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன. விரைவில் தமிழ் நாடு சிமிண்ட் ஏற்றுமதிச் சந்தையில் இடம் பெறுமென நம்பலாம்.

முடிவாக ஒன்று; தமிழகத்தில் சிமிண்ட் தொழில் வெகுவாக முன்னேற்றமடைய இயற்கை அன்னையின் கருணை அபரிமிதமாக உள்ளது. தமிழகத்தில், குறிப்பாக இராமநாதபுரம், திருச்சி, சேலம் மாவட்டங்களில் சிமிண்ட் உற்பத்திற்கு ஏற்ற மிகவும் உயர்ந்த சுண்ணாம்புக் கற்கள் ஏராளமாகப் பரவிக்கிடக்கின்றன.

எனவே ஆலங்குளத்தில் உற்பத்தியாகும் சிமிண்ட் மிகவும் தரமாக அமைந்துள்ளதில் வியப்பேயில்லை. இங்கு தயாராகும் சிமிண்ட், அறவையிலும், மென்மையிலும், உறுதிப்பாட்டிலும் தரமாக அமைய மணிக்கொருமுறை ஆய்வு செய்யப்படுகிறது. இந்தியத் தரநிர்ணய நெறிக்கு (ஐ.எஸ்.ஐ) ஏற்ற வகையில் தரமாகத் தயாரிக்கப்படுகிறது.

ஆம். ஆலங்குளம் என்ற சிற்றூரில் உருவாக்கப்பட்டுள்ள அரசு நிறுவனமான இந்த சிமிண்ட் தொழிற்சாலை, பொதுத்துறை நிறுவனங்களுக்கு முன்னோடியாக, நம்பிக்கை ஒளியாக அமைந்துள்ளது.

முதல்வர் அவர்கள் கேட்டுக்கொண்டதுபோல் ''இந்தத் தொழிற்சாலை நல்ல வகையில் செயலாற்ற, தொழிலாளர்களுடைய ஒத்துழைப்பு நிரம்பத் தேவை.''

அந்த ஒத்துழைப்பு நல்ல முறையில் கிடைக்குமென்பதில் ஐயமில்லை.

தமிழ்நாடு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. வேழவேந்தன் அவர்கள் ஜுன் திங்கள் முற்பகுதியில் சுவிட்சர்லாந்து, இதாலி, மேற்கு ஜெர்மனி, பிரான்ஸ், இங்கிலாந்து ஆகிய நாடுகளுக்குச் சென்று விட்டு வந்துள்ளார்கள். வெளிநாட்டுப் பயணம் பற்றிய அவர்களது கருத்துகள் கீழே தரப்படுகின்றன.

''அயல்நாடுகளில் உழைக்கும் தொழிலாளர்களிடமிருந்து, முக்கியமாக மேற்கு ஜெர்மனி, பிரிட்டன். இவைகளிடமிருந்து நமது தொழிலாளர்கள் தெரிந்து கொள்ள வேண்டிய விவரங்கள் பல உண்டு. இவைகளில் முதன்மையானது அந்நாட்டுத் தொழிலாளர்கள் உழைப்புக்கு மதிப்புக் கொடுக்கிறார்கள். இந்தக் கடமை உணர்ச்சி காரணமாகத்தான் உலகப் பெரும்போரில் தரைமட்டமான நகரங்கள் இன்று வானளாவிய கட்டிடங்களையும் தொழிற்சாலைகளையும் நிறுவி உலக மார்க்கெட்டுகளில் போட்டியிட முடிகிறது'' என்று தமிழகத் தொழிலாளர்நலத் துறை அமைச்சர் திரு. வேழவேந்தன் ''தமிழரசு''க்கு அளித்த சிறப்புப் பேட்டியில் கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

''நம் நாட்டில் உள்ளது போல் அங்கே வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகள் எதுவும் இல்லை. காரணம் அங்கு வேலை வாய்ப்புக்கான வழிகள் பல இருக்கிறன. ஒரு தொழிலாளியைச் சரியாக நடத்தவில்லை என்றால் அவன் உடனே வேறு வேலை தேடிக் கொண்டு போய்விடுகிறான். இதன் காரணமாகச் சில்லறை விஷயங்களுக்கெல்லாம் அங்கு போராட்டங்கள் எழுவதில்லை. நான் லண்டன் சென்றிருந்தபோது அங்கு பிரிட்டிஷ் பத்திரிகைகள் காரியாலய ஊழியர்கள் வேலைநிறுத்தம் மிக அமைதியான முறையில் நடைபெற்றது. ஊதிய போர்டு நிர்ணயித்த சம்பளம் எல்லாருக்குமே வழங்கப்பட்டிருந்தும் ஒரு சில பத்திரிகைகளில் அதிகமான ஊதியம் தருவதைப் போல் தங்களுக்கும் வேண்டுமென்று கோரி இந்த வேலைநிறுத்தம் நடைபெற்றது.

அந்த நாடுகளில் தொழிற்சங்க இயக்கங்கள் அரசியல் கலப்பில்லாமல் மிக அருமையாக வேலை செய்கின்றன. சில இடங்களில் ஒரு தொழிலுக்கு ஒரு யூனியன் என்று இருந்தும் ஒன்றுக்கு மேற்பட்ட யூனியன்களும் இங்குள்ளது போல் இருக்கின்றன. கால அவகாசமில்லாமையால் முதலாளிகள், தொழிலாளிகள் கூட்டாக நடத்தும் விட்லி கவுன்சில் தொழிற்சங்கங்களைப் பற்றி அறிந்து கொள்ள முடியாமல் போயிற்று. பொதுவாகத் தொழிலாளர்கள் சொந்தமாக மோட்டார் வாகனம் வைத்துக் கொள்ளும் அளவுக்கு நல்ல நிலைமையிலேயே இருக்கிறார்கள். அவர்களிடமிருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டிய மற்றொரு விஷயம் மோட்டார் வண்டி துடைப்பது போன்ற எல்லா வேலைகளையும் அவர்களே செய்து கொள்கிறார்கள். மற்றொரு சிறப்பான விஷயம் ஒவ்வொரு குடும்பமும் தங்களுக்கு வேண்டிய காய்

நம் கைவினைப் பொருட்களுக்கு நல்ல மார்க்கெட்

தமிழர்களால் உருவாக்கப்படும் கைவினைப் பொருட்கள் சிலவற்றை என்னுடன் கொண்டு சென்றிருந்தேன். இவைகளை மிகவும் பாராட்டி, வாங்க அயல் நாட்டினர் தயாராக இருக்கிறார்கள். பிரிட்டிஷ் தூதராலயத்தைச் சேர்ந்த அதிகாரியுடன் இதைப்பற்றிப் பேசினேன். இத்தகைய வேலைப்பாடமைந்த கைவினைப் பொருட்களுக்கு இங்கு நல்ல மார்க்கட் உண்டு என்று அவர் கூறினார். இத்தூதரகத்திலேயே இத்தகைய பொருட்களை வாங்கி பொருட்காட்சி அமைத்து இவைகளுக்கு நல்ல விளம்பரம் தரலாம் என்ற யோசனையை அவர் ஏற்றார். இவ்விதக் கைவினைப் பொருட்களால் அயல்நாட்டுச் செலாவணி நமக்கு அதிகம் கிடைக்கும். இது அரசு பரிசீலிக்க வேண்டிய விஷயம்.

—அமைச்சர் வேழவேந்தன்

கறி, பழ வகைகளைத் தாங்களே உற்பத்தி செய்து கொள்கிறார்கள். ஒரு வீட்டில் தோட்டமில்லையென்றால் ஒரு சிறு தொட்டியையாவது வைத்து அதில் 'செர்ரி' செடிகளை வளர்க்கிறார்கள்.

தொழிற் சங்க காங்கிரஸ் ஸ்தாபனம் 80 லட்சம் தொழிலாளர்களை உறுப்பினர்களாகக் கொண்டு இயங்குகிறது. சாதாரணமான ஒரு தொழிலாளிக்கு மாதம் 1400 மார்க்குகள் மேற்கு ஜெர்மனியில் கொடுக்கப்படுகிறது. (அதாவது நமது இந்திய நாணய மதிப்பு ரூ. 2800) மேற்கு ஜெர்மனியில் எலெக்ட்ரானிக்ஸ் தொழில்கள் அதிகம் இருக்கின்றன.''

நமது நிருபர் இடை மறித்து ''நம் தமிழ்நாடு இத்தகைய ஒரு சுபிட்சமான நிலையை அடைய இன்னும் எவ்வளவு காலம் பிடிக்கும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?'' என்று கேட்டதற்கு, அமைச்சர் பதிலளித்ததாவது:

''நமக்கு எவ்வளவோ பொருளாதாரச் சிக்கல்கள் இருக்கின்றன. எனக்கே இந்த எண்ணம் தோன்றி ஒரு ஜெர்மானியரைக் கேட்டேன். அதற்கு அவர் பதிலளிக்கையில் ''எங்கள் நாடு சீரழிந்துபோனதைக் கண்டு நாங்கள் இடிந்துபோய் உட்கார்ந்து விடவில்லை. நாம் எப்படியும் தலைதூக்கியாகவேண்டும் என்கிற வெறி உணர்ச்சி ஏற்பட்டது. அந்த அடிப்படையில் ஏற்பட்ட உழைப்பின் காரணமாகத்தான் இத்தகைய முன்னேற்றத்தை அடைய முடிந்தது'' என்றார். பண்டைக் காலத் தமிழர்கள் எவ்வளவோ ஆபத்துக்களையும் லட்சியம் செய்யாமல் பாய் மரக்கப்பல்களில் பல நாடுகளுக்குச் சென்று வாணிபம் செய்து பணம் திரட்டினார்கள். இக்காலத் தமிழராலும் ஆகாதது ஒன்றும் [illegible]ல்லை. ஆனால் நாம் முன்னேறு[illegible]ற்குள் அவர்கள் இன்னும் பல [illegible]ங்கு அதிகமாக முன்னேறி விடு[illegible]ர்கள் என்பதில் சந்தேகமில்லை.

நான் முக்கியமாக இந்தப் பயணத்தை மேற்கொண்டது ஜெனிவாவில் நடைபெற்ற அனைத்துலகத் தொழிலாளர் நிறுவனத்தின் மாநாட்டில் பிரதிநிதியாகக் கலந்து கொள்ளவே. இந்திய அரசு தொழிலாளர் நல அமைச்சர் திரு. சஞ்சீவையா தலைமையில் இக்குழு சென்றது. மொரீஷியஸ் தீவிலிருந்து இரு தமிழர்களும், இம்மாநாட்டிற்கு வந்திருந்தனர். மலேசியாவின் தொழில்நல அமைச்சரான திரு. மாணிக்கவாசகம் இம்மாநாட்டின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டது தமிழர்களுக்கே அளித்த பெருமையாகும். மற்றொரு சிறப்பு நமது ஜனாதிபதி திரு. வி. வி. கிரி இம்மாநாட்டில் கலந்து கொண்டது. 43 ஆண்டுகளுக்கு முன்பு கிரிஅவர்கள் தொழிலாளர்களின் பிரதிநிதியாக இம்மாநாட்டில் கலந்துகொண்டதுடன் இந்த நிறுவனம் உருவாக உழைத்ததையும் இச்சங்கத்தின் டைரக்டர் ஜெனரல் மிஸ்டர் வில்ஃபிரட் ஜெங்ஸ் பாராட்டிப் பேசியது நமது நாட்டிற்கே அளித்த தனிப் பெரும் கவுரவமாகும்.

சமீபத்தில் சுதந்திரமடைந்த ஆப்பிரிக்க நாடுகளான தான்சானியா, காம்பியா, தங்கனிகா போன்ற நாடுகளின் பிரதிநிதிகள் ஆர்வத்தோடு வந்திருந்து விவாதங்களில் கலந்து கொண்டு முக்கியப் பங்கேற்றது என்னை மிகவும் கவர்ந்தது.

கடைசியாக ஒன்று குறிப்பிட விரும்புகிறேன். மேல்நாடுகளில் தொழிலகங்களில் உயிர்ப் பாதுகாப்பு, சுகாதார நலம் இவற்றை வளர்க்கும் கேந்திரம் ஒன்று வேலை வாய்ப்புத் துறையினரால் அமைக்கப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டிலும் இது போன்ற ஓர் அமைப்பு ஏற்படுத்தலாம். அந்நாடுகளில் தொழிலாளர்கள் தொழிற்சங்கங்களுக்குச் செலுத்தும் சந்தாவிலிருந்து, மருத்துவ மனைகள், முதலுதவி, பள்ளிகள் இது போன்ற காரியங்களையெல்லாம் நடத்துகிறார்கள். இது மிகவும் பாராட்டுவதற்குரியது.

நான் சென்ற நாடுகளில் என்னை மிகவும் கவர்ந்த இடம் நேப்பிள்ஸ். அங்கே நதிகளையும் ஏரிகளையும் எவ்வளவு நன்றாகப் பயன்படுத்துகிறார்கள் என்பது நேரில் கண்டால்தான் தெரியும். லண்டன், பாரிஸ், ஃப்ரான்க்பர்ட் ஆகிய நகரங்களில் நான் மிகக் குறுகிய காலமே தங்க நேரிட்டதால் மோட்டார் படகின் மூலம் தேம்ஸ் நதி, சீன் நதி, மெயின் நதி இவைகளில்அழைத்துச் சென்று காண்பித்தார்கள். படகின் மூலமாகச் சென்ற பொழுது அந்நகரின் இயற்கைக் காட்சியையும், முக்கியமான இடங்களையும் கண்டு களித்தேன். நம் நாட்டிலும் அது போன்ற ஓர் அமைப்பை கூவம் நதி சீரமைப்பின் பிறகு காணத்தான் போகிறோம் என்பதில் ஐயமில்லை.

நம் நாட்டில் சுற்றுலா வளர்ச்சிக்கான வாய்ப்புகள் ஏராளம் இருக்கின்றன. இவ்விஷயத்திலும் நாம் மேல்நாட்டினரிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டியவை பல உள. அவர்கள் பாதைகளை அமைத்து நிர்வகிக்கும் அழகே தனி. முக்கிய நகரங்களில் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க ஆங்காங்கே முக்கியமான இடங்களில் அடுக்கடுக்கான சாலைகள் (பிளை ஓவர் ரோட்ஸ்) அமைத்துப் போக்குவரத்தைக் கட்டுப்படுத்தி இருக்கிறார்கள். நான் அந்தப் பாதை வழியாகச் சென்று கொண்டிருக்கும்போது மோட்டார் ஓட்டி 100 மைல் வேகத்தில் ஓட்டினார். ஏன் இவ்வளவு வேகமாக ஓட்டுகிறீர்கள் என்று கேட்டதற்கு ''குறைவான வேகத்தில் ஓட்டினால் அபராதம் செலுத்தவேண்டும்'' என்று அவர் கூறியதைக் கேட்டு வியப்படைந்தேன்.

நம் தமிழகத்திற்கு எவ்வளவோ செய்யவேண்டும் என்ற உணர்ச்சியுடனும் செய்து விடலாம் என்ற மன நிறைவுடனும் தாயகம் திரும்பினேன்.''

> ''நல்லவர்கள் யாரும் மாசும் குறைபாடும் சொல்லமுடியாதபடி ஆட்சி நடக்கிறது. இந்த ஆட்சி ஆயுள்வரை நடைபெற்றால் மனக்குறை இல்லாமல் சாவேன்.''
>
> —பெரியார்

களம் கண்ட கருணை

''பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல காலவகை யினானே.''

என்பது பழந்தமிழ்ச் சொல்லோவியம். பழங்காலப் பாடலாயினும் எக்காலத்திற்கும் பொருத்தமானது. குறிப்பாக வேளாண்மை முன்னேற்றம் விஞ்ஞான ரீதியில் செயல்படும் இந்நாளில், புதுப்புது நெல்வகைகள் ஆராய்ச்சியில் தோன்றிக்கொண்டே இருக்கின்றன. புழக்கத்தில் இருந்தவை வழக்கொழிந்து புதுமை யானவை, சிறப்பானவை, திடமானவை பழக்கத்திற்கு கொண்டு வரப்படுகின்றன.

நயமும் சுவையும் இச்சிலி சம்பா (GEB-24) நெல் வகையின்சிறப்பு குணநலன்களை, குறைந்த வயதும், குட்டையானதுமான நோரின்-8 (NORIN-8) என்ற ஜப்பானிய நெல்வகையுடன் ஒட்டு சேர்த்து ஆடுதுறை ஆராய்ச்சிப் பண்ணை உண்டாக்கியதே ஆடுதுறை 27 நெல்வகை. உணவு நெருக்கடி உச்சக் கட்டத்தை அடைந்த வேளையில் குறுகிய காலத்தில் அதிக விளைவு தரும் அருமருந்தாக ஆடுதுறை 27 கருதப்பட்டது. விரைவில் நாடெங்கணும் பரவியது. அந்நேரத்தில் உணவுப் பற்றாக்குறை, உலகக் குறையாக இருந்தமையால், பிலிப்பைன்ஸிலுள்ள ''அனைத்து நாடு அரிசி ஆராய்ச்சி நிலையம்'' அபரிமித விளைச்சல் தரும் ''ஐ. ஆர்.8' என்ற அதிசய நெல் வகையைக் கண்டு பிடித்தது. நாடெங்கணும் பரவலாயிற்று அது.

ஐ. ஆர். 8 நெல் உயர்ந்த மேனி தருவதில் தலைசிறந்தது. ஆனாலும் நாட்டின் உணவுப் பழக்கத்திற்கு சற்று புறம்பானதாகவும், குறிப்பாக ஐயாறுபாயும் தஞ்சை நன்செயின் வடிகால் வசதி குறைவாலும், அறுவடைப் பருவம் மழையில் சிக்கும் நிலையில், வயது சற்று அதிகமாக இருக்கின்றமையாலும் ஐ. ஆர். எட்டு நெல் தஞ்சைப் பகுதியில் புழக்கத்திற்கு வர சற்று கடினமாக இருந்தது. இந்நிலையை சீர் செய்ய வேளாண்மைத்துறையின் ஆராய்ச்சிப் பிரிவு கடிதில் செயல்பட்டு, ஐ. ஆர். 8ன் விளைவுத் திறனையும், குள்ளத் தன்மையையும், ஆடுதுறை - 27ன் வயதையும், நயத்தையும் ஒட்டுச் சேர்த்து கோவை ஆராய்ச்சி நிலையம் கண்டு பிடித்து, களத்திற்கு கொண்டுவந்த நெல்வகையே குவலயம் புகழ்,,,, 'கருணை'.

'கருணை' நெல் வகை ஓர் ஜனநாயக நெல்வகை. பெரு நிலக்கிழாரும், சிறு உழவரும், பணவசதி பெற்றோரும், வசதி குறைவுற்றோரும், அச்சமின்றி பயிரிட ஏற்ற வகை. உயர்ந்த மேனி தரும் ஐ. ஆர். எட்டு நெற்பயிருக்கு, குறிப்பிட்ட அளவிற்கு குறையாதஅளவு அதிக உரம் இடல் வேண்டும்... குறித்த காலம் தவறாத பயிர் பாதுகாப்பு வேண்டும். செவ்வனே செயல்பட்டால் உயர்ந்த விளைவு தருவதில் மன்னர் மன்னர் ஐ. ஆர்-8. கண்காணிப்பு குறையுமானால் தகுந்த விளைவு கிடைப்பது ஐயத்திற்கு உரியதே. ஆனால் 'கருணை' அதன் குண நலனே தனிப்பாங்கானது. வசதி படைத்தோர் ஐ. ஆர். எட்டுக்கு அளிப்பது போன்றே வளமிக்க ஊட்டம் அளித்தால் உயர்ந்த மேனிதரும். வசதிக்குறைவால் ஆடுதுறை 27க்கு அளிப்பது போன்ற சற்று குறைந்த ஊட்டம் அளித்தால் அதற்குத் தக்கபடி மேனிகாணும். எந்நிலையிலும் ஏமாற்றமில்லை. பாடுபட்டத்திற்கு ஏற்ற பலன். 'செய் நேர்த்திக்கு ஏற்ற விளை நேர்த்தி'. வசதி பெற்றோர் பயிரிடும் ஐ. ஆர். எட்டை வசதியற்றோர் தான் வாங்கி உண்கின்றனர். முன்னவர் விற்று விடுகின்றனர். ஆனால் ''கருணை'' யாவரும் மனமொப்பி உண்ணும் வகையாகும். ஆதலின் யாவரும், தகுதிக்குத் தக்க வகையில் பயிரிட்டு பயன் பெறும் வகையானதால், 'கருணைவை ஜனநாயக வகை, என்பது சாலப் பொருத்தமே.

''கருணை'' துவக்கத்தில் வளர்ப்பு எண். 11321 (CULTURE 11321) என்ற பெயருடன் ஐ. ஆர். எட்டு, ஆடுதுறை – 27ன் இனக்கலப்பில் உண்டானது. பெயரிட்டு வெளியிடுமுன், இந்நெல் வகை, கடுமையான விளைவுத் திறன் தேர்விற்கு உட்படுத்தி மேலும் நான்கு வகை நெல்லுடன் கடந்த ஆண்டு தஞ்சை மாவட்டத்தில் 120 இடங்களில் உழவர் வயலில் 'சோதனைத்தளை'யில் பயி

[illegible]ட்டு திறனாய்வு செய்யப்பெற்றது. கருணா வகையுடன் (CULTURE 11321) ஒப்பிட்டு பயிரிட்ட மற்ற வகைகளாவன:

1. ஆடுதுறை. 27
   (GEB 24 × Norin-8)
2. பத்மா
   (T.141 (Cuttack) × TN-1)
3. ஐ.இ.டி. 355
   (TKM.6 × TN-1)
4. சி. ஆர். 84–309
   (ADT.27 × TN-1)

சோதனைத்தளை ஒவ்வொன்றும் 15 சென்ட் பரப்பு கொண்டிருந்தது. ஏக்கருக்கு 28 கிலோ தழைச்சத்து, 21 கிலோ மணிச்சத்து, 14 கிலோ சாம்பல் சத்து என்ற அளவிலும், ஏக்கருக்கு 50 கிலோ தழைச்சத்து 25 கிலோ மணிச்சத்து, 25 கிலோ சாம்பல் சத்து என்று அளவிலும் இரு விதமாக உரமிட்டு சோதனை செய்யப்பட்டது. சோதனை காலத்தில் பின்கண்ட விவரங்கள் சேகரிக்கப்பட்டன.

1. தூர்களின் எண்ணிக்கை.
2. பூ பூத்த நாள்.
3. மொத்த பயிர்காலம்.
4. சாயும் தண்மை.
5. பூச்சிகள் தாக்குதலைத் தாங்கும் தன்மை.
6. நோய்கள் தாக்குதலைத் தாங்கும் தன்மை.
7. பயிர்களின் உயரம்.
8. தானியங்களின் குணங்கள்.

ஒவ்வொரு பரிசோதனைத் தளையும் தனித்தனியே அறுவடை செய்து மகசூல் விவரம் சேகரிக்கப்பட்டன. [illegible]0 சோதனைத் தளைகளில், 110 [illegible]தனைத் தளைகளின் மகசூல் [illegible]ரமே கிடைத்ததால், அவை [illegible]ள புள்ளி விவர அடிப்படையில் பகுப்பாய்வு செய்யப்பட்டது. ஒவ்வொரு வகைக்கும் உள்ள மகசூல் வேறுபாடும், வெவ்வேறு அளவு இரசாயன உரமிட்டதால் கிடைத்த மகசூல் வேறுபாடும் புள்ளிவிவர அடிப்படையில் குறிப்பிடும்படியாக அமைந்திருந்தன.

சோதனைக்கு எடுத்துக் கொண்ட 4 வகைகளில் வளர்ப்பு 11321, (கருணா)தான், மற்ற வகைகளைக் காட்டிலும் குறைந்த அளவு உரமிட்ட நிலையில் 15.8 சதவீதம் கூடுதல் மேனியும் உயர்ந்த அளவு உரமிட்ட நிலையில் 22.1 சதவீதம் கூடுதல் மேனியும் அளித்தது.

களி, வண்டல், மணல் ஆகிய 3 வகை மண்வகைகளிலும் 11321 (கருணா) என்றவகையே சிறந்ததாக இருந்தது. ஆனால் மணற்பாங்கான நிலத்தில்தான் அதிக அளவு மகசூல் கிடைத்துள்ளது. விதைக்கும் காலத்தைப் பொறுத்தவரையில் ஜுலை பிற்பாதியில் விதைப்பதே, ஜுன் பிற்பாதி மற்றும் ஜுலை முற்பாதியில் விதைப்பதைவிட மிகுந்த மகசூல் கொடுத்துள்ளது. அதாவது ஆனி மாதத்தில் விதைப்பதைவிட ஆடி முற்பகுதியில் விதைப்பது நலம்.

வெவ்வேறு வகைகளில் உரமிடுவதற்கு ஏற்ப மகசூல் அளிக்கும் தன்மையும் கணக்கிடப்பட்டது. 28 கிலோ தழைச்சத்து, 21 கிலோ மணிச்சத்து, 14 கிலோ சாம்பல் சத்துக்கு மேல் கூடுதலாக இடப்பட்ட ஒவ்வொரு கிலோ தழைச்சத்திற்கும் கிடைத்த தானிய மகசூல் மேற்கூறப்பட்ட 5 வகைகளுக்கும் கணக்கிடப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு.

பத்மா	5.5 கிலோ
சு.ஆர். 84–309	9.1 கிலோ
ஐ.இ.டி 355	7.5 கிலோ
11321 (கருணா)	10.5 கிலோ

எனவே, உரமிடுதலுக்கு ஏற்ப மகசூல் அளிக்கும் தன்மை 11321க்கு அதிகம் என்பது தெரியவந்தது

11321-ன் வயது 108 நாட்களேயாகும். இது, ஆடுதுறை–27ஐவிட 5–6 நாட்களே அதிகமாகும்.

அடுத்து, மேற்கண்ட வகைகளின் பயிர்சாயாத தன்மையும் ஒப்பு நோக்கப்பட்டது. பயிர்சாயாத, தன்மையின் ஒப்புடர்வுத்திறன் அவைகளில் கீழ்க்கண்டவாறு இருந்தன.

	குறைந்த அளவு உரமிட்ட நிலை	உயர்ந்த அளவு உரமிட்ட நிலை
ஆடுதுறை–27	92.6	94.4
ஐ.இ.டி. 355	67.9	75.3
பத்மா	13.0	24.1
சி.ஆர். 84–309	8.6	6.8
11321 (கருணா)	4.3	6.8

இதிலிருந்து 11321 என்ற வகை பயிர்சாயாத தன்மையுடையது என்பதும் புலனாகியது.

தானியங்களின் நீள, அகல, கன அளவுகளைப் பொறுத்து ஒப்பிட்டுப் பார்த்ததில், 11321 என்ற வகை ஆடுதுறை–27 வகையையே ஒத்திருப்பது தெரிய வந்தது. அதன் விவரங்களாவன:–

	நீளம் (மி.மீ.)	அகலம் (மி.மீ.)	கனம் (மி.மீ)	நீளம்/ அகலம்	தரம்
ஆடுதுறை–27	4.26	2.50	1.64	1.70	குட்டை
11321 (கருணா)	4.22	2.40	1.55	1.76	திடம்
பத்மா	5.64	2.34	1.57	2.41	,,
சி.ஆர். 84–309	4.26	2.59	1.59	1.64	,,
ஐ.இ.டி. 355	5.52	2.47	1.53	2.23	,,

திருவாரூரில் உள்ள டி.சி.எம். எப். தரக்கட்டுப்பாடு சோதனை சாலையில் அரவைசோதனை நடத்தப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு உள்ளது.

	அரவையில் தீட்டாத அரிசியின் சதவீதம்		அரவையில் தீட்டிய அரிசியின் சதவீதம்	
	உயர்ந்த அளவில் உரமிட்ட நிலை	குறைந்த அளவில் உரமிட்ட நிலை	உயர்ந்த அளவில் உரமிட்ட நிலை	குறைந்த அளவில் உரமிட்ட நிலை
ஆடுதுறை–27	78.2	78.0	74.5	74.6
11321 (கருணா)	76.7	76.2	72.7	72.5
பத்மா	79.2	79.5	73.4	73.2
சி.ஆர். 84–309	77.4	77.5	73.6	74.4
ஐ.இ.டி. 355	78.6	79.9	73.9	75.5

11321 ன் அரிசி வெண்மையானது. சமையலுக்கு ஏற்றது. எல்லோராலும் விரும்பி உண்ணப்படும் தன்மையைக் கொண்டு உள்ளது.

மேற்கண்ட சோதனைகளிலிருந்து கருணா (11321) என்ற வகை கீழ்க்கண்ட குண நலன்களைப் பெற்றுள்ளது என்பது தெளிவாகியது.

1. குறைந்த அளவு உரமிட்ட நிலையில் 15 சதம் வரையிலும், உயர்ந்த அளவு உரமிட்ட நிலையில் 22 சதம் வரையிலும் கூடுதல் மகசூல் அளிக்கும் தன்மையுடையது.
2. அதிகமாக உரமேற்று அதற்கேற்ப மகசூல் அளிக்கும் திறனுடையது.
3. பயிர்சாயாத தன்மை.
4. சிறிய, உருண்டையான தானியங்கள் யாவரும் விரும்புவது.
5. தஞ்சாவூர் மாவட்டத்தில் குறுவையில் பெரும்பரப்பில் பயிரிட ஏற்றது.

'கருணா' பற்றிய குறிப்பும்—ஒருமித்த செய்நேர்த்தி முறைகளும் :- வயது 108 நாள்.

பருவம்;- கார், குறுவை அல்லது சொர்ணவாரி.

நாற்றங்கால்

1. ஏக்கருக்கு 18 கிலோ விதை போதுமானதாகும்.
2. விதையை கிலோவிற்கு 2 கிராம் வீதம் பாதரச ரசாயனக் கூட்டுக் கலவையில் போட்டுக் குலுக்கவும்.
3. ஏக்கர் நடவு செய்ய 12சென்ட் பரப்புள்ள நாற்றங்கால் தயாரிக்கவும்.
4. நாற்றங்காலை நன்றாகப் பண்படத் தயாரிக்கவும்.
5. 2 வண்டி தொழு உரம் அல்லது நன்றாக மக்கிய குப்பை உரம் இடவும்.
5. 2 வண்டி தொழு உரம் அல்லது நன்றாக மக்கிய குப்பை உரம் இடவும்.
6. ஒரு சென்ட் பரப்புள்ள (8 அடி 54 அடி) 12 பாத்திகளை மேற்சொன்ன முறையில் தயாரித்து ஒவ்வொரு பாத்தியிலும் 1 கிலோ விதை வீதம் முளை வந்த விதைகளை விதைக்கவும்.
7. விதைத்த 24–26 நாட்களுக்குள்ளாக நாற்றைப் பறித்து நடுவதன் மூலம் நல்ல மகசூலைப் பெற முடியும்.

நடவு வயல்

நிலத்தை நன்றாகச் சேறு கலக்கி சமப்படுத்தவும். ஏக்கருடன் 5 டன் (10 வண்டி) தொழு உரம் அல்லது குப்பை உரம் அல்லது, 2300 கிலோ பசுந்தாள் உரம்

இடவும். இரசாயன உரங்களை கீழ்க்கண்ட அட்டவணைப்படி இடவும்.

	அடிஉரம் (கிலோ)			மேலுரம் (கிலோ)		
	தழைச் சத்து	மணிச் சத்து	சாம்பல் சத்து	தழைச் சத்து	மணிச் சத்து	சாம்பல் சத்து
சிபாரிசு செய்யப் படும் அளவு	25	25	25	25	—	—
இடவேண்டிய ரசாயன உரத்தின் அளவு						
1. அம்மோனியம் சல்பேட்	125	—	—	125	—	—
அல்லது யூரியா	54	—	—	54	—	—
2. சூப்பர் பாஸ்பேட்	—	156	—	—	—	—
3. மியூரியேட் அப் பொட்டாஷ்	—	—	42	—	—	—

கடைசி உழவின் போது 25 கிலோ மணிச் சத்து, 25 கிலோ சாம்பல் சத்தும் இடவும். நாற்று நடும் முன்பாக 25 கிலோ தழைச் சத்து இடவும். நாற்று நட்ட 30-வது நாள் மீதமுள்ள 25 கிலோ தழைச் சத்தை இடவும்.

நாற்று நடவு

குழிக்கு 2 நாற்றுகள் வீதம் நடவும். களிமண் பாங்கான நிலத்தில் நடும்போது 20 செ.மீ. 10 செ. மீ. (8 அங்குலம் 4 அங்குலம்) இடைவெளியும், மணற் பாங்கான நிலத்தில் 15 செ.மீ. 10 செ. மீ. (6 அங்குலம் 4 அங்குலம்) இடைவெளியும் விடவும். நாற்று நட்ட 15வது நாளும். 30வது நாளும் ''ரோட்டரிஹோ' என்னும் இடை உழவு கருவியால் இடை உழவு செய்யவும்.

பயிர் பாதுகாப்பு

1. நாற்று பறிப்பதற்கு ஒரு வாரம் முன்பாக 0.05 சதம் பாரத்தியான் (100 லிட்டர் தண்ணீரில் 100 மில்லி லிட்டர் மருந்து கலந்து) அல்லது 0.4 சதம் என்ட்ரின் (100 லிட்டர் தண்ணீரில் 200 மில்லி லிட்டர் மருந்து கலந்து) தெளிக்கவும்.
2. நடவு செய்யப்பட்ட வயலில் 15 நாட்களுக்கு ஒரு முறையாக கதிர் விடும் வரையிலும் பாரத்தியான் அல்லது எண்ட்ரின் மருந்துடன் 0.6 கிலோ தாமிர பூசனம் கொல்லி மருந்தையும் கலந்து தெளிக்கவும்.
3. மற்ற தத்துப்பூச்சி, இலை தின்னும் புழு முதலியன காணப்பட்டால் பி. எச். சி. 10 சதம், டி. டி. டி. 5 சதம் மருந்துகளை சரி பாகமாகக் கலந்து ஏக்கருக்கு 10 கிலோ வீதம் தூவவும்.
4. பால் பிடிக்கும் பருவத்தில் மற்றும் ஒரு முறை பி. எச்.சி. 10 சதம் தூவுவதன் மூலம் கதிர் நாவாய்ப்பூச்சி, புகையான் பூச்சி (Fulgorid) முதலியனவற்றைக் கட்டுப்படுத்தலாம்.

குறுகியகால ஆராய்ச்சியில் கண்டு பிடிக்கப்பட்டதாயினும், 'கருணை' தனது விளைவுத்திறனல், வயதின் சிறப்பால்,—சாயாத தன்மையால்,—நயத்தால்,— எந்நிலைக்கும் தந் நிலையை ஈடுகட்டி விளையும் பாங்கால்—நெடுநாள் பழக்கத்திலிருந்த மற்ற வகைகளை விரைவில் வழக்கொழித்து, 'கருணை' மாருப் புகழ் பெறும்.

''மருங்கு வண்டு சிறந்து ஆர்ப்ப
மணிப்பூ ஆடை—அதுபோர்த்துக்
கருங்கயல்—கண்விழித்து ஒல்கி,
நடந்தாய், வாழி காவேரி!
கருங்கயல்—கண்விழித்து, ஒல்கி
நடந்த எல்லாம் நின்கணவன்
திருந்து செங்கோல் வளையாமை
அறிந்தேன். வாழி காவேரி!''

—சிலம்பு

தமிழர்களால் முடியும்!

தமிழரசுக்கு அளித்த பேட்டியின்போது தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. வேழவேந்தன் தமிழர்களுக்காக ஒரு சிறப்புச் செய்தியை வெளியிட்டார்.

"இந்நாடுகளைப் பார்க்கின்றபொழுது அந்நாடுகளில் வாழும் மக்கள் உழைப்பிற்கு முக்கியத்துவம்கொடுத்து கடமை உணர்ச்சியுடன் மிகக் கட்டுப்பாடான வாழ்க்கையை நடத்துவதுநம்மை பிரமிக்க வைக்கிறது.

பொற்காலத்தை உருவாக்கிய தமிழர்கள் தங்களுடைய வாழ்க்கையில் மேற்கொண்டுள்ள பாடங்களை நம் வாழ்க்கையிலும் நாம் கண்டு முன்னேற வேண்டுமென்கின்ற உணர்வு நமக்கு ஏற்படுகின்றது.

இரண்டாம் உலகப்போரில் உருத்தெரியாமல் போய்விட்ட ஜெர்மனிய நகரங்கள் இன்று உலக மார்க்கெட்டுகளைப் பிடிக்கிற அளவுக்கு அங்கே தொழில் வளர்ந்திருப்பது மனிதன் புற உணர்வால் சாதிக்க இயலாதது ஒன்றுமில்லை என்பதைக் காட்டுகிறது.

தமிழகம் அவ்வகையில் முயன்று முன்னேற வேண்டும்.

ஒரு காலத்தில் திரைகடல் ஓடித் திரவியம் தேடிய தமிழர்களால் இது முடியாததல்ல."

சீரணி

பாடிவீட்டில்....

ஓய்வு நேரத்தில் ஊதியமின்றி ஊருக்கு உழைக்கும் பணியில் ஈடுபட்டிருக்கும் எங்களுக்கு எவ்வளவு புதுமையான அனுபவம்!

பண்டைத் தமிழகத்தில் சேனை தழையாக்கி செங்குருதி நீர் தேக்கி ஆனைமிதிக்கும் அருஞ்சேரும் போர்க்களத்தில் படை முழங்கப் புறப்பட்ட வீர மறவர்களின் ஆர்வத்தைப்போலவே எங்கள் ஆர்வமும் இருந்தது. ஆனல், நாங்கள் போரிடப் புறப்படவில்லை, புனிதமான பயிற்சிக்குப் புறப்பட்டோம்!

எங்கள் பயிற்சிப் பாடிவீடு அமைந்தது கிண்டி பொறி இயல் கல்லூரியில்தான். அந்த ஏழு நாட்கள் பயிற்சியும் எவ்வளவு சுவையான அனுபவம்!

சென்னை பூங்கா நகரத் தொகுதி சீரணித் தலைவனகத் தொண்டாற்றுபவன் நான். ஏழு நாள் பயிற்சி—அதுவும் காவலர்கள் கொடுக்கும் பயிற்சி எப்படியிருக்குமோ என்று அச்சம் தோன்றியது உண்மைதான். ஆனலும் சீரணித் தொண்டர்கள் எல்லாம் ஒரு வாரம் தொடர்ந்து ஓர் இடத்தில் இணைந்து பயிற்சி பெறப் போகிறேம் என்பதிலும் ஓர் ஆர்வமும் எழுந்தது.

கடந்த மே திங்கள் 24ஆம் நாளன்று எங்கள் பயிற்சி தொடங்கியது. 23ஆம் நாளன்றே பயிற்சிக்காக நாங்கள் கூடிவிட்டோம்.

பயிற்சியைத் தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் திரு. முரசொலி மாறன் அவர்கள் தொடங்கிவைத்தார்கள்.

முதல் நாள் காவலர் பயிற்சியுடன் தொடங்கியது.

முதலுதவி
'தீ' தடுப்புப் பாடம்!
கோழி வளர்ப்பு!
முதியோர் கல்வி!
குடும்பக் கட்டுப்பாடு
நலவழிப் பணிகள்
பொதுப் பணிகளின் முக்கியம்.

இப்படிப் பலவேறு வகையான பயிற்சிகளைப் பெற்ருேம். ஏழு நாட்களும் இப்படிப் பறந்தன. எப்படி எப்படியோ மனதில் மகிழ்ச்சி ஊட்டுவனவாக அமைந்தன. ஓய்வு நேரங்களில் சீரணித் தோழர்கள் சீரணியைப் பற்றி எவ்வளவு சுவையான தகவல்களைச் சொன்னார்கள்.

ஒரு சீரணித் தோழரின் உறவினர் வெளி மாநிலத்தில் இருப்பவர் சொன்னராம் ''மைய அரசு செய்தித்துறை பல்வேறு மொழிகளில் நம் சீரணியைப் பற்றி செய்தி வெளியிட்டிருப்பதால் அம் மாநில மக்கள் நன்கு சீரணியைப் பற்றியும் தெரிந்திருக்கிருர்கள்'' என்று இது போன்ற பல செய்திகள்.

பல்கேரிய நாட்டில்கூட நம் சேரணியைப் பாராட்டி அந்நாட்டு ஏடு ஒன்றில் செய்தி வந்திருக்கிறதாம்.

இத்துடன் சேரணி விழாக்களில் அண்ணா அவர்கள் பேசிய பேச்சுக் ளை யாராவது கோடிட்டுக் காட்டும் பாழுது, அந்த அறிஞர் பெரு கன் தேடித்தந்த பெருமைகளை ண்ணினேம். கண்கள் குளமாயின. அப்பெருமகனுக்கு நாம் செலுத்தும் நன்றி, கடமைகளைச் செவ்வனே செய்வது என்பதுதான் என்று உறுதி பூண்டோம்!

சேரணிப் பாடி வீட்டில் பயிற்சி பெற்ற எங்கள் அணி வகுப்பைக் காண மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்கள் ஜூன் 2ஆம் நாள் வந்தார்கள்.

வட சென்னை, தென் சென்னை சேரணித் . தோழர்கள் ஏறத்தாழ ஆயிரம் பேர் அணிவகுப்பில் கலந்து கொண்டோம். அணிவகுப்பைப் பார்வையிட்ட கலைஞர் அவர்கள் கூறினார்கள்:

''படை என்ற சொல்லுக்கு நாட்டில் இன்றைய தினம் பாதகமான பொருள், தெரிந்தோ தெரியாமலோ சொல்லப்படுவதால், சேரணிப்படை என்பதில் 'படை' என்பதைக் கூட அகற்றி விட்டு 'சேரணி' என்கிற அளவில்தான் நாம் இதை அமைத்துக் கொண்டிருக்கிறோம்.

''நீங்கள் பயிற்சி பெற்றிருப்பதால், அணிவகுப்பு நடத்தியதால், ராணுவமிடுக்கோடு பிறமாநிலங்களில் உருவாகியிருக்கிற படையோடு ஒப்பிடத் தகுந்தது என்று யாராவது கருதுவார்களானால், அவர்கள் தங்களை ஏமாற்றிக் கொள் றார்கள் என்றும் எடுத்துக் கொள் லாம். அல்லது பிறரை ஏமாற்ற கிறார்கள் என்றும் எடுத்துக் ாள்ளலாம்.

''ஆனால், அண்ணா அவர்கள் இதைத் தொடங்கிய நேரத்தில் இதனுடைய குறிக்கோள்கள் என்று, (1) ஊதியம் பெறு ஓய்வு நேரப் பணியாற்றல்; (2) தன்னலம் கருதாப் பொதுப் பணி பேணல்; (3) தன்மதிப்பையும் தன்னம்பிக்கையையும் வளர்த்தல்; (4) உழவும் தொழிலும் வளர உறுதுணையாக நிற்றல்; (5) கல்வியறிவும் பொது அறிவும் வளர வகை செய்தல்; (6) பொது நலம் காணப் பணி மேற்கொள்ளுதல்; (7) தீண்டாமைக் கொடுமைகளை அகற்றுதல்; (8) அன்பு வழியாக சமூகக் கேடு களைதல் (9) திக்கற்றவர்களுக்குத் துணைபுரிதல்; (1) அறவழி நின்று அனைவருக்கும் உதவுதல்—ஆகியவற்றைத் தந்து விட்டுச் சென்றிருக்கிறார்கள்.

''அண்ணா அவர்கள் இந்த 10 குறிக்கோள்களையும் தந்து விட்டுப் போயிருக்கிறார்கள். இந்தக் குறிக்கோள்களின் பட்டியல் நீளும். அப்படி நீளுகிற நேரங்களில் எல்லாம் நெடிய பணியாற்ற நம்மை நாம் தயார் செய்து கொள்ள வேண்டும்.

''பொது மக்கள் எந்த நேரத்திலும் உங்களைச் சேரணித் தொண்டர்கள் என்று அறிந்து கொள்ளத்தக்க விதத்தில், சேரணிக்கு என்று தரப்பட்ட பதக்கம் என்றென்றும் உங்கள் சட்டைகளில் தொங்கிக்கொண்டிருக்க வேண்டும் என்பது என்னுடைய ஆசையாகும்.

''நீங்கள் உதாரணமாக ஒரு குழந்தையைக் கார் விபத்திலிருந்து காப்பாற்றும் நேரத்தில், காப்பாற்றியவர் ஒரு சேரணித் தொண்டர் என்று மக்கள் தெரிந்துகொண்டால், அந்தப் அன்புப் பரிசே அண்ணாவின் காலடியில் நாம் வைக்கக் கூடிய பரிசாகும்.

''நீங்கள் நல்ல காரியங்களில் ஈடுபடும் போதெல்லாம் சேரணித் தொண்டர் என்னும் இந்தப் பதக்கம் உங்கள் நெஞ்சில்பதிந்து கொண்டிருக்குமானால், சேரணி நல்ல காரியங்களைச் செய்கிறது என்பதற்கு எடுத்துக் காட்டாக இருக்கும்''—என்று.

கலைஞர் அவர்களின் இந்தச் சொல்லோவியம் சேரணித் தொண்டர்களின் நெஞ்சங்களில் அழியாத ஓவியமாக அமைந்து விட்டது என்பதைச் சொல்லவும் வேண்டுமோ?

சேரணித் தொண்டர்களின் அணி வகுப்பை ஜூன் 3—ஆம் நாள் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மா. முத்துசாமி அவர்களும், 6ஆம் நாளன்று மாண்புமிகு பிற்பட்ட நலவகுப்பு அமைச்சர் திரு. என். வி. நடராசன் அவர்களும், மாண்புமிகு உணவு அமைச்சர் திரு. ப. உ. சண்முகம் அவர்களும் பார்வையிட்டார்கள்.

அமைச்சர்கள் அளித்த ஊக்கம் சேரணித் தொண்டர்களின் ஆர்வத்துக்கு உர மூட்டுவதாக அமைந்தது.

சேரணிப் பாடிவீட்டில் நாங்கள் பெற்ற பயிற்சி ஓய்வு நேரத்தில் ஊதியம் கருதாமல் ஊருக்கு உழைக்கும் எங்கள் ஆர்வத்தை மேலும் வளர்ப்பதாக அமைந்தது.

அறிஞர் அண்ணா அமைத்த அணியின் பெருமை அதுதானே!

—மணிவண்ணன்

(பூங்கா நகர் சேரணித் தொண்ட

நல்லாட்சி நடத்துகிறோம் நாம். அந்த நல்லாட்சி நடத்திட எங்களாலான — எல்லாவிதமான தியாகங்களையும் செய்கிறோம்! ஆட்சியில் அமர்ந்த காரணத்தால் ஆணவம்கொண்டு அலையவில்லை! எங்கிருந்தோம்? எங்கே வந்தோம்? யாரால் ஆட்சிக் கட்டிலில் உட்கார வைக்கப் பட்டிருக்கிறோம் — என்பதைத் திரும்பிப் பார்த்துப் பணி புரிகிறோம்.

எங்களை யார் புண்படுத்தினாலும், புண்படாத ஒரு அலட்சியப் புன்சிரிப்பால் அவைகளைத் தள்ளி விடுவோம். அப்படித்தான் எங்கள் அண்ணன் எங்களுக்குச் சொல்லிவிட்டுப் போயிருக்கிறார்.

—கலைஞர்

...பிலாத் திறன்கூட்டும்
...லைக் கிருஷ்ணாபுரம் சிற்பக்கலை காட்டும்

நல்லவனைத் தந்த காஞ்சி

...கோட்டை மகுடம் சூடும்
...க்கோட்டை திருச்சி

...ம சிறந்த தலமன்றோ
...ரம்!

மீன் ஆட்சி செய்தகுலை மதுரையில்
மீனாட்சி [illegible] கோயில்

தி[illegible] கிட்டில
[illegible] திருச்செந்தூர்

69

என்கோலம் காணீர் என[illegible]
தென[illegible]

தம்பி, உன்னாலே முடியும்!

தம்பி! சினிமாக்களில் ஒரு முறையைக் கையாளுகிறார்கள்.

அங்கு கதைகட்கு ஏற்றவகையில் புருவங்கள் தேவைப்படுகின்றன! குனித்த புருவம், கூட்டுப் புருவம், நெரித்த புருவம், படர்ந்த புருவம், வில்லுப் புருவம் இப்படிப் பலப்பல!

நல்ல பெண்மணியின் புருவம் வில்போல் வளைந்து இருக்கும்—இருக்கவேண்டும். காதகிக்குப் புருவம், அரவம்போல அச்சமூட்டுவதாக அமைதல் வேண்டும். அப்படி அங்கு ஒரு முறை!

எந்த எந்திழையிடம் இத்தனை புருவங்கள் கிடைக்கமுடியும். எனவே அங்கு முதலில், எந்திழையின் இயற்கைப் புருவத்தை எடுத்து விடுகிறார்கள்—வழித்தெடுத்து விடுகிறார்கள்—இயற்கை பறிக்கப்பட்டான பிறகு, எழில் காட்டும் கலைஞன், தன் இச்சைக்கு ஏற்ப, புருவங்கள் அமைக்கிறான்—காதளவு வளர்ந்த கண்ணினை என்னென்பேன். காமன் தன் கரும்பு வில்போன்ற புருவத்தைக் கண்டேன், அதன் அழகை எவ்வாறு கூறுவேன் என்றெல்லாம் பிறகு திரைக் காதலன் பாடம் படிக்கிறான். கொட்டகைக் கோமான்கள் குதூகலமடைகிறார்கள். ஆனால் உண்மையில் இயற்கையாக இருந்த 'புருவம்' பறிபோய்விட்டது. இரவல் புருவம் பிறர் காணும் போது எழில் காட்டும் வகையில், அமைக்கப்படுகிறது.

தமிழ் மொழியிலும், தம்பி, அதற்கென்று இயற்கையாக அமைந்துள்ள, எழில் முறைகளைக் களைந்தெறிந்துவிட்டு, பிறமொழிச் சொற்களையும் முறைகளையும் கலந்து புதிய எழில் காட்டுகிறோம் என்று கூறுவாருளர்.

சினிமாக்களுக்குச் சிதைத்தலும் சேர்த்தலும், கூட்டலும் குறைத்தலும் மறைத்தலும் மிகுத்தலும் தனித்தலும் தேவைப்படுகிறது; அந்த உலகத்து இலக்கணம் அது. குறை கூறுவதற்கில்லை. ஆனால், மொழித் துறையில் இந்த முறையைப் புகுத்தி, உள்ள எழிலை உருக்குலையச் செய்து, பாழ்படுத்துவது அடாத செயலாகும். ஆனால் 'மேதை'கள் பலர், பிறமுறைகளில் சேர்க்கையும், தமிழ்மொழியை வளமாக்கும் என்று காரணம் காட்டி இந்தத் தீய செயலைச் செய்து வருகின்றனர்.

இதனை அறிந்து, தடுத்திட வேண்டும் என்ற எண்ணம் கொண்டு பணியாற்றும் நம்மாலேகூட (சற்று அதிகமாகவே என்னால்!) பிறமொழிச் சேர்க்கையையும் பிற முறைகளின் சேர்க்கையையும் நீக்கிப் பேசவும் எழுதவும் முடியாமலாகி விட்டிருக்கிறது—ஏனெனில், நாம், தூய தனித் தமிழ் சித்திரவதை செய்யப்பட்டு பிறமொழியும் பிற முறையும் கலந்து, பேச்சும் எழுத்தும் 'மணிப்பிரவாளம்' என்ற வடிவுகொண்டு, தமிழும் வடமொழியும் குழைத்து வழங்கப்பட்ட நாட்களில் பயின்றவர்கள் எனினும், புலவர் பெருமக்களின் அறிவுரை கேட்டதால், இந்தக் 'கலவை' தீது பயப்பது என்று தெரிந்து, தமிழ் மொழிக்கு மீண்டும் தனியானதோர் ஏற்றம் தேவை என்ற தூயதோர் நோக்குடன் பணியாற்றிவருகிறோம், எனவே, நம்மாலே முற்றிலும் 'தனித்தமிழ்' எழிலைக்காட்ட இயலவில்லை.

நானே, பலதடவைகளில், பேசியான பிறகும், எழுதியான பிறகும், இன்னின்ன சொற்களுக்கு இன்னின்ன தமிழ்ச் சொற்களைக் கையாண்டிருக்கலாமே, தவறி விட்டோமே என்று எண்ணி வருத்தமுறுவதுண்டு. எனினும், தம்பி, எங்கள் மூலம் நீ இவ்வளவுதான் பெறலாம்—அதிகம் எதிர்பார்க்காதே—ஆனால் உன்னாலே முடியும் இந்தக் குறைகளையும் களைய—நாடு உன்னிடம் நிச்சயமாக அதிகம் எதிர்பார்க்கிறது.

—பேரறிஞர் அண்ணா

(1956-ஆம் ஆண்டில் எழுதியது)

மேல நாட்டா
ரும்பி வருகை த
தமிழகத்துச்
சுற்றுலாத்
தலங்கள்

உவகை தரும் உதகை -
மலைகளுக்கெல்லாம் தலைமை

சேல் குதிக்கும் மலர்ச் சே
தேன் குதிக்கும் கான்கு தி
என்று கூறப்பட்டிருப்
மொழியின் அழகுக்கும
மல்ல, தமிழ் நிலத்தின் எழி
முற்றிலும் பொருத்தம்
எரிமலை இல்லை, நீர்வீ
உண்டு! பாலைவனமில்
சோலைவனம் எங்கும்.
காடு இப்படியல்லவா
கிறது, காண்போரைச் செ
வைக்கிறது!

அதோ காவேரி! இ
தாமிரபரணி! இந்த ஆற்
களிலே வளர்ந்த பண்
எத்தகையது! இதோ உழ
இதோ கற்றுணர்ந்த
யோர்கள், சிற்றறிவின
செயல் கண்டு வருந்தித்
குனிந்து விடுதல் போல,
நெல் கற்றைகள், பழு
சோலைகள், வாளைதுள்
வாவிகள். சுருக்கமா
சொன்னால்

பச்சை மாமலைகள்
பாங்கான காட்சிகள்
பாடும் அருவி
பயமற்ற மிருகங்கள்
ஓங்கி வளர்ந்த மரங்கள்
தேக்கங்கள், தே

இவைகள் தமிழகத்
எழிலுக்கு எடுத்துக்காட்டு

—அறிஞர் அண்

சென்னை வருகிறாள் அன்னை காவிரி!

அன்னை காவிரி, சென்னை வருகிறாளா?

ஆமாம்!

தண்ணீர் கொடுத்துத் தாகம் தீர்த்துக் கண்ணீர் துடைக்க வருகிறாள்.

தண்ணீர்ப் பிரச்சினை என்பது சென்னை மக்களின் வாழ்வுப் பிரச்சினை. சென்னைக்கு அருகிலே குடிதண்ணீர் தர வசதியாக ஆறுகள் எதுவும் இல்லை. நகரில் ஓடுவது கூவம், அடையாறு, மற்றும் பக்கிங்ஹாம் கால்வாய். இவற்றில் எதுவும் குடிதண்ணீருடன் இணைத்துப் பேசத் தகுதி அற்றவையாகும்.

கொற்றலையாறு

தற்போது சென்னைக்குத் தண்ணீர் தருபவை பூண்டி நீர்த்தேக்கம், சோழவரம் ஏரி, புழலேரி ஆகியவைகளாகும். இந்த ஏரிகள் அனைத்தும் கொற்றலை ஆற்றில் இருந்து தண்ணீர் பெறுபவை. இந்த ஆறு வடகிழக்குப் பருவ மழை மூலம் தண்ணீர் பெறுகிறது. இந்த ஏரிகளைத் தவிர பஞ்செட்டி, தாமரைப் பாக்கம் ஆகிய இடங்களில் கிணறுகள் தோண்டி அதிலிருந்து நகருக்கு நீரளிக்கும் திட்டமும் உண்டு.

இத்திட்டங்களின் மூலம் கிடைக்கும் தண்ணீர் சென்னை நகருக்குப் போதுமானதா?

இல்லை!

வளர்ந்து வரும் பொருளாதார அமைப்பில், தொழில் வளர்ச்சி, மக்கள் தொகைப் பெருக்கம், அதற்கு ஏற்ற அளவில் குடிநீர்த் தேவையை அதிகரித்தல் ஆகியவை இயற்கை நியதிகள். பொது வாழ்வில் வசதிகள் பெருகப் பெருகத் தேவைகளும் அதிகம் ஆகின்றன. சென்னை நகரின் இன்றைய மக்கள் தொகை, சென்ற சில ஆண்டுகளுக்குமுன்பு இருந்ததை விட எவ்வளவோ அதிகம் ஆகி உள்ளது.

உடனடித் தேவை என்ன?

நகருக்கு இன்று அளிக்கப்பட்டு வரும் குடிநீர் சுமார் 3 கோடியே 50 லட்சம் காலன். ஆனால் 1981ம் ஆண்டில் தேவைப்படுவது சுமார் 17 கோடியே 50 லட்சம் காலன். இன்றைய நிலையில் நமக்கு உடனடியாகத் தேவைப் படுவது மொத்தம் 11 கோடி காலன்.'

இந்தப் பற்றாக் குறையை ஈடு செய்யக் கூடிய நிலை கிருஷ்ணா காவிரி போன்ற ஆறுகளுக்கே உண்டு. மைசூர், மகாராஷ்டிரம், ஆந்திரப் பிரதேசம் ஆகிய மூன்று மாநில அரசுகளும் சென்னை மாநகர்— புறநகர் இவற்றின் தேவைகளுக்காக கிருஷ்ணா—கோதாவரி, ஆற்று நீரில் ஒவ்வொரு மாநிலமும் முறையே 5000 மிலியன் கன அடி தண்ணீர் தர இசைந்துள்ளன. இந்தத் திட்டம் நிறைவேற சிறிது காலம் ஆகலாம்.

சென்னைக்குக் காவிரி

ஆகவே தண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்க்க உடனடியாக செய்ய வேண்டியது என்ன? அன்னை காவிரியை சென்னைக்கு அழைக்க வேண்டியதுதான்!

காவிரி நீரை சென்னைக்குக் கொண்டு வரும் வீராணம் திட்டம் மிகச் சிறப்பான திட்டமாகும். இந்தியத் துணைக் கண்டத்திலேயே இப்போது தான் முதல் தடவையாக ஒரு நகரத்துக்குக் குடி தண்ணீர் வசதிக்காக வெகு தூரம் உள்ள ஒரு ஏரியில் இருந்து 222 கிலோ மீட்டர் தூரத்துக்கு குழாய் வழியாகத் தண்ணீர் கொண்டுவரப்படவிருக்கிறது.

விவசாயத்தேவை

வீராணத்தில் இருந்து சென்னைக்கு குடிநீர் கொண்டு வருவதால் ஏற்கனவே அவ்வேரியின் கீழ் நடைபெறும் பாசனத்துக்கு ஊறு ஏற்படாது. குடிநீர்த், தேவையை பாசனத் தேவைக்கு, மேல் உள்ள நிலைகளில் இருந்தும் அளவிலிருந்தும் மட்டுமே சென்னைக்கு எடுத்துக் கொள்ளப்படும். பாசன மட்டங்கள் ஒவ்வொரு மதகிலும், அந்தந்தக் காலத் தேவைக்கு ஏற்ப காத்துத் தேக்கிய பின்னரே குடிநீர் இறவை தொடங்கும். எனவே தற்போது உள்ள வீராணம் ஏரிப் பாசனம் எந்த விதத்திலும் பாதிக்கப் பெறாது.

இத்திட்டத்தின்படி காவிரிஆறு அமைப்புகளின் கீழ் வருகிற தென் ஆர்க்காடு மாவட்டம் சிதம்பரத்திற்கு அருகில் உள்ள வீராணம் ஏரியில் இருந்து 66 அங்குல குறுக்களவு உள்ள குழாய்கள் மூலம் தான் ஒன்றுக்கு 4 கோடி காலன் வீதம் தண்ணீர் சென்னைக்கு அனுப்பப்படும்.

செலவு எவ்வளவு?

இத்திட்டத்திற்கான மொத்தச் செலவுமதிப்பு 21.30 கோடி ரூபாய். ஆண்டுதோறும் 30ல் இருந்து 35 லட்சம் ரூபாய் இதற்குச் செலவு ஆகும். தண்ணீரை குழாய்கள் மூலம் கொண்டு வரும் போது அதன் வேகத்தை அதிகம் ஆக்க, வழியில் வடலூர் அருகே பூஸ்டர் பம்ப் நிலையம் ஏற்படுத்தப்படும். இந்த குழாய்கள், வழியில் தெள்ளாறு, கடிலம், சங்கராபரணி, தொண்டையாறு, பாலாறு, அடையாறு ஆகிய ஆறுகளைக் கடந்து வருகின்றன.

சிப்பந்திகளுக்கு வீடு

குழாய் துவங்கும் இடத்திலும் பூஸ்டர் பம்ப் நிலையத்திலும் திட்டத்திற்காக வேலை செய்யும் சிப்பந்திகளுக்காக 50 லட்சம் ரூபாய் செலவில் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. இதற்கான வேலை தீவிரமாக நடந்துவருகிறது.

பொதுப்பணி அமைச்சர்

வீராணம் திட்டத்திற்குக் குழாய்கள் வாங்குவது சம்பந்தமாகத் தமிழ்நாடு பொதுப்பணி அமைச்சர் திரு. சாதிக்பாட்சா அவர்கள் அண்மையில் ஈரான், மேற்கு ஜெர்மனி, இங்கிலாந்து, பிரான்ஸ், சவுதி அரேபியா முதலிய நாடுகளுக்குச் சென்று திரும்பினார்.

அவர் நமது சிறப்புச் செய்தியாளரிடம் பேசுகையில் 'வீராணம் திட்டம் நமது தமிழ் நாட்டில் செயல்படுத்தப்படவிருக்கும் சிறந்த திட்டமாகும். நான் சென்ற சுமார் 10 நாடுகளில் இத் திட்டத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து அதற்குக் குழாய்கள் வழங்குவதை மதிப்பு மிகுந்ததாகவே கருதுகிறார்கள். 66 அங்குலம் குறுக்களவு உள்ள குழாய்கள் மூலம் தண்ணீர் அளிக்கும் திட்டம் நான் சென்ற எந்த நாடுகளிலும் இல்லை! மான்செஸ்டர், ஜூரிச், டெஹ்ரான் ஆகிய நகரங்களில் இக் குழாய் செய்யும் தொழில் நி வனங்களைக் கண்டேன்.

நான் பார்த்தவைகளையும் வி யையும் பரிசீலனை செய்து இ குழாய் வாங்குவதற்கான ஏற்பா கள் செய்யப்படும்', என்று கூறின

பலனளிக்கும் திட்டம்

1967ம் ஆண்டு செப்டம்பர் 30 நாள் இத்திட்டத்தை அறி அண்ணா அவர்கள் துவக்கி வை தார்கள். துவக்க விழாவில் இ றைய முதல்வர் திரு. மு. கரு நிதி அவர்கள் பேசுகையில் ''தமி நாட்டை மகவாய் வளர்க்கு தாயாகி ஊழி உய்க்கும் பேரு ஒழியாமல்'' நன்று வாழ்வ காவிரி. இன்று உண்ண உண மட்டுமின்றி, பருக நீரும் காவி நமக்கு அளிக்கிறாள். அதுவு தொலைவில் உள்ள சென்னை நக மக்களுக்கு அளிக்கிறாள்'' என் கூறினார். அவர் கூறியதுபோ கூடிய விரைவில் இத்திட்ட தமிழக மக்களுக்கு நல்ல பல அளிக்கும் என்பதில் ஐயமில்லை.

''ஏழைகளுக்கு நிலம் தருவதானாலும், வீடுகட்ட மனை தருவதானாலும் அதனைச் சட்டப்படி செய்திடவேண்டும். சட்டப்படி செய்யப்படும் வசதிகள் தான் நிலைத்து நின்று மக்களுக்குப் பயன் கொடுக்கும்.''

— கலைஞர்

''அரசாங்கம் என்பது வீடு—ஆளும் கட்சி அதை வாடகைக்கு எடுத்துக் கொள்கிறது; மக்களின் நல்லெண்ணம்தான் வாடகைப் பணம். ஜனநாயக உணர்வு அதை ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை கணக்குப் பார்க்கிறது.''

— அண்ணா

[illegible]

[illegible]

[illegible]

தமிழர்க்கு அமிழ்தாகும்

கலைமாமணி ப. கண்ணன்

செந்தமிழின் வல்லவர்கள் தேர்வேந்தர் பழங்குடியின்
சேரசோழ பாண்டியர்கள் முச்சங்கப் பெரும்புலவர்
சிந்தைவளர் பண்பாட்டைச் செழிக்கவைத்த முன்னோர்கள்
சிறப்புகளைக் கொடுப்பதற்கு வந்ததுதான் தமிழரசு !

முக்கடலின் அலையடித்து எழுப்புகின்ற ஒலியனைத்தும்
முத்தமிழின் கனிச்சுவையை முழக்கிவரும் தமிழ் நாட்டின்
தக்கவுடல் நாடென்றால் தமிழதனின் உயிரென்னும்
தன்மானப் பகுத்தறிவுப் பாங்குடைய தமிழரசு !

வள்ளுவரின் நெறியதனில் வெல்லமெனக் கலைவளர்க்கும்
வளமாரும் இலக்கியத்தின் வரலாற்றின் திறனுரைக்கும்
தெள்ளுதமிழ்க் காவியங்கள் கருத்துரைகள் நாடகங்கள்
தித்திக்க வளர்வதனை மெய்ப்பிக்கும் தமிழரசு !

ஆட்சியினைச் செலுத்துகிற அமைச்சரவை தமக்கிருந்தும்
அரசுமுறைச் சக்கரத்தை முடுக்கிவரும் நடு நிலையும்
மாட்சியுடன் நிகழ்ந்துவரும் மக்கள்நலப் பணியனைத்தும்
மாதர் நலம் கல்வி நலம் காட்டுவது தமிழரசு !

சௌபாக்யம் மிகுப்பதுவும் சீரணிகள் வளர்ப்பதுவும்
சாதனைகள் பலபுரிந்து வேதனைகள் மாற்றுவதும்
செய்வார்க்குத் தொழிலுரிமை சீர்பெருகும் பேச்சுரிமை
சிறப்பினிலே சமவுரிமை யளிப்பது நம் தமிழரசு !

★ ★ ★

NOW A THREE STAR WELCOME

Dasaprakash GROUP OF HOTELS

MADRAS . MYSORE . OOTY

A Home Away From Home

HOTEL DASĀPRAKĀSH
MADRAS
AN INTERNATIONAL CARAVANSERAI
Phone: 61111 (8 lines) Telex: 637 Grams: DASPRAKASH
Special Vegetarian Cuisine for Overseas Visitors
Latest artistically designed PINK HALL & SKY ROOF GARDENS — Special attraction of the Hotel.

When Holidaying at the Queen of the Hill Stations, stay at
HOTEL DĀSAPRAKĀSH: OOTY
SITUATED IN ENCHANTING SURROUNDINGS
Phone: 434 & 435 Grams: DASPRAKASH

Visitors to the Garden City of India will enjoy their sojourn at
HOTEL DĀSAPRAKĀSH: MYSORE
Phone: 22821 Grams: DASPRAKASH

OUR AFFILIATES:
Modern Cafe, Esplanade, Madras-1 Hotel Garden, Madras-7 Dasaprakash Enterprises, Madras-7 Dasprakash Ice Creams, 259, Poonamallee High Road, Madras-29 Ganga Restaurant, 121, Armenian Street, Madras-1 VLR Stall, Egmore Station, Madras-8 Dharmaprakash Institutions, Madras-7 Hari Nivas, 4, Thambu Chetty Street, Madras-1 Govindram Sitaram & Sons, Bankers, Madras-1 Dasaprakash Bottling Co., Madras-29 ESSO Servicentre, Madras-10 Dasaprakash Travels, Madras-7 VLR Stall, Basin Bridge Railway Station, Madras-12. Dharmaprakash Press, Madras-7

FOUNDER: K. SEETHARAMA RAO

காவல் துறை
ஆணைக்குழு

காவலர்கள் நல்லொழுக்கு
கலைஞர் அளித்த பரிசு!



தி. மு. க. அரசு கலைஞர் மு. கருணாநிதி அமைச்சரவையில், புரிந்துள்ள சாதனைகளில் சிறப்பு மிக்க சாதனை என்னவென்றால் காவல்துறை ஆய்வுக் குழு ஒன்றினை நியமித்துள்ளதாகும்.

ஆங்கிலத்தில் 'போலீஸ் கமிஷன்' எனப்படும் இத்தகைய ஆய்வுக் குழு சென்னையைத் தலைமையாகக் கொண்ட மாநில ஆட்சியில் இதற்கு முன்பு எப்பொழுதுமே நியமிக்கப் படவில்லை.

இந்தியா முழுவதுக்குமான காவல் துறை ஆய்வுக்குழு நீண்ட காலத்திற்கு முன்பு நியமிக்கப்பட்டதாகும். வடபுலத்தில் ஒன்றிரு மாநிலங்களிலேயும் காவல்துறை ஆய்வுக்குழு நியமிக்கப்பட்டதுண்டு. ஆனால், எத்தனை எத்தனையோ துறைகளில் பிற மாநிலங்களுக்கு, ஏன் இந்தியப் பேரரசிற்கே வழி காட்டும் வகையில் சாதனைகள் புரிந்து வந்துள்ள தமிழ் மாநிலமானது காவல்துறையினருக்கு நீதி வழங்குவதிலே மட்டும் பின் தங்கிவிட்டது.

தமிழகத்தில் முன்னொரு முறை காவல்துறையினர் பொது வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். அந்த அளவுக்கு அவர்களுடைய வாழ்க்கையானது பிரச்னைகள் நிறைந்ததாக இருந்து வருகிறது. வேலை நிறுத்தத்தைக் காரணமாகக் கொண்டு காவல்துறையினர் அமைப்பு ரீதியில் ஒன்றுபடுவதற்கான உரிமையும் பல ஆண்டுகளுக்கு முன்பே பறிக்கப்பட்டு விட்டது. இதனால் காவல் துறையினரின் கஷ்ட நஷ்டங்களை அரசு தானாகவே அறிந்து அவற்றைப்போக்க வேண்டியதாகி விட்டது. ஆனால், இந்தப் பொறுப்புணர்ச்சி 1967க்கு முன்பு ஆள்வோருக்கு ஏற்படவில்லை.

நல்ல வேளையாகக் கலைஞர் ஆட்சியிலே காவல்துறையினருக்கு நீதி வழங்க வேண்டும் என்ற விருப்பத்துடன் காவல் துறை ஆய்வுக் குழு நியமிக்கப்பட்டு விட்டது.

இந்தக் குழுவில் அங்கம்வகிக்க வேண்டும் என்று தமிழக முதல்வர் அவர்கள் தொலை பேசியில் என்னைக் கேட்டுக் கொண்டபோது நான் கூட காவல்துறை ஆய்வுக்கு என்று ஒன்று அமைக்கப்பட வேண்டிய அவசியத்தைப் போதுமான அளவில் உணர்ந்திருக்கவில்லை.

முதல்வரின் விருப்பத்தை மறுக்க முடியாமலேயே ஆய்வுக்குழுவின் உறுப்பினராக இருக்க இசைந்தேன். ஆனால், குழுவின் வேலை தொடங்கிய பின்னர் அதன் தலைவரிடமிருந்து, செயலாளரிடமிருந்து தகவல் குறிப்புகள் ஒன்றபின் ஒன்றாக கிடைத்ததன் பின்னர் காவல்துறை ஆய்வுக் குழு நியமனத்தின் பெருமையை உணர்ந்தேன். இத்துறையில் தமிழகக் காவலர்கள்பால் முதல்வர் காட்டிய கடமை உணர்ச்சி என்னைப் பெரிதும் கவர்ந்தது.

தமிழக முதல்வர் பூர
பிரதிநிதித்துவம் வாய்ந்த காவ
துறை ஆய்வுக் குழுவை நியமி
துள்ளது பாராட்டத்தக்கதாகும்.

குழுவின் தலைவர் திரு. ஆர்.
கோபால்சாமி அவர்கள் மாநி
அரசின் தலைமைச் செயலாளரா
இருந்து ஆட்சி நிருவாகத்தி
நல்ல அனுபவம் பெற்றவ
பழைய ஐ. சி. எஸ் வர்க்கத்தை
சார்ந்தவர். உள்துறை, உள்ளா
சித் துறை, கல்வித்துறை
வற்றைத் தனித்தனியே
வகித்து அவற்றின் தலைமை
காரியாக இருந்து நிரம்ப
பவம் பெற்றவர்.
றுள்ள இந்நாளிலும்
கொண்ட பொறுப்பைத்
நிறைவேற்றுவதற்கு நன்கு
வேண்டும் என்ற ஆர்வம்
வர்.

ஆய்வுக் குழுவின் உ
ராகவும் செயலாளராகவு
திரு. என். கிருஷ்ணசாமி அவர்
காவல்துறை டி. ஐ. ஜி.
பணியாற்றி வருபவர். மிகு
பொறுமையோடும் திறமையோடு
கடமையாற்றக் கூடியவர். இவ
குழுவின் செயலாளராக நி
மிக்கப்பட்டதால் காவல் து
யின் தற்போதைய நிலையில் ஏ
படுத்தப்பட வேண்டிய மாறு
களைத் தெளிவுபெற இவர் மூ
அறிந்து கொள்வதற்குக் கு
விற்கு நல்ல வாய்ப்பு இருக்
வருகிறது. மூன்று உறுப்பின
களிலே ஒருவரான திரு. சந்தி
சேகரன் அவர்கள் திருச்சி மாவ
டத்தில் ஆட்சித் தலைவரா
இருந்து அண்மையில் ஓய்வு பெ

ாவட்ட ஆட்சித்தலைவர்கள் ட்ட மட்டத்தில் காவல் றையோடு தொடர்புடையவர் ாகையால் இவரது நியமனம் ய்வுக் குழுவிற்கு மிகவும் பயன் ருவதாக இருக்கிறது.

மற்றொரு உறுப்பினரான திரு. காவிந்தசாமிநாதன் தற்போ தய 'அட்வகேட் ஜெனரல்' வார். நீதித் துறைக்கும் காவல் றைக்கும் நெருங்கிய தொடர்பு ருந்து வருவதால் அந்த இணைப் ச் சந்தியிலே காவல்துறை பற் ய சட்டங்களிலே காவல்துறை தித்துறை ஆகிய இரண்டின் தாடர்பிலே ஏற்பட வேண்டிய ாறுதல்களுக்கு, ஆய்வுக் குழுவில் லோசனை கூறும் தகுதியை வர் பெற்றிருக்கிறார். ஆய்வுக் குழுவிலே நான் அங்கம் பெற் ருப்பது முக்கியமாகப் பொது க்கள் சார்பிலாகும். பொதுமக் ளுக்கும் காவல் துறைக்கும் டையே நல்ல உறவும் ஒருவர்க் காருவர் நல்லெண்ணமும் இருக்க வண்டியது அவசியமாகிறது. இத் றையில் ஆய்வுக் குழுவுக்கு லோசனை கூறுவதற்குத் தகுதி டைத்தவன் என்று நம்பியே தல்வர் என்னை நியமித்திருக் றார்.

ஆய்வுக் குழுவில் நியமனம் ற்றி ஒரு நாள் சட்டமன்றத்தில் ள்வி எழுந்த பொழுது அரசியல் சித் தலைவர்களுக்கு ஆய்வுக் வில் இடமளிக்க வேண்டும் று எதிர்த்தரப்பில் கோரப்பட் து.

அதற்குப் பதிலளித்த முதல் ர், அனைத்துக் கட்சிகளின் நம்பிக் கக்கு உரிய ஒருவரை ஆய்வுக் ழுவில் நியமித்திருக்கிறது அரசு ன்று கூறினார். முதல்வரின் கருத்து ருக்கப்படவில்லை. அவையில் மௌன மாக ஏற்கப்பட்டது. ஆட்சியின் தல்வர் மற்றும் சட்டமன்ற திர்க்கட்சி தலைவர்களின் நம்பிக் க்கு உகந்த வகையில் ஆய்வுக் ழுவில் பணியாற்ற முயன்று ருகிறேன்.

காவல் துறை ஆய்வுக்குழு முழுதும் பூரணப் பொறுப்புணர்ச்சியுடன் கடந்த ஆறுமாத காலமாகப் பணியாற்றி வருகிறது. குறைந்த அளவு திங்களுக்கு ஒருமுறை ஆய்வுக்குழு தவறாமல் கூடுகிறது. இடையில் தேவைப்படும் நேரத்தில் எல்லாம் ஆய்வுக் குழுவினைக் கூட்ட அதன் தலைவர் தவறுவதில்லை.

பிரிட்டனிலே காவல்துறை மிகச் சிறந்த முறையில் பணியாற்றி வருவதாகச் சொல்லப்படுகிறது. பிரிட்டன் காவல்துறைச் சீர்திருத்தங் காண சில ஆண்டுகளுக்கு முன்பு ஆய்வுக் குழு நியமிக்கப்பட்டது. அக்குழுவின் அறிக்கையையும் தமிழக ஆய்வுக் குழு பரிசீலனைசெய்து வருகிறது. இந்திய அரசும் வேறு சில மாநில அரசுகளும் நியமித்த ஆய்வுக் குழுக்களின் அறிக்கைகளும் பரீசிலிக்கப் படுகின்றன.

தேவைப்படுமானால் இந்தியத் தலைநகரான டெல்லிக்கும், வேறுசில மாநிலங்களுக்கும் நேரில் சென்று அங்கெல்லாம் காவல் துறை எப்படி நிருவகிக்கப்படுகிறது என்பதை அறிந்து வரும் எண்ணமும் தமிழக ஆய்வுக் குழுவுக்கு உண்டு. ஆனால் தமிழகக் காவல் துறையினர் இந்தியாவுக்குள்ளே உள்ள வேறு எந்த மாநிலத்திலும் உள்ள காவல் துறையினருக்கும் தாழ்ந்தவர்கள் அல்லர். சிற்சில வகைகளில் சிறந்தவர்களே என்று முதல்வர் கலைஞர் அவர்கள் சட்டப் பேரவையில் சில திங்களுக்கு முன்பு கூறினார். அவரது கருத்து தமிழக ஆய்வுக் குழுவுக்கு உடன்பாடு என்பதில் ஐயமில்லை.

தமிழகக் காவல்துறையினர் தங்களுக்கெனத் தனியாக ஒரு தொழிற் சங்கம் நடத்திவரவில்லை. அதனால் அவர்களுடைய குறைகள் அவர்களிடமிருந்தே கமிஷனுக்குக் கிடைப்பதற்கு வாய்ப்பில்லை என்று எண்ணத் தேவையில்லை.

காவல் துறையினரின் கருத்துக்களைக் கேட்டறிவதற்காக ஏற்பாடுகள் செய்வதற்கு ஆய்வுக் குழு துவக்கத்திலேயே பொறுப்பெடுத்துக் கொண்டது. போலீஸ் ஐ.ஜி. அவர்களை ஆய்வுக் குழுத் தலைவர் அவர்கள் சந்தித்துப் பேசி அதற்கான ஏற்பாடுகளைச் செய்தார். ஒவ்வொரு சர்க்கிளிலுமுள்ள நடுத்தர போலீஸ் அதிகாரிகள் காவலர்களின் பிரதிநிதிகள் ஒன்று கூடி தங்கள் குறைகளை நன்கு ஆராய்ந்து ஒரு விண்ணப்ப வடிவில் ஆய்வுக் குழுவிற்கு அனுப்புவதற்குப் போலீஸ் ஐ. ஜி. அவர்கள் அனுமதித்திருக்கிறார். அத்தகைய விண்ணப்பங்களும் ஆய்வுக் குழு அலுவலகத்திற்கு வந்து குவிந்து கொண்டிருக்கின்றன.

போலீஸ் அதிகாரிகளும் சரி அவர்களுக்கு கீழ்பட்ட காவலர்களும் சரி தனித்தனியாகவும் ஆய்வுக்கு குழுவிற்குத் தம் கருத்துக்களைக் கடிதம் மூலம் அனுப்புவதற்குத் தடையெதுவும் கிடையாது.

விடுதலைப் போராட்டக் காலத்திலே நம்மவர்களான காவலர்கள் சூழ்நிலையின் கட்டாயம் காரணமாக அந்நிய ஆட்சிக்குப் பணி புரிய வேண்டியவர்களாக இருந்தனர். அந்தக் காலத்திலே காவல் துறையினர் மீது சரியாகவோ தவறாகவோ வெறுப்பு ஏற்பட்டது. நாடு விடுதலை பெற்ற பின்னர் நம்மவர்களான காவல் துறையினர் மிகுந்த நாட்டுப் பற்றோடு பணி புரிந்து வருகின்றனர். எனினும் பழைய சூழ்நிலை மாறிவிடவில்லை.

மற்றும் மக்கள் சார்பில் நடத்தப்படும் உரிமைக் கிளர்ச்சிகளினால் காவல் துறையினருக்கும் பொதுமக்களுக்கு மிடையே சரியாகவோ, மிகையாகவோ கசப்புணர்ச்சி ஏற்பட்டு விடுகிறது. இவைகளை எல்லாம் களைய,காவல் துறை ஆணைக் குழு வழி வகை காண வேண்டியுள்ளது.

பொது மக்களுக்கும் காவல் துறைக்குமிடையே நல்லுணர்வு வளர வேண்டிய விருப்பத்தையும் மாறுதல்களையும் ஆய்வுக்குழு நினைவில் கொள்ளும்.

பொதுவாகத் தற்போதைய தமிழக அரசு தமிழக வரலாற்றிலேயே புனிதமான பணியைத் தொடங்கி அதனை எங்களிடம் நம்பிக்கையோடு ஒப்படைத்துள்ளது. ஆய்வுக் குழுவும் தனது கடமையைத் தமிழக மக்களுடைய, அரசினுடைய, குறிப்பாகக் காவல் துறையினருடைய நல்லெண்ணத்தைப் பெறக் கூடிய வகையில் நிறைவேற்றும் என்று நம்பலாம்.

> 8. ''தமிழர்கள் தங்கள் மொழியையும் வாழ்வையும் ஒன்று இணைத்துக் கொண்டவர்கள்; மொழியைக் கருவி என்று நினைக்காமல், தங்களை வழி நடத்தும் துணைவன், வழி காட்டும் வழிகாட்டி; பாடம் போதிக்கும் ஆசான்; உள்ளத்து உணர்ச்சிகளை வெளியிடும் நண்பன் என்று நினைக்கிறார்கள்.''
>
> ''தமிழுக்கு ஆபத்து வருகிறது என்று அறிகிறபோது—ஆபத்து வருமோ என ஐயம் தோன்றும் போது—ஆபத்து வரக்கூடுமோ—என்ற சந்தேகம் வரும்போது தமிழர்கள் ஆர்த்தெழுகிறார்கள்.''
>
> —அண்ணா

ஒவ்வொரு மாவட்டத்திலும், மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையின் கீழ் மாவட்ட வளர்ச்சிக் குழு இயங்கி வருகிறது. அந்தக் குழுவில் ஊராட்சி ஒன்றியங்களின் தலைவர்கள், நகர மன்றங்களின் தலைவர்கள், மாவட்டத்தின் எம். எல். ஏ.க்கள், எம்.பி.க்கள். ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர். அவர்களுண்டய கருத்துக்களைக் கேட்டறியவும் ஆய்வுக் குழு முயற்சி எடுத்துக் கொண்டுள்ளது.

வினாத்தாளும் பிறவும் மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம், அவரது-தலைமையில் இயங்கும் மாவட்ட வளர்ச்சிக் குழு உறுப்பினர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

ஆய்வுக் குழுவின் வினாத்தாள் முக்கியமான நாளேடுகளில் விளம்பரப் படுத்தப் பட்டுள்ளது. இதனால் மாநில மக்களிலே ஒவ்வொரு தனி நபரும் கூட தம் கருத்தை ஆய்வுக் குழுவுக்கு அனுப்பும் வாய்ப்பு தரப்பட்டுள்ளது.

கல்லூரி முதல்வர்களுக்கும், பல்வேறு தொழில், வாணிபஅமைப்பு நிருவாகிகளுக்கும், தொழிற் சங்கத் தலைவர்களுக்கும் ஆய்வுக்குழு வினாத்தாள் அனுப்பப்பட்டுள்ளது

இவையன்றி, காவல்துறை ஆய்வுக் குழு ஒவ்வொரு மாவட்டத் தலைநகருக்கும் நேரில் சென்று அந்த மாவட்டத்தின் காவல்துறை அலுவலர்கள், மாவட்ட வளர்ச்சிக் குழு உறுப்பினர், நீதிபதிகள், பப்ளிக் பிராஸிக்யூட்டர்கள் மற்றும் பிரமுகர்கள் ஆகியோருக்குப் பேட்டி அளித்து அவர்களுடைய கருத்துக்களைத் திரட்டி வருகிறது.

பல்வேறு மாநிலங்களின் போலீஸ் ஐ. ஜி.க்கள், தமிழகத்தின் முன்னாள் ஐ. ஜி.க்களின் கருத்துக்களையும் ஆய்வுக்குழு பெற்று வருகிறது.

உத்தியோகத்திலுள்ள அல்லது ஓய்வு பெற்று விட்ட போலீஸ் எஸ். பி.க்கள், டி. எஸ். பி.க்கள் ஆகியோரின் கருத்துக்களையும் அறியப் பெரு முயற்சி எடுத்துக் கொண்டு வருகிறது. தமிழக அரசு நியமித்துள்ள குழுவுக்குத் தரப்பட்டுள்ள கடமைகள் பலவாகும். காவல்துறையினரின் ஊதியம், உத்தியோக உயர்வு, அலவன்ஸ், குடியிருப்பு, அவர்களுடைய குழந்தைகளின் கல்வி, சிறப்புடைய வசதிகள் மற்றும் வாழ்க்கை ஆகியவற்றைப் பற்றி ஆய்ந்து அறிக்கை தருமாறு ஆய்வுக்குழு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

மற்றும் நீதித்துறைக்கும் காவல் துறைக்கும் இடையே இருந்து வரும் தொடர்பு, மத்திய காவல் துறைக்கும் மாநிலக் காவல் துறைக்கும் இருந்துவரும் தொடர்பு முதலியனவற்றில் மாறுதல் தேவையா? தேவையானால் எத்தகைய வகையில்? என்பதற்கும் காவல்துறை ஆணைக்குழு தக்க முடிவெடுக்கும்.

காவல் துறையினரின் ஊதியம் அலவன்ஸ் ஆகியவற்றில் எங்கள் ஆய்வுக்குழு சம்பளக் குழுவோடும் கலந்து பேசி ஒருமித்த முடிவு காண வேண்டியிருக்கிறது. ஆய்வுக் குழு உறுப்பினர்கள் காவல்துறையினரின் குடியிருப்பு வசதிகளில் மிகுந்த கவனம் செலுத்தி வருகின்றனர். உண்மையில் காவலர் குடியிருப்புகளை பல மாவட்டங்களில் நான் நேரில் சென்றுபார்த்த பொழுது திடுக்கிட்டுப் போனேன். அவ்வளவு சீர்திருத்தம் இன்னமும் தேவைப்படுகிறது.

சிறப்புப் பணிகளுக்கான அலவன்ஸ் முறையில் பெருங்குறைபாடு இருக்கக் காண்கின்றேன். இவற்றையெல்லாம்போக்க, காவல் துறை நிருவாகத்தில் மறுமலர்ச்சி காண ஆய்வுக்குழு முயன்று வருகிறது.

இவைகள் அனைத்தையும் நிறைவேற்ற வேண்டும் என்ற ஆர்வத்தில் தமிழக அரசின் நிதிநிலைகளையும் மறக்கவில்லை. அதையும் நினைவில் கொண்டு சிபாரிசுகளைச் செய்யும்.

எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவில் ஆய்வுக் குழுவின் வேலைகளை முடிப்பதென்று அதன் முதற் கூட்டத்திலேயே முடிவு செய்யப்பட்டது.

சிலம்புச்செல்வர்

ம.பொ.சி.

"அரையும் குறையும் நிறையும்"

"எல்லைவேலன்"

14—1—1968 அன்று மாபெரும் விழா. தமிழக கதர் கிராமக் கைத்தொழில் வாரியத்தின் மேற்பார்வையில் அமைந்த 'குறளகம்' என்ற வானளாவிய கட்டிடம் எழும்பிக் கொண்டிருக்கிறது. ஐந்து மாடிக் கட்டிடத்தின் அடிப்படைக் கட்டிடம் முடிந்து அதில் "காதி கிராப்ட்" என்றழைக்கப்படும் அங்காடி திறக்க இருக்கிறார்கள். மற்ற வேலைகள் முழுமை பெறாவிட்டாலும், அங்காடி கட்டி முடிக்கப்பட்டதால் அதை ஆரம்பித்து வைத்து விட வேண்டுமென அரசு முடிவுசெய்து திறப்புவிழா எடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு பேரறிஞர் அண்ணா அவர்கள் அன்றைய முதல்வர். மாண்புமிகு கலைஞர் அவர்கள் அன்றைய பொதுப்பணி அமைச்சர். மாண்புமிகு முத்துசாமி அவர்கள் உள்ளாட்சித் துறை அமைச்சர். இந்த மூவரும் விழாவில் கலந்து கொள்ளுகின்றனர். பேரறிஞர் அண்ணா கலந்துகொள்ளும் நிகழ்ச்சியானதால் வழக்கம்போல் பெருங்கூட்டம். அண்ணா அவர்கள் வந்த உடன் கட்டிட முழுமையும் அதிகாரிகள் சுற்றிக் காண்பிக்கிறார்கள். பாதிக்கட்டிடம் இன்னும் முழுமை பெறாமல் இருப்பதைக்கண்ட பேரறிஞர் அண்ணா அவர்கள் கேட்டார்கள். "என்ன - அரையும் குறையுமான இக்கட்டிடத்தை முழுமை பெறாத இந்த மாளிகையை என்னைத் திறந்து வைக்கச் சொல்லுகிறீர்களே" என்றார். அண்ணாவைச் சுற்றி ஆர்வத்துடன் நின்ற அலுவலர்கள் திடுக்கிட்டார்கள். யாரும் பதில் பேசவில்லை. களைகட்டியிருந்த விழா கலைந்துவிடுமோ என்று அலுவலர்கள் அஞ்சினர். அந்தக் கூட்டத்தில் சலனமற்றுச் சிரித்த முகத்துடன் கலைஞர் ஒருவர்தான் இருந்தார். விழா ஆரம்பமாகியது. கலைஞர் பேச எழுந்தார். "கூட்டம் ஆரம்பமாவதற்கு முன் கட்டிடத்தைச் சுற்றிப் பார்த்த அறிஞர் அண்ணா அவர்கள் அரையும் குறையுமான கட்டிடத்தைத் திறக்கச் சொல்லி விட்டீர்களே! ஏன்? என ஒரு வினா எழுப்பினார்கள். அதற்கு யாரும் பதில் கூறவில்லை. நான் இப்போது அதற்கு பதில் கூற விழைகிறேன். 'அண்ணா அவர்களே, உரிமை பெற்றுப் பல ஆண்டுகள் ஆனபோதிலும் முழு வளர்ச்சி இன்னும் பெறாத தமிழகத்தை, அரையும், குறையுமாகவே வளர்ச்சி கொண்ட தமிழகத்தையே மக்கள்—தமிழ் மக்கள் — உங்கள் கைபட்டால் அது முழுமை பெறும், நிறைவுபெறும் என்று எண்ணி உங்கள் கையில் ஒப்படைக்கவில்லையா? அதேபோல், நீங்கள் தொட்டதெல்லாம் பொன்னாகும் என்று திண்ணமாக நம்பி, இக்கட்டிடம் முழுமை பெறும் வகையில் அரையுங்குறையுமாக இருக்கும்போதே உங்களைத் திறக்கச் சொல்லி இருக்கிறார்கள்" என்றார். அண்ணா அவர்கள் உடனே மலர்ந்த முகத்துடன் நகைத்து மகிழ்ந்தார்கள். அங்கு கூடியிருந்தோர் யாவரும் அகமகிழ்ந்தார்கள். ஆரவாரம் செய்து கலைஞரைப் பாராட்டினார்கள். அலுவலர்கள் இழந்திருந்த மலர்ச்சியை மறுபடியும் பெற்றார்கள்.

மீண்டும் விழா, களைகட்டிச் சிறந்தது. இந்நிகழ்ச்சி மாண்புமிகு கலைஞர் அவர்களின் சொல்லாற்றலுக்கும், சமயோசிதப் பேரறிவுக்கும் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தது. அரையும் குறையுமானதும் கூட அண்ணா கைபட்டதால், கலைஞர் சொல் பட்டதால் நிறைவாகிவிட்ட விந்தையை அன்று கண்டோம்.

வரப்போகும் ஊராட்சித் தேர்தல்

★ 12,600 ஊராட்சிகள், 600 பேரூராட்சிகளுக்கான தேர்தல்.

★ 190 இலட்சம் வாக்காளர்கள்.

★ 46,000 வாக்குச் சாவடிகள்.

★ ஊராட்சித் தலைவர்களை நேரடியாகத் தேர்ந்தெடுத்தல்.

★ தனி வாக்காளர் பட்டியல்.

★ 1970 ஜூலை 25, 28, 31 தேதிகளில் தமிழ்நாட்டில் ஊராட்சித் தேர்தல் நடைபெறும்.

தமிழ்நாட்டில் சுமார் 12,600 ஊராட்சிகளுக்கும் 600 பேரூராட்சிகளுக்கும் சாதாரணத் தேர்தல்கள் 1970 ஜூலை 25, 28, 31 தேதிகளில் நடைபெறும். இத்தேர்தலில் வாக்கெடுப்பில் கலந்து கொள்வோர் எண்ணிக்கை ஏறத்தாழ 190 இலட்சமாக இருக்கும்; சுமார் 46,000 வாக்குச் சாவடிகள் இருக்கும். தமிழ்நாட்டின் வரலாற்றிலேயே இப்பொழுதுதான் முதன் முறையாக ஊராட்சித் தேர்தல்களுக்காகத் தனியாக வாக்காளர் பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளது.

இவ்வூராட்சிகளின் தலைவர்கள், தொடர்புடைய ஊராட்சி, பேரூராட்சி வாக்காளர்களால், நேரடியாக, இரகசிய வாக்கெடுப்பு முறை மூலம் தேர்ந்தெடுக்கப்படுவதும் இதுவே முதன் முறையாகும். ஊராட்சிகளின் தலைவர்கள் தேர்தலும், உறுப்பினர்கள் தேர்தலும் ஒரே சமயத்தில் நடைபெறும். இப்பொழுதுள்ளதுபோலவே ஊராட்சி உறுப்பினர்களால், அவர்களுக்குள்ளேயே ஒருவர் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுவார். அரசுக்கு வந்துள்ள கோரிக்கைகளையொட்டி, ஊராட்சிகளுக்குத் தலைவர்கள், உறுப்பினர்கள் தேர்தல்களுக்கு, வேட்பு மனுக்கள், தேர்தலுக்கு முதல்நாள் பெறப்படும் என்றிருந்தது மாற்றப்பட்டு, வாக்கெடுப்பு நடக்கும் நாளுக்கு இரண்டு நாட்கள் முன்னதாகவே தலைமைத் தேர்தல் அதிகாரியினால் அவை பெறப்படும். இதனால், வேட்பாளர்கள், தேர்தல் பிரச்சாரம் செய்ய இரண்டு முழு நாட்கள் கிடைக்கின்றன. பேரூராட்சியில் போட்டியிடுவோர்க்கு, வேட்பு மனு தாக்கல் செய்த நாளிலிருந்து தேர்தல் வரை இடையே 15 நாட்கள் உள்ளன. மனுக்கள் ஆய்வு செய்யப்பட்டு முடிவு அறிவிக்கப்பட்ட பின்னர் பிரச்சாரத்திற்கு சுமார் 10 நாட்கள் உள்ளன.

தேர்தல்கள் சுமுகமாக நடைபெறுவதற்காக வேண்டி, ஒவ்வொரு மாவட்டமும், வருவாய்க் கோட்டங்கள் அடிப்படையில் மூன்று வரிசைகளாக ஒன்று சேர்க்கப்பட்டுள்ளன. மாநிலத் தேர்தல் அதிகாரியான கிராம வளர்ச்சி இயக்குநர் இத் தேர்தலை நடத்தி வைக்கும் மேற்பார்வை அதிகாரியாக இருப்பார். சம்பந்தப்பட்ட மாவட்டங்களில் தேர்தலை நடத்தி வைக்கும் பொறுப்பு அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களுடையதாகும்.

உறுப்பினர்கள் தேர்தல்களை நடத்துவதற்காக ஒவ்வொரு பேரூராட்சியும் தனிநபர் வார்டுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அரிசனங்கள் மலைவாழ் மக்களுக்கு அவர்களுடைய மக்கள் தொகை, நகரத்தில் அவர்களிடையே உள்ள வாக்காளர்களின் எண்ணிக்கை ஆகியவற்றை ஒட்டி, இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. ஊராட்சிகளில் ஒன்றுக்கு மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட வார்டுகள் இருக்கும். அதாவது ஒரு வார்டிலிருந்து ஒன்றுக்கு மேற்பட்ட உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்பும் முறை இருக்கும். இந்த வார்
களிலும் அரிசனங்கள், மலைவா
மக்களைச் சேர்ந்த உறுப்பின
களுக்கு இடங்கள் ஒதுக்கப்பட்
உள்ளன. அவை, அவர்களுடை
மக்கள் தொகை, கிராமத்தில் அவ
களிடை உள்ள வாக்காளர்களி
எண்ணிக்கை ஆகியவற்றை ஒட்
ஒதுக்கப்படும். 1961ல் எடுக்க
பட்ட மக்கள் தொகை கணக்கெடு
பின் அடிப்படையில் உறுப்பினர்க
எண்ணிக்கை நிர்ணயிக்கப்ப
டுள்ளது. ஓர் ஊராட்சிக்
(கிராமம் அல்லது நகரம்) தேர்
தெடுக்கப்படும் உறுப்பினர்கள் என்
ணிக்கை 5லிருந்து 15 வரை இரு
கும். இந்த எண்ணிக்கையி
ஊராட்சித் தலைவர் சேர்த்து
கொள்ளப்படவில்லை. ஓர் ஊராட்
அல்லது பேரூராட்சியிலிருந்து பெண்
உறுப்பினர் யாரும் தேர்ந்தெடுக்க
படவில்லையென்றால், அவ்வூராட்
ஒரு பெண் உறுப்பினரைச் சேர்த்து
கொள்ளலாம்.

உறுப்பினர்கள், தலைவர்கள் தேர்
தல் இரகசிய வாக்கெடுப்பு மூல
நடைபெறும். இத்தேர்தல்க
கட்சி சார்பற்ற அடிப்படையில்
நடைபெறும். உறுப்பினர்கள்,
தலைவர்கள் பதவிகளுக்குப் போட்டி
யிடும் வேட்பாளர்களுக்கு, அங்கீ
கரிக்கப்பட்ட அகில இந்திய கட்சி
கள், மாநிலக் கட்சிகளுக்கு ஒதுக்கப்
பட்ட சின்னங்களைத் தவிர்த்து,
வேறு சின்னங்கள் ஒதுக்கப்படும்.
சீட்டுக் குலுக்கிப்போட்டு எடுத்துச்
சின்னங்கள் ஒதுக்கப்படும். வாக்குச்
சீட்டில் சின்னங்களின்மீது முத்திரை
யிடுவதின் மூலம் வாக்கெடுப்பு
நடத்தப்படும். கடந்த காலத்தில்
இருந்தது போலவே வாக்குச் சீட்டு
களில் தேர்தல் சின்னங்கள்மட்டுமே
இருக்கும்; வேட்பாளர்களின்
பெயர்கள் இருக்காது. உறுப்பினர்
களுக்கான வாக்குச் சீட்டுகள்
வெள்ளைத் தாளிலும், தலைவர்களுக்
கான வாக்குச் சீட்டுகள் இளஞ்
சிவப்புத் தாளிலும் அச்சிடப்படும்.
உறுப்பினர்களுக்கான வாக்குச்சீட்
டில் அச்சிடப்படும் சின்னங்கள் தலை
வர்களுக்கானவற்றிலிருந்து முற்றி
லும் வேறுபட்டு இருக்கும்.

கடந்த தேர்தல்களின்போது கையாளப்பட்ட முறைகளையொட்டியே, பெரும்பாலும் இத்தேர்தலை நடத்தும் முறையும் இருக்கும். ஊராட்சிகளைப் பொறுத்தவரையில் எளிய நடைமுறையே விதிகளில் வரையறுக்கப்பட்டுள்ளது. பேரூராட்சிகளைப் பொறுத்தவரை அநேகமாக நகராட்சி மன்ற உறுப்பினர்கள் தேர்தலைப் போலவே இதன் நடைமுறையும் இருக்கும். உறுப்பினர்கள் தேர்தல் நடைமுறையில் ஒருசில மாற்றங்கள் செய்யப்பட்டு உள்ளன.

வாக்காளர்கள் ஆள் மாருட்டம் செய்வதைத் தடுக்க, ஊராட்சிகளில் வாக்காளர்களின் கைவிரல்களில் அடையாளமிடுவதற்கு, இத்தேர்தலில் அழிக்க முடியாத மை பயன்படுத்துவது ஒரு முக்கியமான மாறுதலாகும். மற்றொரு முக்கியமான மாறுதல், குருடர் அல்லது உடல் ஊனமுற்றோர் வாக்களிக்கும் நடைமுறையைப் பற்றியதாகும். சட்டமன்றப் பேரவைத் தேர்தல்களைப் போலவே வாக்குச் சீட்டில் அடையாளமிட இயலாத வாக்காளர் ஒருவர், வாக்குச் சீட்டில் அடையாளமிட்டு, பெட்டியின் உள்ளே போடுவதற்கு, தமக்கு உதவியாக 21 வயதுக்குக் குறையாத ஒருவரைத் தம்முடன் கூட்டிச் செல்ல உரிமையுடையவராவார். அம்புடன் கூடிய பெருக்கல் குறியையுடைய ரப்பர் முத்திரையைக் கொண்டு, வாக்குச் சீட்டில் அடையாளமிடப்படும். ஊராட்சித் தேர்தல்களில் இவ்வகையான அடையாளமிடுதல் முதன் முறையாகப் புகுத்தப்படுகிறது.

1958-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தில் அண்மையில் செய்யப்பட்ட திருத்தங்களின் விளைவாக, உறுப்பினர்களாக, தலைவர்களாக, தேர்த[illegible]ல் போட்டியிடும் வேட்பாளர்[illegible]ின் தகுதி குறித்து மேற்படிச் [illegible]ட்டத்தில் சில முக்கியமான மாறுதல்கள் சேர்க்கப்பட்டுள்ளன. ஒருவரே தலைவராகவும் உறுப்பினராகவும் தேர்தலில் போட்டியிடுவதை இச்சட்டம் தடை செய்கிறது. ஒருவர், உறுப்பினர் அல்லது தலைவர் ஆகிய இரண்டனுள் ஏதாவது ஒன்றுக்கு மட்டுமே போட்டியிடலாமேயன்றி இரண்டு பதவிகளுக்கும் போட்டியிடக் கூடாது. இரண்டுக்கும் மனுக்கள் தாக்கல் செய்திருந்தால் மனுக்களைப் பரிசீலிக்கும் போது ஏதாவது ஒன்றுக்கு மட்டும் அவர் விருப்பம் தெரிவிக்க வேண்டும்; மற்றது தள்ளுபடி செய்யப்படும்.

ஊராட்சித் தேர்தல்களில் போட்டியிடும் வேட்பாளர்கள் வருவாய்த் துறை ஆய்வாளரிடமிருந்தும் ஊராட்சி ஒன்றிய ஆணையாளரிடமிருந்தும் வரி பாக்கியில்லை என்னும் சான்று கொடுக்கப்பட வேண்டுமென்று நிபந்தனையிடப் பட்ட விதி நீக்கப்பட்டுள்ளது. அதற்குப் பதிலாக அவர் ஊராட்சி அல்லது ஊராட்சி ஒன்றியத்திற்கு செலுத்த வேண்டிய பாக்கி எதுவும் இல்லை என்று வேட்பாளர் மனுவில் உறுதிமொழி கொடுக்குமாறு கேட்டுக் கொள்ளப் படுவார். வேட்பு மனுக்களை ஆய்வு செய்யும் சமயத்தில் வந்திருக்குமாறு கிராமக் கர்ணங்களுக்கு உத்தரவுகள் பிறப்பிக்கப்படும்.

ஊராட்சிகளில், வாக்களிப்பு, உணவுக்கான இடை வேளையின்றி காலை 8 மணி முதல் பிற்பகல் 3 மணி வரையிலும் நடைபெறும் வேட்பு மனுக்களைப் பரிசீலனை செய்வதற்காகக் குறிப்பிடப்பட்டுள்ள நாளன்று காலை 9 மணி முதல் பிற்பகல் 1 மணி வரையில் வேட்பாளர்கள் தம்முடைய மனுக்களைக் கொடுக்க வேண்டும். அதே நாளன்று பிற்பகல் 1 மணி முதல் 2 மணி வரையில் வேட்பாளர்களுடைய மனுக்கள் பரிசீலனை செய்யப்படும். வேட்பாளர்கள் அதே நாளன்று பிற்பகல் 5 மணி வரையில் தங்கள் வேட்பு மனுவைத் திரும்பப் பெற்றுக்கொள்ள அனுமதிக்கப்படுவர். அதன் பின்னரே தேர்தல் சின்னங்கள் ஒதுக்கப்படும். இவ்வாருக, வேட்புமனுக்களைத் தாக்கல் செய்தல் அவற்றை ஆய்வு செய்தல், திரும்பப் பெறுதல், சின்னங்களை ஒதுக்குதல் ஆகிய அனைத்தும் ஒரே நாளில் முடிவுறும். வாக்கெடுப்பு முடிவுற்றவுடனேயே, ஒரு பொதுவான, இடத்தில், எல்லா வார்டுகளுடைய வாக்குச் சீட்டுகளும் எண்ணப் பெற்று, முடிவு அறிவிக்கப்படும். பேரூராட்சிகளில் காலை 8 மணிக்குத் தொடங்கி மாலை 5 மணி வரை, நண்பகல் உணவு இடைவேளையின்றி – தொடர்ந்து வாக்குப்பதிவு நடைபெறும். வாக்குப்பதிவு நடைபெற்று முடிந்த மறுநாளன்று, ஒரு பொதுவான, இடத்தில் வாக்குச் சீட்டுகள் எண்ணப் பெற்று முடிவு அறிவிக்கப்படும்.

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள 46 ஊராட்சிகளும், திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை வட்டத்திலுள்ள 6 ஊராட்சிகளும், திருத்தி அமைக்கப்பட்டு முறையே 64 பேரூராட்சி 224 ஊராட்சிகளாகவும், 4 பேரூராட்சி 6 ஊராட்சிகளாகவும் ஆக்கப் பட்டுள்ளன. மாநிலத்திலுள்ள ஏனைய பகுதிகளிலுள்ளது போன்ற ஓர் ஊராட்சி முறையை இப் பகுதிகளிலும் கொணர்தற்கென, மேற்கண்டவாறு சீரமைப்புச் செய்யப் பட்டுள்ளது.

புதிதாகத் தேர்ந்தெடுக்கப்படும் ஊராட்சி உறுப்பினர்களும் ஊராட்சித் தலைவர்களும் 2–8–1970 நண்பகல் தங்களுடைய பதவிகளை ஏற்பார்கள்.

ஒரு சில பேரூராட்சிகளை நகராட்சிகளாக உயர்த்தும் செயற்குறிப்பு அரசுக்கு வந்துள்ளது. இதன்படி எவ்வெப் பேரூராட்சிகள் நகராட்சிகளாக மாற்றப்படும் என்பது பின்னர் அறிவிக்கப்படும். இதற்கிடையில், இந்திய அரசு விதித்துள்ள மக்கள் தொகைக் கணக்கெடுப்புத் தடையின் காரணமாக அதன் மீது தொடர்ந்து நடவடிக்கை எடுக்கவியலாத நிலை ஏற்பட்டது. தடையைத் தளர்த்துமாறு இந்திய அரசுக்கும் தொடர்புடைய அதிகாரிகட்கும் எழுதப்பட்டு பதில் எதிர்பார்க்கப்படுகிறது. சாதகமான பதில் கிடைத்து, அப்பேரூராட்சிகள் நகராட்சிகளாக்கப்பட்டால் அவ்விடங்களில் மட்டும் இத் தேர்தல் நடைபெருது.

தமிழ்நாடு ஊராட்சித் தேர்தல்

நிகழ்வு முறைக் குறிப்புகள்

		முதல் தொகுதி	இரண்டாம் தொகுதி	மூன்றும் தொகுதி
	பேரூராட்சிகள்			
1.	தேர்தல் அறிவிப்பு	2-7-1970	4-7-1970	8-7-1970
2.	வேட்பு மனுக்கள் தாக்கல் செய்தல்	10-7-1970	13-7-1970	16-7-1970
3.	வேட்பு மனுக்கள் தாக்கல் செய்துள்ளோர் பட்டியல் வெளியிடுதல்	10-7-1970	13-7-1970	16-7-1970
4.	வேட்பு மனுக்களை ஆய்வு செய்தல்	11-7-1970	14-7-1970	17-7-1970
5.	(அ) முறையீடு இல்லாவிடில் வேட்பு மனுக்களைத் திரும்பப்பெறுதல்	14-7-1970	17-7-1970	20-7-1970
	(ஆ) முறையீடு இருப்பின் வேட்பு மனுக்களைத் திரும்பப்பெறுதல்	15-7-1970	18-7-1970	21-7-1970
6.	(அ) முறையீடு இல்லாவிடில் முடிவான வேட்பாளர்கள் பட்டியலை வெளியிடுதல்	15-7-1970	18-7-1970	21-7-1970
	(ஆ) முறையீடு இருப்பின் முடிவான வேட்பாளர்கள் பட்டியலை வெளியிடுதல்	16-7-1970	20-7-1970	22-7-1970
7.	வாக்கெடுப்பு நாள்	25-7-1970	28-7-1970	31-7-1970
8.	வாக்குச் சீட்டுக்களை எண்ணும் நாள்	26-7-1970	29-7-1970	1-8-1970
	ஊராட்சிகள்			
1.	தேர்தல் அறிவிப்பு	13-7-1970	17-7-1970	20-7-1970
2.	வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்தல்	22-7-1970	25-7-1970	28-7-1970
3.	வேட்பு மனுக்களைத் திரும்பப்பெறல்	22-7-1970	25-7-1970	28-7-1970
4.	வாக்கெடுப்பு நாள்	25-7-1970	28-7-1970	31-7-1970
5.	வாக்குச் சீட்டுக்களை எண்ணும் நாள்	25-7-1970	28-7-1970	31-7-1970

1970-ஆம் ஆண்டில் நடைபெறும் ஊராட்சிகள் தேர்தலுக்கென ஒன்று சேர்க்கப்பட்ட வருவாய்க் கோட்டங்களும், வாக்கெடுப்பு நாட்களும்

கோட்டத்தின் பெயரும் வாக்கெடுப்பு நடைபெறும் நாளும்

	மாவட்டம்	முதற்தொகுதி	இரண்டாம் தொகுதி	மூன்றாம் தொகுதி
		25-7-1970	28-7-1970	31-7-1970
1.	வடஆர்க்காடு	திருவண்ணாமலை திருப்பத்தூர்	செய்யாறு திருப்பத்தூர்	இராணிப்பேட்டை
2.	செங்கற்பட்டு	சைதாப்பேட்டை திருவள்ளூர்	—	செங்கற்பட்டு காஞ்சிபுரம்
3.	கோயம்புத்தூர்	கோயம்புத்தூர் கோபிசெட்டிபாளையம்	ஈரோடு	பொள்ளாச்சி
4.	திருநெல்வேலி	தூத்துக்குடி, சேரன்மாதேவி	திருநெல்வேலி	கோயில்பட்டி
5.	தர்மபுரி	ஹோசூர்	—	தர்மபுரி
6.	சேலம்	சேலம்	சங்ககிரி	நாமக்கல், மேட்டூர்
7.	மதுரை	உசிலம்பட்டி	திண்டுக்கல்	மதுரை, பெரியகுளம்
8.	திருச்சிராப்பள்ளி	புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி	அரியலூர்	முசிரி, கரூர்
9.	தென் ஆர்க்காடு	திருக்கோயிலூர்	விருத்தாசலம்	சிதம்பரம், திண்டிவனம்
10.	தஞ்சாவூர்	நாகப்பட்டினம், கும்பகோணம்	பட்டுக்கோட்டை, மாயூரம்	மன்னார்குடி, தஞ்சாவூர்
11.	இராமநாதபுரம்	சிவகாசி	சிவகங்கை	தேவகோட்டை, இராமநாதபுரம்
	கன்னியாகுமரி	கல்குளம் வட்டத்திலுள்ள ஊராட்சிகள்	விளவங்கோடு வட்டத்திலுள்ள ஊராட்சிகள்	கோவளை, அகஸ்தீஸ்வரம் வட்டத்திலுள்ள ஊராட்சிகள்
13.	நீலகிரி	உதகமண்டலம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள ஊராட்சிகள்	கோத்தகிரி, கூடலூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள ஊராட்சிகள்	கூனூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள ஊராட்சிகள்



அரசு அலுவலகங்களிலே....

அறிஞர் அண்ணா அவர்களின் ஆட்சியில், 1968ஆம் ஆண்டு, ஏற்றமிகு எழிலுடன் விளங்கும் பெருமை பெற்றது. குறிப்பாக, தமிழ் மொழி வரலாற்றிலே பொன்னெழுத்தால் பொறிக்கத் தக்க நிகழ்ச்சிகள், அந்த ஆண்டின் தொடக்கத்திலேயே நிகழத் தொடங்கின. சிறப்பாக, சனவரி மாதம் முதல் வாரத்தில், உலகத் தமிழ் மாநாடு, சென்னை மாநகரில் சிறப்புடன் நடைபெறத் தொடங்கியது. உலக நாடுகள் பலவற்றிலிருந்தும் வந்த அறிஞர் பெருமக்கள் அனைவரும், தமிழ் அன்னைக்குப் புகழ்மாலை சூட்டியதோடு, உலகெங்கும் தமிழ்மணம் கமழ உள்ளன்புடன் வழிவகுத்தனர்.

அதே ஆண்டு, சனவரித் திங்கள் 23ஆம் நாளன்று, தமிழ்நாடு சட்டப் பேரவையின் சிறப்புக் கூட்டம் நடைபெற ஏற்பாடாகியது. அப்போது, ஆட்சி மொழி பற்றிய தீர்மானம் ஒன்று, மாண்புமிகு கல்வி அமைச்சர், நாவலர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்களால் முன்மொழியப் பட்டது. வரலாற்றுப் புகழ் பெற்ற இந்தத் தீர்மானத்தின் மீது, தமிழகத்தின் சட்டப் பேரவையில் உள்ள அனைத்துக் கட்சித் தலைவர்களும், சிறப்பான முறையில் பங்குகொண்டு, தமது கருத்துக்களை வெளியிட்டுள்ளனர். சட்டப் பேரவையில் நடைபெற்ற இந்தக் கருத்துரைகள் அனைத்தையும் ஒன்று திரட்டி, சட்டப் பேரவைத் துறை, ஒரு தனி நூலையே 1968ஆம் ஆண்டில் வெளியிட்டுள்ளது. சுமார் 152 பக்கங்கள் கொண்ட அந்த நூல், ஆட்சி மொழி பற்றி ஆராய்வோர் அனைவரும், ஆழ்ந்து படித்துப் பயனடைய வேண்டிய அடிப்படை ஆவணமாகும். குறிப்பாக, அன்றைய தினம் முதலமைச்சராக இருந்த அறிஞர் அண்ணா அவர்களும், அவர் வழியில் நின்று பணிபுரியும் இன்றைய முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களும், மற்றுமுள்ள பல்வேறு கட்சித் தலைவர்கள் அனைவரும் எடுத்துரைத்த கருத்துக்களை, அந்நூலில் விரிவாகக் காணலாம்.

ஒரு சில திருத்தங்களுடன் நிறைவேறிய அந்தத் தீர்மானத்தைக் குறித்து, இறுதியாகப் பேசிய அறிஞர் அண்ணா அவர்களின் பேருரை, தமிழ்நாடு அரசின் ஆட்சித் துறையிலே ஒரு புதிய திருப்பத்தை உண்டாக்கியுள்ளது. சிறப்பாக,

> ''தமிழகத்தில் தமிழ், பயிற்சி மொழியாகவும், பாடமொழியாகவும் எல்லாக் கல்லூரிகளிலும், நிர்வாக மொழியாக பல்வேறு துறைகளிலும் ஐந்தாண்டுக் காலத்துக்குள் நடைமுறைக்கு வருவதற்கான துரிதமான நடவடிக்கையை மேற்கொள்வது என்று இம்மன்றம் தீர்மானிக்கிறது.''

என்பது, அந்தத் தீர்மானத்தின் முக்கிய பகுதியாகும்.

இந்தத் தீர்மானத்தில் குறிப்பிட்டதற்கிணங்க, 1973 ஆம் ஆண்டு சனவரி மாதம் 23ஆம் தேதிக்குள் தமிழ்நாடு அரசு அலுவலகங்கள் அனைத்திலும், தமிழ்த் திட்டம் செம்மையான முறையில் நிறைவேற வேண்டும் (கல்லூரிகளில், பயிற்சி மொழியாகவும், பாடமொழியாகவும், தமிழ் விளங்கச் செய்யும் பொறுப்பு, தமிழ்நாடு அரசின் கல்வித் துறையைச் சார்ந்ததாகும்). தமிழக அரசு அலுவலகங்களில், நிர்வாக மொழியாகத் தமிழ் விளங்குவதற்கான நடவடிக்கைகள் அனைத்தையும் மேற்கொள்ளும் பொறுப்பு, அனைத்தும் ஆட்சி மொழிக் குழுவைச் சார்ந்ததாகும்.

1956ஆம் ஆண்டில் நிறைவேறிய தமிழ்நாடு ஆட்சிமொழிச் சட்டத்தின்படி, தமிழ் மொழி, அரசு அலுவலகங்கள் அனைத்திலும் நிர்வாக மொழியாக விளங்க வேண்டும். அந்த மாபெரும் ஆக்கப் பணியை, கடந்த சுமார் 13 ஆண்டுகளாக, ஆட்சிமொழிக் குழு, படிப்படியாக நிறைவேற்றி வந்தது. 17–11–69ல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைத் தலைவராகவும் மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சரைத் துணைத் தலைவராகவும் கொண்டு, ஆட்சிமொழிக் குழு, திருத்தியமைக்கப் பட்டுள்ளது. புதிய தலைமையின் காரணமாகப், பல்வேறு ஆக்கப் பணிகள்

ஊக்கத்துடன் செயல்பெறத் தொடங்கியுள்ளன.

இந்தக் குழுவில் உள்ள மற்ற உறுப்பினர்கள் வருமாறு:

திருவாளர் டாக்டர் மு. வரதராசனுர்

திருவாளர் கா. திரவியம், ஐ. ஏ. எஸ்.

ருவாளர் எம். சண்முக சுப்பிரமணியம்,

திருவாளர் கீ. இராமலிங்கம்,

திருவாளர் வல்லே எம். பாலசுப்பிரமணியம்

திருவாளர் கோ. மு. முத்துசாமி பிள்ளே (ஓய்வு பெற்ற ஐ. ஏ. எஸ்)

கல்வித் துறை அரசுச் செயலாளர் (எஸ். கிருஷ்ணசாமி, ஐ. ஏ. எஸ்.)

தமிழ் வளர்ச்சி இயக்குநர் (முத்து இராசாக்கண்ணனுர், எம். ஏ., பி. ஓ. எல்.)

ஆட்சிமொழிக்குழுச் செயலாளர் (சி. வேங்கடசாமி; எம். ஏ.)

1969ஆம் ஆண்டின் பிற்பகுதியில், ஆட்சி மொழிச் சட்டத்தை நிறைவேற்றுவதில், குறிப்பிடத்தக்க இரு திருப்பங்கள் ஏற்பட்டன. அவற்றின் விவரம் வருமாறு.

27–9–69 முதல், துறைத் தலைமை அலுவலகங்கள் அனைத்தும் தமக்குள் கடிதப் போக்குவரத்தைத் தமிழிலேயே நடத்த வேண்டுமென்று, அரசாணை பிறந்தது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 17–10–69ல் நடைபெற்ற பத்திரிக்கையாளரின் சிறப்புக் கூட்டத்தில் இந்த முக்கிய செய்தியை வெளியிட்டு, தமிழ் மக்கள் அனைவரும், இதை நன்கு அறியச் செய்தார்.

அதையடுத்து 27–12–69ல் தமிழ்நாடு அரசு வெளியிட்ட ஆணையின்படி தலைமைச் செயலகத்தில், (Secretariat) சட்டம், நிதி, சட்டமன்றம் ஆகிய துறைகள் தவிர மற்ற துறைகளில், ஒரு சில விதிவிலக்குகளுக்குட்பட்டு, தமிழ்த் திட்டம் விரிவடையவழி கோலப்பட்டது. தலைமைச் செயலகத்துக் கோப்புகளில் குறிப்புகளும் வரைவுகளும் எழுதுவதற்குத் தமிழைப் பயன்படுத்தும் திட்டம், அந்தத் தேதி முதற்கொண்டு, செயல்படத் தொடங்கியது. இந்த அரசாணையின் கருத்தை, பத்திரிகையாளர் வாயிலாக வெளியிட்டு, எல்லா மக்களும், அலுவலர்களும் அறியச் செய்துள்ளார். மேலும் நிதி, சட்டம் ஆகிய துறைகளிலும் 1–4–70 முதல் தமிழ்த் திட்டத்தின் முதல் நிலையை (அதாவது, தமிழில் வரும் கடிதங்களுக்குத் தமிழிலேயே பதில் அனுப்புதல்) நிறைவேற்ற வேண்டுமென அரசாணை 9–3–70ல் வந்துள்ளது. [அரசாணை எண். நிலே. 5173 பொது (தமிழ் வளர்ச்சி)த் துறை]

இவ்வாறு, தமிழை, அரசின்மேல் நிலை அலுவலகங்களில் பயன்படுத்துவதோடு, சட்டத் துறையிலும் உபயோகிக்க ஏற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. நீதி மன்றங்களில் (உயர்நீதி மன்றங்கள் தவிர) பதியப்படும் சாட்சியங்கள் யாவும், ஒரு சில விதிவிலக்குகளுக்குட்பட்டு, தமிழிலேயே பதியப்பட வேண்டுமென்று அரசாணை பிறப்பிக்கப்பட்டது. 14–1–70 (பொங்கல் புதுநாள்) முதல், இவ்வரசாணை செயல்முறைக்கு வந்துவிட்டது. அன்று தொடங்கி, மாவட்ட அளவில் உள்ள குற்றவியல், உரிமையியல் நீதி மன்றங்கள், தீர்ப்பாயங்கள் முதலியவற்றில் (சென்னை மாநகரிலுள்ள உயர் நீதி மன்றம் தவிர மற்ற நீதி மன்றங்களிலும்) சாட்சியங்கள், தமிழில் பதிவு செய்ய வழிவகுக்கப்பட்டது. வழக்குகளின் தீர்ப்பும் தமிழிலேயே எழுதப்படுவதற்கு, அத்திட்டம் முன்னேடியாக அமையலாம்.

அரசின் சார்பாக வழங்கப்படுகின்ற காசோலைகளிலும், அரசு அலுவலர்கள் கையாளுகின்ற காசோலைகளிலும், தமிழில் கையொப்பமிட ஏற்பளிக்கும் வண்ணம் 10–3–70 தேதியிட்ட அரசு குறிப்பாணை எண். 744 பொது (தமிழ் வளர்ச்சி–1)த் துறையில் ஓர் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மாநிலம் முழுவதும் சென்று ஆங்காங்கே உள்ள அரசு அலுவலகங்களில் தமிழ்த் திட்டம் செயல்படும் முறை குறித்து ஆய்வு செய்யும் பணியை, ஆட்சிமொழிக் குழு அலுவலகத்தின் சார்பில் தற்சமயம் தனி அலுவலர் ஒருவரே மேற்கொண்டுள்ளார். இவ்வாய்வுப் பணியை விரைவுபடுத்தும் நோக்கத்தோடு, பெரும்பாலும் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஆய்வுத் தனி அலுவலர் ஒருவரை நியமிக்க அரசாணை ஒன்று, அண்மையில், பிறப்பிக்கப்பட்டுள்ளது. இப்பணிக்கென, மாவட்ட அளவில் செயல்படுவதற்காக 9 தனி அலுவலர்களின் பதவிக்கான ஒப்பளிப்பு அளிக்கப் பட்டுள்ளது. மிக விரைவில் இப்பதவிகள் நிறைவு செய்யப்பட்டு, ஆய்வுப் பணி, சீரிய முறையில் செயல்பட வழி பிறக்கும்.

தற்போது, மாநிலம் எங்கும் உள்ள அரசு அலுவலகங்களில் தமிழ்த் திட்டம் செயல்படும் முறை குறித்து ஆய்வு செய்யும் ஆய்வுத் தனி அலுவலர் 1–11–69 முதல் 31–5–70 முடிந்த காலத்திற்குள், சுமார் 513 அலுவலகங்களை ஆய்வு செய்துள்ளார். நீலகிரி, தஞ்சை, திருச்சி, தென்னார்க்காடு, வடார்க்காடு, செங்கற்பட்டு, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் இதுவரை ஆய்வுகள் மிகத் தீவிரமாக நடைபெற்றுள்ளன. 1–1–70 முதல், தமிழ் வளர்ச்சி இயக்குநர் அவர்கள் மாவட்டம்தோறும் உள்ள அரசு அலுவலகங்களை ஆய்வு செய்து வருகின்ருர். ஆய்வு செய்வதற்கு முன்னர், ஆய்வு செய்யப்படுகின்ற அலுவலகங்களைச் சார்ந்த அலுவலர்களை ஒன்று சேர்த்து, மாவட்ட ஆட்சியாளர் தலைமையில் கூட்டங்கள் நடத்தித் தமிழ்த் திட்டத்தைச் செம்மையாகச் செயல்படுத்துவதற்கான வழி வகைகளைக் காணும் நோக்கத்தோடும், இத்திட்டத்தை செயல்படுத்துவதில் உள்ள இடர்ப்பாடுகளைப் போக்கும் நடவடிக்கைகளை எடுப்பதற்காகவும், உடனடியான முயற்சிகள் மேற்கொள்ளப் படுகின்றன.

இதன் விளைவாக, மாவட்டங்களில் உள்ள அரசு அலுவலகங்களில் தமிழ்த் திட்டத்தைச் செயல்படுத்துவதில், ஒரு புத்துணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. இப்புதிய விழிப்புணர்ச்சியின் காரணமாக, தமிழ்த் திட்டம், அரசு எதிர்பார்க்கும் அளவிற்குச் செயல்படுவதற்கான சூழ்நிலை உருவாகி வருகிறதென்று கூறலாம்.

அலுவலகங்களுக்கும் வேண்டிய சட்டங்கள். விதிகள், நடைமுறைகள் முதலிய நூல்களை ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழிபெயர்த்து அச்சிட, ஆட்சி மொழிக் குழு, ஏற்பாடு செய்து வருகிறது. அவ்வாறு வெளிவந்த நூல்கள், சம்பந்தப்பட்ட அலுவலகங்களுக்கு, வழங்கப்பட்டு வருகின்றன. இதற்காக, மொழிபெயர்ப்பாளர்களையும், ஆய்வாளர்களையும் தேர்ந்தெடுத்துப் பட்டியல் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கிறது. பல்வேறு, துறையில் பணியாற்றி, அனுபவமும் தமிழ் அறிவும் ஒருங்கே பெற்ற ஓய்வ் பெற்ற அரசிதழ்ப் பதிவு பெற்ற அலுவலர்கள் பலர், இப்பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கிருர்கள். மொழி பெயர்ப்பிற்காகத் தேர்ந்தெடுக்கப்படும் நூல்கள், இம்மொழி பெயர்ப்பாளர்களுக்கு அனுப்பப்படுகின்றன. அவர்கள் மொழிபெயர்த்து முடிந்தபின் கையெழுத்துப் பிரதிகளை ஆட்சி மொழிக் குழு அலுவலகத்துக்கு அனுப்பி வைக்கிருர்கள். பின்னர், அவை, ஆய்விற்காகப் பட்டியலில் உள்ள ஆய்வாளர்களுக்கு அனுப்பப்படுகின்றன. ஆய்வு முடிந்து திரும்பி வரப்பெற்ற கையெழுத்துப் பிரதிகள், மொழிபெயர்ப்புத் தனி அலுவலரால் இறுதி ஆய்வு செய்யப்பட்டு, தக்க திருத்தங்களுடன், தட்டச்சுச் செய்து, ஒப்புநோக்கிச் சரிபார்க்கப்படுகின்றன. பின்னர், தட்டச்சுப் பிரதிகள் தமிழ் வளர்ச்சித் துறை வாயிலாக அச்சகத்திற்கு அனுப்பப்படுகின்றன. அச்சகத்திலிருந்து அச்சிட்ட பார்வைப்படிகள் கிடைக்கப் பெற்றவுடன், கையெழுத்துப் படிகளோடு ஒப்பு நோக்கப்பட்டு, ஏற்ற திருத்தங்கள் செய்து, மறுபடியும் அச்சகத்திற்குத் திருப்பி அனுப்பப்படுகின்றன. இந்தமொழி பெயர்ப்புப் பணியை ஆட்சி மொழிக் குழுவின் சார்பில் மொழி பெயர்ப்புத் தனி அலுவலர் அவர்கள், மொழிபெயர்ப்புக் கண்காணிப்பாளர் ஒருவர், தமிழ்த் தட்டச்சர் ஒருவர், சுருக்கெழுத்தர் ஒருவர் ஆகிய மூவரின் உதவியுடன் கவனித்து வருகிருர்.

இதுவரை, ஆட்சி மொழிக் குழுவின் கீழ், 132 நூல்கள் மொழி பெயர்ப்புக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, அவற்றுள் 120 நூல்களின் மொழிபெயர்ப்பு முடிக்கப்பெற்றுள்ளது. மீதமுள்ளவை ஆய்வில் இருந்து வருகின்றன. மேலும், 52 நூல்கள் மொழிபெயர்ப்புக்கென அண்மையில் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளன.

தமிழ்நாடு, கேரள அதிகாரிகள் பரம்பிக்குளம் ஆளியார் நதிநீர் ஒப்பந்தத்தில் கையொப்பமிடுகின்றனர்

ஆட்சி மொழிச் சட்டம் நிறைவேறத் தொடங்கிய காலத்தில், தமிழ்த் தட்டச்சுகளின் விசைப் பலகை, தரப்படுத்தியதாக இல்லை. ஆட்சி மொழிக் குழு, தமிழ்த் தட்டச்சு விசைப் பலகையைத் தரப்படுத்தி, எல்லா அரசு அலுவலகங்களுக்கும், தரப்படுத்திய தமிழ்த் தட்டச்சில் பயிற்சி அளிக்க 1959ஆம் ஆண்டிலே, சென்னையில் ஒரு பயிற்சி நிலையம் தொடங்கப் பெற்றது. இரண்டாண்டுகள் நடைபெற்ற இப்பயிற்சி நிலையத்தில், சுமார் 1000 தட்டச்சர்கள் பயிற்சி பெற்றனர். பின்னர், ஓர் உதவித் தொகைத் திட்டத்தின் கீழ், அரசு தட்டச்சர்கள், தனியார் பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெற்றனர். அப்பயிற்சி நிலையங்களை ஊக்குவிக்க, உதவித் தொகையும் வழங்கப்பட்டது. அரசு அலுவலகங்களில் 9–11–69க்கு முன் நியமிக்கப்பட்ட தட்டச்சர்களே, இவ்வுதவித் திட்டத்தின் கீழ்ப் பயிற்சி பெறத், தகுதியுள்ளவர் ஆவர். இத்தகையவர்களும் 28-6-69க்குள் தமிழ்த் தட்டச்சில் வெற்றி பெற்றிருக்க வேண்டும். இல்லையெனில், அவர்கள் ஊதிய உயர்வு நிறுத்தப்படும், அல்லது அவர்கள் பணியில் நிலைப்படுத்தப் படமாட்டார்கள், என்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது. தலைமைச் செயலகத் தட்டச்சர்களைப் பொறுத்த வரையில் இவ்வுதவித் திட்டம் 31–10–70 வரை உள்ளது.

அரசு அலுவலகங்களுக்குத் தேவைக்கேற்ப அவ்வப்போது தமிழ்த் தட்டச்சுகள் தாமதமின்றி வழங்கப்படுகின்றன. இதுபற்றி, அரசு வெளியிட்டுள்ள குறிப்பாணையின் (466/69–16 பொது (தமிழ் வளர்ச்சி1)த் துறை—நாள்

3-2-'70) விழாவாக, தலைமைச் சயலகத் துறைகளிலும், துறைத் லைமை அலுவலகங்களிலும் இந்த கையில் நேரடி கவனம் செலுத் வும், காலதாமதமின்றி விரை ான நடவடிக்கை மேற்கொள்ள ம், ஏற்பாடாகியுள்ளமை, குறிப் டத்தக்க செய்தியாகும். எளிதில் க்கிச் செல்லும் தமிழ்த் தட்டச் கள் (Portable Tamil Typewriters) யாரித்து வழங்குவதற்கான ஏற் ாடுகளும் தீவிரமாக எடுக்கப்பட்டு ருகின்றன.

தமிழை ஆட்சி மொழியாகச் செயல்படுத்துவதில், தரமான தமிழ்ச் சுருக்கெழுத்து நூல் ஒன்றைத் தயாரித்து வெளியிடுவது அரசு அலுவலகங்களில் தேவைக்கு மிகவும் முக்கியம் என்று ஆட்சி மொழிக் குழு கருதியது. குழுவின் பெருமுயற்சியால் தயாரிக்கப்பெற்று 16-9-'65ல், வெளியிடப்பட்ட தமிழ்ச் சுருக்கெழுத்து நூல் ஒரு சிறந்த சாதனையாகும். இந்நூல் மிகக் குறைந்த விலைக்கு ரூ. 6/- காலிகோ: ரூ. 7/- கிடைக்க ஆட்சி மொழிக் குழு அலுவலகம் ஏற்பாடு செய்துள்ளது.

தமிழ்நாடு அரசு அலுவலகங்கள் அனைத்திலும், ஆட்சி மொழியை நிறைவேற்றும் பணி, சீரிய முறையில் நடைபெற்றுவருவதைக் காணலாம். 1956ஆம் ஆண்டு நிறைவேறிய ஆட்சி மொழிச் சட்டத்தின்படி, அரசு அலுவலகங்களில் ஆங்கில மொழி வாயிலாகவே எல்லாம் நடைபெறும் நிலைமை, படிப்படியாக மாறி, தமிழ் மொழித் திட்டம், ஏற்ற முறையில் வேரூன்ற வேண்டும். அரசு அலுவலங்களிலுள்ள பெயர்ப்பலகைகளில், தமிழ் மொழிக்குச் சிறப்பிடம் அளிக்க ஆணையிடப்பட்டுள்ளது. ஆங்கில மொழியின் வளம், நுட்பம், தொடர்பு, பயன், உலகச் செல்வாக்கு முதலியவற்றைக் குறைத்து மதிப்பிடவே இல்லை. ஆயினும், நமது நாட்டில் நமது மக்களின் உணர்ச்சிக்கும், பண்பிற்கும், கருத்திற்கும் ஏற்ப, நமது சட்டப் பேரவையிலே நிறைவேறியுள்ள ஆட்சி மொழிச் சட்டத்தையும், அறிஞர் அண்ணா அரசில் நிறைவேறிய (23-1-'68ல்) ஆட்சி மொழிகள் பற்றிய தீர்மானத்தையும், நாம் அனைவரும் மதித்து நடக்கக் கடமைப்பட்டுள்ளோம். எனவே 23-1-'73ற்குள், தமிழக அரசின் எல்லா அலுவலகங்களிலும் எல்லாம் தமிழ் மயமாக வேண்டும்.

திருவள்ளுவர் கூறும் அரசு நடை முறையில் ''வினைத்தூய்மை'' ''வினைச் செயல்வகை'', ''வினைத் திட்பம்'' ஆகிய மூன்று அதிகாரங்கள் வலியுறுத்தப்படுகின்றன. இவை மூன்றும் ஒருங்கேஅமைந்த வகையில் உருவான ஆட்சிமொழிச் சட்டத்தைச் செயல்படுத்தும் தூய்மையான வினையில், உறுதியுடன் ஈடுபடுவோமாக!

சிந்தாமணி

கூட்டுறவு சிறப்பு அங்காடி
கோயமுத்தூர்

இந்தியாவிலேயே மிகவும் வெற்றிகரமாக நடைபெறும் கூட்டுறவு சிறப்பு அங்காடி

15 பகுதிகள் கொண்டது

தலைவர் திரு. G. R. கோவிந்தராஜுலு

உறுப்பினர்கள் : 12,015
பங்கு மூலதனம் ... ரூ. 1,16,730

	விற்பனை	நிகரலாபம்
1966-67	ரூ. 25,26,675	—
1967-68	ரூ. 79,97,514	ரூ. 84,734
1968-69	ரூ. 1,74,75,152	ரூ. 3,56,732
1969-70	ரூ. 1,44,89,672	ரூ. 4,06,148

G. V. ராமசாமி, B.A.
செயலாளர்



முன்னுரை

இந்தியாவில் கடந்த இருபது ஆண்டுகளாகத் தொழில் துறையில் வளர்ச்சி பெற்றுள்ள மாநிலங்களில் தமிழ்நாடு ஒன்றாகும். இவ் வளர்ச்சியின் வேகம் ஆண்டொன்றிற்கு 8 சதவிதமாக இருந்துள்ளது. சிறிய அளவிலான நிலப்பரப்பு, மக்கள் நெருக்கம், மக்கள்தொகை வளர்ச்சியின் வேகம், கனிவளம், எரிபொருள் போன்ற மூலப் பொருட்களின் போதாமை வெளிப்படையாகத் தெரியும் நிலை ஆகிய பாதகமான சூழ்நிலைகளிலிருந்தும் இவ்விதமாகத் தொழில்கள் வளர்ச்சி பெற்றுள்ளது குறிப்பிடத் தக்கதாகும். 1950-1960 ஆண்டுகளில், இம் மாநிலத்தில் ஓரளவு முக்கியமானதாகக் கருதப்பட்ட ஒரே தொழில் நெசவைச் சார்ந்த தொழிலாகும். 'தொழிற் துறையில் முதலீடு செய்தற்கு தனியார் துறையினர் ஊக்கங் காட்டாமலும், முன்வராமலும் இருந்தனர். இச் சூழ்நிலையில் மாநிலத்தில் தொழிற் துறையில் வளர்ச்சி பெறச் செய்யும் பெரும் பொறுப்பை அரசே மேற்கொண்டது.

மைய அரசுத்துறை

இம்மாநிலத்தின் தொழில் வளர்ச்சியில் மைய அரசு பெரும் பங்கேற்று, பெருமளவில் உதவியுள்ளது. ரூ. 370 கோடியை இந்திய அரசு தொழிற் துறையில் முதலீடு செய்துள்ள தொழிற் துறையில் பெருமளவு முன்னேற்றம் காண்பதற்கு இம் முதலீடும் இத் திட்டங்களும் பெருமளவு பொறுப்பு வகிக்கின்றன. இவற்றில் ஒன்றாக மிகப் பெரிய நெய்வேலிப் பழுப்பு நிலக்கரித் திட்டத்தைக் கூறலாம். இம் மாநிலத்தின் மொத்த மின்சாரத் தேவைகளில் மூன்றில் ஒரு பங்கினை இத்திட்டம் நிறைவு செய்கிறது. பெரம்பூரிலுள்ள இணைப்பு இரயில் பெட்டித் தொழிற்சாலை விருத்தி செய்ய பெற்ற, சிறந்த வசதிகளை உள்ளடக்கிய நவீன இரயில் பெட்டிகளின் வளரும் தேவைகளைப் பூர்த்தி செய்கிறது. திருச்சிராப் பள்ளியிலுள்ள உயர் அழுத்தக் கொதிகலன் தொழிற்சாலையானது இம் மாநிலத்திலுள்ள இயந்திரதொழிற்சாலைகளில் மிகப் பெரியதாகும்.

நீராவி உற்பத்திக் கலன்களையும், கொதிகலன் அமைக்கும் ச[illegible]விகளையும் நிறுவுவதில் இத் தொழிற்சாலை தனித்தன்மை பெற்றுள்ளது. மேலும் திருச்சிராப் பள்ளியிலுள்ள படைக் கலத் தொழிற்சாலை ஆவடியிலுள்ள கனரக வண்டிகள் தொழிற்சாலைகள்

ஆகிய இரண்டும், நாட்டின் பாதுகாப்பிற்கான தேவைகளைப் பூர்த்தி செய்கின்றன.

எண்ணெய் தூய்மை செய்யும் ஆலை

மணலியில் தொடங்கப் பெற்றுள்ள எண்ணெய் தூய்மை செய்யும் ஆலை, தமிழ் நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் ஏற்பட்டுள்ள ஒரு முக்கிய நிகழ்ச்சிக்கு வித்தாகும். இம் மாநிலத்தில் மட்டுமில்லாது, தென்னகம் முழுவதிலும் பல முனைகளில் தொழில் வளர்ச்சிக்குரிய ஒரு புதிய சகாப்தத்தை இவ்வாலை உருவாக்கித் தந்துள்ளது. இவ்வாலையிலிருந்து கிடைக்கப் பெறும் துணைப் பொருட்களைக் கொண்டு, இம்மாநிலத்தில் புதிய இரசாயனத் தொழில்களை உருவாக்குவதற்கும் வழிமுறைகளை அறிவிப்பதற்கென ஓர் ஆய்வை மாநில அரசு தொடங்கியுள்ளது. எண்ணெய் தூய்மை செய்யும் ஆலையிலிருந்து கிடைக்கும் துணைப் பொருட்களைக் கொண்டு ரூ. 200 கோடி மதிப்பளவில் ஒரு பெட்ரோல் இரசாயனத் தொகுதிகளை நிறுவக் கூடுமென்று, இது தொடர்பாக ஆய்வு செய்துள்ள 'இந்திய என்ஜினர்ஸ்' என்ற நிறுவனம் கூறியுள்ளது. தொழிற்சாலைக்கருகில், இந்த பெட்ரோ—இரசாயனத் தொகுதியை நிறுவுதற்குரிய சாத்தியக் கூறுகள் கொண்ட குறிப்புக்களைத் தருமாறு ஆங்கிலேய நிறுவனமான —இம்பீரியல் கெமிக்கல் இன்டஸ்ட்ரீஸ்' நிறுவனத்தை மாநில அரசு கேட்டுக் கொண்டுள்ளது. திரு. டி. சி. கோதாரி அவர்களைத் தலைமையாகக் கொண்டு தமிழ்நாடு அரசால் நியமிக்கப்பட்ட 'பெட்ரோ—கெமிகல் குழுவானது' இரச கற்பூரத்தைலத் தொழிற்சாலையை நிறுவுவதற்கு மாநில அரசு தம் சார்பில் ரூ. 35 கோடிக்கு நிதி முதலீடு செய்ய வேண்டுமெனப் பரிந்துரைத்துள்ளது.

பெட்ரோலிய இரசாயனத் தொகுதியில் அனேக நடுத்தரத் திட்டங்களை நிறுவுவதற்குரிய வேலைகளை மாநில அரசு ஏற்கனவேயே தொடங்கியுள்ளது. இத்திட்டங்களில் நைலான் தொழிற்சாலை, டயர், நாற்கயிறு தொழிற்சாலை, கருப்பு கரிபொருள் உற்பத்தித் தொழிற்சாலை ஆகியவை அடங்குவன. எண்ணெய் தூய்மை செய்யும் ஆலை ஏற்கனவே அனேக தனியார்களின் கவனத்தை ஈர்த்துள்ளது. நாக்பால் பெட்ரோல் இரசாயன தூய்மை செய்யும் திட்டம் ரூ. 5 கோடி முதலீட்டிலும், பாலிஸ்டர் இழைகள் தொழிற்சாலை ரூ. 5 கோடி முதலீட்டிலும், இப்பகுதிகளில் உருவாகி வருகின்றன. எண்ணெய் தூய்மை செய்யும் ஆலைக்கு அருகில் பெரும்பகுதி நிலங்களை மாநில அரசு ஆர்ஜிதம் செய்து வருகிறது. புதிதாக உருவாகவிருக்கும் தொழில்களின் தேவைகளை பூர்த்தி செய்தற்குரிய முறையில் இப்பகுதிகள் விருத்திசெய்யப்படும்.

சேலம் உருக்குத் தொழிற்சாலை

மைய அரசாங்கத்துறையில் இம் மாநிலத்தில் நிறுவப்படவிருக்கும் மிக முக்கியமானதொரு திட்டம் சேலம் உருக்காலைத் திட்டமாகும். நான்காம் திட்டக்காலத்தில் இதை நிறைவேற்றுவதற்கு இந்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. மாநிலத்தில் நானாவித பொறியியல் தொழில்கள் மேலும் வளர்ச்சி பெறுவதற்கு இத்திட்டம் வெகுவாக வழிகோலும்.

மாநில அரசுத் துறை

தனியார்த் துறையை ஊக்குவித்து, அவர்களின் முனைப்பிலேயே தொழில் வளம் பெருக வேண்டுமென்ற முறையில் அரசு அண்மைக் காலம் வரை கட்டுப்பட்டிருந்தது. ஆனால் மாநிலத்தின் தொழில் வளர்ச்சியில் மேலும் புதுமுயற்சிகளை செயல்திறமுடன் தொடங்குதற்கு மாநில அரசு முன்வந்துள்ளது. பெரிய அளவிலான தொழில்களை நிறுவ, நிர்வகிக்க, ஊக்குவிக்க, நிதியுதவி செய்தற்கென ரூ. 10 கோடி ஒப்பளிக்கப்பட்ட முதலீட்டுடன் 1965ஆம் ஆண்டில் மாநில தொழில் வளர்ச்சிக் கழகம் நிறுவப்பட்டது. இந்நிறுவனம் ஏற்கனவேயே சில திட்டங்களை நிறைவேற்ற முனைந்துள்ளது. அவை வருமாறு:

தமிழ்நாடு சிமெண்ட், ஆலங்குளம்

பொதுத் துறையில் தொடங்கப் பெற்றுள்ள முதல் சிமிட்டித் தொழிற்சாலை இதுவேயாகும். இது அண்மையில் இராஜபாளையம் அருகிலுள்ள ஆலங்குளத்தில் தொடங்கப் பெற்றுள்ளது. தற்போது ஆண்டொன்றிற்கு 4 இலட்சம் டன்களை இது உற்பத்திச் செய்யும். இத்தொழிற்சாலையை நிறுவுவதற்கென மதிப்பிடப்பட்ட மொத்த மூலதனத் தொகை ரூ. 677 இலட்சமாகும். இவ்வாலையில் உற்பத்தியாகும் பழுப்பு நிற போர்ட்லண்ட் சிமெண்ட், இந்தியத் தர நிர்ணயக் கழகத்தில் நிர்ணயித்துள்ள தரத்திற்கு ஏற்ப உள்ளது.

முன்னோடி சிமெட்டித் தொழிற்சாலை, டால்மியாபுரம்

சுண்ணாம்புக் கற்களைப் பயன்படுத்தி உலர்ந்த வழிமுறையில் சிமெண்ட் உற்பத்தி செய்வதற்கென, சிறிய அளவில் செயல்படும் சிமிட்டித் தொழிற்சாலையைப் பாதுகாப்புத் துறையினரிடமிருந்து இம் மாநில தொழில்துறை எடுத்துக் கொண்டது. மேலும் கார்ப்பரேஷன் தொடங்கியவுடன் மேலும் ஆய்வுகளைச் செய்வதற்கு இத் தொழிற்சாலை கழகத்தினிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

வணிக முறையில் உற்பத்தியிலீடுபடவேண்டுமென்பதுடன் வடிவமைத்தல், ஆராய்ச்சி செய்தல், சோதனை செய்தல் ஆகியவையே இந்தத் தொழிற்சாலையின் முக்கிய நோக்கங்களாகும். சிறிய அளவில் சுண்ணாம்புக்கற்களைப் பயன்படுத்திக் கொள்ளுதல் இதன் நன்மையாகும். நாளொன்றிற்கு 75 முதல் 150 டன் வரை உற்பத்தி செய்யக் கூடிய தொழிற்சாலைகளை தயார் நிலையில் ஏற்படுத்திக் கொடுக்க இக்கழகம் முன்வருகிறது.

உருக்குத் தொடர் வார்ப்படச்சாலை அரக்கோணம்

தொடக்க நிலையில் 50,000 டன் அளவிற்கு உருக்குப்பாளங்களைத் தயாரிக்கும் திறனுள்ள உருக்குத் தொடர் வார்ப்படச்சாலை ஒன்று அரக்கோணத்தில் நிறுவப்படுகிறது. ரூ. 6.53 கோடி மதிப்பீட்டுச் செலவில் உருவாகும் இத் தொழிற்சாலை, 1971ஆம் ஆண்டில் தொடங்கப்படலாம் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

> லண்டனில் உள்ளவர்கள் தேம்ஸ் நதிக்கரையிலே உலாவச் செல்கிறோம் என்று பெருமையுடன் பேசுவது போல சென்னையிலுள்ளவர்கள் கூவம் நதிக்கரையிலே உலாவச் செல்கிறோம் என்று பெருமையுடன் பேசும் காலம் வந்தே தீரும்.
>
> —அறிஞர் அண்ணா

இதர திட்டங்கள்

தனியார்த் துறையொன்றினைக் கூட்டாளியாகக் கொண்டு ரூ. 43 கோடியில் தூத்துக்குடியில் ஓர் உர உற்பத்தித் திட்டத்தைக் கழகம் நிறுவி வருகிறது. மாநிலத்தில் உருக்குத் தொழிற்சாலையின் வளர்ச்சிக்கு முதற்படியாக, துணுக்கு இரும்புத் தொழிற்சாலையொன்று ரூ. 10 கோடியில் ஏற்படுத்துதற்குரிய பூர்வாங்க வேலைகள் ஏற்கனவேயே தொடங்கப்பட்டு விட்டன. துணுக்கு இரும்புகளை உற்பத்திச் செய்யும் இத்திட்டம் இக்கழகத்தால் நிறைவேற்றப்படுகிறது.

மாநிலத்தில் தற்போது உற்பத்தியே செய்யப்படாத சோடாகாரத்தை உற்பத்தி செய்வதற்கென ஒரு பெரிய பிரிவை நிறுவுதற்கும் இக்கழகம் ஆவன செய்து வருகிறது. இயந்திரக் கருவிகள் உற்பத்தித் திட்டம், தோய்வுடை இரும்பு ஆலை, 'சோடியம் ஹைடிரோ சல்பைட்' மற்றும் 'அம்மோனியம் குளோரைடு' உற்பத்தித் தொழிற்சாலை நிறுவுதற்குரிய கோரிக்கைகளையும் இக்கழகம் ஆய்வு செய்கிறது. தமிழ் நாட்டில் ஏற்படுத்தவிருக்கும் இதர முக்கியமான தொழிற்சாலைகளில் ஒன்றாக, ரூ. 5 கோடி மதிப்பிலான கரையற்ற உருக்குத் தொழிற்சாலை (Stainless Steel Project) யைக் கூறலாம். சில ஆண்டுகளுக்கு முன்னர் தயாரிக்கப் பெற்ற திட்ட அறிக்கையை மறு ஆய்வு செய்து திருத்துமாறு திருவாளர்கள் ''தஸ்தூர் அண்டு கம்பெனி''யார் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். ஆகவே பெரிய தொழில் திட்டங்களை உருவாக்குதற்கு உதவிபுரியும் துறையில் மட்டுமின்றி, அவற்றிற்கு நிதியுதவியும் அளிக்கும் ஒரு நிறுவனமாகவிருந்து, இம் மாநிலத்தின் தொழில் வளர்ச்சியை மேலும் மேம்படுத்துவதில், இக்கழகம் பெரும் பங்கேற்று செயற்பட வேண்டியுள்ளது.

கூட்டுறவுத் துறை

மாநிலத்தின் தொழில் வளர்ச்சியில், கூட்டுறவுத் துறை ஆற்றியுள்ள பணியானது, மிகவும் போற்றுதற்குரிய முறையிலுள்ளது. தற்போது தமிழகத்தில் 12 கூட்டுறவு நூற்பு ஆலைகளும், 6 கூட்டுறவு சர்க்கரை ஆலைகளும் உள்ளன. இந்தக் கூட்டுறவு தொழில்களில், தமிழ்நாடு அரசு பெருமளவு பங்கு மூலதனமாக முதலீடு செய்துள்ளது. நூற்பு ஆலைகளில் ரூ. 184.08 இலட்சமும், சர்க்கரை ஆலைகளில் ரூ. 203.93 இலட்சமும் பங்கு மூலதனமாக அரசு முதலீடு செய்துள்ளது.

தனியார் துறை

இம்மாநிலத்தைத் தொழில்மயமாக்குவதில் தனியார் துறையும் முக்கிய பங்கு வகித்துள்ளது. தன

(20-ம் பக்கத் தொடர்ச்சி)

க்கக் கூடாது என்ற நல் இலக் ணத்திற்கு ஏற்ப, இந்தக் கட்டிடத் தின் முன்னால் அண்ணா அவர்களின் சிலை வைக்கப்பட்டுள்ளது'' என்று முதல்வர் குறிப்பிட்டார். கட்டிடம் திறந்த அதே மேடையிலிருந்து மாண்புமிகு அமைச்சர் மாதவன் அவர்கள் எண்ணற்ற மக்களின் இதய ஜோதியாம் அண்ணா அவர்களது சிலையைத் திறந்து வைத்தார். முதல்வர் மேலும் உரை நிகழ்த்தியபோது ''அறத்தின் அடிப்படையில்தான் சட்டம் எழுந்தது. அறமும், சட்டமும் ஒன்றல்ல. அறம் சிந்திக்கத்தக்கது. சட்டம் சிக்கல்களைத் தீர்க்க வல்லது. அறம் இயற்கையாகவே எழுவது. சட்டம் இயற்றப்படுவது, அறம் மாற்ற முடியாதது. சட்டம் மாற்றக் கூடியது. ஆகவே அறத்தின் அடிப்படையில் சட்டம் உருவாகிறது என்றாலும் கூட சிலசில வேறுபாடுகள் (முரண்பாடுகள் அல்ல). இரண்டிற்கும் இடையில் இருக்கிறது என்றாலும் கூட அறவழியில் தமிழக மக்களைச் சமுதாய நீதி காணவும், பொருளாதார நீதி காணவும், இந்தியத் துணைக் கண்டத்தில் இருக்கிற எல்லா மக்களும் சமவாய்ப்புகளைப் பெறவும் நீதி மன்றங்கள் துணை நிற்க வேண்டும்'' என்று குறிப்பிட்டார். ஏழை, பணக்காரர், உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்ற பாகுபாடு இன்றி, மக்களின் சமூகப், பொருளாதார, அரசியல் பிரச்சினைகளைப் போக்கி, நல்வாழ்வு அமைந்திட அரசுடன் இணைந்து நீதி மன்றங்கள் பணி ஆற்றிடும் என்ற நம்பிக்கை மக்களிடையே மலர்ந்துள்ளது.

தமிழகம் சிறக்கும் என்பதற்கு இந் நிகழ்ச்சி விடிவெள்ளியாக அமைந்துள்ளது.

யார் துறையில் பாராட்டத் தக்க முறையில், பல்வேறு வகைகளில் தொழில்கள் தோன்றியுள்ளது குறிப்பிடத் தக்கதாகும். இத் தொழில்களினால் பல்வேறு தொழில்களின் உற்பத்தி சக்தி கணிசமான அளவில் பெருகியுள்ளது.

பஞ்சாலைத் தொழில்

மூலதனத்தைக் கொண்டும், வேலை வாய்ப்பைக் கொண்டும் ஆராயின், இம்மாநிலத்திலுள்ள மிகப் பழைய, அதேசமயத்தில், மிக முக்கியத் தொழிலாக உள்ளது பஞ்சாலைத் தொழிலேயாகும். இந்நூற்றாண்டின் முதல் இருபது ஆண்டுகள் மற்றும் அதற்கு முன்னுள்ள காலத்தில் கோயம்புத்தூர், சென்னை, மதுரை ஆகிய இடங்களில் பஞ்சாலைத் தொழிலைத் தொடங்குதற்கு ஆயத்தங்கள் செய்யப்பட்டிருப்பினும், அனேக பஞ்சாலைப் பிரிவுகள் கோயம்புத்தூரிலும், அதைச் சுற்றிலுமுள்ள பகுதிகளிலும் நிறைந்துள்ளன. மூன்று திட்டக் காலங்களிலும், இத் தொழில் மகத்தான வளர்ச்சியைக் கண்டுள்ளது. இக்காலங்களில் நூற்புத்திறன் இரண்டுமடங்கிற்கும் மேலாக உயர்ந்துள்ளது. கடந்த சில ஆண்டுகளாக இத் தொழிலை சிக்கல் ஆட்கொண்டது; அதன் காரணமாக பல ஆலைகள் மூடப்பட்டன. நலிவடைந்துள்ள, மூடப்பட்டுள்ள பஞ்சாலைகளைத் திறப்பதற்கு மாநில அரசு கூடுமான எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது. மாநிலப் பஞ்சாலைக் கழகமொன்று நிறுவப்பட்டுள்ளது. இந்திய அரசு மேற்கொண்டு நடத்துதற்கென உரிய பஞ்சாலைகளை இக்கழகத்திடம் ஒப்படைக்கலாம்.

மோட்டார் தொழில்

மோட்டார் தொழில் துறையில் மாநிலம் மிகுதியான முன்னேற்றத்தைப் பெற்றுள்ளது. நடுத்தர, கூடுதல் பளு சுமந்து செல்லும் வாகனங்களை உற்பத்தி செய்தற்கென இந்திய அரசு நான்கு பிரிவுகளுக்கு உரிமை வழங்கியுள்ளது; தவிர குறைவான சுமைகளை ஏற்றிச் செல்கின்ற வாகனங்களை உற்பத்தி செய்தற்கென மூன்று பிரிவுகளுக்கும் உரிமை வழங்கப்பட்டுள்ளது. இந்த ஏழு பிரிவுகளில் இரண்டு இம்மாநிலத்தில் உள்ளன. திருவாளர்கள் அசோக் லேலண்ட் நிறுவனத்தினர் நடுத்தர வாகனங்களை பெருமளவில் உற்பத்தி செய்த வண்ணமுள்ளனர். 1967ஆம் ஆண்டில் இந்தியாவில் உற்பத்தி செய்யப்பட்ட மொத்த வணிக வாகனங்களில் 16 சதவீத வாகனங்கள் இத் தொழிற்சாலையில் செய்யப்பட்டதாகும். இம்மாநிலத்திலுள்ள இன்னொரு மோட்டார் தொழில் நிறுவனம் திருவாளர்கள் 'ஸ்டாண்டர்ட் மோட்டார் புராடக்ஸ் ஆப் இந்தியா லிமிடெட்' என்பதாகும். இந்நிறுவனம் பயணிகளை ஏற்றிச் செல்லும் கார்கள் இலேசான சுமைகளைத் தாங்கிச் செல்லும் வாகனங்கள் உற்பத்தி செய்தது. வீணழிவற்ற நிலை இல்லா காரணத்தினால், இத் தொழிற்சாலை மூடப்பட்டுள்ளது. இதனைத் தமிழக அரசு மேற்கொண்டு நடத்த ஆவன செய்து வருகிறது.

வணிக வாகனங்களைத் தவிர்த்து, மூன்று சக்கர வண்டிகள், மோட்டார் சைக்கிள்கள், ஸ்கூட்டர்கள், மற்றும் தொழிற்துறைக்குத் தேவையான என்ஜின்கள் ஆகியவையும் தமிழ் நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்றன. துணைக் கருவிகளை உற்பத்தி செய்யும் தொழிற்கூடங்களின் வளர்ச்சி பெருமளவில் பெருகியுள்ளது ஒரு குறிப்பிடத் தக்க அம்சமாகும். குறுகிய காலத்திலேயே இவையனைத்தும் செயல்படத் தொடங்கியுள்ளன. இப்பிரிவுகளிலிருந்து உற்பத்தி செய்யும் பொருட்கள் பெருமளவில் பலதரப்பட்டதாக, உள்ளன. இவற்றை கருத்திற் கொண்டு ஆராய்கையில், இத்துறையில் தமிழக தொழிற்பகுதிகள் மட்டுமே 60 சதவீத உற்பத்திக்கு மேலுள்ள பெரும் பங்கை பெற்றுக் கொண்டு விடுகிறது.

இராசயனத் தொழில்கள்

இராசயனத் தொழில் துறையிலும், மாநிலம் குறிப்பிடத் தக்க முன்னேற்றத்தைப் பெற்றுள்ளது. 1930-40ஆம் ஆண்டுகளிலேயே புனல் மின்சக்தியை முழுவதுமாக பயன்படுத்தி, குறைவான செலவில் மின்சாரத்தை உற்பத்தி செய்ததன் நற்பயனாக, இம்மாநிலத்தில் முதன் முதலாக இராசயனத் தொழிற்சாலை நிறுவப்பட்டது. முதன் முதலாக ஏற்படுத்தப்பட்ட கருங்கார சோடா தொழிற்சாலை மேட்டூர் என்னுமிடத்தில் அமைந்தது. பல்வித இராசயனப் பொருட்களை உற்பத்தி செய்யும் பல பிரிவுகள் மாநிலத்தில் ஏற்படுத்தப்பட்டன. இவற்றின் சில துறைகளில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள், நாட்டின் மொத்த உற்பத்தியில் பெரும் பங்கு வகிக்கின்றன. சான்றாகக் கூறுவோமானால், நாட்டின் கடுங்கார சோடா மொத்த உற்பத்தியில் தமிழ் நாடு மட்டும் மூன்றில் ஒரு பங்கினை உற்பத்தி செய்கிறது. துணிகளிலுள்ள மாசுகளகற்றும் பொடியை (Bleaching Powder) உற்பத்திசெய்த முதல் மாநிலமாகவும், அண்மைக்காலம் வரை இதை தயாரிக்கும் ஒரே மாநிலமாகவும் தமிழ் நாடுதான் சிறந்து விளங்கியது. எண்ணெய் தூய்மை படுத்தும் ஆலையிலிருந்து கிடைக்கும் பொருட்கள், இராசயனத் தொழில்கள் மேலும் சிறந்த முறையில் வளர்தற்கு வழி கோலியுள்ளன. இரசாயனத் தொழிலுக்குரிய தொழிற்பேட்டையைத் தொடங்குதற்கு தமிழ் நாட்டிலேயே இரசாயனத் தொழிற்துலக்கத்தை முதலில் கண்ணுற்ற மேட்டூரையே அரசு தேர்ந்தெடுத்துள்ளது.

தோல் பதனிடல்

தமிழ் நாட்டின் பிரதானத் தொழில்களில் தோல் பதனிடும் தொழில் ஒன்றாகும். தோல் பதனிடும் தொழில் நன் முறையில் வளர்ச்சி பெற்றுள்ளது. நாட்டிற்கு அன்னியச் செலாவணியை ஈட்டித் தருவதில் பெரும் பங்கேற்கும் இத் தொழிலின் வாயிலாக, நாட்டிற்குக் கிடைக்கும் செலாவணியில் இம்மாநிலத்தின் பங்கு 75 சதவீதமாகும்.



Studies in Concentration

THE ARTISAN

To create objects of lasting beauty, the artisan works patiently — chipping, filing, engraving and polishing — and ultimately puts life into the finished masterpiece..... a product of single-minded concentration

Parry's too, is a long, absorbing story of concentrated effort. Started as a trading concern over 181 years ago, Parry's has, over the years, gradually widened its interests. Its record of expansion has given it new dimensions as a progressive industrial force.

E.I.D.-Parry is an industrial complex, covering Fertilisers, Pesticides, Hybrid seeds, Sugar, Confectionery, Chemicals, Engineering goods, Ceramics and Petro-chemicals. E.I.D.-Parry, with its specialised knowledge, technical know-how and long experience, is geared to play a leading role in national growth. E.I.D.-Parry's marketing organisation, with its after-sales service, is far-flung and dynamic.

Parry's—pioneers in planned progress

E.I.D.-PARRY LIMITED
(Incorporated in England. Liability of members is limited)
Dare House, Madras-1

வெற்றிப் பாதையில் வேளாண்மை

ஒரு மணி விளைந்த இடத்தில் இருமணியும், ஒரு கதிர் விளைந்த இடத்தில் இரு கதிரும், ஒரு போகம் விளைந்த இடத்தில் இரு போகமும், இருபோகம்விளைந்த இடத்தில் முப்போகமும் விளைவிப்பதுவே தமிநாடு அரசு வேளாண்மைத் துறையின் இன்றைய குறிக்கோள். இந்த இலக்கை இனிதே அடைய தமிழ்நாடு அரசு வேளாண்மைத் துறை பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. தமிழ்நாடு அரசு அளிக்கும் நல்லூக்கமும், உழவர் பெருமக்கள் காட்டும் உற்சாகப் பெருக்கமும் உழைப்புமே, வேளாண்மைத்துறையின் மறுமலர்ச்சி முயற்சி செயலாக்கம் பெற்றுள்ளது.

சிற்றூர், பேரூர் என்ற பாகுபாடின்றி, எளியோன் வலியோன் என்ற வேறு பாடின்றி, ஏழை பணக்காரர் என்ற மாறுபாடு இன்றி, எல்லோரும் ஒருமனதாக ஒத்துழைப்பு அளித்தமையினாலேயே ''பசுமைப் புரட்சி'' வீறு நடைபோட்டு வெற்றி பெற்றது மட்டுமல்ல; உற்பத்தி பெருக்கம், உணவுக் கட்டுப்பாடு நீக்கத்திற்கு வகை செய்தது என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

வறட்சி வாட்டிய போதிலும், வழக்கமாகப் பெய்யும் தென் மேற்குப் பருவமழை பொய்த்தபோதிலும், வடகிழக்குப் பருவ மழை வழக்கத்திற்கு மாறாக முன்பே பெய்து விளைந்த குறுவைப் பயிர்களுக்குச் சேதம் ஏற்படுத்தியபோதிலும், வேளாண்மைத்துறையின் வேண்டுகோளை ஏற்று எதையும் சாதிக்கும் திறனுடன் ஊக்கம் குன்றாமல், உறுதி தளராமல், உயர் விளைச்சல் வகைத் திட்டம், இருபோக சாகுபடித்திட்டம், பலபயிர் சாகுபடி திட்டம் ஐ. ஆர். 8 தீவிர சாகுபடி திட்டம் ஆகிய பல்வேறு திட்டங்களை உழவர் பெருமக்கள் உவகையுடன் செயல்படுத்தியதனாலேயே, சென்ற ஆண்டின் உணவு தானிய உற்பத்தி நிலை 63 லட்சம் டன்களுக்கு குறையாது என்று மதிப்பீடு ஆகியுள்ளது.

'சுடர் விளக்காயினும் தூண்டுகோல் வேண்டும்' என்ற பேரறிஞர் வாக்கிற்கு ஒப்ப, தோன்றிய 'மறுமலர்ச்சி' துவளாது இருக்க, பரவும் 'பசுமைப் புரட்சி' மேலும் எழுச்சி

பெற, வேளாண்மை வளர்ச்சிப் பணியை செவ்வனே தொடரல் வேண்டும். மக்கட் தொகை பெருகும் வேகத்திற்கு ஏற்றாற் போல் உணவு, உடை உறையுள் தேவையை நிறைவு செய்ய விளைபொருள் பெருக்கம் அடையச் செய்தல் வேளாண்மைத் துறையின் பெரும் பொறுப்பாகும்.

தமிழ்நாட்டில் ஒவ்வொருவருக்கும் கிடைக்கக் கூடிய மொத்த நிலப்பரப்பு 0.38 ஹெக்டர். ஆனால், ஒவ்வொருவருக்கும் கிடைக்கக் கூடிய மொத்த நிலத்தில், சாகுபடியாகக் கூடிய நிலப் பரப்போ 0.18 ஹெக்டர்தான். சாகுபடியாகக் கூடிய நிலப் பரப்பை மேலும் விரிவு படுத்துவதென்பது இயலாது. அது போலவே பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களை நிறைவேற்றி பாசன வசதிகளை அதிகப்படுத்தி, உணவு தானியங்களின் உற்பத்தியைப் பெருக்குவதற்கும் தமிழ் நாட்டில் மேலும் வாய்ப்பில்லை.

எனவே, தமிழ்நாட்டில் தேவையைப் பூர்த்தி செய்யும் அளவுக்கு உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்குரிய வழி :

- உயர் விளைச்சல் வகை விதைகள்
- தேவையான அளவு இரசாயன உரங்கள்
- சிறந்த சிக்கனப் பாசன முறைகள்
- நவீன சாகுபடிக் கருவிகள்
- தகுந்த பயிர்ப் பாதுகாப்பு முறைகள்

ஆகியவைகளைக் கைக்கொண்டு சராசரி ஹெக்டர் மகசூலைப் பெருக்குவதே யாகும்.

இந்த அடிப்படையில் 1970-71ம் ஆண்டின் உற்பத்தி இலக்கு வருமாறு:—

அரிசி	...	49.00	லட்சம்	டன்கள்
ஏனைய தானியங்களும், சிறுதானியங்களும்	...	16.00	,,	,,
பருப்பு வகைகள்	...	1.50	,,	,,
மொத்தம்	...	67.00		

கடந்த ஆண்டு நமக்குக் கற்றுத் தந்த பாடத்தை மனதிற்கொண்டு செயற்படுவோமேயானல், 67.00 லட்சம் டன்களுக்கு மேலாகவே தமிழ்நாட்டில் இந்த ஆண்டில் உற்பத்தி செய்ய முடியும் என்பது திண்ணம். எனவேதான் தமிழ்நாடு அரசின் வேளாண்மைத் துறை, உணவு தானியங்களின் உற்பத்தியைப் பெருக்க கீழ்க்கண்ட திட்டங்களை செயல்படுத்த விருக்கிறது.

உயர் விளைச்சல் வகைத் திட்டம்

தமிழ்நாட்டு வேளாண்மையில் மறுமலர்ச்சி தோன்றிட உயர் விளைச்சல் வகைத் திட்டமே (High yielding varieties programmes) மூல காரணமென்றால் மிகையாகாது. உயர் விளைச்சல் தரும் தினுசு திட்டம் 1966–67ம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. உயர் விளைச்சல்வகைப் பயிர்கள் தமிழ்நாட்டு உழவர் பெருமக்களால் [illegible] விரும்பப்படுகிறது.

உயர் விளைச்சல் வகைப் பயிரில் இது[illegible] கிடைத்துள்ள உச்ச அள[illegible] yield) பின்[illegible]

வரிசை எண்	வகைகளின் பெயர்		உச்ச அளவு மகசூல் கிலோவில் ஹெக்டருக்கு	ஏக்கருக்கு
1.	ஆடுதுறை–27	...	10,621	4,300
2.	கோ.29	...	11,658	4,720
3.	கோ.25	...	11,223	4,544
4.	ஐ.ஆர்.8	...	13,710	5,551
5.	சி.எஸ்.எச். 1 சோளம்	...	7,657	3,100
6.	எச்.பி. 1 கம்பு	...	6,916	2,800
7.	விரிய மக்காச்சோளம்	...	7,410	3,000

ஆனால், கடைசியாக கிடைத்துள்ள 1967–68ம் ஆண்டின் மாநில சராசரி மகசூல் ஹெக்டருக்கு பின்வருமாறு:—

நெல்	2329.5 கிலோ
சோளம்	743.0 கிலோ
கம்பு	663.0 கிலோ
மக்காச் சோளம்	1064.0 கிலோ

மேலே குறிப்பிட்டுள்ள உச்ச அளவு மகசூலுடன், மாநில சராசரி மகசூலை ஒப்பு நோக்கின், ஒருமித்த செய்நேர்த்தி முறைகளை (Package of practices) மேற்கொண்டு உயர் விளைச்சல் வகைப் பயிரை சாகுபடி செய்தால், வெகு விரைவிலேயே தமிழ்நாடு உணவு உற்பத்தியில் ஏற்றுமதி செய்யும் அளவுக்கு முன்னேறி விடும். எனவேதான் தமிழ்நாடு அரசின் வேளாண்மைத் துறை இத்திட்டத்திற்கு முக்கியத்துவம் அளித்துள்ளது.

இந்த ஆண்டில் (1970–71) உயர் விளைச்சல் தரும் நெல் வகைகளை 37.50 லட்சம் ஏக்கர்களிலும், உயர் விளைச்சல் தரும் சிறு தானிய வகைகளை 2.50 லட்சம் ஏக்கர்களிலும் பயிரிட திட்டமிடப்பட்டுள்ளது.

பல்பயிர் முறைத் திட்டம்

உயர் விளைச்சல் தரும் வகைப் பயிர்கள் [illegible]

படியாக முக்கியத்துவம் வாய்ந்தது பல்பயிர் முறைத் திட்டமாகும். (Multiple cropping) நிரந்தரமான நீர்ப்பாசன வசதிகள் உள்ள பகுதிகளில், வழக்கமாகப் பயிரிடப்படும் பயிர்களுக்குப் பதிலாகக் குறுகிய காலப்பயிர்களைப் பயிரிடும் முறையைப் புகுத்தி, ஒருபோக விளைச்சல் உள்ள பகுதிகளில் இருபோக விளைச்சலையும், இரு போக விளைச்சல் உள்ள பகுதிகளில் முப்போக விளைச்சலையும் ஏற்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். சென்ற ஆண்டில் பருப்பு வகையை இத்திட்டத்தின் கீழ் சேர்த்துக் கொண்டது மட்டுமல்லாமல் என், வாணிபப் பயிர்கள் ஆகியவற்றையும் இத்திட்டத்தில் சேர்த்துக் கொண்டது மற்ருெரு முக்கிய மாறுதல் ஆகும். இந்த ஆண்டில் தஞ்சாவூர் மாவட்டத்தில் மட்டும் இருபோக சாகுபடி திட்டத்தின் கீழ் 5 லட்சம் ஏக்கர்கள் கொண்டு வரப்படும். ஜூன் 24-ந்தேதியே மேட்டூர் அணையிலிருந்து காவிரிக்கு நீர் திறந்துவிடப்பட்டுள்ளதால், இருபோக சாகுபடித் திட்டம் இவ்வாண்டில் மாபெரும் வெற்றியாக அமையக் கூடும். பல பயிர் சாகுபடித் திட்டத்தின் கீழ் 1970–71ல் மாநிலமெங்கும் 12 லட்சம் ஏக்கர்களில் சாகுபடி செய்யப்படும்.

தீவிர மாவட்ட வேளாண்மைத் திட்டம் செயல்படுத்தப்பட்டுவரும் தஞ்சாவூர் மாவட்டத்தில் இவ்வாண்டில் 5 லட்சம் ஏக்கரில் குறுவையும், 7.5 லட்சம் ஏக்கரில் சம்பாவும், 4 லட்சம் ஏக்கரில் தாளடியும் பயிரிடப்படும்.

தற்பொழுது ஆடுதுறை 27 நெல்லின் சராசரி மகசூல் ஏக்கருக்கு 1.3 டன் அளவில் உள்ளது. இதன் சராசரி விளைச்சலை 1.4டன் அளவிற்கு உயர்த்த சமச்சீர் அளவில் உரமிடத் தூண்டப்படும் கோ 25ன் திறனையும் இந்த அளவிற்கு உயர்த்தப்படும். ‘கருணை’ நெல்லின் மூலம் ஏக்கருக்கு 1.75 டன் அளவிற்கு மேலும், ஐ. ஆர் 5ன் மூலம் ஏக்கருக்கு 2 டன் அளவிலும் ஐ. ஆர் 8ன் மூலம் ஏக்கருக்கு 2.5 டன் அளவி சராசரி மகசூல் பெற முய செய்யப்படும்.

இந்த ஆண்டில் தீவிர பு வேளாண்மை திட்டம் திரு ராப்பள்ளி மாவட்டத்திற் விரிவுபடுத்தப்படும்.

தமிழ்நாட்டில் பயிரிடப்படு மொத்த நிலப்பரப்பில் (160 லட் ஏக்கர்) 60 சதவீதத்திற்கு மே பட்டு (100 லட்சம் ஏக்கர்கள்) பு செய் நிலங்களாக இருப்பதாலு பெரும்பாலான உழவர்கள் புன்செ நிலங்களையே நம்பி இருப்பதாலு புன்செய் நிலங்களின் உற்பத்தி திறனை உயர்த்த வேளாண்மை துறை உடனடி நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. உயர் விளை சல் தருவதும், வறட்சியையும் பயிர் நோயையும் தாங்கிக் கொள்ளும் சக்தியுடையதுமான எச். பி. 3 கம்புப் பயிர் திருநெல்வேலி, இராமநாதபுரம், மாவட்டங்களில் 1.50 லட்சம் ஏக்கர்களில் பயிரிடப்படும்.

தமிழ்நாடு அரசின் மாதம் இருமுறை
இதழ் ஆங்கில மாதம் முதல் தேதியும், 16-ந் தேதியும் வெளிவரும்.

சந்தா விவரம்

ஆண்டுச் சந்தா	...	ரூ. 8-00
ஆறு மாதங்கள்	...	ரூ. 4-00
தனிப்பிரதி விலை	...	35 காசுகள்

விளம்பரக் கட்டணம்

கடைசி அட்டை இரு வண்ணங்களில்	ரூ. 1000
இரண்டாவது அட்டை ,,	ரூ. 650
மூன்றாவது அட்டை ,,	ரூ. 450
முழுப்பக்கம்	ரூ. 400
அரைப் பக்கம்	ரூ. 200
கால் பக்கம்	ரூ. 100

விவரங்களுக்கு :

இயக்குநர்
செய்தி - விளம்பரத்துறை
தமிழ்நாடு அரசு
கோட்டை : சென்னை - 9.

புளியந்தோப்புச் சீனித்தேவர் என்று சொன்னால் 'அகில உலக சிலம்ப உஸ்தாத்'! வாழ்க்கையிலோ என்றால், அவர் அந்த ஊர் கிராம முன்சீப்பிடம் ஒரு வெட்டியான்!

சீனித்தேவர் சாதாரணமாகப் பெரிய மனிதர்களைக் கண்டால் மேல்துண்டை எடுத்து இடுப்பிலே கட்டி நின்றுதான் பேசுவார். அவ்வளவு அடக்க ஒடுக்கம். ஆனால், சிலம்பக் கூடத்துக்குள்ளே இறங்கிவிட்டால், அவர் உஸ்தாத்! அவருக்குச் 'சலாம்' வரிசை வாங்கிக் கொண்டுதான் சீடர்கள் எல்லாரும் வட்டத்துக்குள் இறங்க வேண்டும். அதிகம் சொல்வானேன்? அந்தக் கிராம முன்சீப்பே வந்து சிலம்பம் படிப்பதானாலுங்கூட சீனித்தேவருக்குத் தேங்காய் தட்டி, 'சலாம் வரிசை'யும் வாங்கித்தான் ஆகவேண்டும்!

சிலம்பக் கூடம்

சீனித்தேவருக்கு நிகராகச் சிலம்பம் ஆடுபவர் அந்த வட்டாரத்திலேயே யாரும் கிடையாது. கம்பு வீச்சில் அவர் வேங்கைப் புலி. 'கோப்பட்டாக் கத்தி'யை எடுத்துக்கொண்டு வீச ஆரம்பித்தார் என்றால், பார்க்கிறவர்களுக்கு ஈரல் பதறும். ஆனால், பார்த்துக் கொண்டே இருக்கவேண்டும் என்று ஆசை [illegible] கருவியைச் 'நடன பலாட்டிய நரவீர சண்டியர்'களும் கதி கலங்கிப் போவார்கள்!

சிலம்ப வித்தையில் தேர்ந்த திறமைசாலிகளில் பலர் சாதாரணமாகத் தங்கள் வித்தை முழுவதையும் மகிழ்ச்சியோடு வழங்கி, மாணவர் பரம்பரையை நிறுவுவதில்லை. ஆனால், சீனித்தேவர் அப்படியில்லை. தமக்குப் பின்னால் தம்முடைய பெயரைச் சிலம்பக் கம்பிலே சுழற்றி வானத்தில் வீசி விளையாடக் கூடிய இரண்டு சீடர்களை அக்கறையோடு பயிற்றியிருந்தார். அவர்களிடம் அவருக்கு அபாரமான நம்பிக்கை.

சங்குத்தேவனும், சந்தனத்தேவனும் சரியான இளங் காளைகள். எத்தனையோ ஆண்டுகள், எத்தனையோ வாலிபர்களை ஆராய்ந்து, எத்தனையோ பேரைக் கழித்து இவர்களைத் தேர்ந்தெடுத்து ஜோடிகளாக இணைத்திருக்கிறார், சீனி. அசைப்பிலே பார்த்தால் யார் சங்கு, யார் சந்தனம் என்று இனங் கண்டு சொல்லிவிட முடியாது. ஒரே உயரம், ஒரே மாதிரி ஒடிசலான தேகம். ஒரே நடை. உருவிவிட்ட சாட்டை மாதிரி ஒரே வேகம் இருவருக்கும். முகங்கூட அநேகமாக ஒன்றுபோல் இருக்கும். ஆட்டத்தில் இருவரும் சரிநிகர் சமானம்; ஒருவனை ஒருவன் வென்றான் என்றோ, ஒருவனுக்கு ஒருவன் பம்மினான் என்றோ கிடையாது...!

ஐப்பசி கார்த்திகை மாதங்களில் மாலைநேரத்தில் தாமிரவருணிக் கரையில், புளியந்தோப்பில் நின்று பார்த்தால் பொதிகை மலைக்கு மேலே மின்னல்கள் துவளுவது தெரியும். சங்குத்தேவனும் சந்தனத்தேவனும் சிலம்பக் கூடத்துக்குள் இறங்கி, ஆசானிடம் சலாம் வாங்கும் முறையைப் பார்க்கும்போது, அந்த மின்னல்களில் இரண்டு பொதிகை மலையிலிருந்து கீழே இறங்கி வந்து சீனித்தேவருக்கு முன்னால் வணங்கித் தவளுவதுபோல் இருக்கும்!

''எல்லாச் சிலம்பப் பள்ளிக் கூடத்திலுந்தான் ஜோடிகள் என்று இருக்கும். ஆனாலும், இந்த மாதிரி ஜோடி எப்படித்தான் அமைந்ததோ!'' என்று எல்லாரும் அதிசயப்பட்டார்கள்.

> ''தமிழர்கள் தங்களை உணரத் தொடங்கி விட்டார்கள் தமிழனின் பண்பு யாருக்கும் தாழ்ந்தவனாக இருப்பதல்ல; யாரையும் தாழ்த்துவதும் அல்ல. தமிழகம் உலகின் ஒரு பகுதியாக இருக்கலாம். ஆனால் அது யாருடைய வேட்டைக் காடாகவும் இருந்திட ஒரு போதும் ஒருப்பட மாட்டோம்''
>
> —அண்ணா

எனவேதான், மயிலம்மையின் நிலைமை அவ்வளவு கஷ்டமாகப் போய்விட்டது!

மயிலம்மை சீனித்தேவருக்கு ஒரே மகள். மகள் என்ன—மகள், மகன், மக்கள் எல்லாம் அவளேதான். சிவப்பும் கறுப்பும் ஒன்று பேசிக் கலந்து உருவம் எடுத்தது போல அவளுடைய நிறம்—பொது நிறம். அந்தக் கிராமத்துப் பெண்களிலேயே அவள் ஒரு தனியான கவர்ச்சி. தாயில்லாப் பெண்ணானதால், அப்பாவைப் பெற்ற 'ஆச்சியி'டம் அவளுக்கு ஏகப்பட்ட செல்லம். அந்தச் செல்லத்திலே வளர்ந்ததால், நல்ல சூரிய வெளிச்சத்தில் வளர்ந்த பூச்செடி மாதிரி அவள் வனப்பாக இருந்தாள். முகத்தில் ஒரு பிரகாசம். கண்கள் எப்பொழுதும் சிலம்பம் ஆடிக்கொண்டே இருக்கும். நேர் வகிடுக் கொண்டையும், நெற்றியிலே துலங்குகிற நேர்த்தியான குங்குமப் பொட்டும், வீராதி வீரன் சிலம்பச் சூரனையும் சலாம் வரிசை வாங்க வைத்துவிடும்!

மயிலம்மை அடிக்கடி தகப்பனாரோடு சிலம்பக் கூடத்துக்கு வருவதுண்டு. அவள் வந்து விட்டால் ஆட்டத்தில் களை கட்டும். சீடப் பிள்ளைகள் தங்கள் குருநாதனுடைய குமாரிக்கு முன்பாகத் தாங்கள் கற்ற வித்தையையெல்லாம் ஸ்தாபிதம் செய்வார்கள். சிலம்பக் கூடத்தின் அந்த ஜோடிகள் இருக்கிறார்களே, அவர்களுக்கோ சொல்லவே வேண்டாம்!

மயிலம்மை சம்பந்தப்பட்ட மட்டில், சங்குத்தேவன், சந்தனத்தேவன் இருவருடைய ஆட்டமுமே அவளுக்கு வியப்பூட்டியது. சில சமயங்களில் இமை கொட்டாமல் அவள் பார்த்துக் கொண்டேயிருப்பதைக் கவனித்தால் இந்த இருவரில் யாரை அதிகமாக வியப்பது என்று அவளுடைய கண்கள் அங்கும் இங்கும் தடுமாறுவதுபோல் தெரியும்!

இந்தத் தடுமாற்றம் பல நாளாக நீடித்தது. ஒரு நாள்—

ஒருநாள் மயிலம்மை சிலம்பக் கூடத்துக்கு வருவது நின்றது. அவளுக்கு மஞ்சள் நீர் ஆட்டியதிலிருந்து, அவள்—பெரிய மனுஷி—வெளியே வரக்கூடாது என்று ஆகிவிட்டது. ஆச்சிதான் அவளுக்குத் துணை.

''அல்லியரசாணி மாலை''யும் ''புரந்தரன் களவு மாலை''யும் ''பஞ்ச பாண்டவர் வனவாச''மும் அவளுக்குப் பொழுது போக்கு. எப்பொழுதாவது சங்குவும் சந்தனமும் வாத்தியாரைத் தேடி வீட்டுக்கு வருவார்கள், அவ்வளவுதான். மற்றபடி சிலம்பத்துக்கும் மயிலம்மைக்கும் இப்பொழுது எத்தனையோ மைல்கள்!

மயிலம்மை மெய்யாகவே மிகவும் அவதிப்பட்டாள். ஆச்சிக்குத் தெரியாத ரகசியம் ஏது? அவளுக்கும் தன்னுடைய பேத்தியை இந்த இரண்டு வாலிபப் பிள்ளைகளில் ஒருவனுக்குக் கல்யாணம் முடிப்பதில் இஷ்டந்தான். ஆனால், இருவரில் யாரைத் தேர்ந்தெடுப்பது?

சீனித்தேவருக்கோ என்றால், இரண்டு பேரும் இரண்டு கண்கள் மாதிரி.

நிலைமை இப்படி இக்கட்டாக இருக்கும்போதுதான், உலகம்மன் கோவிலில் தசரா வந்தது. தசரா என்றால், சிலம்பப் பள்ளிக்கூடத்துக்கு வருஷத்துக்கு ஒரு நாள்! அம்மன் சப்பரம் செல்வதற்கு அடுத்தபடியாக, அந்த வட்டாரங்

ஜூன் திங்கள் 21, 22-ம் தேதிகளில் நடந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில் முதல்வர் அவர்கள் தெரிவித்த கருத்துக்கள்:

நிலம் இல்லாத ஏழை மக்களுக்கு 1967-68 முதல் 1969-70 வரை அரசு வழங்கிய தரிசு நிலங்கள் 2, 50, 208 ஏக்கர்.

அதேபோல் தகுதியுள்ள ஏழை மக்களுக்கு 1970 மார்ச். திங்கள் முடிய 93,472 பேர்களுக்கு மனைப்பட்டா வழங்கப்பட்டுள்ளது.

மீதியுள்ள 1.94 லட்சம் ஏக்கர் தரிசு நிலங்களையும் 1972க்குள் ஏழை உழவர்களுக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

தற்போதுள்ள விதிகளின்படி நிலங்கள் [illegible] வரிசையில் அரிசனங்கள் ஆறுவது இடத்தி லிருக்கிறார்கள். இனி அவர்களுக்கு இரண்டாம் [illegible] செய்யப்பட்டுள்ளது.

பட்டா வழங்கும் திட்டத்தில் தகுதியற்ற[illegible] வழங்கப்பட்டிருக்குமானால், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அவற்றை மறுபரிசீலனை செய்து ரத்து செய்[illegible] நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மனு நீதித்திட்டத்தின் கீழ் 1969 செப். 15 முதல் 1970 மார்ச் முடிய 2, 51, 842 மனுக்கள் வந்தன. அவற்றில் பைசல் செய்யப்பட்டவை 2, 01, 395 மனுக்கள்.

கிராமப்புறங்களில், வேலை வாய்ப்பை அதிகரிக்கவும், இணைப்புச் சாலைகள் போடவும், தாய்-சேய் நல விடுதிகள், பள்ளிகள் கட்டவும் குடி தண்ணீர் வசதி ஏற்படுத்தவும் இந்த ஆண்டு ஒரு கோடி ரூபாயில் கிராம வேலைத் திட்டம் துவக்கப்பட்டுள்ளது. இதில் 25 சதவீதம் அரிசன மக்கள் வாழும் பகுதிகளுக்கு ஒதுக்கப்படும்.

அந்த இரவுகளின் மூடு படங்கள் எல்லாம்...

என்னுடைய மானசீகத்தில் ஒரு கிராமம் தெரிகிறது.

* * *

பன்னீர்ப் பூக்களின் சிதறலில்— இருள் மெழுகிய சேரித் தெருக்கள். மங்கல் இரவுகள்—அவைகளின் மூடு படங்கள். ஓட்டைக் குடிசை— அங்கே அவன் கவலைகளின் நிழல் போலத் தெரிகிறான்.

* * *

கால வீதியில்—சில ஆண்டுகளின் விடைபெறுதலுக்குப் பிறகு—அதே கிராமம், முன்னாளின் இரவுகளில் கண்ட அதே இடத்தில்—அவனை ஒரு பகற்பொழுதில் காண்கிறேன்.

* * *

வேப்பமரத்தடியில்— நிழல்பாயில் உதட்டுச் சாயமாக மாறுதல் பெறும் வெற்றிலைப் 'புகையி லோடு' அவன் என்னைப் பார்க்கிறான். புன்னகை சுமந்த ஒரு சின்னப் பல்லக்காக— வசந்த ருதுவின் ஒரு பேசும் மலராக அந்த முகம் தெரிகிறது. அவனுடைய கையில் 'நாளிதழ்' ஒன்று இருக்கிறது. "1972ஆம் ஆண்டுதொடங்கும் போது தமிழகத்தின் பட்டி தொட்டிகள் எல்லாம் மின்சார வசதி பெற்று ஒளி மயமாக இருக்கும்" அவனுடைய வாய்—வெற்றிலை எச்சிலின் உடனிருப்பில் ஏதோ ஒரு ராகத்தைக் கற்பிதம் செய்து கொண்டு அந்த வரிகளை நீட்டி முழக்குகிறது.

முதலமைச்சரின் நெஞ்சுரில் ஒரு சபதமாகவே குடியேறிவிட்ட அந்த வரிகள் அவனுக்கு நம்பிக்கை ஊட்டுகின்றன.

தன்னுடைய மனச்சாட்சியின் நீதிமன்றத்தில் கடந்த ஓராண்டிற்குள் மின்சார வசதி செய்யப்பட்ட 4946 கிராமங்கள் அவனுடைய நம்பிக்கைக்கான சாட்சியங்களை, முணுமுணுக்கின்றன.

கிராமத்துப் புழுதிகளில் பச்சைப் போர்வையாகக் கிடக்கும் வேளாண்மைக்காக, நிலங்களின் 60,900 பம்பு செட்டுகள் வழங்கப்பட்ட அந்தப் புள்ளி விபரம்—என்னுடைய ஞாபக வீதியில் என்னையும் உற்சாகப்படுத்துகிறது.

நண்பகல் வேளை. சூரிய தண்டனை போல வெயில் எரிகிறது. அவனுடைய கையிருப்பில் பழசாகிப் போன அந்த உணவும், மாங்காய்த் துண்டங்களும் எனது பசிநிலையினைச் சமப்படுத்துகின்றன.

வேப்பிலைக் கவரிகளின் விசிறவில் அந்தத் தென்றல் மணலில் தமிழக மின்சாரத் துறையில்நடை பெற்றுவரும் அபிவிருத்தி வேலைகளைப் பற்றி நாங்கள் பேசுகிறோம்.

இந்தியத் துணைக் கண்டத்திலேயே கிராமங்களுக்கு மின்சாரம் வழங்குவதில்—தமிழகம் முதலிடம் வகிக்கும் செய்தியை நான் அவனுக்குச் சொல்கிறேன். கிராமங்களில் மிக விரைவாக மின் வசதி செய்ய ரூ 30 கோடி அளவில் பல பொருள்களை வாங்க அரசு ஏற்பாடு செய்திருக்கிறது. இ[illegible]வில் அமைக்கப்பட்ட 11 லட்சம் பம்பு செட்டுகளில் 4 லட்சம் பம்பு செட்டுகள் தமிழக மண்ணில் அமைக்கப்பட்டுள்ளன.

மாலை மயக்கத்தில்—இந்தச் செய்திகளைச் சந்தியாவந்தனம் போல நான் கூறுகிறேன்.

இரவில் ஆகாயம்—குபேரபுரியின் குப்பைக் கூடையாக மாறுகிறது. அங்கே நட்சத்திரங்கள் சிந்திக்கிடக்கின்றன.

எண்ணூர் அனல் மின் நிலையம்.

பரம்பிகுளம்—கோதையாறு நீர் மின் நிலையங்கள்.

வேலூர் அருகே-திருவலத்துகிலே மின் நிலையம்.

கல்பாக்கம் எனும் மின்சாரக் கருவூலம்.

ஆகாயம் பூமிக்கு வருகிறது. எண்ணங்களில் நட்சத்திரங்கள் சிந்துகின்றன.

அதற்கு—எங்கள் பேச்சு நடந்த வேப்பமரத்தடியில்—எட்டுத் திசைப் புறங்களில் இரவின் ஆளுகை— அதன் மூடுபடங்கள்.

ஒரு கணப் பொழுதில்—அந்த இருளின் புறவெளிக்குள் மின்சாரப் பூக்களாக பல்புகள் மலர்கின்றன.

இரவு நேரத்துப் பகலாகவே அந்த இரவு தெரிகிறது. உதிரும் பன்னீர்ப் பூக்களைக் கையில் வாரிக் கொண்டு அவன் பேசுகிறான். அரசு மின்சாரத் தொழிலாளர்

களில் உள்ள சிலம்பப் பள்ளிக்கூடத்துச் சீடர்கள் எல்லாரும் அணி வகுத்துச் செல்லும் திருவிழா அது! வீதி முனைகளில் நின்று ஒரு வருஷத்துக்குக் காணும்படியாக ஆடுவார்கள்!

வாண வேடிக்கைகளும், புலி வேஷங்களும், சாமியாட்டங்களும் ஒரே அமர்க்களமாயிருந்தன. பனியன் துணியினுல் செய்த நீண்டகால் அங்கிகளை அணிந்த சிலம்ப வீரர்கள், பத்தி பத்தியாகச் சென்ருர்கள். மேலே பனியனுல் தைத்த முழுக்கைச் சட்டை உடம்பை இறுக்கிக்கொண்டு நெளிந்தது. அரையிலே பச்சை வெல்வெட் துணியினுல் 'ஜட்டி'. கழுத்தைச் சுற்றி ரோஜா நிறத்தில் முக்கோண வடிவத்தில் முடிபோட்டுத் தொங்கும் சவுக்கம். கையில் உயரம் உயரமான சிலம்பக் கம்புகள்; கோப்பட்டாக் கத்திகள். அந்தக் கத்திகளிலே சொருகிய பளப்பளப்பான கேடயங்கள். அங்கங்கே சுருளிகள், மான் கொம்புகள். அந்தக் காட்சி ஏதோ பெரிய படை புறப்பட்டது போலத் தெரு வீதிகளில் அணி அணியாக வந்தது.

சீனித்தேவருடைய வீட்டை அடைந்ததும் கூட்டத்தில் ஒரு பரபரப்பு உண்டாயிற்று.

வாத்தியார் சுருளியைக் கையிலே பிடித்துக் கொண்டு கூட்டத்துக்குள் இறங்குகிருர். அப்படியே வட்டமாக ஜனத்திரள் ஒதுங்கி வளையமிட்டு நின்றது.

வாணங்கள் வானத்தில் சீறி வெடித்து வர்ணங்களை உதிர்த்தன. தூரத்தில் மேளமும் பாண்ட் வாத்தியமும் ஒரு கலக்குக் கலக்கிக் கொண்டிருந்தன. தீவட்டிகள், காஸ் லைட்டுகள், மானிடத்தோளில் ஏறி நின்று எரியும் பெட்ரோமாக்ஸ் விளக்குகள் எல்லாம் அங்கங்கே இடம் போட்டு நின்று ஒளி வீசின. சிவப்பும், பச்சையுமாக மத்தாப்புகள்— சுற்றுப்புறங்களுக்கும் ஜனத்திரளுக்கும் வர்ணம் பூசின. வளையமிட்டு நின்ற கூட்டத்தின் மத்தியில் அந்த விசாலமான வட்டத்துக்குள் ஜோடிகள் இறங்குகிருர்கள்!

மூடி விழிக்கும் நேரத்தில் இளங் காளைகள் இருவரும், ஆசானுக்கு முன்பு துள்ளி வந்து சலாம் வாங்கினுர்கள். அடுத்த கணம் வலது காலையும் இடது காலையும் மாற்றி மாற்றிப் பாவி எட்டத்திலிருந்து கைக்கம்பை நீட்டியவண்ணம், 'பாவலா' போட்டு அருகிலே வந்தார்கள். குச்சிகளை மேலே உயர்த்தி ஒரு 'டக்!' பிறகுதாழ்த்தி ஒரு 'டக்!' பிறகு மறுபடியும் மேலே! இப்படியாக 'டக் டக் டக்!' —ஆட்டம் வெகு ரமையாகத் 'தட் தட்' என்று எவ்வியது. இடையிடையே இரண்டு பேரும் சீனித்தேவர் வீட்டு ஜன்னலையும் பார்த்துக் கொண்டார்கள்! ஒவ்வொரு பார்வைக்கும் உற்சாகம் ஒரு படி மேலே சென்றது!

வாத்தியார் திகைத்தார். வெகு நேரம் ஆகியும் சீடர்கள் இருவரும் ஆடிக் கொண்டேயிருந்தார்கள். இருவருடைய முகத்திலும் களைப்புக்குப் பதிலாக ஒரு புதிய வேகம் அரும்பியிருந்தது. பார்த்துக் கொண்டிருந்த ஜனங்களே நினைத்தார்கள்: ''இன்று தான் ஜோடிகளுக்குள் ஒரு போட்டி தெரிகிறது'' என்று. அதைக் கண்டு அந்த ஜனங்களுக்குக்கெல்லாம் கொண்டாட்டம்; ஆனுல் மயிலம்மைக்கோ? சில சமயம் ஜன்னல்—கம்பிகளைப் பெயர்த்துக் கொண்டு வெளியே வந்து, ''நீங்கள் இரண்டு பேரும் சமம். வெற்றி தோல்வி என்பது எவ்வளவு நேரமானுலும் கிடையாது!'' என்று சொல்லிவிடலாமா எனத் தோன்றும். நேரம் ஆக ஆக ஆத்திரம் அதிகரித்தது!

உலகம்மன் சப்பரம் இதற்குள் வீதியைத் தாண்டி வெகு தூரம் போய்விட்டது. சீனித்தேவருக்கு வேறு வழி புலப்படவில்லை. வட்டத்துக்குள்ளே சாடினுர். இரண்டு பேரையும் முதுகைத்தட்டி 'சபாஷ்' கொடுத்துவிட்டு, கூட்டத்தை 'நகரலாம்' என்று கை கூப்பினுர்.

ஜோடிகள் சிலம்ப ஆட்டம் நின்றது. ஆனுல் அந்த இரண்டு மனங்களுக்குள்ளும் மிகப் பெரிய சிலம்ப ஆட்டம் அப்பொழுதே ஆரம்பமாகி விட்டது!

சீனித்தேவர் பெரிய பெரிய புதிர்களுக்கெல்லாம் விடை காணுவது, தம்முடைய கிராம முன்சீப் ஐயாவிடம் வந்துதான். எனவே, தம்முடைய மகளின் கல்யாணப் பிரச்னையையும் அவருடைய சந்நிதிக்கே கொண்டு வந்தார். கிராம முன்சீபு சொன்னுர், ''இந்த இரண்டு பேரில் யார் சிலம்பம் ஆடி வெற்றி பெறுகிருனே அவனுக்கு மயிலம்மையைக் கொடுக்கலாம்'' என்று.

சிக்கலுக்கு இப்பொழுது இன்னும் பலமான முடிப்பு விழுந்து விட்டது. உலகம்மன் கோவிலை அடுத்த 'லால தோப்பில்' ஜோடிகள் இருவரும் மயிலம்மைக்காகச் சிலம்பப் போட்டியிலே இறங்குவது என்று நாள் குறித்து விட்டார்கள்! வென்ருல் மயிலம்மையோடு வாழ்வு, வெல்லாவிட்டால் மயில்மைக்காகச் சாவு என்ற தீர்மானத்தில் சங்குத் தேவனும், சந்தனத் தேவனும் முனைந்தார்கள்!

போட்டி நாள் நெருங்க, நெருங்க சீனித்தேவருக்கு மனத்தைப் புளிக்கரைக்க ஆரம்பித்து விட்டது! காரணம், தம்முடைய சீடர்கள் ஒருவனை ஒருவன் காலை வாங்குவது கையை வாங்குவது என்று பேசிக் கொள்வதாக அவர் காதில் விழுந்தது. மயிலம்மையோ, இந்த விவகாரத்தில் அனுவசியமாக கிராம முன்சீபு ஐயா நுழைந்து போட்டி யோசனையினுல் குட்டை குழப்பி விட்டார் என்ற் மனம் வருந்தினுள்.

> காலத்திற்கேற்ற கருத்து எது தேவை என்பதை அறிவிக்க வேண்டும். அதற்குத் தேவை துணிவு. அந்தத் துணிவு—தெளிவின் அடிப்படையில் பிறக்க வேண்டும். அந்தத் தெளிவுடைய கருத்தும் கனிவோடு எடுத்துச்சொல்லப்பட வேண்டும்.
>
> —அறிஞர் அண்ணு

னக்குக் கல்யாணமே வேண்டாம் ன்று கூடச் சொல்லி விடலாமா னப் பல தடவைகள் அவள் நினைத் ான்!

அந்தி வேளையில் ஆறு மணியிருக் நம், பூக்காரி வந்தாள். 'கேட் ாயா சங்கதி' என்று மயிலம்மை பிடம் வந்து பேச ஆரம்பித்தாள். அவள் சொன்ன விவரம் மயிலம்மை பின் மனதைத் நிலைகுலையச் செய்தது.

தெருவோடு போய்க் கொண்டிருந்தபோது பூக்காரியின் காதில் சங்குத்தேவன் தன் சகாவுடன் பேசிய வார்த்தை நன்ருகக் கேட்டதாம். ''சந்தனத்தேவனைச் செயிப்பது. இல்லையென்ருல் இந்த உலகம்மன் சத்தியமா, அந்தப் பயலுடைய காலை முறித்து முடமாக்குவது'' என்று அவன் சபதம் கூறினுனும்!

'தன்னிடம் சங்குத்தேவனுக் ுள்ள அளவுகடந்த பிரியம் அல்லவா இப்படிச் சபதம் போடச் செய்கிறது' என்று முதலில் மயிலம்மை நினைத்தாள். ஆனுல் பாவம், சந்தனதேவனுக்குக் கால் முறிவதை எண்ணிப் பார்க்கவே அவளுக்குத் திகிலாக இருந்தது. அப்பா வந்ததும், அவரிடம் விஷயத்தைச் சொன்னுள். அவருக் நம் உள்ளூரக் கவலையிருந்தாலும் அதைக் காட்டிக் கொள்ளாமல், ''சந்தனத்தேவன் அத்தனைக்கு விடுவானு! சம ஜோடியல்லவா? சங்கு வந்து காலை முறிக்கும் வரை இவனுடைய கை புளியங்காய் பறிக்கவா போயிருக்கும்!'' என்று சொல்லிப் பேச்சை முடித்தார்.

அந்த நேரத்தில் ''வாத்தியாரையா'' என்று சத்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தார். சந்தனம் நின்று கொண்டிருந்தான்.

''என்னடா நாளை ஆட்டத்திலே நம்ப வரைமுறைகளையெல்லாம் மீறி, சங்குத்தேவன் காலைமுறிக்கப் போறியாக்கும்!'' என்ருர் வாத்தியார்.

''இல்லை, அப்படிச் சபதம் செய்திருப்பது சங்குதான். நானில்லை'' என்ருன் சந்தனம்.

''உன்னுடைய தீர்மானம் என்னவாம்?''

''இந்தப் போட்டியை வேண்டாங்கிறது தான்!''

சீனித்தேவர் இந்த வார்த்தையை எதிர்பார்க்கவில்லை.

''என்னடா சீடப் பிள்ளை, பயந்துட்டியா?'' என்று சிரித்துக் கொண்டே கேட்டார். மனத்துக்குள் அந்த மாதிரிப் போட்டியில்லாமல் போய்விட்டால் அவருக்கும் இப்பொழுது திருப்திதான்!

''பயத்திலே சொல்லலை. போட்டின்னு வந்துட்டா, குருநாதன் கிருபையிலே ஒரு கை பார்த்துத்தான் விடுவேன். அது ஒங்களுக்கே தெரியும் ஆனு...'' என்று இழுத்தான் சந்தனம்.

''ஆனு என்னடா?'' என்று கேட்டார் சீனித்தேவர்.

''என் காலை அவன் முறிச்சா அவன் காலை நான் முறிக்காம விடமாட்டேன். முடிவு அதுதான். ஆனு கடைசியிலே மயிலம்மை இந்த இரண்டு முடவனிலே ஒரு முடவளுேடு தானே வாழணும்! அதுதான் மனசுக்குச் , சங்கடமாயிருக்கு—'' என்ருன் சந்தனம்.

சீனித்தேவர் அசைந்து விட்டார். சந்தனத்தின் வார்த்தைகள் எதிர் காலத்தின் மெய்யான ஒரு சூழ்நிலையை அவர் கண் முன்பு சித்திரித்தன!

''என்னடா பெரிய குழப்பமாப் போச்சு. என்னதான் இதுக்கு வழி!'' என்ருர் அவர். அந்த வார்த்தைகளில் ஒரு சலிப்புத் தெரிந்தது.

சந்தனம் முடிவாகச் சொன்னுன்: ''நல்ல நாள் பார்த்து சங்குத்தேவனுக்கும் மயிலம்மைக்கும் கல்யாணம் முடியுங்க. எப்படியும் அவ நல்லாயிருக்கணும்.''

சிலம்பப் போட்டி நடைபெறவில்லை. என்ருலும், மயிலம்மைக்குத் திருமணம் நடந்தேறியது! ஆனுல், சங்குத்தேவனுக்குப் பதிலாக சந்தனத்தேவன் அவளை மணந்தான்!

இரண்டு பேரில் யாரைத் தேர்ந்தெடுப்பது என்று திண்டாடிக் கொண்டிருந்த மயிலம்மை வெகு எளிதில் அந்த மகத்தான தீர்மானத்துக்கு வந்து விட்டாள்.

பைந்தமிழ்த் தேர்ப்பாகன்-சட்டப் பேரவை நடத்தும் சாரதி புலவர் கோவிந்தன் அவர்கள் எழுத்தோவியம் அடுத்த இதழில்...

அன்று சாயந்திரம் சந்தனத்தேவன் தன் அப்பாவிடம் வந்து சொன்ன வார்த்தைகள் மயிலம்மையின் மனத்தில் அவ்வளவு பெரிய மாறுதலைச் செய்துவிட்டன. உண்மையில், மயிலம்மையின் நலத்தை எண்ணி எதிரிக்கே விட்டுக் கொடுக்க நினைத்தானே சந்தனம். ஒரு பெண்ணுக்காகத் தன்னுடைய விரோதியை வீழ்த்துகிற சுயநலச் சூரர்கள்— சங்குத் தேவர்களை— அவளுக்குத் தெரியும். ஆனுல், உண்மையான அன்பு காரணமாக எதிரிக்கே விட்டுக் கொடுக்கிற சந்தனத்தேவனை முதன் முதலாக இன்றுதான் பார்த்திருக்கிருள்!

மணமக்களை ஆசிர்வாதம் செய்த கிராம முன்சீப் சிவசங்கரம் பிள்ளை. சிலம்ப வாத்தியார் சீனித்தேவருக்கே ஆசானுக நின்று விஷயத்தை விளக்க ஆரம்பித்தார். ''நீர் சிலம்பம் ஆடுபவர். நான் சிலம்பம் பார்ப்பவன். நம் கண்ணுக்குச் சந்தனமும் சங்கும் சரி நிகர் சமானந்தான். ஆனுல், மயிலம்மை எவ்வளவு எளிதில் அவர்களை இனங் கண்டுவிட்டாள் பாரும்! மன உலகம் என்பது தனி! அது வேறு வகையான ஒரு சிலம்பக் கூடம்!''

எதிர்ப்புக் கருத்துக்கள் வரும்போது அவை எந்த உள்ளத்திலிருந்து வருகின்றன என்று பகுத்துணர்ந்து, முடிந்தவரையில் இணங்கி நடப்பதும், முடியாதவற்றை வெளிப்படையாக எடுத்துச் சொல்வதும் வழக்கமாக இந்த அரசிடம், இருந்து வருகின்றது.

—கலைஞர்

கூலியினையும் பணியாளர் ஊதியத்தினையும் உயர்த்தியதைச் சுட்டிக் காட்டுகிறேன்.

அவனுடைய நன்றிப் பிரார்த்தனை முடியும் பொழுதில்—அந்த வேப்பமரத்தண்டைக் குளத்தில் நிலாவெளிச்சத்தில் அல்லிப் பூக்கள் மலர்கின்றன.

பின்னிரவின் துளும்புதலில்—அவனிடமிருந்து நான் விடை பெறுகிறேன்.

வீதியில்—ஒளி வெள்ளத்தில். நடக்கிறேன். அங்கே ஒரு வழிப் போக்கனின் கல்லறை தென்படுகிறது. அதிலுள்ள வாசகங்களைப் படிக்கிறேன்.

''அந்தப் பழைய இரவுகள் இனியிங்கு வரமாட்டா. அந்த இரவுகளின் மூடுபடங்கள் எல்லாம் இங்கே இந்த வழிப் போக்களோடுதான் துயில்கின்றன. நாங்கள் இந்தக் கல்லறையை எழுப்பி தற்குப் பிறகு—மூன்று வசந்தங்கள் கழித்து விட்டன. நாங்கள் இப்போது நான்காவது வசந்தத்தி கீதங்களை இசைத்துக் கொண்டிருகிறோம்.''

ராசி அதிர்ஷ்டத்தைக் குறிப்பது!
ராசி பட்டுப்புடவைகள் உங்கள் அழகை அதிகரிக்கச் செய்கின்றன.
நாங்களே தயாரித்து விற்பனை செய்வதால் உங்களுக்குத் தேவையான
விதவிதமான, நவீனமான டிசைன்களுடன் கூடிய,
பட்டுப்புடவைகளை உங்களுக்குத் தரமுடிகிறது.

ஏர்கண்டிஷன்ட் வசதியுடன் கூடிய எமது விற்பனை நிலையங்கள் :
ராதா சில்க் எம்போரியம் பிரைவேட் லிமிடெட்,
'ராசி இல்லம்'
1, சன்னதித் தெரு, மைலாப்பூர், சென்னை-4.

பம்பாய் கிளை :
ராதா சில்க் எம்போரியம் பிரைவேட் லிமிடெட்,
வெஸ்டர்ன் இந்தியா ஹவுஸ்
ஸர் பி. எம். ரோடு, பம்பாய்-1.

சார்பு நிறுவனம் :
ராதா சில்க்ஸ்,
'தன் பில்டிங்'
மவுண்ட் ரோடு, சென்னை-2.

சிறு சேமிப்பும் நம் எம்.ஜி.ஆர்.

—புரட்சி நடிகர்

தமிழகத்திலே பரவலாக சிறு சேமிப்பு என்ற சொல் அரசினர் நடத்துகின்ற ஓர் இயக்கம் என்ற பொருளோடு புரிந்து கொள்ளப் படுகிறது. தமிழ் நாட்டில் நான் செல்லுமிடமெல்லாம் மக்கள் என்னிடம் வந்து சிறு சேமிப்பு நிதி வழங்குகிறோம் 'வாருங்கள்' என அழைக்கிறார்கள்.

இது அரசினர் இயக்கம்

எனினும் பல்வேறு தனி நபர்கள், மக்கள் இந்தச் சிறு சேமிப்பு இயக்கத்திலே பங்கு கொள்ள வேண்டும் என்று காட்டுகின்ற ஆர்வத்தை பயன்படுத்திக் கொண்டு தங்கள் முன்னேற்றத்திற்காக நடத்தப்படும் சிறிய சீட்டுக் கம்பெனிகள், நிதியுதவி நிறுவனங்கள் இவற்றிற்கு சிறு சேமிப்பு நிறுவனங்கள் என்று பெயர்களைச் சூட்டியும் தனியார் லாபமடைகின்றனர். சில வேளைகளில் மக்கள் ஏமாற்றமும் அடைகின்றனர். அரசினரின் சிறு சேமிப்பு இயக்கம் தனிப்பட்டது என்று அறிவுறுத்த விரும்புகிறேன்.

அரசினர் சிறு சேமிப்பு இயக்கத்தில் உங்கள் முதலீடுகள் அஞ்சலகங்களில் சேர்க்கப்படுகின்றன. பணத்திற்கு பாஸ் புத்தகங்கள் பத்திரங்கள் வழங்கப்படுகின்றன. நீங்கள் அளிக்கும் தொகைக்கு அதிகாரிகளும் சிறு சேமிப்புத்திட்ட விற்பனையாளர்களும் உங்கள் முதலீடுகளுக்கான ரசீது கொடுப்பது மன்றி, அஞ்சலக ஆதாரங்கள் கொடுக்கின்றனர். தனியார் எவரும் இந்தத் திட்டத்தின் கீழ் செயல்பட முடியாது.

சிறு சேமிப்பில் பங்கு கொள்வதால் உண்டாகும் பயன்களை எல்லோரும் அறியும் வகையில் பின்னர் விளக்குகிறேன்.

இன்னமும் தமிழகத்திலே சிறு சேமிப்பு இயக்கத்தைப் பற்றிய விவரங்கள் செவ்வனே நல்ல முறையிலே விளம்பரப்படுத்தப்படவில்லை என்றுதான் நினைக்கிறேன்.

இந்த இயக்கத்தினால் என்னென்ன நன்மைகள்; இந்தத் திட்டத்தின் கீழ் எத்தெந்த முறையிலே பணம் சேர்க்கலாம் என்பதை அறியாதவர் நாட்டிலே பலர் உளர். சிறு சேமிப்புத் திட்டம் பற்றிய விளம்பரப் பகுதி சரிவரச் செயல்படவில்லையோ என்று கூட ஐயப்படுகிறேன்.

சேமிப்பது எதற்காக?

சேமிப்பது ஏன்? எப்படி? என்று அடுத்தடுத்த கேள்விகளுக்கு ஒரு விடை அளிக்க விரும்புகிறேன். எல்லோருக்கும் எப்படி வாழ்வைச் சிறக்க அமைத்துக் கொள்வது என்ற உணர்ச்சிதான் மேலிட்டு நிற்கின்றது. ஆனால் வாழ்வை நல்ல முறையிலே அமைத்துக் கொள்ள முதலில் பொருள் தேவை. அது இல்லையேல் இன்னல் தான்அடுத்து வரும். ஆகவேதான் வருவாய்க்குள் செலவு செய்ய வேண்டும் என்று பெரியோர்கள் கூறுகிறார்கள். குறிப்பிட்ட வருமானம் உள்ள மக்களுக்கு இந்த அறிவுரை மிகவும் பொருந்தும். வருவாயையும் செலவினங்களையும் அன்றாடம், கணக்கிட்டு சீர் செய்யவேண்டும். உணவு, வீட்டு வாடகை, பலசரக்கு போன்ற இன்றியமையாத தேவை கள், அன்றாடத் தேவைகள், நோய், விபத்து போன்ற தொல்லைகளால் எதிர்பாராத செலவினங் கள், மக்கள் திருமணம், கல்வி, வீடு கட்டுதல் போன்ற செலவு கள் எதிர்காலக் குடும்ப நலச் செலவினங்கள். இன்னும் எத்தனையோ செலவினங்கள், பண்டிகை கள், திருநாள் என அவ்வப் போது தோன்றுகின்றன. இவற்றை எதிர்நோக்கி மகிழ்ச்சியோடு அவற்றைச் சமாளிக்க வழி வகுத்துக் கொளல் மிக அவசியம். இதற்குத் தேவையான பொருளைச், செலவினங்களைக் கட்டுப்படுத்தி இடையிடையே சேமித்து வந்தாலன்றி குடும்ப வாழ்க்கை உற்சாகம் அளிக்காது. தேவையற்ற செலவினங்களைத் தவிர்த்து சிக்கனம் என்ற ஒரு பண்பின் அடிப்படையில் வாழ்க்கை நடத்துவோமானால் சேமிப்பு தானாகவே பெருகும். இச் சேமிப்பு கணிசமான முறையிலே வளர்க்கப்படுமானால் இடைக்காலச் செலவினங்களையும் எதிர்பாராச் செலவினங்களையும்

[redacted]

வருங்காலச் செலவினங்களையும், சமாளிக்க, தக்க ஓர் ஆயுதமாக அது உதவும். நீங்கள் செலவு செய்யும் ஒவ்வொரு ரூபாயும் அதற்கேற்ற பலன் அளிக்கிறதா, அவசியம்தானு என்று சீர்தூக்கிச் செலவிடுதல் வேண்டும். உழைக்கும் வர்க்கமான என் உடன் பிறப்புகளுக்கு இந்த எச்சரிக்கை மிகவும் தேவை.

இப்படிச் சிக்கனப் பண்பின் அடிப்படையில் சேமிக்கும்பொருளை முதலீடு செய்யச் சிறந்த முறைகள் சிறு சேமிப்புத் திட்டத்தின் கீழ் எல்லோருக்கும் உகந்தபடி அமைந்துள்ளன. அவற்றைப் பற்றிய சிறிய குறிப்பொன்று எழுத விழைகிறேன்.

தேசிய சேமிப்புப் பத்திரங்கள்

இவை மூன்று வகைப்படும். இவற்றில் இரண்டு வகை, முதலீடுகளின் பின் வருமானவரி இல்லாத வட்டி பெறலாம். இவற்றின் கீழ்ச் செல்வந்தர்கள் பயனுடு முதலீடு செய்யலாம். நான்காவது வெளியீடு ஆண்டுதோறும் 7¼ சதவீதம் வட்டி அளிக்கிறது. வருமான வரிக்கு உட்பட்ட வட்டி நீண்ட கால முதலீடு செய்ய எல்லோருக்கும் உகந்தது.

தொடர் வைப்புத் திட்டம்

ரூபாய் 5 முதல் எவ்வளவு வேண்டுமானாலும் மாதாந்திரம் கட்டி 6¼% வட்டியோடு பெருகிய ஒரு தொகையைத் திரும்பப் பெறலாம். இந்தத் திட்டம் எல்லா நிலையிலும் உள்ள மக்களுக்கு உகந்தது.

காலவரை வைப்புத் திட்டம்

ஒன்று, மூன்று, ஐந்து ஆண்டுகளுக்கு முறையே 5½, 6¼, 6¾ சதவீதம் வட்டி வழங்கப்படுகிறது. 5 ஆண்டு குறித்த கால முதலீடு திட்டம் 5.25 சதவீத வருமான வரி இல்லா வட்டி அளிக்கிறது.

அஞ்சலக வங்கி அடைப்பு வைப்புத் திட்டம்

இரண்டு ஆண்டுகளில் வங்கியிலிருக்கும் ரூபாய் 100 வருமான வரி இல்லா வட்டியோடு. ரூபாய் 109 ஆக வளருகிறது. அவ்வப்போது போட்டு எடுக்கும் வசதியும் காசோலை வசதியும் இதன் கீழ் அளிக்கப்படுகின்றது.

வளரும் மாதச் சேமிப்பு

·5, 10, 15 ஆண்டுகளுக்குமாதந்தோறும் குறிப்பிட்ட தொகையைக் கட்டி 4, 5 சதவீத வருமான வரி இல்லா வட்டியோடு திரும்பப் பெறலாம். சம்பளப் பட்டியல் மூலமும் இந்தக் கணக்குகள் அமுல் நடத்தலாம்.

உங்கள் சேமிப்பு உங்கள் சமுதாயத்திற்குப் பயனளிக்கிறது. தனியார் வங்கிக்கும் அரசினர் வங்கிக்குமுள்ள பெருத்த வேறுபாடு இது தான். ஆகவே சிக்கனமாக வாழ்ந்து சிறு சேமிப்பிலே பங்கு கொள்ளுங்கள். உங்கள் வீடும் நாடும் பயனடையட்டும் என்று வேண்டிக் கொள்கிறேன்.

ESPEEJEE CORPORATION

9, RUNDALS ROAD, MADRAS-7. (PH: 36605)

UREA 46% (N)

CALCIUM AMMONIUM NITRATE;

SUPHALA

COMPLEX 15: 15: 15 (OF FCI—TROMBAY)

SINDRI'S

AMMONIUM SULPHATE and other Fertilizers.

Please write to us for all your fertilizer requirements

77

தமிழ்த்தாய் வாழ்த்து

பேராசிரியர்
மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளை

தாளம் : திஸ்ரம்

ராகம் : மோகனம்

ரீ கா கா | ரிரிககா க | ரிரிககா.......க | ஸரி க ரி காப|கா |
நீராரும் | கடலுடுத்த | நிலமடந்தைக் | கெழிலொழுகும் |

| தபப ககரி | ரிரிக ரிகா | ரிரி கரிகா | ஸா ரி தஸாரிஸா ||
| சீராரும் | வதனமெனத் | திகழ்பரதக் | கண்டமிதில் ||

| ஸ்தத ததப | கப ததா ப | கப தப தப | கப தப தாஸ்தா ||
| தக்கசிறு | பிறைநுதலும் | தரித்த நறுந் | திலகமுமே ||

| தாஸ் ஸ்ஸ்ப | பத தததப | ததப கரிக | ஸஸரிக கப | கரி ஸரிக ரீஸா ||
| தெக்கணமும் | அதிற்சிறந்த | திராவிட நல் | திருநாடும் | ||

ரீ கக கரி | ரீ கக கரி | ரிரி கககரி | ஸரிகரி கா ப | கா...
அத்திலக | வாசனைபோல் | அனைத்துலகும் | இன்பமுற |

| ஸ ததத தப | கப ததா ப | கபத | ப த ப | கப தப தாஸதா | தா ||
| எத்திசையும் | புகழ் மணக்க | இருந்த | பெரும் | தமிழணங்கே | உன் ||

| தா ஸஸ ஸ்ப | தஸ் தஸா ப | தஸ் தஸா ஸ்
| சீரிளமை | திறம் வியந்து | செயல் மறந்து

| தஸ ரிஸ ரீ || தா ஸ்த ஸ்ா || ரீ கரி கா |
| வாழ்த்துதுமே || வாழ்த்துதுமே || வாழ்த்துதுமே |

சுரப்படுத்தியவர்
இசை மன்னர் எம். எஸ். விசுவநாதன்



ஆசிரியர், வெளியிடுபவர்: இயக்குநர், செய்தி விளம்பரத்துறை, தமிழ்நாடு அரசு, சென்னை-9.
அச்சிடுபவர்: பி. என். கே. அச்சகம், பிரைவேட் லிமிடெட், சென்னை-26.


அன்று அரிசிக்கு 'க்யூ'
இப்பொழுது வெளிமாநிலங்களுக் எடுத்துச் செல்ல 7500 டன் அரிசி அரசு விற்பனை செய்கிறது.
அன்று கூவம் என்றால் ஓட்டம் -
இன்று கூவத்தை காண மக்கள் கூட்ட
அன்று கனவு என்று வெற்றிடங்களைக் காட்டப் பட்டது
இன்று சேலம் இரும்பாலை வந்துவிட்டது. கனவு நனவாகிறது.
று மின்சாரமில்லாமல் இருண்ட தமிழகம்-
இன்று எங்கும் ஒளிமயம்-எல்லா ஊர்களுக்கும் மின்வசதி

குடும்ப நலத் திட்டம்

"நாட்டிலே உற்பத்தி பெருக்கென்றால் அதைவிடுத்து
விட்டிலே உற்பத்தி பெருக்குகின்றார்...
முத்தென்றும்
மணியென்றும்
கட்டென்றும்
கிளியென்றும்
கண் என்றும்
மூக்கென்றும்
கணக்கின்றிப் பெறுதல் விட்டு
நெல் என்றும்
வரகென்றும்
கரும்பென்றும்
உளுந்தென்றும்
பருப்பென்றும்
எள் என்றும்
கொள் என்றும்
உணவைப் பெருக்கிடுவீர்
உற்பத்தி செய்திடுவீர்...."

தமிழக முதல்வர்
கலைஞர். மு. கருணாநிதி

**அடுத்த குழந்தை இப்பொழுது வேண்டாம்
மூன்றுக்குமேல் எப்போதும் வேண்டாம்**

குடும்ப நலத் திட்டம்

“நாட்டிலே உற்பத்தி பெருக்கென்றால் அதைவிடுத்து
வீட்டிலே உற்பத்தி பெருக்குகின்றார்...
முத்தென்றும்
மணியென்றும்
சிட்டென்றும்
கிளியென்றும்
கண் என்றும்
மூக்கென்றும்
கணக்கின்றிப் பெறுதல் விட்டு
நெல் என்றும்
வரகென்றும்
கரும்பென்றும்
உளுந்தென்றும்
பருப்பென்றும்
எள் என்றும்
கொள் என்றும்
உணவைப் பெருக்கிடுவீர்
உற்பத்தி செய்திடுவீர்....”

தமிழக முதல்வர்
கலைஞர். மு. கருணாநிதி

அடுத்த குழந்தை இப்பொழுது வேண்டாம்
மூன்றுக்குமேல் எப்போதும் வேண்டாம்



உள்ளே

மலர் 1 ஜூலை 16 1970 இதழ் 2

குடியரசுத் தலைவர் வாழ்த்துகிறார்
மக்களாட்சியில் ஒரு மகத்தான முன்னேற்றம்
அன்புக் குழந்தைகளே
எண்ணங்களின் எழிலோவியம்
கொடுத்து வைத்தவன்
அடிதொழுது விடைபெறுகிறேன்
பஞ்சாமிர்தம்
டிராக்டர் வேண்டுமா ?
ஒரு ஜூலை மாத மாலைப் போதில்
செய்தி கருவாகிறது
மூன்றாவது உலகத் தமிழ் மாநாடு
சிறந்த எதிர்காலம் சிறு தொழிலுக்கு
கனவுகள் நனவாகும்
காஞ்சி மண்ணில் அகழ்வாராய்ச்சி
காவிரி நதிப்புறத்துக் கோதுமை
இதயத்தின் புன்னகை
உலக ஆராய்ச்சி அரங்கில் தமிழ்
வீடுதோறும் கோழிப்பண்ணை
அம்பத்தூர் அழைக்கிறது
பார்த்தோம் படித்தோம்
மகளிர் பகுதி
இன்னும் பல



தமிழ்நாடு தொழில்வளர்ச்சி நிறுவனம் லிமிடெட்
(தமிழ்நாடு அரசினரின் நிறுவனம்)

தமிழரசு

ழ்நாடு அரசின் திங்கள் இருமுறைத் தமிழ் ஏடு ஜூலை 16-1970-35 க

தமிழரசுக்கு



நல்வாழ்த்துக்கள்

தமிழ்நாடு அரசு வெளியிடுகிற திங்களிருமுறை இதழான ''தமிழரசு''க்கு எனது நல் வாழ்த்துக்கள்.

சமூக, பொருளாதார, பண்பாட்டுத் துறைகளில் தமிழ்நாடு அரிய சாதனைகளைப் புரிந்திருக்கிறது. இச்சாதனைகளை மக்களுக்கு இந்த இதழ் எடுத்துக்காட்டும் என்று நம்புகிறேன்.

தெளி[illegible]யாத ஒன்று. ஆகவே, மக்[illegible]மிழக அரசின் கொள்கைகளையும் திட்டங்களையும் அதிகாரபூர்வமாக அறிவிக்கும் ஏடாகத் திகழும் என்றும் நம்புகிறேன்.

இதழின் வெற்றிக்கு என் நல்லெண்ண வாழ்த்துக்கள்.

V.V. Giri

(வி. வி. கிரி)
இந்தியக் குடியரசுத் தலைவர்

மக்களாட்சியில் ஒரு மகத்தான முன்னேற்றம்

''ஊராட்சி, நகராட்சி போன்ற உள்ளாட்சி மன்றங்களே மக்களாட்சியின் அடித்தளங்கள்'' என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் அடிக்கடி குறிப்பிடுவார்கள்.

ஜனநாயகத்தின் அடித்தளமாக விளங்கும் ஊராட்சி மன்றங்களுக்கு இத்திங்கள் இறுதியில் தேர்தல்கள் நடைபெறவிருக்கின்றன. இந்தத் தேர்தல் பணியானது மிகப் பெரிய அளவினதாகும்.

தமிழ்நாட்டில் 12,339 ஊராட்சிகளும் 537 பேரூராட்சிகளும் 14 நகரியங்களும் உள்ளன. இவைகள் 374 ஊராட்சி ஒன்றியங்களாக உருக்கொண்டுள்ளன. ஏறத்தாழ 1,30,000 வார்டுகளில் தேர்தல்கள் நடைபெறவிருக்கின்றன.

ஆனால், இந்தத் தேர்தல் வழக்கம் போல நடைபெறும் ஊராட்சித் தேர்தல் போன்றதல்ல.

மக்களாட்சியின் மகத்தான முன்னேற்றத்திற்கு ஓர் அடையாளமாகும்,

1958ஆம் ஆண்டைய தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் தக்க முறையில் நிர்வகிக்கப்படுவதற்கான வழி முறைகளை அமைத்துக் கொடுத்தது. இத்தேர்தலில் ஊராட்சித் தலைவர்களை மக்கள் நேரடியாக இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தேர்ந்தெடுக்கத் தக்கவாறு 1958ஆம் ஆண்டைய ஊராட்சிச் சட்டம் திருத்தப் பெற்றுள்ளது.

இத்தேர்தல் ஊராட்சித்தலைவர்களை மக்களே நேரடியாகத் தேர்ந்தெடுக்கவிருப்பது மிக முக்கியமானதாகும்.

இப்படி நேரடியாகத் தேர்ந்தெடுக்க விருப்பது மக்களாட்சி முறைக்குப் புதிய வலிவூட்டுவதாகும்.

நெடுங்காலமாகத் தமிழக மக்க கோரி வந்ததை நம் அரசு இ தேர்தல் மூலம் நிறைவேற்றுகிற

மக்களாட்சியில் ஒரு மக தான முன்னேற்றத்தை இ தேர்தல் மூலம் நம்முடைய அர உருவாக்கியுள்ளது.

உள்ளாட்சி மன்றங்களுக்குப் ப வேறு பொறுப்புகளையும் கடை களையும் அளித்துள்ள அரசு 195 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட் கள் சட்டத்தை நடைமுறைப் படுத்துவதில் ஏற்படும் குறைபாடுகளை நீக்க அச்சட்டத்தை விரிவாக ஆராய்ந்தது. திருத்தச் சட்ட வரைவு தயாரிக்கப் பட்டு வருகிறது.

திரு. மா. முத்துசாமி
உள்ளாட்சி அமைச்சர்

ஊராட்சி ஒன்றிய விரிவினை அலுவலர்களுக்கும் பொருத்தமான நேரடிப் பொறுப்புகளை ஈந்து அவர்கள் நாட்டில் நடைபெற்று வரும் பசுமைப் புரட்சியில் தக்கதொரு பங்கேற்கத் தக்கவாறு நிறுவன அமைப்பு முறைகளில் ஓர் ஒழுங்கு முறையை ஏற்படுத்துவது அரசின் தீவிரக் கவனத்தில் இருந்து வருகிறது. இதற்கெனத் தனியே 'ஊராட்சி வளர்ச்சித் துறை'யை அமைப்பதும் அரசின் ஆய்விலிருந்து வருகிறது.

அண்மையில் விலங்கின வளர்ச்சித் துறையை அரசு சீரமைத்துள்ளது. ஒவ்வொரு வட்டாரத்திலும் விலங்கின வளர்ச்சித் துணை நிலையங்கள் கூடுதலாக்கியதற்கேற்ப விலங்கின வளர்ச்சி விரிவினை அலுவலர்களின் எண்ணிக்கையும் அதிகப்படுத்தப்பட்டது ஒரு முக்கிய மாறுதலாகும். இச் சீரமைப்பினால் ஒவ்வொரு வட்டாரத்திலும் எத்தனை துணை நிலையங்கள் உள்ளனவோ அத்தனை விரிவினை அலுவலர்கள் இருப்பார்கள். இதனால் ஒவ்வொருவருக்கும் கட்டுக்குள் அடங்கிய பரப்பேயிருக்குமாதலால் அவர்கள் துறை தொடர்பான பணி, விரிவினைப் பணி ஆகியவற்றைச் செம்மையுறச் செய்ய முடிகிறது.

குடிநீர் வழங்குவதற்குப் பெரும் முதன்மைதந்தும் அப்பிரச்சினையில் ஒரு சிறு அளவை மட்டுமே தீர்க்க முடிந்து உள்ளது. ஆண்டின் குறிப்பிட்ட பருவங்களில் குறிப்பிட்ட இடங்களில் காலரா ஏற்படுவது தொடர்ந்திருப்பதால், அதைப் போக்கவும், தட்டுப்பாடுள்ள இடங்களுக்குக் குடிநீர் வழங்கவும் கிராமப்புறங்களுக்காகக் குடிநீர் வழங்கும் தனித் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டியது அவசியமாகிறது. இத்தகைய இடங்கட்குத் தனித் திட்டங்கள் உருவாக்கப்பட்டு அவற்றிற்கான மதிப்பீடுகளும் நெடுஞ்சாலைகள்—ஊர்ப்பணிகள் முதன்மைப் பொறியாளரால் தயாரிக்கப்பட்டன. அவர் கொடுத்த மதிப்பீடு ஏறத்தாழ ரூ. 10 கோடியாகும். முதற்படியாக 1969–70 வரவு செலவுத் திட்டத்தில் இதற்கென 16 இலட்சம் ரூபாய்கள் ஒதுக்கப்பட்டு அத்தொகை மாவட்டங்கள் இடையே பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. தட்டுப்பாடுள்ள இடங்களில் குடிநீர் வழங்க இத்தொகை செலவிடப்படும்.

1971–72க்குள் இம் மாநிலத்தில் உள்ள எல்லா இடங்கட்கும் பாதுகாக்கப்பெற்ற குடிநீர் வழங்கப்பட வேண்டும் என்ற அரசின் எண்ணத்தை நிறைவேற்றத் தொலை நோக்கோடு மிகப் பெரும் அளவிலான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வறட்சி நிலை உச்சமுற்றிருந்த நிலையில் முதலமைச்சர் மாநிலத்தில் உள்ள எல்லா இடங்களிலும் உடனடியாக நிறைவேற்றத் தக்க நீர் வழங்கல் திட்டங்களைத் தயாரிக்கச் செய்தார். அதன்படி மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து 11 கோடிக்கான திட்டங்கள் வந்தன. பல மாவட்டங்களிலிருந்தும் பேருராட்சிகளுடன் தொடர்புடைய, 173 நிகழ்வுகள் (Cases) வரப்பெற்றன. நிலைமையைச் சமாளிக்க இப்பணியை மட்டும் தனித்து மேற்கொள்ளத் தக்க வகையில் தமிழ்நாடு நீர்வழங்கல் வடிகால் வாரியம் உருவாக்கப்பட்டது. எல்லா வகையான நீர்வழங்கு திட்டங்களையும் மேற்கொள்ள இவ்வாரியத்திற்கு அதிகாரமளிக்கப்பட்டது. இவ்வாரியம் சட்டபூர்வமாக்கப்பட்டதும் அது ஆயுள் காப்பு நிறுவனத்திடமிருந்து ரூ. 11 கோடியைக் கடனாகப் பெற்று இத்திட்டங்களை நிறைவேற்றும் என எதிர்பார்க்கப்படுகிறது. அரசு ஊராட்சி ஒன்றியங்கட்கு ஆண்டு தோறும் குடிநீர் வழங்கு திட்டங்களுக்காக ஒதுக்கும் தொகையைக் கொண்டு இக்கடன் திருப்பித் தரப் பெறும்.



சமதர்மம் (Socialism) என்பது வெறும் பொருளாதார அமைப்பு மட்டுமல்ல அது வழி முறையாகும்; வாழ்க்கை நெறியாகும்; இதனைச் செயற்படுத்த அறிவுமட்டும் போதாது; இதயம் வேண்டும்.

சோசலிசம் ஏட்டளவில் மட்டும் நிற்பதல்ல; ஏட்டில் பிறந்ததுமல்ல; நசுக்கப்பட்டு நலிந்தோரின் இதயக்குமுறலின் எச்சரிக்கையிலிருந்து பிறந்தது.

இணைப்புச் சாலைகள் அமைத்தல், தாய்சேய் நல விடுதிகள் கட்டுதல், நீர்வழங்கு திட்டவேலைகள் ஆகிய பணி வாய்ப்புகள் அளிப்பதன் மூலம் ஊர்ப்புறங்களில் உணரப்படும் வேலையின்மையை முறியடிக்க, அரசு 1970-71இல் ஒரு புதிய திட்டத்தை மேற்கொள்ள முடிவு செய்துள்ளது. அஃது ஊர்ப்புறச் சிறப்புவேலைத் திட்டம் எனப் பெயர் பெறும். 1970–71ம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் இதற்கென 100 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. இத்தொகையில் 20 சதவீதம் அரிசனக் குடியிருப்புகளில் இப்பணிகளைச் செய்வதற்கெனவே குறிப்பிட்டு ஒதுக்கப்பட்டுள்ளது. வேலைகளை மேற்கொள்ள இத்தொகையை மாவட்டங்களிடையே பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. இப்பெருந் திட்டத்தினால் அடுத்த ஐந்தாண்டுகளுக்குள் இம்மாநிலம் முழுதும் அரிசனக் குடியிருப்புகள் உட்பட இணைப்புச் சாலைகள் அமைத்தல் போன்ற பணிகள் நிறைவேற்றி முடிக்கப் பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அன்புக் குழந்தைகளே!



கல்வி அமைச்சர்

நாவலர். இரா. நெடுஞ்செழியன்

எல்லாருக்கும் என் அன்பு வணக்கம். நான் உங்களைப் பார்க்க முடியவில்லை. நீங்களும் என்னைப் பார்க்கமுடியவில்லை. ஆனால், நான் பேசுகிறேன், நீங்கள் எல்லாரும் கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள். நான் சென்னை வானொலிக் கூடத்தின் மாடமாளிகையில் இருந்து கொண்டு பேசுகிறேன். நீங்கள் கண்ணுக்கெட்டாத நெடுந்தொலைவில் எங்கெங்கோ இருந்து கொண்டு கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள்.

நான் பேசுவதைச் செவியால் கேட்கிறீர்கள்; செவியால் கேட்டதைச் சிந்தையில் இருத்துகிறீர்கள்; சிந்தையில் இருத்தியதைச் சீர்தூக்கிப் பார்க்கிறீர்கள்.

உங்கள் கண்ணுக்கு முன்னால் வானொலிப் பெட்டி ஒலித்துக் கொண்டிருக்கிறது. அந்தப் பெட்டி உலகத்தையே உங்கள் அகக் கண்ணுக்கு முன்னால் கொண்டுவந்து நிறுத்துகிறது. உலகம் ஒலி வடிவில் உங்கள் முன் கூத்தாடுகிறது. வானொலியின் மூலம் இசைப்பாடல்களைக் கேட்டு மகிழ்கிறீர்கள். வானொலியின் மூலம் நடித்துக் காட்டப்படும் நாடகங்கள் உவகையைத் தருகின்றன. சுவையோடு கூடிய கதைகள் உங்களுக்குப் பெருங் களிப்பை அளிக்கின்றன. அரிய கருத்துக்கள் பேச்சுக்கள் உங்களுக்கு வியப்புணர்ச்சியை வழங்குகின்றன.

குழந்தைகளே! நீங்கள் வானொலியின் மூலம் நாடகம் கேட்கலாம். நாட்செய்தி அறியலாம்; பாடல் பயிலலாம்; பேச்சு கேட்கலாம்; கதை அறியலாம்; கவிதை கேட்கலாம்; காவியம் நுகரலாம்; இவற்றோடுகூட நீங்கள் கல்வியும் பயிலலாம். உங்களுக்கான கல்விப் பயிற்சியைத் துவக்கி வைக்கவே நான் உங்களிடம் பேச முற்பட்டுள்ளேன்.

ஆண்டுதோறும் துவக்கக் கல்வி வானொலி மூலம் மாணவர்களுக்குப் பயிற்றுவிக்கப்பட்டு வருகிறது. இவ்வாண்டு உங்களுக்கு அப்படிக் கல்வி கற்பிக்கும் திட்டத்தை இந்த வானொலியின் மூலம் துவக்கி வைப்பதில் நான் கல்வி அமைச்சன் என்ற முறையில் பூரிப்படைகிறேன். பெருமைப்படுகிறேன்.

இளமையிலேயே ஒவ்வொருவரும் கல்வி கற்க முனையவேண்டும். இதைத்தான் 'இளமையில் கல்' என்று ஔவைப் பாட்டி குறிப்பிட்டார். 'ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது' என்று பெரியவர்கள் கூறி வைத்தார்கள். ஐந்து வயதில் படிக்காவிட்டால் ஐம்பது வயதில் ஒருவன் படிக்கவே முடியாது. படிப்பை இளமையில் தவற விட்டுவிட்டால், எதிர் காலத்தில் வாழ்க்கையும் உங்களைத் தவற விட்டுவிடும். எனவே, நன்றாகப் படியுங்கள்; நாள்தோறும் பள்ளிக்குச் செல்லுங்கள்; ஆசிரியர்கள் சொல்லிக் கொடுப்பதைக் கேளுங்கள்; அதோடுகூட அன்றாடம் வானொலி உங்களுக்குச் சொல்லிக் கொடுப்பதையும் கேளுங்கள். பள்ளிக்கு வராமல், பாடம்படிக்காமல், வானொலியைக் கேட்காமல், ஓணான் பிடிக்கப் போகாதீர்கள்; பன்றியை விரட்டச் செல்லாதீர்கள்; பம்பரம் விடப் போகாதீர்கள்; பட்டம்பறக்க விடச் செல்லாதீர்கள்; கழுதை வாலில் கயிற்றைக் கட்டி விரட்டி அடிக்காதீர்கள்; நாயைக் கல்லால் அடித்துத் துரத்தாதீர்கள். கல்வியில் கவனம் செலுத்துங்கள்.

இளஞ்சிறார்களே! பள்ளிக்கூடத்தில் உங்கள் ஆசிரியர்கள் புத்தகங்களைக் கொடுத்து உங்களைப் படிக்கச் சொல்லுகிறார்கள். கரும் பலகையில் எழுதிக் காட்டுகிறார்கள். படங்களைக் காட்டி விளக்குகிறார்கள். கருவிகளைக் கொண்டு பலவும் செய்து காட்டுகிறார்கள். காட்சிப் பொருள்களைக் காட்டி உணர்த்துகிறார்கள். இவற்றையெல்லாம் செய்து உங்களுடைய அறிவை வளர்க்கிறார்கள். பெற்ற அறிவை வைத்துக் கொண்டு அதனைச் சொல்லிக்காட்டவும் செய்து காட்டவும் நீங்கள் பழக வேண்டியிருக்கிறது

எல்லாவற்றையும் அறிந்து கொள்வதே அறிவாகும்; அறிந்த அறிவை வெளிப்படுத்துவதே ஆற்றலாகும். அறிவையும், ஆற்றலையும் ஒழுங்குபடுத்திச் சீராக்கிச் செம்மைப்படுத்திப் பண்படுத்துவதே பண்பாடு ஆகும்.

குழந்தைகளே! நீங்கள் பள்ளிக்குப் படிக்கச் செல்வது எதற்கு என்றால், உங்கள் அறிவை வளர்க்கவும், ஆற்றலைப் பெருக்கவும், பண்பாட்டைச் சேர்க்கவும் ஆகும்.

நீங்கள் பள்ளிகளில் பெறும் கல்விக்கு மேலும் துணைபுரியவே வானொலிக் கல்விப் பயிற்சி வந்துள்ளது. வானொலிக் கல்விப் பயிற்சி நீங்கள் பாட நூலில் படித்த அறிவை மேலும் தெளிவுபடுத்தும்; பரவலான கருத்துக்களை உங்களுக்குத் தரும்; உங்கள் கல்வியின் தரத்தை உயர்த்தும்; சிறந்த ஆசிரியர்களைக் கொண்டு பாடஞ் சொல்லிக் கொடுக்கும்; உங்களுடைய ஐயப்பாடுகளைப் போக்கும்; உங்களுடைய அறியாமையை நீக்கும்.

இனி வாரந்தோறும் இரண்டு நாட்கள் வானொலி நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்படும். ஒவ்வொரு திங்கட்கிழமையும், புதன் கிழமையும் நடுப்பகலில் 2 மணி 10 நிமிடங்கள் முதல் 2 மணி 30 நிமிடங்கள் வரை கல்வி நிகழ்ச்சிகளை நீங்கள் கேட்கலாம். நீங்கள் தவறாது கேளுங்கள்; கேட்டுக் குன்றாத பயன் பெறுங்கள்.

நீங்கள் முறையாகக் கேட்டு வந்தால், புத்தம் புதிய அறிவுரைகளையும், தெளிவுரைகளையும், கருத்துரைகளையும் கேட்டுப் பயன் பெறலாம். உடல் நலம் பேணும் முறைகள் உங்களுக்குச் சொல்லிக் கொடுக்கப்படும். வியப்பூட்டும் அறிவியல் செய்திகள், களிப்பூட்டும் பிறமாநிலக் கதைகள் ஒலிபரப்பப்படும்.

சிறுவர் சிறுமியர்களே! உங்களுக்குப் புரியாத போது ஆசிரியர்—ஆசிரியைகளிடம் விளக்கம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். ஆசிரியர்களும் வானொலி நிலையத்தாரைக் கேட்டு ஐயப்பாடுகளையும், அறியாப்பாடுகளையும் போக்கிக் கொள்ளலாம்.

ஆசிரியர்கட்கு

தொடக்கப் பள்ளியிலுள்ள ஆசிரியர்கள் இவ்வாய்ப்பினை நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும். வானொலிப் பெட்டிகள் உள்ள தொடக்கப் பள்ளிகள் இந்த நிகழ்ச்சிகளைத் தவறாது கேட்க வேண்டும். வானொலிப் பெட்டிகள் இல்லாத தொடக்கப் பள்ளிகளிலுள்ள ஆசிரியர்கள் பெற முயல வேண்டும். ஆங்காங்குள்ள கொடை வள்ளல்கள் வானொலிப் பெட்டிகளை நன்கொடையாகப் பள்ளிகளுக்கு வழங்க முன் வரவேண்டும்.

பள்ளிப் பாடத் திட்டத்தில் வானொலிக் கல்விப் பயிற்சித் திட்டமும் இடம் பெறும்படி ஒவ்வொரு துவக்கப் பள்ளியின் தலைமை ஆசிரியரும் பார்த்துக் கொள்ள வேண்டும். அப்பொழுது தான் கல்வி ஒலிபரப்பின் முழுப் பயனையும் நம் குழந்தைகள் பெற முடியும். குழந்தைகளின் எதிர்காலம் நலம் பெற இந்த ஆண்டின் கல்வி ஒலிபரப்பு நிகழ்ச்சியை மிக்க மகிழ்ச்சியோடு துவக்கி வைக்கிறேன்.

நன்றி! வணக்கம்! வாழ்க!

(வானொலி உரை)

அயல்நாட்டுப் பயணம்—ஏன் ?

முன்பெல்லாம் காசிக்குப் போகிறேன், திருப்பதிக்குப் போகிறேன் என்பார்கள். இப்படி இருக்க இந்த நாட்டில் வாரத்துக்கு வாரம், மாதத்துக்கு மாதம் அமெரிக்கா போகிறேன்—ரஷ்யாவுக்குப் போகிறேன் என்று கூறப்படுவதைக் கேட்கிறோம்—நம்நாடு எந்த அளவு முன்னேறியுள்ளது என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டாகும்.

காசிக்குப் போகிறவர்களிடம் மறக்காமல் கங்காதீர்த்தம் கொண்டு வாருங்கள் என்பார்கள். பழனியாயிருந்தால் பஞ்சாமிர்தம் கொண்டு வரும்படிச் சொல்லுவார்கள்.

ரஷ்யாவுக்குப் போகும் நமது நண்பர்களிடம் நாம் என்னென்ன கேட்போம். எப்படி அந்த நாட்டில் ஆட்சி அமைந்துள்ளது? அங்கு மாநகராட்சிகள் எப்படி அமைந்துள்ளன? எப்படி அந்த நாட்டுக் குழந்தைகள் எந்த அளவு மகிழ்ச்சியோடு இருக்கின்றன? இதையெல்லாம் தெரிந்துகொள்ள நாம் விரும்புவோம்.

உலகம் எப்படி நடக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள நம்மிடம் நிரம்ப ஆர்வம் உள்ளது.

பக்கத்து வீட்டுக்காரன் எப்படி இருக்கிறான் என்பதைக்கூடத் தெரிந்துகொள்ளாதது பழைய காலப்பழக்கம். இன்று நெடுந்தூரத்து நாடுகளானாலும் அங்கே மக்கள் எப்படி வாழ்கிறார்கள் என்பதை நேரில் தெரிந்துகொள்ள விழைகிறோம். அந்த நாட்டில் என்னென்ன விந்தைகள் உள்ளன என்பதை அறிய விரும்புகிறோம். அத்தனை ஆர்வம் உள்ளது. அங்கு காணுகின்றவற்றைத் தெரிந்தவகையில் புகுத்தலாம் என்பதை நம்மவர்கள் தெரிந்துகொள்ள இந்த அயல்நாட்டுப் பயணங்கள் துணையாக இருக்கும்.

—பேரறிஞர் அண்ணா

(மாநகராட்சி உறுப்பினர்களை சோவியத்நாட்டுக்கு வழியனுப்பும் விழா)

அடி தொழுது விடை பெறுகிறேன்

“என்னை அடிமை கொண்ட அன்பு உள்ளங்களே! உங்கள் அடிதொழுது விடை பெறுகிறேன். விரைவில் திரும்பி வந்து உங்களை மீண்டும் சந்திக்கிறேன்!”

ஒலிபெருக்கியின் முன்னால் நின்று இந்த மூன்று சொற்றொடர்களைச் சுருக்கமாகக் கூறி முடித்தார் தமிழக முதல்வர். அதற்குள் அவர் நா தழுதழுத்தது; கண்களில் மல்கிய நீரைக் கறுப்புக் கண்ணாடி மறைத்தது. பல்லாயிரக் கணக்கான மக்களின் அன்பு வெள்ளத்தில் மூழ்கித் திளைத்துத் தத்தளித்துக் களைத்திட்ட சோர்வு அவர் நடையில் தெளிவாகத் தெரிந்தது. மேடையிலிருந்து இறங்கக் காலடி எடுத்து வைத்திட்டபோது மலர் மாரி பொழிந்த மக்கள் ''வெளிநாட்டுப் பயணம்—வெற்றி பெறுக'' என முழக்கிய வாழ்த்தொலி விண்ணில் எதிரொலித்தது.

1.7.70 மாலை 6-20 மணி. பம்பாய் செல்லும் விமானம் புறப்பட்டிருக்க வேண்டிய நேரம். மாலை சூட்டிட வரிசையில் ஏறி வருவோர் தொகை அப்போதுதான் ஓரளவு குறைந்தது. தயங்கிடும் கால்களில் விறுவிறுப்பை ஏற்றிக் கொண்டு முதல்வர் தம்மைச் சுமந்து பறந்திடக் காத்து நிற்கும் விமானம் நோக்கி விரைந்து நடைபோட்டார். கட்டுகளைக் கடந்து மீறி மக்கட் பெருங்கடலின் அலைகள் விமான தளமெங்கும் நிறைந்தன. விமானப் படிக்கட்டுகளில் ஏறி நின்ற முதல்வரும் அவர்தம் துணைவியாரும் கரங்களை உயர்த்தி அசைத்தபோது ஆங்குக் குழுமி நின்றோர் அனைவருமே அவ்வாறு செய்தனர்.

கார்கள் ஊர்ந்தன!

உள்ளே நுழைந்த முதல்வர் மீண்டும் ஒருமுறை வெளியில் வந்து நின்று அன்னை பூமியைக் கண்ணால் தழுவி நிறைந்த மனத்துடன் புகுந்திடவும் விமானம் புறப்பட்டது. வந்து இருந்த யாவரும் தங்கள் இதயத்தை பறிகொடுத்த உணர்வுடன் இல்லந்திரும்பினர். இதற்கு முன்னர் ''யாருக்கும் இவ்வளவு சிறப்பான வழியனுப்பு விழா நிகழ்ந்ததில்லை!'' என மக்கள்பேசிச் சென்றதை எதிரொலிப்பது போல் இந்தியன் எக்ஸ்பிரஸ், மெயில், சுதேசமித்திரன் போன்ற ஏடுகளும் செய்தி வெளியிட்டன. அன்றைய தினம் நிகழ்ந்த பல புதுமைகளையும் கோடிட்டுக் காட்டின. மாலை 4 மணிக்குக் கோபாலபுரத்திலிருந்து புறப்பட்ட கார்களின் ஊர்வலம் (உண்மையில் கார்கள் ஒவ்வோரடி

மாக வளர்ந்துதான் வந்தன!) மீனம்பாக்கம் அடைந்திட ஏறத்தாழ இரண்டு மணிநேரம் ஆனதும் விந்தைதானே!

மேதகு ஆளுநர் சர்தார் உஜ்ஜல் சிங், முதலமைச்சர் காரினின்று இறங்கியதும் முதலாவதாக ஆரத்தழுவி மலர்மாலை சூட்டினார். பின்னர் மரபு குன்றாமல் அமைச்சர்களும், சட்டப்பேரவைத் தலைவரும், பிறரும்! தாங்கள் கொண்டு வந்த மாலை வீணாகி விடுமோ எனக் கவலையுற்ற எளிய மக்களுக்கும் காவல் துறையினர் வாய்ப்புத் தந்து பெருமை பெற்றனர்.

சொந்தத் தொகுதியான சைதாப்பேட்டையில் எப்போதுமே கலைஞருக்குத் தனிச் சிறப்பு. அங்குதான் அவர் திறந்த ஜீப்காரில் ஏறினார். மனங்குளிர மக்களின் வரவேற்பினை ஏற்றார். சாலை ஓரத்து மக்களும் இடரின்றிக் கண்டு களித்து விடையளித்திட நல்ல முறையில் வேலி அமைத்திருந்தனர். எந்த விதமான தொந்தரவுமின்றி எல்லா ஊர்திகளும் சென்றன.

முதல் பயணம்

முதன் முறையாக வெளிநாடுகளுக்குச் செல்லும் தமிழக முதல்வர், தமது பயணம் தொடங்குவதற்கு ஒரு கிழமை முன்னதாகவே மிகவும் சுறுசுறுப்பாக இயங்க வேண்டியதாயிற்று. அண்மையில் தம் இடது கண்ணிலே இருந்து வந்த தொந்தரவின் காரணமாக வெளியூர்ச் சுற்றுப் பயணங்களை மேற்கொள்ளாமல் இருந்து வந்தவர், கடந்த 23.6.70 அன்று மாலையில் விழுப்புரம் சென்றார்.

விழுப்புரத்தில் தென்னார்க்காடு மாவட்டச் சார்பில் ஒரே மேடையில் சுமார் 20 ஆயிரம் பேருக்கு ஒரே சமயத்தில் நிலப்பட்டா வழங்கும் நிகரற்ற விழா மிகச் சீரோடும் சிறப்போடும் நடைபெற்றது. 8154 ஏக்கர் விவசாய நிலம் 5859 பேருக்குத் தரப்பட்டது. மேலும் 14,144 பேருக்கு வீட்டு மனைப் பட்டாவும் வழங்கப்பட்டது. இது தவிர அந்த மேடையிலேயே நிலவள வங்கியின் சார்பில் 45 பேர்களுக்குக் கிணறுகள் வெட்டவும், ''பம்பு செட்''டுகள் அமைக்கவும் 94,550 ரூபாயை முதல்வர் வழங்கினார்.

சட்டத்தின் துணையோடு பெறக்கூடிய நிலப்பட்டாதான் நிலைத்து நின்று ஏழை மக்களுக்குப் பயன்தர முடியும். அல்லாமல் வேறு ஏதாவது இயக்கங்கள் வாயிலாகவோ வன்முறையாலோ நிலங்களைப்பெறுவது ஏற்றதாகாது, என்பது நல்ல முறையிலே முதல்வரால் விளக்கிக் கூறப்பட்டது. அன்று விழுப்புரம் நிகழ்ச்சிகள் முடிந்ததும், முதல்வர் தமது சொந்த ஊராகிய திருவாரூருக்குப் புறப்பட்டார். அங்கும் தமது பிறந்த ஊரான திருக்குவளையிலும் 24.6.70 அன்று சிறப்பான பல நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார்.

காட்டூரிலுள்ள தமது அருமை அன்னையாரின் சமாதிக்குச் சென்று வணக்கம் செலுத்தித் தமது அன்றைய நிகழ்ச்சிகளைத் துவக்கினார்.

திருவாரூரில் ஒரே மேடையில் முப்பெரும் விழா நடைபெற்றது. சங்கீத மும்மூர்த்திகள் பிறந்த மண்ணல்லவா? 5158 ஏழையர்க்கு நிலப்பட்டா வழங்கப்பட்டது. தஞ்சைமாவட்ட 20வது விவசாயக் கண்காட்சித் திறப்புவிழாவும், திருவாரூரில் புதிய மருத்துவமனைக் கட்டிடத்திற்கான கால்கோள் விழாவும் இனிது நடைபெற்றன. முதல்வர் அவர்கள் மகிழும் வண்ணம் மருத்துவமனைக்கான நன்கொடையும் அங்கேயே குவியத் தொடங்கியது.

பிறந்த ஊரில்...

திருக்குவளையில் இருந்த தாம் பிறந்த வீட்டைத் துவக்கப்பள்ளி நடத்துவதற்காகக் கலைஞர் அளித்துள்ளார். மேலும் அஞ்சுகம் முத்துவேலர் உயர்நிலைப் பள்ளி அங்கே அமைப்பதற்கு அரசின் ஆணை பெற்றுத் தம் சார்பில் பங்குத் தொகையினையும் அளித்து அதன் கட்டிடத்திற்குக் கால்கோள் விழாவினையும் அன்றே நடத்தி வைத்தார். ஏற்கனவே தம்மால் கட்டித் தரப்பட்ட அஞ்சுகம் முத்துவேல் தாய்சேய் நலவிடுதியின் கட்டிடத்தையும் புதுப்பித்துத்தந்தார்.

ஊரிலிருந்து சென்னை திரும்பியதும் மின்சாரத் துறை அதிகாரிகளுக்குமனைய உயர்வளித்து அவர் [illegible] இருக்க குறையினையும் போக்கினார். தமிழ் நாட்டிலுள்ள எல்லா கிணறுகளுக்கும் நீர் இறைக்க மின்கட்டணம் 9 பைசாதான் என்பதை மீண்டும் தெளிவுபடுத்தினார்.

26.6.70 அன்று சிலம்புச் செல்வர் ம.பொ.சி அவர்களது 65வது பிறந்தநாள் விழாவில் முதல்வர் கலந்து கொண்டு அந்த நல்லெண்ணம் படைத்த தமிழ்ச் சான்றோரை மனமாரப் பாராட்டி வாழ்த்தினார். முதல்வரின் பெருந்தன்மை நிறைந்த பண்புகளைச் சான்றுகளினால் எடுத்துக் காட்டி அப்பேர்ப்பட்டவர் வெளிநாடு செல்லும்போது அனைவருமே வழியனுப்ப வரவேண்டும் என்று தெரிவித்தார் ம.பொ.சி. அவர்கள்.

யுனெஸ்கோ மன்றம்

ஐக்கிய நாடுகள் கல்வி–பண்பாட்டு மன்றம் என்ற ஒன்று திரு க. அறிவழகன் அவர்களைத் தலைவராகக் கொண்டு இயங்கி வருகின்றது. இந்தக் கல்வி ஆண்டில் இது, தமிழுக்குச் சிறப்புப் பணி புரிந்த பலரைப் பாராட்டத் திட்டமிட்டு, முதலமைச்சரின் வயதைக் குறிக்கும் முறையில், 47 பேரைப் பரிசுக்குரியவர்களாகத் தேர்ந்தெடுத்துள்ளது. அதிலே முதலமைச்சரும் ஒருவர். மேலும் அவரைக் குறித்து இயற்றப் பெற்ற ''கலைஞர் கவிமணி மாலை'' என்ற நூல் ஒன்றினையும் 27.6.70 அன்று ராஜாஜி மண்டபத்தில் வெளியிட ஏற்பாடு செய்திருந்தது இந்த யுனெஸ்கோ மன்றம்.

மத்திய அமைச்சர்கள் புகழுரை

மத்திய அரசாங்க அமைச்சர்களான டாக்டர் திரிகுணசென்னும், பேராசிரியர் ஷேர் சிங்கும் இந்த விழாவில் சிறப்புறக் கலந்து கொண்டு தமிழக முதல்வருக்குப் புகழாரம் சூட்டி மகிழ்ந்தனர். ''திரு கருணாநிதி ஒப்புவமையற்ற தலைவர். மிகக் குறைந்த காலத்தில் தமிழகத்தில் அனைத்துத் துறைகளிலும் முன்னேற்றத் திட்டங்களைத் தந்து, தமது திறமையையும் உறுதியான தன்மையினையும் வெளிப்படுத்தியுள்ளார்'' என்று திரிகுணசென் அவர்கள் பாராட்

டினார்கள். திரு ஷேர் சிங் அவர்களோ அடுக்கு மொழியிலேயே புகழ்ந்தார்கள். ''கருணாநிதி அருங்கவி—அரசியல்வாதி; நூலறிவாளர்—அரசியல் நுட்பவாதி; நடிகர்—நிர்வாகி; கூத்தாசிரியர்—குடியாட்சியாளர்; திறன்மிகு தந்திரசாலி. அவரது புகழ் தமிழ்மொழி போல் நீண்ட நெடுங்காலம் வாழ்க!'' என்று.

28.6.70 அன்று ராஜாஜி மண்டபத்தில் ஊராட்சி ஒன்றிய மாமன்ற மாநாட்டை உள்ளாட்சித் துறை அமைச்சர் துவக்கி வைத்துப் பஞ்சாயத்துத் தலைவர்களை மக்களே நேரடியாகத் தேர்ந்தெடுப்பதுபற்றி விளக்கமுரைத்தார். அன்று மாலை சிறப்புரையாற்ற வந்தார் முதல்வர் அவர்கள். ஊராட்சி ஒன்றியத் தலைவர் அளித்த வரவேற்பினைப் பெற்றுக் கொண்டு, பல்கலைக்கழக நூற்றாண்டு விழா மண்டபத்திற்கு விரைந்தார்.

திரையுலகப் பெருவிழா!

தமிழகத் திரைப் படத்துறையினர் சார்பில் திரு ஏ. எல். சீனிவாசன் அவர்கள் ''கருணாநிதி டிரஸ்ட்'' ஏற்படுத்துவதற்காக ஒரு லட்சம் ரூபாய் திரட்டியிருந்தார். அதனை அளிக்கவும், தமிழக முதல்வரது பிறந்தநாள் விழா எடுக்கவும், வெளிநாடு செல்வதற்கு வாழ்த்தி வழியனுப்பவும் அங்கே விழா நடைபெற்றது. கலையுலக நண்பர்கள் மனந்திறந்து பேசினர். அன்னையார் அஞ்சுகம் அம்மையை நினைவு கூர்ந்தும், திரும்பி வரும்போது ஒளி படைத்த கண்ணோடு வருமாறும் வேண்டினர். வயதான நடிகர்களைப் பாதுகாக்கும் கருத்தொன்றை முதல்வர் தெரிவித்தார்.

பரந்த மனம்

அடுத்த நாள் 29.6.70 அன்று சென்னை மாநகராட்சி, தமிழக முதல்வருக்குச் சிறப்பான வரவேற்பு ஒன்றினை அளித்தது. பரந்த மனப் பான்மைக்குப் பற்பல சான்றுகளை எடுத்து உரைத்தார் தமிழக முதல்வர் அவர்கள். அடுத்து, நலம் நாடுவோர் குழுவினர் சார்பில் சீரிய விழா ஒன்று சென்னை அசோகா ஓட்டலில் நடைபெற்றது. பெரியார் அவர்களும், குன்றக்குடி அடிகளாரும், தமிழ்ச்சான்றோர் பலரும், அமைச்சர் பெருமக்களும் கலந்து கொண்ட அந்த வழியனுப்பு விழா உணர்ச்சிமயமாக அமைந்திருந்தது. உள்ளத்தைக் காட்டிப் பேசும் நல் விழாவாகவும் அது வாய்த்தது.

30.6.70 அன்று நெருக்கமாகப் பல நிகழ்ச்சிகள். காலையிலேயே முதல்வர் அவர்கள் கீழ்ப்பாக்கம் சென்று ராஜாஜி அவர்களைச் சந்தித்து, வணங்கி, வாழ்த்துப் பெற்றார்கள். பின்னர் குரோம்பேட்டை சென்று இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவர் காயிதேமில்லத் இஸ்மாயில் சாகிப் அவர்களைக் கண்டு விடை பெற்றார்கள். கோட்டையில் நிருபர்களைச் சந்தித்துத் தாமும், பிறகு நிதியமைச்சரும் வெளிநாடு செல்லும்போது, தமது துறைகளை யார்யார் கவனித்து வருவார்கள் என்பதற்கான விவரங்களை அளித்தார்கள். பத்திரிகைச் செய்தியாளர்களுக்குச் சிறியதோர் தேநீர் விருந்தளித்து விடைபெற்றார்கள். அதற்கு முன் தம்முடன் மேல் நாடுகளுக்கு எடுத்துச் செல்வதற்காகத் தாமே இயற்றி வெளியிட்ட நான்கு ஆங்கில நூல்களை அனைவர்க்கும் வழங்கினார். அவை (1) தி.மு.க. தோற்றமும் வளர்ச்சியும் (2) முத்துக்கள் (கவிதைத் தொகுப்பு) (3) தீச்சுடர் (சிறு கதைத் தொகுப்பு) (4) நாம் முன்னேறும் போது... (சொற்பொழிவுகள்) ஆகிய, சிறந்த அமைப்போடு கூடிய நூல்களாகும்.

சீரணி விழாவில் ''தமிழரசு''

அன்று மாலை மாநகராட்சி நேரு விளையாட்டரங்கில் சீரணி அமைச்சர் திரு என். வி. நடராசன் அவர்களும் மற்றும் சீரணித் தலைவர்களும் மிகச் சிறப்போடு ஒரு வழியனுப்பு விழா நடத்தினர். எல்லா அமைச்சர்களும், நகரப் பெரியோர்களும் இதில் கலந்து கொண்டனர். சீரணியினரின் அணிவகுப்பு கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தளித்தது போதாதென்று இறுதியில் நாவுக்கும் விருந்தொன்று களித்தனர்.



இதே நிகழ்ச்சியோடு, நமது முதல்வர் அவர்களின் நீண்ட நாளைய கனவொன்று நனவான விழாவும் இணைக்கப்பட்டது. தமிழக அரசின் பல்வேறு துறைகளின் சார்பில் ஏடுகள் பல நடத்தப்பட்டு வந்தன. இவற்றைப் பொது மக்களும் விரும்பிப்படிக்குமாறு இவை அமையவில்லை என்ற குறைபாடு இருந்து வந்தது. அதனை நீக்கும் பொருட்டு, எல்லா ஏடுகளையும் ஒருங்கிணைத்துத் ''தமிழரசு'' என்ற பெயரால் தமிழிலும் ஆங்கிலத்திலும் தனித் தனியே இரு ஏடுகள் வெளியிட விரும்பினார் கலைஞர் அவர்கள். அவற்றின் முதல் இதழை இவ் விழாவிலே வெளியிட ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது.

முதல்வர் அவர்கள் தமக்கேயுரிய நகைச்சுவை மிளிரும் பாணியில் ஆங்கிலத் ''தமிழரசு'' இதழைச் சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அவர்களிடத்திலும், தமிழ் இதழைத் திரு டாக்டர் லட்சுமணசாமி முதலியார் அவர்களிடமும் வழங்கினார்கள்.

முதல்வர் அவர்களின் சிறப்பியல்புகள்குறித்தும், மேனாட்டுப் பயணம் எவ்வளவு அவசியமானது என்பது குறித்தும் கல்வி அமைச்சர் நாவலர் அவர்களும், காயிதே மில்லத், கே. பாலசுப்ரமணிய அய்யர், சிலம்புச் செல்வர், மேயர் பாலசுந்தரம், டாக்டர் ஏ.எல். முதலியார் போன்றோர் விளக்கிப் பேசினர்.

மறுநாள் 1.7.70 காலையில் அண்ணா சதுக்கத்துக்குச் சென்று, முதல்வர் அவர்கள் மலர் வளையம் வைத்து வணங்கித், தம்மை ஆளாக்கிவிட்ட அருமை அண்ணனின் நினைவு கூர்ந்தார். அன்று பகல் முழுதும் தமது இல்லத்தில் இருந்து, மலர்மாலை சூட்டி வாழ்த்துத்தெரிவிக்க வந்த வண்ணமிருந்த நல்லெண்ணம் படைத்த அரசு அதிகாரிகள், ஊழியர்கள், உழுவலன்பர்கள், கழக நண்பர்களின் அன்பினில் ஆழ்ந்து மகிழ்ந்தார். மாலை 4 மணியளவில் மிகுந்த கட்டாயத்தின் பேரில் எஞ்சியிருந்த மக்களின் மலர் மாலைகளை விரைவாக ஏற்றுக் கொண்டு விமான நிலையம் புறப்பட்டார்.

பெற்றோர்களின் படத்துக்கும், பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவப் படத்துக்கும் மாலைகள் அணிவித்துவிட்டுக், கல்வி அமைச்சரும், உணவு அமைச்சரும் உடன் வரத் தமது காரில் ஏறி அமர்ந்தார். அவரது துணைவியாரும், சகோதரிகளும், மக்களும், மற்றவர்களும் பின்னால் பெரிய ''வேன்'' ஒன்றில் ஏறிக்கொண்டனர். பத்திரிகைச் செய்தியாளர்கள் ஆர்வத்தோடு பேருந்து ஒன்றில் அமர்ந்தவாறு பின் தொடர்ந்தே வந்தனர்.

I.O.B nurses your savings



Just as a mother takes pride in her child and nurses him with tender care, I.O.B considers it a privilege to cherish your savings, nourish them with interest and hold them in trust till you need the money.

I.O.B provides a wide variety of savings facilities to suit every one—savings bank accounts—recurring deposits — term deposits — special savings scheme for minor children.

Don't forget! Interest income up to Rs. 3000 per annum earned on savings with the bank is tax-free. So also bank deposits up to Rs. 1.5 lacs are exempt from wealth tax.

Let your savings grow with I.O.B .

INDIAN OVERSEAS BANK
Central Office: 151 Mount Road, Madras-2

IOB-5940

காஞ்சிப்பட்டு,
திருப்பதி லட்டு,
தஞ்சாவூர்த் தட்டு!

"அத்தான்! ஊருக்குப் போகிறீர்களே, தஞ்சாவூரில் ....!"

"என்ன தலையாட்டிப் பொம்மை வேண்டுமா?"

"நீங்கள் இருக்கும்போது அது எதற்கு? நான் சொல்ல வந்தது தஞ்சாவூரில் தட்டு...!"

"என்ன? தஞ்சாவூரில் எதற்குத் தட்டு? காவிரியாற்றின் கழிமுகப் பகுதியில், இப்போது முப்போகம் விளைகிறது; "கருணை" நெல் வேறு இப்போது புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டு வேளாண்மை செய்யப்படுகிறது. அப்படியிருக்க அங்கு ஏது தட்டு?"

"உங்களுக்குத் தெரியாதா? கை வேலைப்பாடு நிறைந்து, அழகு மிகுந்து, அற்புதமான பரிசுப் பொருளாகிய இந்தத் தட்டு ஒன்று வாங்கி வாருங்கள், அத்தான்!"

"அப்படியா! கட்டாயம் வாங்கிவருகிறேன்!"

பஞ்சாமிர்தம்



'பழனி' என்றதும் பஞ்சாமிர்தத்தின் இன்சுவை நம்மை ஆட்கொள்வதை நன்கு அறிவோம். இது வேறு எந்த நகரிலும் இல்லாத சிறப்பு. பஞ்சாமிர்தச் சுவையை அவனியெங்கும் பரப்புவது பழனிக்கு மட்டுமே உரிய தனிச் சிறப்பாகும். முருகப் பெருமானின் தரிசனம் பெற்றுக் கரத்திலே பஞ்சாமிர்தக் குப்பிகளை ஏந்திச் செல்வதில் தான் எத்தனை இன்பங்களைப் பெறுகிறார்கள், பழனி நோக்கி வந்து செல்பவர்கள். அத்தகைய களிப்புக்கு வித்தாக இருப்பது வாழைப்பழம் தோய்ந்த பஞ்சாமிர்தம் அல்லவா? நாள்தோறும் பல்லாயிரக் கணக்கான ரசிகர்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் அளவிற்குப் பஞ்சாமிர்தத் தயாரிப்புத் தடங்கலின்றிப் பழனியில் நடந்துவர இன்றியமையாத மூலப்பொருள், ஈரப்பசை தோய்ந்த வாழைப் பழங்களாகும். பதமாகக் கனிந்த வாழைப் பழங்கள் தேவைக்கேற்ப நாள்தோறும் கிடைத்து வருவதால் பஞ்சாமிர்தத்தின் சுவை பேணிக் காக்கப்படுகிறது.

பழனியில் கிடைக்கும் வாழைப் பழங்கள் இனத்தால்—வகையால் பல்வேறு வகைப்பட்டவை. சமவெளிப் பகுதியில் பயிராகும் பூவன், மிருசியல், பச்சைநாடான், ரஸ்தாளி வகை முதல் பழனி மலைத் தொடரில் பயிராகும் சிறுமலைப் பழம் ஈறாக, மிக உயர்ந்த பகுதியில் சாகுபடியாகும் விருப்பாட்சி இனம் வரை, பழனி நகர் கடைகளை அலங்கரிப்பது பழனிக்கே உரிய பெருமையாகும். சிறிது காலம்கூடத் தேங்காமல், புதுமை குன்றாத கனிவோடு அவ்வளவு வாழைக் கனிகளும் பஞ்சாமிர்தக் குப்பிக்குள் அடைக்கலம் கொண்டு, அதற்கு அவையேற்றும் சுவையால் உலர்ந்த கனிகளுக்குப் பழனியில் இடமில்லை என்றாகி விடுகிறது.

பழனியில் வாழைப் பழங்களின் தேவை அதிகமாக இருந்தாலு தேவையைப் பூர்த்தி செய்யும் அ வுக்குப் பழனி சமவெளிப் பகுதி வாழைச் சாகுபடிப் பரப்பு 27 ஏக்கர் அளவேயாகும். மலைப் பழ கள் அதிக அளவில் அரசோச்சு தால் சமவெளிப் பகுதிப் பழ களுக்குக் கிராக்கி குன்றி விடுகிறது. சமவெளிப் பகுதி வாழைப் பழ களைவிடச் சுவையில்—பதத்தி மலைப் பழங்கள் சிறந்து விளங்குவ தால் அவைகளுக்கே பஞ்சாமிர்தத் தில் முதலிடம் தரப்படுகிறது.

சாகுபடியாகும் சமவெளிப் பகுதி வாழைகளில் அதிக இடத்தைப் பெறுவது பூவன் வகையாகும். வியாபார முறையில் அதிக அளவில் உற்பத்தியாகும் இந்த வகை, பழத்திற்காகவே சாகுபடியாகிறது. பச்சை நாடான், ரஸ்தாளி, மிருசியல் ஆகிய வகைகள் பரவலாகப் பயிரிடப்படுகின்றன. இந்த வகைகள் அனைத்தும் நல்ல வடிகால் வசதியுடன் கூடிய வளமான மண்ணில் நன்கு பயிராகின்றன. குள்ளவகை வாழையான மிருசியல் ஏக்கர் ஒன்றில் 2600 கன்றுகள் வரை நட்டு உரிய உரங்களைக் காலத்தே இடுவ

"தேன் குடத்தில் விழுந்த ஈயும்-நானும்"

வெளிநாடு செல்லும் என்னைப் புகழ்ந்து பேசிய பாராட்டுரைகட்குப் பிறகு, அணிவிக்கப்பட்ட மாலை உபசாரங்களுக்குப் பிறகு நான் பேசுவது என்பது உள்ளபடியே கொஞ்சம் இயலாத காரியந்தான்.

ஈ ஒன்றினைத் தேன் குடத்தில் போட்டுவிட்டுக் கொஞ்சம் பற பார்க்கலாம் என்று கூறுவதும், தாங்கமுடியாத அளவுக்குப் புகழாரத்தைச் சூட்டிவிட்டுக் கொஞ்சம் பேசு பார்க்கலாம் என்று கூறுவதும் என்னைப் பொறுத்தவரையில் ஒன்றாகத்தான் தோன்றுகிறது.

ஆனால் தேன் குடத்தில் விழுந்த ஈயாக நான் மாறிவிடுவேனால் இந்த நாட்டிற்கு, சமுதாயத்திற்கு, கலை உலகிற்குச் செய்ய வேண்டிய பணிகளைச் செய்யத் தவறியவன் ஆவேன். அதனால் தேன் குடத்தில் நான் போடப்பட்டாலும் மெல்ல மெல்லச் சிறகுகளைத் தூக்கிப் பறக்க முனைகிறேன்.

முதல்வர் கலைஞர்

தென்னிந்திய திரைப்பட வர்த்தக சபை
வழியனுப்பு விழாவில்
28—6—'70

தன் மூலம் ரூ 10,000 வரை வருவாய் தேடித் தந்துள்ளது இந்தப் பகுதியிலே.

சிறுமலை இனத்தைச் சார்ந்த வாழைகள் கடல் மட்டத்திலேயிருந்து 2000 அடி முதல் 2500 அடி வரை உயரமுள்ள இடங்களில் சாகுபடியாகின்றன. இவற்றில் இருந்து வரும் வாழைப் பழங்களிலே ஈரச் சத்து குறைவு. ஆகவே அதிகநாள் சேமித்து வைக்க முடிகிறது.

விருப்பாட்சி இனத்தைச் சார்ந்த வாழைகள் 3000 முதல் 3500 அடி வரையுள்ள உயரத்தில் சாகுபடியாகின்றன. பழங்களில் ஈரம் பதம் குறைந்திருப்பதால் அதிகநாள் சேமித்து வைக்க முடிகிறது.

வாழைப் பழச் சாகுபடியில் விவசாயிகளை இந்தப் பகுதியில் ஊக்குவிப்பதற்காகத் தீவிர சாகுபடித் திட்டமொன்று திண்டுக்கல்லை மையமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கடன் வசதியும், வேளாண்மைத் துறை அலுவலர்கள் மூலம் தொழில் நுட்ப ஆலோசனைகளும் பெற்று இந்தப் பகுதி விவசாயிகள் இந்தத் திட்டத்தால் பயன் பெறுகிறார்கள்.

வாழைப் பழச் சாகுபடியை மேற்கொண்டுள்ள விவசாயிகளின் நன்மையைக் கருதியும், நாள்தோறும் வந்து செல்லும் பல்லாயிரக் கணக்கான மக்களின் விருப்பத்தை முன்னிட்டும் அரசாங்கமே ஒரு பஞ்சாமிர்தத் தொழிற்சாலையைத் துவக்கி உயர்ந்த ரகப் பஞ்சாமிர்தமும் வேறு பலவகையான பழப் பக்குவப் பொருள்களும் தயாரிக்க முன் வருவது வரவேற்கத் தக்கதாகும்.

ஒரு வீராங்கனையின் கதை

மலையோரத்தில் ஆடு மாடுகளை மேய்த்துக் கொண்டிருந்த மங்கை, அவள். மானினத்தைச் சூறையாடும் வேங்கை ஒன்று அந்த மங்கையின் பாட்டனாரின் உயிரைப் பலி கொண்டது. பசுவென இருந்த அப் பெண், பகை நடுங்கும் புலியானாள். மானிடரைக் கொன்று தின்னும் புலியினத்தை ஒழித்துக்கட்ட உறுதி கொண்டாள். மாடோட்டுவதற்குக் கோலேந்திய கரத்தில் துப்பாக்கி ஏறியது. மங்கையின் கனவும் நனவாகியது.

சென்ற மார்ச் திங்கள் 23-நாள் துப்பாக்கி சுடுவதில் சிறந்த பெண் என்ற முறையில், தமிழக முதல்வர் கலைஞரிடமிருந்து பரிசு பெற்றாள். பாராட்டுதலும் பெற்றாள்.

அந்த வீராங்கனையின் பெயர் ராம்பிரியா. மத்தியப் பிரதேசத்தைச் சேர்ந்தவள். முன்னாள் ராணுவ வீரரின் மகள்.

தாத்தாவின் மரணத்தினால் புலிகளைக் கொல்லத் துப்பாக்கிப் பயிற்சி பெற விரும்பிய செல்வி ராம்பிரியாவுக்கு மத்திய பிரதேசத்தில் அதற்குச் சரியான வாய்ப்புக் கிடைக்கவில்லை. அப்பகுதியில் வாசம் செய்து வந்த தமிழரான திரு. விநாயகத்தின் குடும்பத்தாருடன் சென்னை வந்தாள். சென்னை, காவல்துறையினர் நடத்திவரும் துப்பாக்கி சுடும் பயிற்சி முகாமில் ஒரு வாரம் பயிற்சி பெற்றாள். ·22 என்ற துப்பாக்கி (ரைபிள்) சுடுவதில் திறமையும் பெற்றாள்.

துப்பாக்கி சுடும் போட்டியில் 4-வது இடத்தைப் பெற்று, முதல்வரிடம் பரிசு வாங்கிய ராம்பிரியா தனது வெற்றிக்கு முக்கிய காரணம், சென்னை காவல்துறை அளித்த திறமையான பயிற்சியும், போலீசாரின் அன்புமே என்கிறாள்.

சென்னை காவல் துறையினரால் நடத்தப்பெற்று வரும் சிவிலியன்கள் துப்பாக்கி சுடும் பயிற்சி நிலையம் தற்காப்புக்கும், தேவையானால் நாட்டின் பாதுகாவலுக்கும் இன்றியமையாத இந்தப் பயிற்சியினைச் சிறப்புற நடத்திவருவது பாராட்டுக்குரியதாகும்.

ஒரு ஜூலை மாத மாலைப் போதில்

வானம் பொன்னூஞ்சலாகி மேகப் பிசிறுகளைத்தாலாட்டுகிறது. மழை மூட்டம்—ஆகாயதேவியின் கனவுகள்.

அலுவலகப் பணிகளை முடித்துவிட்டு மேலாளர்களின் உடனிருப்பில் எனக்குப் பிடித்தமான அந்த வேலையின் புறப்பாட்டிற்காக அனுமதி பெறுகிறேன். தொலைபேசி—தேர்தல் காலத்து வானொலியாக உற்சாகமான அந்தச் செய்தியைத் தருகிறது.

ஒரு ஜூலை மாதத்து மாலைப் பொழுதில் அந்தப் பெரியவரைச் சந்திக்கப் புறப்படுகிறேன். சாலையிலே—காற்றுத் தாதியரின் பணிவிடையில் அலுவலக வண்டி நுங்கம்பாக்கம் மரங்களின் நிழல் அமுதம் மெழுகிய சாலையில் தமிழ்க் கனவுகளோடு திரு 'தமிழகம்' சுப்பையா அவர்களின் இல்லத்தை நெருங்குகிறது.

வியர்வை அடங்கிய நிலையில் வான வியர்வையாக மழைத்தூறல்.

நவீனமுறையில் நெசவாளர்க்குப் பயிற்சி

நெசவாளர்கட்கு நவீன முறையில் பயிற்சி தருவதற்கான திட்டத்தை அரசு ஏற்றுக்கொண்டு அத்திட்டத்தின் நடைமுறை, நிரந்தரச் செலவுகட்காக ரூ. 1,90,200 ஒதுக்கி உள்ளது. இப்பயிற்சி நிலையங்களில் பல துறைகளிலும் ஓராண்டிற்கு ஆகும் செலவிற்காக ரூ. 4,08,000 அனுமதிக்கப்பட்டுள்ளது.

12 பயிற்சி நிலையங்களில் 4 மாதங்கட்குத் தற்காலிகத் தொழில் நுணுக்கப் பயிற்சியாளர் 12 பேரை நியமிக்கவும் அரசு அனுமதித்து உள்ளது.

பணியாளரின் வழிகாட்டுதலில் அவருடைய அலுவலகத்தில் அவரைச் சந்திக்கிறேன்.

அறிமுகப் பீடிகைக்குப் பிறகு கண்ணாடிப் பின்னிருப்பில் மின்னும் அந்த அறிவு ஜுவாலையின் கண்கள்—அவருடைய அனுபவச் சுவை தேங்கிய உரையாடல் தொடர்கிறது.

உலக நாகரிகத்தின் தலைவாசலாகத் திகழ்ந்த தமிழ் மறவர் நாட்டின் அமுத மொழியில் ஆய்வுகள் நிகழ்த்த, பாரிசில் நடைபெறவிருக்கும் உலகத் தமிழ் மாநாடு பற்றிய சிந்தனைகள் கேள்வி பதிலில் வடிவம் கொள்கின்றன.

கோலாலம்பூரிலும், சென்னையிலும், நிகழ்ந்த முன் மாநாடுகளைப் பற்றி ஒரு கம்பீரமான பெருமிதத்தோடு அவர் விவரிக்கிறார்.

''தனிநாயக அடிகளும், பில்லியோசாவும் ஆற்றிய பணிகள் என்னை மெய்சிலிர்க்கவைக்கின்றன.

''தமிழ்த் துறை ஆராய்ச்சிப் பேரறிஞர்கள் ஆராய்ச்சி பற்றிக் கலந்து பேசுவதற்கான வாய்ப்பினை உருவாக்குவதே இந்த மாநாட்டின் நோக்கம்'' என அவர் கூறுகிறார்.

பழந்தமிழர் வெளிநாட்டுத் தொடர்பு, சமூக அமைப்பு, பழந்தமிழகப் பேரரசுகள், புதுக்காலம், இசை, மொழி பெயர்ப்பு, மொழி நூல் ஆகிய பல்வேறு துறை ஆய்வுகளில் கவனம் செலுத்தப்படுவதாகவும் அவர் கூறுகிறார்.

இந்த ஆய்வுகளின் மூலம் தமிழ்க் கலைகளின் தனித்தன்மை உலகின் முன் அறிமுகப்படுத்தப்படுகிறது. தமிழ்க்கலை வடமொழிக் கலைகளோடு தொடர்பற்ற, ஆனால் அவைகளுக்கு இணையான ஒரு கலை என்பது பில்லியோசாவின் கருத்தாகும்.

இந்த உண்மையை நிறுவுவதற்கும், நம் மொழியின் பெருமையை ஆதாரத்தோடு உலகிற்கு அறிவிப்பதற்கும் International Institute of Tamil Studies எனும் நிலையான அமைப்பினை நிறுவத் தமிழக அரசு ஒப்புதல் அளித்துவிட்டது.

இவ்வமைப்பின் உருவாக்கத்திற்கான எல்லாச் செலவுகளையும் ஏற்றுக்கொள்ளத் தமிழக அரசு முன்வந்துள்ளது. 40 ஏக்கர் நிலமும், கட்டிடச் செலவுக்காக அரைக் கோடி ரூபாயும் தர ஒப்புதல் அளித்துள்ளது.

பெரும்பாலும் இவ்வமைப்பு 1971ல் செயல்படத் தொடங்கும். அண்ணா அவர்கள் இதை நிறுவுவதில், அடையாறு மருத்துவ மனையிலிருந்தபோது கூட உற்சாகம் காட்டினார்கள். ஐ.நா.வின் யுனெஸ்கோ மன்றம் இதற்காக இதுவரை ரூ. 60,000 தந்துள்ளது.

இவ்வமைப்பின் மூலம் தமிழின் பல்வகைக் கலைகளின் ஆய்வு, இ

ஞய்வு, நாட்டுப் பாடல் தொகுப்பு, புத்திலக்கிய மதிப்பீடு முதலிய பல முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

இவ்வமைப்பு பல்கலைக் கழகங்களில் இடம் பெறாத ஆய்வுத் துறைகளை வளர்க்கும்.

வெளிநாட்டோர்க்குத் தமிழ் கற்பிக்கும் ஜெர்மன், பின்லாந்து, சுவீடன் அறிஞர்கள் விரைவில் இங்கு வந்து கற்பர். இதற்காக யுனெஸ்கோ ரூ 25,000 ஒதுக்கியுள்ளது. 'யுனெஸ்கோ' ஒரு மொழிக்காக இவ்வளவு தொகையைத் தனது வரலாற்றில் இதுவரை ஒதுக்கியதில்லை. இப்போதுதான் இந்தி, தெலுங்கு, ஒரிய மொழிகட்கும் இத்தகைய அமைப்பினை நிறுவி உதவி பெற அங்குள்ளவர்கள் முயல்கிறார்கள்.

இச்செய்திகளைக் குறிப்பிட்ட திரு சுப்பையா அவர்கள் இந்த அமைப்பினை ஏற்படுத்துவதில் அண்ணா காட்டிய ஈடுபாட்டிற்கு, இணை சொல்ல முடியாதென்று உருக்கத்தோடு கூறினார்.

திராவிட மொழியின் கலைகள் உலகின் மூத்த கலைகள் எனும் உண்மை, தெளிவான ஆய்வுகள் மூலம் நிறுவப்பட வேண்டுமென்பதே தமது வாழ்வின் கனவாகும் என்று திரு சுப்பையா குறிப்பிட்டார்.

மொகஞ்சோதரா — ஹாரப்பா நாகரிகங்கள் ஆரிய இனத்திற்குரியன என இடையிலே ஏற்பட்ட ஆராய்ச்சிக் குழப்பம் முறியடிக்கப்பட்டுவிட்டதை அவர் சுட்டிக்காட்டினார்.

அங்கே உள்ள எழுத்துக்களைக் கம்ப்யூட்டர்கள் மூலம் ஆய்ந்த ரஷ்யர்கள் அவை திராவிடக் கலாச்சாரத்திற்கே உரியவை என நிறுவிவிட்டனர். பின்லாந்து அறிஞர் நால்வர் தமது ஆய்வுகளின் மூலம் ரஷ்யர்களின் முடிவே சரியெனக் கண்டனர்.

எனவே தமது கனவு நிறைவேறும் என இவர் நம்புகிறார்.

சமஸ்கிருதத்தைப் போலத் தமிழை உலக அரங்கில் நாம் அறிமுகப்படுத்தவில்லை எனக் கூறும் இவர், செக். நாட்டுத் தமிழறிஞர் கமில் சுவலபில்கூட முதலில் சமஸ்கிருதம் கற்று, அம்மொழியிலுள்ள திராவிட நாகரிகக் குறிப்புகளால் உந்தப்பட்டு அதற்குப் பிறகு தமிழ் கற்றதாகக் கூறுகிறார்.

குலசேகரப்பட்டினத்தில் பிறந்த இவர் இளம் வயதிலேயே தமிழால் கவரப்பட்டுக் குறள், சிலப்பதிகாரம் ஆகிய நூல்களை நேசித்தார்.

தமிழின் மொழி அமைப்பு linguistic Structure of Tamil இவரைப் பெரிதும் கவர்வதாக இவர் கூறுகிறார்.

ராயிஸ் எனும் மேல்நாட்டறிஞர் கி.மு. 2000இலேயே ஹீப்ருமொழி தமிழிலிருந்து சொற்களைக் கடன் வாங்கியதாக நிறுவியுள்ளார்.

ரஷ்ய ஆய்வர்கள் பிலிப்பைன்சிலுள்ள 'டெகலாக்' மொழி தமிழிலிருந்து பிறந்ததாகக் கருதுகின்றனர். எனவே உலகின் பழம் கலாச்சாரம் திராவிடக் கலாச்சாரமேயாகும். இந்த உண்மை தெளிவாக நிறுவப்பட வே உலகத் தமிழ் மாநாடுகள் பயன்பட வேண்டுமென கருதுகிறார்.

தமிழக அரசின் மாநில இக் கொள்கையினை ஆழமாக கும் இவர் 'தமிழரசு' இத நாட்டாரையும், கடல் வாழும் தமிழ் நெஞ்சங்களை இக்க வேண்டுமென விரும்

இவ்வேட்டில் அரசின் களை வெளியிடுவதோடு நம களின் தேவையையும் விளக்க வே மென விரும்புகிறார்.

ஒன்றரை மணி நேர இ நேரத்தின் [illegible] கிறது.

வெளியே பூச்சிதறலாக துளிகள். அந்தப் பெரிய சந்திக்கும் வாய்ப்பைத் தந்த மாதத்து மாலைப் பொழுதை நினைவு. மழை [illegible] விருந்து [illegible]

அந்நாளே எனக்குப் பொன்னாள்!

இதுவரை செய்திருக்கிற காரியங்களாலேயே இராம வின் குறைகள் முற்றிலும் தீர்ந்துவிட்டன; குறைவேயி என்ற எண்ணத்தோடு நாங்கள் நிம்மதியும் மனநிறை பெற்றிடவில்லை.

நீங்களெல்லாம், அழுக்கற்ற தூய வெள்ளை ஆடை அணிந்து-ஒளிமயமிலும் கண்களோடும் பிரகாசமான முகத்தோ மலர்ந்த வதனத்தோடும் நிம்மதியாக வாழ்கின்றோம் என் அறிவிக்கும் முறையில் என்று புன்னகைபோடிருக்கிறீ அந்நாளே எங்களுக்குப் பொன்னாள். அந்த நிலையை உருவா தான் இந்த அரசு விரும்புகிறது.

முதற்கட்டம்—இரண்டாவது கட்டம்—மூன்றாவது கட் என்று படிப்படியாக நடைபெறுகிறது. இதோடு பணி முடிந் டது என்று எங்களை நாங்களே ஏமாற்றிக்கொள்ளவோ, களையும் ஏமாற்ற நாங்கள் தயாராக இல்லை.

கூரப்பட்டு ஊராட்சி மன்ற
கலைஞர்
21—4—'68

அழுகின்ற குழந்தை அதிக நாள் வாழும்!

குழந்தை அழுகிறதா? ஆனந்தப்படுங்கள்!

குழந்தை அழுவது அதன் வளர்ச்சிக்கு ஓர் அருமையான உடற்பயிற்சி ஆகும். குழந்தை அழும்பொழுது அதன நுரையீரல்கள் திறக்கின்றன; மார்பகம் விரிவடைகின்றது; இரத்த ஓட்டம் சுறுசுறுப்படைகிறது.

ஆனால் இது குழந்தை பிறந்த சில மாதங்களுக்கு மட்டுமே பொருந்தும். பின்னர், பசியோ தாகமோ அன்றி வலியோதான் குழந்தையின் அழுகைக்குக் காரணமாகும்.

அரசிடம் தேவையில்லை. அது உங்கள் வீட்டுத் தோழன்! தனி ஒருவர் பொறுப்பிலோ, கூட்டுப்பொறுப்பிலோ தாராளமாக யாரும் பெற்றுக் கொள்ளலாம்; தடைகள் ஏதுமில்லை. இன்ன கம்பெனியைச் சார்ந்ததைத்தான் பெற முடியும் என்பதல்ல, எந்தக் கம்பெனியைச் சார்ந்ததாயினும், எந்நாட்டு உற்பத்தி வகையாயினும், விவசாயிகளின் எண்ணப்படி பெற விவசாயி, செய்ய வேண்டியது இக் கழகத்தின் துணை விவசாயப் பொறியாளரிடமிருந்து விண்ணப்ப மனுவைப் பெற்று, பூர்த்தி செய்து, தேவையான சிட்டா, அடங்கல், வில்லங்கச் சான்றிதழ்களுடன் அனுப்பிவைக்க வேண்டியதுதான். மாற்றுரிமையில்லாத வகையில் ரூ. 37,500க்கு சால்வன்ஸி சான்று, தாசில்தார் ஒப்பம் பெற்றுக் கொடுத்திடவேண்டும். இருப்பு நிலைக்கேற்ப, தொகைக்கேற்ப, விவசாயி தனக்குப் பிடித்தமான டிராக்டரைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். தவணை முறை ஒப்பந்தமும், அடமான ஏற்பாடுகளும், அவ்விவசாயி இக்கழகத்திற்குச் செய்துதர வேண்டும். அத்துடன் கட்ட வேண்டிய மீதித் தொகைக்கான ஒப்புதலையும்

ஏனைய பணிகள்

டிராக்டர் மட்டுமின்றித் தவணை முறையிலேயே, ஆயில் எஞ்சின்களையும், மின்விசை மோட்டார் பம்பு செட்டுகளையும் வேளாண்மைத் தொழில் கழகம் வழங்கி வருகின்றது. எந்தவித லாபமும் இன்றி, அடக்கவிலை மதிப்பீட்டிற்கே அளிப்பது இங்கு குறிப்பிடத் தக்கதாகும். பம்பு செட்டின் மதிப்பீட்டைப் போல் இருமடங்கு மதிப்புள்ள நிலத்தை விவசாயி பெற்றிருக்க வேண்டும். இவ்வாறு பம்பு செட்டிற்காகப் பெறப்படும் கடனை, ஏழு ஆண்டுகளில் ஒத்த தவணைகளில் ஆண்டிற்கு 8½ சதவீதவட்டியுடன் திருப்பித்தர வேண்டும். பம்புசெட்டிற்கான விண்ணப்ப மனுவை சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து யூனியன் கமிஷனரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். மின்சாரம் அளிப்பதற்கான ஒப்புதல் பெற்றவுடன், பம்புசெட் அளிக்கப்படுகின்றது.

திட்ட இலக்கும் வெற்றி நிலையும்

வேளாண்மைத் தொழிற் கழகம், தொடக்க ஆண்டான 1968-69ல் ரூ. 3,36,50,000 மதிப்புள்ள 10,000 பம்புசெட்டுகளும், 300 டிராக்டர்களும், 30 இயந்திரக் கலப்பைகளும், தவணை முறையில் விவசாயிகளுக்கு வழங்கிட வேண்டும் எனத் திட்டமிட்டது. தலைமை இயக்குநர், தனது அலுவலர்களது துணையோடு தமிழகத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலும் நான்கு அல்லது ஐந்து முக்கிய பகுதிகளில் முகாமிட்டுப் பம்புசெட்டிற்கான கடனை உடனுக்குடன் அவ்விடத்திலேயே வழங்கினர். தொடக்க ஆண்டின் இறுதிவரை ரூ. 28 லட்சம் மதிப்புள்ள 87 டிராக்டர்களும், ரூ 92.56 லட்சம் மதிப்புள்ள 3,800 பம்புசெட்டுகளும் வழங்கப்பட்டன. பெர்கூசன், பி. 275, இந்துஸ்தான், எஸ்கார்ட், டி. டி. 14-பி ஆகிய டிராக்டர் வகைகள் இதில் அடங்கும். இரண்டாம் ஆண்டான 1969-70இல் ரூ 31.63 லட்சம் பொறுமானமுள்ள 98 உள்நாட்டு டிராக்டர்களும், ரூ 68,000 மதிப்புள்ள யு-500 டிராக்டர் 5ம், ரூ 31,400 மதிப்புள்ள ஸெட்டார் டிராக்டர் 2ம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன. 350 ரஷிய டிராக்டர்கள் தவணை முறையில்லாது, முழுத் தொகைக்கு விற்கப்பட்டன. அத்துடன் 5893 பம்பு செட்டுகளையும் வழங்கியுள்ளது.

காணக் கிடைக்காத பம்பு செட்!

உலகத்திலேயே உயர்ந்த ஒரு பம்பு செட் உங்களுக்குள்ளேயே ஒளிந்திருக்கிறது.

அதுதான் உங்கள் இதயம்!

கைப்பிடி அளவே உள்ள இந்த பம்பு செட் வேலை செய்ய வெளியிலிருந்து மின்சாரம் வரத்தேவையில்லை!

மிகவும் மென்மையானதாக நீங்கள் எண்ணிக் கொண்டிருக்கும் உங்கள் இதயம் உடல் உறுப்புகளிலேயே மிகவும் வலுவான தசை நார்களால் ஆனது. வளர்ந்த மனிதனிடத்தில் அது நிமிடத்திற்கு 70 முறை துடிக்கிறது. நீங்கள் குறைந்தது அறுபது ஆண்டுகளாவது வாழப்போகிறீர்கள் என நினைத்து, 70×60×24×365×60 என்று பெருக்கிப் பாருங்கள். இந்த பம்பு செட்டின் பெருமை விளங்கும்!

ஒவ்வொரு துடிப்பின் போதும் இரண்டு அல்லது மூன்று அவுன்ஸ் இரத்தம் இறைக்கப்படுகிறது. இது மணிக்கு ஏழு மைல் வேகத்தில் குழாய்களில் ஓடுகிறது!

எதிர்காலத் திட்டம்

வேளாண்மைத் தொழிற் கழகம் டிராக்டர்களைப் பழுதுபார்க்க, வாடகைக்கு விடவுமான சர்வீஸ் சென்டர் ஒன்றைத் தஞ்சை மாவட்டத்தில் நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது. வேலை வாய்ப்பு இல்லாத அதிகப்படியான எஞ்சினியர்களுக்கு வேலை வாய்ப்பு நல்கிட இக்கழகம் உறுதி கொண்டுள்ளது. 1970-71ம் ஆண்டில் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்து விவசாயிகட்கு அளிக்கத் திட்டமிடப்பட்டிருக்கும் இலக்கு பின்வருமாறு:

டி.டி.—25 (ரஷியா)	500
ஸெட்டார்—2011 செக்)	401
ஆர். எஸ்.—09 (ஜெர்மனி)	150
பைலாரஸ் (ரஷியா)	250
யு—500 (ரொமேனியா)	29
யு—650 (ரொமேனியா)	50
ஸெட்டார்—5511 (செக்)	50

இவைகளுக்கான மொத்த மதிப்பு ரூ 214.95 லட்சங்களாகும். 69-70 ஆண்டிற்கான ஒதுக்கீட்டில் எஞ்சியவை இவ்வாண்டு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது. மத்திய அரசு 400 ஸெட்டார் டிராக்டர்களை இக் கழகத்திற்கு அளித்திட ஒப்புதல் தெரிவித்துள்ளது. இந்திய அரசாங்கத்திடமிருந்து 400 மின்விசை உழவு இயந்திரங்களைப் பெற முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன. விவசாயக் கருவிகள் தயாரிப்பதற்கான அடிப்படை இயந்திரங்களை இறக்குமதி செய்வதோடு, அந்நிய டிராக்டர்களுக்கான துணைக் கருவிகளையும் இக்கழகம் இறக்குமதி செய்து, டிராக்டர் சொந்தக்காரர்களுக்கு வழங்கஇருக்கிறது. இங்கு கிடைக்காத டிராக்டர் டயர்களை வெளிநாட்டிலிருந்து தருவித்துக் கணிசமான தொகையில் வழங்க வழிசெய்து வருகிறது. துணைக் கிணறுகள் தோண்ட உதவும் 'பவர் டிரில்லர்' நான்கினை வாங்கியுள்ளது. இதனை விவசாயிகளுக்கு வாடகைக்கு அளித்து வருகின்றது. மீன் பிடிக்க உதவும் நைலான் நூலும், நைலான் வலையும் தயாரிக்கும் திட்டம் இதன்பரிசிலனையில் இருந்து வருகின்றது. மீன் உணவு உற்பத்தி நிலையம் ஒன்று தொடங்கவும் திட்டமிட்டுள்ளது. தஞ்சையில் தொடங்குவதோடு மட்டுமின்றி மாநிலத்தில் மேலும் நான்கு பகுதிகளில் சர்வீஸ் சென்டர்களை ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ளது.

செக்கோஸ்லோவக்கியா நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட 100 ஸெட்டார் டிராக்டர்களை விவசாயிகளுக்கு 21.4.70 அன்று முதல்வர் கலைஞர் அவர்கள் வழங்கிய போது, "பஞ்சாபிலே உள்ள விவசாயிகள், பக்கத்து ஊருக்குத் திருவிழாவிற்குச் செல்வதானாலும், சினிமா பார்க்கச் செல்வதானாலும் டிராக்டர்களிலேயே குடும்பம் குடும்பமாகச் செல்கிறார்கள். அந்த நிலைக்கொப்பத் தமிழகத்தில் டிராக்டர்கள் பெருகிடவேண்டும்" என்று தமது திட்டமிட்ட ஆசையைத் தெரிவித்தார். அவர் எண்ணத்தை நடைமுறைப்படுத்தும் வேலையில் ஈடுபட்டு வரும் 'வேளாண்மைத் தொழிற் கழகம்' தன் பணியில் தன்னிறைவை அடைவதுடன், உணவுப் பொருள்களை நாம்வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் நாள் இக்கழகத்தின் ஆக்கப்பணியால் வெகு விரைவில் வந்து சேருமென நம்பலாம்.

கதர் - கிராமத் தொழில்கள்

விவசாயிகளுக்கு ஊதியத்துடன் கூடிய வேலைவாய்ப்பளிக்கின்றன

தமிழ் நாட்டுக் கதர் - கிராமத்தொழில் வாரியத்தின் நிறுவனங்களில் உற்பத்தி செய்யப் பெற்ற பற்பல கைதுட்பப் பொருள்கள்.

கதர் கிராமத் தொழில்களை ஆதரிப்பது உணவு உற்பத்திக்கு உழைக்கும் கிராம மக்களுக்கு உதவுவதாகும்

கதர் ~ கதர்ப்பட்டு
சோப்பு ~ தேன்
செக்கெண்ணெய்
தோல்பொருள்கள்
பனைவெல்லம் சர்க்கரை
மண்பாண்டம் - வார்ப்படங்கள்
பனைபொருள்கள்
பித்தளை. வெண்கலப் பாத்திரங்கள்

மேலும்
பற்பல கைநுட்பப் பொருள்கள்

கதர் கிராமத்தொழில் விற்பனை நிலையங்களில் கிடைக்கும்.

வெளியீடு:
கதர் கிராமத் தொழில் துறை
உ, சர் தேசிகாச்சாரி ரோடு சென்னை-4.

வெற்றி கொண்டார்

கவிஞர் ஆனந்தம்

வணங்குகின்ற அண்ணாவால் அமைந்தி ருக்கும்
வடிவான தமிழரசு மக்கள் வேட்கைக்(கு)
இணங்குகின்ற விதத்தினிலே செயலாற்றத்தான்
ஏராள ஏற்பாடு முனைந்து செய்தார்
சுணங்குகின்ற வழக்கத்தை நிறுத்தி மிக்கச்
சுறுசுறுப்பாய் அரசாங்கம் இயங்கு தற்குக்
கணங்கூடத் தாமதியா வண்ணமாகக்
கட்டளைகள் பிறப்பித்து விரைவில் எல்லா

முடிவுகளும் மேற்கொண்டார் வரட்சித் துன்பம்
மூண்டெழவே உடனடியாய்த் துயர்து டைப்புக்
கடிதாக நிறைவேற வழிகள் கண்டார்
காவலரின் அல்லல்கள் நீக்குதற்கும்
நெடியநாளாய் அவதியுற்ற பிற்பட் டோரை
நிமிர்த்துதற்கும் குழுவமைத்தார் மாண வர்க்குப்
படிப்புவரப் புகுமுகமும் இலவ சத்தில்
பாங்குடனே கற்றுவர வகை சமைத்தார்

ஆசிரியர் எழுத்தர்கள் தொல்லை நீக்க
அன்புடனே திட்டங்கள் தந்தார் சாதி
பேசிடுவோர் தாழ்த்திவைத்த குலத்தார் வாழப்
பேருதவி புரிந்திட்டார் தமிழ்ம ணந்தான்
வீசிடவே நெறிகண்டார் சேலம் தூத்துக்
குடி கல்லக் குடியென்று வெற்றி கொண்டார்
மாசில்லா ஒழுக்கமுடன் முதல்வராகி
மாப்புகழை உலகத்தில் சேர்ப்போர் வாழ்க !

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு

நில வருவாய்த் துறை

இன்று காணும் ஆட்சி முறை யாவும் ஆங்கிலேயர் தந்தது என்று நம்மில் பலர் 'பெருமை' பேசுகிறோம் அல்லவா? அது முழுதும் உண்மையல்ல என்பதனை பழந்தமிழ் ஏடுகளும் கல்வெட்டுகளும் பறை சாற்றுகின்றன.

1601ம் ஆண்டில் வணிகராக வந்த ஆங்கிலேயர், பின்னர் வரி வசூலிப்பவர்களாக மாறியதும் வரி வசூல் முறையைச் செம்மைப் படுத்தினரென்பது உண்மையே. எனினும் அதற்கும் 600 ஆண்டுகளுக்கு முன்பே நில வருவாய்த் துறை சிறப்பாக நிர்வகிக்கப்பட்டதையும் அது பத்து பிரிவுகளாகப் பிரிந்து பாங்குடன் செயல்பட்டு வந்ததையும் தமிழர் வரலாறு உரைக்கிறது! அந்நாளில் நிலவருவாய்த்துறை புரவு வரித் திணைக்களம் எனப்பட்டது. இந்தத்துறையின் முதற்பிரிவு நிலவரித் தொடர்பான எல்லாவற்றையும் முதலில் கவனிக்கும் பொறுப்பைப் பெற்றிருந்தது.

நிலத்தை அளந்து பார்க்கும் பிரிவு தெரிப்பு எனப்பட்டது. ஒரு வேலியின் $\frac{1}{52428\,800}$ பகுதி கூட அளக்கப்பட்டு வரி விதிக்கப்பட்டதை முதலாம் இராசராசன் 'கல்லின்மேல் எழுதி'ச் (கல்வெட்டில்) சென்றிருக்கிறான். அவனுடைய காலத்தில் நிலத்தைச் சிறப்பாக அளந்தமைக்காக புரவு வரித் திணைக்களத்தின் தலைவனாக விளங்கியவன் 'உலகளந்தான்' என்ற பட்டம் பெற்றான்!

தெரிப்பு செய்யப்பட்ட நிலம் பற்றிய அரசன் ஆணைகளை செப்புப்பட்டயங்களிலும் கல்லிலும் வெட்டியவர்கள் பணியாற்றிய துறை முகவெட்டி யாகும்.

நிலத்திற்கு உடையவன் தரவேண்டிய வரியைப்பற்றிய கணக்குகள் உள்ள துறை 'வரிப் பொத்தகம்' எனப் பெயர் பெற்றது (புத்தகம் என்பது புஸ்தகம் என்னும் வடமொழிச் சொல்லின் மரூஉ அல்ல. பொத்தல் செய்து ஏடுகள் தைக்கப்படுவதனால் பொத்து+அகம், பொத்தகம் ஆகி, பின்னர் புத்தகம் ஆயிற்று).

இந்த வரிக்கணக்கைப் பரிசீலனை செய்யும் துறை புரவு வரித் திணைக்களக் கண்காணி எனப்பட்டது.

வரி செலுத்தியவர்களுக்கு இரசீது செதுக்கிக் கொடுக்கும் வழக்கமும் அந்நாளில் இருந்தது. அந்த பொறுப்பினை ஏற்ற துறை தரவு சாத்து ஆகும்.

புதிய வரிகளைக் கட்டும் பொழுது பழைய பாக்கிகளை வசூலிப்பதும் அரசின் கடமை தானே! அவற்றையெல்லாம் பழ நியாயம் என்னும் பிரிவு கவனித்து வந்தது,

வசூலான வரிகளை வரிப் பொத்தகத்தில் வரவு வைக்கும் பகுதிக்குப் பெயர் வரியிலீடு என்பதாகும்.

வரியிலீட்டுக் கணக்குகளைப் பார்த்துத் தணிக்கை செய்யும் பிரிவு வரிப் பொத்தகக் கணக்கு எனப் பெயர் பெற்றது.

அனைத்துக்கும் மேலானது அரசனது ஆணையல்லவா? நிலங்களைப் பற்றி அவ்வப்போது அரசன் இடும் ஆணைகளைக் கவனிக்கும் துறையாக "பட்டோலை" இருந்து வந்தது.

இப்பொழுது சொல்லுங்கள்! இந்தப் பத்துப் பிரிவிற்குள்ளும் அடங்காததா இன்றுள்ள நில வருவாய்த் துறை!

- பெரம்பூரிலுள்ள ரெயில் பெட்டித் தொழிற்சாலையில் ஆண்டுக்கு 650 ரெயில் பெட்டிகள் தயாரிக்கப்படுகின்றன. இதுவரை தயாரிக்கப்பட்டுள்ள பெட்டிகளின் எண்ணிக்கை 7300.

  வேலை பார்க்கும் தொழிலாளர்களின் எண்ணிக்கை 10,700.

* * *

- சென்னை கிண்டியிலுள்ள டெலிபிரிண்டர் தொழிற்சாலையின் ஆண்டு உற்பத்தித்திறன் சுமார் 5500, 1969 - 70க்காக திட்டமிடப்பட்டுள்ளது 6500 டெலிபிரிண்டர்களும், 1000 உதிரிப் பகுதிகளுமாகும். தற்போது ஆங்கிலம்,இந்தி,அரேபிய மொழி ஆகியவற்றில் அங்கு டெலிபிரிண்டர்கள் தயாரிக்கப் படுகின்றன.

* * *

- நெய்வேலியில், மின்சக்தி, உற்பத்திக்கும், பயிரிடும் நிலங்களுக்கான யூரியா உரம் தயாரிப்பதற்கும் வீட்டு எரிபொருளாகப் பயன்படுத்தவும், மற்றும் சிறு தொழில்களுக்குப் பயன் படுத்தவும் ஆண்டு ஒன்றுக்கு 41 லட்சம் டன் பழுப்பு நிலக்கரி உற்பத்தி செய்யப்படுகிறது. இந்த உற்பத்தி ஆண்டுக்கு 60 லட்சம் டன் அளவுக்கு உயர்த்தப்படும்.

அருகில் வரும் — தொலைவு



வானொலியில் இசை வாணர் பாடுவதைக் கேட்கிறோம். வண்ணத் திரையில் விழுகின்ற காட்சிகளின் கோலத்தைக் கண்டு இரசிக்கிறோம். நாடகமேடையில் வரும் நடிகரின் திறமையில் மயங்கி மகிழ்கிறோம்.

நானிலம் முழுதும் நடக்கின்ற நிகழ்ச்சிகளைச் செய்திகளாகப் படித்து அறிகிறோம். ஆனால் இசை வாணரைப் பார்த்துக் கொண்டே வானொலியின் இசையைப் பருக முடியாதா?

இல்லத்தில் இருந்து கொண்டே திரைப்படத்தை, நாடகத்தைக் காண இயலாதா?

உலகத்து நிகழ்ச்சிகளை அவை நடக்கும் பொழுதே அறிய முடியாதா?

இப்படி ஓர் ஆசை மனிதனின் மனத்தில் எழுந்தது.

ஆசைதானே அனைத்திற்கும் வித்து! கிராபைட் தட்டிலே கீறல்களைப் பதியவைத்து கிராமபோன் இசைத்தட்டை உருவாக்கியவனுக்கு இது நிறைவேற முடியாத ஆசையா என்ன?

தொலைக்காட்சி தோன்றியது!

கிரேக்க மொழியில் 'டெலி' என்றால் 'தொலைவு' என்று பொருள். 'விஷன்' என்பதற்கு வேர்ச் சொல்லான 'விதிர்' என்றால் இலத்தீன் மொழியில் காட்சி என்பர் இவை இரண்டும் இணைந்தே 'தொலைக்காட்சி' என்னும் பதம் பிறந்தது.

உருப் பெருக்கும் ஆடியின் மூலம் ஒரு படத்தை நன்றாக உற்றுப்பாருங்கள். பல்வேறு வகையான அடர்த்தியுடன் கூடிய கருப்பு, வெள்ளைப் புள்ளிகளின் தொகுப்பே அப்படம் என்பதை உணர்வீர்கள். தொலைக் காட்சி புகைப்படக் கருவியின் விழியாக விளங்கும் குவி ஆடியில் காட்சி பதியும் பொழுது அது கரும் புள்ளிகளும் வெண் புள்ளிகளும் நிறைந்த பிம்பமாக மாற்றப்படுகிறது. இந்த பிம்பம் குவி ஆடியின் பின்னாலுள்ள திரையில் விழும்பொழுது புள்ளிகளில் உள்ள ஒளியின் அடர்த்திக்கேற்ப எலக்ட்ரான்கள் வெளிப்படுகின்றன. இந்த எலக்ட்ரான்கள் அடுத்து அமைந்துள்ள 'இலக்கு' என்னும் கருவியைத் தாக்கும் பொழுது மேலும் அதிகமான எலக்ட்ரான்கள் வெளியாகின்றன. இவை எலக்ட்ரானின் படமாக உருப் பெறுகின்றன. ஆனால் வானவெளியில் செலுத்துவதற்கு முன்னால் எலக்ட்ரானிக் வடிவம் பெற்ற காட்சி பல துண்டுகளாக நறுக்கப் பட வேண்டும். எலக்ட்ரானிக் துப்பாக்கி என்னும் கருவி இப்பணியைச் செய்கிறது. இந்தக் குழாயிலிருந்து வெளிவரும் ஒரே சீரான வரி ஒளிக் கற்றைகள் ஒரு நொடியில் உருவாகும் 25 தனித் தனிப் படங்கள் ஒவ்வொன்றையும் 525 வரிகள் உள்ள ஒளிக் கற்றைக்ளாக மாற்றுகின்றன. இலக்கினின்றும் பிரதி பலித்துவரும் இந்த வரி ஒளிக் கற்றைகள் பெருக்கி (amplifier) என்னும் கருவிக்கு அனுப்பட்டு அதிக மின்னழுத்தமுள்ள மின் விசையாக மாற்றப்பட்டு பின்னர் 'சிக்னல்' கள் எனப்படும் மின்காந்த அலைகளாக குன்றின் மேல் அமைந்துள்ள 'ஆண்டெனா' மூலம் விண்ணில் விடப்படுகின்றன. வான வெளியில் மிதந்து வரும் மின் காந்த அலைகள் ஏரியல் கம்பியில் படும்பொழுது கம்பியின் மின் விசை தூண்டப் படுகிறது. அது பெருக்கியின் மூலம் அதிக மின்னழுத்த முள்ள மின் விசையாக மாற்றப்படுகிறது. பின்னர் மி விசை எலக்ட்ரான் வரி ஒளி கற்றைகளாக மாறி 'தன் ஒளி திரையில்' (fluorescent screen) ஒன் சேரும்பொழுது நிழலும் ஒளியு இணைந்து படங்கள் தோன்றி காட் களாக நகர்கின்றன. தலையை சுற்றுகிற தல்லவா?

ஆனால், எலக்ட்ரான் வ வத்தை வரி ஒளிக்கற்றைகளாக பிரிக்கின்ற அற்புதக் கருவியை 1922ஆம் ஆண்டு கண்டுபிடித் பொழுது பான்ஸ் வொர்த் என் விஞ்ஞானி பதினாறு வயதேஉடை ஓர் பள்ளிச் சிறுவன்!

டெலிவிஷனுக்கு மூலப் பொருள் 1817ஆம் ஆண்டே கண்டுபிடிக்கப் பட்டது என்றாலும் குரூக்ஸ், நிப்கோ, ஹெர்ட்ஸ், ப்ளெமிங், எடிசன், பாரெஸ்ட், ஜென்கின்ஸ் போன்ற விஞ்ஞானிகளின் அயராத தொடர்ந்த உழைப்பின் பயனாகவே நாம் இன்று காணும் தொலைக் காட்சி உருப்பெற்றது. 1930ஆம் ஆண்டு முதல் தொலைக் காட்சி நிலையங்கள் தோன்றியதும் அவை ஆராய்ச்சித் துறைகளை ஆரம்பித்து விஞ்ஞானத்தின் இந்த வியத்தகு படைப்பை மேலும் வசீகரமாக்கின.

1950ல் வண்ணத் தொலைக் காட்சி சாத்தியமாயிற்று. அதற்கான புகைப்படக் கருவியில் ஒளிக் கற்றைகளை அனுப்ப சிவப்பு, பச்சை, நீலம் ஆகிய மூன்று வகையான குழாய்கள் இருக்கின்றன. இவை இணையும் பொழுதுதான் இதர வண்ணங்கள் உண்டாகின்றன. சிவப்பும் மஞ்சளும் சேரும்பொழுது மஞ்சள் பிறக்கிறது. மூன்று வண்ணங்களும் தேவையான அளவு கலக்கும் பொழுது வெண்மை தோன்றுகிறது. மஞ்சளும் நீலமும் கலந்தால் பச்சை உண்டாவதைக் கண்டாலே மலைத்துப் போகும் நம்மில் சிலருக்கு இது நம் முடியாத ஒன்றாக இருக்கும்!

இன்று டிரான்சிஸ்டரைப்போ தொலைக்காட்சிக் கருவிகளையும் கையில் எடுத்துச் செல்லலாம்! அந்த அளவுக்கு தொலைக் காட்சித் துறை முன்னேறி விட்டது.

ஐரோப்பாவில் கூவம்

ஆம்ஸ்டர்டாம் நகரின் குறுக்கே தெரு ஆறு ஓடுகிறது. இந்த ஆறு நமது கூவத்தைப் போலவே இருக்கிறது. ஆனல் இதில் படகுப் போக்கு வரத்து அதிகமாக இருக்கிறது. நமது கூவம் சீரமைக்கப்பட்ட பின்பு மேல் நாடுகளில் நகரின் நடுவே ஓடும் ஆறுகளைவிட அழகாகவும் சிறப்பாகவும் அமையும்.

—பொதுப்பணி அமைச்சர்
திரு. சாதிக்பாட்சா
அவர்களின்
ஐரோப்பா சுற்றுப்பயண
அனுபவம்

1962ஆம் ஆண்டு 'டெல்ஸ்டார்' என்னும் செயற்கைக் கோளை வான வீதியில் அமெரிக்கா பறக்க விட்ட பிறகு உலகம் முழுவதும் தொலைக் காட்சி ஆட்சி செலுத்துவது எளிதாயிற்று.

1961ல் தொலைக்காட்சி இரும்புத் திரையையும் ஊடுருவிப் பாய்ந்தது. ஆம்! அந்த ஆண்டில் ான் லண்டன் பி.பி.ஸி நிலையம் ரஷ்யாவிலிருந்து தொலைக்காட்சி கழ்ச்சியை பிரிட்டிஷ் மக்களுக்கு ழங்கியது.

என்னும் பொழுதே உவகை பூட்டும் இந்த அற்புதக் கருவி எண்ணற்ற உலக மக்களைக் கவர்ந்து விட்டதில் வியப்பென்ன? இன்று அமெரிக்காவில் 100க்கு 90பேர் களுடைய இல்லங்களில் தொலைக் காட்சி மகிழ்வூட்டும் தோழனுகி விட்டது. ஆங்கிலேயே நாட்டில் மட்டும் 10,000,000 கருவிகள் களிப்பூட்டி வருகின்றன. 4,000,000 கருவிகள் மூலம் இரஷ்யர்கள் தொலைக் காட்சியை இரசிக்கின் னர். 3,400,000 கருவிகள் கனடா ாட்டு மக்களின் கருத்துக்கு விருந்தை வழங்கி வருகின்றன.

சிக்கலான அறுவைச் சிகிச்சைகள் நிகழும் பொழுது மற்றைய மருத்துவரும் மாணவர்களும் சிகிச்சையின் சிறப்பை நுணுக்கமாக அறியலாம். அவ்வப்போது மருத்துவத் துறையில் எழும் புதிய முறைகளையும் உடனுக்குடன் தெரிந்து கொள்ளலாம். அண்மையில் ஆப்பிரிக்காவில் வரலாற்றுச் சிறப்பு மிக்க இதயமற்றுச் சிகிச்சை நடந்த பொழுது தொலைக்காட்சி சாதனத்தின் மூலம் பல்லாயிரக் கணக்கான மருத்துவரும், மாணவரும் மற்றவரும் கண்டு பயன் உற்றனர்.

வேளாண்மைத் துறையில் புதிய கண்டு பிடிப்புக்களையும் ஆராய்ச்சி முடிவுகளையும் விவசாயிகளுக்கு விளக்குவதும் இதனுல் எளிதாகும்.

அரசியல் உலகிலும் தொலைக் காட்சி ஆற்றல் மிக்கதோர் படைக் கலனுகி விட்டது. அமெரிக்க நாட்டுக் குடியரசுத் தலைவர் தேர்தலில் தங்கள் கொள்கைகளை விளக்க கென்னடியும் நிக்ஸனும் தொலைக் காட்சியில் நிகழ்த்திய வாதப் போர்களே அவர்களின் வெற்றி தோல்வியை நிர்ணயித்தன.

குறைந்த செலவில் கவர்ச்சிகரமான விளம்பரங்கள் செய்து தொழிலைப் பெருக்க உதவும் தொலைக்காட்சி, தொழிற்சாலைகளிலும் அருமருந்தாக விளங்கி வருகிறது, அதிக வெப்பமுள்ள இடங்களையும், ரேடியோ இயக்கக் கதிர்களை வீசும் அபாயமுள்ள பொருள்களையும் அணுகாது கண்காணிக்கவும் தொலைக் காட்சி பயன்படுகிறது.

வங்கிகள், காசோலையில் கண்டுள்ள கையெழுத்துக்களைச் சரி பார்க்க தொலை காட்சியை நாடுகின்றன.

சிறைகள், விடுதிகள் இவற்றின் தலைமையாளர்கள் ஓரிடத்திலிருந்தே தொலைக் காட்சியின் உதவியினுல் அனைவரையும் தன் பார்வையில் கொண்டுவர இயலும்,

கானகத்தில் எங்காவது தீப் பற்றிக் கொண்டால் அறையில் உள்ள தொலைக் காட்சியில் புகை தோன்றும். உடனே, காடு கண்காணிப்பாளர்கள் தீப்பற்றிய இடம் எது என அறிந்து ஆவன செய்ய முடியும்.

போர்க்களத்தில் படையின் முன்னணியில் நிகழ்கின்ற போர்களை முகாமில் இருந்தவாறே படைத்தலைவர்களால் காணவும் அதற்கேற்ப புதிய போர்முறைகளை வகுக்கவும் தொலைக்காட்சியினுல் ஏதுவாகும்.

தங்கள் அருமைக் குடியரசுத் தலைவர் கென்னடி பதவி ஏற்ற பொழுது நிகழ்த்திய உரையை தொலைக் காட்சியில் கேட்டு மகிழ்ந்த அமெரிக்க மக்கள், கொடியவன் ஒருவனுல் அவர் குண்டடிபட்டு சாய்ந்த கோரக் காட்சியையும் அதே தொலைக் காட்சியில் கண்டு துடித்தனர்.

நீலவானைக் கிழித்துக் கொண்டு அப்பல்லோ பறந்த அழகையும் நிலாவில் நிலவுலக மாந்தர் தம் பொன்னடி வைத்து நடந்த அதிசயத்தையும் தொலைக் காட்சியில் உலகம் பார்த்து வியந்தது.

இவற்றை யெல்லாம் அறியும் பொழுது மதியின் சிறப்பால். மனிதர் மதியையும் மிதித்து விட்ட இந்நாளில் தொலைக்காட்சி இன்னும் நம் தமிழ் மண்ணுக்கு வராத நிலையை எண்ணி இதயம் ஏங்குகிறதல்லவா?

அந்த ஏக்கம் இனி தீர்ந்துவிடும். நான்காம் ஐந்தாண்டு திட்டத்திற்குள் தொலைக் காட்சியை நாடு முழுவதும் பரப்பவும் கல்விப் பணியை அதன் மூலம் தொடர்ந்து செய்யவும் மத்திய அரசு முனைந்துள்ளது. புதிய சட்டமன்ற உறுப்பினர் விடுதி அருகே மாநில அரசுக்குரிய நிலப்பரப்பில், ஐந்து ஏக்கர் நிலத்தில் அதற்கான கருவிகளை அமைக்கவும் அரசு முயன்று வருகிறது.

குருவியும் எறும்பும்

குருவி தலையில் பனங்காயா? என்று கேட்கிறேம். குருவியால் பனங்காயைச் சுமக்க முடியாது; உண்மை. ஆனல் ஒரு எறும்பால் தன்னை விட 3000 மடங்கு எடையுள்ள இரையைக் கவ்விச் செல்ல முடியும்.

எண்ணங்களின் எழிலோவியம்

என்.வி.நடராசன்

(பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர்)

தமிழகத்தின் பல்வேறு அரசுகளையும் ஒருகுடைக்கீழ்க் கொண்டுவந்து தமிழுலகாண்டதாக சோழன் கரிகாலனை ''வரலாற்றுக்குட்பட்ட காலம்'' நமக்கு அறிமுகப்படுத்துகிறது. அதேபோல், தமிழக அரசின் பல்வேறு துறையினுல் நடத்தப் பட்டு வந்த பல்வேறு பெயர் கொண்ட இதழ்களும் ஒருங்கிணைந்து ''தமிழரசு'' எனும் பேரால் பயனுள்ள பணியாற்றப் பவனிவரும் வகையில், அந்தக் கரிகாலன் வழிவந்த சோழியச் செயல் வீரர் கலைஞர் கருணுநிதி அவர்கள் தலைமையிலான ஆட்சி ஏற்பாடு செய்து ''தமிழரசு'' இதழ் நம் கையில் தவழ்கிறது.

அரசின் இலாகாக்கள் பலதிறப் பட்டவையாக இருப்பது தவிர்க்க முடியாதது என்பதைப் போலவே, அந்தந்த இலாகாவின் செய்திகளும் சாதனைகளும் தனித்தனியாகத்தான் பொதுமக்களைச் சென்றடையவேண்டும் என்றிருந்த நிலைமாறி, இந்த ஆட்சியில் எவரும், எதையும், எப்போதும் கோர்வையாகவும் தெளிவாகவும் ஒருங்கே தெரிந்து கொள்ள வேண்டுமென்ற முயற்சியில் இந்தத் ''தமிழரசு'' வெளிவந்துள்ளது.

இவ்விதம் தமிழ்நாடு அரசின் திட்டங்களையும் சாதனைகளையும் தெரிவிப்பதாக மட்டுமே அமையும் என்பதில்லாமல், தமிழர்களின் ஏற்றங்களையும் எண்ணங்களையும், அரசியல் சாதனைகளையும், மொழியின் மாண்புகளையும், ''தமிழ்கூறு நல்லுலகம் முழுவதும்'' தெரியும் வண்ணம் பறைசாற்றிப் பணியாற்றும் என்பதில் ஐயமில்லை

இதுவரை தனித்தனியாக— துண்டுதுண்டாக அரசின் செய்திகள் பல்வேறு பெயருள்ள இதழ்கள் வாயிலாகத் தெரிவிக்கப்பட்டு வந்தன, அவைகளைப்பற்றிச் சாதாரண பொதுமக்களுக்கு ஒன்றுமே தெரியாது என்றுகூடச் சொல்லலாம். வாரந்தோறும் வெளியிடப்படும் அரசிதழ் (கெஜட்) போலவே அரசாங்க இதழ்களும் தொடர்புடைய —அல்லது அவசியமுள்ளவர்களால்

மட்டுமே பார்க்கப்பட்டன— படிக்கப்பட்டன. தமிழக மக்களுக்கும் தமிழக அரசின் செய்திகளுக்கும் ஒருவகையான மெல்லியதிரை இது வரை இருந்துவந்திருக்கிறது. வழக்கமாக நாளிதழ்களில் வரும் அரசுத் தரப்பான செய்திகள் மட்டுமே மக்களால் இதுவரை விமரிசனம் ''

இந்த நிலைமையை மாற்றியமைக்கும் அளவுக்கு மக்களிடையே தலை வேண்டும் என்பது என் பேரவா.

ஜனநாயகத்தின் பல்வேறு சிறப்புகளில் ஒன்று, அரசாங்கம் தன்னுடைய சாதனைகளின் நிறை குறைகளை வெளிப்படையாக மக்களுக்கு எடுத்துச் சொல்வதாகும். அதே போல், ஜனநாயக அரசில் மக்களுக்குள்ள பல்வேறு உரிமைகளிலும் கடமைகளிலும் ஒன்றுக அரசாங்கத்தின் சாதனைகளையும் செயல் திட்டங்களையும் அறிந்துகொள்ள முயல்வதாகும். இந்த முயற்சிக்கு உறுதுணையாக தமிழக மக்கள் ''தமிழரசு'' இதழைப் பயன்படுத்திக்கொள்ளவேண்டும்.

நாம் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு சாதிக்கப்பட்ட சாதனைகளின் பட்டியல், பொதுவாக இந்திய மக்களும்—குறிப்பாகத் தமிழக மக்களும் நினைத்துப் பார்த்துப் பூரிக்கத் தக்கவை ஆகும். அளிக்கப்பட்ட வாக்குறுதிகளை ஆட்சிப் பொறுப் பேற்ற பிறகு நிறைவேற்றியுள்ள அதிகப்படியான பெருமை நிச்சயம் இந்த ஆட்சிக்கு உண்டு. சொல்லப் பட்ட அனைத்தையும் அல்ல தேவையான அவ்வளவையு சாதித்துவிட்டதாக நமது அரசு சாதிப்பதில்லை. ''எவ்வளவோ சாதிக்கவேண்டும்'' என்று அதற்குள்ள உண்மை உணர்வும், அதனையொட்டி அரசு எடுத்துக்கொள்ளும் முயற்சியும் தன்னிகரற்றவை— அப்பழுக்கில்லாதவை. கரிகாலன் கல்லணையைக் கட்டிமுடித்த பின்பு, சோழநாட்டின் விளைச்சலைப் பற்றி

"விடியல்கள் மலரும் பொழுது..."

(மதனன்)

அடிவானில்...... இருள்நாளின் உதிரலிலே
விடியல்கள் மலரும் பொழுது......
அதோ ! அந்தக் காலநதி தீரத்தில்
எங்கள் இளம்படகு
இளைப்பாறிச் செல்கிறது.

★

விடியல்கள் மலரும் பொழுது......
முன்னைப் பழம்நாளில்
மூண்டெழுந்த கனவெல்லாம்
சின்ன விழிக்கூட்டில்
சிறகசைத்துப் பறக்கிறது.
முன்முன்...ஓர் பொற்காலம்...
முத்தமிழர் கைக்குழந்தை...
மண்மேலே அக்காலம்
மறுபிறவி எடுக்கிறது !

★

'தமிழரசு' வருகிறது !
சரித்திரத்தேன் சாற்றினிலே...
அமிழ்தரசக் கலவையுடன்
அள்ளக் குறையாமல்...
'தமிழரசு' வருகிறது !
காலத்தின் வீதியிலே
தடம்பதித்த "**சாதனைகள்**"
ஞாலமகள் வாசலிலே
நடைபோட வருகிறது !

★

விடியல்கள் மலரும் பொழுது....
அதோ ! அந்தக் காலநதி தீரத்தில்
எங்கள் இளம்படகு
இலக்கைத் தொடுகிறது !
ஓ...அந்த விடியல்கள் மலரும் பொழுது...

விதைகளுக்கு அடுத்தாற்போல் இரசாயன உரம் முக்கிய இடம் பெறுகிறது. தமிழ்நாட்டில் இரசாயன உரங்களின் உபயோகம் நாளுக்கு நாள் பெருகி வருகிறது. தற்பொழுது இரசாயன உரம் கிடைப்பதில் எவ்விதச் சங்கடமும் இல்லை. இந்த ஆண்டில் 1.75 லட்சம் மெட்ரிக் டன் தழைச்சத்து உரங்களும், 0.75 லட்சம் மெட்ரிக் டன் மணிச்சத்து உரங்களும், 0.75 லட்சம் டன் சாம்பல் சத்து உரங்களும் வழங்கப்படும். இரசாயன உரங்களைப் பயன்படுத்துவதன் மூலம் இவ்வாண்டில் 5.25 லட்சம் டன் கூடுதல் உணவு உற்பத்தி கிட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மண் மாதிரி எடுத்துப் பரிசோதனை செய்து பார்த்து, சிபாரிசு செய்யப்படும் அளவில் இரசாயன உரமிடுமாறு வலியுறுத்தப்படுகிறது. தற்பொழுது 8 இடங்களில் மண் பரிசோதனை நிலையங்கள் உள்ளன. இவ்வாண்டில் திருச்சியில் ஒன்றும், இராமநாதபுரத்தில் ஒன்றுமாக 2 மண் பரிசோதனை நிலையங்கள் அமைக்கப்படும். மேலும் 3 நடமாடும் மண் பரிசோதனை நிலையங்கள் ஏற்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

பயிர்ப் பாதுகாப்பு, அடுத்தாற்போல் முக்கியத்துவம் வாய்ந்தது ஆகும். பூச்சி பூசண மருந்துகளை மானிய விலையில் வழங்குவதை நிறுத்திவிடும்படி இந்திய அரசு கேட்டுக் கொண்டிருந்தும் தமிழ்நாடு அரசு 15 சத மானிய விலையில் பூச்சி பூசண மருந்துகளை உழவர் பெருமக்களுக்கு வழங்கி வருகிறது. நடப்பாண்டில் 10 லட்சம் ஏக்கர்களில் விமானம் மூலம் மருந்து தெளிக்கவும், கோவை வேளாண்மைக் கல்லூரியில் விமானத்திலிருந்து மருந்துதெளிக்கும் பயிற்சிப் பள்ளி ஒன்று அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் 500 விசைத் தூவு கருவிகளை வாங்கவும், காஞ்சிபுரத்தில் ஒரு மருந்து பரிசோதனை ஆய்வுக் கூடத்தை விரைவில் செயல்படுத்தவும், மதுரையில் மற்றொரு ஆய்வுக் கூடத்தைத் தொடங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

★

செந்தமிழ்ப் பொதிகையின் சந்தனக் காற்று சில்லென்று வீசுகிறது.

செல்லக் குழந்தையைப்போல பூமி அன்னையின் மடியில் முற்றிய செந்நெற் கதிர்கள் மோனத்துயில் கிடக்கின்றன. செக்கர் வானத்துப் பின்னணியில் செருக்களத்து வீரர்களைப்போல நிமிர்ந்து நிற்கும் தென்னை மரங்கள்!

கமுகும் வாழையும் நெருங்கி வளர்ந்து கண்ணைப் பறிக்கின்றன. காணுமிடமெல்லாம் இயற்கைத் தாயின் எழில் நடனம்! காட்சித் தேனில் களி வண்டாகி மயங்கி நிற்கும் என்னைக் கடமை உணர்வு தட்டி எழுப்புகிறது!

பதினெட்டு பவுண்டு எடையுள்ள காமிராவைத் தோளில் சுமந்து கொண்டு கிளம்புகிறேன்.

நாகர்கோவிலிலும் கன்னியாகுமரியிலும் மூன்று நாட்கள் சுற்றுப் பயணம் செய்கிருர் முதலமைச்சர். கல்லூரி விடுதிகள், விளையாட்டரங்குகள், பாலங்கள் திறப்பு, பள்ளிகள் கல்லூரிகள் துவக்கம், குடிதண்ணீர் வழங்கல் முதலிய மக்களின் குறை தீர்க்கும் திட்டங்களைச் செய்திப் படமாக எடுக்கிற வேலை எனக்கு!

எங்கும் புதுமலர்ச்சி

களிக்காவிளையில் 9.45க்கு ஒரு விழா!

பிறகு 10.30 மணிக்கு குழித்துறையில் ஒரு கூட்டம்! பின்னர் தக்கலையில் 12.30 மணிக்கு ஒரு நிகழ்ச்சி! தொடர்ந்து வில்லுக்குறியில் ஒருவிழா! அடுத்து குடலக்குடி, வடசேரி என்று கலைஞர் சுற்றுப் பயணத்தைத் தொடர்கிருர்.

எங்கணும் புதுமலர்ச்சி! எங்கணும் புது எழுச்சி! எங்கணும் மக்கள் வெள்ளம் புரண்டோடுகிறது! அந்த வெள்ளத்தில் அமிழ்ந்தெழுந்து செய்திப் படங்களை உருவாக்குகிறோம் நானும் என் உதவியாளர்களும்.

கானத்தால் கட்டுண்ட நாகம் போலக் கலைஞரின் பேச்சில் மக்கள் மயங்கிக்கிடப்பர். ஆனுல் நாங்கள் அவ்வாறு மயங்க முடியாது. மயங்கினுல் பிறகு காமிராவும் மயங்கி விடும்! பின்னர் படமெடுக்க வந்த வேலை என்னுவது? ஒரு கூட்டம் முடியுமுன்னரே அடுத்த நிகழ்ச்சிக்கு, முதலமைச்சருக்கு முன்னதாகவே சென்று விடுவோம். அப்பொழுது தான் எங்கே மின்விளக்குகளை அமைப்பது, எந்தக் கோணங்களில் படமெடுப்பது என்பவை தெளிவாகும்.

நாகர்கோவிலுக்குச் செல்லும் பொழுது இரவு மணி 12.30 இருக்கும். அந்த நள்ளிரவிலும் நாகர்கோவில் மக்கள் கண்ணில் உறக்கமின்றிக் காத்திருந்தனர்.

பயணம் தொடருகிறது

மறுநாள்—

தோவாளை, குளச்சல், ஈத்தாமொழி, வள்ளியூர், அத்தி உத்தி, நெட்டூர், பாலூர் என்று ஊர் ஊராக ஊண் உறக்கமின்றி முதலமைச்சர் செல்ல நாங்களும் உற்சாகமாகத் தொடர்கிறோம்.

பொங்கி வரும் மக்கள் வெள்ளத்தில் மூங்கி எழும் எங்களுக்குப் பசியா, தாகமா? சிறிது வயிற்றுக்கும் ஈவோம் என்ற சிந்தனையே இருப்பதில்லை.

சில வேளைகளில் மட்டும் இடையில் வண்டியை நிறுத்தி, இறங்கி ஆளுக்கு இரண்டு வாழைப் பழங்கள், கிராமப்புறங்களில் கிடைக்கும் கண்ணைப் பறிக்கும் 'கலர்' சாப்பிட்டுவிட்டு மீண்டும் வண்டியில் அமர்ந்து விடுவோம்.

பிறகு? மீண்டும் பயணம்...படப்பிடிப்பு... பயணம்... படப்பிடிப்பு ...பயணம்....

சொல்கிறது. அதேபோல், நாம் ஆட்சிக்கு வந்தபிறகு உணவு உற்பத்தியும் பல்வேறுவகை விளைச்சலும் அற்புதச் சாதனைகளாகும். ''உணவுப்பொருள் தட்டுப்பாடு'' என்ற வார்த்தையே இனித் தமிழகத்தில் உச்சரிக்கப்படக்கூடாது ன்று நமது அரசு உறுதியான முடிவெடுத்துச் செயல்பட்டு வருகிறது. ஒவ்வொரு இலாகாவும் போர்க்கால வேகத்துடனும் இராணுவ ஒழுங்குடனும் போட்டி போட்டு மக்கள் நலனுக்கான செயல்களில் முனைந்து ஈடுபட்டிருக்கின்றன. முன்னேற்றமடைந்த பகுதியினருடன் போட்டிபோட முடியாமல் முடக்கங்கண்டுள்ள பிற்பட்ட சமுதாய நலன்பேணும் துறை அமைச்சரான நானே, அந்தத் துறையின் குறுகியகால சாதனைகளை வரிசையாக அடுக்கிக் காட்ட முடியும்.

பேரறிஞன் சாக்ரடீஸ் காலத்திலிருந்து தொடங்கும் சரித்திரகாலமான இருபத்திமூன்று நூற்றாண்டுகள் மனிதகுலத்திற்கு மகத்தான விழிப்பையும் முன்னேற்றத்தையும் அளித்த காலமாகக் கணக்கிடப்படுகின்றன. அதேபோல், நாடு அந்நியர் பிடியிலிருந்து விடுதலை பெற்ற இருபத்துமூன்று ஆண்டுகளில் கடந்த மூன்று ஆண்டுகள் தமிழகத்தின் பொற்காலமாகத் திகழ்கின்றன. மறைந்த முதல்வர் அறிஞர் அண்ணா அவர்கள் துவக்கி வைத்த அந்தப் பொற்காலம் த்தகு மாண்புடையது என்பதை னித் ''தமிழரசு'' பறைசாற்றும் என்பதில் ஐயமில்லை. அரசு வேறு மக்கள் வேறு என்கிற பாகுபாடு—கடந்த மூன்றாண்டு காலமாக மறைந்துபோய்விட்டது. மக்களின் தேவைகளும், அவர்களுடைய மன ஓட்டங்களுமே அரசாங்கத்தின், கடமைகளாகவும் திட்டங்களாகவும் மாறிவிட்ட அற்புதம், கலைஞர் கருணாநிதி அவர்களைத் தலைவராகக் கொண்ட ஆட்சியில் நிகழ்ந்துகொண்டிருக்கிறது.

இந்த அற்புத நிகழ்ச்சிகளின் நேர்முக வர்ணனைகளாகத் ''தமி

வலம்வரும். இந்த இதழ் தமிழக மக்களின் சாதனைப் பட்டியலாக எண்ணங்களின் எழிலோவியமாக—தேவைகளை வற்புறுத்தும் குரலாக விளங்கும். ''மக்களால் மக்களுக்காக மக்களே நடத்தும்'' இன்றைய அரசின் சாதனைகளை மட்டும் ''தமிழரசு'' தெரிவிக்காது. மக்களுக்கு அரசாங்கம் நிறைவு செய்ய வேண்டிய தேவைகளையும் அது வெளிப்படையாகத் தெரிவிக்கும்.

''மக்கள் குரலே மகேசன் குரல்'' என்று மறைந்த நம் முதல்வர் அறிஞர் அண்ணா அவர்கள் அடிக்கடி நினைவூட்டுவார். அதற்கேற்ப வழி நடக்கும் கலைஞர் கருணாநிதி அவர்கள் ஆட்சியின் வெற்றிச் சாதனைகளை, கோரிப் பெறவேண்டிய நியாயங்களை, உழைத்துப் பெறவேண்டிய உரிமைகளை ''தமிழரசு'' தமிழகத்தில் எதிரொலிக்கும்.

தமிழ்நாடு அரசின் இந்தக் குரல் தமிழர்கள் எங்கெல்லாம் வாழ்கிறார்களோ அங்கெல்லாம், மோதித் திரும்பும் வகையில் ''தமிழரசு'' பரவவேண்டும்— மக்கள் பேராதரவளித்துப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

''சமுதாயத்தில் நேர்மைநிலைக்க நாணயம் விளங்க நாம் நம்முடைய ஒத்துழைப்பைத் தரவேண்டும். இப்போது நாம் செய்கின்ற பல நல்ல காரியங்கள் சாதனைகள்—நம்முடைய உழைப்புக்கள், எல்லாங்கூட, சின்னஞ்சிறு புகார்களின் மூலம் அடிபட்டுப் போவதை நாம் காண்கிறோம். அந்தச் சாதனைகள் போதுமான விளம்பரம் பெறவேண்டும் என்று முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்கள் அண்மையில் நடைபெற்ற கலெக்டர்கள் மாநாட்டில் தெரிவித்ததற்கேற்ப, அரசின் நல்ல திட்டங்கள் சாதனைகள் நியாயமான அளவில் உணர்ந்து பாராட்டப்படவும், அரசு செய்யவேண்டிய நல்ல காரியங்களை மேலும்மேலும் மக்கள் உணர்த்திப் பயன்பெறவும் ''தமிழரசு'' நிச்சயம் பயன்படும்.

நம்
தமிழ் நாட்டில் ..!

நம்முடைய மாகாணத்தில் மக்களின் தேவைப் பொருட்களான சர்க்கரை, சிமெண்ட், காகிதம் போன்ற பொருட்களை உற்பத்திச் செய்யும் தொழில் சிறந்த முன்னேற்றத்தைக் கண்டுள்ளது. கூட்டுறவு ஆலைகளையும் சேர்த்து, மொத்தமாக உள்ள 16 சர்க்கரை ஆலைகளும் ஆண்டொன்றில் சுமார் 2.5 இலட்சம் டன் சர்க்கரையை உற்பத்திசெய்கின்றன. 1968 ஆம் ஆண்டு முடிவில், 6 சிமெண்ட் தொழிற் சாலைகளின் மொத்த உற்பத்தித் திறன் 2.12 மிலியன் டன்களாகும். இது அனைத்திந்திய உற்பத்தித் திறனில் 15 சதவீதமாகும். மின்சார 'சுவிட்ச்-கியர்'களை (Switch gears) உற்பத்தி செய்தவற்கென நாட்டின் மொத்த உற்பத்தித் திறனில் இம்மாநிலம் 28 சதவீத பங்கு வகிக்கிறது.

மின் சக்தியினால் இயங்கும் பம்புகளின் மொத்த உற்பத்தியில் ஆறில் ஒரு பங்கினை தமிழ் நாடு பெற்றுக் கொள்கிறது.

மிதி வண்டிகளையும், மிதி வண்டிகளின் துணைக் கருவிகளையும் உற்பத்தி செய்வதில் முன்னணியிலுள்ள மாநிலங்களில், தமிழ்நாடும் ஒன்றாகும். 'டீசல் என்ஜின்கள்', 'ஸ்டோரேஜ் பாட்டரிகள்', மின்விசிறிகள், கடலடி தந்திக் கம்பிகள், (Cables), வானொலிப் பெட்டிகள் ஆகியவற்றை உற்பத்தி செய்வதில் தமிழ் நாடு ஒரு முக்கிய இடத்தை வகிக்கிறது.

வாணிபப் பயிர்கள்

உணவு உற்பத்தியைப் பெருக்குவது போலவே வாணிபப் பயிர்களின் உற்பத்தியைப் பெருக்குவதிலும் வேளாண்மைத் துறை கண்ணும் கருத்துமாக உள்ளது.

இந்த ஆண்டில் தமிழ்நாட்டில் 94.60 லட்சம் டன் கரும்பு உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. கரும்பு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 8 புதிய வளர்ச்சி நிலையங்களும், கரும்பு வேரைத்துளைத்துப் பாதிக்கக் கூடிய பூச்சிகளைக் கட்டுப்படுத்துவதற்காக 6 ஒட்டுண்ணி வளர்ப்பு நிலையங்களும் தொடங்கப்பட உள்ளன. கரும்பு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், சாலைகள் அமைப்பதற்காக ரூ. 36.51 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

1970—71ல் எண்ணெய் வித்துக்களின் உற்பத்தியை 13 லட்சம் டன்களாக அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 2.66 லட்சம் ஏக்கர்களுக்கு மேற்பட்ட பரப்பளவில் எண்ணெய் வித்துக்களின் முனைப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்படும். மேலும் ஏற்றுமதி ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் 4.24 லட்சம் தீவிர பருத்திச் சாகுபடித் திட்டத்தைத் திருநெல்வேலி, மாவட்டத்தில் மேற்கொண்டு 20,000 ஏக்கரில் செயல்படுத்தியும், பரம்பிகுளம் ஆழியாறு திட்டத்தில் 30,000 ஏக்கர்களிலும் அறிமுகப் படுத்தப்படும். தீவிரப் பருத்தி சாகுபடித் திட்டத்தைச் செயல்படுத்துவதன் மூலம் இவ்வாண்டின் பருத்தி உற்பத்தியை 4.90 லட்சம் பேல்களாக அதிகரிக்க இயலும்.

புகையிலை முனைப்புத் திட்டத்தை இந்த ஆண்டில் 2,000 ஏக்கர்களில் விரிவுபடுத்தப்படும். ஓசூர் பகுதியில் 600 ஏக்கரில் வரிஜீனியா புகையிலை பயிரிடப்படும்.

முந்திரித் தோட்டங்களில் பெரியர் ரக மட்டில் விளக்க நிலங்கள் 310 அமைக்கப்படும். 7,000 ஏக்கருக்கு மேல் தீவிர செடிப் பாதுகாப்பு மேற்கொள்ளப்படும்.

உயர்ந்த ரக கோகோ பயிரிடத் தமிழ்நாட்டில் வாய்ப்புள்ளதால் மதுரை மாவட்டத்தில் கெங்குவார் ஓடையில், 2,000 ஏக்கர் நிலப்பரப்பு, கன்னியாகுமரிமாவட்டத்தில் 1000 ஏக்கர் நிலப்பரப்பு தெரிந்தெடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாண்டில் 2,000 ஏக்கர் பரப்பில் மேற்கொண்டு தென்னை பயிரிடவும், 7.12 லட்சம் தென்னங்கன்றுகளையும், 1 லட்சம் பாக்குக் கன்றுகளையும் வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

தூத்துக்குடியைச் சுற்றிலும் உவர் மண் நிலப்பகுதிகளைப் பயன்படுத்திப் படிப்படியாக 6,000 ஏக்கர் அளவுக்கு மேல் வாழை பயிரிடப் படும்.

1,600 ஏக்கரில் புதிய பழத் தோட்டங்கள் அமைக்கப்படும். இதற்காக ரூ. 6 லட்சம் கடன் வழங்கப்படும். 2,500 ஏக்கரில் காய்கறி பயிரிடப்படும். திருநெல்வேலி மாவட்டத்தில் 10,000 ஏக்கரில் மிளகாயும், ஈரோடு வட்டத்தில் 2,500 ஏக்கரில் மஞ்சளும், பயிரிட முனைப்புத் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. வடஆர்க்காடு, இராமநாதபுரம் மாவட்டங்களில் கூடுதலாக 2,400 ஏக்கரில் சர்க்கரை வள்ளிக் கிழங்கு பயிரிடப்படும்.

உற்பத்தியைப் பெருக்குவதில் விதைகள் முதல் இடம் வகிக்கின்றன. தரமான விதைகளை வழங்க, விதைச் சட்டத்தின் கீழ் விதைச் சான்றிதழ் வழங்கும் திட்டத்தை வேளாண்மைத் துறை மேற்கொண்டுள்ளது. இவ்வாண் டில் மதுரையில் விதைப் பரிசோத நிலையம் ஒன்று திறக்கப்படும் யந்திர முறையில் விதைகளைப் பக்கு வப்படுத்துவதால் விதைகள் வீ வது தடுக்கப்படுவதுடன் ஈரம், உ பத்தி வளம், தரம், கெடா தன்மை ஆகியவை மேம்ப இன்றன. எனவே இவ்வாண்டி தஞ்சை மாவட்டம் சாக்கோட்டை யில் நெல் விதை பக்குவப்படுத்தும் நிலையம் ஒன்றையும், குடுமியான் மலை ''அண்ணா'' பண்ணையில் சிறு தானிய விதைப் பக்குவப்படுத்தும் நிலையம் ஒன்றையும் நிறுவ இருக் றோம்.

உற்பத்தியைப் பெருக்குவதி

டெஹ்ரான் நகரில் உள்ள குழாய் செய்யும் ஒரு கம்பெனியின் இயக்குநர் ஒருவரிடம் பேசிக்கொண்டிருந்தேன்.

அவர் உங்கள் முதல்வரின் வயதென்ன என்று கேட்டார். நாற்பத்தி ஆறு முடிந்து நாற்பத்த ஏழு என்றேன்.

இந்த வயதில் அவர் இவ்வளவு சிறப்பாக ஆட்சி நடத்துகிறாரே என்று அவர் மிகுந்த ஆச்சரியப் பட்டார்.

—பொதுப்பணி அமைச்சரின்
வெளிநாட்டு அனுபவம்



புதிய பொறுப்பு

அடையாற்றில் அமைந்துள்ள திரைப்படத் தொழில்நுட்பக் கல்வி நிலையம் தான் எங்கள் தாய்வீடு. 1960ஆம் ஆண்டு முதல் தனித் துறையாக விளங்கத் தொடங்கிய திரைப்படத் தொழில் நுட்பக்கல்வி 1965ஆம் ஆண்டில் தனிக் கட்டடத்தையும் பெற்றது. ஆண்டொன்றுக்குக் குறைந்தது 25 கலைஞர்களை உருவாக்கி வரும் இந்த நிறுவனத்திற்கு 1968ஆம் ஆண்டு வசீகரமான புதிய பொறுப்பொன்று வந்து சேர்ந்தது.

அரசின் ஆக்கப் பணிகளை மக்களுக்கு விளக்கவும் அவர்களின் ஒத்துழைப்பை வேண்டவும் திரைப்படம் ஒரு அரிய கருவியாகும். மக்களாட்சியில் எந்தத் திட்டமும் மக்களின் ஈடுபாட்டைப் பெற்றாலன்றி வெற்றி பெற இயலாது. அரசு மக்களுக்காக ஆற்றியுள்ள பணிகளை விளக்கினாலன்றி எந்த ஆட்சியும் நிலை பெறவும் முடியாது. இதனை உணர்ந்த தமிழக அரசு, செய்தி விளம்பரத் துறையின் கீழ், திங்களுக்கு இருமுறை அரசின் நிர்மாணத் திட்டங்களை உணர்த்தும் செய்திப் படங்களை உருவாக்குவதென்று திட்டம் தீட்டியது. இந்தத் திட்டத்தைச் செயலாக்கும் பொறுப்பினைத் திரைப்படத் தொழிற் கல்வி நிலையம் ஏற்றது.

1968 ஏப்ரல் முதல் இதுவரை முப்பது படங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இவற்றில் இரண்டு- அண்ணல் காந்தி, அறிஞர் அண்ணா ஆகியோரின் வரலாற்றுச் சித்திரங்களாகும். அரசு நிகழ்ச்சிகள் மட்டுமன்றி அரசியல் தலைவர்கள் விழாக்களையும் படமெடுப்பதுண்டு. திருவாளர்கள் காமராசர், கல்யாணசுந்தரம், ம.பொ.சி. ஆகியோரின் பிறந்தநாள் விழாக்களும் சிறப்பாகப் படமாக்கப்பட்டன.

நாடெங்கும் நிகழ்கின்ற ஆக்கப் பணிகளைப் பற்றிய குறிப்புகள், செய்தி விளம்பரத் துறையினருக்கு வருகின்றன. தனிப்பட்ட முறையில் நிகழும் சில சமூக விழாக்கள், விளையாட்டுகள், கலைநிகழ்ச்சிகள் படமாக்கப்படவேண்டும் என்ற விண்ணப்பங்கள் வரும்பொழுது, நாட்டின் நலனோடு ஒட்டியதாயிருந்தால் அவை ஆய்ந்து சேர்க்கப்பட்டு, படமாக்கப்படவேண்டிய நிகழ்ச்சிகளின் தொகுப்பு ஒன்று செய்தித் துறையினரால் தொழிற்கல்வி நிலையத்திற்கு அனுப்பப்படுகிறது.

அனுபவத் துளிகள்

கடந்த இரண்டு ஆண்டுகளில், அவற்றைக் காண்பவரின் கருத்தில் பதியத் தக்க விதத்தில் நாங்கள் செய்திப்படமாக்க முயன்றபோது பெற்ற அனுபவங்கள் சில சுவையானவை; சில பயங்கரமானவை; சில உருக்கமானவை.

மலைத்தலங்களில் உயர்ந்து விளங்கும் உதகையின் அழகைப் பலரும் உணரவும், அங்கு சுற்றுலா வரும் மக்கள் தொகையைப் பெருக்கவும் அங்கு நிகழும் மலர்க்காட்சியையும், படகுப் போட்டியையும் செய்திப் படத்தில் வெளியிட வேண்டும் என்று ஓர் முறை ஆணைவந்தது. மலையின் அழகும், மரகதப் பசும்புல் வெளியின் எழிலும், வண்ண மலர்க் கூட்டங்களின் வனப்பும் எங்கள் உள்ளத்தைக் கிறக்கிவிட்டன. நேரம் தெரியாமல் படமெடுத்துக் கொண்டு போனோம். சிறிது நேரம் கழித்த பிறகு தான் திரைப்படச் சுருள் தீர்ந்து விடும் கட்டம் என்பது தெரிய வந்தது!

வரவேற்புகள், ஊர்வலங்கள் இவற்றைப் படமாக்கும் பொழுது ஜீப்பில் தொங்கிக் கொண்டு ஊஞ்சலாடிக் கொண்டே போவோம். அப்போது எங்கள் உடலோடு உயிரும் சேர்ந்து ஊசலாடிக் கொண்டிருக்கும்.

சென்னை எழும்பூரில் குழந்தை நல மருத்துவ ·மனையின் புதிய கட்டடத் திறப்பு விழாவைச் செய்திப் படமாக்கச் சென்றிருந்த பொழுது ஒரு விசித்திரமான அனுபவம் ஏற்பட்டது. கட்டடத்தில் பொருத்தப்பட்ட புதிய கருவிகளைக் காண்பித்துக் கொண்டு வந்த ஒருவர் இறுதியில் ஓர் 'ஆபரேஷன்' தியேட்டருக்குள் எங்களை அழைத்து வந்து விட்டார். ஒரு குழந்தைக்கு அப்பொழுதுதான் அறுவைச் சிகிச்சை செய்யத் தொடங்கியிருந்தார்கள். அதனைப் படமாக்கவும் சொன்னார்கள். நான் ஆழம் தெரியாமல் அதில் காலை விட்டு விட்டேன். என் கண் முன்னால் குழந்தையின் வயிற்றைக் கிற ஆரம்பித்தார் மருத்துவர். என் குடல் பதறிற்று. கண்களை இறுக மூடிக் கொண்டு முகத்தையும் திருப்பிக் கொண்டேன். நல்ல க்காலம்! காமிராவும் தன் கண்களை மூடிக் கொள்ளாததால் காட்சி சுருளில்
வாயிற்று!

சில உருக்கமான நிகழ்ச்சிகளை
நாங்கள் கண்டதுண்டு. உடல்
முற்றோரின் உலகநாள்
ஓட்டிச் சென்னை சிறுவர் அர
நடந்த கண்காட்சிகளைக் காண்ப
நெஞ்சு நெகிழத் தக்க வகை
படம் பிடித்திருந்தோம்.
ஓட்டி நிகழ்ந்த ஊமையர், செ
கேளார், குருடர், உடல் ஊன
ற்றோர் ஆகியோரின் விளையாட்
போட்டிகளையும் சிறப்பாகப் ப
மாக்கியிருந்தோம். அந்தக் காட்
களை இன்று நினைக்கும் பொழு
அவர்களுக்கு ஒல்லும் வகையெ
லாம் உதவ வேண்டும் என்ற எ
ணம் நெஞ்சில் எழுகிற
படத்தைப் பார்ப்பவர்களில் இரக்
முள்ள இதயம் படைத்தவர்களு
கெல்லாம் இதே சிந்தனை தோன்
யிருக்குமல்லவா? அந்தச் சிந்த
செயலானால், செய்திப் படங்க
எடுக்கின்ற அரசின் கனவும் ந
வாகுமல்லவா?

இரக்கமில்லா எடிட்டர்

ஆனால், உள்ளத்தில் சற்று
ஈவிரக்கமில்லாதவர் திரைப்பட
தொழில் கல்விக் கூடத்தில் இரு
கிறார். இவரை நாங்கள் 'எடி
டர்' என்போம். படத்தில் நா
கள் 'விழவேண்டும்' என்ற ஆ
யில் எத்தனையோ பேர்கள் தங்
தலைகளை நீட்டுவார்கள். அவர்
ஆசை நிராசையாகமாகி
நாங்களும் நிகழ்ச்சிகளைச் சற்று
மாக எடுப்பதுண்டு. தங்க
ஊரில் செய்திப்படம் வெளியா
தங்களைக் காணலாம் என்று அ
களும் ஆவலோடு காத்திரு
பார்கள். ஆனால், செய்தி விள
பரத் துறை அலுவலர்களிடமிரு
எவை தேவையானவை என்ப
அறிந்த பிறகு, "மூவியோலா
என்னும் கருவியில் போட்டு
பார்த்து, மற்றவற்றையெல்லா
நெஞ்சில் இரக்கமின்றி வெட்
எறிந்து விடுவார் எடிட்டர். அவ
என்ன செய்வார்? ஆயிரம் அடிக்கு
ஒரு செய்திப்படச் சுருளை அட
வேண்டுமென்பது ஆணையாயிற்றே



எனக்கு மகிழ்ச்சி எது?

ஜூலை 1ந்தேதி உங்களிடம் தனித்தனியே விடை பெறமுடியாது. முதலமைச்சர் வெளிநாடு செல்கிறாரே, அனைவரும் சென்று வழியனுப்ப வேண்டுமே என்பதற்காக நீங்கள் அனைவரும் என்னை வழியனுப்ப வரத்தேவையில்லை. மாவட்டங்களிலேயே இருந்து அங்கு செய்யவேண்டிய காரியங்களைச் செய்தால் போதுமானது. அதுவே எனக்கு நல்ல மகிழ்ச்சியைத் தரும். என்னுடைய வெளிநாட்டுப் பயணம் முடிந்த பிறகு, உங்களைச் சந்திக்கிற நேரத்தில், நாட்டின் மக்களுக்காகச் செய்த காரியங்கள் இவை என்று விரிவாகச் சொல்வீர்களானால் அதுவே எனக்குப் பெருந்த மகிழ்ச்சியைத் தரும்.

முதல்வர் கலைஞர்
மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கூட்டம்
23—6—'70.

'எடிட்டிங்' ஆவதற்கு முன்னுல், திவாக்கப்பட்ட படங்கள் 'பிராசஸிங்' செய்யப்பட்டு, படச் சுருளில் தெளிவான காட்சி வடிவத்தைப் பெறுகின்றன. இதனை, ஆசிரியர் ளின் மேற்பார்வையின் கீழ்த் தொழில் நுட்பக் கல்வி மாணவர் ளே செய்கின்றனர். மாணர்க்கு இது ஒரு பயிற்சியாகவும் மைகிறது; அரசிற்கு அதனுல் கக்கூடிய செலவும் மீதமாகிறது.

மூவாயிரம் அடிகளுக்கும் மேலாக டுக்கப்பட்ட படங்கள் ஓர் ஆயிரம் டியாக 'எடிட்' செய்யப்பட்ட றகு, படத்திற்குரிய விளக்க ரையும் இசையும் பதிவாக்கப்படுன்றன. இந்த ஒலிப்பதிவும் ஆசிரியின் துணை கொண்டு மாணவர் ளாலேயே கவனிக்கப்படுகிறது.

இறுதி வடிவம் பெற்றுவிட்ட ம் இப்பொழுது தமிழகத்தின் ல்வேறு இடங்களில் திரையிடத் தயாராகிறது. ஐந்து இலட்சம் ரூபாய் செலவில் கல்வி நிலையத்தில் கட்டப்பட்டுள்ள அழகான திரை அரங்கில் காண்பிக்கப்பட்டு அரசு அலுவலர்களின் ஒப்புதலைப் பெற்ற பின்னர், திரைப்படச் சுருள்கள் அடங்கிய 'கேன்'களை 'வேனி'ல் ஏற்றிக் கொண்டு ஒரு ஊழியர் ஊர் முழுதும் வினியோகம் செய்யக் கிளம்பி விடுகிருர்!



வரலாற்றுச் சான்று

நிரந்தரமான ஒரு சான்றை 'கல்லின் மேல் இட்ட கலம்' என்று விளக்கும் வழக்கம் தமிழகத்தில் உண்டு. கல்லின் மேல் எழுத்தையும் சிதைக்கவும், திருத்தவும் இயலும். ஆனுல் 'நெகடிவ்'கள் சரியான முறையில் பாதுகாக்கப்பட்டால் இன்று தமிழகம் வளர்ந்து வரும் சிறப்பினை எதிர்காலத் தலைமுறைகள் அறிந்து கொள்வதற்குச் செய்திப் படங்கள் என்றும் சான்ருக விளங்கி வரும்.

இன்றையத் தலைமுறைக்கோ, வளரும் தமிழகத்தின் ஆக்கப்பணிகளில் நாமும் பங்கேற்க வேண்டும் என்ற வற்ருத ஆர்வத்தைத்தூண்டி வரும்.

அண்மையில் முதலமைச்சர் அவர்களும், நிதி யமைச்சர் அவர்களும் ஐரோப்பிய சுற்றுப் பயணம் மேற்கொண்டபோது, உடன் கொண்டு செல்வதற்காக " அண்ணுவும் அவருக்குப் பிறகும் " என்று ஒரு படத் தொகுப்பினைத் தயாரித்துக் கொடுத்துள்ளோம்.

இந்தியன் பாங்க்
(முற்றிலும் இந்திய அரசுக்கு சொந்தமானது)
தலைமை அலுவலகம் :: சென்னை

பாங்க் டிபாசிட்தாரர்களுக்கு
1970-ன் இணையில்லாத வெகுமதி

இந்தியன் பாங்கியில் உள்ள பணத்தை டிபாசிட் செய்து, பின்வரும் ஆதாயங்களைப் பெற்றிடுங்கள் :

(அ) வருமான வரியிலிருந்து விலக்கு,
(ஆ) செல்வ வரியிலிருந்து விலக்கு,
(இ) உங்கள் பணம் பத்திரமாக இருந்து வளர்ச்சி பெறுவதைக் காணுதல்,
(ஈ) உங்கள் சேமிப்புகளை இந்தியன் பாங்கின் மூலம் வழிப்படுத்தி நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவுதல்,
(எ) இந்தியன் பாங்கின் எல்லா கிளைகளிலும் எல்லா வகையான பாங்கிங் சேவைகளையும் பெறலாம்.

அருகாமையில் உள்ள இந்தியன் பாங்க் கிளைக்கு வருகை தந்திடுங்கள்.

லக்ஷ்மிநாராயணன்,
பாதுகாவலர்.

தமிழரசு

சந்தா விவரம்
ஆண்டுச் சந்தா ... ரு. 8-00
ஆறு மாதங்கள் ... ரு. 4-00
தனிப்பிரதி விலை ... 35 காசுகள்

விளம்பரக் கட்டணம்
கடைசி அட்டை இரு வண்ணங்களில் ரு. 1000
இரண்டாவது அட்டை ,, ரு. 650
மூன்ருவது அட்டை ,, ரு. 450
முழுப்பக்கம் ரு. 400
அரைப் பக்கம் ரு. 200
கால் பக்கம் ரு. 100

விவரங்களுக்கு:
இயக்குநர், செய்தி விளம்பரத்துறை
கோட்டை : சென்னை - 9.

கொடுத்து வைத்தவன்!

அமைச்சர் கே.வி. சுப்பையா

லியான ராமனுக்கு சென்னைக் ம்பெனி ஒன்றில் வேலை. சம்பளம் நானூறு ரூபாய். சாதுவான பையன். பசுப் போல சாது என்றல் இவனைத்தான் குறிப்பிட வேண்டும். பெற்றோர்களும் ஒரு கையும் உண்டு. பூர்வீகச் த்துக்கள் அப்படி ஒன்றுமில்லை. ஞ்சமிருந்த சொத்துக்களையும் னுடைய படிப்பு சாப்பிட்டு விட்டது. அதனால்தான் படித்த வரைக்கும் போதுமென்று கம்பெனி உத்தியோகத்தில் ஒரு பெரிய மனிதர் சிபாரிசில் சேர்ந்து குடும்பத்தை ஓட்டிக் கொண்டிருந்தான்.

கலியாணராமனுடைய தகப்பனார் ராமமூர்த்தி ஒரு ஆரம்ப ரியராக இருந்து ஓய்வு பெற்ற இவர் பள்ளியை விட்டு, டயராகிற பொழுது பள்ளி ஆசிரியர்களும், மாணவர்களும் இவருக்குப் பாராட்டு விழா நடத்தினர்கள். இவருடைய சேவையைப் பாராட்டிப் பலர் பேசினர்கள். இவருக்குப் பொன்னாடையும் போர்த்தப்பட்டது. பொன்னாடை என்ற பெயரில் ஒரு சரிகைத் துண்டைப் போர்த்தினர்கள். இந்த விழாவிற்குச் செலவு செய்தது ஆயிரம் ரூபாய்க்கு மேல் இருக்கலாம். அதை அவரிடம் கொடுத்திருந்தாலும் அவருக்குப் பிரயோசனமாக இருந்திருக்கும். ஆனால் அதைப் பற்றிய சிந்தனை இல்லாமல் பாராட்டுப் பெற்ற மகிழ்ச்சியில் வீடு வந்து சேர்ந்தார் ராமமூர்த்தி.

ராமமூர்த்தியின் மனைவி சுந்தராம்பாள் ஒருநாள் பேச்சோடு பேச்சாகக் கேட்டாள்.

''என்னங்க! உத்தியோகத்திலிருந்து ஓய்வுபெற்று விட்டதால், சகலத்திலும் ஓய்வு பெற்று விட்டதாக நினைத்துக் கொண்டிருக்கிறீர்களே. உத்தியோகத்தில் தான் ஓய்வு பெற்றிருக்கிறீர்களே தவிர வீட்டுக் காரியங்களில் ஓய்வில்லை. பையனுக்கு வயது ஆகிக்கொண்டே போகிறது. பெண் சுந்தரியும் வயதுக்கு வரப்போகிறாள். அப்புறம் எதை எதைப் பார்க்க முடியும். ஒவ்வொன்றாக முடிக்க வேண்டாமா? கலியாணராமனுக்கு ஒரு கலியாணத்தைச் செய்து பார்த்து என் கண்ணை மூடலாமென்றிருக்கிறேன். எங்கேயாவது ஒருபெண்ணைப் பாருங்கோ. சும்மா கையைக் கட்டிக் கொண்டு வீட்டில் அடைந்து கிடக்காமல் இன்றைக்கே கிளம்புங்கள்,'' என்று கவலை தோய்ந்த முகத்துடன் உஷார்ப் படுத்தினாள் தன் கணவனை.

ராமமூர்த்தியும் நாலு இடத்தில் சொல்லி வைத்தார். ஒரு பெண்ணின் ஜாதகம் பொருந்தி இருந்தது. ராமமூர்த்திக்கு ரொம்பவும் பிடித்து விட்டது. பெண் புதுக்கோட்டை. பெயர் மரகதவல்லி. அழகுக்கு ஒரு எடுத்துக் காட்டானவள். நல்ல இடம். சொத்து ஐந்து, ஆறு லட்சம் தேறும். மரகதவல்லி ஒருத்திதான் வாரிசு என்று தரகர் எடுத்துச் சொன்னர். ராமமூர்த்தியோ பஞ்சத்தில் அடிபட்டவர். ஆகையால் இந்தச் சம்பந்தம் ரொம்பவும் பிடித்து விட்டது.

மகன் கல்யாணராமனுக்கு கடிதம் ஒன்று எழுதி அன்றையத் தபாலிலேயே சேர்த்தார்.

கலியாணராமனும் திருச்சியிலுள்ள தன்னுடைய வீட்டிற்கு ஒரு நாள் முன்னதாகவே வந்து சேர்ந்தான். ராமமூர்த்தி, விவரமாகச் சம்பந்தி வீட்டாரைப் பற்றி எடுத்துச் சொல்லி எப்படியும் இந்தச் சம்பந்தத்தை முடித்துவிட வேண்டுமென்ற ஆசைக் கனலை அவனுடைய மனதில் மூட்டி வைத்தார்.

மறுநாள் வெள்ளிக்கிழமை. குறித்த நேரத்தில் நல்ல சகுனம் பார்த்து ஒரு டாக்சியில் ஏறி மூவரும் புதுக்கோட்டை சென்றனர். காரில் போகும் பொழுதே ராமமூர்த்தி பாடம் சொல்லிக் கொண்டு வந்தார் மகனுக்கு. ''சம்பந்தி வீட்டில் நுழையும் பொழுது வலது காலை எடுத்து வைத்து வரவேண்டும். நிலையில் இடித்துக் கொள்ளாமல் தலையைக் குனிந்து செல்ல வேண்டும்,'' என்றும் இன்னும் எவ்வாறெல்லாம் நடந்து கொள்ள வேண்டுமென்பனவற்றையும் சொல்லிக்கொண்டே வந்தார்.

கார் சம்பந்தி வீட்டு வாசலில் வந்து நின்றது. கார் சத்தம் கேட்டவுடன் சம்பந்தி சம்பந்தம் அவசர அவசரமாக ஓடிவந்து எல்லோரையும் அழைத்துச் சென்று நடு ரேழியில் உட்கார வைத்துத் தாகத்திற்குத் தண்ணீர், மற்றும் குளிர்ந்த பானங்கள் கொடுத்து 'ஆசுவாச'ப் படுத்தினர். சம்பந்தத்தின் மனைவியும் ஒரு எட்டு வந்து சம்பந்திகளை வரவேற்று விட்டுச் சமையல் கட்டிற்குச் சென்று, சமையலைத் துரிதப்படுத்திக்கொண்டிருந்தாள். மரகதவல்லியும் ஜன்னல் வழியாக மாப்பிள்ளையைப் பார்க்காமலில்லை. 'மாப்பிள்ளை பரவாயில்லை', என்ற எண்ணம் அவளுக்கு!

நல்ல நேரம் போவதற்குள் பெண்ணைப் பார்த்து விடுவது நல்லது என்று அவசரப்படுத்தினர் ராமமூர்த்தி. மரகதவல்லியும் நன்றாக அலங்கரித்துக் கொண்டு வந்து எல்லோரையும் வணங்கினள். 'அன்னமென அல்லவென', என்று வர்ணிப்பார்களே அதைப்போல இருந்தது. அவளது (Book ''கற்கண்டோ, சர்க்கரையோ, தேனோ, பாகோ, கனியோ கலந்த கரும்பின் சாறோ?'' என் ஒரு புலவன் பாடி இருக்கி இவளைப் பற்றியும், இவளு குரலின் இனிமையைப் ப



அறுபடை வீட்டினுள்
பெருமை நிறைந்தது !

கிருத்திகை விழாவினில்
திருத்தணி நாடுவீர் !

வசதிகள் மிகுந்தன-செல்லும்
வாய்ப்புகள் பெருகின !

பாடியிருப்பானோ? என்று த்து கொண்டிருந்தான்—கலி ராமன்! ராமமூர்த்திக்கு ல்லாம் பல்லாகி விட்டது. ாம்பாள் மரகதவல்லியின்மீது வைத்த கண்ணை வாங்கவில்லை. எல்லோரும் வாய் மூடி மௌனி னார்கள்!

மரகவல்லியும் வாய்ப் பேச்சற்று அசைவற்ற பொற்சிலைபோல் நின்று கொண்டிருந்தாள். அப்பொழுது இரண்டு வயது மதிக்கத் தகுந்த ரு பாப்பா, "அம்மா, அம்மா," று அலறிக் கொண்டு தட்டுத் மாறி ஓடி வந்து, மரகவல்லியின் ாலைக் கட்டிக் கொண்டு தேம்பித் தேம்பி அழுது கொண்டிருந்தாள். "குழந்தையை இங்கே விடாதே, என்றால் கேட்கிறாளா" என்று இரைந்தார் சம்பந்தம். மாப்பிள்ளைக்கும், மற்றவர்களுக்கும் என்னமோ போலாகி விட்டது.

ஒப்புக்கு ஏதோ சாப்பாட்டை முடித்துக் கொண்டு ஊருக்குச் சென்றவுடன் கடிதம் எழுதுவதாக விடை பெற்றுச் சென்றார்கள் மாப்பிள்ளை வீட்டார்.

இரண்டு தினங்கள் கழித்துக் கடிதமும் வந்தது. கடிதத்தைப் பிரித்து, சம்பந்தம் படித்தார்.

"அன்புள்ள சம்பந்தம் அவர்கள். மன்னிக்க வேண்டும். சம்பந்தி என்று கூறிக் கொள்ள முடியாமைக்கு வருந்துகிறேன். அப்படி ஒரு பாக்கியம் எங்களுக்கு இல்லை என்று தான் சொல்ல வேண்டும். என்ன செய்வது? நாம் நினைக்கிறபடி எதுவும் நடப்பதில்லை. உங்கள் மகளுக்கு ஏற்கனவே திருமணமாகி ஒரு குழந்தை இருக்கிறதென்பதை நீங்கள் சொல்ல விட்டாலும், அந்தக் குழந்தையே "அம்மா, அம்மா," என்று அலறிக் கொண்டு மரகதவல்லியின் காலைக் கட்டிக் கொண்ட நிகழ்ச்சி எங்களுக்குக் காட்டிக் கொடுத்து விட்டது. உங்கள் மேல் பிசகல்ல. எப்படியாவது மகளுக்குத் திருமணம் செய்து வைக்க வேண்டுமென்றுதான் நினைப்பீர்கள். அது ஒரு தகப்பன் செய்ய வேண்டிய காரியம் தான். இருந்தாலும் என் மனம் இடம் கொடுக்கவில்லை. அதனால்தான் உங்களைச் சம்பந்தி என்று கூறிக் கொள்ள முடியவில்லை. நான் இதை யாரிடமும் சொல்ல மாட்டேன். உங்களுடைய சமாதானம் எதுவாக இருந்தாலும் ஏற்றுக் கொள்வதாக இல்லை.

இப்படிக்கு
ராமமூர்த்தி."

பெண் வேட்டையில் தோல்வி கண்ட கலியாணராமன், தன் தலை விதியை நொந்துக் கொண்டு சென்னைக்குச் சென்றான்.

இரண்டு மூன்று மாதங்களாயின. ஒரு நாள் கலியாணராமனின் நண்பன் சிங்காரவேலு, தன்னுடைய பிறந்த நாளை ஒட்டித் தன் வீட்டிற்கு விருந்துக்கு வரவேண்டுமென்று வேண்டிக் கொண்டான். சிங்காரவேலுவுக்கு வேறொரு கம்பெனியில் வேலை. இருவரும் நண்பர்கள். அதனால் கலியாணராமனால் தட்டிக் கழிக்க முடியவில்லை. கட்டாயம் வருவதாக ஒப்புக்கொண்டான்.

அந்த நாளும் வந்தது. சிங்காரவேலுவும் அவன் மனைவியும் புது மணத் தம்பதிகளாயிற்றே. அதனால் ஒரு வெள்ளிக் கெண்டியும் பாலாடையும் வாங்கிக் கொண்டு கலியாணராமன் சிங்காரவேலுவின் வீட்டிற்குச் சென்றான். சிங்காரவேலுவும் புன்முறுவலுடன் வரவேற்று உபசரிக்கலானான். இலை, போட்டுப் பரிமாறப்பட்டது. சிங்காரவேலுவின் மனைவி அமுது படைத்தாள். தலையைக் குனிந்து கொண்டே சாப்பிட்டுக் கொண்டிருந்த கலியாணராமன் நிமிர்ந்து நண்பனின் மனைவியைத் தற்செயலாகப் பார்த்து விட்டான்.

அவள், தான் பெண் பார்த்த மரகதவல்லி! பேயறைந்தவனைப் போலானான், இருந்தாலும் மனதை அடக்கிக் கொண்டு அவசர அவசரமாகச் சாப்பாட்டை முடித்துக் கையை அலம்பினான். அவனுடைய பரபரப்பைச் சிங்காரவேலுவால் புரிந்து கொள்ள முடியவில்லை.

சிங்காரவேலுவைக் கேட்டுவிட வேண்டுமென்று துடித்தது அவனுள்ளம். அவனை இழுத்துக் கொண்டு அறைக்குள் சென்றான். "ஏண்டா! உன் மனைவிக்கு ஏற்கனவே ஒரு குழந்தை இருக்காமேயடா!" என்று கேட்டான்.

"அது ஒரு வேடிக்கைக் கதை. மரகவல்லிக்கு ஒரு அக்காள் இருந்தாள். ஒரு வயதுப் பெண் குழந்தையை விட்டு விட்டு இறந்து விட்டாள். மரகதவல்லிதான் தாய் மாதிரி அந்தக் குழந்தையை வளர்க்கிறாள். ஒரு தாய்க்கு இருக்க வேண்டிய பாசத்தைவிட அதிகமான பாசத்தை அவள் மீது சொரிகிறாள். அவள் மீது உயிரையே வைத்திருக்கிறாள். அந்தக் குழந்தையும் இவள் தான் தாய் என்று நினைத்துக் கொண்டு இவளை ஒரு நிமிடங்கூட விட்டுப் பிரிய மாட்டேனென்கிறாள். ஒரு நாள் யாரோ ஒரு முட்டாள், இவளைப் பெண் பார்க்க வந்திருக்கிறான். அந்த நேரம் இந்தக் குழந்தை "அம்மா, அம்மா," என்று அலறிக் கொண்டு மரகவல்லியின் காலை ஓடி வந்து கட்டிப்பிடித்து அழுது இருக்கிறான். அந்த முட்டாள், இவளுக்குத் திருமணமாகி, ஒரு குழந்தை இருக்கிறதென்று நினைத்துக் கொண்டு பெண் வேண்டாம் என்று சொல்லிப்போய் விட்டான். அது நல்லதாகப் போய் விட்டது. இல்லாவிட்டால் எனக்கு இவள் கிடைத்திருப்பாளா? பெண்ணென்றால் மரகதவல்லி தாண்டா பெண். அன்பின் மொத்த உருவம். பண்பின் வடிவம், அழகின் சிகரம்.' குணக்குன்று என்றால் இவள்தான். அவளைப் பெறுவது என்றால் கொடுத்து வைத்திருக்க வேண்டும்" என்று அடுக்கிக் கொண்டு போனான் சிங்காரவேலு.

கலியாணராமன் கண்களில் நீர் துளிர்க்கச் சொன்னான்: "சிங்காரவேலு, நீ கொடுத்து வைத்தவன்! கொடுத்து வைத்தவன்!!



செய்தியும் – நிகழ்ச்சியும்

மிழரசு”
ளியீட்டு விழாவில்

புதிய ஏட்டினை விழிகளால் தழுவிடும்

அய்யர்

ஆர்வமிக்க இளைஞர்கள்

அமைச்சர், உள்ளாட்சி

நல அமைச்சர்



பார்த்தோம் படித்தோம்

சாதனைக்குச் சான்று

தமிழக அரசு செய்துவரும் சாதனைகளுக்கு ஓர் அருஞ்சான்ருகும் தமிழரசு இதழ்.

அரசு ஏடு என்ருல் கவர்ச்சிகரமாக இருக்கக் கூடாது என்று இலக்கணம் வகுத்துக் கொண்டதுபோல் அரசினர் ஏடுகள் வெளிவந்த காலமும் உண்டு. அந்நிலையை ‘சீரணி’ ஓரளவு மாற்றிற்று. முழுதும் ‘தமிழரசு’ மாற்றும் என்பது முதல் இதழின் தோற்றத்திலேயே தெரிகிறது.

இம்முயற்சி வெற்றிபெற தமிழ் நில மக்கள் என்றும் துணை நிற்பார்கள். வளர்க ‘தமிழரசு’

அன்பன்

இ. சந்திரசேகரன்,
மதுரை-1.

அட்டை ஒன்றே போதுமே!

‘தமிழரசு’! முதல் இதழ் அட்டையை கண்ணுடிபோட்டு வைத்துள்ளோம். அவ்வளவு அழகு. தமிழ் நாட்டில் இவ்வளவு குறைந்த விலையில் இதுபோன்ற இதழ் இதுவரை வெளிவந்ததில்லை!

பி. இருட்டினகுமார்,
கும்பகோணம்.

காலதாமதம் வேண்டாம்

அரசாங்க இதழ் கால தாமதமாக வரும் என்ற மரபு நெடுங்காலமாக உள்ளது. எத்தனையோ குறைகளைக் களைந்த தமிழக அரசு ‘தமிழரசு’ காலம் தவருமல் வர வழிவகை செய்யும் என்று நம்புகிருேம்.

நந்திவர்மன்,
திருச்சி.

நெடுங்காலக் கனவு நனவாகியது

மலேசிய நாட்டில் அரசாங்கம் வெளியிட்ட ஏடு ஒன்றை என் நண்பர் ஒருவர் காட்டினர் அது. போன்ற இதழை நம் அரசு வெ யிடும் நாள் வராதா என்று ஏங்கி துண்டு அந்நெடுங்காலக் கனவை நனவாக்கி விட்டது ‘தமிழரசு.’

க. கு. கோபால்சா
தஞ்சாவூர்.

தேன் செய்தி எப்பொழுது?

தமிழரசு இதழில், தாயகம் திரு பியவுடன் முதல்வர் கலைஞர் கரு நிதி அவர்கள் எழுதுவார்கள் என் தித்திக்கும் செய்தியை அவருடை எழுத்தின் மூலம் அறிந்தோம் அந்தத் தேன் செய்தி எங்களுக்கு கிடைக்கும் நாள் எந்நாளோ ?

இரா. சதாசிவ
சேலம்.





வேண்டுமென்றபோது மட்டுமே பேறு

வேண்டுமென்றபோது மட்டுமே இன்று மகப்பேற்றை ஏற்படுத்திக் கொள்ளலாம். இதற்கு நிரோத் உதவும்.

தாய் சேய் இருவரின் தேகநலம் ...

குழந்தைகள் சரியான வளர்ச்சி பெற, முதல் மூன்று நான்கு வருடங்கள் அவர்களுக்கு விசேஷமான பராமரிப்பு தேவை என்று வைத்தியர்கள் கூறுகின்றனர். பேற்றில் இழந்த தேக வலுவை மீண்டும் பெற தாய்க்கும் சிறிது காலம் பிடிக்கும். நிரோத் உபயோகிப்பதனுல், அடுத்த பேற்றைச் சுலபமாகத் தள்ளிப் போடலாம்.

நிரோத் (காண்டோம்) உயர்தர ரப்பரினுலான கருத்தடைச் சாதனம் ஆண்களுக்கானது. எளிமையான, தீமையற்ற நிரோத் உலகமெல்லும் உபயோகிக்கப்படுகிறது. இதை உபயோகிப்போரின் தேகநலம் பாதிக்கப்படுவதில்லை. நிரோத் எங்கும் கிடைக்கும்.

நிரோத், வீட்டுச் சாமான்கள் விற்கும் கடை, மருந்துக் கடை, வெற்றிலைப் பாக்குக் கடை ஆகியவற்றில் கிடைக்கும்.

ஐந்தே
காசு
போதும்
உங்கள்
குடும்பம்
பெருகாமல்
தடுக்க!

நிரோத்

உயர்தர ரப்பரினுலான கருத்தடைச் சாதனம்
குடும்பக் கட்டுப்பாட்டிற்கு
15 காசுக்கு 3
அரசாங்க ஆதரவிலும் குறைந்த விலை

வீடு தோறும் கோழிப் பண்ணை

''என்ன ராமையாண்ணே! கவலையா உட்கார்ந்திட்டே?''

''ஒண்ணுமில்லே செல்லப்பா! நம்ம சின்னப்பய சமாச்சாரம்தான் சதா உடம்புக்கு ஏதாவது வந்து படுத்துக்கிருன்.''

''ஏன் டாக்டரிட்டே கொண்டு போய்க்காட்டுகிறதுதானே. புதுசா வந்திருக்கிற பட்டணத்து டாக்டரு நல்லா கவனிக்கிருருன்னு பேசிக்கிருங்களே!''

''அவரிட்டேதான் கொண்டு போய்க் காட்டினேன். பயலுக்கு உடம்புக்கு ஒண்ணுமில்லேன்னுட்டாரு!''

''அப்புறம் என்னவாம்?''

''உடம்பு 'வீக்'காயிருக்குதாம். பால், முட்டை தினம் குடுக்கணுமின்னுரு! முட்டை விக்கிற விலையிலே முட்டை வாங்கிக் கொடுத்தா எனக்குக் கட்டுப்படியாகுமா?''

'முட்டை ஏன் வாங்குற! நாலு கோழி பிடிச்சு விடு! தினம் முட்டை கிடைக்கும்''

''அதுவும் செய்து பார்த்தேன். பத்து முட்டை விட்டுட்டுதானு அடைக்கு சிலிப்பிக்குது. ஒரு பிரயோசனமுமில்லே.''

''ஓ! நாட்டுக் • கோழி வாங்கி விட்டியா?''

''ஆமாம். நாட்டுக் கோழி முட்டை சரியாவிடலேன்னு சீமைக் கோழியும் வாங்கி விட்டுப் பார்த்தேன். அதுங்க வாங்கி ரெண்டு நாளிலே தலையைப் போட்டிடுதுங்க. செத்த கோழியைத் திங்கிறதுக்கு மனுசம் வரல்லே. விட்டெறிஞ்சிட்டா என் பெண்சாதி.''

''நான்கூட ஒம்மாதிரித்தான் நினைச்சுக்கிட்டுயிருந்தேன், காட்டுப் பாக்கத்துக்கு என் தங்கச்சி வீட்டுக்குப் போறது வரைக்கும்!''

''அங்கே கோழிப் பண்ணை இருக்கிறதா கேள்விப்பட்டிருக்கேன்''.

''ஒரு நாளிலே இரண்டாயிரம் முட்டைகள் உற்பத்தி செய்கிற பெரிய கோழிப்பண்ணை இருக்குது காட்டுப்பாக்கத்திலே. அதுமட்டுமில்லே, அங்கே வீட்டுக்கு வீடு கோழிப்பண்ணைதான்.''

''அவங்க எப்படி வளர்க்கிருங்க?''

''நான் அதுபற்றி அங்குள்ள பஞ்சாயத்து அதிகாரி கிட்டே கேட்டேன். அவர் சொன்னுரு: ''பெரிய கோழிப்பண்ணைகள் எவ்வளவுதான் இருந்தாலும் கிராமத்திலிருந்துதான் அதிக அளவு முட்டைகள் கிடைக்கின்றன. கிராமப்புறத்திலே தரையில் சிந்தி சிதறிக் கிடக்கும் தானியங்கள், புழு. பூச்சிகளைக் கோழிகள் உண்டு வளர்வதால் கோழிக்குச் செலவே கிடையாது. சென்னைப் பட்டினத்திலே விற்கிற கோழி முட்டைகளில் 60 சதவிதம் கிராமத்திலிருந்து வருகிற முட்டைகள் தானும். நீ சொன்னமாதிரி நாட்டுக் கோழிகள் சரியா முட்டையிடுகிறதில்லே. சீமைக் கோழிகள் சில, கிராமச் சூழ்நிலைக்கு ஒத்துக் கொள்ளாமல் நோய்வாய்ப்பட்டுச் செத்துப் போகுது. ஆனல் நாட்டுக் கோழிகளைத் தரம் உயர்த்தினுல் குறைச்சலான உற்பத்தி செலவில் நிறைய முட்டைகள் பெறலாம்ன்னு அவரு சொன்னுரு!

காட்டுப்பாக்கம் ஊராட்சி ஒன்றியம் இதற்காகச் சில ஏற்பாடுகள் செய்ததாம். ஆஸ்திரேலியாவிலிருந்து தருவிக்கப்பட்ட 'ஆஸ்ட்ரோலார்ப்' என்ற இனச் சேவலை வெள்ளையினக் கோழியுடன் சேர்த்து, அதன் மூலம் பிறந்த ''ஆஸ்ரோ வைட்'' என்ற கலப்பினச் சேவல்களைக் கொண்டு கிராமப்புறக்கோழிகளைத் தரமுயர்த்தினார்களாம். அவை எத்தகைய சூழ்நிலைக்கும் ஏற்ற மாதிரி இருப்பதோடு அதிக முட்டைகளையும் இடுகின்றனவாம்!'

''அப்படியா விஷயம். ஆமாம் அந்த மாதிரி கோழி நமக்கு விலைக்குக் கிடைக்குமா?''

''ஓ! காட்டுப்பாக்கம் கோழிப் பண்ணையில் இதற்காகப் பெரிய அளவில் செயற்கை முறையில் கோழிக் குஞ்சுகள் பொறிக்கும் யந்திரங்கள் இருக்கு. அவற்றில் பொறிக்கப்படும் குஞ்சுகள் ஒருநாள் ஆனவுடன் அதில் ஆண் எது, பெண் எது என்று பிரித்து விடுகிறாங்க. இவ்வாறு வகைப்படுத்த, பிரத்தியேகப் பயிற்சி பெற்ற கால்நடை உதவி மருத்துவர்கள் அங்கு இருக்கிறாங்க. இனம் பிரிக்கப்பட்ட குஞ்சுகளை நியாயமான விலைக்குப் பொதுமக்களுக்கு விற்கிறாங்க!''

''ஆமாம் செல்லப்பா. அங்கு என்ன என்ன வகைக் கோழிகள் இருக்கு?''

''வெள்ளை லெகான். கருப்பு மைனார்கா, சிவப்பு பொந்தான் எல்லாமே இருக்கு. பத்து வருஷத்துக்கு முன்னே நூறு கோழிகளுடன் ஆரம்பிக்கப்பட்ட பண்ணையம், அது. இப்போ, அடேயப்பா! எவ்வளவு வளர்ந்து விட்டது! ஆமாம் சென்னையில் முட்டை விலை என்ன?''

''28 காசிலிருந்து 32 காசு வரை விற்கிறது!''

''இந்தப் பண்ணையில் என்னவிலை தெரியுமா? நியாயமானவிலை. சின்ன முட்டை 23 காசு. பெரியது 27 காசு தான். இங்கே உற்பத்தி செய்யிற முட்டைகளை சென்னைப் பட்டினத்திலே உள்ள முட்டை விற்பனை நிலையங்கள் மூலமும், நடமாடும் விற்பனை நிலையங்கள்மூலமும் நியாய விலையில் விற்கிறாங்க!''

''அப்போ, அந்தக் கலப்புக் கோழியை வாங்கி நான் வளர்க்கலாம்னு சொல்றே!''

''நீ மட்டுமில்லே. கிராம மக்கள் எல்லோரும் வீட்டுக்கொரு கோழிப் பண்ணை வைக்கணும். ஒரு கோழி முட்டையை உற்பத்தி செய்தால் நாட்டின் வருவாய் 25 காசு அதிகமானதாகப் பொருள்.''

''ஆமாம்! செல்லப்பா! நீ சொல்றது ரொம்பசரி. சத்துணவுக்கு உணவுமாச்சி. நல்ல வருமானமும் ஆச்சி. வீட்டுக்கொரு கோழிப் பண்ணை நிச்சயம் தேவைதான்! வணக்கம்ப்பா! நான் வர்ரேன்!!

அரசு சிமெண்டின் அரிய திட்டம்

ஆலை, வெறும் பொருட்கள் உற்பத்தி செய்யும் தொழிற்கூடம் மட்டும் அல்ல. தொழிலாளர், தாம் விழித்திருக்கும் நேரத்தில் பாதிக்குமேல் செலவிடும் இருப்பிடமும் ஆகும். தொழிலாளரின் உழைப்பு நாட்டின் செல்வத்தைப் பெருக்கி நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்துகிறது.

தம் உழைப்பினால் நாட்டின் செல்வத்தினைப் பெருக்கும் தொழிலாளரின் வாழ்வை மலரச் செய்வது அவசியம் என்பதை இந்த அரசு உணர்ந்திருக்கிறது.

இந்த நல் நோக்கினை மனதில் கொண்டு, தமிழ்நாடு அரசு, ஆலங்குளத்தில் அமைக்கப்பட்டுள்ள 'அரசு சிமெண்ட்' நிறுவனத்தில் ஒரு கூட்டு ஆலோசனைக் குழுவினை ஏற்படுத்தியுள்ளது. இதில் தொழிலாளர்கள் சார்பில் நால்வரும், இடை நிலை மேற்பார்வையாளர்கள் சார்பில் இருவரும், அதிகாரிகள் சார்பில் நால்வரும் உறுப்பினர்களாக இருப்பர்.

ஆலையின் அலுவல்களில், தொழிலாளர்கள் பயனளிக்கும் முறையில் பங்கு பெறவும், நிர்வாகத்திற்கும் தொழிலாளர்களுக்கு மிடையே நல்லெண்ணமும் நல்லுறவும் நிலவிடவும், இத் திட்டம் வழி வகை செய்யும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

உலக ஆராய்ச்சி அரங்கில் தமிழ்

திரு. ஏ. சுப்பையா

நாடுகள் பலவற்றுக்கும் சென்று, பல்வேறு சூழ்நிலைகளில் பல்வேறு துறைகளில் ஆய்வு நிகழ்த்தி வரும் ஆராய்ச்சி வல்லுநர்களைக் கண்டு உரையாடிய பின்னர், ஐரோப்பிய, அமெரிக்க, ஆசியப் பல்கலைக் கழகங்களில் தமிழாராய்ச்சி புறக்கணிக்கப்பட்டு வருவதற்கு வரலாற்றுச் சூழ்நிலையே அடிப்படைக் காரணம் என்பதை உணர்ந்தேன். இந்தோ–ஐரோப்பிய மொழியாராய்ச்சியில் ஈடுபட்டிருந்த தொடக்க கால ஆய்வாளர்களுக்கு, தொல் பொருளாய்வு, வரலாறு, மொழியாராய்ச்சி ஆகியவற்றில் சில ஆதாரங்கள் முன்னரே கிடைக்காமல்போய் விட்டன. இத்தொல்பொருள் ஆதாரங்கள் எல்லாம் அவர்களின் ஆராய்ச்சிக்குப் பின்னரே கிடைத்தன. எனவே, வேறு ஆதாரங்கள் அற்ற நிலையில் அவ்வாராய்ச்சியாளர்கள், அன்று பொதுவாக நிலவிய ஒரு தவறான கருத்தையே ஏற்றுக் கொண்டு, இந்திய கலாச்சாரத்தின் ஒப்பற்ற சிறப்புச் சின்னமாக அமைந்திருப்பது சமஸ்கிருத மொழியே என்ற மேலோட்டமான முடிவுக்கு எளிதாக வந்துவிட்டனர். வங்காளி, இந்தி, போல, ஒரு வட்டார மொழியாகவே தமிழையும் ஒதுக்கி விட்டனர். ஆகவே, இந்தியப் பண்பாட்டை உருவாக்கியதில் பெரும்பங்கு கொண்டுள்ளதாக இன்று ஆராய்ச்சியாளர்களால் ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது.

வளர்ந்து வரும் இன்றைய ஆர்வம் :

மிகவும் பழைமையான தனிச் சிறப்பு வாய்ந்த திராவிடக் கலாச்சாரத்தைப் பற்றி அறிவதற்குரிய அரிய வாய்ப்பு ஆரம்பகால ஆராய்ச்சியாளர்களுக்குக் கிட்டாமல் போய்விட்டது. அறிவார்வம் மிக்க அவர்களுக்கு திராவிடப் பண்பாடு மறைக்கப்பட்ட நிலையிலேயே இருந்து விட்டது. மேலும், பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில், வடமொழிக்கும், இந்தோ–ஐரோப்பிய மொழிக் குடும்பத்தைச் சார்ந்ததாகக் கருதப்படுகின்ற கிரேக்கம், லத்தீன் போன்ற மொழிகளுக்கும் இடையே இருக்கின்ற மொழித் தொடர்பு கண்டுபிடிக்கப்பட்டதால், மொழியியல் ஆய்வு விரைந்து வளர்ந்தது. இந்தோ ஐரோப்பிய மொழி ஆராய்ச்சியாளர்களுக்கு வடமொழி ஆராய்ச்சி மிகவும் இன்றியமையாததாகி விட்டது.

அண்மைக் காலத்தில் மேலைநாட்டு ஆராய்ச்சி மேதைகள் திராவிடப் பண்பாட்டின் பழம் பெருமையை உணர்ந்து, அதனைப் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபடும் ஆர்வத்தை மிகுதியாகக் கொண்டுள்ளனர். வளர்ந்து வரும் இவ்வார்வத்திற்கான காரணங்களாவன:

1923ம் ஆண்டில் ஹரப்பா, மொகஞ்சதாரோ ஆகிய இடங்

"அண்ணாவும் தம்பியும்"

நீதிக்கு என்னென்ன தேவையோ அதையதைக் கொடுக்க வேண்டுமென்ற எண்ணம் அண்ணா அவர்களிடம் இயல்பாகவே இருந்தது. அதைப்போலவே அவருடைய தம்பியும் இன்றைய தினம் முதலமைச்சராக இருந்து செய்து தருகிறார்கள்.

தலைமை நீதிபதி திரு. வீராசாமி
(மதுரை 15-6-'70)

சிகாகோ நகர மக்கள் சிந்திய இரத்தம்…..
"வீரசபதம்"

இன்று மே தினம் உலகெங்குமுள்ள உழைக்கும் தோழர்களின் உரிமைக்குரலாக எதிரொலிக்கிறது. பாடுபட்டவன் பயன் காண்பதும், வியர்வை சிந்தியவன் விளைவினை அனுபவிப்பதும் மே தினத்தில் எடுத்துக்கொள்ளும் வீர சபதமாகும். மேதினி எங்குமுள்ள தொழிலாளி வர்க்கம் மேன்மையுறுவதற்காகவே அன்றொரு நாள் சிகாகோ நகரத்து தொழிலாளர் பெருமக்கள் இரத்தம் சிந்தினார்கள். எந்தவொரு குறிப்பிட்ட நாட்டுக்கும், எந்தவொரு குறிப்பிட்ட பகுதிக்கும் சொந்தமென்று இல்லாமல் அங்கிங்கெனாதபடி எங்கெங்கும் அகிலத்துப் பாட்டாளி மக்கள் தங்கள் உரிமைக் கொடியை ஒளி தவழ வான்முட்ட உயர்த்தும் நாள் இந்நாள்.

முதல்வர் கலைஞர்
(மே நாள் விழா 1-5-70)

களில் புதை பொருள் ஆய்விற்குப் பின்னர், அங்கு நிலவியிருந்த சிந்து வெளி நாகரிகம் ஆரியர்களின் வருகைக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே செம்மையுடன் பரவியிருந்த வியத்தகு சிறப்புடையது என்பது அனைவராலும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது. மேலும் இலக்கியம், சமயம், கலாச்சாரம், எழுத்தியல், புதைபொருள் ஆகியவை பற்றிய ஆராய்ச்சியின் முடிவுகளைப் பார்க்குமிடத்து, அவை அனைத்தும் சிந்துவெளி நாகரிகத்தின் மூலவர்கள் திராவிடர்கள் அல்லது திராவிடர்களின் மூதாதையர்கள் என்பதற்கான ஆதாரங்களையே குவிக்கின்றன. எகிப்திய, சுமேரிய நாகரிகங்கள் வளர்ந்தோங்கிய அதே காலத்தில் சிறப்புற்றிருந்த பெருமை சிந்து சம வெளி நாகரிகத்திற்கு உரியது.

இலக்கியம், இசை, நாட்டியம், சிற்பம், கட்டிடக்கலை ஆகிய துறைகளில் தமிழர்கள் பெற்றுள்ள பல திறப்பட்ட வெற்றிச் சிறப்புக்கள் அனைத்தும் இத்துறைகளில் சிறப்பாராய்ச்சி நடத்துகின்ற வித்தகர்களைப் பெரிதும் கவர்ந்துள்ளன.

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இருந்த அதே வழக்காற்றின் செம்மை நிலையினைச் சிறிதும் சிதைவுறாமல் காத்து நிற்கும் ஒரே உயர் தனிச் செம்மொழி தமிழே ஆகும். பரந்துகிடக்கும் பழங்கால, இடைக்கால, தற்கால இலக்கியங்கள் அனைத்தையும் தடுமாற்றமின்றிச் சீராக ஆய்வதில், ''உலக வழக்கழிந்தொழிந்து சிதையா சீரிளமைத் திறம்'', மொழியியல், சமூகவியல் ஆய்வார்க்குப் பெரிதும் துணை நிற்கிறது. தமிழின் இத்தனிச் சிறப்பு, ஆராய்ச்சியாளர்களைக் கவர்ந்து ஊக்குவித்துள்ளது.

திருக்குறள் போன்ற பழம்பெரும் தமிழ் இலக்கியங்கள், தமிழர்கள் தற்கால சிந்தனைகளுடன் இணைந்து போகின்ற, என்றும் பயன்தரும் நடைமுறை மனித வாழ்வுக் கோட்பாடுகளையே கொண்டிருந்தனர் என்பதனையே எடுத்துக் காட்டுகின்றன. இச்சிறப்பினால்தான் திருக்குறள் ஐம்பது மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

தமிழாராய்ச்சி ஆர்வம் அமெரிக்க அறிஞர்களைவிட ஐரோப்பிய ஆய்வாளர்களிடம் மிகுந்து காணப்படுகிறது என்பது குறிப்பிடத் தக்கது. அமெரிக்கர்களின் ஆர்வம் சீனா, ஜப்பான் போன்ற புத்தமதத்தைத் தழுவி நிற்கும் கீழை நாட்டுக் கலாச்சார ஆராய்ச்சிகளில் அதிகம் திரும்பியுள்ளது. இந்தோ—ஐரோப்பிய மொழி ஆராய்ச்சியில் ஐரோப்பியர்களே அதிகம் ஈடுபட்டுள்ளதற்கு, அவர்களுடைய குடியேற்றத் தொடர்பும் காரணமாக அமைந்திருக்கலாம். இந்திய மொழிகளில் சமஸ்கிருதத்தில் மட்டுமே முழுக்க ஈடுபட்டு, திராவிடப் பண்பாட்டுப் பகுதியை ஒதுக்கிவிட்டது, ஆராய்ச்சித் துறையிலேயே ஒரு பெருங்குறை என்பதை உணர்ந்து ஐரோப்பிய வல்லுநர்கள் திராவிடப் பண்பாட்டு ஆராய்ச்சியில் பேரார்வம் காட்டலாயினர்.

வட அமெரிக்காவில் கூட, சமஸ்கிருத மொழி ஆராய்ச்சியாளர்கள் தமிழாராய்ச்சியைப் பெரிதும் ஊக்குவித்ததை நான் கண்டேன். குறிப்பிட்ட எல்லைகளுக்குள் கட்டுப்பட்டு நிற்கின்ற ஆராய்ச்சியை உலக முழுமைக்கும் விரிவு படுத்துவதற்கான அறிகுறிகள் அண்மையில் தென்படுகின்றன. என்னுடைய பயணத்தின் போது, அமெரிக்க ஆராய்ச்சி அறிஞர்களும் ஐரோப்பிய ஆய்வாளர்களைப் போன்ற தமிழாராய்ச்சியில் ஆர்வம் கொண்டுள்ளனர் என்பதையும், அவர்களைவிட இவர்கள் தமிழராய்ச்சியில் பின் தங்கி விடமாட்டார்கள் என்பதையும் உணர்ந்தேன்.

தடைகள் : நான் சந்தித்த மொழி ஆராய்ச்சி மேதைகளில் பலர், மேலை நாட்டுப் பல்கலைக் கழகங்களில் தமிழாராய்ச்சியினை ஆழ்ந்து பரந்த அளவில் ஏற்படுத்த வேண்டுமெனில், தமிழாராய்ச்சிப் பணியில் உள்ள சிக்கல்களை அகற்றத் தக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்பதை எடுத்தியம்பினர்.

இரண்டாவது மொழியாகத் தமிழையும், அதன் இலக்கியத்தையும் கற்பிப்பதற்குத் தற்கால போதனை முறையில் தேர்ச்சி பெற்ற தமிழ் ஆராய்ச்சி அறிஞர்கள் இல்லாதது ஒரு பெருங்குறை என்றும் சொல்லப்பட்டது. பழைய போதனை முறையிலேயே பயிற்சிபெற்ற தமிழ் அறிஞர்கள் சிலர் இரண்டு மூன்று பல்கலைக் கழகங்களில் அமர்த்தப்பட்டனர்; ஏமாற்றமே விளைவாயிற்று. ஆகவே, தமிழ் பேசத் தெரிந்த கன்னட மலையாளப் பண்டிதர்கள் அமர்த்தப்பட்டனர். அவர்களுக்குப் போதனை முறையில் தேர்ச்சி இருந்தது. ஆனால், தமிழ் இலக்கியத் தேர்ச்சி இல்லை.

ஆங்கிலத்தில் தமிழ் ஆராய்ச்சி நூல்கள் :

தமிழாராய்ச்சி நூல்கள் ஆங்கிலத்திலோ, பிறமொழிகளிலோ தேவையான அளவுக்கு இல்லாதது ஒரு பெரும் குறை. மூலமும், மொழிபெயர்ப்பும் என்று பல்வேறு வகையான நூல்கள் ஆங்கிலத்திலும் பிற மொழிகளிலும் கிடைக்க வழி செய்தல் வேண்டும். ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ள நூல்களைக் கேட்டு எழுதினாலும் அனுப்பி வைத்து உதவுவதற்குத் தமிழ் நாட்டு நூல் வெளியீட்டாளர்களோ, பல்கலைக் கழகங்களோ உதவுவதில்லை என்று ஆராய்ச்சியாளர் பலர் குறைப்பட்டுக் கொண்டனர்.

தாய்நாடும்—
தாய்மொழி
பிறந்தநாடும்

உலகு எங்கும் தமிழர்கள் பரவி வாழ்கிறார்கள். அவர்கள் எந்த நாட்டில் குடிமக்களாகி வாழ்கிறார்களோ அந்த நாடுதான் அவர்களுடைய தாய்நாடாகும் மலேசிய நாட்டில் வாழும் தமிழ்மக்களாகிய உங்களுக்கு தாய்நாடு மலேசியநாடுதான். தமிழ்நாடு உங்கள் தாய்மொழி பிறந்தநாடு.

—பேரறிஞர் அண்ணா
மலேசிய நாட்டுச் சுற்றுப்பயணத்தில்

தமிழாய்வுக்குத் தேவைப்படுகிற நூல்கள் கையெழுத்துப் படிகள் பற்றிய விவரப் பட்டியல்கள் உலகின் பல பகுதிகளிலும் கிடைக்காததால், ஆதாரங்கள் இல்லாமல் ஆராய்ச்சியாளர்கள் அல்லற்படுகின்றனர்.

வளர்ச்சியுற்ற நாடுகளில் கூட, போதுமான நிதி வசதி இல்லாமையே ஆராய்ச்சித் துறையில் புதிய முயற்சிகளைத் தொடங்குவதற்கு மிகப் பெருந்தடையாக அமைந்துள்ளது. கடந்த இருபதாண்டுகளாகப் பல்கலைக் கழகங்கள் விரிவடைந்திருக்கின்றன. புதிய பல்கலைக் கழகங்கள் ஏற்பட்டுள்ளன. ஆகவே, இருக்கின்ற ஆய்வுத் துறைகளுக்கே நிதி மிகுதியாகத் தேவைப்படுகின்றது. புதிய துறைகளைத் தோற்றுவிப்பதற்குப் பல்கலைக் கழக மேலிடம் எளிதில் இசைவு தருவதில்லை. அதுவும், தமிழ்த்துறை போன்ற விளம்பரம் பெருத, விரிவடையாத ஆய்வுத் துறையைத் தொடங்க வேண்டும் என்ற ஆர்வமுடைய ஆராய்ச்சியாளர்கள் பல்கலைக்கழக மேலிடத்தாரின் மனத்தில் தமிழாய்வின் முக்கியத்துவத்தையும் சிறப்பினையும் வலியுறுத்தி உணர்த்துவதற்கு மிகவும் சிரமப்பட வேண்டியதிருக்கிறது. நிதியுதவி கிடைப்பதரிது. ஆகவே, தமிழாராய்ச்சியில் ஈடுபட்டுள்ள பலர் என்னிடம் ஐக்கிய நாட்டுக்கல்வி-சமூகப் பண்பாட்டுக் கழகமோ அல்லது அக்கழகத்தின் இந்தியப் பகுதி அமைப்போ அல்லது தமிழக அரசோ பிற நாட்டுப் பல்கலைக் கழகங்களில் தமிழாராய் சித் துறையைத் தொடங்கி வைத்து, இயங்கச் செய்யுமே யானல் இரண்டு அல்லது மூன்று ஆண்டுகால சோதனைக் கட்டத் திற்குப் பின்னர், அந்தந்தப் பல்கலைக் கழகங்களே அத்தமிழ்த் துறையினை நிலையாகக் காத்துக் கொள்ள முன் வந்துவிடும் என்று கூறினர். தற்சமயம், இந்தியாவில் அரசின் ஆதரவுடன் ஆய்வு செய்யப்படுகின்ற மொழிகள் இந்தி உருது, வங்காளி ஆகியவை மட்டுமே.

எனது தமிழாய்வுப் பயண தின் போது, நான் சந்திக்க நேர்ந்த ஆராய்ச்சி மேதைகளுக்கு அவர்களின் தூய ஆய்வு மன பான்மை குறித்து என்னுடைய பாராட்டினைத் தெரிவித்து கொள்ள விரும்புகிறேன். ஐம்பது ஆராய்ச்சி நிலையங்களின் ஆராய் சிப் பிரதிநிதிகளையும் சந்தித்துப் பேசியதன் விளைவாக இந்திய

வாழ்க, வாழ்க!

தமிழகக் கல்வி, பொது நலத்துறை அமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் ஐம்பதாண்டைக் கடந்து, இப்போது ஐம்பத்தோராம் ஆண்டில் அடியெடுத்து வைக்கிருர்கள்.

சென்ற 11-7-70 காலை தமது பிறந்த நாளை முன்னிட்டு அண்ணு சதுக்கம் சென்று மலர் வளையம் வைத்தும், அண்ணு சிலைக்கு மாலை சூட்டியும் தமது வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

அமைச்சர் பெருமக்களும், அதிகாரிகளும், அன்பர்களும் அன்னரது இல்லம் சென்று பிறந்த நாள் வாழ்த்துக் கூறினுர்கள்.

அமைச்சர் திரு. மா. முத்துசாமி அவர்கள் தலைமையில் ஒரு கவியரங்கமும், நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் தலைமையில் ஒரு விழாவும் சிறப்பாக நடைபெற்றன.

*

கலாச்சார, மொழியியல் ஆராய்ச்சியில் ஏற்பட்டுவிட்ட குறைபாட்டை ஈடுகட்டும் வகையில் திராவிட, தமிழ்த் மொழி ஆராய்ச்சியினை விரிவுபடுத்தி, தமிழ்த் துறை இல்லாத பல்கலைக் கழகங்களில் தமிழ் கற்பிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை அவர்கள் உணர்ந்திருக்கிறுர்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ் ஆராய்ச்சியைத் தொடங்குவதிலும், தொடர்வதிலும் வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்களுக்கும் ஆராய்ச்சியாளர்களுக்கும் ஏற்படும் இடையூறுகளைக் களைவதே அனைத்து நாட்டுத் தமிழ் ஆராய்ச்சிக் கழகத்தின் முதன்மையான பணியாக இருக்க வேண்டும்.

கலை, புதைபொருள், வரலாறு மொழியியல், இலக்கியம், தத்துவம், சமயம், சமூகவியல் போன்ற பல்வேறு துறை ஆய்வாளர்களும் தங்கள் பகுதியில் உள்ள தமிழாய்க் கழகத்திற்குச் சிறப்புப் பேராசிரியர்களாகச் சென்று தமிழ் அறிஞர்களுக்கு இவ்வாய்வுத்துறைகளில் பயிற்சியளிக்க விருப்பம் தெரிவித்தார்கள். இப்படிப்பட்ட பேராசிரியர்கள், மேதைகளின் தொண்டினை தமிழ்க் கழகம் எந்த அளவுக்குப் பயன்படுத்திக்கொண்டு தன்னுடைய நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள விருக்கிறது என்பது தமிழ்த்தாய் அவர்களுக்கு அமைத்துத் தரும் சூழ்நிலை வசதிகளைப் பொறுத்தது.

அனைத்து நாட்டுத் தமிழாராய்ச்சிக் கூட்டுக் கழகம், அனைத்து நாட்டளவில் ஆலோசனைக் குழு ஒன்றினை அமைத்திருக்கிறது. அவ்வாலோசனைக் குழு என்னுடைய இந்த அறிக்கையின் அடிப்படையில் 1971–74 ஆண்டுகளுக்கான தமிழ் ஆராய்ச்சிக் கழகத்தின் ஆராய்ச்சி நடைமுறை பற்றியத் திட்டத்தைப் பரிசீலித்து ஏற்கவிருக்கிறது. அத்திட்ட விவரம் 1970 அக்டோபர் திங்களில் யுனெஸ்கோவின் பொதுக் குழுவின் பரிசீலனைக்கு வைக்கப்படும்.

தமிழாராய்ச்சிப் பணிக்காக நான் பயணம் மேற்கொண்டபோது அனைத்து நாட்டுத் தமிழாராய்ச்சிக் கழகத்திற்குப் பிற நாட்டு அறிஞர்களின் ஒத்துழைப்பு கிடைக்குமா என்ற ஐயப்பாடு இருந்தது. ஆனுல் உலக அரங்கில் முதன்மையான கலாச்சாரங்களைப் பற்றிய ஆராய்ச்சியில் ஏற்பட்டுள்ள ஒரு வெற்றிடத்தை நிறைவுபடுத்துவதில் அனைத்து நாட்டுத் தமிழ்க் கழகம் பெரும்பணியாற்றும் என்றும், இக்கழகத்தை யுனெஸ்கோ அமைத்திருப்பது மிகவும் ஏற்புடைய ஒன்று என்றும் அவர்களும் எனக்கு இசைவான கருத்தினையே கொண்டிருப்பதைக் கண்டு மகிழ்ச்சியடைந்தேன்; மேற்கொண்ட பணிகளில் நம்பிக்கையும் உறுதியும் பெற்றேன். அனைத்து நாட்டுத் தமிழாராய்ச்சி அறிஞர்கள் தமிழாய்வினைத் தாமதமின்றி மேற்கொள்ளும் வகையில் இக்கழகத்தை விரைந்து தொடங்குவது இன்றியமையாதது என்று உணர்ந்தேன்.

சிறந்த எதிர்காலம் சிறு தொழிலுக்கு

தமிழ் நாட்டில் சிறு தொழில்கள் நம்மை கவர்ந்து ஆட்கொள்கிற வகையில் வளர்ச்சியடைந்துள்ளன. சிறுதொழில்களின் வளர்ச்சியை ஊக்குவிப்பதில் மாநில அரசு மிக முக்கியமான பங்கேற்றுச் செயலாற்றியுள்ளது. இத்துறையின் வளர்ச்சியில் இந்திய அரசும் பங்கேற்றுள்ளது. முதல் திட்டக் காலத்தில் சிறு தொழில்களில் செய்யப்பட்ட முதலீடு ரூ. 2.76 இலட்சம் மட்டுமே. ஆனுல், மூன்ரும் திட்டக் காலத்தில் இது ரூ. 1,120 இலட்சத்திற்கு உயர்ந்துள்ளது. திட்டங்களினுல் சிறு தொழில்களுக்கு பல முறைகளிலும் உதவிகள் செய்யப்படுகின்றன. கடன், பயிற்சி வசதிகள், சாதனங்களும் கருவிகளையும் திறமுடன் கையாள்வதற்குரிய தொழில் நுணுக்க ஆலோசனைகள், மூலப் பொருட்களை வழங்குதல், மின் சக்தியைக் குறைந்த விலையில் அளித்தல், பொது வசதிப் பட்டறைகளை பல இடங்களிலும் அமைத்து, செப்பனிடுதற்குரிய வசதிகளை ஏற்படுத்தித் தருதல், பொதுப்பணி பட்டறைகள், முன்னேறத் தனிமையுள்ள பொருட்களை உற்பத்தி செய்தற்குள்ள மாதிரி உற்பத்திப் பிரிவுகளை நிறுவுதல் ஆகியவை அரசு அளிக்கும் வசதிகளில் அடங்குவன்.

சிறு தொழில்களின் வளர்ச்சிக்கென உருவாக்கப்பெற்ற திட்டங்களில் மிக முக்கியமானது தொழிற் பேட்டைகளை நிறுவியதாகும்.

வாலாயமானத் தொழிற் பேட்டைகள்

இத் தொழிற்கூட வசதிகளும், மற்றும் இதர அடிப்படை பொது வசதிகளும் சிறு தொழிலதிபர்களுக்கு அளிக்கப்படுகிறது. இவ்வசதிகளை அரசாங்கம் செய்து தராவிடில், சிறு தொழிலதிபர்கள் அவற்றை நியாயமான செலவில் பெறுதற்கு சிரமப்படக் கூடும். வாலாயமான தொழிற்பேட்டைகள் 24-ல், மொத்தமாக 486 தொழிற்கூடப் பிரிவுகள் கட்டப்பட்டுள்ளது. இவற்றில் தொழிற்கூடங்களை அமைப்பதற்கென 452 பிரிவுகள் ஒதுக்கப்பட்டுள்ளன. ஒரு திங்கட்கு ஒரு சதுர அடிக்கு 5 காசுகள் முதல் 15 காசுகள் வரை குறைந்த அளவில் வாடகை வசூலிக்கப்படுகின்றன. தவிர இம்மாதிரி பேட்டைகள் ஒசூர், கடலூர் ஆகிய இடங்களிலும் கூட ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

குறிப்பானத் தொழிற்பேட்டைகள்

வாலாயமான தொழிற்பேட்டைகளைத் தவிர, குறிப்பிட்டத் தொழில்களுக்குரிய தொழில்பேட்டைகளை நிறுவுதற்கும் முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. இது போன்ற குறிப்பிட்டத் தொழில்களுக்குரிய தொழிற்பேட்டைகளை ஏற்படுத்துவதில் தமிழ் நாடு முதன்மை இடம் பெறுகிறது. ஒரே இயல்புடைய தொழிற்களை ஓர் இடத்தில் ஒன்றுசேர்த்து, அவற்றை விருத்திச் செய்வதற்கு இத் தொழிற் பேட்டைகள் பெரிதும் உதவும்.

துணைத் தொழில் பேட்டைகள்

தோல்பொருட்கள் மற்றும் தோல் பதனிடுதற்கானத் தொழிற்கூடம் மாதவரத்திலும், மட்பாண்டத் தொழிலுக்காக விருத்தாசலத்திலும், மின்சாரக் கருவிகளுக்காக கக்கலூரிலும் தொழிற்கூடங்கள் நிறுவப்பட்டுள்ளன. மின்னியக்கத் தொழில்கள், உணவு—பழங்களுக்குரிய தொழில்கள், கருவிகள் தயாரிக்கும் தொழில்கள், மருந்து—மருந்து ஆக்கத் தொழில்கள் ஆகியவற்றி குரிய தொழிற்பேட்டைகளை நிறு தற்கு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுகின்றன.

பெரிய தொழில்களின் தேவை களைப் பூர்த்தி செய்யும் சிறு

தொழில் பிரிவுகளைக் கொண்ட தொழில் பேட்டைகளும் இம் மாநிலத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவை துணைத் தொழில் பேட்டைகள் எனப்படுகின்றன. கனரக அழுத்தக் கொதிகலன்,, தொழிற் சாலையின் தேவைகளைக் கவனிக்கின்ற தொழில் பிரிவுகள் திருவெறும்பூர் தொழில் பேட்டையில் உள்ளன.

வடலூரில் உள்ள மற்ருெரு, தொழில் பேட்டை மண்பாண்டத் தொழில் கூட்டமைப்பிற்கு வேண்டிய பொருள்களைத் தயாரித்துக் கொடுக்கிறது. உதகையில் உள்ள இந்துஸ்தான் புகைப்படச் சுருள் தொழிற்சாலையின் தேவைகளைச் சரிக்கட்டும் தொழில் பேட்டை ஒன்று நிறுவப்பட்டு வருகிறது.

கூட்டுறவு, தனியார்த் தொழில் பேட்டைகள்

அரசு உதவி பெற்று, தனியார் நிறுவனங்களும், கூட்டுறவு நிறுவனங்களும் ' தொழில் பேட்டைகளை ஏற்படுத்தியுள்ளன. இம் மாநிலத்தில் ஐந்து கூட்டுறவுத் தொழில் பேட்டைகளும், இரண்டு தனியார்த் தொழில் பேட்டைகளும், அமைந்துள்ளன.

தொழில் பகுதிகள்

தொழில் சாலைக் கட்டிடங்களை வாடகை அடிப்படையின் பேரில் ஒதுக்குவதோடு கூட, தொழிற்சாலைகள் அமைப்பதற்காக மனைகள் ஒதுக்கவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. இத்திட்டத்தின்கீழ், இம்மாநிலத்தில் தகுந்த இடங்களில் பெருவாரியான நிலம் கையகப்படுத்தப்பட்டு, மேம்படுத்தப்பட்டு, நன்கு வரையறுக்கப்பட்ட மனைகளாகப் பிரிக்கப் பட்டுள்ளன. இத்தகைய மனைகள் தொழிற்சாலைக் கட்டிடங்கள் கட்டப்படவும் புதிய தொழிற்சாலைகள் தொடங்கவும், நிபந்தனையின்பேரில் பெரிய, நடுத்தர, சிறிய தொழிற்சாலைகளுக்கு ஒதுக்கப்படுகின்றன. இத்திட்டம் ஏற்கெனவே அம்பத்தூர், கிண்டி, மதுரை, மேட்டூர் ஆகிய இடங்களில் கொண்டுவரப்பட்டுள்ளது. இத்தகைய மனைகள் திருச்சிராப்பள்ளி, ராணிப் பேட்டை, திருவள்ளூர், சேலம், அரக்கோணம், தூத்துக்குடி, மணலி ஆகிய இடங்களிலும் கிடைக்கும்.

தமிழ்நாடு சிறு தொழில் கழகம்

தொழிற்சாலைகளுக்குப் பணி புரியும் காரியமாகவும், தொழில் பெருவதற்கு ஓர் உள்ளமைப்பாக இருக்க வேண்டுமென்னும் கருத்துடனும், மூன்று ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், அரசு துறைத் தொழில் பட்டறைகளை ஏற்படுத்தியது. இத்தகைய தொழில் பிரிவுகளை எடுத்து நடத்தும் காரியமாக 1965 செப்டம்பர் 10ஆம் நாளன்று (இப்போது தமிழ்நாடு சிறு தொழில் கழகம் எனப்படுகிற) ''சென்னை மாநிலச் சிறு தொழில் கழகம்'' எனப்படும் தொழில் கழகம் ஒன்றை அரசு அமைத்தது. இது 1965 டிசம்பர் 1 முதல் செயல்படத் தொடங்கியது.

> ### "ஒரே செடி—ஒரே மரம்—ஒரே பழம்"
>
> "ஜனநாயகத்தில் எப்படிப்பட்ட கருத்துவேற்றுமை இருந்தாலும், ஒத்துப்போகும் பண்பு இருக்கும். எல்லோரும் ஒரே கருத்துடன் இருப்பதால் சமத்துவம்!
>
> ஒரே செடியில் பூத்தாலும் மலர்கள் அளவில் பெரியதும் சிறியதுமாகத்தான் இருக்கும்.
>
> ஒரே மரத்தில் காய்த்தாலும் கனிகள் அளவில் பெரியதும் சிறியதுமாகத்தான் இருக்கும்.
>
> ஒரே பழத்தில் கூட ஒரு பக்கம் புளிப்பும்—மறுபக்கம் இனிப்பும் இருப்பதுண்டு.
>
> இதைப்பற்றிக் கூறவந்த பேரறிஞர் வாங்கி "சமத்துவம் என்பது ஒரே தன்மையுடன் இருப்பது அல்ல!" என்ருர்.
>
> பலவிதமான கருத்துக்கள் இருந்தாலும்—ஒத்துப் போகும் பண்பு இருக்கவேண்டும் என்ற அடிப்படையில்தான் ஜனநாயகம் இயங்குகிறது.
>
> என் கருத்துக்கு நான் எவ்வளவு மதிப்புத் தருகிறேனே அவ்வளவு மதிப்பு பிறருடைய கருத்துக்கும் தரவேண்டும்.
>
> தன் கருத்தை விரிவுபடுத்தும் வாதங்களைப் பிறர் எவ்வளவு தூரம் கேட்கவேண்டும் என்று நினைக்கிறேமோ—அவ்வளவு தூரம் அவர்களது வாதத்தையும் கேட்கவேண்டும்!
>
> இந்த அடிப்படையில்தான் பலநாடுகளில் அரசியல் முறை நடைபெறுகிறது. அந்த முறை இங்கே வரவேண்டும்."
>
> —அண்ணு

அரசு பல்வேறு வகையான முன்னேற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டதால்தான், பதிவு பெற்ற தொழில் பிரிவுகளின் எண்ணிக்கை 1961ல் 3000 ஆக இருந்தது 1969 முடிவில் 18000 ஆக உயர்ந்தது. இவற்றில் பலதரப்பட்ட தொழில்கள் அடங்கும். ஒரு காலத்தில் சிறு தொழில் பிரிவுகளால் தயாரிக்க முடியாது என்று கருதப்பட்ட பொருள்கள் எல்லாம் இப்போது இந்தத் துறையில் செய்யப்பட்டு வருகின்றன.

இம் மாநிலத்துத் தொழில், வளர்ச்சியில் சிறு தொழில்களுக்கு மிகவும் முக்கியப் பங்கு கொடுக்கப் பட்டுள்ளது. சிறு தொழில்கள் வளர்ச்சியில் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்ட போதிலும், அறிவும் ஏற்பட்ட போதிலும், அரிதாகக் கிடைக்கக் கூடிய மூலப் பொருள்களைப் பெறுவதிலும், தயாரிக்கப் படும் பொருள்களுக்கு நல்ல விற்பனைக் களங்களைத் தேடுவதிலும், சிறு தொழிலதிபர்கள் இன்னமும் தொல்லைகளை அடைந்து வருகின்றனர். மூலப் பொருள்கள், இயந்திரங்கள், விற்பனைக் களங்கள் கிடைக்கச் செய்வதால் சிறு தொழில் பிரிவுகளுக்கு உறுதுணை செய்ய மாநில அரசு அண்மையில் சிறு தொழில் வளர்ச்சிக் கழகத்தை ஏற்படுத்தியது. இம் மாநிலத்தில் சிறு தொழில்கள் தொடங்கவும், அவர்கள் தயாரிக்கும் பொருள்களை விற்பனை செய்யவுமுள்ள வாய்ப்பு பற்றி ஆலோசனை நல்கி போதிய தகவலளிக்க சிறு ரகத் தொழில்கள் வாரியம் ஒன்றைஅமைக்கவும் மாநில அரசு முடிவு செய்தது.

பிரமிக்கத்தக்க முன்னேற்றம்

இயல்பாகக் கிடைக்கக் கூடிய நிதி வாய்ப்பின்மை காரணமாக சில தடைகள் ஏற்பட்ட போதிலும் கூட, முதலில் பஞ்சாலைத் தொழிலையே மையமாகக் கொண்டிருந்த பொருளாதாரம், இப்போது தொழில் நுணுக்கம் பெற்ற, பரவலான பல திறப்பட்டதொழில் மயப் பொருளாதாரமாக பிரமிக்கத்தக்க அளவில் முன்னேற்றமடைந்துள்ளது. மின், வளர்ச்சித் போதிய போக்குவரத்துப் பணி, குடிநீர் வசதிகள், நிறுவன நிதி ஆகிய துறைகளில் திட்டமிட்ட சரி சமமான முன்னேற்றம் காரணமாகவும், பயிற்சிப் பெற்ற தொழில் நுட்பப் பணியாளர் கிடைப்பதாலும், பயன்துய்ப்போர் பொருள்களுக்கு நல்ல விற்பனையிடங்கள் வளர்ந்துள்ள தாலும், தொழிலில் இத்தகைய பிரமிக்கத்தக்க முன்னேற்றம் காண முடிந்தது.

மாநில மொத்த வருவாய்க்கு தொழில் துறை மூலமாகக் கிடைக்கும் பங்கு 1950–51ல் 12.65 சதவீதமாக இருந்தது 1968–69ல் 21.93 சதவீதமாக உயர்ந்தது. 1966ல் மொத்தம் 6644தொழிற்சாலைகள் இம் மாநிலத்தில் இருந்தன. இவற்றில் 1112 தொழிசாலைகள் எ. எஸ். ஐச் சேர்ந்தவை 'சென்ஸஸ்' தொழிற்சாலைகள், அதாவது மின்சக்தியினைப் பயன்படுத்தி, 50 நபர்கள், அல்லது 50 நபர்களுக்கு மேலும், மின்சக்தி பயன்படுத்தாமல் 150, அல்லது நூற்றுக்கு மேற்பட்டவரை வேலையில் வைத்துக் கொண்டுள்ள தொழிற்சாலைகள் எனப்படும். இந்நாட்டில் 1966ல் ரூ. 7,213, கோடிக்கு மேலாக மதிப்புடைய பெரிய தொழிற்சாலைகளில் பெருமொத்த அளவில், தமிழ்நாட்டிலுள்ள தொழிற்சாலைகளின், மதிப்பு ரூ 611 கோடி அல்லது 8.5 சதவீதம். அதாவது இது இந்நாட்டு மக்கட் தொகையில் அதன் உரிய பங்குக்கும் அதிகமான பங்கு ஆகும். (7.3 சதவீதம்). 1966ல் இந்தியாவிலுள்ள பெரிய தொழிற்சாலைகளில் பயன் படுத்தப்பட்ட ஆதாயமுள்ள மூலதனம், 1959லிருந்துததை விட 334 சதவீத அதிகரிப்பைக் காட்டுகிறது. அதே கால அளவில் தமிழ் நாட்டில் இதற்கு நிகரான அதிகரிப்பு 684 சதவீதமாகும். இதைப் போலவே, 1959, 1966 ஆண்டுகளுக்கிடையில், அத்தகைய தொழிற்சாலைகளின் பெருமொத்த அளவு இந்தியா முழுமைக்கும் 168 சதவீதமாக இருந்தது 264 சதவீதமாக உயர்ந்தது. இவ்வாறு ஒப்பிடப்பட்ட பொருளாதார வளர்ச்சியின் அறிகுறிகளிலிருந்து தெரிய வருவதென்னவெனின் மிகவும் முக்கியமான கூறு நபர்வாரி வருமானம் என்பதேயாகும்.

இந்தியாவில் உள்ள மாநிலங்களுக்கெல்லாம், தமிழ்நாடு நான்காவது மாநிலமாகத் திகழ்கிறது. 1965–66ல் இதன் நபர்வாரி– வருமானம் ரூ. 443. 1966-67ல் ரூ 503. 1965-65 1966–67 ஆண்டுகளில் முறையே ரூ. 420, ரூ 471 ஆகவுமிருந்த இந் நாட்டின் சராசரி வருமானத்தை விட இது குறிப்பிடத்தக்கது விதமாக அதிகமாகவே உள்ளது.

வருங்காலத் திட்டம்

மக்கட் தொகை பெருக்கத்தை முன்னிட்டும், பெருவாரியான.



புதிய பகுதிகளில் பயிரிடுவத கான வாய்ப்பு மிக மிகக் குறை துள்ளதாலும், குறிப்பாக தொழில் முன்னேற்றத்துக்குமாநி அரசு மிகுந்த முக்கியத்துவப் கொடுக்கிறது. துரிதமான, சமன் பெற்ற தொழில் வளர்ச்சியின் அடிப்படையில் பொருளாதார நட வடிக்கைகளை பரவலாக்குவதன், வாயிலாகத்தான், வாழ்க்கை நிலையும், வேலை வாய்ப்பும் குறிப்பிடத் தக்க அளவு மேநிலையுறும் என அரசு கருதுகிறது. இம் மாநிலத்தில் தயாரிக்கப்பட்ட நிலையில் உள்ள தொழிலமைப்பில் காணும் ஓட்டைகளைக் கண்டறிந்து, அவற்றின் வளர்ச்சிக்களை திட்டமிடவும் நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் முயற்சிகள் எடுத்துக் கொள்ளப் படும். இம் மாநிலத்தில் இதுவரை மிகுந்த முன்னேற்ற மடையாத மின்னணு வியல், கருவிகள், மருந்துகள், மருந்தியல் சார்ந்த தொழில்கள் வளர்ச்சியை ஊக்குவிக்க அரச பல ஏற்பாடுகளை ஏற்கனவே மேற் கொண்டது. மேற்சொன்ன தொழில்களுக்காக தொழில்முறை சார்ந்த தொழில் பேட்டைகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. இம்மாநிலத்தில் மின் அணுவியல் தொழில் வளர்ச்சிக்கான செயற் குழு ஒன்றையும் இவ்வரசு அமைத் தது.

மேற்கொண்ட வளர்ச்சி நடவடிக்கைகள் சென்னையிலும், நெய்வேலி, மேட்டூர், சேலம் ஆகிய இடங்களில் அமையும்.

தொழில் நடவடிக்கைகள் மையம் பெற்ற மற்றொரு பெரிய இடம் தூத்துக்குடி நகரமாகும். இங்கு புதிய பெரிய துறைமுகம் வளர்ச்சி பெற்று வருகிறது. துறைமுகத்தைச் சேர்ந்த நிலப் பகுதியை, பலதரப்பட்ட தொழில்களைக் கொண்ட பெரிய தொழிற்சாலைப் பகுதியாக மேம்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. தூத்துக்குடித் தொழில் பகுதியைச் சுற்றிலும் உப்பும், உப்பை மையமாக் கொண்ட இரசாயனத் தொழிற்சாலைகளின் வளர்சிக்காக மாநில அரசு துணிகரத் திட்டம் வைத்துள்ளது. மேலும், இத்தகைய சாத்தியக் கூறுகளுக்கு வடிவங் கொண்ட விரிவான ஆய்வு தயாரிக்கவும் பணித்துள்ளது. ஆய்வு அறிக்கையை அரசு ஆய்ந்து வருகிறது.

இம் மாநிலம் நல்ல தொழில் வளத்தைக் தன்னகத்தே கொண்டு விளங்குகிறது. இது தொழில், வளர்ச்சிக்கான மிகவும் துணையான உள்ளமைப்பும் கொண்டது தொழில்களைத் தொடங்க முன் வருவோருக்கு அரசு எல்லா வகையான உதவிகளையும் நல்கி வருகிறது. தொழிலில் மூலதனம் அளிப்பவர்களைக் கவரும் வகையில் தொழில் தொடங்குவதற்கான பலதரப்பட்ட ஊக்கங்களை அரசு அளித்து வருகிறது, தொழில் பேட்டைகள் முதலியவற்றின் மூலமாக தொழில்களை அமைப்பதில் இதுவரை அரசு நாட்டஞ் செலுத்துகிறது, ஆனால், வெளியூர்களில் சில தொழில் பேட்டைகளில், எந்த நோக்கங்களுக்காக தொழில்பேட்டைகள் ஏற்படுத்தப் பட்டனவோ அந்த நோக்கங்கள் முழுவதும்நிறைவேறவில்லை. எனவே, தொழிற்சாலை இடத்தைத் தேர்ந்தெடுக்கும் உரிமை தொழில் மூலதனம் இடும் தொழிலதிபரிடமே இப்போது விடப்படுகிறது. தொழில் நடத்துவதற்கு வேண்டிய நிலமும் மற்ற வசதிகளையும் மட்டுமே அரசு கொடுக்கிறது.

வெற்றியா ?
வேண்டாமே !

" வெற்றி என்ருல் எனக்கு ஒரே அச்சம். இலட்சியத்தில் வெற்றி அடைந்த பிறகு இந்த உலகில் இனி இருந்து என்ன பயன்? வெற்றி என்பது காதல் முடிந்த மறுகணமே ஆண்சிலந்தியைக் கொன்றுவிடும் பெண்சிலந்தியைப் போன்றது.

அழிவின் ஆரம்பம் அது!

இலட்சியம் எப்போதும் எனக்கு முன்னாலேயே இருப்பதையும் அதனைத் தொடர்ந்து முன்னேறிக் கொண்டு இருப்பதையுமே நான் விரும்புகிறேன். இலட்சியத்தை அடைவதையோ அதனைக் கடந்து நடப்பதையோ நான் விழையவில்லை "

—இப்படி யார் சொல்லுவார்கள் பெர்னாட்ஷாவைத் தவிர!

மாண்புமிகு தொழிலமைச்சர் திரு. எஸ். மாதவன் அவர்கள் அரசின் தொழில் கொள்கை''தெளிவானதும் விருப்பு வெறுப்பு அற்றதுமான'' கொள்கை யாகும் என்றும் பொதுத் துறையும் தனியார் துறையுமாக ஒன்றுடன் ஒன்று சேர்ந்து, தொழில் தொடங்க இயலும் இடங்களில் தொழில் தொடங்கி நடத்துவதற்கு இவ்வரசு ஆதரவு அளிக்கிறது என்றும் மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வருகிறார். மேலும் இவ்வரசு,, தொழில் தொடங்கி நடத்துவதில் துறைக்கு உள்ள ஆர்வத்திற்கும் திறனுக்கும் மட்டுமே முக்கியத்துவம் அளிக்க விரும்புகிறதே தவிர துறைக்கன்று என்பதையும் அவர் தெளிவுபடுத்தியுள்ளார்.

தொழில் வளர்ச்சிக்கு மத்திய அரசின் உரிமமளிக்கும் கொள்கை தடையாக உள்ள தென்றும், மாநிலத்தில் தொழிலைத் தெரிந்தெடுப்பதிலும் அதை அமைப்பதிலும் மாநில அரசுக்கு அதிக செல்வாக்கு இருக்கும் வகையில் உரிமம் அளிக்கும் முறை மாற்றியமைக்கப் படவேண்டும் என்றும் மாண்புமிகு தொழிலமைச்சர்குறிப்பிட்டுள்ளார்.

இன்றைய நாளில் இந்திய தொழில் வளர்ச்சியில் தமிழ்நாடு முக்கிய இடம் பெற்று விளங்குகிறது. தமிழ்நாடு பரவலாக அமைந்த பல திறப்பட்ட தொழில்கள் அடங்கிய தொழிற்சாலைத் தொகுதிகளை உடையதாயிருக்கிறது.

தொழில் வளர்ச்சியில் காணப்பட்டு மந்தநிலை மறைந்து வரும் அறிகுறிகள் தெரிகின்றன. தொழில் நடவடிக்கைகள் புத்துயிரும் புது வேகமும் பெற்று வருகின்றன. இந் நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து தொழில் முனைவரிகளைக் கவர்ந்து ஈர்ப்பதில் இம் மாநில அரசு பெருமளவு வெற்றி கண்டுள்ளது. அரசுக்குச் சொந்தமான தொழில் வளர்ச்சிக் கழகம் தனது நடவடிக்கைளைப் பெருக்கிக் கொண்டுள்ளது. தொழில் மூலதனம், தொழில் வளர்ச்சிக்கான கருத்துகள் வழங்கும் நிறுவனமாக விளங்குகிறது. இந்நாட்டின் தொழில் வளர்ச்சியில் இன்றியமையாத பெரும் பங்கு ஆற்ற நிச்சயமாக இம் மாநில அரசு முன்வந்துள்ளது.

தமிழ்நாட்டில் மின்னணுவியல் தொழில் வளர்ச்சி

தமிழ்நாடு அரசு, அடையாறில், மின்னணுவியல் தொழில் வளர்ச்சிக்காகவும், தொழில் நுட்பவியல் அளவில் நுட்பக் கருவிகள் அமைக்கவும் செயலளவில் தொழில் பேட்டை ஒன்றை ஏற்படுத்த திட்டமிட்டுள்ளது. தொழில் நுட்ப நிறுவனங்களில் கிடைக்கக் கூடிய குறிப்பாக இந்தியதொழில் நுட்ப நிறுவனத்தில் பொருளைச் சோதித்தல், சான்றிதல்போன்ற வசதிகளைச் சிறந்த அளவில் பயன் படுத்த வேண்டு மென்பதுதான், இத்தகைய தொழில் பேட்டைகளை தொழில் நுட்ப வளவில் ஏற்படுத்துவதன் முக்கிய கருத்தாகும். இதற்காகத் தொழில் பேட்டையில் மாநில அரசு ஆய்வுக் கூடங்களை ஏற்படுத்தும்.

★

கனவுகள் நனவாகும்

பிற்பட்ட சமூகத்தினர் இந்த அரசிடமிருந்து எதிர்பார்க்கும் நலன்கள் மிக அதிகமென்று நான் உறுதியாகக் கூறமுடியும். ''இது மக்களின் அரசு. இந்த அரசு முன்னேற வேண்டிய இந்த சமூகத்தினரின் ஆசைக் கனவுகளைப் பூர்த்தி செய்யத் தவறாது. இந்த அரசு செய்துதான் திரும்'' என்பது பிற்பட்ட மக்களின் ஒரு அசையாத நம்பிக்கை.

தமிழக மக்களில் அறுபது சதவிகிதமான இந்தப் பிற்பட்டோரின் நலன்களுக்குரிய தேவைகளைப் பூர்த்திசெய்ய வேண்டியது நியாயம். இது அவசியமும் கூட. அவர்களின் முன்னேற்றத்திற்குரிய எல்லாத் திட்டங்களும், அவர்கள் தங்களைத் தாங்களே காப்பாற்றி முன்னேறும் அளவிற்கு வழிவகை செய்வனவாக இருக்க வேண்டும். மற்ற சமுதாயத்தினருடன் இவர்களும் இணைந்து ஒன்றிட வழி செய்து தீரவேண்டும்.

பிற்பட்ட சமூகத்தினர் என்பது யாரைக் குறிக்கிறது? கல்வியிலோ, வாழ்க்கை வசதிகளிலோ, சமுதாய ஈடுபாடுகளிலோ, இவற்றில் முன்னேற்ற மடைந்துள்ள மேல் சாதியினரிடமிருந்து மாறுபட்டு, மிகவும் தாழ்ந்த நிலையில் உள்ளவர்களேயாவர் இந்தச் சமூகத்தினர். இவர்களின் வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தைக் கணக்கிடும் வகையில், 1921ம் ஆண்டுக்குப் பிறகு, சாதி அடிப்படையில் தனித் தனியாகச் சரியான புள்ளி விவரம் தயாரிக்கப்படவில்லை. இதனால். திட்டவட்டமாக யாதும் தெளிவு செய்யமுடியவில்லை.

ஆகவே சாதி ஒன்றை மட்டும் கொண்டுதான் பிற்பட்ட வகுப்பினர் என்னும் பாகுபாடு செய்யப்படுகிறது. இது இன்றைய நிலையில் தவிர்க்கப்பட முடியாத ஒரு நிலையாகும்.

இன்றைய அரசு ஆட்சியில் இவர்களுக்கு ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை, இது மிகவும் குறுகிய கால அளவு என்ற காரணத்தால், திட்டவட்டமாகக் கணக்குப் போட முடியாது. ஆனால் ஒன்று மட்டும் கூற முடியும்—கடந்த 10 ஆண்டு காலத்தில் இவர்களின் வாழ்க்கை மிகவும் முன்னேற்றமடைந்துள்ளது. மேலும் முழு முன்னேற்றமடைய நல்ல வாய்ப்புக்கள் உள்ளன. அதன் காரணமாகவே இந்த அரசு, இந்தக் குழுவை அமைத்திருக்கிறது. பிற்பட்ட சமூகம் எவை எவை என்று பாகுபாடு செய்யும் வகையில் தெளிவு செய்யும் பணி இந்தக் குழுவிடம் ஒப்படைக்கப்படவில்லை.

திரு. ஏ. என். சட்டநாதன்
பிற்பட்டோர் நலக் குழுவின் தலைவர்

மாவட்டங்களில் இந்தக் குழு விசாரணையை முடித்துவிட்டது. விசாரணை அறிக்கையை எழுதி முடிக்க மேலும் சிறிது காலம் ஆகும். விசாரணைக்கு மக்களிடமிருந்து நல்ல வரவேற்பு இருந்தது. ஆக்கப் பூர்வமான புள்ளி விவரம் பலதரப்பட்ட இலாகாக்களிலிருந்தும் கிடைத்துள்ளது. எப்படியும் வரும் செப்டம்பர் திங்களில் இந்தக் குழுவின் அறிக்கை அரசுவசம் ஒப்படைக்கப்படும்.

பிற்பட்ட சமூகத்தினர் தங்கள் முன்னேற்றத்திற்குத் தேவையான அவ்வளவு வசதிகளையும் இந்தக்குழு செய்துதர வேண்டுமென எதிர் பார்க்கின்றனர். முக்கியமாகக் கல்வி உபகாரச் சம்பளம், இலவச உணவு விடுதி (ஹாஸ்டல்), போதுமான மான்யம் போன்றவற்றில் இவர்களின் விருப்பம் உள்ளது. சிறியோருக்கு அதிகப் படிப்பு வசதி, மதிய உணவு, உடை உடை வாங்கப் பண உதவி போன்றவற்றைச் செய்து, அதிகமான ஏழை மக்கள், தங்கள் பிள்ளைகளைப் பள்ளிக்கும், கல்லூரிக்கும் அனுப்ப வழிவகை செய்ய வேண்டுமெனக் கேட்கிறார்கள். சர்க்கார் அலுவலகம், தொழிற்சாலைபோன்றவற்றில் அதிக வேலை வாய்ப்புகளும் கேட்கிறார்கள். இது மாதிரி வேலை வாய்ப்பு வசதிகளைச் செய்து இவர்களின் முன்னேற்றத்திற்கு ஏற்பாடு செய்ய வேண்டியது அவசியமும் நியாயமுமாகும்.

இந்த ஆண்டு மார்ச் மாதம் 14, 15, 16 தேதிகளில் சென்னையில் இத்துறையின் ஆதரவில் உடல் ஊனமுற்றோருக்கான 'உலக நாள்' சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

பர்மா—இலங்கை அகதிகள்

பர்மா—இலங்கையிலிருந்து திரும்பும் அகதிகளுக்கு வேலை வாய்ப்பு வசதி அளிக்கும் நோக்கத்துடன் "வேலைவாய்ப்பு தொடர்பு அலுவலகம்" ஒன்று மாநில மட்டத்தில் நிறுவப்பட்டுள்ளது. இவ்வலுவலகம் பர்மா—இலங்கை அகதிகளுக்கு வேலை வாய்ப்பு தேடித் தரச் சிறப்பு முயற்சி எடுப்பதுடன், அவர்களுக்குத் தொழில் துறையில் பயிற்சி வசதிகளும் ஏற்படுத்தித் தருகிறது.

மத்தியப் பிரதேசத்திலுள்ள "மானு" என்ற இடத்திலுள்ள தொழிற் பயிற்சி நிலையத்துக்கு இது வரை 213 பேர்களையும், அஸ்தினபுரத்திலுள்ள நூற்பு ஆலைக்கு 114 அகதிகளையும், பஞ்சாபில் நங்கல் என்னுமிடத்திலுள்ள பயிற்சிப் பள்ளிக்கு 13 அகதிகளையும் அனுப்பி[illegible]ளது. பயிற்சிக் காலத்தில் ரூ 55 [illegible]விப்பணம் அளிக்கப்படுகிறது. [illegible]ன்னை அம்பத்தூரிலுள்ள நிறுவனமொன்றுக்கு 18 அகதிகள் அனுப்பப்பட்டுப் பயிற்சி பெறுகின்றனர்.

வளரும் வேலை வாய்ப்பு

பொதுவாக நமது மாநிலத்தில் வேலைவாய்ப்புகள் பெருகி வருகின்றன. சென்ற ஆண்டு செப்டம்பர் மாதம் எடுத்த கணக்கின்படி 14,90,274 பேர் மாநில முழுமைக்கும் வேலையில் இருந்தனர். இது 1968ம் ஆண்டு செப்டம்பர் மாதத்துடன் ஒப்பிடும் போது 26,559 பேர் அதிகமாக வேலையில் இருப்பதைக் காட்டுகின்றது. இம் முன்னேற்றம் பொதுத் துறை, தனியார் துறை இரண்டிலும் காணப்படுகின்றது.

வேலை தேடித் தரும் நிறுவனங்களைப் பொறுத்த மட்டில் 1969ம் ஆண்டில் மட்டும் மாநிலம் முழுதும் உள்ள அலுவலகங்களில் 4,03,404 பேர் வேலைக்காகப் பதிவு செய்தனர். 1969ம் ஆண்டு இறுதியில் ,54,924 பேர் வேலை வாய்ப்பகங்களில்வேலை கோரிக் காத்திருந்தனர். இந்த எண்ணிக்கைகள் முந்தைய ஆண்டை விட அதிகமாகும். 1969ம் ஆண்டில் வேலைவாய்ப்பகங்களுக்கு 59,472 வேலைகளுக்காக விண்ணப்பதாரர்களைக் கோரி அரசு அலுவலகங்களும் தொழில் நிறுவனங்களும் கேட்டிருந்தன. இது 1968ம் ஆண்டைவிட 2,017 அதிகமாகும். 1969ம் ஆண்டில் 42,770 பேர் வேலைத் தேடித்தரும் அலுவலகங்கள் மூலம் வேலையில் அமர்த்தப்பட்டனர். இதுவும் முந்தைய ஆண்டை விட 1,189 பேர் அதிகமாகும்.

ஐந்தாண்டுத் திட்டம்

பயிற்சிப் பிரிவைப் பொறுத்த வரையில், ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்றுவதன் மூலம் பெருகி வரும் பயிற்சி பெற்ற தொழிலாளர்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் திட்டமிட்டுச் செயல்படுத்தப்படுகிறது. 1-11-1956ல் ஐந்து தொழிற் பயிற்சி நிலையங்களையும் ஒரு பெண்களுக்கான பயிற்சி நிறுவனத்தையும் கொண்டு 768 பேர்களுக்கு மட்டுமே பயிற்சி தரக்கூடிய நிலையில் நம்மாநிலம் இருந்தது. இஃது இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட முடிவில், 3,368 பேர்களுக்கு 10 தொழிற் பயிற்சி நிலையங்களில் பயிற்சி அளிக்கக் கூடியதாய் வளர்ந்தது. மூன்ருவது திட்டகாலத்தில், இது மேலும் வளர்ச்சியடைந்து 20 தொழிற் பயிற்சி நிலையங்களாகவும் அந்நிலையங்களில் 6,224 பேர்கள் பயிற்சி பெறக்கூடிய திறனும் உடையதாய் மாறியது. தற்போது மாநிலம் முழுவதும் பரவலாக 31 தொழிற் பயிற்சி நிலையங்களும், இந்நிலையங்களில் 13,112 மாணவர்கள் பயிற்சி பெறும் வாய்ப்பும் ஏற்பட்டுள்ளது. வளர்ந்து வரும் நம் தொழில் தேவைகளைக் கருதி, 1974 ஆண்டுக்குள் மேலும் 1,000 பேர்களுக்கு பயிற்சி தரத் திட்டமிடப்பட்டுள்ளது.

மாலைநேர வகுப்புகள்

பொற்கொல்வர், கைத்தறி நெசவாளர், மாதிரி உரு அமைப்பு செய்பவர்களுக்கான மாலை நேர வகுப்புகள் சேலம், திருநெல்வேலி, மதுரை, திருச்சி ஆகிய இடங்களில் உள்ள தொழிற் பயிற்சிப் பள்ளிகளில் 160 பேர்கள் பயிற்சி பெற வாய்ப்புடன் நடந்து வருகின்றது. தொழில் நிறுவனங்களில் பணி புரிபவர்கள், தங்களின் பாட நூல் பயிற்சியை விருத்தி செய்து கொள்ளும் வகையில் மாலை நேர வகுப்புகள் வட சென்னை, கிண்டி, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் 825 பேர்களுக்கு பயிற்சியளிக்க இயங்கி வருகின்றன. இம்மாலை நேர வகுப்புகள் வாரத்தில் மூன்று நாட்கள் தினம் 2 மணி நேரம் நடத்தப்படுகின்றன.

நமது அரசு

வளர்ந்து வரும் நம்முடைய பொருளாதாரம் வரவிருக்கும் முன்னேற்றங்களுக்கு அடிப்படைஆதாரமாயிருப்பதால், வேலை வாய்ப்புப் பெருக்கமும், பயிற்சி பெற்ற தொழிலாளர்களின் தேவையும் பொருளாதாரவளர்ச்சியின் தன்மையையும் வேகத்தையும் பொறுத்தே அமைகின்றது. இன்றைய நிலையில் தொழில் வளர்வதற்கான பல்வேறு தீவிர முயற்சிகளில் நமது அரசு ஈடுபட்டு வருகிறது. தொழில் திறன் வளர, தொழிலும் வளருகிறது, அந்த அடிப்படையில் வேகமாக விரைவடைந்துவரும் தொழில் வளர்ச்சியிலும், வேலை வாய்ப்பிற்கான விரிவடைந்த சந்தர்ப்பத்தை நம்மால் எதிர்பார்க்க முடியும்.

வெறும்
'செல்' அடைத்த
பையடா!

'செல்கள்' எனப்படும் உயிரணுக்கள் கூடிய தொகுப்பே உயிர்ப் பொருளாகும். ஒரு செல் உடைய உயிர்ப்பொருள்களே உலகில் முதன் முதலில் தோன்றின. மனித உடலில் உள்ள செல்களின் எண்ணிக்கை எவ்வளவு தெரியுமா?

26,000,000,000,000,000

காஞ்சி மண்ணில் அகழ்வாராய்ச்சி

டாக்டர் தருமாம்பாள் மகளிர் இலக்கிய வட்டத்தின் உறுப்பினர்களில் 25 பெண்கள், சென்னைப் பல்கலைக் கழகத் தொல் பொருள் ஆய்வுத் துறையினர் காஞ்சியில் தோண்டியுள்ள குழிகளைக் காணச் சென்றோம். டாக்டர் டி. வி. மகாலிங்கம் அவர்கள் அத்துறைக்குத் தலைவராகப் பணியாற்றுகிறார். டாக்டர் கிருட்டிணமூர்த்தியவர்களும், திரு. சா. குருமூர்த்தி, எம்.ஏ., எம்.லிட்., அவர்களும் அகழ்வாராய்ச்சி பற்றிய கருத்துகளை எங்கட்குத் தெரிவித்தார்கள்.

சாதாரணக் குடிகள் வாழ்ந்த இடம் என்பதற்கு அறிகுறியான தொல்பொருள்களும், பழைய காலத்துக் கட்டிடங்களும் இங்கு கிடைத்துள்ளன. இங்கு பதினைந்து அடி ஆழத்தில் மதுசாடிகள் அகப்பட்டன. கூம்பு வடிவம் கொண்ட முப்பதுக்கும் அதிகமான சாடிகளைக் கண்டெடுத்துள்ளனர். இவை உரோம் நாட்டில் தயார் செய்யப் பட்ட மது சாடிகளை ஒத்த உருவம் கொண்டவை. உரோமர்களுக்கும், தமிழர்களுக்கும் பண்பாட்டு, வாணிபத் தொடர்பிலும் ஒத்த ஓர் நிலை இருந்து வந்திருக்க வேண்டும். அவை சுமார் 2,000 ஆண்டுகட்கு முன் செய்யப்பட்டவை எனக் கணக்கிட்டுள்ளனர். மண்பாண்டங்களின் ஓடுகள் அதிக அளவில் அகப்பட்டுள்ள பெரிய அகன்ற இடத்தில் பாத்தி கட்டி, ஒவ்வொரு பாத்தியிலும் பல ஓடுகளைக் குவித்து, அவற்றைச் சுத்தம் செய்து, அவற்றின் தொன்மையையும் காலத்தையும் கணித்துப் பெயர் குறிக்கின்றனர். அவ்வோடுகளை அவர்கள் பாதுகாப்புடன் செய்யும் வேலை, "தான் ஈன்ற குழவியைத் தாய் பரிந்து அரவணைப்பது போன்று" நெகிழ்வை ஏற்படுத்துகிறது. அகழ்வாராய்ச்சிக்குரிய குழிகளை அவர்கள் தோண்டியுள்ள முறை வைப்பைக் காண்கையில் வியப்பு ஏற்படுகிறது. பல மண் அடுக்குகளைக் கணக்கிட்டு எண் குறித்துள்ளனர். ஒன்றின் மேல் ஒன்ருகப் பதினெட்டு அடுக்குகள் காணப்பட்டன.

மண்பாண்டங்களில்தான் எத்தனை வகைகள்!

பாண்டத்தின் உட்புறம் மிருதுவாகவும், மேற்புறம் அதிகமான வழவழப்பாகவும் வர்ணம் தீட்டியும் பளிச்சிடும் வகையிலும் உள்ளன. சில ஓடுகள் அழகிய வண்ணத்துடனும், சித்திர நுணுக்கங்களுடனும் அமைந்து நம்மை ஈர்க்கக் கூடியவையாகவுள்ளன. அவைகள் சற்றுச் செல்வந்தர்கள் புழங்கிய மண்பாண்டங்களாகயிருந்திருக்கலாம். ஓடுகளின் விளிம்புகளும் நன்கு அழகுற வளைத்துச் செப்பனிடப்பட்டுள்ளன.

நாங்கள் பார்த்த பல தொல்பொருள்கள் கலை நுணுக்கமான வேலைப்பாடுகள் அமைந்தவையாக இருந்தன. மண்ணால் சுட்ட ஆண் சிலை ஒன்றினைக் கண்டோம். நல்ல அழகு பொருந்திய முகம். கூர்மை

பெண்ணும்
பேச்சும்...

ஆண்களை விடப் பெண்கள் ஏன் அதிகமாகப் பேசுகிறார்கள்?

இதனை ஆராய்ந்த விஞ்ஞானிகள் மூன்று காரணங்களைத் தருகின்றனர்.

1. **அறிவைவிட உணர்ச்சிகளே பெண்களை அதிகம் ஆளுகின்றன.**
2. **ஒரு பெண்ணின் மனம் ஆண்களின் மனத்தைவிட அதிக விரைவில் செயல்படுகிறது.**
3. **சிந்தனைகளைப் பேச்சாக மாற்றுகின்ற மூளையின் பகுதி ஆண்களை விடப் பெண்களிடத்தில் அதிக வளர்ச்சி பெற்று விளங்குகிறது.**

வேலை வாய்ப்பு பெருகிவரும்

ஒருநாட்டின் பொருளாதாரமுன்னேற்றம் அந்நாட்டின்வேலை வாய்ப்புகளின் அளவைப் பொறுத்தே மதிப்பிடப்படுகிறது. நிறைவுபெற்ற வேலைவாய்ப்புகள் ஏற்படுவது என்பது அந்நாட்டிலுள்ள பல்வேறு வேலைச் சந்தைகளின் சரியான இயக்கத்தைப் பொறுத்தது. வேலைச் சந்தை சரிவர இயங்க, அதிலுள்ள இயக்கும் திறன்களின் செயல்முறைகள் சரிவரக் கட்டுப்படுத்தப்பட்டு சீரிய வழிகளில் செலுத்தப்படல் வேண்டும். இப்பெரும் பணியைச் செய்யவே வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயங்கி வருகிறது.

குறிப்பிட்ட ஒரு வேலைச் சந்தையை எடுத்துக் கொள்ளுவோமேயாயின், அதில் நாம் காண்பது என்ன? அதில் வேலைகொடுப்போரும், வேலை வேண்டுவோரும் இருப்பதைக் காண்கிறோம். ஆனால் வேலைகொடுப்போரின் தேவைக்கேற்றபடி எல்லா வேலை வேண்டுவோரும் அமைவதில்லை. இதனால் ஏற்படும் இடையூறுகள் பல. மிகப் பெரிய இடையூறு வேலையின்மையாகும். இதைப்போக்க வழி என்ன? வேலையில் அமர்த்துவோரின் தேவைக்கேற்பத் தொழிலில் அமர விரும்புவோர் தங்கள் திறனை அமைத்துக் கொள்ள வேண்டும். அதைச் சரிவரச் செய்வதே இந்த வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் நோக்கமாகும். இதற்காகவே சில சிறப்புப் பிரிவுகள் இயங்கி வருகின்றன. தொழில் வேண்டுவோருக்கும் தொழில் அதிபர்களுக்கும் தொழில் முறைகள் மற்றும் தொழில் முன்னேற்றம் பற்றி அறிவுரைகள் வழங்கி இத்தொழில் திறன்கள் யாவும் சீரிய வழியில் செல்ல ஒரு வழிகாட்டியாக இருக்கவே இத்துறை பாடுபட்டு வருகின்றது. இப்படிச் செய்வதன் மூலம் நாட்டின் பொருளாதாரம் சீரிய முறையில் வளர்ந்து முன்னேற்றமடையும் என்பது ஐயமில்லை.

தொழில்வளர்ச்சியைப் பொருத்து...

ஒரு நாட்டில் தொழில் வளர்ச்சி அந்நாட்டின் பொதுப்

யான மூக்கு. காலம் பல கடந்தும் அழியாத பருவத் தோற்றம். பதிய வைத்த பார்வையை மீட்க முடியாதபடி அதன் அழகில் ஈடுபட்டாலும், அதை உருவாக்கிய கலைஞனின் கைத்திறனை எண்ணி வணங்கினோம். சுட்ட மண்பாண்ட வகை (Terra Cotta) என அதற்குப் பெயர் பொறித்துள்ளனர். மண்ணால் சுட்ட காதணி ஒன்றைக் கண்டோம். வட்ட வடிவமானது. அதிலும் நுணுக்கமான கோலமிட்டாற் போன்ற சித்திரங்கள். மற்றும் சுட்ட மண்ணால் செய்யப்பட்ட வளைத்துண்டுகள், சங்கு வளையல்கள், தந்த மணிகள், பச்சை மணிகள், மத்தளம் வடிவம் கொண்ட வெள்ளை மணிகளும் கண்டோம்.

மற்றொரு குழியில் உறைகிணறுகளைப் பார்த்தோம். எங்கள் மனத்தில் நீங்கா இடத்தைப் பிடித்தவை இந்த உறை கிணறுகள்தான். குழியின் இரண்டு பக்கங்களில் இரண்டு உறை கிணறுகளிருந்தன. அவற்றின் சுவர்கள் மடிப்புகளுடன் இருந்தன. அந்நாளில் இவைகளைத் தண்ணீர்த் தொட்டிகளாகவோ, அல்லது தானியக்களஞ்சியங்களாகவோ பயன்படுத்தியிருக்கவேண்டும் எனக் கருதுகின்றனர்.

(டாக்டர் தெய்வநாயகி ஜோதி)

தமிழக முதல்வரும் இத்தாலிய ஓவியரும்

ரோம் நகரில் மாலை நேரத்தில் மக்கள் கூடும் சதுக்கம் ஒன்றில் சுமார் இருபது வயதுள்ள இளைஞன் ஒருவன் மிகச் சிறிய பாத்திரம் போன்ற உலோகத்தின் உட்புறத்தில் அழகிய வண்ண ஓவியங்கள் தீட்டி விற்றுக் கொண்டிருந்தான். அதைக் கண்ணுற்ற முதல்வர் திரு. மு. கருணாநிதி அவர்கள் ஒரு சித்திரத்தை விலை கொடுத்து வாங்கினார். அவர் தமிழ்நாட்டின் முதல் அமைச்சர் என்று தெரிந்தவுடன் அவனுக்கு அளவு கடந்த மகிழ்ச்சி. "என்னுடைய அன்பளிப்பாக இன்னொரு சித்திரத்தையும் வைத்துக் கொள்ளுங்கள்" என்று வேறு ஒரு சித்திரத்தைக் கொடுத்தான்.

அப்பொழுது அருகிலிருந்த முதல்வரின் அந்தரங்கச் செயலாளரிடம் முதல் அமைச்சரின் போட்டோ கிடைக்குமா என்று கேட்டான். அவர் ஒரு போட்டோவைக் கொடுத்ததும் அவனுக்கு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை. அங்கிருந்து முதல்வர் கொஞ்சதூரம் வந்து விட்டார். ஆங்கிலமும் இத்தாலி மொழியும் தெரிந்த இத்தாலி நாட்டுக்காரர் ஒருவரை அழைத்துக் கொண்டு மீண்டும் முதல்வரிடம் ஓடி வந்து அவர் போட்டோவில் கையெழுத்துப் (autograph) போட்டுத் தரும்படிக் கேட்டுக் கையெழுத்து வாங்கிக் கொண்டான். தன் உணர்வையும் மகிழ்வையும் தன் மொழியில் எடுத்துரைக்க அதை இத்தாலி நாட்டுக்காரர் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துச் சொன்னார். முதல்வரின் போட்டோவை சித்திரமாகத் தீட்டித் தமிழ் நாட்டிற்கு அனுப்பிவைக்கப் போவதாக அன்பொழுகக் கூறினான். முதல்வரும் அவன் ஆர்வத்திற்கும் அன்பிற்கும் நன்றி கூறி விடை பெற்றுக் கொண்டார்.

காஞ்சியில்
அகழ்ந்தெடுக்கப்பட்ட
உறைகிணறுகள்.

நீலநிற உல்லாசப் பயணிகள் வண்டி ஆவடிச் சாலையில் ஆரவாரமாகப் போய்க் கொண்டிருந்தது. மாலை நேர மஞ்சள் வெயிலை ரசித்தபடி டிரைவர் தணிகாசலம் வண்டியை ஓட்டிக் கொண்டிருந்தார். வண்டியிலிருந்த 30 மாணவ-மாணவிகளும், கதைகளை அவிழ்த்து விட்டபடியிருந்தனர். அன்று வந்த சினிமா முதல், சந்திரனை வென்ற ஆம்ஸ்டிராங் வரை அவர்கள் பேச்சில் அடிபடாதவையேயில்லை.

வண்டி, சென்னையின் 'பர்மிங்ஹாம்' ஆன அம்பத்தூரை நோக்கிப் போய்க் கொண்டிருந்தது. ஏட்டளவில் எடுத்துரைத்ததை மாணவர்களுக்கு நேரடியாகக் காட்டுவதற்காக இந்த உல்லாசப் பயணத்தை ஏற்பாடு செய்திருந்தார் ஆசிரியர் அன்புடைநம்பி.

தொழிற்பேட்டை வரும் வரை காத்திருக்க மனமில்லை, எதிலுமே அவசரக்கார மாணவனான சந்திரனுக்கு. ''சார், அம்பத்தூர் தொழிற்பேட்டையில் என்னென்ன தயாரிக்கிறார்கள்?''

''மின்சார விசிறி முதல் மினுமினுக்கும் வர்ணங்கள் வரை பல்வேறு பொருள்கள் தயாரிக்கப்படுகின்றன. 117 தொழிற்கூடங்களை இதற்காகத் தமிழ்நாடு அரசாங்கம் அமைத்துக்கொடுத்துள்ளது. இதற்காக அரசாங்கம் கையகப்படுத்தியுள்ள நிலத்தின் பரப்பளவு எவ்வளவு தெரியுமா?''

1200 ஏக்கர் நிலத்தில்...

''பத்து ஏக்கர் இருக்குமா சார்?''

''பத்து அல்ல. சுமார் 12 நூறு ஏக்கர். அதாவது 1200 ஏக்கர் நிலம்.''

''சினிமாவுக்குத் தேவையான சாமான்கள் ஏதாவது தயாரிக்கிறார்களா சார்''—ஒரு திரைப்படப் பிரியனின் கேள்வி, இது.

''ஆமாம். நடிகைகள் பயன்படுத்தத் தக்க 'விக்'குகள், (செயற்கைச் சிகை), கண்கவரும்கண் இமைகள் ஆகியவைகூடத் தயாராகின்றன!''

''வேறு என்ன சார், உற்பத்தி செய்கிறார்கள்'' மீண்டும் கேட்கிறான் சந்திரன்.

''உன் வாயை அடைக்க போல்ட்டும் நட்டும்''—குறும்புக்கார மாணவி மாலினியின் குறுக்குவெட்டு இது. வண்டி, சிரிப்பு ஒலியில் தள்ளாடுகிறது.

''மாலினி சொல்வது உண்மைதான். 'போல்'ட்டும், 'நட்'டும் தயாரிக்கும் நிறுவனமும் இங்கு உள்ளது.''

''எல்லாம் அரசாங்க நிறுவனமா?''

''விக் இந்தியா (சிகை தயாரிப்புத் தொழிற்சாலை) போன்ற ஒரு சில, அரசின் நிறுவனங்கள். மற்ற பெரும்பான்மையானவை தனியார் துறையைச் சேர்ந்தவைதான். சிறு தொழில்களை ஊக்குவிப்பதற்காக இம்மாதிரி தொழிற்பேட்டைகளில் பல தொழிற்கூடங்களைக் கட்டி அவற்றைச் சிறு தொழில் தொடங்குபவர்களுக்குக் குறைந்த வாடகையில் அரசு வழங்குகிறது. நீர், மின்சக்தி, போக்குவரத் வசதி, சாலைகள் முதலிய வசதிகளு டன் நன்கு திட்டமிட்ட இடங்களைச் சிறு தொழிலதிபர்களுக்கு வழங்குவதன்மூலம், தமிழகத்தில் தொழில் வளர்ச்சிக்கு ஊக்கமளிப்பதே, இத்தொழிற்பேட்டைகளை நிறுவியதன் முக்கிய குறிக்கோள் ஆகும்.''

நான்கு வகைகள்

''சென்னையில் மட்டும்தான் இந்தத் தொழிற்பேட்டை உள்ளதா?''

''இல்லை. தமிழகம் முழுவதும் உள்ளது. அவை நான்கு வகையான தொழில் பேட்டைகள். முதலாவது, பல்வேறு வகையான தொழில்களுக்கான தொழிற்பேட்டைகள். இவை மொத்தம் 26 உள்ளன. ஒவ்வொரு வருவாய் வட்டத்திலும் ஒரு தொழிற்பேட்டை இருக்க வேண்டும் என்ற நோக்கத்தில் மேலும் 10 தொழில் பேட்டைகளை நிறுவ அரசு திட்டமிட்டுள்ளது.

இரண்டாவது வகை, தோல், மட்பாண்டத் தொழில் போன்ற குறிப்பிட்ட தொழில்களுக்கான தொழில்பேட்டை. மட்பாண்ட [illegible] திற்காக விருத்தாசலத்திலும்,தோ [illegible] தொழிலுக்காக மாதவரத்திலுமா [illegible] இரு தொழிற்கூடங்கள் தற்போது இயங்கி வருகின்றன. இன்னும் இது போன்ற 5 தொழிற்பேட்டைகள் நிறுவ அரசு ஒப்புதலளித்துள்ளது.

மூன்றாவது வகை, துணைத் தொழிற்பேட்டைகள். பெரி...

தொழில்கள் உள்ள இடங்களில் அவைகளுக்குத் தேவைப்படும் சிறு உதிரிப் பகுதிகளைத் தயாரிக்கும் தொழில்களுக்கானவை, இவை. வடலூர், திருவெறும்பூர் (திருச்சி) உதகை ஆகிய இடங்களில்இவற்றை அரச நிறுவியுள்ளது.

நாலாவது வகை, கூட்டுறவு, தனியார் துறைத் தொழிற்பேட்டைகள். இவ்வகையில் 7 தொழிற்பேட்டைகள் உள்ளன. இவை நிறுவ அரசு கடன் உதவி அளித்துள்ளது.''

ஆசிரியர் முடிக்கவும் அம்பத்தூர் தொழிற்பேட்டை வரவும் சரியாக இருந்தது.

''சார்! வண்டியை எங்கே நிறுத்த?'' டிரைவர் தணிகாசலம் கேட்கிறார்.

''நேரே, நிர்வாக அதிகாரி அலுவலகத்திற்குச் செல்லட்டும்'' ஆசிரியரின் உத்தரவு.

இயற்கையின் எழிலுடன்

தொழிற்பேட்டை என்றால் பட்டறையும் சம்மட்டி ஓசையுமாக இருக்குமென்று எதிர்பார்த்த மாணவ–மாணவியருக்குப் பூஞ்செடிகளுக்கு மத்தியில் மாளிகைபோன்ற கட்டிடம் சற்று வியப்பைத் தருகின்றது. ஆமாம், அலுவலகக் கட்டிடம் மட்டுமல்லாமல், பல தொழில் கூடங்கள், இயற்கையின் எழிலுடன், அழகிய கட்டிடங்களில் தான் இயங்குகின்றன.

மாணவ மணிகள் உற்சாகமாக ஒவ்வொரு கூடமாக சுற்றிப் பார்க்கிறார்கள்.

''இதோ, எங்கள் வீட்டில் இதே ஃபேன் (மின்சார விசிறி) தாண்டி'' என்று 'விஜய்' மின் விசிறி கூடத்தில் ஒருபெண் சுட்டிக்காட்டுகிறாள். ''எங்கள் வீட்டில்கூட இந்த இஸ்திரிப் பெட்டி இருக்கிறதே''! என்று அடுத்த மாணவி பதிலுரைக்கிறாள்.

விதவிதமான வண்ணங்களைக் கண்டு ''டேய் டெக்னிக் கலருடா!'' என்கிறான் திரைப்படப் பிரியன். வெவ்வேறு வித வண்ணங்களைப் பற்றி விவரிக்கிறார், நிர்வாகி.

போல்ட், நட் பகுதி வந்ததும் மாணவ–மாணவியர் அனைவரும் சந்திரனைப் பார்த்துச் சிரிக்கின்றனர். அவற்றின் தேவையில்லாமலேயே மூடிய வாயைத் திறக்காமலே வருகிறான், சந்திரன். அவனுடைய எண்ணமெல்லாம், தான் பெரியவனானதும் எந்த மாதிரித் தொழில் துவங்கலாம் என்ற கற்பனையில் ஈடுபட்டிருந்ததுதான் அதற்குக் காரணம்.

அடையப்பா! எத்தனை வகைத் தொழில்கள். குடைக் கம்பிகளைத் தயாரிக்கும் தொழிற்கூடம்; பிளாஸ்டிக் பைகளைத் தயாரிக்க ஒரு கூடம்; அச்சடிக்கும் மை, அழகான சட்டைகள், மருந்துகள், மின்சார அடுப்புகள், ரெயில்வே கைகாட்டிகளுக்கான உபகரணங்கள், பல்வேறு யந்திரங்களுக்கான பாகங்கள் இப்படி எத்தனை தரப்பட்ட பொருள்கள் தயாரிக்க இங்கே தொழிற்கூடங்கள் உள்ளன.

சுற்றி வரும் மாணவ மணிகளுக்கு ஒரே இடத்தில் எல்லாத் தொழில்களையும் பார்த்துவிட்ட மனநிறைவு.

நம்பிக்கை ஒளி

அனைத்தையும் சுற்றிப் பார்த்ததும் மாணவ–மாணவியரின் முகத்தில் புதிய ஒளி–புதிய நம்பிக்கை தெரிகிறது. ஆயிரக்கணக்கானவர்களுக்கு வேலை வாய்ப்புத் தரும் இந்தத் தொழிற்பேட்டைகள் அவர்கள் ஒவ்வொருவர் மனத்திலும் ஒரு வித சிந்தனையைத் தூண்டி விட்டுள்ளது. அவர்கள் மனத்தினில் ஒரு லட்சியக் கனவினை உருவாக்கியுள்ளது.

தொழில் வளம் பெருகிட அரசு அமைத்துத் தந்துள்ள வசதிகள் சூழ்நிலைகள், அந்த இளம் உள்ளங்களின் மனத்தில் தெளிவாகப் பதிந்து விடுகின்றன. அன்றாட வாழ்க்கைத் தேவைகளுக்கான பொருள்களைத் தயாரிக்கும் தொழில்களும், அந்நியச் செலவாணியை அள்ளித்தரும் தொழில்களும் அவர்கள் மனத்தில் மாறி மாறி நிழலாடுகின்றன. வேலையின்மை என்ற இருள்படலம் அகல்கின்றது.

அம்பத்தூர், தமிழகத்தின் தொழில் வளர்ச்சிக்கு ஒரு எடுத்துக் காட்டு.

தமிழகத்தில் தொழில்வளர நல்ல சூழ்நிலையிருப்பதை எதிரொலிக்கும் பிரதிபிம்பம்.

இதோ, பரந்து கிடக்கும் பூமி, புதிய புதிய தொழில் கூடங்களைத் தாங்கி நிற்கத் தயாராக இருக்கிறது. தமிழகத்தில் புதிய புதிய தொழில்களைத் துவங்க தொழிலதிபர்களை அழைக்கிறது அம்பத்தூர்.

நாசியைக் கவரும் நறுமணத் தைலம்

தமிழக அரசின் ''சின்கோனா''த் துறையினரால் மருந்தாகவும், மணம் வீசும் பொருளாகவும் பல அரிய தைலங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. அவற்றைக் குறித்துச் சிறு விளக்கம் இங்கே தரப்படுகின்றது.

நீலகிரித் (யூகாலிப்டஸ்) தைலம்: சளி, இருமல், கைகால் மூட்டு வலி, நெஞ்சுவலி, தலைவலி ஆகியவற்றிற்கு உடம்பில் தடவலாம். அதோடு இருமலுக்கும் தொண்டை கரகரப்பிற்கும் சிறிதுசர்க்கரையில் இரண்டு சொட்டுத் தைலத்தை விட்டு உட்கொண்டால், குணம்தெரியும். ஆஸ்துமா, நெஞ்சுச் சளி போன்றவற்றிற்குக் கொதிக்கும் நீரில் இரண்டு சொட்டு தைலம் விட்டு ஆவி பிடித்து வந்தால் பலன் கிடைக்கும்.

வின்டர் கிரின் தைலம்: நூறு கிராம் தேங்காய் எண்ணெயைச் சுட வைத்து அதில் இரண்டு தேயிலைக் கரண்டி அளவு இந்தத் தைலத்தைச் சேர்த்து மூட்டுவலி, தலைவலி, நெஞ்சு வலி ஆகியவற்றிற்கு, உடம்பில் தடவினால் பலன் தெரியும். பல்வலியை உடனடியாகக் குறைக்க, பஞ்சில் சில துளி தைலத்தை விட்டுப்பல்லில் ஒதுக்கிக் கொள்ளவும்.

சூடத் தைலம்: மூட்டு வீக்கம், மூட்டு வலி, நெஞ்சு வலி இருப்பவர்கள், 25 கிராம் தேங்காய் எண்ணெய் அல்லது நல்லெண்ணெயில் இத்தைலத்தை இரண்டு தேக்கரண்டி அளவு விட்டு, மேலுக்குப் பூசிக் கொள்ளலாம். நெஞ்சுச்சளிக்கும், இருமலுக்குங்கூட இதைப் பயன்படுத்தலாம்.

சூட வில்லை: சூடத் தைலத்தைப் போல் இதையும் பயன்படுத்தலாம். 25 கிராம் தேங்காய் எண்ணெயைச் சூடாக்கி அதில் 6 சூடவில்லைகளைப் பொடிசெய்து போட்டு மேற் குறிப்பிட்டபடி உபயோகிக்கலாம்.

ஜாவா சித்திரோனெல்லாத் தைலம்: ஈக்கள், கொசுக்கள், மூட்டைப்பூச்சிகள் இவைகளை ஒழிக்க இது அருமையான மருந்து. மண்ணெண்ணெயுடன் கலந்து அடித்தால் இது நல்ல பயனைத் தரும்.

வெட்டிவேர் தைலம்: 100 கிராம் தேங்காய் எண்ணெய் அல்லது வேறு, தலைக்குத் தேய்க்கும் எண்ணெயுடன் சில துளிகள் வெட்டிவேர்த் தைலத்தைச் சேர்த்தால் அது மிகவும் நறிய மணத்தினைத் தரும் (ஹேர் ஆயிலாக) எண்ணெயாகப் பயன்படுத்தலாம்.

குளிக்கும் நீரில் சில துளிகள் விட்டுக் குளித்தால் பகலெல்லாம் உடம்பில் நறுமணம் வீசிக் கொண்டிருக்கும்.

கோடைகாலத்தில், மண் பானையிலுள்ள குடி தண்ணீரில் இரு துளிகள் விட்டால், குடிக்க இனிமையாக இருக்கும். உடலுக்கும் குளுமையைத் தரும்.

ஜெரனியம் தைலம்: ரோஜாவைப் போன்று இனிய நறுமணம் தரும் தைலம், இது. கைக்குட்டையில் இரு துளித் தைலத்தைத் தெளித்தால் நாளெல்லாம் மணம் வீசிக் கொண்டிருக்கும். சிறு துணியில் இரு துளி தைலத்தை விட்டு வீட்டிலோ, காரிலோ வைத்திருந்தால் நறுமணம் கமழும். 100 கிராம் தேங்காய் எண்ணெயில் விட்டுத் தலைக்குத் தேய்க்கும் வாசனை எண்ணெயாகவும், குளிக்கும் போதும் பயன்படுத்தலாம்.

பச்சோலித் தைலம்: 100 கிராம் தேங்காய் எண்ணெயுடன் ஒ தேயிலைக் கரண்டி தைலத் கலந்து வைத்துக் கொள்ளவு படுக்கும் முன் உச்சந்தலையில் சிறி தடவி விட்டுப் படுத்தால் அரு யான தூக்கம் வரும்.

இத்தைலத்தையும் மேலே கூறிய தைலங்களைப் போல் வாசனை எண்ணெயாகவும், குளிக்கவும் பயன்படுத்தலாம்.

யூகாலிப்டஸ்-சிரிடோராத்தைலம்: கூந்தலை வளர்க்க இது அரிய தைலம். மயிர் கொட்டுவதைத் தடுக்கும். அடர்ந்து வளர உதவும். 100 கிராம் தேங்காய் எண்ணெய் அல்லது சுத்தப்படுத்தப்பட்ட நல்லெண்ணெய், அல்லது விளக்கெண்ணெய் ஆகியவற்றில் இரு தேக்கரண்டி சேர்த்து தலைக்குத் தேய்க்கவும் பயன்படுத்தலாம். எலுமிச்சம் பழம் போன்ற வாசனையுள்ளது, இத்தைலம்.

ாவிரி திப்புறத்துக் கோதுமை!!

'பாட்டுக்கொரு புலவன்' என்று ராட்டப் பெற்ற பாரதியார் வர்கள், ''கங்கை நதிப் புறத்துக் காதுமைக்குக் காவிரி வெற்றிலையை மாறு கொள்ளுவோம்'' ன்று பாடினார். உண்ண உணவளிக்கும் அரிசியும், சோளம், கம்பு, கேழ்வரகு, வரகு ஆகிய சிறுதானிய வகைகளும் தமிழ்நாட்டில் போதிய அளவு இருக்கும்போது, கங்கை நதிப் புறத்தில் விளையும் கோதுமையைக் காவிரி வெற்றிலைக்குப் பண்டமாற்று செய்ய வேண்டும் என்று ஏன் பாடினார்? ஒவ்வொருவரும் சிந்தித்துப்பார்க்க வேண்டிய கேள்வி இது!

உடல் வளர்ச்சியும், உடல் நலமும் ஏற்படுவதற்கு உணவில் புரதச் சத்து, வைட்டமின்கள், தாது உப்புகள், கார்போகைடிரேட், கொழுப்புச் சத்து ஆகிய ஊட்டச் சத்துகள் போதுமான அளவில் இருக்க வேண்டும். மேற் கூறிய ஊட்டச் சத்துகள் அரிசி, சோளம், கம்பு, கேழ்வரகு, வரகு ஆகியவைகளில் உள்ளதைவிட, கோதுமையில் அதிக அளவில் அடங்கியுள்ளன என்பது ஆராய்ச்சியில் கண்ட உண்மையாகும். அதை அனுபவத்தில் அறிந்ததனாலேயே, பாரதியார் தமிழ்நாட்டின் சமவெளிகளில் கோதுமை விளையாவிட்டாலும், கங்கைச் சமவெளிகளில் விளையும் கோதுமையைப் பண்டமாற்று முறையில் வாங்கி உண்டு பயன்பெறுவோம் என்று கருதியே அப்படிப் பாடியிருக்கக் கூடும்.

இங்கும் சாகுபடி செய்யலாம்

பாரதியார் காலத்திலே தமிழ்நாட்டின் சமவெளிகளில் கோதுமை விளையவில்லை; விளைவிப்பதற்குஏற்ற கோதுமை தினுசுகளும் கிடைக்கவில்லை. ஆனால், நாளும் வளர்ந்து வரும் வேளாண்மை ஆராய்ச்சியின் பயனாக, தமிழ் நாட்டின் சமவெளிகளில் சாகுபடி செய்வற்கேற்ற மெக்சிகன் கட்டை கோதுமை தினுசுகள் (Mexican dwarf wheat strains) கிடைத்துள்ளன.

இந்திய வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தின் மண்டல ஆராய்ச்சி நிலையம் கோயம்புத்தூரில் செயல்பட்டு வருகிறது. இந்நிலையத்தில் மேற்கொண்ட ஆராய்ச்சிகள் வெற்றியாக முடிந்துள்ளன. அதன் பயனாய்க் கோயம்புத்தூர் பகுதியில் குளிர் காலத்தில் கோதுமை சாகுபடி செய்யலாம் என்பது தெளிவாகியதுடன், ஏற்ற தினுசுகள் என்னென்ன என்பதும் தெரிந்தது. மேலும், குறைந்த பட்சம் ஹெக்டருக்கு 4 டன் கோதுமை விளைவிக்க முடியும்என்பதும் புலனாகியது.

சென்ற ஆண்டில் கோவை, தர்மபுரி, வடஆர்க்காடு ஆகிய மாவட்டங்களில் வேளாண்மைத் துறையினரின் முயற்சி காரணமாகச் சுமார் 340 ஏக்கர் பரப்பளவில் கோதுமை சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

தென்ஆர்க்காடு மாவட்டத்தின் தலைநகரான கடலூரில் உள்ள ஒரு ஆர்வமுள்ள உழவர் பெருமகன், சென்ற ஆண்டில் கோதுமையைப் பயிரிட்டுப் பார்த்துள்ளார். நல்ல மகசூல் கிடைக்கும் என்றநம்பிக்கை அவருக்குத் தோன்றியுள்ளதாக அறிகிறோம். அதுபோலவே பல உழவர் பெருமக்கள் பல மாவட்டங்களிலும் கோதுமையைச் சாகுபடி செய்ய ஆர்வம் கொண்டுள்ளனர்,

லாபம் கருதிப் பயிரிடாவிட்டாலும், நலமான உடலைக் கருதியாவது நமக்கு வேண்டிய கோதுமையை நாமே உற்பத்தி செய்து கொள்ள வேண்டியது நமது தலையாய கடமையாகும். தமிழ்நாட்டின் சமவெளிகளில் கோதுமையைச் சாகுபடி செய்ய வாய்ப்பு இருப்பதாலும், கோதுமையைச் சாப்பிட வேண்டும் என்ற ஆர்வம் வளருவதாலும், கோதுமை சாகுபடி பற்றிய ஒருமித்த செய்நேர்த்தி முறைகளை (Package of practices) உழவர் பெரு மக்களின் நலன் கருதி ஈண்டுப் படைக்கின்றோம். ஒருமித்த செய்நேர்த்தி முறைகளை மேற்கொண்டு கோதுமை சாகுபடி செய்தால் நல்ல மகசூல் பெறுவதோடு நலமான உடலும், வளமான வாழ்வும் பெற இயலுமாதலின், பின்கண்ட ஒருமித்த செய்நேர்த்தி முறைகளைமேற்கொள்ளுமாறு உழவர் பெருமக்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கின்றோம்.

தமிழ்நாட்டின் சமவெளிகளில் மக்சிகன் கட்டை கோதுமை Mexican dwarf wheat) பயிரிட ருமித்த செய்நேர்த்தி முறைகளில் மிழ்நாட்டிற்கு ஏற்ற இனுசு ளும் அவற்றின் வயதும் வருமாறு:

1. சர்பதி சோனாரா—85 நாட்கள்
2. கல்யாண் சோனா—95 நாட்கள்
3. சேப்டு வர்மா—100 நாட்கள்

பருவம்

நவம்பர் முதல் பிப்ரவரி வரையுள்ள குளிர்காலமே ஏற்றது. கோயம்புத்தூர் நிலைமையில் நவம்பர் முதல் வாரம் விதைப்பதற்குச் சிறந்த காலமாகும்.

நிலம் தயாரித்தல்

மண் நன்கு புழுதியாகும் அளவுக்கு 3 முதல் 4 தடவை உழ வேண்டும். கடைசி உழவிற்கு முன்பு ஏக்கருக்கு 20 வண்டி (10 மெட்ரிக் டன்) கலவை எரு அல்லது தொழு எரு வீதம் இட்டு மண்ணுடன் ன்கு கலக்குமாறு உழுதுவிட வண்டும். கட்டிகளை உடைத்து விட்டு நிலத்தைச் சமப்படுத்த வேண்டும். பின்பு நிலத்தின் தன்மைக்கு ஏற்பவும், தண்ணீரை நல்ல முறையில் திறமையாகப் பாய்ச்சுவதற்கு ஏற்பவும் வசதியான பாத்திகளாக வயலைப் பிரித்துக் கொள்ள வேண்டும். பாத்திகள் 15 அடி நீளமும், 10 அடி அகலமும் உள்ளனவாக அமைப்பதே சிறந்தது.

விதையும் விதைப்பும்

பாத்திகளில் 15 செண்டி மீட்டர் (6 அங்குலம்) இடைவெளி விட்டு ''மார்க்கர்'' என்னும் கருவியால் கோடு கிழிக்கவும். இவ்வாறு செய்வதால் 15 அடி நீளமுள்ள 18 வரிசைகள் கிடைக்கும். ஏக்கருக்கு 60 கிலோ விதை வீதம் விதைக்க வேண்டுமாதலின், ஒவ்வொரு பாத்திக்கும் தேவையான அளவு விதையைக் கணக்கிட்டுக் கொண்டு, அந்த அளவு விதையைப் பாத்திகளில் முன்பே வரிசை வரிசையாகக் கிழிக்கப்பட்டுள்ள பள்ளமான கோடுகளில் விதைக்கவேண்டும். 2 முதல் 3 செண்டி மீட்டர் ஆழத்திற்கு மேற்படாமல், மேலாகவே விதைக்க வேண்டும். விதைகளை மண்ணால் மூடிவிட்டு, அவை நன்கு ஊறுமளவுக்குத் தண்ணீரைப் பாத்திகளில் விடவேண்டும்.

உரமிடுதல்

கோதுமைக்கு ஏக்கருக்கு 46 கிலோ தழைச்சத்து, 23 கிலோ மணிச்சத்து, 23 கிலோ சாம்பல் சத்து ஆகியவை முறையே கீழ்க்கண்டவாறு தேவைப்படும்.

அடி உரம் (கிலோவில்)	23	23	23
மேல் உரம் (கிலோவில்)	23	—	—
மொத்தம்	46	23	23

அடி உரங்களை ஆழம் குறைவான படைசாலில் (Small furrows) இட்டு மண்ணால் மூடிவிட வேண்டும். இதன்மேல் விதைகளை விதைக்க வேண்டும். விதைத்த 25வது நாளில் மேல் உரமிட வேண்டும். களை எடுத்து விட்டு வரிசைகளின் இடையில் மேல் உரத்தை இடுவதே சிறந்தது. மேல் உரமிட்டவுடன் நன்கு தண்ணீர் பாய்ச்ச வேண்டும்.

பின் செய் நேர்த்தி

பயிர்களைக் கலைத்து விடுதல் அவசியமில்லை. பயிர்கள் சற்று கும்பலாக இருந்தாலும் கலைத்து விடாமல் அப்படியே வளரவிட வேண்டும். தேவையானபொழுது களை எடுக்க வேண்டும். விதைத்த 20 நாள் கழித்து ஒருமுறையும், 35 நாள் கழித்து மறுமுறையும் களை எடுத்தல் வேண்டும்.

விதைத்தவுடன் நீர்பாய்ச்ச வேண்டும். 3வது நாளில் முளைநீர் விடவேண்டும். பின்பு வாரத்திற்கு ஒருமுறை அல்லது 10 நாட்களுக்கு ஒருமுறை நீர்பாய்ச்சுதல் வேண்டும். ஆனால் நீர்ப்பாசன இடைவெளியை மண்ணின் இயற்கை, தட்பவெப்பநிலை, முந்திய பாசனத்தின் ஆழம் அல்லது அடர்த்தி ஆகியவைகளைப் பொறுத்தே முடிவு செய்ய வேண்டும்.

பயிர்ப் பாதுகாப்பு

கோதுமைப் பயிரின் இலைகளில் ''ரஸ்ட்'' (Rust) எனப்படும் சொறி நோய் தோன்றினால், 'டைத்தேன்' அல்லது 'சினப்' அல்லது 'குமான்' ஆகியவைகளில் ஏதேனும் ஒன்றை ஒரு காலன் தண்ணீருக்கு 11 கிராம் வீதம் கலந்து ஏக்கருக்கு 50 முதல் 70 காலன் மருந்துக் கலவையைத் தெளிக்கவேண்டும். தேவையானால் 10 நாட்கள் இடைவெளியில் மீண்டும் மேற்கூறியபடி மருந்து தெளிக்கவும்.

தண்டு துளைப்பான் (Stem borer) தோன்றி கோதுமைப் பயிரில்சேதம் ஏற்படுத்தக் கூடும். பூக்கும் வரை 10 நாட்களுக்கு ஒரு முறை பாரத்தியான் 0.05 சதம் (100 சி.சி. பாரத்தியானை 100 லிட்டர் தண்ணீரில் கலந்து) அல்லது என்டிரின் 0.04 சதம் (200 சி.சி. என்டிரினை 100 லிட்டர் தண்ணீரில் கலந்து) தெளித்துத் தண்டு துளைப்பானைக் கட்டுப்படுத்தலாம். கோதுமையில் தண்டு துளைப்பானால் ஏற்படும் சேதம், நெல்லில் தண்டு துளைப்பானால் ஏற்படும் சேதத்தை ஒத்திருக்கும்.

அறுவடை

விதைத்த 85 முதல் 90 நாட்களில் அறுவடைக்குத் தயாராகும். கதிர்களை மட்டும் அறுத்துச் சேகரித்து அடிக்க வேண்டும். விசையினால் இயங்கும் கதிர் அடிக்கும் கருவியைப் பயன்படுத்த முடியுமானால், நெல்லை அறுவடை செய்வதுபோல், கோதுமையையும் தாளுடன் அறுவடை செய்து கதிர் அடிக்கும் கருவியில் செலுத்தித் தானியங்களைப் பிரித்து விடலாம். கோதுமைத் தாள் (வைக்கோல்) கால்நடைகளுக்கு நல்ல தீவனமாகும்.

கோயம்புத்தூரைச் சுற்றியுள்ள இடங்களில் ஏக்கருக்கு 1500 கிலோ மகசூல் கிடைத்துள்ளது. கோயம்புத்தூர் வட்டம், தொண்டாமுத்தூர் வட்டாரத்தில் அமைக்கப்பட்ட தேசிய செயல் விளக்கம் ஒன்றில் ஏக்கருக்கு ரூ 1,236 நிகர லாபம் கிடைத்துள்ளதாகத் தெரிகிறது.

அணுவைத் துளைத்து...

அணுசக்தியின் பெரும் பயன் மின்சக்தி பெறுதல். மின்சக்தி, நாட்டின் வளர்ச்சியில் நல்ல மாற்றத்தை உண்டாக்கி, செழிப்பைப் பெருக்கி மனித சமுதாயத்தின் தரத்தை உச்சிமீது உயர்த்திக் காட்டுவதாகும். தொல் பொருளற்ற இடங்களில் அனல் வாயிலாகக் கிடைக்கும் மின்சக்தியின் விலையை விட அணு சக்தியின் வாயிலாகக் கிடைக்கும் மின் சக்தியின் விலை குறைவாக இருப்பதால், உலகத்தின் பல்வேறு பாகங்களில் அணுமின் நிலையங்கள் பரவலாகவும் வேகமாகவும் அதிகரித்துக் கொண்டே வருகின்றன. நிலையங்களின் அளவு பெருகப் பெருக, உற்பத்தியின் செலவினம் வெகுவாகக் குறைந்து கொண்டே வருகின்றது. அணு உலையில் 400 மெகாவாட் மின் சக்திப் பெருக்கத்திற்கு ஓராண்டிற்குத் தேவையான யுரேனியம் 50 டன்கள். ஆனால் இந்தஅளவு மின் சக்தியை அனல் மின் நிலையத்தில் உற்பத்தி செய்ய ஆண்டொன்றுக்கு 12 சதம், 15 லட்சம் டன் நிலக்கரி தேவைப்படுகிறது. இதைக்காணும் போது அணுமின் திட்டத்தால் மனித உழைப்பும் செலவினமும் சிக்கனமாகும் என்பதேவெள்ளிடைமலை.

மேலும் தொல்பொருளை எரித்து அதன் வாயிலாக கிடைக்கும் அனலால் கொதிகலனிலுள்ள நீரை ஆவியாக்கி அதன் மூலம் அனல் மின் சாரத்தைப் பெறுகிறோம். ஆனால், சாதாரண உலைக்குப் பதிலாக அணு உலையைப் பொறுத்தி யுரேனியம் அல்லது புளுடோனியம் ஆகியவற்றை எரி பொருளாக உபயோகப்படுத்தி முறையான அணுச்சிதைவின் மூலம் உண்டாக்கப்படும் அனலிலிருந்து நீராவியைப் பெருக்கி அணுமின் சக்தியைப் பெறுகிறோம். இரண்டு மின்சக்திக்கும்தேவையான கருவிகள் ஒன்று போலவே அமைந்துள்ள போதிலும் அணு உலை மிகவும் சிக்கலுடையதாகும். ஆகவே அணு உலையை அமைப்பதில் மிகவும் நுண்மையுடன் கூடிய கவனம் செலுத்தி, வெளிப்படும் கதிர்வீச்சு உடல் நலனைப் பாதிக்கும் ஆதலால், தகுந்த முன்னெச்சரிக்கையுடன் கட்டுப்படுத்திச் செயலாற்ற வேண்டும்.

வெவ்வேறு வித அணுக்கள்

அணுசக்தி மின்சக்தியோடுநின்றுவிடாமல் அதன் துணைப்பொருளான கதிர் ஐஸோடோப்பு (Radio Isotope) செய்யவும் பயன்படுகிறது. கதிர் ஐஸோடோப்பு விவசாயம், மருத்துவம், உயிரியல், தொழில், ஆராய்ச்சி செய்தல், கடல் நீரைக் குடிநீராக்குவது, மற்றும் கப்பலை இயக்குதல் போன்ற பல பிரிவுகளில் பயன்படுத்தப்படுகிறது.

ஒவ்வொரு தனிப்பொருளும்ஒரே ரசாயனக் கிரியை கொண்ட அணுக்களைக் கொண்டதாக இருப்பினும் அதன் அணு அமைப்பு, பருமன் முதலியவற்றில் மாறுபட்டதாக இருக்கும். இந்த வெவ்வேறு விதமான அணுக்களைத்தான் அவ்வப் பொருளின் ஐஸோடோப் என்கிறோம். சில ஐஸோடோப்புகள் கதிர் வீச்சுகளை வெளிப்படுத்துவதால் இதை கதிர் ஐஸோடோப்புகள் என்கிறோம். சில கதிர் ஐஸோடோப்புகள் இயற்கையில் கிடைக்கின்றன. அதிகமான கதிர் ஐஸோடோப்புகள் செயற்கையாக அணு உலையிலும் வேக வளர்த்திகளிலும் (Accelerators) தயார் செய்யப்படுகின்றன. கதிர் ஐஸோடோப்புகளின் சில கதிர்கள் திடப் பொருளினுள் எக்ஸ்-ரே செல்லுவதுபோல் செல்லும். இதைப் புகைப்படங்கள் மூலமாகவோ எலக்ட்ரானிக் உபகரணங்கள் மூலமாகவோ கண்டுபிடிக்கலாம்.

இந்த ஐஸோடோப்புகள் உயிருள்ள பொருள்களில் இயற்கை மாற்றங்களை உபயோகமுள்ளதாகச் செய்வதால் அதை விவசாயத்துறையிலும், அதனுடைய கதிர்வீச்சைக் கொண்டு அதன் பாதை அல்லது இருப்பிடத்தை அறிய முடியுமாதலால் இதை ஆராய்ச்சி, மருத்துவம், தொழில், உயிரியல் மற்றும் பலதுறைகளிலும் உபயோகப்படுத்துகிறோம்.



விவசாயத்தில் கதிர் ஐஸோடோப்புகள் நல்லமுறையில் பயிரிடுதல், தாவரங்களின் கூட்டுச்சேர்க்கை (Better strain), தீமையான பூச்சி ஒழித்தல் ஆகிய பல ஆக்கப் பணிகளுக்குப் பெரிதும் பயன்படுகின்றன. தாவரங்களின் சத்துள்ள உணவு, நுண்ணுயிர்களின் மாற்றம் (Mutation), பூச்சி மருந்தை வினியோகிக்கும் முறை, அதனுடைய செயல் ஆகியவைகளை ஆராய்வதற்குக் கதிர் இயக்கமுறை டிரேசர்கள் (Radio Active Tracers) பயன்படுகின்றன. அதிகக் கதிர் வீச்சினுல் தாவரங்களில் நிறைய மாறுதல்கள் காணப்படுகின்றன. இதனுல் தாவரங்களின் வளர்ச்சி பெருகுவதோடு நோயை எதிர்க்கும் சக்தியுள்ள தாவரங்களையும் வளர்க்க முடியும்.

கதிர் ஐஸோடோப்புகள் கோழி வளர்ப்பில் கோழிகளுக்கும், உயிரினங்களுக்கும் தேவையான மாற்றுச் சத்து உணவைக் கண்டுபிடிப்பதில் பெரிதும் உதவுகின்றன. அதனுல் அதிகமான அளவு முட்டைகள், பால், மாமிசம் முதலியவை கிடைக்கின்றன.

உணவு கெடாமல் நீண்ட நாட்களுக்குப் பதப்படுத்திப் பாதுகாப்பதிலும் இது முக்கிய பங்கு வகிக்கிறது. உதாரணமாகக் கதிர் வீச்சிற்கு உட்பட்ட கோதுமை, உருளைக்கிழங்கு, பழங்கள், மீன் முதலியன நீண்ட காலம் கெடாமல் இருக்கின்றன. நீண்டகாலம் கெடாமல் பாதுகாக்க வேறெந்த முறையினுலும் முடியாது. சில கனி வகைகள் சீக்கிரம் கனியாதபடி காக்கவும், வெங்காயம், உருளைக்கிழங்குகளில் சீக்கிரம் குருத்து கிளம்பாமல் தடுத்தல்; சுருங்குதல், பூசணம் பிடித்தல் முதலிய கெடுதல்களைத் தவிர்க்கவும் குறைந்த அளவு காமா கதிர்வீச்சினுல் செய்ய முடியும் என்று வெற்றிகரமாகக் கண்டுபிடிக்கப்பட்டு உள்ளது. ரொட்டி, சப்பாத்திகளைக் கெடுக்கும் பூசணம் முதலியவைகளை காமா (Gama) கதிர் வீச்சினுல் கட்டுப்படுத்தி இந்தப் பொருள்களைப் பாலிதின் பைகளில் சீல் செய்து 50 நாட்கள் வரை கெடாமல் வைத்திருக்கலாம்.

தாயன்பும் -

தமிழக அதிகாரிகளும்

கையிலே குழந்தையையும் காப்பாற்றிக்கொண்டு, அந்தக்குழந்தையின் மீது சீறிவருகிற மிருகத்தையும் சமாளித்துக் கொண்டு நிற்கும் தாயின் அன்பினைப் போன்ற கவனத்தை, அன்பினை மாவட்ட ஆட்சித் தலைவர்களும், அதிகாரிகளும் நம் நாட்டின் மேம்பாட்டிற்காக, இந்த சமுதாயத்தின் பாதுகாப்பிற்காகச் செலுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம். இதை நீங்கள் மறக்க மாட்டீர்கள்! ஆட்சியில் இன்று ஒரு கட்சி இருக்கலாம். நாளை வேறு கட்சியின் ஆட்சி வரலாம். ஆனுல் ஜனநாயக நாட்டின் அமைதி என்றென்றைக்கும் இருந்து தீரவேண்டிய ஒன்றாகும். அதைப்போலவே சமுதாயத்தில் நேர்மை நிலைக்க, நாணயம் விளங்க நாம் நம்முடைய ஒத்துழைப்பைத் தர வேண்டும்.

முதல்வர் கலைஞர்
மாவட்ட ஆட்சியாளர்கள் மாநாட்டில்

உயிரியல் ஆராய்ச்சியில் கதிர் ஐஸோடோப்புகள் டிரேசர்களாகப் பெரிதும் பயன்படுகின்றன. ஒரு கதிரியக்க டிரேசரை ஓர் உறுப்பில் செலுத்தி அதனுடைய வளர்ச்சி மாற்றம் (Metabolic changes) முதலியவற்றை அறியலாம்.

மருத்துவம், உடல் பாதுகாப்பு முதலிய பிரிவுகளில் அணுசக்தியின் உதவி ஒரு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. இதனுல் வியாதிகளை உதாரணமாக மூளைக் கழலை (brain tumor), தைராயிட் சீர்கேடு முதலியவற்றை அறிந்து கொண்டு அதைத் தடுப்பதற்கும், மனிதனின் பிணித் தொல்லைகளைக் குறைப்பதற்கும் ஏதுவாகிறது. நோய் தீர்ப்பதிலும், நோய் கண்டு பிடிப்பதிலும் உலகத்தில் உற்பத்தியாகும் கதிர் ஐஸோடோப்புகளில் 75 சதவிகிதத்திற்கு மேல் உபயோகப்படுத்தப்படுகின்றன என்று கணக்கெடுக்கப்பட்டிருக்கிறது. மருத்துவர்கள் கதிர் ஐஸோடோப்புகளை நோயாளியின் உடலில் செலுத்தி, அதை டிரேசர்களாக உபயோகித்து, அது செல்லும் பாதையைக் கொண்டு நோயைக் கண்டுபிடிக்கிருர்கள்.

இந்தியத் துறைமுகங்கள், கடற்கரை ஆகியவற்றில் ஏற்படும் மணல் அசைதலைக் கண்டுபிடிப்பதில் டிரேசர்கள் பயன்பட்டு வருகின்றன.

கொச்சி, மங்களூர், கர்வார், மர்மகோவா மற்றும் இந்தியாவில் உள்ள இதர துறைமுகங்களிலும் இந்த யுக்தியால் பல உண்மைகள் தெரிந்தன. சேது சமுத்திரக் கால்வாயின் போக்கைக் கண்டுபிடிப்பதற்கு பாக் ஜலசந்தியில் பரிசோதனைகள் நடத்தியது குறிப்பிடத்தக்கதாகும். சமீபத்தில் எண்ணூர் அனல்மின் நிலையத்தில் கழிவான சாம்பலை (Fly ash) எங்கு கொட்டலாம் என்று இந்த முறையில்தான் விவரங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. குளிர்படுத்த கடல்நீரை எடுக்கும்போது கொட்டும் சாம்பல் திரும்பிவராதவாறு எடுத்த விவரங்கள் குறிப்பிடத்தக்கன.

ஆளியாறு, ஸ்ரீசைலம் அணைகளில் ஏற்பட்ட நீர்க் கசிவுப் பாதைகளைக் கண்டுபிடிக்க டிரேசர் முறை கையாளப்பட்டது. கங்கை நதியில் கசிவினுல் ஏற்படும் நீர் இழப்பைக் கண்டுபிடிப்பதற்கு உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது.

மூன்ருவது நிலையம் இங்கே!

நாட்டின் அணுமின்சக்தித் திட்டத்தை உருவாக்க முயலும்போது கிடைக்கும் எரிபொருளுக்குத் தக்கவாறும், தொழில் வளர்ச்சி, அணுமின்சக்தியின் பொருளாதாரம் இரண்டிற்கும் தக்கவாறு எந்த அணுஉலை அமைக்கப்பட வேண்டும் என்பதையும், உள் நாட்டு உற்பத்தித் திறனையும் கருத்தில் கொள்ளப்படுகிறது. மூன்று புதிய மின்சக்தித் திட்டங்கள் அமைக்கப்பட்டு அதன் மூலம் சுமார் ஆயிரம் மெகாவாட் உற்பத்தி செய்ய நடப்புத்திட்ட காலத்திற்குள் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

சென்னையிலிருந்து சுமார் 50 மைல் தெற்கே, கிழக்குக் கடற்கரையில் அமைந்துள்ள கல்பாக்கம் என்னுமிடத்தில் மூன்ருவது அணுமின் சக்தி நிலையம் நிறுவப்பட்டுள்ளது. வடிவமைப்பிலும், மின்சக்தி வெளிப்படுத்தும் திறனிலும் இது ராஜஸ்தான் அணு உலையை ஒத்தது. முதலாவது அணு உலையில் வேலைகள் துவக்கப்பட்டுத் திருப்திகரமான முன்னேற்றம் காணப்படுகிறது. ட்ராம்பேயில் கிடைக்கும் திறனினுலும் முதல் இரண்டு அணுமின் நிலையங்கள் அமைக்கும்போது ஏற்பட்ட பயிற்சியாலும் நம்முடைய விஞ்ஞானிகளும் பொறியாளர்களும் இந்தக் கல்பாக்கம் அணு உலையில் வடிவமைப்பு, நிர்மாண வேலை, நடத்தும் பொறுப்பு ஆகியவைகளை வெளிநாட்டு உதவி இல்லாமல் செய்து விடலாம் என்ற நம்பிக்கையில் முயலுகிருர்கள்.

அண்மையில் இந்தியத் தலைமையமைச்சர் திருமதி இந்திரா காந்தி, கல்பாக்கம் அணுமின் நிலையத்தின் இரண்டாவது, பகுதி வேலை தொடங்குவதற்கான அறிகுறியைத் தெரிவித்துள்ளார்.

திருக்குறளின் பெருமையைக் கூற வந்த புலவர்,

"அணுவைத் துளைத்து
எழு கடலைப் புகுத்திக்
குறுகத் தரித்த குறள்"

என்று புகழ்ந்தார். அது கற்பனையாக இருந்தது. ஆனுல் நமது காலத்தில் அணுவைப் பிளப்பது என்பது ஒரு புது அத்தியாயத்தைத் தொடங்கியுள்ளது. வியக்கத்தக்க நல்ல பல சாதனங்கள் இதனுல் மனித சமுதாயத்திற்குக் கிடைத்துள்ளது. மேலும் அதிகப்பலன்களைத் தரும் என்று மனித சமுதாயம் எதிர்பார்ப்பதில் வியப்பொன்றுமில்லையல்லவா?





போது மனித இருதயம் தயாராகிறது.

கவனத்திற்கும் கண்காணிப்புக்கும் இடையே அறுவை சிகிச்சை நடக்கிறது.

சென்னை அரசாங்க மருத்துவ மனையின் வரலாற்றில் முதல் முறையாகச் 'செயற்கை இருதய சுவாச யந்திர'த்தின் துணை கொண்டு மனித இருதயத்தில் உள்ள ஓட்டை அடைக்கப்பட்டது. குறிப்பிட்ட கால எல்லைக்குள் அறுவை சிகிச்சை வெற்றிகரமாக முடிவடைகிறது.

யந்திர இருதயத்தைப் பற்றி மேற்போக்காகச் சொல்லிவிடுவது எளிது. ஆனால் நடைமுறையில் இது அவ்வளவு சுலபமான வேலை அல்ல. இதில் பல இடர்ப்பாடுகள் உண்டு. ஒரு நபருக்கு 8 முதல் 10 புட்டிகள் சுத்த இரத்தம் தேவைப்படுகிறது. இந்த இரத்தம் செயற்கைக் குழாய்கள், அறைகள், பில்டர் குழாய்கள் வழியாகச் செல்லும்போது இரத்தத்தின் சிவப்பு அணுக்கள் உடைந்து விடுகின்றன. வேறு மாறுதல்களும் நடந்துவிடுகின்றன. சில சமயங்களில் இரத்தம் உறைந்து விடுவதும் உண்டு. இந்த மாற்றங்கள் மனித உயிருக்கே ஆபத்து விளைவித்து விடலாம். எச்சரிக்கையுடன் அறுவை சிகிச்சை முடிக்கப்படுகிறது.

ஆபரேஷன் அறையில் இருந்து நோயாளி வெளியில் கொண்டு வரப்பட்டுத் தனி அறையில் வைக்கப்படுகிறார். மருத்துவர்கள் 24 மணி நேரமும் அவரைக் கண்ணும்கருத்துமாகக் கண்காணிக்கிறார்கள்.

நேரம் ஓடுகிறது.

அறுவை சிகிச்சை நடத்திய தலைமை மருத்துவர் தனது உதவியாளர்கள் சூழச் சிகிச்சை பெற்றவரைப் பரிசோதிக்கிறார்.

அவர் மெல்லக் கண் விழித்துச் சுற்றுமுற்றும் பார்க்கிறார்.

சுற்றிலும் மருத்துவர்கள், சற்றுத் தள்ளினாற்போல் உற்றார் உறவினர்கள்.

நினைவு திரும்புகிறது.

மெல்லப் புன்னகை பூக்கிறார்! தலைமை மருத்துவரும் புன்னகை பூக்கிறார்!

''இனிக் கவலை இல்லை''—தலைமை மருத்துவர் கூறுகிறார்.



பெற்றோரும் மற்றோரும் ஆனந்தக் கண்ணீர் வடிக்கிறார்கள்.

ஓரே ஒரு இதயம் மறு பிறப்பு எடுக்கிறது. அதைச் சுற்றியுள்ள பல இதயங்கள் மகிழ்ச்சி வெள்ளத்தில் திளைக்கின்றன.

மருத்துவ மனையின் ''இருதய—சுவாச யந்திரம்'' கடமையை முடித்த முறையில் சற்று இளைப்பாறுகிறது.

உலகம் சுற்றும் சிலந்தி!

சிலந்தி பின்னிய வலையின் மெல்லிய இழைகள் ஒரு பவுண்டு கிடைத்தால் அவற்றைக் கொண்டு உலகையே ஒரு சுற்றுச் சுற்றி விடலாம்!

இத்தாலியர்களைப் பார்க்கும்போது அவர்கள் தங்கள் பாரம்பரியப் பெருமை குன்றாது வாழ விரும்புகின்றவர்களாகத் தெரிகின்றார்கள்.

சுவிட்சர்லாந்து நாட்டுக்காரர்களைச் சந்திக்கும்போது ஒரு நடுநிலைப் போக்கோடு முன்னேறுவதில் நாட்டமுள்ளவர்களாக இருக்கிறார்கள்.

பிரஞ்சுக்காரர்களோ நேர்மையாகப் பாடுபட வேண்டுமென்ற நோக்கம் கொண்டவர்களாகக் காணப்படுகிறார்கள்.

பிரிட்டிஷ்காரர்களை நெருங்கும்போது உழைப்பும் சுயகௌரவமும் மிக்கவர்களாகத் தோன்றுகிறார்கள்.

ஜெர்மானியரை அணுகும்போது மற்ற நாட்டினரைவிட முன்னேற வேண்டுமென்பதில் அக்கறை கொண்ட கடினமான உழைப்பாளிகளாக விளங்குகிறார்கள்.

—அமைச்சர் வேழவேந்தன்.

GOING PLACES?

Just ring us up and leave the rest to us till you're on board.

Wherever you go, whatever the purpose — business, pleasure, cultural, or educational — we are here to serve you to your full satisfaction. You don't have to worry about anything except to dial us and tell us what you need.

KUWAIT for comfortable, care-free travel.

WORLDWINGS

—GSA *KUWAIT AIRWAYS*
7-A, GREAMES ROAD, MADRAS-6.
PHONE : 88729, 82276, 81246 TELEX : MS 671

Branches at : BANGALORE, HYDERABAD, COIMBATORE, COCHIN, MANGALORE, MADURAI & TRIVANDRUM
TELEPHONE : 51943, 32610, 33959, 32682, 7159, 27227, 3994

இதயத்தின் புன்னகை

1970ம் ஆண்டு மார்ச் மாதம் 16ம் தேதி.

முற்பகல் நேரம்.

சென்னை பெரிய மருத்துவ மனையில் உள்ள ஒரு ஆபரேஷன் அறை. மருத்துவர்களும் நர்சுகளும் சுறுசுறுப்பாக இயங்குகிறார்கள். மருத்துவமனைச் சிப்பந்திகள் ஸ்ட்ரெச்சரில் படுக்க வைத்து ஒரு நோயாளியைத் தள்ளிக் கொண்டு வருகிறார்கள்.

அன்று மிக முக்கியமான அறுவை சிகிச்சை நடக்கவிருக்கிறது.

ஆபரேஷன் அறைக்குள் ஸ்ட்ரெச்சர் நுழைகிறது. அதைத் தொடர்ந்து வந்த நோயாளியின் உற்றார் உறவினர்கள் வெளியே தங்குகிறார்கள்.

அந்த வழியாக வந்த ஒருவர், உறவினர் ஒருவரை அணுகி விசாரிக்கிறார்:

''என்னங்க, பெரிய ஆபரேஷனா?''

ஆம் என்பதற்கு அறிகுறியாக உறவினர் தலை அசைக்கிறார். அவர் உள்ளத்தில் என்னென்ன எண்ணங்களோ!

வந்தவர் தொடர்கிறார், ''என்ன ஆபரேஷனோ?''

''இருதய ஆபரேஷன்'' உறவினர் ஆடாமல் அசையாமல் பதில் கூறுகிறார்.

கேள்வி கேட்டவர் தனது நெஞ்சைப் பிடித்துக் கொள்கிறார்.

ஆபரேஷன் அறை மூடப்படுகிறது. உள்ளே பளபளக்கும் கத்தி, கத்திரிக்கோல், ஆக்ஸிஜன் சிலிண்டர், மயக்க மருந்து கொடுக்கும் கருவி... மற்றும் ஆயிரக்கணக்கான கருவிகள், யந்திரங்களுக்கிடையே நோயாளியின் உடல் கிடத்தப்படுகிறது.

முதல் முறையாக...

சென்னை பெரிய மருத்துவமனையில் நாள் தோறும் சிறிய—பெரிய அறுவை சிகிச்சைகள் எத்தனை எத்தனையோ நடத்தப்படுகின்றன. ஆனால் இந்த அறுவை சிகிச்சைக்கு ஒரு முக்கியத்துவம் உண்டு. மிக நுணுக்கமான இந்த ஆபரேஷனில் சென்னை மருத்துவமனை வரலாற்றில் ''இருதய-சுவாச யந்திரம்'' முதல்முறையாக உபயோகப்படுத்தப் பட்டது.

சென்னை அரசாங்க மருத்துவ மனையில் பெறப் பட்ட இந்த யந்திரம்—தமிழக வரலாற்றில் ஓர் ஒப்பற்ற சாதனை என்று சென்னை பொது மருத்துவமனை டீன் டாக்டர் பாலகிருஷ்ணன் பெருமைப்படும் இந்த யந்திரம்—அறுவை சிகிச்சையின்போது மாற்று இருதயமாக, நுரையீரலாக வேலை செய்கிறது.

இருதயம் மனித உடலின் மிக முக்கியமான உறுப்பு. மனிதனின் பிறப்பில் இருந்து இறப்பு வரையில் நிமிடத்திற்கு 70 முதல் 100 முறை இடை விடாமல் இயங்குகிறது. சில சமயங்களில் இருதயம் நோய்வாய்ப் பட ஏதுவாகிறது. பிறவியில் இருந்தும், சில சமயங்களில் இடையிலும் ஏற்படுவது உண்டு.

இருதயத்தில் ஓட்டை, இருதய அறையில் உள்ள வால்வுகளில் பழுது ஆகியவை இருதயத்திற்கு ஏற்படும் நோய்களில் முக்கியமானவையாகும்.

முன்னால் கூறப்பட்ட ஆபரேஷன் அறைக்குள் கொண்டுசெல்லப்பட்டவருக்கு இருதயத்தில் ஓட்டை ஏற்பட்டிருந்தது. அந்த ஓட்டையை அடைத்துச் சீர்படுத்தவே சிகிச்சை நடக்கிறது.

இரண்டு வகை

இருதய நோய்களைக் குணப்படுத்தும் அறுவை சிகிச்சை இருவகைப் படும். ஒன்று, மூடிய முறை. அடுத்தது திறந்த முறை.

இருதயம் இயங்கிக் கொண்டிருக்கும்போதே இருதய வால்வுகளைப் பிரித்துப் பெரிதுபடுத்தியோ அல்லது வெட்டியோ செய்யப்படுகிறது. இந்த ஆபரேஷன் நடந்து கொண்டிருக்கும்போது மூளை, நுரையீரல், மூத்திரக்காய் முதலிய அவயவங்களுக்குச் சுத்த இரத்தம் தடையில்லாமல் கிடைக்க வழி செய்யப்படுகிறது. இது மூடிய முறை.

திறந்த முறை இருதய அறுவை சிகிச்சையில், முதலாவதாகச் செயற்கை முறையில் குளிர் பதன முறைக்கு உடல் உள்ளாகிறது. அப்போது இருதயம் 6 முதல் 9 நிமிடம் வரை இயங்காமல் நின்று விடுகிறது. இப்படி வேலை செய்யாமல் இருதயம் நிற்கும் நேரத்தில், அறுவை சிகிச்சை நிபுணர் இருதயத்தின் அறைகளைத் திறந்து 6 நிமிடத்திற்குள் பழுது பார்க்கவேண்டும். மிக முக்கியமான நுணுக்கமான அறுவை சிகிச்சையைப் பரபரப்புடன் ஆனால் பதட்டமில்லாமல் செய்வது என்பது எத்தனை பெரிய காரியம்!

இது போன்ற அறுவை சிகிச்சைகள் பலவற்றை அரசாங்கப் பெரிய மருத்துவ மனையில் நிகழ்த்தி நமது நிபுணர்கள் வெற்றி பல கண்டுள்ளார்கள். ஆனால் இந்தக் குறுகிய நேரத்தில் இருதயத்தின் மேல் பாகத்தில் உள்ள அறைகளின் ஓட்டைகளைச் செப்பனிடுவதோ அல்லது நுரையீரல் தமனிகளின் ஒருமுக வால்வுகளைப் பெரிதுபடுத்துதல் போன்ற சிகிச்சைகளையோ தான் செய்ய முடியும். இருதய சிகிச்சைகளைப் பற்றிப் பேசும்போது இவை சிறிய சிகிச்சைகளே! ஆனால் இவற்றைவிடப் பெரிய சிகிச்சை செய்ய வேண்டியிருந்தால் என்ன செய்வது?

இரண்டுமணி நேரம்

சென்னை அரசாங்கப் பெரிய மருத்துவ மனை சாதனை புரிகிறது. ''செயற்கை இருதய—சுவாச யந்திரம்'' மருத்துவ மனையில் நிறுவப் படுகிறது. இதன் உதவியால் மனித உயிரை இரண்டு அல்லது மூன்று மணிநேரம் நிறுத்தி வைக்க முடியும்.

ஆறு நிமிடத்தில் அறுவை சிகிச்சை முடிக்கவேண்டிய நிலை மாறி இரண்டு மணி நேரம் கிடைப்பது தாராளம்—ஏராளம்.

ஆபரேஷன் அறைக்குள்கொண்டு செல்லப்பட்ட நோயாளிக்கு இருதயத்தில் ஏற்பட்டுள்ள நோய் என்ன?

அவரது இருதயத்திலே ஓட்டை விழுந்து விட்டது. அது அடைக்கப்படாவிட்டால்...? அவருக்கு என்றோ எப்பொழுதோ...? வளர்ந்து வரும் விஞ்ஞானம் மரணத்தின் சவாலை ஏற்று நிற்கிறது.

ஆபரேஷன் அறைக்குள்கொண்டு செல்லப்பட்டவருக்கு என்ன நடக்கிறது என்பதைப் பார்ப்போம்.

உடலில் சுத்தம் செய்யப்பட வேண்டிய பகுதிகள் சுத்தம் செய்யப்படுகின்றன. மயக்க மருந்து கொடுக்கப்படுகிறது. அவர் மயக்கமடைகிறார். அறுவை சிகிச்சை மூலம் அவரது நெஞ்சு திறக்கப்படுகிறது.

அவ்வப்போது எத்தனை கண்காணிப்புகள்—சோதனைகள்.

எண்ணங்களையும் செயல்களையும் உருவாக்கி—உடலின் உள்ளத்தின் நிலைக்களனான சின்னஞ்சிறு இருதயம் அங்கே தெரிகிறது.

சுத்த இரத்தம்

மருத்துவர்கள் கண்ணும் கருத்துமாகச் செயல்புரிகிறார்கள். அங்கு 'இருதய சுவாச யந்திரம்' தயாராக இருக்கிறது. யந்திரத்தின் மூலம் நோயாளியின் இரத்தம் மேல் இருதய வலது அறையில் இருந்து குழாய்கள் மூலம் யந்திரத்துக்குள் செலுத்தப்படுகிறது. அங்கு இரத்தம் பிராணவாயுவைப் பெறுகிறது. அதாவது அசுத்த இரத்தம் அங்கு சுத்த இரத்தமாக மாறுகிறது இந்த நிகழ்ச்சி சாதாரணமாக நுரையீரலில் நிகழ்வதாகும். அடுத்தபடியாக இங்கிருந்து சுழலும் குழாய்கள் வழியாக சுத்த இரத்தம் நோயாளியின் தொடையில் உள்ள தமனியின் வாயிலாக உடலுக்குள் செலுத்தப்படுகிறது.

இப்போது நோயாளியின் இருதயம் வேலை செய்யவில்லை. இருதயத்தின் வேலையை யந்திரம் செய்கிறது. அறுவை சிகிச்சைக்கு இப்

எழுத்துப் பிழை!

எங்கள் எண்ணத்தில் பிழை இருக்கிறதா என்று பாருங்கள்; அதை விட்டுவிட்டு எழுத்தில் பிழை இருக்கிறதா என்று தேடிப் பார்க்காதீர்கள்.

ஏழைகள் வாழவேண்டும்; எரியாத குடிசை வேண்டும்; வயிறார உணவு, மானமாத் துணி; அறிவாக் கல்வி இவைகளைத் தரவேண்டும்; உழைப்பதற்கு வாய்ப்பும்; உழைப்பதற்கேற்ற ஊதியமும் வேண்டும் என்று எண்ணுகின்ற எங்கள் எண்ணத்தில் என்ன குறை காணுகின்றீர்கள்?

குறிப்பிட்டுக் கோடிட்டுக் காட்டுங்கள்; குறைகளைக் களைகிறோம்!

—பேரறிஞர் அண்ணா



மூன்றாம் உலகத் தமிழ் மாநாடு

சங்கம் வளர்த்த தமிழின் சிறப்பினைக் குன்றாத இளமையும் மாளாத வளமும் பெற்ற தமிழ் மொழியின் வெற்றியினை ஆராயப் பன்னாட்டுப் பேரறிஞர்கள் கூடும் மூன்றாவது உலகத் தமிழ் மாநாடு, பிரெஞ்சு நாட்டின் தலைநகராம் பாரிசில் 1970 ஜூலை 15லிருந்து 18 வரை நடைபெறுகின்றது. பேராசிரியர் பிலியோசா அவர்கள் மாநாட்டுக்குத் தலைமை தாங்குகிறார். தமிழக முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி மாநாட்டை ஆரம்பித்து வைக்கிறார்.

தமிழகத்திலிருந்து, நிதியமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன் தலைமையில் 18 பேர்கள்கொண்ட குழு மூன்றாவது உலகத் தமிழ் மாநாட்டில் பங்கு கொள்ளுகின்றது. குழுவில் மற்ற உறுப்பினர்கள்:

திரு. பி. ஜி. கருத்திருமன், திரு ம. பொ. சிவஞானம், திரு. என். டி. சுந்தரவடிவேலு, திரு. தெ. பொ. மீனாட்சி சுந்தரனார்; திரு சா. கணேசன்; திரு. கா. அப்பாதுரையார்; திரு. இ. வா ஜகன்னாதன்; திரு. ஏ. சுப்பையா, திரு. வி. எஸ். தியாகராஜ முதலியார்; திரு. வி. ஐ. சுப்பிரமணியம்; திரு எஸ். மகாராஜன்; திரு. அகஸ்தியலிங்கம் பிள்ளை; திரு. ஐ. மகாதேவன்; திரு. எஸ். நாகசாமி; திரு. கே. வெங்கட சுப்பிரமணியம்; அத்துடன் புதுவை முதல்வர் திரு. ஃபருக் மரைக்காயர் அவர்கள்.

தமிழ் மொழி இயல் ஆராய்ச்சிப் பணிகளை ஊக்குவிப்பதற்காகத் தோன்றியதும், 'யுனெஸ்கோ' உதவி பெற்றதுமான பன்னாட்டுத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தின் ஒரு பணி என்ற முறையில் இம்மாநாடு நடத்தப்படுகின்றது. முதலாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு கோலாலம்பூரில் 1966-ஆம் ஆண்டிலும், இரண்டாவது உலகத் தமி மாநாடு சென்னை மாநகரில் 196 -ஆம் ஆண்டிலும் சிறப்பாக நடை பெற்றன. மூன்றாவது உலக தமிழ் மாநாடு பாரிசில் கூடுவ மூலம் தமிழ் ஆராய்ச்சி நிறுவன தின் உலகளாவிய தன்மை எடுத்துக் காட்ட வாய்ப்பு ஏ படுகின்றது. அத்துடன் திரா விடக் கலாச்சாரத்தின் ஒ செம்பாகமாகத் தமிழ் மொ இயல் குறித்துத் தெரியவத்து விவரங்கள் அனைத்தையும் ஐரோப்பிய மொழி ஆராய்ச்சியாளர்கள் அறிந்து கொள்ளவும் வாய்ப்பு ஏற்படும். நான்காவது உலகத் தமிழ் மாநாடு 1973 ஜனவரியில் இலங்கையில் நடைபெறும்.

பாரிசில் நடக்கும் உலகத் தமிழ் மாநாட்டில் 39 நாடுகளைச் சேர்ந்த சுமார் 200 பிரதிநிதிகள் கலந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 60 பல்கலைக் கழகங்களையும் உயர்தரக் கல்வி நிறுவனங்களையும் சார்ந்த பேரறிஞர்கள் மாநாட்டில் பங்கு பெறுகிறார்கள். பிரான்ஸ், ஜெர்மனி, இந்தியா, அமெரிக்க ஐக்கிய நாடுகள், மாரிஷஸ் தீவு, மலேசியா, சிங்கப்பூர், ஹாங்காங், ஜப்பான், கனடா, ஆகிய நாடுகளிலிருந்து பிரதிநிதிகள் குறிப்பிடத்தக்க அளவில் கலந்துகொள்கிறார்கள். பல்வேறு நாடுகளின் தூதுவர்கள், தமிழ் அல்லாத வேறு துறைகளைச்சேர்ந்த ஆராய்ச்சி வல்லுநர்கள் ஆகியோரும் பங்கு பெறுவர்.

'யுனெஸ்கோ' துணை இயக்குநர் டாக்டர் ஆதி சேசையா, 'யுனெஸ்கோ' தலைமை நிலையத்



உலகத் தமிழ் மாநாட்டுக்குச் செல்லும் தமிழ் நாடு நிதியமைச்சருக்கும் புதுவை முதல்வருக்கும் விமான நிலையத்தில் வழியனுப்புவிழா!

தில் தமிழ் மாநாட்டுப் பிரதிநிதிகளுக்கு ஒரு விருந்தளிப்பார். அதனைத் தொடர்ந்து தமிழ் முறை நாட்டிய நிகழ்ச்சிக்கு அயல் நாட்டுத் தூதுவர்கள், அதிகாரிகள் ஆகியோர் அழைக்கப்பட்டுள்ளனர்.

உலகெங்கும் ஆங்காங்கே உள்ள தமிழ் பேசும் மக்களுடன், பிரெஞ்சு நாட்டின் உறவுகள் தொடர்புகளை நினைவு கொள்ள இந்த மாநாடு ஒரு வாய்ப்பாக அமையும். தென்னிந்தியா, மலேயா, இலங்கை முதலிய நாடுகளில் கல்வி வளர்ச்சிக்கும் மொழி இயல் ஆராய்ச்சிக்கும் பிரெஞ்சு மிஷனரிகளும் பேராசிரியர்களும் ஆற்றிய பணிகளை நினைவு கூர்வதற்கும் இது பயன்படும்.

ஒரு இந்திய மொழி ஆராய்ச் சம்பந்தமாக மேற்கு நாடு ஒன்றி உலக மாநாடு கூடுவது இதுவே முதல் தடவை. சென்னை மாநக ில் தமிழ் ஆராய்ச்சி நிலையம் ஏற்படுத்தும் திட்டத்தையும் இம் மாநாடு ஆராயும்.

சாதனைகளை விளக்க...

'தமிழரசு' என்ற பெயரைத் தாங்கி வரும் இந்த ஏடு, அரசின் பல்வேறு துறைகளிலிருந்து தனித் தனியே வெளியிடப்பட்டு வந்த இதழ்களின் இணைப்பு வெளியீடாகும்; சாதாரண ஏழைகளின் ஏற்றத்தினை இதயத்தில் ஏந்தி நிற்கும் மாண்புமிகு முதல்வர் அவர்களின் எண்ணத்தில் பூத்த மலராகும். இந்த யுகமே சாதாரணமானவர்கள் என்று கருதப்படுகிற ஏழைகளின் அசாதாரண சக்தியினைக் காட்டும் மக்களாட்சி யுகமாகும். அரசின் கொள்கைகளையும் திட்டங்களையும் சாதாரண மக்கள் அறிந்து கொள்வது மக்களாட்சி அமைப்பின் இன்றியமையாத தேவையாகும். ஆகவே, ஏழைகளின் நலனுக்காக அரசு தீட்டியுள்ள திட்டங்கள், ஆற்றியுள்ள சாதனைகள், அரசின் கொள்கைகள் ஆகியவற்றைப் பொதுமக்களுக்கு விளக்கிக் காட்டி, அவர்களின் கருத்தினை அறிந்து, ஒத்துழைப்பையும் பெறும் வகையில் செயற்பட்டு, தமிழக அரசின் நீண்டகாலத் தேவையினை நிறைவேற்றும் என்று நம்புகிறேன். எல்லோரும் இதனை வாங்கிப் பயன்பெற வேண்டும் என்பதற்காகவே குறைந்த விலையில் வெளியிடப்படுகிறது.

இந்த ஏடு நாளும் வளர்ந்து மக்களிடம் விரைந்து பரவி செல்வாக் [illegible]பெறும் என்று திடமாக நம்புகிறேன். இதழின் வெற்றிக்கு எனது வாழ்த்துக்கள்.

E. P. ராயப்பா
தலைமைச் செயலாளர்

பொன்னேடு


அன்று
இன்று
சுயமரியாதைத் திருமணம் செய்துகொண்டவர்களுக்கு எதிர்ப்பு-சொத்து கிடைக்காத நிலை.
சுயமரியாதைத் திருமணங்கள் சட்டப்படி செல்லும் என்ற நிலை.
அன்று
இன்று
பேருந்து உரிமையாளர்களே பெருந்தனக்காரர்கள் என்ற நிலை.
75 மைலுக்கு மேற்பட்ட பேருந்துத் தடங்கள் அரசு உடைமையாயின.
வரி
அன்று
இன்று
புஞ்சை நிலத்துக்கும் வரி வசூலிக்கப்பட்டது.
புஞ்சை நிலத்துக்கு வரி நீக்கம் செய்யப்பட்டது!
அன்று
குடி தண்ணீருக்கும் 'கியூ' நின்ற கொடுமை.
சென்னைக்கு மட்டுமின்றி வழியிலுள்ளூர்களுக்கும் காவிரிநீர்.

கைவண்ணப் பொருள்களின்
களஞ்சியம்

குறளகம்

கதர்-கைத்தொழில் அங்காடி

தொலைபேசி எண்கள் 26762-21552-21553

கண்கவரும் பட்டுப்புடவைகள்,
கதர்த்துணிகள், பொன்னுடை,
திரைச்சேலைகள், மெத்தை,
தலையணைகள், சந்தனம், தந்தம்,
கொம்புச்சாமான்கள், செம்பு,
பித்தளை, வெள்ளியிலான பரிசுப்
பொருள்கள், பலவித தோல்பொருள்கள், பனைபொருள்கள்,
மண்பாண்டம், எண்ணெய்
எல்லாம் உண்டு

தமிழகத் தலைநகருக்கு வருவோர்
தவறாது காணவேண்டிய இடம்!

உங்களுக்கு வேண்டிய
எல்லாமே
இங்கே
கிடைக்கும்



Registered No. M. 8667

2.6.71|

இவர்கள் எதிர்கால இன்பத்திற்கு

தமிழ்நாடு அரசு பரிசுத் திட்டத்திற்கு நீங்கள் வழங்கும் ஒவ்வொரு ரூபாயும் இவர்களின் மகிழ்ச்சிக்கு அள்ளித் தருவதாகும் ... எதிர்காலத்தை நோக்கியுள்ள இளஞ்சிறுர்களுக்கு நல்ல ஆரோக்கியம், கல்வி மற்றும் வீடுகள் உருவாக அந்தப் பணம் அரசாங்கத் திட்டங்களில் முதலீடு செய்யப்படுகிறது. அத்துடன் நீங்கள் செலவு செய்யும் ஒவ்வொரு ரூபாய்க்கும், அதிகபட்ச எண்ணிக்கையுள்ள பரிசுகளை அடைவதற்கு மகத்தான வாய்ப்பு இருக்கிறது என்பதையும் மறந்துவிட வேண்டாம்.

அடுத்த குலுக்கலுக்கான
பரிசுகளின் மொத்தத் தொகை : **ரூ. 17,50,000**

ஒவ்வொரு வரிசைக்கும்
முதல் பரிசு : **ரூ. 1,00,000**

குலுக்கல் தேதி: 25-7-1970

தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டுத் திட்டம்
இதுவரை உருவாக்கிய புதிய லட்சாதிபதிகள் = 172 பேர்

பரிசுச் சீட்டுகள் விற்பனை விறுவிறுப்பாக நடைபெறுகிறது.
ஒரு சீட்டின் விலை ஒரே ஒரு ரூபாய்தான்!

இன்றே வாங்குங்கள்
தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு

வெளியீடு: இயக்குநர், தமிழ்நாடு அரசு செய்தி விளம்பரத்துறை, சென்னை-9

உறுதியான கட்டடங்கள்: பொதுப்பணியில்-1

சிமெண்ட் கான்கிரீட் பாலம்

உறுதியையும் சிறப்பையும் இணைக்கும்

சங்கர் சிமெண்ட்

பாறை போன்று உறுதி நிலைத்திருக்கக் கூடியது
ISI மார்க்குடன் உத்தரவாதம் உள்ளது

இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட். தன் பில்டிங். சென்னை-2
23 ஆண்டுகள் நிலைத்து — இன்னும் வளர்ந்துகொண்டே போகிறது
இலவச தொழில் நுட்ப ஆலோசனைக்கு [illegible]

முரசு

4 - AUG 1970
R.R. 339/p

மலர் 1 1970 ஆகஸ்டு 1 இதழ்

தமிழக முதல்வர்
தமது மேலை நாட்டுச்
சுற்றுப்பயணம் பற்றிய
தொடர் கட்டுரையைத்
தொடங்குகின்றார்.

ஏராளமான படங்கள்
விளக்கக் கட்டுரைகள்
கருத்து விருந்துகள்
வளர்ச்சித் திட்டங்கள்

கண்கவர்
வண்ணம்
எண்ணிலா
உண்மை

குறைந்த விலையில்
நிறைபயன் விளைக்கும்
சிறந்த ஏற்பாடு

இனியவை இருபது

1. புறப்பட்டேன்!

"சென்றிடுவீர் எட்டுத் திக்கும்—கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்"

கவிச் சக்கரவர்த்தி பாரதியார் வெறும் சொல்லழகிற்காக இந்தக் கவிதை வரிகளைப் புனையவில்லை. பண்டைத் தமிழர், கடல் பல கடந்து பல்லாயிரக்கணக்கான கற்கள் தொலைவிற்கு அப்பால் நாகரிகத் தொடர்பும், வாணிபத் தொடர்பும், அரசியல் தொடர்பும் கொண்டிருந்தனர் என்பதற்கு வரலாற்றுச் சான்றுகள் மிகப் பலவுண்டு. அந்தத் தொடர்பிற்கான அடையாளங்கள் தான் இன்றைக்கும் தமிழகத்தின் கடற்கரையோரங்களில் கிடைக்கின்ற கிரேக்க, ரோமானிய நாணயங்களாகும்.

பிற நாடுகளுக்குச் செல்வது என்பது வெறும் உல்லாசப் பயணங்களுக்காக அமைந்து விடாமல் பொறுப்பிலே இருப்பவர்களுக்கு ஊக்கத்தையும், பணியாற்றுவதில் உத்வேகத்தையும் எழுப்புகின்ற வகையில் அமைந்திட வேண்டும். அப்படி ஒரு பயணத்தை மேற்கொள்ளவேண்டும் என்பதற்காகத்தான் நான் நீண்ட நாளாகக் காத்திருந்தேன்.

ஓராண்டிற்கு முன்பே இங்கிலாந்து நாடு எனக்கு அழைப்பினை விடுத்தது. அதைத் தொடர்ந்து வேறு பல நாடுகளின் அழைப்பினையும் பெற்றிருந்தேன். ஆனால் எனக்கு ஏற்பட்ட இடையறாத தொல்லைகள், ஓய்வின்மை, தாயகத்தைப் பிரிந்து சில பல நாட்கள் வெளி நாடுகளில் உலவிட வேண்டுமே என்கின்ற மனக்கவலை இவைகள் எல்லாம் ஒன்று சேர்ந்து என் பயணத்தை ஒத்திப் போட்டுக் கொண்டே வந்தன.

சுற்றுலாப் பயணிகளுக்குக் கண்ணுக்கு விருந்தளிக்கும் காட்சிகளைக் கொண்டதோடு மட்டுமல்லாமல், சுழலும் சிந்தனைக்கு வேலைதனைக் கொடுத்துக் கருத்துக்கும் விருந்தளிக்கக்கூடிய நாடுகள் சிலவற்றை நான் செல்வதற்கேற்ற வகையில் தேர்ந்தெடுத்துக் கொண்டேன்.

பிற நாடுகளின் கலைச் செல்வங்களையும், கலாச்சாரம் பற்றிய விளக்கங்களையும், தமிழகத்திற்குக் கொண்டுவருவது ஒருபுறமிருக்க, அந்தந்த நாடுகளில் நமது நாட்டின் கலைச் செல்வங்களையும், கலாச்சாரங்களையும், பண்பாடுகளையும் அறிமுகப்படுத்திட வேண்டும் என்கின்ற அவா எனக்கு மிகுந்திருந்தது.

பண்டைய நாட்களில் தமிழகத்திற்கும், நான் சென்ற நாடுகளுக்கும் இருந்த தொடர்புகளையெல்லாம் மறந்து விட்டவர்கள் தான் பெரும்பாலும் இன்றைக்கு அந்த நாடுகளில் குடிமக்களாய் இருக்கிறார்கள். ஆகவே பழைய தொடர்புகளை நினைவுறுத்தவும், பசுமையான எண்ணங்களை அவர் தம் உள்ளத்தில் பதிய வைக்கவும் வீழ்ந்து பட்ட நாடுகள் விரைவில் எழுந்து நிற்கும் வியத்தகு சாதனைகளை விசை ஒடிந்த தேகத்தின் வன்மை ஊட்டுதல் போல, விழிப்புற்ற தமிழகத்தில் விரைந்து வினையாற்றிடவும் என் பயணம் பயன்பட வேண்டுமென்பதே

முதல்வர் எழுதும் பயணக் கட்டுரை



[illegible] செல்கிறேன். இந்[illegible] செல்கிறேன்" என்று என்னுடைய வெளிநாட்டுப் பயண நிகழ்ச்சி பற்றி நிருபர்கள் கேட்ட நேரத்தில் எல்லாம் ஏதாவது ஒரு பதிலைச் சொல்லிக் கொண்டிருந்த என்னை, விடாப்பிடியாகச் சென்ற இடம் எல்லாம் அவர்கள் மடக்கி மடக்கி "எப்போது மேலை நாடு செல்கிறீர்கள்?" என்று கேட்டபோது திடீரென்று "ஜூலை 1-ம் தேதி செல்கிறேன்" என்று கூறிவிட்டேன். ஆகவே அழைப்பு அனுப்பிய நாடுகள் என் பயணத்தை விரைவுபடுத்தின என்று சொல்வதை விட, வெளிநாடுகளைக் காண வேண்டும் என்ற ஆசை என் பயணத்தை விரைவாக்கியது என்று கூறுவதைவிட, நிருபர்கள் காட்டிய அக்கறைதான் என் பயணத்திற்கான நாளைக் குறித்தது என்று சொன்னால் அது மிகையாகாது. முதலில் அவர்களுக்குத்தான் என்னுடைய வெளி நாட்டுப் பயணத்திற்கான நன்றியினைக் கூறிக் கொள்ள வேண்டும்.

ஜூலை முதல் நாள் பயணத்திற்கான நாள் குறிக்கப் பெற்றதென்றாலும் ஜூன் 30-ம் நாள் மாலை வரையில் அரசாங்க வேலைகளில் நான் ஈடுபட வேண்டியதாயிற்று. பயணத்திற்கான ஏற்பாடுகள், வெளி நாடுகளில் குளிரைத் தாங்குவதற்கேற்ற உடைகள் இவைகளெல்லாம் தயாரா என்பதைப் பற்றிக் கூட என்னால் கவலை செலுத்த முடியவில்லை. அவைகளைக் கவனிக்கலாம் என்று நான் எண்ணிய போது, வீட்டிற்குள்ளே நுழைந்து என்னென்ன ஏற்பாடுகள் நடைபெற்றிருக்கின்

[illegible] கள். [illegible] இதய வாழ்த்துக்களிடையே மிதந்து கொண்டிருந்தேன்.

முதல் நாள் இரவெல்லாம் தூக்கம் வரவில்லை. இதுதான் எனது முதல் வெளி நாட்டுப் பயணம். இதற்குமுன் பலவெளி நாட்டுப் பயணங்கள் ஏற்பாடாகி இடையிலே தடைபட்டுப் போயின. அருகாமையிலுள்ள இலங்கைத் தீவிற்குக் கூட என்னால் செல்ல இயலவில்லை. பலமுறை இங்கே தடை; இந்த முறை அங்கே தடை! அதனால் இந்த வெளி நாட்டுப் பயணம் பற்றிய உணர்வு என்

[illegible] இருந்தபோதெல்லாம் [illegible] டிலேதான் இரு[illegible] கின்ற உணர்ச்சியில் அவ்வளவாகக் கவலை தெரியவில்லை. ஆனால் இப்போதோ உல்லாசபுரிகளைப் பார்க்கப்போகிறோம்; ஒய்யார மாளிகைகளைக் காணப் போகிறோம், உபசரிப்புக்கள் பலவற்றைப் பெறப் போகிறோம் உலக நாடுகளின் அமைச்சர் பெருமக்களைச் சந்திக்கப் போகிறோம் என்றெல்லாம் மனத்திலே ஒரு மகிழ்ச்சியும், தெம்பும், தித்திக்கும் நினைவுகளும் ஒன்றன் பின்

ன்றாகப்படக் காட்சி போல உருண்டு கொண்டிருந்தன என்றாலும், யார்யாரைப் பிரிந்து செல்லப்போகிறோம், அப்பப்பா! இருபதுநாட்கள் எப்படி இருக்கப் போகிறோம்? என்கின்ற வேதனைப் புயல் இதயத்தைக் குலுக்கிக் கொண்டேயிருந்தது.

ஜூலை முதல் நாள் பொழுது விடிந்தது. அணி அணியாக அருமை நண்பர்கள் ஆயிரமாயிரம் பேர் இல்லத்து வாயிலில் குழுமிடத் தொடங்கினர். அவர்கள் அணிவித்த ஆரங்கள், அளித்த வாழ்த்துக்கள் அனைத்தையும் பெறுவதிலே தனிக் களிப்பும் அடைந்தேன்; பெரும் களைப்பும் அடைந்தேன்!

கடிகாரத்தின் முட்கள் நகர்ந்தன. ஏன் இவைகள் இப்படிப் பறக்கின்றன என்று என்னையறியாமல் அந்த முட்களை நான் நொந்து கொண்டேன்!

நமக்கு ஒரு கவலை இருக்கும் போது கடமையைச் சரிவரச் செய்கிறவர்களைப் பார்த்துக் டும் கோபம் ஏற்படுவது கூட யற்கைதான் போலும் என்ற ண்மையைக் கடிகாரத்திற்கும் னக்கும் ஏற்பட்ட காழ்ப்பின் மூலம் புரிந்து கொண்டேன்!

மாலை 6-20-மணிக்குஎன்னையேற்றிச் செல்லும் விமானம் சென்னை மீனம்பாக்கத்திலிருந்து சரியாகப் புறப்படும் என்று சொன்னார்கள். வீட்டிலிருந்து 5-45 மணிக்குப் புறப்பட்டாலே போதும். ஆனால் 4-30 மணிக்கே நான் வீட்டிலிருந்து புறப்பட்டாக வேண்டும் என்று கூறிவிட்டார்கள். ஏன் என்றால் வழி நெடுக உள்ள வரவேற்புகளைப் பெற்று, விமான நிலையத்தில் கூடியிருக்கும் நண்பர்களின் அன்பு மாலைகளைப் பெற்றுக் கொண்டு விமானத்தில் ஏறுவதற்கு நேரம் சரியாக இருக்கும் என்று சொன்னார்கள். அவர்கள் சொன்னதற்கும் மேலாக நான் செல்ல வேண்டிய விமானம் 20 நிமிடங்கள் காலம் தாழ்ந்துதான் புறப்பட நேரிட்டது. காரணம் வழி நெடுக வளைத்துக் கொண்ட அன்புள்ளங்களும், விமான நிலையத்தில் மறைத்துக் கொண்ட ஆசை நெஞ்சங்களும் தான்!

தமிழக ஆளுநரும், அமைச்சர் பெருமக்களும், அன்பிற்குரிய ஆயிரமாயிரவரும் வழியனுப்ப, நான் எனது குழுவினருடன் விமானத்தில் ஏறிக் கொண்டேன். எங்களைத் தவிர வேறு பயணிகள் யாரும் அதுவரையில் விமானத்தில் ஏறவில்லை. அவர்கள் எல்லாம் விமானத்திற்குள் வரமுடியாத அளவிற்கு விமான நிலையத்தில் அவ்வளவு பெருங் கூட்டம் இருந்தது. நாங்கள் ஏறி உட்கார்ந்த பிறகுதான் மற்ற பயணிகளுக்கு வழி வகுக்கப்பட்டு அவர்கள் விமானத்திற்குள்ளே வந்தார்கள். அவர்களிடமெல்லாம் என்னால், அவர்களுக்கேற்பட்ட சங்கடத்திற்கு வருத்தம் தெரிவித்துக் கொண்டேன். விமானத்தில் நான் அமர்ந்து விட்டேன் என்றாலும் எனக்கு உட்கார இருப்புக் கொள்ளவில்லை. ஒரு முறை எழுந்து வந்து வெளியே தலைநீட்டிப் பார்த்தேன். வெளியில் கூடியிருந்தவர்கள் கையசைத்து வாழ்த்துக் கூறினர். மீண்டும் போய் உட்கார்ந்து கொண்டேன். ஆனாலும் இருப்புக் கொள்ளவில்லை! மறுபடியும் எழுந்து வந்து வெளியில் நின்று கொண்டு கூடியிருந்தவர்களை நோக்கினேன். மீண்டும் அனைவரும் கையசைத்து ' வாழ்த்துக் கூறினர். மறுபடியும் போய் உட்கார்ந்து கொண்டேன்! என் செய்கை எனக்கே கூடக் கூச்சம் தரத்தக்கதாயிருந்தது. விமானப் பணிப்பெண்கள், ஏனைய பணியாளர்கள் 'இருபது நாட்களுக்கு இப்படி அலட்டிக் கொள்கிறாரே?' என்று எண்ணியிருக்கக் கூடுமோ என்ற வெட்கம் வேறு என்னைத் துளைத்தது. இனி எழாமல் இருக்க வேண்டுமென்பதற்காக (சீட்-பெல்ட்) பிடிப்புக் கயிற்றால் என்னைக் கட்டிக் கொண்டேன்.

ஆனால் அதை விடப் பெரிய பிடிப்பு வெளியே இருப்பதை என்றால் எப்படித் தவிர்த்திட முடியும்? ஏதோ ஒரு உணர்ச்சி, பிடிப்புக் கயிற்றை அவிழ்த்து விட்டது. எழுந்தேன்! அருகிலிருந்த என் மனைவி ''எல்லோருந்தான் போய்விட்டார்களே. உட்காருங்களேன்!'' என்றாள். ''யாரும் போகவில்லை, அவர்கள் கண்கள் என்னைத் தேடுகின்றன, என் கண்கள் அவர்களைத் தேடுகின்றன!'' என்று சொன்னவாறு, என் கண்களில் அரும்பிய நீர்த்துளிகளைத் துடைத்துக் கொண்டு மீண்டும் வெளியே தலைகாட்டினேன்.

என்னை வழியனுப்ப வந்தவர்கள் விமானத்தைப் பார்த்தவாறு நின்றுகொண்டிருந்த காட்சி மறக்கக்கூடிய காட்சியா? அந்த நாள் எவ்வளவு இனிமையான நாள்! ஆனால் அதே நேரம் எவ்வளவு இன்னலை என் உள்ளத்திற்குத் தந்த நாள்! இனிப்பும், கசப்பும் சேர்ந்தது தானே வாழ்க்கை? கசப்பிலும் இனிப்பை வழங்கியதன்றோ அந்தக் கண் கொள்ளாக் காட்சி! அந்தக் கசப்பிலும் இனிய நினைவுகளை நெஞ்சத்தில் பதித்த எத்தனையோ நிகழ்ச்சிகள் ஓடிக் கொண்டிருந்தன என் மனத்திரையில்.

''உட்காருகிறீர்களா? விமானம் புறப்பட நேரமாகிறது!'' என்று மென்மையான குரல் கேட்டது. ஆம், கடமையாற்றும் பணிப் பெண்ணின் குரல்தான் அது. அந்த ஆணையை மீற முடியாமல் அமர்ந்து விட்டேன். கதவு இழுத்துச் சாத்தப்பட்டது. பலகணி வழியே பார்வையைச் செலுத்தினேன். விமானம் பறக்கத் தொடங்கும் வரை வெளியில் பார்த்துக் கொண்டேயிருந்தேன். விண்முட்டக் கிளம்பிய விமானம் என் விழிகளிலிருந்து வெகு விரைவில் சென்னையை மறைத்து விட்டது. ஆனால் என் நினைவிலிருந்து சென்னையையும், செந்தமிழ் நாட்டையும் மறைத்துவிட அந்த விமானத்தால் முடியுமா

(தொடரு

தாய்ப்பாலா சிசுவைக் கொல்லும்?

“குறிஞ்சிமலர்” புதினத்தில் சொல்லப்படும் ஓர் உவமைக்கு இணையாகப் பரபரப்போடும், சப்த ஜாலங்களோடும் திணறிய தெரு முனையில் ஒரு கடையில் தொங்கிய மாலைப் பத்திரிகை ஒன்றின் போஸ்டரில் கண் குத்திப் பாம்பாக நெளிந்த அந்த வரி “தமிழ் திணிக்கப்படுகிறது”—இதய சோகத்தை உருவாக்கியது.

“தமிழ்த் திணிப்பால் தமிழ்ச் சமூகமே கெடப் போகிறதே!” என்று ஒரு தமிழ்த் தலைவரே அங்கலாய்த்திருந்தார்.

அந்தத் தலைவரின் பேச்சு எனது கல்லூரிப் பருவ நாட்களின் ஒரு ஞாயிற்றுக்கிழமைக்கு என்னை இழுத்துச் சென்றது. அன்று வைகை மணல் வெளிகளைத் தாண்டி, ஒரு தோப்பைப் போலவே நிழல் தந்துகொண்டு, “ஒரு மரம் தோப்பாகுமா?” என்ற பழமொழிக்கே அறைகூவல் விட்டுக்கொண்டிருந்த ஒரு பேராலமரத்தின் நிழலில்—செம்போத்துப் பறவையின் தொலைதூரக் கூவுதலில் பயந்து ஆலமரக் கூரையில் ஓச்சிட்டுக்கொண்டிருந்த சின்னப் பறவைகளின் குரலில் நானும்—மொட்டிலே சிவப்பு வண்ணத்தில் குளித்து, தனது மலர்ச்சியில் வெளுத்துப் போகின்ற விநோதமயமான அலஞ்சிப் பூக்கள் மலரும் மலைப் பகுதி ஊரின் செல்லப் பிள்ளையான எனது ஆருயிர் நண்பனும், கவிஞர் சுரதாவின் 'நந்திக் கலம்பகம் என்னும் கவிதையைப் பற்றி இன்னும் சில நண்பர்களோடு விவாதித்துக் கொண்டிருந்தோம். அதில் சிந்தனை மின்னலாக 'வரும் ஒரு வரி—‘தாய்ப்பாலா சிசுவைக் கொல்லும்?’’

தமிழ்த் திணிப்பு, தமிழரைக் கெடுக்குமென்ற கூக்குரல் அந்த வரியைத் தான் எனக்கு ஞாபகப் படுத்துகிறது. இந்தப் பிரச்சினை பற்றிச் சில பெருமக்களையும், மாணவ, மாணவியரையும் பேட்டி கண்டேன். அவர்களுடைய உள்ளம் இங்கே அச்சாகியிருக்கிறது.

ஆ. க. அ. அப்துஸ்சமது

எம். ஏ., எம். பி.

ஜெர்மானிய நாட்டில் ஜெர்மன்மொழி திணிக்கப்படுவதாக எந்த ஜெர்மானியனும் குறைபடுவதில்லை. பிரான்சு நாட்டில் பிரெஞ்சு மொழி திணிக்கப்படுவதாக எந்தப் பிரெஞ்சுக்காரனும் ஓலமிடுவதில்லை. ஆனால் தமிழ் நாட்டில்—தமிழ்மொழி திணிக்கப்படுவதாகக் கூக்குரல் எழுப்பும் தமிழர்கள் இருக்கிறார்கள்!

தமிழர் மீது எந்த மொழியும் திணிக்கப்படுவதைத் தமிழர் விரும்புவதில்லை. அது போன்றே தமிழையும் எவர் மீதும் திணிக்கத் தமிழர் விரும்பவுமில்லை, விரும்பப் போவதுமில்லை. பழ பெருமையும், இலக்கணச் செ வும், இலக்கியச் சிறப்பும் ழுக்கு உருவாகிப் பிறந்திருக் றன. அதற்கு வளம் சேர்க் நன் முயற்சியில் ஒரு ப யாகவே வாழ்வியலில் பல்வே துறைகளிலும் தமிழை அ வெகு இயல்பான முறையி இயங்கச் செய்யத் தமிழக அ பாடுபட்டு வருகிறது.

இதற்குப் பாராட்டுத் தெ விக்க மனம் இல்லாதவர்க ஒதுங்கியிருக்கலாம். தமிழை திணிக்கக் கூடாதென—மக்கள் கருத்தைத் திசை திருப்பிவி முயற்சியில் ஈடுபட வேண்டி தில்லை. தமிழ்நாட்டில் தமி திணிக்கப்படுகிறது என்று கூ

பவர்கள் தமிழைப் பாடக் கூடாது என்று கூறுபவர்கட்கு சமமாகவே கருதப்படுவர்-வீறு கொண்ட தமிழகத்தில்.

டாக்டர் மெ. சுந்தர

எம்.ஏ., எம்.லிட்., பி.எச்.
தலைமைத் தமிழ்ப் பேராசிரிய
மாநிலக் கல்லூரி, சென்னை.

“திணித்தல்” என்ற சொ லாட்சியே பொருத்தமற்ற ஏற்கனவே உள்ளே உள் பொருளைத் திணித்தல் என் கூறுவது பொருந்தாது. வெளி ள்ள பொருளைக் கட்டாய

ளை செலுத்துவதற்குத்தான் ணித்தல் என்று பொருள்.

தமிழ்—தமிழர்களின் தாய் மொழி. தமிழ்நாட்டின் இயற்கை மொழி. தாய்மொழியில் ல்லாப் பாடங்களையும் படிக்க வண்டுமென்பது எப்படித் ணிப்பாகும்? மொழித் திணிப்பு ன்பதன் பொருளைப் புரிந்து காள்ளவேண்டும். இந்தி தமி ர்களின் தாய்மொழி அன்று. துதான் ஆட்சி மொழி என்று றுவதும், தமிழர்கள் அதைக் ட்டாயம் படிக்கவேண்டும், ல்லாவிட்டால் வேலை வாய்ப்பு ள் கிடைக்காதென அச்சுறுத்து துமே மொழித் திணிப்பாகும். தைப் படிக்கவேண்டுமென்று சால்வதும், அதற்காகக் கல்வித் றையின் மூலமும் வானொலியின் லமும் நடுவண் அரசு செய்து ரும் முயற்சிகள் மொழித் ணிப்பிற்கு ஓர் எடுத்துக்காட் ாகும்.

தாய்மொழி மூலம் கல்வி பயிற் வதைச் சான்றோர் பலர் ஆதரித் ள்ளனர். "வேற்று மொழி ாயிலாகக் கல்வி புகட்டுவது திய நாட்டிற்கு அளவிடற் தீங்கினை உருவாக்கி —து" என்று அண்ணல் ந்தியார் கூறியுள்ளார். நேரு ம், தாகூரும் இதே கொள்கை டையவர்கள் தான். பாரதியார் பேடிக் கல்வி பயின்றுழல் பித் கள்" என்று ஆங்கிலக் கல்வி முறையிலே வன்மையாகக் கண்டிக்கிறார்.

பிறமொழிக் கல்வி பாவ முயற்சி இரட்டிப்பாகும். தாய் மொழியின் மூலம்படிக்கும்போது மாணவன் செய்தியறிவு மட்டும் பெற்றால் போதும். பிறமொழி மூலம் பயிலும்போது மொழியறிவும் சேர்த்துப் பெறவேண்டி இருக்கிறது.

தாய்மொழிக் கல்வி பாலும் பாலும் கலப்பதைப் போல; பிற மொழிக் கல்வி தண்ணீரில் எண்ணெய் மிதப்பதைப் போல. தாய்மொழிக் கல்வி தண்ணீரில் பனிக்கட்டி கரைவதைப் போல; பிற மொழிக் கல்வி தண்ணீரில் கட்டை மிதப்பதைப் போல.

டி. கே. சண்முகம்,

எம்.எஸ்.சி.

தமிழ்நாட்டில் தமிழ் மொழியின் இழிநிலை கண்டு ஆத்திரம் கொண்ட பாரதியார் கூறினார்.

"வேறு வேறு பாஷைகள் கற்பாய் நீ; வீட்டு பாஷைகள் கற்கிலாய் போ போ" என்று.

பாரதியைப் போற்றி விழா வெடுக்கும் அன்பர்கள் இதைப் புரிந்து கொண்டிருக்கிறார்களா என்பது தெரியவில்லை. எங்கும் தமிழ்! எதிலும் தமிழ்! என்று தாய்மொழிக்கு அரியணையில் முதலிடம் கொடுத்துத் திட்டமிட்டுச் செயலாற்றி வருகிறது தமிழக அரசு. இதற்கு ஆதரவளிக்க வேண்டியவர்கள் "தமிழ்த் திணிப்பு" எனக் கூறிப் பள்ளி மாணவர்களைத் தூண்டி விட முயல்கிறார்கள். இம்மொழிக் கொள்கை காந்தியடிகளின் மகத்தான செல்வமாகும்.

குழந்தை நலம் பெற வேண்டுமானால் தாய் என்ன செய்வாள்? கசப்பு மருந்தாக இருந்தாலும் குழந்தையின் நலத்திற்காக அதைப் புகட்டிக் குழந்தையை வளர்க்கத் தானே பாடுபடுவாள்? அதுதான் இன்று நடைபெறுகிறது. தமிழ்நாடு என்னும் குழந்தை வளர வேண்டுமானால் தாய் மொழி என்னும் மருந்து புகட்டப்பட வேண்டும். அதைத்தான் இன்றைய அரசு செய்து வருகிறது. தாய்மை உணர்வோடு! தமிழக அரசை வாழ்த்துகிறேன்.

கே. பாலதண்டாயுதம்

தமிழ்நாட்டில் தமிழ் மாணவர்களின் கல்வி சம்பந்தமாகத் தமிழ்ப் பிரமுகர்கள் சிலர் "தமிழ் திணிக்கப்படுகிறது" என்று ஒருக்குரலை எழுப்பியுள்ளனர். "மூச்சு திணிக்கப்படுகிறது. மூச்சை நிறுத்திவிடு" என்பதுபோலிருக்கிறது இந்த விபரீதக் கூச்சல். ஆங்கில மொழியைக் கற்றுக் கொள்ள வேண்டுமென்பதில் இரண்டு கருத்துக்களுக்கு இடமில்லை. ஆனால் மொழிப் பயிற்சி வேறு; பயிற்சி மொழி வேறு.

கல்வியறிவு பெறப் பயிற்சி மொழி எதுவாக இருக்க முடியும்? அது மாணவனின் தாய்மொழியாகத்தான் இருக்க முடியும். கல்வி நிபுணர்களின் முடிந்த முடிவு இது. உலக வழக்கும் இதுவே. ஐயாயிரம் ஆண்டுகால நம் நாட்டு வரலாற்றில், இருநூறு ஆண்டுகால வெள்ளையர் ஆட்சி போக—அதற்குமுன் நாமும் தாய்மொழியில் தான் கல்வி பெற்று வந்தோம். விஞ்ஞானக் கல்வியும் தாய்மொழியிலேயே புகட்ட முடியும். கோபுரங்களும், கல்லணையும், மலைக் கோட்டையும் கட்ட எஞ்சினியரிங் அறிவு இல்லாமல் முடிந்திருக்குமா? எஞ்சினியரிங் விஞ்ஞானமல்லவா? கோவையில் தமிழைப் பயிற்சி மொழியாகக் கொண்டு நடத்திய பரீட்சார்த்த முயற்சியில் அம் மாணவர்கள், ஆங்கிலத்தைப் பயிற்சி மொழியாகக் கொண்டவர்களைக் காட்டிலும் சிறப்புப் பாடத்திலும் சரி, ஆங்கிலத்திலும் சரி, அதிகத் தேர்ச்சி பெற்றவர்களாக இருந்தார்கள் என்று நிரூபிக்கப்பட்டிருக்கிறது. தமிழ்ப் பயிற்சிமொழி மூச்சுப் போன்றது. மூச்சை நிறுத்த வேண்டாம் எனத் தமிழ்மக்கள் எழவேண்டும்.

பிரீதா

(மாநிலக் கல்லூரி எம். ஏ. மாணவி)

ஒவ்வொரு நாட்டினரும் தாய் மொழி வாயிலாகக் கற்பதால்,

கற்பவர்களின் உள்ளமும், அறிவும், விஞ்ஞான ஆராய்ச்சிகளும் பண்பட்டு வளர்ச்சியு கின்றன. அமுதம் போன் மொழி பாரிசு போன்ற நகர்களிலும் வளர்ந்துள் சில இதழ்களும், தலைவர்க 'தமிழ் திணிக்கப்படுகி என்ற குரலை எழுப்பியிருப் தவறானதாகும். புரியாத ஒன் அறியாத ஒன்றை ஒரு கூட் தின்மேல் சுமத்துவதுதா திணிப்பு ஆகும். அப்படியென்று தமிழனுக்குத் தமிழ்மொ புரியாத ஒன்று? இலக் சிந்தனைப்பசியுள்ள ஒருவனு அமுதமாகிய தமிழைக் கொடு தால் அது திணிக்கப்படுகிறதா ஊட்டப்படுகிறதா? நினைத்து பாருங்கள்.

இரா. சதாசிவம், பி.ஏ.

(பி.ஜி.எல்.) மூன்றும் ஆண்டு,
சட்டக் கல்லூரி மாணவர்.

நம் நாட்டில் சிறந்த மருத் வர்கள், வழக்குரைஞர்கள், வி ஞானிகள், பொறியியலர்கள் தொழில் நுண்புலனாய்வோ தோன்றுததற்குக் காரணம் தா தாய்மொழிக் கல்வி பெருதே யாகும். வளர்ந்து வரும் ஒ குழந்தைக்குத் தேவையாக அளவு தாய்ப்பால் ஊட்டுவ திணிப்பாகாது. இந்தியில் பட்டப் பின்படிப்புவரை போதிக்கப் படுகிறது. அங்கே 'இந்தி திணிப்பு' என்ற வாதமில்லை "தமிழை விண்வெளிக்காலத்தி



தாய்மொழியே பயிற்று மொழி

"எல்லாப் பாடங்களையும் ஆங்கிலத்திலேயே படித்தால்தான் ஆங்கில அறிவு கிடைக்கும் என்று எண்ணுவதை நான் மறுக் கிறேன். ஆங்கிலப் பாடத்தை மட்டும் ஆங்கிலமாகப் படித் தால் போதும். ஆங்கிலப் புலமை பெறுவதற்காக, பூகோளம், கணிதம், வரலாறு ஆகிய நூல்களை எல்லாம் ஆங்கிலத்திலேயே கற்கவேண்டும் என்பதை நான் ஒப்புக்கொள்ள முடியாது. நான் எல்லாப் பாடங்களையும் ஆங்கிலத்தில் கற்றவன்தான். இருந் தாலும் இந்தக் கருத்தை மறுக்கிறேன்.

"லத்தீன் மொழியில் புலமை பெறுபவர்கள், பூகோளம், வரலாறு, கணிதம் ஆகிய பாடங்களை லத்தீனில் படிப்பதில்லை. லத்தீன் மொழியினை மட்டுமே படிக்கிறார்கள்! "சமஸ்கிருதப் புலமை பெற எண்ணுபவர்களும் அவ்வாறே! எல்லாப் பாடங்களையும் சமஸ்கிருதத்தில் கற்று, அந்த மொழியில் புலமை பெறுவதில்லை. ஆகவே ஆங்கிலத்தை மட்டும் ஆங்கிலமாகப் படித்துவிட்டு, ஏனைய பாடங்களை எல்லாம் தாய் மொழியில் பயில்வதனால் தவறு கிடையாது; தாய்மொழிப் பற்று வளர முடியும்—தாய் மொழிக் கல்வி பெருகும்."

—பேரறிஞர் அண்ணா

ற்ற மொழியாக உய்விக்க வேண்டும்'' என்ற நமது முதலமைச்சரின் கருத்து நிறைவேறும் நில தமிழ் பயிற்சி மொழியாக ஆவதன் மூலமே ஏற்படமுடியும். இந்தப் பயிற்சி மொழிச் சிக்கலில் தமிழக முதலமைச்சரும், கல்வியமைச்சரும் எடுக்கும் திருப்பணிகட்குத் தமிழ் உணர்ந்த அனைவரும் நல்லாதரவு தர வேண்டும்.

கண்ணம்மா
(மாநிலக் கல்லூரி,
எம்.ஏ. இறுதியாண்டு மாணவி.)

மொழி என்பது ஒரு கருவி. இக்கருவி மூலம் ஒருவர் கருத்து மற்றவர்கட்கு விளக்கப்படுகிறது. அத்தகைய நல்ல கருவி

தாய்மொழியே. இளமையிலேயே படிப்போர்க்குத் தாய்மொழியில் கற்பித்துப் பின்னர் இடையிடையே ஆங்கிலத்தைப் பயன்படுத்தினால் அவர்களது மனம், அறிவு ஒருங்கு குவியாமல் முயற்சி பலபடி விரிந்து செல்வதால் அறிவும் வளரமுடியாமற் போகிறது.

தற்போது தமிழகத்தில் ''தமிழ்மொழி திணிக்கப்படுகிறது'' என்று போலிக் குரல் எழுப்புவோர் [illegible] தமிழ் [illegible]

புலமை பெற்ற மொழி தமிழ் !

''ஆங்கில-தமிழ் நவீன அகராதி ஒன்றை உருவாக்குதல் அத்தியாவசியமாகும். இந்த அகராதி திறமையானதாய் அமைய மூன்று லட்சம் சொற்களுக்குப் பதில் குறைந்தபட்சம் ஆறு லட்சம் சொற்களாவது இடம் பெறவேண்டும். அப்போதுதான் தமிழ் உண்மையான ஒரு நவீன மொழியாக முடியும்.

இந்த மாநாடு மூன்று பணிகள் மீது கவனம் செலுத்த வேண்டும்.

முதலாவதாக, தமிழ் நாட்டுக்கும் பிற நாடுகளுக்குமிடையே மாணவர்கள் பரிவர்த்தனைக்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

இரண்டாவதாக, தமிழை ஒரு நவீன மொழியாக்கும் வண்ணம் ஆங்கிலம்—தமிழ் அகராதியைத் தயாரிக்கும் பணியிலிறங்க வேண்டும்.

மூன்றாவதாக, உலகில் பல்வேறு நாடுகளிலும் தமிழைப் பரப்பவும் வளர்க்கவும் வேண்டும்.

இந்தப் பணிகளில் மறைந்த அண்ணாவின் அடியொற்றி நடக்கும் எமது தமிழ்நாட்டு அரசு இயன்ற எல்லா உதவிகளையும் செய்யும்.

வரலாற்று சகாப்தகாலம் தொட்டு ஆழ்ந்த புலமைபெற்ற மொழியாகும் தமிழ். அது ஒரு செழுமிய மொழி. . . பாரதி போன்ற கவிஞர்கள் அதன் மகிமையைப்பாடியிருக்கிறார்கள்.

ஆனால், அந்த புதுமையும் தற்போதைய வளர்ச்சியும் மட்டுமே போதாது. நாம் வெறுமனே பழைய மகிமையில் ஓய்ந்திருக்கக் கூடாது.

சிந்தனைகளை உணர்த்தவும் விஞ்ஞான வளமிக்க—விண்வெளிப் பயணம் நடத்துகிற நவீன காலத்தின் செய்திகளைத் தெரிவிப்பதற்கும் ஏற்ற கருவியாய், வாகனமாய்த் தமிழ்



மாற வேண்டும் என்பதனைநாம் உணர வேண்டும். தொழில் நுணுக்கம், அறிவியல், மருத்துவம் முதலியவற்றைக் கற்பிப்பதற்கு ஏற்ற பயிற்றுமொழியாய் இது வந்தாக வேண்டும்.

தமிழ் வளர்வதற்காக, தமிழ் நாட்டுக்கும் பிற நாடுகளுக்குமிடையே மாணவர்களைப் பரிமாறிக் கோள்வது அத்தியாவசியமாகும். இதனால், மொழி செழுமைப்படுத்தப்படலாம்.

(உலகத்தமிழ் மாநாட்டில் தமிழக முதல்வர்)''

கடலும் செல்வமும்

கடல் வழங்கும் வளங்களுள் வற்றாத செல்வமாக விளங்குவது மீன். மக்களின் ஊட்டச் சத்துக் குறைபாட்டை நீக்கிக் கொள்ளவும், பொருளாதார மேம்பாட்டுக்கு வழி கோலவும் பெருமளவில் உதவக் கூடியது மீன் பிடித் தொழில். உலகில் மீன் பிடித் தொழில் மூலம் கிடைக்கும் மீன் 2 கோடி மெட்ரிக் டன்னிலிருந்து 5.6 கோடி மெட்ரிக் டன் என்ற நிலைக்கு உயர்ந்துள்ளது. தமிழ்நாட்டில் மீன் பிடித்தொழில் மூலமான உற்பத்தி, முதல் திட்டக் காலத் துவக்கத்தில் 78,000 டன்களாக இருந்தது. 1968-69ல் இது 3,32,205 டன் என்ற அளவுக்கு உயர்ந்துள்ளது.

மீன்பிடித் தொழிலில் யந்திரப் படகுகள், திருந்திய முறைகள் முதலியவைகளைக் கையாண்டும் கூட, மிகுதியான முன்னேற்றம் ஏற்படாததற்கு இரண்டு காரணங்கள் உண்டு. கடலோரப் பகுதிகளில் மீன் பிடிப்பிடங்களைப் பற்றியும் கிடைக்கக் கூடிய மீன் அளவு பற்றியும் போதிய விவரங்கள் இல்லாமை, மீன்களை விரைவாக இறக்குவதற்கான மீன்பிடித் துறைமுகங்களின்மை ஆகியனவே அக்காரணங்களாகும்.

நவீன மீன்பிடிச் சாதனங்களாகிய எக்கோ சவுண்டர், ரேடியோ டெலிபோன், ரடார் போன்ற கருவிகள் பொருத்தப்பட்ட டிராலர்களைக் கொண்டு மீன்பிடிக்க முனைந்தால் மீன் பிடிப்பை இரண்டு மடங்காகப் பெருக்க முடியும்.

இயந்திரப்படகுகளில் மீன் பிடித்தலின் மூலம் சென்ற பத்தாண்டுகளில் இம்மாநிலத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. நம் நாட்டுக் கலன்களில் உணவு விவசாய நிறுவன வல்லுநர்களின் உதவியுடன் மேற்கொண்ட பரீட்சார்த்த சோதனைகள் பாபிலோ படகு எனப்படும் 25 அடிப்படகு நிர்மாணத்துக்கும் 30 முதல் 37 குதிரை வேகமுள்ள 30 அடி 'இல்லுகாஸன் படகு' நிர்மாணத்திற்கும் வழிகோலியது. . இத்தகைய படகுகள் இழுவலை மீன் பிடிப்புக்கு உதவின. மீன் துறையால் இராமேசுவரம், கடலூர், சென்னை கடலோரப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட மீன்பிடி சோதனைகளின் பயனாக இரால்கள், காரைப்பொடி இருக்குமிடங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

படகில் மேம்பாடு செய்வதற்காக 37 முதல் 45 குதிரை வேகமுள்ள இஞ்சின்கள் பொருத்தப்பட்ட 32 அடிப்படகுகள் பயன்படுத்தப்பட்டன. மேலும் பெற்ற அனுபவம் 60 குதிரை வேகமுள்ள எஞ்சின்கள் பொருத்தப்பட்ட 36 முதல் 43 அடியுள்ள படகுகள் சென்னைக் கடலோரப் பகுதிக்கு மிகவும் ஏற்புடையது எனத் தெளிவுபடுத்தியது. இத்தகைய படகுகள் கட்டும் வேலை 1967-ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டது. சென்ற 15 ஆண்டுகளாகவே இயந்திரப் படகுகள் இங்கு கட்டப்பட்டு வந்தாலும் ஆழ்கடலில் மீன்பிடிக்கப்படும் டிராலர்கள் நிர்மாணித்தல் அண்மையில்தான் மேற்கொள்ளப்பட்டது.

மீன்தொழிலை இயந்திர மாக்கும் திட்டத்தின் முக்கி தேவைகள் பின்வருமாறு:—

மீன் பிடிப்பிடங்களைப் பற்றிய சரியான விவரங்கள் திரட்டுதல், பெரிய மீன்பிடிக்கலன்களை நிறுத்துவதற்குரிய மீன்பிடித்துறைமுக வசதிகள், டிராலர்களை இயக்கும் பயிற்சி பெற்ற கடற்கலன் ஆட்கள், போதிய நிதி வசதி ஆகியவையாகும்.

வு விவசாய நிறுவன வல்லு இல்லுகாலன் அவர்களின் வியுடன் கடலோரப்பகுதிகள் பிடிப்புக்குச் சோதிக்கப்பட்ட ரும் இத்தகைய வேலைகள் சென்னை, கடலூர், இராமேசு ரம் ஆகிய இடங்களிலுள்ள லோர மீன் பிடிப்பு நிலையங்களில் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தூத்துக்குடியிலுள்ள இந்திய அரசின் தூரக்கடல் மீன் பிடிப்பு நிலையம் தூத்துக்குடிப் பகுதியிலுள்ள தூரக்கடல் பகுதிகளைச் சாதித்தது. சென்னைக் கட ரப் பகுதிகளும், சென்னைக் மண்டபத்திற்கும் இடையே ள கடலோரப்பகுதிகளும் கடல் பகுதிகளும் அளவை ய்யப்பட வேண்டியுள்ளன.

இயந்திரப் படகுகள், பெரிய ராலர்கள் தங்குவதற்குரிய தங் துறை வசதிகள்தான் மிக முக் யத் தேவையாகும். அந்தவகை ல் கடலூர், கப்பட்டினம் கிய இடங்களிலும் பரங்கிப் பேட்டை, இராமேசுவரம், மண்டபம், குளச்சல் ஆகிய இடங்களிலும் தோணித் துறைகளும் நிறுவப்பட்டன. இத் கைய வசதி 36 அடி நீள ள படகு ள் தங்க ஏதுவாக இருக்கும். இவை டிராலர்களுக்கும் மற் ய பெரிய களுக்கும் படா. மே ம் டிராலர் ள் மீன்பிடித் துத் திரும்பும் போது, பிடித்த மீன்களை விரைவாக இறக்கவும், பாதுகாக்கவும், ஐஸ், தண்ணீர் போன்றவைகளை வழங்குவதும் முக்கியமாகும். மத்திய அரசாங்க உதவியுடன் தூத்துக்குடி, சென்னை ஆகிய இடங்களில் மீன்பிடித்துறைமுகங்கள் நிறுவ முறையே 2 கோடி ரூபாயும் 3 கோடியே 88 லட்ச ரூபாயும் ஒப்புதல் தரப்பட்டுள்ளது. இவ்விரு இடங்களிலும் வேலைகள் மேற்கொள்ளப்பட்டு 1971-ல் சென்னைத்துறைமுகமும், 1972-ல் தூத்துக்குடித் துறைமுகமும் திறக்கப்பட்டுவிடும். இவை ஒவ்வொன்றும் 50 டிராலர்களுக்கும் 500 இயந்திரப்படகுகளுக்கும் இறங்குமிட, தங்குதுறை வசதிகள் நல்கும். இத்தகைய, மீன்பிடித் துறைமுகங்களின் நிர்மாணம் மீன் தொழிலில் பெரியதோர் சாதனையாகும். தமிழ்நாட்டுக் கடலோரப்பகுதிகளிலும், ஆழ்கடல் பகுதிகளிலும் மீன்பிடிப்புக்கு வசதிகளை வழங்கித் தமிழகத்தில் மீன் தொழிலைச் சார்ந்த துணைத் தொழில்களை மேம்பாடுத்து வதற்கும் இது ஊக்கம் அளிக்கும்.

கடற்கலன் பணிகளில் பயிற்சி

மீன்பிடித் துறைமுகத்திற் தபடியாகக் கடலோரப் ப களிலும் ஆழ்கடலிலும் மீன்பி டிராலர்களை இயக்குவதற் வேண்டிய கடற்கலன் ஆட்க தேவையாகும். பெரிய பிடிப் படகுகளையும், டிராலர் யும் இயக்குவதற்குப் பயி பெற்ற கப்பலாட்கள் இப்போ கிடைக்கவில்லை. இத்தகைய பலாட்களுக்குப் பயிற்சி த தான் கொச்சியில், மத் பயிற்சி நிலையம் ஒன்றை அரசாங்கம் அமைத்துள்ள 1969ம் ஆண்டு பிப்ரவரி மா இல் இத்தகையதோர் பயி நிலையம் சென்னையில் து பட்டுள்ளது. இந்தியாவின் கடலோரப் பகுதிகளில் இய மீன்பிடி லர்களை கவும், போ பாது காக் தேவை கடற்கலன் களுக்குப் யளிப்பதில் நிலையம் முக்கிய வகிக்கும்.

மீன் பி தொழி தேவை நிபுண வதற் மைக் வனி கள் பெ வில் றன. தொழி உதவி வனம், சாய கார்ப்ப போன்ற வன தை லுக்கு நிதி உதவி நல்க முன் வந்துள்ளன.

மீன்களைப் பிடிப்பதிலும், பாதுகாப்பதிலும் மேனாட்டுப் புதிய முறைகள் தமிழ் நாட்டிலும் கடைப்பிடிக்கப்படுகின்றன. நாள் ஒன்றுக்கு 3½ டன் மீன்களை உறைய வைக்கும் திறன் கொண்ட உறையவைப்பு நிலையம் எண்ணூரில் நிறுவப்பட்டு அது 5 ஆண்டுக் குத்தகைக்குத் தனியாருக்குவிடப்பட்டுள்ளது. மண்டபத்தில் இந்திய நார்வே திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட உறையவைப்பு நிலையம் உபயோகத்திற்குத் தயாராக உள்ளது. தூத்துக்குடியில் இத்தகையதோர் நிலையம் அமைக்கப்பட்டு வருகிறது. இவை தவிர, தனியார் மூலம் சென்னையிலும், கடலூரிலும் சிறிய உறையவைப்பு நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. சென்னை, தூத்துக்குடி ஆகிய இடங்களில் கட்டப்பட்டு வரும் மீன்பிடித் துறைமுகங்களில் மீன் பாதுகாப்பு நிலையங்கள் நிறுவ இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. தூத்துக்குடியில் நாள் ஒன்றுக்கு 5,000 டன்கள் தயாரிக்கும் திறன்கொண்ட கலனடைப்பு நிலையம் மீன் துறையால் நிறுவப்பட்டுத் தனியாருக்குக் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. நாள் ஒன்றுக்கு 50 டன் மீன்களை மூலப்பொருளாகக் கொண்டு மீன் தூள் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்று மண்டபத்தில் நிறுவப்பட்டு வருகிறது.

ஆழ்கடல் மீன் பிடிப்பைப் பெருக்கப் பொருத்தமான தளவாடங்களும், கருவிகளும் அவசியத் தேவைகளாகும். இவைகளை உள்நாட்டிலேயே தயாரிப்பதால் அந்நியச் செலாவணி மிச்சப்படுவதுடன் உடனுக்குடன் கருவிகள் கிடைப்பதற்கு வழி ஏற்பட்டு நாட்டில் பலருக்கு வேலை வாய்ப்பும் ஏற்படுத்தும்.

மீன்களின் இருப்பிடங்களைக் கண்டறிவதிலும், கடலில் கலன்களைச் செலுத்துவதிலும் எலக்ட்ரானிக் சாதனங்கள் அதிகமாகக் கையாளப்பட்டு வருகின்றன. மீன் கண்டுபிடிப்புக் கருவிகள், ரேடியோ, டெலிபோன், ரடார், டைரெக்ஷன் ஃபெண்டர் போன்றவை கலன்களில் கையாளப்படும் மிகவும் முக்கியமான கருவிகளாகும். இவை இப்போது வெளிநாடுகளிலிருந்தும் இறக்குமதி செய்யப்பட்டு வருகின்றன. இத்தகைய கருவிகளைத் தயாரிப்பதில் இந்தியன் எலக்ட்ரானிக் தொழிற்சாலை அக்கறை கொண்டு சில கருவிகளைத் தயாரிக்க பட்டுள்ளது.

நான்காம் திட்டத்தில் 1 இயந்திரப் படகுகள் கட் திட்டமிடப்பட்டுள்ளது. தவிர ஆழ்கடல் மீன்பிடிப் திட்டத்தில் சென்னை, தூத் குடி ஆகிய இடங்களைத் திரங்களாகக் கொண்டு பிடிப்பை மேற்கொள்ளத் த நாட்டிற்கு 70 டிராலர்களை ஒ கீடு செய்ய இந்திய அரசாங் சிபாரிசு செய்துள்ளது. இந் பூராவுக்கும் வழங்கப்பட கும் 300 டிராலர்களில் 70 டி லர்களைத் தமிழ் நாடு பெறும் தென்பது குறிப்பிடத்தக்க கும். இத்தகைய டிராலர் நான்கு ஏற்கனவே கட்டப்ப வருவதுடன் அவற் இரண்டு 1970-71ல் பெறப்ப மென்றும் எதிர்பார்க்கப் கிறது. நான்காம் திட்டத்தி வழங்கப்படவிருக்கும் 70 டிரா களில் 10 மீன்துறையாலும், தனியார் நிறுவனங்களாலும் பிடிப்புக்குப் பயன்படுத்தப்ப இந்த மேம்பாட்டுத் திட்ட செயல்படுத்தப்பட்டால் காம் திட்ட முடிவில் தமிழ்நா மீன் உற்பத்தி 5 லட்சம் ளாகப் பெருகும்.





பார்த்தோம் படித்தோம்

அறிவுக்குக் கருவூலம்.

''தமிழரசு''—அரசாங்க வெளியீடு—வெளி வருகிறது என்றதும் எல்லோரும் இயற்கையாக எண்ணியது, வழக்கம்போல் சுவர்ச்சியற்று பழுப்புத் தாளில் அரசாங்கப் புள்ளி விவரங்களைத் தாங்கி வரும் ஏடாக இருக்கும் என்பதேயாகும்.

ஆனால் ''தமிழரசு'' எல்லாத் துறையிலும், சிறந்து, கண்கவர் முறையில் அறிவுக்குக் கருவூலமாக வெளிவந்துள்ளதைப் பாராட்டாமல் இருக்கமுடியாது.

சிற்பங்கள், சிறந்த தலைப்புகள் கைப்படங்கள், சிறு கதை, விதை, பொருளாதாரக் கட் ரை, தொழில் முன்னேற்றம் என எல்லாம் அடங்கிய ஒரு முற்போக்கு இதழாக வெளிவந்துள்ளதைக்காண, இவ்வளவு சிறந்த செயலாற்றும் திறமையுள்ள அரசாங்க ஊழியர்களை இத்தனை நாள் ஏன் பயன்படுத்தவில்லை? என்றே நமக்குக் கேட்கத் தோன்றுகிறது.

அரசாங்கத்தின் பல்வேறு துறைகளுக்கும் தனித்தனித் தலைப்புகளில் தொடர்ந்து செய்திகளைத் தர வேண்டுகிறோம்.

இந்தியாவிலேயே அரசாங்க வெளியீட்டில் தலை சிறந்ததாக ''தமிழரசு'' விளங்கப் பாடுபடும் இதன் ஆசிரியர் குழுவினரைத் தமிழர்களின் சார்பில் பாராட்டுகிறோம்.

நா. முத்துக்குமாரசாமி,
ஆசிரியர்-மக்களரசு,
பட்டுக்கோட்டை.

பஞ்சாமிர்தமாக இனித்தது.

ஒரு ஜூலை மாத மாலைப் போதில் ''தமிழரசு'' இதழைப் படித்தேன்! அதிலுள்ள செய்திச் சுருள்கள் பஞ்சாமிர்தமாக இனித்தன. எண்ணங்களின் எழிலோவியமாகத் திகழ்ந்தன. இதைப் படிக்க நான் உண்மையிலே கொடுத்து வைத்தவன்.

கா. மா. செல்லையா,
திருச்சி-2.

பயன் மிகுந்தது.

''தமிழரசு'' இரண்டாவது இதழைப் பார்த்தேன். பயனுள்ள பல கட்டுரைகளைத் தந்திருந்தீர்கள். வெறும் புள்ளி விவரப் பட்டியலாக இல்லாமல், புகைப்படங்களுடன், எளிய நடையில் இனிய முறையில் வெளி வந்திருந்தது.

தொடர்ந்து வரும் இதழ்களை என்னைக் கருவூலமாகச் சேர்த்து வைத்திருக்கத் திட்டமிட்டிருக்கிறேன்.

கு. கதிர்வேலன்,
செஞ்சி.

நேர்முக வர்ணனை.

தமிழரசு ஜூலை 16 இதழில் வந்த முதலமைச்சரின் வெளிநாட்டுப் பயண வழியனுப்பு விழாக் கட்டுரை—அடிதொழுது விடைபெறுகிறேன்- அதைத்தான் குறிப்பிடுகிறேன். நிகழ்ச்சிகளை நேரில் பார்ப்பது போல், நேர்முக வர்ணனையைக் கேட்பது போல் செய்திக் கோவையாக அமைந்திருந்தது. எனது பாராட்டுக்கள்.

ந. அன்புமணி.
சென்னை-1.

படங்கள் பரவசமூட்டின.

இரண்டாவது இதழின் முதல் பக்கத்தில் வெளியான சிலையின் படத்திலிருந்து ஒவ்வொரு படமும் பரவசமூட்டின. ''தமிழரசு'' கருத்துக்கு விருந்தளிக்கும் ஏடு மட்டுமல்ல, கண்ணுக்கு விருந்தளிக்கும் வண்ண ஓவியம்.

செந்திலப்பன்,
சேலம்.

உங்களையும் சேர்த்து..

''காலம் மாறியது'' கார்ட்டூனைத் ''தமிழரசு'' பத்திரிகையில் பார்த்தேன். அரசு இதழ் அதிசயமாக மாறி விட்டதையும் அதில் ஓர் அயிட்டமாகச் சேர்த்துக்கொள்ளலாமே!

ஆமாம்! "தமிழரசு" இதழ் அத்தனை புதுமையுடன் திகழத்தான் செய்கிறது.

எஸ். கௌசல்யா,
மதுரை.

தமிழரசு

சந்தா விவரம்

ஆண்டுச் சந்தா	..	ரூ. 8-00
ஆறு மாதங்கள்	..	ரூ. 4-00
தனிப்பிரதி விலை	.	35 காசுகள்

விவரங்களுக்கு :

இயக்குநர்,
செய்தி, விளம்பரத்துறை
கோட்டை, சென்னை-9.



ஓரங்க நாடகம்

கவிஞர் ஈரோடு தமிழன்பன்

தேன்கிண்ணம்! தரைவேரின் வண்ண எண்ணம்!
திசையாடைக் காற்றுக்குத் திண்டு மெத்தை!
வான்தந்த கூன்தந்த குளிரைப் பாட்டில்
வரவழைக்கும் வண்டுகளுக் குணவுச். சாலை!
ஊனுடம்பு மதுமாது வனப்பைப் பார்க்க
உபயோகப் படுமுரைகல்! ஒளிக்கூ டாரம்!
நான்வாழும் 'நாள்குறுக்கம்' என்றால் கூடத்
தன்மணத்தால் அளபெடுக்கும் புகழின் உச்சி!

மகரந்த மாளிகை! வான் நீல மார்பை
மணத்தாலே ஊறவைக்கும் வாசக் கோப்பை!
சுகத்துறைக்குக் கொண்டுசெலும் இனிப்புத் தேகச்
சுந்தரத்தோ ணிப்பெண்ணின் பற்கள் போல
நகைசெய்த சிற்றரும்பின் 'நேற்றும்' அந்த
நகர்கோயில் கோபுரத்துக் கலசத் தைப்போல்
தகதகக்கும் சதைக்கனியின் 'நாளை' யும்தம்
சந்திப்பை நடத்துகின்ற 'இன்று' மேடை!

தன்னைவந்து தொட்டவர்க்கு மென்மைக் கர்த்தம்
தருகின்ற அகராதி! பன்னீர்ப் பொய்கை!
அன்பென்றால் ஈரம்! அதைக் காட்டி மக்கள்
அறிந்துகொள்ள அழைப்புவிடும் புதுக்கல் லூரி!
என்றுமியற் கையின்வாய்உச் சரிக்கும் பாடல்!
இலையரங்கில் பகல் எழுதும் வெளிச்ச வட்டம்!
மின்வார்ப்புத் தகட்டிதழ்கள் குடும்பம்! பட்டு
மேடை! நெய்யில் வாதெரியும் சோலைத் தீபம்!

சித்திரஇ யற்கையின்தேன் உதட்டில் மின்னிச்
சிரிக்கின்ற மவுனமான கனவு! தன்மை
முத்தமிடக் கொடிகாட்டும் தங்கக் கன்னம்!
மூடாத ஓவியநூல் வாச ஏடு!
பத்திரிகை நடத்துகின்ற பருவ காலப்
பச்சைத்தாள் விழாமலராம் படைப்பு! சாவின்
ஒத்திகையில் தூக்கமிலா தொருநாள் மேடை
ஓரங்க நாடகத்துள் முடியும் வாழ்க்கை!

ஒரு தித்திப்புக் கதை



ஏறத்தாழ ஆயிரம் ஆண்டு ளுக்கு முன்பு ஐரோப்பாவில் ள்ள பெரிய அரசுகள் கூட ஓர் வுன்ஸ் சீனி வாங்க இயலாத லை இருந்தது. இனிப்புக்காகத் தன் கூடுகள் வைத்துத் தேன் சகரித்து உபயோகித்து வந்த ர். 17-வது நூற்றாண்டில் ரோப்பாவில் சீனி, பணக்காரக் டும்பங்களின் சாப்பாட்டுப் ட்டியலில் விசேடப் பங்கைப் பற்றது.

பிரெஞ்சு, ஜெர்மன் யுத்தத் ன் போது ஜெர்மன் விஞ் ானிகள், சீனி உடலுக்குப் த்துணர்ச்சியைக் கொடுப்பது ன்று கண்டுபிடித்து ஒவ்வொரு பாய்க்கும் ஒரு சிறிய பை றையச் சீனியைக் கொடுத்து ுப்பிச் சிப்பாய்கள் தளர்ச்சி டையும்பொழுது '' நில், னியைச் சாப்பிடு '' என்று திரவிட்டதன் இரகசியத், ப் பிரெஞ்சுக்காரர்கள் ரிந்து கொள்ள வெகு நாளாயிற்றும். மேல் நாடுகளில் சீனி அதிகமாய் உற்பத்தியான பொழுது சிமிண்டுடன் கலந்து போர்ட்லண்டு சிமிண்டின் தரத்தை உயர்த்தினர்.

பழங்காலத்தில் பெர்சியாவில் ஒருவிதப் புழுக்கள் மூலம் சீனி தயாரிக்கப்பட்டதாம். ஆஸ்திரேலியாவில் ஒரு வித மரத்தில் வடியும் பாலிலிருந்து தயாரிக்கப்பட்டது. ஆனால், இன்று பீட்ரூட்டிலிருந்தும், கரும்பிலிருந்தும் பதநீரிலிருந்தும் சீனி தயாரிக்கப்படுகிறது.

சுமார் 200 ஆண்டுகளுக்கு முன் ஜெர்மன் விஞ்ஞானி ஒருவர் பீட்ரூட்டைக் கால்நடைகள் அதிகமாய் விரும்பிச் சாப்பிடுவதால் அதில் ஒரு சத்து இருப்பதாய்க் கண்டு பிடித்தார். அதே சமயத்தில் பிரெஞ்சு தேசத்துத் தாவர விஞ்ஞானி அதிகமான சீனியை விளைவிக்கும் வழியைக் கண்டு பிடித்தார். சுமார் 200 பீட்ரூட் சீனி ஆலைகள் பிரான்சில் வேலை செய்தன.

இந்தியாவில் முதலில் சீனியைப் பனை மரங்களிலிருந்து தயாரித்தனர். வங்காளத்து ஈச்சமரமும் தென்னகத்துப் பனையும் இனிப்பைத் தந்தன. 1837-ம் ஆண்டில் முதலில் '' பர்துவான் '' சீனி ஆலை வங்காளத்தில் ஆரம்பிக்கப் பெற்றுப் பனஞ் சீனி உற்பத்தி செய்யப்பட்டது.

தென்னகத்தில் பாரி அன் கம்பெனியார் பனை வெல்லத்திலிருந்து சீனி தயாரிக்க ஆந்திராவில் மேற்குக் கோதாவரி மாவட்டத்திலும், தமிழகத்தில் குலசேகரன்பட்டினம், நெல்லிக்குப்பம், தக்கலை, கேரளத்தில் பாலக்காடு முதலிய இடங்களிலும் சீனி ஆலைகள் வைத்தனர்.

முதன் முதலில் கரும்புச் சீனி எங்கு உற்பத்தி செய்யப்பட்டது என்பதற்கு இது வரை எவ்வித ஆதாரமும் இடைக்கவில்லை. சீன நாட்டு வரலாற்று ஏடுகளிலிருந்து சீனி செய்யும் முறை மகத தேசத்திலிருந்து இந்தியாவிற்குப் பரவியதாகத் தெரியவருகிறது. ஆனால், வடமொழி நூல்களில் சீனியைச் சிநிட் என்றும் கிராவல் என்றும் குறிப்பிட்டுள்ளார்கள். கி.பி. 627-ம் ஆண்டில் சீனாவிலிருந்து ஒரு மனிதர் இந்தியாவிலுள்ள பீகார் மாநிலத்திற்கு அனுப்பப்பட்டு, சுத்தமான சீனி செய்யும் முறையைக் கற்றுச்சென்றார் என பேன்ட்சா என்ற வரலாற்றாசிரியர் குறிப்பிட்டுள்ளார். 10-ம் நூற்றாண்டில் எழுதப்பெற்ற ஆயுர்வேத வைத்திய நூல்களில் சீனியைக் குறிக்கும் ''சர்க்கரா'' என்ற வார்த்தை அநேக இடங்களில் காணப்படுகின்றது. எனவே பத்தாம் நூற்றாண்டில் தொடங்கி கரும்பிலிருந்து சீனி எடுக்கப்பட்டது என்ற முடிவுக்கு வரலாம்.

பனைப் புராணம்

இந்தியாவில் சுமார் 5 கோடி பனை மரங்கள் இருப்பதாகவும், தமிழகத்தில் மட்டும் 4 கோடி பனை மரங்கள் இருப்பதாகவும் தோராயமாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

பனையின் ஆயுள் காலம் 90 முதல் 120 ஆண்டுகள். பனையில் ஆண் பனை, பெண் பனை என்று உண்டு. நுங்கு தருவது பெண் பனை. ஆண் பனை காய்ப்பது கிடையாது.

பனை 801 வகைகளில் உபயோகப்படுகிறது' என்று '' தால விலாசம் '' என்ற சமஸ்கிருத நூல் கூறுகிறது.

பனையின் பாளையிலிருந்து கொட்டும் பதநீரை, தலைவனை நினைத்துத் தலைவி வடிக்கும் கண்ணீருக்கு உவமானமாக எடுத்துக் கூறுகிறார், ஆங்கிலக் கவிஞர் கின்.

பதப்படுத்தி எடுக்கக்கூடிய நீர் என்பதால் 'பதநீர்' என்றும், அரசர்கள் விரும்பிப் பருகியதால் பதி (அரசர்) நீர் (விரும்பிய பானம்) என்றும் பெயர் பெற்றதாகவும் கூறுவர்.

கல்லெல்லாம் கலை சொல்லும்

'கணீர் கணீர்' என்று சுத்தியால் சிற்றுளியில் அடிக்கும் ஒலி பாறையில் மோதி எதிரொலிக்கிறது. கற்கள் சிறு சிறு சிம்புகளாகச் சிதறுகின்றன. சிற்பிகள் கேவாத பெருந்தச்சன், சாதமுக்கியன், குணமல்லன், ஆபாஜன் ஆகியோர் குன்றன்ன கற்கோயில்களை உருவாக்கும் அரிய பணியில் ஈடுபட்டிருக்கின்றனர். அவர்கள் கைபட்ட இடமெல்லாம் கலையாகப் பரிமளிக்கின்றது. பல்லவப் பேரரசன் சுற்றி வருகிறான். தனது கற்பனையில் உருவான திட்டங்கள், சிற்பங்களாக, சிலைகளாக, கற்கோயில்களாக உயிர்பெற்று எழுவதைக் காண்கிறான். அவன் உள்ளம் பேருவகை கொள்கிறது காட்சி மறைகிறது.

சுமார் 1300 ஆண்டுகளுக்குப் பின்-கற்கலை பிறந்த அதே மாமல்லை மண்ணில் இன்றும் அதே 'கணீர் கணீர்' ஒலி. இன்று கேவாதபெருந்தச்சன் இல்லை. சாதமுக்கியன், குணமல்லன், ஆபாஜன் இல்லை. ஆனால் அவர்கள் தொடங்கி வைத்த கலை அழிந்து படாவண்ணம் போற்றிக்காப்பாற்ற—அதற்குப் புத்துயிர் கொடுக்கத் தமிழக அரசு ஏற்படுத்திய சிற்பக் கூடம் (பள்ளி) அந்த அரிய பணியைத் தொடருகிறது.

இருபத்து மூன்று இளஞ் சிற்பிகளை மாணவர்களாகக் கொண்டு இயங்கும் · இந்தச் சிற்பக் கூடத்தில் தற்போது தயாராகும் சிலைகளில் முக்கியமானவை 'தீபநாச்சியார்' என்ற பெயரில் உருவாகும் ஒரே சாயலில் உள்ள இரு சிலைகள். விரைவில் அனைத்துலக விமான நிலையமாகவிருக்கும் மீனம்பாக்கத்திற்கு வரும் வெளிநாட்டவரையும் உள்நாட்டுப் பிரமுகர்களையும் இந்தத் தீபநாச்சியார்கள் வரவேற்பர்.

அவை வெறும் சிலைகள் அல்ல. சந்திரனைக் கைப்படுத்தி விட்ட மனிதனால் இச்சிலைகளுக்கு உயிரூட்ட முடியுமெனில் இந்தச் சிலைகள் பேரழகிகளாக உருப்பெறும்; கட்டிளங்காளையரின் கனவுக்கன்னிகளாக மாறும்.

நாலடி உயரமுள்ள இந்தச் சிலைகளை (பீடத்துடன் சேர்த்து சுமார் 5½ அடி இருக்கும்) உருவாக்கிய சிற்பிகள் இந்தச் சிற்பக்கூடத்தின் மாணவர்கள் கமலநாதனும், பெருமாளும். செய்து முடிக்க ஆனகாலம் மூன்று திங்கள். சிலைகளின் மதிப்பு-ஒவ்வொன்றும் பீடத்துடன் சேர்த்து ரூ. 4,500 (சிலை ரூ. 3,000, பீடம் ரூ. 1,500). இங்கு இதுவரை தயாரிக்கப்பட்ட சிலைகளிலே இதுதான் அதிக விலை மதிப்புள்ளது.

இந்தச் சிலைகளைச் செய்யும்படி இந்தச் சிற்பக் கூடத்தை மத்திய அரசு கேட்டுக் கொண்டதே ஒரு கதை என்று விவரிக்கிறார். பள்ளிக்கண்காணிப்பாளர் திரு. வை. கணபதி. ''மத்திய அரசின் விமானப் போக்குவரத்து அமைச்சர் டாக்டர் கரன்சிங், ஹைதராபாத்தில் ஒரு அனுமான் கோவில் நிறுவினார். அதற்கான அனுமான் சிலையைச் செய்யும் பொறுப்பு இந்தச் சிற்பக் கூடத்திற்குக் கிடைத்தது. நாங்கள் சிலையினைச் செய்து கொடுத்தோம். அதைப் பார்த்த டாக்டர் கரன்சிங் மிகவும் பாரா மீனம்பாக்கம் விமான திற்கு எங்களைச் சிலை செ சொல்ல வேண்டும் எண்ணமே இதன் மூலம் ஏற்பட்டதாம்''.

அடுத்த சிலை உருவ சிறியது. (சுமார் 1½ இருக்கும்). ஆனால் அதன் அ அளவிட்டுக் கூறுதற்கரிய உலக அழகிகள் என்று ஏதே அளவுகள் குறிப்பிடுவார்களே அவையெல்லாம் ' இந் கண்ணாடிப் பெண் (அதுதா இச்சிலையின் பெயர்) உருவ திற்கு நிகராகமாட்டா.

ஆஸ்திரேலியாவில் நடந்த பொருட்காட்சியில், இந்திய அரங்கிலிருந்த இந்தச் சிலை பலரையும் கவர்ந்ததால், இதில் பத்து சிலைகளை அனுப்பி வைக்கும்படிக் கேட்டிருக்கிறார்களாம். எனவே இந்தக் கூடத்தில் இவை பத்து தயாராகின்றன. இங்கு ஒன்றின் மதிப்பு ரூ. 500. சிட்னியில் ஆயிரம் ரூபாய்க்கு விற்குமாம்.

மாமல்லபுரத்தில், கடற்கோயிலுக்கும், பஞ்சபாண்டவ ரதங்களுக்கும் மத்தியில் உள்ள

புது வாழ்வு மலர்ந்தது



பிற்பட்ட மக்களின் குறைகளைக் களைய முழுமையான கவனம் செலுத்தப்படவில்லை.

பிற்பட்ட வகுப்பினர் குறைகளைக் களைய தனியான "துறை"

கலப்பு மணம் செய்து கொண்டோர் கவனிக்கப்படவில்லை.

கலப்பு மணம் செய்துகொண்டோருக்குத் தங்கப் பதக்கம்.



கலையுலகம் ஒதுக்கி வைக்கப்பட்ட நிலை.

சிறந்த திரைப்படங்களுக்குப் பரிசு

மூடிய தொழிற்சாலைகள் மூடப்பட்ட நிலையிலேயே இருந்தன.

மூடப்பட்ட தொழிற்சாலைகளை அரசு ஏற்று நடத்த முன் வந்துள்ளது.

பொருள் ஆராய்ச்சி கத்திற்குப் பக்கத்தில் லட்சம் ரூபாயில் கட்டப் ள்ள இந்தப் பள்ளியின் தோற்றமே ஒரு கலைக் கோயி லாகக் காட்சி தருகிறது.

இங்குக் கட்டிடக் கலையும், சிற்பக் கலையும் மாணவர்களுக்குப் பயிற்றுவிக்கப்படுகிறது. மாமல்லபுரம், கும்பகோணம், திருச்சி, தஞ்சை, நெல்லை இப்படி மாநிலத்தின் பல பகுதிகளிலுமுள்ள மாணவர்களும் இங்கு

பயிலுகிறார்கள். இவ்வாண்டு கொழும்பிலிருந்து இரு மாணவர்கள் சிற்பம் பயில வருகிறார்கள். வெளியூர் மாணவர்கள் தங்கிப்படிக்க மாமல்லபுரத்திலே விடுதியும் உள்ளது. மாணவர்களுக்கு இந்த ஆண்டு முதல் மாதம் ரூ. 60 உதவித் தொகையாகத் (ஸ்டைபண்ட்) தரப்படுகிறது. இதுவரை முதலாண்டு மாணவர்களுக்கு ரூ. 40-ம், 2-ம் ஆண்டிற்கு ரூ. 45-ம், மூன்றும் ஆண்டிற்கு ரூ. 50-ம், 4-ம் ஆண்டிற்கு ரூ. 55 ஆகவும் இருந்து வந்தது. இப்போது அனைவருக்கும் மாதம் ரூ. 60 தரப்படுகிறது.

நான்கு ஆண்டுப் படிப்பு

நான்கு ஆண்டுப் படிப்பான இதற்குத் தற்போது சான்றிதழ் வழங்கப்படுகிறது. பள்ளியாக இருக்கும் இதனைக் கல்லூரியாக உயர்த்தி 'டிப்ளமா' தர வேண்டுமெனக் கைத்தொழில் ஆலோசனை வாரியம் கூறி உள்ளது. இந்தக் கோரிக்கை பரிசீலனையில் உள்ளது என்று கண்காணிப்பாளர் குறிப்பிட்டார்.

கல் வேலைப்பாடுகள் உள்ள இந்தப் பள்ளியுடன், மர வேலைப்பாடுகள், உலோக சிற்பப் பணிகள் முதலியவற்றை இணைத்துக் கல்லூரியாக்கினால் இக்கலைகள் நன்கு வளரவும் நல்ல பலன் தரவும் இன்னும் அதிக வாய்ப்பு இருக்குமென்று அவர் கருதுகிறார்.

" ஆமாம். இங்கு சிற்பக் கல்வி பயிலும் மாணவர்களின் வருங்காலம், அதாவது வேலை வாய்ப்பு எவ்வாறு உள்ளது?"

மாணவர்களின் கை வண்ணத்தில்

" மிகவும் நல்ல முறையில் " என்று விளக்குகிறார், திரு. கணபதி.

" அறநிலையத் துறையில் சேர்ந்து ஒருவர் பணியாற்றினார். மாநிலத் தொல்பொருள் ஆராய்ச்சித் துறைக்காக ராஜகோபாலன், ராமன் என்ற இருவர் பணியாற்றினார்கள். காஞ்சிபுரத்திலுள்ள சொக்கீஸ்வரர் கோவிலையும், அங்கிருந்து 10 மைல் தொலைவிலுள்ள கூழம்பந்தல் கோவிலையும் சீர்செய்தவர்கள் இந்த மாணவர்களே.

இந்த வேலைப்பாடுகளைப் பார்த்து மெல்கோ நிபுணரான பேராசிரியர் ஜைட், இவர்களைப் பெரிதும் பாராட்டினார். இனி மேல் கோயில் சீரமைப்புப் பணிகளுக்கு இவர்களைத்தான் பயன்படுத்த வேண்டும் என்றும் அவர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

அதோடு நவீனக் கட்டிடக் கலை நுணுக்கங்கள் நன்கு தெரிந்த வெளிநாட்டுப் பேராசிரியர்களை இங்கு அழைப்பித்து அவ்வப்போது மாணவர்களுக்குச் சொற்பொழிவு ஆற்றச் செய்யவேண்டும் என்றும் அவர் கருத்துத் தெரிவித்துள்ளார். இது ஆய்வில் உள்ளது.

டெல்லியிலுள்ள சுவாமிநாதர் கோயிலுக்காக வாலாஜாவில் சிலைகள் உருவாக்கப்பட்டன. அவற்றை உருவாக்கியவர்களும் இங்கு படித்த மாணவர்கள் தான்.

1968-69-ல் இங்கு பயின்ற இரு மாணவர்களான ஏ. நாராயணசாமி, எஸ். குமாரசாமி ஆகியோர் ஒரு குழுவினருடன் மலேசியா சென்று அங்கு மாரியம்மன் கோயில் எழுப்பினார்கள்.

தற்போது மன்னாரில், திருக்கேதீஸ்வரர் கோயில் பணிக்காக இலங்கைக்கு இரு மாணவர்கள் சென்றுள்ளனர்.

இவை தவிரப் பலர் தமிழகத்திலேயே பல்வேறு பகுதிகளில் பட்டறையும் வைத்துள்ளனர். மாமல்லபுரம், திருமுருகன் பூண்டி (கோவை), கருவேலன்குளம் (நெல்லை), திருச்சி ஆகிய பகுதிகளில் இந்தப் பட்டறைகள் இயங்கி வருகின்றன. மாமல்லபுரம் பட்டறைக்கு அரசு கடனுதவி அளித்துள்ளது.

ஏர்பிடித்த கை

மீனம்பாக்கம் விமான நிலையத்திற்குத் " தீபநாச்சியார் " சிலையை உருவாக்கும் முன்னாள் மாணவர் கமலநாதன் மாமல்லபுரத்தில் வேளாண்மைப் பெருங்குடியைச் சேர்ந்தவர். இவரது தந்தை விவசாயத்தோடு, பாறைகளை உடைக்கும் வேலையினையும் மேற்கொண்டிருந்தார்.

ஆனால் கமலநாதனுக்கு சிற்பக் கலையில் ஆர்வம் மேலிட்டது. எட்டாவது வகுப்பு முடிந்ததும் இப்பள்ளியில் சேர்ந்து படித்து முடித்தார்.

" ஆந்திராவிலுள்ள பத்திராச்சலம், ஹைதராபாத், சித்தப் பால்மண்டி மற்றும் காசி ஆகிய இடங்களிலுள்ள கோயில்கள் நிர்மாணிக்கும் பணிகள் எனது மேற்பார்வையில் நடந்தன. இத்தொழில் மிக்க கௌரவமாகவும் பெருமை தருவதாகவும் உள்ளது. முதலில் மாதம் ரூ. 40 சம்பளம் வாங்கினேன். பின்பு அது தினக்கூலி ரூ. 6 ஆகவும், ரூ. 8 ஆகவும் படிப்படியாக உயர்ந்து மாதம் ரூ. 250 வாங்குமளவுக்கு உயர்ந்தது. தற்போது மாதம் ரூ. 350 சம்பாதிக்கிறேன். வேறு ஏதாவது தொழிலில் ஈடுபட்டிருந்தால் இவ்வளவு வருவாய் கிடைப்பது சந்தேகமே'' என்கிறார் திரு. கமலநாதன்.

விற்பனை வாய்ப்புகள்

''இங்கு தயாராகும் சிலைகளுக்கு நல்ல விற்பனை வாய்ப்புக்கள் உள்ளனவா? வெளிநாட்டவர் விரும்பி வாங்குகின்றனரா? அன்றி உள்நாட்டிலும் இக்கலைக்கு மதிப்பு உள்ளதா?''

கண்காணிப்பாளர் பதில் தருகிறார்.

''ஹாலந்து, அமெரிக்கா, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளுக்கு அவர்கள் கேட்டதன் பேரில் மொத்தமாகச் சிலைகளை யிருக்கிறோம். இது தவிர உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வரும் வெளிநாட்டவர் நமது விற்பனை நிலையத்திலிருந்து ஏராளமாகச் சிற்பங்களை விலை கொடுத்து வாங்குகின்றனர்.

உள்நாட்டிலும் இவற்றிற்கு நல்ல வரவேற்பு உள்ளது. தற்போது சென்னையிலுள்ள திரு. சர்மா என்பவர் தமது தோட்டத்தில் நிறுவச் சமணப் படிவம் ஒன்றை விரும்பிக் கேட்டுள்ளார். ரூ. 3,250 மதிப்புள்ள அந்தச் சிலை இப்போது இங்கு தயாராகிறது.

கொடைக்கானல் ஏரியில் சில அழகிய சிலைகளை வைக்கவும் திட்டம் உள்ளது. அரசின் ஒப்புதல் கிடைத்ததும் வேலை ஆரம்பம் ஆகும்.'' ,

''உங்களது ஆண்டு உற்பத்தி எவ்வளவு?''

''இந்தச் சிற்பப்பள்ளி தவிர உற்பத்தி நிலையம் ஒன்றும் இங்கு உள்ளது. அது சென்ற ஆண்டு தான் துவக்கப்பட்டது. கடந்த ஓராண்டில் இது உற்பத்தி செய்துள்ள சிலைகளின் எண்ணிக்கை 154. விலை மதிப்பு ரூ. 25,000 இது தவிர இங்குள்ள விற்பனை

த்தில் ஆண்டுக்கு ரூ.40,000 புள்ள கலைப்பொருள்கள் போகின்றன''.

எக்ஸ்போ—70-ல்

''பொதுவாகச் சிலைகளுக்குத்தான் அதிக கிராக்கி உள்ளது''.

''வெளிநாட்டைப் பொறுத்தவரையில் தற்போது சிறிது மாற்றம் ஏற்பட்டுள்ளது. அவர்கள் இந்தியக் கட்டிடக் கலையிலும் தற்போது மிகவும் ஆர்வம் காட்டுகிறார்கள். எனவே நாங்கள் சிலைகள் உருவாக்குவதோடு, கோவில்களின் சிறிய மாதிரிப் படைப்புகளையும் (மாடல்) தயாரிக்கிறோம். ஜப்பானில் நடக்கும் எக்ஸ்போ-70-க்கு மாமல்லபுரம் கடற்கரைக் கோவிலின் மாடல் ஒன்றை அனுப்பியிருக்கிறோம். அதன் மதிப்பு ரூ. 9,000. இதற்கு அங்கு நல்ல வரவேற்பு உள்ளதாகக் கேள்வி.''

''மாணவர்களுக்குச் சிற்பக் கலை கற்பிக்க எந்த நூல்களைப் பின்பற்றுகிறீர்கள்?''

''இதற்கான பண்டைய நூல்கள் சில உள்ளன. அதில் குறிப்பிடத்தக்கது பூம்புகாரை நிர்மாணித்த சிற்பி மயன் எழுதிய 'மயமதம்' என்பது. மனுசாரம் என்ற ஏட்டுச் சுவடிகளும், மாநசாரம் என்ற நூலும் குறிப்பிடத்தக்கன. இவற்றைப் பின்பற்றி மிகவும் முறையோடு, ஓவியம் வரைந்து காட்டிப் பின்பு கல் வேலைகளில் ஈடுபடுத்துகிறோம். முதலில் மாணவர்கள் சிற்பம் செதுக்குவது மாக்கற்களில்; பின்பு பச்சைக் கற்கள்; கடைசியில் நன்கு பயிற்சி பெற்றபின் கருங்கற்களில் சிலைகளை உருவாக்குவர்.

கலைக்கோயில்களுக்குச் சுற்றுலா

''மாணவர்களைச் சரித்திரப் புகழ் பெற்ற கோயில்களுக்கு அழைத்துச் செல்வதுண்டா?''

''ஆமாம். முதல் மூன்றாண்டு மாணவர்களைக் காஞ்சி, தஞ்சை, மதுரை, நெல்லை போன்ற இடங்களில் உள்ள முக்கியமான கோயில்களுக்குச் சுற்றுலா அழைத்துச் செல்கிறோம். கடைசி ஆண்டு மாணவர்களை, பேலூர் சோமநாதபுரம், அஜந்தா, எல்லோரா, கோணார்க் முதலிய இடங்களுக்கு அழைத்துச் செல்கிறோம். இதற்கான செலவை தமிழகஅரசு ஏற்றுக்கொள்கிறது. இந்தச் சுற்றுலாக்கள் மாணவர்களுக்கு மிகவும் பயன் தருவதாக உள்ளன.''

''மாணவர்களை எவ்வாறு தேர்ந்தெடுக்கிறீர்கள்? சிற்பக் கலைக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப் படுகிறதா?''

''சிற்பக் கலைக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதோடு, நாங்கள் முக்கியமாகக் கவனிப்பது அந்த மாணவர்களுக்குச் சிற்பக் கலையில் ஆர்வமுள்ளதா'' என்பதுதான். ஆர்வம் இல்லாவிட்டால் இத்தொழிலில் பரிமளிக்கவே முடியாது.

''வெளிநாட்டு மன்னர்கள், தலைவர்கள் பலராலும் பாராட்டப் பட்ட இந்தச் சிற்பப் பள்ளியின் நோக்கம், அழிந்து போ விருந்த இப்பழம் பெருங் கலைக்குப் புத்துயிர் அளிக்கப் பல புதிய சிற்பிகளை உருவாக்குவதே'' என்று குறிப்பிடும் கண்காணிப்பாளர் கணபதி, சிற்பப் பரம்பரையைச் சேர்ந்தவர். சென்னை அடையாற்றிலுள்ள காந்தி மண்டபத்தை உருவாக்கியவரும் முன்னாள் கண்காணிப்பாளருமான வைத்தியநாத ஸ்தபதியின்மகன்.

உலகெல்லாம் தமிழ்க் கலையைப் பரப்பிக் கொண்டிருக்கும் கற்சிலைகளை உருவாக்கி ''கணீர் கணீர்'' என்ற இயல் சிற்றுளியின் ஒலி களில் ரீங்காரம் செய்துகொண்டேயிருக்கின்றது. சரித்திர புகழ் பெற்ற மாமல்லை இன் புதிய சரித்திரத்தை அமை கிறது.

தமிழ் நாட்டிலிருந்து ஆண்டுக்குச் சுமார் இரண்டரை லட்சம் ரூபாய் மதிப்புள்ள சங்குகள், மேற்கு வங்காளத்திற்கு ஏற்றுமதி ஆகின்றன. சங்கு வளையல் செய்வதற்காக இந்தச் சங்குகளைத் தமிழகத்திலிருந்து வாங்குகிறது, வங்காளம்.

வங்காளத்தில், திருமணத்தின்போது சங்கு வளையல் அணிவிக்க வேண்டியது முக்கிய சடங்காகும். இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த சங்கு வங்காளக்கடற்கரைப் பகுதிகளில் கிடையாது. எனவேதான் தமிழகத்திலிருந்து வாங்குகின்றனர். சுமார் இரண்டே கால் அங்குல சுற்றளவுள்ள சங்குகள்தான் வளையல்களுக்குப் பயன்படும்.

தாய்க் குலத்தின் கைகளிலே

'' உங்கள் பெயர் ?''

'' ஹேமமாலினி ''.

'' எங்கே வேலை செய்கிறீர்கள் ?''

''மத்திய எலக்ட்ரோ கெமிகல் ஆராய்ச்சிக் கழகத்தில் ''.

'' வேலையின் பெயர் என்ன ? சம்பளம் எவ்வளவு ?''

'' வேலையின் பெயர் ஜூனியர் டெக்னிக்கல் அசிஸ்ட்டெண்ட். சம்பளம் மொத்தம் ரூ. 429 கிடைக்கிறது.''

''நீங்கள் எங்கே படித்தீர்கள் ?''

'' அரசினர் மகளிர் பாலிடெக்னிக்கில் ''

''அங்கே படித்தவர்கள் இந்த அலுவலகத்தில் இன்னும் வேலை செய்கிறார்களா ?

'' ஆமாம். மாயவரத்தைச் சேர்ந்த ஆஷாலதா, நங்கநல்லூரைச் சேர்ந்த பாரதி மற்றும் பஞ்சாபைச் சேர்ந்த அனுசூயா ஆகியோர் இங்கு வேலை செய்கின்றனர். எல்லோருமே மகளிர் பாலிடெக்னிக்கில் படித்தவர்கள்தான்.''

'' உங்களுக்கு வேலை எப்படிக் கிடைத்தது ?''

'' பாலிடெக்னிக்கில் நாங்கள் மூன்று ஆண்டுகள் படித்தோம், '' டிப்ளோமா '' பெற்றோம். பணி புரிவதற்குத் தகு பெற்றோம். வேலை கிடைத்தது.''



அமிழ்ந்து பேரிருளாம்
  அறியாமையில்
அவலமெய்திக் கலையின்றி
  வாழ்வதை
உமிழ்ந்து தள்ளுதல்
  பெண்ணறமாகுமாம்.
உதயகன்னி உரைப்பது
  கேட்டிரோ !

—என்று பாரதியார் கூறியதை ந வாக்கும் வ யில் கலையின் வாழ்வ உமிழ்ந்து ளிய மக உருவாக்கி கிறது அரசினர் மகளிர் தொழில் நுணுக்கப்பள்ளி.

சென்னை அடை யாற்றில் உள் மத்திய பா டெக்னிக் பகு யில் அமைந்து ளது மகளி பாலிடெக்னிக். ஆரம்பத்தி

100 பெண்கள் சேர்க்கப்பட்டு வந்த இந்தத் தொழில்நுணுக்கப் பள்ளியில் இந்த ஆண்டு 165 பேர் சேர்க்கப்பட்டுள்ளார்கள். விண்ணப்ப மனுப் பெற்றவர்கள் மட்டும் 560 பேர்.

இந்தப் பள்ளியில் படிப்பதற்காகச் சம்பளம் எதுவும் இல்லை. மாணவிகளில் பாதிப்பேருக்கு மாதம் 50 ரூபாய் உதவிப் பணம் கொடுக்கப்படுகிறது. இதைத் தவிர ஆண்டுக்கு ரூ. 1,500-க்குக் குறைந்த வருமானம் உள்ள பெற்றோரின் மகள்களுக்கு ஸ்காலர்ஷிப்களும், கடன் வசதிகளும் உண்டு.

மூன்றாண்டில் முடிவுபெறும் இப் படிப்பு இரு வகைப்படும். ஒன்று வணிகப் பயிற்சிப் படிப்பு (Commercial Practice Course); மற்றொன்று, புகுமுகத் தொழிலியல் பயிற்சிப் படிப்பு (Pre-Technical Course). இரு பிரிவினருக்கும் முதலாண்டுப் படிப்பு, கல்லூரிப் புகுமுக வகுப்புப் படிப்புக்குச் சமமானதாகும்.

புகுமுகத் தொழிலியல் பயிற்சிப் படிப்புப் படித்து முடித்தபின் எலக்ட்ரானிக்ஸ், சிவில் எஞ்சினியரிங், கட்டிடக்கலைக் கருவித் தொழிலியல் (Instrument Technology) ஆகிய பாடங்களில் ஏதாவது ஒன்றில் இரண்டு ஆண்டுகள் படித்து '' டிப்ளோமா '' பெறுகிறார்கள். இவற்றில் மிகப் பிரபலமாகி இருப்பதுதான் எலக்ட்ரானிக்ஸ். கட்டிடக்கலையும், கருவித் தொழிலியலும் இந்த ஆண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தொழில் நுணுக்கப் பள்ளியின் முதல்வர் திரு சீனிவாசன் நம்மை அழைத்துச் சென்று வகுப்புகளைச் சுற்றிக் காட்டுகிறார்.

ஓர் அறைக்குள் நுழைகிறோம். ஏதோ ஒரு வாசனை! உடன் வந்தவர் மூக்கைப் பிடித்துக் கொள்கிறார். '' இது ரசாயன பரிசோதனைச்சாலை ''—முதல்வர் விளக்குகிறார்.

அடுத்த அறையில் வரிசை வரிசையாக டைப்ரைட்டிங் இயந்திரங்கள் காணப்படுகின்றன. வணிகப் பயிற்சி பெறுகிறவர்களுக்குச் சுருக்கெழுத்தும், டைப்ரைட்டிங்கும் இங்கே உண்டு.

ரம்பம், சுத்தியல் சகிதம் பல பெண்கள். பயிற்சி பெறுவதை ஓர் அறையில் காண்கிறோம்.

'' தச்சு வேலையும், கருமான் பயிற்சியும் மாணவியருக்கு உண்டு '' என்று முதல்வர் கூறுகிறார்.

வேறு ஒரு அறையில் வானொலிப் பெட்டி, அது சம்பந்தப்பட்ட கருவிகள்......

'' ஏனம்மா, உங்களுக்கு ரேடியோப் பெட்டியைப் பழுது பார்க்கத் தெரியுமா ?''—ஏதோ ஒரு கேள்வியைக் கேட்டு வைக்கிறோம்.

'' பழுது பார்ப்பதா ? அவர் களுக்கு ரேடியோவின் பாகங்களை இணைத்து முழு ரேடியோவே செய்யத் தெரியும்.''—ஆசிரியை ராமசாமி பதில் கூறுகிறார்.

நமது மனத்திலே இனம் தெ யாத ஒரு நிறைவு ஏற்படுகிறது.

அடுத்த அறையில் தைய கலை வகுப்பு.

வரிசை வரிசையாகத் தைய இயந்திரம்.

முதல்வர் விளக்குகிறார்: '' சென்னையில் உள்ள இ பாலிடெக்னிக்கில் மட்டுந் தையற்கலை கற்றுக் கொடுக் படுகிறது. ''

'' இவர்களுக்கு . ஜோ தைக்கத் தெரியுமா ? ''— கேட் இல் இருந்தவர்

'' பயிற்சி முடித்த பி இவர்களுக்குத் தைய சம்பந்தப்பட்ட அனை தெரியும். எதுவும் அல்ல '' என்று கூறிய முத அடுத்துள்ள அறைக்கு துச் செல்கிறார்.

தமிழாராய்ச்சி

'' ஔவையார், வள்ளுவர் காலம் பழங்காலம்—அதையடுத்து வந்தது புரட்சிக் கவிஞரின் நேற்றைய—இன்றைய காலம்.

இந்தக் காலங்களை நினைவூட்ட இன்றைய தினம் சென்னை மாநகரின் நடு நாயகமாக அண்ணா சிலை நிற்கிறது.

ஆகவே, சங்க காலத்தை வைத்து மட்டும் தமிழ்பற்றி ஆராய்ச்சி செய்வது போதாது; அண்ணா காலத்தையும் வைத்து ஆராய்ச்சி சுழல வேண்டும். இதை நினைவுபடுத்தத்தான் சென்னையின் நடுநாயகமாக அண்ணா சிலை இருக்கிறது.''

உலகத் தமிழ் மாநாட்டில் மால்கம் ஆதிசேஷய்யா.

அங்கு சட்டை, கோட்டு, பாண்ட்; விதம் விதமாக அழகழகாய்க் குழந்தைகள் சட்டை; மகளிர் உடுப்புகள் அத்தனையும் விலைக்கு விற்கப் படுகின்றன. விலை கொள்ளை மலிவு! யாரும் வாங்கலாம்.

அருகில் இருக்கும் ஜன்னல் வழியாக வெளியில் பார்க்கிறோம். ஏதோ '' டெலஸ்கோப் ''பில் பார்ப்பது போல் மாணவியர் பார்க்கிறார்கள்.

முதல்வர் கூறுகிறார், '' சிவில் எஞ்சினியரிங் பகுதியில் பயிற்சி பெறும் மாணவியர். சர்வே பயிற்சி பெறுகிறார்கள் ''.

கல்வி இல்லை, உரிமை இல்லை
பெண்களுக்குக்

கடைத்தேற வழியின்றி
விழிக்கிறார்கள்.

என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அன்று கனிந்துருகிக் கூறியவை மாறுதல் அடைவதைக் கண்டு மனம் நிறைவடைகிறோம்.

முதல்வர் தொடர்ந்து கூறுகிறார், '' மாணவியர் நலத்திற்கென்று இங்கு ஒரு ''காண்டீன் '' உண்டு. குறைந்த விலையில் உணவும், சிற்றுண்டியும் அவர்களுக்கு வழங்கப்படுகிறது. அத்துடன் கூட்டுறவுச் சங்கம் ஒன்றும் இயங்கி வருகிறது. மாணவியருக்கு ஹாஸ்டல் ஒன்றும் உண்டு. இதில் 125 மாணவியர் இருக்கிறார்கள். மாதம் ஒன்றுக்கு ஒரு மாணவிக்கு ரூ. 40 முதல் ரூ. 50 வரைதான் ஆகிறது.

''மாணவியருக்கென்று ஒரு தனிப் பேருந்து உண்டு. அது மைலாப்பூர் - சைதாப்பேட்டை ஆகிய பகுதிகளில் இருந்து மாணவியரை அழைத்து வருகிறது ''.

கடைசியாக ஒரு கேள்வி கேட்கிறோம்.

'' இதில் படித்தவர்களுக்கு வேலை வாய்ப்பு எப்படி இருக்கிறது ? ''

முதல்வர் புன்முறுவலுடன் பதிலளிக்கத் தொடங்குகிறார்.

'' நமது பாலிடெக்னிக்கில் படித்த மாணவியருக்குச் சுலபமாகவே வேலை கிடைத்துவிடுகிறது. இதில் படித்தவர்கள் சென்னையில் உள்ள இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ், பிலிப்ஸ் இந்தியா, மத்திய தோல் ஆராய்ச்சிக் கழகம், பெங்களூரில் உள்ள பாரத் எலக்ட்ரானிக்ஸ், இந்தியன் டெலிபோன் இண்டஸ்ட்டிரிஸ், மத்திய எலெக்ட்ரோ கெமிகல் ஆராய்ச்சிக் கழகம் ஆகிய நிறுவனங்களில் செய்கிறார்கள். உள்ள வங்கி வணிக நிறுவனங் பலர் வேலை ப வருகிறார்கள்.''

தமிழகப் பெ குலத்தின் எ லத்தை நினைவு றோம். மனத்தில் ம அரும்புகிறது.

''விலகி வீட்டிலோ
பொந்தில் வளர்
வீரப் பெண்கள் விரை
ஒழிப்பராம்''

என்ற பாரதியா வாக்கு நிறைவாகி வதைத்—தாய்க்குலத் கைகள் நிறைவான செ புரிவதைக் கண் கூடா காண்கிறோம்.

தலைப்பில் காணப்படும் ஹேமா ாலினி, ஆஷாலதா, பாரதி, னுசூயா ஆகிய நான்கு மகளிம் இந்தத் தொழில் நுட்பப் பள்ளியில் படித்துத் தேறியவர்கள்தான். தற்போது அவர்கள் சென்னையிலுள்ள மத்திய எலெக்ட்ரோ கெமிக்கல் ஆராய்ச்சிக் கழகத்தில் பணியாற்றி வருகிறார்கள்.

"பொறியியல் துறையில் படிக்கவும் பணியாற்றவும் பெண்கள் தகுந்தவர்களல்ல என்ற கருத்து நெடுங்காலமாக இருந்து வந்தது. அதனால் பெண்கள்கூட [illegible]ந்தப் படிப்புகளில் அக்கறை [illegible]டாமல் இருந்தனர். இப்[illegible]பாழுது நிலைமை முற்றிலும் மாறிவிட்டது. . நாங்கள் இந்தப் பயிற்சியில் படித்துத் தேறியதோடு திறம்படப்பணியாற்றியும் எடுத்துக்காட்டாக விளங்கி வருகிறோம். பொறியியல், மற்றும் தொழில் நுணுக்கத் துறையில் ஆடவருக்கு ஈடாக மகளிரும் பணியாற்ற முடியும் என்ற நம்பிக்கை எங்களுக்கு நிரம்ப இருக்கிறது." என்று ஹேமமாலினி நம்பிக்கையுடன் குறிப்பிட்டார்.

அடையாறு மகளிர் தொழில் நுணுக்கப்பள்ளியில் நாம்கண்ட காட்சி இதனை உண்மை என்று பறைசாற்றுகிறது.

"பெண்களால் முன்னேறக் கூடும்—நம்
வண்டமிழ் நாடும் எந்நாடும்."
—புரட்சிக் கவிஞர்

கன்னியர் விரும்பும் கார்குழல்

அந்த இளமங்கை, நிலைக்கண்ணாடி முன் நின்று கூந்தலை வாரிக் கொண்டிருக்கிறாள். கார்குழலாள் என்று கவிஞர்கள் வர்ணிப்பார்களே அது இந்த மங்கைக்குத்தான் பொருந்தும். அதை அறிந்து தானோ என்னவோ அவளது பெற்றோர் அவளுக்குக் 'குழலி' என்ற இனிய தமிழ்ப் பெயரினைச் சூட்டியிருந்தனர்.

பக்கத்து வீட்டுக் கோதையை நினைத்துக்கொண்டாள் குழலி. பொங்கி வந்தது புன்னகை. கோதைக்குக் கூந்தல் என்று சொல்லிக் கொள்ள ஒன்றும் கிடையாது. எலி வால் போன்ற சடை, அதுவும் கேப்பைக் கதிர் போன்று திருகித் திருகி நிற்கும். அதை நினைத்ததும் குழலிக்குச் சிரிப்பு வந்தது. பாவம் கோதை!

"வேலனுக்கு அரோகரா. .
கந்தனுக்கு அரோகரா . . .
வேல் ! வேல் . . . . . .
வீரவேல் தாரை வேல்
விண்ணோர் சிறைமீட்ட
தீரவேல் செவ்வேள்
திருக்கைவேல் . . . . ".

பக்தர்களின் பரவசக் குரல் பின்னணியில் ஒலிக்கிறது.

காணிக்கை

குழலி பெருமூச்சு விடுகிறாள். 18 ஆண்டுகளாக எண்ணெய்யும், நறுமணத் தைலமும் தடவி வளர்த்த அவளது கூந்தல், பிற மங்கையர் பார்த்துப் பெருமூச்சு விட வைக்கும் அந்தக் கார் குழல், இன்னும் சிறிது நேரத்தில் பழனியாண்டவனுக்குக் காணிக்கை ஆகப்போகின்றது.

குழலி ஐந்து வயதுச் சிறுமியாக இருந்தபோது ஒரு பெரிய கண்டத்திலிருந்து, உயிர் தப்பினாள். அதற்காகத் தம் மகள் 18 வயது எய்தியதும் அவளது கூந்தலினைப் பழனி முருகனுக்கு அளித்து விடுவதாக அவளது பெற்றோர் வேண்டியிருந்தனர்.

வேண்டுதலை நிறைவேற்ற இன்று பெற்றோருடன் பழனிக்கு வந்திருக்கிறாள் குழலி. இன்னும் சிறிது நேரத்தில்...... குழலி தன் தலையைத் தடவிப் பார்த்துக் கொள்கிறாள்.

குழலி மட்டுமல்ல. குழலியைப் போன்று ஆயிரக்கணக்கான பக்தர்கள் நாள்தோறும் பல்வேறு கோயில்களில் தங்களது கூந்தலை இறைவனுக்குக் காணிக்கையாக்குகின்றனர்.

பரீட்சையில் தேறுவதற்காக வேண்டுதல், வேலை கிடைப்பதற்காகத், தொழில் வளர, நோயிலிருந்து விடுபட, மகன், மகளுக்குக் குறித்த காலத்தில் திருமணம் நடந்தேற—இப்படி

த்தைக் கிழிக்கும் கலப்பை ரைக் கிழிக்கும் படகு—முகி கிழிக்கும் மின்னல்—இவற் ஊடுருவலுக்கே ஒரு தனி அழகுதான்!

உதயசூரியன் தன் மழலைப் பருவத்தைக் கடந்து பாலப்பருவத்திற்கு வந்துவிட்ட நிலை. அதன் ஒளி நகங்கள் எங்கள் உடலைச் 'சுள்ளென்று' கிள்ளின. ஆனால் ஆற்றின் இருமருங்கிலும் அடர்ந்து செறிந்த அலையாத்தி மரங்களின் மரகத இலைகள் வழி நெடுகிலும் நிழற்பந்தல் விரித்து, 'குளிர் ஒத்தடம்' கொடுத்தன.

"சாயபு மீனுக்கு யார் கிட்டே சொல்லி இருக்கீரு?" என்று கேட்டார் தேவர்.

"நம்ம பொன்னப்பன் கிட்டே தான் சொல்லியிருக்கிறேன்."

"பொன்னப்பன் கிட்டேயா? அப்ப நல்ல மீனுத்தான் கிடைக்கும்."—என்ற தேவர்,

"அவன் என்ன, வேறே கல்யாணம் காட்சிக்கு ஏற்பாடு பண்ணலையா?"—என்று அக்கறையோடு விசாரித்தார்.

"இல்லைங்க எசமான்; இப்படியே கடைசி வரைக்கும் இருந்திட வேண்டியதுதான்னு சொல்லிக்கிட்டு இருக்கிறான்."—என்றார் பாய்மரத்தை விரிப்பதில் ஈடுபட்டிருந்த ஒரு மீனவத்தோழர்.

"பாவம், அந்தப் பொன்னப்பன்....! வாழ்க்கை இப்படிப் பரிதாபமாகப் போயிருக்க வேண்டாம்."—சொல்லும் பொழுதே தேவரின் முகத்திலே சோகம் இழையோடியது; குரலிலும் தழுதழுப்பின் பிசிறல்.

சில விநாடிகள் அமைதியில் ஆழ்ந்திருந்த அவர், குரலைக் கனைத்துக் கொண்டே, நண்பர் அரங்கசாமியைப் பார்த்துக் கேட்டார்:

"உங்களுக்கு அந்தப் பொன்னப்பன் கதை தெரியுமா?"

"தெரியாதுங்களே?"

"அப்பச் சொ றேன் கே நீங்கள் எல் தெரிஞ்சுக்க வே யதுதான்."

ஒரு கலை கதையைக் கேட் ஆர்வத்துடன் நாங்கள் எங்கள் காதுகளைக் கூர்மையாகத் தீட்டிக் கொண்டோம்:

"...பொன்னப்பன், பிறந்து வளர்ந்தது எல்லாம், எங்க ஊருக்குப்பக்கத்திலே உள்ள ஒரு குப்பத்திலேதான். சின்ன வயசிலேயே, அவனைப் பெத்தவங்க செத்துப் போயிட்டாங்க. அவனோட அத்தைக்காரிதான் அவனை வளர்த்து ஆளாக்கினா. கல்வி வாசனை இல்லேன்னாலும் ரொம்பக் கறுக்கானவன்; எதிலுமே அசாத்தியமான ஒரு கூர்மை. அவன் ஊத்தையோ, வலையையோ எடுத்துக்கிட்டு வெளியே கிளம்பினா வெறுங்கையோட வீட்டுக்குத் திரும்பவே மாட்டான்; மீன் பிடிக்கிறதிலே அவ்வளவு கெட்டிக்காரன்!

"அவனோட அத்தைக்கு ஒரு மகள் இருந்தா; அஞ்சம்மான்னு பேரு நல்ல சொட்ட வாழைக் கன்னு மாதிரி ரொம்ப அழகா இருப்பா. அந்த மஞ்சள்-சிகப்பு அவளுக்குன்னு எங்கேருந்துதான் வந்துச்சோ? பலாச்சுளை மாதிரியா உடம்பே ஒரு தள தளப்பா மின்னும். ஒடிச்சு மடிச்சுடலாம்; அப்படி ஒரு வாகான உடல் அமைப்பு. நீங்கள் எல்லாந்தான் ஆவுடையார்கோவில் அங்கே-இங்கே எல்லாம் சிற்பங்களைப் பார்த்திருப்பீங்களே! அந்த மாதிரி மூக்கும் முழியுமா இருப்பா.

"சின்னஞ் சிறுசுகளா இருந்தப்பவே பொன்னப்பனும் அஞ்சம்மாவும் ஒண்ணாத்தான் ஓடி, ஆடி விளையாடுவாங்க. மீன் பிடிக்கவும் போவாங்க. வயசு வந்த அப்புறமும் அந்தப் பழக்கம் போகலே. அவங்க ரெண்டுபேரும் ஒண்ணாக் குனிஞ்சு ஊத்துப்போட்டு மீன் பிடிச்சதை நானே என் கண்ணாரப் பார்த்திருக்கேன்.

"அத்தைக்காரிக்குத் தன் அண்ணன் மகன் மேலே ரொம்ப வாஞ்சை. அவனுக்கே தன் மகளைக் கொடுத்திட்டா.

"ஆனாப் பாருங்க, கலியாணம் ஆகி மூணுநாள் முழுசா ஆகலே; இந்தப் பொன்னப்பன் என்னடான்னா புளிய மரத்திலே தூக்குப்போட்டுக்கிட்டுத் தொங்கப் போயிட்டான்! நல்ல வேளையா அந்தக் கடைச்சாமத்திலே, நடவுக்கு ஆள் அழைக்கப்போன நான் வழியிலே இவன் தொங்குறதுக்கு முந்தி கண்டுபிடிச்சு, கழுத்திலே போட்டிருந்த சுருக்கை அவிழ்த்து விட்டேன். காரணம் கேட்டா, தேம்பித் தேம்பி அழுவுறான். அஞ்சம்மாவோட இனிமே வாழவே மாட் கதறிக் கதறிப் புலம்புறா க்கூடாதது ஏதோ நட கணும் என்று எனக்குப்ப

"சீ! நீ எதுக்குடா அ காக உயிரை விடணும்? அ இல்லாத அவமானம் கென்ன வந்திடிச்சு?... அவனைக் கெடுத்தவன் யாரு தெரியுமா"ன்னு கேட் "அய்யோ! அவ முழுசாக் டிருந்தாலும் தான் பர லையே எசமான்! அப்படி ணும் ஆகாம இருக்கும் எவனையோ நெனைச்சுக்கி என்னை நெருங்காதேங்கிறா."

—பொன்னப்பன் இப் சொன்னதும் எனக்கு ஆச்சரி இருந்துச்சு. சரி, எவனோ சாதிக்காரன் பணத்தையோ பகட்டையோ காட்டி அவ வலை விரிச்சுட்டான்னு தெரிஞ்சுகிட்டேன்; அதே சம தன் கற்பை அவள் கெடுத் லேன்னும் புரிஞ்சுகிட்டேன்.

மறு நாளே அஞ்சம்மா அழைச்சுப் பேசினேன். உண்மையை ஒப்புத்துக்கிட் ஆனா, தன் காதலன் யாரு மட்டும் சொல்லவே மாட்டே னுட்டா.

எண்ணற்ற காரணங்களுக்காகத் தங்களது கூந்தலை அளிக்க முன்வருகின்றனர்.

மெரீனு கடற்கரையில், அண்ணுவின் சமாதி அருகே, கோடம்பாக்கம் ஸ்டூடியோ வட்டாரத்தில், மாமல்லபுரக் கலைச் சின்னங்களின் எழிலைப் பருக வரும் எண்ணற்ற சுற்றுப் பயணிகளைப் பார்க்கும்போது நமக்குத் திருப்பதியும், திருத்தணியும், பழனியும், திருச்செந்தூரும் நினைவுக்கு வருகின்றன.

ஆனுல், அவர்கள் காணிக்கையாக வழங்கும் இந்தக் கூந்தல், நாட்டுக்கு லட்சக்கணக்கான பணத்தினை வருவாயாகத் தருவதைப் பலர்அறிய மாட்டார்கள்.

மாதம் 10 டன் கூந்தல்.

சென்னை அம்பத்தூர் தொழிற்பேட்டையின் ஒரு கோடியில்அமைந்துள்ள 'விக் இந்தியா' என்ற செயற்கைச் சிகைத் தயாரிப்பு நிறுவனம் இந்த ஆக்கப்பணியினைச் செய்கிறது. அரசின், "ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷனை"ச் சேர்ந்தது இந்த நிறுவனம்.

சுமார் 3 ஆண்டுகளுக்கு முன், அதாவது 1967-ம் ஆண்டு சனவரித் திங்களில் துவக்கப்பட்ட இந்த நிறுவனம், மாதந்தோறும் வாங்கும் கூந்தல்களின் எடை சுமார் 10 டன்.

இதில் திருப்பதி தருவது மாதம் சுமார் 3 முதல் 4 டன். பழனி அளிப்பது சுமார் ½ டன். மீதியைத் தருவது தமிழகத்தில் உள்ள 40-க்கும் மேற்பட்ட திருத்தலங்கள். மைசூரிலிருந்தும் கொஞ்சம் வருகிறது. பெரும்பாலாக வருவது ஆறுபடை வீடுகளிலிருந்து.

ஆமாம், மாதம் 10 டன்னுக்கா "விக்" தயாரிக்கிறீர்கள்! உங்களது கண்கள் கேள்விக்குறியோடு விரிகின்றனவா ?

இந்தக் கேள்வியை 'விக் இந்தியா' நிர்வாகி திரு வைத்தியநாதனைக் கேட்டால் உதட்டிலே ஒரு இனிய புன்னகையை தெளிய விடுகிறார். 'விக்' தயாரிப்பது சிக்கலான, நுணுக்கமான கலை. "வாருங்கள்! நேரில் பாருங்கள்! புரிந்து கொள்வீர்கள்" என்று அழைக்கிறார். இனி அவரைத் தொடருவோம்:—

பஞ்சுப் பொதிகள் போல

முதல் அறை, தொழிற்கூடத்தின் கடைசியில் இருக்கிறது. கோயில்களிலிருந்து லாரிகளில் ஏற்றி வரப்படும் கூந்தல்கள் பஞ்சுப் பொதிகள் போல் மூட்டைமூட்டையாகக் கிடக்கின்றன.

அடுத்த அறையின் அருகில் சென்றதும் சற்று முகத்தைச் சுளிக்கிறோம், அந்தக் கச்சாப் பொருளைப் பார்த்து. பந்து போலும் சிக்கலுடனும் உள்ள கற்றை கற்றையான [illegible]கள். சுமார் [illegible] தாய்மார்[illegible] அமர்ந்து மிகவும் பொறுமையுடன் வேண்டாதவற்றையெல்லாம் நீக்குகிறார்கள்.

திரு வைத்தியநாதன் நம் கேள்விக்கு பதில் தருகிறார். "வாங்கி[illegible] கூந்தல்களில் பெரும் பகு[illegible] நீக்கி[illegible]றோம். குட்டையானவற்[illegible] பயன்படுத்துவதேயில்லை".

வர்ண மாற்றம்

அடுத்த கட்டம், தேர்ந்[illegible] கப்பட்ட கற்றைகள் பல [illegible]யன மாற்றங்களுக்கு[illegible] கின்றன. பிறகு வெளி[illegible] "பிளீச்" செய்[illegible] வெள்ளையான கூந்தல்கள்.

" ஏன் வெள்ளையாக்கி விடுகிறீர்கள் ".

"அப்போதுதான் தேவையான வர்ணத்தில் " விக் " தயாரிக்க முடியும் ?" என்கிறார் அருகில் நிற்கும்தொழில் நுணுக்க அதிகாரி திரு சுப்பிரமணியம்.

" தேவையான வர்ணமா! எத்தனை கலரில் தயாரிக்கிறீர்கள் ?"

" அடிப்படை வர்ணம் 28. தேவைப்பட்டால் சுமார் 100 விதமான வர்ணங்களில் கூடத் தயாரிக்கலாம் ! " அமைதியாகப் பதில் சொல்கிறார். சுப்பிரமணியம்.

நாம் ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்கிறோம். நமது அறியாமையைப் புரிந்து கொண்டு பக்கத்திலுள்ள அலுவலருக்குச் சமிக்ஞை செய்கிறார், நிர்வாகி. ஒரு கொத்து வளையங்களில் தொங்குகின்ற மாதிரி கூந்தல்களை அவர் எடுத்து வருகிறார். அதில் மிகக் கருமை முதல் செம்பட்டை நிறம், பொன்னிறம், சாம்பல் நிறம், வெள்ளியிழைகள் போன்ற நிறம், தூய வெண்மையான நிறம் ஆகியவைகளில் ஒவ்வொரு வளையத்திலும் ஒவ்வொரு விதமான மாதிரிக் கற்றைக் கூந்தல்கள் தொங்குகின்றன.

வெளிநாட்டு நிறுவனங்கள் மொத்தமாக " ஆர்டர் ", கொடுக்கும்போது காட்டுவதற்காக இவைகளை வைத்திருக்கிறோம், என்று விளக்குகிறார் நிர்வாகி.

வர்ணம் செய்யப்பட்ட முடிகள் மேஜைகளில் பொருத்தப்பட்ட சீப்புகள் போன்ற கருவிகளினால் நன்றாக வாரப்பட்டு (இந்தப் பணிகளையும், ரசாயன மாற்றம் செய்யும் பணிகளையும் ஆடவரே செய்கின்றனர்.) தனித்தனி அளவுகளில் வெட்டப்பட்டு, நன்றாகக் கட்டப்பட்டு, அடுத்த அறைக்கு வருகின்றன.



மங்கையர் கூட்டம்

அது அறை அல்ல. ஒரு பெரிய கூடம். சுமார் 500 மங்கையர் ஒரு சேர அமர்ந்து பல்வேறு பணிகளைப் புரிகின்றனர். "விக்"கிற்கான வலையில் (அடியில் தொப்பி போன்ற வலை மீது தான் முடிகள் இணைக்கப்படுகின்றன) முடிகளை வரிசையாகத் தையல் யந்திரங்களில் தைக்கும் பிரிவு ஒரு புறம்! வலைகளை மறைத்து அசல் கூந்தல் போல் அமைக்கும் பிரிவு ஒரு புறம். தலையில் பொருத்துவதற்கான புது வகையான "சீப்"பைப் பொருத்துவது ஒரு புறம். கையினாலேயே முழு "விக்"கையும் தயாரிக்கும் பிரிவு ஒரு புறம். மங்கையர் கூட்டம், தொழிற் கூடத்தைச் சுற்றிப் பார்க்கும் நம்மைக் கூடக் கவனியாமல் தங்களுக்கே உரிய பொறுமையுடன், கடமையில் கண்ணாயிருக்கின்றனர். புகைப்படக்காரர் மேஜைகளில் ஏறித் தனது கடமையைச் செய்கிறார்.

"ஒரு நாளைக்கு எவ்வளவு "விக்" தயாரிக்கிறீர்கள்?"

அது "விக்கின் தரத்தைப் பொறுத்தது. முழு "விக்" பெண்கள் அணிவதற்கான டோப்பா), "விக் லெட்" எனப்படுகிற சிறிய "விக்", ஃபால்ஸ் எனப்படுகிற நீளமான கூந்தல் கற்றை, இப்படிப் பல தரம் உள்ளன. நாள் ஒன்றுக்கு சுமார் 800 விக் லெட்டும், 30 ஃபால்சும், 40 கை "விக்"கும் தயாரிப்போம்." என்கிறார் நிர்வாகி.

"யந்திரத்தினால் செய்கிற டோப்பாவிற்கும், கையினால் செய்வதற்கும் என்ன வித்தியாசம்".

"யந்திரத்தில் ஒரு நாளைக்கு 100 விக் தயாரிக்கலாம். கையினால் ஒரு "விக்" செய்ய ஒரு பெண்ணிற்கு 6 நாட்கள் பிடிக்கும்."

பிறகு ஏன் கை "விக்" தயாரிக்க வேண்டும்?

கை "விக்"கிற்கு மதிப்பு

"கையினால் செய்த "விக்"கிற்கு வெளிநாட்டில் தனி மதிப்பு உள்ளது. வெள்ளைக்காரர்கள் அதனை விரும்பி வாங்குகின்றனர். எனவே தான் அதில் மிகுந்த கவனம் செலுத்துகிறோம்.

"எந்த நாடுகள் நமது "விக்"கை அதிகம் வாங்குகின்றன?"

"ஜெர்மனி, யூகோஸ்லாவியா, நெதர்லாந்து, பெல்ஜியம், பின்லாந்து என்ற வரிசையில்...."

கட்டை மீது "காமாசோமா"வென்றிருந்த "விக்"கை முறைத்துப் பார்க்கிறார் எங்களோடு வந்த நண்பர்.

அது "பீட்டில்ஸ் விக்" என்று விளக்குகிறார், நிர்வாகி. எல்லோரும் சிரிக்கிறோம். பத்திரிகைகளில் துணுக்குகளில் வரும் பீட்டில்ஸ் படங்களைப் போல் முன்பக்கம் எது பின்பக்கம் எது என்று தெரியாமல் எல்லாப் பக்கத்திலும் அந்த "விக்"கில் மயிர்க்கற்றைகள் தொங்குகின்றன.

அடேயப்பா! எவ்வளவு நீளம்!!

விதவிதமான "விக்"குகளைப் பார்த்த வெள்ளைக்கார மாது, "அடேயப்பா எவ்வளவு நீளமான கூந்தல்!" என்று சுமார் 2 அடி நீளமுள்ள ஒரு ஃபாலை தனது தலையில் வைத்து அளவு பார்க்கிறார்.

"இதை விடப் பெரியது கூட எங்களிடம் உண்டு. 4½ அடி நீளமுள்ள அந்தக் கூந்தல் திருப்பதிக் கோவிலிலிருந்து வந்தது. இப்போது அதை அமெரிக்காவில் பொருட் காட்சியில் வைத்திருக்கிறோம்" என்று விளக்கினார் நிர்வாகி.

"ஆமாம் ஒரு "விக்" என்ன விலை இருக்கும்?"

"நாங்கள் சில்லரைக்கு விற்பதில்லை. மொத்தமாகத்தான் வெளிநாடுகளுக்கு அனுப்புகிறோம். சுமார் 1 டாலரிலிருந்து (7½ ரூபாய்) 15 டாலர் (112 ரூபாய்) வரை பல தரத்தில் உள்ளன".

பக்கத்தில் இரு பெண்கள் இதமாக இஸ்திரி போடுகின்றனர். அருகில் சென்று பார்த்தால் அடியில் சுமார் ஒரு அங்குல அகலத்திற்கு நன்கு கோக்கப்பட்ட முடிகள் பளபளக்கின்றன. பக்கத்தில் சுமார் 20 பெண்கள் அமர்ந்து ஏதோ நுணுக்கமாகச் செய்து கொண்டிருக்கின்றனர்.

கண் இமை

"அது செயற்கை கண் இமை. அது ஆரம்பக் கட்டத்தில், சோதனை நிலையில் உள்ளது. இன்னும் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதியைத் துவங்கவில்லை. இந்த இமைகளுக்கு பிரான்சு, அமெரிக்கா போன்ற நாடுகளில் மிகுந்த வரவேற்பு இருக்குமென்று எதிர்பார்க்கிறோம். இதற்காக 3 பெண்கள் இங்கிருந்து பாரிஸ் சென்று தனிப் பயிற்சி பெற்று வந்திருக்கிறார்கள்" என்று விவரிக்கிறார், திரு வைத்தியநாதன்.

"டைங்......டைங்"

அதோ தூரத்தில் ஆலயமணியின் ஓசை கேட்கிறது. குன்றின் மீது அமர்ந்துள்ள குமரனின் கோயில் மணி ஒலிக்கும் வரை, இத் தொழிலும் வளர்ந்தோங்கும் என்பதில் எந்தவித ஐயமுமில்லை.

அதிசயமான இந்தத் தொழிலகத்தை மற்றுமொரு முறை நோட்டமிட்டு விட்டு, நிர்வாகிகளின் புன்னகை ததும்பும் இன்முகத்திற்குக் கரம் கூப்பி வணக்கம் கூறி விடை பெறுகிறோம்.

விளக்கா? விதையா?

அ. மறைமலையான்

தென்னஞ் சோலையைத் தாண்டிக் கோரையாற்றின் நடுவே எங்களுக்காகக் காத்திருந்த படகிலே நாங்கள் ஏறிய பொழுது நிலந்தெளியவில்லை.

ஆயினும், இருளின் சாயம், திறமையில்லாத மனிதர்களின் போலிப் புகழ் போல, மெல்ல மெல்ல வெளுத்துக் கொண்டிருந்தது; கீழ்வானத்தில், கனமாகக் கறுத்திருந்த மேக மூட்டத்திலும் 'இளநரை' தென்பட்டது.

"என்ன, எல்லோரும் ஏறியாச்சா?"–தமக்கே உரிய கரகரப்பான குரலில் கேட்டார் தேவர்.

"ஓ! எல்லாரும் ஏறிட்டோமே!" என்று நாங்கள் யாவரும் கூட்டுக் குரலில் முழங்கினோம்.

"சரி, விடுங்கப்பா!" என்று தம் ஆட்களுக்கு ஆணையிட்டார் தேவர்.

கடலைக் காணத் துடிக்கும் எங்கள் பேரார்வத்தைப் புரிந்து கொண்டதைப்போல அந்த நீண்ட படகும் மிக வேகமாக மிதந்தோட முனைந்தது. துடுப்பை வலிக்கும் பாட்டாளி இளந்தோழர்கள் 'ஐலசா! ஐலசா!' என்று உற்சாகமாகப் பாட்டுப்பாடினர்; அதன்மூலம் படகின் ஓட்டத்திற்கு விறுவிறுப்பையும் ஊட்டினர்.

ஓடும் படகில் அமர்ந்தவாறே, ஒரு காலை வெளியே தொங்கவிட்டு, ஆற்று நீரில் தோய்த்தேன். என் அருகில் உட்புறம் உட்கார்ந்திருந்த நண்பர், வேங்கடாசலபதி, "அய்யய்யோ, காலை அப்படித் தொங்கவிடாதீங்க; விழுந்தாலும் விழுந்திடுவீங்க!" என்று என்னை எச்சரித்தார். அவர் எப்போதுமே எதிலுமே எச்சரிக்கையானவர்.

"அப்படியே விழுந்தாத்தான் என்ன? இந்தச் சாதாரண ஆற்றில் கூட இவரால் நீந்த முடியாதா?" என்று அடக்கமாகச் சிரித்தார் நண்பர் அரங்கசாமி. இந்த மகிழ்ச்சியான படகுப் பயணத்திற்கு ஏற்பாடு செய்தவரே அவர்தாம்.

"ஆமா, உங்களுக்கு நீந்தத் தெரியுமா?"—என்று என்னைப் பார்த்துக் கேட்டார் நண்பர் செருமையா. கிறித்துவ சமயத்தில் ஆழ்ந்த ஈடுபாடுள்ள ஒழுக்கசீலர் அவர்.

நான் மெள்ளச் சிரித்துக் கொண்டே தலையை ஆட்டினேன்.

"இந்த ஆற்றில் மட்டுந்தானா? வாழ்க்கையிலும் நீச்சலடிக்கத் தெரியாதவர்கள் அமிழ்ந்து போக வேண்டியதுதானே?"—என்று உள்ளூர நான் எண்ணிக் கொண்டேன். எங்கள் பேச்சைக் கவனித்துவிட்ட தேவர்,

"ஒண்ணும் பயப்படாதீங்க; சும்மா காலைத் தொங்கப் போட்டுகிட்டு வாங்க; அப்படித் தவறி விழுந்திட்டாலும். ஆட்களை விட்டு உங்களைத் கிட மாட்டேனா?"—என்று தனிவலிமையை அல் குள்ள ஆட்களின் வலி நயமாக விளம்பரப்படு கொண்டார்.

தேவருக்கு அந்தப் பகு நிரம்பச் செல்வாக்கு என்று பர் அரங்கசாமி முன்பே சொ யிருந்தார். நாங்கள் பய மேற்கொண்டிருக்கும் பட குச் சொந்தக்காரரே அவர்தா பழக்கத்திற்கும் மிகவும் இனி யானவர்; கலகலப்பான பே —சிரிப்பு. ஏழை—எளிய களுக்குத் தாராளமாக உத கூடிய இயல்பும் உள்ளவராம்.

"....என்ன சாயபு, ரொ பக் குளிரடிக்குதே!"

—என்று சிகரெட்டைப் ப வைத்தவாறே படகின் மறு ப கத்தில் இருந்த ஆட் பார்த்துச் சொன்னார் அவர்.

"அதுக்கென்ன முதலா இன்னும் ரெண்டே நிமிசத்தி சாயா குடிச்சா குளிர் போவுது!"—என்றார் அந்த லாமிய நண்பர்.

தேவர் எங்கள் பக்கமா முகத்தைத் திருப்பினார்.

"நம்ம சாயபு சமையல்லே ரொம்பக் கெட்டிக்கார ஆசாமி. பழைய நள மகாராசாவே இவ கிட்டே தோத்துப் போயிடணும். பாருங்களேன், இன்னும் கொஞ் நேரத்திலே டீ மட்டும் இல்லே, இடியாப்பம், தோசை எல்லாமே அற்புதமாத் தயார் பண்ணிக் கொடுத்திடுவாரு. அப்புறம் நாம தீவுக்குப் போனதும் கம கமன்னு மீன் குழம்பு, பிரியாணி எல்லாமே கிடைக்கும்."

—தேவர் சொல்லச் சொல்ல, எங்கள் நாக்கிலே நீர் ஊறத் தொடங்கிவிட்டது.

படகு இப்போது முன்னைவிட விரைவாகப் பாய்ந்தோடியது.

ருபெருக்கும் மனசு ஒத் தப்போ அவங்க தனியாப் பிரிஞ்சுபோறது ன் நல்லது! கிரியும் ம்புமா மாறிட்டவங்க ம்-மனைவியுமா போலி க்கை வாழறதிலே என்ன யோசனம் இருக்கு? அதனாலே னே பஞ்சாயம் பேசி, பொன்னப்பனுக்கு நானே அஞ்சம்மா கிட்டேருந்து தாலியை வாங்கிக் கொடுத்திட்டேன்.''

* * *

டிக்கொண்டிருந்த படகு டென்று நின்றது.

கோரையாறு சங்கமம் ஆகும் கடல் பகுதிக்கு நாங்கள் வந்து விட்டோம்.

சற்றுத் தொலைவில் நாங்கள் இறங்கித் தங்கி விருந்துண்ணப் போகிற தீவுத் திட்டு, பாயாசத்தில் கிடக்கும் முந்திரிப் பருப்பு மாதிரி அழகாகத் தெரிந்தது.

''என்னடா இது, காத்து ஒரு மாதிரியா வீசுதே! படகை அங்கே கொண்டுபோக முடியாதோ?''—று கேட்டார் தேவர்

''ஆமா எசமான்! இங்கேயே இறங்கி நடந்திடுறதுதான் நல்லது''—என்றார் ஒரு மீனவத் தோழர்.

எல்லோரும் படகை விட்டுக் கீழே இறங்கினோம். முழங்காலுக்கு மேல் நீர் இருந்தபோதிலும், அலையேதும் இல்லை. அது வெறும் உப்பங் கழிப் பகுதியே என்று தெரிந்து கொண்டோம்; நாங்கள் கரையேறப்போகும் திட்டுக்கு அப்பால் தான் உண்மையான கடலாம்!

எங்களைச் சுற்றிலும் பெரிய பெரிய மீன்கள் பல, வைரத் தகடுகளாகத் துள்ளி விழுந்து எங்கள் விழிகளுக்கு விருந்து படைத்தன.

தீவுத் திட்டிலே ஒரு சிறிய கீற்றுக் கொட்டகை. அங்கே சென்றடைந்ததும்தேவர் மீண்டும் கதையைத் தொடர்ந்தார்; இல்லை, அவர் தொடரும் வகையில் நான்தான் கிளறிவிட்டேன்.

''...ஆமா, பிறகு அந்த அஞ்சம்மா தன் காதலனையே மணந்து கொண்டாளா?''

''...ம். அந்த வயித்தெரிச்சலை ஏன் கேட்கிறீங்க? அவ எவனை நினைச்சுக்கிட்டுப் பொன்னப்பனைப் புறக்கணிச்சாளோ அவன் இவளைத் திரும்பிக்கூடப் பார்க்கலே; அவனைத் தன்பக்கம் இழுக்கிற வழியும் இவளுக்குத் தெரியலே. பெண்களுக்கு அழகு இருக்கிற அளவுக்கு அறிவு எங்கே இருக்கு? கொஞ்ச நஞ்சம் படிச்சிருந்தாலும் அவனை மிரட்டி உருட்டிப் பார்க்கலாம். அதுக்கும் இவகிட்டே வக்கு இல்லே. வருசமோ ஒண்ணு-ரெண்டுன்னு ஓடிக்கிட்டே இருந்துச்சு. தாய்க்கு ஒளிச்சு சூலாம்பாங்க. —ஆனா இந்த அஞ்சம்மா ரொம்ப அழுத்தக்காரி. தன் தாய்க்குக் கூடத் தன் காதலன் யாருன்னு சொல்லலே!

இப்படி இருக்கிறப்போ, ஒரு நாள் அவ இந்த உப்பங் கழிப் பக்கம் வந்து மீன் பிடிச்சுக்கிட்டு இருந்திருக்கா-அப்போ பொன்னப்பனும் மீன் வேட்டைக்கு வந்திருக்கான்.

திடீர்னு, ''அய்யோ! மச்சான்! என்னைக் காப்பாத்தேன்'' காப்பாத்தேன்!!-ன்னு கூச்சல் போட்டிருக்கிறா அஞ்சம்மா.

பொன்னப்பனுக்கு ஒண்ணுமே புரியலே. திகைச்சுப்போனான்.

ரெண்டு வருசத்துக்கு மேலே திரும்பிக்கூடப் பார்க்காமே—அவமானப்படுத்தி ஏன், வாழ்க்கையே பாழடிச்சவ திடுதிப்புனு கரிசனமா அழைச்சா....?

நானா இருந்திருந்தா அவ் திசைப் பக்கம்கூட என் தலையைத் திருப்பி இருக்கமாட்டேன். ஆனா, பொன்னப்பன் சாதாரண மனிதன் பாருங்க; அதனாலே அவ எப்படியாச்சும் செத்துத் தொலையட்டும்னு பேசாமே ஒதுங்கலே; பழி வாங்க நினைக்கலே! ஒரே தாவிலே அவ பக்கத்திலே பாய்ஞ்சான். அவ காலைச் சுத்திக்கிட்டு இருந்த 'வாலைக்கடியனைப்' பிச்செறிஞ்சான். அவளைத்தன் தோள்மேலே அள்ளித் தூக்கிப்போட்டுக்கிட்டுக் குப்பத்துக்கு ஓடினான்.

பொதுவா, 'வாலைக்கடியன்' கடிச்சா யாருமே பிழைக்க மாட்டாங்க. அது ஒரு மோசமான பாம்பு வகை. ஆனா, பொன்னப்பன் ஒரு நல்ல காரியம் பண்ணினான். ஒரு வாழை மரத்துப் பட்டையை வெட்டிக்கிட்டுவந்து சாறு பிழிஞ்சு உள்ளுக்குப் புகட்டினான். ஆனா, அஞ்சம்மா மயக்கமாகிப் பல்லுக்கிட்டி கிட்டதாலே சாறு சரியா உள்ளே போகலே. அப்புறம் முழு வாழை மரத்தையுமே வெட்டிக்கிட்டு வந்து பட்டைகளை அரிச்சு அதுங்க மேலே அவளைப் படுக்க வச்சிருக்கான். கிட்டிப்போன பல்லையும் மெதுவா தெம்பிக் கிட்டுச் சாத்தைச் செலுத்தியிருக்கான். என்ன நல்ல காலமோ அஞ்சம்மா பிழைச்சுக்கிட்டா.

அதுக்கப்பறம், அஞ்சம்மாவின் மனசு மாறிட்டுது. பொன்னப்பனைப் புறக்கணிச்சது எவ்வளவு தப்புங்கிறதை அவளே உணர்ந்துகிட்டா. அவனை மறு கல்யாணம் செஞ்சுக்கிறதுக்கும் தயாராயிட்டா......''

நாடு எது?

நாடு என்பது வெறும் பூகோளப் படம் அல்ல; அங்கு வாழும் மக்களின் உணர்ச்சித்தொகுப்பே அது. கிராமங்களுக்கு நாம் உலக அறிவை ஊட்டவில்லை யென்றால் அது நாட்டை வாழ வைக்காது.

தேவர் இப்படிச் சொல்லிக் கொண்டு வரும்பொழுதே.

''பிறகு என்ன, பொன்னப்பன் பாடு கொண்டாட்டந்தான்!''—என்று முத்தாய்ப்பு வைத்தார் அரங்கசாமி.

''ஊம்...அதுதான் இல்லே!''—என்று ஒரு வெட்டு வெட்டினார் தேவர்.

''அப்புறம்?''

—என்று நாங்கள் எல்லோரும் ஏகக் குரலில் எங்கள் திகைப்பை வெளிப்படுத்தினோம்.

சாயபுவின் கைவண்ணத்தால் எங்கள் மூக்கைத் துளைக்கும் மீன் குழம்பையும், பிரியாணி மணத்தையும் கூட நாங்கள் மறந்து விட்டோம்.

தேவர் தொடர்ந்தார்:

''அஞ்சம்மா எவ்வளவோ கெஞ்சிக் கூத்தாடியும் பொன்னப்பன் அவளை மறு கலியாணம் பண்ணிக்கவே மாட்டேன்னு ஒரேயடியா மறுத்திட்டான். தான் செஞ்ச ஒரு குத்தத்துக்கு—நல்ல குணம் உள்ளவனோட அருமை புரியாமே புறக்கணிச்சோமேங்கிற உறுத்தல் தாங்காமே—எப்படியாச்சும் தன் உயிரைக் காப்பாத்திய அத்தான்கிட்டே மன்னிப்பு வாங்கிடணும்னு அஞ்சம்மா துடியாத்துடிச்சா. அதே சமயம், தன்னைக் கட்டிக்கிறேன்னு சொல்லிட்டுக் கைவிட்டவனுக்கு ஒரு சரியான பாடம் கற்பிக்கணும்கிற வெறியும் வந்துட்டுது அவளுக்கு. அதுக்காகவே பொன்னப்பனை மறுபடியும் கட்டிக்கிறதுக்கு அவ ஒத்தைக் காலிலே நின்னா. என்கிட்டேயும் வந்து அழுது புலம்பினா. நான் பொன்னப்பனைக் கூப்பிட்டுச் சமாதானப் படுத்த முயற்சி பண்ணினேன். அவனோ என் வார்த்தையைக் காதிலேயே போட்டுக்கலே.

''கலியாணம்கிறது வெறும் உடம்பு அழகுக்காக மட்டும் நடக்கிறதா எசமான்? அது மனசு பொருந்தினாத்தான் நடக்கணும். நான் சொல்றது அடிக்கடி மாறக்கூடிய வெளி மனசை இல்லே; உள் மனசை! விளக்கு அணைஞ்சா திரும்ப ஏத்திவைக்கலாம்; விதை அவிஞ்சா அதைத் திரும்ப முளைக்க வைக்க முடியுமா? ஆணும் பெண்ணும் வச்சுக்கிற ஆசையும் அப்படித்தான்! அது அணையிற விளக்கா இருக்கக்கூடாது. அவியாத விதையா இருக்கணும்!''—பொன்னப்பனுக்கு அதற்குமேல் நான் என்ன சமாதானம் சொல்ல முடியும்?

ஆனால், அஞ்சம்மாவுக்கு அவனுடைய பிடிவாதத்தைக் கண்டதும் ஒரே ஆத்திரம் வந்துட்டுது. பொன்னப்பன் மேலே இல்லே; தடுமாறி விழுந்த தன் மேலேயும், தன்னைக் கட்டிக் கொள்வதாகச் சத்தியம் செய்து கொடுத்து

விட்டுப் பிறகு பாராமுகமாக ஒதுங்கிப் போனானே அந்தக் கோழைமேலேயும்!

''நீ சொல்றதும் சரிதான் மச்சான்; நீ எதுக்கு என்னைக் கட்டிக்கணும்?... ஆனா என் மனசைக் கெடுத்து ஆசையைக் கொடுத்து, நம்ம ரெண்டு பேரோட வாழ்க்கையையும் கெடுத்தானே அவனையே இப்பப்போய் ரெண்டிலே ஒண்ணு கேட்கிறேன். என் மானமே போன அப்பறம் அவன் மானத்தைமட்டும் எதுக்கு நான் காப்பத்தணும்? என்னையும் அழிச்சுக்கிட்டு உன்னையும் ஏன் அழிக்கணும்? இதோ இப்பவே போய் அவனைச் சந்தி சிரிக்க வைக்கிறேன்.''

—அப்படின்னு ஆவேசமா கிளம்பிட்டா அஞ்சம்மா.

ஒரு செம்படவக் கு திலே பிறந்த ஒரு சாதார பெண், ஒரு பெரிய சாதிக்கா பையனின் மானத்தை அவ்வ இலேசில் வாங்கி விட முடியு கடைசியிலே நடந்தது என தெரியுமில்லே?

அஞ்சம்மா கொலை செய் பட்டாள். அந்தப் படுபாவி தப்பலே. அவனுக்கு மரண த டனை கிடைச்சுட்டுது.''

—தேவர் இப்படிக் கதை முடித்ததும் எங்கள் மனத் ஏதோ ஒரு வறட்சி-இல்லை விதத் துயரச் சாயல்—அடை துக்கொண்டது. பசியைப்பற் நினைவே இல்லை.

ஆனால், சமையலில் வல்ல சா புக்குத் தம் கைத்திறமையை எ களிடம் காட்டாமல் விட்டா மண்டை வெடித்து விடாதா?

''எசமான், இலை போடட் டுமா''?—என்றார்.

''..ம்..ம்..ம்..

போடும்.''

—என்று

தேவர். திதான

திற்குப் பெய

பெற்ற அவர முகத்திலும் ஓர் ஆழ்ந்த சோக மூட்டம் மெல்ல இழையோடி யிருந்தது.

* * *

நாங்கள் மோர்ச் சோற்றை முடிக்கப் போகும் வேளை.

''அந்த அஞ்சம்மாவை அப் படிக் கெடுத்தவன் யார் தெரியுமா?''—என்று திடீரென்று ஒரு கேள்வியை எழுப்பினார் தேவர்.

நாங்கள் திகைப்புடன் அவரது முகத்தைப் பார்த்தோம்.

''என்னுடைய ஒரே மகன் தான்?''

—அவர் சிரிக்க முயன்றார்; ஆனால் கண்ணீர் அந்தச் சிரிப்பை அழித்தது.

எங்கள் கண்களும் நீரில் மிதந் தன. படகு மீண்டும் தன் பய ணத்தைத் தொடங்கியது. ஆனால் நாங்கள் யாருமே அதற்குப்பிற பேசிக் கொள்ளவே இல்லை.



PSG

அமோக
விளைச்சலுக்கு
PSG பம்பு செட்டுகள்

■ நீங்களும் பிஎஸ்ஜி பம்பு செட்டை இன்றே வாங்குங்கள் ■ என்ஜின் அல்லது மோட்டாரில் இயங்குவது ■ தாராளமாக தண்ணீர் பெறுங்கள் ■ ஏராளமாக விளைச்சல் காணுங்கள் ■ நிறைய செல்வம் அடையுங்கள்

விவரங்களுக்கு எழுதுங்கள்:
பி எஸ் ஜி இண்டஸ்ட்ரியல் இன்ஸ்டிடியூட்
கோயமுத்தூர் 4 தென்னிந்தியா

the hallmark of high standard

விற்பனைக் கிளைகள்:
311, தம்பு செட்டி வீதி, சென்னை 1. 217 & 218, மேலமாசித்தெரு, மதுரை 1.
பப்ளிக் கார்டன் ரோடு, சைபாபாத், ஹைதராபாத் 4.
13/85, ஜெயசாமராஜேந்திர ரோடு, பெங்களூர் 2.

VSK PSG 812

யாரும் கவர்ந்தது இல்லை!

தமிழக முதல்வரின் சொந்த ஊரான திருவாரூருக்கு மிக அருகில் தான் என் சொந்த ஊராகிய திருச்சேறை இருக்கிறது. வியாபார நிமித்தம் சென்னைக்குக் குடியேறியவன் நான். எனது தந்தையார் காலத்தில் பிரபலமடைந்துள்ள ராதா சில்க் எம்போரியம் —அல்லது ராசி—இப்போது என்னுடைய மேற்பார்வையில் தான் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

மைலாப்பூரில் சுமார் 18 இலட்சம் ரூபாயில் எங்கள் கடைக்காக நவீன முறையில் ஒரு கட்டடம் கட்டினேன். கைராசிக்காரரான முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தான் இதைத் திறந்து வைக்க வேண்டுமெனத் தீர்மானித்து அவர்களை அணுகினேன். வருவதற்கு ஒத்துக்கொண்டதும் எனக்குப் பெருமை தாங்க முடியவில்லை.

காலை 9 மணிக்குத் திறப்பு விழா என்று குறிப்பிட்டு அழைப்பிதழ்கள் அனுப்பிவிட்டேன். ஆனால் நான் நெருங்க நெருங்க எனக்குள் ஓர் இனந் தெரியாத பயம் ஏற்பட்டது. அதாவது ''குறிப்பிட்ட நேரத்தில் திறப்பு விழா நடைபெற்றாக வேண்டும்; பல வேலைத் தொந்தரவுகள் உள்ளவராயிற்றே முதலமைச்சர்! காலங்கடந்து வந்தால் என்ன செய்ய முடியும்?'' என்ற அச்சமே அது.

ஆனால் என்னுடைய நல்ல காலம் என்றுதான் நான் இன்னும் எண்ணி வருகிறேன்; முதல் அமைச்சர் அவர்கள் புதிய கட்டடத்துக்கு எதிரில் காரை நிறுத்தி இறங்கும்போது மணி சரியாக 9 அடித்தது. நல்ல சகுனம் என்றும் மைலாப்பூர் வாசிகள் மகிழ்ச்சியோடு கூறினார்கள்.

அன்று முதல் எனக்கு அவர்களிடத்திலே தனியாக ஒரு மதிப்பும் மரியாதையும் ஏற்பட்டது.



ஆர்.கே.ராமன்

நமது கைத்தறித் துணிகளுக்
ஐரோப்பிய பொதுச் சந்தையி
நல்ல கிராக்கி ஏற்படவில்லை. இ
தாலி, ஹாலந்து முதலிய நாடு
களில் இதற்கு இன்னும் இட
கிடைக்காமல் இருந்து வருகிறது.
இதில் ஏதாவது நல்ல ஏற்பா
செய்து வர முடியுமா எனக் கண்
டறிய இந்திய அரசினர் என்னை
ஒரு தனி நபர் குழுவாக அனுப்
னார்கள்.

சென்ற திங்கள் இறுதியி
ஐரோப்பா புறப்பட்டுச் சென்
நான் ரோம், பாரிஸ், முதலி
இடங்களில் நமது தமிழக முத
வர் அவர்களை விமான நிலையங்
களில் வரவேற்கவும் அவர்
ளோடு இரண்டொரு இடங்க
உடன் சென்றுவரவும் ஆன நல்
வாய்ப்பொன்று எனக்குக் கிட்
யதை என் உயிர் உள்ளளவு
மறக்க இயலாது.

வாட்டிகன் நகருக்குச் சென்
மதிப்புக்குரிய போப்பாண்டவ
அவர்களை நமது முதல்வரு
அவர் தம் துணைவியாரும் கா
விரும்பியபோது அவர்கள் இரு
ருக்கு மட்டுமே அனுமதி கிட்
யிருந்தது. நானும் பிறரும் அவ
களோடு சென்றோம். எங்களுக்
அனுமதி கிடைக்காது என்
தான் நாங்கள் எண்ணினோ



தென் குமரி

[illegible]

“ஆடிப்பட்டம் தேடி விதை” என்பது நீங்கள் அனைவரும் அறிந்த ஒன்றே! ஆடிப்பட்டம் நெருங்கி வரும் இந்நிலையில், நீங்கள் செய்ய வேண்டிய பணி குறித்து ஒரு வேண்டுகோள்.

நம் உடலுக்குத் தேவையான 10 வகைத் தாதுப் பொருட்களில் சுண்ணாம்பு, பாஸ்பரஸ், இரும்பு ஆகிய தாதுப் பொருட்கள், வேறு உணவுப் பொருட்கள் மூலம் போதுமான அளவுக்கு நமக்குக் கிடைப்பதில்லை. ஆனால் இத் தாதுப் பொருட்களை எளிதில் பெற ஒரே வழி காய்கனிகள் தான். அதோடு உடல் வளர்ச்சிக்குத் தேவையான எல்லா வகை வைட்டமின் சத்துக்களும் காய்கனிகளில் மிகுதியாக உள்ளன.

எனவே, நம் உடலுக்குத் தேவையான சத்துணவைப் பெற, நம் உடலை ஆரோக்கியமாக வைத்திருக்க, அனைவருக்கும் காய்கனிகள் அவசியம் தேவை. வளர்ந்து வரும் காய்கறித் தேவையைச் சரிக்கட்ட எங்கெங்கு முடியுமோ அங்கெல்லாம், எவ்வெவரால் இயலுமோ அவரெல்லாம் காய்கறிச் சாகுபடி செய்வது அவசியமாகும். உங்கள் வீட்டின் காய்கறித் தேவையைப் பூர்த்தி செய்து கொள்ள வீட்டுத் தோட்டத்தின் மூலமும், விற்பனைக்கான காய்கறிகளை விவசாயத் தோட்டங்கள் மூலமும் சாகுபடி செய்யும் பணியை உடனே துவங்க வேண்டியது அவசியம்.

காய்கறிச் சாகுபடியை விவசாயத்தைத் தொழிலாகக் கொண்டவர்கள் தான் மேற்கொள்ளவேண்டுமென்பதில்லை. இல்லத்து அரசியும், அலுவலகத்தில் பணியாற்றும் அலுவலர்களும், தொழிலாளத் தோழர்களும், வியாபாரிகள் மற்றும் பல்வேறு துறையினரும் தங்கள் இல்லங்களிலேயே காய்கறிச் சாகுபடி செய்யலாம். பல அடுக்கு மாடிகளில் உள்ளவர்கள் கூட மரப் பெட்டிகளிலும், மண் சட்டிகளிலும், தகர டின்களிலும் மண் நிரப்பி காய்கறிச்சாகுபடி செய்யலாம். தோட்டங்களில் வேறு பயிர்ச் சாகுபடி செய்பவர்கள் கூட கிணற்றைச் சுற்றிலும், வாய்க்கால் ஓரங்களிலும், வரப்புகளின் மேலும், எருக்குழிகளின் மேல் பந்தல் அமைத்தும் காய்கறிச் சாகுபடி செய்யலாம். எனவே, எல்லா வகையான மக்களும் தங்கள் ஓய்வுக் காலத்தைப் பயனுள்ள வழிகளில் கழிக்க உடனே துவங்குங்கள் காய்கறிச் சாகுபடியை!

காய்கறிகளில் சிலவற்றைக் குறிப்பிட்ட பட்டங்களில் மட்டுமே சாகுபடி செய்ய இயலும். சில எல்லாக் காலங்களிலும் சாகுபடி செய்ய ஏற்றவை. எடுத்துக் காட்டுக்கு வெண்டை, அரைக் கோ, கத்தரி, முள்ளங்கி, கோ. 6 அவரை, கோ. அவரை ஆகியவை எல்லாக் காலங்களிலும் சாகுப செய்ய ஏற்றவை. ஆனால் பூசணி வகைப் பயிர்கள், பந்தல் அவரை, சேனைக்கிழங்கு போன்றவை குறி பிட்ட பட்டங்களில் மட்டுமே சாகுபடி செய் ஏற்றவை. ஆனாலும் எல்லாக் காய்கறிகளையும் ஆடிப் பட்டத்தில் சாகுபடி செய்யலாம்.

அவரை, பீர்க்கன் ஆகியவற்றிற்குப் பந்தல் தேவைப்படும். பரங்கிக்காய், சாம்பல் பூசணி, சுரைக்காய் ஆகியவற்றைத் தரையில் அல்லது ஓலைக் கூரை மேல் படர விடலாம். பாகலுக்கு ஊன்றுகோல் தேவைப்படும். தக்காளி, கத் ஆகியவற்றை நாற்று விட்டு நடவேண்டும்.

பொறுக்கு ரகங்கள்

மற்ற விவசாயப் பயிர்களைப் போலவே காய்கறிகளிலும் பொறுக்கு ரகங்கள் உண்டு. அவற்றின் பெயர்களும், சிறப்பியல்புகளும் கீழே கொடுக்கப் பட்டுள்ளன.

இப்பொறுக்கு ரகங்களை உங்கள் வட்டார வி சாயக் கிடங்குகளிலிருந்து உடனே பெற்று ஆடிப் பட்டத்தில் விதைக்கத் தயாராகுங்கள்.

ளும் நமது முதல்வர் அவர்கள் க்கே உரிய தைரியத்தோடு ன் அருகேயுள்ள அறைக்கு ழைந்துச் சென்று அமரச் ய்து தாமும் துணைவியாரும் ள்ளே சென்றார்கள்.

என்ன ஆச்சரியம்! பத்தே நிமிடத்தில் எங்களுக்கும்அழைப்பு வந்தது. இதுவரை யாரிடத்திலுமே இவ்வளவு நேரம் போப்பாண்டவர் அளவளாவியதே இல்லையாம். மிகவும் சுதந்திரமாக சுமார் ஒரு மணி நேரம் பேசிக் கொண்டிருந்து அந்தப் பெரியவரை மன நிறைவோடு தரிசித்த திருப்தியுடன் திரும்பினோம். தமிழக முதல் அமைச்சர் அவர்களின் முகராசியை நினைந்து நினைந்து வியந்தேன்!

நான் பலமுறை மேல்நாடுகளுக்குச் சென்று வந்தவன் என்றாலும், நமது முதல்வர் அவர்கள் மேல் நாட்டாரைக் கவர்ந்தது போல யாருமே கவர்ந்திருக்க முடியாது என்று நிச்சயமாகக் கூறுவேன்!

தமிழக முதல்வருக்குத் தலைநகரில் வரவேற்பு

லைத் திங்கள் 21-ம் நாள் ற்பகல் 2-15 மணி. மீனம்பாக்கம் விமான நிலையத்தில்கூடி நிற்கும் ஆயிரக் கணக்கான மக்கள் வானத்தைப் பார்த்தபடியே நிற்கின்றனர். தூரத்தே விமானம் ஒன்று சிறிதாகத் தெரிகிறது.

''வெளி நாட்டில் 20 நாட்கள் வெற்றிகரமாகச் சுற்றுப் பயணத்தை முடித்து விட்டுத் தாயகம் திரும்பும் நமது முதல்வர் அவர்களைத் தாங்கி வரும் விமானம் இதோ வந்துகொண்டிருக்கிறது. முதல்வர் அவர்கள் விமானத்திலிருந்து இறங்கியவுடன் முதலில் தமிழக ஆளுநர் சர்தார் உஜ்ஜல்சிங் அவர்கள் மாலை அணிவித்து வரவேற்பார்கள். பின்னர் அமைச்சர் பெருமக்கள் மாலை அணிவிப்பார்கள்'' என்று ஒலிபெருக்கியில் அறிவிப்பாளர் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்.

விமானத்திலிருந்து தமிழக முதல்வர் திரு கருணாநிதி அவர்கள் இறங்குகிறார்கள். தொடர்ந்து அவரது துணைவியார் வருகிறார்கள்.

வானத்தில் ஒரு சிறிய பயிற்சி விமானம் வட்டமிடுகிறது. அதிலிருந்து பூமாரி பொழிகிறார்கள்.

''கலைஞர் வாழ்க! முதல்வர் வாழ்க! அண்ணா வாழ்க'' என்ற ஒலி விண்ணைப் பிளக்கிறது.

முதல்வர் இறங்கியதும், ஆளுநர் அவர்கள் மாலை அணிவிக்கிறார்கள். பின் அமைச்சர் பெருமக்களும் வெளிநாட்டுத் தூதுவர்களும் மாலை அணிவிக்கிறார்கள்.

வானத்தில் வட்டமிடும் பயிற்சி விமானம் தொடர்ந்து பூமாரி பொழிகிறது.

முதல்வர், தயாராக வைக்கப்பட்டிருந்த வண்ணக்குடை இணைக்கப்பட்ட 'ஜீப்' பில் ஏறி சேணி அணிவகுப்பைப் பார்வையிடுகிறார்.

பின்னர், அங்கு அமைக்கப்பட்ட உயர்ந்த மேடையில் ஏறியவுடன், அவருக்கு மாலை அணிவித்து, வரவேற்க வந்திருந்த திரளான அன்பர்கள் ஒருவர் பின் ஒருவராகச் சென்று மாலை அணிவிக்கிறார்கள். ஆரத் தழுவிக் கொண்டோர் பலர். அன்புமாரி பொழிந்தோர் பலர். ஆனந்தத்தை அளவிட்டுச் சொல்ல முடியாது நின்றோர் பலர். மேடை தாங்கா வண்ணம் மலர் மாலைகள் மலையெனக் குவிகின்றன.

வந்திருந்த பெருமக்களுக்கு நன்றிகூறி, திறந்த ஜீப்பில் ஏறிப் புறப்படுகிறார் முதல்வர். காலை 11 மணியிலிருந்தே முதல்வரைக் காணும்பொருட்டுச் சாலையின் இரு மருங்கிலும் கூடியிருந்த மக்கள் வெள்ளம், முதல்வரைக் கண்டதும் கடல் அலைபோல் ததும்புகின்றது. கைகூப்பியும் கை அசைத்தும் அவர்களது அன்புக்குப் பதிலுரைக்கிறார் முதல்வர். வழி நெடுக வரவேற்பு வளைவுகள், பந்தல்கள், மாலையுடன் காத்திருக்கும் அன்பர்கள்!

இருபது நாட்களாக முதல்வரின் தமிழ் செறிந்த, பொருள் நிறைந்த சொற்பொழிவுகளைக் கேட்க முடியாதிருந்த தமிழ் மக்கள், முதல்வரின் வெளிநாட்டு அனுபவங்களை அவர் வாயிலாகவே கேட்க ஆவலோடு உள்ளனர்.

மேடையிலே கேட்க வாய்ப்பில்லாதவர்களுக்காக, இந்த இதழ் மூலமாகத் தமது அனுபவத்தைக் கூறுகிறார், தமிழக முதல்வர்.

நிகழ்ச்சியும்-நிழற்படமும்

ரிசை எண்.	பொருக்கு ரகங்களின் பெயர்கள்.	சிறப்பியல்புகள்.
(1)	(2)	(3)
1	கோ. 1 தக்காளி ..	ஊன்றுகோல் தேவைப்படாதது. அல்லது குறைந்த விதைகளையுடையது.
2	எஸ். எம். 62 கொத்து வெள்ளைக் கத்தரி.	கொத்துக் கொத்தாகக் காய்க்கும் தன்மையது.
3	பூசா சவானி வெண்டை.	நரம்பு வெளுக்கும். நோய் தாக்காதது.
4	கோ. 1 பரங்கிக்காய்.	பெரிய காய்கள் காய்ப்பது.
5	கோ. 1 சாம்பல் பூசணி.	பெரிய காய்கள் காய்ப்பது.
6	மிக நீண்ட பீர்க்கன் ..	நீண்ட காய்கள் காய்ப்பது.
7	கோ. 6 அவரை ..	காய்கறிக்கேற்றது.
	கோ. 7 அவரை ..	காய்கறிக்கும், கொட்டைக்கும் ஏற்றது.
	வெள்ளை முள்ளங்கி ..	குறுகிய காலப் பயிர்.
0	பூசா மவுசாம்பி கொத்தவரை.	அதிக சதைப் பிடிப்புள்ள நீண்ட காய்களையுடையது.
11	நியூ ஈரா அல்லது இசி. 455 தட்டைப் பயிர்.	நீண்ட காய்களையுடையது.
12	கோ. 1 அரைக்கீரை	சதைப்பிடிப்பான தழைகள் கொடுக்கக்கூடியது.

விதையளவும், வயதும்.

ஏக்கருக்குத் தேவைப்படும் விதையளவும், ஒவ்வொரு பயிரின் வயதும் கீழே கொடுக்கப்[illegible]ள்ளன.

காய்கறிகளின் பெயர்.	ஏக்கருக்குத் தேவைப் படும் விதை அளவு.	வயது (நாட்களில்).
(1)	(2)	(3)
கோ. 1 தக்காளி ..	128 கிராம்	135
கொத்து வெள்ளைக்கத்தரி	150 ..	145
பூசா சவானி வெண்டை	2½ கிலோ.	100
பூசா மவுசாம்பி கொத்தவரை.	7 ..	100
கோ. 1 பரங்கிக்காய் ..	500 கிராம்	175
கோ. 1 சாம்பல் பூசணி	500 ..	145
கோ. 1 அரைக்கீரை. வெள்ளை முள்ளங்கி.	1 கிலோ.	50 முதல் 60.

எனவே குறுகிய காலத்தில் நல்ல சத்துள்ள உணவைப் பெறக் காய்கறிச் சாகுபடியை மேற்கொள்ளுங்கள். உங்களுக்குத் தேவையான அளவு விதைகளை உடனே வாங்கி வைத்துக்கொள்ளுங்கள்.

காய்கறிப் பயிர்களையும் தகுந்த இடைவெளி விட்டு நடுவது அவசியமாகும். தக்காளிக்கும் கத்தரிக்கும் 2½ அடி இடைவெளி விட்டு பார்கள் அமைக்கவும். பாரில் செடிக்குச் செடி 2 அடி இடைவெளி விட்டுத் தக்காளி நாற்றுகளையும், 2½ அடி இடைவெளி விட்டு கத்தரி நாற்றுகளையும் நடவு செய்யவேண்டும். வெண்டை விதைகளை வரிசைக்கு வரிசை 2 அடியும், செடிக்குச் செடி 9 அங்குலம் இடைவெளி விட்டு ஊன்ற வேண்டும். உயர் மகசூல் பெறப் போதுமான இடைவெளி விட்டு நடுவது அவசியம்.

விதைகள் சுலபமாகவும், விரைவாகவும் முளைக்க நிலத்தை நன்கு பண்படுத்த வேண்டும்.

நாற்று விட்டு நடவு செய்யும் காய்கறிகளான கத்தரி, தக்காளி போன்றவற்றிற்கு உடனடியாக நாற்றங்கால் தயாரிக்கவும். ஓர் ஏக்கர் நடவு செய்ய ஒரு சென்ட் நாற்றங்கால் தேவைப்படும்.

உங்களுக்குத் தேவையான பொறுக்கு வித்துக்களை உடனே பெற்றுக் கொள்ளவும்.

உங்களுக்குத் தேவையான அளவு உரங்களையும் இப்பொழுதே வாங்கி உங்கள் வசம் வைத்துக்கொள்ளுங்கள். போதுமான இடைவெளி விட்டு விதைகளை ஊன்றுங்கள். சரியான ஆழத்தில் ஊன்றுங்கள்.

கத்தரி மற்றும் தக்காளி விதைகளைக் கிலோவுக்கு 2 கிராம் அக்ரசான் அல்லது செரசான் மருந்து வீதம் கலந்து பின்னர் விதைக்கவும்.

தேடிவரும் ஆடிப்பட்டத்தைத் தவற விடாதீர்கள்

அனைத்தும் கிடைக்கும்

வினாடிக்கு வினாடி விரைந்து செல்லும் ஊர்திகள்—நிமிடத்துக்கு நிமிடம் தொடர்ந்து செல்லும் சைக்கிள்கள்—எந்தக் கணமும் ஏராளமான பொதுமக்களைச் சுமந்து செல்லும் போக்குவரத்துத் துறைப் பேருந்துகள்—வெளியூர்களிலிருந்து வருகை புரியும் ஆயிரக்கணக்கான மக்களின் நடமாட்டம்—நகரத்து மக்களின் சங்கிலிப் பின்னல் போன்ற ஓட்டம்—ஓங்கி உயர்ந்து நின்று தமிழகம் முழுவதுக்கும் வழக்கறிஞர்களை உருவாக்கிக் கொடுக்கும் நீதிக் கோயிலாம் சட்டக் கல்லூரி—சைனாக்காரர்கள் நமது நாட்டுடன் அநியாயமாகப் போர் தொடுத்தும் கூட, சிறிதும் அவர்கள் மீது வெறுப்புக் கொள்ளாமல் “சைனா பஜார்” என்று பெயரிட்டு இன்னமும் அழைக்கப்படும் நெடிய வீதி—தமிழிசைக் கல்லூரியாக விளங்கும் ராஜா அண்ணாமலை மன்றம்—இன்னும் இது போன்ற எத்தனையோ வகைச் சிறப்புக்களுடனும் “பட்டணம்” என்ற பட்டப் பெயருடனும் விளங்கும் சென்னை எஸ்பிளனேட் என்று சொல்லப்படும் பரபரப்பான பகுதியில், தன்னகத்தே உள்ள திறமையை அடக்க உணர்வுடன் தெரிவிக்கும் வள்ளுவரின் குறள் போல—“இதன்கண் இல்லாத தொன்றில்லை” என்று புலவர்களால் பெருமைப்படுத்திச் சொல்லப்படும் குறள் போல—ஒளி வீசித் திகழ்கிறது குறளகம் என்னும் எழிற் கட்டிடம். இந்தக் கட்டடத்தில் தான் தமிழகக் கதர்—கிராமத் தொழில் அங்காடி அமைந்திருக்கிறது. “இதன்கண் இல்லாத பொருள் இல்லை” என்று கூறத்தக்க அளவுக்கு அநேக கைவினைப் பொருள்கள் இங்கே விற்பனை செய்யப்படுகின்றன.

1968-ம் ஆண்டு பொங்கல் நாளன்று, முன்னாள் தமிழக முதல்வர் பேரறிஞர் அண்ணா அவர்களால் துவக்கி வைக்கப்பட்ட இந்த அங்காடி, இன்று வளம் பெற்று, வலிவு பெற்றுத் திகழ்கிறது.

துவக்க உரையின் போது பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்ட வாசகங்கள் இப்போதும் நமது நினைவுக்கு வருகின்றன.

“உள்ளம் நெகிழ்ச்சியடையும் உத்தம குணம் படைத்த காந்தியடிகள் நாட்டைச் சுற்றிப் பார்த்து, வேலை வாய்ப்புக் குறைவினால் மக்கள் பட்ட அவதியைக் கண்டு, அவர் நிலை உயர கதர் இயக்கம் தோற்றுவித்தார். விஞ்ஞானத் தொழில்களில் முன்னேற்றம் ஏற்படும்போது கைத்தொழில்களில் ஈடுபட்டுள்ளோரது எண்ணிக்கை குறையும். கதர் இயக்கத்தை அவர் துவக்க, அடிப்படைக் காரணமே மனிதாபிமான உணர்வேயாகும்”

அண்ணாவின் இந்த வாசகம் காதுகளில் எதிரொலித்த வண்ணமே இருந்தது. அதே எதிரொலியுடன் கதர், கிராமத் தொழில் அங்காடிக் கட்டடத்தில் காலடி வைத்தோம். “நல்வரவு” என்று எங்களுக்கு வரவு கூறினார்கள் நாதஸ்வரக் குழுவினர்—நேரிலே தோன்றியல்ல—ஓவியத்தின் உருவிலே!

பாளையத்து ஜமீன்தார்க
மாளிகைகளில் நடைபெறும்
ராத்திரி விழாவில் காலடி எடுத்
வைத்து விட்டோமோ என்
வியப்பு எங்களுக்கு ஏற்பட்ட
பெரும் பெரும் வண்ண
பொம்மைகள் அங்கே கொ
வேறியிருந்தன. திருப்ப
வெங்கடாசலபதி — திருமுருக
—முருகனின் அண்ண
யானைமுகன்—கமலக் கண்ண
—கலை மடந்தை—நா மடந்
அனைவரும் வீற்றிருந்தார்க
பொம்மை வடிவத்தில்!

எங்களுக்கு முன்னே சென்
கொண்டிருந்த வெளியூர்க்கார
ஒருவர், கடவுளர் பொம்மை
களைக் கண்டவுடன், மடித்
கட்டியிருந்த வேட்டியை இற
கிக் கொண்டு விட்டார். நெற்
யில் நீறணிந்திருந்த முதியவ
ஒருவர் பயபக்தியுடன் கும்பிட
தொடங்கினார். இன்னும் ஒருவ
‘வேழ முகத்து விநாயகனை
தொழுது’—தனது சிரத்தி
ஐந்தாறு குட்டுக்கள் போட்டு
கொண்டார். இந்தக் காட்சிக
லிருந்து ஒன்று தெளிவாகியது
சாதாரண மண் பொம்மைக
பக்தி உணர்வு கொடுக்கும் க
சியங்களாக அமைப்பதற்கு

றமை மிகுந்த கலைஞர்களால் முடியும் என்பது உறுதியாகியது.

மற்றோர் இளைஞரின் பார்வை வெகு வேகமாக ஒரு குறிப்பிட்ட திசையில் தாவியது. அவரது பார்வையைப் பின்பற்றி எங்களின் பார்வையும் ஓடியது. அங்கே, வள்ளுவர், புத்தர், பரமஅம்சர், விவேகாநந்தர், வள்ளலார், காந்தியடிகள், பேரறிஞர் அண்ணா ஆகிய தத்துவ மேதைகள் தங்களின் போதனைகளைக் கண்களாலேயே தெரிவித்துக் கொண்டிருந்தார்கள் — பொம்மைகளின் வடிவில் !

திடீரென்று "அம்மாவ்" ன்று ஓர் அலறல் கேட்டது. திடுக்கிட்டு விட்டோம். பெரியவர்களின் அபயக் குரலல்ல அது என்பதும், சின்னக் குழந்தையின் தீனக் குரல் என்பதும் எளிதில் புரிந்தது. மறுகணம், குரல் எங்கே இருந்துவந்தது, யாருக்கு என்ன ஆபத்து, என்று அச்சத்துடன் பார்த்தோம்.

தனது மூன்று வயதுப் பெண் குழந்தைக்கு—ரெடிமேடு கவுன் வாங்க ஓர் அம்மையார் வந்து கொண்டிருந்தார் என்பதும், அவரது இடுப்பிலே அமர்ந்திருந்த குழந்தை, அங்கே கூட்டமாக வைக்கப்பட்டிருந்த இருபது, முப்பது பொம்மை நாய்களைப் பார்த்து அவை மெய்யான நாய்கள் என்று எண்ணி பயந்து, கூச்சலிட்டுவிட்டது என்பதும் சில நொடிகளில் தெளிவாகியது.

என்ன நடந்ததோ என்று அச்சத்துடன் அங்கே ஓடிவந்த தரை மேற்பார்வையாளர் நடந்ததை அறிந்து மன நிம்மதி பெற்றார். ஆனால், பாவம் குழந்தையின் தாயார்தான் நிம்மதியடைய முடியவில்லை. குழந்தை தேம்பித் தேம்பி அழுதால், அதன் தாயாரால் எப்படி நிம்மதியாக இருக்க முடியும் ! தரை மேற்பார்வையாளர் உடனடியாக அந்தக் குழந்தையை அதன் தாயாரிடமிருந்து அழைத்துச் சென்று, அவை பொம்மை நாய்கள் என்பதைத் தெளிவாக்கினார். மறுகணம் அழுகையை மறந்து, சிரிப்பைச் சிந்தத் தொடங்கியது அந்தக் குழந்தை. குழந்தையைப் பயமுறுத்திய பொம்மை நாய்கள் கடலூரில் உருவானவை என்பதையும், அவற்றை வெளிநாட்டுக்காரர்கள் விருப்பத்துடன் வாங்கிச் செல்கிறார்கள் என்பதையும் அறிந்து மகிழ்ச்சியடைந்தோம்.

அந்தப் பகுதியை விட்டு அடுத்த பகுதிக்குச் சென்றோம். கதர்த் துணிகளால் ஆகிய ரெடிமேடு சட்டைகள், ஸிலாக்குகள், ட்ரவுசர்கள், சூட்டுகள், வேட்டிகள் ஆகிய இன்னோரன்ன துணிப் பொருள்கள் காட்சி தந்தன. அடுத்து விற்றிருந்த மெத்தைகள், தலையணைகள், எங்களைத் தங்கள் பக்கம் இழுத்தன. அடுத்து, வாலாஜாபேட்டையில் தயாரான வண்ண வண்ணத்தரை விரிப்புகள் கவர்ச்சியாகக் காணப்பட்டன. அவற்றின் கவர்ச்சியில் மயங்கி வெளிநாட்டுக்காரர்கள் மிகுந்த அளவில் வாங்கிச் செல்கிறார்கள் என்று அறிந்தோம். குஜராத், ஆமதாபாத் போன்ற வெளி மாநிலங்களுக்கு இவை ஏற்றுமதியாகின்றனவாம்.

அடுத்து, விலையுயர்ந்த யானைத் தந்தத்தாலும், சந்தன மரத்தாலும் ஆன கலைப் பொருள்கள் எங்கள் கண்களில் பட்டன. சந்தனத்தாலான கலைப் பொருள்களைத் தொட்டுப் பார்த்தபோது கருத்தில் மட்டுமல்ல—எங்களின் கரத்திலும் நன்மணம் பரவத் தொடங்கியது. கரங்களைப் பார்த்துக்கொண்டே அடுத்த பகுதியை நாடினோம். அங்கே, பனை ஓலைகளாலும், தாழைத் தழைகளாலும், பிரம்பினாலும் செய்யப் பட்ட கூடைகள், பைகள், தொப்பிகள் வகை வகையாகக் காட்சியளித்து வியப்பிலாழ்த்தின. அதை விட வியப்பு, பழவேற்காட்டில் செய்யப் பட்ட அந்தப் பிரம்புப் பிரயாணப் பை ஒன்றினை யாரோ ஒரு வெளிநாட்டுப் பெண்மணி விருப்பத்துடன் வாங்கிக் கொண்டிருந்ததுதான். சுவிஸ் நாட்டவர் அந்தப் பெண்மணி என்று அறிந்து மகிழ்ந்தோம்.

"பரவாயில்லையே! பழவேற்காட்டுத் தயாரிப்பை, சுவிஸ் பெண்மணி வாங்கிச் செல்கிறாரே"—வியப்புடன் கூறினார் எங்களது புகைப்படக்காரர்.

"சுவிஸ்காரர்கள் மட்டுமல்ல; ஆங்காங், சைனா, ஜப்பான், அமெரிக்கா ஆகிய நாட்டுப் பெண்மணிகள்கூட இங்கிருந்து கலைப்பொருட்களை வாங்கிச் செல்கின்றார்கள்"— பெருமையுடன் கூறினார் அந்தப் பகுதி விற்பனை உதவியாளரான அம்மையார்.



"சார்! மேலாளர் அறைக்கு இந்தப் பக்கமாகத் தான் செல்ல வேண்டும்"—என்றார் விற்பனை உதவியாளர் ஒருவர் ; அவர் வழி காண்பிக்க, அவரை நாங்கள் பின் தொடர்ந்தோம்.

கடகடவென்று சேர்ந்தாற் போல் ஒலி எழுந்தது. சில தையலர்கள் தட்டெழுத்து இயந்திரத்தில் தங்கள் மணி விரல்களை நடனம் ஆடச் செய்து கொண்டிருந்தார்கள். அந்த இன்னொலி எழும் அறையைக் கடந்து, மேலாளர், அறைக்குச் சென்றோம். அவர் எங்களை அன்புடன் வரவேற்றுப் பேசினார். "உதவி மேலாளர் பாண்டியன் அவர்களிடம் இவர்களை அழைத்துச் செல்லுங்கள்" என்று ஊழியரிடம் தெரிவித்தார்.

"தமிழரசு" ஏட்டின் சார்பாக வந்துள்ளோம் என்று தெரிவித்தோம். "வாருங்க, வாருங்க" என்று நெல்லைத் தமிழை, தூய வெள்ளைச் சிரிப்பில் தவழவிட்டு வரவேற்றார் அவர். உடனடியாக, காபி வரவழைத்து எங்களை அருந்த வைத்து விட்டு, "புறப்படுவோமா" என்று உற்சாகத்துடன் எழும்பினார். அவரை நாங்கள்பின் தொடர்ந்தோம். ஒவ்வொரு பகுதியாகக் காண்பித்தபடி, விளக்கங்களையும் அவர் சொல்லி வந்தது எங்களுக்கு மிகுந்த பயனை அளித்தது.

விருத்தாசலத்திலே தயார் செய்யப்பட்ட பீங்கான் பொருள்கள் கவர்ச்சிகரமாகவும் பயனுள்ளனவாகவும் காணப்பட்டன. சிறு சேமிப்புத் திட்டத்திற்கு உதவும் வகையில் செய்யப்பட்டுள்ள களி மண் உண்டியல்கள், இரும்பு உண்டியல்கள் போல் உறுதியுடன் காணப்பட்டன. மதுரை மாவட்டத்திலுள்ள கல்லுப்பட்டியில் தயாரானவை இவை. மானாமதுரை, காருகுறிச்சி, வேலூர், செங்கல்பட்டைச் சேர்ந்த செவ்வாய்ப்பேட்டை ஆகிய ஊர்களிலிருந்து தயாரிக்கப்பட்டு வந்திருக்கும் மண் ஜாடிகள், தண்ணீர்க் கூஜாக்கள் எங்களை அதிசயிக்க வைத்தன. விற்பனை நிலையத்துக்கு வந்திருக்கிறோமா, அல்லது தயாரிப்புக் கூடத்துக்குள் நுழைந்திருக்கிறோமா என்று எங்களால் உணர்ந்து கொள்ள முடியவில்லை. அந்த அளவுக்கு, அவை நிறைந்து காணப்பட்டன. "அதிகமான விற்பனையின் காரணமாகத் தான் அவை அதிகமாக வரவழைக்கப் பட்டிருக்கின்றன" என்று தெரிவித்தார் உதவி மேலாளர்.

மண் கூஜாக்களின் பெருமையை அறிந்த பல செல்வந்தர்கள் கார்களில் இங்கே வந்து அவற்றை வாங்குகிறார்களாம். அவற்றை அப்படியே எடுத்துச் செல்ல வெட்கப்பட்டுக் கொண்டு காகிதங்களால் சுற்றி எடுத்துச் செல்லும் காட்சி நினைத்து நினைத்து மகிழத்தக்கது. என்று நகைப்பைச் சிந்தியபடி தெரிவித்தார்.

திடீரென்று ஒரு திகைப்பு! தேக்கடி என்று சொல்லப்படும் ஊருக்கு வந்து விட்டோமோ என்ற ஓர் ஐய உணர்வு! ஒரே நேரத்தில் நூற்றுக்கணக்கான யானைகள் நின்றுகொண்டிருந்தால்—அந்தக் காட்சி தேக்கடி

தினமும் நாலாயிரம் ரூபாய்க்கு மேல் விற்பனையாகிறது. நவராத்திரி நேரத்தில் பொம்மைகள் மட்டும் சுமார் 13 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனையாகியுள்ளன. காஞ்சி, சென்னை கடலூர் ஆகிய ஊர்களின் தயாரிப்புகள் அந்த பொம்மைகள்.

“மண்பாண்டப் பொருள்கள், நூக்கமரப் பொருள்கள், தக்குமரப் பொம்மைகள், உப்பாய்கள், தந்தத்திலான கலைப் பொருள்கள் ஆகியவை மக்கள் விரும்பி வாங்கும் பொருள்கள்.

“பனஞ்சர்க்கரை கலந்த காபி எங்கள் சிற்றுண்டி நிலையத்தில் விற்கப்படுகிறது. மக்கள் விருப்பத்துடன் வாங்கி அருந்துகிறார்கள். தினமும் 300 ரூபாய் வரை விற்கிறது. சில சமயங்களில் ‘கியூவில்’ நின்று இந்தக் காபியை மக்கள் அருந்துவது றிப்பிடத்தக்கது. பனஞ் ர்க்கரையில் செய்யப்பட்ட லட்டு, பூந்தி, பிஸ்கட் முதலானவைகூட மக்களால் விரும்பி வரவேற்கப்படுகின்றன

“வெளிநாட்டுக்குச் செல்லும் அமைச்சர் பெருமக்கள் அனைவரும், அங்கே பரிசு கொடுப்பதற்குரிய பொருள்களை இங்கேயிருந்துதான் வாங்கிச் செல்கிறார்கள். அந்தப் பெருமை இந்த அங்காடிக்கு உண்டு. அண்மையில், தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் வெளிநாட்டுச் சுற்றுப் பயணம் செய்தபோது, அங்கே பரிசு தருவதற்குரிய பொன்னாடைகளையும், மற்றப் பொருள்களையும், இங்கே இருந்துதான் வாங்கிச் சென்றார்கள்; வள்ளுவர், அண்ணா, கலைஞர் ஆகியோர் உருவம் பொறித்த பொன்னாடைகள் மிகுந்த அளவில் விற்பனையாகின்றன.

“திரை உலகப் பெருமக்கள் அடிக்கடி வந்து, கலைப் பொருள்களை எங்களிடமிருந்து வாங்கிச் செல்கிறார்கள். சுதந்திராக் கட்சியைச் சேர்ந்த பேராசிரியர் ரங்கா அவர்கள், தமது துணைவியாருடன் இங்கு பலமுறை வருகை புரிந்ததுண்டு; பொருள்களை வாங்கிச் சென்றதுண்டு.

“விற்பனை உதவியாளர், மற்றும் அலுவலக ஊழியர், மேலாளர், உதவி மேலாளர் இப்படி மொத்தம் 105 ஊழியர்கள் இங்கே அலுவலில் உள்ளனர்; ஆண், பெண், இருபாலரும் உண்டு. விற்பனை உதவியாளர் பணியில், பெண்களே அதிகம் இருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. விற்பனை உதவியாளர்களுக்குச் சம்பளம் தவிர, ஊக்க ஊதியமும் கொடுக்கப்படுகிறது. இங்கே தணிக்கைகளும் உடனுக்குடன் கவனிக்கப்படுகிறது; அதற்கென ஒரு குழுவே உள்ளது.

“சிலகாலத்திற்கு முன்பு மாலை நேரங்களில் இசைத் தட்டுக்களின் மூலமாக வாத்திய இசையை ஒலிக்கச் செய்தோம். அந்த இசை, வாணிக வளர்ச்சிக்கு மிகவும் உறு துணையாக இருந்ததைக் கண்கூடாக அறிந்தோம். இன்னும் சில புதிய திட்டங்கள் எல்லாம் வைத்திருக்கிறோம். . . . அவற்றை எல்லாம் நிறைவேற்றிவிட்டுச் சொன்னால் நல்லது. திட்டமாக இருக்கும் போதே தெரிவிப்பது ......” என்று தயங்கினார் உதவி மேலாளர்.

“தயக்கம் வேண்டாம்! நீங்கள் எப்போது தெரிவிக்க விரும்பினாலும் சரி, நாங்கள் கேட்டுக்கொள்ளத் தயாராக இருக்கிறோம்” என்று சொல்லியபடி, கைக் கடிகாரத்தைப் பார்த்தோம். மாலை ஐந்து மணி ஆகியது. கடமை உணர்ச்சியுடன் புறப்பட்டோம். மக்கள் பணத்தைச் செலுத்துவதற்குக் கியூவில் நின்று கொண்டிருந்த காட்சி இதயத்தை மகிழ்ச்சியில் ஆழ்த்தியது. மகிழ்ந்தபடி வெளியே வந்தோம். அங்கே எண்ணெய் விற்பனைப் பகுதி இருந்தது.

குமரி மாவட்டத்திலிருந்து வரும் தேங்காய் எண்ணெயும், காஞ்சியிலிருந்து வரும் நல்லெண்ணெயும், வேலூரிலிருந்து வரும் கடலை எண்ணெயும், தற்போது வெண்ணெய்யுங்கூட விற்பனை செய்யப்படுகின்றன.

“கையினால் செய்யப்பட்ட பொருள்கள், வாய்ப்பும் வசதியும் உள்ளவர்களால் வாங்கப்படுபவை; தேவைப்பொருள்களல்ல; எனவே விற்பனையாளர் நல்ல கனிவோடு, நட்புணர்வோடு பழகி, அவற்றை விற்க வேண்டும்; விற்பனைத் திறமையை வளர்த்துக் கொள்ள வேண்டும்”—என்று பேரறிஞர் அண்ணா அவர்கள், இந்த அங்காடியின் துவக்க நாள் விழாவில் கூறிய வாசகத்தை இதன் ஊழியர்கள் பின்பற்றி வருகிறார்கள்—பலன் ஏற்படுத்தித் தருகிறார்கள் என்பதை எண்ணி மனம்நிறைந்த பாராட்டுக்களை அவர்களுக்கு வழங்கிவிட்டு விடைபெற்றோம்.

—: o :—

நோய் நாடி
நோய்முதல் நாடி

தற்பொழுது நம் நாட்டில் பசுமைப் புரட்சி நடந்திருப்பதை நாம் கண்கூடாகக் காண்கிறோம். உழவர் பெருமக்களிடையே அமோக விளைச்சல் தரும் உயர்வள ரகங்களைப் பயிரிடுவதில் ஆர்வமும், புத்துணர்ச்சியும் காணப்படுகிறது. நெல் சாகுபடியில் தமிழ் நாட்டைப் பொறுத்த மட்டில் உயர்வள நெல் வகைகளான ஐ.ஆர். 8, ஜெயா, பத்மா போன்றவை மிகுதியாகப் பயிரிடப்படுகின்றன. மற்றைய நெல் ரகங்களைவிட இந்த நெல் ரகங்கள் இரண்டு, மூன்று மடங்கு அதிக விளைச்சல் தருவதால் தமிழ்நாடு உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற வழிவகுப்பதுடன் விவசாயிகளின் வருவாய் அதிகரித்து, வளம்பெருக வாய்ப்பளிக்கின்றன. நடப்பு ஆண்டில் ஐ.ஆர். 8 நெல் சாகுபடியின் குறியளவு 55 லட்சம் ஏக்கர்களாகும். இந்த நெல்லை “ஹெல்மிந்தோஸ்போரியம்” (Helminthosporium) என்னும் “செம்புள்ளி” நோய் மிகுதியாகத் தாக்கிச் சேதத்தை விளைவிக்கிறது. இந் நோயைப் பற்றியும் இதைத் தடுக்கும் ஓழுமுறைகளைப்பற்றியும் விவரிக்கப்பட்டுள்ளது.

மற்ற நெல் ரகங்களைத் தாக்கும் கொடிய நோயான கொலை அல்லது கொள்ளை நோய் (Blast disease) ஐ. ஆர். 8 நெல்லைத் தாக்குவதில்லை. இது, இந்த ரக நெல்லின் போற்றத்தக்க ஒரு சிறப்பு அம்சமாகும். எனவே தழைச் சத்து (Nitrogen) அதிகமாக இட்டபோதிலும் கொள்ளை நோயினால் இந்த நெல்லிற்குச்சேதம் விளைவதில்லை. எனினும் செம்புள்ளி நோய் (Helminthosporium) என்னும் இலைப்புள்ளி நோய் இந்த நெல்லைக் கடுமையாகத் தாக்குகிறது. பயிர் பாதுகாப்பு முறைகளில், பூச்சிகளுக்கு மருந்து தெளிக்கும் பணியில் விவசாயிகள் காட்டும் ஆர்வம் பொதுவாகப் பூசனத்தினால் ஏற்படும் இந்நோயைக் கட்டுப்படுத்துவதில் இருப்பதில்லை. எனவே ஐ. ஆர். 8 நெல் சாகுபடியில் அமோக விளைச்சல் பெற பூச்சிகளைக் கட்டுப்படுத்துவதுடன் செம்புள்ளி நோயைத் தடுப்பதில் கவனம் செலுத்துவது இன்றியமையாதது. இந்நோயை உழவர்கள் நெற்பயிரில் எளிதில் தெரிந்துகொள்ள இந்நோயின் அறிகுறிகள், அது பரவும் வழிகள், நோயின் தடுப்பு முறைகள் ஆகியவற்றைப் பற்றி இனிக் காண்போம்.

நோயின் அறிகுறிகள்

இந்நோய் தாக்கிய இலைகளின் மேற்பரப்பில் முதலில் சிவப்பு அல்லது கரும் சிவப்பு நிறத்தில் (எள்ளின் நிறத்தில்) சிறிய புள்ளிகள் தோன்றும். இத்தகைய புள்ளிகள் இலையின் அடிப்பாகம் முதல் நுனி வரை, பரவலாகக் காணப்படும். நாளடைவில் இப்புள்ளிகள் அளவில் 0·5 முதல் 3 மில்லி மீட்டர் அகலமும் 1 முதல் 14 மில்லிமீட்டர் நீளமும் கொண்ட பெரிய புள்ளிகளாக மாறும். இப்புள்ளிகள் கொள்ளை நோயின் புள்ளிகளைவிட அளவில் சிறியதாக, சற்று நீண்டு, அகலக் குறுகலாகக் காணப்படும். சாதாரணமாகப் புள்ளிகளின் நிறம் கருஞ்சிவப்பாக (Brown Colour) இருக்கும். ஆனால் முதிர்ந்த புள்ளிகளின் நடுவில் அழுக்கேறிய வெண்மை அல்லது இளஞ்சிவப்பு நிறம் காணப்படும். கொள்ளை நோயைப் போன்று கண்வடிவமுள்ள பெரிய புள்ளிகள் இந்நோயினால் உண்டாவதில்லை. எனவே இந் நோயின் அறிகுறிகளைக் கொள்ளை நோயினின்றும் உழவர்கள் இலகுவில் பிரித்து அறிந்து கொள்ளலாம். புள்ளிகள் இலைகளில் அதிகமாகத் தோன்றும் பொழுது இலைக் கருகல் ஏற்படுவதுண்டு. ஆனால் இப்புள்ளிகள் கொள்ளைநோயைப் போன்று ஒன்றுக்கொன்று இணைந்து (Coalescence) காணப்படா. தனித்தனியாக இலை முழுவதும் பரவலாகக் காணப்படும்.

இந்நோய் நெற்கதிரையும், நெல் மணிகளையும் தாக்க வல்லது. இதனால் நெற்கதிருக்கும், நெல் மணிகளுக்கும் பெருத்த அளவில் சேதம் உண்டாகிறது. நெற்கதிரைத் தாக்குவதால் கதிர், கொடி



யைத் தானே நினைவுபடுத்தும்! ஆமாம்! அங்கேயிருந்த பானை பொம்மைகள்தான் அந்த உணர்வை ஏற்படுத்தின.

அடுத்து, தோலினால் செய்யப்பட்ட பொருள்களைப் பார்த்தோம். கண்ணையும் கருத்தையும் கவரும் முறையில்—வேலைப்பாடுகளுடன் கூடிய முறையில் அவை அமைந்திருந்தன. வெளியில் எந்த வணிக நிலையத்திலும் காண முடியாத அளவுக்குப் புதிய புதிய விதத்தில், காலணிகள் காட்சி தந்தன.

“நமது அங்காடியில் இத்தனை வகையான காலணிகள் இருக்கின்றனவா?”—என்று வியந்தோம்; வியந்தோம்; வியந்துகொண்டே இருந்தோம்! அந்தக் காலணிகளை, கால்களிற் போட்டு வீணாக்கக்கூடாது. கைகளிலே அணிந்து கொள்ள வேண்டும் என்ற உணர்ச்சியே தோன்றியது. வெளிக்கடைகளைவிட 5 ரூபாய் குறைவாகவும் விற்கப்படுகிறது என்பதை அறிந்ததும் பெருமூச்சு எழுந்தது. சென்ற மாதம் வெளிக் கடையில் அதிகப் பணம் கொடுத்துக் காலணி வாங்கியதை எண்ணி நொந்துகொண்டோம். மனத்தை அமைதிப்படுத்தியவாறு, சைக்கிள் ஆசனம் ஒன்றை எடுத்தோம். அதன் விலையை விசாரித்தோம். நான்கு ரூபாய் பத்து பைசா என்பதை அறிந்தவுடன் இறும்பூதெய்தினோம். “இது போன்ற உறுதி உள்ள வகையை எந்த வெளி வணிக நிலையத்திலும் காண முடியாது” என்று உறுதி கூறினார் உதவி மேலாளர். திண்டுக்கல் காதி போர்டு அமைப்பின் தயாரிப்பு அது என்பது குறிப்பிடத்தக்கது. டப்பாப் பைகளும் அங்கே பல வகைகளில் காணப்பட்டன. அவற்றைப் பயன்படுத்துவதற்கு, நாம் பெண்ணாகப் பிறக்கவில்லையே என்ற ஏக்கம் எங்களுக்கு எழுந்தது—ஏக்கத்துடன் முன்னேறி நடந்தோம்.

“திடீரென்று சென்னைக்கு மாற்றலாகி வரும் ஓர் அதிகாரி தனது வீட்டிற்குத் தேவைப்படும் மரச் சாமான்களுக்கு என்ன செய்வது என்று தவிக்க வேண்டாம்! நாங்கள் இருக்கிறோம்” என்று கூறும் வகையில் காட்சியளித்தன, கட்டில், நாற்காலி, சோபா, அலமாரி போன்ற மரச் சாமான்கள்! அவற்றிற்கு வாழ்த்துக் கூறிவிட்டு, பிரம்பு நாற்காலிகளின் பக்கம் சென்றோம். அவை அதிகமான அளவில் விற்பனையாகின்றன என்ற விவரத்தை அறிந்தோம்.

அவரது விளக்கத்தைக் கேட்டுக்கொண்டு ஓவியர் காண்பித்த ஓவியத்தை ஆர்வத்துடன் பார்த்தோம். வைக்கோலிலே உருவாக்கப்பட்டிருந்தது அந்த ஓவியம். கேரளத்துத் தயாரிப்பான அதனை வெளிநாட்டார் விருப்புடன் வாங்கிச் செல்கின்றனராம்.

“தினமும் ஏராளமான பேர் இங்கே பட்டுப் புடவைகளை வாங்கிச் செல்கின்றனர். காரணம் அவர்களின் உள்ளப் பாங்கை அறிந்து, நாங்கள் வகை வகையாக வரவழைக்கிறோம்”—உதவி மேலாளர் பெருமிதத்துடன் கூறினார்.

அவர், தொடர்ந்து பல அரிய செய்திகளைச் சொன்னார். அதனை அவர் சொல்லிய விதத்திலேயே தெரிவிப்பது நல்லது என்பதால், அவரையே பேச அனுமதிக்கிறோம்.

“1968-ல் துவக்கப்பட்ட இந்த விற்பனை நிலையம், துவக்கத்தில் இலாபகரமாக இல்லாவிட்டாலும், 1969-70-ஆம் ஆண்டில் நல்ல இலாபத்தைத் தந்து வருகிறது. தீபாவளி, பொங்கல், காந்தியடிகள் பிறந்த நாள் ஆகிய சமயங்களில் துணிகள் மிகுதியாக விற்பனையாகின்றன. சென்ற ஆண்டு தீபாவளியின்போது நாலரை இலட்ச ரூபாய்க்கு விற்பனையாகியிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

வளமான வாழ்க்கைக்கு வழிகாட்டி!

எல்லா வசதிகளோடும் கூடிய ஓர் இல்லத்தை அமைத்துக் கொள்ள உங்களுக்கும் ஆசை இருக்கலாம்!

தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டுக்காக நீங்கள் செலவிடும் ஒவ்வொரு ரூபாயும் வீண் போவதில்லை. இந்தச் சமுதாயத்தின் வளமான சுபிட்சத்துக்காக ஏராளமான திட்டங்கள் ... உணவு ... உறைவிடம் ... சுகாதாரம் ... கல்வி ... மருத்துவம் ஆகிய பல்வேறு துறைகளில் உங்கள் முதலீடு அரசினால் மறு-முதலீடு செய்யப்படுகிறது.

வளமான வாழ்க்கையை அடைவதில் உங்களுக்குள்ள வாய்ப்புகளை நினைவு கொள்ளுங்கள் ... தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டுத் திட்டம் இந்தியாவெங்கிலும் அதிகப்படியான பரிசுகளையும், தொகையையும் அள்ளித் தருகிறது!

அடுத்த குலுக்கலுக்கான
பரிசுகளின் மொத்தத் தொகை : ரூ. 17,50,000
ஒவ்வொரு வரிசைக்கும் முதல் பரிசு : ரூ. 1,00,000

குலுக்கல் தேதி: 25-8-1970

தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டுத் திட்டம்
இதுவரை உருவாக்கிய புதிய லட்சாதிபதிகள் - 177 பேர்

பரிசுச் சீட்டுகள் விற்பனை விறுவிறுப்பாக நடைபெறுகிறது. ஒரு சீட்டின் விலை ஒரே ஒரு ரூபாய்தான்!

இன்றே வாங்குங்கள்
தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு

வெளியீடு: இயக்குநர், தமிழ்நாடு அரசு செய்தி விளம்பரத்துறை, சென்னை-9



இலையிலிருந்து (Flag or boot leaf) வெளிவராமல் தடுக்கப்படுகிறது. இத்தகைய நிலைக்கு "கதிர் இறுக்கம்" (Chocking) என்று பெயர். கதிர் இறுக்கம் ஏற்படும்பொழுது நெற்குலைகள் கொடி இலையினின்றும் வெளிப்பட்டு, நன்கு விரிந்து, நெல் மணிகள் முதிர்ச்சியடையாமல், கொடி இலைக்குள் உள்ளே பகுதியும், வெளியே பகுதியுமாக இறுக்கமாகக் காணப்படுவதால் நெல்மணிகள் முதிர்ச்சியடையாமல் பதராகிவிடுகின்றன. கொடி இலைகளின் வெளிப்பாகத்தில் சற்று அளவில் பெரிய கருஞ்சிவப்புப் புள்ளிகள் காணப்படுகின்றன. மேலும் இந்நோய் நெல்மணிகளைத் தாக்கும்பொழுது அவை கருஞ்சிவப்பு அல்லது கருப்பான நிறத்தை யடைகின்றன. கதிரிலுள்ள பெரும்பான்மையான மணிகளின் புறத்தோல் (Glumes) இந்த நிறத்தில் காணப்படுவதால் மணிகளின் நிறம் மங்குவதோடு சில சமயங்களில் பதராகி விடுகின்றன. கதிர் வெளியே வந்தபின்னும், கதிர்க் காம்புகளில் கருப்பு நிறம் காணப்படும்.

நோய் பரவும் விதம்

இந்த நோய் முக்கியமாக விதைகளின் மூலம் பரவுகிறது. இந்நோயைத் தோற்றுவிக்கும் பூசனமான ஹெல்மிந்தோஸ்போரியம் ஒரைசே (Helminthosporium oryzal) விதைகளின் புறத்தோலிலும், உள்ளேயும் (Externally and internally seed borne) தொற்றிப் பரவவல்லது. எனவே நோய் தாக்கப்பட்ட விதைகளை விதைக்கும்பொழுது இந்நோய் அத்தகைய விதைகளிலிருந்து முளைத்து வளரும் செடிகளையும் தாக்குகிறது. மேலும் இலைகளிலும், கதிரிலும் நோய் தாக்கிய பகுதிகளிலிருந்து பூசன வித்துக்கள் (Fungal spores) உற்பத்தியாகி, அவை காற்றின் மூலம் மற்ற இடங்களுக்குப் பரவி, நோயற்ற செடிகளின் இலைகளில் விழுந்து, முளைத்து, இலைகளின் உட்புகுந்து [illegible] உண்டாக்குகின்றன. இந்நோயைக் கட்டுப்படுத்த [illegible] வழிகளில் பாதுகாப்புகளைக் கையாளவேண்டும்.

"தமிழ்மொழி பரவியுள்ளது— தமிழர்கள் உலகெங்கும் சென்றுள்ளார்கள். ஆனால், தமிழ் மொழி—உதாரணமாக மொரீஷியஸ் தீவில் மறைந்து வருகிறது. இன்னும் வேறு சில நாடுகளிலுள்ள தமிழர்களும், தம் தாய் மொழியை மறந்துவிடக் கூடிய அபாயத்திலுள்ளனர். இந்த மாதிரியான நிலைமை தொடர்ந்து நிலவ அனுமதிக்கப்படக் கூடாது. தமிழர்கள் வாழ்கின்ற நாடுகளிலெல்லாம், தமிழைக் கற்பதற்கான வாய்ப்பும் தமிழனோடு தொடர்ந்து தொடர்பு வைத்துக் கொள்வதற்கான வாய்ப்பும் வகை செய்யப்பட வேண்டும்".

நோய்த் தடுப்பு முறைகள்

பாக்டீரியல் பிளைட் (Bacterial blight) நோய்க்குக் கையாளப்படும் "சுடுநீர் சிகிச்சை முறை" (Hot water treatment) இந்த நோயையும் கட்டுப்படுத்த வல்லது. 54 முதல் 55 டிகிரி சென்டிகிரேடு வெப்பநிலையுள்ள நீரில் 20 முதல் 30 நிமிடங்கள் வரை விதைகளை மூழ்க வைத்துப் பின் நீரை வடித்து, நன்கு உலர்த்தி, விதைக்கு உபயோகிப்பதன் மூலம் இந்நோயை விதைகள் மூலமாகப் பரவுவதினின்று தடுக்கலாம். சுடுநீர் சிகிச்சையின் மூலம் விதைகளின் உள்ளும் புறமும் தொற்றியுள்ள பூசனத்தை இலகுவில் கொல்ல ஏதுவாகிறது. இம்முறையைக் கையாள்வதில் தனிக்கவனம் செலுத்தப்படவேண்டும். இம்முறையைக் கவனத்துடன் மேற்குறிப்பிட்டவாறு செய்தால் விதைகளின் முளைப்புத்தன்மை (Germination) பாதிக்கப்படுவதில்லை.

மேற்கூறிய தடுப்பு முறையைத் தவிர இரசாயனப் பூசன மருந்து



போன்ற பாதரச மருந்துகளை ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் மருந்து விதம் நன்றாகக் கலந்து விதைக்கலாம். பாதரச மருந்துகள் நச்சுத் தன்மை மிகுந்தவை. எனவே நச்சுத்தன்மை குறைவான, டி.எம்.டி.டி. திராம் போன்றவற்றை ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் மருந்து விதம் கலந்து விதைப்பதன் மூலமும் இந்நோய் விதைகள் மூலம் பரவுவதினின்றும் தடுக்கப்படுகிறது. மேற்கூறிய முறைகளுக்கு விதைத் தொற்று நீக்குதல் என்று பெயர் (Seed disinfection).

நெற்பயிரின் இலைகளிலும், ரிலும் இந்நோய் தோன்றாமல் க்க, தக்க சமயத்தில், நோய் ான்றுமுன் மருந்து தெளிப்பது மிகவும் அவசியம். பயிரின் இளம் பருவத்தில் இந்நோய் அவ்வளவாகக் கடுமையானதாக இருக்காது. பயிர் நன்றாக வளர ஆரம்பிக்கும் பருவத்திலும் இலைப் பருவத்திலும் கடுமையாக இருக்கும். சாதாரணமாக வெளி வெப்பநிலை 25 முதல் 30 டிகிரி சென்டிகிரேடாக இருக்கும் பொழுது இந்நோய் அதிகமாகக் காணப்படும். நடவு நட்டு ஒரு மாதத்திற்குப் பிறகு ஆரம்பித்து மூன்று வாரங்களுக்கு ஒரு முறை மொத்தம் மூன்று அல்லது நான்கு முறைகள் மருந்து தெளிக்க வேண்டும். டைதயோ கார்பமேட்டுகளான ஜினெப் (zineb) ஜிராம் (ziram) போன்றவைகளை ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2 கிராம் மருந்து விதமும் குமான் மருந்தை 1 லிட்டருக்கு 1 கிராம் விதமும் கலந்து தெளிப்பதன் மூலம் இந்நோயைத் தடுக்கலாம்.

எனவே, உழவர் பெருமக்கள் ஐ.ஆர். 8 நெல்லுக்கு உழவு, உரம், பூச்சித்தடுப்பு போன்ற முக்கியக் கட்டுக்கோப்புச் சாகுபடிமுறைகளை அனுசரிப்பதோடு, செம்புள்ளி நோயினின்றும் பயிரைப் பாதுகாத்துச் சிறந்த பலனையடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

உங்கள் சேமிப்பு ஐ.ஓ.பி.யில் பேணி பாதுகாக்கப்படுகிறது

இதுவே நல்ல தருணம் சேமிப்புக்கு—
உங்கள் சேமிப்பு ஐ.ஓ.பி.யில்
பெருகட்டும்—

இந்தியன் ஓவர்ஸீஸ் பாங்க்

கிராமப் புறங்களுக்கு மின்வசதி அளிப்பதில்

இந்தியாவிலேயே, கேரளம் தவிர, மற்ற எல்லா மாநிலங்களையும் தமிழகம் விஞ்சிவிட்டது.

தமிழகத்தில்
31-3-66-ல் 7,208 கிராமங்கள் மின்வசதி பெற்றன
31-3-70-ல் 10,116 (71·8 சதவிதம்) கிராமங்கள் மின்வசதி பெற்றுவிட்டன.

கிணறுகளுக்கு மின்வசதி பொருத்தப்பட்ட விசையேற்றங்கள்

31-3-1970-ல்
இந்தியாவில் மொத்தம் 11,57,468
இதில் தமிழகம் மட்டும் 4,70,903
இது நாட்டின் மொத்த எண்ணிக்கையில் 40 சதவிகிதத்துக்கு மேலாகும்.

தமிழகத்தில் உள்ள 3 கோடியே 93 இலட்சம் மக்களில் 70 சத விகிதத்தினர் கிராமங்களில் வசிக்கின்றனர். நாட்டின் அடித்தளம் கிராமங்களே. கிராம மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வது இன்றியமையாப் பணிகளில் ஒன்றாகும். எல்லாக் கிராமங்களுக்கும் குடிநீர் வசதி, எல்லாக் கிராமங்களுக்கும் மின் வசதி அளிப்பதை இலட்சியமாகக் கொண்டு செயல்படுகிறது தமிழக அரசு. 1971 டிசம்பருக்குள் தமிழ்நாட்டில் எல்லாக் கிராமங்களுக்கும் குடிநீர் வசதி, மின் வசதி அளிக்கப்படல் வேண்டும் என்பது அரசின் இலட்சியம்.

அமைதியான புரட்சி

அமைதியான புரட்சி ஒன்று நாட்டில் இன்று நடைபெற்று வருகிறது. கிராமங்கள் மறுமலர்ச்சி பெற்று வருகின்றன. தமிழகத்தில் 341 நகரங்களும் 14,124 பெரிய கிராமங்களும், 42,000 குக்கிராமங்களும், கிராமங்களை ஒட்டி 20,200 அரிசனக் குடியிருப்புகளும் உள்ளன.

30—4—70 அன்று உள்ள நிலவரப்படி, தமிழகத்தில் உள்ள எல்லா நகரங்களுக்கும், 10,126 கிராமங்களுக்கும் (71.9 சதவிகிதம்), 25,031 குக்கிராமங்களுக்கும் (59.6 சதவிகிதம்) மின்வசதி அளிக்கப்பட்டு விட்டது.

முதல் இடம் தமிழகத்திற்கே

கிராமங்களுக்கு மின்வசதி வளர்ப்பதில் தமிழகம் நாட்டின் மற்ற மாநிலங்களையெல்லாம் விஞ்சி விட்டது. கேரளம் தவிர, மற்ற மாநிலங்களை விஞ்சி தமிழகம் இத்துறையில் ஏறுநடைபோட்டு வருகிறது. ஆனால், கேரளத்தில் கிராமங்கள் மிகக் குறைவு. கேரளத்தில் உள்ள 1,573 கிராமங்களில் 1,159 கிராமங்களுக்கு மின் வசதி அளிக்கப்பட்டுள்ளது. ஆனால், தமிழகத்தில் உள்ள 14,124 கிராமங்களில் 10,116 கிராமங்கள் மின் வசதி பெற்று விட்டன. ஆகவே, இந்தியாவிலேயே இத்துறையில் தமிழகம் தான் முன்னணியில் நிற்கிறது என்று கூறலாம்.

பிரமிக்கத்தக்க வளர்ச்சி

கடந்த சில ஆண்டுகளாக இத்துறையில் தமிழகத்தில் நல்ல முன்னேற்றம் கண்டுள்ளது. கடந்த மூன்றாண்டுகளில் கண்டுள்ள முன்னேற்றம் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

கீழ்க்கண்ட புள்ளி விவரங்கள் இதைத் தெளிவுபடுத்துகின்றன:—

	மின்வசதி செய்யப்பெற்ற கிராமங்கள். (1)	சத விகிதம். (2)
1. 31-3-1951-ல் ..	1,495	10.6
2. 31-3-1956-ல் முதல் ஐந்தாண்டுத் திட்ட காலம்.	2,430	17.2
3. 31-3-1961-ல் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலம்.	5,919	42.0
4. 31-3-1966-ல் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலம்.	7,208	51.0
5. 31-3-1970-ல்	10,116	71.8

செங்கை, வடஆர்க்காடு முந்துகின்றன

தமிழகத்தில், செங்கற்பட்டு, வடஆர்க்காடு மாவட்டங்களில் இப்பணி முடிவடையும் தறுவாயிலிருப்பது குறிப்பிடத்தக்கது. செங்கற்பட்டு



ாவட்டத்தில் உள்ள 1,440 கிராமங்களில் 1,356 ராமங்களும் வடஆர்க்காடு மாவட்டத்தில் 1,681 ராமங்களில் 1,536 கிராமங்களும் மின்வசதி பெற் ள்ளன (31-3-70 நிலவரப்படி). கீழ்க்கண்ட ள்ளி விவரங்கள் மாவட்ட வாரியாக நடைபெற் ள்ள பணியினை விளக்குகின்றன :—

மாவட்டம். (1)	கிராமங்கள். (2)	மின்வசதி அளிக்கப் பட்டவை. (3)	சதவிகிதம். (4)
1. செங்கற்பட்டு	1,440	1,356	94.0
2. கோயமுத்தூர்	897	816	91.0
3. தர்மபுரி ..	655	373	56.9
4. கன்யாகுமரி	46	46	100.0
5. சென்னை ..	இல்லை.	இல்லை.	இல்லை.
6. மதுரை ..	875	775	88.6
7. நீலகிரி ..	37	30	81.0
8. வடஆர்க்காடு	1,681	1,536	91.2
9. இராமநாதபுரம்	1,427	869	60.8
0. சேலம்	848	621	73.2
1. தென்ஆர்க்காடு	2,005	1,166	58.1
12. தஞ்சாவூர்	1,899	954	50.2
13. திருச்சிராப்பள்ளி	1,405	820	58.5
14. திருநெல்வேலி	909	754	83.0
மொத்தம்	14,124	10,116	71.8

கிராமங்களில் மக்கள் தொகைக் கணக்குப்படி பார்த்தால், 5,000-க்கு மேற்பட்ட மக்கள் தொகை உள்ள கிராமங்களில் 99 சதவிகிதமும் இரண்டாயிரத்துக்கு மேல் ஐயாயிரத்துக்குள் 82·1 சதவிகிதமும் இரண்டாயிரத்துக்குக் கீழே ஆயிரத்துக்கு மேலே 65.5 சதவிகிதமும் என்ற அளவில் கிராமங்களுக்கு மின்வசதி அளிக்கப்பட்டுவிட்டது.

மிஞ்சியுள்ள எல்லாக் கிராமங்களுக்கும் குக்கிராமங்களுக்கும் 1972 ஆரம்பத்திற்குள் மின்வசதி அளித்து விட வேண்டும் என்ற இலட்சியத்தை முன்னிறுத்திப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

நாட்டின் பாதி தமிழகத்தில் மட்டும்!

தமிழ்நாட்டில் உள்ள 9 இலட்சம் நீர்ப்பாசனக் கிணறுகளில் 4,70,903 கிணறுகளுக்கு இது வரையில் (31-3-70) மின்சார விசையேற்றங்கள் பொருத்தப்பட்டு விட்டன. இந்திய நாடு முழுவதற்குமாக 31-3-70 முடிய 11,57,468 விசையேற்றங்களுக்கு மின்சாரம் பொருத்தப்பட்டுள்ளது. இதில் தமிழ்நாட்டில் மட்டும் 4,70,903 விசையேற்றங்கள் மின்வசதி பொருத்தப்பட்டுள்ளன. இது நாட்டின் மொத்தத்தில் 40 சதவிகிதத்துக்கும் மேலாகும். கிராமங்களுக்கு மின்வசதி வழங்குதலிலும், கிணறுகளுக்கு மின்வசதி பொருத்தப்படுவதிலும் பாரதத்திலேயே தமிழ் நாடுதான் முதல் இடத்தினைப் பெற்றுள்ளது. எந்த மாநிலமும் இத்துறையில் தமிழ்நாட்டை மீற முடியாது என்ற நிலை நமக்கெல்லாம் மனநிறைவு அளிக்கக்கூடிய ஒன்றாகும். முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் ஆண்டொன்றுக்கு 3,600 விசையேற்றங்களுக்குத்தான் மின்சாரம் பொருத்தப்பட்டது. ஆனால் 1967-70-ல் மட்டும் சுமார் 50,000 விசையேற்றங்கள் மின்சாரம் பொருத்தப்பட்டு விட்டன.

பத்தாண்டு கூறும் உண்மை

கடந்த பத்தாண்டுகளில் இத்துறையில் கண்டுள்ள முன்னேற்றம் கீழே காணலாம்:—

ஆண்டு. (1)	மின்சாரம் பொருத்தப் பட்ட விசையேற்றங் களின் எண்ணிக்கை. (2)	ஆண்டு இறுதியில் மொத்தம் விசை யேற்றங்கள். (3)
		97,476
1959-60 ..	19,172	1,17,695
1960-61 ..	19,012	1,40,601
1961-62 ..	23,438	1,65,561
1962-63 ..	26,086	1,92,424
1963-64 ..	24,465	2,25,192
1964-65 ..	33,862	2,56,594
1965-66 ..	31,654	2,89,903
1966-67 ..	34,993	3,44,483
1967-68 ..	54,412	4,10,119
1968-69 ..	59,724	4,70,903
1969-70 ..	60,784	

கடந்த மூன்றாண்டுகளில் கிணறுகளுக்கான விசையேற்றங்களுக்கு மின்சாரம் பொருத்துவதில் பாராட்டத்தக்க முன்னேற்றத்தினைத் தமிழகம் கண்டுள்ளது.

தமிழகத்தின் நெற்களஞ்சியமான தஞ்சைத் தரணியில் உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்காக விரைவுத் திட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது. 31-3-70 வரை 2,758 வடிமுனைக் குழாய்க் கிணறுகளுக்கு மின்சார வசதி பொருத்தப்பட்டது. நான்காவது திட்டக் காலத்தில் சுமார் 7,500 வடிமுனைக் குழாய்க் கிணறுகளுக்கு மின்சாரம் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

அரிசன மக்களின் நல் வாழ்வுக்காக . . .

இத்துடன் இப்பணி நின்று விடவில்லை. அரிசன மக்களின் வாழ்விலே ஒளிமிகுந்த எதிர்காலத்தின உருவாக்கவும் பணிகள் ஆற்றப்பட்டு வருகின்றன. கிராமங்களைச் சுற்றியுள்ள அரிசனக் குடியிருப் களுக்கு மின்சாரம் வழங்குவதில் தமிழக அரசும் தமிழக மின் வாரியமும் தனி அக்கறையுடன் செ லாற்றி வருகின்றன. 1957-58-லிருந்து அரிசனக் கு யிருப்புகளுக்கு மின்சாரம் வழங்கத் தமிழக அர சிறப்பு உதவித்தொகை ஆண்டுதோறும் அளித் வந்துள்ளது. 1970-71 முடிய 4,300 அரிசனக் கு யிருப்புகளுக்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது.



1957-58-லிருந்து புள்ளி விவரங்கள் இதோ :—

ஆண்டு.	மின்சாரம் வழங்கப்பட்ட அரிசனக் குடியிருப்புகளின் எண்ணிக்கை.	செலவு செய்யப்பட்ட உதவித் தொகை. (ரூ. இலட்சத்தில்).
(1)	(2)	(3)
1957-58	90	1.50
1958-59	110	2.00
1959-60	144	1.50
1960-61	173	1.50
1961-62	235	1.50
1962-63	228	2.04
1963-64	276	1.50
1964-65	300	1.61
1965-66	370	3.07
1966-67	436	3.02
1967-68	448	4.84
1968-69	480	5.55
1969-70	1,100	9.14

1969-70-ல் மட்டும் அரிசனக் குடியிருப்புகளில் மின்சாரம் வழங்கத் தமிழக அரசு ரூ. 9·14 இலட்சம் உதவித்தொகை அளித்துள்ளதிலிருந்தே, தமிழக அரசு ஏழை, எளிய, பாட்டாளி மக்களின் நல்வாழ்விலே அக்கறை கொண்டுள்ள அரசு என்று அறுதியிட்டுக் கூற முடியும். கடந்த மூன்றாண்டுகளில் முந்தைய ஆண்டுகளை விட, இத்தொகை பெருகியுள்ளது குறிப்பிடத்தக்கது.

31-3-1969 வரை தமிழகத்தில் 31,727 கிராமங்களுக்கும் குக்கிராமங்களுக்கும் மின் வசதி அளிக்கப்பட்டுள்ளது. இதில் 22,700-க்குத்தான் தெரு விளக்குகள் போடப்பட்டுள்ளன. மற்றவற்றில் விசையேற்றங்களுக்குத்தான் மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது. தெரு விளக்குகளோ, விசையேற்றங்களோ இல்லாத கிராமங்கள் - குக்கிராமங்கள் 25,345. மிச்சமுள்ள எல்லாக் கிராமங்களுக்கும் இரண்டாண்டுக்குள் தெரு விளக்குகள் போடப்பட வேண்டும் என்ற சிறப்புத் திட்டம் ஒன்றினை மாண்புமிகு முதல்வர் துவக்கி வைத்தார். இதற்காக ஆகும் செலவு ரூ. 44 கோடியாக இருக்கும். இப்பணி பிரம்மாண்டமான பணியாகும். சிறப்பான முறையில் இப்பணி நடைபெற்று வருகிறது. 1969-70-ல் 3,728 கிராமங்களுக்குத் தெரு விளக்குகள் போடப்பட்டுள்ளன. இந்தப் பணி 1972-73-க்குள் முழுமையாக முடிக்கப்பட்டுவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இப்படி எல்லாக் கிராமங்களுக்கும் மின் வசதி அளிப்பதால் நிதி ஆதாயம் ஒன்றும் இல் இருந்தாலும் இது செய்து முடிக்கப்பட வேண்டிய ஒன்று. மக்களின் நன்மைதான் தலையாயது. அதை நிறைவேற்றுவதுதான் முக்கியக் கடமை என்ற உணர்வுடன் மக்கள் அரசு பாடுபடுகிறது. தமிழகத்தின் மூலை முடுக்குகளிலெல்லாம் மின்சாரத்தைக்கொண்டு சென்று, வேளாண்மை பெருக, நாட்டிலே பசுமைப் புரட்சிகாண, மக்கள் நல்வாழ்வு வாழ, அவர்கள் வாழ்க்கைத் தரம் உயரப் பாடுபடுவதெனத் தமிழக அரசு உறுதி கொண்டுள்ளது.

ஏழை எளிய மக்களின் வாழ்வில் வளம் காண வேண்டும். அவர்களிடையே உள்ள இருள் அகற்றப்பட வேண்டும். பாமரமக்களின் வாழ்விலே ஒளிமயமான எதிர்காலம் அமைக்க வேண்டும். ஏழையின் சிரிப்பிலேதான் இறைவன் இருக்கின்றான். அந்த இலட்சியப் பயணத்திலே தமிழ்நாடு மின் வாரியமும் தன் பங்கினைச் செம்மையுறச் செய்து வருகிறது!

சிறுவர்க்கோர் அரங்கம்

"எனது வேலூர் சுற்றுப்பயணத்தின்போது இந்தச் சிறுவர் அரங்கத்திற்கு வருகை புரிவதற்கு வாய்ப்புக் கிடைத்ததை எண்ணி நான் மகிழ்ச்சியடைகிறேன். இந்த அரங்கம் சிறுவர்களுக்குத் திரைப்படங்களைக் காண்பிப்பதன் வாயிலாக ஒரு நல்ல பணியைச் செய்து வருகிறது. கல்வி நிலையங்களுக்குச் சமமான பெருமை இந்த அரங்கத்திற்கு உண்டு. இதுபோன்ற நல்ல பணியில் ஈடுபட்டுவரும் தமிழக அரசின் முயற்சிகள் அனைத்தும் எப்போதும் வெற்றிபெற வாழ்த்துகிறேன்."

வேலூரில் அமைந்துள்ள சிறுவர் அரங்கத்திற்கு இவ்வாறு வாழ்த்துரை தந்திருக்கிறார் மாண்புமிகு இந்தியக் குடியரசின் தலைவர் வி. வி. கிரி அவர்கள். அன்னாரின் வேலூர்ச் சுற்றுப் பயணத்தின்போது, அவருக்காகவே சில தனிக் காட்சிகள் சிறுவர் அரங்கத்தில் காட்டப்பட்டன. அவற்றைப் பார்த்து அகமகிழ்ந்த குடியரசுத் தலைவர் அவர்கள்—சிறுவர் அரங்கத்திலுள்ள பார்வையாளர் புத்தகத்தில்தான் மேலே சொல்லியுள்ள வாசகங்களை 1970 மே 10-ம் நாளன்று தமது மணிக்கரத்தினால் பொறித்திருக்கிறார்.

குடியரசுத் தலைவரின் வாழ்த்துதலுக்கு இடமான இந்த அரங்கம், நமது பெருமதிப்பிற்குரிய—பேரறிஞர் அண்ணா அவர்களின் மறைவுக்குப் பின் உருவாகியது. "அண்ணா கலை அரங்கம்" என்றே பெயரிடப்பட்டுள்ளது. கடந்த ஓராண்டாக இந்த அரங்கம், வேலூர் நகரத்திலும், அதன் சுற்றுப்புறத்திலும் உள்ள சிறுவர்களின் இதயங்களைக் கவர்ந்து வருகிறது. இந்தப் பகுதியில் "நாடகம் நடத்துவதற்குச் சரியான அரங்கம் இல்லையே" என்று நீண்ட காலமாக இருந்துவந்த ஏக்கத்தையும் இந்த அரங்கம் தற்போது நீக்கிவருகிறது. வாரந் தவறாமல் பல நிகழ்ச்சிகளும் அடிக்கடி நாடகங்களும் இந்த அரங்கத்தில் நடைபெறுகின்றன. நகரத்தின் நடுப்பகுதியில் அமைந்திருப்பதால் அநேக வசதிகள் இயற்கையாகவே இந்த அரங்கத்திற்குக் கிடைத்திருக்கின்றன; குறிப்பாகப் பேருந்துவசதி கிடைத்திருக்கிறது. மக்கள் அனை வகையில் நகரத்திற்கு அண்மையில் அமைந்திருக்கிறது. சென்னையிலுள்ள சிறுவர் அரங்கத்தைப் போலவே இங்கேயும் மாதத்தின் எல்லா நாட்களிலும் திரைப்படக் காட்சிகள் நடைபெறுகின்றன.

சென்னையிலுள்ள சிறுவர் அரங்கம், வருகின்ற செப்டம்பர் மாதம் தனது பன்னிரண்டாவது ஆண்டினை நிறைவு செய்கிறது. அண்மையில் சில புதிய வசதிகளை இந்த அரங்கம் பெற்றிருக்கிறது. இதுவரை சாதாரண 35 மில்லி மீட்டர் படங்கள் மட்டுமே திரையிடப்பட்டுவந்தன. தற்போது சினிமாஸ்கோப் படங்களைத் திரையிடுவதற்குரிய வசதிகள் ஏற்பட்டுள்ளன. இந்த ஆண்டு மே மாதம் முதல் இந்த வாய்ப்புக் கிடைத்துள்ளது. அதன் காரணமாகச் சிறுவர்களுக்குத் தகுதியான விதவிதமான சினிமாஸ்கோப் படங்கள் திரையிடப்படுகின்றன.

சென்னை-வேலூர் இந்த இரு நகரங்களிலும் உள்ள சிறுவர் அரங்கங்கள்—இந்தியத் துணைக் கண்டத்திலேயே புகழ்பெற்று விளங்குகின்றன. ஏனென்றால் இந்த இரண்டு அரங்கங்கள்தான் இந்தியாவிலேயே ஒரு மாநில அரசினரால் வெற்றிகரமாக நடத்தப்படும் நிலையங்களாகும். இந்த வகையில், தமிழக அரசு இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள ஏனைய மாநிலங்களுக்கெல்லாம் வழிகாட்டியாக அமைந்திருக்கிறது. இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டிருப்பது போலச் சிறுவர்களின் கல்வித் துறையில் திரைப்படங்கள் உன்னதமான இடம் பெறுகின்றன—அவர்களின் கல்வித் திறமையை வளர்க்கின்றன. இந்த அரங்கத்தையும் பம்பாய் சண்முகானந்தா அரங்கினைப் போல மாற்றுவதற்கு தம மாநில அரசு திட்டம் தை துள்ளது.

உதகைக்குப் புதிய மகுடம்

உதகை-தமிழகத்தின் பூஞ்சோலை-கோடையிலே குளிர்தரும் குன்றம்-வானுயர்ந்த யூகாலிப்டஸ் மரங்களும், செல்வம் கொழுக்கும் தேயிலைத் தோட்டங்களும் நிறைந்துள்ள இடம் இவ்வாறு உதகமண்டலத்தின் சிறப்புக்கள் பற்பல.

புகழ் மிக்க இந்த உதகையின் புகழுக்கு, மேலும் அணிசெய்வது போல் அமைந்துள்ளது, இவ்வாண்டு அங்கு புதிதாக நிறுவப்பட்ட வானொலித் தொலை நோக்கி (ரேடியோ டெலஸ்கோப்). உலகிலே உள்ள மிகவும் சக்தி வாய்ந்த தொலை நோக்கிகளில் இதுவும் ஒன்று. இந்தத் தொலை நோக்கி மூலம், விண்வெளி ஆராய்ச்சியாளர்கள், அண்ட வெளியின் எல்லையினையே ஆய்வு செய்திட முடியும். அறிவியல் துறையில், இது பெரும் வாய்ப்பாக அமையும்.

நமது நாட்டிலுள்ள இளம் விஞ்ஞானிகளுக்குப் பயிற்சியளிக்க, இது குறிப்பிடத்தக்க பல நன்மைகளை வழங்கும்.

ந்த செலவு ! அதிக சக்தி !!

பொதுவாக, ஆடிகள் துணை கொண்டு இயங்கும் தொலை நோக்கிகள் மூலம் ஆய்வு செய்யும் விண்வெளி ஆய்வாளர்கள் ஒளி அலைகளையே தங்களது ஆய்வுக்குப் பயன் படுத்துவர். ஆனால் வானொலித் தொலை நோக்கியில் வானொலி அலைகள் பயன்படுத்தப் படுகின்றன. எனவே உதகையிலுள்ள வானொலித் தொலை நோக்கி இந்திய விஞ்ஞானிகளுக்கு ஒரு புதிய வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்துள்ளது.

இந்தியத் துணைக் கண்டம், பூமத்திய ரேகைக்கு அருகிலுள்ளதைப் பயன்படுத்திடும் வகையில் தனி அமைப்புடன் உதகை வானொலித் தொலை நோக்கி அமைக்கப்பட்டுள்ளது. இந்த அமைப்பு, குறைந்த செலவில் அதிக சக்தியைச் சேகரிக்கும்; தேவையானமுறையில் இயங்கும்.

இந்தத் தொலை நோக்கியில், ஒலியைப் பிரதிபலிக்கும் மேல் பாகம், 530 மீட்டர் நீளமும், 30 மீட்டர் அகலமும்கொண்டது. இங்கிலாந்து நாட்டிலே, ஜோட்ரெல் பாங்க் என்ற இடத்திலுள்ள 76.2 மீட்டர் வட்டத்தைவிட இது நான்கு மடங்கு பெரியது என்பது குறிப்பிடத்தக்கது.

எத்திசையிலும் இயங்கும்

உதகையிலுள்ள இந்தத்தொலை நோக்கி புதிய அமைப்புக்கொண்டது. இதில் ஒலி சேகரிக்கும் பகுதி மிகவும் அதிகம். உலகின் வேறு சில பகுதிகளில் இத்தகைய தொலை நோக்கிகள் அமைக்கப் பட்டுள்ளன. ஆனால் அவற்றைக் கிழ-மேல் திசையில் இயக்க முடியாது. எனவே வானொலி அலைகளின் பிறப்பிடங்களைக் (Radio sources) கண்டு பிடிக்கவோ அல்லது பின் தொடரவோ, ஒரு சில வினாடிகளுக்குமேல் அவற்றைப் பயன்படுத்த முடியாது.

ஆனால் உதகையிலுள்ள இந்த வானொலித் தொலை நோக்கியின் அச்சு, புவியின் அச்சு சுழல்வதற்கு நேர்கோட்டில் வைக்கப் பட்டுள்ளது. இந்த ஏற்பாட்டின் மூலம், வானொலிப் பிறப்பிடங்களை கிழ-மேல் திசை வாக்கில் நாளொன்றுக்கு 9½ மணி நேரம் தொடரமுடியும். அதற்கேற்றவாறு சுழலும்படி அதன் நீளமான அச்சு அமைந்துள்ளது.

வானொலித் தொலைநோக்கியின் கதிரினை அல்லது அது பார்க்கும் திசையினை, அதன் விநியோகக் கம்பிகளை, மாற்றி இணைப்பதன் மூலம், தென்-வடலாகவும் திருப்பமுடியும். எனவே இதனைக் கிழ-மேலாகவும், தென்-வடலாகவும் இயக்க முடிகிறது.



இந்தத் தொலை நோக்கி 11 டிகிரி சாய்வுள்ள மலையின் மீது அமைக்கப்பட்டுள்ளது. இந்த சாய்வுப் பகுதியில் சமதூரமுள்ள 24 உயர்ந்த இரும்புக்கோபுரங்கள் உள்ளன. அதன் மீது புனலின் குறுக்கு வெட்டுப் போன்றுள்ள சட்டங்கள் (frames) ஏற்றப்பட்டுள்ளன. இவை 530 மீட்டர் நீளமுள்ள 1100 இரும்புக் கம்பிகளினால் (Stainless Steel wires) இணைக்கப் பட்டுள்ளன. இந்த இரும்புக் கம்பிகள்தான் வானொலியைப் பிரதிபலிக்கும் பாகமாக அமைகின்றன. இதில் வந்து மோதும் வானொலி அலைகள், தொலைநோக்கியில் வைக்கப்பட்டுள்ள 968 வானொலிச்செய்தி பரப்பும் கருவிகளில் பிரதிபலிக்கப்படுகின்றன. அங்கிருந்து அவை பல் கதிர் வாங்கிக்குச் (Multi beam receiver) செல்கின்றன.

உதகையில் உள்ள இந்த வானொலித் தொலைநோக்கிமூலம், மிகத் தொலைவிலுள்ள வானொலி மண்டலங்களை ஆய்வு செய்யத்தக்க வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.

சந்திரன் வானவெளியில் சுற்றும்போது, அதனது கூர்மையான எல்லை, மிகத் தொலை தூரத்திலிருந்து வரும் வானொலி அலைகளை மறைக்கிறது. வானொலிப் பிறப்பிடத்தின் ஒரு குறுகிய பகுதி உடனே சந்திரனின் பின்புறத்தில் மறைந்து விடுகிறது. எஞ்சிய பெரிய பகுதி மெள்ள மெள்ள மறைகிறது. சந்திரன் நகர்ந்தவுடன், மீண்டும் இந்தப் பகுதி வெளி வருகிறது. இதனைப்பதிவு செய்வதன் மூலம், வானொலியின் பிறப்பிடத்தை மிகவும் துல்லியமாகக் கணக்கிடவும், பிறப்பிடத்தின் அமைப்பைப் பற்றியதகவலை அறியவும் முடிகிறது.

இந்தத் தொழில் நுணுக்க முறை மிகவும் சக்தி வாய்ந்தது. நன்கு இயக்கப்படக்கூடிய மிகப் பெரிய வானொலித் தொலை நோக்கி உலகின் எந்தப்பகுதியிலும் இல்லாததால், இந்த முறை இதுவரை முழுக்கப் பயன்படுத்தப்படவில்லை.

உதகையில் இந்தத் தொலை நோக்கி அமைக்கப்பட்ட 14 நாட்களுக்குள் 16 வானொலிப் பிறப்பிடங்கள் பார்வையிடப்பட்டன. அவற்றில் 11, ஏற்கனவே மற்ற வானவெளி ஆய்வுக்கூடங்களினால் பதிவுசெய்யப்பட்டவை. ஆனால் அங்கு அவைகளைப்பற்றிய விரிவான குறிப்புகள் கிடையா. மீதி 5, உதகைத் தொலைநோக்கியால் முதல் முறையாகக் கண்டு பிடிக்கப்பட்டவை.

உதகையிலுள்ள இந்தத் தொலை நோக்கி, ஆண்டுக்குப் பல நூற்றுக்கணக்கான வானொலிப் பிறப்பிடங்களைக் கவனிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இவை அமெரிக்காவில், பாலோமார் மலை வானிலை ஆய்வுக் கூடத்திலுள்ள 48 அங்குலத் தொலைநோக்கியிலிருந்து எடுக்கப்பட்ட புகைப்படங்களுடன் ஒப்பிட்டுப்பார்க்கப்படும். கொடைக்கானல், நைனிட்டால், ரெங்காப்பூர் ஆகிய இடங்களிலுள்ள தொலை நோக்கிகள் மூலமும் இவை ஆய்வு செய்யப்படும்.

சூரியன், மற்றும் மிகவும் ஒளிமயமான கோளங்களிலிருந்து வெளிவரும் வானொலி அலைகளை ஆய்வு செய்யவும் இந்தத் தொலை நோக்கி பயன்படும்.

வானொலிப் பிறப்பிடங்களின் துடிப்புகள் பற்றி விரிவாகப்படிக்கவும் ஒரு பெரும் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. பத்துலட்சத்தில் ஒரு பங்கு நேரத்தில் இவை வானொலித் துடிப்புகளை வெளியிடுகின்றன. இது வரை இத்தகு துடிப்புகள் 50 ஐ வானவெளி நிபுணர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள். அதுவும் சில விநாடிகள் அளவே. பூமியைவிடப் பல கோடிக்கணக்கான அளவு பெரிதான நட்சத்திரங்கள் தான் இத்தகைய வானொலித் துடிப்புகளை அனுப்புமென்று நம்பப்படுகிறது. இவற்றைக்கண்டு பிடிக்க நமது உதகைத் தொலை நோக்கி பெரிதும் உதவும்.



உங்கள் அரிசி கண்டுமுதலை அறுவடைக்குப்
பிறகும் அதிகரிக்கமுடியும் அதற்கு உதவுகிறது
பின்னி-ஸதாகே
நவீன நெல் அரைவை ஆலை

ஜப்பானிய ஸதாகே என்ஜினியரிங் கம்பெனி ஒத்துழைப்புடன் பின்னி லிமிடெட் என்ஜினியரிங் டிவிஷன் இந்த இயந்திரங்களை தயாரிக்கிறது. அவை மணிக்கு 1 முதல் 4 டன்கள் வரை அரைக்கும் ஆற்றல் உள்ளவை.

பின்னி-ஸதாகே அரைவை ஆலைகள் சாதனை

புழுங்காத நெல் — மொத்த அரைவையில் சராசரி அதிகரிப்பு 5%-முழுமையான அரிசி அதிகரிப்பு 10%

புழுங்கல் நெல் — மொத்த அரைவையில் சராசரி அதிகரிப்பு 1%-முழுமையான அரிசி அதிகரிப்பு 3%

இதன் இன்னொரு சிறப்பு-பின்னி-ஸதாகே நொய் அளவை குறையச்செய்கிறது. இந்த நவீன ஆலைகளுக்கு அரைவையை மாற்றிக் கொள்வதன் மூலம் அரிசி கண்டு முதல் 15 லட்சம் டன்கள் அதிகரிக்க முடியும். இது ஆண்டு ஒன்றுக்கு 83 லட்சம் மக்களுக்கு உணவு அளிக்கப்போதுமானது. இதனால் ரூ 120 கோடி மீதமாகும்!

பின்னி-ஸதாகேயின் 4 சிறப்புகள்
1. சாதாரண நெல் அரைவை ஆலைகளைவிட உங்களுக்கு அதிக ஆதாயம் கிடைக்கிறது.
2. குறைந்த அளவு தேய்வும், அதிக அளவு முழுமையான அரிசியும் கிடைக்கிறது.
3. தவிடை நன்கு பக்குவமாக்குகிறது. நல்ல விதமாக தவிட்டு எண்ணெய் எடுக்க உதவுகிறது.
4. பராமரிப்பில் சிக்கனம், இயக்க எளிது. தொடர்ந்து நாள் ஒன்றுக்கு 24 மணிநேரம் ஓடக்கூடியது.

முழுவிவரங்களுக்கு: பின்னி லிமிடெட், என்ஜினியரிங் டிவிஷன்,
சென்னை தொழிற்கூடம்-தபால் பெட்டி எண் 1111, மீனம்பாக்கம், சென்னை-16



மகளிர் பகுதி

''புதிதாகக் கண்டு பிடிக்கப்படும் நட்சத்திரத்தைவிடப் புதிதாகக் கண்டு பிடிக்கப்படும் உணவு மக்கள் சமூகத்திற்கு அதிக மகிழ்ச்சியைக் கொடுக்கும்''— என்பது பிரெஞ்சு நாட்டுப் பழமொழியாகும்.

புதிய சமையல் முறைகள் மக்களிடையே பெற்றுள்ள செல்வாக்கைத்தான் இந்தப்பழமொழி நமக்கு உணர்த்துகிறது.

பிஷர் என்பவர் குறிப்பிடுகிறார். ''சாதாரணமாக ஒருவர் தமது இருபதாவது வயது முதல் ஐம்பதாவது வயது வரை இந்த முப்பதாண்டுக் காலத்தில் தாம் மென்று விழுங்கி உண்பதற்குச் செலவிடும் நேரம் சுமார் இருபதாயிரம் மணி. அதாவது இருபத்தெட்டு மாதம் இரவும் பகலும் தொடர்ந்து உண்ணும் நேரம்''—என்று.

இப்படி நீண்ட நேரத்தை எடுத்துக் கொடுக்கும் ' உணவு தயாரிக்கும் முறையில் ' பழங்காலத்திலிருந்து எவ்வளவோ மாறுதல்கள் உருவாகி வந்துள்ளன.

முதல் சமையல் கலை நூல்

உலகத்திலேயே சமையல் கலை பற்றிய முதலாவது புத்தகம் சுமார் 4700 ஆண்டுகளுக்கு முன் சீனாவில் வெளியாகியது என்று கூறுகிறார்கள். அந்தச் சமையல் கலைநூலின் பெயர் 'ஹோன்சோ'. அதனை எழுதியவர் 'ஷென்னுங்' என்னும் சீனச்சக்கரவர்த்தி.

அந்நாள்தொட்டு இதுவரை உலகின் பல பாகங்களிலும் சமையல் கலை நூல்கள் ஆயிரக் கணக்கில் வந்துள்ளன. 'நாகரிக உணவுகள்' என்ற பெயரில் எல்லா மக்களும் பயன்படுத்த முடியாத முறையில் அதிகமாகச் செலவு-செய்யும் வகையில் பல புதிய உணவு முறைகள் குறிப்பிடப்படுகின்றன. ஆனால், இங்கு ஏழை எளிய மக்களும் பயன்படுத்தக்கூடிய சத்துணவுகளைப் பற்றிய குறிப்புகளைக் காண்போம்.

கேழ்வரகு ரொட்டி

தேவையான பொருள்கள்.

கேழ்வரகு மாவு= 4 கோப்பை
உப்பு = 1½ தேக்கரண்டி
வனஸ்பதி = 1 மேஜைக் கரண்டி

செய்முறை: உப்பு, வனஸ்பதி, வெந்நீர் ஆகியவற்றை கேழ்வரகு மாவில் விட்டுப் பிசையவும்; இதில் ஒரு பகுதியை எடுத்து வாழை இலையில் சிறிது எண்ணெய் தடவி மாவை அதில் பரவலாகத் தட்டவும். தோசைக் கல்லை அடுப்பில் வைத்துப் பரவலாகத் தட்டிய ரொட்டியை அதில் இட்டு வேக வைக்கவும். ஒரு புறம் வெந்த

யுடன் மறுபுறமும் திருப்பி வேக வைத்து எடுக்கவும்.

கேழ்வரகு லீப் கேக்

தேவையான பொருள்கள்.

கேழ்வரகு மாவு—200 கிராம்.
வெல்லம்—80 கிராம்.
தேங்காய்த் துருவல்—80 கிராம்.
உப்பு—ருசிக்கத்தக்க அளவு.
கொதி நீர்—1 கப்.

செய்முறை: ராகி மாவில் உப்புக்கலந்து மிருதுவான தண்ணீர் கலந்து மாவாகத் தயார் செய்து கொள்ளவும். 10 அங்குல சதுரமுள்ள வாழை இலையை எடுத்துக் கொள்ளவும்; 25 கிராம் அளவுள்ள மாவை எடுத்து இலையில் வைத்துத் தட்டவும். ஒரு மேஜைக் கரண்டி வெல்லப்பொடி தேங்காய்த் துருவல் கலவையை அதில் வைக்கவும். பிறகு இலையை மடித்து, இட்லிப் பாத்திரத்தில் வைத்து 20 நிமிடங்கள் வேக வைக்கவும்.

மரவள்ளிக் கிழங்கு உப்புமா

தேவையான பொருள்கள்.

மரவள்ளிக் கிழங்கு மாவு = 115 கிராம்.
உப்பு = 5 கிராம்.
வனஸ்பதி = 15 கிராம்.
கடலைப் பருப்பு = 5 கிராம்.
உளுத்தம் பருப்பு = 5 கிராம்.
கடுகு = கொஞ்சம்.
வெங்காயம் = 15 கிராம்.
பச்சை மிளகாய் = 5 கிராம்.
இஞ்சி = 5 கிராம்.
கறிவேப்பிலை = கொஞ்சம்.
தண்ணீர் = 55 மிலி.

செய்முறை: பச்சை மிளகாய், வெங்காயம், இஞ்சியை நறுக்கி வைத்துக் கொள்ளவும், வனஸ்பதியில் பாதியை அடுப்பில் வைக்கவும். மரவள்ளிக் கிழங்கு மாவை வறுக்கவும். மீதி வனஸ்பதியை ஊற்றிக் கொள்ளவும். திரவியங்களையும், வெங்காயத்தையும் கொதிக்க விடவும். உப்பையும் வறுத்த மாவையும் சேர்க்கவும். நன்றாகக் கலக்கவும். நன்றாக வேக விடவும்.

—"[illegible]"

தமிழக அரசு—விவசாயிகள் அரசு

உழுவார் உலகத்தார்க்கு ஆணி. உழவர் பெருமக்களின் நல்வாழ்வே நாட்டின் நல்வாழ்வு. இதை இதய கீதமாகக் கொண்டுள்ள தமிழக அரசு உழவர் பெருங்குடி மக்களுக்கு மின்சாரம் வழங்குவதில் அநேக சலுகைகளை வாரிவாரி வழங்கியுள்ளது :—

...விவசாய விசையேற்றங்களைப் பொறுத்த வரையில், அவைகளை மின்சாரத் தொடர்பு படுத்திக் கொடுக்கும் பணிக்காக, தனியாக் கட்டணம் கிடையாது.

...150 வாட்டுகள் வரை உள்ள மூன்று விளக்குகளை விவசாயப் பணிகளுக்காகப் பயன்படுத்திக் கொள்ளலாம். இதை எரிப்பதற்காகும் கட்டணம், விவசாயம் செய்ய மின் வசதியினைப் பயன்படுத்துதலுக்கு உள்ள கட்டணம் போலவே நிர்ணயிக்கப் படுகிறது.

...மின்சாரத்தைப் பல முறையில் பயன்படுத்துகின்றனர். விவசாயத்திற்காக மின்சாரம் வழங்க யூனிட்டுக்கு 9 பைசா வசூலிக்கப்படுகிறது. மற்ற வகையில் மின்சாரம் பயன்படுத்துதலை விட, இதற்கான கட்டணம் மிகக் குறைவு.

...விவசாயிகளின் மீது உபரிக் கட்டணம் விதிக்கப்படுவதில்லை.

... கிணறுகள் வறண்டு போனாலோ, தண்ணீர் கிடைக்காமல் தண்ணீரை இறைப்பதற்கு முடியாமல் போகும் காலங்களிலோ குறைந்த பட்சக் கட்டணம் வசூலிப்பதுகூடத் தள்ளி வைக்கப்பட்டு வருகிறது.

... தண்ணீர் இல்லாததாலும் விசையேற்றங்களை எடுத்துவிட்டாலும், இறவை இயந்திரத்தை ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு மாற்ற வேண்டுமென்றாலும் அதற்காக மறுதொடர்பு கொடுப்பதற்கான கட்டணம் ஒன்றும் தனியாக வசூலிக்கப்படுவதில்லை.

...விவசாயிகள் ஒப்பந்தப்படி பெற்றுக் கொண்டுள்ள அளவைக் கணக்கிடாமல், எவ்வளவு மின்சாரம் பயன்படுத்துகின்றனரோ, அதற்கு மட்டும்தான் கட்டணம் விதிக்கப்படுகிறது.

...மின் உற்பத்தி நிலையங்களில் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டு, மின்வெட்டு ஏற்படுகிற காலங்களிலும், விவசாயத்திற்குப் பயன்படுத்தப்படும் மின்சார அளவு குறைக்கப்படுவதில்லை. அதற்கு வெட்டு கிடையாது.

குற்றால அருவியிலே குளிப்போம்

சந்தன நிறத்து மாலை வெயில், பன்னீர் தெளிப்பது போன்ற சாரலின் தூறல், சலசலவென்று இசையுடன் கெண்டை மீன் போல் துள்ளி விழும் அருவி நீர்.

ஆம். குற்றாலத்தில் 'சீசன்' தொடங்கி விட்டது என்பதற்கு இவைதான் அடையாளங்கள். ஆண்டுதோறும் ஜூன் திங்கள் முதல் செப்டம்பர் திங்கள் வரை நீடிக்கும் இந்த 'சீசன்'.

உடலுக்கும் உள்ளத்திற்கும் இதமான இன்பம் தரும் இந்தக் குற்றால அருவியில் குளிப்பதற்கு வேறு எதுவும் ஈடாகமாட்டாது!

மாதம் ஒரு முறை குளிக்கும் பகுதிகள் உண்டு. வாரத்திற்கு ஒரு முறை தலையை நனைப்பவர்களும் உண்டு. நாளுக்கு இரு முறை குளிக்கிறோம் என்ற பெருமை கேரளக்காரர்களுக்கு இருக்கலாம். ஆனால் நெல்லை மாவட்டத்திலுள்ள இந்தக் குற்றாலத்து அருவியிலே குளிக்க வருபவர்கள் [illegible] குறைந்தது நாலு முறையாவது குளிப்பார்கள் என்பது நிச்சயம்!

அதிகாலை 4 மணிக்கே தலையில் அரைக்கீரை அல்லது சந்தனாதித் தைலம் வடிய, இடுப்பில் துண்டுடன், பல் துலக்கிக்கொண்டு அருவியில் தலை கொடுக்கத் தயாராகயிருப்பவர்களைக் காணலாம். உச்சி வெய்யிலில் கூட்டத்தோடு கூட்டமாக முண்டியடித்துக் குளிப்பவர்களும் உண்டு. நள்ளிரவு 12 மணிக்குச் சென்றால், பால்போல் ஒளி வீசும் மின் விளக்கு வெளிச்சத்திலே உள்ளங் குளிர அனுபவித்துக் குளிக்கும் உல்லாசப் பிரியர்களையும் காணலாம்.

இங்கு 'சீசனை' அனுபவிக்க வருபவர்கள் பலதரப்பட்டவர்கள். வடநாட்டிலிருந்து வரும் வணிகர்களும், சென்னை போன்ற பெரிய நகரங்களிலே இடிபாடு

மக்களாட்சியில்....!

"தூய்மை நிறைந்த மக்களாட்சி முறை, தேவைப்படும் போது, பொது நோக்கத்துக்குத்தான் கட்டுப்படுமேயன்றி கட்சிக் கொடிகளுக்கு அன்று; அங்ஙனமாயின் கட்சிகள் பலப்பல ஏன்? தனித்தனிக் கொடிகள் ஏன்? என்று கேட்கப் படுகிறது. ஒரு பொது நோக்கத்துக்காகப் பாடுபடும் மாண்பு மக்களாட்சிக்கு உண்டு என்பதாலேயே எல்லாவற்றையுமே கூட்டிக் கலக்கி ஒருருவாக்கிப் பேருருவாக்கிவிட எண்ணுவது பேதைமை மட்டுமல்ல; கேடு விளைவிக்கக் கூடியதே!

மலர்களை உதிர்த்து இதழ்கள் குவித்திடலாம்; இதழ்களைக் குவித்துப் புதிய பூக்களை மலரச்செய்திட முடியாது! மலர்களைத் தொடுத்து, மாலைகளாக்கலாம்-செடிகள் மாலை மாலையாகவே ஏன் தந்துவிடக்கூடாது என்று எண்ணுவது வேடிக்கை நினைப்பன்றி வேறில்லை! தனித்தனி முக்கனி பிழிந்து வடித்து ஒன்றாகக் கூட்டச் சொன்னார் சான்றோர்; தனித்தனிக் கனிகளே கூடாது என்றாரில்லை."

—பேரறிஞர் அண்ணா

தமிழ்நாடு தொழில் வணிகத் துறை

சென்னை-5

நேர்த்தியான, கவர்ச்சிமிக்க கைவினைத்திறன் (HANDICRAFTS) பொருள்கள், தொழில் வணிகத் துறையினரால் நடத்தப்படும் கீழ்க்கண்ட விற்பனை நிலையங்களில் விற்பனைக்குக் கிடைக்கும்.

1. குடிசைத் தொழில் விற்பனை நிலையம்,
   166-ஏ, மவுண்டு சாலை, சென்னை-2.
2. அரசினர் விற்பனை நிலையம், மகாபலிபுரம்,
   செங்கற்பட்டு மாவட்டம்.
3. அரசினர் விற்பனை நிலையம், நெய்வேலி,
   தென்னாற்காடு மாவட்டம்.
4. அரசினர் விற்பனை நிலையம், திண்டுக்கல்,
   மதுரை மாவட்டம்.
5. அரசினர் விற்பனை கொள்முதல் நிலையம். தஞ்சாவூர்.
6. அரசினர் விற்பனை கொள்முதல் நிலையம், திருச்சி.
7. அரசினர் விற்பனை கொள்முதல் நிலையம், திருநெல்வேலி.
8. அரசினர் விற்பனை கொள்முதல் நிலையம். கோயம்புத்தூர்.
9. அரசினர் விற்பனை கொள்முதல் நிலையம். சேலம்.

விற்பனை செய்யப்படும் பொருள்கள்

வெண்கலச் சிலைகள், கலைப்பொருட்கள் காகித, களிமண் பொம்மைகள், சந்தன இதர நவீன கலைப்பொருள்கள், நூதன பனையோலைப் பொருள்கள், தந்தம், கொம்பினாலான பொருள்கள், இசைக் கருவிகள், நெட்டி உருவகங்கள் (தாஜ் மஹால் போன்றவை), தரை விரிப்புகள், கம்பளங்கள், தஞ்சாவூர் பஞ்ச உலோகக் கலைத் தட்டுகள் மற்றும் இதர கைவண்ணப் பொருள்கள்.

தேவைக்குக் கீழ்க்கண்ட முகவரிக்குத் தொடர்பு கொள்ளவும்:—

இணை இயக்குநர்
தொழில் வணிகத் துறை. (தொழில் கூட்டுறவு மற்றும் கைவினைத் திறன்)
சேப்பாக்கம். சென்னை-5.

களுக்கிடையே வாழ்ந்து, குழாய் நீரிலேயே குளித்துச் சலித்த செல்வந்தர்களும் மூன்றுமாதமாவது நிம்மதியாக மூச்சு விடலாம், கொட்டும் அருவியிலே குளிக்கலாமென்று வருகை தருகின்றனர்

தேனருவியில் தேனிலவு !

தேனிலவிற்காக வரும் தம்பதியர் பலர். மாணவ-மாணவியர் சுற்றுலா வருவதும் சைக்கிளில் சாரை சாரையாக அவ்வட்டார இளைஞர்கள் இங்கே வருவதும் வாடிக்கையான காட்சிகளே!

சித்தசுவாதீனம் இல்லாதவர்களும் இங்கு குளிக்க அழைத்து வரப்படுவதுண்டு. அங்குள்ள மருத்துவமனையிலிருந்து கூட்டமாக அவர்களை அழைத்துவந்து குளிப்பாட்டுவார்கள். மலையிலுள்ள மூலிகைச் சத்துக்களும், ஜில்லென்ற அருவிக் குளிப்பும் அவர்களைக் குணமடையச் செய்கின்றன.

குற்றாலம் அருவி என்று பொதுப்படையாகச் சொன்னாலும், அங்கு பல இடங்களிலிருந்து விழும் அருவிகளுக்கும் வெவ்வேறு பெயர்கள் உண்டு.

படங்களில் பொதுவாகக் காணும் அருவிதான் பெரிய அருவி. அது குற்றால நாதரின் கோயிலருகே உள்ளது. குற்றாலம் வருபவர்களில் பெரும் பகுதியினர் குளிப்பதும் இங்கேதான். ஆடவரும் மகளிரும் தனித்தனி நீர் வீழ்ச்சிகளில் குளிக்கிறார்கள். மகளிர் ஆடைகள் மாற்றவும் தனி அறைகள் அருவியின் அருகிலேயே உள்ளன.

அருவியின் - பக்கத்திலேயே மலை மீது ஏறிச் செல்ல வழியிருக்கிறது. வாலிபர்களும், மாணவர்களும் அதில் ஏறி மேலேயுள்ள செண்பகாதேவி, தேனருவி மானருவி (இங்கு மான்கள் வந்து தண்ணீர் அருந்துமாம்) ஆகியவைகளைக் காணச் செல்வர்.

தேனருவி மலை உச்சியிலுள்ளது. சுமார் 180 அடி உயரத்திலிருந்து இரு பாறைகளுக்கு நடுவே அருவியாக விழுகிறது. இருபுறமும் பிரம்மாண்டமான தேன் கூடுகள் அடை அடையாகத் தொங்குகின்றன. இந்த மலைத்தேன் கூடுகளை, வேடர்கள் அம்பு எய்து, தேன் அடைகளை வீழ்த்தித் தேன் எடுப்பதாகக் கூறுகிறார்கள். நாமும் தேன் கூடுகளை அண்ணாந்து பார்க்கிறோம்.

காட்டுத் தேனியின் ரீங்கார ஒலியும், குயிலின் இன்னிசையும், நம்மை ஒரு புதிய உலகிற்கே அழைத்துச் செல்கின்றன. கையில் கொண்டு சென்ற தின்பண்டங்களைக் கொறித்தபடியே தேனருவியை ரசிக்கின்றனர் மாணவர் குழாம்.

பெரிய அருவிக்கும் தேனருவிக்கும் நடுவில் உள்ள செண்பகாதேவி அருவியிலிருந்து பாறைகள் நடுவே தண்ணீர் வீழ்ந்து பெரிய கிணறு போல் காட்சி அளிக்கிறது. இதைப் பொங்குமாங் கடல் என்றும் கூறுகின்றனர். பாறையின் மீது ஏறி இதில் குளித்து நீந்துவதில் ஆனந்தம் காண்பவர் பலர்.

செண்பகாதேவி அருகிலுள்ள செண்பகாதேவி அம்மன் கோவிலுக்கு அதிகாலை வேளையில் சென்றால் இடியப்பமும், பிட்டும் சுடச்சுடக் கிடைக்கும் !

இளம் தம்பதியரும், அமைதியாகக் குளிக்க விரும்புபவர்களும் செல்லும் அருவி, ஐந்தருவி. ஐந்து பகுதிகளாகப் பிரிந்து விழுவதால், இப் பெயர் பெற்றுள்ளது. பெரிய அருவியிலிருந்து மேற்கே சுமார் 4 மைல் தூரத்தில் உள்ளது. இதற்காக [illegible] ஏற வேண்டியதில்லை.

சாலையே செல்கிறது. இதற்குச் செல்வதற்குத் தனிப்பேருந்து வசதிகள் உண்டு. இருப்பினும் சாலையின் இரு மருங்கிலுமுள்ள சந்தன மரங்களையும் மாஞ் சோலைகளையும் இயற்கைக் காட்சிகளையும் ரசித்தபடியே செல்வது ஒரு தனி ரசனை.

அதோ, ஐந்தருவி வந்து விட்டது. அருவியை நெருங்கு முன்பே உடம்பில் இதமான ஒரு சிலிர்ப்பு. ஒரு பெண்மணி குளித்துவிட்டுத் திரும்புகிறாள். அவள் வருகையை எதிர்பார்த்துக் காத்திருக்கும் அவளது கணவன், அவள் அருகில் வந்ததும், "டிரான்சிஸ்டரை" திருப்புகிறான். "குற்றாலம் அருவியிலே குளித்தது போலிருக்குதா..? மனதை மயக்குதா..?" என்று பாடுகிறது அந்தக் குறும்புக்கார "டிரான்சிஸ்டர்". இளம் தம்பதியரின் முகங்களிலே புன்னகை "பொங்கு மாங்கடல்" போல் பொங்கி வருகிறது.

வீட்டிலே, வாளித் தண்ணீரில் குளிக்கும் முன் குளிரால் நடுங்கும் ஒரு பெரியவர், பாறையில் சாய்ந்து உட்கார்ந்தபடியே அரைமணி நேரமாக அருவிக் குளிப்பை அனுபவிக்கிறார். குற்றால அருவியின் மகத்துவம் — அவர் உடல் நடுங்கவில்லை. குளிரும் ஆட்டவில்லை.

தாயின் சேலை முன்தானையைப் பிடித்த வண்ணம் "தன் தன்" என்று குதிக்கிறாள் ஐந்து வயதுச் சிறுமி. ஐந்தருவியிலே குளிப்பதிலே அந்தச் சிறுமிக்கு அளாதி ஆனந்தம்.

பெரிய அருவிக்குக் கிழக்கே இரு மைல் தூரத்திலிருப்பது "புலியருவி".

இவை தவிரப் பெரிய அருவியிலிருந்து சுமார் ஒரு பர்லாங் தூரத்தில் மலைச் சரிவில் உள்ளது புதிய அருவி ஒன்று. இது செயற்கை அருவி. ஆடவர், பெண்டிர் தனித்தனியாகக் குளிப்பதற்காக இரு அறைகள் அங்கு உள்ளன.

இயற்கை அன்னையின் எழில் கூடமான இந்தக் குற்றாலம், நெல்லை மாவட்டம், தென்காசியிலிருந்து சுமார் 4 மைல் தொலைவில் உள்ளது. "சீசன்" காலங்களில் தென்காசியிலிருந்து குற்றாலம் வந்து போக அடிக்கடி பேருந்துகள் உள்ளன. குற்றாலத்திலே தங்க விரும்புபவர்களுக்குக் குன்றின்மீது வசதிகள் நிறைந்த சுற்றுலா மாளிகை உள்ளது. பலதரப்பட்ட வாடகைகளில் தனிப்பட்டவர்களின் வாடகை இல்லங்களும், மாளிகைகளும் உள்ளன. குற்றாலம் நகரியத்தின் (டவுன்சிப்) நிர்வாகத்திலுள்ள சத்திரங்களும் ஏராளமான சுற்றுப் பயணிகளுக்கு வசதியாக உள்ளன.

வாழ்க்கைத்தளத்தில், ஏற்றத் தாழ்வின்றி எல்லோரும் சென்று அனுபவிக்கத்தக்க இந்தக் குற்றாலம், உடல் நலமேம்பாட்டிற்கேற்ற ஓய்வுத்தலம்; சுற்றுலாவிற்கேற்ற உல்லாசபுரி! கோடைக்குப் பின்னும் இனிமை பாற்றிக் கொள்ளும் வகை கிடைத்த குளிர்தரும் மலைத் தலம்!

புதுமுறைச் சாலை அமைத்திடும் வேலை

"குயில்கூவிக் கொண்டிருக்கும்
  கோலமிருந்த
மயிலாடிக் கொண்டிருக்கும்
  வாசமுடைய
நற்காற்றும் கலந்தடிக்கும்
  கண்ணாடிபோன்ற
நீரூற்றுக்கள் உண்டு கனிமரங்கள்
  மிக்குண்டு
பூக்கள் மணங்கமழும் பூக்கள்
  தோறும் சென்று
தேனீக்கள் இன்னிசை பாடிக்
  களிக்கும்
வேட்டுவப் பெண்கள் விளையாடப்
  போவதுண்டு
காட்டு மறவர்களும் காதல்
  மணம் செய்வதுண்டு
நெஞ்சில் நிறுத்துங்கள் இந்த
  இடத்தைத்தான்
சஞ்சீவி பர்வதத்தின் சாரல்
  என்று சொல்லிடுவார்"

என்பார் பாரதிதாசன்; நான் அப்படிச் சொல்லவில்லை; இத்தகைய இயற்கை எழில் குலுங்க இருக்கும் இடம் 'நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம்' என்பேன். ஆம், அதன் எதிரில்தானே காந்தி மண்டபமும், இயற்கை எழிலோடு கூடிய சிறுவர் பூங்காவும் அமைந்துள்ளன.

இன்றைய முதல்வர்; அல்ல, அல்ல; அன்றைய பொதுப்பணி அமைச்சர், கலைஞர் அவர்கள் பேரறிஞர் அண்ணாவின் சீரிய தலைமையில் பதவி ஏற்றதும் முதன் முதலாகச் சென்று பார்வையிட்ட அரசு நிலையத்திற்குச் செல்கிறோம் என்ற உணர்வு மேலிட, உற்சாகமாகச் சுமந்து செல்லும் ஜீப் பறக்கிறது; அமைச்சர்களது இல்லங்களைத் தாண்டுகிறது; அவனுக்கு ஏனோ ஒரு கலக்கம்-இமைப் பொழுதில் எண்ணற்ற நினைவு அலைகள்- 'இங்குதானே நாம் ஒருவாரம் இரவுபகலென்று பாராது பட்டினியாகப் படுத்திருந்தோம்; எதையும் தாங்கும் இதயம், இங்குதானே. "இறுதியாகத் தாங்கப் போகிறேன்- தம்பி!" என்று நம்மிடம் கூறி விட்டுச் சென்றது!' அவன் எண்ணுகிறான்; எதிரே எல்லாம் ஒரே சூன்யமாய்க்காட்சி அளிக்கிறது.

'சார்! கவர்னர் மாளிகை வந்து விட்டது! வண்டியை எங்கே ஓட்ட?' என்று டிரைவர் குரல் கொடுக்கிறார். அவன் எட்டிப்பார்க்கிறான். வலப் புறத்தில் ஒரு பெரிய மாளிகை; அதனைச் சுற்றிப் பச்சைப் பசேலென்று புல்வெளியும்-உயர்ந்த மரங்களும் காட்சி தருகின்றன. அவனுக்கு எண்ணம் கோடைக் கானலில் இருப்பதாக.

'இதுதான் சார்! நீங்கள் சொன்ன இடம்' என்றவாறே ஜீப்பின் இடையை இலகுவாகத் திருப்பி ஒடித்துச் சென்று நிறுத்துகிறார், அவனுக்கே' ஓர் அச்சவுணர்வு-இது பங்களாவா அல்லது ஆராய்ச்சி நிலையமா என்று. மேலே செல்கிறான். மாடியில் மலர்ந்த முகத்துடன் ஒருவர் வரவேற்கிறார்; அவர் தான் நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய இயக்குநர்.

அவன் 'தமிழரசு' இரண்டாப் இதழை நீட்டுகிறான்; அவ புரிந்து கொள்கின்றார் ஒரு பு னகையுடன் - அவன் அங் செய்தியாளராகின்றான்!

கதர் - கிராமத்
தொழில்கள்

விவசாயிகளுக்கு ஊதியத்துடன் கூடிய வேலைவாய்ப்பளிக்கின்றன

தமிழ் நாட்டுக் கதர் - கிராமத்தொழில் வாரியத்தின் நிறுவனங்களில் உற்பத்தி செய்யப் பெற்ற பற்பல கைநுட்பப் பொருள்கள்.

கதர் கிராமத் தொழில்களை ஆதரிப்பது உணவு உற்பத்திக்கு உழைக்கும் கிராம மக்களுக்கு உதவுவதாகும்

கதர் - கதர்ப்பட்டு
சோப்பு - தேன்
செக்கெண்ணெய்
தோல்பொருள்கள்
பனைவெல்லம் சர்க்கரை
மண்பாண்டம் - வார்ப்படங்கள்
பனைபொருள்கள்
பித்தளை. வெண்கலப்
பாத்திரங்கள்

மேலும்
பற்பல கைநுட்பப் பொருள்கள்

கதர் கிராமத்தொழில்
விற்பனை நிலையங்களில்
கிடைக்கும்.

வெளியீடு:

கதர் கிராமத் தொழில் துறை
2, சர் தேசிகாச்சாரி ரோடு சென்னை-4.

"உங்கள் ஆராய்ச்சி நிலையம் மக்களுக்கு எந்தவகையில் நன்மை செய்கிறது?"

"நவீன முறையில் சாலையமைத்திட உதவுகின்றது. விஞ்ஞானம் வேகமாய் வளர்ந்திடும் இந் நிலையில், சாலைப்போக்குவரத்து இன்றியமையாததாய் ஆகிவிட்டது. ஆகவே இங்கு இருக்கும் சாலைகளை நவீனப்படுத்துவதும், விஞ்ஞான முறைப்படிச் சீரிய முறையில் சாலை அமைத்திடப் புதிய வழி முறைகளைக் கண்டறியத் தொடர்ந்து ஆராய்ச்சி நடத்துவதும் இதன் முக்கிய பணிகளாகும்." என்கிறார்.

"செயல்படுத்த இருக்கிற நல்ல திட்டம் இப்போது உண்டா?"

"ஓ! ஜெமினி அருகே, வெளி நாடுகளில் உள்ளதைப்போன்ற, முற்றிலும் புதிய போக்குவரத்து வசதிகளோடு பலவழிச் சாலையினை அமைக்க இருக்கிறோம்" என்கிறார்.

'அப்படியா, மகிழ்ச்சி! உங்கள் பெருவழித் துறை ஆராய்ச்சி நிலையத்தின், தோற்றம், வளர்ச்சி, ஆற்றிய பணிகள், எதிர்காலத் திட்டம் தேவைகளைச் சற்று விளக்குவீர்களா?'

"பெருவழித்துறை ஆராய்ச்சி நிலையம், அதன் சொந்தக் கட்டிடத்தில், 1957-ம் ஆண்டு நவம்பர் மாதம் நிறுவப்பட்டது. இந்தப் புதிய நிறுவனம் 1948-ல் தோன்றிய மண்வள ஆராய்ச்சி ஆய்வுக் கூடத்திலிருந்து உருவானது.

எதிர்காலத்தில் விரிவு படுத்தும் நோக்கத்தோடும், சோதனைச் சாலைத் தடங்களோடும் கூடிய அதன் பரப்பளவு 35 ஏக்கராகும். 1962-ம் ஆண்டு ஒவ்வொரு நான்கு தனிப்பிரிவுக்குமாக ஆய்வுக் கூடங்களும், ஆய்வுக் கூடங்களுக்குச் சொந்தமான வண்டிகளையும், கனரக இயந்திரங்களையும் நிறுத்தி வைக்கின்ற கொட்டகைகளும் 1·94 லட்சம் ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டன. அந்த ஆய்வுக் கூடம் முறையே (1) மண்வளம், (2) கான்கிரீட், (3) பிட்டுமன், (Bituman) (4) போக்குவரத்து ஆகிய நான்கு முக்கிய பிரிவுகளை உட் கொண்டிருந்தது.

நோக்கம் : பெருவழித்துறை போக்குவரத்து முறைகள் ஆபத்தில்லாதவையாகவும், வசதி நிறைந்தவையாகவும், செலவினம் குறைந்தவையாகவும் அமையச் சோதனைகள் உதவின. சாலை மற்றும் சாலைப் போக்குவரத்து, இவை இரண்டும் எப்பொழுதுமே பெருவழித்துறை ஆராய்ச்சி நிலையத்தின் விருப்பத்திற்குகந்த பகுதிகளாக இருந்தன. உண்மையில் இந் நிலையம், மாநிலத்தின் எந்தப் பகுதிகளில் போடப்படும் சாலைகளாக இருந்தாலும் தனது பரிபூரண ஒத்துழைப்பை அளித்துக் கொண்டிருக்கிறது. இந்நிலையம் நிறுவப்பட்டது முதல் இன்று வரை மாநிலப் பெருவழித் துறையின் கீழும், தனியார் துறையின் கீழும் பல சாலைகளை அமைத்திருக்கிறது. அதன்

சிறு சேமிப்பு
ஓர்
ஒளிவிளக்கு
குல விளக்காம் உங்கள் மகன் கல்வி பெற....
திரு விளக்காய் உங்கள் மகள் மணவாழ்வு பெற....
பெருவிளக்காய் உங்கள் வருங்காலம் சீர் பெறவே....
ஒளிவிளக்காய் வழிகாட்டும் சிறுசேமிப்பு....
இன்றே உங்கள் அருகிலுள்ள அஞ்சலகத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்
இயக்குநர்
சிறு சேமிப்பு நிறுவனம்
சென்னை-9

செயல் முறைகளைக் கீழ்வருமாறு பிரிக்கலாம்.

1. மண்வளம்: மண்வளங்களின் தராதரங்களைப் பகுத்தறிந்து, அஸ்திவாரங்கள், நடைபாதைகள் முதலியவைகளைக் கட்டுவதற்கு உதவுவது.

2. கான்கிரீட்: கான்கிரீட் கலவைகளின் நிர்ணயங்களும் தரக் கட்டுப்பாடும் நிலை நாட்டுவது.

3. பிட்டுமன்: (Bituman) உபயோகிக்கப்படும் பொருட்களின் நிரந்தர சோதனைகளும் நிர்மாணமும்.

4. கட்டடங்கள்: பாலங்கள் மற்றும் பலதரப்பட்ட சாலை சம்பந்தமான சோதனைகள், நடைபாதைகளின் நிலைமைகளை ஆராய்தல் முதலியன.

5. போக்குவரத்து: சாலைகளின் இடம், சந்திப்புகள், குறுக்குச் சாலைகளின் நிர்மாணங்கள், போக்குவரத்து வாகனங்களின் அளவு, சாலைப் பாதுகாப்பு, சாலைப்பரப்புகளின் தனித்தன்மைகள் முதலியன ஆராய்ந்தறிவது.

6. ஆலோசகசாலை உதவி: புது முறைகள், புதுத் தேவைகளுக்காகப் புகுத்தப்படுதலைக் கவனித்தல், பழைய முறைகளைப் புதுத் தேவைகளுக்காக மாற்றியமைத்தல் முதலியன.

குழுவின் வேலைகள்: நெடுஞ்சாலைப் பொறியியலில் வரும் பிரச்சினைகளைக், குழுவின் உறுப்பினர்களோ, அல்லது விஞ்ஞானத் தொழில்ஆராய்ச்சிக் குழுபோன்ற தனி அமைப்புகளோ (Council of Scientific and Industrial Research) சமர்ப்பிக்கும்பொழுது அவற்றைப்பற்றி ஆடம்பரமற்ற முறையில் கூடி ஆலோசனை செய்தல்; பெருவழித்துறை ஆராய்ச்சி நிலையத்தின் ஆராய்ச்சி நடவடிக்கைகளின் முன்னேற்றத்தை ஆராய்தல் முதலியன.

மண் வளப் பகுதி: 1969-70-ம் ஆண்டு மண்வள ஆய்வுக் கூடத்தின் மிக முக்கியமான அலுவல், உலக வங்கியின் மூலமாக, உலக அபிவிருத்தி உதவி நிறுவனத்தின் கீழ்த் தொடர்ந்த சேலம்-பெங்களூர், சேலம்-கொச்சி சாலை வேலைகளாகும். இந்த இரண்டு சாலைகளிலும், சாலைகளின் பல இடங்களில் உள்ள மண்ணின் மாதிரிகளும், பழைய மற்றும் புதிய சாலைகள் வந்து சேருகின்ற சந்திப்புகளிலுள்ள மண்ணின் மாதிரிகளும், பெரிய சிறிய பாலங்களின் அருகிலுள்ள மண்ணின் மாதிரிகளும், சோதனைகள் பல செய்யப்பட்டு, அச்சோதனைகளின் முடிவுகள் மத்திய அரசிற்குத் தெரிவிக்கப்பட்டன. மேலும் பல அடிமண் சோதனைகள் கட்டடங்கள் மற்றும் பாலங்களுக்கான அஸ்திவாரங்கள் கட்டுவதற்கான வழிவகைகளை, நல்கின.

இது போன்ற பணிகள் ஏராளம்!'' என்று முடிக்கின்றார். அத்தோடு, அங்குள்ள ஒரு பதிவேட்டைக் காட்டுகின்றார். அதில் அன்றையப் பொதுப்பணி அமைச்சர் கலைஞர் அவர்கள் ''நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தினைப்பார்வையிட்டேன். முற்போக்கான முயற்சிகள் பாராட்டத்தக்க அளவில் நடைபெறுகின்றன. மேலும் முயற்சிகளில் முனைந்து வெற்றி பெற ஊக்கம் பெற விழைகிறேன்.'' என்று தம் கைப்பட எழுதியுள்ளார்.

''இவ்வளவு செய்யும் எங்கள் நிலையத்தை மக்கள் அறியாதிருக்கின்றார்கள்'' என்று வருத்தத்துடன் கூறுகிறார்.

''அதற்குத்தான் 'தமிழ் அரசு' இருக்கிறதே'' என்று கூறி விடை பெறுகிறேன்.

நமக்குத் தேவை— அந்த உணர்ச்சிதான்!

''நமது நாடு தொழில் துறையில், பிற நாடுகளுடன் ஒப்பிடுகையில் பின்னணியில் நிற்கிறது எனினும், வளம் குறைந்த நாடா இது? இல்லை! பெட்ரோலியம் இல்லாத நாடுகள் உண்டு; நிலக்கரி இல்லாத நாடுகள் உண்டு; இரும்பு இல்லாத நாடுகள் உண்டு; மற்ற கனிவளங்கள் இல்லாத நாடுகள் உண்டு; ஆனால் நம் நாட்டிலோ எல்லாவகைக் கனி வளங்களும் உண்டு தோண்டவேண்டிய கனிச்சுரங்கங்கள்; கட்டவேண்டிய கப்பல் துறைகள் இன்னும் இருக்கின்றன; ஆகவே, ஏராளமான வளத்தை நாம் பெற்றிருக்கிறோம்.

''நாம் முன்னேறியிருக்கிறோம் என்றாலும்-நமது வளத்திற்கேற்ப முன்னேறவில்லை! நமது தேவைக்கேற்பவும் முன்னேறவில்லை! ஆகவே, எக்கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும், எந்த அரசியல் கொள்கையை உடையவராக இருந்தாலும் நமது திறமையை—உழைப்பை ஒன்று படுத்தி ஆக்கப்பணியில் செலுத்தினால் நாம் நிச்சயம் வெற்றி பெறுவோம். இரண்டாம் உலகப் போரில் அழிந்த ஜப்பான் நாட்டினர் பெரும் சேதத்திற்கு ஆளானபோதும், பத்துப் பதினைந்தே ஆண்டுகளில் கடுமையான உழைப்பினால் பழைய நிலையை அடைந்தார்கள். அதுமட்டுமல்ல நம்மைப் போன்றவர்களுக்கும் உதவ முன்வருகிறார்கள். அந்த உணர்ச்சிதான், எழுச்சிதான் நமக்குத் தேவை.''



கண்டு கேட்டதும்

(தமிழக முதல்வர் தமது மேலைநாட்டுச் சுற்றுப் பயணம் பற்றிச் சென்னை வானொலி நிலையத்துக்கு அளித்த பேட்டி. இதனைச் சென்னை, திருச்சி வானொலி நிலையங்கள் 27—7—1970 அன்று மாலை 6-15 மணிக்கு அஞ்சல் செய்தன. பேட்டி கண்டவர் திரு. அகிலன்.)

கேள்வி: பாரீஸில் நடைபெற்ற மூன்றாவது உலகத் தமிழ் மாநாட்டைத் தாங்கள் துவக்கி வைத்ததை அறிந்து மகிழ்ச்சியடைகிறோம். மாநாட்டிற்கு அங்கு வந்திருந்த பிறநாட்டுத் தமிழறிஞர்கள் காட்டும் உற்சாகம் பற்றித் தாங்கள் என்ன கருதுகிறீர்கள்? தமிழ் மொழி—இலக்கியம்—கலாச்சாரப் பண்பாடு இவை உலகத்தில் பரவுவதற்கு நல்ல வாய்ப்பிருக்கிறது என்று நம்புகிறீர்களா?

பதில்: பாரீஸில் நடைபெற்ற மூன்றாவது உலகத் தமிழ் மாநாட்டிற்கு வந்திருந்த பிறநாட்டுத் தமிழறிஞர்கள் தமிழின் பாலும், தமிழ் இலக்கியத்தின் பாலும், தமிழ்க் கலாச்சாரத்தின் பாலும் அளவுகடந்த பற்று வைத்திருக்கிறார்கள் என்பதை என்னால் நேரடியாக உணர முடிந்தது.

தமிழின் மென்மையும் வளமும் இனிமையும் எழிலும் அனைவரையும் கவரத் தக்கவை என்பதை அந்த மாநாட்டில் எதிரொலித்த ஆர்வத்தின் மூலம் நான் புரிந்து கொண்டேன்.

தாங்கள் விரும்புகிறவாறு, தமிழ்மொழி—இலக்கியம் — கலாச்சாரப் பண்பாடு இவை உலகத்தில் பரவுவதற்கு நல்ல வாய்ப்பு இருக்கிறது என்று நான் நம்புகிறேன். ஆனால் அந்த முயற்சியில் ஈடுபடுகிறவர்கள் பரந்த மனப்பான்மையோடு பணியாற்ற வேண்டுமென்பது என்னுடைய ஆசையாகும்.

வெளி நாடுகளில் வாழ்கின்ற தமிழர்கள் தமிழ் பேசவும் எழுதவும் மறந்து வருகிறார்கள். அங்கெல்லாம் தமிழ்க் கல்விப் பயிற்சிக்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

நாடுகளுக்கு நாடு மாணவர்கள் பரிமாற்றம் செய்யப்பட்டு மொழி வளரப் பாடுபட வேண்டும்.

தமிழின் வளத்தையும் தொன்மையையும் பற்றிப் புகழ்ந்து கொண்டிராமல் தமிழை விஞ்ஞான யுகத்திற்கேற்ற புது மொழியாக (Modern Language) ஆக்க வேண்டும். அதற்கு சங்க இலக்கியங்களில் உள்ள 3 லட்சம் தமிழ்ச் சொற்களோடு—மேலும் 3 லட்சம் தமிழ்ச் சொற்களை இணைத்து 6 லட்சம் சொற்கள் கொண்ட ஆங்கிலத் தமிழ் அகராதி வெளியிட வேண்டும்.

இவைகளே அந்த மாநாட்டில் நான் தெரிவித்த முக்கியக் கருத்துச்கள்.

கேள்வி: உலகத்து மொழி அறிஞர்கள், தமிழ் மீது மட்டும் இந்த ஆர்வம் கொண்டிருப்பதற்கு என்ன காரணமாக இருக்க வேண்டும்? இலங்கை மலேசியா, தென்னாப்பிரிக்கா, பர்மா போன்ற நாடுகளிலெல்லாம் தமிழ் மக்கள் வாழ்ந்து வருகிறார்கள் என்பதாலா? அல்லது மிகத் தொன்மையான இலக்கிய மொழியாகவும், அதே சமயம் இப்போது கூட வளர்ந்து வரும் மொழியாகவும் இருப்பதாலா?

பதில்: மலர்க்காட்டில் பூத்துக்குலுங்கும் எத்தனையோ எழில் மலர்களை விட்டு விட்டு, மல்லிகையின் பால் மங்கையர் மனம் நாடுவதில்லையா! அது போலத்தான் தமிழ் மீது உலக மொழி அறிஞர்கள் ஓயாத காதல் கொண்டிருக்கிறார்கள். அது வளமான மொழி மட்டுமல்ல; வளர்ந்து வரும் மொழி ; இன்னும் வளர வேண்டிய மொழி என்பதும் மற்றொரு காரணமாகும்.

தமிழ்நாடு என்பது தவிர, கடல் கடந்து பல்வேறு நாடுகளில் வாழ்ந்து வரும் தமிழ் மக்கள், தங்கள் தாய் மொழியின் மீது கொண்டுள்ள நீங்கா அன்பும் இன்னொரு காரணமாகும்.

கேள்வி: சுமார் எத்தனை நாடுகளிலிருந்து-எந்தெந்த நாடுகளிலிருந்து பிரதிநிதிகள் வந்திருந்தார்கள் என்று கூற முடியுமா?

பதில்: 39 நாடுகளிலிருந்து பிரதிநிதிகள் பங்கு கொண்டார்கள். அமெரிக்கா, சுவீடன், டென்மார்க், ஜெர்மனி, பிரான்ஸ், இங்கிலாந்து, செக்கோஸ்லோவேகியா, ஆஸ்டிரியா, தென்

[redacted]

ஒருவர்: இது என்னங்க; இந்த வீட்டுக்கு ''சீட்டு இல்லம்''னு விசித்திரமா பெயர் வைச்சிருக்காங்க?

மற்றவர்: அதுவா! தமிழக அரசு பரிசுச் சீட்டிலே லட்ச ரூபாய் பரிசு பெற்றவர் கட்டிய வீடு, இது!

'' சார்! நம்ம புத்தகம் முழுவதையும் விலைக்கு வாங்க இதோ ஆளைக் கொண்டு வந்திட்டேன்? ''

''அப்படியா? அய்யா யாரு?''

''அவரா? பழைய பேப்பர் வியாபாரி 'கபோதி மார்ட்' கருப்பையா! ''


குழந்தை எந்தக் கடையிலே?

கணவன்: (பொருட்காட்சியிலிருந்து திரும்பும்போது) வாங்கின எல்லா சாமான்களையும் ஞாபகமா எடுத்துக்கிட்டியா?

மனைவி: எல்லாத்தையும் ஞாபகமா எடுத்துக்கிட்டேன். ஆனா குழந்தையைத்தான் எந்தக் கடையிலே வைச்சிட்டு வந்தேன்னு தெரியலே!

சோம்பேறி மகனுக்குச் சுறுசுறுப்பாக இருப்பதால் ஏற்படும் நன்மையை விளக்கிக்கூற விரும்பினார், தந்தை.

" அதிகாலையிலே எழுந்துவிடும் மீன்கொத்திக்கு நிறைய மீன்கள் கிடைக்கும். அதுபோல நீயும் அதிகாலையில் எழுந்து உன் வேலையைத் துவங்கவேண்டும் " என்றார், தந்தை.

"அதிகாலையில் கண் விழித்துத்தண்ணீரில் நீந்திக்கொண்டிருந்ததால் தானே அந்தமீன்கள் மீன்கொத்திக்குப் பலியாயின " என்று தன் சோம்பேறித் தனத்திற்கு அந்த உதாரணத்தையே திருப்பிக் கூறினான், அந்த புத்திசாலி மைந்தன்.



மனைவி: உங்களுக்கு டிபன் பொட்டலத்தில் தோசை மூணு வைக்கணுமா, நாலு வைக்கட்டுமா?

கணவன் : (எங்கோ நினைவாக) ஒன்றுக்கு மேல் இப்போது வேண்டாம். இரண்டுக்குப் பின் எப்போதும் வேண்டாம்.

போலீஸ்காரர்: சைக்கிளில் ஏம்பா '' லைட் '' இல்லாமே போற....

திருடன்: இருட்டிலே இது தானுங்களே கிடைச்சது.

வேற்றுமொழிச் சொற்களைத் தமிழில் பயன் படுத்தவேண்டி வரும்போது, அவற்றைத் தமிழ்ச் சொல்லாக்கிப் பயன் படுத்தலாம். உதாரணமாக,

சட்னி என்பதைச் சட்டுன்னி—அதாவது சட்டென்று உண்ணத்தக்கது—என்றும், டுட்டோரியல் காலேஜ் என்பதனை தோற்றோரியல் கல்லூரி என்றும் பயன்படுத்தலாமே!

அமைச்சர்
இரு மா. முத்துசாமி.



1. அமெரிக்கா போகும் நங்கை
2. புலன் விசாரணை
3. அறுபதாம் கல்யாணம்
4. இங்கே எல்லாம் கிடைக்கும்

மற்றும் பல
சுவைமிகு பகுதிகள்

குறளகம்

தொலைபேசி எண்கள்: 26762-21552-21553

உங்களுக்கு வேண்டிய எல்லாமே இங்கே கிடைக்கும்

னாப்பிரிக்கா, மொரிஷியஸ், மலேசியா, இலங்கை, சிங்கப்பூர், ஜப்பான், இந்தியாவில் தமிழ்நாடு, புதுவை ஆகிய நாடுகளிலிருந்து ஏறத்தாழ 200 பிரதிநிதிகள் பாரீஸ் மாநாட்டிற்கு வந்திருந்தனர்.

கேள்வி: அந்தந்த நாடுகளில் தமிழாராய்ச்சியைத் தொடர்ந்து செய்ய ஏதேனும் அமைப்புக்கள் — நிறுவனங்கள் — அவர்களுக்கு இருக்கின்றனவா?

பதில்: சில வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்கள் தமிழ் ஆராய்ச்சிக்கான துறைகளைத் தோற்றுவித்திருக்கின்றன. வேறு சில பல்கலைக் கழகங்கள் மொழி நூல் ஆராய்ச்சிகளை மேற்கொண்டுள்ளன. அம்மொழி நூல் துறையில் ஆராயப்படு[illegible] மொழிகளில் தமிழும் ஒன்றாக விளங்குகிறது.

பென்சில்வேனியா, கலிபோர்னியா, சிகாகோ, வாஷிங்டன், மிச்சிகன், லண்டன், லெய்டன், ஸ்டாக்ஹோம், உப்சலா, ஹெய்டல்பர்க், பிராகா, பாரீஸ், மாஸ்கோ, லெனின்கிராடு, மலேசியா, இலங்கை, சிங்கப்பூர் ஆகிய பல்கலைக் கழகங்களில் தமிழ் ஆராய்ச்சித் துறைகள் செயல்படுகின்றன. ஜப்பான், பிரான்ஸ் ஆகிய இரண்டு நாடுகளும் தமிழாராய்ச்சிப் பிரிவைத் தோற்றுவிக்க உத்தேசித்துள்ளன. ரஷ்ய நாட்டிலுள்ள கீழை நாட்டுக் கல்வி நிலையத்தில் தமிழாராய்ச்சி மேற்கொள்ளப்படுகிறது.

கேள்வி: தமிழ் நாட்டுக்கு வந்து அவர்கள் தொடர்ந்து ஆராய விரும்பினாலோ, அல்லது இங்கிருந்து தமிழறிஞர்கள் அவர்கள் நாடுகளுக்கு வருவதை விரும்பினாலோ, அதற்கு உதவும் வகையில் தமிழக அரசு ஏதும் ஏற்பாடு செய்யுமா?

பதில்: சென்னையிலுள்ள அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சிக் கழகத்தில் தமிழ் ஆராய்ச்சிக்காக வெளிநாட்டிலிருந்து தமிழ் அறிஞர்கள் தமிழ் நாட்டிற்கு வருவதற்கும், தமிழ் நாட்டிலிருந்து தமிழ் அறிஞர்கள் வெளி நாடுகளுக்குச் செல்வதற்கும் ஒரு திட்டம் உள்ளது. தமிழ் ஆராய்ச்சிக்கு ஜெர்மனி, டென்மார்க், அமெரிக்கா ஆகிய நாடுகளிலிருந்து தமிழ் அறிஞர்கள் தமிழ் நாட்டிற்கு வர இருக்கின்றனர். தமிழ்நாட்டுத் தமிழறிஞர் ஒருவரைத் தமிழ் ஆராய்ச்சிக்காக டென்மார்க் நாடு தன்னுடைய நாட்டிற்கு வரும்படி அழைத்துள்ளது.

கேள்வி: தமிழ்நாட்டின் தலைநகரில் நிறுவ இருக்கும் அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சிக் கழகத்துக்கு எத்தெந்த வகைகளில் தமிழக அரசு உதவி செய்யத் திட்டமிட்டிருக்கிறது என்பதைக் கூறுவீர்களா?

பதில்: அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சிக் கழகத்தைச் சென்னையில் நிறுவக் கொள்கையளவில் தமிழக அரசு ஒத்துக்கொண்டிருக்கிறது. இந்நிறுவனத்தை அமைப்பது பற்றியும் அதற்கு வேண்டிய நிதி உதவிகள் அளிப்பது பற்றியும் தமிழக அரசு பேச்சு வார்த்தைகள் நடத்திக் கொண்டிருக்கின்றது. யுனெஸ்கோ நிறுவனம் இவ்வாராய்ச்சிக் கழகத்திற்காக ஒரு தொகை கொடுத்துதவி, இதன் அமைப்பில் பங்கு கொள்ள முன் வந்துள்ளது. இக் கழகத்தில் தமிழக அரசிற்குப் போதிய பிடிப்பு இருக்க வேண்டுமென்று கூறப்பட்டுள்ளது.

கேள்வி: பழந்தமிழ் இலக்கியம், அது பற்றிய [illegible]ராய்ச்சியோடு, மேலை நாட்டார் இந்த இருப[illegible]ம் நூற்றாண்டுப் படைப்பு இலக்கியமான சிறு[illegible]தை, நாவல், கவிதை போன்றவற்றிலும் ஆர்வம் கொண்டிருப்பார்கள். இந்தத் துறையும் வளர்ச்சி அடைய இனி வழி வகுக்கப்படுமா?

பதில்: சிறுகதை, நாவல், கவிதை, போன்றவற்றிலும் தமிழ்நாடு முன்னணியில் நிற்பதாகவே நான் கருதுகிறேன். பிறநாட்டு மொழிகளில் இத்தகைய தமிழ் நூல்கள் மொழி பெயர்க்கப்படாததாலேயே இந்தத் துறையில் தமிழகம் பின்னடைந்திருப்பது போன்ற ஒரு நிலை தோன்றுகிறது. அண்மையில் என்னுடைய சிறுகதைகளில் சிலவற்றையும், கவிதைகளில் சிலவற்றையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து மேலைநாட்டில் தந்தேன். அவைகளைப் படித்த மேலை நாட்டார் பாராட்டுதல்களைத் தெரிவித்தார்கள். ஆகவே தமிழ்நாட்டில் சிறுகதை எழுத்தாளர்கள், நாவலாசிரியர்கள், கவிஞர் பெருமக்கள் இயற்றியுள்ள நூல்களின் வழி அந்தத் துறையும் வளர்ச்சியடையப் படிப்படியாக வழி வகுக்கப்படும்.

கேள்வி: பொதுவாகத், தாங்கள் சென்று வந்த நாடுகளில் தாங்கள் கண்டு கேட்ட அனுபவங்கள் எவ்வாறு தமிழகத்தின் வளர்ச்சிக்கு உதவக்கூடும்? இது போலவே மேல் நாட்டினர் நம் கலாச்சாரத்தை எவ்வளவு தூரம் உணர்கிறார்கள்? தெரிந்து கொண்டிருக்கிறார்கள்?

பதில்: என்னுடைய மேலைநாட்டுப் பயணத்தில் வீரம் செறிந்த ரோமாபுரியின் வரலாற்றுச் சுவடுகளையும், அதன் அழிவிற்குக் காரணமான நிகழ்ச்சிகளின் நினைவுகளையும், அழிந்ததை நினைத்து ஏக்கமுறாமல் இன்று வளமுற அந்நாடு வாழ்வதையும் கண்டேன்.

குற்றாலம், உதகமண்டலம், கொடைக்கானல் ஏரியும் என் கூட வந்தனவோ என எண்ணும் விதத்தில் ஸ்விட்சர்லாந்து நாட்டில் இயற்கை வளத்தைக் கண்டேன்.

பயங்கரப் போரினால் பாதிக்கப்பட்ட மேற்கு ஜெர்மனி குறுகிய காலத்தில் அற்புதமாக வளர்ந்திருக்கின்ற காட்சிதனைக் கண்டேன்.

சாலைகள், - சோலைகள், ஆலைகள் அனைத்தும் என்னைக் கவர்ந்தன. கண்டு, கேட்ட அனுபவங்களை விட, மனதில் மொண்டு வந்த உணர்ச்சிகள் என் தமிழ் நாட்டையும் அது போல ஆக்க வேண்டும் என்ற ஆர்வத்தை எனக்கு ஊட்டிக் கொண்டேயிருக்கின்றன. மேல் நாட்டினர் நமது கலாச்சாரத்தை அதிகம் உணர்ந்திருக்கவில்லை என்றாலும், அதனைத் தெரிந்து கொள்கிற போது பெரிதும் பாராட்டுகிறார்கள். உதாரணமாக, ஜெர்மனியில் நடைபெற்ற ஒரு கலை நிகழ்ச்சியில் தமிழ் நாட்டுப் பரதக் கலை நிகழ்ச்சியும், கேரளத்துக் கதகளி நிகழ்ச்சியும் நடைபெற்றன. நானும் அழைக்கப்பட்டிருந்தேன் விழாவிற்கு. அந்த விழாவில் நமது கலாச்சாரத்தைக் கண்டு ஜெர்மானிய மக்கள் பெரிதும் வியந்தார்கள்.

சுற்றுலாக்களின் மூலம் மேலைநாடுகள் ஆண்டு தோறும் அதிக வருமானத்தை ஈட்டுகின்றன. எந்த ஒரு மண்டபமானாலும், பழைய நினைவுச் சின்னமானாலும், நவீன பூங்காக்களானாலும் அங்கெல்லாம் அயல்நாட்டைச் சேர்ந்தவர்கள் ஆயிரக்கணக்கில் சுற்றுலாப் பயணிகளாக வருகிறார்கள். சின்னஞ்சிறு நாடான ஸ்விட்சர்லாந்து ஆண்டுதோறும் சுற்றுலா மூலம் பெறுகிற வருமானமும், அமெரிக்க நாடு ஆண்டுதோறும் சுற்றுலாமூலம் பெறுகிற வருமானமும் ஒன்றாகவே இருக்கிறது என்று புள்ளிவிவரங்கள் கூறுகின்றன. தம்முடைய நாட்டிலும் சுற்றுலாப் பயணத்தை விரிவுபடுத்தவும், சுற்றுலாப் பயணிகளை நமது பண்பாட்டிற்கு ஏற்ற வகையில் கவரவும் திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும். உதாரணமாகச் சொன்னால் அந்த நாடுகளிலுள்ள இயற்கைக் காட்சிகள், பார்க்கத் தகுந்த இடங்கள் அனைத்தும் பல வண்ணங்களில் அஞ்சல் அட்டைகளில் அச்சேற்றப்படுகின்றன. அது சுற்றுலாப் பயணிகளை மெத்தவும் கவருகிறது. அந்த விளம்பரத்தை அனைத்திந்திய அளவில் கடைப்பிடிக்க வேண்டுமென்றும், அதை அஞ்சல் துறை மூலமாகவே செய்ய முயல வேண்டுமென்றும், அதனைக் குறிப்பிட்ட சில இடங்களில் மாத்திரமல்லாமல் இந்தியா முழுமைக்கும் பரவலாகச் செய்ய வேண்டுமென்றும் இந்தியப் பிரதமருக்கு நான் எழுதியுள்ளேன்.

நகரங்களை அழகுபடுத்தவும், கிராமப் புறங்களில் விவசாய வளர்ச்சிக்கான முறைகளை மேலும் பெருக்கிடவும், வீட்டு வசதிக்கான ஏற்பாடுகளை விரிவு படுத்திடவும், தொழில் வளம் பெருக்கிட மத்திய அரசோடு இன்னும் தீவிர முயற்சிகளை மேற்கொள்ளவும் இங்கிலாந்து, இத்தாலி, பிரான்ஸ், நெதர்லாந்து, சுவிட்சர்லாந்து பயணம் பயன்பட்டது. சுற்றுப் பயணத்தில் கிடைத்த அனுபவங்களை தமிழ் மக்களின் ஒத்துழைப்போடு செயல்படுத்த நானும் தமிழக அரசும் முயற்சிகளை மேற்கொள்ளுவோம்.

அரசுப் பேருந்து ஊழியர்கள் செய்த உதவி

ஐயா,

தமிழ்நாடு அரசாங்கப் பேருந்தில் எனது தாயார் 1970 ஜூலை 2-ந் தேதியன்று கோயம்புத்தூரிலிருந்து கடலூருக்குப் பயணம் புறப்பட்டார். ஜன்னல் கம்பியில் தலை சாய்த்தபடி அவர் தூங்கிக் கொண்டு சென்றார். பேருந்து, விருத்தாசலத்தை நெருங்கியபோது என் தாயாரின் வைர மூக்குத்தி கழன்று, [illegible]ப்புறத்துக்குமிடையே உள்ள இருக்கைக்கும் [illegible]சலத்தில் பேருந்து நின்ற சந்தில் விழுந்[illegible]விட்டது என்பது [illegible]ம் மற்ற போதுதான், [illegible]ர். அவருக்கு[illegible] பிரயா[illegible] மூக்கு[illegible] பேரில் இருக்கையை அகற்றி சேசிஸ் பகுதியைத் திறந்து, நீண்ட நேரம் தேடிய பிறகு நகையை எடுத்தனர். தாம் பக்தியோடு போற்றும் வைர மூக்குத்தியை, மிகுந்த சிரமத்தின் பேரில் எடுத்து என் தாயாரிடம் தந்த அந்த ஊழியர்கள் அனைவருக்குப் எவ்வாறு நன்றி செலுத்துவது என்றே தெரியவில்லை.

எஸ். பாலசுப்பிரமணியன்.

நெய்வேலி.

(நன்றி: "இந்து" 7-7-70)

உறுதியான கட்டடங்கள்: பொதுப்பணியில்-1



உறுதியையும் சிறப்பையும் இணைக்கும்

பாறை போன்று உறுதி நிலைத்திருக்கக் கூடியது
ISI மார்க்குடன் உத்தரவாதமும் உள்ளது

இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட், தன் பில்டிங், சென்னை-2
23 ஆண்டுகள் நிலைத்து [illegible]
இவைகள் தொழில் [illegible]



தமிழரசு

மலர் 1 1970 ஆகஸ்டு 1 இதழ் 4

1 AUG 1970
எழும்பூர், சென்னை

இந்த இதழில்

முதல்வர் எழுதும் தொடர் கட்டுரை
இனியவை இருபது
விடுதலைத் திருநாள்
ஒரு துப்பறியும் கதை
அறுபதாம் கல்யாணம்
அமெரிக்கா போகும் நுங்கு
எல்லாம் அவனுக்காக
ஆவணக் காவியம்
மேலே வானம் கீழே பூமி
விளக்கெண்ணெய் விமான இஞ்சினுக்கு
பிஞ்சுகளைப் பேணிக் காத்திட
ஆவணி பிறந்தது
இசைத் தேன் ஊறும் திருவையாறு
பூங்காவில் பாம்பு
தேனோ தேனோ
மற்றும்
கதை, கவிதை, கார்ட்டூன்,
வண்ணப்படங்கள், மகளிர் பகுதி
வழக்கம்போல் அனைத்தும் உண்டு

முகப்பில்..
பாரிசில் 3-ம் உலகத் தமிழ் மாநாடு
நடைபெற்ற காலேஜ் டி பிரான்ஸ்
கட்டடத்தின் வெளிப்புறத்தில்,
சாம்போலன் சிலை அருகே.

Registered No. M. 8657

7.2.72

"வாழ்வு தொடங்கும் மணமக்களுக்கு ஒரு முக்கியமான செய்தி"

-டாக்டர் நளினி கூறுகிறார்:

"இந்த நாட்டில் இன்று பல லட்சம் பேர் எதிர்கொண்டாக வேண்டிய பிரச்சினை—எளிமையோடு சொன்னால்— இதுதான்.

'குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரின் வாழ்க்கைக்குரிய அத்யாவசியங்களை வழங்கிச் சரிசெய்வது எப்படி?'. உணவு உற்பத்தியில்; உடையில்; வேலை வாய்ப்புகளில் நமக்குள்ள மிகையான வாய்ப்புகளையெல்லாம் மக்கட் தொகைப் பெருக்கத்தின் வேகம் துடைத்தழித்துக் கொண்டு வருகிறபோது நாம் பசுமைப் புரட்சியைப் பற்றி பேசுகிறோம். இந்தப் போக்கில் எந்த அரசுதான் எப்படிச் சரிக்கட்ட முடியும்?"

"இப்படி இருந்தால் நம்முடைய பிள்ளை குட்டிகளுக்கு நல்வாய்ப்புகளையும் வளமான மகிழ்ச்சியையும் வாரிவழங்குவது எப்படி; எப்போது? வளமான மகிழ்ச்சி என்பது தனி [illegible] உணர்வுகளில் தேங்க வேண்டியது. [illegible] இதை நம்முடைய திட்ட[illegible] வாழ்க்கை முறையாலும் அ[illegible]களாலுமே எதிர்பார்க்கிறது! [illegible] யர்க்கும் என்னுடைய ஆலோசனை இதுதான்:

•

"உங்கள் குடும்பத்தைத் திட்ட மிட்டுக் கொள்ளுங்கள்; மகிழ்ச்சியோடு வாழுங்கள்!"

• •

உங்கள் குழந்தை உங்களுக்கு மிக விருப்பமாக இருக்கட்டும்; இடையூறாக வேண்டாம். அதாவது எப்போது வேண்டுமென நினைக்[illegible]களோ—அதுவரையில் [illegible]றெடுத்த ஒன்றின் மீதே [illegible]கறையும் அனுசரணையும் [illegible]ட்டுங்கள்.

உங்கள் டாக்டரைக் கேளுங்கள். தமிழ்நாட்டில் இதுவரை பத்து லட்சம் பேர் குடும்பக் கட்டுப்பாடு செய்து கொண்டிருக்கிறார்கள்; அவர்களில் உங்கள் நண்பரும் இருக்கலாம்! எனவே, அவர்களிடம் ஆலோசனை கேளுங்கள். அல்லது— ஒரு குடும்பக்கட்டுப்பாடு மருத்துவ மனைக்குள்ளேனும் நுழையுங்கள்!

உங்களுக்கு இலவச ஆலோசனையும் உதவியும் புரிவதற்கென்றே அங்கு பயிற்சி பெற்ற ஊழியர்கள் காத்திருக்கிறார்கள்!

உங்கள் குடும்பத்தைத் திட்டமிடுங்கள்; மகிழ்வோடு வாழுங்கள்!

வெளியீடு: இயக்குநர், தமிழ்நாடு அரசு
செய்தி விளம்பரத்துறை, சென்னை-9

தமிழரசு

கணக்குப் பார்க்கும் நாள் !!

யும் அறியாமையையும், பேதத்தையும் பிளவையும் போக்கிடப் பயன்பட வேண்டும் என்ற உணர்ச்சியையும் பெறவேண்டும்.

கொடி ஏற்றுபவர், கோலாகல விழா நடத்துபவர், விடுதலை வீரர்களைக் கொண்டாடுபவர்—இவர்கள் மட்டும் போதுமா, அந்த இலட்சியம் நிறைவேற?

உச்சிப்போது வந்தது கண்டும் சளைக்காமல் உழுது கொண்டிருக்கிறானே உழவன், அவனும்...

பல தொழில்களிலே ஈடுபட்டுப் பொருளை உற்பத்தி செய்கிறானே பாட்டாளி, அவனும்...

சிறார்க்கும் சிறுமியர்க்கும் அறிவுக் கண்களைத் திறந்து வைத்திடும் ஆசிரியர்கள் உள்ளனரே, அவர்களும்...

நலிவு நீக்கிடத் தொண்டாற்றுகின்றனரே மருத்துவத் துறையினர், அவர்களும்...

காட்டுவெள்ளத்தை அடக்கி, நீர்வளம் கொண்டு நிலவளம் பெருக்கி, ஊர் அமைத்து, சீர் அமைத்துத் தருகின்றனரே, பொறியியல் துறையினர், அவர்களும்...

நாட்டு நிர்வாகத்திற்கான பல்வேறு துறைகளிலே பணியாற்றுகின்றனரே அலுவலர், அவர்களும்........

இவர்களின் திறமையிலும் செயலார்வத்திலும், வெற்றியிலும் இருக்கிறது, சுதந்திரத்தின் சோபிதம்—விடுதலையின் விளைவு!

நாட்டை மீட்டிட்ட நல்லோர், அதனை இன்று எவரும் பறித்திடா வண்ணம் பாதுகாத்து நின்றிடும் போர்வீரர் ஆகியோருடன், நாட்டு நிலையை உயர்த்திட நாளும் பாடுபடும் செயல்வீரர் ஆகியவர்களுக்கு வணக்கம் கூறிட, வாழ்த்து வழங்கிட, போற்றிப் பாராட்டிட ஏற்ற நாள் இத்திருநாள்!

நாடு வாழ, நம்முடைய உழைப்பும் தேவை என்ற உணர்வு எல்லோருக்கும் எழவேண்டும்.

இவனால் என்ன ஆகும், இவனோ இதற்கு ஏற்றவன், இவனுக்கு ஏது அந்த ஆற்றல்—என்று, மறந்தும், எவரைப் பற்றியும் எண்ணிடலாகாது. அந்த எண்ணம் நாட்டு வாழ்வுக்கே ஊறு செய்திடும்.

நாம் எல்லோரும் எப்படி இருக்கிறோமோ, அப்படித்தான் நாடும் இருக்கும். இது எவரும் ஒப்புக்கொள்ளக்கூடிய உண்மை. நாடு என்பது வெறும் பூகோளப்படம் அல்ல, அங்கு வாழும் மக்களின் உணர்ச்சித் தொகுப்பு.

விடுதலை பெற்றதால் நாடு நல்வாழ்வு பெற்றிருக்கிறது என்று அவனி பாராட்டும் நிலையைக் காண நாம் என்ன செய்திட வேண்டும்; நாம் தந்திடும் காணிக்கை யாது என்பது பற்றி ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டிய நாள்!

களிப்படைய மட்டுமல்ல, நண்பர்களே, இது கணக்குப் பார்க்கும் நாளுமாகும். 'நாம் சுதந்திரம் பெற்ற பிறகு, நாடு வாழ்ந்திட நாம் தந்தது என்ன, இனி என்ன தர வேண்டும், எவ்வளவு தரவேண்டும்? என்ற கணக்குப் பார்த்திடும் நாள்.

முதல் ஆகஸ்டு பதினைந்து, கணக்குத் தீர்த்த நாள்-ஏகாதிபத்தியத்துக்கும் நமக்கும் இருந்து வந்த கணக்கைத் தீர்த்த நாள், புதுக்கணக்குப் போட்ட நாள்.

இருபதாண்டுகளுக்குப் பிறகு, இன்றைய ஆகஸ்டு பதினைந்து, கணக்குப் பார்க்கும் நாள்—சுதந்திரம் பெற்றபிறகு, நமது சொல்லும் செயலும் எந்த முறையில், எந்த அளவுக்கு நமக்குச் சுகவாழ்வு பெற்றளித்தது என்ற கணக்குப் பார்க்கும் நாள்.

உமது அறிவாற்றலின் துணையுடன், பெற்ற சுதந்திரம் பேணிக் காப்பாற்றப்படும் என்ற உறுதி பெறுகின்றேன்.

சுதந்திரத்தின் பலனை நல்ல அளவுக்கு நாட்டவர் அனைவரும் பெற்றிட, உழைத்திட வாரீர் என்று அழைக்கின்றேன். மனக் கண்ணால் காணுகிறேன். உறுதி படைத்த உம்மை வாழ்த்துகின்றேன்; வணங்குகின்றேன். உமது ஒப்பற்ற ஆற்றலின் துணை கொண்டு, நாடு எத்தகைய ஏற்றம் பெறப் போகிறது என்பது பற்றி எண்ணுகின்றேன். ஒரு புன்னகைப் பூந்தோட்டத்தை என் எதிரே காணுகின்றேன். எழில் மிக்கதோர் எதிர்காலம் காண்கின்றேன். அந்தப் பொற்காலம் கண்டிட, வழி அமைத்திடும் நன்னாளே இத்திருநாள்!

(பேரறிஞர் அண்ணா வானொலிப் பே

இருபது

முதல்வர் எழுதும் பயணக் கட்டுரை

விடுதலைத் திருநாள்

“இன்று நாம் நடத்திடும் திருநாள்-சுதந்திரவிழா-இங்குள்ள நம்மால் மட்டுமல்ல, உலகெங்கும் உள்ள பல்வேறு நாட்டினராலும் போற்றப்படும் பொன்னாளாகும்.

இன்று ஆகஸ்டு பதினைந்தாம் நாள்-ஆங்கில நாட்டின் ஆதிக்கத்திலிருந்து இந்தியா விடுதலை பெற்று, சுதந்திரக் கொடியினைப் பெருமிதத்துடன் ஏற்றிடும் நன்னாள்-தன்னரசு பெற்ற நாள்-உரிமைப் போரிலே வெற்றி கண்டநாள் என்று பாராட்டுவர்: பாராட்டுகின்றனர்.

வரலாற்று ஏடுகளிலே, இந்நாள் தனிச் சிறப்பையளிக்கும் நாளாகப் பொறிக்கப்பட்டிருக்கின்றது.

இந்நாள் திருநாள்-ஐயமில்லை; இந்நாள் பொன்னாள்-மறுப்பார் இல்லை; இந்நாள் நமது உரிமையை உலகு ஒப்புக்கொண்டு விட்டது என்பதனை அறிவிக்கும் நாள்-அறிகிறோம்; அகமகிழ்ச்சி பெறுகிறோம்.

அடிமைத்தளைகளை அகற்றி, அன்னிய அரசு அகற்றி, ஆதிக்கத்தினை அகற்றி, நம்மை நாமே ஆண்டுகொள்ளும் உரிமை பெற்றிட எவரெவர் என்னென்ன முறையில் தொண்டாற்றினர்; எத்தகைய இன்னல்களையும் இழப்புக்களையும் ஏற்றனர்; இன்னுயிர் ஈந்தனர் என்பது பற்றிய நினைவு நெஞ்சத்தில் நிரம்பி, அம் மாவீரர்கட்கு வீரவணக்கம் செலுத்திடவேண்டும் என்ற உணர்ச்சியைத் தருவதுடன், அத்தகைய வீரர்கள் வழி வழி வந்தோர் நாம் என்ற எழுச்சிமிக்க உணர்வைக் கொடுத்திடும் நாள், இந்த ஆகஸ்டு பதினைந்து.

'இழந்த அரசையாவது, இவர்கள் மீட்பதாவது-இவர்களுக்கு ஏது அதற்கான ஆற்றல்-இவர்களாவது ஒன்றுபட்டு நம்மை எதிர்ப்பதாவது' என்று ஏகாதிபத்தியவாதிகள் எக்காளமிட்டனர். வேட்டுக் கேட்டதும் விடுதலை வீரர்கள் மிரண்டோடுவர்; சிறை என்றதும் சிந்தை குழம்புவர் என்று எண்ணினர்.

ஆனால் வீரக்கனல் கொழுந்துவிட்டு எரிந்தது. உரிமைக் கிளர்ச்சி புயலாக வடிவமெடுத்தது. கூனிக்கிடந்தோன் நிமிர்ந்து நின்றான்! விழி பழுதாகிக் கிடந்தவனுக்கும் கண்களிலே ஒரு புத்தொளி கிளம்பிற்று. அச்சம் அழிந்தது. ஆணவபுரியினர், ஒரு புதிய நாடு எழுந்து நிற்பதனைக் கண்டனர்.

''எதற்கும் அஞ்சப் போவதில்லை, எதிர்த்துத் தாக்கப்போவதில்லை, எம்மை வாட்டி வதைத்திடினும் தாங்கிக்கொள்வோம், எமது நாடு எமக்கே, எமது அரசு எமக்காதல் வேண்டும் என்ற முழக்கம், எம்மை அடக்க வரும் பீரங்கிச் சத்தத்தையும் அடக்கிடும்'' என்று வீரர் கூறினர்—'இதுவா இந்தியா?'' என்று ஆங்கிலர் கேட்டனர்.

'ஆம். இது விழிப்புற்ற இந்தியா, வீறு கொண்டு எழுந்துவிட்ட இந்தியா, விடுதலையைப்பெற்றிட எந்த விலையையும் தந்திடத் துணிந்து நிற்கும் தாய்மை நிறைந்த நாடு' என்று உலக உத்தமர் காந்தியார் உரைத்தார்; இந்நாள், அவர் அந்நாளில் காட்டிய அறநெறியால் கிடைத்த திருநாளாகும்.

இந்நாள், நமக்கெல்லாம் அந்நாள் நிகழ்ச்சிகளை நினைவிலே கொண்டு வந்து பாடம் கற்பித்திடும் நாளாகும். இந்நாள் வந்திடின், நாடு என்னென்ன வண்ணம் பெற்றிடும், ஏற்றம் பெற்றிடும் என்றெல்லாம் விடுதலை வீரர்கள் அன்று எண்ணினர் என்பதனை இன்று எண்ணிப் பார்த்திடல் வேண்டும்.

வந்தது சுதந்திரம். வாழ்கின்றோம்—நம்மை நாமே ஆள்கின்றோம் என்ற உரிமையுடன். ஆனால், ''வாழ்கின்றோமா?'' நம்மை நாமே கேட்டுக்கொள்ள வேண்டிய கேள்வி இது. வாழ்கின்றோமா?

வாழ்கின்றோம் என்பதற்கும், இருக்கின்றோம் என்பதற்கும், பொருள் வேறுபாடு மிகுதி... நம்மிலே மிகப் பெரும்பாலோர் இன்று, 'ஏதோ இருக்கின்றோம்' என்று கூறிடும் நிலையிலே உள்ளோம்; 'வாழ்கின்றோம்' என்று மகிழ்ச்சியுடன் கூறிக்கொள்ளும் நிலையில் அல்ல.

பட்டொளி வீசிப் பறந்திடும் சுதந்திரக் கொடியினைக் காணுகின்றோம், இன்னிசை கேட்கின்றோம். அணிவகுப்புக்கள் நடத்துகின்றோம். அவனிக்கு அறிவிக்கின்றோம் —இது எமது சுதந்திரநாள் என்று. ஆனால் வாழ்கின்றோமா...? வாழ்வு நல்வாழ்வாக, புது வாழ்வாக, முழு வாழ்வாக மலர்ந்திருக்கிறதா?

கணக்குத் தீர்த்த நாள்!

ஏழ்மையும் அறியாமையும் ஒழிந்த நிலையே, வாழ்கின்றோம் என்று கூறிட நாம் உரிமை பெறும் நாளாகும்.

இல்லாமையும் போதாமையும் ஒழிந்த நாளே, நாம் வாழ்வு பெற்றிடும் புதுநாளாகும்.

பேதமும் பிளவும் நீங்கி எல்லோரும் ஒன்று என்ற நிலை பிறந்திடும் நாளே, வாழ்விலோர் திருநாள். பிறரைத் தாழ்த்தாமல், பிறர் தாள் விழாமல்; சுரண்டாமல், சுரண்டப்படாமல்; உழைத்து, உழைப்பின் பயனைப் பெற்று; புன்னகை பூத்திடும் முகத்தினராகிடும் நாளே, நாம் வாழ்கின்றோம் என்று கூறிடும் நிலையினை நமக்கு அளித்திட முடியும்.

இந்நிலையை நாம் அடையும் வரையில், 'இருக்கின்றோம்' என்று மட்டுமே கூறிக்கொள்ள முடியும்; 'வாழ்கின்றோம்' என்று கூறிக்கொள்ளும் உரிமை நமக்கு இல்லை.

விடுதலை பெற்ற நாடுகள், வாழ்வது மட்டுமல்ல, பிற நாடுகளை வாழவைக்கவும் வல்லமையும் வசதியும் பெற்றுள்ளன. காணுகின்றோம் நாம். வாழ்வின் இலக்கணத்தை நாடி நடை போடுகின்றோம்.

ஆகஸ்டு பதினைந்து என்னும் விடுதலைத் திருநாள் மகிழ்ச்சி, எழுச்சி, வீர உணர்ச்சி ஆகியவைகளைத் துவக்கத்தில் தந்திட உதவிற்று. ஆண்டு இருபதைக் கடந்து விட்டோம். இன்றைய ஆகஸ்டு பதினைந்து, நமக்குப் பொறுப்புணர்ச்சிகளைத் தந்திடும் நாளாகிறது. ''சுயராஜ்யம் பெற்றிடுவோம், சுயராஜ்யம் அமைத்திடுவோம்'' என்று அன்று உரைத்தோமே, அதற்கான முயற்சியிலே முனைந்து நிற்கிறோமா, யாது செய்திடின் அந்த இலட்சியத்தை அடைய முடியும்—என்பது பற்றி எண்ணிச் செயலாற்றிடும் பொறுப்புணர்ச்சியைத் தந்திடும் நாள், இன்றைய ஆகஸ்டு பதினைந்து.

ஆண்டுக்காண்டு விழா நடத்துகின்றோம் விருத்தம் பாடுகின்றோம்; வள்ளுவர் தந்த நாடு காண்பதில் வெற்றிபெற்றோமா? இது இன்றுள்ள கேள்

விழா மகிழ்ச்சியைக்கெடுத்துவிடுமோ என் அஞ்சி, இந்தக் கேள்வியினை எழுப்பா விட்டுவிடுவது மிகமிகத் தவறு.

ஆயாசப்படவோ, சலிப்படையவோ, ம உடையவோ அல்ல, இந்தக் கேள்வியை எழு வேண்டும் என்று நான் கூறுவது. மேலு செம்மையாகச் செயலாற்றும் உணர்வு பெ இந்தக் கேள்வி தேவை.

இயற்கை கொஞ்சுகிறது. இல்லா கொட்டுகிறது—மறுப்பதற்கில்லை.

வளம் பெருகுகிறது. சிறு சிறு வ குள்ளே புகுந்துகொண்டு விடுகிறது-மறைப் தற்கில்லை.

மக்கள் தொகை பெருகுகிறது. நலி நெளிகிறது-ஒப்புக்கொண்டாக வேண்டும்

இந்நாள், நாட்டின் நிலையை நாம் அறி திடல் வேண்டும். சுதந்திரத் திருநாள் த திடும் மகிழ்ச்சியுடன், விழிப்புணர்ச்சியு இழைந்திட வேண்டும். அப்போதுதான் எதற்காகச் சுதந்திரம் பெற்றளித்தனரோ, பெரியோர்கள், அந்த நல்ல நிலையினை நா பெற்றிடும்; சுதந்திரத்தின் கனிச்சுவை கிடைத்திடும்.

''பாலைவனம் சோலைவனம் ஆகவேண்டும், அங்கு பசுங்கிளிகள் பாடிடவும் வேண்டும்''—இது வெறும் கவிதையாகவே என்றென்றும் இருந்திடக் கூறப்பட்டது அல்ல. செயல்படுத்திக் காட்ட முடியும் என்ற உறுதியை நாம் அனைவரும் பெற்றிடத் தரப்பட்டதே இவைபோன்ற கவிதைகள்.

மிகப்பெரிய ஏகாதிபத்தியத்தின் பிடியிலிருந்து விடுதலை பெற்றிட முடிந்தது, அதற்கான ஆற்றல் நம்மிடம் இருந்திருக்கிறது. அதே ஆற்றல், இந்நாட்டிலுள்ள ஏழ்மையை



வாம் என்று கேட்டேன். காலை மணிக்கு என்றார்கள். பரவாயில்லை; நாலு மணி நேரம் பயணம்தானே என்று கூறினேன். இல்லை! இல்லை! ரோம் நேரத்துக்கு ஆறுமணி—இந்திய நேரத்திற்குப் பத்தரை மணி என்றார்கள். அதாவது சுமார் ஒன்பது மணி நேரப் பயணம். விமானத்தில் ஏறிய சில நிமிடங்களுக்கு எல்லாம் வான் நோக்கிக் கிளம்பி விட்டோம். அழகிய கண்ணாடிக் கிண்ணங்களில் உயர் ரக மதுவினை நிரப்பி, விமானப் பணிப் பெண்கள் எங்களிடம் நீட்டினார்கள். நாங்கள் வேண்டாமென்று மறுத்ததைச் சற்று வியப்புடன் பார்த்துவிட்டுப், பிறகு ஆரஞ்சுப் பழ ரசம் அளித்தார்கள். அனைத்துலக நாடுகளில் பயணம் செய்யும் விமானங்களில் நமது இந்திய விமானங்களுக்கும், அவைகளின் பணிகளுக்கும் சிறப்பு மிகுந்த இடமுண்டு என்பதை நான் மேல் நாடுகளில் கேள்விப்பட்டு மகிழ்ச்சியுற்றேன் எனினும், நேரடியாகவே அதனைக் காணும் வாய்ப்பினைப் பெற்று இந்திய விமான நிறுவனம் பற்றிய நன்மதிப்பை என் உள்ளத்தில் உருவாக்கிக் கொண்டேன். நாங்கள் காலை 6 மணிக்கெல்லாம் காணப்போகிற அந்தப் பெருமை மிகு நகரைப் பற்றிய சிந்தனைகள் நெஞ்சில் அடுக்கடுக்காக எழத்தொடங்கின.

ரோமாபுரி! இத்தாலிநாட்டின் எழில் மிகு தலைநகரம்! இத்தாலியின் தலைநகரம் என்ற நிலையில் ரோமாபுரி தன்னுடைய நூற்றாண்டுவிழாவை 1964ஆம்ஆண்டு செப்டம்பர் திங்கள் இருபதாம் நாள் வெகு சிறப்பாகக் கொண்டாடியது. அதற்கு முன்பு இத்தாலியின் தலைநகரமாக 'பிளாரன்ஸ்' இருந்தது. பிளாரன்சிலிருந்து ரோமுக்கு 1871ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் முதல் நாள் தலைநகர் மாற்றப்பட்டது: அந்தத் தலைநகரைக் காண நானும் ஜூலைத் திங்கள் முதல் நாளில் தான் சென்னைத் தலைநகரை விட்டுக் கிளம்பியிருக்கிறேன்.

ரோம் நகரம் நிர்மாணிக்கப்பட்டு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாகின்றன. நகரின் எல்லை போலவும், பாதுகாப்பு அகழ் போலவும் ஓடிக்கொண்டிருக்கும் டைபர் நதியின் கரையில் நின்றுகொண்டு எதிரிகளிடம் இருந்து ரோம் நகரத்தைக் காப்பாற்றிய போர் வீரன் ஒருவனை ரோமானிய மக்கள் என்றைக்குமே மறக்க முடியாது.

ஒரேஷியஸ் என்பது அந்த ஒப்பற்ற மகாவீரனின் பெயராகும். ரோமாபுரியில் அரசன் இல்லாமல் கான்சல் என்னும் ஆட்சித் தலைவரின் கீழ் பரிபாலனம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. ரோமாபுரியை ஆண்டுவந்த லூசியஸ் என்ற மன்னன் கொடுங்கோலன். அவனைவிட அவன் மகன் செக்ஸ்டஸ் என்பான் மிகக்கொடியோன். மிருகம் அனையோன். அவன் லக்ரீஷியா எனும் மங்கை நல்லாள் ஒருத்தியை மானபங்கம் செய்துவிட்டான் என்பதற்காக அந்தப் பொற்புடைப் பூவை தன்உயிரை மாய்த்துக் கொண்டாள். அந்த இளவரசனைப் பழி வாங்கவேண்டுமென்று சாகும் தறுவாயில் தன் கணவனிடமும், தாய் தந்தையரிடமும் அவள் விடுத்த வேண்டுகோள் ரோமாபுரி மக்களை உணர்ச்சி எரிமலைகளாக மாற்றியது. ரோம் நகரமே திரண்டெழுந்து மமதை பிடித்த மன்னனையும், வெறி கொண்ட அவன் மைந்தனையும் ஊரை விட்டே விரட்டியது.

பதவி இழந்தவர்கள் சும்மாயிருப்பார்களா? சிலபேர் இருப்பார்கள்; போனால் போகட்டும் போடா என்று எண்ணியவாறு! வேறு சிலரோ, எப்படியாவது இழந்த பதவியைப் பெற யார் காலிலாவது விழுந்து அபயம் கேட்பதைத் தங்கள் பதவி வெறியின் அடையாளமாகக் கொண்டிருப்பார்கள். அந்தப்பட்டியலில் முதலிடம் வகித்த லூசியஸ் மன்னனும், அவன் குமரான் கொடியோன் செக்ஸ்டசும் இத்தாலி நாட்டில் குளூசியம் என்ற நகரத்தின் மன்னன் பார்சினா என்பவனின் படைபலத்தை நாடினர். பழைய அரசனுக்குப் பட்டம் கட்டவும், ரோம் மக்களைப் பழி வாங்கவும் பார்சினா வேந்தன் லட்சம் படை வீரர்களோடு ரோம் நகர் நோக்கிப் புறப்பட்டான். அவனது படை வரும் வழியில் நாசமாக்கப்பட்ட நகரங்கள் பல! அழிக்கப்பட்ட சிற்றூர்கள் நூற்றுக் கணக்கில்! எரிக்கப்பட்ட தானியக் கிடங்குகள் ஏராளம்! ரோம் நகருக்குள் நுழைய ஒரு வழி தான்! அது தான் டைபர் நதியின் குறுக்கே மரத்தினால் அமைக்கப்பட்டிருந்த வலிவான ஒரு பாலம். பாலத்தின் ஒரு முனையில் நகருக்கு
யிலேயே ஒரேஷியஸ்
வாளுடனும், உடன் இரு
பர்களான லார்ஷியஸ்,
மீனியஸ் ஆகியோரு
ரிகளை எதிர்பார்த்து
தான். முழங்கும் இடிபோ
யெனப் போர்முரசு ஒலி
பளபளக்கும் வாளேந்திப் பா

ரும் குதிரைகளில் லட்சம் பேர் ராமாபுரியை நோக்கி வந்தார்ள் எனினும், உருவிய போர்வாநடன் உயிரைத் திரணமாக தித்து நின்ற மூன்று மாவீரர்ளையும் கண்டு அவர்கள் மலைத்துப்போயினர். பாலத்தைக் டப்பதற்கு முனைந்தவர்களின் தலைகள் பனங் குலைகளைப் போல் றுத்துத் தள்ளப்பட்டன. திரை மீதிருந்தவாறே பாலத்தைக் கடக்க எண்ணியவர்களின் குதிரைக் கால்கள் துண்டிக்கப்பட்டன. இறங்கிவந்து ஒரேஷியசுடன் போரிட்டவர்களின் உயிர்கள் ஓர் நொடிக்குள் பறந்து போயின.

ஆஸ்தர் எனும் ஆற்றல் மிகு வீரன் ஒருவன் எதிரிப்படையின் தளநாயகன். அவன் குதிரை விட்டுக் கீழிறங்கி ஒரேஷியசைத் தாக்கினான். கடும் போரில் ஒரேஷியசின் காலில் பெருத்த காயம் ஏற்பட்டது. குருதிவெள்ளம் பெருக்கெடுக்க ஒரேஷியஸ் ஆஸ்தரை பலங்கொண்ட மட்டும் தாக்கினான். ஆஸ்தரின் மண்டை பிளந்தது. இதற்கிடையே ரோம் நகர மக்கள், பாலத்தைத் தகர்த்து விட்டால் பகைவர்கள் டைபர் நதியைக் கடந்து உள்ளே வரமுடியாது என்று தீர்மானித்து தங்கள் பலமனைத்தையும் திரட்டிப் பாலத்தை உடைத்தெறிந்தனர். பாலம் டைபர் நதிக்குள்ளே வீழ்வதற்குள்ளாக ஒரேஷியசின் நண்பர்கள் இருவரும் பாலத்தின் வழி ஓடி டைபரின் அப்புறக் கரைக்குச் சென்றுவிட்டனர். ஆனால் ஒரேஷியசோ எதிரிகளுடன் போராடிய வேகத்தில் பின் நோக்கிப் பார்க்கத் தவறி விட்டான். ''ஓடிவா! ஓடிவா!! ஒரேஷியஸ்!'' என்று ரோம் நகர மக்கள் போட்ட கூச்சலைக் கேட்டு அவன் திரும்பினான் எனினும், அதற்குள் பாலம் இடிந்து நொறுங்கி டைபர் நதியில் மூழ்கிப் போய்விட்டது. தனியாகச் சிக்கிக் கொண்ட அந்தத் தடந்தோள் வீரனை பார்சீனா மன்னனின் வீரர்கள் சூழ்ந்து கொண்டனர். ஒரேஷியஸ், டைபர் நதியைப் பார்த்து உரக்கக் கூவினான்.

'' ஏ, எனது அன்பு டைபர் நதியே! என் தாய் போன்றவளே!! ரோமானியர் நாள் தோறும் உன்னை வணங்கி வழிபடுகின்றனர். இதோ இந்த ரோமானியனின் உடலை உன் மடியில் தாங்கிக்கொள்! என் உயிரையும் என் உயிரினுமினிய இந்தப் போர்க் கருவிகளையும் ஏற்றுக்கொள்!''

என்றவாறு அவன் டைபர் நதியில் குதித்து விட்டான். அய்யோ என அலறினர் ஆற்றோரம் நின்ற ரோமாபுரி மக்கள்! அப்பாடா தொலைந்தான் எனப் பூரித்தனர் அக்கரையில் நின்ற பகைவர்கள்! ஆனால் ஆற்றில் விழுந்த அந்த இளஞ்சிங்கம் சிறிது நேரத்திற்கெல்லாம் இன்னொரு கரையில் உயிரோடு வந்து ஏறிவிட்ட அதிசயத்தை அனைவரும் கண்டனர். அவனைத் தூக்கி ஆடிப்பாடி மகிழ்ந்தனர். எதிரிகள் இனி ஏதும் செய்ய இயலாதென ஏமாந்து போயினர். ''ஒரேஷியஸ் வாழ்க! வாழ்க!!'' என இனிய கீதங்களைப் பாடி மகிழ்ந்தனர் ரோம் நாட்டு மக்கள். அந்த வெற்றி வீரனின் தீரச் செயலைப் பாராட்டாதார் இல்லை.

லட்சம் வீரர்களைக் கொண்ட பெரும் படையெடுப்பைத் தன்னுடைய வாள் முனையினால் விரட்டிக் காட்டி, ரோம் நகரத்தைக் காப்பாற்றிய அந்த வரி வேங்கைக்கு நகரின் நடுவிலே சிலை வடித்து வைத்தார்கள். அவனுக்கு அளவற்ற நிலங்களும், செல்வமும் ரோம் மக்களின் அன்புப் பரிசாக வழங்கப்பட்டன. அந்தக் காலந்தொட்டு, ரோமானியப் பெண்கள் தங்களுக்குப் பிறக்கும் ஆண்குழந்தைகள் ஒரேஷியைப் போல இருக்கவேண்டுமென்று ஆண்டவனிடம் வரம் கேட்பார்களாம். அத்தகைய ஆண்புலி தன்னந்தனியாக நின்று போரிட்ட களத்தைக் காணப் போகிறோம் என்பதிலும், அந்தப் போரின் போது சிந்திய ரத்தத்

துளிகளைத் தன் வெள்ளத்தோடு இணைத்துக்கொண்டு ஆவேசமாக ஓடிக்கொண்டிருந்த டைபர் நதியைப் பார்க்கப் போகிறோம் என்பதிலும் எனக்கு எவ்வளவு துடிதுடிப்பு இருந்திருக்கும். இந்த ஒரு வீரனின் அரிய சாகசத்தோடு முடிந்து விடுவதா ரோம் நாட்டு வீர வரலாற்று ஏடு? வீரர்கள் மட்டுமா?

ஓவிய விற்பன்னர்கள்!

சிற்பக் கலைஞர்கள்!

சிந்தனைச்செல்வர்கள்!

சிருங்கார ரசிகர்கள்!

அனைத்துக்கும் பேர் பெற்ற

பூமியன்றோ ரோமாபுரி!

பொழுது விடிவது போல் தோன்றும்! ரோம் வரப்போகிறது என்று எண்ணிக்கொள்வேன். அதற்குச் சிலமணித்துளிகளுக்குப் பிறகு மீண்டும் இருட்டாக இருக்கும். பம்பாயிலிருந்து ரோம் போவதற்குள் பல இடங்களில் பொழுது விடிகிறது. நான் என் கடிகாரத்தில் இந்திய நேரத்தை மாற்றவே இல்லை. இருபதுநாள் சுற்றுப் பயணத்திலும் நான் அதனை மாற்றவே இல்லை. அயல் நாட்டு ஊர்களின் மணி தெரிந்து கொள்ளப் பக்கத்தில் இருப்பவர்களைக் கேட்டுக்கொள்வேன். இந்நேரம் சென்னையில் என்ன செய்துகொண்டிருப்பார்கள்; தூங்குவார்களா? சாப்பிடுவார்களா ? என்பதை யூகித்துக் கொள்ள என் கடிகாரத்து இந்திய நேரம் பயன்பட்டது.





மத்தியதரைக் கடலுக்குள் வடமேற்கிலிருந்து தென்கிழக்கு வரையில் சுமார் 725 மைல் தொலைவுக்குப் பரவியுள்ள இத்தாலி நாட்டின் அகலம் ஆங்காங்கு வேறுபடுகிறது. விமானத்தில் செல்லும்போதே இத்தாலியை ஒரு தீபகற்ப நாடாகக் கடல் ஆக்கியிருக்கிற காட்சியை நம்மால் கற்பனை செய்துபார்க்க முடிகிறது.

என் கடிகாரத்தில் மணி பத்தரை காட்டியது. அப்போது விமானப் பெண்ணின் மெ குரல் கேட்கத் தொடங் ''ரோம் நகரை நெருங்கிக்கொ டிருக்கிறோம். இன்னும் சில டங்களில் விமானம் நிலத் இறங்கும்.'' அந்தக் குர கேட்டதும் உள்ளத்தில்தா எத்தனை ஆர்வம்! முதன் லாக வெளி நாட்டு மண் கால் வைக்கப் போகிறோம் எ பதில்தான் எவ்வளவு பரபரப்

இந்திய விமானத்திற்கு டக்க உணர்ச்சியோடு விமான பூமியில் இறங்கியது. சரித்திர கதாநாயகர்கள் உலவிய வீர மணக்கும் மண்ணை வணங் போகிறோம் என்ற ஆவலோ விமானத்தை விட்டுக்கீழே இற கினோம்!

(தொடரும்)

இசைத்தேன் ஊறும் திருவையாறு

தஞ்சை மண்ணுக்குத் தனிச் சிறப்பு பல உண்டு. மண்ணும், விண்ணோடு இணைந்த பரதமும் பிறந்த இடம் அதுவன்றோ! பல இசை மேதைகளைக், கலை விற்பன்னர்களை உருவாக்கிப் பெரும் புகழ் பேணிய இத் தலமும், அதுதான்!

காணுமிடமெல்லாம், கலையின் திருவுருவாம். கோயில்கள் சோழ மன்னர்களின் இறவாப் புகழினை உலகிற்குப் பறை சாற்றியபடி விண்ணுயர்ந்து நிற்கின்றன.

மங்கையரின் கூந்தலினை அணி விக்கும் மலர்த்தொத்தின் பின்னல் முதல், தெருவிலே விளையாடும் சிறுவனின் தேர் போன்ற கை வண்டி வரை அத்தனை பொருட்களிலும் இன்றும் கலை வண்ணம் மிளிர்கின்றன!

அதோ! வற்றாத வளம் பெருக்கும் காவிரி ஆறு! திருவையாற்றைத் தொட்டுக் கொண்டு ஓடும் காவிரியின் 'சல சல'வென்ற இனிய பண்ணோடு, தென்றலிலே மிதந்து வந்து இணைகிறது வீணைகானம்! கல்யாணி ராகத்தில், தவிலின் தாளத்தோடு, நாதசுர இசை தேனாக வந்து செவியை நனைக்கிறது.

இவ்வாறு காவிரியும், கலையும் கலக்குமிடம் தான், திருவையாற்றில் உள்ள அரசர் இசைக் கல்லூரி. அதையொட்டியுள்ளது தவில் நாதசுரப் பயிற்சிப் பள்ளி!

மன்னர்கள் காலத்தில் சமஸ்கிருதப் பள்ளி இருந்த இந்த இடத்தில் இப்போது இசை இன்பம் வழங்கப்படுகிறது.

அரண்மனை போன்ற பெருந் தூண்களை உடைய மண்டபங்கள் நிறைந்த இந்தக் கல்லூரியில் தற்போது வீணையும், வாய்ப்பாட்டும் கற்றுத்தரப் படுகின்றன.

நான்காண்டுப் படிப்பான இதில், முதலில் இரண்டாண்டு முடிவிலும், பிறகு நான்காவது ஆண்டு முடிவிலும் பல்கலைக் கழகத் தேர்வு நடத்தப் படுகிறது. இதில் தேர்ச்சியடை பவர்களுக்கு "சங்கீத சிரோன் மணி" என்ற பட்டம் வழங்கப் படுகிறது. இது இசையைப் பொறுத்தவரையில் பட்ட மேல் படிப்புப் போன்றது. இதைப் படித்துத் தேறுகிறவர் கல்லூரியில் இசை விரிவுரையாளராகத் தகுதி பெறுகிறார்.

எஸ்.எஸ்.எல்.சி. படித்துத் தேறிய பெண்கள் மட்டும் இதில் சேர்க்கப்படுகின்றனர். தற்போது 34 பெண்கள் இசை பயில்கின்றனர். திருச்சி, நெல்லை, திண்டுக்கல், மதுரை, திருவில்லிபுத்தூர் போன்ற மாநிலத்தின் பல பகுதிகளிலிருந்தும் இசையார்வமுள்ள மாணவிகள் இங்கு வந்து பயிலுகின்றனர். அவர்களுக்காக விடுதி (ஹாஸ்டல்)யும் இங்கு உள்ளது. படிப்பிற்கோ, விடுதிக்கோ எந்த விதக் கட்டணமும் கிடையாது!! இதற்கான எல்லாச் செலவுகளையும் சரபோஜி மன்னர் அறக்கட்டளை (டிரஸ்ட்) ஏற்றுக் கொள்கிறது.

1965-ம் ஆண்டில் துவக்கப் பட்ட இந்த இசைக் கல்லூரியின் முதல் இரண்டாண்டு மாணவிகளும் பட்டம் பெற்று வெளியேறிவிட்டனர். முதல் ஆண்டு மாணவிகள் இருவரும் (வாய்ப்பாட்டில் பட்டம் பெற்றவர்கள்), ஒருவர் மதுரையிலும், மற்றவர் கும்பகோணத்திலும் இசை ஆசிரியைகளாகப் பணியாற்றுகிறார்கள். அடுத்த பிரிவு மாணவிகள் ஒன்பது பேர் இப்போது தான் பட்டம் பெற்று வெளியேறியுள்ளனர்.

தம்புராவை மீட்டியபடி ஆசிரியர் பயிற்றுவிக்க, மாணவியர் ஒரு சேர ராகத்தோடு பாடுவதைக் கேட்பவருக்குச் செவிக்கு உணவு கிடைத்த நிறைவு ஏற்படும்.

வீணையை மீட்டியபடி மயில் போல் அமர்ந்திருக்கும் மங்கையர் கூட்டத்தில், கட்டாயம் ஒரு வீணை விற்பன்னர், ஒரு தனம்மாள் தோன்றுவார் என்ற நம்பிக்கை அவர்களது இசை பாடிடும் நயங்களில் ஒளிர்கிறது.

[illegible] வழும் [illegible] வன் [illegible] டைகள் [illegible] பெண்களுக்கு [illegible]த் தூய வெள்ளை [illegible]ணிந்த இரு [illegible] பெண்டிர், [illegible] நிறைந்தவ சகோ[illegible]ரும் உள்ளனர்.

சகோதரி ரீட்டா, சகோதரி எஸ்தர் இருவரும் தஞ்சாவூர், [illegible]ித இதயப் பள்ளியைச் சேர்ந்தவர்கள். [illegible]மலுட்டு இசை தெரிந்துள்ள அவர்கள், கர்நாடக இசையின் பால்கொண்ட தணியாத ஆர்வம் காரணமாக இங்கு சேர்ந்துள்ளனர். ''கச்சேரி செய்வதற்காக அல்ல! கடவுள் வழிபாட்டுக்காக இந்த இசையைப் பயன்படுத்துவோம்'' என்று அவர்கள் தெரிவித்தனர். ஆம்! மொழி, மதம், நாடு எல்லாவற்றையும் கடந்தது அல்லவா, இசை!

இப்படிப்பட்ட இனிய இசை தவழும் இடத்திலே ஏதோ ஒரு சோகக் களையும் தெரிந்தது. அதன் காரணத்தை விசாரித்ததில், அங்கு முதல்வராகப் பணியாற்றி வந்த இசைப் பேரறிஞர் திருவாரூர் டி. வி. நமசிவாயம் அவர்கள் அண்மையில் தமது இளம் வயதிலே மறைந்த நிகழ்ச்சிதான், இசைபயிலும் மாணவியரின் உள்ளங்களிலும், ஆசிரியர்களின் மனத்திலும் நீங்காத சோகத்தை ஏற்படுத்தியிருந்ததாகத் தெரிந்தது.

சிறுவனாக இருக்கும்போதே மேடை ஏறிப்பாடும் ஆற்றலும், ஆர்வமும் உள்ளவரும், திரைப்படங்கள், நாடகங்கள் ஆகியவற்றில் பாடி நடித்துப் புகழ் பெற்றவருமான அந்த இசைப் பேரறிஞரின் மறைவு அந்த இசைக் கல்லூரிக்கு மட்டுமன்றி இசை உலகிற்கே பேரிழப்பாகும்.

இசைக் கல்லூரியை அடுத்து உள்ளது ''தவில்-நாதசுரப் பயிற்சிப் பள்ளி''. மூன்றாண்டுகளுக்கு முன் தோன்றிய இந்தப் பள்ளியில் இருபது மாணவர்கள் பயிலுகின்றனர். பத்துப் பேர் நாதசுரம் பயில்கின்றனர். பத்துப்பேர் தவிலில் பயிற்சி பெறுகின்றனர்.

மூன்றாண்டுப் பயிற்சியான இதற்கும் பாரதத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் மாணவர்கள் வந்து சேர்ந்துள்ளனர். அனைவருக்கும் படிப்பு, தங்குமிடம், உணவு அனைத்தும் இலவசமாக வழங்கப்படுகின்றன.

இங்கு படித்து வெளியேறியுள்ள முதல் பிரிவு மாணவர்கள் 12 பேர். இன்று கோவில் திருவிழாக்களிலும், திருமண வைபவங்களிலும், அவர்களது நாதசுரம் இன்னிசை வழங்குகிறது.

பால் வடியும் முகத்துடன் நாதசுரத்தைக் கூடத் தூக்க முடியாமல் தூக்கிக்கொண்டு ஆர்வத்தோடு இசைக்கும் சிறுவனைப் பார்க்கும்போது, ஒரு திருவாவடுதுறையோ, ஒரு காருகுறிச்சியோ விரைவில் இந்தத் தஞ்சை மண் இசையுலகுக்கு வழங்கும் என்ற நம்பிக்கை எவர்க்கும் ஏற்படுகின்றது.

கோழையாக வாழ்வதைக் காட்டிலும், போராடிச் சாவதே மேலானது. தேசிய அகராதியில் கோழைத்தனம் என்ற சொல்லுக்கு இடமே இல்லை.

குறைபாடுகள் எனக்கு அதைரியத்தை உண்டாக்காது. அதற்குப் பதிலாக அவை என்னைப் பரிசுத்தப் படுத்தும்.

பலாத்காரத்தை அகிம்சை ஒன்றினால்தான் வெல்ல முடியும். இது பல்லாண்டுகளாகப் பெரியோர்களால் ஒப்புக் கொள்ளப்பட்டுவிட்ட உண்மையாகும்.

விடுதலை நாள் விழா

கவிஞர் எஸ்.டி.சுந்தரம்

தாரணிக்கே ஒரு காந்திமகான்—அவர்
தலைமையில் பெற்ற விடுதலையைப்
பூரணமாயினிப் போற்றியே காப்பது
புத்தியில் வல்லவர் தம் கடமை !

அண்ணா போற்றிய வீர சுதந்திரம்
அற்புதமான சரித்திரமாம்
கண்ணாய் எண்ணி நிரந்தரமாய்—இதைக்
காத்தருள் செய்வது நம் கடமை !

காலங்கருதிய ஞானியரும்—தவ
சீலம் பெருகிய மேதைகளும்
ஞாலங் கருதிடும் அன்னையரும்— உயிர்
தந்த விடுதலை காத்திடுவோம்.

செங்களத்தில் மாண்ட தியாக பரம்பரை
சேமித்த வீர விடுதலையைத்
தங்கள் சுயநலச் சந்தையிலே—சிலர்
தருமத்தையே விலை பேசுகிறார்.

மானத்தின் செல்வ விடுதலையை
மாற்றார் காலிலே ஒப்படைக்கும்
ஈனப்பிழைப்பும் பிழைப்பாமோ ! இதை
ஏனென்று கேட்பது தப்பிதமோ ?

நாட்டைப் பிறருக்குக் காட்டித்தந்தால்
நாளைக்கு நம்முயிர் வாழ்ந்திடுமோ ?
வீட்டைக் கொளுத்திக் குளிர்காய்ந்தால்
வெயிலில் நிற்க நிழல் வருமா ?

கோடி உயிர்களைப் பலி கொடுத்தோம்;
கோட்டையில் ஆட்சி அமைத்து விட்டோம்!
ஆடி அசையுது அந்த விடுதலை
அன்னையைக் காப்பது நம் கடமை!

கூடியே எல்லாரும் ஓர் மனதாய்க்
கோபப்படாமலே சேர்ந்துழைப்போம்!
வாடியே ஆடும் விடுதலையை
வாழ்வினைக் காப்பது நம் கடமை!

ட இன்னும் ஒரிரு நிமிடங்கள் தான் இருந்தன. தூத்துக்குடி க்ஸ்பிரஸ் எழும்பூர் ரயி டியை விட்டுப் புறப்பட....

பிளாட்பாரத்தில் மக்கள் ட்டம் அலைமோதிக் கொண் ருந்தது.... ஊருக்குப் போவோர்; வழியனுப்ப வந்தார்....

உலகமே இரண்டாகப் ளந்து கிடப்பது போன்ற ஒரு ரமை......!

ஒரே இதயக்குமுறல்..உணர்ச் க் கொந்தளிப்பு........வெவ் வறு குரல்கள் வெவ்வேறு ழையில்!

"டேய்! போனதும் லெட்டர் பாடு!"

"உடம்பைப் பத்திரமாய்ப் ர்த்துக்கோ...."

"காரியத்தை முடிச்சதுமே டனே திரும்பி வந்துடு...."

இதயக் கீறல்கள்!

"அப்புறம்..சரோ!" பேச டியவில்லை அவனால்! நெஞ்சை டைக்கிறது.

புதுமணத் தம்பதிகளோ?

அவனுக்கும் கண் கலங்குகிறது. "உடம்பைப் பார்த்துக்குங்கோ. சீக்கிரமாத் திரும்பி வந்துடறேன்."—தாய் வீட்டுக்குப் போகிறாள் போலும்!

கைவிரல்கள் ஒன்றோடொன்று பின்னுகின்றன!

ரயில் புறப்பட்டு விட்டது.... விரல்கள் பிரிய நேரமாகின்றது.

எழுதாத கதைகள்—எழுத்தில் ஏறா உணர்வுக் கோவைகள் எத்தனையோ....?

ரயில் பிளாட்பாரத்தைத் தாண்டி விட்டது.

இதயங்களின் தவிப்பு........

நேரில் பார்க்கிற போது இருக்கிற, இருந்த ஆத்திரம், படபடப்பு, சற்றுக் குறைந்து.... மறுபடியும் பழைய நிலை....

அசுர வேகத்தில் நடைபோடும் நகர வாழ்வில் அதற்குமேல் முடியாதல்லவா?

கடமை அழைக்கிறதே!

நண்பனை ஊருக்கு அனுப்பி விட்டு மெல்ல மெல்ல ரயிலடியிலிருந்து தெருவில் நடை போட்டேன். ஒளி உமிழ் விளக்குகள் இரவைப் பகலாக்கிக் கொண்டிருந்தன. ரயிலடிக்கு எதிர் வாடையில் தமிழ்நாடு ஆவணக் காப்பகக் கட்டடத்தைத் தாண்டிச் சற்று தூரம் கூடப் போயிருக்க மாட்டேன்....

"தம்பி....!"

அந்தக் கட்டடத்திலிருந்து யாரோ கைதட்டிக் கூப்பிட்டது போல் இருந்தது!

"என்னையா கூப்பிட்டீங்க?" கூப்பிட்டவரை நோட்டம் விட்டேன்.

முதிய வயது. காலச் சுவக்கினால் கன்னிப்போயிருந்தாலும் மெருகு போகவில்லை உடம்பில். வைர விழாக் கொண்டாடிய உடம்பு போலிருக்கு!

"ஆமாம் தம்பி! உங்களைத் தான் கூப்பிட்டேன். பார்த்தா படிச்ச பிள்ளையாயிருக்கிங்க! ஒரு சங்கதி சொல்லலாம்னு...."

எனக்கும் வேலை இல்லை. ஒரு பர்லாங்கில்தான் வீடு—வீடா? என் அறை.

"தனிக்கட்டை; நண்பனும் ஊருக்குப் போயிட்டான். அறைக்குப் போய்தான் என்ன வெட்டி முறிக்கப் போறேன்....? சொல்லுங்க..கேட்கிறேன்" என்று சொல்லிக் கொண்டே கட்டடக் கவரின் மீது உட்கார்ந்தேன்....

"வெத்தலை போடற பழக்கம் உண்டுங்களா தம்பி....?"

"இல்லீங்க.."

வெற்றிலையைக் குதப்பிக் கொண்டே ஆரம்பித்தார், கதையைக், கிழவர் :—

"தம்பி! இந்தக் கட்டடத்தைத் தான் 'ஆவணக் காப்பகம்'னு கூப்பிடுவாங்க. அதாவது 'மெட்ராஸ் ரிகார்ட் ஆபீஸ்'னு முன்னே எல்லாம் கூப்பிடுவாங்க! இந்த எழும்பூர் தான், அறுபது வருடமா இங்கே தான் குடியிருப்பு. அதுக்கு முன்னாலே கோட்டையிலே இருந்தது! 1805 என்று நினைக்கிறேன். கும்பெனிக்காரர்கள் கோட்டையிலே இருந்து ஆட்சி புரிந்து கொண்டிருந்தார்கள். வில்லியம் கேவண்டிஷ் பெண்டிக் என்று ஒரு வெள்ளைக்கார கவர்னர். அவர்தான்....முதன் முதலிலே இந்த மாதிரி ஆவணங்களை எல்லாம் ஒரு இடத்திலே சேர்த்து வைக்கணும்கிற எண்ணத்தையே உருவாக்கினவர். கும்பெனியார் ஆட்சியிலும் அதன் பின்பும் அரசாங்க ஆவணங்கள் ஏராளமாகப் பெருகிட்டுது. அவைகளைப் பாதுகாத்து வைக்கணும்கிற அவசியம் ஏற்பட்டது. இப்படி ஓர் அலுவலகம் தேவைதான்னு செஞ்சாங்க...."

"அதாவது..இப்படி ஆவணங்களையெல்லாம் ஓர் இடத்திலே சேர்த்து, பாதுகாத்து வைக்கணும்கிற எண்ணம் அப்பவே வந்துட்டுதுன்னு சொல்றீங்களா?"

"பின்னே....1805-லேயே வந்துட்டுது.. அதுக்கப்புறம்.. கோட்டையிலே இருந்த இந்த அலுவலகம் இங்கே எழும்பூரிலே பெரிய கட்டடத்துக்கு வந்தது. அதாவது 1909-லே"

"அப்படியா! இங்கே வந்து 60 ஆண்டுகள் ஆயிட்டுதா? அதான் வைரவிழா அது இதுன்னு நாலு மாதத்துக்கு முன்னாலே இந்தப் பக்கத்திலே அமர்க்களப் பட்டுதா?"

"ஆமாம் தம்பி! இந்த ஆவணக்காப்பகத்தின் வைர விழாதான் அது. போன பிப்ரவரி மாதத்திலேதான் இங்கே நடந்தது. இந்த ஆவணக் காப்பகத்தைப் பற்றி என்ன நினைக்கிறே? 'ஏதோ கவர்ன்மெண்ட் ரிகார்டுகளை வச்சிருக்காங்க..வேணும்னு எடுத்துக் கொடுக்கறதுக்கு தானே இந்த அலுவலகம்'னு நீங்கள் எல்லாம் நினைக்கறீங்க.. அதல்ல தம்பி..நம்ப தமிழ்நாடு ஆவணக் காப்பகம்—உலகத்திலே உள்ள ஆவணக் காப்பகங்களில் மிகவும் சிறப்பு வாய்ந்த ஆவணக் காப்பகங்களில் ஒன்று இது. உலகத்திலேயே சிறந்ததுன்னு நான்கைச் சொல்வாங்க....

"அமெரிக்காவிலே வாஷிங்டனில் உள்ள (1) தேசிய ஆவணக் காப்பகம் (National Archives), (2) பொது ஆவண அலுவலகம், லண்டன் (Public Record office London) (3) பிரிட்டிஷ் மியூசியம், லண்டன் (4) தேசிய ஆவணக் காப்பகம், பாரீஸ்.

"உலகத்தில் உள்ள மிகவும் சிறப்பு வாய்ந்த இந்த நான்கு ஆவணக் காப்பங்களோடே சரிநிகர் சமானமாக நம்ப தமிழ் நாட்டு ஆவணக் காப்பகத்தையும் தாராளமாச் சொல்லலாம். அதுமட்டுமல்ல; தென்கிழக்கு ஆசியாவிலே நம்ப சென்னையிலே உள்ள இந்தக் காப்பகம் தான் தலைசிறந்தது. வெறும் ஆவணங்கள் மட்டும் இங்கே இல்லை. நம்ம அரசாங்க அலுவலகங்களின் இருதயமே இங்கே இருக்கு. அரசு நிர்வாகத்தின் இயந்திரத்தின் அடித்தளங்கள்தான் இன்றைய ஆவணக்காப்பகத்தில் இருக்கிற கோப்புகளும், அரசுத் துறை நிபுணர்களின் எழுத்துக்களும். அவர்களுடைய, அந்த பேனா மன்னர்களின், இதயங்கள் இங்கே பேசிக் கொண்டிருக்கின்றன. எத்தனை எத்தனையோ உணர்ச்சிக் கோவைக ளத்தின் படப்பிடிப்புக லாற்று உண்மைகளை அவை ளடக்கிக் கொண் இலட்சோப இலட்சம் இ எழுத்துக்கள் மூலமாக இந்தக் கட்டிடத்தினுள்ளே நடம் புரிந்து கொண் கின்றன....

"தம்பி..அப்படி எவ்வ இருக்குன்னு நினைக்கிறே?.. 60 இலட்சம் கோப்புகளும், இலட்சம் நூல்களும் இருக்கு..1867-லிருந்து மாநிலத்தில் வெளியிடப் நூல்கள் எல்லாம் இங்கே இரு இது தனி உலகம்; ஒரு சுரங்கம்! ஆரம்பத்திலே பெனியார் காலத்தில் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத் ஸ்தாபித்தாரே ராபர்ட் அவர் கைப்பட எழுதிய ஆவ கள் எல்லாம் இங்கே இரு அதென்ன பிரமாதம்! கும் யாருக்கு முன்னே டச்சுக் இங்கே வந்தானே, காலத்தில் டச்சுமொழியில் வைத்த டச்சு மொழியில் ஆவணங்கள் கூட இருக்கு

"கச்சத்தீவு கச்சத்தீவு பத்திரிகையிலே பிரமாதமா பட்டுதே.. அந்தக் கச்சத் பற்றிய உண்மைகள் கூட இங்

...யில் உள்ள ...இருக்கும்னு நினைக்...

...க்கு. அந்தக்காலத்திலும் எந்தக் காலத்திலும் சரி ...யான துறையாக விளங் ...வருவாய்த் துறை நிர்வாகம் ...த 'சர்வே' பற்றிய ஆவண ...ளாம் இங்கேதான் இருக்கு. ...தை உலகுக்கு எடுத்துக் காட்டி ...யவர் மன்றோ.. மவுண்ட் ...ாடிலே குதிரைமேல் சிலையா ...க்காரே அதே மன்றோ தான். ...ர் கவர்னராயிருந்த காலத் ...ல அவர்தான் 1830-லே இந்த ...ர்வே' பற்றிய ஆவணங்களை ...யெல்லாம் ஒழுங்குபடுத்தினர்.

"இந்த ஆவணங்களையெல்லாம் ...ாவல் துறை, வருவாய்த் துறை, ...நீதி நிர்வாகம், கல்வி, பொதுப் ...பணித்துறை என்று திருத்தி ...ழுங்குபடுத்தினர். அவருக்குப் ...ன்னால் வந்த ஹாரிஸ் என்பவர்.

"இதைவிட ருசிகரமான ஒரு ...கவல் உனக்குச் சொல்லணும். ...ங்கையையும் காவிரியையும் ...ணைக்கணும்னு இப்ப பிர ...தமா அடிபடுதே.. அந்தத் ...ட்டத்தைப் பற்றிச் சிந்தித்து, ...857-லேயே அதற்கு வித்தூன்றி ...வர் காட்டன் என்ற வெள்ளைக் ...ார கவர்னர். இந்தக் கருத்தை ...கவும் தெளிவாகவும் அவர் ...லியுறுத்தி உள்ளார். அந்த ...வணங்கள் எல்லாம் இருக்கு.. ...சலம் உருக்காலை இன்று நன ...ாகிவிட்டது. சேலம் உருக் ...லை பற்றிய 'சர்வே அறிக்கை' ...த அலுவலகத்தில் உள்ளது. ...தைப் பற்றி இங்கே 'கியூரேட்ட ...ர'ப் பணியாற்றிய டாக்டர் ...ாலிகா அற்புதமான ஒரு ...ந்தகமே எழுதியிருக்கிறார்.

"அதுமட்டுமல்ல; தம்பி.. டச்சு ...வணங்கள் இந்தியாவிலேயே ...று எந்த ஆவணத்திலும் கிடை ...து. தமிழ்நாட்டு ஆவணக் ...ப்பகத்தில்தான் இருக்கு....

...14-ம் நூற்றாண்டிலே ஆண்ட ...டக அரசர்கள் காலத்திய ...வணங்களும், கிழக்கிந்தியக் கம்பெனி, மராட்டிய மன்னர்கள், போர்த்துக்கீசியர் காலம்போன்ற பழங் காலத்தைய ஆவணங்கள் தமிழ்நாட்டு ஆவணக் காப்பகத்தில் உள்ளன என்று சொன்னால் நீ நம்பமாட்டாய். தமிழ் வரலாறு பற்றி ஆதாரபூர்வமான குறிப்புகள் இங்கே ஏராளமாக உள்ளன. வரலாற்று ஏடுகள் இங்கே கதை கதையாய்ச் சொல்லிக்கொண்டிருக்கின்றன. அதுமட்டுமல்ல; நல்ல முறையில் நம்மை இந்த நாடு பயன்படுத்திக்கொள்ளவில்லையே என்று புகைப் பெருமூச்சும் விட்டுக்கொண்டிருக்கின்றன.



"தம்பி.. கும்பெனியார்கள் வந்தார்களே.. வெள்ளைக்காரர்கள் .. அவர்கள் ஆட்சி பற்றிய 'ரிகார்டுகள்' 1670-லிருந்து இங்கே பத்திரப்படுத்தி வைக்கப்பட்டுள்ளன.

"அதுமட்டுமல்ல.. தமிழ்மொழி இணிக்கப்படுகிறது என்று கூக்குரலிடச் சில பேர் கிளம்பி இருக்கிறார்களே இந்தக் காலத்தில், இந்தச் செந்தமிழ் நாட்டில். ஆங்கிலேயர் வெள்ளைக்காரர்கள். அந்நியர்கள் இதைப்பற்றி அவர்கள் என்ன சொல்லியிருக்கிறார்கள் தெரியுமா?

நேரமாகிவிட்டது.... போகலாமா என்ற நப்பாசை எனக்கு. இருப்பினும் கலையான கட்டத்தில் போக மனமில்லை.... "என்ன சொல்லியிருக்கிறார்கள்? சொல்லுங்க!" என்றேன் நான்.

"அப்படிக்கேள் தம்பி! 1851-ம் வருடம் போர்டிங்கர் (Fortinger) ஒரு கவர்னர். சென்னை கவர்னர். அப்பொழுதெல்லாம் தெற்காசியாவுக்கே சென்னையைத்தான் கேந்திரமாக வைத்திருந்தார்கள் வெள்ளைக்காரர்கள். அந்த போர்டிங்கர் கவர்னரின் நிர்வாக சபையிலே ஜே.எப். தாமஸ் என்று ஒருவர் உறுப்பினர். அப்படி கல்வி சம்பந்தப்பட்ட செய்தி ஒரு அறிக்கை அப்பொழுது தயாரித்தார்கள். அந்தத் தாமஸ் என்பவர்தான் தன்னுடைக் குறிப்பிலே "தாய் மொழியிலேதான் படிப்புச் சொல்லிக் கொடுக்க வேண்டும்" என்று திட்டவட்டமாகச் சொல்லி இருக்கிறார். அவர் சொன்னதை ஆங்கிலத்திலேயே சொல்றேன்.

'I consider therefore that instruction in the vernacular to be essential and without it a scheme of education will be most limited and partial and comparatively of little value.'

"இப்படிச் எப்ப சொன்னார் தெரியுமா? 1851-ம் ஆண்டு. லேலே! அதுவும் வெள்ளைக்காரர். அப்பக் கவர்னராயிருந்த போர்டிங்கரும் இதே கருத்தை வலியுறுத்தியிருக்கார். அதையும் இந்தக் காப்பகத்திலே பார்க்கலாம்.

"இப்படி என்ன என்னவோ! சொன்னால் நீண்டுகொண்டே போகும். டச்சு ரிகார்டுகள், பெர்சியன் ரிகார்டுகள். தஞ்சை ராஜ்யத்தை ஆண்ட மராட்டிய மன்னர்கள் காலத்திய ரிகார்டுகள்—"மோடி" "மோடி"ன்னு ஒரு எழுத்து வடிவம்—அந்த "மோடி" எழுத்தில் தான் இந்த மராட்டிய ரிகார்டுகள் எல்லாம் இருக்கு!

"தஞ்சாவூர் என்றதும் நினைப்பு வந்தது. காவிரி டெல்டா தஞ்சைத் தரணி பற்றிய நில ஆய்வு—நிலவளம் சிறப்பியல்புகள் பற்றிய குறிப்புகள் எல்லாம் ஏராளமாக இருக்கின்றன. அவற்றையெல்லாம் ஆய்வு செய்தால் எத்தனையோ உண்மைகள், எத்தனையோ விஷயங்களைத் தெரிந்து கொள்ளலாம். அத்தனையும் ஆதார பூர்வமாகக் கிடைக்கும். தேசப்படங்கள் மட்டும் ஐயாயிரத்துக்கு மேல் இருக்கின்றன.

"அரசின் தலைமைச் செயலக ஆவணங்கள், வருவாய்த்துறை வாரிய ஆவணங்கள், எல்லா அரசுப் பத்திரங்கள், பதிவேடுகள், நில அளவுத் துறை ஆவணங்கள், நீதித்துறை ஆவணங்கள் எல்லாமே இங்கு உள்ளன. புதுவை ஆனந்தரங்கம் பிள்ளையின் நாட்குறிப்பு என்று கேள்விப்பட்டிருப்பாய். அந்த நாட்குறிப்பின் ஒரு பகுதியின் நகல் வடிவத்தை இங்கே காணலாம். அதெல்லாம் எதற்குத் தம்பி? சுருக்கமாகச் சொல்லப் போனா இந்தத் தமிழ்நாட்டு ஆவணக் காப்பகத்தைத் தமிழ்நாடு அரசு அலுவலகங்களின் "இதயம்" என்றே சொல்லிவிடலாம். ஆவணங்கள் இல்லாமே அரசுப் பணிகள் இயங்காதல்லவா?"

"அதெல்லாம் சரிங்க.... காப்பகம் இயங்குகின்ற நடைமுறைபற்றி ஒன்றும் சொல்லலியே?"

"மற்ற அரசு அலுவலகங்களைப் போல் இல்லை தம்பி. இந்தக் காப்பகம். இது ஓர் கலைக்கூடம். நல்ல முறையில், ஆரவாரம் இல்லாமல் ......படபடப்பு இல்லாமல் அமைதியான முறையில் பணி நடைபெற்றுக்கொண்டு வருகிறது. கட்டடத்தைப் பார்த்திருப்பாயே! பெரிய கட்டடம். இதற்கென்று ஓர் இயக்குநர் இருக்கிறார். இப்ப உள்ளவர் பெயர் திரு சிங்கராஜன். சுறுசுறுப்பான, கடமையுணர்வு மிக்க இளைஞர். அவர் தலைமையிலே இந்தக் காப்பகம் அரிமா நடைபோட்டுக் கொண்டிருக்கிறது. இந்த ஆண்டுதான் வைர விழாக் கொண்டாடியது இந்தக் காப்பகம்!



"கோப்புகள் [illegible] எழுதப் படுவ[illegible] கோப்புகளும், ஆவணங்களும் இங்கே செம்மையான முறையில் சேகரிக்கப்பட்டு ஒழுங்கு படுத்தப்பட்டு பாதுகாக்கப்படுகின்றன. போர் முனைக்குப் பாசறை எவ்வளவு முக்கியமோ அதுபோல் அரசுப் பணிகளுக்கு இந்தக் காப்பகம் தான் பாசறை."

"இந்தக் காப்பகத்தை ஆவணப் பிரிவு (Record Section), ஆய்வுப் பிரிவு (Research Section) வெளியீட்டுப் பிரிவு (Publication Section) திட்டம், வளர்ச்சிப் பிரிவு (Planning and Development section) என்று வகைப்படுத்தலாம்.

"ஆவணங்களை ஒன்று சேர்த்து அவற்றைப் பாதுகாக்க இந்தக் காப்பகத்தில் கையாளப்படும் முறை இருக்கிறதே.. பார்த்தால் தான் தெரியும். கையில் பழைய ரிகார்டை எடுத்தால் பொடிப் பொடியாகிவிடும். அவ்வளவு பழசு! அந்தப் பழைய ஆவணங்களைப் பதப்படுத்தி, இன்னும் பல நூற்றாண்டுகளுக்குப் பயன்படும் வகையில் செப்பனிட்டுத், திருத்தி பயனுள்ளதாகச் செய்துவிடுகிறார்கள். சமுதாயத்திற்குச் செய்யும் பெரிய பணியல்லவா இது! ஒரு வகை சிபான் (Chiffon) துணியில் பழைய ஏட்டைப் பதித்து, அதற்கென்று உள்ள அமிலத்தில் போட்டுப் பின்பு எடுத்துப், பதப்படுத்தி, உறுதியான முறையில் பல ஆண்டுகள் கையாளக்கூடிய அளவுக்கு ஆவணங்களை ஆக்கிவிடுகிறார்கள். இதை Chiffon Mending என்று அழைக்கிறார்கள்.

"தம்பி! ஒன்று சொல்ல மறந்துட்டேன்.... ருஷ்யாவிலேயிருந்து ஒரு பேராசிரியை இங்கே

[illegible] தம்ப காப்பகத் [illegible] ஆவணங்களைப் பாது[illegible] மூலம் திருத்தக் [illegible] முறையைப் பார்த்து [illegible] ''டாக்கா மஸ்லின் மாதிரி [illegible] இருக்கிறது. இந்தத் [illegible] எந்த நாட்டிலும் இதை [illegible] செய்கிறோம்'' என்று [illegible] அந்தத் துணியில் ஒரு [illegible] கேட்டு வாங்கிக்கொண்டு போய்விட்டார்கள்! இவ்வளவு நுட்பமான முறையில் ஆவணங்கள் சரி செய்யப்படுவதும்—பாதுகாக்கப்படுவதும் ஆசியாவிலேயே வேறு எந்த இடத்திலும் கிடையாது!

''அரசு ஆணை எது வேண்டும், எந்த ரிகார்டு வேண்டும்? உடனே கிடைக்கிறது. அரசு இயந்திரம் இயங்கக் கடையாணி மாதிரி, அடித்தளம் மாதிரி— போர் நடைபெறப் போர்க் கருவிகள் மாதிரி— இந்த ஆவணக் காப்பகம் இருக்கு தம்பி.

''அது மட்டுமல்ல. இங்கே ஆராய்ச்சிப் பிரிவு தனியாக இருக்கு. பல வெளி நாடுகளிலிருந்து கூட ஆராய்ச்சி மாணவர்கள் இங்கே வந்து தங்கி ஆராய்ச்சி செய்து விட்டுப் போகிறார்கள். இதுபோக வெளியீட்டுப் பிரிவு வேறு இருக்கு. இப்போதுகூட பல்வேறு பொருள்களைப் பற்றி 41 நூல்கள் தயாராகிக் கொண்டிருக்கின்றன. ஆதார பூர்வமான அடிப்படைத் தகவல்களைச்—செய்திகளைச் சேகரித்து அரசின் பலதுறைகளுக்கு வரலாற்று உண்மைகளுடன் சிறப்புக் குறிப்புக்கள்—தகவல்கள் எல்லாம் தயார் செய்து கொடுக்கிறார்கள். திட்டம்-வளர்ச்சிப் பிரிவு புதிதாகத் தொடங்கப்பட்டுள்ளது..''

''அதெல்லாம் சரி. கடந்த மூன்றாண்டுகளாக என்னென்ன காரியங்கள் நடந்திருக்கு.சொல்ல முடியுமா?''

''அப்படிக் கேள்! ஆவணக் காப்பகம் முக்கியமான ஒன்று; செம்மைப் படுத்தப்பட வேண்டிய, வசதிகள் செய்து தரப்பட வேண்டிய ஒன்று என்ற கருத்து சிறப்பான முறையில் வலிவு பெற்றதே இந்த மூன்றாண்டுகளில்தான்.

''சிறப்பாகக் குறிப்பிடத்தக்க அளவுக்கு பல நல்ல காரியங்கள் இந்த மூன்றாண்டுகளில் நடைபெற்றுள்ளன. மிகவும் சிறப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் ஆவணக்காப்பக வளர்ச்சியை ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்து விட்டதை அவசியம் குறிப்பிட வேண்டும். அரை இலட்சம் ரூபாய் செலவில் (Fumigation) புகையூட்டுக்கூடம் ஒன்றிற்கு அரசு அனுமதிவழங்கியுள்ளது. 5 இலட்சம் ரூபாய் செலவில் கட்டடம் கட்ட 1971-72-க்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. 1971-72ம் ஆண்டில் Micro-film Unit ஒன்று, இரண்டு இலட்சம் ரூபாயில் வைக்க அனுமதித்துள்ளது. Lamination இயந்திரம் வாங்க இரண்டு இலட்சம் ரூபாய் அனுமதி வழங்கியுள்ளது. பல புதிய நியமனங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆவணம் பாதுகாக்கும் பிரிவு (Preservation Wing) தற்காலிகமாக இருந்ததை நிரந்தரமானதாக மாற்றியுள்ளார்கள். இதற்கெல்லாம் மேலாக மாவட்டங்களிலும், மாவட்ட அலுவலகங்கள் ஏற்படுத்த அரசு அனுமதி வழங்கியுள்ளது. ஒன்று அல்லது இரண்டு மாவட்டங்களில் உடனடியாக இந்த மாவட்ட அலுவலகங்களைத் தோற்றுவிக்க ஏற்பாடாகி விட்டது. பணியாளர்களுக்கு சீருடை வழங்கப்பட்டுள்ளது. சுருக்கமாகச் சொன்னால் கடந்த மூன்றாண்டுகளை இத்துறையின் பொற்காலம் எனலாம்.

''இந்த அலுவலகத்தில் மிகவும் அழகான வசதிகளுடன் கூடிய கூட்ட அரங்கு (Conference Hall) ஆராய்ச்சிப் பிரிவுக்கென்று தனியாக ஓர் அரங்கு. பொருட்காட்சி அரங்கு எல்லாம் கண்ணைக் கவரும் முறையில் உள்ளன. இது ஓர் அழகு மணிமாளிகை; கலைவண்ணம் கமழும் அறிவுப் பெட்டகம்!

''இதை ஒரு கலைக்கூடமாக— அறிவுக்களஞ்சியமாக—சிந்தனைப் பாசறையாக மாற்ற வேண்டும். மாற்றப்பட்டு வருகிறது. [illegible] ய அரசு ஆணைகளை மட்டும் எடுத்து அனுப்புகின்ற [illegible] மட்டும் இங்கு நடைபெறு[illegible] தமிழகத்தின் கடந்த நா[illegible] நூறு ஆண்டு வரலாறு [illegible] ஆதாரபூர்வமான முறையில் [illegible] கிடைக்கிறது. மாணவர்களுக்கும் [illegible] க்கும் தம்முடைய வரலாற்[illegible] செறிவு, பண்பாட்டுப் புகழினைப் பரப்பிட வேண்டும். அதற்கு நிலைக்களனாக இந்த ஆவணக் காப்பகம் உள்ளது.

''ஆவணம் காப்பதே ஒரு தனிக் கலை. நூலகப் பணிபோல் இது ஒரு தனிக்கலை. இதற்கென்று தனியாகப் பயிற்சி வேண்டும். நூலகப் பணியில் டிப்ளோமோ படிப்பு இருப்பதுபோல், மற்ற துறைகளில் டிப்ளோமா படிப்பு உள்ளதுபோல், இத்துறையிலும் டிப்ளோமா படிப்பு தனியாக இருக்க வேண்டும். இதில் சிறப்புப் பயிற்சி பெற்றவர்களை நாம் உருவாக்க வேண்டும். ஆவணப் பாதுகாப்பு டிப்ளோமா என்று தனிப்படிப்பு இருக்க வேண்டும்.

"1867-லிருந்து இந்த மாநிலத்தில் வெளியிடப்பட்டுள்ள புத்தகங்கள் இங்கே இருக்கின்றன. வசதியற்ற நிலையில் இருக்கின்றன. அருமையான, எங்குமே கிடைக்காத புத்தகங்கள் உள்ளன. இவற்றைச் செம்மைப் படுத்தினால்—நாட்டுக்கு,ஆராய்ச்சியாளர்களுக்கு, மொழி வளர்ச்சிக்கு நல்லதொரு ஊன்றுகோலாக அமையும் என்பது உறுதி.

''இங்கே ஆய்வாளர்களுக்கு— ஆராய்ச்சி செய்பவர்கள் என்ற முறையில் உதவிச் சம்பளம் (Scholarship) வழங்கலாம். கல்வி உதவி ஏற்பாடுகள் (Fellow ships) என்று ஒன்று ஏற்படுத்தலாம். இப்படிச் செய்தால் பட்டப்பின் படிப்பு படித்த 50 பட்டதாரிகளுக்கு வேலை கொடுக்கலாம். வரலாற்றுக் குறிப்புகள் அடங்கிய பல்வேறு மொழியில் உள்ள ஆவணங்களை மொழி பெயர்த்துச் சிறப்புக் குறிப்புகள் தயார் செய்யலாம்.

''தமிழ்நாட்டுக்கு என்று அண்மைக்காலத்திற்குத் தனியான ஆதாரபூர்வமான வரலாற்று நூல் இல்லை. இந்த ஆவணக் காப்பகத்தில் உள்ள ஆவணங்களையும் குறிப்புகளையும் பயன்படுத்தி அதிகாரபூர்வமான வரலாற்று நூல்ஒன்று எழுதலாம்.

''இங்கேஎல்லாம் கிடைக்கிறது. பணம்தான் தேவை!...வசதிகள் செய்து கொடுத்தால்,...இந்தக் காப்பகத்தை அறிவுக் களஞ்சியமாகவே மாற்றிவிடலாம்; மாற்றிவிட முடியும். தமிழ் அரியாசனம் அமர்ந்துள்ள இப்பொற்காலத்தில் இவையெல்லாம் நிறைவேறும் என்று எதிர்பார்[illegible] தவறு இல்லையே!''

தன்னுடைய நீண்ட பேச்[illegible] நிறுத்தினார் அவர்! சொற்பொ[illegible] மாதிரி இருந்த அவர் பேச்[illegible] கேட்டுக்கொண்டிருந்த [illegible] என்ன பதில்சொல்லக் கி[illegible] கிறது?

''எல்லாவற்றிற்கும் 'தமி[illegible] அரசு' இருக்கிறது..... நல்ல[illegible] யங்கள் நடைபெறத்தானே [illegible] லாட்சி இருப்பது'' என்று க[illegible] கொண்டே எழுந்தேன் நா[illegible]

தெருவில் நடமாட்டம் இல்[illegible] வீதி வெறிச்சோடிக் கிடந்த[illegible] சிலமணிகளுக்கு முன்னால் இரை[illegible] குமுறல்களின் இருப்பிடமா[illegible] கிடந்த எழும்பூர் ரயிலடி, சத்[illegible] குறைந்து, மோன நித்திரையி[illegible] ஆழ்ந்து கிடந்தது.

''புறப்பட்டுவிட்டீர்களா தம்பி[illegible] போய் வாங்க! ரொம்ப நன்றி!''

''வருகிறேனுங்க!'' என்[illegible] கரங்கூப்பி அவரிடமிருந்[illegible] விடைபெற்றுக் கொண்[illegible] டேன்.

ஒரு பெரிய காவிய[illegible] தைப் படித்த மனநிறைவுட[illegible] வீதியில் நடைபோட்டேன்.

சமுதாய வளர்ச்சித் திட்டங்களில் நாம் காட்டும் ஆர்வமும் அக்கறையும்தான் நாளைய இந்தியாவை உருவாக்கும் முயற்சியாகும்.

கூட்டுறவுத் துறை மூலம் எல்லாப் பணிகளையும் சிறப்புடன் நிறைவேற்றமுடியும் என்பதில் எனக்கு முழு நம்பிக்கை உண்டு. ஆனால் அதன் வெற்றிக்கு மக்களின் முழு ஒத்துழைப்பு தேவை.

ஊராட்சிகள் பொறுப்புணர்ந்து செயல்படுவதே மாபெரும் ஜனநாயக நாடான நம் நாட்டுக்கு பெருமையைச் சேர்க்கும்.

—ஜவ[illegible]

அமெரிக்கா போதும் நுங்கு

நேபாளத்திலிருந்து வந்திருந்த ஒரு பார்வையாளர் சொன்னார் "நான் இந்தியாவிலுள்ள எல்லா மாதிலங்களையும் சுற்றிப் பார்த்து விட்டு வருகிறேன். ஆனால், கிராமத் தொழில்களுக்கு உரிய சரியான மதிப்புக் கொடுத்துச் சரிய முறையில் செயல்படுத்திவருவது தமிழ் நாடு தான்" என்று.

சென்னையில் புறநகர்ப் பகுதியைச் சேர்ந்த மாதவரத்திலுள்ள குமரப்பாபுரத்தில் இயங்கும் கிராமக் கைத்தொழில் கூடங்களைப் பார்த்த பின்னர்தான் அவர் அவ்வாறு தெரிவித்தார்.

அண்மையில் சோவியத் நாட்டைச் சேர்ந்த இரண்டு பேராசிரியர்கள் இந்தக் கிராமக் கைத்தொழில் கூடங்களைப் பார்க்க வந்திருந்தனர். அவர்கள் இருவரும் காந்தியப் பொருளாதாரத்தைப் பற்றி ஆராய்ச்சி செய்து கொண்டிருப்பவர்கள். அன்னார் தங்களுடைய ஆராய்ச்சிக் கட்டுரைக்குத் தேவையான முழுப் பொருளும் இங்கேயே கிடைத்துவிட்டது என்று சொன்னார்களாம்.

அந்த அளவுக்கு அனைத்து நாட்டினர் கவனத்தையும் இக் கிராம கைத்தொழில் பயிற்சிக் கூடம் கவர்ந்துள்ளது.

நாலரை ஏக்கர் நிலத்தில் தான் இத்தொழிற் கூடங்கள் அமைந்திருக்கின்றன.

பனையிலிருந்து எவ்வளவு பொருள்களை இங்கே தயாரிக்கிறார்கள்!

பனஞ்சினி ஆலை ஒரு புறத்தில் அமைந்திருக்கிறது. சுற்றியுள்ள ஒவ்வொரு இடங்களிலும் கிராமக் கைத்தொழில்கள்.

முதலில் பனம் நார் பிரிவுக்குச் செல்கிறோம். அங்கே எத்தனை எத்தனை பொருள்கள் செய்கிறார்கள்! கூடைகள், பெட்டிகள், கட்டில்கள், பைகள், நாற்காலிகள் போன்றவை மட்டுமல்ல. இப்பொழுது பிளாஸ்டிக் பொருள்களில் வந்திருக்கும் 'நவீன காலப் பொருள்கள்' எல்லாம் அங்கே பனை நாரினால் செய்யப்பட்டுவருகின்றன.

அவைகள் எல்லாம் உரிய விளம்பரங்கள் இன்மையா மறைக்கப்பட்டு இருக்கின்றன என்ற எண்ணம் நம்மையறியாமல் தோன்றுகிறது.

அடுத்து, பனை வைர பொருள்கள் பிரிவுக்குச் செல் றோம்.

பனைமரம் எண்பதிலிருந் நூறு ஆண்டு ஆனவுடன் முற் விடுகிறது; மற்ற மரங்களி வைரம் உள்ளிருந்து விளைகிறது ஆனால் பனைமரத்தில் வைர வெளியேயும் சோற்றுப் பாக உள்ளேயும் இருந்து வளர்கிறது அதிகமாக முற்றிய ப மரத்தில் நாலிலிருந்து ஆ அங்குல கனம் வைரம் விளையும்

சிறு சேமிப்பு
ஓர்
ஒளிவிளக்கு
குல விளக்காம் உங்கள் மகன் கல்வி பெற....
திரு விளக்காய் உங்கள் மகள் மணவாழ்வு பெற
பெருவிளக்காய் உங்கள் வருங்காலம் சீர் பெறவே....
ஒளிவிளக்காய் வழிகாட்டும் சிறுசேமிப்பு...
இன்றே உங்கள் அருகிலுள்ள
அஞ்சலகத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்
இயக்குநர்
சிறு சேமிப்பு நிறுவனம்
சென்னை-9

சில நாளில்—சில திங்களில்
—சில வருடங்களில்
முடிந்துவிடுவதல்ல
வாழ்வு!
அதற்கு நீண்ட
எதிர்காலம் உண்டு!
கடமையும் உண்டு!
கடமை எது ?
எதிர்காலம் எது ?
அவை எவ்வாறு
உருவாகின்றன...... ?

[வேளாண்மை அலுவலகத்தில் பணியாற்றும் மேஸ்திரி மேகலிங்கம் மாலையில் வீட்டுக்குத் திரும்பி வருகிறார்.]

மேகலிங்கம் : வள்ளி....வள்ளி............ஏ புள்ளே வள்ளி! (பதிலில்லை)
வள்......ளி........வள்ளி........

வள்ளி : (பதட்டத்துடன்) என்னுங்க மச்சான் கூப்பிட்டிங்களா?

மேகலிங்கம் : ஆமா......மனுசன் எத்தனை நாழியாகக் கூப்பிட்டுக்கிட்டிருக்கேன்.. நீ என்னடான்னு, சாவகாசமா வந்து நின்னுக்குட்டு கூப்பிட்டிங்களா மச்சான்னு கேக்குறியே! உனக்கு மூளை இருக்குதா......?

வள்ளி : சரி, சரி· கோவிச்சக்காதிங்க மச்சான்· நீங்க வந்து ரொம்ப நேரம் ஆயிட்டுதா..

மேகலிங்கம் : ரொம்ப நேரம் ஆகலே! பத்து நிமிஷம்தான் ஆகுது!

வள்ளி : நல்லவேளை! நான் பயந்தே போயிட்டேன்!

மேகலிங்கம் : பொய் சொல்லாதே புள்ளே! பயம் இருந்தா நீ இப்படி நடந்துக்குவியா?

வள்ளி : என்ன மச்சான் சொல்றீங்க! எனக்கு ஒன்னும் புரியலியே!

மேகலிங்கம் : ஏன் புள்ளே! பயம் இருந்தா தொட்டிலிலே கெடக்கிற என் தங்கத்துரையை விட்டுட்டு வெளியிலே போயிருப்பியா......?

வள்ளி : இப்பத்தான் மச்சான் போனேன்!

மேகலிங்கம் : எங்கே போனே! பச்சைப் புள்ளையை விட்டுட்டு வெளியிலே போற அளவுக்கு என்ன அவசரமான வேலை ஒனக்கு?

வள்ளி : வந்து.... வந்து.....

மேகலிங்கம் : தெரியும் புள்ளே! நீ எங்கே போனேன்னு எனக்கு நல்லாத் தெரியும்! பக்கத்து வீட்டுப் பார்வதி அம்மா கிட்டே அரட்டை அடிக்கப் போயிருக்கே!

வள்ளி : மச்சான்! பார்வதியம்மா வீட்டுக்குப் போனேன்னு சொல்றீங்களே அதை ஒப்புக்கிறேன். ஆனா அரட்டை அடிச்சேன்னு சொல்றீங்க பாருங்க, அதை நான் ஒத்துக்கத் தயாரா இல்லே.

இந்தப்பனை வைரத்தினால் எவ்வளவு அழகான பொருள்களை எல்லாம் செய்திருக்கிறார்கள்!

கைத்தடிகள், மேஜை விளக்குகள், அலங்காரப் பொருள்கள், பெட்டிகள், இப்படி பல்வகையான பொருள்கள் செய்யப்பட்டிருக்கின்றன.

பெண்கள் வைத்திருக்கும் 'கைப்பை' கூடப் பனை வைரப்பொருளால் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

இதை அடுத்துப் பனைப் பத்தலிலிருந்து தும்பு அகற்றும் பிரிவு உள்ளது. வீடு, தொழிற் கூடங்கள் முதலியவைகளைக் கழுவும் "பிரஷ்" இங்கே செய்யப்படுகிறது. இங்கே எடுக்கப்படும் 'தும்பு'களை பிரஷ் செய்வதற்காக அமெரிக்கா வாங்குகிறது.

தமிழ் நாட்டிலிருந்து 25 லட்சம் [illegible]தல் 30 லட்சம் [illegible]ாய் மதிப்புள்ள [illegible]த் தும்புகள் [illegible]ளி நாடுகளுக்கு [illegible]றுமதி செய்யப்படுகின்றன என்ற தகவல் நமக்குக் கிடைக்கிறது.

பதநீரைக் காய்ச்சிப் பனங்கற்கண்டு தயாரிக்கிறார்கள். பழையகால முறைகளை மாற்றிப் புதிய முறைகளில் தயாரிக்கிறார்கள்.

பனஞ்சீனியால் இஞ்சி மிட்டாய், பால் மிட்டாய், முந்திரி மிட்டாய், ஆரஞ்சு மிட்டாய் முதலியவைகள் தயாரிக்கிறார்கள். விரைவில் லட்டுகூட தயாரிக்கத் திட்டமிட்டிருக்கிறார்கள்.

பெரிய நிறுவனங்கள் தயாரிக்கும் தரமான மிட்டாய்களுக்கு இணையாக உள்ளன இவை.

கிராமப் பகுதிகளில் வாழும் சிறுவர் சிறுமியர்களுக்கு ஓய்வு நேரத்தில் ஊதியம் தருவதர்க இத்தொழில் அமைந்துள்ளது.

இப்பகுதியில் வாழும் சிறுவர் சிறுமியர்கள் ஓய்வு நேரத்தில் மிட்டாய் மீது காகிதம் சுற்றும் பணியில் ஈடுபட்டிருக்கிறார்கள். கிராமப் பொருளாதாரத்தில் ஏற்படும் மாற்றத்தைவிடப் பிஞ்சு உள்ளங்களில் சின்னஞ்சிறிய பருவத்திலேயே உழைக்கும் மனப்பான்மை வளர்க்கப்படுவது போற்றுதற்குரியதாகும்.

பெரிய தொழிற்கூடங்களில் பெரும் பெரும் இயந்திரங்களினால் செய்யப்படும் மிட்டாய் தொழிலை இங்கே சிறிய இயந்திரங்களை வைத்துச் செய்கிறார்கள்.

இதன் பக்கத்திலே இருக்கிறது, பழங்களிலிருந்து சுவையான பானப் பொருள்களைத் தயாரிக்கும் பகுதி.

கிராமப் புறங்களில் அந்தந்தப் பருவங்களில் விளையும் பழங்களைக் கொண்டு "பழப் பச்சடிகள்" செய்து டின்களில் அடைத்து அனுப்புகிறார்கள். பழச்சாறுகளிலிருந்து சர்பத் செய்யப்படுகிறது. இவை அனைத்துக்கும் பனஞ்சீனிதான் பயன்படுத்தப்படுகிறது.

இங்கு புதியதாகத் திட்டமிடப்பட்டுத் தயாரிக்கப்பட்டு வருகிற தொழில்தான் நுங்குகளை வெளிநாட்டுக்கு அனுப்புவது.

பனஞ்சுளையைப் பதப்படுத்திக் காற்றுப்புகாத டின்களில் அடைத்து அயல்நாட்டுக்கு அனுப்பும் முயற்சி வெற்றி பெற்றுள்ளது.

டப்பாவில் அடைக்கப்பட்டிருக்கும் இந்த நுங்கைச் சுவைத்த அமெரிக்கர் சிலர் "எங்கள் நாட்டில் இதற்கு ஏகப்பட்ட கிராக்கி இருக்கும். விருந்துகளுக்குப் பின் அளிக்கப்படும் ஐஸ்கிரீமில் இது மிகுந்த முக்கியத்துவம் பெறும்" என்று உறுதியுடன் தெரிவித்துள்ளனர்.

ஆமாம், இந்த நுங்கு டப்பாவுக்குப் பெருமளவில் விளம்பரம் செய்யப்பட்டால், எதிர்காலத்தில் இந்தியாவுக்கு அந்நியச் செலாவணி திரட்டித் தரும் பொருள்களில் ஒன்றாக—மிக முக்கியமான இடத்தைக் கவரும் என்பதில் ஐயமில்லை.

வணிக நிமித்தம் 'மாதிரி நுங்கு டப்பாக்கள்' ஜெர்மனி நாட்டுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

இந்த நுங்கு ஓராண்டுக்கு மேல் கெடாமலிருக்குமாறு பாதுகாக்கப்பட்டுள்ளது.

மாதவரத்திலுள்ள இக் கிராமத் தொழிற் கூடத்திலிருந்து மட்டும் ரூ. 10,000 மதிப்புள்ள நுங்குகளை ஏற்றுமதி செய்யலாம் என்றால், தமிழ் நாடு முழுவதிலிருந்தும் எவ்வளவு ஏற்றுமதி செய்யலாம் என்று நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள்!

அமெரிக்கா போகும் நுங்குக்கு நாம் தரவிருக்கும் விளம்பரம் அனைத்து நாட்டிலும் அதற்கு நல்ல சந்தையைத் தேடித் தரும் என்பது உறுதி! அதன் சுவையே இதற்கு ஆதாரமாகும்.

கல்வியில் சிறந்த தமிழ் நாடு கிராமத் தொழில்களிலும் சிறந்த தமிழ் நாடு என்பதை இத்தொழில்களின் வளர்ச்சியே எடுத்துரைக்கிறது!

மேலே: மிட்டாய் மீது காகிதம் சுற்றுவதில் ஈடுபட்டிருக்கின்றனர்.

கீழே: அச்சுகள் மூலமாக மிட்டாய் தயாரிக்கிறார்கள்.

மேகலிங்கம் : அப்படீன்னு நான் கூப்பிட்ட டனே ஏன் ஓடி வரல்லே....? அதுக்குக் ரணம் சொல்லு.

வள்ளி : அதுவா.... வந்து.... வந்து.... றும்.... சொல்லமாட்டேன்.

மேகலிங்கம் : சொல்லு புள்ளே.... சொல் ாட்டி எனக்குக் கெட்ட கோபம் வரும்!

வள்ளி : சொல்லிடுறேன் மச்சான்........ ாவிச்சுக்காதிங்க!

மேகலிங்கம் : அப்படி வா வழிக்கு !

வள்ளி : மச்சான்.... நம்ம தங்கத்துரை இருக்கானில்லே அவனைப் பத்தித்தான் பார்வதி அம்மாவும் நானும் பேசிக்கிட்டிருந்தோம்.

மேகலிங்கம் : என்ன புள்ளே, ஆச்சரியமா இருக்கு! தொட்டிலிலே கிடக்கிற சின்னப் புள்ளை என்ன தப்புத் தண்டாப் பண்ணிட்டான்னு நீங்க ரெண்டு பேரும் பேசிக்கிட்டிங்க....?

வள்ளி : அதுல்ல மச்சான்! பார்வதி அம்மா சீட்டுப் பிடிக்கிறாங்களாம். நம்ம தங்கத்துரை பேருக்கு மாசம் அஞ்சுரூபாயாவது சீட்டுப்போட்டு வச்சா நல்லதுன்னு அவங்க சொன்னாங்க!

மேகலிங்கம் : பரவாயில்லையே! பையன் பொறந்து பத்து மாசம்தான் ஆகுது! அதுக்குள்ளேயே அவனுக்காக பணம் சேர்த்து வைக் கணும்னு யோசனை செய்துட்டியே......

வள்ளி : ஆமா மச்சான்! இப்ப இருந்தே பணம் சேமிச்சு வச்சாத்தான் பிற்காலத்திலே அவனுக்கு நன்மையா இருக்கும்! அவன் படிப்புக்கு, அவன் கல்யாணத்துக்கு எல்லாம் பணம் தேவைப்படுமில்லே..! திடீருன்னு பணம் எப்படிக் கெடைக்கும்..? அதுனாலதான் இந்த யோசனை.

மேகலிங்கம் : வள்ளி! நான் உன்னை ரொம்பச் சாதாரணமா நெனைச்சேன்! நீ என்னடான்னா பெரிய பெரிய திட்டமெல்லாம் போடுறே! முன்னெல்லாம் பெண் புத்தி பின் புத்தின்னு சொல்வாங்க; இப்ப அப்படி இல்லே........பெண் புத்தி, முன் புத்தின்னு தெளிவாகுது!

வள்ளி : வர்ணிப்பு இருக்கட்டும் மச்சான்.... சீட்டுக் கட்டுறதுக்கு பணம் எப்பத் தரப் போறிங்க......?

மேகலிங்கம் : பணம் இன்னைக்கே தர்றதுக்குத் தயார்! ஆனா......

வள்ளி : ஆரம்பிச்சிட்டிங்களே மச்சான்! நீங்க ஏதாவது தடை சொல்லிங்கன்னு எனக்குத் தெரியும்.

மேகலிங்கம் : தடை சொல்லலே புள்ளே! நான் ஓர் அபூர்வமான யோசனை சொல்லப் போறேன்.

வள்ளி : யோசனைதான் சொல்லப் போறிங்களா? பணம் தரமாட்டிங்களா....

மேகலிங்கம் : அடாடா அவசரப்படுறியே புள்ளே! நான் சொல்லப் போறதை நல்லாக் கேளு!

வள்ளி : சொல்லுங்க மச்சான்!

மேகலிங்கம் : பணம் சேமிக்கணும்னு சொல்றியே, அது வாழ்க்கையிலே ரொம்ப ரொம்ப முக்கியம்! அதுக்காக, தனிப்பட்டவங்க கிட்டே சீட்டுப் போட்டா நம்ம பணம் நம்மகிட்டே வந்து சேராது! 'வட்டிக்கு ஆசைப்பட்டு முதலே போயிடுச்சு'ன்னு சொல்வாங்களே..........அதுமாதிரி நம்ம பணத்துக்கே ஆபத்து வந்திரும் !

வள்ளி : பார்வதி அம்மா ரொம்ப நல்லவங்க மச்சான்!

மேகலிங்கம் : அவங்க நல்லவங்களாகவே இருக்கட்டும்; நான் அவங்களைப் பத்தி குறை சொல்லலே! ஆனா.... குழந்தைக்கு உதவணும்னு நாம நல்ல மனசோட சேர்த்து வைக்குற பணத்துக்குக் கெடுதல் வரக் கூடாது. ஞாபகம் வச்சுக்கோ........!

வள்ளி : அப்படின்னா சீட்டுப் போட வேண்டாம்! பணத்தை நம்ம வீட்டுலேயே வச்சுக்கலாம்னு பாக்கிறிங்களா?.. அது முடியாத காரியம்! ஏதாவது அவசரம்னா நாமே எடுத்துடுவோம்...! அஞ்சு மாசமா உண்டியலிலே சேர்த்து வைச்ச பதினைஞ்சு ரூபாப் பணத்தை போன மாசம் நீங்க தானே எடுத்துச் செலவு செய்திங்க?

மேகலிங்கம் : ஆமா புள்ளே! யாரு இல்லேன்னு சொன்னாங்க! இப்படி எல்லாம் ஏற்படும்னு தெரிஞ்சுதான் நம்ம தமிழ்நாடு சர்க்கார் சேமிப்பைப்பத்தி ரொம்ப அக்கறை எடுத்துவருது! சிறு சேமிப்புத் துறைன்னே ஒரு துறையை ஏற்படுத்தியிருக்கு! அதுக்கு நம்ம தமிழ்நாட்டு முதலமைச்சர்தான் தலைவர். துணைத் தலைவர் யாரு தெரியுமா?

வள்ளி : எனக்கென்ன தெரியும் மச்சான் நீங்களே சொல்லுங்க!

மேகலிங்கம் : சொல்றேன் சொல்றேன்! நம்ம பரங்கிமலைத் தொகுதி எம். எல். ஏ, எம். ஜி. ஆர் இருக்கிறாரே. அவருதான் துணைத் தலைவர். அவரு துணைத் தலைவரா ஆனதுக்கப்புறம் இந்த சிறு சேமிப்பு திட்டத்துக்கே பெரிய மதிப்பு ஏற்பட்டிருக்கு!

வள்ளி : அப்படியா எனக்கு ரொம்ப ஆச்சரியமா இருக்கு மச்சான்!

மேகலிங்கம் : இதிலே ஆச்சரியப்படுறதுக்கு என்ன இருக்கு புள்ளே! சரியான திட்டத்தைச் சரியானவரு கிட்டே ஒப்படைச்சிட்டுப் போயிருக்காரு நம்ம அண்ணா.

வள்ளி : ஓகோ! இதெல்லாம் நம்ம அண்ணாவோட திட்டம்தானா?

மேகலிங்கம் : ஆமா புள்ளே! நம்ம நாடு நல்லா இருக்கணும்கிறதுக்காக அந்த உத்தமரு அபூர்வமான திட்டங்களையெல்லாம் ஏற்படுத்திட்டுப் போயிருக்கிறாரு! அவரோட எண்ணத்தை எல்லாம் நிறைவேத்திறதுக்குத் தகுந்த ஒருத்தரு இப்ப முதலமைச்சரா இருக்கிறாரு! அதுனாலெ நாம எதுக்கும் கவலைப்பட வேண்டியதில்லே....

வள்ளி : ஆமா மச்சான்! பக்கத்து வீட்டுப் பார்வதி அம்மா கூட இதைத்தான் சொன்னாங்க!

மேகலிங்கம் : பக்கத்து வீட்டுப் பார்வதி அம்மா என்ன புள்ளே, சாட்சாத் பரமசிவம் சம்சாரம் பார்வதியைக் கேட்டா, அவங்க கூட இதைத்தான் சொல்வாங்க! மக்கள் குரலே மகேசன் குரல்னு சொன்னாரே நம்ம அண்ணா, அதை அப்படியே கண் போல பாதுகாத்து வர்றாரு நம்ம முதலமைச்சர். அதுனாலெ ஏழை எளிய மக்களுக்கு எவ்வளவோ நன்மைகளைச் செய்து வர்றாரு! அதிலே ஒண்ணுதான் இந்தச் சிறு சேமிப்புத் திட்டம்......புரியுதா?

வள்ளி : புரியுது மச்சான்!

மேகலிங்கம் : இதுலெ இன்னொரு விசேஷம் என்ன தெரியுமா புள்ளே!

வள்ளி : சொன்னாத்தானே மச்சான் தெரியும்!

மேகலிங்கம் : இந்தியா முழுதுக்கும் இந்தத் திட்டம் இருக்குது. ஆனா நம்ம தமிழ்நாட்டுலெ தான் இது நல்லபடியா நெறைவேத்தப்படுது!

வள்ளி : அதுக்குக் காரணம் என்ன மச்சான்!

மேகலிங்கம் : நம்ம நாட்டு மக்கள்தான் காரணம். எல்லாரும் மனசு வைச்சு இந்தத் திட்டம் வெற்றியடையிறதுக்குப் பாடுபடுறாங்க..

வள்ளி : அது சரி மச்சான் இந்தத் திட்டத்தைப் பத்தி நீங்க விளக்கிச் சொல்லலியே....

மேகலிங்கம் : ஆமா புள்ளே! மறந்து போயிட்டேன்...... திட்டத்தைப் பத்தி விளக்கமாகச் சொல்றேன். தெளிவாக் கேட்டுக்கோ!

வள்ளி : சொல்லுங்க மச்சான் சொல்லுங்க.

மேகலிங்கம் : தேசிய சேமிப்புப் பத்திரம்னு ஒரு பத்திரத்தை சர்க்கார் அறிமுகம் செய்திருக்காங்க.... இந்தப் பத்திரம் மூணு விதத்திலே இருக்கு.... பணக்காரங்க தங்களோட பணத்தை முதலீடு செய்து தேசிய சேமிப்புப் பத்திரம் வாங்கிக்கலாம். வருஷத்துக்கு நூத்துக்கு ஏழே கால் ரூபா வட்டியோட, வட்டியும், முதலும் சேர்த்து சர்க்கார் திருப்பித் தந்திடுது; நமக்கு இந்தத் திட்டம் லாயக்குப்படாது புள்ளே!

வள்ளி : என்ன மச்சான் நீங்கதானே தேசிய சேமிப்புப் பத்திரத்தைப் பத்தி புகழ்ந்து பேசுனீங்க.. இப்ப நமக்கு லாயக்குப் படாதுன்னு சொல்றீங்களே....!

மேகலிங்கம் : அவசரப்படாதே புள்ளே.... நம்மை மாதிரி மாத வருமானம் உள்ளவங்களுக்கு வேறொரு தினுசான திட்டம் இருக்குது.

வள்ளி : அப்படின்னா அதை மொதல்லே சொல்லுங்க மச்சான்!

மேகலிங்கம் : அதாவது மாசம் அஞ்சு ரூபாயோ அதுக்கு மேலேயோ நம்மாலே எவ்வளவு மு யுதோ அதை, மாசந் தவறாமே செலுத்தணும் நூத்துக்கு வருஷத்துக்கு ஆறே கால் ரூபா வட் யோட சேர்த்து திருப்பி வாங்கிக்கலாம். இதுக்கு தொடர் வைப்புத் திட்டம்னு பேரு வச்சிரு காங்க.

வள்ளி : பரவாயில்லியே..........இது நல் யோசனையா இருக்குது மச்சான்.

மேகலிங்கம் : அப்புறம்.... இன்னொரு திட்ட இருக்கு புள்ளே....

வள்ளி : எதுக்கு மச்சான் இத்தனை வித வி மான திட்டம்?

மேகலிங்கம் : ஒலகத்திலே பலதரப்பட்டவங் வாழ்றாங்க புள்ளே! ஒவ்வொருத்தருக்கு ஒ வொண்ணு புடிக்கும். உதாரணமாக, ஒரு தருக்கு ஜிலேபி பிடிக்கும்! ஒருத்தருக்கு லட் பிடிக்கும்! ஒருத்தருக்கு அல்வா பிடிக்கும்... எல்லாம் இனிப்புத்தான். ஆனா, அதிலே

ஒவ்வொருத்தருக்கு ஒவ்வொண்ணு பிடிக்குது பாரு. அது மாதிரி, திட்டம் ஒண்ணுதான், ஆனா அது செயலாகிற விதத்திலே சில சில பிரிவுகள் இருக்கு புள்ளே!

வள்ளி : மச்சான்! நீங்க விவசாய மேஸ்திரி தானே!

மேகலிங்கம் : ஏன் புள்ளே! ஏன் உனக்குத் திடீருன்னு சந்தேகம் வந்துட்டுது.

வள்ளி : இல்லே.... முன்னே எல்லாம், எந்தக் காய்கறிக்கு என்ன உரம் போடணும்னு விளக்கம் செய்விங்க.... இப்ப என்னன்னா சிறு சேமிப்பைப் பத்தி இவ்வளவு தெளிவா எடுத்துச் சொல்ல ஆரம்பிச்சிட்டீங்களே.

மேகலிங்கம் : இந்தா பாரு வள்ளி.... நம்ம நாடு முன்னேறணும்—நம்ம நாட்டு மக்கள் எல்லாம் அதுக்கு ஒத்தாசையா இருக்கணும்னு அமைச்சர்களெல்லாம் அடிக்கடி மக்கள் கிட்டெ வேண்டிக் கொள்றதைப் பார்த்தபோது எனக்கே அக்கறை ஏற்பட்டிருச்சு புள்ளே. ஒரு நாடு முன்னேறணுமின்னா, சர்க்கார் திட்டம் போடுறது மட்டும் போதாது; அந்தத் திட்டம் வெற்றிகரமா நெறைவேற பொது மக்களோட ஒத்துழைப்பும் அவசியம்.. அதனாலதான் சம்பளம் இல்லாத ஊழியனா—அதாவது சேவைத் தொண்டர்கள் மாதிரி நானும் சிறு சேமிப்பைப் பத்திப் பிரச்சாரம் செய்ய ஆரம்பிச்சுட்டேன்....அடடா, பாத்தியா. எங்கயோ ஆரம்பிச்சு எங்கேயோ வந்துட்டேன்......

வள்ளி : ஒங்க வழக்கமே இது தானே மச்சான்.

மேகலிங்கம் : கேலி இருக்கட்டும் வள்ளி. மாசச் சேமிப்புன்னு ஒரு திட்டம்இருக்குது..

வள்ளி : அதென்ன திட்டம் மச்சான்?

மேகலிங்கம் : அதாவது மாசத் தவறாமெ, ஒரு குறிப்பிட்ட தொகையை, ஒரு அஞ்சோ, பத்தோன்னுதான் வச்சிக்குவேயேன்.. .அதை 5 வருஷம் அல்லது 10 வருஷம் அல்லது 15 வருஷத்துக்கு கட்டிக்கிட்டு வர்றது.... கடையிலே 5 சத வீத வட்டியோட சேர்த்துத் திருப்பி வாங்கிக்கலாம்.

வள்ளி : இது நம்ம குடும்பத்துக்கு ஏத்த திட்டமா இருக்கு மச்சான்...

மேகலிங்கம் : இதிலே இன்னொரு வசதி இருக்குது புள்ளே. மாசம் இத்தனை ரூபா கட்டுறேம்னு நான் வேலை பார்க்குற இடத்திலே சொல்லிட்டா போதும், அவங்களே அந்தப் பணத்தை சிறு சேமிப்புத் திட்டத்துக்கு அனுப்பிடுவாங்க......! நமக்கு எந்த அலைச்சலும் இல்லே......தொல்லையும் இல்லே.

வள்ளி : அப்படின்னா ரொம்ப நல்லதாப் போச்சு மச்சான்.. பருத்தி புடவையாக் காய்ச்ச மாதிரி இருக்கு மச்சான் இந்தத் திட்டம். எப்ப ஆரம்பிக்கப் போறிங்க....?

மேகலிங்கம் : என்ன வள்ளி, வெவரம் புரியாதவளா இருக்கிறே? நீ சொல்ற அளவுக்கா நான் வச்சுக்குவேன்?

வள்ளி : நீங்க என்ன சொல்றிங்க மச்சான்?

மேகலிங்கம் : ரெண்டு மாசமா, "சம்பளப் பணத்துலே அஞ்சு ரூபா கொறையா வருதே அது ஏன்னு" கேட்டுக்கிட்டு வந்தியே. அதுக்கு இந்த சிறு சேமிப்புத் திட்டம் தான் காரணம். ரெண்டு மாசத்துக்கு முந்தியிருந்தே 5 ரூபா. போட ஆரம்பிச்சுட்டேன் புள்ளே

வள்ளி : மச்சான் நீங்க பெரிய ஆளுதான். எங்கிட்டயே மறைச்சிட்டீங்களே.

மேகலிங்கம் : மறைக்கத்தான் பார்த்தேன். முடியலியே. என் வாயைத் தோண்டி உண்மையை வெளிவரச் செய்திட்டியே நீதான் பெரிய ஆளு.

வள்ளி : இல்லெ மச்சான்.. நெறையச் செலவு செய்துக்கிட்டிருந்த ஒங்களை மாசம் 5 ரூபா சேமிக்க வச்சானே உங்க மகன் தங்கத்துரை அவன் தான் பெரிய ஆளு.

குறளின் குரல்

அருளென்னும் அன்பீன் குழவி பொருளென்னும்
செல்வச் செவிலியால் உண்டு

அறுபதாங் கல்யாணம்

26

மகாதேவன்

சென்னை நகரப் பூங்காக்களுக்கே ஒரு தனிச்சிறப்பு இருக்கிறது. ஏனென்றால் அவை முற்றிலும் செயற்கையான ஒரு சூழலில் செயற்கையாக அமைக்கப்பட்டுள்ள இயற்கைச் செல்வங்கள். அத்தகைய ஒரு பூங்காவின் ஒரு மூலையில் அடர்ந்து வளர்ந்திருந்த பூஞ்செடிகள் ஒன்றின் கீழ் மாலையில் இளம் உள்ளங்கள் இரண்டு கலந்து உறவாடின. டாக்டர் சுகுமாரும் டாக்டர் நளினியும் இன்று நேற்றுக் காதலர்கள் அல்ல. 2 ஆண்டுகளுக்கு முன் மருத்துவக் கல்லூரியில் படித்த நாட்களிலிருந்து காதலர்கள். ஆனால் இன்றும் காதலர்கள்தான் அவர்கள்! தினமும் மாலையில் இந்தப் பூங்காவில் சந்தித்து மற்றக் காதலர்கள் என்ன பேசுவார்களோ அதைத்தான் பேசுகிறார்கள். அவர்களுக்கு மற்றவர்களைப் பற்றிய கவ

இல்லை, ஆனால் பூங்காவில் இருக்கும் மற்றவர்கள் அவ்வள

தந்நலம் கொண்டவர்கள் அல்ல. அவர்களுக்கு இந்

[illegible] பற்றித் [illegible] பேச்சை, [illegible]

“[illegible]குமார், நீங்க ஏன் இன்[illegible]க்கு ஒருமாதிரியா இருக்கிங்க?”

“இல்லையே, சரியாத்தானே [illegible]க்கேன்?”

“எங்கே, இப்படி என்னைப் பார்த்துச் சொல்லுங்க!”

“நளினி உன்னைக்கூர்ந்து பார்த்தா, சொல்லே வாயிலே வரமாட்டேங்குதே”

“அப்படியா?”

“அப்படியேதான்...நளினி இப்படிக் கொஞ்சம் கிட்ட வாயேன்.....”

“என்ன, சொல்லுங்க! ”

“நாளைக்கு நீ என் ஹாஸ்பிடலுக்கு வர்றியா?”

“அப்பாடா! இத்தனை வருஷத்திலே முதல் தடவையா உங்க ஹாஸ்பிடலுக்கு என்னை வரச் சொல்லிக் கூப்பிடறிங்க. ஆமாம் நாளைக்கு என்ன விசேஷம்?”

“விசேஷம்.........கிசேஷம் ஒண்ணுமில்லை!”

“அப்போ சும்மா வேடிக்கை பார்க்கறதுக்கா?”

“அப்படித்தான் வைச்சுக்கயேன்.”

“இருந்திருந்து வேடிக்கை பார்க்க நல்ல இடத்தைக் கண்டு பிடிச்சிங்க. பைத்தியக்கார ஆஸ்பத்திரியிலே வேடிக்கைக்கு என்ன இருக்கு? என்ன குமார் முகத்தைத் திருப்பிக்கிட்டீங்க?”

“ஊம்...”

“சுகுமார் கோபமா? என்னை மன்னிச்சுடுங்க. புத்தி சுவாதீனமில்லாதவங்களுக்கு நாம் என்ன உதவி செய்தாலும் தகும். நான் நாளைக்கு...”

“நளினி நீ வரவேண்டாம்.”

“இல்லே சுகுமார்! நான் கட்டாயம் வருவேன்.”

“வேண்டாம் நளினி.”

ஐயா! உங்கள் பையனைக் கண்டித்து வைக்கக்கூடாதா? பெண்ணைப்போல் முடி வளர்த்துக் கொண்டு, பூப்போட்ட சட்டை போட்டுக் கொண்டு, ஹிப்பி மாதிரி.....சேச்சே....நல்லாவே இல்லையே !

நான் ஐயா இல்லே! அம்மா !!

“முடியாது. நான் கட்டாயம் வருவேன். அதுவும் உங்க ஸ்கூட்டரில்தான் வருவேன். என்னைக் கூட்டிக்கிட்டுப் போவீங்களா டாக்டர்.”

“நளினி நான் யோசிக்காமெ உன்னைக் கேட்டுட்டேன். காலேஜிலே படிக்கும்போதே நான் புத்தி சுவாதீனமற்றவர்களுக்கான சிகிச்சையிலே ஊக்கம் காட்டினேன். அதையே பயின்றேன். அந்தத் துறையிலேயே வேலையும் செய்கிறேன். எனக்கு அது விருப்பமான செயல். ஆனா உனக்கு குழந்தைகள் வைத்தியம் தான் பிரியம். நீ அதையே செய். இதிலே உனக்குப் பிடிக்காத...”

“சுகுமார் நீங்க என்ன சொன்னாலும் நான் கேட்கமாட்டேன். நான் கட்டாயம் நாளைக்கு உங்க ஸ்கூட்டரிலே உங்க மென்டல் ஹாஸ்பிட்டலுக்கு வரத்தான் போகிறேன்.”

“வேண்டாம் வேண்டாம். உன் விருப்பத்திற்கு எதிரா...”

“இதோபாருங்க! இப்போ எனக்குன்னு தனியா விருப்பம் எதுவும் இல்லே. உங்க விருப்பம் தான் என் விருப்பம். அடடே! உங்க புஷ் ஷர்ட்லே ஒரு கட்டெறும்பு. இப்படித் திரும்புங்க! இப்படி வாங்க! பின்னாடி போயிடுச்சி, இப்படி கொஞ்சம்....! அப்பாடா!”

“சலூன் நாற்காலியிலே ஆளை வைச்சு திருப்பறமாதிரி இப்படியும் அப்படியும் என்னை ஆட்டி வச்சுட்டே. எப்படியோ எறும்பைப் பிடிச்சியே”

“எறும்பு என்ன; உங்களையே ......!”

• • •

சுகுமாரும் நளினியும் ஸ்கூட்டரில் போகும் ஒலியைக் கேட்ட பிறகு பார்க் பெஞ்சியில் அமர்ந்திருந்தகிழவர்களுக்குப்பொழுதே போகவில்லை. வெறுப்புடன் அவர்களும் எழுந்தார்கள். ஒரு கிழவர் மற்ற கிழவரிடம் “என்ன கலி காலம் ஐயா இது. அந்தக் காலத்திலே இப்படி யெல்லாம் நடக்குமா” என்று முணுமுணுத்தார். அநாகரிகமாக எப்படி நடந்து கொள்கிறார்கள் என்று மற்றவர் சொன்னார். மூன்றாம் கிழவர், சரி நாளைக்கு 4 மணிக்கே வந்துவிடுவோம் என்று கூறி பஸ்ஸில் ஏறினார். அநாகரிகமான செயல் என்று எதை அவர்கள் வருணித்தார்களோ அதைக் காண்பதற்காக அவர்கள் பஸ்ஸுக்கும் காசு செலவழித்துத் தினமும் பார்க்குக்குவந்து கொண்டிருந்தார்கள். என்ன செய்வது...அந்தக் காலத்தில் இந்தக் காட்சி காணமுடியாமல் போய்விட்டதே!

மறுநாள் காலை ஏழு மணிக்கெல்லாம் ஜார்ஜ் மெண்டல் ஹாஸ்பிடல் வாயிலில் ஒரு ஸ்கூட்டர் நுழைந்தது. ஸ்கூட்டரில் டாக்டர் சுகுமாரும் பின் சீட்டில் டாக்டர் நளினியும் அமர்ந்திருந்தனர். ஸ்கூட்டரை நிறுத்திவிட்டு இருவரும் இறங்கி வார்டுக்குள் நடந்தனர். வழக்கத்துக்கும் முன்பாக டாக்டர் வந்துவிட்டதால் ஆஸ்பத்திரிச் சேவகர்கள் அவசர அவசரமாக ஓடியாடித் தம் கடமைகளைச் செய்தனர். “குட்மார்னிங்.... குட்மார்னிங் டாக்டர்” எனப் பல காலை வாழ்த்துக்கள் கேட்டன. சுகுமார் நளினியை அழைத்துக் கொண்டு கடைசி வார்டை அடைந்தான். அங்கே மூன்றாம் அறையின் கதவைத் திறந்தான். உள்ளேயிருந்து ஒரு முதியவர் ஓடி வந்தார். அவருக்கு அறுபது வயது இருக்கலாம். களையான முகம், கட்டான உடல்; இருந்தும் என்ன பயன்? அவர் மூளை நிலை குலைந்துவிட்டதே. சுகுமாரை வெறிக்க வெறிக்கப் பார்த்துவிட்டுப் பேசத் தொடங்கினார். “கமான் ஸ்டூடன்ஸ்...! இப்போ பிதாகோரஸ் தேற்றத்தை எப்படிப்போடவேண்டும் தெரியுமா? ஏன் பைத்தியத்தைப் போல முழிக்கிறாய்? தெரியாவிட்டால் நானே போடுகிறேன் பார். இந்தக் கரும்பலகையைப் பார்!”

நளினிக்கு அவர்மேல் இரக்கம் சுரந்தது.

“சுகுமார்...இவர் ஒருகாலத்தில் பள்ளிக்கூட ஆசிரியராக இருந்தவரோ?”

“ஊம்..... அதுதான் அவர் பேச்சிலிருந்தே தெரிகிறதே!”

“ஆமாம். இவருக்கு எப்படி இந்த நிலை வந்தது.? காரணம் ஏதாவது தெரியுமா ?”

“காரணம் நன்றாகத் தெரியும். எப்படிக் குணப்படுத்துவது என்பதுதான் தெரியவில்லை.”

“உஷ்....சத்தம் போடாதே. ஒரு செங்கோணத்தில் குறுக்கு வெட்டின் மீது வரையப்படும் சதுரம் அந்தச் செங்கோணத்தில் மற்ற இரு பக்கங்களின் மேல் வரையப்படும் சதுரங்களின் பரப்பளவுக்குச் சமம். இது எவ்வளவு சுலபமாக இருக்கிறது. இதைப் புரியவில்லை என்று ஏன் சொல்கிறீர்கள்? இதோ இந்தக் கரும்பலகையைப் பார்த்தீர்களா? அட மண்டுகளா? நீங்கள் உங்கள் புத்தியை உபயோகிக்க வேண்டும் ....”

“இந்தக் கேஸின் இஸ்டரி என்ன?”

“இவர் ஒரு கணக்கு ஆசிரியர். ஆரணிக்கு அருகில் ஒரு பள்ளிக்கூடத்தில் பணியாற்றி வந்தார். இவருக்கு 5 பெண்கள். ஒரு பையன் பிறக்க வேண்டும் என்று தவம் கிடந்து ஒரு பையன் பிறந்தான். அவன்மேல் இவர் உயிரையே வைத்திருந்தார். அவனுக்கு 8 வயதாகும்போது ஒரு நிகழ்ச்சி நடந்தது. தம்முடைய பெரிய குடும்பத்தைப் பராமரிக்கப் பெரும்பாடு பட்டு வந்தார் தந்தை. எங்கெங்கோ கடன் வாங்கிக் காலம் கடத்தி வந்தார். இருந்தும் மாதக்கடைசியில் அவர் வீட்டில் சாப்பிட ஒன்றுமே இருக்காது. அப்படி ஒரு நவம்பர் மாதக் கடைசி. அன்று வீட்டில் எல்லோரும் பட்டினி. சின்னப் பையன், செல்லப் பையனுக்காக, எப்படியோ பலரைக் கெஞ்சி, காலையில் அவனுக்குச் சாப்பாடு போட்டாகி விட்டது. மாலையில் என்ன செய்வது? இரவுக்கு எங்கே போவது? நாளைக்கு என்ன ஆவது? என்று அவர் குழம்பினார். எப்படியோ மாலையில் சிறுவனுக்கு விளையாட்டுக் காட்டிப் பசியை மறக்கச் செய்தார். ஆனால் இரவில் சிறுவன் பசியால் துடித்தான். அவருக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. தன் நண்பர் ஒருவரின் வீட்டுக்குச் சென்று, அன்று ஒரு நாளாவது தன் குடும்பத்துக்கு உணவு படைக்குமாறு கேட்டுக் கொள்ளும் நோக்கத்துடன், சைக்கிளில் ஏறினார். ‘ஐயோ.... ஐயோ...... அப்பா... அம்மா’

291

மூளையின் நிறை !

‘என்சாண் உடம்பிற்கும் சிரசே பிரதானம்’ என்பது உலகறிந்த மொழி. தலைக்கு அவ்வளவு சிறப்பு ஏற்பட்டதற்குக் காரணமே-தலைக்குள்ளே இருக்கும் மூளைதான்! காதுகளால் நாம் கேட்டாலும், கண்களினால் பார்த்தாலும், மூக்கினால் நுகர்ந்தாலும், நாவினால் சுவைத்தாலும், மெய்யினால் தொட்டாலும் அந்தச் செயல்கள் எல்லாம் மூளையின் கட்டளையால்தான் நடைபெறுகின்றன. ஆகவே ஒரு மனிதனுக்கு அவனது மூளைதான் அதிகாரி. சாதாரணமாக 150 பவுண்டு எடையுள்ள மனிதனாக இருந்தாலும் சரி, 250 பவுண்டு நிறையுள்ள மனிதனாக இருந்தாலும் சரி-பொதுவாக, மனித மூளையின் சராசரி எடை 51 அவுன்ஸ்தான் என்று மருத்துவ உலகம் கண்டுபிடித்திருக்கிறது. அதிலும் பெண்களின் மூளை, சராசரி எடையிலும் சுமார் 10 அவுன்ஸ் குறைவாக இருக்கிறதாம். இப்படி இருக்கும்போதே, பெண்கள் அகிலத்தை ஆட்டிப் படைக்கும் அறிவுக் கூர்மையுடன் காணப்படுகிறார்களே என்ற வியப்பு எழாமல் இல்லை. உலகத்திலேயே மிகமிக அதிகமான நிறையுடன் இருந்தது, மேல் நாட்டவரான ஆலிவர் கிராம்வெல் என்பவரின் மூளைதானாம். இவரது மூளையின் நிறை 90 அவுன்ஸ். பெரும் புகழ் பெற்ற ஆங்கிலக் கவிஞர் பைரனின் மூளை 79 அவுன்ஸ் நிறை இருந்ததாம்! பிரஞ்சு அரசியல்வாதியான கேம்பெட்டாவின் மூளை, சராசரிக்கும் குறைவு; அவரது மூளையின் நிறை 41 அவுன்ஸ்தானாம்!

அலறல் குரல் ஒன்று டு அதிர்ச்சி அடைந்து. சைக் அப்படியே போட்டுவிட்டு சத்தம் வந்த தோட்டத்திற்கு ஓடினார். அங்கே அவர் உயிருக்குயிரான செல்லப் பிள்ளை ஒரு மாமரத்தின் கீழே காலுடைந்து ரத்த வெள்ளத்தில் மயக்கமாகக் கிடந்தான். அவன் கையில் பாதி கடித்த ஒரு மாம்பழம். அவ்வளவுதான் .... பெரியவருக்கு லை 'கிர்' என்று சுற்றியது. அப் றம் சிந்தை கலங்கி.....''

இதற்குமேல் சுகுமாரால் பேச முடியவில்லை. அவன் தொண்டை அடைத்தது. அவன் விசும்பி விக்கி அழ ஆரம்பித்து விட்டான்.

நளினி தன் கண்ணீரை அடக்கிக்கொண்டு அவனுக்கு ஆறுதல் கூற முயன்றாள். ''சுகுமார்.... நீங்கள் டாக்டர் நீங்கள் அழக்கூடாது. வைத்தியம் செய்து குணப்படுத்துவதை விட்டுவிட்டு .....''

''நளினி—நான் ஒரு டாக்டராக மட்டும் இருந்தால் அழவே மாட்டேன். நான்....நான்.... அவருடைய மகன்! நான்தான் அவருடைய செல்லப் பிள்ளை. நான் அழாமல் எப்படி இருக்க முடியும் நளினி....!''

''ஆ....இவர் உங்கள் தந்தையா?''

''நளினி இவர்தான் என் தந்தை....நான் தான் இவருடைய செல்லப் பிள்ளை. மாமரத்தில் பசியின் கொடுமையால் பழம் பறிக்க ஏறிக்கீழே விழுந்தவன் நான்தான். ஆனால் என் கால் சரியாகிவிட்டது. அவர் சிந்தை தெளியவில்லை. அரசாங்க உதவிப் பணத்தால் படித்து டாக்டரானேன். இன்று என் தந்தையின் அறுபதாவது பிறந்த நாள். அறுபதாம் கல்யாணம் சீரும் சிறப்புமாக நடத்த வேண்டிய நாள். அதனால்தான் உன்னையும் அழைத்துக்கொண்டு வந்தேன். என் வாழ்க்கை முழுவதும் உன் துணையுடன் இவரைக் குணப்படுத்தவே முயலப் போகிறேன்.''

''சுகுமார் உங்களுக்கு வெற்றி நிச்சயம் கிடைக்கும். எனக்கும் இதைவிட முக்கியமான தொண்டு இனி எதுவும் இல்லை.''

நளினி துவண்டு சுகுமார்மேல் விழுந்துவிட்டாள்.

கட்டுப்பாடற்றுப் பெருகிய குடும்பம் ஒரு மனிதனை எந்த இழிநிலைக்குக் கொண்டு வந்துவிட்டது என எண்ணி எண்ணி அவன் வருந்தினான்.

அண்ணல் சொல் கேளீர்!

இந்திய மக்கள் இமய முதல் குமரி வரை ஓரினமாக வாழ வேண்டுமானால், தமிழரல்லாத மற்ற மொழியினரும் தமிழுணர்தல் வேண்டும்.

• • •

இளம் வயதிலிருக்கும் குழந்தைகளை ஆங்கிலத்திலேயே எண்ணவும் பேசவும் பயில்விக்கும் இந்தியர்கள் தங்கள் குழந்தைகளுக்கும் நாட்டுக்கும் பெரிய துரோகம் செய்கிறார்கள். ஆங்கிலக் கல்வியினால் நமது குழந்தைகள் நம் நாட்டின் பரம்பரையான சமுதாயச் செல்வங்களை இழந்து விடுகிறார்கள்.

விளக்கெண்ணெய்
விமான
இஞ்சினுக்கு

“வெண்டைக்காய், விளக்கெண்ணெய், கற்றாழை.”

வழவழாத்தனத்தை வர்ணிக்க உதவும் பழைய சொல்லடுக்கு இது.

இன்று, விமான இஞ்சினுக்கு விளக்கெண்ணெய.

நவீன மருந்துகள், ரசாயனங்கள் செய்வதற்கு விளக்கெண்ணெய்.

நாட்டின் முன்னேற்றத்துக்கு மிக முக்கியமாகத் தேவைப்படும் அந்நிய நாணய செலாவணியைப் பெருக்க உதவும் விளக்கெண்ணெய் என்ற அளவில் விளக்கெண்ணெயின் பயனும் பெருமையும் உயர்ந்து விட்டன! ஆமணக்குச் சாகுபடியை மேம்படுத்தப் புதிய திருந்திய முறைகளும் செயல்படத் தொடங்கிவிட்டன.

பூங்குழந்தையின் மென்மையான குடல்உறுப்புகளைத் தீதின்றி தூய்மைப் படுத்தவும் மற்றும் பல மருந்துகளுக்கும் பயன்படுகின்றது விளக்கெண்ணெய்.

பல மைல் தூரத்துக்குக் கேட்கும்படியாக ஹுங்கார ஓசையுடன் வானைக் கிழித்துக்கொண்டு செல்லும் விமானத்தின் பேரற்புதம் வாய்ந்த இஞ்சின் பாகங்களுக்கும் இதே விளக்கெண்ணெய்தான் மிகச் சிறந்த, மிகப் பொருத்தமான உயவாகிறது.

விளக்கெண்ணெயில் அப்படிப்பட்ட ஒரு தனிச் சிறப்பு!

மாறாத தன்மை.

தாழ்ந்த வெப்பத்திலும் இது இறுகுவதில்லை, உயர்ந்த வெப்பத்திலும் இதன் பிசுபிசுப்புக் குறைவதில்லை. இக்காரணங்களால் விமான இஞ்சின்களுக்கும் ஏனைய உள்ளெரி யந்திரங்களுக்கும் உயவிட இதுவே மிக ஏற்றதாக இருக்கின்றது. துருக்கி சிவப்பெண்ணெய் என்ற ரசாயனப் பொருளின் தயாரிப்பில் இது பயனாகின்றது. சவர்க்கார வகைகள் ஆமணக்கெண்ணெயில் தயாரிக்கப்படுகின்றன. தொன்று தொட்டே இதை விளக்கேற்றப் பயனாக்கி வந்திருக்கிறார்கள். ஆமணக்கெண்ணெய் விளக்கில் கரிப்புகை தோன்றுவதில்லை. மெழுகு வர்த்திகள், செயற்கை ரப்பர், பிளாஸ்டிக்குகள், மெருகெண்ணெய்கள் ஆகியவற்றின் தயாரிப்பிலும் இது பயனாகின்றது.

ஆமணக்குப் பிண்ணாக்கு நல்ல எருவாகின்றது, கரும்புப் பயிருக்கு மிகவும் ஏற்றது. ஆமணக்குத் தண்டு எரி பொருளாகவும், உயர்ந்த ரகக் காகிதம் செய்யவும் பயன்படுகின்றது.

முக்கியமான எண்ணெய் வித்துப் பயிர்களில் ஒன்றான ஆமணக்கு உலகில் பல்வேறு நாடுகளிலும் பயிர் செய்யப்பட்டாலும், பிரேஜில், இந்தியா இரஷியா, அமெரிக்கா, ஆப்பிரிக்கா, பாகிஸ்தான், தாய்லாந்து போன்ற நாடுகளில்தான் அதிகம் பயிராகின்றது. இந்தியாவில் இப்பயிர் நெடுங்காலத்திற்கு முன்பிருந்தே பயிர் செய்யப்பட்டு வருகிறது. உலகில் மற்றைய நாடுகளைக் காட்டிலும் இந்தியாவில் ஆமணக்கின் மொத்த உற்பத்தி அதிகம் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. 1967ஆம் ஆண்டில்மொத்த உலக உற்பத்தியில் இந்தியாவின் பங்கு 75 சதம் என மதிப்பிடப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் எல்லா மாவட்டங்களிலும் இப்பயிர் பரவலாகப் பயிர் செய்யப்பட்டாலும் முக்கியமாக தர்மபுரி, சேலம், கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில்தான் அதிகப் பரப்பளவில் பயிராகிறது.

ஆமணக்கு எண்ணெய் ஆஸ்திரேலியா, இலங்கை, ஆப்பிரிக்க நாடுகள், செக்கஸ்லோவேக்கியா, நேபாளம், மலேசியா, ஹங்கேரி, ஈராக், தாய்லாந்து, உகண்டா, அராபியா நாடுகள், பிரிட்டன், அமெரிக்கா, இரஷ்யா, யூகோஸ்லேவியா போன்ற ஏராளமான வெளிநாடுகளுக்கு இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்படுகிறது. 1967ஆம் ஆண்டு முதல் 1969 வரை வெளிநாடுகளுக்கு 4·73 கோடி இலே ஆமணக்கு எண்ணெய் ஏற்றுமதி செய்ததன் மூலமாக இந்தியாவிற்கு சுமார் 13·16 கோடி ரூபாய் வருவாய் கிடைத்துள்ளது.

மற்ற நாடுகளின் கலைச் சிறப்புக்கும் நமது நாட்டின் கலை வளர்ச்சிக்கும் அடிப்படையான ஒரு வித்தியாச மிருக்கிறது. செல்வ வளத்தோடு மற்ற நாடுகளிலே கலையை வளர்க்கிறார்கள். ஆனால் நம்முடைய நாட்டிலோஏழ்மையில் இருக்கும் போதே கலையும் வளர்க்கப்படுகிறது. நம்முடைய நாட்டு மக்களும் வறுமை நிலையிலும் கலைச் சுவையை நுகர்கிறார்கள்-கலைஞர்களை வாழ்த்துகிறார்கள்-வளர்க்கிறார்கள்-கலையை வளம் பெறச் செய்கிறார்கள் என்றால், செல்வச் செழிப்பிலே இந்நாட்டு மக்கள் இருப்பார்களானால் கலையை வளர்க்கும் கலைஞர்களை எவ்வாறெல்லாம் போற்றுவார்கள், பாராட்டுவார்கள் என்பதை எண்ணிப் பார்க்கும்போது நல்ல எதிர்காலம் இருக்கிறது என்ற பிரமை ஏற்படுகிறது.

ஆமணக்கு எண்ணெய் பலரகத் தொழில்களுக்கு மிக முக்கியமான மூலப் பொருளாக உபயோகப்படுத்தப்படுகிறது. உலகில் இவ்வெண்ணெயின் தேவை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. உலகின் தேவையைத் தற்பொழுது ஓரளவுக்கு இந்தியா பூர்த்தி செய்தாலும் முழுத் தேவையைப் பூர்த்தி செய்ய இந்தியாவில் ஆமணக்கின் உற்பத்தியைப் பெருக்குவது மிகவும் அவசியம்.

ஆந்திரா, பீகார், மகாராஷ்டிரா போன்ற மாநிலங்கள் இந்தியாவில் ஆமணக்கு உற்பத்தியில் பெரும் பங்கு வகிக்கின்றன. தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில் இப்பயிர் பெரும்பாலும் வரப்பு ஓரப்பயிராகவும், கலப்புப் பயிராகவும், தர்மபுரி, சேலம் ஆகிய மாவட்டங்களில் சில இடங்களில் மட்டும் தனிப்பயிராகவும் பயிரிடப்படுகிறது.

தமிழ்நாட்டில் தற்பொழுது பயிரிடப்பட்டு வரும் பொறுக்கு விதை ரகங்களாக டி.எம்.வி. 1, டி.எம்.வி. 2, மற்றும் டி.எம்.வி. 3 ஆகியவை சுமார் 6½—8 மாதங்கள் வரை வயதுடையவை. இவைகளைப் பயிரிட்டு நெடுங்காலத்திற்குப் பிறகு பயன் பெறுவதை விவசாயிகள் விரும்பாததால் தனிப்பயிராக ஆமணக்கைப் பயிர் செய்வதில்லை.

இக்குறைபாட்டினை நீக்க ஆராய்ச்சி செய்ததின் பலனாக சேலம்-1 என்ற குறுகிய கால ஆமணக்கு விதை, ஆமணக்கு ஆராய்ச்சி நிலையத்திலிருந்து (சேலம்) வெளியிடப்பட்டுள்ளது. இது 135–140 நாட்கள் வயதுடையது. மேலும் 53 சதம் வரை எண்ணெய் உடையது. இப்பயிர் ஜூன், ஜூலை மாதங்களில் பயிரிட ஏற்றது. இந்த சேலம்-1 என்ற பொறுக்கு விதை ரகத்தைத் தனிப்பயிராக 2,500 கிலோ தொழு உரம், 15 கிலோ தழைச் சத்து, 15 கிலோ மணிச்சத்து, 8 கிலோ சாம்பல் சத்து என்ற அளவில் உரமிட்டு மானாவாரியாகப் பயிர் செய்தால் தமிழ்நாட்டில் ஆமணக்கு உற்பத்தியைப் பெருக்க முடியும். இப்பயிரைத் தனிப்பயிராக மானாவாரியில் பயிர் செய்தால் ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 350 முதல் 400 வரை நிகர வருமானம் கிடைக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது போக ஒட்டுச் சேர்க்கை முறையும், சங்கர ரகங்கள் மூலமும் குறுகிய கால ஆமணக்கு விதை ரகம் கண்டு பிடிக்க ஆராய்ச்சிகள் நடந்துகொண்டு வருகின்றன. இவ்வாறு குறுகியகால ஆமணக்கு விதை ரகங்கள், பயிர் செய்ய வெளியிடப்பட இருக்கின்றன.

தமிழ்நாட்டில் ஆமணக்கை ஏராளமான மானாவாரி நிலங்களில் தனிப் பயிராகப் பயிர் செய்தால் தமிழ்நாட்டில் ஆமணக்கு உற்பத்தி பெருகுவதுடன் ஆமணக்கு எண்ணெயை வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து தமிழ்நாட்டின் வருமானத்தையும் பெருக்கலாம்.

எழும்பூரிலுள்ள சிறுவர் மருத்துவ மனைக்கு நாள் தோறும் நூற்றுக்கு மேற்பட்ட சிறுவர்கள் இளம் பிள்ளை வாதம் (போலியோ) என்ற நோய்க்காகச் சிகிச்சைபெற அழைத்து வரப்படுகின்றனர்.

தடுப்பு ஊசி போட்டுக் கொள்ளாத குழந்தைகளைத் தான் இந்த நோய் பீடிப்பதாகத் தெரிவிக்கிறார், டாக்டர்.

சிறுவர்களை அதிகமாகப் பாதிக்கும் கக்குவான், தொண்டை அடைப்பான், இளம் பிள்ளைவாதம் போன்ற நோய்களைத் தடுப்பதற்காக "மூன்று ஊசி" போடும் திட்டம் உள்ளது. இந்த ஊசியைச் சிறுவயதிலேயே போட்டுக்கொள்ளும் குழந்தைகளை இந்த நோய்கள் பாதிப்பதில்லை.

மேலுள்ள படத்தில் இளம் பிள்ளைவாதம் வந்த 6 மாதக் குழந்தையை டாக்டர் பரிசோதித்துப் பார்க்கிறார்.

நீறு பூசிய நெடுஞ்சாலை

நெய்வேலி, பேசின் பிரிட்ஜ் ஆகிய இரண்டு இடங்களிலுமுள்ள அனல் மின் நிலையங்கள் நிலக்கரியை எரி பொருளாகப் பயன்படுத்துகின்றன. பயன்படுத்தப்பட்ட நிலக்கரியிலிருந்து கிடைக்கும் நீற்றின் (சாம்பலின்) தன்மையை ஆராய்ந்து ஆக்க வேலைக்குப் பயன்படுத்தும் வகையில் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

சிமெண்டு, மணல் ஆகியவற்றுடன் நிலக்கரி நீற்றையும் கலந்து கற்காரை (Dense Concrete) தயாரிப்பதற்கான சோதனைகள் செய்யப்பட்டன. குறிப்பிட்ட விகிதத்தில் மணல், சிமெண்டு, நீறு இவற்றைக் கலந்து கற்காரை தயாரிக்கும் முயற்சி வெற்றிபெற்றிருக்கிறது. கற்காரைத்தயாரிப்பில் நீற்றைப் பயன்படுத்தினால் 21 சதவிகித சிமெண்டு மிச்சப்படுகிறது.

சுண்ணாம்பு, மணல் ஆகியவற்றுடன் நீற்றையும் கலந்தால் சுண்ணாம்பு மிச்சப்படுவதுடன் உறுதிமிக்க காரையும் கிடைக்கிறது. சென்னையில் பேசின் பிரிட்ஜில் உள்ள அனல் மின் நிலையத்திலிருந்து கிடைக்கும் நீற்றைப் பயன்படுத்தினால் கற்காரை தயாரிப்பதற்காகும் தற்போதைய செலவில் 8 சதவிகிதம் மிச்சமாகும். நீற்றைப் பயன்படுத்திக் காரைப் பலகைகள் (Concrete Slabes) செய்யும் சோதனையும் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

மணல், சுண்ணாம்பு நீறு இவற்றைச் சேர்த்து உறுதி மிக்க கலவையைப் பெற முடியும் மணல் நீறு, சுண்ணாம்பு ஆகியவற்றை முறையே 75 : 23 : 2 அல்லது 80 : 18 : 2 என்ற விகிதத்தில் கலந்து சாலை அமைப்புக்குப் பயன்படுத்தப்படுகிறது. இப்படிப்பட்ட கலவையைப் பயன் படுத்தி இராமேசுவரம் தனுஷ்கோடி பாதையில் 2 ஹெக்டாமீட்டர் தொலைவுக்குச் சாலை அமைபட்டிருக்கிறது. இது ஒரு சோதனைக்காக அமைக்கப்பட்ட சாலைதான். கடந்த ஒன்றரை யாண்டுக் காலமாக உறுதிமிக்க நிலையில் இருந்து வருகிறது.

சாலைக்குரிய சரளைக்கல் இல்லாத அல்லது சரளைக் கற்களின் விலை அதிகமாக உள்ள பகுதிகளுக்கு இவ்வகைக் கலவை பெரிதும் பயன்படும் ; செலவும் குறையும். பசைக் கருங்காரை (Mastic Asphalt) தயாரிப்பதற்கும் இக்கலவையைப் பயன்படுத்துவதற்கான சோதனையும் சென்னையிலுள்ள நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தினரால் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

எங்களது நல்வாழ்த்துக்கள் !

அஜாய் எஞ்சினியரிங் ஒர்க்ஸ்,
பி-18/19. தொழிற்பேட்டை.
கிண்டி, சென்னை-32.

தந்தி : TIN BOX. தொலைபேசி : 801468.

* எல்லாவிதமான டின்கள், குவளைகள், தொட்டிகள், வாளிகள், சைக்கிள் சாமான்கள், நுணுக்கமான பாகங்கள் தயாரிப்பவர்கள்.
* சிறிய எஞ்சினியரிங் தயாரிப்புகள், உலோக மேஜை—நாற்காலிகள், சுருள் கதவுகள், கதவுகள், சன்னல்கள் உருவாக்குபவர்கள்,
* நிக்கல், பளபளப்பான நிக்கல், குரோமியம், காட்மியம், துத்தநாகம், தகரம், செம்பு ஆகியவற்றிற்கு எலக்ட்ரோபிளேட்டிங் செய்வதில் வல்லுநர்கள்.

கோட்டையில் கொத்தளத்தில்...!

விடுதலைத் திருநாள்.

நம் நாட்டின் தேசியத் திரு ாள்.

எல்லா மக்களும், எல்லாக் ட்சியினரும், எல்லாப் பகுதி னரும் கருத்து வேற்றுமை ன்றிக் கொண்டாட வேண்டிய பருநாள்.

ஆனால் இக் கருத்து ஏனோ முழுமையாக மக்கள் மன்றத்தில் பரப் ப்படவில்லை. அதற்குரிய அடிப் டை முயற்சிகளும் மேற்கொள் ப்பட வில்லை.

சுதந்திரத் திருநாள் ஒருசிலர் ான் கொண்டாட வேண்டிய ழா என்ற நிலை எப்படியோ வியிருந்தது ; அந்நிலை கடந்த ண்டு நம்முடைய அரசால் ாற்றப்பட்டது !

கோட்டையில், கொத்தளத் ல் கடந்த ஆண்டு நடை பெற்ற னைத்துக் கட்சிகள் பங்கேற்ற விடுதலை விழா ' நிகழ்ச்சி ந்தியாவில் உள்ள ஏனைய ாநிலங்களுக்கு வழிகாட்டி ாகத் திகழ்ந்தது.

அந்நிகழ்ச்சிப் படங்களைத் ான் எதிர்ப்பக்கத்தில் நீங்கள் ாணுகின்றீர்கள் !

கடந்த ஆண்டு அக் கூட்டத்தில் நம்முடைய முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்கள் தம்முடைய உரையில் குறிப்பிட்டார்கள்.

‘‘ நம் நாடு விடுதலை பெற்று 22 ஆண்டுகள் ஓடி விட்டன. இப்பொழுது தான் அனைத்துக் கட்சியின் சார்பில் விடுதலை நாள் விழா முதல் முறையாகத் தமிழகத் தலைநகரில் கொண்டாடப்படுகிறது.

‘‘விடுதலைக்காக இரத்தம் சிந்தியவர்களுக்கும், நாடு கடத்தப்பட்டவர்களுக்கும் உயிர்விட்டவர்களுக்கும் இன்னல்பட்டவர்களுக்கும் மற்ற தியாகிகளுக்கும் நாம் வணக்கம் செலுத்தக் கடமைப் பட்டுள்ளோம். சுதந்திரம் காக்கும் பணியில் கட்சி வேறுபாடு ஏதுமின்றி உழைத்திடல் வேண்டும் !

‘‘இன்றுதொடங்கும் இப்பணி, நாட்டின் எதிரியை விரட்ட ஒன்றுபடுவோம் என்பதற்கு எடுத்துக் காட்டாக அமையும். எல்லோரும் ஒற்றுமையாக இருந்து நாட்டிற்கு ஏற்படுகின்ற ஆபத்தை முறியடிப்போம் என்பதை நினைவுபடுத்தும் வகையில் அடுத்த ஆண்டும் அனைத்துக் கட்சிகளின் சார்பில் விடுதலை நாள் விழா கொண்டாடப்படும்.’’

முதல்வர் குறிப்பிட்டது போல் இவ்வாண்டும் கோட்டையில், கொத்தளத்தில், இந்தியாவிலேயே மிக உயரமான கொடி மரத்தின் நிழலில், விடுதலை நாள் விழா கொண்டாடப்படுகிறது !

எத்தனையோ துறைகளில் எல்லா மாநிலங்களுக்கும் வழிகாட்டியாகத் திகழும் தமிழகம் விடுதலை நாள் விழாவைக் கொண்டாடுவதிலும் வழிகாட்டியாக விளங்கிடுதல் நம் அனைவருக்கும் பெருமையாகும் !

❁

வண்ணப் படங்களில்

எதிர்ப் பக்கத்தில்..கடந்த ஆண்டு சென்னைக் கோட்டையில் கொத்தளத்தில் நடைபெற்ற விடுதலை விழாக்காட்சிகள்!

அடுத்த பக்கங்களில்..காஞ்சி தந்த கலையான கடல்மல்லையில் காணப்படுகின்ற கண்கவரும் சிலைகள் பண்டைத் தமிழகத்தின் நிலையைக் காட்டுகின்றன.

இதைப்பற்றிய சிறப்புக் கட்டுரை அடுத்த இதழில் வருகிறது.

கடைசிப் பக்கத்தில்..பாரிசில் நடைபெற்ற மூன்றாம் உலகத் தமிழ் மாநாட்டுக் காட்சிகள், முதல்வர் துவக்க உரை நிகழ்த்துகிறார். நிதியமைச்சர் சிறப்புரையாற்றுகிறார்.

❁



ஆவணி பிறந்தது

"பருவத்தே பயிர் செய்" என்பது பழமொழி. "திட்டமிட்டுச் செய்" என்பது புதுமொழி. இப்பழமொழியும், புதுமொழியும் வேளாண்மை வெற்றிக்கு அடிப்படையாகும்.

பருவத்திற்கேற்ற பயிர்களையும், அப்பயிர்களுக்கேற்ற சாகுபடி முறைகளையும் அறிந்து, முன்கூட்டியே திட்டமிட்டு, திட்டமிட்டபடி குறிப்பிட்ட பயிர்களை, குறிப்பிட்ட காலத்தில், குறிப்பிட்ட முறைகளை மேற்கொண்டு சாகுபடி செய்தால், வேளாண்மை உற்பத்தியும் பெருகும்; வேளாண்மையைத் தொழிலாகக் கொண்டுள்ள உழவர் பெருமக்களின் வாழ்வும் வளம் பெறும்; நாடும் நலம் பெறும். இந்த இலட்சியத்தை அடிப்படையாகக் கொண்டே ஆவணி மாதத்தில் செய்ய வேண்டிய சாகுபடி வேலைகளைக் கீழே படைத்துள்ளோம். உழவர் பெருமக்கள் படித்துப் பயனடைவார்களாக :—

1. நெல்.—ஆவணி மாத முதற் பகுதியில் முன் போக சம்பா நெல் தினுசுகளுக்கு நாற்றுவிடலாம். உயர் விளைச்சல் நெல் தினுசுகளான ஐ.ஆர். 8, ஐ.ஆர். 5, ஜெயா, கோ. 25 ஆகியவைகளையும், சாதாரண நெல்லில் பொறுக்கு தினுசுகளான ஜீ.இ.பி. 24, கோ. 30, கோ. 32, கோ. 19, பி.ஏ.எம். 3. பி.டி.பி. 1 ஆகியவைகளையும் நாற்றுவிடலாம்.

நாற்றங்கால் தயாரித்தல்.—தற்பொழுது உழவர் பெருமக்கள் அதிக அளவு விதைகளைக் குறுகிய பரப்பில் விதைக்கிருர்கள். இதனுல் நாற்றுகள் நெருக்கமாக வளர்ந்து மெலிந்து காணப்படுகின்றன. இவைகளை நடும்போது, நாற்றுகள் ஒடிந்து சேதமடைகின்றன. எனவே, நாற்றுவிட, வேளாண்மைத்துறை சிபாரிசு செய்யும் பரப்பளவு நாற்றங்காலையும், விதையளவையும் மேற்கொள்வதே நல்லது.

பரப்பளவு.—பொதுவாக ஒரு ஏக்கர் நடுவதற்கு 10 சென்ட் நாற்றங்கால் வீதம், நாற்றங்கால் தயாரிக்கவும். ஐ.ஆர். 8 நெல்லிற்கு, ஏக்கருக்கு 10 சென்ட் நாற்றங்காலும், ஐ.ஆர். 5, கோ. 25, ஜெயா ஆகியவகைகளுக்கு 12 சென்ட் நாற்றங்காலும் தேவை. மற்ற வகைகளுக்கு 10 சென்ட் நாற்றங்காலே போதுமானது. நாற்றங்காலை இரும்புக் கலப்பையால் நன்கு உழுது பண்படுத்தவும். நாற்றங்காலுக்கு 2 வண்டி தொழு எருவோ அல்லது கம்போஸ்ட் எருவோ அல்ல 1 வண்டி தழை உரமோ இடவும். நாற்றங்காலில் 4 முதல் 5 அ அகலமுள்ள மேட்டுப்பாங்கா பாத்திகளை அமைக்கவும்.

விதையளவு.—ஒரு ஏக்க நடவு செய்வதற்கு வேண் நாற்றுவிட ஐ.ஆர். 8, கோ. ஆகிய தினுசுகளில் 15 கி விதையும், இதர தினுசுகளு 18 கிலோ விதையும் தேவை கும்.

விதையுடன் மருந்து கலத்த விதைகள் மூலம் நோய் பர தைத் தடுக்க, விதைகளைப் சாள மருந்துகளுடன் ந கலக்க வேண்டும். ஐ.ஆர். ஜெயா நெல்லிற்கு 22·5 விட் (5 காலன்) தண்ணீரில் 2 கிராம் ஈர கரிம பாதரசக்கல யைக் கரைத்து, கரைத்த



ில் 15 கிலோ விதையைக் நனைத்து 8 மணி தல் 10 மணி நேரம் ஊற வைக்கவும். அதன் ன் விதைகளை எடுத்து முளைக்க வைக்கவும். ற நெல் வகைகளுக்கு ஒரு கிலோ விதைக்கு கிராம் என்ற அளவில் அக்ரோசான் அல்லது ரசான் மருந்தைக் கலக்கவும். விதைகளையும் ந்தையும் விதை கலக்கும் கருவியில் இட்டு கு கலக்குதல் நல்லது.

விதைத்தல்.—மருந்து கலந்தபின் விதைகளை ளக்க வைக்க வேண்டும். முளைவிட்ட விதை , நாற்றங்காலில் அமைக்கப்பட்டுள்ள மேட்டுப் ங்கான பாத்திகளில் திட்டமாக விதைக்கவும். செண்ட் நாற்றங்காலுக்கு 1½ கிலோ வீதம் வந்த விதையை விதைக்க வேண்டும்.

நாற்றங்காலில் களையெடுத்தல்.—நாற்றங் ில் களைகள் தோன்றினால் அவ்வப்போது அவை அப்புறப்படுத்தல் வேண்டும்.

ஆடி மாதத்தில் விடப்பட்ட நாற்றுகளுக்கு ண்ட முறைகளைப் பின்பற்ற வேண்டும்.

நாற்றங்காலில் இரசாயன உரமிடல். ஐ. 8 நெல் நாற்றுப் பறிப்பதற்கு 10 அல்லது 12 களுக்கு முன்பாக 5 கிலோ தழைச் சத்து தை (அதாவது 25 கிலோ அமோனியம் சல் அல்லது 10 கிலோ யூரியா) நாற்றங்காலுக்கு வும். இதர வகை நாற்றுகள் நன்கு வளர யானால், செண்டுக்கு ½ கிலோ வீதம் அமோனியம் சல்பேட் உரத்தை நாற்றுப் பறிப்பதற்கு 10 நாட்களுக்கு முன்னர் போடவும்.

நாற்றங்காலுக்கு மருந்து தெளித்தல்.—ஐ. ஆர். 8 நாற்றுப் பறிப்பதற்கு ஒரு வாரம் முன்பாக 0.05 சத பாரத்தியானை (100 சி.சி. பாரத்தியானை 100 லிட்டர் தண்ணீரில் கலந்து) டைத்தியோகார்பமேட் மருந்துடன் (குமான் 0·1% (100 கிராம் மருந்தை 100 லிட்டர் தண்ணீரில் கலந்து) அல்லது ஸினப் 0·2% (200 கிராம் மருந்தை 100 லிட்டர் தண்ணீருடன் கலந்து) தெளிக்கவும். இதர வகை நாற்றுப் பறிப்பதற்கு ஒரு வாரத்திற்கு முன்பாக 0·05 சத பாரத்தியான் அல்லது 0·04 சத என்ட்ரின் மருந்தைத் தெளிக்கவும்.

நாற்றின் வயது.—நாற்றுகளைக் குறிப்பிட்ட நாளில், நாற்றங்காலில் இருந்து பறித்து நடவு செய்வது மிகவும் முக்கியம். மிகவும் குறைந்த வயதுடைய நாற்றுகளையும், மிகவும் வயதான நாற்றுகளையும் நடுவதால் மகசூல் கணிசமாகக் குறைந்து விடுமாதலின், குறிப்பிட்ட நாளில் நாற்றுக்களை நட்டு விடுதலே நல்லது. எனவே, கீழே குறிப்பிட்டுள்ள நாட்களில், நாற்றுகளைப் பறித்து நடவு செய்யுமாறு பரிந்துரைக்கப்படுகிறது.

ஐ.ஆர். 8	..	26 முதல் 28 நாட்கள்.
ஜெயா	..	..
கோ. 32	..	..
ஐ.ஆர். 5	..	28 முதல் 30 நாட்கள்.
கோ. 25	..	40 முதல் 45 நாட்கள்.
கோ. 19	..	..
ஜி.இ.பி. 24	..	30 முதல் 35 நாட்கள்.
கோ. 30	..	..
பி.ஏ.எம். 3	..	..
பி.சி.பி. 1	..	35 முதல் 40 நாட்கள்.



நாற்று நடுதல்: நாற்றுகளைக் கூடுமானவரை வரிசையில் நடுவதே சிறந்தது. கோ. 25 நெல் நட, வரிசைக்கு வரிசை 20 செண்டி மீட்டரும் (8 அங்குலம்), வரிசையில் பயிருக்குப் பயிர் 12·0 செண்டி மீட்டரும் (5 அங்குலம்) இடைவெளி விட்டு குழிக்கு 2 நாற்றுகள் வீதம் நடவு செய்யவும். மேற்கூறிய இதர வகைகளுக்கு வரிசைக்கு வரிசை 20 செண்டி மீட்டரும் (8 அங்குலம்), வரிசையில் பயிருக்குப் பயிர் 10 செண்டி மீட்டரும் (4 அங்குலம்) இடைவெளி விட்டு, குழிக்கு 2 நாற்றுகள் வீதம் நடவும்.

நடவு வயல் தயாரித்தல்: ஆடி மாதத்தில் விடப்பட்ட நாற்றுகளை இம்மாதத்தில் நடவேண்டு மாதலின், நடவு வயல் தயாரிக்கும் வேலையில் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும்.

நடவு வயலை இரும்புக் கலப்பையால் 3 முறை நன்கு உழவேண்டும். ஏக்கருக்கு 10 வண்டி தொழு எருவையோ அல்லது கம்போஸ்ட் எருவையோ இட்டுச் சேற்றுடன் நன்கு கலக்குமாறு உழுதுவிட வேண்டும். அல்லது ஏக்கருக்கு 2,300 கிலோ (5 வண்டி) பசுந்தாளுரமிட்டுத் தழை மிதிக்கும் கருவியால் அல்லது பரம்பு சட்டத்தால் தழைகளை நன்கு சேற்றில் அழுத்தவும். கூண்டுச் சக்கரம் (கேஜ் வீல்) இணைக்கப்பட்ட டிராக்டர் உபயோகித்தால், நிலத்தில் குறுக்கும் நெடுக்குமாக

2 முறை உழுது, பின்னர் பரம்புப் பலகையா நிலத்தினைச் சமப்படுத்தவும்.

அடி உரமிடுதல். ஒவ்வொரு வகை நெ விற்கும் வேளாண்மைத்துறை பரிந்துரை செய்யு அளவு தழைச்சத்து, மணிச்சத்து, சாம்பல் சத் இரசாயன உரங்களை அடி உரமாக இட வேண்டும் கடைசி உழவின்போது பரிந்துரை செய்யப்படு அளவு மணிச்சத்து, சாம்பல் சத்து உரங்களை இ வும். உழுவதற்கு டிராக்டர் உபயோகப்படுத்த பட்டால், மணிச்சத்து, சாம்பல் சத்து உரங்க இரண்டாவது உழவிற்கு முன் போடவும். தழை சத்து உரத்தை, நடுவதற்கு முன்பு போட வே டும். எந்த வகைக்கு எவ்வளவு அடி உரம் இ வேண்டும் என்பதற்குக் கீழ்க்கண்ட அட்டவ துணை புரியும்.

	அடி உரமாக இட வேண்டிய அளவு கிலோவில்.		
	தழைச் சத்து.	மணிச் சத்து.	சாம்ப சத்து.
ஐ.ஆர். 8, ஜெயா.	50	35	35
ஐ.ஆர். 5 ..	27	21	21
கோ. 25, கோ. 32	17	21	14
கோ. 30, ஜி.இ.பி. 24, கோ. 19, பி.ஏ.எம். 3, பி.சி.பி. 1	7	14	7

மேற்கண்ட அளவு சத்துக்கள் கிடைக்கத் தே யான இரசாயன உரங்களை இட வேண்டி மிகவும் அவசியம்.

றுவை நெல்:—

வைகாசி, ஆனி மாதங்களில் நாற்றுவிட்டு டப்பட்ட ஆடுதுறை 27, கோ. 29, ஐ.ஆர். 8, ஜயா, கருணா ஆகிய தினுசுகளுக்கு கீழ்க்கண்ட றைகளை மேற்கொள்ளவும்.

ல் உரம் :—

ஆடுதுறை-27, கோ.-29 ஆகியவைகளுக்கு ற்று நட்ட 30-ம் நாள் 14 கிலோ தழைச்சத்து ரத்தை மேலுரமாக இடவும். ஐ.ஆர். 8, ஜயா ஆகியவைகள் நடப்பட்ட 35 நாட்களுக்குப் ன் 25 கிலோ தழைச்சத்து உரத்தையும்' ருணா'' நெல் நடப்பட்ட 25 நாளில் 25 கிலோ ழைச்சத்து உரத்தையும் மேலுரமாக இட ண்டும்.

களையெடுப்பு.—ஆடுதுறை-27, கோ.-29 யவைகள் நடப்பட்ட 30 நாளிலும், ஆர். 8, ஜெயா ஆகியவைகளுக்கு நட்ட 40-வது ளிலும் இரண்டாவது முறை களையெடுக்கவும்.

பயிர்ப் பாதுகாப்பு.—ஆடுதுறை-27, கோ.-29 யா ஆகியவைகள் தொண்டைப் பூ கதிர் வத்தில் இருந்தால் 0·05 சத பாரத்தியானையோ லது 0·04 சத எட்ன்ரினையோ தெளிக்கவும். ஆர். 8 நெல்லிற்கு தொண்டைக் கதிர் (பூட்டை வத்தில்) மேற்கூறப்பட்ட மருந்துடன் ''டைத் யா கார்பமேட்'' கலந்து தெளிக்கவும்.

தானியங்கள் :—

பரும்பாலும் ஆனி, ஆடி மாதங்களிலேயே ளம், கம்பு, ராகி ஆகியவைகள் மானாவாரி விதைக்கப்பட்டு விடுவதால், அவைகளுக்குக் எடுத்தல், பயிர்ப்பாதுகாப்பு செய்தல் ஆகிய லகளை இம்மாதத்தில் மேற்கொள்ள வேண்டும். மநாதபுரம் மாவட்டத்தில் ஆவணி மாதத்தில் மானாவாரியாக ராகி பயிரிடுபவர்கள் கே. 2 கருஞ்சுருட்டை ராகியை விதைக்கலாம். சேலம், கோவை, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு மாவட்டங்களில் மானாவாரி கம்பு பயிரில் கதிர்கள் வந்தவுடன் ஏக்கருக்கு 4 கிலோ முதல் 8 கிலோ பி.எச்.சி. மருந்து தூவுதல் நல்லது.

நிலக்கடலை :—

ஆனி, ஆடி மாதங்களில் விதைக்கப்பட்ட மானாவாரி மணிலாவில் சிவப்புக் கம்பளிப் புழுக்கள் தோன்றி பெரும் சேதம் விளைவிக்கக்கூடும். சிவப்புக் கம்பளிப் புழுக்களை ஒழிக்கத் தமிழ் நாடு அரசு ஹெலிகாப்டர் ஆகாய விமானம் மூலமாக பெரும் பரப்பில் மருந்து தெளிக்க ஆவன செய்துள்ளது. இச்சலுகையை உழவர் பெருமக்கள் பயன்படுத்திக் கொள்வார்களாக.

பருத்தி :—

புரட்டாசிப் பட்டமான பருத்திக்கு ஆவணியிலேயே நிலம் தயாரிக்கவும். புரட்டாசிப் பட்டத்திற்குப் பொருத்தமான எம்.சி.யு. 5, ''பாரதி'' ஆகிய பருத்திகளின் விதைகளை முன்கூட்டியே வாங்கி வைத்துக் கொள்ளுங்கள்.

மேற்கூறிய முறைகளை உழவர் பெருமக்கள் பின்பற்றினால், உணவு உற்பத்தியும், மற்றும் வணிகப் பயிர்களின் உற்பத்தியும் பெருகும் என்பது திண்ணம். எனவே திட்டமிடுங்கள். திட்டமிட்டபடி செயல்படுங்கள். வெற்றி நிச்சயம்.

''எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்''

—குறள்.



CIPET



எத்தனையோ பேண்டுகள், சட்டைகள், சேலைகள் கண்ணைக் கவரும் வண்ணங்களில் வரும் பிளாஸ்டிக் சாமான்களுக்கு ஒவ்வொரு வீட்டிலும் பண்டமாற்று ஆவது அன்றாடம் நடக்கும் சாதாரண நிகழ்ச்சி ஆகிவிட்டது.

விதவிதமான குழந்தை விளையாட்டுச் சாமான்கள், மாணவர்களுக்கேற்றவாறு ஸ்கேல், முக்கோணம், அரை வட்டம் என்று எத்தனை எத்தனை வகை!

கிண்ணம், வாளி, புட்டி, தூக்குக்கூடை என்று வண்ண வண்ணமாக அன்றாடம் வீட்டில் உபயோகப்படும் பொருள்கள் சொல்லி முடியாது !

இப்படி எல்லாருடைய உள்ளத்தையும் கொள்ளை கொண்டு எல்லாருக்கும் பயன்படும் இந்த பிளாஸ்டிக், தொழிற்சாலைகளில் கூடப் பெரிதும் பயன்படுகிறது.

சுருக்கமாகச் சொன்னால் இதை ''பிளாஸ்டிக் யுகம்'' என்றே சொல்லலாம்.

நமது அன்றாட வாழ்க்கையில் அவ்வளவு முக்கியத்துவம் பெற்றுவிட்டது பிளாஸ்டிக். ஒருவேளை சாப்பிடாமல் இருந்தாலும் இருக்கலாம், ஆனால் பிளாஸ்டிக் சாமான்களை உபயோகிக்காமல் ஒருநாள் கூட எவரும் இருக்க முடியாது என்றாகிவிட்டது.

முன்பெல்லாம் ''ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்'' என்று சொல்வார்கள். இனிமேல் பிளாஸ்டிக் இல்லா வீட்டிற்கழகு பாழ் என்றுதான் சொல்லவேண்டும். அவ்வளவு தூரம் நமது அன்றாட வாழ்க்கையில் முக்கியத்துவம் பெற்றுவிட்ட பிளாஸ்டிக் சாமான்களைச் சென்னை, பம்பாய், கல்கத்தா, தில்லி, பெங்களூர், பரோடா போன்ற பல இடங்களில் உற்பத்தி செய்கிறார்கள்.

இந்த இடங்களில் உள்ள தொழிற்சாலைகள் பிளாஸ்டிக் சாமான்களைச் செய்கின்றன.

ஆனால் . . . .

இந்தப் பிளாஸ்டிக் சாமான்கள் செய்யும் அச்சுகள் இந்தியாவில் இதுவரையில் தயாரிக்கப்படவில்லை.

இந்தக் குறையை நிவர்த்தி செய்யவும்,

பிளாஸ்டிக் தொழிற்சாலைகளுக்குத் தேவையான எஃகு அச்சுகளைத் தயாரிக்கும் முறைகளைச் சொல்லிக் கொடுக்கவும்,

பிளாஸ்டிக் தொழிற்சாலைகளுக்கு ஏற்படும் தயாரிப்பு முறைகளின் சிக்கலுக்குத் தகுந்த ஆலோசனை கூறவும்,

சென்னையிலுள்ள கிண்டி தொழிற்பேட்டையில் மத்திய அரசு, பிளாஸ்டிக் அச்சு தயாரிப்புப் பயிற்சி நிலையம் (சிபெட்) ஒன்றை நிறுவியுள்ளது.

இதனை ஜூலை 25-ஆம் நாள் மத்திய அரசாங்க அமைச்சர் திரு. திரிகுணசென் அவர்கள் கல்வி அமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில் திறந்து வைத்தார்.

இந்த நிலையத்திற்காகச் சுமார் 8 ஏக்கர் பரப்பளவுள்ள நிலத்தைத் தமிழ்நாடு அரசு வழங்கியுள்ளது. சுமார் 50 லட்ச ரூபாய் செலவில் உருவான இந்தப் பயிற்சி நிலையம் பிளாஸ்டிக்

தொழிலில் நிச்சயம் ஒரு புரட்சியை ஏற்படுத்த முடியும்!

இத்தகைய நிறுவனம் இந்தியாவில் வேறெங்கும் இல்லை. தமிழ்நாட்டில்தான் முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

பிளாஸ்டிக் சாமான்கள் செய்வதற்குத் தேவையான மூலப் பொருளான பிளாஸ்டிக் பவுடர் தயாரிக்க அநேக தொழிற்சாலைகள் நிறுவப்பட்டுள்ளன.

ஆனால் பலவிதமான பிளாஸ்டிக் பொருள்களைச் செய்வதற்கு வேண்டிய தனிப்பட்ட இயந்திரங்கள், சிறந்த எஃகு அச்சுகள் அதிகமாகத் தேவைப்படுகின்றன.

இவ்வித அச்சுத் தயாரிப்புத் திறமையை அதிகரிக்கவே இந்த நிலையம் நிறுவப்பட்டுள்ளது என்கிறார் அதனுடைய இயக்குநர், ஓய்வு பெற்ற பிரிகேடியர் ஏ. எப். யுஜின் அவர்கள்.

தொழிலாளர் நலம் காப்போம்!

தமிழகத் தொழிலாளர் நல அமைச்சர் திரு. கா. வேழவேந்தன் அவர்கள் தலைமையில் தொழிலாளர் சங்கத் தலைவர் திரு. காட்டூர் கோபால், தொழிலதிபர்கள் சங்கத் தலைவர் திரு. என். எஸ். பட், மற்றும் பல்வேறு உயர்மட்ட அதிகாரிகள் அடங்கிய தூதுக் குழு 1970 ஜூலை 24-அன்று மாலை 4 மணிக்கு புதுடில்லியிலுள்ள தொழிலாளர் நல அமைச்சர் திரு. சஞ்சீவையா அவர்களைச் சந்தித்து, தொழிலாளர் அரசு இன்சூரன்ஸ் வசதித் திட்டத்தில் ஒரு தொழிலாளிக்கு ஓராண்டிற்கு ரூ. 50 மட்டும் தான் செலவழிக்கவேண்டும் என்று கொண்டுவந்திருக்கிற உச்ச வரம்பைத் தளர்த்த வேண்டும் என்றும், கோவையிலும், மதுரையிலும் தொழிலாளர் இன்சூரன்ஸ் மருத்துவ மனைகளைப் பழைய திட்டத்தின்கீழ்த் திறந்து நடத்தவேண்டும் என்றும் கோரிக்கைகளை விடுத்தது. 22 பக்கங்கள் அடங்கிய கோரிக்கை மனு ஒன்றை எல்லா விவரங்களையும் விளக்கி திரு. கா. வேழவேந்தன் அவர்கள் மத்திய அமைச்சரிடம் அளித்து, லட்சோப லட்சம் தமிழகத் தொழிலாளர்களுக்கு ஏற்பட்டிருக்கிற நெருக்கடியான சூழ்நிலையை விளக்கமாக எடுத்துரைத்தா.

சஞ்சீவையா அவர்கள் கோரிக்கையை ஆழ்ந்து பரிசீலனை செய்வதாகவும், இப்போது தமிழ்நாட்டில் அமைந்துள்ள தொழிலாளர் இன்சூரன்ஸ் மருத்துவமனைக் கட்டடங்களுக்கு ஆண்டொன்றுக்கு வசூலிக்கும் ரூ. 20 லட்சம் வாடகையைத் தள்ளுபடி செய்ய முயல்வதாகவும், 50 ரூபாய் உச்ச வரம்பை, இ. எஸ். ஐ. மத்திய நிறுவனத்துடன் கலந்து பேசி, மறுபரிசீலனை செய்ய முயல்வதாகவும் தூதுக் குழுவினரிடம் எடுத்துரைத்தார்.

நிலையத்தைச் சுற்றிப் பார்த்துக்கொண்டே வருகிறோம்.

ஓரிடத்தில் நான்கைந்து பேர் தொப்பி போன்ற இரும்பின் மேல் தேய்த்துக்கொண்டு இருக்கிறார்கள்.

அவர்கள் தேய்த்துக்கொண்டு இருப்பது மின் விளக்குகளுக்கு உபயோகிக்கும் பிளாஸ்டிக் ''ஷேடுகள்'' தயாரிக்க உதவும் ''மோல்டு''—அதாவது எஃகு அச்சு என்று விளக்கம் தருகிறார் உதவி இயக்குநர்.

சரிதான் ஏதோ ஒரு நாளில் முடிந்துவிடும் வேலையாக்கும் என்று நினைக்கும்போதே நம் எண்ணத்தை அறிந்து கொண்டவர் போல, ஒவ்வொரு உருப்பிற்கும் ''பாலிஷ்'' செய்வதற்கு மட்டும் இரண்டிலிருந்து மூன்று வாரமாவது ஆகும் என்கிறார்.

அப்படியானால் இந்த அச்சுகளைச் செய்வதற்கு எத்தனை நாள் ஆகுமோ என்று நாம் நினைக்கிறோம்.

மூன்று மாதங்களாவது தேவை என்று பதில் கிடைக்கிறது.

இங்கு பிளாஸ்டிக் தொழிலில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களில் பணி புரிபவர்களுக்கும் அரசாங்க நிலையங்களிலிருந்து வருபவர்களுக்கும் மட்டுமே பயிற்சி அளிக்கப்படுகிறது. தற்போது 36 நிறுவனங்களில் இருந்து 55 மாணவர்கள் வந்து பயிற்சி பெறுகிறார்கள். இங்கு 80 மாணவர்கள் பயிற்சி பெறுவதற்கான வசதி இருக்கிறது. தொழிற் பயிற்சி இங்கு இலவசமாக அளிக்கப்படுகிறது. பயிற்சி பெறுவோருக்கு உணவு விடுதி தனியாக உள்ளது. இதில் 60 மாணவர்கள் தங்குவதற்கு வசதி இருக்கிறது. ஆனால் உணவுச் செலவு மட்டும் பயிற்சி பெறுபவர்களே ஏற்றுக் கொள்ள வேண்டும்.

ஐக்கிய நாடுகள் சபையின் வளர்ச்சித் திட்ட (U.N.D.P.) உதவியுடன் தொடங்கப்பட்டுள்ள இந்த நிலையத்தில் தற்போது அனைத்து நாடுகள் தொழிலாளர் ஸ்தாபனத்தின் நான்கு வல்லுநர்கள் பயிற்சியளிக்கிறார்கள். ஓரிரு இயந்திரங்களைக் கூட இந்த நிறுவனம் இதற்கு வழங்கியுள்ளது. மிக முக்கிய இயந்திரங்கள், குளிர் பதன அறையில் வைக்கப்பட்டிருக்கின்றன.

இந்த நிலையத்தில்—

அச்சு செய்தல் (Mould making);

புதிய புதிய அச்சுகள் தயாரித்தல் (Mould design);

அச்சுகளுக்குப் பாலிஷ் கொடுத்தல்;

அச்சு வார்க்கத் தேவையான இயந்திரங்களை அமைத்தல்

ஆகிய துறைகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

இங்கு பிளாஸ்டிக் தொழில் நிறுவனங்களுக்குத் தேவையான எஃகு அச்சுகள் செய்து கொடுக்கப்படுகின்றன. இருபது அச்சு வார்ப்புகள் செய்யத் தற்போது ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

இதன் மூலம் பல சிறு தொழில்கள் வளரவும், பிளாஸ்டிக் பொருள்கள் உற்பத்தி அதிகரிக்கவும் வாய்ப்பு இருக்கிறது.



கதர் - கிராமத் தொழில்கள்

விவசாயிகளுக்கு ஊதியத்துடன் கூடிய வேலைவாய்ப்பளிக்கின்றன

தமிழ் நாட்டுக் கதர் - கிராமத்தொழில் வாரியத்தின் நிறுவனங்களில் உற்பத்தி செய்யப் பெற்ற பற்பல கைநுட்பப் பொருள்கள்.

கதர் கிராமத் தொழில்களை ஆதரிப்பது உணவு உற்பத்திக்கு உழைக்கும் கிராம மக்களுக்கு உதவுவதாகும்

கதர் ~ கதர்ப்பட்டு
சோப்பு ~ தேன்
செக்கெண்ணெய்
தோல்பொருள்கள்
பனைவெல்லம் சர்க்கரை
மண்பாண்டம்-வார்ப்படங்கள்
பனைபொருள்கள்
பித்தளை. வெண்கலப் பாத்திரங்கள்

மேலும்
பற்பல கைநுட்பப் பொருள்கள்

கதர் கிராமத்தொழில்
விற்பனை நிலையங்களில்
கிடைக்கும்.

வெளியீடு:

கதர் கிராமத் தொழில் துறை
௨, சர் தேசிகாச்சாரி ரோடு சென்னை-4.

ஒரு துப்பறியும் கதை



மகனைக் காணவில்லை!

தந்தை பதறுகிறார். வீட்டை விட்டுச் சென்று நாட்கள் பல ஆயின. அவனோ கட்டிளங் காளை. வயது 22.

சில நாட்களாக ஆளைக் காணோம். எங்கு சென்றானோ? என்ன ஆனானோ?

தந்தை போலீசில் புகார் செய்கிறார். போலீசார் புலன் விசாரணை செய்கிறார்கள்.

காணாமல் போன நாளன்று யாரோ சிலருடன் சுற்றித் திரிந்தானாம். அதன் பின் காணப்படவில்லை. போலீசார் சுறுசுறுப்புடன் இயங்குகிறார்கள். மறைந்த மகனோடு சுற்றித் திரிந்தவர்கள் சிக்குகிறார்கள்.

புலன் விசாரணை தீவிரமடைகிறது. அந்த இளைஞன் கொலை செய்யப்பட்டு ஊருக்கு வெளியில் உள்ள ஒரு குளத்தில் கல்லோடு கட்டி அமுக்கப்பட்டிருப்பது வெளியாகிறது. உடல், வெளியில் எடுக்கப்படுகிறது. ஆணா பெண்ணா என்றுகூடத் தெரியாமல் உருவம் அழிந்த நிலையில் உடல் இருக்கிறது. சுருங்கக் கூறுவோமானால், மிஞ்சியது மண்டையோடும் எலும்புகளும் தான்.

ஒரு கொலை வழக்கில் மிக முக்கியமானது, உருவம் அழிந்த நிலையில் இருக்கும் உடலையோ அல்லது எலும்புக் கூட்டையோ வைத்து இவர்தான் கொலை செய்யப்பட்டவர் என்று நிரூபிப்பதாகும்.

கொலை செய்யப்பட்ட இளைஞரின் மண்டையோடு, எலும்புக் கூடு ஆகியவை சென்னை பெரிய மருத்துவ மனைக்கு அனுப்பப்படுகின்றன. குற்றவியல் பிரிவு இவற்றைப் பரிசோதனை செய்கிறது.

கொலை செய்யப்பட்டவரின் வயது, அவரது உயரம், பல்லின் அமைப்பு, முக அமைப்பு, ஆகியவை மிக நுணுக்கமாகச் சோதனைகள் செய்யப்படுகின்றன.

இந்த எலும்புக்கூட்டுக்கு உரியவர் இந்த இளைஞர்தான் என்று நிர்ணயிக்கப்படுகிறது.

வழக்கு நடக்கிறது. கொலைக் குற்றம் நிரூபணமாகிறது. குற்றவாளிகள் தண்டனை அடைகிறார்கள்.

சென்னை பெரிய மருத்துவ மனையில் உள்ள குற்றவியல் பிரிவு (Forensic Department) உலகில் மற்ற நாடுகளில் உள்ள சிறந்த குற்றவியல் பிரிவுக்கு இணையாகச் செயலாற்றிச் சிறப்புப் பெற்று வருகிறது.

ஆளவந்தார் கொலை வழக்கு. சூரியநாராயணா கொலை வழக்கு, கங்கவல்லி கொலை வழக்கு போன்ற பிரபல கொலை வழக்குகளில் துப்புத் துலக்குவதற்கு உதவியாக இருந்தது, சென்னை பெரிய மருத்துவ மனையில் உள்ள குற்றவியல் பிரிவுதான்.

சட்டத்தை அமுல் நடத்துவதில் மருத்துவ விஞ்ஞானம் அளிக்கும் உதவியே குற்றவியல் பிரிவு புரியும் பணியாகும். இந்தக் குற்றவியல் பிரிவு புரிகின்ற பணியின் பயனாகக் காவல்துறையினரும் வழக்கறிஞர்களும், நீதிபதிகளும் குற்றவாளிகளைக் கண்டுபிடித்துத் தண்டிப்பதில் பெரும் பயன் அடைகிறார்கள். இப் பிரிவினருக்குக் குற்றம் சாட்டியவரைப் பற்றியோ குற்றம் சாட்டப்பட்டவரைப் பற்றியோ கவலை இல்லை. நாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்கு உதவி புரிவதும், உண்மையை வெளிப்படுத்தி ஒரு வழக்கில் சம்பந்தப்பட்டவருக்கு நீதி கிடைக்க வகை செய்வதுமே முக்கிய பணிகளாகும்.

குற்றவியல் பிரிவுக்கு நாள்தோறும் விதம் விதமான வழக்குகள் சம்பந்தப்பட்டவை ஆய்வுக்கு வருகின்றன. போக்குவரத்து விபத்து, தூக்கிட்டுக்கொள்ளுதல், நஞ்சு அருந்துதல், நீரில் மூழ்குதல், கொலை, கற்பழித்தல் ஆகியவை இவற்றில் முக்கியமானவையாகும்.

போக்குவரத்தை எடுத்து கொள்வோம். இந்த விபத்து களில் முதலிடம் வகிப்ப லாரிகள்! மோட்டார் [illegible] இயந்திர வாகனங்கள் ஓட்

வதில் கண்டிப்பான சட்டதிட்டங்கள் உலக நாடுகள் எல்லாவற்றிலும் இருந்தாலும், வேகமாக ஓட்டுதல், தடை செய்யப்பட்ட பகுதிகளில் ஓட்டுதல் போன்றவை எங்கும் உள்ளன. 369 விபத்துக்களில் 231 விபத்துக்கள் லாரிகளாலும், பஸ்களாலும் ஏற்படுவனவாகும். விபத்துக்குக் காரணம் ஓட்டுநராகவும் இருக்கலாம், அல்லது தெருவில் நடப்பவராகவும் இருக்கலாம். தெருவில் நடப்பவர் குருடராகவோ அல்லது குடிபோதையில் இருப்பவராகவோ இருந்தால் லாரி ஓட்டுபவரைக் குறை சொல்லிப் பயன் என்ன?

இதுபோன்ற சமயங்களில் 'குற்றவியல் பிரிவு' விபத்துக்குக் காரணம் யார் என்பதற்கு ஆய்வு மூலம் சரியான காரணத்தைக் கண்டுபிடிக்க உதவுகிறது.

ஒரு பிணம் பரிசோதனைக்காக வருகிறது. மருத்துவ அதிகாரி பரிசோதனை செய்கிறார். மரணம் அடைந்ததற்குக் காரணத்தை அறியும் வகையில் பரிசோதனை நுணுக்கம் மிகுந்ததாக இருக்கிறது.

தூக்கில் தொங்கியவருக்குக் கழுத்தில் சுவடு இருக்கும். குளத்தில் மூழ்கியவரின் உடம்பு வீங்கியிருக்கும். போக்குவரத்து விபத்தில் சிக்கியவருக்கு ஆங்காங்கே காயம், எலும்பு முறிவு ஆகியவை இருக்கும். கொலை செய்யப்பட்டவரின் உடம்பில் விதம் விதமான தடயங்கள் இருக்கலாம்.

சில சமயங்களில் நடந்தது ஒன்றாகவும், தெரிவிக்கப்பட்டது ஒன்றாகவும் இருக்கலாம். தூக்கில் தொங்கித் தற்கொலை செய்து கொண்டதாகக் கூறப்பட்டவர் கொலை செய்யப்பட்டிருக்கலாம். அது போன்ற சமயங்களில் குற்றவியல் பிரிவினரின் பணி மிக முக்கியமானதாக அமையும்.

ஆராய்ச்சி

நஞ்சருந்தி மரணம் அடைந்தவராக இருந்தால் அவரது பெருங்குடல், சிறு குடல், ஈரல், மூத்திரக்காய் ஆகியவை பரிசோதனை செய்யப்படுகின்றன. பிரேத பரிசோதனையின்போது அவை பிரிக்கப்பட்டுப் பாதுகாப்பான ஜாடிகளில் வைக்கப்பட்டுச் சென்னை கடற்கரைச் சாலையில் உள்ள குற்றவியல் ஆய்வுச் சாலைக்கு அனுப்பப்படுகின்றன. ஆராய்ச்சிக்குப் பின்னர் அங்கிருந்து வரும் அறிக்கையை ஒட்டி மருத்துவ மனைக் குற்றவியல் பிரிவுப் பேராசிரியர் மரணத்தின் காரணத்தை நிர்ணயிக்கிறார்.



இவர்தான்

ஆளவந்தார்

அடையாளம் கண்டுபிடிக்க முடியாத பிணத்தின் தலையை 'எக்ஸ்ரே' எடுத்து, இவர்தான் அவர் என்று கருதப்பட்டவரின் புகைப்படத்தையும் பிலிம்ஸ் (Films) தலை அளவு பெரிது படுத்தி, இரண்டையும் இணைத்துப் பார்த்து அடையாளம் கண்டு பிடிப்பதும் இத்துறையில்தான்.

காலத்திற்கும், மக்கள் தொகைக்கும் ஏற்ற வகையில் உலகில் இன்று குற்றம் புரியும் முறையும் அளவும் விரிந்து வருகின்றன. அதற்குத் தகுந்தபடி குற்றவியல் மருத்துவப் பிரிவும் தனது பணியை உலகெங்கிலும் வளர்த்து வருகிறது. குற்றவியல் மருத்துவ வரலாற்றில் சுவை மிகுந்த செய்திகள் பல உண்டு.

ஓர் ஊரில் மொட்டைக் கடிதங்கள் ஏராளமாக எழுதியதாக ஒருவர் மீது குற்றம் சுமத்தப்பட்டது. இந்தக் கடிதங்கள் ஆராய்ச்சி செய்யப்பட்டதில், கடிதத்திற்கான தபால் தலைகள் எல்லாம் எச்சிலால் ஈரமாக்கப்பட்டு ஒட்டப்பட்டிருந்தன. அவை பரிசோதிக்கப்பட்டன. குற்றம் சாட்டப்பட்டவரின் இரத்தம் பரிசோதிக்கப்பட்டது. இந்தப் பிரிவு இரத்தம் உள்ளவரின் எச்சில் இப்படித்தான் இருக்கும் என்பது விஞ்ஞானம் கண்ட உண்மை. தபால் தலையில் உள்ள எச்சிலும் பரிசோதனைக்குட்பட்டவரின் எச்சிலும் ஒன்று. குற்றவாளி பிடிபட்டார்!

மற்றொரு வழக்கு சுவையானது. ஒரு காவல் நிலையத்தின் தலைமைக் காவலர் தேநீர் அருந்தத் தனது கோப்பையை எடுத்தார். அதில் இருந்தது தேநீர் அல்ல—சிறுநீர்! அங்கு இருந்தவர் மொத்தம் பதினான்கு பேர். அனைவரின் சிறுநீரும் பரிசோதனை செய்யப்பட்டது. தேநீர் பாத்திரத்தில் சிறுநீர் கழித்த ஆசாமி அகப்பட்டுக் கொண்டார்!

வீட்டை உடைத்துத் திருடுகிறவர்கள் சும்மா போக மாட்டார்கள். தின்பதற்கு ஏதாவது கிடைத்தால் அவற்றைத் தின்று விட்டுத்தான் செல்வார்கள். ஒரு சமயம் வீடு புகுந்து திருடிய ஒருவர் வீட்டில் இருந்த ஓர் ஆப்பிள் பழத்தைக் கடித்துத் தின்று விட்டுப் பாதியைப் போட்டு விட்டு ஓடிவிட்டார். பரிசோதனையின்போது திருடிய ஆளுக்கு 2 பற்கள் இல்லை என்பதை ஆப்பிள் பழம் அழகாகக் காட்டிக் கொடுத்து விட்டது. முடிவில் ஆள் பிடிபட்டார். தண்டனை பெற்றார்.

''ஒரு பல்லை மட்டும் கொடுங்கள். பல்லுக்கு உடையவரின் வயதைக் கூறுகிறோம்'' என்கிறார் சென்னைக் குற்றவியல் மருத்துவப் பேராசிரியர் டாக்டர் சி. பி. கோபாலகிருஷ்ணா.

ஒரே எலும்பை வைத்து ஆணா பெண்ணா என்று தீர்மானிக்க முடியும் என்று கூறும் இவர், ஆளவந்தார் கொலை வழக்கு, சூரிய நாராயணா கொலை வழக்கு முதலியவற்றை ஆராய்ந்தவராவார்.

ஆளவந்தாரின் தலை சென்னை ராயபுரம் கடற்கரையில் கிடந்தது. உடலோ, இந்தோ சிலோன் எக்ஸ்பிரஸ் ரயிலில் மானாமதுரையில் அகப்பட்டது.

இந்தத் தலைதான் இந்த உடலுக்கு உரியதென்றும் இந்த உடலும் தலையும் ஆளவந்தாருடையவைதாம் என்றும் நிரூபித்தது எப்படி?

ஆளவந்தார் முன்னாள் ராணுவத்தினர். ராணுவ அடையாளப் புத்தகத்தில் இருந்த அவருடைய கைரேகையும் இந்தோ சிலோன் எக்ஸ்பிரசில் பயணம் செய்த உடலின் கைரேகையும் ஒன்று.

ராயபுரம் கடற்கரையில் கிடந்த தலையின் பற்களில் ஒன்று ''தெற்றுப் பல்'' அதாவது வரிசையாக இருந்த இரண்டு பற்களில் மேல்வரிசையில் ஒன்று முளைத்து இருந்தது. வலது புறக் காதில் இரு ஓட்டைகள் இருந்தன. (இவற்றை ஆளவந்தாரின் மனைவி கூறிய சாட்சியங்கள் உறுதிப்படுத்தின).

தலையில் இருந்த முதுகெலும்புத் தொடரும் உடலில் இருந்த முதுகெலும்புத் தொடரும் சரியாக இணைந்தன.

மேலே குறிப்பிட்டவை மூலம் ஆளவந்தாரின் உடல் இது தான் என்று நிர்ணயம் செய்யப்பட்டது.

இதுபோல் குற்றவியல் மருத்துவத் துறை துப்புத் துலக்கிய வழக்குகள் ஏராளம். குற்றவாளிகளுக்குத் தண்டனை கிடைப்பதன் மூலம் நாட்டில் தீய சக்திகள் ஒழியும். அதன் காரணமாகச் சிறப்பான சமுதாயம் அமையும் என்பதில் சந்தேகமில்லை.

இது பெண் அல்ல, குற்றவியல் பொருட்காட்சிக்காகச் செய்யப்பட்ட பொம்மை!

உலகிலேயே துப்புத்துலக்குவதில் புகழ் பெற்றவர்கள் ஸ்காட்லாந்துயார்டு துப்பறியும் பிரிவினர். அதுபோன்று இந்தியாவில் குற்ற இயல்களைக் கண்டுபிடிப்பதில் சிறந்து விளங்குகின்றனர் தமிழ்நாட்டுக் காவல்துறையினர்.

கிளிப்பத்து

லிங்கம்

நாஞ்சில் தமிழ்க்கிள்ளாய்! நாடுபல கண்டனையே
நீஞ்சொல் தமிழரசுச் செய்திகளை—வாஞ்சையுடன்
சொல்லாய், எனக்கிங்கே; சோறுடனே பால்
கலந்து
நல்ல விதந்தருவேன் நான்.

பொன்னிழையாய்! என்தோழி! போற்றும் தலை
நகராம்
சென்னை நகர்ச்செய்தி செப்புவேன்—கன்னலெனும்
அன்னை மொழியே அலுவ லகமெல்லாம்
மன்னிடவே கண்டேன் மகிழ்ந்து:

ற்றைப்போல் தீங்கிழைக்கும் கூவ நதியதனின்
நாற்றமெலாம் மாற்றியதில் நங்கையுடன்—
ஆற்றின்கண்
ஓட மதைச்செலுத்தி உல்லாச மாய்க்களிக்க
நாடும் பணிகண்டேன் நன்கு.

நண்ணூர் தமிழகந்தான் தந்த தவப்புதல்வன்
ுண்ணு சிலையுடனே ஆய்தமிழின்—கண்ணனைய
ன்னையும் போப்பும் கவியரசுக் கம்பன் முதல்
ன்னும் சிலைகண்டேன் இங்கு.

ாதி ஒழித்துச் சமயப் பகையொழித்து
தி நிலவும் நெறிவளர—ஓதுபுகழ்த்
ங்கப் பதக்கங்கள் தந்து கலப்புமணம்
ங்கு வளர்த்திடுமால் இன்று.

ஓலைக் குடிசைகளில் ஒட்டிக் கிடந்தார்க்குச்
சாலையுடன் கல்வீடு சால்புடனே—கோலமுறக்
கட்டிக் கொடுத்த கருணையதை என்னென்பேன்!
இட்டமுறு பணியன்றோ ஈது ?

மக்கள் குறையை மரநிழல் மன்றத்தே
அக்கணமே தீர்க்கும் அழகதனை—திக்கெல்லாம்
பாடிப் பரவிடலாம்; பண்டை மனுச்சோழன்
நாடியிவன் வந்தனனே நன்கு !

'அரிசி' 'அரிசி'யென அல்லும் பகலும்
வரிசை வரிசையாய் மக்கள்—தெருவெல்லாம்
நின்ற நிலைநீங்கி நெஞ்சம் மகிழரிசிக்
குன்றுகளைக் கண்டேன் குளிர்ந்து.

படியரிசி பெற்றிட்ட பல்லா யிரவர்
குடிதழுவிக் கோலோச்சும் கோவை—அடிதழுவி
வாழ்த்துகின்றார் இவ்வரசை ; வாழியபல்
லாண்டென்றே
தாழ்த்துகின்றார் தத்தம் தலை.

அருளும் பொருளும் அவனியெலாம் பொங்கி
இருளொழித்து வாழியவே இன்பம்—பொருள்
நிறைந்த
நற்றான் தமிழரசுப் பத்திரிகை நாடெல்லாம்
கற்றாயக் கண்டேன் களித்து.

நானூறு ஆண்டுகளுக்கு முன்பு போர்த்துக்கீசியர்கள் நம் நாட்டுக்கு அறிமுகப்படுத்தியதுதான் முந்திரி!

ஒரு பழத்தின் கொட்டை அந்தப் பழத்துக்கு வெளியே நீட்டிக் கொண்டிருப்பது மக்களுக்கு அதிசயமாக இருந்தது. அதனால்தான் எதையும் முன்னால் பேசுபவர்களை ''முந்திரிக் கொட்டை'' என்று கேலியாகச் சொல்லும் வழக்கம் ஏற்பட்டது. அந்நியச் செலவாணி திரட்டித் தருவதில் பெரும் பங்கு வகிக்கிறது முந்திரி. இந்நிலை ஆண்டுக்கு ஆண்டு வளர்ந்து வருகிறது!

இது மிகவும் மகிழ்ச்சிக்குரியதாகும். 1925-ம் ஆண்டில் 50 டன் மட்டுமே ஏற்றுமதி செய்து, சில இலட்ச ரூபாய்களே வருவாயாக இருந்த நிலைமையிலிருந்து 1966-67-ல் 50,800 டன் ஏற்றுமதியாக உயர்ந்து 42.89 கோடி ரூபாய் வருவாயை ஈட்டியிருக்கிறது. இத்துடன் முந்திரி ஓட்டின் எண்ணெய் 11,300 டன் ஏற்றுமதி செய்யப்பட்டு 1.92 கோடி ரூபாய் வருமானத்தையும் சேர்த்தால் அந்நியச் செலாவணி மொத்தம் 44.81 கோடி ரூபாயாக வளர்ந்திருக்கிறது.

1968-69-ம் ஆண்டில் மட்டும் 64,500 டன் முந்திரிப் பருப்பும் 10,450 டன் முந்திரி ஓட்டு எண்ணெய்யும் ஏற்றுமதி செய்ததன் மூலம் 63·18 கோடி ரூபாய் அந்நியச் செலாவணி கிடைத்துள்ளது.

முந்திரிப் பழச்சாற்றிலிருந்து சுவைமிக்க பானம் தயாரிக்கவும், முந்திரிக் கொட்டையின் மேல் ஓட்டிலிருந்து எடுக்கப்படும் எண்ணெய்யைப் பல வகைகளில் உபயோகிக்கவும் வாய்ப்புள்ளது.

எனவே முந்திரி சாகுபடியில் தற்போதுள்ள நிலைமையை கவனித்து அதைத் தீவிரமாக்க வேண்டிய முக்கிய கட்டத்தில் இப்பொழுது நாம் இருக்கிறோம். உலக வியாபார அரங்கில் நம் நாட்டு முந்திரிப் பருப்புக்கு இருக்கும் தனிப் பெருமையை நிலைபெறச் செய்ய வேண்டுமானால், அந்நியச் செலாவணியைப் பெருமளவில் ஈட்ட வேண்டுமானால், முந்திரி உற்பத்தியைப் பெருக்க வேண்டியது மிகவும் அவசியமாகும்.

முந்திரி சாகுபடிப் பரப்பைப் பெருக்குவதற்குள்ள வாய்ப்பு:—

தமிழ்நாட்டில் முந்திரிப்பயிரின் பரப்பு சென்ற 15 ஆண்டுகளாக பெருகிக் கொண்டே வந்திருக்கிறது என்பது மகிழ்ச்சியூட்டும் செய்தியாக உள்ளது. 1951-52-ல் தமிழ்நாட்டில் 27,000 ஏக்கராக இருந்து 1965-66-ல் 1,17,000 ஏக்கராக உயர்ந்திருக்கிறது. அரசாங்கக் காட்டிலாகாவினரின் 54,510 ஏக்கர் முந்திரிப் பரப்பையும் சேர்த்துக் கொண்டோமானால் தமிழ் நாட்டின் சாதனை பெருமைப்பட வேண்டியதேயாகும். மேலும் சுமார் 56,627 ஏக்கர் நிலங்களில் முந்திரி சாகுபடி செய்வதற்கு வாய்ப்பு உள்ளது என்பதும் தெரிய வந்துள்ளது.

தற்பொழுது தமிழ்நாட்டில் மட்டும் 1,77,000 ஏக்கராவில முந்திரி பயிரிடப்படுகிறது. ஆனால் ஆண்டு ஒன்றுக்கு 1.34 லட்சம் முந்திரிப் கொட்டையே உற்பத்தி ஆகிறது. ஆகவே நான்காவது திட்ட காலத்தில் தமிழ் நாட்டில் மட்டும் 26,000 ஏக்கராவில் முந்திரி பயிரிட திட்டமிடப்பட்டுள்ளது.

மற்ற எந்தப் பயிரும் சாகுபடி செய்ய முடியாத வளம் குன்றிய தரிசு நிலங்களிலும் முந்திரி சாகுபடி செய்யலாம். எனினும் அதற்கேற்ற வெப்ப தட்ப நிலை, மண்வளம், அதன் தன்மை, ஆழம் போன்றவற்றையும் முந்திரி சாகுபடி செய்யக் கருத்திற் கொள்ள வேண்டும். சரளை கலந்த செம்மண் மேட்டு நிலங்களும், நீர் ஈர்க்கும் தன்மை குறைந்த வளம் குன்றிய மணல் நிலங்களும், குளிர்ந்த வெப்ப தட்ப நிலையுடைய மலையடிவாரப் பகுதியிலும் முந்திரியின் வளர்ச்சி பயனற்று, பூப்பூத்தல் தாமதப்படுவதாலும் முந்திரியை வெற்றிகரமாக சாகுபடி செய்ய முடியாது. ஆனால் கடலோரப் பகுதியிலும், கட லிருந்து சுமார் 60—70 மைல் தூரம் உள் பகுதியிலும் முந்தி சாகுபடிக்கு ஏற் நிலங்கள் இருக்கி றன. எனவே, இ பகுதிகளை முந்தி பயிரிடப் பயன்படுத் லாம். கடலோ மாவட்டங்களிலும் திருச்சி மாவட்ட திலும் இருக்கின்ற 1 லட்சம் ஏக்கர் சா படித் தரிசு நிலங்களி சுலபமாக 1 லட் ஏக்கர் பரப்பளவி முந்திரியைப் பயிரி வாய்ப்புள்ளது.

இராமநாதபுரம் மாவட்டத்திலும், புதுக்கோட்டைப் பகுதியிலும் முந்திரி சாகுபடிக்கேற்ற செம்மண் நிலங்கள் ஏராளமாக இருக்கின்றன. திருநெல்வேலி கடற்கரையோரப் பகுதியிலும் ந்திரி சாகுபடிக்கேற்ற ''செவ் தேரிகள்'' என்ற நிலங்கள் ளன.

இப்பகுதிகளிலெல்லாம் முந்திரியைப் பயிரிட்டு உற்பத்தியைப் பெருக்க வாய்ப்புள்ளது.

ஆகவே முந்திரி அபிவிருத்திப் பணியில் உடனடியாக இந்த உபரி நிலங்களிலும் முந்திரியை நட்டு உற்பத்தியைப் பெருக்க வேண்டியது முதல் அம்சமாகும்.

மகசூலைப் பெருக்குவதற்குரிய வழி முறைகள் :—

முந்திரியின் பரப்பைப் பெருக்குவதோடு மட்டும் அல்லாமல், மரங்களின் மகசூலையும் அதி ரிக்க வேண்டியது அவசிய ாகிறது. ஏனெனில், தற் ாழுதுள்ள மரங்களில் காய்ப்பு வும் குறைந்த அளவிலேயே டைக்கிறது. சராசரியாக ஏக் ருக்கு 150 கிலோதான் கிடைக் றது என்பது கணக்கிடப்பட்டி க்கிறது. இத்தகைய மகசூல் கவும் குறைந்ததே. முந்திரித் தாட்டங்களை நன்கு கவனிக்கும் பாழுது மரத்துக்கு மரம் மக லின் அளவு மாறுபட்டிருப்ப தக் காண்கிறோம். தனிமரம் ன்றே 80 கிலோ வரையும் கசூல் தரக்கூடும் என்றும் பார்க் றோம். இது இயற்கையே. பார்ந்த அளவு மகசூல் கொடுக் ம் தாய் மரங்களிலிருந்து ாட்டைகளைத் தேர்ந்தெடுத்து பயோகித்தோமானால், கணிச ன அளவுக்குத் தோட்டங்களின் ாசரி மகசூலை அதிகப்படுத்த டியும். இத்துறையில் அரசினர் னம் செலுத்தி, ஆண்டு ாறும் பெரும் அளவில் தேர்ந் டுக்கப்பட்ட விதைக் கொட் களை, முந்திரி பயிரிடுவோர்களுக்கு விநியோகித்து வருகிறார்கள்.

சாதாரணமாக, முந்திரி விதைக் கொட்டைகளை நேரிடையாகவே, குழிகளில் ஊன்றி விடுகிறார்கள். இவ்வழக்கம் முற்றிலும் பயனுள்ளதும் அல்ல உகந்ததும் அல்ல. ஏனெனில் பல இடங்களில், பல சமயங்களில் இம் முறையின் மூலம் கொட்டைகள் நன்றாக முளைத்து, சீராக வளராமல் போய் விடுகின்றன என்பதைக் காண்கிறோம். அதனால் மீண்டும் மீண்டும் கொட்டைகளை ஊன்ற வேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்பட்டு செடிக்குச் செடி வயதிலும், உருவத்திலும் வேற்றுமை ஏற்படுவதையும் காண்கிறோம். இவ்வேற்றுமையை நிவர்த்திப்பதற்கு கைகண்ட பலனுடைய ஒரு முறை சமீபத்தில் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. அதாவது 9 அங்குலம் × 5 அங்குலம் அளவுள்ள பாலிதீன் பைகளில் மக்கிய மாட்டெரு கலந்த மண்ணை நிரப்பி அதில் தேர்ந்தெடுக்கப் பட்ட கொட்டைகளைப் பைக்கு ஒன்றாக 1 அங்குல ஆழத்துக்குள் ஊன்றிக் கன்றுகளைத் தயார் செய்யும் முறையாகும்.

> **தாய்மார்களின் உதவி**
>
> நெசவுத் தொழில் இதுநாள் வரை நசித்துப் போகாமல் இருக்க—நெசவாளர் பாதி வயிறாவது சாப்பிட உதவுபவர்கள் நமது நாட்டுத் தாய்மார்கள் தான்! ஆடவர்கள் எப்படிப் போனாலும் தாய்மார்கள்தான் மறவாமல் கைத்தறியாடைகளை வாங்குபவர்கள்! ஆகவே, கைத்தறியாளர்களைக் காப்பாற்றும் தாய்க் குலத்திற்கு எனது மரியாதை கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆடவர்களைப்போல் தாய்மார்களும் ஆமதாபாத்தையும் கட்டாலையும் நம்பத் தொடங்கினார்கள் என்றால் நெசவாளர்கள் வீதியோரங்களிலே குடியேறவேண்டிய வேதனையான நிலை ஏற்பட்டிருக்கும்!
>
> —பேரறிஞர் அண்ணா.

இம்முறையை மேற்கொள்வதன் மூலம் தோட்டத்திற்குத் தேவையான கன்றுகளைத் தயார் செய்து ஒரே சீராக வளர்த்து சுமார் 2 மாத அளவில் நன்கு வளர்ந்த கன்றுகளைத் தோட்டங்களில் ஏற்கெனவே தயார் செய்யப்பட்ட குழிகளின் மத்தியில் நட முடிகிறது. கன்றுகளும் நன்றாகக் குழிகளில் வேர் ஊன்றி விடுகின்றன. சாதாரணமாக நல்ல பருவத்தில், மழை காலத்தில் நட்டு விட்டோமானால் செடிகளுக்கு யாதொரு சேதமும் ஏற்படுவதில்லை. ஒன்றிரண்டு பழுது போனாலும், பைகளில் தயாரிக்கப்பட்ட கன்றுகளை உடனடியாகக் காலியான குழிகளில் நட்டுக் கொள்ளலாம். இம்முறையில் தோட்டத்தை அமைப்பதே சாலச் சிறந்த வழியாகும். ஆகவே, முந்திரி பயிரிடுவோர் அனைவரும் மேற்கொண்டு கொட்டைகளை நேரிடையாக தோட்டங்களில் ஊன்றாமல் இம்முறையைக் கையாளுமாறு கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்.

அடுத்தபடியாக மகசூலை அதிகரிக்கும் முறைகளில் முக்கியமானது மரத்திற்கு உரமிடுதல் ஆகும். முந்திரியின் உரத் தேவைகள் தற்சமயம் ஆராய்ச்சி நிலையங்களில் கவனிக்கப்பட்டு வருகின்றன. ஆகவே தீர்மானமாகச் சொல்லமுடியாவிட்டாலும் அரசினரால் அங்கீகரிக்கப்பட்ட 6-ம் எண் கலப்பு உரம் ஏக்கருக்கு 100—150 கிலோ வரை மரங்களின் வயதுக்கேற்ப உபயோகிக்குமாறு சிபாரிசு செய்யப் படுகிறது. இந்த உரத்தை மழை காலத்தில் அதாவது ஆடி, ஆவணியிலோ அல்லது ஐப்பசியிலோ பெருமழைக்கு முன்னரே, மரங்களைச் சுற்றிக் கிளைகளுக்கு அப்பால் சுமார் 6 முதல் 9 அங்குல ஆழத்தில் போட்டு மூடி



விடவேண்டும். அல்லது மரங்களின் இடைவெளிகளில் உரத்தைச் சிதறிவிட்டு உழுது மூடி விடலாம்.

தவிரவும், காய்ந்த சருகுகளை மரத்தின் அடிபாகங்களில் சீராகப் போடுவதன் மூலம் பூமியின் ஈரத்தைக் காத்து மரங்களுக்கு கிடைக்கச் செய்ய முடியும். மேலும் கொளுஞ்சி (காவாளை) என்ற பசுந்தாள் உரப்பயிரை மரங்களின் இடைவெளிகளில் வளர்த்து உழுவது முந்திரிக்கு மற்றுமோர் முக்கிய, பயனுள்ள, தேர்ந்த, சாகுபடி முறையாகும்.

முந்திரி பூச்சிகளுக்கும், நோய்களுக்கும் இலக்காகி விடுகிறது. இவைகளைத் தடுப்பதன் மூலமும் முந்திரியின் மகசூலைப் பெருமளவில் அதிகரிக்கச் செய்ய முடியும்.

முந்திரி சாகுபடிக் குறிப்புகள்

முந்திரித்தோட்டங்களில் மேற்கொள்ள வேண்டிய செய்முறை குறிப்புகள் சுருக்கமாகக் கீழே தரப்பட்டுள்ளன.

மண் அமைப்பு :—

*செம்மண், சரளை கலந்த செம்மண், மணற்பாங்கான நிலம் முந்திரி பயிரிட சிறந்தது.

*நிலங்கள் ஆழமாகவும், சீராகவும், ஈரப்பிடிப்புள்ளதாகவும் இருக்க வேண்டும்.

*நான்கு அடிக்குக் குறையாமல் ஆறு அடிவரை மண் கண்டம் இருத்தல் வேண்டும்.

*களிமண், உப்பு, உவர் நிலங்கள் முந்திரி சாகுபடிக்கேற்றதல்ல.

நிலத்தைச் சீர்திருத்துதல் :—

*சாகுபடிக்கு எடுத்துக் கொண்ட நிலத்திலுள்ள செடி, மரங்களை வெட்டி அப்புறப் படுத்துதல் வேண்டும்.

*சரிவான நிலங்களில் மண்ணரிப்புத் தடுப்பு முறைகளைக் கையாளுதல் வேண்டும்.

*சுலபமாக வேலை செய்வதற்கும், மேற்பார்வையிடவும் நிலத்தை 5 அல்லது 10 ஏக்கர் துண்டுகளாகப் பிரித்தல் நல்லது.



*தகுந்த பாதுகாப்பிற்கு வேலியமைத்தல் அவசியம். வேலிச் செடிகளை வளர்த்தல் சிறந்தது.

இடைவெளி விடுதல் :—

*செடிக்குச் செடியும், வரிசைக்கு வரிசையும் 22 அடி இடைவெளி விடுதல் நல்லது.

*மண் வளத்தையும், ஆழத்தையும் பொறுத்து 20 முதல் 50 அடி வரையும் செடிக்குச் செடி இடைவெளி தேவைப்படும்.

*12 அடி × 12 அடி அல்லது 15 அடி × 15 அடி இடைவெளியில் முதலில் நட்டு சுமார் 10 முதல் 12 ஆண்டுகளில் மரங்களின் வளர்ச்சிக்குத் தக்கவாறு 24 அடி அல்லது 30 அடி இடைவெளி விட்டு, ஊடேயுள்ள மரங்களை வெட்டி விடுவது நல்லது. இதனால் ஆரம்பத்தில் அதிக எண்ணிக்கை உள்ள மரங்களின் மூலம் அதிக மகசூல் கிடைக்க வாய்ப்பு உண்டு. ஆரம்ப காலத்தில் அதிக இடைவெளி தேவையில்லாததாலும், பின்னர், தேவைப் படுவதாலும், இம் முறையைக் கையாள்வதன் மூலம் குறிப்பிட்ட பூமியி ருந்து அதிக பட்ச மகசூ அடைய முடியும்

குழி எடுத்தல் :—

1½ × 1½ × 1½ அ குழிகளை நடுவதற்கு முன்னே வெட்டி நன்கு ஆறவி வேண்டும். 22 × 22 அ இடைவெளியில் ஏக்கருக்கு 8 குழிகள் தோண்டவேண்டு

*குழிகளினின்று எடுத் மண்ணுடன் குழிக்கு ஒ கூடை விதம் மக்கி மாட்டெரு அல்ல ''கம்போஸ்டும்'', சா பலும் கலந்து போ டால் செடிகள் நன் முளைத்து, வேர் ஊன் வளரப் பயன்படும்.



- *வேளாண்மைத்துறை வழங்கும் விதைகளை உபயோகிக்க வேண்டும். ஏக்கருக்கு 1½ கிலோ விதை தேவைப்படும்.

- *விதைகளை நடுமுன் தண்ணீரிலோ, சாணப் பாலிலோ 24 மணிநேரம் ஊற வைப்பதால் சீக்கிரம் முளைக்கும்.

- *குழிக்கு 2 அல்லது 3 விதைகளை ஆவணி, புரட்டாசித் திங்களில் ஊன்ற வேண்டும்.

- விதையின் காம்புப் பக்கம் மேல் நோக்கி இருக்கும்படி வைத்து 1 அங்குல ஆழத்தில் ஊன்றுவதால் கன்று நேராக நன்றாய் முளைக்கும்.

- முந்திரிக் கன்றுகள் முளைத்ததும் அதிக சூரிய வெப்பத்தினால் பாதிக்கப்படாமலிருக்கப் பனை ஓலைகள் கொண்டு லேசாக மூடவும்.

- பாலிதீன் பைகளில் முந்திரிக் கன்றுகளை வளர்த்து நடுவதே நல்லது. அங்குலம் 9. அங்குலம் 5 அளவுள்ள பாலிதீன் பைகளில் 6 அங்குல உயரத்திற்கு மக்கிய கம்போஸ்டு கலந்த செம்மண்ணை நிரப்ப வேண்டும். பைகளின் அடியின் இருதுனிகளிலும், நடுவிலும் சிறு துவாரங்கள் இட வேண்டும். முந்திரி விதைகளைப் பைக்கு ஒன்றாக ஒரு அங்குல ஆழத்தில், விதையின் காம்பு மேலே இருக்கும்படி வைத்துப் பதிக்க வேண்டும். விதைகள் பதிக்கப்பட்ட பைகளை வரிசையாக நிழலுக்கு அடியில் வைத்துத் தண்ணீர் விட வேண்டும். இவ்வாறு பாலிதீன் பைகளில் வளர்க்கப்பட்ட கன்றுகளை மழை கால ஆரம்பத்தில் (ஆடி-ஆவணி அல்லது ஐப்பசி) நடுவதே சிறந்தது.

- நட்டவுடன் செடியைச் சுற்றி மண் அணைத்து செடிகள் ஆடாது இருக்க கொம்புகள் நட்டுக் கட்டுதல் வேண்டும்.

பூச்சிகளும், நோய்களும்:—

1. மரத்தைத் துளைக்கும் புழு பழைய தோப்புகளில் அதிகம் காணப்படும். மரத்தைத் துளைத்துச் சேதம் உண்டாக்கும். அதிகமாகத் தாக்கப்பட்ட மரங்களை வேருடன் வெட்டி எரித்து விடவேண்டும்.

2. இலைகளை துளைக்கும் புழுக்கள், புதுத் துளிர்களைத்தாக்கும் "திரிப்ஸ்" ஆகிய பூச்சிகளை டி.டி.டி. அல்லது பி.எச்.சி. 1 சத விதம் மருந்து தெளித்துக் கட்டுப்படுத்தலாம்.

பூக்களைத் தாக்கும் நாவாய்ப் பூச்சி:—

இதன் மூலம் பூக்களும், இளம் பிஞ்சுகளும் வெகுவாகப் பாதிக்கப்பட்டு மகசூல் மிகவும் குறைகிறது. இதைத் தடுக்கவேண்டியது அவசியம். பி.எச்.சி. 0.05 சத விதம் தெளிப்பதன் மூலம் இதைத் தடுக்க முடிகிறது. அல்லது பாராதியான் 0.025 சத விதம் தெளித்தும் தடுக்கலாம்.

செலவும் வரவும்:—

முந்திரி சாகுபடி செய்ய பொதுவாக ஏக்கருக்கு ரூ. 140 வரை செலவாகும். ஆனால் இச்செலவு இடத்திற்கேற்ப ரூ. 125 முதல் 150 வரையும் ஆகலாம். காய்ப்பிற்கு வந்தபின் சாகுபடி செலவு போக குறைந்த அளவு ஏக்கருக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 150 முதல் ரூ. 400 வரை நிகர லாபம் கிடைக்கும்.

முந்திரி சாகுபடி செய்யத் தமிழ்நாடு அரசாங்கம் அளிக்கும் சலுகைகள்.

1. தரமான விதைகளை வேளாண்மைத் துறை வழங்குகிறது.

2. புதிதாக முந்திரி தோப்பு ஏற்படுத்த, வேளாண்மைத்துறை ஏக்கருக்கு ரூ. 150 விதம் தனிப்பட்ட ஒருவருக்கு ரூ. 3,000வரை நீண்ட காலக் கடன் கொடுக்கிறது. இக்கடனை முந்திரி நட்ட 6-ம் ஆண்டிலிருந்து 5 ஆண்டுத் தவணைகளில் 5½ சத வட்டியுடன் வசூலிக்கப்படும். பஞ்சாயத்து, கூட்டுறவு சங்கங்கள், கோயில்கள் ஆகியவைகளுக்கும் இக்கடன் வழங்கப்படுகிறது.

3. பூச்சி பூஞ்சான மருந்துகளை 15 சத மானிய விலையில் வேளாண்மைத் துறை வழங்குகிறது.

4. பயிர்ப் பாதுகாப்புக்குத் தேவையான துவான்களையும் (டஸ்டர்), தெளிப்பான்களையும் (ஸ்ப்ரேயர்) பாதி விலையில் ஊராட்சி ஒன்றியங்களின் மூலம் வழங்கிவருகிறது.

"பாடாத தேனீக்கள், உலவாத் தென்றல்,
பசியாத நல் வயிறு பார்த்ததுண்டோ"
என்று பாடுகின்றார் புரட்சிக்கவிஞர்.

கவிஞரின் வரிகள், தேனை நமக்குத் தித்திக்கின்றன.

"செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே" என்று பாடுகின்றார் பாரதியார். நம் சிந்தையெல்லாம் தேனாகிறது!

உடற்பிணி போக்குவது தேன்; உயிர்ப்பிணி போக்குவது திருவாசகம் என்னும் தேன் என்பர். மணிவாசகரின் திருவாசகத்தில், இறைவனின் அருள்திறத்தைப் பல காலும் தேன் எனவே கூறுகின்றார்.

இலக்கியத்தில் மட்டுமா தேன் தித்திக்கிறது? வாழ்க்கைக்கும் மாமருந்தாகத் தித்திக்கிறது!

- தேன் சாப்பிடுவதால் வாத பித்தம் சம நிலையில் இருக்கும்.

- தினமும், தண்ணீருடனோ அல்லது பாலுடனோ சேர்த்துப் பருகி வந்தால் இரத்தவிருத்தியுண்டாகும். சோர்வு இரத்தமின்மைக்குத் தேன் அருந்தினால் குணமாகும். டைபாய்டு, மலேரியா காய்ச்சல்களினால் உடல் இளைத்தவர்களுக்கு தேன் அருமையான இயற்கை "டானிக்".

- வாந்தி பேதிக்கோ அல்லது சாதாரண வாந்திக்கோ தேனைக் கொடுத்து வந்தால் குணமாகும்.

- பல் வலிக்குத் தேனைச் சூடாக்கித் தடவினால், குணமாகும். இஞ்சி நீரில் தேனைக் கலந்து ஓட்டைப் பல் வலிக்கு விட்டால் குணமாகும்.

- தொண்டைப் புண், நாக்குப் புண், தொண்டைக் கம்மல் தேன் சாப்பிடக் குணமாகும்.

- மது மூத்திரத்துக்குத் தேன் சாப்பிடுவது நல்லது.

- தேன் சாப்பிடுவதால் குடல் பூச்சிகள் அழிந்துவிடும்.

- எலும்புருக்கி நோய்க்குத் தேன் மிகவும் நல்லது.

- மலச் சிக்கலுக்குத் தேன் சாப்பிடுவது நல்லது.

- தேனுடன் சிறிது சுண்ணாம்பு கலந்து கட்டிகளுக்குப் பத்துப் போட்டால், முளை பழுத்து வெளியே வந்துவிடும்.

- எலுமிச்சம்பழச் சாறு, இளநீர் இவற்றில் ஒன்றில் கலந்து சாப்பிட்டால் தாகம் அடங்கும்; உஷ்ணம் நீங்கும். மூத்திரத் துவார எரிச்சல் நீங்கும்.

- தேன், தயிர், தேங்காய்ப் பால் மூன்றையும் கலந்து உண்டால் வயிற்று வலி நீங்கும்.

- மயிலிறகைச் சுட்டுக் கரியாக்கித் தேனில் குழைத்துச் சாப்பிட்டால் விக்கல் நீங்கும்.

- மிளகை இள வறுவலாக வறுத்துத் தூள் செய்து தேனோடு சாப்பிட்டால் இருமல் நீங்கும். இஞ்சி ரசம் வெள்ளைப் பூண்டு ரசம், தேன் சம எடை சேர்த்து உண்டால் நெஞ்சுச் சளி நீங்கும்.

- கரிசலாங்கண்ணிச் சாறு இரு பங்கு, தேன் ஒரு பங்கு கலந்து காலையில் அருந்திக் கொண்டே வந்தால் காமாலை நீங்கும்.

மக்களுக்கு மாமருந்தாகத் திகழும் தேனை, பெரிய அளவில் கிடைக்கச் செய்யத் தேனீ வளர்ப்புத் தொழிலைப் போற்றிப் பாதுகாத்து வருகின்றது தமிழக அரசு. கடந்த சில ஆண்டுகளில் இத்துறையில் கணிசமான முன்னேற்றத்தினைக் கண்டுள்ளோம்.

—(சிலப்பதிகாரம்)

"மாசறு பொன்னே! வலம்புரி முத்தே! காசறு விரையே! கரும்பே தேனே!

தமிழகத்தில் தேனீ வளர்ப்புத் திட்டம் 1954 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இதனை மதுரை மாவட்டம் காந்தி நிகேதன் ஆசிரமம், கன்னியாகுமரி மாவட்டம், ஒய்.எம்.சி.ஏ., மார்த்தாண்டம், தமிழ் நாடு வணிகத் தொழில்துறை ஆகிய நிறுவனங்கள் ஏற்று இத்தொழிலுக்கு அடித்தளம் அமைத்தன. அனைத்திந்திய கதர், கிராமத் தொழில் குழுவால் துவங்கப்பட்ட இத் திட்டம், பின்னர் தமிழ் நாடு கதர், கிராமத் தொழில் வாரியத்தால் பொறுப்பேற்றுக்கொள்ளப்பட்டது. தமிழக அரசின் கணிசமான நிதி ஒதுக்கீட்டினாலும், நேர் முகக் கண்காணிப்பினாலும், இத் தொழில் தமிழ்நாட்டில் வளர்ந்து இந்திய உபகண்டத்தின் மற்றப் பகுதிகளுக்கு எடுத்துக் காட்டாக இன்றையதினம் விளங்குகின்றது..

தேனீ வளர்ப்புத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்குத் தேனீ வயலவர்கள் (Bee Fieldmen) நியமிக்கப்பட்டிருக்கின்றனர். இவர்கள்தாம் சிற்றூர் மக்களிடம் நேரிடையாகப் பழகிப் பேசித் திட்டத்தைச் செயல்படுத்துபவர் ஆவார்கள். இவர்களை மேற்பார்வையிட்டு அவ்வப்போது தொழில் நுணுக்க உதவிகளை நல்குவதற்குத் தேனீ அலுவலர்கள் என வட்ட அலுவலர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

தேனீ வயலவர்கள் கிராமங்களைத் தேர்ந்தெடுத்துத் தேன் பெட்டிகளை வழங்கிப் பணிப் பரப்பு வேலையில் ஈடுபடுவர். படிப்படியாக அருகிலுள்ள கிராமங்களிலும் செயல்படுவர். தேனீ வயலவர்கள் தெரிந்தெடுத்துப் பணி புரியும் இடத்திற்குக் கிளை நிலையங்கள் என்று பெயர். ஒரு கிளை நிலையம் ஐந்து ஆண்டுகள் இயங்கும். இங்ஙனம் இயங்கி முடிந்த கிளை நிலையங்களை ஒன்று திரட்டி 500-க்கும் குறையாமல் தேனீக் குடும்பங்கள் உள்ள வட்டார நிலையங்கள் அமைக்கப்படும். இந்த வட்டார நிலையம் இரண்டு ஆண்டுகள் இயங்கும். பின்னர் தேனீ வளர்ப்பவர்களை இத் தொழிலில் நன்கு பயிற்றுவித்துக் கூட்டுறவுச் சங்கத்தை ஏற்படுத்தி, அவர்களிடமே ஒப்படைக்கப்படும்.

தவிர, மாதிரித் தேனீப் பண்ணைகளும், தரமுள்ள இராணி ஈக்களை உற்பத்தி செய்து விநியோகம் செய்யக் கூடிய தேனீப் பண்ணைகளும், மகரந்தச் சேர்க்கையினால் விவசாய வளர்ச்சியடையக் கூடிய மகரந்தச் சேர்க்கை நிலையங்களும் அமைக்கப்பட்டிருக்கின்றன.

இதுவரை தேனீ வளர்ப்போர்களுக்கு ஒரு இலட்சம் தேனீக் கூடுகள் சகாய விலையில் வழங்கப்பட்டுள்ளன. இரண்டாயிரத்துக்கும் அதிகமான கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. மார்த்தாண்டம், சோலைச்சேரி கூட்டுறவுச் சங்கங்களுக்கு இரண்டு தேனீ சுத்திகரிப்பு ஆலைகள் அமைக்கக் கதர், கிராமத் தொழில் ஆணைக்குழு மூலம் உதவி வழங்கப்பட்டிருக்கின்றது.

தேனீக் குடும்பங்களை இடம் பெயர்த்தல் என்பது இத் திட்டத்தின் ஒரு முக்கிய அம்சமாகும். அவைகளைப் பருவ காலத்தில் ரப்பர் தோட்டங்களுக்கு இடம் பெயர்த்தலால் தேனீ வளர்ப்பவர்களும், தோட்டக்காரர்களும் மிகுந்த பலனடைகின்றனர். தேனும் பெருகுகிறது; ரப்பர் விதையின் எடையும் பெருத்து; முளைக்கும் தன்மை, எண்ணெய் மிகுதல் ஆகிய தன்மைகளோடு விளைச்சலும் பெருகுகிறது.

1968–69-ல், கன்னியாகுமரி, திருநெல்வேலி, சேலம், நீலகிரி, திண்டுக்கல் ஆகிய இடங்களில், 801 தேனீ வளர்ப்பாளர்கள் 15,963 தேனீக் குடும்பங்களை இடம் பெயர்த்து 84,869 கிலோ தேன் உற்பத்தி செய்திருக்கின்றனர். குமரி மாவட்டத்தில் மட்டும் 14,983 தேனீக் குடும்பங்கள் 682 தேனீ வளர்ப்பாளர்களால் இடம் பெயர்த்து வைக்கப்பட்டு, 79,267 கிலோ தேன் உற்பத்தி செய்திருக்கின்றனர். இதன் பயனாக, ரூ. 200 முதல் ரூ. 12,000 வரை ஒவ்வொருவரும் இலாபம் அடைந்திருக்கின்றனர்.

இலக்கியப் பெருமை மிக்க குறிஞ்சிப் பூவிலிருந்து தேன் எடுக்கவும், தனியான திட்டமொன்றை வகுத்து, இவ்வாண்டு குறிஞ்சித் தேன் எடுக்க ஆவன செய்திருக்கின்றார்கள்.

தமிழ் நாட்டில் தற்போது 29 தேனீ வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. உற்பத்தியாளர்களிடமிருந்து தேனை வாங்கி விற்பனை செய்து, வளர்ப்புத் தொழிலுக்கு சகல வழிகளிலும் பயன்பட்டு வருகின்றன. இவைகள் மிகுந்த இலாபத்தோடு செயல்பட்டு வருகின்றன.

தமிழ் நாடு அரசு இந்தத் திட்டத்தை மேற்கொண்டு 108 ஊராட்சி ஒன்றியங்களில் செயல்படுத்தி வருகின்றது.

இத்திட்டம் சில குறிப்பிட்ட வட்டாரங்களில் தாழ்த்தப்பட்டோர் நல நிதியிலிருந்தும் செயல்படுத்தப்படுகிறது. 1968–69-ல் தமிழ் நாடு முழுவதிலும் ரூ. 31,47,576 மதிப்புள்ள தேனும், ரூ. 21,084 மதிப்புள்ள மெழுகும் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இது அனைத்திந்தியாவின் உற்பத்தியில் நாலில் ஒரு பங்காகும்.

1969–70-ல் (டிசம்பர் முடிய) தேனீ வளர்ப்புச் சாதனைகள் இதோ—

மொத்தத் தேனீக் குடும்பங்கள்—49,450.
தேன் உற்பத்தி—79,574 கிலோ—
மதிப்பு ரூ. 4,77,444·00.
மெழுகு உற்பத்தி—514 கிலோ—மதிப்பு ரூ. 3,787·00
தேனீ வளர்ப்போர் எண்ணிக்கை—15,854.
திட்டம் அமுலில் இருக்கும் சிற்றூர்கள்—3,855.

காந்தியடிகளின் தலையாய நிர்மாணத் திட்டங்களுள் ஒன்றுமிய கதர் கிராமத் தொழில் வளர்ச்சித் திட்டத்தில் அடங்கிய தேனீ வளர்ப்புத் தொழிலை நிறைவேற்றுவதில் மற்ற மாநிலங்களை விடத் தமிழ்நாடு மிகச் சிறப்பாகச் செயலாற்றி முதன்மையாகத் திகழ்கின்றது.

—கு. செல்லசாமி

மகளிர் பகுதி

ஆகஸ்ட் 15-ஆம் நாள்! விடுதலைத் திருநாள்.

நாட்டின் விடுதலைக்கு வித்தூன்றிய நல்லவர்களை நினைவு கூரும் நாள்.

அந்நல்லவர்கள் வரிசையில் முதன்மையான இடம் பெறுபவர் அண்ணல் காந்தியடிகள்.

உலக உத்தமரான அவர் ஒவ்வொரு துறையிலும் நம் நாடு சீர் பெற வேண்டும் என்று விரும்பினார்.

பெண்ணுரிமையாகட்டும் உடல் வலிவு பெறுவதாகட்டும் எதிலும் நம்மக்கள் சிறந்து விளங்க வேண்டும் என்று காந்தி அண்ணல் விரும்பினார். ஒருமுறை உணவு முறையைப் பற்றிக் காந்தியடிகள் குறிப்பிட்டதாவது:—

''நான் சரசாங், கூபா, தர்னிப் கொழுந்துகள், காரட் நுனிகள், முள்ளங்கி நுனிகள், பட்டாணி இலைகள் ஆகியவற்றைத் தின்று பார்த்திருக்கிறேன். இவற்றைத் தவிர, முள்ளங்கி, தர்னிப், காரட் கிழங்கு வகைகளையும் வேகவைக்காது பச்சையாகவே தின்னலாம் என்பது தெரிந்ததே. இந்த இலைகளையும் கிழங்குகளையும் வேகவைத்தல், பணத்தைப் பாழாக்குவதும் இவற்றின் இயல்பான ருசியை இழப்பதும் ஆகும். இந்த இலை, கிழங்குகளில் அடங்கியுள்ள உயிர்ச் சத்துக்கள் முழுவதுமோ, ஒரு பகுதியோ இவற்றை வேகவைக்கையில் பாழாகின்றன. வேகவைத்துச் சமைப்பதால், இவற்றின் ருசி கெடுகின்றதென்று நான் சொல்லுவதன் காரணம் இவற்றுக்கு இயல்பாய் உள்ள ருசி, இவை சமைக்கப்படுகையில் போக்கப்படுவதால் தான்.''

இவ்வுண்மையை 'சத்துணவு, ஆராய்ச்சி வித்தகர்களும் எடுத்துரைத்துள்ளனர்.

'உலகிலேயே எங்காவது காய்கறிகளை அதிகமாக வேகவைத்து அடியோடு கெடுக்கிறார்கள் என்றால், அது இந்தியாவில் தான்' என்று பல்வேறு நாட்டினர் கூறுவதை நாம் மறுப்பதற்கில்லை.

தேவையற்றவைகளைக் கூட நாம் வேகவைக்கிறோம். இந்நிலையை மாற்றிட முனைவது பெண்களின் கடமையாகும்.

பழங்களிலும், காய்கறிகளிலும் அவற்றின் தோலை ஒட்டியே பெருமளவில் வைட்டமின்களும் தாது உப்புக்களும் அடங்கியிருப்பதால் அவற்றைத் தோலுடன் சமைப்பதே முறை. அவசியமானால் லேசாகத் தோலைச் சீவவேண்டும்.

காய்கறிகள் சமைப்பதற்கோ அல்லது பரிமாறுவதற்கோ சற்று முன்பாகத்தான் நறுக்க வேண்டும். கூடுமானவரை பெரிய துண்டுகளாக நறுக்குதல் நல்லது.

முடிந்தமட்டும் மூடிய பாத்திரங்களில் வேகவைப்பது நன்று.

நீரை முதலில் கொதிக்கவைத்துப் பிறகு கொதிநீரில் காய்களை வேகவைப்பது சிறந்தது. [illegible]களைக் குறைந்த நேரம் வேகவைப்பதால் ஊட்டச் சத்துக்களை ஓரளவு பாதுகாக்கலாம். [illegible]கோல், முள்ளங்கி இவற்றின் கீரையை உபயோகிக்க வேண்டும்.

சமைக்கும்போது சோடா மாவைச் சேர்ப்பது உணவுகளிலுள்ள 'பி' வைட்டமின்களை அழித்து விடும். ஆகவே, சமைக்கும்போது சோடாமாவு சேர்க்கக்கூடாது.

மைசூரிலுள்ள மைய உணவு ஆராய்ச்சிக் கழகத்தினர் உணவுகளில் ஊட்டச் சத்துப் பற்றாக் குறையை நிறை செய்ய, விலை மலிவான ஊட்ட மிக்க இந்தியப் பல சத்துணவைத் தயாரித்திருக்கிறார்கள். தனியாகத் தயார் செய்யப்பட்ட வேர்க்கடலைப் பிண்ணாக்கிலிருந்தும், கொத்துக் கடலை மாவிலிருந்தும் உணவைத் தயாரித்து மேலும் வைட்டமின்களையும் தாதுப் பொருள்களையும் சேர்த்துள்ளனர்.

இந்த உணவை முக்கியமாகக் குழந்தைகள், கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள் முதலியோரின் உணவோடு உபரியாகச் சேர்க்கலாம். மற்றவர்களும் உபயோகிக்கலாம்.

இந்தப் பல சத்துணவை வைத்துக்கொண்டு பாயாசம் தயாரிக்கலாம்.

பல சத்துணவுப் பாயாசம்:—

தேவையான பொருள்கள்:

உலர்ந்த பால்பவுடர்	30 கிராம்
பலசத்துணவுப்பொடி	30 கிராம்
வெல்லம்	38 கிராம்.

செய்முறை:—பால் பவுடரையும் சத்துணவுப் பொடியையும் கலந்து தண்ணீரைச் சிறிது சிறி[illegible]தாக விட்டுப் பிசையவும். வேண்டிய அளவு தண்ணீர் விட்டுக் கலக்கிக் கொள்ளவும். வெல்ல[illegible]தையும் கலந்து, 5 நிமிடங்க[illegible] கொதிக்கவைக்கவும். செய்தபி[illegible] சுவைத்துப்பாருங்கள். பாய[illegible]சத்தின் அருமை தெரியும்.

—அஞ்சல

வளமான வாழ்க்கைக்கு வழிகாட்டி!

எல்லா வசதிகளோடும் கூடிய ஓர் இல்லத்தை அமைத்துக் கொள்ள உங்களுக்கும் ஆசையிருக்கலாம்!

தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டுக்காக நீங்கள் செலவிடும் ஒவ்வொரு ரூபாயும் வீண் போவதில்லை. இந்தச் சமுதாயத்தின் வளமான சுபிட்சத்துக்காக ஏராளமான திட்டங்கள் ... உணவு ... உறைவிடம் ... சுகாதாரம் ... கல்வி ... மருத்துவம் ஆகிய பல்வேறு துறைகளில்உங்கள் முதலீடு அரசினால் மறு-முதலீடு செய்யப்படுகிறது.

வளமான வாழ்க்கையை அடைவதில் உங்களுக்குள்ள வாய்ப்புகளை நினைவு கொள்ளுங்கள் ... தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டுத் திட்டம் இந்தியாவெங்கிலும் அதிகப்படியான பரிசுகளையும், தொகையையும் அள்ளித் தருகிறது!

அடுத்த குலுக்கலுக்கான
பரிசுகளின் மொத்தத் தொகை : ரூ. 17,50,000
ஒவ்வொரு வரிசைக்கும் முதல் பரிசு : ரூ. 1,00,000

குலுக்கல் தேதி: 25-8-1970

தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டுத் திட்டம்
இதுவரை உருவாக்கிய புதிய லட்சாதிபதிகள் —177 பேர்

பரிசுச் சீட்டுகள் விற்பனை விறுவிறுப்பாக நடைபெறுகிறது. ஒரு சீட்டின் விலை ஒரே ஒரு ரூபாய்தான்!

இன்றே வாங்குங்கள்
தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு

வெளியீடு: இயக்குநர், தமிழ்நாடு அரசு செய்தி விளம்பரத்துறை, சென்னை-9

பிஞ்சுகளைப் பேணிக் காத்திட

திருமதி சகுந்தலாவிற்கு அது இரண்டாவது பிரசவம். சென்னை நகரிலுள்ள ஒரு மகப்பேறு மருத்துவமனையில் இரவு 2 மணிக்குக் குழந்தை பிறந்தது. பிரசவம் என்னவோ சுகப் பிரசவம்தான்.

பூப்போன்ற அக் குழந்தையின் அழகிலே, தாய் சற்று முன் அனுபவித்த பிரசவ வேதனையை எல்லாம் மறந்திருந்த வேளை. குழந்தை இரு முறை வாந்தி எடுத்தது. தாய்ப்பாலை அச் சிசுவினால் பருக முடியவில்லை. ஒரு துளி உள்ளே சென்றாலும் மூச்சுத் திணறியது. வாந்தி எடுத்தது.

வெளித் தோற்றத்தில் அழகுப் பதுமையாயிருந்த அந்த மழலையின் பிஞ்சு உடலுக்குள் ஏதோ ஒரு கோளாறு. எல்லோருக்கும் வேதனை. தாயுள்ளம் துடித்தது: காலம் கடந்து கொண்டே இருந்தது.

மாலையில், சென்னை எழும்பூரிலுள்ள குழந்தைகள் மருத்துவமனையைச் சேர்ந்த டாக்டர் வரவழைக்கப்பட்டார். குழந்தைக்கு உணவுக் குழாயில் ஏதோ கோளாறு இருக்கிறது என்று அவர் ஐயப்பட்டார். உடனே எழும்பூர் குழந்தைகள் மருத்துவமனைக்குக் குழந்தையை எடுத்துச் செல்லும்படி ஆலோசனை கூறினார். குழந்தை அங்கு எடுத்துச் செல்லப்பட்டது.

அங்கு டாக்டர் குழந்தையைப் பரிசோதித்தார். எக்ஸ்ரே எடுக்கப்பட்டது. குழந்தையின் மூச்சுக்குழலும், உணவுக் குழலும் ஒன்றாக இணைந்திருப்பது, கண்டு பிடிக்கப்பட்டது. இரவு வெகு நேரமாகிவிட்டபடியால், மறு நாள் உடனடியாக அறுவைச் சிகிச்சை செய்யவேண்டுமென்று உத்தரவிட்டார். இம்மாதிரியான உடற்கூறு உள்ள குழந்தைக்குப் பிறந்த ஒரு நாளுக்குள் அறுவைச் சிகிச்சை செய்து சரி செய்து விடவேண்டும். அல்லது குழந்தை பிழைக்காது.

ஆனால் இது, திருமதி சகுந்தலாவின் குடும்பத்தில் ஒரு சலசலப்பையே ஏற்படுத்தி விட்டது. மாமியாரும் வேறு சிலரும் குழந்தைக்கு அறுவைச் சிகிச்சை செய்யக்கூடாது என்று எதிர்ப்புத் தெரிவித்தனர்.

முடிவில் டாக்டர் ஆலோசனைப்படி அறுவைச் சிகிச்சை நடந்தது. ஒட்டிக்கொண்டிருந்த உணவுக் குழலைத் தனியாகவெட்டி அதைத் தனித்தனியே இயங்கும்படிச் செய்து விட்டனர் கைதேர்ந்த மருத்துவ நிபுணர்கள்.

ஒரு மாதம் கடந்து விட்டது. இன்று அதே குழந்தை மற்ற குழந்தைப்களை போலவே பால் பருகுகிறது.

இந்த அதிசய சாதனையைச் செய்துள்ள எழும்பூரில் உள்ள சிறுவர் மருத்துவமனை பல சிறப்புகளை உள்ளடக்கியதாகும்.

இதை மருத்துவமனை என்பதை விடச், சிறுவர் நல நிலையம் என்று சொல்லலாம். ஏனெனில், இங்கு சிறுவர்களுக்குச் சிகிச்சை செய்து மருந்துகள் வழங்குவதோடு, சிறுவர்களை எப்படி வளர்ப்பது, என்னென்ன உணவு வகைகள் அளிப்பது என்பது பற்றித் தாய்மார்களுக்கும் ஆலோசனை வழங்கப்படுகிறது. அதனால் இதன் பெயரையும் "சிறுவர் நல நிலையம்—சிறுவர்களுக்கான மருத்துவ மனை" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தியாவிலுள்ள சிறுவர்கள் மருத்துவமனைகள் அனைத்திலும் இதுவே பெரியது. இதனை விரிவு படுத்தும் திட்டம் ஒன்றுள்ளது. அவ்வாறு விரிவு படுத்தப்பட்ட பின் கீழ்த்திசை நாடுகளிலேயே இதுதான் மிகப் பெரிய 'சிறுவர் மருத்துவமனை' யாக இருக்கும்.

இந்த மருத்துவமனையில் ஏழைகளானாலும் பணக்காரர்களானாலும் ஒரே மாதிரியான சிகிச்சைதான்—ஒரே மாதிரியான வசதிகள்தான் தரப்படுகின்றன. இங்கு 'ஸ்பெஷல் வார்டு' கிடையாது என்பது குறிப்பிடத்தக்கது.

சுமார் 32 இலட்சம் ரூபா[illegible] செலவில் புதிதாகக் கட்டப்பட்டுத் தமிழக [illegible] கடந்த பொங்கலன்று [illegible]து



'இன்குபேட்ட'ரில் குழந்தை

வைக்கப்பட்டுள்ள இந்த மருத்துவமனை, புறத்தோற்றத்திலும் சரி, உள் தோற்றத்திலும் சரி, ஒரு மருத்துவ மனையின் சாயலே இல்லை எனலாம். வெளியிலிருந்து பார்ப்போருக்குச் சோலைபோல் ஓங்கி வளர்ந்த மரத்தின் மறைவிலுள்ள இதன் அழகிய கட்டடம் பெரிய மாளிகையையே நினைவுபடுத்தும். உட்புறத்தே எங்கும் ''மொசேக்'' தரை. ஆங்காங்கே பூந்தொட்டிகள். எந்த விதத்தூசியோ, மருந்துநெடியோ கிடையாது. தினம் சுமார் 2,000 குழந்தைகள் சிகிச்சைக்காக இந்த மருத்துவமனைக்கு வருகிறார்கள் என்ற செய்தி சற்று வியப்பினைக் கொடுக்கும். காரணம் அந்த அளவிற்குச் சுத்தமாக வைக்கப்பட்டுள்ளது.

இங்குக் கொண்டுவரப்படும் குழந்தைகளில் பெரும்பாலானவை அப்போதே மருந்து கொடுத்துத் திருப்பி அனுப்பப்படுகின்றன. மிகவும் மோசமான நிலையில் இருந்தால் அங்கேயுள்ள 'வார்டு'களில் தங்கவைத்துச் சிகிச்சை அளிக்கப்படுகிறது. அவசரக் 'கேஸ்' களைக் கவனிக்க மூன்று டாக்டர்கள் 24 மணி நேரமும் பணியாற்றுகின்றார்கள்.

தடுப்பு ஊசி போடவும், ஈரல் நோய், ரத்தசோகை, இருதய நோய், மனநோய், முடக்குவாதம் (போலியோ), எலும்புருக்கி நோய் (டி.பி.), டைஃபாய்டு காய்ச்சல், தொண்டை அடைப்பான் (டிப்தீரியா) குதிரைவாய் சன்னி (டெட்டானஸ்) இப்படிப் பலதரப்பட்ட நோய்களுக்காகவும் குழந்தைகள் இங்கு கொண்டு வரப்படுகின்றன. அன்று பிறந்த குழந்தை முதல் 12 வயது வரையுள்ள சிறுவர் வரை இங்கே அனுமதிக்கப்படுகின்றனர்.

பொதுவாகச் சத்தில்லா உணவினை உண்பதாலும், தொத்து வியாதி பீடிப்பதாலும் இந்த நோய்கள் குழந்தைகளுக்கு வருகின்றன. குழந்தைகளில் 30 சதவீதம் டி. பி. யால் பாதிக்கப்படுகிறார்கள்.

இங்கு தினம் 600 ஊசிகள் போடப்படுகின்றன. ஆண்டுக்குச் செலவாகும் மருந்தின் மதிப்பு ரூ. 3,74,000; ஆண்டுக்கு வாங்கப்படும் மருத்துவக் கருவிகளின் மதிப்பு ரூ. 2,50,000.

குதிரைவாய்ச் சன்னியால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் ஓர் அறையில் தனித் தனிப்படுக்கைகளில் வைக்கப்படுகின்றன. முள் குத்தியதால் இந்த நோய் வந்துள்ளது, ஒரு சிறுமிக்கு; கீழே விழுந்ததால்—அம்மைப்பால் குத்தியதைத் தொடர்ந்து—தொப்புள் கொடியைத் துருப்பிடித்த கத்தியால் அறுத்ததால்—இப்படிப் பல காரணங்களினால் இந்நோய் வந்ததாகத் தெரிகிறது.

பிறந்த அன்றே அறுவைச் சிகிச்சைக்கு ஆளான குழந்தை



மற்றொரு வார்டில், பிறந்த ஒரு மாதத்திற்குள் உள்ள குழந்தைகளுக்குச் சிகிச்சை அளிக்கப்படுகிறது. மஞ்சட்காமாலை போன்ற நோய்கள் தாயின் வயிற்றிலிருக்கும் போதே தாய் மூலம் குழந்தைக்கும் தொற்றிக் கொள்ளுமாம். இந்நோயால் பீடிக்கப்பட்ட குழந்தையின் உடம்பிலுள்ள இரத்தத்தைச் சிறிது சிறிதாக எடுத்துவிட்டுப் புதிய இரத்தத்தைச் சிறிது சிறிதாக ஏற்றிக் குணமாக்குகிறார்கள்.

ஒரு குழந்தையின் மூளைநோய்க்குச் சிகிச்சை தரப்படுகிறது

ஆண்டுதோறும் இங்கு 12,000 குழந்தைகளுக்கு அறுவைச் சிகிச்சை நடக்கின்றது. குடல் வீக்கம் சம்பந்தப்பட்ட நோய்களினால் பீடிக்கப்பட்ட குழந்தைகள் முன்பு பிழைப்பது அரிது என்ற நிலையிருந்தது. 100 சதவீதம் மரணம் தான். ஆனால் குழந்தைகளுக்காகத் தனி மருத்துவமனை ஏற்படுத்தப்பட்டு, இதில் டாக்டர்கள் தனிக் கவனம் செலுத்த ஆரம்பித்தபின் இப்போது இந்நோயால் பீடிக்கப்பட்ட குழந்தைகளில் 75 சதவீதம் குணமடைகின்றனர்.

புற்றுநோய், தொண்டை-மூக்கு-காது சம்பந்தப்பட்ட நோய்கள்-இப்படிப் பலதரப்பட்ட நோய்களுக்கு அறுவைச் சிகிச்சைகள் இங்கு நடைபெறுகின்றன.

அப்போதுதான் பிறந்த குழந்தைகளை அறுவைச் சிகிச்சைக்கு முன்னும் பின்னும் 10 நாட்கள் ''இன்குபேட்டர்'' என்ற கருவியில் வைத்திருக்கிறார்கள்.

மூன்று மாடிகள் கொண்ட இந்த மருத்துவ மனையின் மூன்றாவது மாடியில் தற்காலிகமாக நர்சுகள் தங்கியிருக்கின்றனர். அருகிலேயே அவர்களுக்கு விடுதி கட்டப்படுகிறது. அவர்கள் அங்கு சென்றபின் மேலும் 100 படுக்கைகள் சிறுவர்களுக்காக ஏற்படுத்தப்படும். அதன்பின் கீழ்த்திசை நாடுகளில் மிகப் பெரிய சிறுவர் மருத்துவ மனை என்ற புகழினை இது பெறும்.

ஏனைய மருத்துவ மனைகளில் இல்லாத பல சிறப்பான வசதிகள் இதில் இருக்கின்றன.

ஒவ்வொரு வார்டு அருகிலும் ஒரு சிறிய பரிசோதனைக் கூடம் இருக்கிறது. இது தவிர மொத்தத்திற்கும் சேர்த்துப் பெரிய பரிசோதனைக் கூடமும் உண்டு.

ஒவ்வொரு மாடியிலும் தாய்மார்கள் தங்குவதற்காக ஒரு கூடம் (ஹால்) அமைக்கப்பட்டுள்ளது. தாய்மார்கள் ஓய்வு எடுக்கவும், உணவு அருந்தவும் இங்கு வசதிகள் உள்ளன. அதோடு அங்கு அவர்களுக்குக் குழந்தைகள் வளர்ப்புப் பற்றியும், குடும்ப நலத் திட்டம் பற்றியும் எடுத்துக் கூறப்படுகின்றன. இவை பற்றிய திரைப்படங்களும் காட்டப்படுகின்றன.

டாக்டர்களுக்கு மருத்துவ நூல்கள் அடங்கிய நூல்நிலையம் ஒன்றும், தாய்மார்கள் படிப்பதற்கான நூல்நிலையம் ஒன்றும் இங்கு உள்ளன.

தனியாக ஒரு இரத்த சேகரிப்பு நிலையம் (Blood Bank) உள்ளது.

குழந்தைகளுக்கு அவர்களது வார்டிலுள்ள படுக்கையிலேயே 'எக்ஸ்ரே' எடுக்கவும் வசதி உள்ளது.

அறுவைச் சிகிச்சை நடக்கும்போது அதனை நேரில் பார்த்துக் கற்கவேண்டிய பட்ட மேல்படிப்பு மாணவர்களுக்காகத் தனி வசதி உள்ளது. அவர்கள் அறுவைச் சிகிச்சை அறைக்குள் செல்லாமல் மேலே மாடியிலிருந்தபடி, இதற்காகத் தனியாக அமைக்கப்பட்ட கண்ணாடியின் வழியாகப் பார்க்கலாம்.

இவை தவிரக் குழந்தை வளர்ப்பு, குடும்ப நலத்திட்டம், சத்துணவு முதலிய விளக்கங்கள் அடங்கிய - தாய்மார்களுக்கான- மியூசியம்ஒன்றுமருத்துவமனையை ஒட்டி நான்கு இலட்ச ரூபாய் செலவில் நிறுவப்படுகிறது. இது தமிழக முதல்வரின் பொங்கல் பரிசு.

இந்த மருத்துவமனையில் சென்னையில் உள்ள ஸ்டெல்லாமேரி கல்லூரி, மகளிர் கிறித்துவக் கல்லூரி, கோவை அவிநாசிலிங்கம் கல்லூரி ஆகியவற்றிலிருந்து மாணவிகள் வந்து 10 நாட்கள் பயிற்சி பெற்றுச் செல்கின்றனர்.

தற்போது உலக நல அமைப்பு (W.H.O.) கிழக்கு ஆசிய நாடுகளைச் சேர்ந்த நர்சுகள்-டாக்டர்களுக்காக ஒரு பயிற்சியை ஏற்பாடு செய்துள்ளது. இதற்கு, இந்தியாவிலே சிறந்த மருத்துவ மனை இதுதான் என்று இதனைத் தேர்ந்தெடுத்துள்ளனர்.

ஒளி மயமான எதிர்காலத்தை உருவாக்குகிறது மதராஸ் ரிபைனரீஸ்!

நாடு முன்னேற்றமடைகிறது.

அந்நிய ஒத்துழைப்புடன் செயல் புரியும் தேசிய நிறுவனமான தராஸ் ரிபைனரீஸ் லிமிடெட் பொருளாதாரத் தன்னிறைவு, க்களின் வளமான வாழ்வு ஆகியவற்றிற்கு மகத்தான சாதனை ளிக்கிறது.

க்களுக்கும், வர்த்தக, தொழில் துறைகளுக்கும் மதராஸ் ரிபைனரீஸ் லிமிடெட், அநேக விதங்களில் சேவை செய்கிறது. முன்பு வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பல பொருள்களை உள்நாட்டிலேயே தயாரித்து, நாட்டின் முக்கியத் தேவையான அந்நியச் செலாவணியில் சேமிப்பு ஏற்படுத்துகிறது. குடும்பத் தலைவிகளுக்கு வீட்டு சமையலுக்கு எரிபொருள், மற்றும் மண்ணெண்ணெய், ஆகாய விமானங்களுக்கும், மோட்டார் கார்களுக்கும் பெட்ரோல், டீசல், மற்றும் கிரீஸ்போன்ற எண்ணெய்ச் சத்துப்பொருள்கள். உரத் தயாரிப்பிற்கு ''நேஃப்தா'' பெட்ரோ கெமிக்கல்களுக்கு ரசாயனப் பொருள்கள். இவற்றுடன், ''நேஃப்தா'' மற்றும் ''பர்னஸ் ஆயில்'' ஏற்றுமதி மூலம் நாட்டிற்கு இன்றியமையாத அந்நியச்செலாவணியையும் சம்பாதிக்கிறது.

தொழிற்துறையில்—ஒரு உர உற்பத்திச்சாலை, டிரான்ஸ்பார்மர் ஆயில் உற்பத்திச்சாலை மற்றும் மணலியில் உருவாகும் பெட்ரோகெமிக்கல் தொழிற்சாலை ஆகியவற்றிற்கு மதராஸ்ரிபைனரீஸ் லிமிடெட் ஒரு தாய் நிறுவனமாகத் திகழ்கிறது. இந்நிறுவனங்களால் அநேகருக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கிறது. நாட்டுவளம் பெருகுகிறது.

மதராஸ் ரிபைனரீஸ் லிமிடெட் 122-D, மவுண்ட் ரோடு, சென்னை-6.

“கந்தசாமி! ரெடியா இரு நாளைக்கு நீ தஞ்சாவூர் போகணும்'' என்றார், ஜெயில் வார்டர்.

தஞ்சாவூர் பக்கத்திலுள்ள நீலகிரித் தோட்டம் என்ற கிராமத்தில் திறந்த வெளிச்சிறைச்சாலை ஒன்று இருக்குதாம். அங்கேதான் என்னை மாற்றப் போறாங்கன்னு அவர் மூலமாகக் கேள்விப்பட்டேன்.

எனக்குச் சொந்த ஊரு திண்டுக்கல். வயசு இப்போது 37 இருக்கும். மனைவியைக் கொன்றதற்காக எனக்கு இந்த ஜெயில் தண்டனை கொடுத்தாங்க. 1963லே கன்விக்சன் ஆச்சுது. அதைப் பற்றி விரிவாகக் கேளாதீங்க! ஏதோ ஒரு வெறி! பழையதை மறந்திடுங்க! நான் இப்போ புது ஆளா மாறிவிட்டேன்.



நான் நல்ல படியாக நடக்கிறதனாலேதான், என்னைத் திறந்த வெளி ஜெயிலுக்கு அனுப்புகிறதா சொன்னப்போ எனக்கு மனசுக்கு நிம்மதியாக இருந்திச்சு.

மூணு மாசத்துக்கு முன்னால் இங்கே வந்து சேர்ந்தேன்.

சிறை வாழ்வுன்னு அதை அனுபவிச்சங்களுக்குத்தான் தெரியும். பெரிய வேதனை. இரவெல்லாம் புறாக்கூடு போன்ற இருண்ட அறை. பகலிலே கூட்டை விட்டு வெளியே வரமுடியுமே தவிர வேலை செய்வதெல்லாம் பெரிய சுவர்களுக்கு உள்ளேதான். மதில் சுவர்களையும், பூட்டுக்கு [illegible] பூட்டு போட்டிருக்கும் பெரிய கதவுகளையும் பார்க்கிறப்போ, தினம் தினம் '' நீ ஒரு குற்றவாளி''யின்னு நினைவு படுத்துகிற மாதிரியிருக்கும். மனசு நிம்மதியில்லாமெ இருண்டு கிடக்கும்.

திறந்த வெளிச் சிறையிலே கைதிகளைப் பூட்டிவைக்க அறைகள் இல்லை. கைதிகள் தப்பி ஓடி விடாதபடி தடுக்க நெடுஞ்சுவர்கள் இல்லை.

மேலே வானம்! கீழே பூமி !!

[illegible] பண்ணிஞத்தானே தடுப்புச்சுவர்களும், கதவு—பூட்டுகளும் தேவை. இங்கேதான் அந்தச் சூழ்நிலையையே மாத்திப்புட்டாங்களே !

ஏதோ சொந்த ஊரிலே, சொந்த நிலத்திலே பயிர்பச்சை வைச்சுப் புழைக்கிற மாதிரி சிந்தனைதான் எனக்கு இருக்கு.

காவலுக்கு போலீஸ் இல்லியா என்று கேட்பீங்க ! இருக்காங்க! கடமை தவறாதகாவலர்கள் இருக்காங்க. ஆனால் அவங்க கைகளிலே ஆயுதங்கள் கிடையாது. ஏன் ? கைத்தடி கூட அவங்க வைச்சுக்கிறது இல்லியே.

எங்க மேலே நம்பிக்கை வைத்து எங்களையும் மனிதர்களாய் மதிச்சு இப்படி அன்போடு பாதுகாக்கும்போது நாங்களும் அந்த நல்லெண்ணத்தைக் காப்பாத்த வேண்டாமா? அவர்களுக்கு நாங்க சிரமமே கொடுப்பதில்லை. அவங்க கொடுக்கிற சாப்பாட்டை சாப்பிட்டுட்டு மொங்கு மொங்குன்னு வேலை பார்க்கிறோம். அதிக நேரமில்லை. மற்றத் தொழிலாளிகள் மாதிரி 8 மணி நேர வேலைதான். காலையில் கொஞ்ச நேரம், மத்தியானம், அப்புறம் சாயங்காலம்.

இங்கே இப்போ நாங்க 57 பேர் இருக்கிறோம். எல்லோரும் என்னை மாதிரி கொலைக் குற்றத்திற்காகத் தண்டனை பெற்றவர்கள்தான். நிலத்தகராறு, பெண் காரணமாகச் சண்டை, குடும்பப்பூசல்கள் இப்படி ஏதோ

“ நல்ல வேலைகள் செய்யும்போது கவலை யெல்லாம் மறந்துபோகுது ”

...ம்நிலையில் கொலை செய்த ..., சிறையிலே இருக்கிற ...த்திலே ஒழுங்கா நடந்த ...ளாலே அவங்களையும் இங்கே அனுப்பியிருக்காங்க.

அதிலே பலபேரு விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவங்க. அதோடு மத்திய சிலை... இருக்கிறப்போ, ...கொல்லு வேலை ...சொல்லித் தந்தாங் ...வெளியே வந்தபிற... ...வலை தெரியுனு ...ான் இதைச்சொல்...

நாங்க இங்கே ...சய்திருக்கிறோம் ...ரு வருஷத்துக்... ...துதான் தமிழக ...ய்யா ப. உ. சண்... ...ா வந்து இதைத் ... ...ம் முன்னாடி -இது ப... ...மியா இருந்துதாப் ...றுகளும், முள் ...றந்த காட்டுப் ...த்துதாம். இப்போ ...த்திப்பிட்டோம்.

...ந்த இடம் மொத்தம் ... ...கர். இதைச்சுற்றி முள் ...பி வேலி போட்டோம். ...க்கு இந்த வேலி? எங்களுக் ... இல்லே. ஆடுமாடுகள் புகுந்து ... பச்சைகளை அழிக்காம ...க.

...ல்லா இடத்தையும் உழுது ...ட்டோம். தண்ணீர் பாய்ச் ...த்காகப் பெரிய கிணறுகள் ரெண்டு தோண்டிருேம். அதிலே பம்புசெட்டு வைச்சுப் பயிரிடு கிறோம். இந்த ஆண்டு நிலக் கடலைப் பயிர் 30 ஏக்கரில் போட்டிருக்கோம். வாழைத் தோட்டம், காய்கறித் தோட்டம் எல்லாம் இருக்கு. 300 தென்னை ...ட்டிருக்கிறோம். ...ஜி. டி. ...டு கண்டுபிடிச்ச துவரை ...யப் போட்டிருக்கோம். இது ...மாதிரி வளர்ந்து 8 வருஷத் ...ப் பலன் கொடுக்கக் ...து.

...ப்புறம் கேளுங்க, பூசணி, ...ப், சொரை எல்லாம் போட ...ம் குழி வெட்டிப் போட் கோம்.

...ன வருஷம் ஐ.ஆர் 8 என்ற ... கூட பயிரிட்டாங்களாம். ...ஆண்டு குருவை நெல் ...ஹும்னு ஜெயிலர் அய்யா ...ளுரு.

முன்னாலே எங்களுக்கும் சரி, காவலர்களுக்கும் சரி தங்கறதுக்கு படுக்கிறதுக்கு இடம் கிடையாது. மேலே வானம்! கீழே பூமி! அவ்வளவுதான். நாடோடிகள் மாதிரி கூடாரம் அடித்துத் தங்கியிருந்தோம்.

இப்போ 4 கட்டடம் கட்டியிருக்கிறோம். 36,000 ரூபாய் மதிப்பிருக்கும். 100 பேர் தங்கலாம். அதுபோக ஆபீஸ் அறை ஒண்ணு பத்தாயிரம் ரூபாய் செலவில் கட்டியிருக்கிறோம். சமையலறை, மாட்டுக் கொட்டகை இப்படி எத்தனையோ கட்டியிருக்கிறோம். இதுகளுக்குக் கதவு ஜன்னல் எல்லாம் நாங்களே செய்கிறோம்.

இப்பவே இங்கு விளைகிற காய்கறிகளை வேறு ஜெயில்களுக்கு அனுப்புகிறோம். ஒரு டிராக்டரும் 5 குழாய்க் கிணறுகளும் அரசாங்கம் கொடுத்திட்டாங்கன்னு, இதைப் பொன் விளையிற பூமியா மாத்திப்புடுவோம்.

இந்தத் தரிசு நிலத்தைப் பூஞ்சோலையா மாத்திப்புடுவோம். அப்பறம் எல்லா சிறைச்சாலைகளுக்கு மட்டுமில்லாமே வெளியே கூட காய்கறிகள், நெல் எல்லாம் விற்கலாம்.

இந்தமாதிரி நல்ல வேலைகள் செய்யும்போது கவலையெல்லாம் மறந்து போயிடுது! மற்றவர்களுக்குப் பயன்படும்படியா வாழ முடியும் என்ற நம்பிக்கை ஏற்படுது. இப்படிப்பட்ட ஆக்கப் பணிகள் செய்ய நாங்கள், எப்பவும் தயாராயிருக்கோம்னு நாங்கள் சொல்லிக்கொள்கிறோமுங்க.

END OF THE FILM ROL
CAUTIO

இன்னொண்ணு முக்கியமானது சொல்ல மறந்துட்டேனே. இங்கு இரவிலே, படிப்புத் தெரியாதவங்களுக்குப் படிப்பும் சொல்லிக் கொடுக்கிறாங்க.

வேலை எல்லாம் முடிஞ்சதுக்கப்புறம், இரவிலே இந்தப் படிப்புச் சொல்லித் தருவாங்க. நமது அரசாங்கம் இவ்வளவு நல்லெண்ணமும் நம்பிக்கையும் எங்களிடம் காட்டுவதால், எங்களுக்கு நேர்மையா நடக்கணும், நம்பிக்கைத் துரோகமே செய்யக் கூடாது என்ற எண்ணம் ஏற்படுகிறது.

கைதிகளாகிய எங்களுக்குப் படிப்பும் சொல்லித்தந்து தொழிலும் சொல்லித் தந்து எங்களை ஆளாக்கி விடுவதை நாங்க என்றும் மறக்கவே முடியாது.

இந்தத் திறந்த வெளிச் சிறை எங்க வாழ்க்கையிலே ஒரு பெரிய மாற்றம்; வாழ வழி காட்டும் தொழிற்கூடம் — விவசாயப்பண்ணை என்றுகூடச் சொல்லுவேனுங்க!



ராதா சில்க்
எம்போரியம் (பி)
லிட்.,
1, சன்னிதித் தெரு
மைலாப்பூர்,
சென்னை-4.
பம்பாய் கிளை :
வெஸ்டர்ன்
இந்தியா ஹவுஸ்,
சர் பி.எம் ரோடு
பம்பாய் 1
சார்பு நிலையம் :
ராதா சில்க்ஸ்,
தன் பில்டிங்,
மவுண்ட் ரோடு,
சென்னை-2.


ஏண்டி
இன்னுமா
புறப்படலே!
சும்மா விரட்டாதீங்க.
இரண்டு குழந்தைகளைத்
தான் ரெடி பண்ணி
இருக்கேன்.
அம்மா, என்னையும்
தூக்கிக்க.
சீ!
சனியனே
காலை விடு
அப்பா! கால்
வலிக்குது. டாக்ஸியிலே
போகலாம்.
வாயை மூடு
டாக்ஸியிலே
நான்கு பேருக்கு
மேலே ஏத்த
மாட்டான்!
பஸ்ஸிலே
போகலாம்.


அய்யய்யோ!
சுந்தரத்தைக்
காணோம்! பஸ்ஸிலே
ஏறிருனு?
ரூ.1.66
சார்!
மூணு டிக்கெட்
தான் இருக்கு.
அடுத்த குழந்தை
இப்போது வேண்டாம்.
இரண்டுக்க மேல்
எப்போதும் வேண்டாம்
சொன்னு
கேட்டியாடி.
என்னை மட்டும் இப்ப
குற்றம் சொல்லி
என்ன செய்யறது

குறளகம்
சென்னை.1
கதர்-கைத்தொழில் அங்காடி
தொலைபேசி எண்கள்: 26782 21552 21553
கைவண்ணப் பொருள்களின் களஞ்சியம்
உங்களுக்கு வேண்டியவை எல்லாமே இங்கே கிடைக்கும்

பூங்காவில் பாம்பு!

உலகில் பல பகுதிகளில் பாம்புப் பூங்காக்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஊர்ந்து வாழும் உயிரினங்கள் பற்றிய ஆய்வு நிகழ்த்தவும், அவ்வுயிரினங்களின் நஞ்சு விளைவிக்கும் நாசத்தினைத் தடுக்கும் வகையில் மருத்துவத் துறையில் ஆய்வு நிகழ்த்துவதற்கும் இப்பூங்காக்கள் உதவுகின்றன. மேலும், ஊர்வன பற்றி அறிந்து கொள்ள ஆர்வங் கொண்டுள்ளோருக்கு அவற்றைக் கண்முன்னே எளிதில் காட்டுவதற்கும் இந்தப் பூங்கா உதவுகிறது.

பாம்பு போன்ற உயிரினங்களைப் பரவலாகப் பெற்றிருக்கிற இந்தியாவில், அவற்றைத் தேடி அலைய வேண்டிய நிலைதான் இருந்தது. அவற்றை எளிதில் கண்டு கொள்வதற்கென ஒரு பூங்கா இல்லாதது பெருங் குறையாகவே இருந்து வந்தது.

சென்னை புறநகர்ப் பகுதியில், தாம்பரத்தை அடுத்து உள்ள வேளச்சேரி சாலையோரம் அமைக்கப்படுகிற பாம்புப் பூங்காதான் இந்தியாவிலேயே முதன் முதலாக அமைக்கப்படுகின்ற ஊர்ந்து வாழ்ந்திடும் உயிரின ஆராய்ச்சிக் கூடமாகும் (Reptile Research Centre). பாம்புக்கடி பற்றியும், ஊர்ந்து வாழும் உயிரினங்கள் பற்றியும் ஆய்வு நிகழ்த்தும் கூடமாக மட்டுமல்லாது, பொது மக்களுக்கு ஒரு காட்சிக் கூடமாகவும் இப் பூங்கா அமையும்.

இந்தியாவிலுள்ள பாம்பினங்கள் அனைத்தும் இங்கே கொண்டு வரப்பட்டு உள்ளன. அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும் காணப்படும் பாம்பினங்களும் இங்கே வைக்கப்பட்டுள்ளன.

இப் பூங்காத் திட்டத்தைத் தொடங்கிச் செயல்படுத்துபவர் ரோமுலஸ் விக்ட்கார் என்னும் அமெரிக்க நிபுணராவார். அவர், முதலைகள், பெரிய ஆமைகள், நாகராஜா (King Cobra) எனப்படும் நல்ல பாம்புகள் ஆகியவற்றையும் இப் பூங்காவுக்குக் கொண்டுவர வேண்டுமென்று விரும்புகிறார்.

இந்தியாவில், பாம்புக்கடியால் ஏற்படும் மரணங்கள் பெரும்பான்மையாக அறியாமையின் விளைவே என்றும், பாம்பு பற்றிய விவரங்கள் மக்களுக்குத் தெரிவிக்கப்படுமானால், இவ்வகை மரணத்தைப் பெரும் அளவு தடுக்கலாம் அல்லது குறைக்கலாம் என்றும் அவர் கருதுகிறார். பாம்புக்கடிக்குத் தக்க சிகிச்சையும் அளிக்க முடியும் என்று நம்புகிறார்.

நல்லபாம்பு, கட்டுவிரியன், கண்ணாடி விரியன், சுருட்டைப் பாம்பு ஆகிய நான்கு வகைப் பாம்புகள் மட்டுமே கொடிய நஞ்சுடையனவாகும். பம்பாயிலுள்ள ஹாஃப்கைன் நிலையத்தில் (Haafkine Institute) பாம்புக் கடிக்குத் தக்க மருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பாம்புகள் வாழ்வதற்கான பள்ளங்களும் குழிகளும் நிறைந்த இயற்கைச் சூழ்நிலை இப்பூங்காவில் அமைக்கப்படும். பாம்பின் நஞ்சு எடுக்கப்படுவதை மக்கள் காணலாம். ஆய்வில் ஆர்வம் கொண்டு வருவோர் பாம்புகளைத் தேடி அலைய வேண்டியதில்லை. வேளச்சேரிக்கு விரைந்து வந்தால்போதும் என்ற நிலை உருவாக்கப்படுகிறது.

எதிர்காலத்தை நோக்கி இன்ப ஊஞ்சலில்

செல்வனும் செல்வியும்

வளமான வாழ்வு. எதிர்காலம் பற்றிய அச்சமில்லை. புன்னகையுடன் வரும் காலத்தை வரவேற்கக் காத்திருக்கும் இக்குழந்தைகளுக்கு மட்டும் இந்த இன்பச் சூழ்நிலை எப்படி வந்தது? பிறக்கும் போதே அதிர்ஷ்டத்தை அணைத்துக் கொண்டா பிறந்தனர்? இல்லை. வருமுன் காக்கும் வகையறிந்த இவர் தம் பெற்றோர், திட்டமிட்டுப் பொருளைச் சேர்த்தனர். திட்டமிட்டே குடும்பத்தைக் காத்தனர். வருவாய் குறைவாக இருப்பினும், குடும்பம் சிறியதாகவே. திட்டமிட்ட குடும்பமே தெவிட்டாத இன்பம் என்பதை உணர்ந்து போற்றினர்; பின்பற்றினர்.

உங்கள் இன்பமும் உங்கள் குழந்தைகளின் வருங்கால இன்பமும் உங்கள் கரத்திலேயே உள்ளது. திட்டமிட்டுக் குடும்பத்தை அமையுங்கள். மட்டில்லா இன்பம் பெறுவீர்கள்.

தமிழகத்தில் பத்து லட்சம் பேர் குடும்பநலத் திட்டத்தால் பயனடைந்துள்ளனர். வளமிக்க நிறைவாழ்வும் எழில் குன்றா இன்னுடலும் பெற்று மகிழ்கின்றனர். பெற்றோர் தம் குழந்தைகளுக்கு இனிமைமிக்க எதிர்காலத்தை இப்போதே அமைத்துக் கொண்டனர்.

உங்கள் வாழ்வையும் குழந்தைகளின் எதிர்காலத்தையும் பாழ்படுத்திட வேண்டாம்; பாதுகாத்திடுங்கள்! உங்கள் மருத்துவரைச் சந்தியுங்கள்; நண்பர்களிடம் கேளுங்கள்!

குடும்ப நலத் திட்டப் பணியகத்திற்குச் செல்லுங்கள். பயிற்சி பெற்ற பணியாளர்கள் வழி காட்டுவர்; கருத்துரை தருவர். கருவிகளும் கிடைக்கும்; பயன் பெறுக!

திட்டமிட்ட குடும்பம் தெவிட்டாத இன்பம்

வெளியீடு: இயக்குநர், தமிழ்நாடு அரசு செய்தி விளம்பரத்துறை, சென்னை-9

தமிழ் நாட்டின் வருவாய்ப் பெருக்கத்திற்குத் தமிழகக் கடல் முத்துக்கள் பெரிதும் உதவுகின்றன. முத்துக் குளிக்கும் தொழில் எப்போது தொடங்கிற்று என்பதை யாராலும் கணக்கிட்டுக் கூற இயலவில்லை. மூவேந்தர் கால முதல் முத்து வணிகம் நடைபெற்று வந்திருக்கிறது. ரோமிலும், கிரேக்கத்திலும், தமிழகத்து முத்துக்கள் மாதர் தம் அணிகளாகி மன்னர்களின் மனங் கவர்ந்திருக்கின்றன. நம் தமிழ் நாட்டில், மன்னார் வளைகுடாவில் நடக்கும் முத்துக் குளித்தலைப் பற்றி ரோம, எகிப்திய, கிரேக்கப் பயணிகள் குறிப்பிட்டுள்ளனர். மன்னார் வளைகுடாவில் முத்தெடுப்பது பற்றித் தெளிவான வரலாற்றுக் குறிப்பினை முதன் முதல் நமக்குத் தந்தவர் உலகம் சுற்றிய வீரர் மார்க்கோபோலோ.

இயற்கையளித்த பளபளப்பும், எழிற் கவர்ச்சியும் முத்தின் முழுமைக்கு முத்தாய்ப்பு வைக்கின்றன. அதனை அழகுபடுத்தும் அக்கறையோ, அங்கலாய்ப்போ, அவசியமோ மனிதனுக்குத் தேவையில்லை!

உலகின் பல பகுதிகளில் முத்துக்கள் கிடைக்கின்றன. எனினும் ஊதியம் தரும் அளவுக்கு மிகுதியாகக் கிடைக்கும் இடங்கள் மிகக் குறைவு.

விலை மதிப்புள்ள முத்துக்களை மிகுதியாகப் பெறும் இடங்களில் மன்னார் வளைகுடாவும், பாரசீக வளைகுடாவும் முதன்மையானவை. பிரிட்டனிலுள்ள முத்து வணிகச் சந்தையான மன்ஹாட்டனில் தமிழகத்து முத்துக்கள் முதல் வரிசையில் இடம் பெற்றுள்ளன என்பதை உலகம் அறியும்.

STANDARD PENCILS•
for Supreme Satisfaction
Blacklead HB & Short hand
Drawing 6H to H, HB, B to 6B, Copying - Hard, Medium & Soft
Also makers of
Monalisa
Deluxe
BINDHI PENCILS &
EYE BROW PENCILS
Manufacturers:
STANDARD PENCIL FACTORY,
(Most up-to-date Pencil Factory in India)
MADRAS-52
Criterion-SP-1196



எதிர்காலத்தை நோக்கி நம்பிக்கை நடை . .
இந்தியாவின் பொருளாதாரத்தை மாற்ற உதவும்
இந்தியன் ஆயில்

இந்தியாவின் இதயமான கிராமங்களில் 80% க்கு மேற்பட்ட மக்கள் வாழ்கிறார்கள்.

இன்று, கிராம வாழ்க்கை மாறி வருகிறது. கிராம மக்களின் முன்னேற்றத்திற்கு வகை செய்யும் வேளாண்மை-தொழில் வளர்ச்சிக்குத் துணைவன் இந்தியன் ஆயில்.

சாதாரண மனிதனின் வாழ்வினை மாற்றி, அவன் எதிர்காலத்தை நம்பிக்கையோடு எதிர்நோக்க உதவுகிறது இந்தியன் ஆயில்.

பொருளாதார வளமைக்கு ஒரு தேசிய நிறுவனம்
இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் லிமிடெட்

சும்மா இருந்ததுக்காகவா டீச்சர் அடிச்சாங்க ?

ஆமாம்மான்னு ! ஏழும் எட்டும் எவ்வளவுன்னு கேட்டாங்க ! பதில் சொல்லாமே சும்மா நின்னேன் ! அதுக்கும் போட்டு அடிச்சுட்டாங்க !

கார் விற்பனையாளர் : நம்ம கிட்டே எல்லா வருஷ மாடலும் இருக்குதுங்க !

வந்தவர் : அதுதான் பார்த்ததும் தெரியுதே ?



சார் ! நீங்க வெளியிட்ட "பிழையில்லாமல் எழுதுவது எப்படி"ங்கிற புத்தகத்தைப் படித்தேன் சார் !

அப்படியா ? எப்படி இருந்தது ?

ஒரே பிழையா இருந்தது !

பெண்: டாக்டர்! என் வீட்டுக்காரர் ராத்திரிலே திடீர்னு எழுந்து "ஆ பேய் ! பூதம்னு" கத்துறாரு ! அதுக்கு ஏதாவது மருந்து

டாக்டர் : மருந்து ஒண்ணும் தேவையில்லே; நீங்க நல்லா தலையை வாரிக்கிட்டிங்கன்னாப் போதும் !



அம்மா ! பிச்சை போடு தாயே ! சாப்பிட்டு நாலு நாளாச்சு !

ஏய் ! நேற்றுதானே நிறைய சாதம் போட்டேன் ! பொய்யா பேசுறே !

பொய் இல்லே தாயே ! ருசியான சாப்பாடா சாப்பிட்டு நாலு நாளாச்சு !



பல் டாக்டர் மகள் : மிஸ்டர் ! என்னிடம் பல்லைக் காட்டினால், பல்லு கழண்டிடும் ! ஜாக்கிரதை !!



என்னய்யா ஆபீசுக்கே வந்துட்டே ?

அம்மா ஒரு எவர்சில்வர் பாத்திரம் வாங்கினாங்க ! அதுக்குப் போட கிழிஞ்ச துணி இல்லையாம் ! ஆபீசுக்குப் போயி அய்யா கோட்டைக் கழற்றி வாங்கிக்கோன்னாங்க ! அது தான்..



அப்பா ! செத்தே முந்தி, உனக்குப் பாடம் சொல்லித்தந்த வாத்தியாரைப் பார்த்தேன் !

என்னடா சொன்னார் ?

"மண்டு மாணிக்கம் மகனாடா நீ ?" ன்னார்.



வேளாண்மைப் பெருங்குடி மக்களுக்கு

ஒரு நல்ல சேதி!

உங்களுக்கு டிராக்டர் தேவையா?

உடனே எங்களை அணுகுங்கள்!

ஜெட்டார் 2011-25HP (செக்கோஸ்லோவேக்யா)
வரியுட்பட ரூ. 16,700

பைலாரஸ் 50HP (ரஷ்யா)
வரியுட்பட விலை ரூ. 18,500

[illegible] (1970-71) [illegible]

[illegible]

யூ 650-65HP (ருமேனியா)
வரியுட்பட விலை ரூ 26,500

ஆர்.எஸ்.09-20HP (கிழக்கு ஜெர்மனி)
வரியுட்பட ரூ. 14,500

விவரங்களுக்கு:

நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு வேளாண்மைத் தொழிற்கழகம்,
122, மவுண்ட் சாலை,
சென்னை-6.



தமிழரசு

R.R. 413/P/71
321

மலர் 1 1970 செப்டம்பர் 1 இதழ் 5

இந்த இதழில்

முதல்வர் எழுதும் தொடர் கட்டுரை

இனியவை இருபது

உன்னைத்தான் தம்பி!
கல்வி சிறந்த தமிழ்நாடு
நாடகக் கலை
நெய்யும் தொழிலுக்கு நிகரில்லை
இலக்கியச் சோலை
நாற்றையும் சுருட்டலாம்
அம்மா பசிக்குதே!
வாழையடி வாழை
நீதிமன்றத்தில் தமிழ்
செய்தவை பல
கடல் மல்லை காணீரோ!
கொத்தளத்தில் விழா
இங்கே எல்லாம் கிடைக்கும்
கைத்தறியே அணிவோம்
அச்சமில்லை! அச்சமில்லை!
தொடர்ந்து பரிசு பெறும் தொழிற்கூடம்
வழிவிடுக ஏழையர்க்கே!

முகப்பில்: தஞ்சைப் பெரியகோயில் வாயிலின் பக்கத்தில் திறக்கப்பட இருக்கும் ராஜராஜ சோழன் சிலை.

மையப்பக்கத்தில்: தஞ்சை மாநகரின் நெஞ்சையள்ளும் காட்சிகள்.

பழம்பெரும் பண்பாடு, அழிவிலா
நாகரிகம் சிற்பக் கலைக்கே
உற்பத்தித் தலங்களாய்
வரலாற்றுச் சீர்பெற்ற எண்ணற்ற
கோவில்கள் இயல், இசை,
கூத்து ஆகிய முத்தமிழுக்கும்
உறைவிடங்கள், வற்றாத ஆறுகள்,
அருவிகள், வளங்கொழிக்கும்
மலைகள், அலைபாடும் கடல்கள்,
சோலைகள், சாலைகள், ஆலைகள்,
இயற்கையின் கவின்மிகு
காட்சி ஓவியங்கள்!
காணத் தெவிட்டாத
மாட்சிமைக் காவியங்கள்.



தமிழரசு

திங்கள் இருமுறை செப் 1 1970 35 காசு

பெயர் தான் 'மைக்கேல் ஆஞ்சலோ' என்பதாகும்.

மனித முயற்சியினால் அமைக்கப்பட்டதா? அதுவும் பதினைந்தாம் நூற்றாண்டில்? என்று அதிசயித்து நாமும் சிலையாக நின்று விடுகிறோம்; அவரது கைத்திறனால் உயிர் பெற்று நிற்கும் சிலைகளைக் காணும்போதும், உயர்ந்து நிற்கும் தொன்மையான கட்டடங்களைக் காணும் போதும்! எளிய ஏழைக் குடும்பத்தில் பிறந்து, இன்று இத்தாலி நாட்டைச் சுற்றுலாப்பயணிகளின் மூலம் பெரிய வருமானத்துக்குரிய நாடாக மாற்றிய பெருமைக்குரிய விற்பன்னர் தான் மைக்கேல் ஆஞ்சலோ.

ரோம் நகரில் சலவைக் கற்களால் கட்டப் பெற்றுள்ள செயின்ட் பீட்டர்ஸ் ஆலயத்திற்கு நாங்கள் சென்றபோது அயர்ந்து விட்டோம். எதைப் பார்ப்பது? எதை விடுவது? புரியவில்லை. ரோம் போன்ற இடங்களில் நாகரீகம் உச்சக்கட்டத்தை அடைந்திருந்தாலும், இன்றைக்கும் உடல் தெரிய உடுத்திவருகிற ஆண்களும் பெண்களும் அந்த செயின்ட் பீட்டர்ஸ் ஆலயத்திற்குள் அனுமதிக்கப்படுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கதுதான். ஒலிப்பதிவு செய்யப்பட்ட ஒரு டேப் ரிகார்டரை என் தோளில் மாட்டி விட்டு, அதன் 'மைக்'கை என் காதில் நுழைத்து விட்டார்கள். என்னைப் போலவே நூற்றுக்கணக்கானவர், அந்த ஒலிப்பதிவு சாதனங்களை வாங்கி மாட்டிக் கொள்ளுகிறார்கள். அதற்கு வாடகை உண்டு. செயின்ட் பீட்டர்ஸ் ஆலயத்தில் நாம் குறிப்பிடப்பட்ட வழியில் சென்று கொண்டேயிருந்தால் அந்த ஒலிப்பதிவுக் கருவி, அங்குள்ள அற்புதங்களையெல்லாம் நம் காதில் விளக்கிச் சொல்லிக் கொண்டேயிருக்கிறது; ஆங்கில மொழியில். ஆனால் நாலு வாக்கியங்களுக்கு ஒரு வாக்கியம், மைக்கேல் ஆஞ்சலோவைப் பற்றி இருக்கிறது. மைக்கேலின் ஓவியம் அல்லது சிற்பம் அல்லது கட்டட அமைப்பு இப்படி எந்தப் பெருமையிலும் அவனது பெயர் இணைக்கப்பட்டே இருக்கிறது. ஆலயம் முழுவதையும் சுற்றிப்பார்க்க: ஆங்காங்குள்ள ஓவிய நுணுக்கங்களை ரசித்திட; சிற்பங்களின் அழகைப் பருகிட எங்களுக்குக் கிடைத்த சில மணி நேரம் நிச்சயமாகப் போதாது. குறைந்தது மூன்று நாட்களாவது அந்த ஆலயத்தைச் சுற்றிப் பார்த்தால் தான் கலை உள்ளத்தில் நிறைவு ஏற்படமுடியும். எந்தப் பிடிப்பும் இல்லாமல் வானளாவிய மணிமண்டபம் உயர்ந்து நிற்கிறது. குறுக்கு உத்திரங்கள் இல்லாமல் பிரம்மாண்டமான மன்றம் அமைக்கப்பட்டுள்ளது. தூய வெள்ளைச் சலவைக் கற்கள் நம்மோடு மேரியாக நின்று பேசுகின்றன. இயேசுவாக நின்று கனிவுடன் நோக்குகின்றன. கன்னிப் பெண்களோ; கற்சிலைகளோ என ஐயுறத்தக்க வண்ணம், சிலைகள் புன்னகை பூத்து நிற்கின்றன. முன்னாள் போப்புக்களின் சிலைகள், நம் முன்னால் போப்புக்களே நிற்பது போன்ற மரியாதை உணர்வைத் தூண்டுகின்றன. கழுத்து வலியெடுக்க அண்ணாந்து பார்க்க வேண்டும். வைத்த கண் எடுக்காமல் சிற்பங்கள், ஓவியங்களைக் காணவேண்டும்; பசியே தெரியாது போலிருக்கிறதே; இங்கேயே இருந்து விடலாமா என்று தான் தோன்றுகிறது. ஆனால் அதற்குள் வாடிகன் சிட்டியில் போப்பாண்டவரைச் சந்திப்பதற்காகக் குறித்த நேரம் நெருங்கி விடுகிறது. ரோமிலுள்ள இந்தியத் தூதுவர் ஆலயத்தினர் அவசரப்படுத்துகின்றனர். உயிர்பெற்று விளங்கும் அந்த எழில்மாடத்தை விட்டுப் போப்பாண்டவரைக் காணப் புறப்பட்டோம். நாங்கள் கண்டுகளித்த அந்த ஆலயத்திலிருந்து சிறிது தொலைவில் தான் வாடிகன் சிட்டியில் போப்பாண்டவர் வாழ்ந்திடும் இடம் இருக்கிறது. 'வாடிகன்' என்பது, ஒரு குன்றின் பெயர். டைபர்நதியின் மேற்குக் கரையிலுள்ள அந்தக் குன்றின் மீது பெருங் கட்டடங்கள் கட்டப்பட்டு ஒரு சிறிய நகரை உண்டாக்கியதால், அந்த இடத்திற்கு ''வாடிகன் சிட்டி'' என்று பெயர் வழங்கலாயிற்று. பன்னிரெண்டாம் நூற்றாண்டில் இந்தக் கட்டடங்கள் புதுப்பிக்கப்பட்டு, பதின்மூன்றாம் நூற்றாண்டிலும் புதுப்பிக்கப்பட்டனவாம். ரோமாபுரிப் போப்பாண்டவர்கள் இந்த இடத்தில் 1377ஆம் ஆண்டு முதல் வாழ்ந்திடத் தொடங்கினர். இந்தக் கட்டடங்களும், இதனையொட்டியுள்ள செயின்ட்பீட்டர் ஆலயமும் தலைமுறை தலைமுறையாக விரிவாக்கப் பெற்று அழகு செய்யப்பட்டுள்ளன.

செயின்ட் பீட்டர்ஸ் ஆலயத்தில் உள்ள சிலை.

அதனால் இங்கு பல தலை முறைகளின் கட்டடப் பாங்கினைக் காணலாம். வாடிகனில் உள்ள சிஸ்டைன் கோயிலின் கூரையில் மைக்கேல் ஆஞ்சலோ தீட்டிய கேலிச் சித்திரங்கள் நம்மைக் கவர்ந்திழுக்கின்றன. மிகப்பெரிய நூலகமும், தொல்பொருட் காட்சிசாலைகளும் வாடிகன் சிட்டியின் கீர்த்திக்கு மெருகூட்டுகின்றன. உலகக் கத்தோலிக்க மக்களின் புனிதமிகு தலைவராக விளங்குகிற போப்பாண்டவரைக் காண நாங்கள் அந்த மாளிகைக்குள் நுழைந்தோம். சில மண்டபங்களைத் தாண்டியதும், என்னையும் என் துணைவியையும் மட்டுமே பார்ப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக எனக்குச் சொல்லப்பட்டது. அதில் எனக்குப்பெரும் ஏமாற்றம் விளைந்தது என்னுடன் வந்துள்ள மற்ற நண்பர்கள் அனைவரையும் அனுமதிக்காவிட்டாலும், கிறித்துவ மதத்தைச்சேர்ந்த டாக்டர் ஆபிரகாம் அவர்களையாவது அனுமதிக்க வேண்டுமென்று சொல்லியனுப்பினேன். சிறிது நேரத்திற்கெல்லாம், மூவரும் வரலாம் என்று தகவல் வந்தது. என்னுடன் இருந்த மற்ற நண்பர்களின்முகம் மாறிவிட்டதை நான் உணராமல் இல்லை. எப்படியும் அவர்களை உள்ளே அழைத்துக்கொள்ளலாம் என்ற நம்பிக்கையுடன் போப்பாண்டவர் அறை நோக்கிச் சென்றேன். சில விநாடிகளில் அவர் வந்தார். தூய வெண்ணிற ஆடை! களங்கமில்லாத புன்னகை! அருள் ததும்பி நிற்கும் முகம்! அவ்வாறே அகமும் இருக்கும் என்பதற்கான பண்புநிறை பேச்சு! புதிதாக இருவர் சந்திக்கிறோம் என்ற உணர்ச்சியே இல்லாத நிலை! மனைவியையும் டாக்டரையும் அறிமுகப்படுத்தினேன்; குடும்பநலன். குழந்தைகள் நலன் விசாரித்தார். இந்திய நாட்டுக்குத் தான் வந்தபோது இனிய வரவேற்பு அளித்தது குறித்துப் பசுமை மாறாத நினைவோடு நன்றியைத் தெரிவித்தார் அண்ணா அவர்கள் அவரைச் சந்தித்ததையும் கோவா விடுதலை வீரர்களைச் சிறை மீட்கத் துணைபுரியுமாறு போப்பாண்டவரைக் கேட்டதையும் நினைவுபடுத்தியபோது, அவர் மகிழ்ந்தார். அந்த மகிழ்ச்சி, அண்ணாவின் மறைவை எண்ணி மின்னல் வேகத்தில் மறைந்ததையும் நான் உணர்ந்தேன். தமிழ் நாட்டுக்கும் ரோமாபுரிக்குமுள்ள

பார்த்தோம்

பிறமாநிலமும் போற்றும் !

இதுவரைக்கும் எந்த மாநிலமும் செய்யாத புதிய வடிவத்தில்—தமிழக அரசு தந்திருக்கும் 'தமிழரசு' இதழ், பிற மாநில மக்களும் போற்றுகின்ற அளவுக்குத் தேன் ஊற்றாக இருக்கிறது. 'காலம் மாறிவிட்டது' படக்கதை படிக்கப்படிக்க இன்பம்தருகிறது. ஆகையால் எல்லா இதழ்களிலும் அது இடம் பெற வேண்டும்.

—எஸ். என். மணிமாறன்,
பெங்களூர்-1.

தலையங்கம் தந்தால் என்ன?

கண்கவர் வண்ணப் படத்தையும் கருத்தாழமிக்க கட்டுரைகளையும் புதுமைகள் பலவற்றையும் புகுத்திய 'தமிழரசு' தலையங்கத்தையும் தந்தால் அறுசுவை உணவும் உண்ட எக்களிப்பு உண்டாகுமே !

—சே. ஏகப்பன்,
மணப்பாறை.

காவியமாக்குக !

'இனியவை இருபது' என்ற தொடரை முதல்வர் அவர்கள் சில பல மாதங்களில் முடித்து விடாமல் நீண்ட நெடுங்கதை போல் ஒரு காவியமாக எழுதி வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

—ம. கி. இராமலிங்கம்,
சென்னை-14.

படமே பாடம்.

'தமிழரசு' குறைந்த விலையில் சிறந்த பதிப்பாக வெளியாவது கண்டு மகிழ்கிறேன். விளக்கப் படங்கள் இன்னும் அதிகமாக வேண்டும் படங்கள் அதிகமாகவும் எழுத்துக் குறைவாகவும் இருப்பின் குறைந்த கல்வியறிவுடையவர்களும் விவரம் அறிந்து கொள்ள உதவும்.

—சா. ல. கரு. சாமி,
சிங்கப்பூர்-2

துப்பறிந்த கதை.

ஆகஸ்டு 16 இதழில் வெளியான "ஒரு துப்பறியும் கதை" மிக மிக அற்புதமாக இருந்தது; இப் பகுதி படிக்கப் படிக்க ஆவலைத் தூண்டுகிறது, இதழ் தவறாமல் இப்பகுதியை வெளியிடவும்.

—ஏ. மகிமைநாதன்,
பெங்களூர்-7.

களிப்புத் தந்த காட்சி.

தமிழ் நலங் கூறும் நால்வர்—தமிழக நிதியமைச்சர், முதல்வர், திரு கருத்திருமன், புதுவை முதல்வர்—காம்போலன் சிலை அருகே காட்சி தருவதைக் கண்ணுற்றுக் களிப்பெய்தினேன். கைதி கந்தசாமி கூறும் உண்மை நிகழ்ச்சியும், எல்லாம் அவனுக்காக நாடகமும் பயனுள்ளவைகளாகவும் படிப்பினை தருபவைகளாகவும் விளங்குகின்றன.

—துரை, தமிழழகன்,
சேலம்-2.

மறக்க முடியாது.

"தமிழரசு" மூன்றாவது இதழில் "கடல்படு செல்வம்" பற்றிய கட்டுரை சிந்தனைக்கு விருந்தாகவும், மீன் பிடித்தல் தொழிலைப் பற்றிய ஆய்வுக்களஞ்சியமாகவும், அமைந்திருக்கிறது. நான்காவது இதழில் காணப்பட்ட "விடுதலை நாள் விழா" கவிதையை ஊன்றிப்படித்தவிடத்து கடமையுணர்ச்சி, வெள்ளம் போலப் பீறிட்டுக் கிளம்பியதை என்னால் மறக்க முடியாது.

—பெ. சு. தியாகராசன்,
அருப்புக்கோட்டை.

இடர்வரினும் நடத்துக.

படிப்பதற்கும், அரசாங்கச் சாதனைகளை நல்ல முறையில் தெரிந்து கொள்வதற்கும் உயர் தரமான இதழ் 'தமிழரசு' இப் பத்திரிகையை—எவ்வளவு இடர் வந்தாலும் தொடர்ந்து நடத்திவர வேண்டுகிறேன்.

வாழ்க—வளர்க !

—க. நவநீதகிருட்டிணன்,
மதுரை-1.

படித்தோம்

இருபது

3. ராமாபுரிய

ரோம் நகரத்து விமா[illegible] நிலையத்தின் பெயர் "லியர்னாடோ டாவின்சி" என்பதாகும். கலைத்துறையில் ஒளிவிளக்காகவும், ஓவியத் துறையில் ஒப்பற்ற மேதையாகவும், விஞ்ஞானத்துறை வித்தகராகவும் விளங்கியவர் "லியர்னாடோ டாவின்சி" என்பவராவார். இத்தாலியில் பிளாரன்ஸ் நகரத்தைச் சேர்ந்த ஒரு வழக்கறிஞர், அந்நாட்டுக் குடியானவன் ஒருவனின் மகளைக் காதலித்தார். காதலின் முடிவு திருமணமாயிற்று. [illegible]னின் மண வாழ்க்கையின் [illegible] சின்னமாகத் தோன்றியவர் தான் லியர்னாடோ டாவின்சி. வெனிசில் தான் புகழ் பெற்ற அந்தக் குழந்தை பிறந்தது. சர்பயரோ என்ற சித்திரக்காரரின் மாணவனாக டாவின்சி திகழ்ந்தார். அப்போது, "இயேசுநாதரின் இரவு உணவு" என்ற ஓவியத்தை சர்பயரோ தீட்டிக் கொண்டிருந்தார். அந்த அழகு மிகு சித்திரத்தை எழுதி முடிக்கும் வேலையைத் தன்மாணவன் லியர்னாடோவிடம் ஆசிரியர் ஒப்படைத்த போது, ஆர்வம்படைத்தஅந்த மாணவன் அந்தச் செயலை அற்புதமாகச் செய்து முடித்தான். இப்போதும் அந்தப்படம் பிளாரன்சில் இருக்கிறது. அந்தப் படத்தை எழுதி முடித்தபோது டாவின்சி இருபது வயது இளங்காளை!

"மன்னர்களை வணங்கியது" "வர்ஜின் ஆப் தி ராக்ஸ்" போன்ற கீர்த்தி மிகு ஓவியங்களின் படைப்புக்கர்த்தா லியர்னாடோ டாவின்சியாகும்.

ஐரோப்பாக் கண்டத்தில் பதினைந்தாம் நூற்றாண்டில் ஏற்பட்ட இலக்கிய, ஓவிய, சிற்ப, இசைத் துறைப் புரட்சிகளுக்குக் காரணமாக இருந்தவர்கள், டாண்டே, டாவின்சி, மைக்கேல் ஆஞ்சலோ, ரஃவேல், டிட்டியன் போன்றவர்கள்தாம். ஏதென்ஸ் நகரத்தின் ஏற்றமிகு நிலைமைக்கு 'பெரிக்ளிஸ்' எவ்வாறு ஆணிவேராக இருந்தாரோ, அவ்வாறு பிளாரன்ஸ் நகரத்துப் புகழ் வெளிச்சத்திற்கு லியர்னாடோ தீபமாகத் திகழ்ந்தார். பறக்கும் ஓர் இயந்திரத்தைக் கூட இவர் செய்தார். அக்காலத்தில் நிலவிவந்த விஞ்ஞான எண்ணங்களை நடைமுறைப் படுத்தப் பாசன வசதிகளும், வடிகால்களும், கோட்டைகளும் மிலான் நகரத்தில் இவர் உருவாக்கிக் காட்டினார். இவரது அரிய பணிகளுக்கும், கலை உணர்வுக்கும் நன்றி தெரிவித்துக் கொண்டு 'லியர்னாடோ' விமான நிலையம் ஓங்கி உயர்ந்து விரிந்து பரந்து நிற்கின்ற காட்சியை நாங்கள் கண்டோம். இவருக்கு நிகராக ஓவியக்கலை, சிற்பக்கலை, கட்டடக் கலை பற்றி இத்தாலிநாடு முழுவதும் உச்சரிக்கப்படுகிற மற்றொரு

முதல்வர் எழுதும் பயணக் கட்டுரை

உன்னைத்தான் தம்பி!

புது ஆற்றில் பொங்கி ஓடிய புது வெள்ளத்திற்குத்தான் எவ்வளவு வேகம்—

கால வெள்ளத்தின் கணக்கைப் புரிந்து கொள்ளாமல்—ஒரு காலத்தில் அகழியின் ஒரு பகுதியாக இருந்த இடம் ஆற்றின் ஒரு பகுதியாக மாறியதாலோ என்னவோ ஆனந்தத்தோடு பொங்கியோடுகிறது புனல்—அந்தக் காவிரிக் கால்வாயில் !

உலகின் ஏற்றத் தாழ்வுக்கு, இல்லை, இல்லை ; உலகியலின் உண்மைத் தோற்றத்துக்கு இதோ எடுத்துக்காட்டுகள்.

அங்கே—

வரலாற்றை நன்கு சொல்லி, வாழ்ந்திருந்த நிலையைச்சொல்லி, வந்துற்ற நிலையையும் சொல்லி மைய அரசின் தொல் பொருள் ஆராய்ச்சித் துறையிலிருந்து எப்பொழுது விடுபடுவோமோ புது வாழ்வு பெறுவோமோ என்று ஏங்கித் தவித்தாலும் வானுயர்ந்து நிற்கும் பெருவுடையார் கோவில்.

இங்கே—

எதையும் எண்ணிப் பாராது விரைந்து ஓடும் வெள்ளப்பெருக்கு....

மாலைமயங்கும் அந்திப் பொழுதில் சிந்தனை வயப்பட்டுக் கோட்டையின் மேல் பகுதியில் நின்று கொண்டு பொங்கியோடும் புனலைப் பார்த்துக் கொண்டிருந்த என்னை அந்தக் கம்பீரமான குரல் மறுபக்கம் திருப்பியது.

''உன்னைத்தான் தம்பி!''

இப்படி அழைத்திடும் குரலுக்குச் சொந்தக்காரர் எனக்கு அறிமுகமானவர் ஒருவர் உண்டு. அவர் அல்லர் இவர். ஆனால்—

அதே அறிவொளி வீசிடும் கண்கள். புன்னகை சிந்திடும் முகம். உயரத்தில் மட்டும் மாற்றம்: நெடிதுயர்ந்த வலிவான உடல் தோற்றம்.

அவரைப் பார்த்துக் கொண்டிருந்தேனே தவிரப் பதில் சொல்ல இயலவில்லை.

“உன்னைத்தான் தம்பி”—மீண்டும் அழைத்தார்.

“என்ன ஐயா''—உருவத்தைப் பார்த்ததாலோ என்னவோ என் குரலில் மரியாதையிருந்தது.

''ஓய்வு தானே தம்பி, கொஞ்ச நேரம் உரையாடலாமா ?''

என் மன நிலையைக் குறிப்பறிந்து கேட்பது போல இருந்தது. ஆர்வத்தோடு உரையாடத் தொடங்கினேன்.

''பழம்பெரும் நகரான தஞ்சையைப் பற்றி எண்ணிக் கொண்டிருக்கிறேன்.''

''நானும் அதையே தான் தம்பி நினைத்துப் பார்க்கிறேன்....''

''ஆமாம் ஐயா, ஆயிரத்து முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னாலே அப்பரடிகள் திருவீழிமிழலைத் திருத் தாண்டகத்தில் 'தஞ்சைத் தளிக் குளத்தார்' எனவும் அதற்கு அடுத்த நூற்றாண்டில் வாழ்ந்த திருமங்கையாழ்வார் 'வம்புலாஞ் சோலை மாமதில் தஞ்சை' என்றும் பாடியிருக்கிறார்கள். அக் காலத்திலேயே தஞ்சை சிறந்த மதில் அரண் உடையதாக இருந்திருக்கிறது.''

''ஆயிரத்து இருநூறு ஆண்டுகட்கு முன்பு முத்தரையர் என்ற பட்டத்துடன் அரசாண்ட சிற்றரசர்களுக்கு இது தலைநகரமாக இருந்தது தம்பி !”

''ஆமாம் ஐயா, திருக்காட்டுப்பள்ளியின் பக்கத்திலுள்ள செந்தலைக் கோயிலில் காணப்படும் கல் வெட்டுக்களால் 'பெரும்பிடுகு முத்தரையன்' என்ற சுவரன் மாறன் என்பவர் 'தஞ்சைக்கோன்', 'தஞ்சை நற்புகழான்' என்று அழைக்கப்பட்டதாக அறிகிறோம். அதன் பிறகு பிற்காலச் சோழர்கள் காலத்தில் தான் தஞ்சை பெரும்புகழ் எய்தத் தொடங்கியது.''

''தம்பி, கற்றுணர்ந்தவனாய் இருக்கின்றாய். எனக்குத் தெரிந்த சில தகவல்களையும் சொல்கிறேன் கேள்.''—அவர் தொடர்ந்தார். வீரம் செறிந்த அவர் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

''பிற்காலச் சோழர்களில் முதல் மன்னரான விஜயாலய

பழைய வரலாற்றுக் காலத் தொடர்புகளையெல்லாம் நான் விவரித்தபோது அவர் முகத்தில் நான் கண்ட பொலிவை மறந்திடவே இயலாது. ஜெபமாலையை எடுத்து தயாளுவிடம் தந்தார். எத்தனை குழந்தைகள் என்று கேட்டு அத்தனை குழந்தைகளுக்கும் அளிக்குமாறு பதக்கங்களை அள்ளிக் கொடுத்தார். போப்பாண்டவர் உருவம் அமைந்த பெரிய பதக்க மொன்றை என்னிடம் அளித்தார். இன்னும் ஏதாவது இருக்கிறதா எங்களுக்குத்தருவதற்கு, என்று அவரது கருணை பொழியும் கண்கள்தேடிக் கொண்டே யிருந்தன. மற்றும் சில நண்பர்கள் என்னுடன் வந்தார்கள். அவர்கள் தங்களைக் காண முடியாமல் வெளியே இருக்கிறார்கள் என்றதும் போப்பாண்டவரின் விழிகள் அன்புக்கட்டளை பிறப்பித்தன. சில நிமிடங்களில் வெளியில் இருந்த நண்பர்கள் மகிழ்ச்சி கூத்தாட உள்ளேவந்து போப்பாண்டவரை வணங்கினர். மேலும் சிறிது நேரம் உரையாடிவிட்டு, அவரை வணங்கித் திரும்பினோம்.

என்னே அன்பு!
என்னே பண்பு!
எவ்வளவு அடக்கம்!

எத்துணை அமைதி! அதனால் தானே உலகக் கத்தோலிக்க மக்களின் உள்ளங்களில் எல்லாம் அவர் குடியேறியிருக்கிறார்; என எண்ணியவாறு வாடிகன் சிட்டியை விட்டுப் புறப்பட்டோம்.

ரோம் நகரின் வேறொரு பகுதியில் நீரூற்று ஒன்று இருக்கிறது. அந்த நீரூற்றின் சிறப்பே அங்கு அமைக்கப்பட்டுள்ள சிலைகளால் தான் என்று கூறினார்கள். அங்கே போக ஆவல் எழுந்தது. சென்றோம். சிலைகளா அவைகள்? அப்பப்பா! எவ்வளவு உயரம்? எவ்வளவு கம்பீரம்? வளைவு—நெளிவு-அந்தச் சிலையின் எழிலே எழில். அந்தச்சிலைகளின் ஓரத்தில் நீரூற்றுக்கள். நீர்தேங்கிப் பின்னர், வழிந்தோடும் சிறிய தடாகம்போன்ற அமைப்பு. அதற்குக் கற்களால் ஆன சுவர்கள். அங்கே வருகிறவர்கள் பின்னால் திரும்பிக் கொண்டு, அந்தத் தடாகத்தில் நாணயங்களை வீசி எறிகிறார்கள் அப்படி வீசி எறிந்தால், மீண்டும் ஒரு முறை ரோமாபுரிக்கு வரக்கூடிய வாய்ப்பு ஏற்படும் என்பது அவர்களது நம்பிக்கை! அந்த நாணயங்களை எடுப்பதற்கு அந்தப்பகுதியில் உள்ள சிறுவர்கள் தயாராக இருக்கிறார்கள். அவர்கள் யாரும் தண்ணீரில் இறங்கக் கூடாதென்று தடை! அதற்காக அந்த இளஞ்சிறார் செய்யும் தந்திரம் வேடிக்கையானது. தூண்டில்கள் போலக் குச்சிகளைத் தயாரித்து, அவற்றின் நூல் முனையில் காந்தத்துண்டுகளைக் கட்டிவிட்டு, அவைகளைத் தண்ணீருக்குள் அமிழ்ந்து கிடக்கும் நாணயங்களின் மீது போடுகிறார்கள். குறி பார்த்துச் சரியாகப் போட்டு விட்டால் அந்தக் காந்தத் துண்டில் நீரில் கிடக்கும் நாணயம் ஒட்டிக் கொள்கிறது. இதில் அங்குள்ள சிறுவர்களுக்கு நல்ல வருமானம்.

'' அது கண்ணாடிக்கடையாகவே இல்லை ஜொலிக்கும் வைரமணிகள், நவரத்தினங்கள் தொங்கிடும் ஒரு மாய மாளிகையாகவே எனக்குத் தோன்றியது''

அந்த நீரூற்றுக்கு அண்மையில் உள்ள ஒரு கண்ணாடிக் கடையில் நுழைந்தோம். கண்ணாடியில் என்னென்ன பொருள்களைச் செய்ய முடியும் என்பதை அங்கு சென்றால் தான் புரிந்து கொள்ள முடியும். சிறிய நீர்த்தொட்டியில் வண்ண மீன்கள் நீந்துவது போல ஒன்று! அருகில் சென்று கையில் எடுத்துப் பார்த்தேன். நீருமில்லை, உயிர் மீனுமில்லை, எல்லாமே ஒரு அகன்ற கண்ணாடித் துண்டுக்குள் செய்யப்பட்ட கலைத்திறன் தான்! அதன் விலை கேட்டேன்-நமது நாணய மதிப்புக்கு ஆயிரம் ரூபாய் ஆயிற்று! பேசாமல் வைத்துவிட்டு வேறு பக்கம் போய் விட்டேன். அது கண்ணாடிக் கடையாகவே இல்லை. ஜொலிக்கும் வைரமணிகள், நவரத்தினங்கள் தொங்கிடும் ஒரு மாய மாளிகையாகவே எனக்குத் தோன்றியது.

(தொடரும்)

சோழர்தான் தஞ்சை மாநகரைக் கைப்பற்றித் தன் தலைநகராக வைத்துக் கொண்டார். அவர் 'தஞ்சை கொண்ட கோப்பர கேசரி' என்று அழைக்கப்பட்டார்...."

''இந்தத் தகவல்களை மட்டுமல்ல, சோழ மன்னர்களின் ஆட்சி முறைகளைப் பற்றியும் செந்தலைக் கல்வெட்டுக்கள், திருவாலங்காட்டுச் செப்பேடுகள், கன்னியாகுமரிக் கல்வெட்டு, வீர சோழபுரம் கல்வெட்டு முதலியவை நமக்குச்- சொல்லும் செய்திகள் கொஞ்சமா?' என்று கூறிவிட்டுப் பெருமூச்சுவிட்டேன்

''தம்பி இவ்வளவு இளம் பருவத்திலேயே நிரம்பச் செய்திகளை அறிந்திருக்கிறாயே..! உன்னைச் சந்தித்ததில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.''

''ஐயா. அக்காலத்தில் முடிமன்னர் ஆட்சி என்றாலும் குடிகளின் நன்மை கருதி எவ்வளவு செய்திருக்கிறார்கள் தெரியுமா'' விஜயாலய சோழர் பேரனும் ஆதித்த சோழர் புதல்வனுமாகிய முதற் பராந்தகச் சோழர் மக்கள் நலங் கருதித் தன் தலைநகர்க்கு வடபால் வெட்டிய ஆறுதான் இப்பொழுது 'வடவாறு' என்று அழைக்கப்படும் 'வீரசோழ வடவாறு'"

''தம்பி, இவ்வளவு விவரமாக அந்தப் பழைய வரலாறுகளை எல்லாம் நீ சொல்லும்பொழுது எனக்கு எப்படி இருக்கிறது தெரியுமா?.. உம்.. உன்னிடம் இக்காலத்தையும் இப்பொழுதுள்ள நிலையையும் பற்றி அறிந்து கொள்ளலாம் என்று எண்ணினேன். நீயோ என் காலத்துக்கே இழுத்துச் செல்கிறாயே..''

''ஐயா, நீங்கள் சொல்வது எனக்கு விளங்கவில்லையே..! எனக்குப் புரியும்படி உரையாடுங்களேன் !''

''தம்பி, தவறு என்னுடையது தான் ! முதலில் என்னை உன்னிடம் அறிமுகப் படுத்திக் கொள்ளவில்லையே..''— தங்கு தடையின்றிக் கம்பீரமாகப் பேசினார். அவரையே பார்த்துக் கொண்டிருந்தேன்.

''தம்பி, இக்கால இளைஞனை உனக்கு, மறைந்த தமிழ்மன்னர்களின் ஆண்டுக் கணக்குப் புரியாது. உன் போன்றார்க்கு இப்பொழுது பழக்கப்பட்டிருக்கும் கி.மு. கி.பி. ஆண்டுக் கணக்குகளில் சொல்கிறேன். கி.பி. 985 முதல் 1014 வரையில் சோழ மண்ணில் ஆட்சி புரிந்த முதல் இராச ராச சோழன் தான் நான்..''

வியப்பால் என் கண்கள் விரிந்தன. ஆனால் இதழ்களோ இறுக ஒட்டிக் கொண்டன. என்னால் பேசமுடியவில்லை !

''தம்பி, கனவா, நனவா, என்று சிந்திக்கிறாயா? எதுவாக இருந்தால் என்ன? நம் உரையாடல் ஏன் தடைப்பட வேண்டும் ?"

''ஐயா, தங்களை எப்படியோ சந்தித்ததில் எனக்கு மகிழ்ச்சி தான். உங்களிடம் பல விவரங்களைப் பற்றிக் கேட்டறிந்து கொள்ளலாமல்லவா ?

"ஆமாம், உன்னிடத்திலிருந்து நானும் சில தகவல்களை அறிந்து கொள்ள முடியுமே தம்பி !

''ஐயா முதலில் எனக்குத் தஞ்சையைப் பற்றிய செய்திகளைச் சொல்லுங்கள் : பின்னால் நீங்கள் கேட்கும் விவரங்களை எனக்குத் தெரிந்த வரையில் சொல்ல முயல்கின்றேன்"—என்று இந்தக் காலத்து எழுத்தாளர்கள் பாணியில் சொல்லிவிட்டுத் தொடர்ந்தேன்.

''ஐயா, கருவூர்த் தேவர் பாடிய திருவிசைப்பாப் பாடல்களால் தஞ்சை நகர், கடல் போன்ற ஆரவாரம் மிகுந்த தெருக்களையும் நெடுநிலை மாடங்களையும், யாழ் பயில் கூடங்களையும், நாடக சாலைகளையும், கழுநீர்ப் பொய்கைகளையும், நந்தவனங்களையும் உடையது என்பதை அறிய முடிகிறது. தாங்கள் ஆண்ட இந் நகர் பற்றிய வேறு தகவல்களை உங்கள் மூலமாகவே அறிய விரும்புகிறேன்.''

அட்டைப் படத்தை அணி
பாராண்ட இராசராச
பக்கத்திற்கு அழைத்துவந்து
யாடுவதற்கு வலுவான

'' தம்பி, அந்நாளில் தஞ்சை நகர் ' உள்ளாலை ' ' புறம்படி' என்ற இருபெரும் பகுதிகளை உடையதாக இருந்தது. உள்ளாலை என்பது உள்நகராகும், ' புறம்படி ' என்பது புற நகராகும். வீர சோழப் பெருந்தெரு, சயங்கொண்ட சோழப்பெருந்தெரு, சூரசிகாமணிப் பெருந்தெரு, வானவன் மாதேவிப் பெருந் தெரு. கந்தர்வத் தெரு, வில்லிகள் தெரு ஆனையாட்கள் தெரு. ஆனை நடவுவார் தெரு. மடைப்பள்ளித் தெரு. சாலியத் தெரு, முதலான பெருஞ்சாலைகளும், திருபுவன மாதேவிப் பேரங்காடி, கொங்காள் வாரங்காடி. இராச இராச பிரமராயன் அங்காடி முதலான கடை வீதிகளும், உய்யக்கொண்டான் தெரிந்த திருமஞ்சனத்தார் வேளம், அருமொழித் தேவத் தெரிந்த திருமஞ்சனத்தார் வேளம், பஞ்சவன் மாதேவியார் வேளம், அருமொழித் தேவத் தெரிந்த திருப்பரிநலத்தார் முதலான அரண்மனைப் பணியாளர் இடங்களும் இருந்தன. ''

'' இவ்வளவு பெரிய நகரம், முதல் மாறவர்மன் சுந்தர பாண்டியன் கி.பி. 1219-ல் படையெடுத்து வந்தபொழுது பேரழிவிற்கு ஆளாகியது. ஆனால் மன்னவா ! உங்கள் பெயர் சொல்லி நிற்கும் இந்த ' இராசராசேச்சுரம் ' என்ற திருக்கற்றளி அசாதாரணமானதல்லவா ?''

'' தம்பி, 216 அடி உயரமுள்ள நடுவிமானத்தோடு 793 அடி நீளமும் 397 அடி அகலமுமுள்ள இப்பெருங்கோயிலைக் கட்டியபோது பூரித்து நின்றேன். ஆனால், இன்றுள்ள அதன் நிலையை எண்ணும்போது....''

செய்யும் ஆலயமும்
சோழனும் உங்களை இந்தப்
உள்ளம் திறந்து உரை
அடித்தளம் உண்டு!

'' ஐயா , உங்கள் மனநிலையுல் உள்ள தமிழக அரசு அரும்பெரும் செல்வமான இக்கோயிலைப் பாதுகாக்க முயற்சி செய்து வருகிறது.''

'' அலட்சியமாக இல்லாமல் ஆவன செய்து வருகிறீர்களே ; அகமகிழ்கிறேன் ! ''

'' ஐயா, நாங்கள் அக்கறையின்றி வாழ்ந்த காலமும் உண்டு. ஆனால், அந்நிலை இன்று மாறிவிட்டது. நன்றி மறவாமல் தஞ்சைநகரில் உங்களுக்குச் சிலையெடுக்க விருக்கிறோம்.''

'' நன்றி, தம்பி, நன்றி !''

'' ஐயா, உங்களைமட்டுமல்ல. இந்தத் தஞ்சைத் தரணியை பதின்மூன்றாம் நூற்றாண்டின் இடையில் ஆளத்தொடங்கிய நாயக்க மன்னர்களில் முதல்வரான சேவப்ப நாயக்கரையும் நாங்கள் மறக்கவில்லை. சிவகங்கைக் கோட்டையும் சேவப்பன் ஏரியும் அவரால் தானே அமைக்கப்பட்டன ! கி.பி. 1676-ல் தஞ்சையை ஆளத்தொடங்கிய மராட்டிய மன்னர்களில் சிறந்து விளங்கிய இரண்டாம் சரபோஜி மன்னரையும் நாங்கள் மறக்கவில்லை.

'' ஏட்டுச் சுவடிகளையெல்லாம் தேடிக் கொணர்ந்து அரண்மனையில் ' சரஸ்வதிமால்' என்னும் அறிவுக் களஞ்சியத்தைத் தேடிவைத்த பெருமகன் அல்லவா.......... அவரை மறப்போமா ? "

'' ஐயா, அதுமட்டுமல்ல, உங்கள் போன்ற மன்னர் தேடி வைத்த கலைச் செல்வங்களையெல்லாம் திரட்டி வைத்து கலைக்கூடம் ஒன்று உருவாக்கியுள்ளோம்.

''மன்னவா,இன்றைய தஞ்சை நகரம் ஒரு மாவட்டத்தின் தலைநகராக விளங்குகிறது. தஞ்சை தான் எதிலும் முன்னணி என்று கற்றறிந்தோர் புகழ்கின்றனர்·

''இந் நகரில் அமைந்திருக்கும் மணிக்கூண்டாகட்டும், பேருந்து நிலையமாகட்டும் சிறப்புமிகுந்தவைகளாக ' அமைந்திருக்கின்றன. மூவேந்தர் காலத்தில் வளர்ந்த தமிழை மேலும் வளர்க்கக் கரந்தையிலே தமிழ்ச் சங்கம். பிணிபோக்க வழி கற்பிக்கும் மருத்துவக் கல்லூரி. இப்படி அநேகம் வளர்ந்துள்ளன. எப்படி எப்படியோ மாற்றங்கள் ஏற்பட்டிருந்தாலும் இம்மண்ணினுள்ள மக்கள், உங்களை என்றும் மறந்ததில்லை ; ஆண்டுதோறும் விழா வெடுக்கிறோம்.''

—நீண்ட நேரம் தொடர்ந்து பேசினேன். அமைதியாகக் கேட்டுக்கொண்டிருந்த அவர் பேசலுற்றார்:

'' தம்பி செந்நெல் விளையும் இம்மண்ணில் செய்ந்நன்றி மறப்பவர்கள் பிறப்பதில்லை என்பதை நான் நன்கறிவேன். ஆனாலும்,................ "

'' மன்னவா மீண்டும் சொல்லுகிறேன். காவிரி நீரால், ஈரமாகும் தஞ்சைத்தரணியில் வளங்கொஞ்சும் நஞ்சைக்கு' மட்டும் பஞ்சமில்லை என்று எண்ணிவிடாதீர்கள். வற்றாத கலைஞானத்திற்கும் இங்கே பஞ்சமில்லை. கல்வி அறிவுக்கும் பஞ்சமில்லை."

ராஜராஜசோழர் உரக்கச் சிரித்தார். '' தம்பி, நான் உன்னிடம் குற்றம் குறை சொல்ல வரவில்லை. மாண்ட புகழை மீண்டும் பெற்றிட வேண்டும் என்ற விருப்பத்தால் சொல்கிறேன். ''

'' ஐயா, உங்கள் எண்ணங்களை ஈடேற்றும் பணியில்தான் நாங்கள் ஈடுபட்டிருக்கிறோம். நீங்கள் ஆண்ட தஞ்சை நிலம் தான் தமிழ்நில மக்களுக்கு உண்டி கொடுக்கும் உயிர்நிலமாக விளங்குகிறது. உங்கள் முன்னோர் ஆண்ட பூம்புகார் கடலுக்கு இரையானாலும் இன்று

இம்முறையில் நாற்றுத் தயாரிக்கச் செலவும் குறைவு. ஏனெனில் இம் முறைக்கு உழவு செய்தல், களை எடுத்தல், நாற்றுப் பறித்தல் ஆகியவை தேவையில்லை. இந்நாற்றங்காலை, பாய்போல் சுருட்டி எடுத்துச் செல்ல முடியுமாதலின், நடவு வயலுக்கு நாற்றைக் கொண்டு செல்ல ஆகும் செலவும்குறையும்.

சுருள்பாய் நாற்றங்காலுக்கு உரமிடவும் தேவையில்லை. விதைகளிலுள்ள சத்துக்களைக் கொண்டே நாற்று 12 முதல் 14 நாட்கள் வரை நன்கு உயிர் வாழ்கிறது. மேலும், சேற்று நாற்றங்காலுக்குத் தேவையான அளவு தண்ணீரும் இம் முறைக்குத் தேவையில்லை.

சேற்று நாற்றங்காலிலிருந்து நாற்றுப் பறிக்கும்போது தண்டு ஒடிந்துவிடவோ, வேர் அறுந்துவிடவோ கூடும். இம்முறையில் தண்டு ஒடிந்துவிடவோ, வேர் அறுந்து விடவோ காரணமே இல்லை. எனவே நாற்றுகள் விரைவிலேயே வேர் பிடித்து, பயிரும் பச்சை கட்டி விடுகிறது; விரைவிலும், பெருமளவிலும் கிளைப்பதால், மகசூலும் பெருகும். இந் நாற்றுகளைப் பொதுவாக பூச்சியும் நோயும் தாக்காது. மேலும், இந்நாற்றுகளைக் கொண்டு நடப்பட்ட பயிர் 7 முதல் 10 நாட்கள் முன்னதாகவே அறுவடைக்கு வந்துவிடும்.

ஒரு ஏக்கர் நடவுசெய்ய 12 சென்ட் நிலத்தில் சாதாரண முறையில் நாற்றுவிட உங்களுக்குச் சுமார் ரூ. 55-00 செலவு ஆகும்; ஆனால், '' தபாக் '' முறையில் $\frac{1}{2}$ சென்ட் பரப்பில் நாற்றுவிட ரூ. 35-00 தான் செலவு ஆகிறது. எனவே, நாற்றுவிடும் செலவில் ரூபாய் 20-00 குறையும்.

ஒரு மீட்டர் அகலமும், வசதிக்கேற்ற நீளமும் உடைய பாத்திகளை வயலிலோ, களத்திலோ, வீட்டுத் தோட்டத்திலோ அமைக்கவும். பாத்திகளைச்சுற்றி வரப்பு அமைக்கவும். ஒரு ஏக்கர் நடவு செய்ய 20 சதுர மீட்டர் நாற்றங்கால் தேவை.

பாத்திகளின் மேற்பரப்பு இறுக்கமாகவும், ஒரே சம தளமாகவும் இருக்குமாறும் செய்ய வேண்டும். பாத்திகளின்மேல் ''பாலிதீன்'' காகிதங்களையோ அல்லது வாழை இலைகளையோ நன்றாகப் பரப்ப வேண்டும். அதன்மேல் மரத்தூளையோ அல்லது சிறு சிறு துண்டுகளாக வெட்டப்பட்ட வைக்கோல் துண்டுகளையோ சுமார் 1 அங்குல கனத்திற்குப் பரப்பவும் (இது இல்லாமலும் நாற்று விடலாம்). அதன்மேல் முளைவிட்ட விதைகளை (மூன்றாங் கொம்பு விதைகளை) ஒரு சதுர மீட்டருக்கு 1·1 முதல் 1·5 கிலோ வீதம் பரப்ப வேண்டும்.

நாள்தோறும் 3 முறை பூவாளியால் தண்ணீர் தெளித்து நாற்றங்காலை ஈரமாகவைக்கவும். விதைத்தது முதல் 3 அல்லது 4 நாட்களுக்குக் காலையிலும் மாலையிலும் கையினால் விதைகளை மிருதுவாக அமுக்கி வைக்க வேண்டும். இதனால், வேர்கள் மேல் நோக்கிக் கிளம்புவதைத் தடுக்கலாம்.

முன்பு தரிசாகக் கிடந்த இடத்தை விளைநிலமாக்கிட வியர்வை சிந்துவோர், குறை அளவு இயங்கி வந்த இயந்திரத் தொழிற்சாலையை முழு அளவு இயங்கிடச் செய்யப் பாடுபடுவோர், மக்களின் வசதிப் பெருக்கத்துக்காக உற்பத்தி, விநியோகம், ஆகியவற்றில் ஈடுபட்டு அதனை நேர்மையான முறையில் நடத்துவோர், இவர்களெல்லாம் நம் வணக்கத்துக்கு உரியவர்கள்.

12 முதல் 14 நாட்களில் நாற்றுகள் 4 முதல் 5 அங்குலம் வளர்ந்து நடவுக்கு ஏற்ற நிலையில் இருக்கும். 16 நாட்களுக்கு மேல் வயதான நாற்றுகளை நட வேண்டாம்.

''பாலிதீன்'' காகிதங்களின் மேல் இருக்கும் நாற்றுகளைப் பாய் போல் சுருட்டி, சுருணைகளைத் தகுந்த அளவு பத்தைகளாகப் பிரித்து, நடவு செய்யலாம். நடும்பொழுது கீழ்க்கண்டவைகளைக் கவனத்திற் கொள்ள வேண்டும்:—

(1) நடவு வயலைப் பரம்பு அடித்து மேடுபள்ளமின்றி சம தளமாகச் செய்து கொள்ளவும். (2) நடவின்போது $\frac{1}{2}$ அங்குல அளவிற்கு மேல் தண்ணீர் கட்டக் கூடாது. (3) குழிக்கு 4 அல்லது 5 நாற்றுகள் வைத்து நட வேண்டும். (4) நாற்றுகளை அதிக ஆழமில்லாமல் மேலாக நட வேண்டும்.

எனவே, மேற்கூறிய முறையில் நாற்றுவிட்டு நடவு செய்து பாருங்கள். நமது ஊர்நல ஊழியரும், வேளாண்மை வளர்ச்சி அலுவலரும் உங்களுக்கு உதவி செய்வார்கள். காலத்தை வீணாக்காமல் உடனே முயற்சி செய்யுங்கள் அப்பா !

முயற்சி திருவினை ஆக்கும்

என்று நமது ஒப்பற்ற திருக்குறள் தெரிவிக்கிறது. வணக்கம்.

தங்கள் அன்பு மகன்,
இனியன்.

நாடகக் கலை

எஸ். வி. சகஸ்ரநாமம்

சமுதாயக்கலைகளில், மக்களின் மனத்தைப் பெரிதும் கவரக் கூடிய தன்மை பெற்றவை இசையும், நாடகமும். நாடகம் நிறைவான வலுவைப்பெற்ற ஓர் உன்னதமான கலை.

நாடகக்கலைக்கு வரலாறு உண்டு. உலகளவில் அதனுடைய வரலாறு, சுமார் இரண்டாயிரத்து முன்னூறு ஆண்டு கால அளவைக் கொண்டது. இந்தக் கலை தோன்றிய நாள் முதலே, சமுதாயத்தில் தனக்கென ஒரு தனி மதிப்பைப் பெற்று விட்டது என்று சொல்லலாம். இதனுடைய வளர்ச்சி சமுதாய வளர்ச்சியைப் பிரதிபலித்தது. சமுதாயத்தின் மறுமலர்ச்சிக் காலங்கள், ஆத்ம வீழ்ச்சிகள், இரண்டுமே நாடகக்கலையில் பிரதிபலித்தன.

நாடகத்தின் மூலம் எடுத்துச் சொல்லப்படும் விஷயம், சமுதாய நிலையைக் கோடிட்டுக் காட்டுவதாகும். அதற்கு மேலும், நாம் சிந்திக்க அது ஓர் அடித்தளமாக அமைகிறது.

பாரத நாட்டின் நாடகக்கலை, பெரிதும் புராண இதிகாசங்களை அடிப்படையாகக் கொண்டே தான் வளர்ந்தது. உலகெங்கிலுமே, இக்கலை, இப்படித்தான் வளர்ந்திருக்கிறது.

நமது நாட்டிலும் காளிதாஸன், ஹர்ஷன், பாணபட்டர், விசாகதத்தர், ஆகிய நாடகாசிரியர்களுடைய படைப்புக்களில் சாதாரணப் பொது மனிதனுடைய வாழ்வினைப் பற்றித் தெரிந்துகொள்ள முடியவில்லை. ஐரோப்பாவில், ஏற்பட்ட, தொழில் புரட்சியின் காரணமாக விளைந்த ஓர் புதிய உலகம் இவைகளுக்கு மாற்றாய் அமையத்தக்க புதிய நாடக உலகத்தைத் தோற்றுவித்தது.

சமுதாய ரீதியில் மத்தியதர கடைத்தர வகுப்பைச் சேர்ந்த மக்களும், அவர்களைப் பற்றிய வாழ்க்கை முறைகளும் நாடகத்தில் பிரதிபலித்தன. நார்வே நாட்டைச் சேர்ந்த '' ஹென்றி இப்ஸன் '' (Henry Ibsen) இப்புதிய உலகத்தை நிர்மாணித்த சிற்பிகளுள் தந்தை ஆவார். இப்ஸன் நாடகங்கள் சிந்தனைப் புரட்சியை, சமுதாய மறுமலர்ச்சியை ஐரோப்பா எங்கிலும் உண்டாக்கக் காரணமாயிருந்தன. பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஏற்பட்ட இப்புதிய விழிப்பு, நவீன நாடகக் கலையும், இலக்கியமும் உருவாக உதவி புரிந்தது.

இன்றைய உலகில் மேலை நாடுகளில் மேடைக்கலைவளர்ச்சி வியக்கத்தக்க அளவிற்கு முன்னேறியுள்ளது. இதற்குக் காரணம் அவர்கள், கலையின் வளர்ச்சியை உணர்ச்சி பூர்வமாகப் பார்க்காமல் சமுதாயப் பண்பாட்டு ரீதியில் பார்ப்பதுதான். நம் தமிழகத்து மேடைக்கலையில் இன்று இருக்கும் தேக்கம் சற்று அதிகமானது என்று நான் சொல்லும் போது, இதற்கு வளர்ச்சி என்றால் என்ன என்பதையும் அறிந்த ஒரு நிலையில்தான் சொல்லுகிறேன். நாம் நமது பண்பாட்டுத்துறையில், வளர்ச்சியைப் பற்றி இது வரையிலும் உணர்ச்சி பூர்வமாகத்தான் பார்த்து வந்திருக்கிறோம். ஆக்க பூர்வமாக அறிவுப்பூர்வமாகப் பார்க்கும்போது, இன்னும் இன்றும் நாம் அதீத உணர்வு நாடகங்களையே (Melo dramas) மேடையேற்றுவதை உணர முடியும்.

காதலுணர்வு, சாகசப் பின்னணி நாடகங்கள், யதார்த்த முயற்சிகளைக் கட்டுப்படுத்துகின்றன. தத்ரூப நிலையில் அதாவது அன்றாட வாழ்க்கை அனுபவங்களை வைத்துப் புனையப்பட்ட நாடகங்களில்தான் இன்றைய பிரச்னைகளை நாம் அணுகமுடியும்.

புத்துருவம் பெற எத்தனை புது முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறோம்!''

''தம்பி, தஞ்சை என்றால் தலையாட்டி பொம்மையும், கதம்பமும், குடமிளகாயும் நெட்டிவேலையும் என்று மட்டும் எண்ணாமல் எல்லா விவரங்களையும் உன்னைப்போல் அனைவரும் உணர வேண்டும் என்று விரும்புகிறேன்.......... ஏனெனில் தஞ்சை மன்னனுக்குத் தனியாகச் சில பெருமைகள் உண்டு....''

அவர் வார்த்தையைமுடிப்பதற்குள் சொல்லத் தொடங்கினேன். ''இங்கேதான் இந்துக்களும் முகமதியர்களும் வேறுபாடு காட்டாமல் செல்லும் நாகூர் ஆண்டவர் கோவில் உண்டு. கிறித்துவர்களும் மற்றவர்களும் விரும்பிச் செல்லும் வேளாங்கண்ணி கோவிலும் இருக்கின்றது.''

''எங்கள் முன்னோர் போற்றிய பழம் பெரும் கோவிலான ஆரூர்ப் பூங்கோயில்....''

''ஆம், ஐயா இன்று கமலாலயம் என்று வழங்கப்படும் அக்கோயிலின் தேரோட்டமும் இவ்வாண்டு நடைபெற்றது. தென்னகத்திலேயே திருவாரூர்த் தேர்தான் பெரிது.''

''தம்பி மீண்டும் பழைய காலச் செய்திகளையல்லவா சொல்லிக் கொண்டியிருக்கிறாய்............... புதிய செய்திகளைச் சொல்லேன்....''

''ஐயா, தாங்கள்தான் பழைய செய்திகளுக்கு மீண்டும் இழுத்துச் சென்றீர்கள்..........''

''ஆர்வம் மிகுதியின் விளைவு.............. எத்தனையோ ஆண்டுகளுக்குப் பின்பு ஒரு தமிழனுடன் உரையாடுகிறேன் எல்லாவற்றையும் பேசவேண்டும் என்பதால்தான் தம்பி இப்படி மாறி மாறிப் பேசுகிறேன்''

''மன்னவா, உங்கள் ஆர்வம் புரிகிறது. அதனால் இன்றைய நிலையைச் சுருக்கமாகச் சொல்லுகிறேன். கேளுங்கள்........ உணவு உற்பத்தியில் மட்டும் சிறந்து விளங்கிய தஞ்சைத் தரணியில் நவீன அரிசி ஆலை உண்டு, நெல் உலர்த்தும் ஆலை சர்க்கரை ஆலை, கூட்டுறவு நெசவாலை, சைக்கிள் தொழிற்சாலை, தொழிற் பேட்டைகள் என்று பல்கிப் பெருகியுள்ளன பலவகைத் தொழில்கள்!

''உங்கள் பழைய தலைநகரான பழையாறைக்குப் பக்கத்திலுள்ள குடந்தை என்ற கும்பகோணத்தில் பாத்திரத்தொழில்கள், பட்டுநெசவுத் தொழில்கள் பெருகியுள்ளன.

''எங்கும் நவீன முறையில் சாகுபடிகள். கலை வளர்க்கும் பள்ளிகள்......உம்......இந்த இடங்களை நீங்கள் நேரில் காண வேண்டும்........!''

''தம்பி, நீ சொல்லிய பிறகும் நேரில் காண வேண்டுமா? என்னரும் தஞ்சை நிலத்தார் உன்னத இமயமலைபோல் உயர்ந்து விளங்கும் காட்சியைக் காண்கிறேன்....... வருகிறேன் தம்பி...........வளர்க! வாழ்க!''

• • •

நிலவொளி என் மீது படர்ந்துள்ளது. புது ஆற்றில் ஓடும் வெள்ளத்தின் வேகம் ஏற்படுத்தும் சலசலப்பு—உறக்கத்தில் ஆழ்ந்துவிட்ட அழகு நகரத்தின் அமைதியில் ஓர் அலாதியான ஓசையாகப் பரவுகிறது.

தஞ்சைப் பெரிய கோவிலைச் சுற்றி வந்த நான் களைப்பின் மிகுதியால் கோட்டைச் சுவரில் சாய்ந்து உறங்கியது........ மேகத்தால் மறைக்கப்படும் நிலவொளி போல மங்கலாக நினைவுத்திரையில் தெரிகிறது.

—இளவல்.

ஏன்மா! இந்த ஆளுங்க தண்ணிருக்குள்ளே பாயிறாங்க! ஆனா வெளியே வரும் போது உன்னை மாதிரி அவுங்க வாயிலே மீனைக் காணோமே!

என்ன சார்! மரத்திலே தலை கீழாத் தொங்குறீங்க?

வெளவால் கூடப் போகிறேன்! அதனால்தான்!!

நாற்றையும்........ சுருட்டலாம்

வேளாண்மைக் கல்லூரி,
கோவை-3,
1—9—'70.

அன்புள்ள அப்பா,

தங்கள் கடிதம் கிடைத்தது. நான் நன்கு படித்து வருகின்றேன். இன்னும் சம்பாவுக்கு நாற்று விடவில்லை என்று எழுதியிருந்தீர்கள். இன்னும் போதிய மழை பெய்யாததால், ஏரியில் நீர் பிடிக்கவில்லை என்றும், சம்பா பட்ட நடவுக்குக் காலதாமதமாகும் போல் உள்ளது என்றும் கவலையுடன் குறிப்பிட்டுள்ளீர்கள்.

இக் கடிதம் தங்களுக்குக் கிடைப்பதற்குள் போதிய மழை பெய்துவிடும் சூழ்நிலை உள்ளது. சம்பா நாற்றுவிடக் காலதாமதமாகி விட்டதே என்று கவலைப் படாமல், நான் குறிப்பிடுகின்ற ''தபாக்'' முறையில் நாற்று விடுவீர்களேயானால், பருவந்தவறாமல் நட்டு விடலாம் என்று தெரிவித்துக் கொள்கின்றேன்.

''தபாக்'' நாற்றங்கால் என்பது பிலிப்பைன்ஸ் நாட்டிலிருந்து. நமது நாட்டிற்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு திரு. மு. கருணாநிதி அவர்கள், இந் நாற்றங்காலைச் சென்ற ஆண்டு தஞ்சையில் பார்வையிட்டபோது ''சுருட்டுப்பாய் நாற்றங்கால்'' என்று மிகவும் பொருத்தமாகப் பெயரிட்டார்கள். இது ''சுருட்டுப்பாய் நாற்றங்கால்'', ''சுருள் பாய் நாற்றங்கால்'' என்றெல்லாம் தற்பொழுது வழங்கப்படுகிறது. சென்ற ஆண்டில் தஞ்சை மாவட்டத்தில் இம்முறை பிரபலமாகியது. தற்பொழுது இம்முறை செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, கோவை ஆகிய மாவட்டங்களிலும் பரவி வருகிறது.

சேற்று நாற்றங்கால் தயாரித்தால், நீங்கள் சாதாரணமாக நாற்றுவிட்ட 30 நாட்களுக்குப் பிறகே நாற்றுப் பறித்து நட முடியும். ஆனால் ''தபாக்'' முறையில் நாற்று விட்டால், 12 முதல் 14 நாட்களிலேயே நடவு செய்து விடலாம். அது மட்டுமல்ல; சாதாரணமாக ஒரு ஏக்கர் நடவு செய்ய 10 அல்லது 12 சென்ட் பரப்பில் நீங்கள் சேற்று நாற்றங்கால் தயாரிப்பீர்கள். ஆனால் இம்முறையில் நாற்றுத் தயாரிக்க ½ சென்ட் பரப்பே போதுமானது.

அப்பா! இது உங்களுக்கு விந்தையாகத் தெரியலாம்! இன்னும் சொல்லப் போனால், இம்முறையில் நாற்றுத் தயாரிக்க நிலமே (மண்) தேவையில்லை! நம் வீட்டு முற்றத்திலும், சிமெண்ட் களத்திலும், மொட்டை மாடியிலும், வீட்டுத் தோட்டத்திலும் கூட ''தபாக்'' நாற்றங்கால் தயாரிக்கலாம். ''என்னடா! எதையோ படித்துவிட்டு உளறுகிறாயா?'' என்று தாங்கள் கேட்க நினைக்கலாம். நான் கூறுவது அனைத்தும் உண்மையே.

சூரிய ஒளி கிடைக்கும் எந்த இடத்திலும் 'பாலிதீன்' காகிதங்களை (என்னமோவென்று எண்ணாதீர்கள். இரசாயன உர மூட்டைகளின் உள்ளே இருக்குமே கண்ணாடிப் பேப்பர், அது தானப்பா 'பாலிதீன்' எனப்படுவது; கடைகளிலும் கிடைக்கும்.) விரித்து நாற்று விட்டு விடலாம். ''பாலிதீன்'' காகிதம் கிடைக்கவில்லை என்றால் வாழை இலைகளை விரித்துக்கூட அதன் மேல் நாற்று விடலாம்! அவ்வளவு சுலபமான முறையப்பா இது!

நாடகம் பார்ப்பது வெறும் பொழுதுபோக்குக்காக என்ற கூற்றை, முழுமையாக அப்படியே நாம் ஒப்புக்கொள்ள முடியாது. எந்தக் கலைப் படைப்பிற்கும் ஒரு பொறுப்பு உண்டு. சமுதாய விழிப்புணர்ச்சியைத் தூண்டும் ஒரு சக்தி இந்த நாடகக் கலைக்கு உண்டு.

மாணவ சமுதாயத்திற்கு ஒரு தெளிவு ஏற்படக் கலைஞர்களும் கலைகளை ஆதரிக்கும் செம்மல்களும் அரசாங்கமும் அதிககவனம் செலுத்த வேண்டும். சோவியத் ருஷ்யாவில் நான் சுற்றுப்பயணம் செய்த பொழுது அங்கே ஐந்து முதல் பத்து வயது வரை, பத்து வயதுக்கு மேலே பதினெட்டு வயது வரை என்றவாறு வயதுக்கும் அறிவின் வளர்ச்சிக்கும் ஏற்றவாறு நாடக, சினிமா நிகழ்ச்சிகள் பாகுபாடறிந்து காட்டப்படுகின்றன என்பதை அறிய நேர்ந்தது. இளம் உள்ளங்களைப் பெரிதும், பாதிக்கக் கூடிய உணர்ச்சிமிக்க கட்டங்களையுடைய கலைநிகழ்ச்சிகள் இவர்களுக்குத் தரப்படுவதில்லை. பருவ உணர்ச்சியைத் தூண்டி நேரான பாதையினின்றும் வழுவி வக்கரித்த பாதையில் இளம் மனத்தைத் திசை திருப்பும் குழப்பமான கலைப் படைப்புகளைக் காணும் வாய்ப்பு மாணவர்களுக்கு அளிக்கப்படுவதில்லையென்பதையும் அறிந்தேன். வாழ்க்கையில் காதல், சோகம், இன்பம், இவைகளை அறிய வேண்டிய காலத்தில் அறிவது, எவ்வளவோ நல்லது. இந்த ஒரு விஷயம், எளிதானதன்று. நம் சமூகவியல் நிபுணர்களும் கலைநிபுணர்களும் ஒருங்கிணைந்து ஒரு சமரசப் போக்கோடு, சமுதாயப்பார்வையோடு முடிவெடுத்துச் செயல்படுத்த வேண்டியதொன்றாகும்.

பள்ளிச் சிறுவர்களின் மனத்தில் பசுமரத்தாணிபோல் நல்ல விஷயங்களைப் பதிக்க வெளிநாடுகளில் (Puppet Show) என்று சொல்லப்படும்பொம்மலாட்டம், நாடகம், சினிமாக்களை வெகு அழகானமுறையில் திட்டமிட்டுத் தயாரித்துக் காட்டி வருகின்றனர். நம் நாட்டிலும் அதே போன்று இவைகளை உயர்ந்த கலை உணர்வோடு அத்துறைகளில் நிபுணர்களாக உள்ளவர்களால் தயாரித்து, அளிக்கப்பட வேண்டும். இவைகள் வெறும் (News Real) செய்திப் படங்களைப் போலல்லாமல் சுவை குன்றாத அதே நேரத்தில் இளம் உள்ளங்களில் நெடிதுயர்ந்த நல்ல லட்சியங்களை சமுதாய, கலை உணர்வுடன் கூடிய பொறுப்புணர்ச்சிகளை வளர்க்க உதவும் கருத்துள்ள கலைப் படைப்புக்கள் தேவை. இன்றைய மாணவர்களே வருங்கால ஆட்சியாளர்கள். தேசத்தின் பாதுகாவலர்கள். அவர்களுடைய மனத்தில் விழிப்புணர்ச்சியையும், கடமைப் பெருக்கையும் உண்டாக்கக்கூடிய கலைப் படைப்புக்கள் பெருக வேண்டும்.

டெலிவிஷன் போன்ற நவீன விஞ்ஞான முறைகள் இங்கு பிரபலமானால் மேலைநாடுகளைப் போல இங்கும் சினிமாத்துறை பாதிக்கப்படலாம். ஆனால் நாடகத்தை டெலிவிஷன் பாதிக்காது என்பது உண்மை. இன்று டெலிவிஷன் நாகரிகத்தில் திளைத்துக் கொண்டிருக்கும், நாடுகளில் நாடகக் கலையின் வளர்ச்சியைப் பார்த்தால் இந்தப் பேருண்மையைப் புரிந்து கொள்ள முடியும்.

நாடகத்திற்கென ஏற்படுத்தப்படும் தனிமேடை பல நல்ல நடிகர்களை, ஆசிரியர்களை இயக்குநர்களை உருவாக்கும். ரசிகர்களின் ரசிப்புத்தன்மையை மேலும் பண்புள்ளதாக்கி வளப்படுத்தும். நாடகம் வெறும் மேடைக்கலையாக இல்லாமல் இலக்கியத் தரமுள்ளதாகவும் வளரும் வாய்ப்பினைப் பெறும்.

அந்தப் பொன்னான நாள் உருவாக இன்று முதல் நாம் பாடுபடுவோம். வருங்காலச் சந்ததிகளுக்கு நாம் அரசியல் சமூகப் பொருளாதார ரீதியில் பொறுப்புள்ளவர்களாயிருப்பது போல் பண்பாட்டுத்துறையிலும் நமது பொறுப்பையுணர்ந்து மனவுறுதியுடன் செயல்படுவோமாக.

மூன்றாம் உலகத் தமிழ் மாநாடு நடைபெற்ற பிரான்ஸ் நாட்டுக்கு ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு கால் (Gaul) என்று பெயராம். அப்பொழுது ரோமானியர்களின் ஆளுகைக்கு உட்பட்டு இருந்ததாம் கால் நாடு.

கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் பிராங்க்ஸ் என்ற இனத்தவரின் தலைவனான க்ளோவிஸ் என்பான் நல்லாட்சி நிறுவினான். அவன் வழியினர் அரசாயினராம். எனவே பிராங்க்ஸ் ஆண்ட நாடு பிரான்ஸ் ஆயிற்றாம்.

* * *

இந்தியாவிலேயே இரசாயன உரங்களைப் பயன்படுத்துவதில் முன்னணியில் நிற்கும் மாநிலம் தமிழ்நாடுதான். தமிழ் நாட்டு அளவுக்கு வேறு எந்த மாநிலமும் இரசாயன உரத்தைப் பயன்படுத்துவதில்லை.

இரசாயன உரத்தை மிக அதிக அளவில் பயன்படுத்தும் மாவட்டம் இந்தியாவிலேயே தஞ்சாவூர் மாவட்டம்தான்.

* * *

இந்தியாவில் பொறி இயல் தொழில்களில் தனிப் பெரும் தொழிலாக விளங்குவது மோட்டார் தொழில்தான். 1949-ஆம் ஆண்டில் நம் நாட்டிலிருந்த எல்லாவிதமான மோட்டார் வண்டிகளின் மொத்த எண்ணிக்கை 1,60,000 தான். ஆனால் 1969-ஆம் ஆண்டில் நாட்டிலுள்ள எல்லாவிதமான மோட்டார் வண்டிகளின்மொத்த எண்ணிக்கை 14,30,000 ஆகும்.

கடந்த பத்து ஆண்டுகளில் மோட்டார்த்தொழில் மகத்தான வளர்ச்சி அடைந்திருக்கிறது. 1959-ஆம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட கார்களின் எண்ணிக்கை 11,993. ஆனால் 1969-ஆம் ஆண்டில் உற்பத்தியான கார்களின் எண்ணிக்கை 35,264.

1959-ஆம் ஆண்டில் வணிக வண்டிகள், ஜீப் முதலியன 26,876 உற்பத்தி செய்யப்பட்டன. 1969-ல் உற்பத்தியானவைகளோ 42,998 ஆகும்.


என்ன வேணும்?
என்ன இருக்கு?

ஸ்கூட்டர், மோட்டார் சைக்கிள், மூன்று சக்கர வண்டிகள் முதலியன 1959-ல் 8,126 தயாரிக்கப்பட்டன. 1969-ல் அவைகளின் உற்பத்தி எண்ணிக்கை 99,841 ஆகும்.

மொத்தத்தில் 1959-ஆம் ஆண்டில் எல்லா வகையான மோட்டார் வண்டிகளின் உற்பத்தி 46,995 ஆகும். 1969-ஆம் ஆண்டுகளில் அவைகளின் உற்பத்தி 1,78,103 ஆகும்.

* * *

இந்தியாவிலுள்ள கொடிக் கம்பங்களிலே மிக உயரமான கொடிக்கம்பம் தமிழ்நாடு அரசுத் தலைமைச் செயலகத்திலுள்ள (கோட்டையிலுள்ள) கொடிக் கம்பம்தான்.

இங்கே எல்லாம் கிடைக்கும்!

சட்டமன்றப் பேரவையிலும், நாடாளு மன்றத்திலும் மிகவும் சுவையான நேரம் என்று கேள்வி நேரம் கருதப்படுகிறது.

இந்தக் கேள்வி கேட்கும் முறை நாடாளு மன்றங்களின் தாயகம் என்று சொல்லப்படும் இங்கிலாந்து நாட்டின் 'பிரபுக்கள் அவை'யில் 1721-ஆம் ஆண்டில் தொடங்கியது.

நம் நாட்டில் கேள்வி கேட்கும் உரிமை 1892-ஆம் ஆண்டில் நம் நாட்டுச் சட்ட மன்றங்களுக்கு அளிக்கப்பட்டது. தமிழ் நாட்டுச் சட்டமன்றத்தில் 1893-ஆம் ஆண்டில்தான் இவ்வுரிமை கையாளப்பட்டது.

* * *

இந்தியாவிலேயே பாசனத்திற்கு அதிக அளவில் விசையேற்றத்தை அதாவது பம்புசெட்டைப் பயன்படுத்தியுள்ள மாநிலம் தமிழ்நாடுதான். அனைத்திந்திய அடிப்படையிலுள்ள பாசனத்திற்கான மின்சாரக் கட்டணத்தைவிடத், தமிழ்நாட்டில் மின்சாரக் கட்டணம் குறைவு.

* * *

சேலத்து இரும்பு, அளவி மட்டுமல்ல தரத்திலும் சிற தது என்பதை இரசாய ஆராய்ச்சி மூலம் 1893-ஆ ஆண்டில் திரு. சர் தாம ஹாலண்ட் என்பவர் நிரூபி திருக்கிறார்.

* * *

பயிர்க் காப்புத் திட்ட (பயிர் இன்சூரன்ஸ் திட்ட முதன் முதலாக இந்தியாவிலே சோதனைத் திட்டமாகத் தமிழ்நா தில் கோவை மாவட்டத்தி தொடங்கப்பட்டிருக்கிறது.

* * *

இந்தியாவிலேயே முதன்மு வில் புன்செய் நிலங்களுக் வரியை நீக்கியது தமிழ்நா அரசு தான்.

இலக்கியச் சோலை

உலகமென்ற இலக்கியத்து நிலப் பரப்பில்
'உங்கள்தமிழ்ச் சோலைவளம் என்ன?' என்றார்!
கலமோடும் கடல்தின்று, கறையான் தின்று
கடும்ஆடிப் பெருக்கெல்லாம் தின்ற பின்னர்
விலங்கெருமை பலபுகுந்த குளத்தில் மீதி
விளங்குகின்ற தாமரைபோல் தமிழ்ச்சோலைக் கண்
இலங்குகின்ற இலக்கியத்துப் பயிர்வளத்தை
எடுத்தவரின் விழிமுன்னால் வைப்போம் தோழி!

வாழும்'தொல் காப்பிய'த்தை 'அகம்' 'புற'த்தை
வளமார்ந்த 'கலித்தொகை'யைப் 'பதிற்றுப் பத்'தை
ஆழமுள்ள 'நற்றிணை'யைக் 'குறிஞ்சிப் பாட்'டை
'ஐங்குறுநூ' றதனோடு 'முல்லைப் பாட்'டை
தாழாத 'திருக்குற'ளைச் 'சிலம்'பை என்றும்
தரந்தோய்ந்த 'குறுந்தொகை'யை 'ஆற்றுப் பாட்'டை
சூழ்'மதுரைக் காஞ்சி'யினை 'நளவெண்' பாவைத்
தொடஇனிக்கும் 'நாலடி'யைச் சொல்நீ தோழி!

'மேகலை' 'சிந் தாமணி'யைத் 'தேவார'த்தை
மேன்மை 'நந்திக் கலம்பக'த்தைக் 'கல்லாட'த்தை
வாகைகண்ட 'கலிங்கத்துப் பரணி' தன்னை
வள'நெடுநல் வாடை'யினை 'நன்னூ' லோடு
பாகு'கம்ப ராமாயண'த்தை நல்'யாப்
பருங்கல'த்தைப் 'பெருங்கதை'யைச் 'சோழியத்'தை
வேக'முத்தொள்ளாயிர'த்தைப் புலவர் நாவின்
'விடுதூ'தைப் 'பழமொழி'யை விழிமுன் காட்டு!

'இன்னாநாற் ப'தை'வில்லி பாரத்'த்தை
'ஏரெழுப' துடன்'நீல கேசி' நல்ல
கன்னல்சீர் 'ஆசாரக் கோவை' யோடு
'கார்நாற்ப' துடன்'கந்த புராணம்' தூய
பொன்'அம்பி காபதியின் கோவை' யோடு
புகழ்பூத்த 'மூதுரை'யைத் 'தண்டி' தன்னைக்
கொன்றை'திருக் குற்றாலக் குறத்'திப் பாட்டைக்
'குசேலோபாக் கியான'த்தைக் கூறாய் தோழி!

'பெரும்பாணாற் றுப்படை'யைப் 'பள்ளுப்பா'ட்டை
பீடுடைய 'பரிபாடல்' நூலோர் போற்றும்
'திருத்தொண்டத் தொகை' 'வளையா பதி'யை நல்ல
'திரிகடுகம்', 'மூவருலா', 'சீறாப் புராணம்'
'திருவரங்கக் கலம்பகம்' 'மனோன்மணீயம்'
'சிலையெழுப' துடன்'இருபா இருபஃ' தோடு
'திருப்பாவை' 'திருவருட்பா' 'திருப்பல் லா'ண்டைத்
'திருப்புக'ழைத் 'திருமந்திர'த்தைக் காட்டு!

எண்ணரிய 'சதகங்கள்' 'உலாக்கள்' 'கோவை'
எழில்நூல்கள் 'அந்தாதி'த் 'தூது' நூல்கள்
வண்ணவண்ணத் 'தனிப்பாடல்', 'சித்தர் பாடல்'
வனப்புள்ள 'தலப்பாடல்' இவற்றினோடு
கண்ணான 'பாரதி'யைத் 'தாசர்' பாட்டைக்
கனிக்கவிஞர் படைக்கின்ற கவிதைக் காட்டைப்
பெண்மானே! அன்னவர்க்கு விளக்கிக் காட்டு!
பின்னுமவர் கேலிசெய்தால் நடந்து காட்டு!

அமைச்சர் கா. வேழவேந்தன்

“எந்தத் திட்டமானுலும், அதைச் சிறப்புற ஆற்றிக் கொடுக்கும் அதிகாரிகள் இங்கே இருக்கிருர்கள். தேவையானதைக் கொடுத்தால், உற்பத்தி செய்து குவிக்கும் உழைப்பாளர்களாக நமது உழவர்கள் இருக்கிருர்கள்” என்று பேரறிஞர் அண்ணு அவர்கள் சென்னையில் நடந்த தீவிர வேளாண்மை மாவட்டத் திட்ட மாநிலக் கருத்தரங்கைத் துவக்கி வைத்துப் பேசுகையில் பாராட்டினுர்.

தமிழ்நாடு அரசு பல்வேறு துறைகளிலும் குறிப்பிடத்தகுந்த சாதனைகளை ஏற்படுத்தி வருவது கண்டு மற்ற மாநிலத்தவரும், வெளிநாட்டவரும் பாராட்டி வருகின்றனர்.

சிறப்பாக வேளாண்மையில் பல சாதனைகளை ஏற்படுத்தி, உழவர் பெருமக்களின் வாழ்வு வளம் பெறவும், நாடு நலம் பெறவும், தமிழ்நாடு அரசு முழு முயற்சியுடன் ஈடுபட்டு வருகிறது. தமிழ்நாடு அரசின் சாதனைகளுக்கோர் எடுத்துக்காட்டாக, சென்னை வண்ணுரப்பேட்டையிலுள்ள அரசினர் வேளாண்மைப் பொறியியற் பணிமனையில் உருவாக்கப்பட்டுள்ள விசைத் துளைக்கும் கருவி (பவர் டிரில்) விளங்குகிறது.

இந்தப் பவர் டிரில், வெளிநாட்டிலிருந்து வரவழைக்கப்படும் “ரஸ்டன் பக்ரஸ்” (Ruston Bucyrus 22 W. R.) டிரில்லுக்கு ஒப்பானதாகும். இக்கருவி ஒரு “டிரக்” வண்டியில் பொருத்தப்பட்டுள்ளது.



விசைத் துளைக் கருவி

இதுவரை 4 பவர் டிரில்களை உருவாக்கி, பூமிக்கடியில் உள்ள நீரை மேலே கொண்டுவரும் வேலைக்கு அனுப்பியுள்ளது இந்தப் பணிமனையின் மகத்தான சாதனையாகும்.

ஒவ்வொரு பவர் டிரிலும் ரூபாய் 1.81 லட்சம் செலவில் தயாரிக்கப்பட்டுள்ளது. இத்தொகையில் ‘டிரக்’ வண்டி, 83 குதிரை ஒட்ட சக்திகொண்ட நகர்ந்து செல்லும் கருவி (Prime mover) ஆகியவைகளும் அடங்குகின்றன. மொத்தச் செலவு பின்கண்டவாறு உள்ளது.

சேஸிஸ் 0.46 லட்சம், டிரில் 0.96 லட்சம், இதர கருவிகள் 0.39 லட்சம், மொத்தம் 1.81 லட்சம் ஆகிறது.



பூமிக்கடியில் மலைப்பாங்காக உள்ள பகுதிகளான கோயம்புத்தூர், சேலம், வடஆற்காடு, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் குழாய்க் கிணறுகள் அமைக்க இந்தப் பவர் டிரில்லைப்பயன்படுத்தலாம். பூமி மட்டத்திற்குக் கீழ 500 அடி ஆழம் வரை 12 அங்குல குறுக்களவுள்ள துளையிடுவதற்கு இது ஏற்றதாகும். இதைக்கொண்டு ஒரு நாளில் (8 மணி வேலை நேரம்) மண்ணில் 10 அடியும், இளக்கமான மலைப்பகுதியில் 10 அடியும், இறுக்கமான மலைப் பகுதியில் 6 அடியும், மிகவும் இறுக்கமான மலைப் பகுதியில் 2 அடியும் துளையிட இயலும்.

நிலத்தினடியில் உள்ள நீரை வெளியே கொண்டு வந்து வேளாண்மை உற்பத்தியைப் பெருக்க உதவும் இக்கருவிக்கு இணையான பவர் டிரில்லை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்வதென்றுல், ரூபாய் 4 லட்சம் செலவு ஆகிறது. ஆனுல் நாமே தயாரிக்கும்போது ரூபாய் 1.81 லட்சம் மட்டுமே செலவு ஆகிறது. அந்நியச் செலாவணியை மிச்சப்படுத்தும் இத்தகைய தயாரிப்புகள் சாதாரணமானவையல்ல மகத்தான சாதனை என்றுதான் சொல்ல வேண்டும்!

இதுவரை தயாரிக்கப்பட்டுள்ள 4 விசைத் துளைக்கும் கருவிகளும் வேளாண்மைத்துறை மூலம் குழாய்க் கிணறுகள் அமைக்கப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இவைகள் வெளிநாட்டு விசைத் துளைக் கருவிகளைவிட, வெகு திறமையாக வேலை செய்வதாக பல வேளாண் பெருங்குடி மக்கள் பாராட்டி வருகின்றனர்.

கடல் மல்லை காணீரோ!

மாமல்லபுரத்துக் கலைச் சின்னங்களைச் சுற்றிப் பார்த்த அந்த வெள்ளைக்கார மாது, குன்றனைய கற்கோயில்களை வெறித்துப் பார்த்தபடி மோனத்தில் ஆழ்ந்து விட்டார்.

போலந்து நாட்டிலிருந்து வந்தவர் அந்த அம்மையார். தொல்பொருள் ஆராய்ச்சியில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். இத்தாலி, எகிப்து, பிரான்சு நாட்டுப் புராதனச் சின்னங்களை ஆய்ந்தறிந்தவர். தமிழ்நாட்டுக் கலைக் கோயில்களைக் காண வந்திருந்தார்.

நான் சுற்றுலா வழிகாட்டி என்ற முறையில் அவரை மாமல்லபுரத்திற்கு அழைத்துச் சென்றிருந்தேன்.

ஐந்து ரதப் பகுதியிலிருந்து அரசினர் சிற்றுண்டி விடுதிக்குச் சென்ருேம். தேநீர் அருந்தியபடி மீண்டும் சிந்தனை வயப்பட்டார், அம்மையார்.

வினுடிக்கு ஒரு கேள்வி கேட்கும் இயல்புடைய அவர் மெய்ம் மறந்து மௌனமாயிருந்தது எனக்கு வியப்பூட்டிற்று.

“என்ன சிந்தனை?” அவரது சிந்தனையைக் கலைத்தேன்.

“நான் பல்லவர் காலத்து மாமல்லபுரத்தில் வாழ்ந்திடக் கொடுத்து வைத்திருக்க வில்லையே!” என்று தமது ஏக்கத்தினை வெளியிட்டார்.

ஆம். வேற்று நாட்டவரெல்லாம் கண்டு பொருமை கொள்ளும் அளவிற்குக் கலையில், பண்பாட்டில், செல்வச் செழிப்பில், மாமல்லபுரம் மிக உயர்ந்த நிலையில் இருந்தது என்பதற்கு இலக்கியத்திலும், கல்வெட்டுகளிலும் பல சான்றுகள் உள்ளன.

மாமல்லபுரம், அன்று மாமல்லை என்றும் கடல்மல்லை என்றும் அழைக்கப்பட்டது. புகழ்பெற்ற துறைமுகப் பட்டினமாகத் திகழ்ந்தது. எகிப்து, கிரேக்கம், ரோமாபுரி ஆகிய சாம்ராஜ்ஜியங்களிலிருந்து மரக் கலங்கள் நாள்தோறும் மாமல்லைத் துறைமுகத்திற்கு வந்து சென்ற வண்ணமிருந்தன. உயர்ந்த சாதிக் குதிரைகளைக் கலங்கள் ஏற்றி வந்தன. இத்துறைமுகம் மூலம் கடல் வாணிபம் செழித்தோங்கியது.

ஏனைய துறைமுகப் பட்டினங்கள் போல் அல்லாது, நாவாய்கள் எளிதாக அடையாளம் தெரிந்து வரும் வகையில் அமைந்திருந்தது, மாமல்லை! செல்வர்களும், வணிகப் பெருங்குடியினரும் வாழ்ந்ததால் எங்கும் மாடமாளிகைகள்! இராக்காலங்களில் மாடங்களில் ஏற்றி வைக்கப்பட்டிருந்த விளக்குகள் வெகு தொலைவிலிருந்தே நன்கு தெரிந்தன. அவற்றைக் கண்ணுற்றதுமே, நாவாய்த் தலைவர்கள் மாமல்லை வந்து விட்டதை உணர்வர்!



அந்த உயர்ந்த மாடங்களில் வணிகர் வீட்டு மகளிர் வசித்தனர். அவர்கள் பொன்னாலான மிகச் சிறந்த அணிகலன்களையும், மெல்லிய துகில் ஆடைகளையும் அணிந்திருந்தனர். அவர் தம் இடையிலே மணி வடங்கள்; கால்களில் பொற்சிலம்புகள்! பொற்கழல்களையும், நூற்பந்துகளையும் மாடங்களிலிருந்து ஆடுவதே அம்மகளிரின் பொழுதுபோக்கு.

இது பழந்தமிழ் இலக்கியங்கள் தரும் படப்பிடிப்பு; கல்வெட்டுகள் எடுத்துக் கூறும் உண்மை. வெளிநாட்டு வணிகர்கள் இங்கு வந்தார்கள் என்பதை மாமல்லபுரத்தில் கிடைத்த ரோமானிய நாணயங்களும் உறுதி கூறுகின்றன. இதனை நான் அந்தப் போலந்து மூதாட்டிக்கு எடுத்துக் கூறினேன்.

மாமல்லபுரம் காலஓட்டத்தில் பல மாறுதல்களை அடைந்து இன்று ஒரு சிற்றூராக இருக்கின்றது. இருப்பினும், அதன் பண்டைப் புகழ், கலை, அழியவில்லை. காலத்தால் அழித்திட முடியாத குடைவரைக் கற்கோயில்கள் இங்கு கொலுவிருக்கின்றன. அன்று அரசனுக்காகக் கற்கோயில்களையும் சிற்பங்களையும் நிறுவினர், பெருந்தச்சர்கள்.

இன்று தமிழக அரசின் சிற்பப் பள்ளியிலே பல சிற்பிகள் உருவாகின்றனர், அந்தச் சாகாத கலைக்குப் புத்துயிர் ஊட்டுவதற்காக! அன்று யவனரும், ரோமானியரும் வாணிபம் செய்தற்பொருட்டு மாமல்லைக்கு வந்தனர்.

இன்று கலைச் சின்னங்களைப் பார்ப்பதற்காகப் பல வெளிநாட்டவர் நாள்தோறும் மாமல்வபுரத்தை முற்றுகையிடுகின்றனர்.

ஈரான் நாட்டு மன்னர் ஷா தனது ராணியாருடன் மாமல்லபுரத்திற்கு வந்து இந்த சிற்பக் கலைகளைக் கண்டு மகிழ்ந்துள்ளார். சிக்கிம் நாட்டு மன்னரும் ராணியும், நேப்பாள நாட்டு அரச குடும்பத்தினரும், பூட்டான் நாட்டு அரச தம்பதியரும், இந்தக் கடல் மல்லையைக் கண்டு ரசித்ததுண்டு.

இலங்கைப் பிரதமர் திருமதி சிரிமாவோ பண்டாரநாயகா, பூட்டான் நாட்டு அமைச்சர்கள், மொரீசிய நாட்டு அமைச்சர் இன்னும் பல முக்கிய வெளி நாட்டுப் பிரமுகர்கள் வந்து பார்த்துச் சென்ற பெருமையும் இந்த மாமல்லபுரத்திற்கு உண்டு.

செக்கோஸ்லோவேகிய நாட்டு நாட்டிய-நாடகக் குழுவினர் இந்த மாமல்லபுரத்திற்கு வந்ததோடு சரித்திரப் புகழ்பெற்ற இந்தக் கடலில் குளித்து மகிழவும் செய்தனர்.

நாங்கள் அர்ச்சுனன் தவம் என்ற பாறையில் வடித்த ஓவியங்களைப் பார்வையிட வந்தோம். அங்கே பல ஆந்திர நாட்டுச் சகோதர சகோதரிகள்.....அவர்களைத் தாண்டி ஒரு மேலை நாட்டுக்காரர், பல கோணத்தில் அந்த இறவா ஓவியத்தினைப் படம் பிடித்துக் கொண்டிருந்தார்.

''உலகத்திலுள்ள சிற்பங்களிலேயே ஒப்பற்ற சிற்பம் இதுவே'' என டாக்டர் பாஷாம் என்ற மேல்நாட்டு அறிஞர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். தொண்ணூறு அடி நீளமுள்ள பாறை அதனிடையே உள்ள சிறிய இடைவெளியை, விண்ணிலே ஒரு நதி தோன்றி, விசும்பிலே பாய்ந்தோடி, பூவுலகில் வீழ்ந்து, பின்னர்க் கீழ் உலகிற்குப் பாய்ந்து செல்வதாகச் சிற்பி உருவாக்கியிருக்கிறார்.

அங்கிருந்து அருகிலுள்ள கிருஷ்ணமண்டபம் சென்றோம். அதில் கண்ணன் ஆநிரை காக்கக் குன்றைக் குடையாக்கிக் கையால் தூக்கி நிற்கும் காட்சியையும், ஆயன் ஒருவன் பசுவிடம் பால் கறக்கும் இயற்கை அழகு ததும்பும் காட்சியினையும் பார்வையிட்டுவிட்டு மேலே சென்றோம்.

மலை மீது பல அரிய காட்சிகள். அதில் கலங்கரை விளக்கத்திற்கு அருகே உள்ள மகிஷாசுரமர்த்தனி குகையும் ஒன்று. உலகப் புகழ் பெற்ற கொற்றவையின் ஒப்பற்ற சித்திரத்தை அங்கே காணலாம். கொற்றவை மகிஷாசுரனை அழித்த கதை இதில் ஓவியமாகத் தீட்டப்பட்டுள்ளது. தமிழகச் சிற்பிகள் தோற்றுவித்துள்ள சிற்பங்களிலே ஒப்புயர்வற்றதாகக் கருதப்படும் சிற்பம் இது. இதைக் காணவே, பல வெளிநாட்டவர் மாமல்லபுரம் வருகின்றனர்.

குன்றின் மீது நின்றபடியே எல்லையற்று விரிந்து கிடக்கும் அலைகடலின் அழகைப் பருகிவிட்டு நாங்கள் மீண்டும் ஒற்றைக் கல் கோயில்களுக்கு (ஐந்து ரதங்களுக்கு) வந்தோம்.

அங்கு ஒரு ஐரோப்பிய மாது புகைப் படச்சுருளில் அந்தக் கற்கோயில்களைச் சுருட்டிக்கொண்டு இருந்தார். அவருடன் வந்த தோழி கற்கோயில்களைச் சுற்றிப் பார்வையிட்டபடி சென்று கொண்டிருந்தார்.

தூரத்தே உள்ள மரத்தடியிலுள்ள கல் இருக்கையில் நவீன பாணி உடையமைப்புடன் வெளிநாட்டார் இருவர் இளநீரை உறிஞ்சியபடி இருந்தனர். தலையிலே தொப்பி, இளைஞனுக்குத் தாடி; பெண்போல் வளர்ந்திருக்கும் தலை முடி. அருகிலிருந்த பெண்ணுக்கும் அதே தோற்றம்தான்: தாடியில்லாததால் பெண் என்பது புரிந்தது!

எனக்கே உரிய ஆர்வத்துடன் நான் அருகில் சென்று அவர்களை விசாரித்தேன். அந்த இளைஞர் இங்கிலாந்து நாட்டவர். அந்தப் பெண்மணி கனடாக்காரர் எனத் தெரிந்தது. இந்தியக் கலைகளிலிருந்த ஆர்வத்தால் நான்கு ஆண்டுகளாக நாடு முழுவதும் சுற்றி வந்துகொண்டிருப்பதாக அவர்கள் தெரிவித்தனர். அந்தப்பெண்மணி பரதநாட்டியமும், ஓவியமும் பயில்வதாகத் தெரிவித்தார். ஏகாந்தமாக அமர்ந்து இந்தக் கலைச் சின்னங்களை நாளெல்லாம்பார்த்து அனுபவிக்க மிகுந்த ஆவல் என்று இருவரும் தெரிவித்தனர்.

நான் சுற்றுலா வழிகாட்டி என்று தெரிந்ததும், ''இதை ஏன் ரதம் என்று அழைக்கிறார்கள்? அன்புகூர்ந்து விளக்க முடியுமா?'' என்று கேட்டாள் அந்த இளமங்கை.

''இவை ரதங்களே அல்ல; குன்று போலிருந்த ஒரே கல்லில் செதுக்கப்பட்ட கோயில்கள். ஒற்றைக் கல் கோயில் என்பதே பொருத்தமானது. இந்தக் கற்கோயில்களிலுள்ள மற்றொரு சிறப்பு என்னவெனில், இவை ஒவ்வொன்றும் வெவ்வேறு முறையில் அமைக்கப்பட்டுள்ளதாகும். முதல் கோயில் (திரௌபதி ரதம் என அழைக்கப்படுவது) குடிசை போல் உருவ அமைப்புக்கொண்டது. அடுத்தது இரு தளங்கள் உள்ள கோயில். மூன்றாவது நீண்ட சதுர வடிவிலுள்ளது. நான்காவதாக உள்ள கோயில் மூன்று தளங்கள் கொண்டது. இதில் கடவுளின் தோற்றங்களும், பல்லவ மன்னனின் சிற்பமும் செதுக்கப்பட்டுள்ளன. மன்னனின் பெயர் முதலியன பல்லவ ரதத்தில் பொறிக்கப்பட்டுள்ளதைப் பாருங்கள். கடைசியில் தனித்து நிற்கும் கோயிலின் பின் பகுதியும், யானையின் பின் பகுதியும் ஒரே அமைப்பில் அமைக்கப்பட்டுள்ளன. இதனைக் கஜபிருஷ்டம் (யானையின் பின் பகுதி) என்பர். இந்த ஒற்றுமையை விளக்கத்தானோ என்னவோ பக்கத்திலே உயிர்த் துடிப்பிலுள்ள ஒரு யானையின் உருவத்தையும் சிற்பி செதுக்கியுள்ளான். படுத்திருக்கும் காளை உருவும், சிம்மத்தின் அமைப்பும் அருகில் நின்று படம் எடுக்கும் ஆவலை யாருக்கும் ஏற்படுத்தும்.'' நான் கூறி முடித்ததும் ''நந்தி (நன்றி) வணக்கம்'' என்று தங்களுக்குத் தெரிந்த இரு தமிழ்ச் சொற்களை இன்முகத்துடன் உதிர்த்தனர் அவர்கள் இருவரும்.

மொரீஷியஸ் அமைச்சர் இளநீர் அருந்துகிறார்

அதற்குள் போலந்து அம்மையாரும் வந்துவிடவே நாங்கள் அவர்களிடம் விடைபெற்று நகர்ந்தோம். கிளிஞ்சல்களால் செய்த மாலைகள், அழகுப் பொருள்கள், சங்குகள் முதலியன விற்கும் கடைகளைச் சுற்றிப் பார்த்தபடியே மீண்டும் கடற்கரைக் கோயிலுக்கு வந்தோம். கடல் அலைகள் வருடிச்செல்லும், இந்தப் பேரெழில் பொழியும் கோயிலுக்கு நிகர் ஏது? சுமார் 1,300 ஆண்டுகளாக இது அலைவாயிலிலே அல்லவா நின்று கொண்டிருக்கிறது!

''இவற்றை அமைத்த பல்லவ மன்னர் யார் என்று தெரியுமா?'' அம்மையார் என்னைக் கேட்டார்.

''இந்தக் கடற்கரைக் கோவிலை இராஜசிம்மப் பல்லவன் ஏற்படுத்தினன் என்பதற்கு இங்கேயே கல்வெட்டுகள் உ

ளன. ஆனால், மற்றக் கலைச் சின்னங்களை நிறுவியவர் மாமல்லன் என்ற பெயர் கொண்ட முதலாம் நரசிம்மவர்மன் என்று ஒரு கருத்து உள்ளது. வெவ்வேறு மன்னர்கள் காலத்தில் தொடர்ந்து செய்யப்பட்ட பணிகள் இவை என்று கூறுவாரும் உளர். இதை மறுத்து, இராஜசிம்மனாகிய இரண்டாம் நரசிம்மவர்மன்தான் இவை அனைத்தையும் நிறுவினான் என்ற மற்றொரு ஆராய்ச்சியும் உண்டு.''

'' யாராயிருப்பினும் சரி, நீலத்திரைக் கடலோரத்தில் நிலைத்து நிற்கும் இந்தக் கலைக் கோயில்களைக் குடைந்த மன்னனின் புகழும் சிற்பிகளின் புகழும் நீடுழி வாழ்க !'' என்று அந்த அம்மையார் மனமார வாழ்த்தி நின்றார்.

நாங்கள் அங்கிருந்து கடற்கரை ஓரமாக அரசின் சுற்றுலா இல்லத்தினை நோக்கி நடந்தோம். கடற்கரை ஓரத்தில் பரதவப் பெண்ணொருத்தி அலைகளால் ஒதுக்கப்படும் கிழிஞ்சல்களை வலையால் அரித்துக் கொண்டிருந்தாள். அம்மையார் சிந்திய புன்னகைக்கு அன்பளிப்பாகச் சிறிய அழகிய சங்கு ஒன்றை அந்தப் பெண்மணி வழங்கினாள்.

தூரத்தே கட்டுமரங்கள் கடலில் அசைந்தாடி வருவது கண்ணுக்கு இனிய விருந்து படைத்தது !

சுற்றுலா இல்லத்திற்குப் பின்றக் கடற் பகுதியில் பல வெள்ளக்கார ஆடவரும் பெண்டிரும் ந்திக் குளித்துக் காண்டிருந்தர். ஒரு வண்க் குடையின் டியில் மடக்கு ாற்காலிகளில் சில வெளிநாட்டார் அமர்ந்திருந்தனர். இரு சிறுவர்கள் அருகில் மணலில் விளையாடிக்கொண்டிருந்தனர்.



'' ஆகா! இந்த இனிமையான சூழ்நிலை என்னை அமெரிக்காவின் மியாமி கடற்கரையையும், இத்தாலியின் எழிற் பகுதிகளையுமே நினைவூட்டுகின்றன ! தமிழகத்தின் ஒரு பகுதியில் இருப்பதையே மறந்துவிட்டேன். எனக்கு இங்கே வாழ வாய்ப்புக் கிடைத்தால் என் வாழ்நாளெல்லாம் இங்கேயே கழிப்பேன் !'' மீண்டும் உணர்ச்சி வசப்பட்டுப் பேசினார், போலந்து அம்மையார்.

சூழ்நிலையின் பிடியிலிருந்து விடுபட்டு நாங்கள் சென்னைக்குப் புறப்பட்டோம். வழியில் புலிக் குகையைப் (அங்குப் புலி கிடையாது—புலியின் தலை போன்ற அமைப்புள்ள கோயில் அது) பார்த்துவிட்டுச் சென்னைக்குத் திரும்பினோம்.

எனது எண்ணச் சுழல்கள் கி.பி. 7-ம் நூற்றாண்டின் பின்னணியிலேயே சுழன்று கொண்டிருந்தன. பல்லவர் காலத்தில் சற்று நேரம் வாழ்ந்துவிட்டது போன்ற பிரமை என்னுள் நிறைந்தது !

எனது எண்ணம் மட்டுமல்ல, மாமல்லபுரத்துக்குச் சுற்றுலா வரும் ஆயிரக்கணக்கான மக்கள், அவர்கள் உள் நாட்டாரோ வேற்று நாட்டாரோ, யாராயிருப்பினும், உலகுக்கு அழியாக் கலையினைத் தந்து மறைந்த பல்லவப் பேரரசின் சிந்தனையிலிருந்து விடுபடுவது அரிது.

மாமல்லபுரத்தைச் சுற்றிப் பார்த்த பின்

''வண்டை
வளம்பதி,
பாடீரோ

மல்லையும்
கச்சியும்
பாடீரோ

பண்டை
மயிலையும்
பாடீரோ

பல்லவர்
தோன்றலைப்
பாடீரோ'

என்ற கலிங்கத்துப் பரணியின் பாடல் நமது காதுகளிலே ரீங்காரம் செய்தபடியே இருக்கிறது.

அம்மா பசிக்குதே!

சாரதா : டாக்டரம்மா ! என் பையன் உடம்பு வர வர மெலிஞ்சுக்கிட்டே போகுது.

டாக்டர் நளினி : உடம்புக்கு என்ன ?

சாரதா : அதுதான்மா தெரியலை. பெரிய ஆஸ்பத்திரியிலே ரெத்த பரிசோதனை செய்தாங்க! எக்ஸ்ரே படம் பிடிச்சாங்க, எல்லாத்தையும் பார்த்திட்டு. பையன் 'வீக்கா யிருக்கான். உடம்புக்கு ஒன்னும் இல்லை. எதுக்கும் எழும்பூர் சிறுவர் மருத்துவ மனைக்குப் போன்னாங்க. அதுனாலேதான் இங்கே எடுத்துக்கிட்டு வந்தேங்க.



டாக்டர் : பையனை இப்படி ஸ்டூவிலே உட்காரவை! (சோதித்துப் பார்க்கிறார்) ஆமாம் இவனுக்கு என்ன கொடுக்கிறே?

சாரதா : பாலு! பவுடர் பாலும்மா ! விலை உயர்ந்ததா வாங்கிட்டு வந்துதான் கொடுக்கிறாரு. எங்க வீட்டுக்காரரு ! இதோ பாருங்க புட்டியிலே கரைச்சி வைச்சிருக்கேன்.

டாக்டர் : (வாங்கிப் பார்த்துவிட்டு) இவ்வளவு தண்ணியாக் கரைச்சி வைச்சிருக்கியே ! பையனுக்கு இரண்டு வயதுக்கு மேலே ஆகுது! எப்படிப்போதும் ? ஆமா வேறு என்ன கொடுக்கிறே ?

சாரதா : நாங்க வீட்டிலே சாப்பிடுகிறது எல்லாமே இரண்டு வாய் கொடுக்கிறதுதான்.

டாக்டர்: இந்தா பாரும்மா ! கண்டதையும் கொடுத்திட்டு அப்புறம் மருந்து அது இதுன்னு கொடுத்து என்ன பயன்! இது வளரக்கூடிய பருவம். நல்லா புரதம் , வைட்டமின்....

சாரதா : அது என்ன மீனு அம்மா ?

டாக்டர் : மீனு ஒன்னுமில்லே! சத்துள்ள உணவு.

சாரதா : நாங்க ஏழைங்க! அதுக்கெல்லாம் பணம் ஏதம்மா!

டாக்டர் : நான் சொல்றது நிறையப் பணம் செலவாகிற உணவு இல்லே ! சாதாரணமா நம்ப வீடுங்களிலே வாங்குகிற பொருள்கள்தான் ! நான் சொல்றதை நினைவிலே வெச்சிக்கோ!

சாரதா : சொல்லுங்கம்மா ! மறக்காமே அப்படியே செய்றேன்.

டாக்டர் : பொட்டுக் கடலை இல்லே, அதையும் நிலக்கடலையையும் மாவா அரைச்சு வைச்சுக்கோ ! சிறுவர் சிறுமிகளுக்கு நல்லா உடம்பை வளர்க்கக் கூடிய சத்து இதிலே உள்ளது.

சாரதா : அதை அப்படியேவா கொடுக்கிறது?

டாக்டர் பொறு! விவரமாச் சொல்றேன் ! அந்த மாவை தண்ணீர், வெல்லம் எல்லாம் சேர்த்து பாயசம் மாதிரி வைச்சுக் கொடுக்கணும். குழந்தைக்கு சாப்பிடவும் சுவையாக இருக்கும் ! சத்தும் உள்ளது.

சாரதா : தினமும் அப்படியே கொடுக்கவா ?

டாக்டர் : ஊஹூம்! தினமும் அப்படியே கொடுத்தா குழந்தைகளுக்கு வெறுப்புத் தட்டும். அதனாலே அதையே உப்புமா, தோசை, பொங்கல் இப்படி

பலவகை பலகாரங்களாச் செய்து கொடுக்கலாம்.

அதோட சின்னப்பசங்களுக்கு கீரையை நிறையாக் கொடுக்கலாம். அதிலே இரும்புச் சத்தும் இருக்கு. அதோடே குழந்தைகளுக்கு மலச்சிக்கலும் இருக்காது.

சாரதா : மலச்சிக்கல் வந்தா விளக்கெண்ணெய் கொடுத்தாப் போச்சு டாக்டரம்மா !

டாக்டர் : நோ..நோ!.. விளக்கெண்ணெய் கொடுக்கவேகூடாது விளக்கெண்ணெய் மட்டுமல்ல. எந்த மலமிளக்கிகளையும் பயன்படுத்தக் கூடாது. அதற்குப் பதிலா, அரைக்கீரை, முருங்கைக் கீரை ஆகியவற்றைக் கொடுக்கலாம். கீரைகளை வேகவைக்கும்போது எப்பவும் மூடிவைச்சுத்தான் வேகவிடணும். வெந்த பிறகு அதைக் கடைஞ்சி அதோடு பாலும் சர்க்கரையும், அல்லது மோரும் உப்பும் கலந்து கொடுக்கலாம்.

அப்புறம் காரட் இல்லே காரட்...

சாரதா : ஆமாம்மா! காரட்டுக் கெழங்கு.

டாக்டர் : ஆமாம். அதிலே பிஞ்சிக் கிழங்கா வாங்கி தோலைச் சீவி விட்டு, தேங்காப்பூ மாதிரி துருவிக் கொள்ளணும். அதிலே தண்ணீர் சேர்த்து மூடி வைச்சு வேகவிடணும். வெந்ததும் நல்லாக் கடைஞ்சி, அதோடு சர்க்கரை கலந்து கொடுக்கலாம்.

உருளைக் கிழங்கையும் வேக வைச்சுக் கொடுக்கலாம். ஆனா உருளைக் கிழங்கைத் தோலோடு தான் வேக விடணும். வெந்த பிறகு தோலை உரித்து விட்டு நல்லா மசித்துக்கொடுக்கலாம்.

பையன்: அம்மா ! காப்பி காப்பிம்மா !!

சாரதா : கொஞ்சம் பொறுடா கண்ணா ! போகும்போது நாயர் கடையிலே சாயா வாங்கித் தரேன் !

டாக்டர் : என்னது டீயா ! சேச்சே! வளர்ற குழந்தைகளுக்கு டீ, காப்பி எதுவும் கொடுக்கக்கூடாது. அது குழந்தைகளின் வளர்ச்சியைக் கெடுக்கும். முடிஞ்சா பால் கொடு. அதுவும் தண்ணீர் கலக்காமக் கொடுத்தாத்தான் பையனுக்குப் பசியடங்கும்.

நம் நாட்டில் மக்கட் தொகைப் பெருக்கம் மிக வேகமாக நடந்து வருகிறது. நிபுணர் கணக்குப்படி நாம் ஒவ்வொரு ஆண்டும் ஒரு ஆஸ்திரேலிய (நாட்டு ஜனத் தொகையை) நாட்டை உண்டு பண்ணி நம் நாட்டோடு சேர்த்துக்கொண்டிருக்கிறோம். இதைத் தடுத்தாக வேண்டும்.

சாரதா : பால் பவுடருன்னா!

டாக்டர் : அதுக்கும் நிறைய தண்ணீர் சேர்க்கக் கூடாது. ஒரு தேயிலைக் கரண்டி பால் மாவுக்கு ஒரு அவுன்ஸ் தண்ணீர் சேர்க்கலாம். அந்த மாதிரி ஒரு நாளைக்கு சுமார் 20 அவுன்ஸ் பால் கொடுக்கணும். அப்பத்தான் குழந்தைக்குப் போதும்.

இது தவிர, உனக்கு வசதியிருந்தா மல்டி வைட்டமின் டிராப்ஸ் என்கிற சொட்டு மருந்து வாங்கிக் கொடு. பாட்டில் வாங்கினா 20 நாளைக்குவரும். அதைத் தொடர்ந்து வாங்கிக் கொடுக்கலாம்.

அப்புறம் வாழைப்பழம், சாத்துக்குடி, ஆப்பிள் ஆகியவை கொடுத்தா ரொம்ப நல்லது. வயிற்றோட்டம் இருந்தாத் தவிர, மற்றப்படி பழங்களை எப்பவும் கொடுக்கலாம்.

சாரதா : சளி இருக்கிறப்போ?

டாக்டர் : தாராளமாகக் கொடுக்கலாம். உடம்பிலே சக்தியில்லாததால்தானே சளி பிடிக்குது! ஆகையினாலே பழங்களைக் கொடுக்கிறதிலே எந்தவிதத் தப்புமில்லே !

ஆமா என்ன, பையன் உடம்பு கொஞ்சம் சூடா யிருக்குது ?

சாரதா : எண்ணெய் தேச்சுக் குளிச்சி இரண்டு வாரம் ஆயிடுச்சு அம்மா ! போனதும் தலைக்கு ஊற்றினா சரியாப் போயிடும்.

டாக்டர் : சமையல் செய்வதற்கே எண்ணெய் வாங்கமுடியாதிருக்கும்போது ஏன் எண்ணெய் வாங்கி உடம்புக்குத் தேச்சி வீணடிக்கிறே ! அதனாலே ஒரு பயனும் கிடையாது, தோலைச் சுத்தமாக்குவது என்பதைத் தவிர. உடம்பைச் சுத்தமா வைச்சுக்கிறதுக்கு சீயக்காய்த் தூளையோ, சோப்பையோ போட்டுத் தண்ணீர் ஊற்றினாலே போதுமே !

சாரதா : நேரமாகுதும்மா ! எங்க வீட்டுக்காரருக்கு ஆபீசுக்குச் சாப்பாடு கொடுத்து அனுப்பணும் ! வர்றேன் டாக்டரம்மா !

டாக்டர் : இந்தா இந்தச் சீட்டிலே, மல்டி வைட்டமின் மாத்திரைகள், வைட்டமின்-சி மாத்திரைகள் கொடுக்கச் சொல்லி குறிச்சிருக்கேன். மருந்துக் கவுண்டரில் போய் வாங்கிக்கோ. தொடர்ந்து வந்து இரண்டு வாரத்திற்கு வாங்கிக்கோ. நான் சொன்ன பக்குவப்படி சத்துணவைக் கொடு! பையன் சீக்கிரம் தேறிடுவான்.

சாரதா : வரேன் டாக்டரம்மா.

மகளிர் பகுதி

'நம்முடைய உணவு முறைகளில் மாற்றம் வேண்டும்.'

இந்தக் கருத்து, பல்வேறு முறைகளில் நமக்கு எடுத்துரைக்கப்படுகிறது.

உணவு உற்பத்தியில் நம்நாடு இன்னும் தன்னிறைவை முழுமையாகப் பெறாததனால்— உணவு தானியங்களை இறக்குமதி செய்ய வேண்டிய இடர்ப்பாடுகளினால் இவ்வாறு சொல்லப்படுகிறது.

அரிசி, கோதுமை தவிர இதர தானியங்களை நாம் பயன்படுத்தி உணவு தயாரிக்க வேண்டும் என்பதாலும் சொல்லப்படுகிறது.

நாம் விரும்பி உண்ணும் உணவுகளில் போதிய ஊட்டச் சத்து இல்லை என்பதாலும் எடுத்துரைக்கப்படுகிறது.

பெரும்பாலான மக்கள் உண்ணும் உணவுகளில் உடலுக்குத் தேவையான போதிய சத்துக்கள் இல்லை என்பது உண்மையாகும்.

எனவே, நம் உணவு முறையில் மாற்றம் ஏற்பட்டால் நமக்கும் நல்லது. நாட்டுக்கும் நல்லது. வழக்கமான நம் உணவு முறைகளை அதிகச் செலவில்லாமலே மாற்றிக்கொள்ளலாம்.

எடுத்துக்காட்டாக, சர்க்கரை வள்ளிக்கிழங்கு, உருளைக்கிழங்கு, மரவள்ளிக்கிழங்கு, வாழைப்பழம் முதலியவைகளுடன் நிலக்கடலைமாவு மற்றும் இதர உணவு வகைகளைச் சேர்த்துக் கொண்டால் அதிக நன்மையுண்டாகும்.

இந்த உணவுகளில் மிகுதியான சுவையும் உடலுக்குத் தேவையான ஊட்டச் சத்தும் உண்டு. ஓர் ஆணுக்கு ஒரு நாளைக்குத் தேவையான 2,300 கலோரிகளையும் ஒரு பெண்ணுக்கு ஒரு நாளைக்குத் தேவையான 2,000 கலோரிகளையும் இந்த மாற்றுப் பொருள்கள் அளிக்கின்றன.

எனவே, புதிய உணவு முறைகளில் நாம் ஆர்வம் காட்டுவது முறையாகும்.

உணவு முறைதான் புதிதே தவிர உணவு வகைகள் புதியன அல்ல. பன்னெடுங்காலமாக வழக்கில் இருந்து வருவனதான். ஆனால், அவைகளுக்கு முக்கியத்துவத்தை அளிக்காமல் ஒதுக்கி வைத்து விட்டோம். அவைகளின் முக்கியத்துவத்தை

சமையல் மொழிகள்

தன் மனைவி கிரேக்க மொழியில் புலமை பெறுவதைக் காட்டிலும் அவள் நன்றாகச் சமைப்பதையே ஒருவன் விரும்புவான்.

டாக்டர் ஜான்சன்.

சமையல் என்றால் என்ன ? கொள்ளுப் பாட்டியின் சிக்கனமும், தற்கால விஞ்ஞானமும் பிரெஞ்சுக் கலை உணர்வும் அராபியர்கள் விருந்தோம்பலும் இருக்கவேண்டும்.

ஜான் ரஸ்கின்.

பெண்கள் தாங்களே சமையல் அறைக்குள் சென்று எல்லாவற்றையும் நேரில் கவனித்தால் ஒழிய, எந்த வீட்டிலும் நல்ல உணவு தயாரிக்க முடியாது.

பிஷர்.

சமையல் கலை வளர்ச்சி அடைந்த பின்னர் மனித சமூகம் இயற்கையாகத் தேவையானவற்றைக் காட்டிலும் இருமடங்கு அதிகமாகச் சாப்பிடுகிறது.

பிராங்க்ளின்.

சமையல் அறைக்குள் சென்று உணவு தயாரிக்காதவன், சமைத்த உணவை வேளாவேளைக்குப் பரிமாறாதவன், பெண் அல்லன்.

விவேக சிந்தாமணி.

யும் ஊட்டச் சத்தையும் உணர்ந்து புதிய மாற்றத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

கம்பு ரொட்டி

தேவையான பொருள்கள்:

கம்பு மாவு..	450 கிராம்.
உப்பு ..	1½ தேக் கரண்டி.
தண்ணீர் ..	1½ கோப்பை
வெண்ணெய், நெய் அல்லது எண்ணெய்.	30 லிருந்து 50 கிராம்

செய்யும் முறை:

1. மாவைச் சலித்து உப்பைச் சேர்க்கவும்.

2. சிறிது மாவைத் தனியாக வைத்து, தண்ணீர் ஊற்றி நன்ருகப் பிசைந்து கொள்ளவும்.

3. ரொட்டி மாதிரி தோசைக் கல்லில் தட்டி அவ்வப்போது நெய் அல்லது எண்ணெய்யை ஊற்றி எடுக்கவும்.

இப்படி எடுக்கக் கம்பு ரொட்டி மிகவும் சுவையானதாக இருக்கும். மேற்சொன்ன அளவில் செய்யப்படும் கம்பு ரொட்டியை நான்கு பேர் சாப்பிடலாம்.

சோளமாவு ரொட்டி

தேவையான பொருள்கள் :

சோளமாவு ..	450 கிராம்
உப்பு ..	1½ தேக் கரண்டி.
தண்ணீர் ..	1½ கோப்பை
நெய் ..	30 கிராம்

செய்யும் முறை.

கம்பு ரொட்டி மாதிரியே இதையும் தயாரிக்க வேண்டும்.

மேலே குறிப்பிட்ட அளவுப்படிச் செய்தால் ஆறு ரொட்டிகள் தயாரிக்கலாம்.

உளுத்தம்பருப்பு ரொட்டி.

தேவையான பொருள்கள் :

உளுத்தம்பருப்பு	..225 கிராம்
கோதுமை	..225 கிராம்
மல்லிப் பொடி.	..5 கிராம்
சுக்குப் பொடி.	..1 தேக் கரண்டி.
மஞ்சள் பொடி.	..1 தேக் கரண்டி.
மிளகாய்ப்பொடி.	..1 தேக் கரண்டி.
உப்பு	..தேவையான அளவு.
எண்ணெய்	..10 கிராம்
நல்ல நெய்	..10 கிராம்

செய்யும் முறை.

1. பருப்பை முதல் நாள் இரவு ஊறவைத்து மறுநாள் நன்ருக மாவுபோல் அரைத்துக் கொள்ளவும்.

2. எண்ணெய்யைச் சூடாக்கி, பருப்பு, மஞ்சள் பொடி, மல்லிப்பொடி, சுக்குப் பொடி, மிளகாய்ப் பொடி முதலியவற்றுடன் உப்பும் போடவும்.

3. சிறிது நேரம் வதக்கவும்.

4. மெதுவான சூட்டில் பருப்பு வேகும் வரை சமைக்கவும்.

5. நன்ருகக் கலந்து கீழே இறக்கி ஆறவைக்கவும்.

6. கோதுமை மாவுடன் கலந்து கெட்டியாக ஆகும்வரை வைக்கவும்.

7. அரைமணி நேரத்திற்குப் பிறகு சிறு சிறு உருண்டையாக ஆக்கவும்.

8. சப்பாத்தி மாதிரி, கல்லில் போட்டு வேகவிடவும்.

9. நெய்யைத் தடவிக் கல்லில் வதக்கவும்.

இந்த அளவில் செய்வதை நான்கு பேர் சாப்பிடலாம். அருமையாக இருக்கும்.

— அஞ்சனு

உங்களுக்குத் தெரியுமா ?

பள்ளியா பப்பாளியா ?

தஞ்சை மாவட்டத்தில் பல பள்ளிகளிலும், ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களிலும் பப்பாளி மரங்களும், முருங்கை மரங்களும் உள்ளன.

இதற்குக் காரணம், இந்த மரங்களைப் பரப்புவதில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. அந்தோணி காட்டும் ஆர்வமே! எந்த விழாவாளுலும், பப்பாளியும், முருங்கையும் நடுவதும் அதிலொரு நிகழ்ச்சியாக இருக்க வேண்டுமென்று அவர் விரும்புகிருர்.

பப்பாளிக்கும், முருங்கைக்கும் அதிக இடம் தேவையில்லை. வீட்டுக் கொல்லையிலோ அலுவலகத்தின் அருகினிலோ எங்கு வேண்டுமென்ருலும், நடலாம். பப்பாளிப் பழம், முருங்கைக் கீரை, முருங்கைக்காய் ஆகியவை சுவை மிகுந்த சத்து நிறைந்த உணவுப் பொருட்கள் என்பதே இதற்குக் காரணம்.

யார் இந்த ஐ.ஆர் ?

ஐ.ஆர். 8; ஐ.ஆர். 27 என்று பெயர் கொடுக்கிருர்களே அந்தப் பெயர்கள் எவ்வாறு வந்தன தெரியுமா ?

பிலிப்பைன்ஸ் நாட்டில் அனைத்துலக அரிசி ஆராய்ச்சி நிறுவனம் (Inter-National Rice Research Institute) உள்ளது. அங்கு கண்டுபிடிக்கப்பட்ட நெல் வகைகளுக்கு அதன் ஆங்கிலப் பெயரின் முதல் இரு வார்த்தைகளின் முதல் எழுத்துக்களைச் சேர்த்துக் கொள்கிருர்கள்.

நெய்யும் தொழிலுக்கு நிகரில்லை

தூத்துக்குடி முதல் டிம்பக்டு வரை பூமிப் பந்திலே தமிழ் மக்கள் எங்கெங்கு வாழ்கிருர்களோ, அவர்கள் இதயங்களில் எல்லாம் தங்கச் சிம்மாசனம் போட்டு அமர்ந்து செங்கோலோச்சிய அண்ணன்—நாடு மணக்க வந்த கற்பூரச் சொற்கோ—அந்தப் பேரறிஞர் பெருந்தகை துயிலும் கடற்கரை—மெரிஞ—சிங்காரச் சென்னையின் அழகுத் தொட்டில்—கடற்கரைப் பாதையின் எதிர்மருங்கில் ஓடி வந்து நிற்கிறது "ஜீப்" 'எழிலகத்தின்' முன்ஞல் !

'எழிலகம்'! தமிழ் கொஞ்சி விளையாடுகிறது ! நம் ஊனோடும் உயிரோடும் கலந்து விட்ட தமிழ், இன்று நான்மாடக் கூடங்களிலே—நல்லோர்கள் நாவினிலே—நல்லாட்சி நடைபெறும் டணிமனைகளிலே—பட்டி தொட்டிகளிலெல்லாம் அரசோச்சுகின்றது அந்தப் பிரம்மாண்டமான கட்டடத்தின்—எழில் கொஞ்சும் 'எழிலகத்'தின் படிக்கட்டுகளிலே ஏறி வலது பக்கம் திரும்புகிருேம். 'கைத்தறி இயக்குநர் அலுவலகம்' என்ற பெயர்ப் பலகை நம்மை 'வாருங்கள்' என்று அழைப்பது போல் ஒரு பிரமையைத் தோற்றுவிக்கிறது!

இயக்குநர் இல்லை. கூட்டு இயக்குநர் இருக்கிருர்! யார் என்று தெரிந்து கொண்டதும் 'வாருங்கள்' என்று கரங்கூப்பி வரவேற்புக் கூறுகிருர். வந்த காரியத்தை விளக்குகிருேம்.

அவர் ஆரம்பித்து விடுகிருர்............" கைத்தறித் தொழில் தமிழ் நாட்டின் பழைமையான தொழில். வேளாண்மைக்கு அடுத்தபடியாக முக்கியமான தொழில் " என்று கூறிவிட்டு "கைத்தறித் தொழில் பற்றி சில முக்கியமான தகவல்களைச் சொல்கிறேன். கொஞ்சம் புள்ளி விவரங்களாக இருக்கும். இருந்தாலும் முக்கியமான தகவல்கள்......" என்கிருர்.

" சொல்லுங்கள்....அவையும் முக்கியம் தானே...."

அவர் சில ரிகார்டுகளைத் தேடுகிருர். அறையின் சாளர வழியாக வெளியே கண்களை ஓட்டுகிருேம். அங்கே, வெளியே, கண்ணுக்கெட்டிய தூரத்திலே அறிஞரின் சமாதி.... சில ஆண்டுகளுக்கு முன்ஞல், இந்த நாட்டு மக்களின் துயர் களைய, ஏழை நெசவாளர்களின் கண்களிலே கண்ணீரைத் வழிந்தோடிய துடைக்க, ஆயிரமாயிரம் காளையர்கள் தங்கள் தடந்தோள்களிலே கைத்தறித் துணிகளைப் போட்டுக் கொண்டு வீதி வீதியாக விற்ருர்களே—அந்த அருமைத் தம்பிகளின் அண்ணன்—தமிழகத்தின் விடிவெள்ளி—அதோ படுத்துக் கொண்டிருக்கிருர் ! நம் கண்களில் நீர் கலங்குகிறது. அவருக்குத் தெரியாமல் கலங்கும் கண்களைத் துடைத்துக்கொண்டு பார்வையைத் திருப்புகிருேம்......

" நம் நாட்டில் மொத்தம் 25 இலட்சம் கைத்தறிகள் உள்ளன. இதில் நம் செந்தமிழ் நாட்டில் மட்டும் 5¼ இலட்சம் தறிகள் உள்ளன. இவற்றை நம்பி 20 இலட்சம் தமிழ் மக்கள் வாழ்வு நடத்துகின்றனர். ஆண்டொன்றுக்குச் சுமார் 48 கோடி ரூபாய் மதிப்புள்ள கைத்தறித் துணி உற்பத்தி செய்யப்படுகிறது......" சற்று நிறுத்திவிட்டுப் பின்பு தொடர்கிருர்!

" கைத்தறித் தொழில் பிரம் மாண்டமான தொழில் தான். ஆஞல், ஆலைத் தொழிலுட போட்டி போட முடியவில்லை. புதுப்புது டிசைன்கள் ஆலைகளில் தயாரிக்கப்பட்டு, மார்க்கெட் களில் குவியவே, கைத்தறித் து களால் ஈடு கொடுக்க முடி வில்லை. கைத்தறித் தொழிலி ஒரு தேக்கம். இந்தத் தொழி

நம்பியிருக்கும் இலட்சோப இலட்சம் குடும்பங்கள்—ஜீவ மரணப் போராட்டமே நடத்த வேண்டி வந்தது. எது எப்படியானாலும் இந்தத் தொழிலை நசியவிடக் கூடாது. இந்தஅவல நிலையைப் போக்கியே தீருவதென அரசு கங்கணம் கட்டிக்கொண்டு வேலை செய்தது.

'' ஒன்றை இந்தச் சந்தர்ப்பத்தில் நாம் மறந்து விடக் கூடாது. தாய்க்குலத்தை நாம் கையெடுத்துக் கும்பிட வேண்டும். தாய்மார்கள் கைத்தறித் துணிகளை ஆதரிக்காமல் இருந்திருந்தால்—புது மோகம் கொண்டு ஆலைத் துணிகள் பக்கம் திரும்பியிருந்தால்—இத்தொழில் தமிழகத்தில் அப்பொழுதே நசித்துப் போயிருக்கும். அந்த அவல நிலை ஏற்படாமல், அன்று தாய்க்குலம் தான் கைகொடுத்தது ; இன்றும் கை கொடுக்கிறது. அத்துடன், இத்தொழில் வளர மக்கள் தலைவர்கள் காட்டிய ஆர்வத்தையும் உழைப்பையும் குறிப்பிடாமல் இருக்க முடியாது.''

''கைத்தறித் திட்டத்தைக்கூட்டுறவுத் துறைமூலம்தான் செயல்படுத்த வேண்டும் என்று அரசு முடிவெடுத்தது. இன்று தமிழகத்தில் 1,000 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. இவற்றில் சுமார் 2·11 இலட்சம் தறிகள் செயல்பட்டுவருகின்றன. மொத்தம் உள்ள தறிகளில் 88 சத விகிதம் கூட்டுறவுச் சங்கங்களின் கீழ் இயங்கி வருகின்றன. தனிப்பட்ட நெசவாளர்களுக்குப் பங்குத் தொகைகள் கடனாக அளிக்கப்படுகின்றன. நல்ல நவீன இரகங்களை நெய்யும் பொருட்டு, நெசவாளர்களுக்குத் தேவையான நவீன உற்பத்திக் கருவிகள் வாங்க முக்கால் பங்கு மானியமும் கால் பங்கு கடனும் அளிக்கப்படுகின்றன. நூதன முறையில் நெய்வதற்காகப் புது முறைப் பயிற்சியும் அளிக்கப்படுகிறது.''

'' அது மட்டும் போதுமா ? துணி வாங்குபவர்களுக்கு ஓர் ஊக்கம், ஒரு தூண்டுதல் வேண்டாமா ? அதற்காகக் கைத்தறித் துணி விற்பனைத் தொகையில் தள்ளுபடி தரப்படுகிறது. மூலப் பொருள்கள் வாங்கக் குறைந்த வட்டியில் கடன் உதவியும், விற்பனையைப் பெருக்க விளம்பர மானியமும் அளிக்கப்படுகின்றன. நெசவாளர் குடியிருப்புகளும் கட்டப்பட்டுள்ளன. இதுவரையில் 2,683 வீடுகள் கொண்ட 32 நெசவாளர் குடியிருப்புகள் தமிழகத்தில் உள்ளன. இதற்கான செலவு ரூபாய் 128 இலட்சத்தை அரசு மானியமாகவும் கடனாகவும் கொடுத்துள்ளது.....

'' அத்துடன் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களிடையே சிக்கனம், சேமிப்புப் பண்புகளை உண்டாக்க, ஒரு புது முறைத் திட்டம், நம் தமிழகத்தில் மட்டும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. உறுப்பினர்கள் தங்கள் கூலியிலிருந்து ரூபாய்க்கு 6 காசு விதம் சிக்கன சேமிப்பு நிதிக்குச் செலுத்துவார்கள், அதற்கு ஈடாகச் சங்கம் 2 காசும், அரசு 4 காசும், மானியமாக அளிக்கும். இத்திட்டத்தின் கீழ் இதுவரையில் 8,500 நெசவாளர்கள், ரூ. 30 இலட்சம் சேமித்துள்ளார்கள்.''

'' நல்ல தரமான நூல் குறைந்த விலையில் கிடைக்க வேண்டுமல்லவா ? அதற்காக வேண்டி, கூட்டுறவுத் துறையில் 12 நூற்பாலைகளைத் தமிழக அரசு நிறுவியுள்ளது. சென்னை, தர்மபுரி, நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக, மற்ற எல்லா மாவட்டங்களிலும் மாவட்டத்திற்கு ஒன்று என்று இக் கூட்டுறவு நூற்பாலைகள் இயங்கி வருகின்றன.''

'' கூட்டுறவுத் துறையில் சேராத மற்ற நெசவாளர்களின் நலனைப் பாதுகாக்க '' கைத்தறி நிதிக் கார்ப்பரேஷன் '' ஒன்று 1964-லிருந்து இயங்கி வருகிறது. சென்ற ஆண்டில் மட்டும் 140 இலட்சம் ரூபாய் அளவுக்கு இந்நிறுவனம் கடனாக வழங்கியுள்ளது.

'' கைத்தறித் துணிகளுக்கு ஒரு கவர்ச்சி ஏற்பட்டதற்கே காரணம், காலத்திற்கேற்ப, வளர்ந்து வரும் நாகரிக உணர்வுகளுக்கேற்ப, டிசைன்கள் வந்ததால் தான். இம்மாதிரி புது இரகங்களை தயார் செய்வதற்கு வழி காட்டுவதற்காக கைத்தறி சேவா நிலையம் ஒன்றும் அரசினால் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இன்றைக்கிருப்பது நாளைக்குப் பிடிக்குமா என்று சொல்ல முடியாத உலகம் இது. புதுப் புது ஆசைகள், புதுப் புது விருப்பு வெறுப்புகள் உள்ள இந் நிலையில், ஆலைத்துணிகளுடன் ஈடு கொடுத்துக் கொண்டு, மார்க்கெட் சரிந்து விடாமல் சமாளித்துக் கொண்டு இன்று கைத்தறித் துணியும் நடைபோட முடிகிறது என்றால் என்ன காரணம் என்று நினைக்கிறீர்கள் ? பழம் பெருமை வாய்ந்த—சிறந்த கை நுணுக்கம் உள்ள தொழில் என்பது ஒரு புறமிருக்கட்டும்; கைத்தறித் துணிகள் தயாரிப்பதில், புதுப் புது டிசைன்களை உருவாக்குவதில் ஒரு புரட்சிகரமான மாற்றத்தைத் தோற்றுவித்தது தான் முக்கிய காரணம்.

''கண்ணைப் பறிக்கும் வண்ண வண்ண டிசைன்களை இன்று ஏராளமாகப் பார்க்கிறோம்.

இப்படிப்பட்ட புதுப் புது இரகங்களை நெய்வதில் பயிற்சி அளிப்பதற்காக வேண்டி ஒரு பயிற்சித் திட்டம் கடந்த பிப்ரவரி 15-ம் தேதியிலிருந்து தமிழகம் முழுவதும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. சென்னை, நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக மற்ற எல்லா மாவட்டங்களிலும் மாவட்டத்திற்கு ஒன்று என்று ஒரு பயிற்சி நிலையம் துவக்கப்பட்டுள்ளது.

'' செங்கை மாவட்டத்தில் காஞ்சிபுரத்திற்கு இரண்டு மைலில் உள்ள அய்யம்பேட்டை என்ற ஊரில் உள்ளது இந்தப் பயிற்சி நிலையம். காஞ்சிபுரம் நகர்தான் கைத்தறித் தொழிலின் இதயம்........ இந்த அய்யம்பேட்டை இருக்கிறதே..அந்த ஊர் பூராவுமே நெசவாளர் குடும்பங்கள்தான்.. ஒருத்தர் பாக்கி விடாமல் ஊர் மக்கள் அத்தனை பேரும் நெசவுத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் தான் ! என்ன சொன்னாலும் உங்களுக்கு ரசிக்காது. நேரில் சென்று பார்த்தால்தான் தெரியும் !''

'' கட்டாயம் போகிறோம் !''

'' ரொம்ப மகிழ்ச்சி....அய்யம்பேட்டையில் உள்ள பயிற்சி நிலையத்தையும் போய்ப் பாருங்கள். இப் பயிற்சித் திட்டத்தின் கீழ் 2,160 நெசவாளர்கள் பயிற்சி பெறுவார்கள். பயிற்சிக் காலத்தில் பயிற்சி பெறுபவர்களுக்கு மாதம் 100 ரூபாய் உதவித் தொகை வழங்கப்படுகிறது. பயிற்சிக் கால அளவு 45 நாட்களாகும். இப் பயிற்சித் திட்டத்தில் புடவை இரகங்கள் சேர்க்கப்படவில்லை. படுக்கை விரிப்புகள், சமுக்காளங்கள், துண்டுகள், கைத் துண்டுகள், சட்டைத் துணிகள், முதலிய இரகங்களில் புதுப் புது டிசைன்களை மக்களின் விருப்பத்திற்கேற்ப, கண்ணையும், கருத்தையும் கவர்கின்ற வகையில் நெய்வதற்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சியாளர்களுக்கு வேண்டிய நூதனக் கருவிகள் மானியமாகவும், கடனாகவும் வழங்கப்படுகின்றன. இது ஒரு புதிய திட்டம். 15-2-70-லிருந்து செயல்படுத்தப்படுகிறது.''

''எல்லாம் சரி....கைத்தறியில் பட்டு இரகங்களைத் தயார் செய்வதற்கான மூலப் பொருள்கள்—பட்டு நூல், சரிகை போன்றவை தமிழகத்தில் கிடைப்பதில்லையாமே ? வெளி மாநிலங்களிலிருந்து வாங்குகிறார்களாமே....?''

'' நீங்க சொல்வது ரொம்பச் சரி.. பொதுவாகக் கைத்தறித் தொழிலில் எல்லாத் துறைகளுக்கும் வேண்டிய இரசாயனப் பொருள்களும், சாய மருந்து

களும் மற்ற மாநிலங்களிலிருந்தும் அயல் நாடுகளிலிருந்தும் வாங்கப்படுகின்றன. இதனால் விலையில் அடிக்கடி மாற்றமும் தட்டுப்பாடும் ஏற்படுகின்றன. இதையெல்லாம் தவிர்க்கவேண்டி, இவற்றையெல்லாம் தமிழ் நாட்டிலேயே உற்பத்தி செய்யும்வகையில் இரண்டு ஆலைகளை ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுத்துவரு றது. இதில் இன்னொரு விசித் ரம் ! பட்டு இரகங்களுக்கு வேண்டிய சரிகை பூராவையும் மராட்டிய மாநிலத்தில் உள்ள சூரத்திலிருந்துதான் வாங்க வேண்டியுள்ளது. இது ஒரு பெரிய சிக்கல். இதற்காகக், குறைந்த விலையில் சரிகைகள் இங்கேயே கிடைப்பதற்காக, 25 இலட்சம் ரூபாய் செலவில் காஞ்சிபுரத்தில் சரிகை உற்பத்தித் தொழிற்சாலை ஒன்றினை நிறுவ அரசு ஏற்பாடு செய்து வருகிறது. மேலும் முக்கியமான மூலப் பொருளான பட்டு நூல் கிடைப்பதில் ஏற்படும் சிக்கல்களைச் சமாளிக்கவும் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

'' ஆலைத் துணி, விசைத் தறித் துணி ஆகியவற்றுடன் கைத்தறித் துணி ஈடு கொடுக்க வேண்டியுள்ளது. இதற்காகக், கைத்தறித் துணி சில்லறை விற்பனைக்கு ரூபாய்க்கு 5 பைசாவும் மொத்த விற்பனைக்கு ரூபாய்க்கு 3 பைசாவும் தள்ளுபடி ஆண்டு முழுவதும் கொடுப்பதற்காக அரசு மானியம் அளித்து வருகிறது. தீபாவளி, பொங்கல், கைத்தறி வார விழா ஆகிய சிறப்புக் காலங்களில் ரூபாய்க்கு 10 பைசா வீதம் தள்ளுபடி வழங்கப்படுகிறது. இத் திட்டத்தின் கீழ் 1968-69-ல் 85 இலட்சம் ரூபாயும் 1969-70-ல் 90 இலட்சம் ரூபாயும் மானியமாக வழங்கப்பட்டன...''

'' இன்னும் ஒன்றினைச் சொல்லிவிட வேண்டும். நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களைப் பலப்படுத்த அவற்றில் நேரடியாக அரசே பங்குகள் எடுத்துக்கொள்ளும் திட்டம் ஒன்று தமிழக அரசால் 1967-68-லிருந்து அமுலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. இந்த மூன்றாண்டுகளில் 18 இலட்சம் ரூபாய் அரசினால் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் பங்குகளாக முதலீடு செய்யப்பட்டுள்ளது.

'' கைத்தறித் துணி விற்பனையில் தேக்கம் ஏற்படும் காலங்களில் அரசு முன்வந்து தமிழ் நாடு சங்கத்திற்குக் கடன் அளிக்கிறது. இந்த வகையில் தற்காலக் கடனாக இல்லாமல் நீண்ட காலக் கடனாக 75 இலட்சம் ரூபாயை அரசு 1968-ல் தமிழ் நாடு நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு அளித்துள்ளது. கைத்தறித் தொழிலின் வளர்ச்சியில் அரசு தனிப்பட்ட அக்கறையுடன் திட்டங்களைச் செயல்படுத்துகிறது. எல்லாரும் தெரிந்து கொள்ளட்டுமே என்பதற்காகத்தான் சொன்னேன்.''

'' மிக்க நன்றி.. வணக்கம் '' என்று கரங்கூப்பி விடைபெற்றுக்கொண்டு புறப்படுகிறோம்....

நிருபர்: உங்கள் இளமையின் ரகசியமென்ன ?

நடிகை: நான் பொய்ப்பல் மாட்டியிருக்கிறேன். பொய் முடி அணிந்திருக்கிறேன்.

கல்லூரியில் யாரைச் சேர்க்கணும்? உங்க பையனையா ?

இல்லே சார் ! என்னைத்தான் !



அச்சமில்லை! அச்சமில்லை!

டாக்டர் பி. ஆர். பாலகிருஷ்ணன்

டாக்டர் விவேகானந்தன்;— அடேடே! என்னங்க இங்கே வந்து உட்காந்திருக்கீங்க ?

சுந்தரம் :—ஆமாம் விவேக் ! உனக்காகத்தான் காத்திருக்கிறேன். பெரிய டாக்டருடன் நீ நோயாளிகளைப் பார்க்கப் போயிருப்பதாகச் சொன்னார்கள். இப்போது நீ உதவி சர்ஜனாகத்தானே இருக்கிறாய்?

விவேக் :—இல்லே. நான் இப்போது லீவு எடுத்துக் கொண்டு எம். எஸ். (M. S.) படித்துக் கொண்டிருக்கிறேன்.

சுந்தரம் :—அப்படியா ரொம்ப மகிழ்ச்சி. உன்னிடம் என் சந்தேகங்களைத்தீர்த்துக்கொள்வது எளிதாகிவிடும் என்று நினைக்கிறேன். என் மனத்தில் ஒருமிகப் பெரிய வேதனை அரித்துக் கொண்டிருக்கிறது. விவேக்......ஆமாம் மிகப் பெரிய வேதனை !

விவேக் :—என்ன இப்படிக் கண் கலங்குகிறீர்கள் ? வாருங்கள், என் விடுதி அறைக்குப் போய் அமைதியாக உட்கார்ந்து பேசலாம்.

(விடுதியறையை அடைகின்றனர்)

விவேக் :—இந்தாருங்கள் ! நீங்கள் முதலில் இந்தக் குளிர்ந்த பானத்தைச் சாப்பிடுங்கள். அப்புறம் நாம் பேசலாம்.

சுந்தரம் :—எதற்கப்பா இதெல்லாம் ? ஏன் இப்படிச் சிரமப்பட்டுக் கொள்கிறாய் ? நீ உட்கார். என் சந்தேகங்களைத் தெளிவாக்கிக் கொள்ள மட்டுமல்ல, ஒரு உயிரின் வேதனையைக் குறைக்கவும், ஏதாவது நல்ல வழி கிடைக்குமா என்பதற்காகவுமே நான் வந்திருக்கிறேன். எல்லாம் என் பிள்ளை ரமணனைப் பற்றித்தான்!

விவேக்:—ரமணனுக்கு ஏதாவது உடம்பு சரியில்லையா ? அவன் பள்ளியிறுதித் தேர்வில் நல்ல மார்க் வாங்கித் தேர்ச்சியடைந்திருக்கிறான். கல்லூரியில் சேருவதற்குள், உடம்பு சற்றுத் திடமாகவேண்டுமே என்று குடும்ப டாக்டர் அரவிந்தனிடம் அழைத்துச் சென்றேன்.

விவேக் :—அவர் என்ன சொன்னார் ?

சுந்தரம்—அவர்ஏதாவது டானிக் எழுதித் தருவார் என்று நினைத்துத்தான் போனோம். ஆனால் அவர் சொன்னதோ எங்களிருவருக்குமே பேரிடியாக இருந்தது.

விவேக் :—அப்படி என்ன சொன்னார்?

சுந்தரம் :—ரமணனின் இருதயத்தில்ஏதோ 'மர்மர்'கேட்பதாகவும், அது பிறவியிலேயே அமைந்த இருதயக் கோளாறாக இருக்கலாம் எனவும் கூறி ஜெனரல் ஆஸ்பத்திரிக்குப் போகும்படியும் கூறினார். இங்கு தான் அவனுக்கு என்ன வியாதியெனஆராய்ந்து தேர்ந்து சிகிச்சையை நிர்ணயிப்பார்கள் என்றுகூறினார். எனக்கென்னவோ அவர் தைரியம் கூறியும் சமாதானமடைய முடியவில்லை. யோசித்துப்பார் விவேக் !

வி :—டாக்டர் அரவிந்தன் கூறியபடி ஜெனரல் ஆஸ்பத்திரிக்கு அழைத்து வந்தீர்களா ?

சு :—ஆம் ! அழைத்துச் சென்றேன். அங்கு டாக்டர்கள் நீண்ட நேரம் பார்த்து விட்டு ஏ.எஸ்.டி. என்று குறிப்பிட்டார்கள். ஏ.எஸ்.டி. என்றால் என்ன விவேக் ?

வி :—ஏ.எஸ்.டி. என்றா சொன்னார்கள் ? Atrial Septal Defect.— அது பிறவியிலேயே அமைந்து விடுகிற இருதயக் கோளாறுகளில் ஒன்றுதான். தனித்தனியாகப் பிரிக்கப்பட்டிருக்க வேண்டிய இருதய மேல் அறைகளின் நடுச்சுவர் பூரணமாக ஒருதடுப்பாக நிற்காமல், அரை குறையாகநின்று விடுகிறது. இப்படி அமையும் துவாரத்தின் வழியாக இரத்தம் இடது பக்கத்திலிருந்து, வலது பக்கத்திற்கு வந்து பாய்ந்து கலந்தவாறு உள்ளது. இந்த வியாதி கொண்ட அநேகரை நான் பரிசோதித்திருக்கிறேன்..... அப்புறம் ! வேறு என்ன சொன்னார்கள் ?

சு :—அவர்கள் அடுத்த வாரம் மார்பு சிகிச்சைப் பிரிவுக்கு (Thorasic) என்னைப் போகும்படிக் கூறினார்கள். பையனுக்கு ஏதாவது ஆப்ரேஷன் செய்ய வேண்டும் என்று சொல்லி விட்டால் என்றால் அந்தச் செய்தியைத் தாங்கிக் கொள்ளவே முடியாது.

வி :—நீங்கள் முதலில் கவலைப்படுவதையும், பயப்படுவதையும் விட்டு விடுங்கள். பின்



நான் சொல்வதைப் போல் செய்யுங்கள். அடுத்த வாரம் அவர்கள் குறிப்பிட்ட தினத்திலேயே 'தொராசிக்' பிரிவுக்குச் சென்று காட்டுங்கள்;

சு :—அங்கு போனால் அவர்கள் என்ன செய்வார்கள்

வி :— பூரணமாகப் பையனைச் சோதித்து விட்டுப்பின் தேவையானால் உள்ளே சேர்த்து 'ரத்தப் பரிசோதனை', 'சிறுநீர் பரிசோதனை' முதலான அடிப்படைப் பரீட்சைகளை எல்லாம் முடித்து விட்டு, ஃப்ளூராஸ்கோப்பி (Fluroscopy) வீனஸ் பிரஷர் (Venus Pressure) சர்குலேஷன் டைம் (Circulation time) எலக்ட்ரோ கார்டியோகிராபி (Electro Cardiography) கார்டியாக் கத்தீட்ரைசேஷன் (Cardiac Catheterisation), ஆஞ்சியோ கிராபி (Angiography) முதலானவற்றுள் தேவையானவற்றைச் செய்து இன்ன வியாதிதான் எனச் சந்தேகமறத் தேர்ந்து, பின் இதற்கு ஆபரேஷன் தேவையா, ஆபரேஷன் செய்வதனால் எவ்வளவு தூரம் நன்மை ஏற்படும், செய்யாவிட்டால் பின்னால் என்னென்ன கெடுதல்கள் நேரக் கூடும் என்பதையெல்லாம் ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வருவார்கள்.

சு :—ஆபரேஷனா ? அதைச் செய்யாமல் வேறு விதமாகச் சிகிச்சை செய்யக்கூடாதா ?

வி :—ஒரு மகன் என்ற முறையில், ஆபரேஷன் என்றதும் தாங்கள் எப்படிக் கவலையுடன் இந்தக் கேள்வியைக் கேட்கிறீர்களோ, அதை விட அதிகப் பொறுப்போடும் கவலையுணர்வோடும் ஓர் உயிருக்கு எத்தனை அதிக நன்மை அளிக்க முடியுமோ அத்தனை நன்மைகளையும் அளிக்க வேண்டுமே என்று தம்மையே வருத்திக்கொண்டு டாக்டர்கள் தங்கள் கடமையை ஆற்றுகிறார்கள்.

சு :—இருதயத்தில் ஆபரேஷன் என்றாலே எனக்கு நடுக்கமாக இருக்கிறதே.........

வி:—இதய ஆபரேஷன் என்றால் அஞ்சுவதற்கு ஒன்றுமேயில்லை. கடந்த முப்பதுவருட காலத்தில் இருதய சிகிச்சை வளர்ந்ததுபோல் வேறு எந்தத்துறையுமே வளர்ந்ததில்லை எனச் சொல்லலாம். இருதயத்தில் இன்ன கோளாறுகள் என்று அறிவதற்கான முறைகளும் கருவிகளும் மயக்கமடையச் செய்வதற்கான துறைகளில் உண்டான முன்னேற்றமும் அறுவைச் சிகிச்சைக்குப் பின்பு தொடர்ந்து அளிக்கப்படும் விசேடக் கவனிப்பும் இந்த இருதய ஆபரேஷனை ஓர் அபாயமற்ற முறையாக மாற்றிவிட்டன.

அதனால் முப்பது வருடங்களுக்கு முன்பு தவழ முயலும் சிறு குழந்தை போலிருந்த இந்த இருதய அறுவைச் சிகிச்சை முறை வியத்தகும் வண்ணம் வளர்ந்திருக்கிறது.

சு :—ஆனால் மேல் நாடுகளில் இருப்பது போல் இதற்குரிய திறமைமிக்க சர்ஜன்களும், மற்ற ஆபரேஷனுக்கான கருவிகளும், வசதிகளும் உள்ளனவா, இங்கு ?

வி :—என்ன அப்படிச் சொல்லி விட்டீர்கள்? இந்தஇருதய ஆபரேஷன் துறையில் தன்னையே அர்ப்பணித்துக் கொண்ட டாக்டர் சதாசிவம் இருக்கிறாரே ! அத்தகையவரும், அம்மருத்துவருக்கு உறுதுணையாக உழைத்து வரும் மருத்துவக் குழுவினரும், சென்னை மாநிலத்திலேயே இன்று முதலாக இருந்து வரும் சென்னை அரசினர் பொது மருத்துவமனைக்கு (Government General Hospital) ஒரு தனிச் சிறப்பளிக்கின்றனர்.

இது குறித்துத் தமிழகம் பெருமைப்படுகிறது.

வி :—இருதய நடுச்சுவர் சரிவர இல்லை என்றார்களே, இரத்தம் நிறைந்து இருதயம் துடிக்கும் போதே அந்த துவாரத்தை எப்படிச் சரி செய்து மூடுவார்கள் ?

வி :—உலகம் முழுவதும் பிரபலமாகி வரும் இருதய சிகிச்சையை (Open Heart surgeory) நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள் என்று நினைக்கிறேன். உடல் முழுவதிலுமிருந்தும் இருதயம் நோக்கித் திரும்பி வரும் அசுத்த இரத்தத்தை இருதயம், நுரையீரல் ஆகியவற்றுக்குச் செல்ல விடாமல், செயற்கையாகத் திசை திருப்பி பம்ப் ஆக்ஸிஜனேட்டர் (Pump oxygenator) என்ற ஒரு கருவிக்குள் செலுத்



தச்சு, கருமார் வேலைப் பயிற்சி

பயில்வோர் தேவை

இடம் :—கிராம விரிவாக்கப் பயிற்சி நிலையத் தொழிற்கூடங்கள்: தே. கல்லுப்பட்டி, பவானிசாகர், பட்டுக்கோட்டை, சத்ய விஜயநகரம், கிருஷ்ணகிரி.

பயிற்சிக் காலம் :—ஓர் ஆண்டு.

தேவைகள் :—(அ) தமிழ் பேச, படிக்க, எழுதத் தெரிய வேண்டும்.

(ஆ) தச்சு அல்லது கருமான் வேலையில் குறைந்த அளவு மூன்று ஆண்டுகள் அனுபவம் இருக்கவேண்டும்.

உதவித் தொகை :—மாதம் ரூ. 45 (ரூபாய் நாற்பத்தைந்து)

விண்ணப்பித்தல் :—விண்ணப்பதாரரின் பெயர், தகப்பனார் பெயர், முகவரி, பிறந்த தேதி, படிப்புத் தகுதி, தச்சு அல்லது கருமார் வேலையில் உள்ள அனுபவம் குறித்து "கிராம வளர்ச்சி இயக்குநர் அலுவலகம், குறளகம், சென்னை-1" என்ற முகவரிக்கு செப்டம்பர் 20-ஆம் நாளுக்குள் அனுப்ப வேண்டும்.

பயிற்சி முடித்ததும் பயிற்சி பெற்றோர் தங்களுடைய கிராமத்தில் தொழிற்பட்டறை அமைத்துக்கொள்ள வேண்டும். இதற்கு வேண்டிய உதவிகள் செய்யப்படும். பயிற்சிக் காலத்தில் மாதம் ஒன்றுக்கு உதவித் தொகை ரூ. 45-ம் சீருடையும் வழங்கப்படும்.

ஜே. எச். எஸ். பொன்னையா,
கிராம வளர்ச்சி இயக்குநருக்காக.

துவார்கள். இந்தக் கருவியை இருதய சுவாயந்திரம் (Heart Lung Machine) என்றும் கூறுவதுண்டு.

அங்கு இரத்தத்தைச் சுத்தப்படுத்திப் பின் அதைச் சுத்த இரத்தத்தை ஏற்றுச் செல்லும் இரத்த நாளங்களில் மீண்டும் சேர விடுகிறார்கள். அப்போது நோயாளியின் இருதயமும், நுரையீரலும் தாற்காலிகமாக ஓய்வு பெறுகின்றன. இருதயம் ஓய்ந்த அந்நிலையில்-இருதயத்தில் அறுவை சிகிச்சை செய்வது எளிதாகி விடுகிறது. எனவே இருதய நடுச்சுவரில் காணப்படும் துவாரங்களையோ மற்றும் பிறப்பிலேயே ஏற்பட்ட, அல்லது பின்னால் வியாதியால் தோன்றிய, வேறு விதமான குறைபாடுகளையோ அறுவைச் சிகிச்சை மூலம் சீரிய முறையில் சரி செய்வது சாத்தியமாகிறது.

ஆரம்ப நாட்களில் எல்லாம் இயங்கும் இருதயத்திலேயே அவசரம், அவசரமாக அறுவை சிகிச்சை செய்ய முயன்று, செய்து, நிறையத் தோல்விகளைக் கண்டனர். ஆனால் தற்போது இக்குறைபாடுகள் பெரிதும் நீக்கப்பட்டுவிட்டன. உடல் திசுக்களையும், இருதயத்தையும் செயற்கை முறையில் குளிர்வித்து (Hyphothermia) தேவையான நேரங்களில் இம்முறையைச் சேர்த்து, மேலும் சில அனுகூலங்களைக் கண்டனர்.

:— அறுவை சிகிச்சை முடிந்த சில மணி நேரங்களிலோ, அல்லது தொடர்ந்து வரும் சில நாட்களிலோ ஆபத்து நேரலாம் என்கிறார்களே....?

:—அதற்கென்றே விசேஷ வைத்திய வசதிகள் (Intensive Care Unit) அளிக்கப்படுகின்றன. இரவு பகல் எந்த நேரமும் டாக்டர்களும், நர்சுகளும் நோயாளியின் அருகிருந்து இதயத் துடிப்பு, இரத்த அழுத்தம் முதலியவற்றைத் தொடர்ந்து கவனித்து வருகிறார்கள். இருதயத் துடிப்பில் ஏற்படும் மாறுதலை உடனுக்குடன் டாக்டர்களுக்கு அறிவிக்க இ.சி.ஜி. மானிட்டரிங் (E. C. G. Monitoring) தொடர்ந்து வேலை செய்கிறது. இருதயத் துடிப்பு கட்டுப்பாடின்றி ஒரு குறிப்பிட்ட அளவைத் தாண்டி விட்டாலோ, அல்லது நின்று விட்டாலோ, அல்லது முறையின்றிப் படபடத்தாலோ, அதை இயற்கையான நிலைக்குக் கொண்டு வர கார்டியோ வர்ட்டர் (Cardio-Vertor) அருகிலேயே இருக்கும். இது தவிர ஆபத்து நேரங்களில் அதைத் தடுக்க, எண்ணற்ற உயர்ந்த மருந்துக்கள் உள்ளன. நீங்கள் கவலைப் பட வேண்டாம். ரமணனுக்கு ஒரு நீண்ட பயனுள்ள வாழ்வு காத்திருக்கிறது என்பதில் சற்றும் ஐயமில்லை.

சு :—வருகிறேன் விவேக்! எத்தனையோ வேதனையோடு வந்தேன். இப்போது ஒரு திருப்தியோடு செல்கிறேன். நீ கொடுத்துள்ள நம்பிக்கை ரமணனுக்குப் புத்துயிர் அளிக்கட்டும்! *

வருந்துகிறோம்

முன்னாள் முதலமைச்சர் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் அவர்கள். 25-8-70 அன்று இயற்கை எய்தினார்கள், அன்னாரின் மறைவுக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது 'தமிழரசு'.

வண்ணப் படங்களில்

* திருச்சியில் நிலமில்லாத ஏழைகட்கு 8-8-70 அன்று முதலமைச்சர் நிலப்பட்டாக்களை வழங்கினார்.

* சமூக நலக் குறைந்த காலப் பயிற்சித் திட்ட விழா சிறுவர் அரங்கத்தில் 1-8-70 அன்று நடைபெற்றபொழுது சர்தாரிணி உஜ்ஜல் சிங், பயிற்சியாளர்களுக்குச் சான்றிதழ்களை வழங்கினார்.

* அரசு ஊழியர்களுக்கான குறைந்த வாடகை வீடுகளை சிவகங்கையில் 10-8-70 அன்று முதலமைச்சர் திறந்துவைத்தார். அமைச்சர்கள் திரு. என். வி. நடராசன், திரு. எஸ். மாதவன், திரு. கே. வி. சுப்பையா முதலியோரும் கலந்துகொண்டனர்.

* சமூக நலக் குறைந்த காலப் பயிற்சியாளர்களுக்கு வேளாண்மைத் துறை அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து பரிசுகளை வழங்கினார்.

* கல்வியமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் 24-7-70 அன்று ராஜாஜி மன்றத்தில் சிறுவர் கலைக் களஞ்சியத்தின் 2-ஆம் தொகுதியை வெளியிட்டார்.

* மன்னார்குடியில் 7-8-70 அன்று நிலப் பட்டாக்களை நிலமில்லாதவர்களுக்கு முதலமைச்சர் வழங்கினார்.

* மைய அரசின் சாலைப் பாதுகாப்புக் குழுவினர் பொதுப் பணித் துறை அமைச்சர் திரு சாதிக்பாட்சா அவர்களை 7-8-70 அன்று சந்தித்தனர்.

* டி. ஐ. சைக்கிள் தொழிற்கூடத்தில் 'கேர்' திட்டத்தின்படி சத்துணவுப் பொட்டலங்களை அமைச்சர் திரு. வேழவேந்தன் வழங்கினார்.



நீங்கள் சந்தாதாரா? இல்லையேல் இன்றே சந்தா அனுப்புங்கள் !

உலக அறிவை ஒருங்கே பெற உதவும் உலகைக் காட்டும் பலகணி

“யுனெஸ்கோ கூரியர்” (தமிழ்)

* யுனெஸ்கோவின் உயரிய குறிக்கோள்களையும் அரிய சாதனைகளையும் விளக்கும் ஒப்பற்ற மாத இதழ்.

* கல்வி, விஞ்ஞான, கலாச்சாரத் துறைகளில் அகில உலகமும் அடைந்து வரும் வளர்ச்சியை எடுத்துக் காட்டும் கருத்துக் களஞ்சியமான கட்டுரைகளும் சுவையூட்டும் செய்திகளும் கொண்ட வண்ணமிகு இதழ்.

* எளிய, இனிய, தெள்ளுதமிழ் நடை-பக்கத்துக்குப் பக்கம் அரிய படங்கள் - கவர்ச்சியூட்டும் அழகிய அமைப்பு - கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தூட்டவல்ல அழகுமிழும் வண்ண இதழ்.

* பலதுறை அறிவும் அனைவருக்கும் கிடைக்கப் பன்னிரண்டு உலக மொழிகளில் வெளிவரும் அறிவு விருந்து.

* அகில உலகப் பிரச்சினைகளை நடுநிலைமையில் அணுஅணுவாக அறிந்து கொள்ள உதவும் ஒரே பன்னாட்டுத் தமிழ் இதழ் இதுவேயாகும்.

* எம்மொழியினரையும் எந்நாட்டவரையும் ஒருங்கே கவர்ந்து ஒன்றிணைக்கும் வனப்பு மிகு வண்ண இதழான இதன்,

ஆண்டுச் சந்தா ரூ. 10-50 மட்டுமே
கல்வி நிலையங்களுக்குச் சலுகைச் சந்தா ரூ. 9-50

தமிழ்ப் பதிப்பு வேண்டுவோர் எழுதுக:

தென்மொழிகள் புத்தக டிரஸ்ட்,
458, பூந்தமல்லி நெடுஞ்சாலை.
சென்னை - 10 (தமிழ்நாடு)

“வீடு, நிலம், மூன்றுவேளைச்சாப்பாடு இல்லாமல் கோடிக் கணக்கில் நாட்டில் இருக்கிறார்கள். இந்தப் பிரச்னையைத் தீர்க்காமல் இருந்தால் ஜனநாயகத்திற்கு ஆபத்துவரும்.

அடிப்படைப் பிரச்னைகளை ஐந்தாண்டுகளுக்குள் தீர்ப்பது என்று திட்டமிட்டு முயற்சி எடுக்க வேண்டும். அப்படிக் காலக்கெடு நிர்ணயித்தால்தான் ஜனநாயகத்தையும், சுதந்திரத்தையும் பாதுகாக்க முடியும்.”

—கே. ஆர். நல்லசிவம்,
சம்யுக்த சோசலிஸ்ட் கட்சி.

''இந்த நாடு நாம் நினைத்த அளவு இன்னும் முன்னேறவில்லை. வறுமையைக் களையக் கெடு நிர்ணயித்துப் பணியாற்ற வேண்டும். தமிழக அரசும் அத்தகைய பணியில் ஈடுபடுகிறது ஆகவே எதிர்க்கட்சிகள் கிளர்ச்சிகள் நடத்துவதைத் தற்காலிகமாக ஒத்திவைத்து வறுமையைப் போக்கும் தமிழக அரசின் நடவடிக்கைகளில் ஒத்துழைக்க வேண்டும்”.

—எஸ். எஸ். ராமசாமிப்
படையாச்சி,
உழைப்பாளர் கட்சி.

“தமிழக அரசு ஏழைமக்களின் துயர் துடைக்க வேகமாகச் செயல்படுகிறது. இந்த நிலை பலர் கண்களுக்குத் தெரியவில்லை.

ஆனால் நாம் அவர்களுக்குச் சொல்லுவோம். இந்தத் தமிழகத்தில்தான் இந்தியாவைக் கடைத்தேற்றும் வழி பிறக்கப் போகிறது. இந்த நாட்டிற்கான தலைமை இங்கேதான் உருவாகப்போகிறது.

இந்திய வரலாற்றில் கட்டபொம்மன், வ.உ.சி., புலித்தேவன் போன்றவர்கள், முதல் இடம் பெற முயற்சி எடுக்க வேண்டும்,”

—மூக்கையா தேவர்
பார்வர்டு பிளாக்

“வகுப்புக்கலவரம்இந்தியாவில் நடந்தது பற்றி வெளிநாட்டில் கூட வருத்தத்தோடு கேட்டார்கள். ஆனால், அப்போதெல்லாம் தமிழகத்தில் அது போன்று இல்லை என்பதை எண்ணி நான் மகிழ்ச்சியடைந்தேன். நாம் வேறு எதைச் சாதிக்காவிட்டாலும் ஜாதி மத மனப்பான்மையை ஒழிப்போம் என்று விரதம் எடுத்துக்கொள்ள வேண்டும்.

வகுப்பு வெறியை வகுப்புத் துவேஷத்தை இறக்குமதி செய்ய நினைக்க எந்தக் கூட்டத்திற்கும் வள்ளுவன் பிறந்த தமிழகத்தில் இடமில்லை.

வகுப்புக் கலவரங்கள் வேங்கடத்திற்கு வடக்கே—விந்தியத்திற்கு அப்பால் இருக்கட்டும். அதை இங்கே இறக்குமதி செய்ய யாருக்கும் உரிமை இல்லை. அப்படி யாராவது செய்தால் அதை மூன்றரைக் கோடித் தமிழர்களின், 7 கோடிக் கரங்களும் எதிர்க்கும்.”

சிலம்புச் செல்வர்
—ம. பொ. சிவஞானம்.

“விடுதலைப் போராட்டத்தில் தியாகம் செய்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தவே நாம் கூடியுள்ளோம். நாடு முன்னேற வேண்டும். இதில் சர்ச்சை இல்லை. ஜனநாயகம் நிலைக்க வேண்டும். இதை மறுப்பார் இல்லை. யார் பாடுபடுவது என்பதுதான் பிரச்னை.

அரசியல் சட்டத்திற்கு விசுவாசமாக நடப்பேன் என்று பிரமாணம் செய்துவிட்டு அதை உடைப்போம் என்று சொல்கிறவர்களும் நாட்டில் இருக்கிறார்கள். நாட்டில் ஜனநாயகம் காப்பாற்றப்பட வேண்டும்.”

—கே. விநாயகம்
காங்கிரஸ் கட்சிக் கொறடா.

''பிறருடைய சுதந்திரத்திற்கு ஊறு செய்யாமல் நமது சுதந்திரத்தைப் பாதுகாக்கவேண்டும். பிற எவருக்கும் தீங்கு இல்லாமல் அறவழியில்—அற நெறியில் நின்று சுதந்திரத்தைப் பாதுகாக்க வேண்டும்.

வன்முறைக்கு அஞ்சாமல் அதை வெல்ல முயலும் இந்த அரசுக்கு நாம் முழுத் துணையாயிருக்க வேண்டும். சட்டம், அமைதி நிலவ முழு ஆதரவு தரவேண்டும்''.

—சா. கணேசன்
சுதந்திரக் கட்சி.

“அனைத்துக் கட்சிகளும் ஒன்று சேர்ந்து இம்மாதிரி விடுதலை நாளை வேறு எந்த மாநிலமாவது கொண்டாடுகிறதா என்பது சந்தேகம்தான். டெல்லியில் கூட இப்படி நடக்கிறதா என்பது ஐயப்பாடுதான். பல விதங்களில் எடுத்துக்காட்டாக இருக்கும் தமிழகம் இதிலும் எடுத்துக்காட்டாக இருக்கிறது.

விடுதலை என்பது நாம் வளர் வதற்குத் துணைநிற்கும் சூழ்நி தான். விடுதலையே வாழ் தந்துவிடாது. பல்வேறு முனைப்புகளில் ஈடுபட்டு வெற் பெறவேண்டும்.

உழைப்பவர் ஒருவர்; உ பவர் எட்டுப் பேர் என்ற நி இருக்கக் கூடாது.

நாட்டிலுள்ள வறுமையை போக்க மாநில அரசுகள் அதி அதிகாரங்களைப் பெற்றாக வே டும்! இந்திய உரிமையை போராடிப் பெற்றார்கள்; மாநி உரிமையை வாதாடிப் பெ வேண்டியவர்களாக நாம் இரு கிறோம்.”

—கல்வி அமைச்சர்
நாவலர் நெடுஞ்செழிய

கொத்தளத்தில் கொண்டாடிய விழா

அனைத்திந்தியாவுக்கும் வழிகாட்டும் வகையில் கடந்த ஆண்டு போல இந்த ஆண்டும் தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலகமுள்ள கோட்டையின் கொத்தளத்தில் விடுதலை நாள் விழா, கொண்டாடப்பட்டது.

அனைத்துக் கட்சிகளும் பங்கேற்ற இவ்விடுதலை நாள் விழா நிகழ்ச்சி எல்லார்க்கும் மகிழ்ச்சி அளிக்கக் கூடியதாக அமைந்திருந்தது.

கூட்டத்திற்குத் தலைமை வகித்த மாண்புமிகு முதல்வர் அவர்கள் இவ்வாண்டும் மீண்டும் தலைமை அமைச்சர் அவர்களுக்கு அழைப்பு விடுத்தார்கள். ஒவ்வோர் ஆண்டும் ஒவ்வொரு மாநிலத் தலைநகருக்கும் தலைமையமைச்சர் வந்து விடுதலை நாளைக் கொண்டாடிக் கொடியேற்ற வேண்டும் என்று எழுதியமைக்கு டெல்லி செங்கோட்டையில் கொடியேற்றுவது மரபாகி விட்டது. அதை மாற்ற இயலாது என்று தலைமையமைச்சர் எழுதியிருப்பதாகவும் முதல்வர் அவர்கள் தெரிவித்தார்கள்.

'' மீண்டும் தலைமையமைச்சரைக் கேட்டுக் கொள்கிறேன். அதை மறுபரிசீலனை செய்யுங்கள். மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டும் என்று கேட்கப்படும் இந்நாளில் மாநிலங்களில் வந்து விடுதலை நாள் விழாக் கொண்டாடுவது கடினமல்ல.

'' ஆகவே, விடுதலை நாளில் பங்குகொள்ள இங்கே வருமாறு பிரதமரைத் தமிழக மக்களின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன். அது மரபு என்று மறுமுறையும் சொல்லாமல் கொண்டாட வர வேண்டும்; அனைவரும் சேர்ந்து மரபை மாற்றமுடியும்.

''ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு மாநிலத் தலைநகருக்கும் தலைமையமைச்சர் வந்து விடுதலை நாளைக் கொண்டாடினால் இந்திய ஒற்றுமை வலுவாக இருக்கும். எல்லா மாநிலங்களும் ஒரே நிலையில் கவனிக்கப்படுகிறது என்ற எண்ணம் உண்டாகும்.', என்றும் முதலமைச்சர் அவர்கள் தம் தலைமை உரையில் அழைப்புவிடுத்தார்கள். இவ்விழாவில் கலந்து கொண்ட ஏனைய அரசியல் கட்சித் தலைவர்களின் உரைகளில் சில பகுதிகள் கீழே தரப்பட்டுள்ளன.

''மாநில அரசின் அதிகார வரம்பிற்குட்பட்ட அளவிலாவது
மக்களின் அடி
படைப் பிரச்
களைத் தீர்க்
முயன்றிடவேண்
டும். இரண்
அல்லது மூ
ருண்டுக் கெ
வைத்து அத
குள் தீர்க்க
படவேண்டும்.''

—ஏ. ஆர். மாரிமுத்
பி. சோ. கட்

''நாம் ஒன்றுபட்டு உழைத்
இந்த ஆண்டை சுபிட்ச ஆ
டாக ஆக்க வேண்டும். 24-வ
சுதந்திர ஆண்டு நல்ல ஆண்
அல்ல என்று சொன்னவ
பொய்ப்பிக்க வேண்டும். சி
சிறுபிரச்னைகளை மறந்துநாட்
பிரச்னையில் நாட்டம் செலுத்
ஒன்றுபட்டுஉழைக்கவேண்டும்

—பூவராகன், காங்கிர

"சிறப்புடைய மாநிலமா
தமிழகத்தை ஆக்கிய நல்ல
களுக்கு நன்றி! சமூக அமைதி
மத அமைதி இந்தியாவிலே
தமிழகத்தில்தான் நிலவுகிற
இத்தகைய அமைதியை
நாட்டும் கலைஞரின் அரசுக்
கோடிக்கணக்கான சிறுபான்
மக்களின் சார்பில் நன்றி
வித்துக் கொள்கிறேன்."

—பீர்முகம
முஸ்லிம்

கதர்- கிராமத் தொழில்கள்

விவசாயிகளுக்கு ஊதியத்துடன் கூடிய வேலைவாய்ப்பளிக்கின்றன

தமிழ் நாட்டுக் கதர் - கிராமத்தொழில் வாரியத்தின் நிறுவனங்களில் உற்பத்தி செய்யப் பெற்ற பற்பல கைநுட்பப் பொருள்கள்.

கதர் கிராமத் தொழில்களை ஆதரிப்பது உணவு உற்பத்திக்கு உழைக்கும் கிராம மக்களுக்கு உதவுவதாகும்

கதர் ~ கதர்ப்பட்டு
சோப்பு ~ தேன்
செக்கெண்ணெய்
தோல்பொருள்கள்
பனைவெல்லம் சர்க்கரை
மண்பாண்டம்-வார்ப்படங்கள்
பனைபொருள்கள்
பித்தளை. வெண்கலப் பாத்திரங்கள்

மேலும்
பற்பல கைநுட்பப் பொருள்கள்

கதர் கிராமத்தொழில்
விற்பனை நிலையங்களில்
கிடைக்கும்.

வெளியீடு:
கதர் கிராமத் தொழில் துறை
உ, சர் தேசிகாச்சாரி ரோடு சென்னை-4.

பெற்ற சுதந்திரம் பேணிக்காப்போம்

நாடு விடுதலை பெற்ற நாளை— விடுதலைக்கான புரட்சி வித்தூன்றப் பெற்ற நாளை— உலகில் பல நாடுகள் உவகை பூத்திடக் கொண்டாடுகின்றன. உலகத் தமிழ் மாநாடு நடைபெற்ற பாரீஸ் பட்டணத்திற்கு மாநாட்டுக்கு முதல் நாளே—ஜூலை 14 ஆம் நாள் நான் சென்றிருந்தேன். அங்கு புரட்சித் திருநாளை மக்கள் கொண்டாடிய பாங்கினை விவரிக்க இயலாது. வண்ண வண்ண உடை உடுத்தி அந்நாளைத் திருநாளாய்க் கொண்டாடுகின்றனர். ஏற்கனவே இரவில் பாரீஸ் தூங்குவதில்லை. அதிலும் அந்தத் திருநாள் அன்று அனைவரின் விழியிலும் ஒளி கொட்டியது. விண்ணிலும் மத்தாப்புக்களின் ஒளி கொட்டியது. புரட்சி நாட்களையோ, விடுதலை விழாக்களையோ, சுதந்திர தினங்களையோ அவர்கள் பூரிப்போடு கொண்டாடுகிற அளவுக்கு வளமும் வசதியும் பெற்றிருக்கிறார்கள் என்பதையும் உற்சாகம் கொண்டுள்ளார்கள் என்பதையும் நாம் மறுத்திடவும் இயலாது—மறந்திடலும் ஆகாது.

''விடுதலை பெறுவது என்பது ஆதிக்கத்தை அகற்றிக் கணக்குத் தீர்த்த நாள்—விடுதலை நாளை ஆண்டுதோறும் கொண்டாடுவது என்பது விடுதலைக்குப் பிறகு நாம் புரிந்த சாதனைகளைக் கணக்குப் பார்க்கும் நாள்'' என மறைந்த மாமேதை அறிஞர் அண்ணா அவர்கள் கூறியதை நினைவில் நிறுத்திச் செயல்படுவது இந்த நன்னாளின் நோக்கமென நாம் கொண்டாட வேண்டும்.

உத்தமர் காந்தி உழைத்ததும் உயிர் விட்டதும் எதற்காக? தியாக சீலர் தெரு பாடு பட்டது எதற்காக? பல இன்னல்கள் ஏற்றது எதற்காக? எங்கோ மறைந்தார் எங்கள் நேதாஜி என இன்னும் இந்திய மக்கள் கண்ணீர் பெருக்குவது எதற்காக? செக்கிழுத்தார் சிதம்பரனார்— குருதி கொட்டி மடிந்தான் குமரன்—இப்படி விடுதலை வீரர்களின் பட்டியல் நீண்டு கொண்டே போகுமே ; நினைக்க நினைக்க எழுச்சி பிறக்குமே ; அவர்கள் எல்லாம் சுதந்திரச் சங்கநாதம் செய்தது எதற்காக ?

அடிமை இருள் நீங்குவதற்காக மட்டுமா ? இருள் நீங்கி இந்திய மக்களின் வாழ்வில் ஒளி விளக்கு ஏற்ற வேண்டும் என்பதற்காகவும்தான் !

புரட்சிக் கனலால் புதையுண்ட நாடுகளின் புதிய வடிவங்கள் கண்ணுக்குத் தெரிகின்றன; களிப்பூட்டும் வகையில்:

போரின் கோர தாண்டவத்தால் அழிந்துவிட்ட நாடுகளில் ஏற்றமும் எழிலும் எவ்வளவு விரைவில் பூத்துக் குலுங்குகின்றன என்று வியக்கிறோம், விரலை மூக்கின்மீது வைத்தவாறு !

போரின் கடுமையான வாடை வீசவில்லை இங்கு—பூகம்பங்கள் தோன்றி அழிவு நர்த்தனம் ஆடுவதில்லை இங்கு—எரிமலைகளின் கொடுமை இல்லை—ஆயினும் அடிமையொழிந்து ஆண்டுகள் பலவாயினும் அகிலத்தில் தலைதூக்கிச் செழுமை மிகுந்த புன்னகையைக் காட்ட முடியாமல் ஏக்கப் பெருமூச்சு விடுகிறோமே எதனால் ?

சிந்திக்க வேண்டாமா ?

சிந்தித்துச் செயல்பட வேண்டாமா ?

எளியோர் சிலர் இங்குத் தமிழ் நிலம் ஆள வந்தோம்—ஆண்டுகள் மூன்றும், மாதங்கள் ஐந்தும் ஆகின்றன. சாதாரண—நடுத்தர—விவசாயத் தொழிலாள மக்களின் பிரதிநிதிகள்—என்ற நினைவோடு அந்த மக்களின் வாழ்வை மையமாக வைத்துத் திட்டங்கள் தீட்டுகிறோம். மாநிலங்களுக்குள்ள உரிமைகளின் அளவுக்கு மக்கட் பணியாற்றுகிறோம். நலமிகு திட்டங்கள் வகுக்கிறோம். இன்னும் அதிக உரிமைகள் கிடைப்பின் அதன் அளவுக்கேற்பத் திட்டங்கள் தோன்றும் —வசதி வாய்ப்புகள் பெருகி வறுமை நிலை வீழ்ந்திட வழி காண முயல்வோம்.

சென்ற ஆண்டு தமிழகம் வரலாறு கண்டிராத ஒரு வறட்சியைக் கண்டது. பாதகங்களை களையும் சாதகங்களாக ஆக்கிக் கொள்வோம் எனச் சூளுரைத்து அந்தக் கால அளவில் எட்டு லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு அளித்து ஏரி, குளம், வாவி, வாய்க்கால் அனைத்தையும் வகைப்படுத்தினோம்.

வறுமை நிலை வீழ்ந்திட வழிவகை காண்போம்!

1968-69 ஆம் ஆண்டில் தீவிர சாகுபடித் திட்டத்தின் கீழ் 17 லட்சம் ஏக்கர் நிலம் ரிடப்பட்டது. நடப்பு ஆண்டு 24 ட்சம் ஏக்கர் நிலத்தில் தீவிர சாகுபடிக்கு யற்சிகள் முகிழ்க்கின்றன.

வறட்சி நிவாரணத் திட்டங்கள் வாயிலாக நாற்பதாயிரத்து அறுநூறு பணிகள் கிராமப்புறங்களில் நிறைவேற்றப்பட்டதன் காரணமாக வேளாண்மைத் துறையில் புதிய வேகம் எழுந்தது.

பசுமைப்புரட்சித் திட்டத்திற்காக எடுத்துள்ள சீரிய முயற்சிகளுக்காக ஏற்கனவே கிணறுகள் தோண்டுவதற்கும் குழாய் இணைப்புகள் ஏற்படுத்துவதற்கும் கடனுதவி அளித்து வருவது மட்டுமல்லாமல், அத்தகு வேலைகளைத் தீவிரப்படுத்துவதற்காக வேளாண்மை மறு நிதிக் கழகத்தின் மூலம் நிலவள வங்கிகள் கடன் தொகைகளை அளிக்க இந்த ஆண்டு ஏற்பாடுகள் தொடங்கி விட்டன. இராமநாதபுர மாவட்டத்தில் மட்டும் பசுமைப் புரட்சித் தீவிர சிறப்புத் திட்டத்தில் 2,750 கிணறுகளையும், 2,750 குழாய்களையும் அமைக்கவும் இணைக்கவும் இரண்டு நாட்களுக்கு முன் நான் சென்று ஆரம்ப விழாவை நடத்தினேன். நீர்ப்பாசன வசதிகளைக் குறைந்த செலவில் பெறுவதற்குச் சிறிய விவசாயிகள் கூட்டுறவுப் பாசனக் கழகங்களை ஏற்படுத்தவும் அரசு அக்கறை காட்டி வருகிறது.

மக்கள் அனைவருக்கும் உடனடியாகப் பிரச்சினைகள் பலவற்றைத் தீர்க்கும் வகையில் செயல்படுத்தப்படும் மனுநீதித் திட்டம் கடந்த ஆண்டு தொடங்கி இந்த ஆண்டு மார்ச் மாத முடிவுக்குள் ஏழு மாதங்களில் லட்சத்து 51 ஆயிரம் மனுக்களை அதிகாரிகள் கிராமங்களுக்கு நேரடியாகச் சென்று—பெற்று அவைகளில் 2 லட்சத்து ஓராயிரம் மனுக்களுக்குத் தீர்வு கண்டிருக்கிறார்கள்.

மாநிலம் முழுதும் செயல்படும் மனுநீதித் திட்டத்தையொட்டிச், சிறப்பு அதிகாரிகளின் யாத உழைப்பின் காரணமாக இந்த மூன்றாண்டுக் காலத்தில் மட்டும், நிலமில்லாத விவசாயப் பெருங்குடி மக்களுக்கு 2½ லட்சம் ஏக்கர் நிலத்தைப் பட்டா செய்து வழங்கியிருக்கிறோம். ஒரு லட்சத்துப் பதினைந்தாயிரம் பேருக்கு மேல் வீட்டு மனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது. இந்தப் பணி நாள்தோறும் எண்ணிக்கையில் வளர்ந்து கொண்டே போகிறது.

சட்டத்தின் மூலம் பெறுகிறவைகளே நிலைக்கும்—பெற வேண்டியவர்களுக்குக் கிடைக்க வேண்டிய நியாயங்களுக்காகச் சட்டத்தைத் திருத்தவும் அரசு தயாராக இருக்க வேண்டும். அந்தக் காரியத்தைக் கண்ணும் கருத்துமாக அரசு கவனித்து வரும்போது அவசரப்படுதல் நல்லதல்ல. அவசரக்கோலம் அள்ளித் தெளித்ததாக ஆகிவிடும். பஜனை மடத்தில் பார்த்திருக்கிறோம். சுண்டல் வழங்கும்போது பிள்ளைகள் அமைதியாக நின்று கைநீட்டினால்தான் அனைவருக்கும் ஒழுங்காகக் கிடைக்கிறது. அதைவிடுத்துச் சுண்டல் வழங்குபவரைச் சுற்றிக் கொண்டு ஆளுக்கொரு கையைச் சுண்டலிருக்கும் தட்டில் விட்டு அள்ளத் தொடங்கினால், ஆர்ப்பாட்டம் மிகும்! கூச்சல் கிளம்பும்! சுண்டல் தட்டு கீழே விழும்! வழங்கிய ஆள், தனக்கென்ன என்று சலித்துக்கொண்டு போய் விடுவார். சுண்டல் மண்ணில் கலக்கும்; யாருக்கும் பயனிருக்காது; அமளிதான் மிஞ்சும். அதனால்தான் நிலமற்றவர்களுக்கு நிலம் வழங்க அரசு ஒழுங்கு முறையைப் பின்பற்றி, அதில் எந்தத் தவறும் நடந்துவிடாமல் அதிகாரிகளை எச்சரித்து லட்சக்கணக்கானவர்க்குப் பட்டாக்களை வழங்கியுள்ளது. 1972 ஆம் ஆண்டுக்குள் மேலும் இரண்டு லட்சம் பட்டாக்கள் வழங்கப்படும்.

நிலம் பெறுவதில் இதுவரையில் ஆறாவது வரிசையில் இருந்த அரிஜன மக்கள், இரண்டாவது வரிசையில் இடம்பெற வகை செய்யப்பட்டுள்ளது.

மின் ஒளி இல்லாத கிராமமே தமிழகத்தில் இருத்தலாகாது என்ற அளவில் திட்டம் வகுத்து அதனை 1972-க்குள் செயல்படுத்துவோம் என்று நான் முதல்வர் பொறுப்பை ஏற்றதும் விடுத்த அறிவிப்பைத் தொடர்ந்து அந்த வேலை விரைவுபடுத்தப்பட்டுள்ளது.

செய்தவை பல: செய்ய இருப்பவை மிகப்பல!

குடி நீர் வசதிக்கும் அவ்வாறே ஒரு தீவிரத் திட்டம்!

இந்த ஆண்டில் சிறப்பு மிகு செய்தியாக நீண்ட பல ஆண்டுகளாக முடங்கிக் கிடந்த சேலம் இரும்பாலைக்கான அனுமதியை மத்திய அரசினர் அளித்து, தமிழகத்தை மகிழ்வித்துத் தமிழர்களின் நன்றியுணர்வைப் பரிசாகப் பெற்றுள்ளனர். அந்தத் திட்டத்தின் மூலம் ஐயாயிரம் பேருக்கு ஆரம்பத்தில் வேலை வாய்ப்பு ஏற்படும்.

1966-க்கு முன்பே தொடங்கி 1968 வரையில் மூடப்பட்ட 27 பஞ்சாலைகளில் நான்கு ஆலைகளை அரசு ஏற்று நடத்துகிறது. அதனைத் தொடர்ந்து 13 ஆலைகள் திறக்கப்பட்டன. இதன் விளைவாக வேலையற்று இருந்த பஞ்சாலைத் தொழிலாளர்கள் பலர் அல்லல் நீங்கிப் பெருமூச்சு விட்டனர்.

பின் தங்கிய மக்கள் நலனுக்காக—ஒரு குழு !

காவல் துறை பற்றி ஆராய்ந்து பரிந்துரைக்க ஒரு குழு !

ஊதியக் குழு மற்றொன்று !

இதற்கிடையே பின் தங்கிய மக்கள் நலனுக்கு 66-67-ல் ஒதுக்கப்பட்ட 184 லட்சம் ரூபாய் 69-70ல் 314 லட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

காவல் துறையினருக்கு இடைக்காலத்தே பல சலுகைகள்.

அரசுப் பணியாளர்களுக்கு, ஊதியக் குழுவின் பரிந்துரைக்கு முன்பே; ஐந்நூறு வரை ஊதியம் பெறும் அனைவருக்கும் சிறப்பு ஈட்டுப்படியாக அரசு பத்து ரூபாய் வழங்கி வருகிறது.

அரசுப் பணியாளர்களின் ஓய்வு ஊதியம் இருபதிலிருந்து முப்பதாக உயர்த்தப்பட்டுள்ளது.

ஆசிரியர்கள் முறையீடுகள், மின்வாரியப் பணியாளர்களின் முறையீடுகள் கவனிக்கப்பட்டு, அவர்கள் மன நிறைவு கொள்ளும் வகையில் தீர்க்கப்பட்டுள்ளது.

தமிழக அரசின் சமூகப் பொருளாதாரக் கொள்கைகளில் சிறப்பான அம்சம்; உச்ச வரம்பை 30 ஸ்டாண்டர்டு ஏக்கரில் இருந்து 15 ஸ்டாண்டர்டு ஏக்கராவாகக் குறைத்ததாகும்.

ஏற்கனவே அளிக்கப்பட்டுள்ள விதிவிலக்குகளில் எவை எவைகளை நீக்கி விடலாம் என ஆராய்ந்திடக் குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

இத்தனை காரியங்களும் இதற்கு மேலும் செய்துள்ளோம் எனினும், நாட்டில் வளர்ந்து வரும் வேலையில்லாத் தொல்லையைப் போக்க விரைவான நடவடிக்கைகள் எடுத்தாக வேண்டுமன்றோ?

அதற்கான சாத்தியக்கூறுகளை, நமது மாநிலத்திற்குள்ள அதிகார வரம்புக்குள் சிந்தித்து விரைவில் கருத்துக்கள் வழங்குமாறு முதன்மையான அதிகாரிகளைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். படித்துவிட்டு வேலையில்லாதிருப்போர்—படிக்கும்போதே வேலை கிடைக்குமா என ஏங்கித் தவிப்போர் துயர் துடைக்க, இந்தப் பெரிய நாடு மகத்தான திட்டமொன்றை வகுக்க வேண்டும். எனினும், அதுவரை காத்திராமல் நமது மாநில அளவில் நம்மால் ஆனதைச் செய்திட முயல்வது நலமன்றோ?

அன்று அந்நிய ஆதிக்கத்திற்குக் கணக்குத் தீர்த்தோம். இன்று கணக்குப்பார்க்கிறோம். தொடர்ந்து தமிழகத்தில் அமைதி நிலை பெறும் வழிவகைகளில் அனைவரும் அக்கறை கொள்வார்களாயின், அரசின் திட்டங்களும் மிகு பயன் விளைத்திடும் வண்ணம் நிறைவேற்ற இயலும்.

> பெற்றோம் சுதந்திரம்—
> பெருமையடைகிறோம் இன்று!
> அதனைப் பேணிக் காத்திட்டால் தா
> நாளை, நமது பேரப்பிள்ளைகள்
> நமது பெருமை பேசுவர்!

அதனை எண்ணிச் செயல் படுவோம்! இந் ஆகஸ்டு 15ல் அந்தச் சூளுரையை மனத்தி பதிப்போம். வணக்கம்.

(சுதந்திரத் திருநாளில், தமிழக முதல்வர் வானொலியில் ஆற்றிய உ

இரட்டிப்பு லாபம்!

இன்ப வாழ்வுக்காக
நீங்கள் தரப்போவதோ மிக மிகச் சொற்பம்

நீங்கள் வாங்கும் பரிசுச் சீட்டு; உங்கள் வாழ்க்கையில் வாய்க்க இருக்கும் வளத்துக்கு ஏணிப்படி! உங்கள் லட்சியக் கனவில் மலர்ந்துள்ள சொகுசு இல்லம்!

தமிழ் நாடு அரசு பரிசுச் சீட்டுத் திட்டத்தில் பரிசு பெறுவதற்கு அதிக வாய்ப்புகள் இருக்கின்றன. நீங்கள் லட்சாதிபதியாகும் பேற்றினை நழுவ விடாதீர்கள்!

அதிக உணவு, உடை, நல்ல வீடுகள், இலவசக் கல்வி, தேவையான மருத்துவ வசதிகள் எல்லாம் சரிவரக் கிடைப்பதற்காக தேசிய திட்டங்களில் உங்கள் முதலீடு செலவழிக்கப்படுகிறது.

தேசம் வளமாக உங்கள் பணம் பயன்படட்டும்.

அடுத்த குலுக்கலுக்கான
பரிசுகளின் மொத்தத் தொகை : ரூ. 17,50,000
ஒவ்வொரு வரிசைக்கும் முதல் பரிசு : ரூ. 1,00,000

குலுக்கல் தேதி: 25-9-1970

தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டுத் திட்டம்
இதுவரை உருவாக்கிய புதிய லட்சாதிபதிகள் = 181 பேர்

பரிசுச் சீட்டுகள் விற்பனை விறுவிறுப்பாக நடைபெறுகிறது. ஒரு சீட்டின் விலை ஒரே ஒரு ரூபாய்தான்!

இன்றே வாங்குங்கள்
தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு

வெளியீடு: இயக்குநர், தமிழ்நாடு அரசு
செய்தி விளம்பரத்துறை, சென்னை-9



வாழையடி வாழை

முத்தமிழ் நாட்டின் முக்கனிகளில் ஒன்றான வாழை மனித இனத்தின் வாழ்வுக்குப் பல வகையிலும் பயன்படுவதுடன், வாழ்த்துரை வழங்கவும் பயன்படுகிறது. "வாழையடி வாழையாக" வாழுங்கள் என்று பலர் வாழ்த்துவதை அன்றாடம் கேள்விப்படுகின்றோம்.

"நான் 100 ஆண்டுகளுக்கும் மேலாக வாழ்ந்து வருவதன் ரகசியம், சிறுவயது முதல், நாள்தோறும் தொடர்ந்து ஒரு வாழைப் பழமாவது சாப்பிட்டு வருவதேயாகும்"—அண்மையில் அமெரிக்காவில் ஒரு பெரியவர் இவ்வாறு சொல்லியதைத் தமிழகத்துப் பத்திரிகைகள் எல்லாம் வெளியிட்டன.

பாமரரும், பணக்காரரும், படித்தவரும், படிக்காதவரும், எளியோரும், வலியோரும், கிராமத்திலுள்ளவரும், நகரத்திலுள்ளவரும், சிறு குழந்தைகளும், வயது முதிர்ந்தவர்களும், வாழைப்பழத்தை விரும்பி உண்கிறார்கள்.

இத்தகைய சிறப்புக்களைக் கொண்ட வாழைப்பழத்தில் 1·3 சதம் புரதச்சத்தும், 0·2 சதம் கொழுப்புச் சத்தும், 0·7 சதம் தாதுப் பொருள்களும், 36·4 சதம் சர்க்கரை மாவுப் பொருட்களும், 0·01 சதம் சுண்ணாம்புச் சத்தும், 0·05 சதம் பாஸ்பரஸ் சத்தும், 0·40 சதம் இரும்புச் சத்தும், 153 கலோரி வெப்ப அளவும், 150 மில்லி கிராம் வைட்டமின் 'பி' யும், 2·4 பி.பி.எம். வைட்டமின் 'ஏ' யும், 120 பி.பி.எம். வைட்டமின் 'சி' யும் அடங்கியுள்ளன.

சத்துணவு ஆராய்ச்சியின் படி வயது வந்த ஒவ்வொருவரும், நாளொன்றுக்குக் குறைந்தது 3 அவுன்சு அளவு பழங்களையாவது சாப்பிட வேண்டும் என்று பரிந்துரைக்கப்படுகிறது. ஏழை எளியவரும் குறைந்தது 3 அவுன்சு அளவு பழம் சாப்பிட வேண்டுமானால், குறைந்த விலையில் கிடைப்பது வாழைப் பழமே.

தற்பொழுது ரஷ்யா, ஜப்பான் ஆகிய வெளிநாடுகளிலும் நம் நாட்டின் வாழைப்பழத்திற்கு நல்ல மதிப்பு ஏற்பட்டுள்ளது. அதுவும் குறிப்பாக 'மோரிஸ்' வாழைப்பழத்திற்கு மிகுந்த கிராக்கி ஏற்பட்டுள்ளது. 1967-68-ல் சுமார் 2,813 டன் வாழைப்பழங்களை இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்துள்ளோம். சென்ற ஆண்டில் மராட்டிய மாநிலம் வெளிநாடுகளுக்கு வாழைப்பழங்களை அனுப்பி மிகுபயன் அடைந்ததாக அறிகிறோம்.

எனவே உணவு உற்பத்தியைப் பெருக்கும் முயற்சிகளுக்குத் துணை புரி யவும், வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து அ நியச் செல வணியை ஈட் டவும் மேலும் அதிகப் பரப் பளவில், ஒ மித்த செய் நேர்த்திமுறை களை மே கொண் வாழையை சாகுப செய்ய வேண் டியது மிகவு அவசியம கும்.

தமிழ் நா டில் த பொழு 88,000 ஏ கர்களில் வாழை பயிரிடப்ப கிறது.

நல்ல வளமும், நீர்ப்பாச மும், வடிகால் வசதியு கொண்ட ஆழமான மண்ணி வாழை நன்றாக வளரும். இரு பினும் களர் நிலமும், உ நிலமும் இல்லாத, ஆழமு காற்றோட்டமும், வடிகால் தியுமுள்ள எல்லா நிலங்க ளும் வாழையைப் பயிரிட மு யும்.

வாழை நடுவதற்கு ஒரு மாதத்
திற்கு முன்பாகவே நிலத்தை
இரண்டு அல்லது நான்கு தட
வை நன்றாகப் புழுதி காண
உழவேண்டும். பின்பு உயர
மாக வளரும் வாழைகளுக்கு
ாழைக்கு வாழை 8 அல்லது
அடியும், குள்ளமாக வளரும்
ாழைகளுக்கு 5 அல்லது 6 அடி
ும் இடைவெளி விட்டு
½ × 1½ × 1½ அளவுள்ள குழிகளைத்
தாண்டவும். இக் குழிகள்
வ்வொன்றிலும் 12 கிலோ
க்கிய தொழு உரத்தைப்
பாட்டு நிரப்பவும்.

பொதுவாக வாழையை எல்லா
ாதங்களிலும் நடலாம். ஆனால்
றட்சிக் காலத்தையும் அதிக
ான ஈரம் கொண்ட மழைக்
லத்தையும் தவிர்க்க வேண்
ம். இருப்பினும் மாசிப்
ட்டத்தில் கன்றுகளை நடுவது
லச் சிறந்தது. தஞ்சை
வட்டத்தில் பல பருவ
ழைச்சாகுபடிக்கு ஆகஸ்டு
த்தில் நடுவது நல்லது.
னவில் அக்டோபர்-நவம்பர்
தங்களிலும் உண்டாகும் புயல்
காற்றினால் ஏற்படும் சேதங்களைத் தவிர்ப்பது அவசியம். ஏப்ரல்-மே மாதங்களில் மலைப் பிரதேசங்களில் மலை வாழைக் கன்றுகளை நடலாம்.

சமவெளிப் பிரதேசங்களில் நன்செய் நிலங்களிலும் தோட்டக்காலிலும் பூவன், ரொபஸ்டா, மோரீஸ், ரஸ்தாளி, மொந்தன் ஆகிய வாழை வகைகளைப் பயிர் செய்யலாம்.

மலைப்பிரதேசங்களில் மலை வாழை வகைகளான சிறுமலை, விருப்பாட்சி முதலிய வகைகளைச் சாகுபடி செய்யலாம்.

இருந்தபோதிலும், சமவெளிப் பிரதேசங்களில் மோரீஸ் என்ற குள்ள வாழை ஜாதியிலிருந்து '' ரொபஸ்டா '' என்றதொரு புதியவகை தேர்ந்தெடுக்கப்பட்டு அதிக அளவில் சாகுபடி செய்வதற்குச் சிபாரிசு செய்யப்படுகின்றது. ஏனெனில் 'ரொபஸ்டா' வாழைத்தார் மோரீஸ் வாழையைவிட ஏற்றுமதிக்கு ஏற்ற சிறப்பான அம்சங்களைப் பெற்றுள்ளது. அதுவுமின்றி வெளிநாட்டினர் இவ்வாழைப் பழங்களையே பெரும்பாலும் விரும்புகிறார்கள்.

ரொபஸ்டா வாழைத்தார்கள் அடக்கமாக ஒழுங்காக— பழங்கள் குள்ளவாழை போல் விரிந்து காணப்படாமல், குவிந்து மேல்நோக்கி இருப்பதால் இவைகளைச் சேதம் ஏற்படாமல் வணிகச் சந்தைக்கு அனுப்பமுடிகின்றது. ரொபஸ்டா வாழைப்பழங்கள் மோரீஸ் பழத்தைப் போலல்லாமல் புகையினால் சேதமடைவதில்லை. ரொபஸ்டா வாழையில் இரண்டாம் வாழை சாகுபடி செய்து இலாபம் பெறலாம். ஆனால் குள்ளவாழையில் இச்சிறப்பு இல்லை. தவிர ரொபஸ்டா வாழையின் கனிகள் ஆறு அங்குலத்திற்கு மேற்பட்டு இருப்பதால், வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய உகந்ததாக இருக்கின்றன. இந்தக் காரணங்களால் ரொபஸ்டா வாழை உள்நாட்டு வியாபாரத்திலும் வெளிநாட்டு வியாபாரத்திலும் நிறைந்த லாபத்தை உருவாக்கித் தருகிறது.

நல்ல பலனளித்து வரும் நோயில்லாத வாழைத் தோட்டங்களிலிருந்து மூன்று அல்லது நான்கு மாத வயதுடைய ஒரே சீரான பட்டாக்கத்தி அல்லது வால் போன்ற குறுகிய இலை பரப்புடையதும், பெருத்த கிழங்குகள் உள்ளதுமான வாழைக் கன்றுகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

வாழைக் கன்றுகளை நடுவதற்கு முன்பாக மாட்டெரு 12 கிலோ போட வேண்டும். அத்துடன் குழிக்கு இரண்டு அவுன்சு பி.எச்.சி. 10 சதவீதம் மருந்தைக் கலப்பதால் கிழங்குகளைத் துளைக்கும் வண்டுகளிலிருந்து காப்பாற்றலாம். வாழைகளை வாடல் நோயிலிருந்து காப்பாற்ற, கிழங்குப் பாகத்தை செரசான் 0·10 சதவீதம் கரைசலில் ஐந்து நிமிடம் நனைத்து எடுத்த பிறகு கன்றுகளை நட வேண்டும்.

கன்றுகளைக் கிழங்குகளிலிருந்து சுமார் 9 அங்குலம் அல்லது 12 அங்குலத் தண்டுடன் விட்டு வெட்டி அதனிலுள்ள வேர்களை எல்லாம் சீவி எடுத்துச் சுத்தப்படுத்தி, குழியின், நடுவில் வைத்துச் சுற்றிலும் மண் அணைத்து நட வேண்டும். கன்றுகளை நட்டவுடன் நீர் பாய்ச்ச வேண்டும்.

கன்றுகளை நட்ட ஒரு வாரம் அல்லது பத்து நாட்களுக்குப் பிறகு கன்றுகளைச் சுற்றியுள்ள இடத்தை மண்வெட்டியால் கொத்திக் களைகளை அகற்றவேண்டும். இச்சமயத்தில் கெட்டுப்போன கன்றுகள் காணப்பட்டால், அவைகளை அகற்றி அங்கு நல்ல கன்றுகளை முன்கூறியபடி நட வேண்டும்.

இரண்டு மாதத்திற்கு ஒரு முறை பட்டத்தைக் கொத்திக் களைகளை எடுக்க வேண்டும். அவ்வப்போது வாழைக்கு மண் அணைக்க வேண்டும். வாழை மரங்கள் தார் தள்ளிய பிறகு நிலத்தைக் கொத்தக் கூடாது.

தட்பவெட்ப நிலைக்கேற்றாற் போல், தண்ணீர் வசதியைப் பொறுத்து, மண்ணில் ஈரம் இருக்கும்படி வாரம் ஒரு முறையாவது தண்ணீர் கட்ட வேண்டும்.

மழை காலங்களில் வாழைத் தோட்டங்களில் நீர் தேங்கி நிற்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இதற்கு வாழையைச் சுற்றிலும் பட்டத்துக்குப் பட்டம் கிடங்குகள் வெட்ட வேண்டும்.

வாழைக் கன்றுகளை நட்ட 3-வது அல்லது 4-வது மாதத்திலும், 5-வது மாதத்திலும் ஆக இருமுறை வாழைச் சாகுபடிக்குத் தக்கவாறு உரமிட வேண்டும். மோரிஸ், ரொபஸ்டா ஆகிய வகைகளுக்கு ஒரு மாதத்திற்கு 285 கிராம் அமோனியம் சல்பேட்டையும், 285 கிராம் சூப்பர் பாஸ்பேட்டையும், 340 கிராம் மியூரியேட் ஆப் பொட்டாசையும், 285 கிராம் கடலைப் பிண்ணாக்கையும், 12 கிலோ மக்கிய தொழு உரத்தையும் நட்ட மூன்றாவது அல்லது நான்காவது மாதத்தில் இட வேண்டும். நஞ்சை நில வாழைகளுக்கும் தோட்டக் கால் வாழைகளுக்கும் மேற்கண்ட அளவு உரத்தை, நட்ட மூன்றாவது மாதத்தில் இடவேண்டும்.

நட்ட 5-வது மாதத்தில் மோரிஸ், ரொபஸ்டா ஆகிய வகைகளுக்கு ஒரு மரத்திற்கு 142 கிராம் அமோனியம் சல்பேட்டையும், 340 கிராம் மியூரியேட் ஆப் பொட்டாசையும், 142 கிராம் கடலைப் பிண்ணாக்கையும் இட வேண்டும். நஞ்சை நில வாழைகளுக்கும் தோட்டக்கால் வாழைகளுக்கும் நட்ட 5-வது மாதத்தில் 285 கிராம் அமோனியம் சல்பேட், 340 கிராம் சூப்பர் பாஸ்பேட், 285 கிராம் மியூரியேட் ஆப் பொட்டாஷ், 285கிராம் கடலைப் பிண்ணாக்கு ஆகியவைகளை இட வேண்டும்.

கன்றுகள் நட்டு, பத்
அல்லது பன்னிரெண்டு மாத
களில் வாழைத் தார்கள் அ
வடைக்குத் தயாராகும். கா
கள் முக்கால் பாகம் நல்
பெருக்கத்துடன் முதிர்
யடைந்த பின் வாழைத்தா
களை அறுவடை செய்யவும்
வாழைத் தார்களை அறுவடை
செய்யும் பொழுது வா
மரத்தை அடியோடு த
மட்டம் வெட்டாமல் 4 அல
5 அடி உயரம் விட்டு வா
மரத்தின் மத்தியில் வெட்
வேண்டும். அப்படிச் செய்
தால் இரண்டாம் பருவ வாழை
காக விடப்பட்ட வாழை
கன்று நல்ல வீரியத்துட
செழித்து வளரும். வெட்ட
பட்ட மேல் பாகத்தைத் து
களாக்கி அவைகளை நிலத்தி
மேல் பரப்புவதால் மண் ஈ
காக்கப்படும்.

இவ்வாறு பயனுள்ள விதத்
பயிரிடப்படும் வாழை, 'வா
யடி வாழையாக' நமது நாட்
பொருளாதாரத்தை உயர்
வருகிறது என்பதில் சந்
மில்லை.



அரசியலைப்பற்றி சொல்லவில்லை.
சேமிப்பைப் பற்றியும், பணத்தை முதலீடு
செய்வதைப் பற்றியும் சொல்லுகிறோம்.
7 ஆண்டு தேசிய சேமிப்பு சர்டிபிகேட்டுகள்
புதிதாக மூன்று வரிசைகளில் வெளியிடப்
பட்டுள்ளது. இதில் ஏதாவதொன்றில்
உங்கள் பணத்தை முதலீடு செய்யலாம்.
எல்லா வரிசைகளிலும் நல்ல லாபமும்,
வருமான வரிச் சலுகையும், செல்வ வரி
தன்மைகளும் கிடைக்கின்றன.

தேசிய சேமிப்பு நிறுவனம்

567

கல்வி வளர்ந்த தமிழ்நாடு

குஞ்சி யழகும்
கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சள் அழகும்
அழகல்ல—நெஞ்சத்து
நல்லம்யாம் என்னும்
நடுவு நிலைமையால்
கல்வி அழகே அழகு!

என்பது தமிழர்களின் தனிப்பெருந்தத்துவமாகும். தொழில் வளமும் தொல்பெரும் விவசாயத்துறை வளமும் சிறந்தோங்கி வளரும் நம் தமிழகத்தில் கல்வியின் வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாய் இருக்கிறது நம் தமிழக அரசு. இரண்டாவது, மூன்றாவது திட்டக்காலங்களில் தொடக்கக் கல்வியும் இடைநிலைப் பள்ளிக் கல்வியும் சிறப்புற்றோங்க வழி செய்யப்பட்டது. பள்ளிகள் பெருகிடப் படிப்போர் தொகை பன்மடங்காயது. அவர்களுக்கு உயர்கல்வி தர வேண்டிய பொறுப்பு அரசினுக்கு ஏற்பட்டது. புதிய கல்லூரிகள் தொடங்கவேண்டியதன் தேவை உணரப் பட்டுக் கல்லூரிகள் பல தொடங்கப்பட்டன. தனியார் தொடங்கிய கல்லூரிகளுக்கும் நிதி உதவி அளித்து ஊக்கம் ஊட்டி வந்தது. உயர் கல்வித்துறையின் முக்கியத்துவம் வளர்ந்ததால் ஒன்றாக இணைந்திருந்த பொதுக் கல்வித் துறையிலிருந்து கல்லூரிக் கல்வியைக் கவனிப்பதற்கான தனி இயக்குநர் அலுவலகம் 1965-ம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது.

1964-65-ல் தமிழகத்தில் 78 கல்லூரிகளில் 65,200 மாணவர்கள் பயின்றனர். 1969-70-ல் கல்லூரிகளின் எண்ணிக்கை 140. இதில் பயின்ற மாணவர்களின் எண்ணிக்கையும் ஏறத்தாழ 1,40,000. ஆகக் கூடியது. லட்சத்திற்கு மேற்பட்ட மாணவர்கள் உயர்நிலைப் பள்ளித் தேர்வில் ஆண்டு தோறும் வெற்றி பெற்று வருவதால் பல்கலைக்கழகப் புதுமுக வகுப்புக்களில் நுழையும் மாணவர் தொகை நாளும் பெருகி வருகிறது. வளரும் இத் தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டுப் புதுமுக வகுப்பில் அனைத்துக் கல்லூரிகளிலும் அதிக இடங்கள் உண்டாக்கப்பட்டன. 1969-70-ஆம் கல்வியாண்டில் புதுமுக வகுப்பில் மட்டும் 71,000 மாணவர்கள் படிக்க வசதி செய்யப் பட்டிருந்த போதிலும் 64,000 மாணவர்கள் சேர்ந்து பயின்றனர். கல்வியின் இன்றியமையாமையை உணர்ந்த நம் மக்கள் தாம் கல்லாதவராயினும் தம் குழந்தைகள் கல்வியில் மேம்பட்டு விளங்க வேண்டுமென்ற அவாவினைக் கொண்டுள்ளார்கள். எனவே புதுமுக வகுப்பில் படித்துத் தேறிய மாணவர்கள்—பட்டப் படிப்பும் பெற விரும்பியவர் தொகை நாளும் பெருகிற்று. இந்தத் தேவையை நிறைவேற்றப் புதிய கல்லூரிகள் தோற்றுவிக்கப்பட்டன. புதுமுக வகுப்பு மட்டும் இருந்த கல்லூரிகளில் பட்டப்படிப்புக்கும் வகை செய்யப்பட்டது.



பெண் கல்வி.

“ ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமை என்று எண்ணியிருந்தவர் மாய்ந்துவிட்டார்” —என்று அன்று பாரதி கண்ட கனவினை நிறைவேற்றப் பெண் கல்விக்கு நம் தமிழகம் முக்கியத்துவம் கொடுத்து வருகிறது. இவ்வடிப்படையில் 1964-65-ல் 22 பெண்கள் கல்லூரிகள் என்றிருந்த தொகை 1969-70-ல், 37 ஆக உயர்ந்துள்ளது. 1965-ல், 15,700 பேர் படித்த நிலை மாறி இன்று 31,400 ஆக உயர்ந்துள்ளது. பெண்களுக்கெனத் தனியாக உள்ள கல்லூரிகளில் பெண்களே

ஆசிரியர்களாக அமர்த்தப்படுகின்றனர். ஆண்களுக்குரிய கல்லூரிகளில் இருபாலாரும் பணியாற்றி வருகின்றனர்.

பயிற்சிக் கல்லூரி

கல்லூரிகளிலிருந்து படித்து வெளிவருபவர்கள் உயர்நிலைப் பள்ளிகளில் ஆசிரியர்களாக நியமிக்கப்பட அவர்களுக்குப் பயிற்சி அவசியம் என்பதை இவ்வரசு கடைப்பிடித்து வருகிறது. ஆசிரியர்களைப் பயிற்றுவிக்க நம் தமிழகத்தில் இன்று 23 பயிற்சிக் கல்லூரிகள் உள்ளன. 1968-69-ல் ஏறத்தாழ 2,600 பேர் ஆசிரியர் பயிற்சி பெற்றனர். நம் பள்ளிகளுக்குத் தேவையான பயிற்சி பெற்ற ஆசிரியர்களைத் தரும் அளவிற்கு ஏற்ற நிலையில் பயிற்சிக்கல்லூரிகள் பணி புரிகின்றன. இதன் பயனாக இத்துறையில் ஆசிரியப் பஞ்சம் நீக்கப்பட்டு நிறைவு நிலை எய்தியுள்ளோம் என்பது பெருமைப்படத்தக்க வளர்ச்சியாகும்.

மாலைக் கல்லூரிகள்.

கல்லூரி, உயர்நிலைப் பள்ளிப் படிப்பைப் பெற்று வேலைக்குச் செல்பவர்கள் கரையிலாத கல்வியை மேலும் கற்க வேண்டுமென்ற ஆசையால் உந்தப்படுகின்றனர். இவர்களின் ஆசையை நிறைவேற்ற வேண்டியது நம் அரசின் கடமையன்றோ? இதற்கெனத் தொடங்கப்பட்டதுதான் தமிழகக் கல்வி வரலாற்றிலேயே புதிய திட்டமான மாலைக் கல்வித் திட்டமாகும். முதன் முதலில் சென்னையில் ஆண்களுக்காக ஒன்றும் பெண்களுக்காக ஒன்றும் என இரு கல்லூரிகளிலும், கோவையில் ஒரு கல்லூரியிலும் மாலை வகுப்புகள் தொடங்கப்பட்டன. தனியார் நடத்தும் கல்லூரிகளிலும் சென்னை, திருச்சி, மதுரை ஆகிய மூன்று இடங்களில் மாலை வகுப்புகள் தொடங்கப்பட்டன. அலுவலகங்களில் வேலை செய்பவரும் ஒருதுறைப் பட்டம் பெற்று வேற்றுத்துறைப்பட்டம் பெற விரும்பியோரும் இம் மாலைக் கல்வித் திட்டத்தால் ஈர்க்கப்பட்டதால் மாலைக் கல்லூரிகளின் எண்ணிக்கை பெருகி மாணவர்கள் பலர் பயன் பெற்றனர். கடந்த ஆண்டு 13 கல்லூரிகள் மாலை வகுப்புகளை நடத்திவந்த நிலை இன்று மேலும் பெருகி உள்ளது. சட்டக் கல்லூரி மாலை நேர வகுப்பில் படிக்கும் மாணவர்களுக்குக் கட்டணத்தை ரூ. 75-ல் இருந்து ரூ. 50-ஆகக் குறைத்திருக்கிறது.

இலவசக் கல்வியும் இதர சலுகைகளும்.

ஒரு நாடு முன்னேற வேண்டுமென்றால் அந்நாடு முதலில் அறியாமையிலிருந்து விடுபட வேண்டுமென்று தாகூர் கூறினார். அறியாமையிலிருந்து தம்மை விடுவித்துக் கொள்ள அனைவரும் விரும்பினாலும் அவர்களுக்கு உயர்கல்வி பெறக் குடும்பச் சூழ்நிலை இடமளிப்பதில்லை. பணமின்மையால் கல்லூரிக் கல்வி பெற முடியவில்லையே என்று ஏங்கியவர்களுக்கு மகிழ்ச்சி தர நம் கழக அரசு இலவசக் கல்வித் திட்டத்தை 1969-ம் ஆண்டு முதல், புகுமுக வகுப்பிற்குக் கொண்டு வந்தது. இந்தியப் பேரரசால் தரப்படும் கல்வி உதவித் தொகைகள் மாணவர்களுக்குத் தொடர்ந்து அளிக்கப்படுகின்றன. உயர் தகுதி பெற்றவர்களுக்குத் தேசியக் கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது. உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களுடைய மக்களில் தகுதி உள்ளவர்களுக்குத் தேசியக் கல்வி உதவித்தொகை, தேசியப் படிப்பு உதவிக் கடன் தொகை வழங்கப்படுகின்றன. 1969-70-ல் இத்திட்டங்களால் 2,060 பேர் பயனடைந்தனர். இந்த வகையில் நிதி உதவி பெறுவோர் தற்போது ஏறத்தாழ 7,500 மாணவர்கள் ஆவார்கள். முடவர், குருடர், செவிடர் ஆகிய உடல் ஊனமுற்றோர் படிப்பதற்கு இந்தியப் பேரரசினர் படிப்புதவி அளித்து வருகின்றனர். ஏறத்தாழ 25 பேர் தான் அந்த உதவி பெறுகின்றனர். அதிகம்பேர் உதவி பெற முடியாததால் அவர்களுக்கு உதவத் தமிழக அரசு தனித் திட்டம் ஒன்று உருவாக்கிற்று. அதன்படி 16 வயது முதல் 30 வயது வரையுள்ள உறுப்பு நலன் இழந்தோருக்கு உதவ முடிவு செய்தது. அதன் மூலம் 1969-70-ல் 112 பேர் தமிழக அரசின் உதவியால் பயன்பெற வாய்ப்பளிக்கப்பட்டிருக்கிறது.



ஆங்கிலப் பாடத்தைக் கல்லூரிகளில் கற்பிப்பதற்குத் தகுந்த ஆசிரியர்கள் கிடைப்பது அரிதாக இருப்பதால் ஆங்கிலத்தில் எம்.ஏ. படிப்புப் படிப்போருக்குப் படிப்புதவித் தொகை வழங்கும் திட்டமொன்று உருவாக்கப்பட்டது. அதன்படி 1969-70-ம் ஆண்டில் 40 மாணவர்கள் ரூபாய் 100 உதவித் தொகை பெற்றுக் கல்லூரிகளில் படித்து வருகின்றனர்.

கல்வித் தரம்.

கல்வித் தரம் குறைந்துவிட்டதாகச் சிலர் வீணாகக் குறைப்பட்டுக் கொள்கிறார்கள். பல மாநிலங்களுடன் ஒப்பிட்டுநோக்கும் பொழுது நமது கல்வியின் தரம் நன்கு வளர்ந்தே உள்ளது. 1968 முதல் பாடங்களைத் தமிழ் மொழி வாயிலாகக் கற்பிப்பதற்குரிய, தகுதியினை வளர்க்கும் பொருட்டு ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கும் திட்டம் ஏற்படுத்தப்பட்டது. அதன்படி மதுரைப் பல்கலைக் கழகம் பயிற்சி அளித்து வருகிறது. அறிவியல் பாடங்களைத் தமிழ்மொழி மூலம் கற்பிப்பதற்கு 376 பேராசிரியர்கள் பயிற்சி பெற்றனர். மேலும் இத்திட்டம் செயல்பட்டு வருகிறது. இதனால் ஆங்கிலத்தைப் புறக்கணித்துவிட்டோம் என்று எண்ண வேண்டாம். ஏனெனில் ஆங்கில மொழியினைக் கற்பிக்கும் திறனில் தேர்ச்சி பெறுவதற்கும் பிரிட்டிஷ் மன்றத்தின் உதவியுடன் ஆசிரியர் கல்லூரியில் நடைபெற்ற பயிற்சி முறையில் கல்லூரி ஆங்கில ஆசிரியர்கள் பலர் கலந்து கொண்டு பயன் பெற்றனர். மாணவர்கள் தாய்மொழி மூலம் பாடங்களைப் படித்த போதும் ஆங்கிலத்திலுள்ள மூலநூல்களைக் கற்றறிய ஆங்கில மொழித்திறன் அவசியம் தேவைப்படுகிறது. மேலும் உயர் நிலைப்பள்ளியிலிருந்து கல்லூரிக்கு வருபவர்கள் பெரும் பாலும் தமிழிலேயே அதிகத்திறன் காட்டுவதால் ஆங்கில மொழிப்புலமை நன்றாக அமையும் பொருட்டு இணைப்புப் பயிற்சி (Bridge Inteesive Course)) அளிக்கப்படுகிறது. அச்சமயத்தில் மாணவ மாணவியர்—பேராசிரியர்கள் ஆங்கிலத்தில் உரையாடியும் ஆங்கிலப்பேச்சைக் கேட்டும் பயன் பெறுகின்றனர்.

தாய் மொழிக் கல்வி :

''புரியாத மொழி புகழும் ஒருத்தி இரவில் இட்ட இன்ப ஒலியம்'' என்பார் பாரதிதாசன். அதற்கிணங்கத் தாய்மொழி மூலம் பெறுகின்ற அறிவே என்றும் நீடிக்கும் என்பதால் கல்லூரிகளில் தமிழைப் பயிற்று மொழியாக்கியது இவ்வரசு. புகுமுக வகுப்பில் 1968-69-ல், 92 கல்லூரிகளில் 13,800 மாணவர்கள் தமிழ் மூலம் அறிவியல் கல்வி பெற்றனர். 1969-70-ல் தமிழ்

பயிற்று மொழியைக் கொண்ட கல்லூரிகள் 111 ஆக உயர்ந்தன. கடந்த ஆண்டு தமிழ் மொழி மூலம் புதுமுக வகுப்பில் பயின்றோர் 19,500 பேராவர். 1967-68-ம் கல்வியாண்டு முதல் பட்டப்படிப்பிலும் தமிழ் பயிற்று மொழியாகியது. 1968-69-ல் 57 கல்லூரிகளில் பட்டப்படிப்பிற்குத் தமிழ் மொழி பயிற்று மொழியாக விளங்கியது. கடந்த ஆண்டு 94 கல்லூரிகளுக்கு இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டது. 1968-69-ல், 2,500 பேர் பட்டப்படிப்பைத் தமிழில் மேற்கொண்டனர். கடந்த ஆண்டு 3,700 மாணவர்கள் இத்திட்டத்தின் கீழ்க் கல்வி கற்றனர். புகுமுக வகுப்பில் தமிழ் மூலம் அறிவியற் பாடங்களைப் படித்த மாணவர்கள் தொடர்ந்து பட்டப்படிப்பிலும் தமிழில் அறிவியல் பாடங்களைப் படிப்பதற்கு 1969-70 முதல் வழிசெய்யப்பட்டது. பி.எஸ்ஸி. பட்டப்படிப்பிற்கு உரிய கணிதம், பொருளியல், இரசாயனம், தாவர நூல், விலங்கு நூல் ஆகிய ஐந்து பெரும் பிரிவுகளையும் தமிழில் படிக்க வாய்ப்பளிக்கப்பட்டிருக்கிறது. சென்னையில் நான்கு அரசினர் கல்லூரிகளிலும் வெளியில் மூன்று அரசினர் கல்லூரிகளிலும் ஆங்கிலத்திலும் தமிழிலும் பி.எஸ்.ஸி. பட்டப்படிப்பிற்குரிய பாடங்களைப் படிக்க வாய்ப்புள்ளது. தற்போது 1,900 மாணவர்கள் தமிழ் மொழி மூலம் அறிவியல் பட்டப்படிப்புப் படித்து வருகின்றனர்.



நூல் வெளியீடு

கல்லூரிகளில் பயிற்று மொழியைத் தமிழ்மொழி ஆக்கியதும் அங்கு படிப்பதற்கேற்ற தமிழ் நூல்கள் தேவைப்பட்டன. அறிவியல் பாடங்களுக்கு உரிய கலைச் சொற்களைத் தயாரிப்பதற்காக 1968-69-ல் ஒரு குழு அமைக்கப்பட்டது. அனைத்துப் பல்கலைக் கழகக் குழுவினர் அக்கலைச் சொற் பட்டியலைப் பார்வையிட்டு ஒப்புக்கொண்ட பின்னர் தமிழ் நூல் வெளியீட்டுக் கழகத்தினர் 55 அறிவியல் நூல்களைத் தக்க ஆசிரியர்கள் மூலம் தயாரித்து வெளியிட்டுள்ளனர். இவ்வாறு பட்டப்படிப்பினைத் தமிழ் மொழி மூலம் தடையின்றிக் கற்க வழி செய்யப்பட்டுள்ளது.

நடைமுறைக் கல்வி ஆண்டிற்கான திட்டம்

கல்லூரியில் புகுமுக வகுப்பில் சம்பளமில்லை என்ற நிலை 1969-70-ல் நடைமுறைக்கு வந்ததால் மாணவர்கள் கல்லூரிகளில் சேரப் பெரிதும் விரும்புகின்றனர். எனவே அடுத்த ஆண்டில் நான்கு புதிய அரசுக் கல்லூரிகளைத் தொடங்குதல், புகுமுக வகுப்புகளில் அதிகம்பேர் சேர வழி செய்தல், புகுமுக வகுப்புகள் மட்டும் உள்ள கல்லூரிகளைப் பட்டப் படிப்பிற்குரிய கல்லூரிகளாக உயர்த்துதல், உயர் பட்டப்படிப்பிற்குத் தேவையான பாடப்பகுதிகளைச் சில கல்லூரிகளில் தொடங்குதல் போன்றவைகளை நிறைவேற்றத் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன அறிவியல் பாடத்திற்காக மேலும் 25 நூல்கள் வெளியிடுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அறிவியல் பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்குத் தமிழ் மொழி மூலம் கற்பிப்பதற்குரிய பயிற்சியளிக்கும் திட்டம் ஒன்று நிறைவேற்றப்பட இருக்கிறது. இவ்வாறு 1970-71-ம் கல்வியாண்டுத் தேவைகளை நிறைவேற்ற வழிவகைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நமது கடமை

"நாடும் மொழியும் நமதிரு கண்கள்" என்ற சீரிய கொள்கைக் இணங்க நம்முடைய மொழியையும் நாட்டையும் காக்க வேண்டியது ஒவ்வொரு தமிழனுடைய கடமையாகும். தாய் மொழி மூலம் கல்வி கற்க வேண்டியதனுடைய அவசியத்தைப் பிற மொழி கற்றுணர்ந்த பெரியார்களான காந்தியடிகள், இராஜாராம் மோகன்ராய், பேரறிஞர் அண்ணா ஆகியோர் பெரிதும் வலியுறுத்தியுள்ளனர். அரசியல் காரணங்களால் அலைக்கழிக்கப்படாமல் கண்ணெனும் தமிழ் மூலம் கல்வி கற்று, மொழியையும் தமிழ்ப்பண்பாட்டையும் காக்க வேண்டியது நம் கடமையன்றோ?

தொட்டனைத் தூறும் மணற்கேணி: மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு

—குறள்

கைத்தறியே அணிவோம்

கவிஞர் ஆனந்தம்

பொய்யாகும் வாழ்வென்று புகல்வார் தம்மைப்
பொய்யராக்கி, ஏமாற்று புரிவோ ராக்கி
மெய்யாகும் இவ்வுலக வாழ்வே என்று
மெய்ப்பிக்க, உடலுக்கு மெய்யென் னும்பேர்!
கொய்யாத கனியான தமிழின் சான்றோர்
கூடி அந்நாள் சூட்டினரே! அக்கா லத்தே
செய்யாத அறிவார்ந்த பணியும் உண்டோ?
சிந்தித்து விடைகாணாத் தோல்வி யுண்டோ!

கையாலே பருத்தியிலே பஞ்செ டுத்துக்
கையாலே நூல் நூற்றுத் தறிய மைத்துக்
கையாலே நெய்கின்ற தொழிலை முன்னர்
கண்டுபிடித் துயர்வான முறையில் அந்நாள்
கையாளும் பெருமை சேர் தமிழர் கூட்டம்—
கடல் கடந்து வாணிபத்திற் காகச் சென்று
பையாலே பொருள் நிறைத்து மீண்டார்; அந்தப்
பழம் புகழை எண்ணிடிலோ ஏக்கந் தோன்றும்!

அயல் நாட்டார் தமிழகத்தின் மென்மை மிக்க
அழகுமிழும் பட்டாடை, பருத்தி யாடை
மயல் பொங்கத் தம்மேனி தழுவு தற்கு
மறக்கலத்தை எதிர்பார்த்துக் காத்தி ருந்தார்!
கயல் விழியார் எல்லோரும் விழையும் வண்ணம்
கை வண்ணம் காட்டிவந்தார் நமது நெய்வோர்!
முயல்வதிலே பிழையில்லை; ஆனால் இந்நாள்
முடங்கிவிட்ட கொடியநிலை காண்போ மந்தோ!

தறியருகே அமர்ந்திருகால் தாளம் போடத்
தவறாமல் இருகையால் ஊடும் பாவும்
குறியுடனே இணைத்திறுக்கி ஆடை யாக்கிக்
குறிப்பிட்ட அளவாகத் துணித்த தாலே—
அறிவுடையார் துணியென்றே அழைக்க மேலும்
அலைமவாக வெட்டிடலால் வேட்டி என்றும்
தறியமணச் சேலைதனைக் கூறை யென்றும்
நாடு முற்றும் போற்றுதலை நாமும் கண்டோம்.

ஆலையுடன் போட்டியிடத் தறியால் ஆமோ?
அற்றைநாள் தொழிலெனினும் விஞ்ஞா னத்துச்
சோலையதன் நறுமணத்தை நுகரோ மென்று
சொல்வதிலே நியாயமில்லை! எனினும் இன்று
வேலையின்றித் தறிபட்ட பாடு பட்டு.
விடியாத இருளாக வாழ்வி ழுந்து
காலையென்று வருமென்று காத்தி ருக்கும்
கதியற்ற நெசவாளர் நிலைமை என்ன?

தள்ளுபடி அதிகமாகத் தந்தும், தாமே
தக்கஉதா ரணமாகத் திகழ்ந்தும் இன்று
அள்ளுசுவைத் தமிழரசை அமைத்த மேலோர்
அன்பாலே நெசவாளர் முன்னேற் றத்தைக்
கொள்ளுவதே குறிக்கோளாய்த் திட்டம் தீட்டிக்
குறைகளைவார்! நம்மவரின் கொள்கை யாகக்
கள்ளமிலாக் கைத்தறியின் ஆடை என்றே
கையாள்வோம் நெசவாளர் ஏழ்மை கொல்வோம்.


ஒரு குழந்தை இருக்கும் போது
Happy Birthday
௨-வது குழந்தை பிறந்த பின்
நம்ம கலைவாணிக்கு நாளைக்குப் பிறந்தநாள் கேக் வாங்கணும்
கேக்கா? கடலை மிட்டாய் கேக்தான் வாங்கித் தர முடியும்
மூன்றாவது பிறந்த பின்
அம்மா! என்னையும் தூக்கிக்க
ஒரு பிள்ளையை உங்க அம்மா வீட்டிலே விட்டுட்டு வான்னு சொன்னனே! கேட்டியா?


4-வது பிறந்த பின்
அடுத்தக் குழந்தை இப்போது வேண்டாம். இரண்டுக்கு மேல் எப்போதும் வேண்டாம்.
சனியன்களே! ஏன் வீட்டை பாழடிக்கிறீங்க! எங்காவது தொலைஞ்சு போறது தானே!
௫-வது குழந்தை பிறந்த பின்
அந்த வயித்தெரிச்சலை தன் கேக்கிறீங்க!...
சாருக்கு எத்தனை குழந்தைகள்?
6-வது குழந்தை பிறந்த பின்
எனக்கு இனி மேல் காவிதான் எடுக்கணும்
உங்களுக்கும் ஏதாவது எடுத்துக் குங்க.
எனக்கு
அப்பா எனக்கும்
அப்பா எனக்கு சொக்காய்-பாவாடை எடப்பா

எதிர்காலத்தை நோக்கி இன்ப ஊஞ்சலில்

செல்வனும் செல்வியும்

வளமான வாழ்வு, எதிர்காலம் பற்றிய அச்சமில்லை, புன்னகையுடன் வருங்காலத்தை வரவேற்கக் காத்திருக்கும் இக்குழந்தைகளுக்கு மட்டும் இந்த இன்பச் சூழ்நிலை எப்படி வந்தது? பிறக்கும் போதே அதிர்ஷ்டத்தை அணைத்துக் கொண்டா பிறந்தனர்? இல்லை.

வருமுன் காக்கும் வகையறிந்த இவர் தம் பெற்றோர், திட்டமிட்டுப் பொருளைச் சேர்த்தனர், திட்டமிட்டே குடும்பத்தைக் காத்தனர். வருவாய் குறைவாக இருப்பினும், குடும்பம் விரிவாகவில்லை. திட்டமிட்ட குடும்பமே தெவிட்டாத இன்பம் என்பதை உணர்ந்து போற்றினர்; பின்பற்றினர்.

உங்கள் இன்பமும் உங்கள் குழந்தைகளின் வருங்கால இன்பமும் உங்கள் கரத்திலேயே உள்ளது. திட்டமிட்டுக் குடும்பத்தை அமையுங்கள். மட்டில்லா இன்பம் பெறுவீர்கள்.

தமிழகத்தில் பத்து லட்சம் பேர் குடும்ப நலத் திட்டத்தால் பயனடைந்துள்ளனர். வளமிக்க நிறைவாழ்வும் எழில் குன்றா இன்னுடலும் பெற்று மகிழ்கின்றனர். பெற்றோரும் குழந்தைகளும் இனிமையான எதிர்காலத்தை இப்போதே அடைந்து கொண்டனர்.

உங்கள் வாழ்வையும் குழந்தைகளின் எதிர்காலத்தையும் பாழ்படுத்திவிட வேண்டாம்; பாதுகாத்திடுங்கள்! உங்கள் மருத்துவரைச் சந்தியுங்கள்; நண்பர்களிடம் கேளுங்கள்!

குடும்ப நலத் திட்டப் பணியகத்திற்குச் செல்லுங்கள். பயிற்சி பெற்ற பணியாளர்கள் வழி காட்டுவர்; கருத்துரை தருவர், கருவிகளும் கிடைக்கும்; பயன் பெறுக!

திட்டமிட்ட குடும்பம தெவிட்டாத இன்பம்

வெளியீடு: இயக்குநர், தமிழ்நாடு அரசு செய்தி விளம்பரத்துறை, சென்னை-9

பரிசு பெறும் தொழிற்கூடம்

ஆகஸ்டு 11-ம் நாள். பம்பாய், சயான் பகுதியிலுள்ள மையத் தொழிலாளர் நிலையம் பரபரப்போடிருந்தது. மத்திய அரசு தொழிலாளர் நல அமைச்சர் திரு. சஞ்சீவையா அவர்கள், பல தொழிற்கூடங்களுக்கு, 1969-ம் ஆண்டில் விபத்தின்றி இயங்கியதற்காகப் பல சிறப்புப் பரிசுகள் வழங்கிக் கொண்டிருந்தார்.

மத்திய அமைச்சரிடம் பரிசு பெற்றவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள், சென்னை, குரோம்பேட்டையிலுள்ள போக்குவரத்து மத்தியத் தொழிற்கூடத்தைச் சேர்ந்த இருவர். அவர்கள் தொழிற்கூட நிர்வாக அதிகாரிகளோ, பொறியியல் வல்லுநர்களோ அல்ல. தொழிற்கூடம் விபத்துக்கள் எதுவுமின்றி நல்ல முறையிலே இயங்குவதற்குக் காரணமான தொழிலாளர்களின் பிரதிநிதிகள்.

ஒருவர் தொழிற்கூடத்தில் தச்சு வேலை பார்க்கும், திரு சாரங்கபாணி. மற்றவர், இருக்கைகளை இணைக்கும் பிரிவைச் சேர்ந்த திரு. தர்மன்.

பரிசுகள் பெறுவதற்கான பணியாளர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்புவதில் புரட்சிகரமான மாறுதலை ஏற்படுத்தியுள்ள



இந்தப் போக்குவரத்து மத்திய தொழிற்கூடம், விபத்தின்றி இயங்கியதற்காகப் பரிசுபெறுவது இது முதல் தடவை அல்ல. மாநில அரசிடமிருந்து நான்கு தடவைகளும், மத்திய அரசிடமிருந்து ஆறு தடவைகளும் இப்பரிசினைத் தட்டிச் சென்றுள்ளது இந்தத் தொழிற் கூடம்.

மத்திய அரசிடம் இந்த ஆண்டு வாங்கியது நான்கு பரிசுகள். ஒரு சுழற் கேடயமும், மூன்று கோப்பைகளும் ஒவ்வொன்றும் ரு. 2,500 ஆக நான்கு பரிசுகளுக்கும் ரு. 10,000 ரொக்கமும், அந்தப் பரிசுகளாகும். அடிக்கடி விபத்து நேராமை, ஒரு விபத்திற்கும் அடுத்த விபத்துக்குமிடையே நீண்ட இடைவெளி, அதிக சதவீதம் விபத்துக்களைக் குறைத்தது. எல்லாவற்றையும் சேர்த்து ஆகிய நான்கு வகைகளிலும் முன்னணியில் நின்றதில் இந்தப் பரிசுகளைப் பெற்றது, இந்தத்தொழிற்கூடம்.

தமிழ்நாடு அரசின் தொழிற்கூடமான இதில், முக்கியமாக நடைபெறும் பணி, பேருந்துகளுக்கான மேற்பகுதியினை (பாடி) அமைப்பது. லேலாண்ட், பென்ஸ் ஆகிய அடித்தளங்களைப் (சேசிஸ்) பயன் படுத்தித் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்திற்காக மாதந்தோறும் சுமார் 40 பேருந்துகளை உருவாக்குகிறது. இந்தத் தொழிற்கூடம்.

1948-ல் தொடங்கப்படும் போது மாதம் இரு பேருந்துகளையே உருவாக்கி வந்த இந்தத் தொழிற்கூடம் தற்போதுமிகவும் விரிவடைந்து, மேற்பாகம் அமைப்பதோடு மட்டும் நின்றுவிடாமல் பேருந்துகளின் இயந்திரங்களைப்பழுதுபார்ப்பதுபோன்ற பணிகளையும் செய்கிறது. இங்கு மாதந்தோறும் சுமார் 50இயந்திரங்கள் பழுதுபார்க்கப்படுகின்றன.

வெளியூர்களுக்குச் செல்லும் விரைவு வண்டிகள், மாடிபஸ்கள், சென்னை நகருக்கான பேருந்துகள், இருவண்டிகள் (டிரெயிலர்), நின்று பயணம் செல்லும் வண்டிகள் இங்கு தயார் ஆகின்றன.

அதோடு, போக்குவரத்துத் துறைக்கான பேருந்துகளைமட்டுமின்றி, காவல்துறைக்கான வண்டிகள், மருத்துவத் துறைக்கான

கர்ப்பம் ஏற்பட்டுவிடுமே என்று அச்சமின்றி இல்லற வாழ்க்கையை இன்பமாக அனுபவியுங்கள்.

குடும்பக் கட்டுப்பாட்டிற்கு மிகவும் பத்திரமான முறை ஆண்களுக்கு இப்பொழுது உண்டு. அதுதான் நிரோத்

ஆடவர்களின் உபயோகத்திற்கு உகந்த உயர்தரமான குடும்பக் கட்டுப்பாடு சாதனம்.

நிரோத்

குடும்பக் கட்டுப்பாட்டிற்கு

மூன்றின் விலை 15 பைசா
அரசாங்க ஆதரவு விலையில்
கிடைக்கிறது.

davp 69/104

நீதிமன்றங்களில் தமிழ்

பழைய சட்ட மன்ற உறுப்பினர் விடுதியைச் சரியாக பதினொரு மணி முப்பது மணித்துளிகள் அளவில் நானும் என் நண்பரும் சென்றடைந்தோம். சட்டத்தை இயற்றும் மக்கள் பிரதிநிதிகள் தங்கும் பழம்பெரும் இல்லத்தில்தான் சட்டத் துறை ஆட்சி மன்ற ஆணைக் குழு அமைந்துள்ளது. அனுமதி பெற்றவண்ணம் குழுச் செயலுறுப்பினர் சண்முக சுப்பிரமணியனாரைப் பேட்டி கண்டோம்.

“ நீதி மன்றங்களில் தமிழ் ” செயல் பட இதுகாறும் எடுத்த நடவடிக்கை பற்றிக் கூறலாமா” என்று கேட்டோம்.

“தமிழ் ஆட்சி மொழியாக வேண்டுமெனில் நீதிமன்ற மொழியாகத் தமிழ் விளங்க வேண்டும். நீதி மன்றங்களில் சாட்சியங்கள் பதிவதும் தீர்ப்புகள் எழுதுவதும் ஆங்கிலத்திலேயே அண்மைக்காலம் வரை இருந்தது. சில மாதங்கட்கு முன் மாவட்ட நிலையில் உள்ள சாட்சியங்களைத் தமிழிலேயே பதிய வேண்டுமென்று அரசு உத்தரவிட்டுள்ளது” என்று பதிலளித்தார்.

“தமிழ் தெரியாத சாட்சிக்கோ.... பயிற்சியில்லாத நீதிபதிக்கோ இது இடர் விளைவிக்காதா?”

“அத்தகைய இடர் ஏற்படாத வகையில் சாட்சியம் அளிக்கப்படும் மொழியிலேயே அதைப்பதிவு செய்யலாமென்றும், நீதிபதிக்குத் தமிழில் போதிய பயிற்சி இல்லாமலிருந்தால் குறிப்பிட்ட காலத்திற்கு ஆங்கிலத்திலேயே சாட்சியத்தைப் பதிவு செய்யலாமென்றும், உற்ற பொருளைத் தக்க முறையில் உணர்த்துவதற்குத் தேவையென நீதிபதி கருதினால் அந்தந்தச் சொற்களை ஆங்கிலத்திலேயே எழுதலாமென்றும் உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த முறை இப்பொழுது வெற்றியுடன் நடை பெறுகிறது. என்று பெருமிதத்துடன் சொன்னார்.

“தீர்ப்புகளைத் தமிழில் எழுத வேண்டுமென்பது அரசின் மற்றொரு குறிக்கோள். இதற்கென்று நல்ல தீர்ப்புகளை எழுதுவோர்க்கு ரூ. 5,000 பரிசளிப்பும் அரசு அளிப்பது இங்கு குறிப்பிடத்தக்கது”

ஆட்சி மன்றக் குழு ஏதாவது நூல் வெளியிட்டுள்ளதா என்ற கேள்விக்கு விரைவில் ‘ மாதிரித் தீர்ப்புகள் நூல் ’ ஒன்று வெளியிட இருக்கிறோமென்றார்.

நீதி மன்ற மொழியாகத் தமிழ் ஆவதற்கு முக்கியமான தேவை சட்டங்களைத் தமிழில் மொழி பெயர்ப்பது. இவ்வாணைக் குழு சட்டங்களை மொழி பெயர்க்கும் முக்கிய பணியில் ஈடுபட்டுள்ளது என்றும் இந்திய அரசமைப்புச் சட்டத்தை இப்பொழுது தமிழாக்கம் செய்துவருகிறது என்றும் சொன்னார். ‘இது போன்ற பணிகள் அண்டை மாநிலங்களில் உள்ளனவா?’ என்று கேட்டதற்கு “ ஆம் ” என்றார். “மத்திய அரசும் இதற்கென ஓர் ஆணைக் குழுவை நியமித்துள்ளது. மற்றொரு நூல் ஒன்றும் வெளியிட இருக்கிறோம்” என்று சொன்னார். அதாவது “Law Reports” “ தூய தமிழில் என்ன சொல்லலாம்? என்று எங்களைப் பார்த்துக் கேட்டார். குறிப்பாக உடன் இருந்த தமிழ் எம்.ஏ. நண்பரைப் பார்த்துக் கேட்டார், அவரே யோசித்து “ தீர்ப்புக் கோவை ” யென்றார். உடன் இருந்த தமிழாசிரியரும் எழுத்தாளருமான என் நண்பர் அருமையான மொழி ஆக்கம் (“தீர்ப்புக் கோவை ”) என்று பாராட்டினார். “ எல்லாம் முயற்சியும்—ஆர்வமும் தான்” என்றார் சட்டத் துறை சண்முக சுப்பிரமணியனார். தமிழக உயர்நீதி மன்றத்து முக்கியமான தீர்ப்புகளும், உச்ச நீதிமன்றத்தின் முக்கியமான தீர்ப்புகளும் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு, வெளியிடப்படுமென்றும்; இம்முயற்சியால் தமிழ் நல்ல முறையில் உருவாகி மக்களிடையே

குறளகம் சென்னை.1
கதர்-கைத்தொழில் அங்காடி
தொலைபேசி எண்கள்: 26762 21552 21553
கைவண்ணப் பொருள்களின் களஞ்சியம்
உங்களுக்கு வேண்டிய எல்லாமே இங்கே கிடைக்கும்

பரவும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது என்றும் தெரிவித்தார்.

“சட்டக்கல்வி தமிழில் வருவது அவசியமா? தமிழ் நீதிமன்றங்களில் வருவதால் வழக்கறிஞர்கள் வருமானம் குறையாதா?”

சட்டக்கல்வி தமிழில் அவசியமே. விஞ்ஞான நூல்களுக்கும் சட்ட நூல்களுக்கும் அடிப்படை வேறுபாடு உண்டு. விஞ்ஞான நுட்பச் சொற்கள் பலப் பலப் புதிய பொருள்களைக் குறிக்கின்றன.

“சட்டத்திலே ஆங்கிலத்தில் நுட்பச் சொற்கள் இருந்தாலும், அச்சொற்கள் புதிய கருத்துக்களையே குறிக்கின்றன. அக்கருத்துக்களைத் தெளிவாக தமிழிலே கூற இயலும். சட்டக் கல்லூரி மாணவர் பலரை நான் கண்டு பேசும்பொழுது ஓர் உண்மை வெளியானது. தாய் மொழியில் சட்டக் கருத்துக்கள் அவர்களுக்குப் போதிக்கப்பட்டால் அவற்றை எளிதில் புரிந்து கொள்வதோடு, மீண்டும் எடுத்துச் சொல்வதிலும் அவர்கள் எளிதில் திறமை பெறுவார்கள் என்பது தான். அந்நிய மொழியில் அருங் கருத்துக்களைக் கற்க முயலுகையில் கருத்துக்களை விடக் கடினமாக மொழி இடையில் இருக்கிறது. அம் மொழியைக் கற்கும் முயற்சியிலே மொழியில் அடங்கியுள்ள கருத்து பின்னணிக்குச் சென்று விடுகிறது. எனவே அந்த மொழியில் அடங்கியுள்ள பொருள் நன்கு விளங்காத நிலையில் நின்று விடுகிறது. தாய் மொழியில் அருங் கருத்துக்களைக் கற்கும் பொழுது இந்த இடர்ப்பாடு எழுவதில்லை. அருங்கருத்தும் அதைக் கூறும் மொழியும் இணைந்து புரிகின்றன மாணவர்களுக்கு. எனவே சட்ட அறிவு பெற நேர்மையான நீதி முறையை நாம் அடைந்திடத் தமிழில் சட்டக் கல்வி தேவை.”

“இங்கிலாந்து நாட்டிலே ஆங்கிலேயரின் தாய் மொழியாம் ஆங்கிலத்தில் தான் சட்டங்கள் எழுதப்பட்டன. நீதி மன்றமும் நடைபெறுகிறது. நம் நாடு போன்றே அங்கு வழக்கறிஞர் அதிகவருமானம் பெறுகின்றனர். பொது மக்கள் நேரடியாக வழக்கிடுவது முடிவதில்லை. தமிழில் சட்டம் இருந்து விட்டால் மட்டும் சட்ட ஞானம், சட்ட நுண்ணறிவு. வழக்கிடும்—வாதாடும் நெறியும் முறையும் எல்லோர்க்கும் தெரிந்து விடும் என்ற எண்ணம் முற்றிலும் முரண்பாடானது. சட்டம் படித்தவர்களுக்கே இது தெரியும். வழக்கறிஞர் வருவாய் குறைய வழியில்லை” என்று தெளிவாக விளக்கினார்.

‘நீதிமன்றங்களில் தமிழ்’ பற்றி இறுதியாகத் தாங்கள் கூறும் கருத்து என்ன என்று கேட்ட பொழுது “நீதி வழங்கப்பட்டால் மட்டும் போதாது. வழங்கப்படுவது நீதிதான் என்பதை எல்லாரும் உணர்ந்து கொள்ளும் வகையில் அது வழங்கப்பட வேண்டும்” என்பது. இந்த உயர்ந்த கொள்கையைச் செயல்படுத்தும் வகையிலே நீதிமன்ற மொழியாகத் தாய் மொழியான “தமிழ்” இருக்கவேண்டுமென்ற உறுதியான கொள்கையைத் தமிழக அரசு பின்பற்றுகிறது. இக்கொள்கையை நிறைவேற்றுவதே இந்த ஆணைக் குழுவின் தலையாய பணியாகும் எனக் கூறி முடித்தார்.

“நன்றி” என்ற நல்ல சொல்லோடு பேட்டி முடிந்து செயலாளர் சண்முக சுப்பிரமணியனிடமிருந்து நாங்கள் விடை பெற்றோம்.

தமிழ்நாட்டிற்கே முதலிடம்

இந்தியாவெங்கும் 1968-69-ம் ஆண்டில் நடத்தப்பெற்ற 850 தேசிய செயல் விளக்கத் தலைகளில், தமிழ் நாட்டில் நடத்தப்பெற்ற தேசிய செயல் விளக்கத் தலையே அதிக மகசூல் அளித்துள்ளதாக, மத்திய அரசின் உணவு வேளாண்மைத் துறை அறிவித்துள்ளது.

அதிக மகசூல் அளித்துள்ள அத்தேசிய செயல் விளக்கத் தலை கோவை மாவட்டம், குருடம்பாளையம் கிராமத்தில் திரு. வி. சி. ரெங்கசாமி என்ற உழவர் பெருமகனது வயலில் அமைக்கப்பட்டதாகும். அதில் ஐ. ஆர். 8 நெல்—“ஹை ஸ்டார்ச்” மக்காச் சோளம்—ஐ. ஆர். 8 நெல் என்று தொடர்ந்து 3 பயிர் செய்யப்பட்டது. அம் மூன்று பயிரும் முறையே ஹெக்டருக்கு (2.47 ஏக்கர்) 10,164 கிலோ, 2,840 கிலோ, 10,374 கிலோ மகசூல் அளித்துள்ளன.

மூன்று பயிரின் மூலமாக ஹெக்டருக்கு 23,378 கிலோ விளைவித்து, தமிழ் நாட்டிற்குப் பெருமை தேடித்தந்த திரு. வி. சி. ரெங்கசாமி அவர்களையும், அந்தத் தேசிய செயல் விளக்கத் தலையை நடத்திய வேளாண்மைத்துறை அலுவலர்களையும் பாராட்டுகின்றோம்.



ஆம்புலன்ஸ் வண்டிகள், தீயணைக்கும் படைக்கான வண்டிகள், சிறு சேமிப்பு, வனவளத்துறை போன்ற அரசின் பல்வேறு துறைகளுக்கும் வண்டிகளை அமைத்துத் தருகிறது.

மத்தியப் பிரதேசத்திற்கு 14 வண்டிகளையும், அந்தமான் தீவிற்கு ஒரு வண்டியையும் அமைத்துக் கொடுத்த பெருமையும் இந்தத் தொழிற் கூடத்திற்கு உண்டு.

சென்னை, குரோம் பேட்டையில் 28 ஏக்கர் நிலத்தில் அமைந்துள்ள இந்தத் தொழிற்கூடம், ஆசியாவிலேயே இது போன்ற மிகப்பெரிய தொழிற்கூடங்களில் ஒன்றாகும். இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள அரசின் போக்கு வரத்துத் தொழிற்சாலைகளில் இதுவே பெரிது.

கையிழந்தவர், கண்பார்வையில்லாதவர் சிலரையும் வேலையில் சேர்த்துள்ள இந்த நிறுவனம், ஊனமுள்ளோரை அதிக அளவில் சேர்த்துள்ளதற்காகவும் பரிசு பெற்றுள்ளது.

பேருந்தின் மேற்பாகம் அமைப்பதற்குத் தேவையான இரும்புத் தகடுகள், இருக்கைக்கான ரப்பர்கள், தோல்கள், பிளாஸ்டிக்குகள், குழாய்கள் ஆகியவற்றை மட்டுமே வெளியே வாங்குகின்றனர். அதுவும் சென்னை, மற்றும் சுற்றுப் புறத்திலுள்ள நிறுவனங்களிலிருந்தே வாங்கப்படுகின்றன. மற்றப்படி பேருந்துகளின் தேவைக்கேற்ப இந்தப் பொருள்களை வெட்டி இணைப்பது, இருக்கைகளைத் தைப்பது, மின்சாரப் பகுதிகளை இணைப்பது போன்ற எல்லாப் பணிகளையும் தொழிற்கூடமே செய்கிறது.



உதாரணமாக, வெளியில் 11 ரூபாய் செலவில் வாங்க வேண்டிய அலுமினியக் கைப்பிடிகளை இங்குசுமார் 5 ரூபாய் செலவில் செய்துவிடுகின்றனர். வெளியிலிருந்து மேற்பாகம் அமைப்பதைவிட இங்கேயே கட்டுவதால் சுமார் 20 சதவீத லாபம் கிடைக்கிறது என்று தெரிவித்தார் தொழிற் கூடப் பணிமேலாளர்.

ஆயிரம் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் இந்தத் தொழிற்கூடத்திலுள்ள கட்டடங்களின் மதிப்பு சுமார் மூன்று இலட்சம் ரூபாய். யந்திரங்களின் மதிப்பு சுமார் பத்தரை லட்சம். பொருட்களின் (ஸ்டோர்ஸ்) மதிப்பு சுமார் நாற்பது லட்சம்.

ஆறு ஆண்டுகள் வரை ஓடக்கூடிய இந்தப் பெரிய பேருந்துகளின் விலை (சேசிஸ் சேர்ந்து) எவ்வளவு இருக்கும் தெரியுமா? சுமார் ஒரு இலட்சம் வரை. (ஆந்திரத்தில் பேருந்துகளுக்குத் தீவைத்துக் கொளுத்துவோர் கவனிக்க!)

இந்தத் தொழிற்கூடத்தில் தொழிலாளர் நலத்திலும் சிறப்பான கவனம் செலுத்தப் படுகிறது. உணவுக்கூடம், பொழுது போக்குக்கூடம் ஆகியவை இங்கு உண்டு. அதோடு பேருந்துகளை விரைவில் அமைக்கும் தொழிலாளர்களுக்கு ஊக்க போனசும் வழங்கப்படுகிறது. சென்ற ஆண்டில் மத்திய அரசு அளித்த ரொக்கப் பரிசுத் தொகை முழுவதும் தொழிலாளர்களுக்கே பிரித்து வழங்கப் பட்டது.

கண் பார்வை இழந்தவர் பணியாற்றுகிறார்.

ஆக்கப் பணியில் ஈடுபட்டு வளர்ந்தோங்கி வரும் இத்தொழிற்கூடம், அரசு நிறுவனங்களில் முன் மாதிரியாக விளங்கி வரும் என்பதில் ஐயமில்லை.

ரூ. 3,000

சென்ற ஜூலைத் திங்கள் 5-ம் நாள், இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள திருப்பத்தூரில் ஒரு சாதனை நிகழ்ந்தது. ரூ. 3,000 செலவில் கட்டப்பட்டுள்ள மலிவு விலை வீடுகளை அன்று, தமிழக கூட்டுறவு அமைச்சர் திரு. சி. பா. ஆதித்தனார் அவர்கள் தலைமையில் தமிழக தொழில் அமைச்சர் திரு. செ. மாதவன் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

இந்தியா சிமெண்ட் நிறுவனத்தால் கட்டப்பட்ட இந்த வீடுகள் வசதியானவை—உறுதியானவை. இந்த வீட்டில் ஒரு புழக்க அறை, ஒரு சமையல் அறை, முன் வராந்தா, குளியல் அறை யாவும் உள்ளன.

வீட்டின் சுவர்கள் 5 சதவீதம் சிமெண்டு கொண்ட மண் காங்கிரீட்டால் செய்யப்பட்ட பிளாக்குகளால் கட்டப் பட்டவை. வாசற்கால், சன்னல் கால், கூரை முதலியவை வார்த்தெடுத்த உறுப்புகளால் செய்யப்பட்டிருந்தன. மரத்துக்குப் பதில், வார்த்தெடுத்த காங்கிரீட் உபயோகிப்பதால் அதிக வலுவும், நெடுநாள் உழைக்க கூடியதுமான பாகங்கள், குறைந்த விலையில் கிடைக்கின்றன. மரத்தினாலான வாசற்கால்களை விட இவை மலிவானவை.



மேலும், இவை கறையான்களாலும், தீ விபத்துக்களாலும் பாதிக்கப்படமாட்டா.

நல்ல முறையில் தயாரித்தால் வேலைத் தளத்தில் வெகு விரைவில் இவைகளை ஒன்று சேர்க்க முடியும். நிர்மாணிக்க ஆகும் நேரம் குறைவதால், மேற்பார்வை, காவல், கண்காணிப்பு, சேமித்து வைத்தல் முதலிய இனங்களில் செலவும் குறைகின்றது.

வழக்கமாகவுள்ள முறையில் கட்டும் வீடுகளுக்கு சதுர அடிக்கு இருபதுரூபாய்வரையில் செலவாகும். ஆனால் இந்த வகை வீடுகள் கட்ட சதுர அடிக்கு ஆகும் செலவு சுமார் ரூ.10 தான்.

இந்த வகை வீடுகள், கிராம மக்களின் தேவைகளை மனத்தில் கொண்டு நிர்மாணிக்கப் பட்டுள்ளன.

தமிழ் நாடு அரசு

வேலைவாய்ப்பு, தொழிற் பயிற்சித் துறை

பொது அறிக்கை

1961-ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட தொழிற் பயிற்சிச் சட்டத்தின் 8(3)-வது பிரிவின்படி, தொழில் நிறுவனங்கள் குறிப்பிட்ட எண்ணிக்கையளவிற்கு இளைஞர்களைச் சேர்த்துத் தொழிற் பயிற்சி அளிக்க வேண்டும் என அரசினரால் விடப்பட்ட வேண்டுகோள் புறக்கணிக்கப்பட்டுள்ளது. 28–1–70-ல் (ஜே1/1722/70) அரசின் தொழிற்பயிற்சி ஆலோசகரால் இறுதி வேண்டுகோள் விடப்பட்டது. அதன் பின்னரும், முன்னேற்றம் காணப்படவில்லை. பயிற்சிக்கு வாய்ப்பளிக்க வேண்டிய காலகட்டமான 1970 பிப்ரவரித் திங்கள் வரையிலும் எவ்வித மாற்றமும் இல்லை.

மேற்கண்ட சட்டத்தின் 30-வது பிரிவுப்படி, அரசின் கட்டளையைத் திட்டமிட்டுப் புறக்கணித்து வரும் தொழில் நிறுவனங்களின் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நினைவுறுத்துகிறோம். அத்தகைய சூழ்நிலையைத் தொழில் நிறுவனர்கள் ஏற்படுத்தமாட்டார்கள் என்ற நம்பிக்கையையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

தொழிற் பயிற்சிக்குரிய இளைஞர்களைச் சேர்க்கும் பொறுப்பு நிறுவனங்களைச் சார்ந்ததே. தகுதியுடைய பயிற்சியாளர்கள் போதிய அளவு கிடைக்கவிலர் என்ற நிறுவனங்களின் சமாதானம் சட்டப்படி ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகும்.

பயிற்சி பெறுவோரைச் சேர்த்துக்கொண்டவுடன், அவர்களிடமிருந்து, உரிய விண்ணப்பத் தாள்களில் ஒப்பந்தம் பெற்று அரசின் தொழிற் பயிற்சி ஆலோசகருக்கு அனுப்பப்படவேண்டும். ஒப்பந்த நகல் மூன்று தேவை. இவ்வாறு ஒப்பந்தமளிக்காத யாருக்கும் பயிற்சியளிப்பது சட்டத்தின் 31-வது பிரிவின்படி தண்டனைக்குரியதாகும்.

பயிற்சி தொடங்க வேண்டிய சமயத்தில் தொழில் நிறுவனங்கள் செய்தித்தாளில் போதிய அளவு விளம்பரம் செய்ய வேண்டும். அத்துடன், அண்மையிலுள்ள வேலைவாய்ப்பு அலுவலர்கள், தொழிற் பயிற்சி நிலைய முதல்வர்கள் ஆகியோரின் ஒத்துழைப்பினையும் பெற்றுத், தேவையான பயிற்சியாளர்களைத் தொழிலகங்கள் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

இயக்குநர்,
வேலைவாய்ப்பு, தொழிற் பயிற்சித் துறை,
தமிழ் நாடு அரசு.

மேலும் அன்று மாநிலம் முழுமையிலுமாகத் தேர்தல் நடைபெற்ற ஊராட்சி மன்றங்களின் எண்ணிக்கை ஒரு சில ஆயிரங்களேயாம்; அவ்வாறிருந்தும் உறுப்பினர் தேர்தல் ஆறு மாத அளவிற்கும் அதற்கு மேலும் கூட நடைபெற்றது.

இம்முறை, வாக்களிக்கத் தகுதியாளரின் எண்ணிக்கை ஏறத்தாழ 190 இலட்சங்களாகும். அவர்கள் ஏறத்தாழ 1,30,000 உறுப்பினர்களையும், 13,000 தலைவர்களையும் தேர்ந்தெடுக்க வேண்டியிருந்தது. வாக்காளர்கள், வாக்குகளைப் பதிவு செய்வதற்காக ஏறத்தாழ 48,000 வாக்குச் சாவடிகள் நிறுவப்பட்டன. அவற்றுள் 46,000 வாக்குச் சாவடிகள் நிலையான கட்டடங்களிலும், எஞ்சியவைகள் தற்காலிக அமைப்புகளிலும் நிறுவப்பட்டன. ஊராட்சி மன்ற வேட்பாளர்கள் தமக்கு ஆதரவு தேடி வாக்காளர்களிடையே பிரச்சாரம் செய்து கொள்ள இரண்டு முழு நாட்கள் இருக்கும் வண்ணம் தேர்தல் விதிகளில் தக்க திருத்தங்கள் செய்யப்பட்டன. வேட்பாளர்கள் தங்கள் வேட்பு மனுவைத் தாக்கல் செய்வதற்கும், தேர்தலுக்கும் இடையே ஊராட்சித் தேர்தல்களைப் பொறுத்தவரை இரண்டு நாட்கள் மட்டுமே இடைவெளி இருந்ததால், வாக்குச் சீட்டுகளை முன்கூட்டியே சென்னை அரசு அச்சகத்தில் அச்சிட்டு வைத்துக் கொள்ள வேண்டியதாயிற்று. உறுப்பினர், தலைவர் தேர்தல் ஒவ்வொன்றுக்கும் மூன்று வரிசைகளாக ஏறத்தாழ ஆறுகோடி வாக்குச் சீட்டுகள் அச்சடிக்கப்பட்டு இரண்டு மாத அளவிற்கும் குறைவான கால எல்லையில் மாவட்டங்களுக்கு அனுப்பப்பட்டன. உறுப்பினர், தலைவர் தேர்தலுக்கான வாக்குச் சீட்டுகளை வாக்காளர் பிரித்தறியும் வண்ணம், உறுப்பினர் தேர்தலுக்கான சீட்டு வெள்ளை நிறத்திலும், தலைவர் தேர்தலுக்கான சீட்டு இளஞ்சிவப்பு நிறத்திலும் அமையுமாறு அச்சடிக்கப்பட்டன. வாக்குச் சீட்டுகள், அனைத்திந்தியக் கட்சிகளுக்கும் மாநிலக் கட்சிகளுக்கும் ஒதுக்கப்பட்ட சின்னங்களைத் தவிர்த்துப், போதுமான வேறு பொதுவான சின்னங்களையே கொண்டிருந்தன.

உறுப்பினர்கள் தேர்தலில் ஒரு சில முக்கிய மாற்றங்கள் செய்யப்பட்டன. ஆள் மாறாட்டம் நேராதிருப்பதற்காக வாக்காளர்களின் விரல்களில் அழிக்கமுடியாத மை இடப்பட்டது. மற்றொரு மாற்றம், கண்ணற்றவரும், உறுப்புக் குறைபாடுடையவரும் வாக்களிக்கும் முறை பற்றியது. சட்ட மன்றத் தேர்தலைப் போலவே, வாக்காளரில் ஒருவர் வாக்குச் சீட்டில் குறியிட இயலா நிலையிலிருந்தால் தனக்குத் துணை செய்வதற்காக 21 வயதுக்குக் குறையாத ஒருவரை உடன் அழைத்துச் சென்று வாக்குச் சீட்டில் பதிவு செய்து பெட்டியில் போட அனுமதிக்கப்பட்டனர்.

ஊராட்சி ஒன்றியங்களுக்குரிய தலைவர் தேர்தல் முடிவடைந்து விட்டது. ஊராட்சி ஒன்றியக் கூட்டத்தைக் கூட்ட ஏழு முழு நாட்களுக்கு முன்னதாக அறிவிப்புத் தர வேண்டும் என்ற சட்டம் வரை, மறுக்கப்பட்டு எவ்வளவு விரைவில் தொடங்கமுடியுமோ அவ்வளவு விரைவாக ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் தேர்தல் தொடங்கப் பெற்றது. கோட்ட ஆட்சித் தலைவர்களே பதவி முறையிலான தலைவர்களாக இருந்து தேர்தல்களை நடத்த வேண்டி உள்ளமையால், தேர்தல் பரவலாக நடத்தப்பட வேண்டியதாயிற்று. சில கோட்ட ஆட்சித் தலைவர்களின் எல்லைக்குள் 8 லிருந்து 12 ஒன்றியங்கள் வரை இருந்தமையாலும் (உதாரணம் : பொள்ளாச்சி—12, இராணிப்பேட்டை 11, நாமக்கல்— 11, ஈரோடு—11 சிவகாசி—11) இவ்வனம் தேர்தல் பரவலாக்கப்பட வேண்டியதாயிற்று. தேர்தலுக்குரிய நாட்கள், கோட்ட ஆட்சித் தலைவர்களால், அவர்களுடைய நடைமுறை வசதிக்கேற்ப முடிவு செய்து கொள்ளப்பட்டன.

> இதயத்திலே எழுகின்ற பரிசுத்தமான ஆசை எதுவும் நிறைவேறாமல் போவதில்லை. ஏழை எளியவர்களுக்குத் தொண்டு புரிய வேண்டும் என்பது என் உள்ளத்தில் எழுந்த ஆசை. அந்த ஆசை என்னை ஏழைகளிடம் கொண்டு சேர்த்தது. அவர்களோடு சரிசமமாகக் கலந்து பழகி, அவர்களில் ஒருவனாகிவிடும் சக்தியையும் தந்தது.
>
> —காந்தியடிகள்

தேர்தலை நடத்துவதற்கு அமைத்த திட்ட முறையினைக் கடவாமல், தேர்தல் பல படிநிலைகளிலும் மிக விரைந்து நடந்தேறியது, குறிப்பிடத்தக்க ஒரு சிறப்பாகும். 1965-ஆம் ஆண்டு நடைபெற்ற ஊராட்சி மன்றத் தேர்தல்களுடன் இதை ஒப்பிட்டுப் பார்க்கும்போது மிகத் தெளிவாகப் புலனாகும். அப்போது புதிதாகத் தேர்ந்தெடுக்கப் பட்ட உறுப்பினர்கள் தம் பொறுப்புகளை 2—2—1965 அன்று ஏற்றனர், அவர்களிடையே நடத்திக் கொள்ள வேண்டிய தலைவர்கள் தேர்தல் இரண்டு முறை தள்ளிவைக்கப்பட்ட பின் முடிவாக 1965 ஏப்ரல் திங்கள் இடையில்தான் நடைபெற்றது. அவ்வாறே ஊராட்சி ஒன்றியக்குழு உறுப்பினர் பொறுப்பேற்பதற்குரிய நாள், முதலில் 14—2—1965 என்று முடிவு செய்யப்பட்டது. பிறகு அது மாற்றப்பட்டு அந்நாள் 20—4—1965 எனக் கொள்ளப்பட்டது. இதன் விளைவாக 1965 பிப்ரவரி 22 முதல் 25-க்குள் நடத்தி முடிக்கப்பட வேண்டிய ஊராட்சி ஒன்றியத்தலைவர்கள் தேர்தல் 1965 ஏப்ரல்இறுதியில் நடைபெற வேண்டியதாயிற்று.

இவற்றிலிருந்து கடந்த தேர்தல்களில் உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களால் தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதற்கும். இடையே நெடிய காலக்கழிவு உண்டாயிற்று என்பது வெளிப்படை. அக்காலக் கடப்புகள் இம்முறை வெல்லப்பட்டன; தள்ளப்பட்டன.

எல்லோரும் விரும்புவது,
மேன்மையானது, முதன்மையானது

அசோக் லேலண்ட் காமெட்...பயணிகள் போக்குவரத்திற்கு. இந்தியா முழுவதும் அரசினர் போக்குவரத்து நிர்வாகங்கள், மற்ற போக்குவரத்து நிர்வாக உரிமையாளர்கள் விரும்பித் தேர்ந்தெடுப்பது.

சிறப்பான காரணங்கள்

அடிக்கடி நிறுத்திச் செல்வதாயிருந்தாலும் நெடுந்தூரம் செல்வதாயிருந்தாலும், ஏற்படும் பளுவைச் சுலபமாக சமாளிக்கிறது.
அதன் பூரண ஏர்ப்ரேக்குகள் பத்திரமாகவும் உடனடியாகவும் நிறுத்த வகை செய்யும். பராமரிப்புச் செலவு மிக குறைவு...மாற்று உறுப்புகளின் தேவை சொற்பம்...பழுதுகள் ஏற்படுவதில்லை. எண்ணைச் செலவில் மிகச் சிக்கனம்.
இப்போது அறிவீர்கள்...அது சக்தி மிக்க, பத்திரமான வண்டி என்பதையும் அதிக பளு ஏற்றிச்செல்ல சளைக்காதது என்பதையும்.

இதையே வாங்குங்கள். ஓர் அணியையே உருவாக்குங்கள். இதற்காக வருந்தமாட்டீர்கள்
வன்மை...நம்பகம்...சிக்கனம்
உள்ள
அசோக் லேலாண்ட் காமெட்

தயாரிப்போர்: அசோக் லேலண்ட் லிமிடெட், எண்ணூர், சென்னை 57

ஊராட்சித் தேர்தல்

ஒரு கண்ணோட்டம்

கடந்த 1965ம்-ஆண்டு ஜனவரி-பிப்ரவரித் திங்களில் தமிழ் நாட்டில் ஏறத்தாழ 13,000 ஊராட்சிகளுக்கான தேர்தல்கள் நடைபெற்றன. அப்போது தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் பதவிக்காலம் 2-2-1970 உடன் முடிவுற்றது. ஊராட்சித் தேர்தலுக்கெனத் தனி வாக்காளர் பட்டியலைத் தயாரித்து வெளியிடுவதற்கும், ஊராட்சி மன்றத் தலைவர்களை நேரடியாக இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தேர்ந்தெடுக்கத்தக்கவாறு 1958ஆம் ஆண்டு தமிழ் நாடு ஊராட்சிச் சட்டத்தில் திருத்தம் செய்தற்கும் சட்டபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளச் சிறிது காலம் தேவைப்பட்டதால், அவ்வுறுப்பினர்களின் பதவிக்காலம் ஆறு திங்கள் அளவிற்கு நீட்டிக்கப்பட்டது. பதவிக் காலத்தை நீட்டித்ததற்கு வேறொரு முக்கியக் காரணமும் உண்டு. தமிழ் நாட்டின் மற்றப் பகுதிகளில் உள்ளது போலல்லாது கன்னியாகுமரி மாவட்டத்திலும் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த செங்கோட்டை வட்டத்திலும் ஊராட்சி அமைப்புமுறை மாறுபட்டிருந்தது. அங்குள்ள ஊராட்சிமன்றங்களைப்பிரித்துப் பல சிறு அமைப்புகளாகத் திருத்தி வரிசைப்படுத்த வேண்டியிருந்தது. இவற்றையெல்லாம் மனத்திற்கொண்டு முந்தைய உறுப்பினர்களின் பதவிக்காலம் 2—8—1970 நண்பகல் வரை நீட்டிக்கப்பட்டது. ஏற்கனவே திட்டமிட்டிருந்தபடி ஏறத்தாழ 12,600 ஊராட்சிகளுக்கும் 600 பேரூராட்சிகளுக்கும் 1970 ஜூலைத் திங்கள் இறுதியில் தேர்தல்கள் நடத்தி முடிக்கப்பட்டன. புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சித் தலைவர்களும், உறுப்பினர்களும் 2-8-1970 அன்று தங்கள் பொறுப்புகளை ஏற்றனர்.

அண்மையில் நடந்து முடிந்துள்ள ஊராட்சித் தேர்தல்கள் பல்லாற்றானும் தனித்தன்மை வாய்ந்தவை. ஊராட்சி மன்ற நிர்வாக வரலாற்றிலேயே, ஏறத்தாழ 13,000 ஊராட்சிகளுக்கு, ஐந்தாண்டுக் காலப் பதவி முடிந்தவுடன், குறுகிய ஆறு மாத கால நீட்டிப்பைத் தவிர வேறு நீட்டிப்பிற்கிடமின்றி, தேர்தல்கள் நடைபெற்றது இதுவே முதல் முறையாகும். தமிழ்நாட்டில் வரலாற்றிலேயே, ஊராட்சித் தேர்தலுக்கெனத் தனியே வாக்காளர் பட்டியல் தயாரித்து வெளியிட்டதும் இதுவே முதன்முறையாகும். சட்ட மன்றத் தேர்தலுக்கான வாக்காளர் பட்டியலைத் தயாரித்ததற்கிடையே, இப்பட்டியல்தயாரிப்பதன் வேகம் சிறிது குறைந்தபோதிலும் மிகக் குறுகியகால எல்லையில் தயாரிக்கப்பட்டு உரிய வேளையில் வெளியிடப்பட்டது. சட்ட மன்ற வாக்காளர் பட்டியல்களைத் தயாரித்தற்குரிய விரிவான நடைமுறையை ஒட்டியே ஊராட்சி வாக்காளர் பட்டியல்களும் தயாரிக்கப்பட்டன. அன்றியும் பேரூராட்சி, ஊராட்சி மன்றங்களின் தலைவர்கள் முதன்முறையாக வாக்காளர்கள் அனைவராலும்ரகசிய வாக்கெடுப்பின்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தமிழ் நாடு சிற்றூராட்சிச் சட்டம், 1950ஆம் ஆண்டிலேயே நேரடித் தலைவர் தேர்தலை அறிமுகப்படுத்தியிருந்தது. எனினும், அப்போது தேர்தல்கள் எல்லாம் கையுயர்த்துவதன் மூலமாகவே நடைபெற்றுவந்தன.



PSG

அமோக விளைச்சலுக்கு PSG பம்பு செட்டுகள்

■ நீங்களும் பிஎஸ்ஜி பம்பு செட்டை இன்றே வாங்குங்கள் ■ என்ஜின் அல்லது மோட்டாரில் இயங்குவது ■ தாராளமாக தண்ணீர் பெறுங்கள் ■ ஏராளமாக விளைச்சல் காணுங்கள் ■ நிறைய செல்வம் அடையுங்கள்

விவரங்களுக்கு எழுதுங்கள்:

பி எஸ் ஜி இண்டஸ்ட்ரியல் இன்ஸ்டிட்யூட்

கோயமுத்தூர் 4 தென்னிந்தியா

விற்பனைக் கிளைகள்:

the hallmark of high standard

311, தம்பு செட்டி வீதி, சென்னை 1. 217 & 218, மேலமாசித்தெரு, மதுரை 1.
பப்ளிக் கார்டன் ரோடு, சைபாபாத், ஹைதராபாத் 4.
13/85, ஜெயசாமராஜேந்திர ரோடு, பெங்களூர் 2.

VSK PSG 213

பல்கலைக் கழக வேந்தர் அவர்களே !
இணைவேந்தர் அவர்களே !
துணை வேந்தர் அவர்களே !
பேராசிரியப் பெருமக்களே !
பட்டம் பெறும் பாசமிகு நண்பர்களே !

கயலெழுதிய இமயநெற்றியின்
அயலெழுதிய புலியும் வில்லும்
நாவலந் தண் பொழில் மன்னர்
ஏவல் கேட்பப் பாரர சாண்ட
மாலை வெண் குடைப் பாண்டியன் மதுரையில்

பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாப் பேருரை நிகழ்த்தும் பெருமை மிகு வாய்ப்பு—கல்லூரி கண்டிலேன் ஆயினும் கல் தோன்றி மண் தோன்றாக் காலத்து முன் தோன்றி மூத்த தமிழின் வளம் சிறிது கண்ட பேற்றினன் என்ற நிலையில் எனக்குக் கிடைத்தது எனும் ஒரு பெரும் நம்பிக்கையில் உம் முன்னால் நிற்கின்றேன். உவகை பூக்கின்றேன். சங்கம் கண்டு தமிழ்த்தங்கம் தோண்டிக் கொடுத்த சிங்கப் புலவர் உலவிய மண் இது ! சீறியெழுந்த புலியானாள், பசுவனைய பத்தினியாள் கண்ணகி தேவி. செங்கோல் வளைந்ததென்று வேங்கைப் பாண்டியனும் வேட்டையில் சிக்கிய சிறு முயல் போல் ஆனான். அந்தச் சிறப்பு மிகு சிலப்பதிகாரக் கதையின் உச்சக் கட்டம் நிகழ்வுற்ற கூடல் மாநகர்தனிலே கூடியிருக்கின்றோம். தலையாலங்கானத்தான்—ஆரியப்படை கடந்தான்—என்றெல்லாம் பட்டம் சுமந்த பாண்டியர்களின் சீமையிலே பல்கலைக்கழகம் வழங்குகின்ற பட்டம் பெறக் குழுமியுள்ள உங்கள் அன்பு நெஞ்சங்களோடு உறவாட வந்திருக்கும் இந்த உடன் பிறப்பின் வாழ்த்துக்களை முதலில் ஏற்றிடுவீர் ! பின்னர் ஏற்றிடுவீர் எட்டுத் திக்கும் நமது வெற்றிக் கொடி ! ஏற்றிடுவீர் எத்தனையோ பொறுப்புக்களை எனினும் எத்தகு பொறுப்பினை நீவிர் போற்றிடுவீர் என அறியும் திறனோ என்றனுக்கில்லை. பயிற்றுவித்த ஆசிரியப் பெருமக்கள் உணர்வர். உமது உள்ளங்கள் அந்த உண்மைதனை உரைத்திடத் தவறா. உலகின் ஒரு சிறு பகுதியைச் சுற்றிவிட்டு வந்தேன். நான் சென்ற இடமெல்லாம் எனக்கு முன்னே என் தமிழ்த் தாயின் பெருமை சென்றிருப்பதை உணர்ந்தேன். அதனை உரைத்து மகிழ்ந்தனர் ஒரு சில அறிஞர் ! மதித்து வரவேற்றனர் தமிழர் மாண்பினைப் புரிந்

வசதியுள்ள பட்டதாரிகள் ஏழையர்க்கே!

அரசு [illegible]த்தொண்ட செயலுக்கு உறுதுணையாக இருந்[illegible]மே. இன்று தமிழில் பயிற்று மொழியென்பதைத் தடுத்திடும் இயல்பினரும் இருக்கின்றனரே. அதனைத் தகர்த்திடும் வகையில் எதிர்காலம் அமைந்தால்தானே "தமிழன் என்றோர் இனமுண்டு" எனும் நாமக்கல்லார் பாட்டுக்குப் பொருள் புரிந்தவர்களாவோம்.

உத்தமர் காந்தியடிகள் உரைத்த மொழியொன்றினை இவண் குறித்திடல் பொருத்தமாகும்.

"தாய்ப்பாலிடம் இருக்கும் பற்றுதலைப் போலவே எனக்குத் தாய் மொழியின்பாலும், அதில் எவ்வளவுதான் குறைபாடுகள் இருந்தாலும் பற்றுதல் இருக்க வேண்டும். அது ஒன்றுதான் எனக்கு வாழ்வளிக்கும் பால் தர முடியும். தாய் மொழியல்லாத பிற மொழியைப் பாட மொழியாகக் கொண்டுள்ள ஒரு நாட்டின் குழந்தைகள் தற்கொலை செய்து கொள்பவர்கள் ஆவார்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன். குழந்தைகளின் எல்லாத் தன்னாற்றலையும் அது பறித்துக் கொள்கிறது. அவர்களின் வளர்ச்சியை அது தடுப்பதோடு மட்டுமல்லாமல் அவர்களைக் குடும்பச் சூழ்நிலையிலிருந்து தனித்து நிற்கச் செய்கிறது. ஆகவே இப்படிப்பட்ட ஒரு செய்கையானது இந்த நாட்டின் முதல் தரமான சோக நிகழ்ச்சி என்றே நான் கருதுகிறேன். உடனடியாகப் பயிற்று மொழி மாற்றப்பட்டு மாநில மொழிகள் உரிய இடத்தைப் பெறுவதற்கு எப்பாடு பட்டாவது தகுந்த முயற்சிகள் எடுத்துக்கொள்ள வேண்டும். உயர் கல்வி நிலையில் பெருகிடும் மொத்த விரயத்திற்குப் பதிலாகத் தற்காலிகக் குழப்பங்கள் மேலானது என்று ஏற்றுக்கொள்கிறேன்".

எம். ஏ. பொருளாதாரத்தில் முதலிடம் பெற்றுள்ள மாணவி எஸ். ஜெயா.

அண்ணல் காந்தியின் அறிவுரை இஃது! இதற்கு முரண்பட்டுப் பேசுவோரும் தமிழ் நாட்டில் உண்டு. சொல்லித் தெரிவதில்லை. சொல்லாமலே புரியும் உமக்கு. முதற் பட்டமளிப்பு விழாவினை இங்கு நிகழ்த்தி, இன்று மூதூராம் மதுரையிலே சிலையாக நிற்கின்ற நம் அண்ணன் "தாய் மொழி என்னும் தகுதிக்கு ஈடாக வேறு எந்தத் தகுதியையும் ஒரு மொழிபெற்றிடத் தேவையில்லை" என உரைத்து, "உலகுடன் ஒட்டி வாழ்ந்திட உலகின் அறிவுக் களஞ்சியத்தின் துணை பெற ஆங்கில மொழியறிவு இன்றியமையாததாகிறது. இந்தியாவின் பல பகுதிகளுக்கு இணைப்பு மொழியாகவும், இந்தியாவுக்கும், வெளி நாடுகளுக்கும் இணைப்பு மொழியாகவும் ஆங்கிலம் இருந்திடட்டும்" எனத் தெளிவாக்கித் தமிழ்ப் பயிற்று மொழியின் இன்றியமையாமையைக் கோடிட்டுக் குறித்துள்ளார். அவரை மறவாதது போலவே அவர்தம் சீரிய கருத்தினையும் மறந்திடவில்லை நாம். தாய்மொழியில் அறிவியல், மருத்துவ இயல், கலைச் சொற்களைப் பயின்று, செழிப்பையும் சிறப்பையும் காணுகிற நாடுகள் சிலவற்றைக் கண்டுவந்தேன் நான். பயிற்று மொழியில் காட்டும் பற்று மட்டுமின்றித் தமிழ் மொழியானது அகம், புறம் எனும் கருவூலங்களை வெளிப்படுத்தும் சிந்தனைக் கருவியாக மாத்திரம் இராமல் அணுவின் ரகசியங்களையும் நிலவின் பயணங்களையும் விளக்கிக் கூறத் தக்க திறன்மிக்க புதுயுக மொழியாகவும் விளங்கிடப் பொறுப்பேற்றுப் பணியாற்றிடல் வேண்டும்.

பட்டம் பெறும் அத்துணைப் பேருமா வேலை கிடைக்கும் திக்கு நோக்கி விழி திருப்பப் போகின்றீர்! உம்மில் எத்தனை பேர் இங்கர்சாலோ! எத்தனை பேர் ரூசோவோ? எத்தனை பேர் வால்டேரோ? எத்தனை வள்ளுவரோ? இளங்கோவோ? கம்பரோ? காந்தியோ? நேருவோ? அண்ணாவோ? அவரளவு ஈடு இல்லையெனினும் அவர் தம் வழி நின்று பணியாற்றும் திறனுடையோர் திரண்டிருக்கக் காணுகின்றேன். அதனால்தான் உமது ஆற்றலை நாடு செழித்திடக் கேட்கின்றேன். உலக மிசை உணர்வெழுப்பி உதித்தெழும் கதிரோனிடம்தான் ஒளி கேட்கின்றேன். நீடு துயில் நீக்கப் பாடிவரும் நிலாவிடம்தான் குளுமை கேட்கின்றேன். வெண்சங்கு நிறங்காட்டி வேலியோரத்தில் படர்ந்து கிடக்கும் முல்லையிடம்தான் மணம் கேட்கிறேன். தென்றலிடம்தான் இனிமை கேட்கிறேன். தென்பொதிகை மலையிடம்தான் அகில் கேட்கின்றேன். அன்புறு நண்பர்காள்! உம்மிடம்தான் ஆற்றல் கேட்கிறேன்; அன்பான ஒத்துழைப்பு கேட்கிறேன்.

"உற்றுழி உதவியும்
உறுபொருள் கொடுத்தும்

பிற்றை நிலை முனியாது
கற்றல் நன்றே."

எனப் புறப்பாடல் எழுதிய முடியுடை வேந்தன் நெடுஞ்செழியப் பாண்டியனின் மண்ணில் வளர்ந்த குளிர் தருக்கள் நீங்கள்! உங்களிடம் கோடையிலே இளைப்பாற நிழல் கேட்கிறாள் தமிழக அன்னை. தந்திடுவீர்! அந்த உறுதியுடன் உறைவிட்டெழுந்த உடைவாள் போலப் புறப்படுவீர்! நீதிக்குப் புறம்பானவை எங்கிருந்தாலும் களைந்திடுவீர்! நிழல் தரும் தருவென வளர்ந்திடுவீர்!

ஆசிரியர், வெளியிடுபவர் : செய்தித்துறை இயக்குநர், தமிழ்நாடு அரசு. அச்சிடுபவர் ; அச்சக எழுதுபொருள் இயக்குநர், அரசினர் அச்சகம், சென்னை-1.



வேளாண்மைப் பெருங்குடி மக்களே!
ஒரு நல்ல சேதி!
உங்களுக்கு டிராக்டர் தேவையா?
உடனே எங்களை அணுகுங்கள்!

[illegible] 201-25 [illegible]
[illegible] ரூ. 16,700

[illegible] 50 [illegible]
[illegible] ரூ. [illegible]

[illegible] (1970-71) [illegible]

[illegible]

தோர் ! இசை நயமிக்க மொழி என்றனர்—இனிக்கும் தேனமுது இதுவன்றோ எனப் புகன்றனர் ; என் உரை கேட்டல்ல ; இன் தமிழாம் பொன்பூவின் மென்மணம் சுமந்த தென்றலை நுகர்ந்து ! நமது மொழியின் பெருமை நானிலம் அறிகிறது......நாற்றிசை நாட்டோரும் நாகரீக நகராம் பாரிசில் கூட நம் மொழியை உயர்தனிச் செம்மொழி எனக் கூறிக் களித்தனர். நேரிலே கண்டேன். நிறைவினை மனத்தினில் கொண்டேன். தமிழ் உயர்ந்தது. தலை சிறந்தது ஒளிமிக்கது. உயிரானது. எல்லாம் சரி. ஆனால் என் நெஞ்சில் ஏக்கப் பெருமூச்சு ஏன் எழுந்தது ? அந்தத் தமிழன்னை ஈன்றெடுத்த செல்வங்கள் பலநூறாயிரம்— பெயரில்தானே செல்வங்கள் ; வாழ்வில் வறுமையின் சின்னங்களன்றோ? முகில் முட்டும் மாடங்கள் கூடங்கள் அங்கே கண்டேன் ; முழு நிறைவான வாழ்வு என் தமிழர்கள் எல்லார்க்கும் எப்போது கிடைக்கும் என்ற கேள்வியால் எழுந்த நீர்த்துளிகள் அந்த மாட கூடங்களைப் பார்க்க வொட்டாமல் என் விழிகளைத் தடுத்துவிட்டன. வாழ்வின் இனிமையைத் துய்ப்போர் வெளி நாடுகளில் ! இதுவும் ஒளிநாடாய் ஆனால் அன்றோ அத்தகையோரை இங்கும் காண இயலும். அதற்குத் தனியொருவனின் முயற்சி போதுமா ? அவனது உழைப்பு, தியாகம், ஆற்றல், அறிவு பயன் படுத்தப்பட்டால் மட்டும் வெற்றி கிட்டுமா ? தனி மனிதர்கள் தத்துவங்களைப் போதிப்பர். அறிவுரைகளை வழங்குவர். உலகச் சந்தையில் மலிவாகக் கிடைக்கும் பொருள்கள் தத்துவம்—வேதாந்தம்—அறிவுரைகள்தான் !

தனி மனிதன் வாழ்வின் தித்திப்புக்காகவே சமுதாயம் உழைப்பதுதான் தர்மம் எனில் அந்தப் பெருங் கூட்டத்தில் கசப்பு எழுதல் இயற்கை. தனி மனிதனும் தன்னைச் சமுதாயத்தில் ஓர் அங்கம் எனக் கருதிடல் வேண்டும். சமுதாயம் என்பது தனி மனிதர்களின் சங்கமே என்பதிலும் தெளிவு தேவை. அந்தத் தெளிவுடன் துணிவையுங் கலந்து பணியாற்ற அனைவரும் பயிற்சி பெறின் பொது வாழ்வுப் பல்கலைக் கழகத்தின் புகழ்மிகு பட்டயங்கள் பெற்றிடலாம். எம்நாடு ஏற்ற மிக்கது ! எம்மவர் வாழ்வு எழில் மிக்கது ! எனப் பீடு நடை போட்டு உலா வரலாம்.

உழைப்பு ! உழைப்பு ! என்கிறீர்களே ; அதோ விலா எலும்பு ஒடிய வண்டியிழுக்கிறானே ; இதோ வியர்வை மழை யெனக் கொட்ட வேலை செய்கிறானே ; கழனியில்—இவை யெல்லாம் உழைப்பன்றோ ? இது போதாதோ ? இன்னுமா வேண்டும் உழைப்பு ? இப்படி நம் உள்ளம் கேட்கின்றது. போதாதுதான் ! அவன் உழைப்பைக் குறைக்க நாம் உழைத்தாக வேண்டும் !

அப்படியென்றால் ; ஆலையில் மாடெனப் பாடுபடும் தொழிலாளித் தோழனுடன் நாமும் சென்று இணைந்து கொள்வதல்ல ; உழைப்பின் அளவை அவனுக்குக் குறைக்கும் வழி !

வேறென்ன செய்திடல் வேண்டும்—தனி மனிதனின் ஒத்துழைப்பால் அதனைச் செய்திடல் இயலாது. நாடே வளமாகிட வேண்டும். அதற்கு அனைவரும் வெவ்வேறு முனைகளில் உழைத்திடல் வேண்டும். மறுபடியும் உழைக்கத்தானே சொல்லுகிறாய் ? கேட்கத் தோன்றும் ! ஆனால் சற்று ஆழமாகச் சிந்தித்தால் அனைத்தும் விளங்கும். பலர் பல முனைகளில் உழைப்பதால்—பல வகைகளில் உழைப்பதால்—உழைப்பதற்கு ஒரு சிலரே பிறந்துளார் என்ற " தலையெழுத்துத் தத்துவம் " தலை மறைவாகிவிடும். கழனியில் இருப்பவனுக்கும், கட்டை வெட்டுபவனுக்கும் வேலை செய்யும் நேரம் போக மிச்சமுள்ள களைப்பாறும் நேரம், களியாட்ட நேரமாகிறது. ஆலையில், சாலையில், அலுவலகத்தில் பாடுபடுவோர் அனைவருக்கும் உழைப்பின் அளவுக்கு உற்சாகத்தின் அளவும் உயர்கிறது. இதுதான் ; நாடு வளமாயுள்ளது என அறிவிக்கும் கண்ணாடி. இந்தக் கண்ணாடியில் முகம் தெரிந்தால் போதாது, அனைவர்க்கும் சுகம் வேண்டும் என்ற சமதர்ம அகம் தெரிந்தாக வேண்டும்.

" பயின்றோம், பலகாலம் ! பட்டம் பெறுகிறோம் ; இன்று ! இட்டமுடன் கற்றோரும் உண்டு—பெற்றோர்க்குப் பொருள் நட்டமுடன் கற்ற மற்றோரும் உண்டு—எமை நோக்கி 'உழைப்புத் தேவை !' என்கின்றீர்—'தியாகம் புரிந்திடுக' என அடுத்து மொழிந்திடுவீர்—ஏனய்யா; இதனைக் கேட்கவா யாம் இங்கே கூடியுள்ளோம்—உம் கூற்றுப்படி உழைக்கின்றோம் — அதற்காகவே பட்டம்பெற்றுள்ளோம்—எல்லாம் சரிதான் எங்கே—யாம் பணிபுரிய வாய்ப்பு ? வேலை வாய்ப்பு ? தருவீரோ அந்த வாய்ப்புதனை "

என நீவிர் கேட்பீர் ; எனக்கு நன்றாகத் தெரியும். கேள்விக்கு நான் விடையளிக்குமுன் சிந்தனைக்குச் சிலவற்றை வைக்கின்றேன்.

விடுதலை பெற்று இருபத்து மூன்று ஆண்டுகள் உருண்டோடி விட்டன. திட்டங்கள் மூன்றும் தீட்டிச் செயல்பட்டோம். இடையில் இரண்டொரு ஆண்டுகள்—நான்காம் திட்டம் நகரவே இல்லை. ஓரிரு திங்கட்கு முன்பே உயிர் பெற்றது. திட்டமிடாக் காலத்தில் தீயெனப் பரவிய வேலை வாய்ப்பின்மை வறுமையை விதைத்தது. வாட்டமே மிகுந்தது. வான்முட்டப் பெருகுக் கொண்டு நிற்கும் வேலையில்லாத் திண்டாட்டப் பேயினை வாள் கொண்டு வீழ்த்திட இந்தியப் பேரரசு இன்றே முனைதல் நன்றாம் என்போம் ! அதுவரை பொறுமையாக இருந்திடுக எனச் சொல்லத்தான் பீடிகையோ என எண்ணாதீர் ! மாநில அளவில் வேலையின்மையை வீழ்த்திடச் சீரான திட்டங்கள் சிலவற்றை வகுத்திடச் செயல் முறை தொகுத்துள்ளோம். ஆதலின் பட்டம் பெறுவோர் நம்பிக்கை கொள்க !

உயர் கல்வி கற்பது எதற்காக ? உடனடிப் பதவியொன்று பெறுவதற்காக ! கேள்விக்குப் பதில் இப்படி இருத்தல் நலமன்று. கல்வி அறிவினைப் பெருக்க ! ஆற்றலை வளர்க்க ! உண்மைதான் ; எம் வயிற்றினை—எம் இல்லத்தார் வயிற்றினை வளர்க்க வேண்டாமோ ? வினா புறப்படும், வில் விட்டுக் கிளம்பும் கணை போல ! நான் மறுக்கவில்லை. அவர்களுக்குத்தான் சொன்னேன் ; மாநில அரசின் முயற்சியால் வேலை வாய்ப்புக்கு வழிஉண்டு. நம்பிக்கை கொள்க என்று !

பதவிகள் பெற்று வாழ்வினை நகர்த்திடப் படிப்போர் தொகை பெரிதென்போம் ! சிறிதெனினும் தொகை—செல்வர்கள் வீட்டுப் பிள்ளைகள் படிப்பது வயிற்றுப் பிழைப்புக்கு அல்லவே !

அவர்களும் வேலையை நாடுதல் ஏனோ ! பணம் குவிந்து கிடப்பினும், அலுவல் ஒன்றில் இருப்பதுதான் அவர்க்குப் பெருமை என எண்ணுதல் தவிர்த்திட வேண்டும்.

பணம் படைத்தோர் தாம் பெற்ற கல்வி அறிவை வாழ்க்கையை நகர்த்தப் பயன்படுத்தும் நிலையினர் அல்லர் ! அவர் தம் அறிவுச் செல்வம், நாட்டில் பல்வகைத் தொழில் துறை வளரப் பயன்படல் நலமாம். சமுதாயப் பணிகள்—பொதுப் பணிகள்—பட்டம் பெற்ற பணக்கார இளைஞர்களின் பார்வையில் படுதல் வேண்டும். அலுவலக வேலைக்கு அவர்களும் மனுப் போட்டால் அன்றாடம் வாழ்வில் அவதிப்படும் பட்டதாரிகள் படுந்துயருக்கு முடிவே இல்லாமல் போகும். இந்தக் கொள்கையில் அரசுடன் ஒத்துழைக்க, வசதியுள்ள பட்டதாரிகள் வருதல் வேண்டும். தினம் தினம் தீயில் கருகும் ஏழை எளிய பட்டதாரிகளுக்காக அவர்கள் செய்திடும் தியாகம் என அதனைக் கருதிட வேண்டும். இந்த நிலை, முழுப் பயனை அளிக்கவல்லதல்ல எனினும், அழும் குழந்தைக்குப் பால் தர முடியாமல் தவிக்கும் தாய், அதனைத் தோளில் போட்டுத் தட்டிக் கொடுத்துத் தூங்க வைக்கும் அளவுதான் வேலை வாய்ப்பு வழங்குவதன் அளவும் அமையும் எனினும், அதையாவது செய்ய மாநில அரசு முனையாவிடில், அழுது அழுது குழந்தையின் வெறும் வயிறு வீங்கி விடும். காய்ச்சல் பற்றும். கடும் பிணி தாவிடும். முடிவு கண்ணீர்க் கதையாகும்.

வாழ்வில் அல்லற்படுவோர்—வயிற்றைக் கட்டி வாயைக் கட்டிப் பொருளீட்டித் தம் பிள்ளைகளைப் படிக்கவைத்து வயதான காலத்தில் நாலுகாசு சம்பாதித்துத் தமக்குச் சோறு போடுவான் என நம்பியிருக்கும் ஏழைத் தெய்வங்களுக்கு ஏமாற்றத்தைப் பூசை நைவேத்யமாக்காமல் ஏதோ எம்மால் முடிந்த ஊதுவத்தியைக் கொளுத்தி வைக்க எண்ணுகிறோம், மாநில அளவில் அதன் அதிகாரங்களுக்கு உட்பட்டு வேலை வாய்ப்புகளைப் பெருக்கும் வகையில் !

வசதி படைத்த குடும்பத்திலிருந்து வந்து பட்டம் பெறுவோர்க்கு நாட்டில் பணிகளா இல்லை ?

" தமிழன் என்றோர் இனமுண்டு—தனியே
அவற்கொரு குணமுண்டு. "

என்பதனை அறியாத தமிழர்கள் நாட்டிலே இருக்கிறார்கள். அவர் தம் உள்ளங்களில் தமிழ் விளக்கு ஏற்றி வைக்கும் பணியினைச் செய்தல் எத்துணைப் பெருமை மிக்கது ! எத்துணை இன்பமூட்டுவது !

அறிவியல் துறை ! ஆராய்ச்சித் துறை ! அழைக்கிறது வா வா என ! வந்து புகுந்திடு! வையகம் புகழ்ந்திடத் தமிழகத்தின் மேன்மையை நிலைநாட்டு ! என அழைக்கிறது. வந்திடத் தயங்குவது எதற்காக ?

தோல்வியால் துவண்டு, காலூன்றி எழவும் முடியாமல் வீழ்ந்து கிடந்த மேற்கு ஜெர்மானிய நாடு வெகு விரைவில் சுடர் முகந் தூக்கி எழுந்து நிற்பது அங்கு வளர்ந்த தொழில் துறையால் !

அறிவுச் செல்வம் பெற்றோர், தம் கையில் உள்ள அழியும் செல்வத்தை அழியாச் செல்வமாக்க அரசுடன் இணைந்து தொழில்துறை வளர்ச்சியில் நாட்டம் செலுத்திடின் அஃதோர் நற்பணி ஆகாதோ ! நாடு வளம் தரும் பூக்காடென மாறாதோ ?

" சாதிகள் இல்லையடி பாப்பா " எனப் பாடிய பாரதி தன் ஆயுளைப் பாதியில் முடித்துவிட்டான். மீதியைச் செயலாக்கி சாதி சமயச் சழக்கு அறுத்திடத் துணிந்து பணியாற்றலாமே !

"இனிமைத் தமிழ் மொழி எமது ; எமக் இன்பந் தரும்படி வாய்த்த நல் அமுது " எனப் பாரதிதாசன் பாடியதை ஏட்டோடு நிறுத்திவிடாமல் அந்த அமுதினை நாட்டுக்குப் பாட்டு மொழியாக மட்டும் தராமல் பாட மொழியாக்கவும்



Registered No. M. 8657

2.6.71



மேலே காணப்படும் வடிவமைந்த கொடியினைத் தமிழக அமைச்சர்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்றும், தமிழ் மாநில அளவில் இந்தக் கொடியை அனுமதிக்க வேண்டுமென்றும், இது தேசியக் கொடிக்கு மாற்றாகப் பயன்படுத்தப்படுவது அல்லவென்றும், தேசீய விழாக்கள், அரசு அலுவலகங்களில் எப்போதும்போல் இப்போதுள்ள இந்திய தேசியக் கொடியே இடம் பெறும், ஏற்றப்படுமென்றும், மத்திய அரசுக்கு விளக்கமளித்து அதனையொட்டி 23-5-70-ல் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ள கொடியின் அமைப்புத்தான் இது!

தமிழரசு

உறுதியான கட்டடங்கள்: நகரங்களில்-1



SANKAR I C CEMENT

எங்க அப்பா புது வீடு கட்டறாரே!

IS 269

பாறை போன்று உறுதி நிலைத்திருக்கக் கூடியது
ISI மார்க்குடன் உத்தரவாதம் உள்ளது

இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட், தன் பில்டிங், சென்னை-2
23 ஆண்டுகள் நிலைத்து [illegible]
இலவச தொழில நுட்ப ஆலோசனைக்கு [illegible]

397

TA[illegible] ARCHIVES
LIBRARY
25 SEP 1970
MADRAS-8

R.R.421/SS/7
P

தமிழரசு

மலர் 1 1970 செப்டம்பர் 16 இதழ் 6

இந்த இதழில்

முதலமைச்சர் எழுதும்

இனியவை இருபது

புலமைக் காஞ்சி போற்றுதும்

செவ்வாழை (அண்ணாவின் சிறுகதை)

சிட்டுக்குருவிகள் சிரிக்கின்றன

புத்துலகம் காணப் புறப்படுவீர்

என்ன என்ன இனிக்கும்
வண்ண வண்ண ஓவியம்

சின்னச் சின்ன இழை
பின்னிப் பின்னிவரும்

பறவைகள் பலவிதம்

கேளுங்கள் தரப்படும்

ஆற்றோரம்!

மலைபோல் வரும் தொல்லைகளைப்
பனிபோல் ஆக்கிடும் ஆட்சி

கண்ணான அண்ணா!

முகப்பில்:
அண்ணன் பிறந்த நாளில்
எண்ணம் நிறைவேற
வண்ணம் சேர் மகிழ்ச்சிக் கோலம்!

மத்தியில்:
காஞ்சி நகரக் காட்சிகள்

செப்டம்பர் 15.

பேரறிஞர் அண்ணா அவர்களின் 62-வது பிறந்த நாள்!

அவர் நம்மிடையே உலவிடவில்லை.

ஆனால் . . . .

இந்தியாவின் தலைமை அமைச்சர் திருமதி இந்திரா காந்தி சொன்னது போல் ''நம்முடைய நெஞ்சங்களில் அவர் நிறைந்திருக்கிறார்.''

* * *

ஈழத்து அன்பர் சொன்னார், ''அண்ணா இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற தமிழர்'' என்று.

இந்த நூற்றாண்டில், தமிழ் பேசும் மக்கள் உலகின் எந்த மூலை முடுக்கில் இருந்தாலும் அங்கெல்லாம், அவர்களின் உள்ளங்களில் எல்லாம் முடிசூட்டிக்கொண்ட இணையற்ற தமிழர் அவர்.

> நம் நாடு வெப்பமுள்ள நாடு! இவ்வளவு வெப்பத்தையும் தாங்கிக்கொண்டு வேர்வை ஆறாகப் பெருகியோட உழைப்பவர்கள் இங்கு இருக்கிறார்கள்—இயற்கை வளத்தைப் பயன்படுத்தி, தொழில் திறனை உண்டாக்குபவர்கள் — தொழிற்சாலையை நடத்துபவர்கள் இருக்கிறார்கள்.
>
> திட்டமிட்டுச் செயலாற்றினால் 15 ஆண்டுகளில் ஜப்பான் நாட்டைவிடச் சிறப்பாக நம் நாடு திகழும் என்பதில் ஐயப்பட வேண்டாம்.
>
> —பேரறிஞர் அண்ணா

மலேசிய நாட்டுக்கு அண்ணா சென்றிருந்தபொழுது, அங்கு வாழும் தமிழர்களிடம் குறிப்பிட்டார் :—

'' நீங்கள் வாழும் மலேசிய நாடுதான் உங்கள் தாய் நாடாகும். தமிழ் நாட்டை உங்கள் தாய் நாடாக எண்ண வேண்டாம். அது உங்கள் தாய் மொழி பிறந்த நாடு'' என்று.

பேரறிஞர் அண்ணாவின் பேருள்ளத்திற்கு இப்பேச்சு ஒன்றே போதும்.

* * *

முதன் முறையாக அண்ணா அமெரிக்கா சென்ற பொழுது, அவர் எப்பொழுது வருவார் என்று இந்தியத் தூதுவரகத்தைத் தொலைபேசி மூலம் கேட்டவண்ணம் இருந்தார்களாம் அங்கு வாழும் இந்தியர்கள்.

> இப்பொழுது எங்கு பார்த்தாலும் ஆலைகள் எழ ஆரம்பித்துவிட்டன. தொழிலாளர்கள் இந்தச் சமுதாயத்திற்குப் புது உருவத்தைக் கொடுக்கிறார்கள்.
>
> பாரதி சொன்னார், தொழிலாளர்கள் பிரம்மாக்கள் என்று! பிரம்மாக்கள் என்றால் தெய்வங்களல்ல—உற்பத்தி செய்பவர்கள்! உற்பத்தி செய்பவர்தான் ஆக்குந் தொழில் தான் பிரம்மாவுக்கு உரியது என்று புராணங்கள் கதை சொல்லும். அதைப் போல, தொழிலாளர்கள் பிரம்மாக்களாகத் தான் இருக்க வேண்டுமென்று, நினைத்தால்,தொழில் இருக்கும் ஆனால் வளமிருக்காது. தொழிலாளர் உரிமைகளையும் அவர்களின் நலனையும் எவ்வளவுக் கெவ்வளவு பாதுகாக்கின்றோமோ, அவ்வளவு விரிந்த அளவில் தொழில் வளம் பெருகும்.
>
> —பேரறிஞர் அண்ணா

இந்தியத் துணைக்கண்டத்திலிருந்து சென்றுள்ள வேறு எந்தத் தலைவரைப் பற்றியும் இந்த அளவுக்கு அங்கே ஆர்வத்தோடு மக்கள் விசாரித்தது இல்லையாம்!

அயல் நாடுகளில், அண்ணா அவர்களை, மைய அரசில் உள்ள கட்சியோடு மாறுபட்டவர் என்ற கருத்துடன் உள்நாட்டு அரசியலைப் பற்றிக் கேட்டபொழுதெல்லாம் பதில் சொல்ல மறுத்துவிட்டார்.

அரசியல் நாகரிகத்தின், பண்பாட்டின் பல்கலைக் கழகம் அவர்.

* * *

முதலமைச்சராகப் பொறுப்பு ஏற்ற பிறகு டில்லியில் நடைபெற்ற அனைத்திந்திய முதலமைச்சர்கள் கூட்டத்திற்கு அண்ணா அவர்கள் சென்ற பொழுது வாயில் காப்பாளர் அண்ணாவை உள்ளே விட மறுத்தாராம்.

> ஏழை மக்களிடம் தான் பெரும்பாலான வியாபாரம் நடக்கிறது. அப்படி வியாபாரம் நடக்க வேண்டுமானால், அவர்களுடைய கைகளுக்கு எட்டும் விதத்தில் விலை இருக்கவேண்டும். அவர்களது கைகளுக்கு எட்டுகிற விலை என்பது என்ன? அவர்களுடைய வருமானத்திற்கு ஏற்ற முறையில் விலை இருக்க வேண்டும்.
>
> நாட்டில் வளம் இருந்தால் தான், வியாபாரம் நல்ல முறையில் இருக்கும்.''
>
> —பேரறிஞர் அண்ணா

வேட்டி கட்டிக் கொண்டு சென்ற அண்ணாவின் எளிமையான தோற்றத்தைக் கண்டபோது அவர் ஒரு மாநிலத்தின் முதலமைச்சர் என்று அந்த வாயில் காவலாளி கருதவில்லையாம்!

எளிமையின் சின்னமாக விளங்கிய அண்ணா காந்தியத்தின் உண்மைத் தொண்டராகத் திகழ்ந்தார்.

* * *

இப்படி எத்தனை எத்தனையோ நினைவுகள் அண்ணாவைப் பற்றி எண்ணும்பொழுது தோன்றுகின்றன. அடுக்கடுக்கான அந்த நிகழ்ச்சிகளை விவரித்துக் கொண்டே சென்றால் இடம் போதாது.

அண்ணா தனக்குப் பிடித்தமான தொழில் எது என்பதைச் சில நேரங்களில் எடுத்துரைத்திருக்கிறார்.

> ' மக்களுடன் பழகிக் குறைகளை அறிந்து அவற்றைத் நீக்கும் வகையில் சர்க்கார் அதிகாரிகள் பணி ஆற்றினால் மாநிலத்தில் ஆள்கின்ற சர்க்காருக்குச் சிறப்பு வரும்.
>
> ஒவ்வொரு சர்க்கார் அலுவலகமும் ஜனநாயகத்தின் பயிற்சிக் கூடமாக ஆக வேண்டும். அப்போதுதான் ஜனநாயகம் வளரும்.
>
> —பேரறிஞர் அண்ணா

செய்தியாளர்கள் பேரவையில் பேசும் பொழுதும் குறிப்பிட்டுள்ளார்.

''நான் [மாநிலங்களவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பொழுது எனக்கு அனுப்பப்பட்ட படிவத்தில்,தொழில்,என்று கேட்கப்பட்டிருந்த பகுதிக்கு ''பத்திரிகையாளன்'' (ஜர்னலிஸ்ட்) என்று குறிப்பிட்டேன். நான் விரும்பும் தொழிலும் அதுதான்''.

அண்ணா அவர்கள் விரும்பிய அந்தத் துறையில் உருவாகி வருவதுதான் ''தமிழரசு''.

* * *

தமிழக அரசின் சாதனைகளை நாட்டுக்கு விளக்கிடும் அரும் பணியில் ஆற்றல் மிகு கருவியாக விளங்குகிறது 'தமிழரசு'.

> ஒரு காலம் இருந்தது; குழந்தைகளைச் செல்வம் என்ற காலம். அதுவும் இரண்டு அல்லது மூன்று குழந்தைகள் வரைதான். அதற்கும் மேலிருந்தால் குழந்தை எத்தனை என்று கேட்பதில்லை. குழந்தை குட்டி எத்தனை என்று தான் கேட்கிறோம்.
>
> ஆகையால் குட்டி வேண்டாம், குழந்தை என்ற அளவோடு குடும்பத்தைக் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டியது தான். ஒரு குழந்தைக்கும் இரண்டாவது குழந்தைக்கும் நடுவில் இடைவெளி இருக்க வேண்டும். நாம் சினிமாவுக்குப் போகிறோம். மூன்று மணி நேரம் நடக்கக்கூடிய அந்தச் சினிமாவிலும் 15 நிமிடம் இடைவெளி விடுகிறார்கள். ஆனால் பிள்ளைகளைப் பெறுவதில் மட்டும் இடைவெளியே இல்லாமல் செய்கிறோம்.
>
> —பேரறிஞர் அண்ணா

தமிழ்நாடு அரசு, இந்திய நாட்டின் பல்வேறு துறைகளில் வழி காட்டியாய்ச் சிறப்பு மிக்கதாய் சீரியதாய் விளங்குகிறது.

புகழ்மிக்க அப்பட்டியலில் 'தமிழரசு' இதழும் தன்னை இணைத்துக் கொள்கிறது.

அரசு ஏடு என்றால் மக்கள் விரும்பாத வகையில் ''புள்ளி விவரப் பட்டியலை மட்டும் தரும் தாள்'' என்ற நிலையை மாற்றிப் புதுப் பொலிவை உருவாக்கித் தருகிறது, தமிழரசு!

அண்ணா பிறந்த நாளில் . . .

அவர் புகழ் போற்றி . . . .

அனைத்துத் துறைகளிலும் அரசு விளைத்திடும் ஆற்றல் மிகு பணிகளை மக்களுக்கு விளக்கிடுவதில் ''தமிழரசு'' பெருங் கவனம் செலுத்தும் என்பதைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

> தேன் கடிக்கு உடனே குணமளிக்கும் மூலிகை ஒன்று ஒருவருக்குத் தெரிந்திருக்கும். ஆனால் அது இன்னது என்பதை மற்றவர்களுக்குச் சொல்ல மாட்டார். சொன்னால் மருந்து பலிக்காது என்பார்கள். நமக்குத் தெரிந்த வித்தையைப் பிறருக்குத் தெரிவிக்காமலேயே அழிந்துவிடச் செய்வது நம்மிடையே உள்ள சித்தாந்தம்!
>
> —பேரறிஞர் அண்ணா



4. சிங்கப்போர்

ரோமாபுரியில் பார்க்க வேண்டிய இடங்களில் ஒன்று (collosseum) என்று கூறப்படும் பேரரங்காகும். அதனைக்காணச் சுற்றுலாப் பயணிகள் ஏராளமாக வருகின்றனர். அங்கே விளையாட்டுத் திடலுக்கென அமைக்கப்பட்டுள்ள மேடை, போட்டியைப் பார்வையிடுவதற்கெனச் சுற்றிலும் உட்காருவதற்காகக் கட்டப்பட்டுள்ள அரங்கம் ஆகிய இரண்டும் மகத்தானவை. குற்றம் சாட்டப்பட்ட கிறித்துவர்களைச் சிங்கத்துடன் போரிடச் சொல்லி, அவர்களது உயிர்த்துடிப்பையும், ரத்தப் பெருக்கையும், சிங்கங்களின் ஆவேசப் பாய்ச்சல்களையும் கண்டு ரசிப்பதும், மது உண்டு மயங்கிச் சிரிப்பதும் அக்கால மன்னர்களின் விழாவாக இருந்தது அந்த இடத்தில்! அந்தப் பேரரங்கைக் காணும்போது; "அய்யோ! எத்தனை வாலிபக் குற்றவாளிகள் இந்த இடத்தில் சிங்கத்தின் வயிற்றுக்குள், ரத்தமும் சதையுமாகப் புகுந்தார்களோ—அதிலே ஒரு ரசனையா அந்த அரசர்களுக்கு?" என்றுதான் நினைக்கத் தோன்றியது. மன்னர்கள் மட்டும் பார்த்து மகிழ்ந்தனர் எனில், அவர்கள் மமதையாளர்கள்—மனிதாபிமானமற்ற கல்நெஞ்சர்கள் என்று எண்ணிடலாம்; ஆயிரமாயிரம் நகரமக்களும் அந்தப் பேரரங்கில் வீற்றிருந்து இளம் உயிர்கள் சிங்கத்தின் பற்களுக்கிடையே சிக்கித் தவிப்பதைக் கண்டு பூரிப்படைவார்கள் எனில், பழைய ரோமாபுரியின் ஆட்டபாட்டச் சேட்டைகளின் வரலாறு பயங்கரமானதன்றோ!

காலப்போக்கில் 13 ஆம் நூற்றுண்டில்தான் அந்தப் பேரரங்கு ரோமாபுரிக்கு ஒரு கோட்டையாகவும் மறுமலர்ச்சிக் காலத்தில் மாதா கோயில்கள் கட்டுவதற்கு மண் போன்ற பொருள்களை எடுக்கும் இடமாகவும் மாறத் தொடங்கியது. பல கிறித்துவத் தியாகிகள் இப் பேரரங்கில் முடிமன்னர்களின் கொடிய தண்டனைக்கு ஆளாகி உயிர் விட்டமையால் அந்தப் பேரரங்கு, போப்பாண்டவர்களால் புனித இடமாகவும் பிற்காலத்தில் கருதப்பட்டது. ஒரு கையில் மது, இன்னொரு கையில் மாது—இரண்டின் சுவையையும் பருகியவாறு பல்லாயிரம் மக்கள் தங்கள் எதிரே சிங்கத்தின் பலமான அடிகளைத் தாங்க முடியாமல் சுருண்டு விழுந்து குருதி கக்கிச் செத்திடும் தன்னையொத்த மனிதர்களைக் கண்டு கும்மாளம் போடும் அந்தப் பெரிய அரங்கத்தின் உயரம் 160 அடிகளாகும். 170 கஜம் குறுக்களவும், 573 கஜம் சுற்றளவும் கொண்டு விளங்குவதாகும். ஒவ்வொரு காட்சிக்கும் ஐம்பதாயிரம் மக்கள் உட்காரத் தக்க இடவசதி உண்டு. எந்த நேரத்திலும், இரவானாலும் பகலானாலும் இந்த அரங்கினைச் சுற்றுலாப் பயணிகள் காணத் தக்க அளவுக்கு இப்போது வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

ரோம் நகராட்சியினர் எங்களை வரவேற்று ரோமாபுரியில் அமைந்துள்ள கோட்டை கொத்தளங்களைக் காண ஏற்பாடுகளைச் செய்தனர். ரோம் கௌன்சில் சார்பாகப் பதக்கமொன்றினை எனக்கு வழங்கி வரவேற்பு நல்கிச் சிறப்புச் செய்தனர். ஓவியங்களும் சிலைகளும் நிறைந்த மண்டபங்கள் பலவற்றைக் கால் வலி தெரியாமல் கண்டு வியந்தோம். இத்தாலியில் பல இடங்களில் காணப்படும் கலைக்கூடங்களில் ஓநாய்ச் சிலையொன்று முக்கியத்துவம் பெறுகிறது.

இத்தாலி நாட்டில் வழங்கிடும் தொன்மை வாய்ந்த கதையின்படி ரோம் நகரம் கி.மு. 754—53 ல் ரோமுலஸ் என்பவனால் உருவாக்கப்பட்டது. இவன்தான் ரோமை ஆண்ட அரசர்களில் முதல் அரசன். அவன் பெயரைச் சூட்டித்தான் அந்த நகரை ரோம் என்று அழைக்கிறார்களாம். அந்த ரோமுலஸ் மன்னன், செவ்வாய்க் கிரகத்திற்குப் பிறந்தவன் என்றும் குழந்தையாக இருக்கும்போது பெற்றோர்களால் கைவிடப்பட்டு ஓர் ஓநாயினால் பாலூட்டி வளர்க்கப்பட்டான் என்றும் அதன் பின்னர் வேடுவன் ஒருவன் அவனை வளர்த்து ஆளாக்கினான் என்றும் கூறப்படுகிறது. நமது பாரதக் கதையில் கர்ணன், சூரியனுக்குப் பிறந்தவன் என்றும் பெற்றவளால் கைவிடப்பட்டு ஒரு தேர்ப்பாகன் எடுத்து வளர்த்தான் என்றும் கூறப்படவில்லையா; அதுபோல ரோமுலஸ் பற்றியும் ஒரு கதை! அவன் ஓநாயிடம் பால் குடித்த சிலைகள்

மைல். பிரான்சு, சுவிட்சர்லாந்து, ஆஸ்திரியா, யூகோஸ்லாவியா ஆகிய நாடுகள் இத்தாலிக்கு வடக்கில் உள்ள எல்லை நாடுகளாகும். தீபகற்ப நாடாகிய இத்தாலி நாட்டுக் கடற்கரையின் நீளம் சுமார் 2,500 மைல்களாகும். மேற்கில் டைரீனியன் கடல். தெற்கில் அயோனியன் கடல். கிழக்கில் ஏட்ரியாடிக் கடல் இவற்றை எல்லைகளாகக் கொண்டது இன்றைய இத்தாலி. இந்த நாட்டின் வீரவரலாறுகளையும் வீழ்ச்சிக் கட்டங்களையும் அறிந்துகொள்வதும், அறிந்த வரையில் எடுத்துரைப்பதும் என் பயணக் கட்டுரையின் நோக்கமாகவும் இருக்கவேண்டுமன்றோ ?

முடியாட்சி மாறி குடியாட்சி—பிறகு குடியாட்சி மாறி தளபதிகள் ஆட்சி—பிறகு அதிலும் ஒரு வகை மாற்றம்—இன்று வேறு வகையான அரசியல் சூழ்நிலை—இத்தகு கட்டங்களின் சிறப்பு அத்தியாயங்கள் சிலவற்றைத் தொடர்ந்து கண்டிடுவோம்.

(தொடரும்)

தாய்மொழி படித்தால்தான்....

''தமிழாசிரியர்கள், தலைமை ஆசிரியர்களாக ஆக வேண்டும் என்ற கோரிக்கையைக் கொள்கை பூர்வமாக ஏற்றுக்கொள்கிறேன்.

ஆங்கிலம் படித்தால்தான் தலைமை ஆசிரியராய் ஆகலாம் என்று இங்கு சொல்லுகிறார்கள்.

மேல் நாடுகளில் அது பெரிய நாடாக இருந்தாலும் சரி—சிறிய நாடாக இருந்தாலும் சரி—தாய் மொழிக்குத் தரப்படும் மதிப்புப் பிற மொழிகளுக்குத் தரப்படுவதில்லை. ஆங்கிலத்தைத் தொடர்பு மொழியாகத் தான் வைத்திருக்கிறார்கள்.

எல்லாத் துறைகளிலும் தாய் மொழி அறிவு பெற்றவர்களே தலைமை வகிக்கிறார்கள். ஆனால், இங்கு, தமிழ் கற்றவர்கள்—தமிழ் மாத்திரம் படித்தவர்கள்—அந்தக் காரணத்தினாலேயே— அவர்களுக்கு நிர்வாகத் திறமையில்லை—கட்டிக் காக்கும் திறமையில்லை என்று கூறப்படுகிறார்கள்.

தமிழாசிரியர்களை விட்டு விடுங்கள். என்னை எடுத்துக் கொள்ளுங்கள். ஆங்கிலத்தில் நான் பட்டதாரியில்லை. தமிழில் கூட—தமிழாசிரியர்கள் வேண்டுமானால் என்னைத் தமிழாய்ந்த தலை மகன் என்று கூறலாம்.

ஆனால், என்னைப் பொறுத்த வரை நான் தமிழில் போதிய பயிற்சி பெற்றேனா என்பது சந்தேகமே.

தமிழில் நான் பெற்ற இந்தப் பயிற்சியை வைத்துக்கொண்டே இந்த நாட்டையே ஆளும் போது, தமிழ் படித்தவர்கள், தலைமையாசிரியர்களாக இருக்கக் கூடாது என்பது எந்த வகையில் பொருத்தமாகும் ?''

தமிழக முதல்வர்
9-8-70

வெறுமை அணிகள்

தி.கு.நடராசன்.எம்.ஏ.,பி.டி.

இரவுத் தூரிகை இழுக்கும் திரைகள்
எங்கும் இருந்தும் எழில்நிலா இல்லை
சரிகை மலர்கள் சாயம் இருந்தும்
சந்தம் சிந்திடத் தந்திர வண்டில்லை

கனவு ராகங்கள் காட்டிடைப் படித்தும்
கற்பனைச் சிறகுகள் கலையிட வில்லை
மனித அலைகள் மடியிடைப் பரந்தும்
புனித மண்ணின் புத்துயிர் இல்லை

வசந்த மேடைகள் வடிக்கும் சிற்ப
வண்ண மிருந்தும் வாழ்வே இல்லை
அசையும் கப்பல் அழகே இருந்தும்
அசைக்க ஏறும் ஆட்கள் இல்லை

ஆசைத் தேதிகள் அரும்பி விரிந்தும்
ஓசை மேனிகள் உறவிட வில்லை
வாசப் பந்தல் மலர்கள் இருந்தும்
பூசும் அழகுப் பொலிவுகள் இல்லை

தேர்கள் ஓடும் தெருக்கள் இருந்தும்
தெய்வம் பார்த்துத் தேடுவார் இல்லை
சீர்கள் மிதக்கும் செய்யுள் இருந்தும்
சித்திர யாழில் சேர்ப்பார் இல்லை

விருந்து படைக்கும் விழாக்கள் இருந்தும்
விழுந்தவை ஏற்கும் விழைவுகள் இல்லை
வருந்தும் கண்கள் வடிவ மிருந்தும்
வடிக்கும் இதய வரிகள் இல்லை

உயர்ந்து விரிந்தே உதவும் உலகில்
உலவும் எல்லா உயர்பொருள் அனைத்தும்
அயர்ந்த மூச்சின் அசைவுகள் என்னும்
அணைப்பில் வெறுமை அணிகளே மிஞ்சும்

ஆளாய் நம்மை ஆக்கியோன் நினைவே
ஆழநம் உணர்வை அடைத்ததாம்; ஏனெனில்
மீளாத் துயிலில் மேவிய காரணம்
மேதினி முழுவதும் வெறுமையே நிறைந்ததே

பல இத்தாலி நாட்டில் காணப்படுகின்றன.

ரோமுலசைத் தொடர்ந்து, ரோமாபுரியின் வரலாற்றைச் சற்றுத் தெரிந்து கொள்வது நல்லதல்லவா? அந்த நகரத்தில் அது உருவாக்கப்பட்ட நாளில் இருந்து ஏறத்தாழ 240 ஆண்டுகள் முடியாட்சி நடைபெற்றது. ரோமுலஸ் உட்பட ஏழு மன்னர்கள் அந்த அரசினைப் பரிபாலனம் செய்தனர். கி.மு. 509-ல் மன்னர்களின் கொடுங்கோல் முறையில் சீற்றங்கொண்ட மக்கள், முடியாட்சியின் மீது போர் தொடுத்தனர். மக்கட் பெருங்கடலின் முன்னே, மதுக் கலசமும் மங்கையர் சரசமும் சொர்க்கமெனச் சொக்கிக்கிடந்த மாமன்னர்களின் மமதையும், அதிகாரமும் நின்றிட முடியவில்லை. ஏழை அழுத கண்ணீர் கூரியவாளாகும் என்ற மொழியின் உண்மை ரோமாபுரியில் செயல் வடிவம் கொண்டு எழுந்தது. முடியாட்சி மூலைக்குப் போய்ச் சுருண்டு கொண்டது. குடியாட்சிக் கொடி பறக்கவிடப்பட்டது. ரோம் நாட்டு வரலாற்றில் இந்த அத்தியாயத்தை ''முடிமன்னர் ஓட்டம்'' என்று தலைப்பிட்டு அழைப்பார்கள். குடியாட்சியில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களவைகள் ''செனட் '' எனும் பிரபுக்கள் அவை, ஆண்டுதோறும் தேர்ந்தெடுக்கப்படும் நிர்வாக அதிகாரிகள் (Consel) ஆகியோர் குறிப்பிடத்தக்க பங்கேற்றனர்.

குடியாட்சியின் வரலாற்றில் நடந்த முக்கியமான நிகழ்ச்சி, அரசியல்—சமூக, பொருளாதார உரிமைகளைப் பெற்றவர்கள்—அவைகளைப் பெறாதவர்கள் என்ற இரு சாராரிடையே நடந்த ஒரு போராட்டமாகும். இந்தப் போராட்டம் சட்ட வரம்புக்கு உட்பட்டு அமைதி அடிப்படையில் நிகழ்ந்தது. வன்முறை துளியும் தலைகாட்டவில்லை. இறுதியில் உரிமையற்றவர்கள் வெற்றிபெற்று இருவர்க்கத்தினரும் சம உரிமைகள் பெற்றனர். இந்தப் போராட்டம் நடந்து கொண்டிருந்தபோதுதான், ரோம் நகரம் தன் ஆதிக்கத்தை இத்தாலியில் மற்றப் பகுதிகளின்மீதும் பரப்பிடும் பணியில் ஈடுபட்டது. லத்தீன்கள், சாம்னைட்டுகள், எட்ரஸ்கர்கள், கிரேக்கர்கள் போன்ற இத்தாலி வாழ்மக்கள் ரோமின் ஆதிக்கத்தை எதிர்த்தனர். அதன் காரணமாக மூண்டெழுந்த போர் 250 ஆண்டுகள் நடைபெற்றது. எல்லா எதிர்ப்புக்களையும் முறியடித்து ரோமாபுரி, இத்தாலி முழுவதிலும் தன் ஆதிக்கத்தை விரிவாக்கிக் கொண்டது.



ரோமின் ஆதிக்க ஆசை அத்துடன் அடங்கவில்லை. மத்திய தரைக் கடல் பகுதியிலும் தன் செல்வாக்குக் கொடியை ஏற்றி வைக்கக் குதித்தெழுந்தது. அந்தப் பாய்ச்சலைத் தடுக்க அந்தப் பகுதியில் இருந்த பெனிசியர்கள், மாசிடோனியர்கள், சிரியர்கள் ஆகியோர் ஆர்த்தெழுந்தனர். மத்தியதரைக் கடல் அரசுகளுடன் 150 ஆண்டுகள் தொடர்ந்து நடத்திய போராட்டத்தின் விளைவாக ரோமாபுரியின் ஆதிக்கச் சக்கரம் அங்கேயும் சுழலத் தொடங்கியது. வெற்றி வெறி தணியவில்லை ரோமாபுரிக்கு! சிசிலி, ஸ்பெயின், கிரீஸ் போன்ற நாடுகளின் மீதும் தன் ஆதிக்கத்தைச் செலுத்தத் தொடங்கியது.

முடிவில் ரோம் ஒரு பேரரசாக மாறியது. அதன் ஆதிக்கக்குடை நிழலில் பல நாடுகள் வாழ்ந்தன. ஆனால் சில ஆண்டுகளுக்கெல்லாம் ஆட்சிமுறையின் சீர்கேடுகள் காரணமாக மக்களிடையே தோன்றிய வெறுப்பு, மாபெரும் புரட்சியாக உருவெடுத்தது.

நூறு ஆண்டு காலம் இந்தப் புரட்சிக் கனல் நீடித்தது. இந்தப் புரட்சி, ரோமாபுரிப் பேரரசில் மாறுதல் பலவற்றுக்குக் காரணமாயிற்று. முதலில் புரட்சிக்குத் தலைமை ஏற்றவர்கள் பாமர மக்களின் நலனில் அக்கறை கொண்ட டைபீரியஸ் கிரேக்கஸ், கயஸ் கிரேக்கஸ் ஆவார்கள். ஆனால் நாளடைவில் தன்னலத்திலும் பதவி வேட்டையிலும் நாட்டங்கொண்டவர்களின் கையில் தலைமைப் பொறுப்புச் சிக்கியதால் புரட்சிகள், பலாத்காரத்தின் மூலமும் படை பலத்தின் மூலமும் வெற்றிகளை ஈட்ட முடியும் என்ற வேண்டாத நம்பிக்கையின் அடிப்படையில் நடைபெற ஆரம்பித்தன—இதன் முடிவு; ரோமானிய அரசின் அதிகாரம், படைத்தளபதிகளின் கைக்கு மாறியதுதான்! இங்கு தொடங்கித்தான் சீசர் போன்றவர்களின் அதிகாரப் பேரரசு வரையில், படை பலங் கொண்ட தளபதிகளின் ஆதிக்கம் வளரலாயிற்று. இன்று இத்தாலிய நாடு மத்தியதரைக் கடலுக்குள் வடமேற்கிலிருந்து தென்கிழக்கு வரையில் 725 மைல் தொலைவுக்குப் பரவியுள்ளது. இந்நாட்டின் அகலம் 80 மைல் முதல் 135 மைல் வரையில் ஆங்காங்கே வேறுபடுகிறது. வடக்குப் பகுதியில் இந் நாட்டின் அகலம் 735

மற்றுமொரு சுரங்க வழி

சென்னை மாநகரம் கடந்த சில ஆண்டுகளாக வியக்கத் தகுந்த அளவில் முன்னேற்றம் அடைந்துள்ளது.

அசோக்நகர், அண்ணாநகர், இந்திராநகர், சாஸ்திரிநகர் என்று விரிந்து—பரந்து—வளர்ந்து வருகிறது. குறைந்த—நடுத்தர வருமானம் உள்ள பல்வேறு வகையினரான மக்கள் இப்பகுதியில் வாழ்கிறார்கள். தமிழக வீட்டுவசதி வாரியம் இப்பகுதியில், மக்களுக்கு வீடு கட்ட மனைகள் வழங்கியும் தனியாக வீடுகள் கட்டிக்கொடுத்தும் பணி புரிந்து வருகிறது.

சமீப காலத்தில், இதுபோல் வேகமாக வளர்ச்சி அடைந்து வரும் பகுதி அசோக்நகர் பகுதியாகும்.

சென்னை நகரின் மேற்கில் இருக்கும் இப்பகுதி மிக வேகமாக வளர்ச்சி அடைந்து வருகிறது.

இங்கு, கோடம்பாக்கம் புதூர் முதற் பகுதி—அதாவது அசோக்நகர், கோடம்பாக்கம் புதூர் இரண்டாம் பகுதி, ஜாபர்கான் பேட்டை, மேட்டுப்பாளையம், மேற்கு மாம்பலம் ஆகியவை உள்ளன.

தியாகராயநகரில் இருந்து மேலே கூறப்பட்ட பகுதிகளைப் பிரிப்பது ரயில் பாதையாகும்.

நகரில் ஆங்காங்கே பணியாற்றும் அலுவலர்களும், கல்லூரிகள்—பள்ளிகளுக்குச் செல்லும் மாணவ மாணவிகள் அனைவரும் இந்த ரயில் பாதையைக் கடந்துதான் வரவேண்டியுள்ளது.

இந்த ரயில் பாதையைக் கடக்கத் தியாகராயநகர் ரயில் நிலையத்தின் வடக்கில் இரண்டும், தெற்கில் இரண்டுமாக மொத்தம் நான்கு '' லெவல் கிராசிங் '' பாதைகள் உள்ளன.

வடக்கில் ரங்கராஜபுரம் சாலையும், துரைசாமி ரோடும், தெற்கில் மாட்லி சாலையும், கண்ணம்மாபேட்டை ரோடும் (சுடுகாட்டு ரோடு) இருக்கின்றன.

நகரின் முக்கிய இடங்களுக்கு வருகிறவர்கள் இவற்றின் வழியாகத்தான் வரவேண்டும். '' லெவல் கிராசிங் '' மூடிவிட்டால் சில நேரங்களில் முக்கால் மணி நேரம் வரை காத்திருக்க வேண்டும். பாதையின் கதவு மூடியிருந்தால் சாலையின் இரு பக்கத்திலும் வரிசை வரிசையாகக் கார்களும், பேருந்துகளும் நிற்கும்.

கதவு திறக்கப்படும்போது ஏற்படும் நெருக்கடி காரணமாகப் பல சமயங்களில் விபத்துக்கள் ஏற்பட்டதுண்டு.

தாமதம் காரணமாகவும், விபத்துக்கள் காரணமாகவும் உடனடியாக மேற்கு மாம்பலத்திற்குச் செல்லும் வழியில் ஒரு மேம்பாலமோ, அல்லது சுரங்கப் பாதையோ கட்ட வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

மேலே கூறப்பட்ட நான்கு '' லெவல் கிராசிங் '' களில் துரைசாமி ரோடில் உள்ளதில் தான் அதிகப் போக்குவரத்து உண்டு. அந்த இடத்தில் ரயில் பாதை அருகில் உள்ள பகுதிகளின் நில மட்டத்தை விட உயரமான இடத்தில் உள்ளது. ஆகவே இந்த இடத்தில் மேம்பாலம் கட்டுவதைவிடச் சுரங்கப் பாதை கட்டுவது சிக்கனமானது என்று முடிவு செய்யப்பட்டது.

கோடம்பாக்கம் ஆர்க்காடு சாலையில் உள்ள மேம்பாலத்தைப் போல் கட்டலாமா என்பது பற்றி ஆலோசனை செய்தாலும், இப்பகுதியில் நில ஆர்ஜிதம் செய்வதற்கு அதிகத் தொகை செலவு செய்ய வேண்டியிருந்தது. அதுமட்டுமல்லாமல் அங்கிருந்து முக்கால் மைல் தூரத்தில் கோடம்பாக்கம் மேம்பாலமும் உள்ளது. ஆகவே துரைசாமி ரோடில் சுரங்கப்பாதை அமைப்பது என்று முடிவு செய்யப்பட்டது.

அதன்படி 9 அடி உயரம் உள்ள சுரங்கப்பாதை அமைப்பதற்கு 12 லட்சத்து 61 ஆயிரம் ரூபாய்க்குத் திட்டமிடப்பட்டுத் தமிழக அரசு அதற்கு ஒப்புதல் அளித்தது.

ஒன்பதடி உயரம் இருப்பதன் காரணமாகப் பேருந்துகள், லாரிகள் முதலியன இந்த வழியாக அனுமதிக்கக்கூடாது என்று முடிவு செய்யப்பட்டது.

ஆனால், அந்தப் பகுதி மக்கள், 9 அடி உயரத்தை 12 அடியாக உயர்த்தி அதிகப் போக்குவரத்துக்கு வகை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டதற்கிணங்க வேறு திட்டம் தயாரிக்கப்பட்டது. இதன்படி, லாரிகளைத் தவிர வேறு எல்லா வாகனங்களும் அதன்வழி செல்ல அனுமதிக்க முடிவு செய்யப்பட்டது.

அனுமதிக்கப்பட்ட அந்தத் திட்டத்தின்படியேதான் தற்போது சுரங்கப்பாதை கட்டப்பட்டு வருகிறது.

இந்தச் சுரங்கப்பாதைத் திட்டத்திற்காக எதிர்பார்க்கப்படும் செலவு 25 லட்சம் ரூபாய்.

இப்பாதை 34 அடி அகலம் இருக்கும். வாகனப் போக்குவரத்துக்கு 24 அடியும், இரு பக்கத்திலும் மக்கள் நடந்து செல்வதற்காக 5 அடி அகலப்பாதையும் இரண்டும் இருக்கும். அமைக்கப்படவிருக்கும் சுரங்கப் பாதையின் அடியில் இருந்து சுமார் ஓர் அடி உயரத்தில் நடைபாதை இருக்கும்.

மிக வேகமாக நடந்து கொண்டிருக்கும் இந்த வேலை அடுத்த ஆண்டு செப்டம்பர் மாதத்தில் முடிவடையும்.

பெரும்பெரும் திட்டங்களை எல்லாம், விரைவாகச் செயல்படுத்திவரும் தமிழக அரசு, இந்தச் சுரங்கவழித் திட்டத்தையும் விரைவில் நிறைவேற்ற நினைப்பதில் வியப்பில்லை. இந்தத் திட்டம் மட்டும் நிறைவேறிவிட்டால் ஆயிரக்கணக்கான மக்களின் அவதி குறையும்; சாத்தப்பட்ட கதவுகளுக்கிடையே நெடுநேரம் நின்று, ஏக்கத்துடனும் சோர்வுடனும் காத்துக்கொண்டிருக்கும் தொல்லை மறையும் என்பதில் ஐயமில்லை.

துரைசாமி ரோடு சுரங்கப் பாதையைப் போலவே கண்ணம்மா பேட்டையிலும் ஒரு சுரங்கப்பாதை கட்டப்படவிருக்கிறது.

இதற்கு 25 லட்சத்து 24 ஆயிரம் ரூபாய் செலவாகும். இது சம்பந்தப்பட்ட வேலைகள், துரைசாமி ரோடு சுரங்கப் பாதையில் ரயில்வே இலாகாவினரின் வேலைகள் முடிந்தபின் துவக்கப்படும்.

சரிதம் படைக்கும் சரசுவதி மகால்

'' தஞ்சை சரசுவதி மகால் உலகத்திலே உள்ள நூலகங்களில் மிகப் பெரியதும், மிகவும் முக்கியமானதும் ஆகும் '' —என்கிறார் டாக்டர் ஏ. சி. பர்னெல் என்ற ஜெர்மன் நாட்டு அறிஞர்.

அங்கு மொத்தம் 40,000க்கும் மேற்பட்ட கையெழுத்துப் பிரதிகளும் ஏட்டுச் சுவடிகளும் உள்ளன.

அவற்றில் 30,000 சமஸ்கிருத மொழியில் உள்ளவை. 5,000 மராத்திய மொழியிலும், 2,500 தெலுங்கு மொழியிலும், 2,000 தமிழிலும் 500 பிற மொழிகளிலும் உள்ளன. பிற மொழி நூல்களில், லத்தின், பிரெஞ்சு, இத்தாலியன், ஜெர்மன், கிரேக்க மொழி நூல்கள் அடங்கும்.

கி. பி. 9-ம் நூற்றாண்டு முதல் உள்ள ஏட்டுச் சுவடிகள், கையெழுத்துப் பிரதிகள், நூல்கள் ஆகியவை இங்கு உள்ளன. 12-ம் நூற்றாண்டைச் சேர்ந்த குறளைப் பற்றிய சுவடி தமிழிலுள்ளவற்றில் முக்கியமானதும் தொன்மையானதுமாகும்.

இந்த நூல்களின் பட்டியல்களை 1884-ம் ஆண்டில் முதல் முதல் தயாரிக்கத் தொடங்கியவர் டாக்டர் பன்னெல் ஆகும். அவர் தயாரித்த முதல் பட்டியல் லண்டன் மாநகரில் வெளியிடப்பட்டது.

1949 முதல் 1964 வரை சுமார் 130 கையெழுத்துப் பிரதிகள் நூல்களாக வெளியிடப்பட்டுள்ளன. இதற்கான நிதி உதவியைத் தமிழ்நாடு அரசும், மத்திய அரசும், டெல்லியிலுள்ள சங்கீத நாடக சங்கம் போன்ற நிலையங்களும் அளித்துள்ளன.

இங்குள்ள ஏட்டுச் சுவடிகள், கையெழுத்துப் பிரதிகள் கீழ்க்கண்ட பொருள்கள் பற்றியவை:

(1) வேதங்கள், வேதங்களின் தத்துவம், காவியங்கள்.

(2) புராணங்கள், இதிகாசங்கள்.

(3) இசை, நுண்கலைகள், சிற்பம்.

(4) மந்திரம்.

(5) சித்த-ஆயுர்வேத வைத்திய நூல்கள்.

வைத்தியம் சம்பந்தப்பட்டவை மட்டும் சுமார் 2,000 நூல்கள் இங்கு உள்ளன. தமிழ், தெலுங்கு, மராத்தி, சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் இவை உள்ளன.

நீரிழிவுச் சிகிச்சை, சுவாசகாச சிகிச்சை (ஆஸ்துமா), க்ஷயம் உளமாந்தை சிகிச்சை, குன்ம ரோக (வயிற்றிலுண்டாகும் சகல நோய்களுக்குமான) சிகிச்சை, விஷ வைத்தியம், அகஸ்தியர் 2,000 (பண்டைக் கால ஆயுர்வேத-சித்த வைத்திய முறைகள் நிறைந்த பழைய அபூர்வ ஓலைச் சுவடியினின்று பதிப்பிக்கப்பட்டவை), மாடுகள், குதிரைகள் இலக்கணமும் வைத்தியமும் போன்ற, பதிப்பிக்கப்பட்ட வைத்திய நூல்கள் இவற்றில் அடங்கும்.

' தொல்காப்பியம்— சொல்லதிகாரம், நச்சினார்க்கினியம்', இலக்கண நூலும், நாட்டிய சாஸ்திர சங்க்ரஹம், நாட்டியத்திற்கான சாகித்திய வகைகள், பரதார்ணவம் போன்ற நாட்டிய சாத்திரம் பற்றிய நூல்களும், தாளசமுத்திரம், ராக ஆலாபனைகளும் லயங்களும் போன்ற இசை நூல்களும், பின்னல் கோலாட்டம் என்ற கோலாட்ட வகைகள் பற்றிய நூலும், மானசாரம், சிற்பரத்தினம், மயமதம் போன்ற சிற்ப-கட்டடக் கலை நூல்களும் வெளியிடப்பட்ட பிற நூல்களில் சில.

சுமார் 1 ரூபாயிலிருந்து 15 ரூபாய் வரை நூல்களுக்குத் தகுந்தபடி பல்வேறு விலைகளில் உள்ளன, இந்த நூல்கள். சிறப்புச் செயலாளர் சரசுவதி மகால் நூல் நிலையம், தஞ்சாவூர் என்ற முகவரியுடன் தொடர்பு கொண்டு இவைகளைப் பெறலாம்.

கண்ணான அண்ணா!

தண்ணார் தமிழகந்தான் தந்த தவப்புதல்வா !
அண்ணாவே ! எங்கள் தமிழமுதே—கண்ணாக
இந்நாட்டைக் காத்தவனே ! எங்கள் தமிழரசே !
எந்நா டடைந்தாய்நீ இன்று?

முத்தமிழின் உறைவிடமே ! மூவாத் தமிழுருவே !
சித்த மெலாம்கவர்ந்த செந்தமிழே—இத்தரையில்
'அண்ணா' 'அண்ணா'வென்றே அன்புடனே யாமழைக்கும்
கண்ணாவாய் உள்ளம் களித்து.

மேடையிலே ஏறிவிட்டால் மெச்சுமுன் சொல்கேட்டு
வாடை மழைகருதார் மாந்தர்தாம்—தேடுகின்ற
பூத்தேனில் தோயும் பொறிவண்டு போல்வாரே
ஏத்துமுன் சொற்குண்டோ ஈடு ?

கொள்கையி லேமாறு கொண்டிருந்த பல்லோரும்
உள்ளம் மறந்துன் உரைகேட்பர்—வள்ளலே !
மோனை யுடனெதுகை முந்திவந்தே உன்மொழியில்
தேனமுதாய்ப் பாய்ந்திடுமே சேர்ந்து.

நாடகமும் ஆடியிந்த நாட்டாரை மாற்றுவித்த
ஆட லரசேயெம் அண்ணாவே—வாடாத
சின்னக் கதையால் சிரிக்கவே வைக்கின்ற
உன்னழகுக் குண்டோவோர் ஒப்பு?

ஏறாத மேடையெதும் இந்நாட்டி லுண்டோநீ ?
கூறாத நற்கருத்தும் உண்டுகொலோ !—மாறாத
தேனருவி என்பேனோ ! சிந்தையெலாம் தித்திக்கும்
வானமுதம் என்பேனோ மற்று.

புன்னகையாய் ! இன்சொல்லாய் ! பொங்கும் பகையிடமும்
நன்னயமாய்ப் பேசுகின்ற நாவுடையாய்—ஒன்றாரும்
நாணும் படிநடக்கும் நல்ல செயல்அண்ணா
காணுமோ மீட்டுமுனைக் கண் ?

பாசொலி

செவ்வாழை

செங்கோடன், அந்தச் செவ்வாழைக் கன்றைத் தன் செல்லப்பிள்ளை போல் வளர்த்து வந்தான். இருட்டுகிற நேரம் வீடு திரும்பினாலும்கூட, வயலிலே அவன் பட்ட கஷ்டத்தைக்கூடப் பொருட்படுத்தாமல், கொல்லைப்புறம் சென்று, செவ்வாழைக் கன்றைப் பார்த்துவிட்டுத் தண்ணீர் போதுமானபடி பாய்ச்சப்பட்டு இருக்கிறதா என்று கவனித்து விட்டுத்தான், தன் நான்கு குழந்தைகளிடமும் பேசுவான். அவ்வளவு பிரேமையுடன் அந்தச் செவ்வாழையை அவன் வளர்த்து வந்தான். கன்று வளர வளர அவன் களிப்பும் வளர்ந்தது. செவ்வாழைக்கு நீர் பாய்ச்சும் போதும், கல் மண்ணைக் கிளறிவிடும் போதும், அவன் கண்கள் பூரிப்படையும் மகிழ்ச்சியால்; கரியனிடம் (அவனுடைய முதல் பையன்) காட்டியதைவிட அதிகமான அன்பும், அக்கறையும் காட்டுகிறாரே, என்று ஆச்சரியம், சற்றுப் பொறாமைகூட ஏற்பட்டது, குப்பிக்கு.

'' குப்பி ! ஏதாச்சும் மாடு கிடு வந்து வாழையை மிதிச்சு விடப் போகுது. ஜாக்கிரதையாகக் கவனிச்சுக்கோ. அருமையான கன்று—ஆமாம் செவ்வாழைன்னா சாமான்யமில்லே; குலை, எம்மாம் பெரிசா இருக்கும் தெரியுமோ ? பழம், வீச்சு வீச்சாகவும் இருக்கும், உருண்டையாகவும் இருக்கும்—ரொம்ப ருசி—பழத்தைக் கண்ணாலே பார்த்தாக்கூடப் போதும்; பசியாறிப் போகும்'' என்று பெருமையாகக் குப்பியிடம் பேசுவான் செங்கோடன்.

அப்பா சொல்லுவதை நாலு பிள்ளைகளும் ஆமோதிப்பார்கள் —அதுமட்டுமா — பக்கத்துக் குடிசை, எதிர்க் குடிசைகளிலே உள்ள குழந்தைகளிடமெல்லாம் இதே பெருமையைத்தான் பேசிக் கொள்வார்கள். உழவர் வீட்டுப் பிள்ளைகள், வேறே எதைப் பற்றிப் பேசிக் கொள்ள முடியும்—அப்பா வாங்கிய புதிய மோட்டாரைப் பற்றியா, அம்மாவின் வைரத்தோடு பற்றியா, அண்ணன் வாங்கிவந்த ரேடியோவைப் பற்றியா, எதைப்பற்றிப் பேசமுடியும் ? செவ்வாழைக் கன்றுதான், அவர்களுக்கு, மோட்டார், ரேடியோ, வைரமாலை, சகலமும் !

மூத்த பையன், கரியன், செவ்வாழைக்குலை தள்ளியதும், ஒரு சீப்புப் பழம் எனக்குத்தான்—என்று சொல்லுவான்.

'' ஒண்ணுகூட எனக்குத் தர மாட்டாயாடா— நான் உனக்கு மாம்பழம் தந்திருக்கிறேன், கவ

வந்த அந்தச் செவ்வாழைக் குலைக்கு வந்தது ஆபத்து.



தெருவிலே, சுந்தரமும் செங்கோடனும் பேசும்போது, குழந்தைகள், செவ்வாழையைப்பற்றியதாக இருக்கும் என்று எண்ணவே இல்லை! செங்கோடனுக்குத் தலை கிறுகிறுவென்று சுற்றிற்று—நாக்குக் குழறிற்று—வார்த்தைகள் குபுகுபுவென்று கிளம்பித் தொண்டையில் சிக்கிக்கொண்டன.

மாட்டுப் பெண்ணுக்குப் பிறந்த நாள் பூஜை—என்று காரணம் காட்டினன் சுந்தரம். என்ன செய்வான் செங்கோடன்! என்ன சொல்வான்? அவன் உள்ளத்திலே, வாழையோடு சேர்ந்து வளர்ந்த ஆசை—அவன் குழந்தைகளின் நாக்கில் நீர் ஊறச்செய்த ஆசை—இன்று, நாளை, என்று நாள் பார்த்துக் கொண்டிருந்த ஆவல்—எனினும் எதைத்தான் சொல்ல முடியும்? கேட்பவர் பண்ணை பரந்தாமர்! எவ்வளவு அல்பனடா, வாழைக் குலையை, அவர் வாய் திறந்து, உன்னை ஒரு பொருட்டாக மதித்துக் கேட்டனுப்பினுல், முடியாது என்று சொல்லி விட்டாயே! அவருடைய உப்பைத் தின்றுபிழைக்கிறவனுக்கு இவ்வளவு நன்றிகெட்ட தனமா? கேவலம் ஒரு வாழைக் குலை அவருடைய அந்தஸ்துக்கு இது ஒரு பிரமாதமா! என்று ஊர் ஏசுகிறதுபோல் அவன் கண்களுக்குத் தெரிகிறது.

"அப்பா! ஆசை காட்டி மோசஞ் செய்யாதே! நான்கூடத் தான் தண்ணீர் பாய்ச்சினேன், மாடு மிதித்துவிடாதபடி பாதுகாத்தேன்; —செவ்வாழை ரொம்ப ருசியாக இருக்கும்; கல்கண்டு போல இருக்கும் என்று நீதானே என்னிடம் சொன்னுய் அப்பா! தங்கச்சிக்குக் கூட, 'உசிர்' அந்தப் பழத்திடம்; மரத்தை அண்ணாந்து பார்க்கும் போதே, நாக்கிலே நீர் ஊறும்; எங்களுக்குத் தருவதாகச் சொல்லி விட்டு, இப்போது ஏமாற்றுகிருயே! நாங்கள் என்னப்பா, உன்னைக் கடையிலே காசுபோட்டுத் திராட்சை, கமலாவா வாங்கித்தரச் சொன்னேம்? நம்ம கொல்லையிலே நாம் வளர்த்ததல்லவா!" என்று அழுகுரலுடன் கேட்கும் குழந்தைகளும், குழந்தைகளைத் தவிக்கச் செய்கிருயே, நியாயமா என்று கோபத்துடன் கேட்கும் மனைவியும், அவன் மனக் கண்களுக்குத் தெரிந்தனர்! எதிரிலே நின்றவரோ, பண்ணைக் கணக்கப்பிள்ளை! அரிவாள் இருக்குமிடம் சென்றான். 'அப்பா குலையை வெட்டப்போருரு — செவ்வாழைக் குலை' — என்று ஆனந்தக் கூச்சலிட்டுக் கொண்டு, குழந்தைகள் கூத்தாடின; செங்கோடனின் கண்களிலே நீர்த் துளிகள் கிளம்பின! குலையை வெட்டினான் - உள்ளே கொண்டு வந்தான் — அரிவாளைக் கீழே போட்டான்—'குலையைக் கீழே வை அப்பா, தொட்டுப் பார்க்கலாம்' என்று குதித்தன குழந்தைகள். கரியனின் முதுகைத் தடவினான் செங்கோடன். '' [illegible]! இந்தக் குலை நம்மஆண்[illegible]ணுமாம்; கொண்டு போ[illegible]ழா தீங்க —இன்னும் [illegible]சத்திலே பக்கத்து[illegible] மர[illegible] குலை [illegible]ட்டாய [illegible] '' என்று கூறிக்கொண்[illegible] [illegible]ட்டுக் கிளம்பி[illegible] [illegible]ழந்தையின் அழு குரல், [illegible] பிளப்பதற்குள்!

செங்கோ[illegible] அன்று பிண[illegible] விழு[illegible] போ[illegible] யிற்று[illegible] இர[illegible] நெடுநேரத்திற்குப் பிறகு[illegible] செங்கோடனுக்குத் துண[illegible]த்தது [illegible]டுக்குவர! அ[illegible]த்துக் [illegible]கிவிட்[illegible] கு[illegible] [illegible]ன். அவன் கண்[illegible] குபுகுபு வெனக் கண்[illegible]று. துடைத்துக் கொ[illegible] புரண்டான்— அவ[illegible] ஆயிர[illegible] ணங்க[illegible] செவ்வா[illegible] செல்[illegible] போல் என்ன[illegible] அவரு[illegible] அது ஒரு பிர[illegible]ல்ல—[illegible] கனையும் [illegible]னைத்[illegible] தில் வா[illegible]முடியும்! [illegible]ட னுக்கு; அந்த ஒரு[illegible]யைக் காண அவ[illegible] எவ்வள[illegible]பாடுபட்டான்—எத்தனை இரவு அதைப்பற்றி இன்பமான கனவுகள்—எத்தனை ஆயிரம் தடவை, குழந்தைகளுக்கு ஆசைகாட்டியிருப்பான்! உழைப்பு எவ்வளவு! அக்கறை எத்தனை! எல்லாம் ஒரு நொடியில் அழிந்தன!

நாலு நாட்களுக்குப் பிறகு, வெள்ளித் தட்டிலே ஒரு சீப்பு செவ்வாழைப்பழத்தை வைத்துக் கொண்டு, அன்னநடை நடந்து அழகுமுத்து விஜயா, அம்பிகை ஆலயத்துக்குச் சென்ருள்.

கடையிலே, செவ்வாழைச் சீப்பு, அழகாகத் தொங்கிக் கொண்டிருந்தது. கணக்கப் பிள்ளை, பண்ணை வீட்டிலே இருந்து நாலு சீப்பு முதலிலேயே தீர்த்துவிட்டான்—அவன் விற்ருன் கடைக்காரனுக்கு! —அதன் எதிரிலே, ஏக்கத்துடன் நின்ருன் கரியன்! ''பழம் ஒரு அணுடா, பயலே—காலணுவுக்குச் செவ்வாழை கிடைக்குமோ?—போடா'' என்று விரட்டினுன், கடைக்காரன். கரியன் அறிவானு பாவம், தன் கொல்லையிலே இருந்த செவ்வாழை, இப்போது கடையில் கொலுவீற்றிருக்கிறது என்ற விந்தையை! பாவம்; எத்தனையோ நாள், அந்தச் சிறுவன், தண்ணீர் பாய்ச்சினுன், பழம் கிடைக்கும் என்று! பழம் இருக்கிறது, கரியனுக்கு எட்டாத இடத்தில்! விசாரத்தோடு வீட்டிற்கு வந்தான், வறுத்த கடலையை வாங்கிக் கொரித்துக் கொண்டே! செங்கோடன், கொல்லைப்புறத்திலிருந்து வெளியே வந்தான்—வாழை மரத்துண்டுடன்.

''ஏம்பா! இதுவும் பண்ணை வீட்டுக்கா?'' என்று கேட்டான் கரியன்.

''இல்லேடா, கண்ணு; நம்ம பார்வதிப் பாட்டி செத்துப் போயிட்டா—அந்தப் பாடையிலே கட்ட'' என்ருன் செங்கோடன்.

அலங்காரப் பாடையிலே, செவ்வாழையின் துண்டு!

பாடையைச் சுற்றி அழுகுரல்!

கரியனும், மற்றக் குழந்தைகளும், பின்பக்கம்.

கரியன் பெருமையாகப் பாடையைக்காட்டிச் சொன்னுன்.

'எங்க வீட்டுச் செவ்வாழைடா' என்று.

''எங்க கொல்லையிலே இருந்த செவ்வாழை. குலையைப் பண்ணை வீட்டுக்குக் கொடுத்துவிட்டோம்—மரத்தை வெட்டிப் 'பாடை'யிலே கட்டிவிட்டோம்'' என்ருன் கரியன்.

பாவம்! சிறுவன் தானே!! அவன் என்ன கண்டான், செங்கோடனின் 'செவ்வாழை' தொழிலாளர் உலகிலே சர்வசாதாரணச் சம்பவம் என்பதை!

அரசாங்க அதிகாரியாக இருந்து ஓய்வு பெற்றவர், தாமோதரன். அவரது செல்வ மகள் செண்பகத்தை உயர்கல்வி படிக்க வைத்துப் பெரிய அதிகாரியாக்க வேண்டும் என்பது அவரது அவா! ஆனல் மகளின் மனமோ வேறு வழியில் இருந்தது.

அவளுக்கு ஓவியம் பயிலுவதில் மிகுந்த ஆசை! அவளது வளைக் கரங்கள் எப்போதும் ஏதாவதொரு ஓவியத்தைத் தீட்டிய வண்ணமேயிருக்கும். எனவே, அவளுக்கு மேல்படிப்பில் இச்சையில்லை. ஓவியக் கல்லூரியில் சேர வேண்டும் என்று பிடிவாதமாக இருந்தாள்!

செல்வ மகளின் விருப்பத்தைத் தட்டமுடியவில்லை, தந்தையால். அதே சமயத்தில் தனது கற்பனையில் மிகப் பெரிய கோட்டையாகக் கட்டியுள்ள அவளது வருங்காலம் வெறும் மாயை ஆகிவிடக் கூடாதே என்ற எண்ணம் அவரது, மனத்திற்குச் சற்று உளைச்சலைத் தந்தது. எனவே, தனது ஐயப்பாட்டினை நீக்க, ஓவியக் கல்லூரிக்கு நேரிலேயே சென்று, கண்டு, கேட்டு, முடிவு செய்ய உறுதி பூண்டார்.

காலை நேரம்! சாரை சாரையாக மாணவ—மாணவியர் கூட்டம் இரை தேடிச் செல்லும் பறவைக் கூட்டம் போல் கல்விக் கூடங்களை நாடி அடைகின்றவேளை! தாமோதரன் தன்மகள் செண்பகத்துடன் சென்னை எழும்பூருக்குச் செல்லும் வழியில் பூந்தமல்லி நெடுஞ் சாலையிலுள்ள கலைத் தொழிற் கல்லூரிக்குச் சென்ருர்.

அரண்மனை போன்ற உயர்ந்த நுழைவாயிலுள்ள கட்டடம், அவருக்குப் பார்த்த மாத்திரத்திலேயே நம்பிக்கை தருவதாக இருந்தது. உள்ளே நுழைந்ததும் ஒரு காட்சிக் கூடம். அங்கு விதவிதமான ஓவியங்களும், சிற்பங்களும் அழகுற வைக்கப்பட்டுள்ளன. ஓர் ஓவியம், பிறிதொன்றினைப்போல் இல்லவே இல்லை. ஒவ்வொன்றும் தனித்தன்மையுடன், தனி எழிலுடன் கொலு வீற்றிருக்கின்றன. எவரையும் கவரக்கூடிய இந்தச் சிற்பங்கள்—ஓவியங்கள் எடுத்த எடுப்பிலேயே இந்தக் கல்லூரியின் திறமைக்கு நற்சான்றிதழ் வழங்குபவையாக அமைந்துள்ளன.

அந்த ஹாலைத் தாண்டிச் சென்ருல் சோலைகள் மத்தியில் இந்தக் கல்லூரி அமைந்திருக்கிறது. எவருக்கும் கலை உணர்வை ஏற்படுத்தக்கூடிய சூழ்நிலை. செண்பகத்திற்கு மிகவும் பிடித்திருந்தது.

அவர்கள் நேராகக் கல்லூரி முதல்வர் திரு. கிருஷ்ணுராவின் அறைக்குச் சென்ருர்கள். அவரும் இக்கல்லூரியின் முன்னுள் மாணவரே! தமிழகத்தின் சின்னமான "கோயில் சின்னம்" அவரது கைவண்ணமே! தமிழக அரசு பரிசுச்சீட்டுச் சின்னமும் அவரது கற்பனையே!

சிரித்த முகத்துடன் அவர்களை வரவேற்ற முதல்வரிடம் எப்படிப் பேச்சைத் துவக்குவது என்று தெரியாமல், "இந்தக் கல்லூரி எப்போது தோன்றியது?" என்று ஒரு கேள்வியைத் தொடுத்தார், தாமோதரன்.

"1850-ம் ஆண்டு! சென்னைக்கோட்டையில் ராணுவ டாக்டராகப் பணியாற்றி வந்தார், அலெக்சாண்டர் ஹண்டர். அவர் டாக்டர் என்பதோடு சிறந்த ஓவியருங்கூட!

அவருக்கு ஓர் இனிய எண்ணம். இங்குள்ள மக்களை மகிழ்விக்கவும், கலையார்வமுள்ளவர்களாக்கவும் ஓர் ஓவியப் பள்ளியைத் துவங்க அவர் ஆசைப்பட்டார். அதனைச் செயல்படுத்த எண்ணித் தன்னிடம் வரும் நோயாளிகளிடம் உண்டியல் மூலம் பணம் வசூலித்தார். ராணுவ வீரர்களில் ஒழுங்கீனமாக நடப்பவர்களுக்கு அபராதம் விதித்து, அதையும் இந்த உண்டியல் நிதியில் சேர்த்து வந்தார்.

அவரது முயற்சியால்

வண்ண வண்ண ஓவியம்

னமிருக்கட்டும்—வறுத்த வேர்க்கடலை கொடுத்திருக்கிறேன், கவனமிருக்கட்டும்'' — என்று எதிர்க் குடிசை எல்லப்பன் கூறுவான்.

கரியனின் தங்கை, காமாட்சியோ கண்ணைச் சிமிட்டிக்கொண்டே ''உனக்கு ஒரு சீப்புன்னா, எனக்கு இரண்டு, தெரியுமா?—அம்மாவைக் கேட்டு ஒரு சீப்பு, அப்பாவைக் கேட்டு ஒரு சீப்பு—'' என்று குறும்பாகப் பேசுவாள்.

மூன்றாவது பையன், முத்து, ''சீப்புக் கணக்குப் போட்டுக்கிட்டு ஏமாந்து போகாதீங்க—ஆமா—பழமாவதற்குள்ளே யாரார் என்னென்ன செய்துடுவாங்களோ, யாரு கண்டாங்க'' என்று சொல்லுவான்— வெறும் வேடிக்கைக்காக அல்ல—திருடியாவது மற்றவர்களை விட அதிகப்படியான பழங்களைத் தின்றே தீர்த்து விடுவது என்று தீர்மானித்து விட்டான்.

செங்கோடனின் செல்லப் பிள்ளையாக வளர்ந்து வந்தது செவ்வாழை. உழைப்பு அதிகம், வயலில், பண்ணை மேனேஜரின் ஆர்ப்பாட்டம் அதிகம். இவ்வளவையும், சகித்துக் கொள்வான்—செவ்வாழையைக் கண்டதும் சகலமும் மறந்து போகும். குழந்தைகள் அழுதால், செவ்வாழையைக் காட்டித்தான் சமாதானப்படுத்துவான்! துஷ்டத்தனம் செய்கிற குழந்தையை மிரட்டவும், செவ்வாழையைத்தான் கவனப்படுத்துவான்! குழந்தைகள், பிரியமாகச் சாப்பிடுவார்கள், செவ்வாழையை என்ற எண்ணம் செங்கோடனுக்கு! பண்ணை வீட்டுப் பிள்ளைகள், ஆப்பிள், திராட்சை, தின்ன முடிகிறது—கரியனும் முத்துவும், எப்படி விலை உயர்ந்த அந்தப் பழங்களைப் பெற முடியும்? செவ்வாழையைத் தந்து தன் குழந்தைகளைக் குதூகலிக்கச் செய்ய வேண்டும் என்ற எண்ணந்தான், செங்கோடனை, அந்தச் செவ்வாழைக் கன்றைச் செல்லமாக வளர்க்கும் படிச் செய்தது. உழவன் செங்கோடனிடம், எவ்வளவு பாடுபட்டாலும், குழந்தைகளுக்குப் 'பழமும் பட்சணமும்' வாங்கித்தரக்கூடிய 'பணம்' எப்படிச் சேர முடியும்? கூலி நெல், பாதி வயிற்றை நிரப்பவே உதவும்—குப்பியின் 'பாடு' குடும்பத்தின் பசியைப் போக்கக் கொஞ்சம் உதவும். இப்படிப் பிழைப்பு! உழைப்பின் பெரும் பகுதி வயலிலே செலவாகிறது—அதன் பலனில் மிகப் பெரும் பகுதியோ, பண்ணைக்குச் சேர்ந்து விடுகிறது. இந்தச் 'செவ்வாழை' ஒன்றுதான், அவன் சொந்தமாக — மொத்தமாக, பலன் பெறுவதற்கு உதவக் கூடிய உழைப்பு! இதிலே பங்குபெறப் பண்ணையார் குறுக்கிட முடியாதல்லவா? அவருக்காகப் பாடுபட்ட நேரம் போக, மிச்சமிருப்பதிலே, அலுத்துப் படுக்க வேண்டிய நேரத்திலே, பாடுபட்டுக் கண்ணைப்போல வளர்த்து வரும் செவ்வாழை! இதன் முழுப் பயனும் தன் குடும்பத்துக்கு! இது ஒன்றிலாவது தான்பட்ட பாட்டுக்கு உரிய பலனைத், தானே பெற முடிகிறதே என்ற சந்தோஷம் செங்கோடனுக்கு.

இவ்வளவும் அவன் மனத்திலே, தெளிவாகத் தோன்றிய கருத்துக்கள் அல்ல. புகைப்படலம் போல, அந்த எண்ணம் தோன்றும், மறையும்; செவ்வாழையைப் பார்க்கும்போது பூரிப்புடன் பெருமையும் அவன் அடைந்ததற்குக் காரணம் இந்த எண்ணந்தான்.

கன்று, வளர்ந்தது, கள்ளங் கபடமின்றி, செங்கோடனுக்குக் களிப்பும் வளர்ந்தது. செங்கோடனின் குழந்தைகளுக்கு இப்போது, விளையாட்டு இடமே, செவ்வாழை இருந்த இடந்தான். மலரிடம் மங்கையருக்கும், தேனிடம் வண்டுகளுக்கும், ஏற்படும் பிரேமை போல, அந்தக் குழந்தைகளுக்குச் செவ்வாழையிடம், பாசம் ஏற்பட்டு விட்டது.

''இன்னும் ஒரு மாசத்திலே குலை தள்ளுமாப்பா ?—கரியன் கேட்பான், ஆவலுடன், செங்கோடனை.

''இரண்டு மாசமாகும்டா கண்ணு'' என்று செங்கோடன் பதிலளிப்பான்.

செவ்வாழை குலை தள்ளிற்று—செங்கோடனின் நடையிலேயே ஒரு புது முறுக்கு ஏற்பட்டுவிட்டது. நிமிர்ந்து பார்ப்பான், குலையைப் பெருமையுடன்.

பண்ணை பரந்தாம முதலியார், தமது மருமகப் பெண் முத்து விஜயாவின் பொன்னிற மேனியை அழகுபடுத்திய வைரமாலையைக்கூட அவ்வளவு பெருமையுடன் பார்த்திருக்க மாட்டார்! செங்கோடனின் கண்களுக்கு, அந்தச் செவ்வாழைக் குலை முத்துவிஜயாவின், வைரமாலையைவிட விலை மதிப்புள்ளதாகத்தான் தோன்றிற்று. குலை முற்ற முற்ற, செங்கோடனின் குழந்தைகளின் ஆவலும், சச்சரவும், பங்குத் தகராறும், அப்பாவிடமோ, அம்மாவிடமோ 'அப்பீல்' செய்வதும், ஓங்கி வளரலாயின. ''எப்போது பழமாகும் ?'' என்று கேட்பாள் பெண். ''எத்தனை நாளைக்கு மரத்திலேயே இருப்பது?'' என்று கேட்பான் பையன். செங்கோடன் பக்குவமறிந்து தரவேண்டுமென்று எண்ணிக் கொண்டிருந்தான். உழைப்பின் விளைவு! முழுப்பலனை நாம் பெறப் போகிறோம்—இடையே தரகர் இல்லை—முக்காலே மூன்று வீசம் பாகத்தைப் பறித்துக் கொள்ளும், முதலாளி இல்லை. உழைப்பு நம்முடையது என்றாலும் உடைமை பண்ணையாருடையது—அவர் எடுத்துக்கொண்டது போக மீதம்தான் நமக்கு என்று, வயலில் விளையும் செந்நெல்லைப் பற்றி எண்ணவேண்டும் — அது தானே முறை! ஆனால் இந்தச் செவ்வாழை அப்படி அல்ல! உழைப்பும் உடைமையும் செங்கோடனுக்கே சொந்தம்!

இரண்டு நாளையில், குலையை வெட்டிவிடத் தீர்மானித்தான் —பிள்ளைகள் துள்ளின சந்தோஷத்தால்; மற்ற உழவர் வீட்டுப் பிள்ளைகளிடம் 'சேதி' பறந்தது—பழம் தரவேண்டும் என்று சொல்லி, அவலோ, கடலையோ, கிழங்கோ, மாம்பிஞ்சோ, எதை எதையோ, 'அச்சாரம்' கொடுத்தனர் பல குழந்தைகள், கரியனிடம்.

பாடுபட்டோம், பலனைப் பெறப் போகிறோம், இதிலே ஏற்படுகிற மகிழ்ச்சிக்கு ஈடு எதுவும் இல்லை. இதைப் போலவே, வயலிலும் நாம் பாடுபடுவது நமக்கு முழுப் பயன் அளிப்பதாக இருந்தால் எவ்வளவு இன்பமாக இருக்கும். செவ்வாழைக்காக நாம் செலவிட்ட உழைப்பு, பண்ணையாரின் நிலத்துக்காகச் செலவிட்ட உழைப்பிலே, நூற்றுக்கு ஒரு பாகம்கூட ஆகாது — ஆனால் உழைப்பு நம்முடையதாகவும் வயல் அவருடைய உடைமையாகவும் இருந்ததால், பலனை அவர் அனுபவிக்கிறார் பெரும் பகுதி. இதோ இந்தச் செவ்வாழை நம்ம கொல்லையிலே நாம் உழைத்து வளர்த்தது. எனவே, பலன் நமக்குக் கிடைக்கிறது—இது போல நாம் உழைத்துப் பிழைக்க நம்முடையது என்று ஒரு துண்டு வயல் இருந்தால் எவ்வளவு இன்பமாக இருக்கும்! அப்படி ஒரு காலம் வருமா? உழைப்பவனுக்குத்தான் நிலம் சொந்தம்—பாடுபடாதவன் பண்ணையாராக இருக்கக் கூடாது என்று சொல்லும் காலம் எப்போதாவது வருமா! என்றெல்லாம் கூட இலேசாகச் செங்கோடன் எண்ணத் தொடங்கினான். செவ்வாழை இது போன்ற சித்தாந்தங்களைக் கிளறிவிட்டது அவன் மனத்தில். குழந்தைகளுக்கோ நாக்கிலே நீர் ஊறலாயிற்று.

செங்கோடன் செவ்வாழைக் குலையைக் கண்டு களித்திருந்த சமயம், பண்ணை பரந்தாமர் தமது மருமகப் பெண் முத்து விஜயத்தின் பிறந்தநாள் விழாவை விமரிசையாகக் கொண்டாட ஏற்பாடுகள் செய்து கொண்டிருந்தார். அம்பிகை கோயிலில் அபிஷேக ஆராதனை செய்வதற்காக, 'குருக்க'ளிடம் சொல்லிவிட்டார். கணக்கப்பிள்ளையைக் கூப்பிட்டுப் 'பட்டியல்' தயாரிக்கச் சொன்னார். பல பண்டங்களைப் பற்றிக் குறிப்பு எழுதும்போது, 'பழம் தேவை என்று தோன்றாமலிருக்குமா? இரண்டு சீப்பு வாழைப் பழம் என்றார் பண்ணையார்.

''ஏனுங்க பழம்—கடையிலே நல்ல பழம் இல்லை—பச்சை நாடன்தான் இருக்கு'' என்று இழுத்தான் சுந்தரம், கணக்கப் பிள்ளை.

''சரிடா, அதிலேதான் இரண்டு சீப்பு வாங்கேன் ?— வேறே நல்ல பழம் எங்கே இருக்கு!'' என்று பண்ணையார் சொல்லி முடிப்பதற்குள், சுந்தரம், ''நம்ப செங்கோடன் கொல்லையிலே, தரமா ஒரு செவ்வாழைக் குலை இருக்குதுங்க. அதைக் கொண்டுக்கிட்டு வரலாம்'' என்றான். ''சரி'' என்றார் பண்ணையார்!

செங்கோடனின் செவ்வாழைக் குலை! அவனுடைய இன்பக் கனவு! உழைப்பின் விளைவு! குழந்தைகளின் தூகலம் !!

அதற்கு மரண ஓலை தயாரித்து விட்டான் சுந்தரம்!

எத்தனையோ பகல் பார்த்துப் பார்த்துச் செங்கோடன் குடும்பம் பூராவும் பூரித்தது அந்தக் குலையை! அதற்குக் கொலைகாரனானான் சுந்தரம். மகிழ்ச்சி, பெருமை, நம்பிக்கை இவைகளைத் தந்து

நாடும் வீடும்....

''வயல்களிலே கதிர் குலுங்கிடின், சர்க்கார் அலுவலகங்களில் மகிழ்ச்சி துள்ளும். தொழிற்சாலைகளிலே தோழமை மலர்ந்து, நீதியும் நிம்மதியும் கிடைத்து உற்பத்தி பெருகிடின் நாட்டு நிலை உயர்ந்திடும். அங்காடியிலுள்ளோர், கொள்வன கொடுப்பன என்பவை நேர்மையின் அடிப்படையில் அமைந்திருத்தல் வேண்டும் என்று இருந்திடின், அகவிலையும் பதுக்கலும் அழிந்துபடும். பொது மக்களின் வாழ்வு சிர்படும். நாட்டின் நிலை உயர்ந்திட மாணவ மணிகள் கல்விக் கூடங்களில் பயிற்சி பெற்றிடின் நாடு மேம்பாடடையும்; இவை எல்லாவற்றின் கூட்டே ஆட்சி. சில மண்டபங்களிலே மட்டும் செய்யப்படுகிற காரியமல்ல ஆட்சி. நாட்டு ஆட்சி, வீட்டுக்கு வீடு காணப்படும் பண்பைப் பொறுத்திருக்கிறது.''

பேரறிஞர் அண்ணா
வானொலிப் பேச்சு 15–3–67

1850-ம் ஆண்டு மே திங்களில் உருவானதுதான், இந்தக் கல்லூரி !

120 ஆண்டினைத் தாண்டி விட்ட இந்தப் பழைமையான கல்விக்கூடம், இந்தியாவிலுள்ள ஓவிய-சிற்பக் கல்விக் கூடங்களின் தாய் வீடாகும். இதற்குப் பின்தான், லாகூரில் உள்ள '' மேயோ கலைப் பள்ளி '', பம்பாய், கல்கத்தாவில் உள்ள கலைக் கல்விக் கூடங்களெல்லாம் துவக்கப்பட்டன.

ஆரம்ப காலத்தில் கலைப் பள்ளியாகயிருந்த இதில் ஓவியம், வண்ண ஓவியம், மட்பாண்டங்கள் செய்தல், நெசவு ஆகியவை கற்பிக்கப்பட்டன.

டாக்டர் அலெக்சாண்டர் ஹண்டரின் முயற்சியைப் பாராட்டும் வகையில் 1853-ம் ஆண்டில் கிழக்கிந்திய கம்பெனியார் இந்தக் கல்விக் கூடத்திற்கு நிதி உதவி அளித்தனர். பின்பு 1855-ம் ஆண்டில் இதன் நிர்வாகத்தை அரசு ஏற்றுக் கொண்டது. அப்போது பூங்கா ரயில் நிலையம் முதல் எழும்பூர் நிலையம் வரை இந்தக் கலைக்கூடம் வியாபித்திருந்தது என்று கருதப்படுகிறது. டாக்டர் ஹண்டரின் நினைவாக ஹண்டர்ஸ் தெரு என்று வேப்பேரியில் ஒரு தெரு இன்றும் உள்ளது. ஓவியத்தின் தந்தைக்குத் தமிழனின் காணிக்கை, அது !'' என்று கல்லூரி முதல்வர் பெருமையுடன் சொன்னார்.

'' எத்தனை பேர் படிக்கிறார்கள் ? '' என்று செண்பகம் ஆவலோடு கேட்டாள்.

'' தற்போது 275 மாணவர் மாணவியர் பயில்கின்றனர். ஓர் ஆண்டுக்கு 40 மாணவ-மாணவியரைச் சேர்க்கிறோம். ஓவியம் வரைதல், வண்ண ஓவியம் தீட்டுதல் (Painting), வணிகக் கலைச் (Commercial Art) சிற்பங்கள் செய்தல் (வெண்கலம், செம்பு போன்ற உலோகங்களிலும், களிமண், பிளாஸ்டர் ஆகியவைகளிலும்) ஆகிய பல கலைகள் கற்றுத் தரப்படுகின்றன. அவை தவிர மரத்தினாலும் உலோகத் தகடுகளினாலும் செய்யும் கைத்தொழில்களும் கற்றுத் தரப்படுகின்றன !

''எத்தனை ஆண்டுப் படிப்பு?''

'' கலைகளுக்கு ஆறு ஆண்டுகள் ! கைத்தொழில்களுக்கு மூன்று ஆண்டுகள் ! ஆறாண்டுப் படிப்பில் முதல் இரண்டு ஆண்டுகள் எல்லாத் துறைகளிலும் பயிற்சி அளிக்கப்பட்டுச் சான்றிதழ் வழங்கப்படுகிறது. அதன் பின் அவர்கள் விரும்பும் ஏதாவது ஒரு துறையில் (ஓவியம் தீட்டுதல் அல்லது சிற்பம் அல்லது வணிகக்கலை) மூன்றாண்டுகள் தனிப் பயிற்சி தரப்படுகிறது. கடைசி ஓராண்டில் (Post Diploma Course) தனித் துறையில் சிறப்பான பயிற்சி அளிக்கப்படுகிறது.

'' இங்கு பயின்றவர்களுக்கு வேலை வாய்ப்பு எப்படி உள்ளது?'' தந்தையின் ஆர்வமிக்க கேள்வி, இது !

'' இங்கு படித்துத் தேறியவர்கள் ஓவிய-சிற்ப உலகின் தாரகைகளாக மின்னுகின்றனர்'.

கும்பகோணத்தில் கல்லூரி முதல்வராக உள்ள தனபால் அவர்களும் இக்கல்லூரியின் பழைய மாணவரே! காந்தி இல்லத்திலுள்ள காந்தி சிலை இவரது தயாரிப்பாகும். காந்தி இல்லத்தின் ஓவியங்கள், சிற்பங்கள் யாவும் இந்தக் கல்லூரிக் குழுவினரால் உருவாக்கப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது. திரு. தனபால் தற்போது பெரியார் சிலையும், ஏ.எல். முதலியாரின் சிலையும் உருவாக்கி வருகிறார்.

உலகத் தமிழ் மாநாட்டினையொட்டி நிறுவப்பட்ட வ.உ.சி. சிலையினை உருவாக்கிய ஆதிமூலமும் இக்கல்லூரியின் முன்னாள் மாணவரே! மாமல்லபுரம் குரங்குகளைச் சுற்றுலாச் சுவரொட்டிக்காக வரைந்ததில் இவர் அகில இந்தியப் பரிசு பெற்றுள்ளார்.

முன்னாள் மாணவர்கள் பால்கரராஜ், பன்னீர்ச் செல்வம், ரிச்சர்ட் ஆகியோர் வெளிநாடுகளில் புகழ் பெற்ற ஓவியர்களாகப் பணியாற்றுகிறார்கள்.

ராதா சில்க்ஸ், மெட்டல் பாக்ஸ், மற்றும் இந்துஸ்தான் தாமஸ் போன்ற விளம்பர நிறுவனங்கள் ஆகியவற்றிலும் இங்கு படித்தவர்கள் பணியாற்றுகின்றனர்.

திரைப்படவுலகில் ஆர்ட் டைரக்டராகவுள்ள திருமதி மோகனா இந்தக் கல்லூரியின் முன்னாள் மாணவியே! பர்வீன் நாதர்ஷா, எஸ்.ஆர். ருக்மணி, ஷாமாபண்டிட் ஆகிய பெண்மணிகள் பெரிய நெசவாலைகளில் டிசைனர்களாகவுள்ளனர். ராணி நஞ்சப்பா, செல்வி கலீலி ஆகியோர் வெளிநாட்டில் ஓவியர்களாகவுள்ளனர்.

பெரும்பாலும் வணிகத்துறைகளில் ஈடுபட்டிருப்போர் கைநிறையச் சம்பாதிக்கிறார்கள் என்பது மகிழ்வு தரும் செய்தியாகும்.

காந்தி இல்லம் தவிர வேறு பல இடங்களையும் இக்கல்லூரியின் கைவண்ணம் பொலிவடையச் செய்திருக்கிறது.

சென்னை மவுண்ட்ரோட்டிலுள்ள '' பஸ்ட் சிட்டி நேஷனல் பாங்க் '' என்ற அமெரிக்க வங்கிக் கட்டடத்திற்கான சுவர் ஓவியத்தைத் (Mural) தீட்டியவர்கள் இக்கல்லூரியினரே ! கிண்டியிலுள்ள 'சிப்பெட்' என்ற மைய அரசின் பிளாஸ்டிக் தொழிற்கூடத்தின் உள் அலங்காரங்கள் அனைத்தையும் அமைத்துத் தந்து பாராட்டுப் பெற்றவர்கள் இக்கல்லூரிக் குழுவினர்.

இக்கல்லூரியில் ஆசிரியர்களாகப் பணியாற்றும் முனுசாமி, நந்தகோபால், அந்தோணிதாஸ், ஜானகிராம் ஆகியோர் தேசியப் பரிசுகள் பெற்றுள்ளனர். ஆசிரியர்கள் பாஸ்கர், முனுசாமி ஆகியோர் வெளிநாடு சென்று சிறப்புப்பயிற்சி பெற்று வந்துள்ளனர்.'' முதல்வர் தொடர்ந்து விளக்கிய படியே யிருக்கிறார்.

'' காந்தி சிலை, உழைப்பாளர் சிலை ஆகியவற்றைச்செய்த புகழ்பெற்ற ஓவியர் ராய்சவுத்திரி பல ஆண்டுகள் இக்கல்லூரியின் முதல்வராகப் பணியாற்றி வந்தவர். இக்கல்லூரியின் வளர்ச்சியில் மிகுந்த ஆர்வம் கொண்டவர்.

அவர் இங்கு பணியாற்றும் போது, அப்போதைய கவர்னர் எர்ஸ்கின் பிரபுவின் சிலையை அவர் செய்து வந்தார். அதற்கு 'போஸ்' கொடுப்பதற்காக எர்ஸ்கின் பிரபு நாள்தோறும் காலைப்போதில் இந்தக் கலைக்கூடத்திற்கு வருவது வழக்கம். எனவே காலையில் கவர்னர் வரும் நேரத்தில் மவுண்ட்ரோடிலிருந்து எழும்பூர் வரை இந்தப் பாதையில் போக்குவரத்துக்கள் அனைத்துமே நிறுத்தப்பட்டு விடும். அந்தக் காலத்தில் இது பரபரப்பை ஏற்படுத்தி, அதன் மூலம் இக்கல்லூரி, மக்கள் மத்தியிலே நன்கு அறிமுகமாக நல்லதொரு விளம்பரமாக அமைந்திருந்தது ''—முதல்வர் விறுவிறுப்பாகக் கதை போல் கூறியதைக் கேட்டதும் செண்பகத்துக்குத் தனது வருங்காலக் கல்லூரியைச் சுற்றிப்பார்க்கும் ஆர்வம் மேலோங்கிற்று.

'' அப்பா, கலைக்கூடங்களைச் சுற்றிப் பார்க்கலாமா, அப்பா!''

'' ஓ! தாராளமாக !'' முதல்வர் அனுமதி தருகிறார். அவர்கள் ஆவலோடு புறப்பட்டனர்.

பழைய கட்டடத்தின் மாடியில் முதலாண்டு மாணவர்கள் 40 பேர் அமைதியாக அமர்ந்து எதிரிலே மேடையில் அமர்ந்திருக்கும் கோலேந்திய பெரியவரைப் (மாடல்) பார்த்து, ஓவியம் வரைகிறார்கள். அவர்கள் மத்தியில் பட்டாம்பூச்சி போல் சில மாணவியர்களும் காணப்படுகிறார்கள். ஒவ்வொருவரும் வெவ்வேறு கோணத்தில் ஓவியத்தைத் தீட்டுகின்றனர்.

''இந்த மாடல்........'' தாமோதரன் கேட்குமுன் அவருக்குப் பதில் கிடைக்கிறது.

'' இங்கு மாடலாக வருவதற்குப் பலர் இருக்கின்றனர். சாதாரண மாடல்களுக்கு நாள் கூலி ரூ. 1.50. ஆடையின்றி 'போஸ்' அளிக்கும் மாடல்களுக்குக் கூலி அதிகம்.''

''பெண் மாடல்கள் உண்டா?''

''கலைக்குப் பெண், ஆண் என்ற வேறுபாடு கிடையாது! அப்படிப்பட்ட ஓவியங்களை உருவாக்கும் போது பாலுணர்வு ஏற்படுவதில்லை கலையுணர்வு மேலோங்கி நிற்கும். அதோடு அம்மாதிரி மாடல்களை வைத்து ஓவியம் தீட்டும் போது ஓவியர்கள் தவிர வெளியார் யாரையும் நாங்கள் அனுமதிப்பது கிடையாது.''

தெளிவான விளக்கம் அவர்களுக்குத் திருப்தியைத் தருகிறது.

மாடியை விட்டுக் கீழிறங்கி வந்தால் பின்புறப்பகுதியில் ஓர் அறையில் மூன்று பாவையர் ஒரு 'டிசைன்' தயாரித்துக் கொண்டிருக்கிறார்கள். சேலைகளின்மீது அச்சிடுவதற்கான டிசைன் அது.

அவர்களே அந்த டிசைனைத் தயாரித்து, சேலைகளில் பல வண்ணங்களில் அச்சடிக்கிறார்கள்.

அடுத்த கூடத்தில் பல பணிகள் நடைபெறுகின்றன. ஆசிரியர் ஜானகிராம் ஒரு அழகிய பெண் சிற்பத்திற்கு இறுதி மெருகேற்றுகிறார். அங்கொன்றும் இங்கொன்றுமாக வார்த்தெடுக்கப்பட்ட உலோகத்தினால் பல உருவங்கள்—காந்தி சிலை, அண்ணா சிலை, ஒரு வயதான மாது, ஓர் அழகிய பெண்மணி, நவீன சிற்ப மாடலில் ஓர் உருவம், இப்படிப் பல சிற்பங்கள் உருவாக்கப்பட்ட நிலையில் இருக்கின்றன.

அடுத்து, புதிய கட்டடம். அங்குள்ள கீழ்க் கூடத்தில் பல மாணவ மாணவியர் ஒரு வாலிபரைப் (மாடல்) பார்த்து திரைச் சீலைகளில் வண்ண ஓவியம் தீட்டுகின்றனர்.

எதிர்ப்புற அறையில் கமர்சியல் டிசைன் என்று சொல்லப்படுகின்ற வணிக ஓவியங்கள் கற்றுத் தரப்படுகின்றன.

தொலைவில் உள்ள இன்னொரு கூடத்தில் மட்பாண்ட வேலைப் பாடுகள் நடைபெறுகின்றன.

மற்றொரு கூடத்தில், தகடுகளிலான ஓவியங்கள் தயாரிக்கப்படுகின்றன. பித்தளை அல்லது செப்புத் தகட்டில் வெள்ளி உருவங்களைப் பற்ற வைத்து எனாமல் பூசி அழகுபடுத்தியுள்ளனர். இதில் குங்குமச் செப்புகள், சிகரெட்டு டப்பாக்கள், மேஜை ஓவியங்கள், கழுத்துச் சங்கிலியில் இணைக்கப்படும் டாலர்கள் ஆகியவற்றை இங்கு மாணவர்கள் தயாரிக்கின்றனர்.

பக்கத்து அறையில் மரவேலைப் பாடுகள் நடைபெறுகின்றன. ஆளுநர்களின் நினைவாக வழங்கப்படும் கேடயங்கள் இங்குதான் உருவாக்கப்படுகின்றன.

'வெளிநாட்டு ஓவியர்கள் கூட இங்கு வந்து விரிவுரை வழங்குவார்களாம். சமீபத்தில் கலிபோர்னியாவைச் சேர்ந்த பேராசிரியர் பால் ஏ. லிங்கர்சன் இங்கு வந்து அச்சுக் கலை பற்றிய பயிற்சி முகாமை ஒரு வாரம் நடத்தினாராம்!

ஆண்டுதோறும் குறைந்தது ஆறு பொருட்காட்சியாவது நடத்துவார்களாம். அதில் இவர்களின் ஓவியங்கள், சிற்பங்கள் இடம் பெறுமாம். இந்தக் கல்லூரி ஆசிரியர் பாஸ்கர் இஸ்ரேல் நாட்டில் டெல்அவிவ் நகரில் ஒரு பொருட்காட்சி நடத்தினாராம். மற்றொரு ஆசிரியர் கன்னியப்பன் 1946-ம் ஆண்டு நியூயார்க் நகரில் நடந்த பொருட் காட்சியில் பங்கெடுத்துக்கொண்டாராம்.

ஆண்டு தோறும், இங்குள்ள மாணவ-மாணவியரை 3 குழுவினராகப் பிரித்து ஒவ்வொரு குழுவினையும் வெவ்வேறு இடங்களுக்குச் சுற்றுலா அழைத்துச் செல்வார்களாம். தமிழகத்திலுள்ள எல்லாக் கோயில்களும் வடநாட்டிலுள்ள எல்லோரா, அஜந்தா, கஜராகொ ஆகியவை இந்தச் சுற்றுலாவில் அடங்குமாம்!''— மூச்சு விடாமல் கொட்டுகிறாள் செண்பகம்.

''பீஸ் எவ்வளவாம்! அதைக் கேட்டாயா?''

''கேட்டேன் அப்பா! ரொம்பக் குறைவு! எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்களைத் தான் சேர்ப்பார்களாம். கைத்தொழில் (Crafts) பிரிவுக்கு எழுத்தறிவு இருந்தால் போதுமானதாம்! ஷெட்டியூல்டு, பிற்பட்ட வகுப்பினருக்கும் சில இடங்கள் ஒதுக்கப்படுமாம்.

முதல் இரண்டாண்டுச் சான்றிதழ் படிப்புக்கு, ஆண்டுச் சம்பளம் ரூ. 20; அடுத்த மூன்றாண்டுப் படிப்பிற்கு, ஓவியம், சிற்பம், வணிகக் கலை ஆகியவற்றிற்கு ஓர் ஆண்டுக்கு ரூ. 30. டிப்ளமா மேல்படிப்புக்கு (Post Diploma Course) ஓவியம், சிற்பம், வணிகக் கலைக்கு ஆண்டுக்கு ரூ. 40; தொழில் டிசைன்களுக்கு ரூ. 50.

கைத்தொழில் பிரிவுக்கு ஃபீஸ் கிடையாது. முன் பணம் மட்டும் மரவேலைக்கு ரூ. 10-ம், மற்றவைக்கு ரூ.5-ம் வசூலிப்பார்களாம். சில மாணவ-மாணவியர்க்கு உதவிப் பணம் கூட உண்டாம்.

முதல்வர், அரசினர் கலை-கைத்தொழில்கல்லூரி, சென்னை-3 என்ற முகவரிக்கு மணியார்டர் மூலமாகவோ அன்றி ரொக்கமாகவோ 50 காசு அனுப்பி விண்ணப்பத்தாள் பெற்றுக் கொள்ளலாம்!''

''அவ்வளவையும் கேட்டிட்டியா? அப்போ கண்டிப்பாய் உன்னைச் சேர்த்திட வேண்டியது தான்.''

''அப்பான்னா அப்பா தான்!'' செண்பகம் மகிழ்ச்சியில் பூரிக்கிறாள்! மெய்ம்மறந்து நின்று விடுகிறாள். அந்த நேரத்தில் குண்டு வெடித்தால்கூட அவளது காதிலே விழ முடியாது. ஆனால், ஒருவரின் குரல்மட்டும அவளுக்குத் தெளிவாகக் கேட்டது. அவர்தான் அந்தக் கல்லூரி முதல்வர்.

''என்ன! எப்படி இருக்கிறது கல்லூரி?'' முதல்வர் கேட்கிறார்.

''என்னால் வர்ணிக்க முடியவில்லை! கலையன்னையே குடிகொண்டிருப்பது போன்ற சூழ்நிலையை நான் உணர்கிறேன். கலைகளுக்கெல்லாம் தலையாயதாக விளங்கும் தமிழகத்தின் கலைகளுக்காகத் தமிழக அரசின் தொழில் துறை நடத்தும் இந்தக் கல்லூரி ஒரு புகழ் மகுடம் என்பதில் ஐயமே இல்லை!

சின்னச் சின்ன இழை பின்னிப் பின்னி வரும்...

செங்கதிரோன் தன் சிவந்த கரங்களினால் உலகையே வாரி அணைத்துக்கொண்டிருந்தான். காலை இளம் வெய்யிலில் ஏகாம்பரநாதர் கோயில் கோபுரங்கள் மூழ்கிக் குளித்துக் கொண்டிருந்தன. வானளாவிய கோபுரங்கள்.. நீண்ட பெரிய அகலமான சாலைகள்.. பெரிய பெரிய கட்டடங்கள்.. சுற்றிலும் பச்சைப்பசேலென்ற வயல்கள் மரகதப்படுதா விரித்துக்கொண்டிருந்தன. பல்லவப் பேரரசின் தலைநகராக விளங்கி, வரலாற்றில் கீர்த்திமிக்க புகழேடுகளைத் தனது சொந்தமாக்கிக்கொண்ட 'கல்வியில் கரையிலாத காஞ்சி' மாநகர எல்லையில் வண்டி நுழையும்பொழுது, 'அண்ணன் பிறந்த மண்' என்ற உணர்வு நம்மை அறியாமலேயே ஏற்படுகிறது! நம்மையறியாமலேயே நம் கரங்கள் கூப்புகின்றன!

முதலில் போன ஊர் அய்யம்பேட்டை. காஞ்சியிலிருந்து இரண்டு மைலில் உள்ளது. இரண்டாயிரம் தறிகள் இவ்வூரில் உள்ளன. இவ்வூர் பூராவுமே நெசவாளர் குடும்பங்கள்தான்; குடும்பம் பூராவுமே நெய்யும் தொழில்தான்! பரம்பரை பரம்பரையாக நெசவுத் தொழிலில்தான் ஈடுபட்டுள்ளார்கள். ஊரிலிருப்பவையெல்லாம் சின்னச் சின்ன வீடுகள். இச்சின்ன வீடுகளிலிருந்துதான் தமிழகத்திற்கே அழகூட்டும் கைத்தறிச் சேலைகள், படுக்கை விரிப்புகள், எல்லாமே தயாராகின்றன! நெசவாளப் பெருங்குடி மக்கள்-நெசவுத் தொழிலையே நம்பியிருப்பவர்கள் — அவர்களுக்கு என்ன வருமானம் வருகிறது தெரியுமா? தறி வேலையில் குடும்பமே வேலை செய்தாலும் மாதம் ரூ. 150 அல்லது 200 தான் வருகிறது.

'' சொந்தத் தறி வைத்திருப்பவர்கள் பாடு, ஏதோ பரவாயில்லை. என்னதான் கஷ்டப்பட்டாலும் தரித்திரம் தீரலை.. வருமானம் போதவில்லை. இப்ப எவ்வளவோ பரவாயில்லை. ஒரு மாதிரியா காலத்தை ஓட்டுறோம்..'' என்கிறார் அய்யம்பேட்டை நெசவாளியான முனிப்பெருமாள்.

'' பரம்பரை பரம்பரையாக உலகமே வியந்து பாராட்டும் இந்த நெசவாளப் பெருமக்களின் வாழ்வில் இன்னும் ஏற்றம் ஏற்படவேண்டியது மிக மிக நியாயமானதாகும்'' என்ற எண்ணம் நம் மனத்துள் ஏற்படுகிறது.

'' இதுதான் பயிற்சி நிலையம்'' என்கிறார் நண்பர்.

சின்னக் கட்டடம், ஒரு வீடு மாதிரி இருக்கிறது. முன்னால் '' நவீன நெசவுப் பயிற்சி நிலையம் —தமிழக அரசு உதவி—துவக்கம் 15-2-1970'' என்ற பெயர்ப் பலகை காணப்படுகிறது.

வண்டி வந்து நிற்கவே சிறு கூட்டமே கூடிவிடுகிறது. எல்லாமே நெசவாளர் குடும்பங்கள்!

'' எத்தனை பேருக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது?....விவரம் கூற முடியுமா?....''

பயிற்சி நிலையத்தில் பயிற்சி அளிக்கும் திரு சுப்பிரமணியம் கூறுகிறார்:

'' இந்தப் பயிற்சி நிலையம் 15-2-1970-லிருந்து செயல்பட்டு வருகிறது. இத் திட்டத்தின்கீழ் இப்பொழுது 30பேருக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. மாதம் ரூ. 100 உதவித் தொகை, பயிற்சியாளர்களுக்கு வழங்கப்படுகிறது. பயிற்சிக் காலம் 45 நாட்கள்! பயிற்சி முடித்தோருக்குச் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.

''புடவை இரகங்கள் இங்கு நெய்யப்படுவதில்லை. மேஜை விரிப்புகள், துண்டுகள், சர்ட்டிங்குகள், கோட் துணிகள் போன்ற இரகங்களில் நெய்வதற்குப்பயிற்சி அளிக்கப்படுகிறது.... வாங்குகின்றவர்களின் இரசனைக்கேற்ப,காலத்திற்கேற்ற டிசைன்கள் கைத்தறியில் தயாரிக்கப் பயிற்சி அளித்தலே இத் திட்டத்தின் முக்கிய நோக்கம். இதுவரையில் மூன்று பிரிவுகளுக்குப் பயிற்சி அளித்தாகிவிட்டது. இங்கு 10 தறிகள் உள்ளன. ஒவ்வொரு தறிக்கும் 3 பேர் என்று 30 பேருக்கு ஒரு பிரிவில் பயிற்சி அளிக்கப்படுகிறது. சான்றிதழுடன் பயிற்சி முடிந்தவர்களுக்குத் தறி ஒன்றும் கொடுக்கிறோம். அவர்கள் அந்தப் பெற்றுககொண்டு வீட்டில் நெய்கிறார்கள். நல்ல தேர்ந்த நெச

வாளி என்றால் ஒரு நாளைக்கு இரண்டு பெட்ஷீட்டுகள் நெய்ய முடியும். ஒரு நாளைக்கு 6 ரூபாய் சம்பாதிக்கலாம். ஒரு தறியின் விலை 400 ரூபாயாகிறது. இதில் 75 சத விகிதத்தை மானியமாகவும், 25 சத விகிதத்தைக் கடனாகவும் அரசு வழங்குகிறது. தமிழகத்தில், சென்னை, நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக மற்ற எல்லா மாவட்டங்களிலும் 15-2-1970 முதல் இத் திட்டம் தொடங்கப்பட்டுச்செயல் பட்டுவருகிறது. இப் பயிற்சி நிலையத்தில்பயிற்சியளிப்போர் (Instructor) சேலத்தில் அகில இந்தியக் கைத்தறி போர்டின் கைத்தறித் தொழில் நுணுக்கப் பள்ளியில் (Institute of Handloom Technology) பயிற்சிபெற்றவர்கள் ..''

அய்யம்பேட்டை நெசவாளப் பெருமக்களிடமிருந்து பிரியா விடை பெற்றுக்கொண்டு காஞ்சிபுரம் திரும்புகிறோம்.

செந்தமிழ்க் காஞ்சிக் கடைத் தெரு....உலகப் புகழ்பெற்ற காஞ்சிபுரம் பட்டுப் புடவைகள் கண்ணைப் பறிக்கும் வண்ண வண்ண டிசைன்களில் — மாதர்களுடைய உள்ளங்களைக் கொள்ளை கொள்ளும் வண்ணம் எவ்வளவு வேண்டுமானாலும் கிடைக்கும் அங்காடி ! பணம்தான் வேண்டும் வாங்குவதற்கு!

திருவள்ளுவர் பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தினுள் நுழைகிறோம். கடை நிர்வாகி கூட்டுறவுத் துறையைச் சேர்ந்த திரு. சிவலிங்கம் அன்புடன் வரவேற்கிறார் ! வந்த காரியத்தைச் சொல்கிறோம். கடையில் தலைக்கு மேலே அண்ணா படம்! அந்த மேதையின் கண்களிலே உள்ள ஒளி நம்மை மெய்சிலிர்க்கவைக்கிறது. கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற மூன்று தாரக மந்திரங்கள் படத்தின் கீழே பொன்னெழுத்துக்களில் பொறிக்கப்பட்டு மனத்திற்கு நிறைவு தருகின்றன.

'' பெரிய சொசைட்டிகளாக எங்கள் சொசைட்டி போல் பட்டு நெசவாளர் கூட்டுறவுச்சங்கங்கள் கீழ்க்கண்டவை காஞ்சிபுரத்தில் உள்ளன. (1) காஞ்சிபுரம் திருவள்ளுவர் பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கம், (2) வரதராஜ சுவாமி கூட்டுறவுப் பட்டு நெசவாளர் சங்கம், (3) காமாட்சி அம்மன் பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கம், (4) முருகன் பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கம், (5) பல்லவர் பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கம், (6) காஞ்சிபுரம் சில்க் சொசைட்டி, (7) காஞ்சிபுரம் பட்டு மார்க்கெட்டிங் சொசைட்டி........காஞ்சிபுரத்திலும் மற்றும் சுற்றுப்புறப் பகுதிகளிலும் பட்டுத் துணிகள் நெய்யமட்டும் மொத்தம் 10,000 தறிகள் உள்ளன. கூட்டுறவுத் துறையில் மட்டும் 2,000 தறிகள் உள்ளன. இதே மாதிரி 15 சங்கங்கள் நூல் துணிகளுக்கென்றே இயங்குகின்றன....''

மிக உயர்ந்த ஒரு பட்டுப் புடவையை எடுக்கிறார் சிவலிங்கம்.. '' இதோ பாருங்கள், இதன் விலை சுமார் 1,175 ரூபாய். காஞ்சிபுரத்தில் மிக உயர்ந்த விலையுள்ளசேலைகளில் இதுவும்ஒன்று.'' கண்ணைப் பறிக்கிறது. சொன்ன விலை கூட நம் காதில் படவில்லை. புடவையின் வனப்பு நம்மைச் சொக்க வைக்கிறது...!

'' அது சரி.. காஞ்சிபுரத்தில் நெய்யும் பட்டுச் சேலைகளுக்கு மட்டும் என்ன இப்படித் தனிப் புகழ் ? என்ன காரணம் ?''

''அதுங்களா.. முக்கியமாக மூன்று காரணங்களைச் சொல்லலாம் : (1) வண்ணச் சேர்க்கை. (Colour Combination) (2) சீரிய தொழில் நுணுக்கம் (High Craftsmanship) (3) நீண்ட நாட்கள் உழைத்தல் (Durability) இங்கு கிடைக்கும் தண்ணீர் கூட ஒரு காரணம் என்று சொல்கிறார்கள்.....

'' ஆனால் இதில் ஒரு விசேஷம். பட்டுப்புடவை நெய்வதற்கான மூலப் பொருள்கள் ஒன்றும் காஞ்சியில் கிடைப்பதில்லை. தேவைப்படுகிற பட்டு நூல் மைசூரிலிருந்துதான் வருகிறது. சரிகை சூரத்தில்தான் கிடைக்கிறது. இருந்தும், காஞ்சியில்தான் இத்தொழில் சிறப்பாக நடைபெறுகிறது. வெளி நாடுகளுக்குக்கூடப் பட்டுச் சேலைகள் அனுப்பப்படுகின்றன. ஜப்பானில் நடைபெறும் எக்ஸ்போ 70-க்குக் கூட 100 புடவைகள் நாங்கள் அனுப்பியுள்ளோம்...''

பார்வையாளர் புத்தகத்தைப் புரட்டுகிறோம்....... ''இந்த சொசைட்டியின் அலங்கார அறையினை அண்ணாதான் 15-4-1967-ல் திறந்து வைத்தார். பார்வையாளர் புத்தகத்தில் அண்ணா எழுதியிருக்கிறார் பாருங்கள்.. '' திருவள்ளுவர் பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு அமைப்பினர் துவக்கியுள்ள விற்பனை நிலையம் எடுப்பான முறையிலும் வசதியான வகையிலும் இருந்திடக் கண்டு மகிழ்ந்திருக்கிறேன். பொதுமக்களிடம் இந்த அமைப்பு கொண்டுள்ள தொடர்பு மேலும் நேர்த்தியான அளவில் வளர்ந்திட இந்த விற்பனை நிலையம் பயன்படும் என்று நம்புகின்றேன் '' அண்ணா கைப்பட எழுதிய நற்சான்றிதழினைப் படித்துக் காட்டுகிறார் சிவலிங்கம்..

'' அமைப்பான வலுவான மார்க்கெட்டிங் வசதிகள் பட்டுத் துணிகளுக்கு இல்லை. இன்னும் நிறைய விளம்பரம் வேண்டும். வெளிநாட்டுக்காரர்கள் நிறையப் பேர் காஞ்சிக்கு வருகிறார்கள்: பட்டுத் துணிகளை இன்னும் பிரபலப்படுத்தினால் இன்னும் நிறைய விற்பனையாகும்.

'' இன்னும் ஒரு முக்கியமான இடத்தைப் பார்க்க வேண்டும். அதுதான் அகில இந்திய கைத்தறி போர்டால் நடத்தப்பெறும் சேவா நிலையம் (Design Centre). அதையும் பார்த்து விடலாம் '' என்கிறார் நண்பர்.

ரயில்வே ஸ்டேஷன் ரோடில் உள்ள சேவா நிலையத்தின் நிர்வாகி திரு. வீரப்பன், டிசைன்கள் தயாரிப்பதில் மிகுந்த திறமைசாலி என்பது, பார்த்தவுடனே தெரிந்துவிடுகிறது.

'' இந்த டிசைன் சென்டரில் ஆறு தறிகள் உள்ளன. இதற்கு முன்னால் வடநாட்டு மக்கள் விரும்பும் டிசைன்கள் காஞ்சிபுரத்தில் கிடையாது. பம்பாய்க்கும், டெல்லிக்கும், கல்கத்தாவுக்கும் வேண்டிய டிசைன்களை நாங்கள் இப்பொழுது தயார் செய்து, துணிகளைச் சங்கங்களிடம் தயார் செய்யச் சொல்கிறோம். இரண்டு பக்கம் பார்டர் முன்பெல்லாம் கிடையாது. இப்பொழுது இரண்டு பக்கம் பார்டர் போடுகிறோம்; ஜப்பானில் நடைபெறும் எக்ஸ்போ 70க்குச் சேலைகள் அனுப்பியுள்ளோம். ஏர் இந்தியாவுக்கு 700 புடவைகளும் 2,200 மீட்டர் பட்டுத் துணிகள் ரவிக்கைக்கும் விமானப் பணிப்பெண்கள் உடைக்காகவும் அனுப்பியுள்ளோம். இதேமாதிரி, இந்தியன் ஏர் லைன்சுக்கு 1,250 புடவைகள் தந்துள்ளோம். வெளிநாட்டுக்காரர்களை இந்தப் புதுப் புது டிசைன்கள் நன்றாகக் கவர்ந்துள்ளன.

சொல்லிக் கொண்டிருக்கும் பொழுதே வெளிநாட்டுக்காரர்கள்— பிரெஞ்சுக்காரர்கள், ஆணும் பெண்ணுமாக ஒரு கூட்டம் உள்ளே நுழைகிறது. அங்கு போடப்பட்டுள்ள டிசைன்களைக் கண்டு சொக்கிப் போகிறார்கள் அவர்கள் ! 140 ரூபாய்க்குப் பெண்கள் அணியும் ஓர் பட்டு அங்கியை வாங்கிக் கொள்கிறாள் ஒரு பிரெஞ்சு மங்கை !

'' ஒரு நாள் சென்னையில் உள்ள அமெரிக்க மாது ஒருவர், 60 வயதிருக்கும், அமெரிக்கத் தூதரகத்தில் பணியாற்றுபவர், இங்கே வந்தார்கள். இங்குள்ள திருமண காலங்களில் அணியும் பட்டு அங்கியைப் பார்த்து விட்டு 'இந்தப் பட்டு அங்கியை அணிந்து கொள்வதற்காகவே ....இன்னொரு கல்யாணம் கூடச் செய்து கொள்ளலாம்னு ஆசையா இருக்கு' என்று தன் ஆசையைக் கொட்டித் தீர்த்துக்கொண்டார் ! காஞ்சிப் பட்டு செய்த மயக்குவேலை அது ! '' என்று சொல்லிவிட்டுப் புன்முறுவல் உதிர்க்கிறார் வீரப்பன் !

'' இங்கே காஞ்சிபுரத்தில் நெய்யும் பட்டுத் துணிகளில் 80 சதவிகிதம் இந்த டிசைன் சென்டரில் போட்டுக்கொடுத்த டிசைன்களைப் போட்டுத்தான் செய்கிறார்கள். இந்த அளவுக்கு இங்கே தயார் செய்யப்படும் டிசைன்கள் மக்களிடையே பிரசித்தமாகியுள்ளன. ஜப்பான் நாட்டுத் தூதுவர் ஒருவர் இந்த டிசைன்களைப் பார்த்துப் பிரமித்துப் போய் விட்டார் ! ''எங்க நாட்டுக்கு உங்களைப் போன்ற தொழிற்கலைஞர்களை டெலிவிஷனில் போட்டு மக்களிடம் காட்டிப் பிரபலப்படுத்துவோம்'' என்று உற்சாகம் பொங்கிடச் சொன்னார்கள்! மதுரைமீனாட்சி அம்மன் கோயிலில் நடைபெற்ற கும்பாபிஷேகத்தின்போது அம்மனுக்கு முதலில் உடுத்தின பட்டுச்சேலை நாங்கள் டிசைன் போட்டுக் கொடுத்தது ! எலிசபெத் ராணி சென்னைக்கு வந்திருந்தபொழுது அவர்களுக்காகச் சிறப்பு முறையில் டிசைன்கள் வரைந்து துணிகளாக நெய்து கொடுத்திருக்கிறோம். இதுவரை இந்த சென்டரில் 7,200 டிசைன்கள் வரைந்து 6,765 டிசைன்கள் கைத்தறி உற்பத்தியாளர்களுக்குத் தரப்பட்டுள்ளன.''

'' காஞ்சிபுரத்திற்கு மட்டுமா பெருமை.... தமிழகத்திற்கே பெருமை....உங்கள் பணியினை எப்படிப் பாராட்டுவது என்றே புரியவில்லை.... வளர்க உங்கள் பணி..வாழ்க உங்கள்தொண்டு'' என்று உள்ளம் நெகிழக் கூறி விட்டு விடை பெறுகிறோம் !

குறளகம்
சென்னை.1
கதர்-கைத்தொழில் அங்காடி
தொலைபேசி எண்கள்: 26762 21552 21553
கைவண்ணப் பொருள்களின் களஞ்சியம்
உங்களுக்கு வேண்டியவை எல்லாமே இங்கே கிடைக்கும்

பார்த்தோம்

ஒருமைப்பாட்டின் உருவம்

ஆகஸ்டு 16 'தமிழரசு' இதழில் நம் நாட்டின் தந்தை காந்தியடிகளின் பொன்மொழிகளையும் ஆசியாவின் ஜோதி ஜவஹர்லால் நேருவின் கருத்துக்களையும் படித்தபொழுது தேச ஒருமைப் பாட்டிற்குத் 'தமிழரசு' ஆற்றிடும் பணி விளங்குகிறது. உயர்ந்த கருத்துக்கள் எங்கிருந்தாலும் மொழி, இனம், பேதம் காட்டாமல் வெளியிட்டிருப்பது மிகவும் பாராட்டுவதற்குரிய ஒன்ருகும்.

— வி. ஜானகிராமன்,
சென்னை-28.

நிறைவு செய்த 'தமிழரசு'

தமிழகத்திற்கு அரசு என்ன செய்திருக்கிறது, என்ன செய்து கொண்டிருக்கிறது, என்ன செய்யப்போகிறது என்பதைத் தெள்ளத் தெளிவாக விளக்கும் பத்திரிகை எது என்று எண்ணிக் கொண்டிருந்த எங்களது எண்ணத்தை நிறைவு செய்யும் வகையில் 'தமிழரசு' புத்தக வடிவாக வந்ததுபற்றிப் பெரு மகிழ் வெய்துகிருேம்.

— கே. எஸ். கலியபெருமாள்,
கட்டமுத்துப்பாளையம்.

வற்ருத ஊற்று

'தமிழரசு' ஆகஸ்டு 16 இதழைப் படித்துப் பார்த்து இன்புற்றேன். அண்ணுவின் வானெலிப் பேச்சு ஒரு வற்ருத ஊற்று. அது அணையா விளக்காக என்றும் நின்று நிலவும்; தமிழக முதல்வர் தமிழ்த்தாயின் தலைமகன் கலைஞர் வரைந்துள்ள கவினுறு பயணக் கட்டுரையைப் படித்துக் களிப்புற்றேன். வெண்டாளில் அச்சிடப்பெற்றுள்ள பத்திரிகை முத்துப் போன்ற எழுத்துக்களைத் தாங்கி முறுவல் செய்கின்றது.

— கோ. முத்துப்பிள்ளை,
சென்னை.

வருமானம் வருவதற்கு வழி சொல்லுக

தமிழக அரசின் 'தமிழரசு, ஏடெல்லாம் தமிழ் அரசோச்சுகிறது. கலைஞரின் பயணக் கட்டுரை பயன் தருவதாகும். கலை, அறிவியல், அரசியல், பொருளாதாரம், சமூகம், ஆகிய எல்லாத் துறைகளிலும் பள்ளியிலே மாணவர்க்குப் பாடம் போதிக்கும் ஆசாஞகத் 'தமிழரசு' ஏடு விளங்குகிறது.

ஓய்வு நேரத்தை, வருமானம் தரும் வகையில் பயன்படுத்திக் கொள்ளும்படியான வழி முறைகளைப் பற்றியும் தமிழரசு ஏட்டில் எழுதினுல் என்னைப்போன்ற குறைந்த வருமானமுடையோர் அமைதியாக வாழ்க்கை நடத்தப் பேருதவியாக இருக்கும்.

— எஸ். எம். பாபு,
ஈரோடு.

அனைத்தும் நீயே !

செங்கனிச் சுவையே என்பேன்
தீந்தமிழ் அமுதம் என்பேன்
திங்களே என்பேன் ; இன்பத்
தேன்சுவைப் பாகே என்பேன்
பொங்கலே என்பேன் ; முல்லைப்
பூவிதழ் என்பேன் ; நன்மை
பொங்கிடத் தோன்றி யுள்ள
புகழ் 'தமிழரசே' உன்னை !

— செங்கைதாசன்,
சென்னை-2.

படித்தோம்

தனிச் சிறப்பு !

காலமெல்லாம் படித்துப்பயன் துய்க்கக்கூடிய வகையில் 'தமிழரசு' ஒவ்வோரிதழும் படைக்கப்பட்டு வருவது தமிழர்கட்கே தனிச் சிறப்பளிப்பதாகும்.

—ச. ஆ. கேசவன்,
புளியங்குடி.

உங்கள் பொறுப்பு !

தமிழ் நாட்டிற்கு இப்படி ஓர் இதழ் அவசியம் என்பதை எழுத்தாளரும் கலைஞருமான நமது முதல்வர் உணர்ந்து அதனைக் காரியமாற்றியது வரவேற்க வேண்டியதே. அரசாங்கத்தின் செயல்களை, திட்டங்களை மக்கள் அறிந்துகொள்ள வேண்டுமென்ருல் அதற்கு வழி இதுதான் ! 'தமிழரசு' தமிழ் மக்கள் ஒவ்வொருவர் கையிலும் ஒவ்வொரு பிரதி இருக்கச் செய்ய வேண்டியது தங்கள் பொறுப்பு.

—டி. எஸ். சீதாராமன்,
கும்பகோணம்.

வெளிநாட்டிலும் விற்பனை செய்க !

வளர்ந்து வரும் நம் நாட்டின் சிறப்புகளை நாம் அறிந்தால் மட்டும் போதாது. வெளிநாடுகளிலும் 'தமிழரசு' பதிப்பை விற்பனை செய்தால், பெருமைப் படக்கூடிய விஷயங்களில் ஒன்ருகும். முக்கியமாக சிங்கப்பூர், மலேசியா, இலங்கை போன்ற நாடுகளில் விற்பனை செய்ய வேண்டும்.

—எஸ். தில்லைமணி,
மதுரை-1.

மழைபோல் வரும் தொல்லைகளைப் பனிபோல் ஆக்கிடும் ஆட்சி!

கலைஞர் கருணாநிதியாரின் ஆட்சியில் கண்டறியாதவற்றைக் கண்டேன் என்கிறபடி, மிக அதிசயமும், ஆச்சரியமுமான சம்பவங்கள் பலவற்றைக் காண முடிகிறது.

இதுவரையிலும் எந்த ஆட்சியிலும் நடத்த முடியாததான பல சாமர்த்தியமான செயல்கள் எளிதில் செய்யப்பட்டிருக்கின்றன.

அவரது ஆட்சியில் தொல்லைகள் ஒவ்வொன்றும் மலைபோல் வந்தது, பனிபோல் மறைந்தது என்று சொல்லத் தக்கவண்ணம் ஒழிக்கப்பட்டு விட்டன.

அவையாவன : முதலாவது, மின்சார இலாக்காச் சிப்பந்திகளால் செய்யப்பட்ட வேலை நிறுத்தமாகும். இந்த இலாக்கா பொது மக்களின் வாழ்வுக்கு முக்கியமான சாதனங்களில் ஒன்றாகும். என்னவென்றால் விளக்கு வெளிச்சம், யந்திரங்களுக்கு விசை தருதல், நோயாளிகளுக்கு அறுவைச் சிகிச்சை மூலம் உயிர் தருதல் முதலிய காரியங்களாகும். இதை அடியோடு மக்களுக்குக்கிடைக்காமல்செய்துவிட நினைத்த முயற்சி அழிக்கப்பட்டு பலரை மன்னிப்புக் கேட்கவும் செய்ததாகும்.

அடுத்து, பால் பண்ணைச் சிப்பந்திகள் மக்களுக்கெல்லாம் பால் கிடைக்காமல் செய்து அவர்களைப் பட்டினி போட்டு விடுவது என்ற முறையில் அரசுக்குத் தொல்லை கொடுக்க வேண்டுமென்ற கருத்தில் வேலை நிறுத்தம் செய்தார்கள். பொது மக்களுக்கு எவ்விதத் தொல்லையும் ஏற்படாமல், புதிய முறையில், அதாவது ஜெயிலில் உள்ள சிறை செய்யப்பட்டவர்களைக் கொண்டு நடத்தி, வேலை நிறுத்தக் காரர்களில் பலர் மன்னிப்புக் கேட்கும்படியான சூழ்நிலையை உருவாக்கியதாகும்.



அடுத்து, தனியார் பஸ் சொந்தக்காரர்கள் பஸ்கள் போக்குவரத்தை நிறுத்திப்பொதுமக்களுக்கு அசௌகரியம் ஏற்படுத்துவதன் மூலம், அரசுக்குத் தொல்லை கொடுக்க நாள் நிச்சயித்தது. இந்த விஷயத்தைக் கலைஞர் ஒரு உத்தரவின் மூலம் பஸ் சொந்தக்காரர்களைப் பணிய வைத்து மக்களுக்குத் தெரியாதபடி அடக்கி விட்டார்.

நான்காவதாக, நிலப்பறி இயக்கம். இது 'உலகப்பிரசித்த' இயக்கமாக நடத்த இந்தியா முழுவதையும் சேர்த்துக்கொண்டு வன்முறை ஆயத்தமும் பக்குவமும் செய்து கொண்டு ஆயிரக் கணக்கான பேர் செய்கையில் நடத்த முன் வந்த மாபெரும் புரட்சி இயக்கமாகும். இதனை, ஒன்று, பத்து, நூறு, ஆயிரம், பத்தாயிரம் என்று சம்பந்தப்பட்ட மக்களைக் கைது செய்து, அவர்களதுமுயற்சியேவெட்கப்படும்படி நாசப்படுத்தியதோடு, பலர் தண்டிக்கப்பட்டும், பலர் மன்னிப்புக் கேட்கப்பட்டும், பலருக்கு என்ன செய்வது என்று திகைக்கும்படியும் செய்து அப் புரட்சி அழிக்கப்பட்டு விட்டது.

இம்மாதிரிச் செயல்பட்ட அதிசய நிகழ்ச்சிகள் நம் நாட்டில் இதுவரை எந்த ஆட்சியிலும் நடந்ததே இல்லை என்றே சொல்லலாம்.

ஆகவே கலைஞர் ஆட்சிக்கு சபாஷ் பட்டம் கொடுக்க வேண்டியவனாக இருக்கிறேன் என்பதோடு, கலைஞர் ஆட்சி நீடூழி வாழ வேண்டுமென்று பொது மக்கள் சார்பாக ஆசைப்படுகிறேன். தமிழகத்தில் இன்று நடைபெறும் ஆட்சியானது தமிழர்களுடைய ஆட்சி, பகுத்தறிவு வாதிகளின் ஆட்சி. தமிழர்களின் நலத்தை இலட்சியமாகக் கொண்டு அதற்காகத் தொண்டாற்றக் கூடியவர்களின் ஆட்சியாகும். இது போன்ற ஆட்சி நமக்குக் கிடைத்தது ஒரு நல் வாய்ப்பேயாகும்.

இந்தியாவிலே அதிகமான மின்சாரம் பெற்றிருப்பது தமிழகத்தில்தான். இந்தியாவிலே தமிழகம் தான் பல துறைகளில் சிறப்பாக முதன்மையாக உள்ளது.

சமுதாயத் துறையில் இந்த அரசின் மூலம் நாமடைந்த முன்னேற்றங்கள், இது வரை வேறு எந்த அரசாலும் அடையாத முன்னேற்றமாகும்.

இந்த ஆட்சி இன்னும் 10 ஆண்டுகள் இருந்தால் நாம் நூற்றுக்கு நூறும் படித்தவர்கள் ஆகிவிடுவோம்.

இன்றைய அரசானது சுயமரியாதைத் திருமணம் சட்டப்படி செல்லுபடியாகும் என்று சட்டம் இயற்றியுள்ளது. அதனைப் பாராட்ட வேண்டியதும் நன்றி செலுத்தவேண்டியதும் மக்கள் கடமையாகும்.

இன்றைய ஆட்சியை நாங்கள் ஆதரிக்கிறோம் என்றால், எங்கள் சொந்த சுய நலத்திற்காக அல்ல. அதனால் எந்தப் பலனையும் நாங்கள் அனுபவிக்கவில்லை. நமது மக்கள் சமுதாயத்தின் நன்மையைக் கருதியே நாங்கள் இந்த ஆட்சியை வாழ்த்துகிறோம்.

பிற்படுத்தப்பட்ட-தாழ்த்தப்பட்ட மக்களின் நலனிலும் நல் வாழ்விலும் பெரும் அக்கறை கொண்டது இன்றைய அரசு. தேவையான நேரத்தில் பிற்பட்டோருக்குத் தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்கும் இன்றைய தமிழக ஆட்சியாளரைக் கோடான கோடி பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள் சார்பாகப் பாராட்டி, அதற்காக நன்றி செலுத்துகிறோம்.

இன்றைய அரசினர் ஆட்சிக்கு வந்ததும் கல்வியில் அதிக கவனம் செலுத்தியதோடு, பிற்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள் முன்னேற உத்தியோகத்துறையில் நிறைய வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்தார்கள்.



உருளைக் கிழங்கு புராணம்

உருளைக்கிழங்கு மிகவும் சத்துள்ள உணவு. தானிய வகைகளைவிட இதில் புரதம் அதிகம். தானியங்களில் இல்லாத வைட்டமின்-சி, சுண்ணும்புச்சத்து. கந்தகச்சத்து, இரும்புச்சத்து ஆகியவை இதில் அதிக அளவு இருக்கின்றன.

இது சிறந்த சத்துணவாக இருந்த போதிலும், இந்தியாவில் இதனை மக்கள் பெருமளவு பயன் படுத்துவதில்லை. இந்தியாவில் ஒரு மனிதன் ஆண்டு ஒன்றுக்கு உட்கொள்ளும் உருளைக் கிழங்கு 4 கிலோ தான். ஆனுல் ஜெர்மனியில் 174 கிலோவும், இங்கிலாந்தில் 100 கிலோவும் அமெரிக்காவில் 47 கிலோவும் உட்கொள்ளுகின்றனர்.

உருளைக் கிழங்கின் தாய் வீடு தென் அமெரிக்கா தான். அங்கு 2000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே உருளைக்கிழங்குபயிரிடப்பட்டு வந்திருக்கிறது. 17-ம் நூற்ருண்டின் முற்பகுதியில் தான் இந்தியாவுக்குள் உருளைக் கிழங்கு நுழைந்திருக்கிறது.

சாதாரணமாக இந்தியாவின் மற்றப் பகுதிகளில் உருளைக் கிழங்கு இருபோகம் தான் பயிரிடப்படுகிறது. ஆனுல் நீலகிரியில் உள்ள பருவ நிலை மூன்று போகம் பயிரிட வசதியாகவுள்ளது.

வடநாட்டில் சிம்லா அருகேயுள்ள குப்ரி என்ற இடத்திலுள்ள உருளைக்கிழங்கு ஆராய்ச்சி நிலையத்தில் கண்டு பிடிக்கப்பட்ட சில உருளைக் கிழங்கு வகைகளின் பெயர்கள் ஜோதி, ஜீவன், நவீன், நீலமணி சிந்திரி, அலங்கார், சந்திரமுகி ஆகியவை. இதில் நீலமணி, நீலகிரியில் பயிரிடத்தோதுவானது.

முன்பெல்லாம் உருளைக்கிழங்கு மலைப்பிரதேசங்களிலேயே சாகுபடி செய்யப்பட்டு வந்தது. தற்பொழுது சமவெளிகளிலும் சாகுபடி செய்வதற்கு ஏற்ற உருளைக்கிழங்கு ரகம், தமிழ்நாடு அரசு அளித்த ஆதரவினுலும் ஊக்கத்தினுலும் வேளாண்மைத் துறையினுல் உருவாக்கப்பட்டுள்ளது. இதற்குப் பெயர் 'கோ-சிம்லா' எனப்படும். இந்த ரகத்தை வட ஆர்க்காடு, தர்மபுரி, கோயம்புத்தூர், சேலம், மதுரை ஆகிய மாவட்டங்களில் செப்டம்பர் மாதத்தில் சாகுபடி செய்யலாம். இது 110 நாட்களில் அறுவடைக்கு வரும்.

'கோ-சிம்லா' என்னும் ரகத்தைப் பயிரிட, நிலத்தை 4 அல்லது 5 முறை நன்கு புழுதியாகும்படி உழுதுவிடவும். கடைசி உழவில் ஏக்கருக்கு 200 கிலோ அமோனியம் சல்பேட், 60 கிலோ சூப்பர் பாஸ்பேட், 60 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ் ஆகிய இரசாயன உரங்களை இடவும். பின்பு 2 அடி தூரத்திற்கு ஒரு பார் வீதம் அமைக்கவும். விதைக் கிழங்குகளை நடுவதற்கு முன்பு மண்ணில் ஆல்ட்ரின் 5 சத தூளையோ (ஏக்கருக்கு 13·5 கிலோ) அல்லது ஹெப்டாகுளோர் 6 சத தூளையோ (ஏக்கருக்கு 15·5 கிலோ) தூவி விடவும். இதனுல் உருளைக் கிழங்குச் செடிகளைச் சேதப் படுத்தும் வெட்டுப் புழுவையும், வெள்ளைப் புழுவையும் கட்டுப்படுத்தலாம்.

விதைக் கிழங்குகளை நடுவதற்கு முன்பு பார்களின் இடையில் நீர்பாய்ச்சவும். அதன் பின் பார்களின் சரிவில் 1 அங்குலம் ஆழத்தில், கிழங்குக்குக் கிழங்கு 20 சென்டி மீட்டர் (8 அங்குலம்) இடைவெளி விட்டு முளைவிட்ட உருளைக் கிழங்கை நடவேண்டும். ஒரு ஏக்கர் நடுவதற்கு 400 கிலோ முளைவிட்ட உருளைக்கிழங்கு தேவைப்படுகிறது.

விதைக் கிழங்குகளை நட்ட இரண்டாம் நாளில் நீர்பாய்ச்சவும். அதன்பின்வாரம்ஒருமுறை நீர் பாய்ச்சவும். மேலும் விவரம் அறியப்பொறுத்திருக்கவும்,

120 ஆண்டுகளுக்கு முன் [illegible]

சென்னையிலுள்ள [illegible] 1850-ஆம் ஆண்டு. [illegible] அலெக்சாண்டர் ஹண்டர் [illegible] டாக்டரால் [illegible] பட்டது. அப்போது [illegible] பணியாற்றியவர்கள் [illegible] சம்பளப் பட்டியலை நோக்கினால் சற்று வேடிக்கையாகவுள்ளது.

ஆசிரியராகப் பணியாற்றிய ஒரு பாரென் பெற்ற மாத சம்பளம் ரூ. 28; [illegible] பொருள் கண்காணிப்பாளர் [illegible] மாட்டின் பெற்றது ரூ. [illegible] புகைப்படக்காரர் பெற்றது ரூ. 11 அணா 4 பைசா 8; [illegible] பாண்டப் பொருள்கள் [illegible] பெற்று வந்தது [illegible] ரூ. 7; பாலசுந்தரம் [illegible] தொழிலாளி பெற்ற [illegible] மாதத்திற்கு ஒன்றரை [illegible] குறைவாம்.

[illegible] தெளிக்கும் [illegible]

வேளாண்மையில் [illegible] விதைகளும், ரசாயன [illegible] எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியத்துவம் [illegible] பூச்சிகொல்லி மருந்து தெளிப்பதும். பயிர்களை [illegible] பூச்சிகளைக் கொல்ல [illegible] பயன்பாட்டிற்கு [illegible] போகும்.

[illegible] 'யந்திரத் தெளிப்பானை' (Power Sprayer) பயன்படுத்த விவசாயிகளுக்கு [illegible] அளிக்கப்படுகிறது. [illegible] மாவட்டத்தில் [illegible] சுமார் 7,300 [illegible] இந்தப் பயிற்சி [illegible] வழங்கப்பட்டுள்ளது.

'யந்திரத் தெளிப்பான்' [illegible] கிராமத்தில் [illegible] என்ன செய்யமுடியும்? [illegible] அரசு வழி செய்து [illegible] ஆர்வமுள்ள [illegible] கடைக்காரர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு யந்திரத்தைப் பழுது பார்க்கப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. [illegible] மாவட்டத்தில் [illegible] சுமார் 100 கடைக்காரர்களுக்கு இந்தப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

அறிவு தந்த பாறை

"நீலத் திரைக் கடலோரத்திலே நின்று நித்தம் தவம் செய்" குமரி முனை. இளந்துறவி ஒருவர் குமரி முனையிலே வந்து நிற்கிருர். துறவி என்ருல் வெறும் போலித் துறவி அல்லர்! அவர் மனத்திலே ஒரு போராட்டமே நிகழ்ந்து கொண்டிருக்கிறது. அவர் மனம் முக்திக்கான மார்க்கத்தைத் தேடுகிறது. ஆனுல் இந்திய நாட்டு மக்களின் வறுமை, அறியாமை அவரை நாட்டுப்பணியில் ஈடுபட அழைக்கின்றன. இவற்றில் எதை ஏற்பது?

கடற்கரையிலிருந்து சுமார் 1,600 அடி தூரத்தில் உள்ள ஒரு பாறை அவர் கண்களில் படுகிறது. 'வா' 'வா' என்று அழைப்பது போல் தோற்றமளிக்கிறது, அந்தப் பாறை. அங்கிருந்த படகோட்டியிடம், தன்னை அந்தப் பாறைக்கு அழைத்துச் செல்லும்படிக்கேட்கிருர். அவர் கையில் அவனுக்குக் கொடுக்கக் காசில்லை. படகோட்டி மறுத்து விடுகிருன். நீந்தியே பாறையை அடைகிருர் துறவி. அக் கருங்குன்றின் மீதமர்ந்து தியானம் செய்கிருர். அவர் உள்ளத்திலே ஒளியொன்று தோன்றுகிறது. இந்த நாட்டு மக்களின் வறுமையைப் போக்க, அறியாமை என்னும் பேயை அகற்ற. உழைப்பது என அவர் உள்ளம் அக்கணமே முடிவு செய்கிறது. போதி மரத்தடியிலே புத்தருக்கு ஞானம் பிறந்தது போல், அந்தப்பாறையிலே அவருக்கு உள்ளொளி பிறக்கிறது. "மக்களுக்குச் செய்யும் தொண்டே மகேசனுக்குச் செய்யும் தொண்டு' என்ற தெளிவு உண்டாகிறது. அன்றிலிருந்து அவர் பொது வாழ்வுக்கே தன்னை அர்ப்பணித்துக்கொள்கிருர். அந்தத்துறவி தான் அறிவுலகம் வியந்து பாராட்டிய சுவாமி விவேகாநந்தர்! அந்தப் பாறையின் பெயர் தான் விவேகாநந்தர் பாறை!

வட திசையிலிருந்து
தென்திசை வந்தார்
ஓர் இளந் துறவி.

தென்குமரிப் பாறையில்
அறிவெனும் இன்பத்தைக்
கண்டார்.

அந்தப் பாறையில்
அழகான ஆலயம்
இன்று
உருவாகி நிற்கிறது.

விவேகாநந்தர் உள்ளொளி பெற்ற அந்தப் பாறையிலே தக்கதோர் நினைவு மண்டபம் அமைப்பது என முடிவு எடுக்கப்பட்டது. அதன்படி நினைவு மண்டபம் எழுப்பப்பட்டது. இம் மண்டபத்தைத் தமிழக முதல்வர் தலைமையில் குடியரசுத் தலைவர் செப்டம்பர் 2 ஆம்நாள் திறந்துவைத்திருக்கிருர்!

எண்பது இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளது இந்த நினைவு மண்டபம். நினைவுச் சின்னம் முழுவதும் கருங்கற்களினுல் ஆனது. இதற்கான கருங்கற்கள் முழுவதும் அம்பாசமுத்திரத்தில் இருந்தும் குமரி முனையின் அருகிலே உள்ள மருத்துவா மலையிலிருந்தும் தருவிக்கப்பட்டன. நம் நாட்டின் பல்வேறு மாநிலக் கலை அம்சங்களும் நினைவு மண்டபத்தில் உள்ள சிற்பங்களில் இடம் பெற்றுள்ளன. அழகான ஓவியங்கள் பலவும் மண்டபத்தை நன்கு அலங்கரிக்கின்றன. விவேகாநந்தரை ஈன்றெடுத்தது வங்க பூமி. ஆனுல் உலகுக்கு அவரை அறிமுகப்படுத்தியது தமிழகம் தான்.

தமிழகம் எப்போதும், சிறப்புக் கண்ட விடத்துப் பாராட்டத் தவறுவதில்லை. அந்தத் துறவியாருக்கு நினைவு மண்டபம் ஒன்று குமரி முனையில் அமைந்துள்ளதே இதற்குச் சாட்சி.

தமிழகத்தின் அழகையெல்லாம் வடித்துக் கொடுக்கும் இடம் குமரி முனை. சுற்றுலா வருவோருக்குக் குமரி முனை மறக்க முடியாத, நெஞ்சை விட்டகலாத நினைவுச் சித்திரம். அந்த எழிற்கூடத்திற்கு மேலும் எழிலூட்டுவதாக அமைந்துள்ளது விவேகாநந்தர் நினைவு மண்டம்!

புத்துலகம் கண்டிட ஒத்துழைப்பு நல்குவீர்!



இடம் : ஊராட்சி ஒன்றிய வேளாண்மைக் கிடங்கு.

சந்திப்பவர்கள் : வேளாண்மை வளர்ச்சி அலுவலர், ஊர்நல ஊழியர்—அமிர்தலிங்கம், ஊராட்சி மன்றத் தலைவர்கள் ஐவர், ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர், ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்.

(வேளாண்மை வளர்ச்சி அலுவலர், காலை 8 மணிக்கு அலுவலகத்தில் ஏதோ எழுதிக்கொண்டிருக்கிறார். அப்பொழுது ஊர்நல ஊழியர் அமிர்தலிங்கம் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 5 ஊராட்சி மன்றத் தலைவர்களை அழைத்துக் கொண்டு அங்கே வருகிறார் அமிர்தலிங்கமும், ஊராட்சி மன்றத் தலைவர்களும் வேளாண்மை வளர்ச்சி அலுவலருக்கு ''வணக்கம் சார்'' என்று சொல்லிக் கொண்டே வருகிறார்கள்.)

வேளாண்மை வளர்ச்சி அலுவலர் : வாங்க ! எல்லோருக்கும் வணக்கம். உட்காருங்க.

அமிர்தலிங்கம் : சார்! இவங்க பெயர் மணி; ஆவினங்குடி பஞ்சாயத்துத் தலைவர். இவங்க பெயர் இளைய பெருமாள்; வையங்குடி பஞ்சாயத்துத் தலைவர்.

மணி : சார்! நான் உங்களைப் பலதடவை பார்த்துள்ளேன். பேசியதில்லை. அப்பாவே, வேளாண்மை வேலைகளைக் கவனித்து வந்ததால், உங்களைச் சந்திக்க எனக்கு வாய்ப்பு ஏற்படவில்லை.

வே. வ. அ. : இப்பத்தான் தலைவராக ஆயிட்டிங்களே. அதனால் இனிமேல் உங்களுக்காக இல்லாவிட்டாலும் மற்றவர்களுக்காகவாவது என்ன விதை இருக்கு, என்ன மருந்து கிடைக்கும் என்று கேட்க வருவீர்கள் என்று நம்புகிறேன்.

மணி : ஊருக்கு நல்லது செய்வேன் என்று தானே என்னைத் தேர்ந்தெடுத்தாங்க. அதனால் நானே இங்கே வந்து என்னென்ன கிடைக்கும் என்று தெரிந்து போய்ச் சொல்வதுடன், முடிந்தவரை வாங்கிச் சென்றும் கொடுக்க நினைக்கின்றேன் சார்! எனக்கு உங்கள் முழு ஆதரவும் தர வேண்டும், சார்!

வே. வ. அ. : என்னுடைய முழு ஆதரவையும் உங்கள் எல்லோருக்கும் எப்பொழுதும் கொடுக்கத் தயாராய் உள்ளேன்.

இளையபெருமாள் : மகிழ்ச்சி சார்! நம்ம ஊரில் ஒரு சில பெரிய மனிதர்கள் இருக்காங்க. அவங்க ''எங்க அப்பன் பாட்டன் காலத்திலெல்லாம் ரசாயன உரம் போட்டா பயிர் செய்தாங்க. அப்போ விளைஞ்ச மாதிரி இப்ப விளையுதா? உரமுன்னு சொல்லி என்னமோ கண்ட உப்புகளை எல்லாம், வாங்கிப் போட்டு வயலைக் கெடுப்பதோடு ஏராளமான பூச்சியையும் உண்டுபண்ணி விட்டார்கள்'' என்று சொல்லி மக்களைக் குழப்புகிறார்கள் சார்!

வே. வ. அ. : உரம் வாங்கிப் போடலாமா என்று ஆர்வமுடன் கேட்கும் சிறு உழவர்களைக் குழப்பும் அப்பெரிய மனிதர்கள், அவர்களுடைய வயலில் உரம் போடாமலா பயிரிடுகிறார்கள்? மற்றவர்களை மட்டும் ஏன் உரமிடவேண்டாம் என்று கூறி அவர்களது ஆர்வத்திற்கு முட்டுக்கட்டை போடுகிறார்கள் என்று நீங்கள் சிந்திக்க வேண்டும். ஏழை எளிய உழவர்களும் உயர் விளைச்சல் விதைகளைப் பயிரிட்டு, உரமிட்டு, மருந்து தெளித்து விட்டால், மகசூல் பெருகிவிட்டால், நீங்கள் குறிப்பிடும் பெரியவர்களைப் போல் பணக்காரர்களாக ஆகிவிடுவார்கள். அதன் பின் அப்பெரிய மனிதர்களின் செல்வாக்குக் குறைந்து விடும். இந்தப் பயத்தினாலேயே பல பெரிய மனிதர்கள், ''உயர் விளைச்சல் ரகங்களைப் பயிரிடாதே, இரசாயன உரங்களைப் போட்டு வயலைக் கெடுக்காதே, மருந்து தெளிப்பதால் பயனில்லை'', என்றெல்லாம் பிதற்றி வருகிறார்கள்.

மணி, மற்றும் இதர தலைவர்கள் : எங்களுக்கும் இரசாயன உரம் பற்றித் தெரிந்து கொள்ள ஆசை. கொஞ்சம் விளக்கமாச் சொன்னீங்கன்னா புரிஞ்சுக்குவோம்.

வே. வ. அ. : விளக்கமாகச் சொல்கிறேனுங்க. எல்லாப் பயிர்களுக்கும் தழைச்சத்து, மணிச்சத்து, சாம்பல்சத்து ஆகிய மூன்றும் மிகவும் முக்கியமாகத் தேவைப்படுகின்றன.



இளையபெருமாள் : நம்ம மண்ணில் தான் சத்து இருக்குமுங்களே. அப்படி இருக்க ஏன் சார் உரம் போடணும்?

வே.வ.அ. : தொடர்ந்து பயிரிடுவதால், மண்ணிலுள்ள சத்துக்கள் குறைந்து மண்வளம் குன்றி விடுகிறது. மண்ணின் விளை திறன் குறைவதைத் தடுக்கவும், செழிப்பான பயிர் வளர்ச்சிக்கு உறுதி ஏற்படுத்தவும், மண்ணிற்கு உரமிடுதல் மிகவும் இன்றியமையாததாகும். ஒரு உதாரணத்தின் மூலமாக விளக்குகின்றேன். உதாரணத்திற்கு நெல்லை எடுத்துக் கொள்ளுங்கள். ஹெக்டருக்கு அதாவது 2·47 ஏக்கருக்கு 8,000 கிலோ தானியமும், 8,000 கிலோ வைக்கோலும் கொடுக்கும் உயர் விளைச்சல் நெல் ரகமான ஆடுதுறை-27 நிலத்திலிருந்து 192 கிலோ தழைச்சத்து, 80 கிலோ மணிச்சத்து, 240 கிலோ சாம்பல் சத்து ஆகியவைகளை கிரகித்துக் கொள்கின்றன. ஆனால் ஆடுதுறை-27 நெல்லுக்கு ஹெக்டருக்கு 70 கிலோ தழைச்சத்து, 52 கிலோ மணிச்சத்து, 35 கிலோ சாம்பல் சத்து ஆகியவைகளை மட்டுமே அளிக்கின்றோம். ஆடுதுறை-27 நெல் கிரகித்துக் கொள்ளும் அளவு சத்துக்களை அளிக்கவில்லை. ஆனால், மேற்கூறப்பட்ட அளவு சத்துக்களை ஆடுதுறை-27 நிலத்திலிருந்து எடுத்துக்கொள்ளும் சூழ் நிலையை உருவாக்குவதற்குத் தேவையான அளவு சத்துக்களையே அளிக்கின்றோம். இப்பொழுது உரமிடுவதன் முக்கிய நோக்கம் புரிந்திருக்கும் என்று நம்புகிறேன்.

இளையபெருமாள் : தழைச்சத்துப் போட வேண்டியதன் அவசியத்தைச் சொல்லுங்க சார்.

வே.வ.அ. : தாவரங்களின் உடலமைப்புக்குத் தழைச்சத்து மிகவும் முக்கியமானது. செடிகள், அல்லது பயிர்களுக்குக் கரும்பச்சை நிறத்தைக் கொடுத்து, ஒளிச்சேர்க்கை மூலம் கார்போஹைடிரேட் எனப்படும் மாவுப் பொருள் தயாரிப்பதை ஊக்கப்படுத்தும் ; பயிர்களின் வளர்ச்சியை ஊக்குவிக்கும்; தூர்கள் ஏற்படுவதைத் துரிதப்படுத்தும் ; தூர்களின் எண்ணிக்கையைப் பெருக்கும் ; இலைவகைக் காய்கறிப் பயிர்களில் உணவு உயர்ந்த தரத்தை ஏற்படுத்தும் ; மற்றும் தீவனப் பயிர்களில் புரதச்சத்தை அதிகப்படுத்துகிறது ; கதிர்களில் மணிகளை அதிகமாக ஏற்படுத்தும் ; மகசூலைப் பெருகச் செய்யும்.

இளையபெருமாள் : தழைச்சத்து அதிகமாக இருந்தால் என்ன ஆகுமுங்க?

வே.வ.அ. : தழைச் சத்து அதிகமாக இருந்தால் இலை அல்லது தாள்களின் வளர்ச்சியை அதிக அளவு தூண்டிவிடும். பயிர்களின் தண்டுகள் வலுவிழந்து கீழே சாய்ந்து விடும். பூச்சிகள், நோய்கள் ஆகியவைகளின் தாக்குதலுக்குப் பயிர்கள் ஆளாகும். உற்பத்திப் பொருள்களின் தரம் குறைந்துவிடும். பயிரின் வயது அதிகமாகும்.

மணி : மணிச்சத்து ஏன் போடணுங்க?

வே.வ.அ. : தாவரங்களில் உள்ள கரு அமிலம். பைட்டின், போன்றவைகளுக்கு மணிச் சத்துத் தேவைப்படுகிறது. இனப் பெருக்கப் பாகங்களின் வேலைகளுக்கு மணிச்சத்து அடிப்படையாக இருக்கிறது. வேர்களின் வளர்ச்சியையும், பயிர்களின் வளர்ச்சியையும் ஆரம்பத்திலேயே தூண்டுவதால், பயிர்கள் விரைவாக நிலைத்து நிற்க உதவுகிறது ; ஆரம்பத்திலேயே விரைவாகவும் வலுவாகவும் வளரும் சக்தியைப் பயிர்களுக்குக் கொடுக்கிறது. பயிர்களின் பூக்கும் தன்மையைத் தூண்டிவிடுகிறது. விதை உற்பத்திக்கு உதவுகிறது ; பயிர்களின் முதிர்ச்சியை விரைவாக ஏற்படுத்துகிறது.



மணி : கொஞ்சம் பொறுங்க சார். பயிர்களின் முதிர்ச்சியை மணிச்சத்து விரைவாக ஏற்படுத்துகிறதென்று இப்பச் சொன்னிங்க. அப்படியானால், தழைச்சத்து மிகுதியாயிருந்தால் ஏற்படும் தீங்கினை மணிச்சத்துப் போடுவதால் சரிப்படுத்தி விடலாம் போலிருக்குதுங்களே!

வே.வ.அ. : ஆமாங்க ! நீங்க நினைக்கிறது முற்றிலும் சரியே. மேலும் மணிச்சத்து, உணவு தானியங்கள், பழங்கள் ஆகியவற்றின் தரத்தை உயர்த்துகிறது ; கொழுப்பு, புரதச் சத்து ஆகியவைகளைத் தயாரிக்கவும் உதவுகிறது. காற்றிலுள்ள நைட்ரஜன் வாயுவைக் கிரகித்து மண்ணில் நிலைநிறுத்தும் வேர் முடிச்சுகளை உண்டாக்கும் பாக்டீரியாவின் வேலைகளிலும் உதவுகிறது.

மற்றொரு தலைவர் : சாம்பல் சத்து போட வேண்டியதன் அவசியத்தையும் சொல்லிடுங்க சார்.

வே.வ.அ. : பயிர்களுக்குத் தேவையான மூன்று முக்கிய சத்துக்களில் சாம்பல் சத்தே பொதுவாகத் தாவரங்களில் அதிகமாகக் காணப்படுகிறது ; தழைச்சத்து, மணிச்சத்து ஆகியவைகளுடன் சேர்ந்து பயிர்களின் வளர்ச்சியில் பங்கு கொள்கிறது ; தாவரங்களின் இலைகளுக்கும், தண்டுகளுக்கும் அதிக வலுவைக் கொடுக்கிறது. நோய்களைத் தாங்கிக் கொள்ளும் சக்தியை அளிக்கிறது. வேர்ப்பாகத்திலிருந்து இலைகளுக்கும், இலைகளிலிருந்து கதிர்களுக்கும் சத்துக்கள் செல்வதற்கு சாம்பல் சத்துத் தேவைப்படுகிறது ; கரும்பு, பழம், வேர்க்கடலை ஆகியவற்றின் தரத்தை உயர்த்துகிறது ; கரும்பு, பழவகைகளின் சுவையையும் அதிகப்படுத்துகிறது ; புரதச் சத்து உற்பத்தியாவதிலும் துணை நிற்கிறது.

மணி : நீங்க சொல்றதைப் பார்த்தா சாம்பல் சத்துதான் மற்றவைகளை விட முக்கியமாகத் தெரியுது. அப்படித்தானுங்களா ?

வே.வ.அ. : அப்படியில்லைங்க , தழைச்சத்து, மணிச்சத்து, சாம்பல்சத்து ஆகிய மூன்றுமே முக்கியமானவை தானுங்க.

இளையபெருமாள் : ''சமச்சீர் இரசாயன உரம்'' என்று சொல்கிறார்களே அது பற்றியும் கொஞ்சம் சொல்லுங்களேன் சார்.

வே.வ.அ. : நம் உடல் வளர்ச்சிக்கும் நல்வாழ்விற்கும் நாம் எப்படி அரிசி, கோதுமை, கம்பு, காய்கறி, பருப்பு, பழம், எண்ணெய், பால், முட்டை, மீன், மாமிசம் ஆகியவைகள் அடங்கிய சமச்சீர் உணவுகளை உண்ணுகின்றோமோ அது போல் பயிர்களின் வளர்ச்சிக்கும், அவைகளின் உற்பத்தித் திறனுக்கும் தழைச்சத்து, மணிச்சத்து சாம்பல் சத்து ஆகிய மூன்றும் அடங்கிய சமச்சீர் இரசாயன உரங்களை, வேளாண்மைத்துறை பரிந்துரைக்கும் அளவில் ஒவ்வொரு பயிருக்கும் அளித்தால் வேளாண்மை உற்பத்தி பெருகும் ; உழவர்களின் வாழ்வும் உயரும்.

(இவ்வாறு வே.வ.அ. விளக்கம் அளித்துக் கொண்டிருக்கையில், பஞ்சாயத்து யூனியன் பெருந்தலைவரும், ஆணையாளரும் அங்கே வந்து வெளியிலிருந்து கேட்டுக் கொண்டிருந்துவிட்டு பின் உள்ளே நுழைகின்றனர். பெருந்தலைவர் பேச ஆரம்பிக்கின்றார்.)

பெருந்தலைவர் : என்ன ஏ.ஈ.ஓ. சார், நம்ம புதிய தலைவர்கள் காலையிலேயே உங்களுக்குத் தொல்லை கொடுக்கிறார்கள் போலிருக்கிறது!

வே.வ.அ. : தொல்லையில்லைங்க. அவர்கள் கேட்ட கேள்விகளுக்கு விளக்கம் தந்துகொண்டிருந்தேன். அது என் கடமையாச்சுங்களே!

ஆணையாளர் : (வே. வ. அ. வைப் பார்த்து) நீங்க ரொம்ப நேரமா இங்கே பேசிக்கொண்டிருக்கிறீர்கள் என்று கேள்விப்பட்டேன். இன்னும் சாப்பிடக் கூடப் போகவில்லை போலுள்ளது. சீக்கிரம் சாப்பிட்டுட்டு வாங்க. சரியாக 10 மணிக்கே கவுன்சில் கூட்டத்தை ஆரம்பித்து விடலாம்.

பெருந்தலைவர் : நம்ம யூனியன் தலைவர்களில் பெரும்பாலோர் புதியவர்களாக உள்ளதால், நாம் இதுவரை வேளாண்மையில் என்ன செய்துள்ளோம், இனி என்ன செய்யப் போகிறோம் என்று ஒரு 10 நிமிட நேரம் கவுன்சிலில் பேசுங்க சார். மற்றவைகளைப்பற்றி ஆணையாளர் பேசட்டும். (என்று கூறிக்கொண்டே புறப்படுகிறார். ஆணையாளர் பின் தொடருகிறார்).

வே.வ.அ. : சரிங்க. இதோ வந்துவிடுகின்றேன். (என்று வே. வ. அ. செல்கிறார்.

புலமைக் காஞ்சி போற்றுதும்!

அன்புள்ள நண்பா,

''என்னிடமிருப்பதாகச் சொல்லப்படும் திறமைகளுக்கெல்லாம் காஞ்சிபுரம் தான் காரணம். என்னிடம் குறைகள் ஏதாவது இருப்பின், இங்கே பிறந்தும் இப்படிப்பட்ட குறைகள் இருக்கின்றனவே என்று வருத்தப்பட வேண்டும். ''

செந்தமிழ்க் காஞ்சி செங்கை மாவட்டத்தின் தலைநகராகியதே நினைவிருக்கிறதா நண்பா...... காஞ்சித் தலைநகர் விழாவில் உரையாற்றிய பொழுது மறைந்த முதல்வர் பேரறிஞர் அண்ணா தான் மேற்கண்டவாறு பேசினார்கள். அந்த மாமேதைக்குத்தான் எவ்வளவு பண்புடைமை, அவையடக்கம் பார்த்தாயா ? அண்ணன் பிறந்த மண்ணின் பண்பு அப்படி !

அப்படி என்ன காஞ்சி மண்ணுக்கு அவ்வளவு சிறப்பு, புகழ் என்று கேட்கிறாயா ? புகழ் மண்டிக் கிடந்த மாநகரம் காஞ்சி, வரலாற்றில் பொன்னேடுகளைத் தனதாக்கிக் கொண்ட பெருமையை உடையது. வரலாற்றுப்புகழ், கலைச் செறிவு, அறிவு மணங்கமழும் அழகிய நகரம் காஞ்சி.

சங்க காலத்திலேயே புகழ் பெற்றுத் திகழ்ந்தது, காஞ்சி.

இந்த இதழின் மத்தியிலுள்ள வண்ண மிகு புகைப்படங்களில் நீங்கள் காணும் எண்ணற்ற காஞ்சி நகர்க் காட்சிகளை இனிது விளக்குகிறது இக்கட்டுரை.

பாலாறு வளம் சுரக்கும், பண்பாடு தலைசிறக்கும் தொண்டை நன்னாட்டின் மணிமகுடமான காஞ்சி மாநகரைச் சங்க காலத்தில் தொண்டைமான் இளந்திரையன் ஆண்டான், காடுமேடுகளைத் திருத்தி நாடு நகரங்கள் ஆக்கிய காவலன் அவன். தொண்டை நாட்டில் பயன்படுகிற தென்னேரி என்னும் ஏரி இம்மன்னனின் பெயர் தாங்கி நிற்கிறது. திரையன் ஏரியே தென்னேரி என மருவிற்று.

இமயத்தில் புலிக்கொடியை நாட்டி வந்தானே கரிகாற் பெருவளத்தான்—அந்த வீரத் திருமகன் தான் காஞ்சியைச் செப்பம் செய்து கடிநகர் ஆக்கியவன். மதில் சூழ்ந்த அம்மாநகரினைக் கண்டரும் பெருஞ்சித்திரனார் என்ற சங்க காலப் புலவர் '' மயில் போன்ற மணிநகர் '' என்று பாடி மகிழ்ந்தார். '' காஞ்சியம்பதி ஓர் அழகிய மயில் போன்றது. நெடியமதில் அம்மயிலின் உடல்; இரு மருங்கும் அமைந்த ஏரி அதன் சிறகு ; (இன்று சின்னக் காஞ்சி என வழங்கும்) அத்தியூரே அதன் வாய் ; அடவியே அதன் தோகை '' என்று பாடி மகிழ்ந்தார் அப்புலவர் பெருமகனார் !

பெரும்பாணாற்றுப் படை என்பது சங்க இலக்கியத்தைச் சேர்ந்தது. பாடியவர் கடியலூர் உருத்திரங்கண்ணனார், பாடப்பட்ட காலம் கி.மு. முதல் நூற்றாண்டு ! அப்பழைய நூல் காஞ்சியின் புகழ் பாடுகிறது.

'' தேர் ஒலிக்க மாஒலிக்கத் திசை ஒலிக்கும் புகழ்க் காஞ்சி '' அதன் பின்பு கி.பி. 275-ல் பல்லவர் வசமாகியது. கல்லெல்லாம் கதை சொல்ல வைத்த பல்லவர்களின் ஆட்சியிலே காஞ்சிமாநகரம் உச்ச நிலையை அடைந்தது. சிம்ம விஷ்ணு, மகேந்திர பல்லவன், நரசிம்ம பல்லவன், இராசிம்மன், மூன்றாம் நந்திவர்மன் .... காலவென்

அந்நகர். வெளி நாட்டுக்காரர்களும் விட்டு வைத்தாரில்லை காஞ்சியை! காஞ்சியின் எழில் கண்டு மயங்காதார் யார்! பாரவி பாரவி என்று ஒருகவிஞன். இவன் காஞ்சியை எப்படி எப்படியெல்லாம் புகழ்ந்து வர்ணித்திருக்கிறான் தெரியுமா? சாளுக்கிய மன்னன் இரண்டாம் புலிகேசி இந்த வர்ணனையைக் கேட்டுக் காஞ்சி சுந்தரிமீது காதலே கொண்டு விட்டான்!. அதன் விளைவு தான் மகேந்திரப் பல்லவனுக்கும் அவனுக்கும் இடையே நிகழ்ந்த போர். யாரை மறந்தாலும் இரண்டாம் நந்திவர்ம பல்லவனை மறக்க முடியவில்லை. 'பல்லவர் தோன்றல் பைந்தார் நந்தி' என்று பாராட்டப் பெறும் நந்திவர்ம பல்லவன் தமிழுக்காக உயிரையே விட்ட உத்தமன். 'நந்திக் கலம்பகம்' கதை தான் உனக்குத் தெரியுமே......!

காஞ்சியின் வனப்பிலே வெளிநாட்டாரும் தங்கள் உள்ளங்களைப் பறிகொடுத்திருக்கிறார்கள். யுவான் சுவாங் என்ற சீனப் பெரியாரைப்பற்றி உன் வரலாற்றுப் புத்தகத்தில் படித்திருப்பாய்! அவர் ஏழாம் நூற்றாண்டில் இந்தியாவுக்கு வந்தார். காஞ்சிபுரத்திற்கும் வந்தார். செழிப்பான காஞ்சி நகரின் வனப்பு அவர் உள்ளத்தைக் கொள்ளை கொண்டது. கல்வி கேள்விகளிற் சிறந்தவர் வாழும் நகரம் காஞ்சிபுரம் என்றும், வாய்மை நெறி வழுவாத மக்கள் அங்கு வாழ்பவர் என்றும் நெஞ்சாரப் பாராட்டினார் அவர். அவரது குறிப்புப்படி கி.மு. 5-ம் நூற்றாண்டில் இருந்த புத்தர் காஞ்சிபுரத்திற்கு வந்து சமய உண்மைகளை உரைத்தார்; அசோக மன்னன் பல தூபிகளை இங்கே நாட்டி, புத்த சமயக் கொள்கைகளைப் பரப்பினான் என்றும் நாம் அறிகிறோம்.

இந்நூற்றாண்டில் வாழ்ந்த கெட்டிஸ் என்னும் மேனாட்டுக்காரர் காஞ்சியைப் பற்றி மிகவும் மேம்படவே கூறியுள்ளார். 'காஞ்சியின் நகரமைப்புக்கு இணையாக ஒன்று உலகில் உள்ள வேறு எந்த நகரத்திலும் இல்லை. வீடுகள் தெரு மட்டத்திற்குப் பல அடிகள் உயர்த்திக் கட்டப்பட்டுள்ளன. மேனாட்டு நகரங்களில் காணப்படும் சந்துகளும் அழுக்கும் காஞ்சியில் இல்லை" என்று பாராட்டுகிறார் கெட்டிஸ்.

நண்பா.., காஞ்சிமாநகரம்இருக்கிறதே அது கலைத்தெய்வம் மணக்கும் திரு நகரம். எம்மருங்கும் கோயில்களும், கோட்டங்களும் நிறைந்து கலையொளி வீசும் இந்நகரில், செல்வம் நிறைந்த இத்திரு நகரில் கோயில்கள் பல உள்ளன. கைலாயநாதருக்கு ஒரு கற்கோயில் கட்டினான் ராஜசிம்மன் என்னும் பல்லவ மன்னன். காஞ்சியில் பசுமையான வயல்கள் மரகதப் படுதா விரிக்க நடுவில் பெருமிதத்துடன் நிற்கிறது இக் கோயில். கட்டடக் கலையில் பல்லவர் கண்ட புதுமையின் அழியாச் சின்னமாகத் திகழ்கிறது கைலாசநாதர் கோயில். ஒப்பற்ற சிற்பங்களைத் தன்னகத்தே கொண்ட இக் கோயில் எட்டாம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. ஆனால், இன்றும் நம் உள்ளங்களையெல்லாம் கொள்ளை கொண்டு, காலவெள்ளத்தையும் மீறி, நமக்கெல்லாம் உவகை ஊட்டுகிறது. இப்படி எத்தனை எத்தனையோ கோயில்கள்! வரதராசப் பெருமாள் கோயில் வரலாற்றுப் புகழ் பெற்றது. இக்கோயிலினுள் அமைக்கப் பெற்றுள்ள நூற்றுக்கால் மண்டபத்தில் ஒவ்வொரு தூணும் ஒரு கதை சொல்லும்; கண்டவர் உள்ளங்களைக் கிறங்க வைக்கும்; அவ்வளவு அற்புதமான சிற்பங்கள் ஒவ்வொரு தூணிலும் உள்ளன. இக் கோயிலில் விலை உயர்ந்த ஆபரணங்கள் உள்ளன. இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சிக்கு அடி கோலினானே ராபர்ட் கிளைவ். அவன் "மகரகண்டி" என்னும் நவரத்தினங்கள் இழைக்கப்பெற்ற விலையுயர்ந்த ஆபரணத்தையே இக்கோயிலுக்குக் கொடுத்துள்ளான்!

உலகம் கண்டு வியந்து பாராட்டும் ஏகாம்பரநாதர் கோயில் கி.பி. ஏழாம் நூற்றாண்டுக்கு முன் கட்டப்பட்டது. இக் கோயிலின் கம்பீரமான வானளாவிய கோபுரங்கள் நம்மைப் பிரமிக்க வைத்து விடுகின்றன. உன்னதமாக நிமிர்ந்து நிற்கும் தென் கோபுர வாயிலை விசயநகர மன்னன் கிருஷ்ணதேவராயன்தான் கட்டினான். இக் கோபுரம் 192 அடி உயரம் உள்ளது. தமிழகத்தின் உயர்ந்த கோபுரங்களில் இதுவும் ஒன்று. சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்த வைகுண்டப் பெருமாள் கோயில் தவறாமல் பார்க்க வேண்டிய ஒன்றாகும். காமாட்சி அம்மன் கோயில், குமரக் கோட்டம், உலகளந்த பெருமாள் கோயில், கச்சபேசுவரர் கோயில், இப்படிக் காஞ்சியில் உள்ள கோயில்களை அடுக்கிக் கொண்டே போகலாம்! காஞ்சியில் திரும்பிய பக்கமெல்லாம் கோயில்கள் தான்! இப்படி ஒரு நகரத்தை எங்குமே பார்க்க முடியாது. சுற்றுலா வருவோர்க்குக் கண் நிறைந்த, கருத்துச் செறிவுள்ள, கலைப் பெட்டகங்கள் ஏராளமாக உண்டு காஞ்சியிலே!

வேகவதி ஆற்றங்கரையில் அமைந்துள்ள பொன்னகர்க் காஞ்சிக்கு மேலும் பெருமை தேடித் தருவது கன்னியர் கருத்தைக் கவரும் பட்டுப்புடவைகள். உலகப் புகழ் பெற்ற காஞ்சிப் பட்டுக்கு இணை காஞ்சிப்பட்டு தான். இன்னும் காஞ்சிபுரம் இட்லி, பன்னீர் சோடா என்று அடுக்கிக்கொண்டே போகலாம்!

"நிறுத்து! எல்லாவற்றையும் சொல்லிவிட்டாயே; முக்கியமான ஒன்றை விட்டுவிட்டாயே!" என்று நீ முணு முணுக்கிறது எனக்குப் புரிகிறது. உண்மை தான். இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற தலைவர் அண்ணாவைப்பற்றிச் சொல்லவில்லையென்றால், காஞ்சியின் புகழ் நிறைவு பெற்றதாகாது என்பது முழுக்க முழுக்க உண்மை தான். பார் புகழ் மன்னர்களைப்பற்றி, அறிவுசால் ஆன்றோர்களைப் பற்றியெல்லாம் சொன்னேன். காஞ்சி தந்த செம்மல் அண்ணாவைப் பற்றி என்ன சொல்ல வேண்டியிருக்கிகிறது? மகேந்திரப் பல்லவனின் சாணக்கியம், கரிகாற்பெருவளத்தானின் கம்பீரம், தர்மபாலரின் நுண்ணறிவு, மாமல்ல பல்லவனின் வீரம், இராசசிம்மனின் கலை ஆர்வம், நந்திவர்மனின் தமிழ்ப்பற்று—இவற்றின் மொத்த உருவம்தான் அண்ணா! இப்பொழுது புரிகிறதா நண்பா, காஞ்சி மண்ணில் அண்ணா பிறந்ததின் உட்பொருள்?

உன் நண்பன்:



437

வண்ணப் படங்களில்

முதல்வர் அண்ணா

42-ஆம் பக்கத்தில்..!

* சிரணித் துவக்க விழா 1967-ல் நடைபெற்றபோது அண்ணாவும் இந்நாள் முதல்வர் கலைஞர் அவர்களும் பங்கு கொள்ளும் காட்சி.

* சிரணித் துவக்க விழாவைக் கண்டு களிக்கும் மக்கள் கூட்டமும்—சிரணித் தொண்டர்களும்.

* சிகிச்சைக்காக அமெரிக்காவுக்குப் புறப்படுகிறார் அண்ணா. அருகிலே கலைஞரும், மறைந்த டாக்டர் சதாசிவம் அவர்களும் உள்ளனர்.

* உலகத்தமிழ் மாநாட்டு ஊர்வலக் காட்சியை (மறைந்த) குடியரசுத் தலைவர் ஜாகிர் உசேன் அவர்களுடனும் தமிழக ஆளுநர் உஜ்ஜல்சிங், அவர்தம் துணைவியார் ஆகியோருடனும் அண்ணா காண்கிறார்.

* ஐரோப்பியச் சுற்றுப் பயணத்தின் போது ரோமாபுரியில் போப் ஆண்டவரைச் சந்தித்துக் கை குலுக்குகிறார் அண்ணா.

* பார்போற்றும் படியரிசித் திட்டத்தை 15—8—1968 அன்று வில்லிவாக்கம் பகுதியில் துவக்கி வைக்கிறார் அண்ணா.

* 15—5—1967 அன்று, ஊட்டியில் நடைபெற்ற பத்தாவது தென் மண்டலக்குழுக் கூட்டத்தில் மத்திய அமைச்சர்களுடனும் மாநில அமைச்சர்களுடனும் காட்சி தருகிறார் அண்ணா.

* தமிழக அரசுப் பரிசுச் சீட்டுத் திட்டத்தை 15—8—1968 அன்று துவக்கி வைத்து, ஆளுநர் உஜ்ஜல் சிங் அவர்களிடம் பரிசுச் சீட்டை விற்பனை செய்கிறார் அண்ணா.

* காமராசருடன் அன்போடு உரையாடுகிறார் அண்ணா.

* 13—12—1967-ல் சென்னைக்கு வருகை புரிந்த லாவோஸ் மன்னருடனும் இளவரசியுடனும் அண்ணா.

* தருமபுரம் தம்பிரான் தமிழ்த் தாயின் தவப்புதல்வர் அண்ணாவுக்குப் பொன்னாடை போர்த்துகிறார்.

* 24—3—1967 அன்று, ஊட்டியில் உள்ள தோடர்களைச் சந்தித்து அவர்களுடன் அளவளாவுகிறார்.

செடிகளுக்கு டானிக்

ஆரஞ்சு, எலுமிச்சை, கொடி எலுமிச்சை, பப்ளிமாஸ், துருஞ்சி, கடார நாரத்தை ஆகியவைகள் நாரத்தை (Citrus) வகையில் அடங்கும். பொதுவாக நாரத்தை வகைகளில் நுண்ணூட்டகங்களின் குறைவால் நோய் ஏற்படும். நாம் ‘டானிக்’ சாப்பிட்டு உடல்நலம் பெறுவதுபோல், நாரத்தை வகைச் செடிகளுக்கும் ‘டானிக்’ தெளித்து, நோய்களைத் தவிர்த்து மகசூலைப் பெருக்கலாம். கீழ்க் காணும் நுண்ணூட்டகங்கள் கலந்த டானிக்கை 3 மாதத்திற்கு ஒரு முறை, நாரத்தை வகைச் செடிகளின் மேல் தெளித்தால் செடிகள் செழிப்புடன் வளர்ந்து பெரும் பலன் அளிக்கும்.

மயில் துத்தம் (காப்பர் சல்பேட்) ..	1,350 கிராம்.
துத்தநாக சல்பேட் (சின்க் சல்பேட்).	2,250 ,,
மக்னீசியம் சல்பேட்	900 ,,
மாங்கனீஸ் சல்பேட்	900 ,,
போராக்ஸ்	450 ,,
பெர்ரஸ் சல்பேட்	900 ,,
யூரியா	900 ,,
சுண்ணாம்பு	4,050 ,,
ஈரக் கந்தகம்	2,250 ,,
தண்ணீர்	450 லிட்டர் (100காலன்)

முதலில் காப்பர் சல்பேட்டையும், சுண்ணாம்பையும் கொண்டு போர்டோக் கலவையைத் தயார் செய்து கொள்ளவும். பின் மற்றவைகளை ஒவ்வொன்றாகக் கலந்து தெளிக்கவும்.

* 4—8—1968 அன்று மாநகராட்சித் தொடக்கப்பள்ளிச் சிறுவர் சிறுமியருக்குப் புத்தகங்கள், சிலேட்டுகள் ஆகியவற்றை அண்ணா வழங்குகிறார்.

39-ஆம் பக்கத்தில்..!

* சென்னைக்குக் குடிநீர்ப் பெருக்கத் திட்டத்தைத் துவக்கி வைக்கிறார் அண்ணா.

* காவிரி அன்னை சிலை வடிவில் காட்சி தருகிறாள்.

* அந்தமான் செல்லும் வழியில் தமிழகத்துக்கு வந்திருந்த இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி அவர்களை சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் மலர்மாலையுடன் வரவேற்கிறார் அண்ணா.

* மாநில சங்கீத நாடக சங்கத்தார் நடத்திய விழாவில் பங்கேற்று, அவர்கள் தனது தம்பி கலைஞர்க்குப் பரிசளித்த விருதினைப் பெருமகிழ்வுடன் அவரிடம் கொடுக்கிறார் அண்ணா.

* யேல் பல்கலைக் கழக வரலாற்று நூலை 24—4—1968 அன்று, அண்ணா பார்வையிடுகிறார்.

* 22—11—1968-ல் உலக வங்கித் தலைவர் மக்னமாராவை, கிண்டியில் உள்ள ஆளுநர் மாளிகையில் சந்திக்கிறார் அண்ணா.

* இந்தியாவிலுள்ள இங்கிலாந்து நாட்டு தூதர் சர் மோரிஸ் ஜேம்சுடன் அண்ணா.

* இன்று, மாட மதுரையில் பிரம்மாண்டமாகக் காட்சி தரும் மதுரை—இராமநாதபுரம் மாவட்டங்களுக்குரிய நீதிமன்றக் கட்டடத்திற்கு 16—4—1967 அன்று அடிக்கல் நாட்டுகிறார் அண்ணா.

* பேருந்து நாட்டுடைமையாக்கல் துவக்க விழாவில் அண்ணாவும் கலைஞரும் கலந்து கொள்ளும் காட்சி.

* வரலாற்றை மாற்றி வைத்த 6—3—1967 அன்று, ராஜாஜி மண்டபத்தில் பதவி ஏற்கிறார் அண்ணா.

* 19—9—1967 அன்று, கூவம் சீரமைப்புத் திட்டத்தைத் தொடங்கி வைக்கிறார் அண்ணா. மறைந்த உணவமைச்சர் ஏ. கோவிந்தசாமி, அண்ணாவின் அருகில் அமர்ந்திருக்கிறார்.

மகளிர் பகுதி

உணவுப் பழக்க வழக்கங்களை எளிதில் உடனடியாக யாரும் மாற்றிக்கொள்ள முடியாதுதான். ஆனால், பரம்பரை பரம்பரையாக இருந்து வரும் உணவு முறைகளைத் தான் நாம் கடைப் பிடித்து வருகிறோம் என்றும் சொல்லவும் முடியாது.

வளர்ந்து வரும் உலகில் நமது தேவைகளை ஒட்டிச் சில மாற்றங்களை நம்மை அறியாமலேயே செய்து கொள்ளுகிறோம். நாம் நாகரிகம் என்ற பெயராலும் பல மாற்றங்களைச் செய்து கொள்ளுகிறோம்.

எடுத்துக்காட்டாகக், கற்றுணர்ந்தவர்கள் என்று கருதப்படுபவர்கள் கூடக் கைக் குத்தல் அரிசி உணவை உட்கொள்வதை அநாகரிகம் என்று எண்ணுகிறார்கள். இப்படி, சத்துணவா ? சத்துணவில்லையா ? என்பதைக் கூட நினையாது நாகரிக மோகத்தால் உணவை மாற்றிக்கொள்ளுகிறார்கள்.

அந்த அளவுக்கு, எந்தக் காரணம் கொண்டும் அடியோடு உணவு முறைகளை மாற்றிக் கொள்ளவேண்டும் என்று நாம் வலியுறுத்தவில்லை. ஆனால், காலமறிந்து நாட்டின் சூழ்நிலை அறிந்து உணவு முறைகளில் நாம் ஒரு சில மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்வது அவசியமாகும். அப்படி நாம் பழக்கப் படுத்திக் கொள்ளும் புதிய உணவு முறைகள் சத்துள்ள உணவுகளாக அமைதல் வேண்டும். அந்த அடிப்படையில் தான் அயல் மாநிலங்களில் வழக்கத்திலுள்ள சில உணவு வகைகள், செயல் முறைகளை இங்கே குறிப்பிடுவோம்.

பசரட்டு.

இது மராட்டிய மாநிலம் குஜராத் மாநிலம் ஆகிய இடங்களில் வழங்கும் சிற்றுண்டியாகும்.

பத்துப் பேருக்குச் செய்ய வேண்டிய அளவு தேவையான பொருள்கள் வருமாறு :

பயத்தம்பருப்பு	500 கிராம்
கொத்தமல்லித்தழை	50 கிராம்
வெங்காயம்	150 கிராம்
இஞ்சி	50 கிராம்
பச்சை மிளகாய்	50 கிராம்.
உப்பு	30 கிராம்.
வதக்க எண்ணெய்	போதிய அளவு
சீரகம்	10 கிராம்.
தண்ணீர்	738 மிலி.

செய்முறை :

1. பயத்தம்பருப்பை முதல் நாள் இரவு ஊறவைத்து இட்லி மாவு மாதிரி அரைத்துக் கொள்ளவும்.

2. நறுக்கிய கொத்தமல்லி வெங்காயம், இஞ்சி, பச்சை மிளகாய், சீரகத்தைக் கலக்கவும்.

3. உப்பைச் சேர்த்துப் போதுமான தண்ணீர் விட்டுத் தோசை மாவு மாதிரி செய்து கொள்ளவும்.

4. தோசைக் கல்லில் தோசை மாதிரி வார்த்துச் சூடாக உண்ணலாம்.

சுவையான இந்தச் சிற்றுண்டியைப் பத்துப் பேர் சாப்பிட்டால் ஒவ்வொருவருக்கும் 12·8 கிராம் புரதச் சத்துக் கிடைக்கும்.

சேப்பங்கிழங்கு உருண்டை.

இதுவும் மராத்தி, குஜராத் மாநிலங்களில் வழக்கத்திலுள்ளதாகும்.

தேவையான பொருள்கள் :

சேப்பங்கிழங்கு	225 கிராம்
தேங்காய்	55 கிராம்
வெங்காயம்	30 கிராம்
மிளகாய் வற்றல்	5 கிராம்
உப்பு சுவைக்கு	ஏற்றபடி
சோடா உப்பு ஒரு	சிட்டிகை
கடலைமாவு	55 கிராம்
இஞ்சி	5 கிராம்
வதக்க எண்ணெய்	30 கிராம்

செய்முறை :

1. சேப்பங்கிழங்கைக் கழுவித் தோலைச் சீவவும். வேகவைத்து நசுக்கிக் கொள்ளவும்.

2. தேங்காய், மிளகாய், வெங்காயம், இஞ்சி, இவற்றுடன் சிறிது உப்பைச் சேர்த்து அரைத்துக் கொள்ளவும்.

3. சிறிது எண்ணெய்யில் தேங்காயையும், எல்லா மசாலாவையும் வறுக்கவும்.

4. கடலை மாவையும் உப்பையும் சேர்த்துக் குழம்பாக்கிக் கொள்ளவும்.

5. நசுக்கிய சேப்பங்கிழங்கைச் சிறு சிறு உருண்டையாக்கிக் கொள்ளவும்.

6. தேங்காயை உருண்டைக்குள் வைத்து மூடவும்.

7. உருண்டையைக் கடலை மாவுக் குழம்பில் நனைத்து எண்ணெய்யில் பொறிக்கவும்.

சுவையாக உள்ள இவ்வுருண்டைகளை நான்கு பேர் சாப்பிடலாம்.

துதி மூத்தியா.

' துதி மூத்தியா ' என்ற பெயரைக் கேட்கும் பொழுதே குழப்பம் ஏற்படுகிறதல்லவா ? இது கேரள மாநிலத்தில் வழக்கிலுள்ள ஒரு கலவை உணவுப் பொருளாகும்.

பத்துப் பேருக்குத் ' துதி மூத்தியா ' சமைத்திடத் தேவையான பொருள்கள் வருமாறு :

கடலை மாவு	500 கிராம்.
கோதுமை மாவு	115 கிராம்.
பூசணிக்காய் (நறுக்கியது).	500 கிராம்
பச்சைமிளகாய்	6 கிராம்.
கறிவேப்பிலை	1 கொத்து.
இஞ்சி	1 துண்டு.
பச்சைக் கொத்தமல்லி	கொஞ்சம்.
சீரகப்பொடி	1/4 தேக்கரண்டி
மிளகாய்ப்பொடி	1 தேக்கரண்டி
மஞ்சள்	கொஞ்சம்.
கடுகு	கொஞ்சம்.
உப்பு, சர்க்கரை—	சுவைக்கு ஏற்றபடி.
எண்ணெய்	30 மிலி.
எண்ணெய் தாளிக்க	60 மிலி.

செய்முறை :

1. கடலை மாவு, கோதுமை மாவு, பச்சை மசாலா ,மசாலாப் பொடிகள், நறுக்கிய பூசணிக்காய், எண்ணெய், உப்பு, சர்க்கரை ஆகியவைகளை நன்றாகச் சேர்த்துக் கலக்கவும்.

2. எண்ணெய் ஊற்றிய பாத்திரத்தில் கலவைகளைப் போட்டு வேக வைக்கவும்.

3. எண்ணெய்யை அடுப்பில் வைத்துக் கடுகையும், பெருங்காயத்தையும் சேர்க்கவும்.

4. கடுகு வெடித்தவுடன் சமைத்த பொருளைப் போட்டுக் கலக்கவும்.

சூடாகச் சாப்பிடவும். சுவை மிகுதியாகத் தெரியும்.

—அஞ்சனா



கேளுங்கள் தரப்படும்

சிறு அளவு நிலமுடைய உழவர்களும், வேளாண்மைத் துறையினரால் பரிந்துரைக்கப்படும் அளவு இரசாயன உரங்களை வாங்கிப் பயன்படுத்தி. உற்பத்தியைப் பெருக்கவேண்டுமென்பதற்காகவே, தமிழ்நாடு அரசு ஐ.எம்.எஸ். (Intensive Manuring Scheme) என்னும் திட்டத்தின்கீழ், இரசாயன உரங்களுக்காகக் கீழ்க்கண்டபடி கடன் கொடுத்து உதவுகிறது.

பயிரின் பெயர்.	ஏக்கருக்குக் கொடுக்கப்படும் கடன் தொகை. (ரூபாய்).	ஒருவருக்குச் சொந்தப் பொறுப்பில் கொடுக்கப் படும் உச்ச அளவுக் கடன் தொகை. (ரூபாய்).	அதிகப்படியாக ஈடு காட்டில் கொடுக்கப்படும் உச்ச அளவுக் கடன் தொகை. (ரூபாய்).
சாதாரண நெல் வகைகள்	80	750	1,000
சாதாரண சோளம், கம்பு, ராகி வகைகள்.	75	750	1,000
கரும்பு	400	1,500	1,750
இறவை மணிலா	65	750	1,000
மானாவாரி மணிலா	35	500	750
இறவைப் பருத்தி	80	75	1,000
மானாவாரிப் பருத்தி	40	500	750
புகையிலை	115	800	1,000
தென்னை, பாக்கு	130	1,000	1,250
காய்கறிகள்	130	1,000	1,250
மிளகாய்	115	800	1,000
வெங்காயம்	130	1,000	1,250
எள்	50	500	750
வேர்க்கிழங்குகள்	180	1,000	1,250
உருளைக்கிழங்கு	310	1,000	1,250
வாழை	600	1,500	1,750
கரும்பு தவிர மற்றப் பயிர்களை இணைத்துப் பயிரிட்டால்.	..	1,250	1,500
கரும்பும், மற்றப் பயிர்களும் இணைத்துப் பயிரிட்டால்.	..	1,500	1,750

உரம் வாங்கப் பணம் இல்லையே என்று கவலைப்படாமல், உடனடியாக உங்கள் ஊர்ப் பணியாளர் மூலமாக ஊராட்சி ஒன்றிய ஆணையாளருக்கு விண்ணப்பம் அனுப்புங்கள்.

யார் முட்டாள்?

அந்த இளைஞன் புதிதாக ராணுவத்தில் சேர்ந்தவன். அவனுக்கு ஜெர்மானிய மொழி தெரியாது. ஆனால் அணிவகுப்பின் போது புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ள வீரர்களை ஜெர்மன் நாட்டு மன்னர் மூன்று கேள்விகள் கேட்பது வழக்கம்.

முதல் கேள்வி : உனது வயது என்ன ? இரண்டாவது கேள்வி : ராணுவத்தில் சேர்ந்து எவ்வளவு நாளாகிறது ? மூன்றாவது கேள்வி : துணி, உணவு எல்லாம் வசதியாக உள்ளதா ?

எனவே, ராணுவத்திலுள்ள பழைய வீரர்கள், அந்தப் புதிய வீரனுக்கு அந்தக் கேள்விகளுக்கான பதில்களை மட்டும் ஜெர்மானிய மொழியில் சொல்லித் தந்திருந்தனர். வீரனும் அதை மனப்பாடம் செய்து கொண்டான்.

அணிவகுப்பு நாளும் வந்தது. மன்னர் புதிய வீரனைப் பார்த்தார். கேள்விகளைத் தொடுத்தார். ஆனால் கேள்விகளைத் தான் மாற்றிக் கேட்டுவிட்டார். விஷயம் தெரியாத வீரன் தனக்குச் சொல்லித் தந்தபடியே மனப்பாடம் செய்து பதில்களை உதிர்த்தான்.

மன்னர் : நீ ராணுவத்தில் சேர்ந்து எவ்வளவு நாளாகிறது?

வீரன் : 25 வருடங்கள்

மன்னர் : உன் வயது என்ன ?

வீரன் : மூன்று நாட்கள்.

மன்னர் : என்னை முட்டாள் என்று நினைத்துக் கொண்டு இப்படி பதிலுரைக்கிறாயா ?

வீரன் : ஆமாம் மன்னவா !

உங்களுக்குத் தெரியுமா ?

நெற்பயிர்களுக்குள் எலிகளினால் ஏற்படும் சேதங்களைத் தவிர்ப்பதற்கு ஆடுதுறை விவசாயப்பண்ணையில் ஒரு புதிய முறையினைக் கையாளுகிறார்கள்.

நெல் வயலைச் சுற்றிக் கம்பிகளினால் ஒன்றரை அடி உயர வேலியை அமைத்திருக்கிறார்கள். இரவு நேரங்களில் இந்தக் கம்பிகளில் மின்சாரம் பாய்ச்சப்படுகிறது. எலிகள் இந்தவயல்களுக்குள் நுழைய முயன்றால், இந்தக் கம்பிகளில் ஓடும் மின்சாரம் அவற்றைத் தூக்கித் தூர எறிந்துவிடும். எனவே, எலிகள் உள்ளே புகமுடியாது.

தஞ்சாவூர் மாவட்டம் கொண்டான்குடி கிராமத்தில் வயல் வெளிகளில் எலிகள் நெற் பயிர்களுக்குச் சேதம் விளைவிக்காமல் தடுப்பதற்காக எலி பிடிப்பவர்களுக்கு எலிக்கு 15 காசு வீதம் பணம் தருகிறார்கள்.

அந்தக் கிராமத்தில் ஒரு தகப்பனும் மகனும் நாளொன்றுக்கு சுமார் 100 எலிகளைப் பிடித்து அதன் மூலம் மாதம் ரூ. 150 சம்பாதிக்கின்றனர்.

பசையா?



ஆபீசுக்கு, அல்வா டிபன் செய்து அனுப்பினேனே ! எப்படி இருந்தது ?

100 கவர் ஒட்டுவதற்குச் சரியா இருந்தது.

கி.மு.- கி.பி.



சர்வர் : சார் ! வடையைஎன்ன அப்படிப் பார்க்கிறீங்க ?

தொல்பொருள் ஆராய்ச்சியாளர் : கி. மு.-வா ? கி. பி.-யா ? எப்போது செய்தது என்று கண்டு பிடிக்கிறேன்.

பறவைகள்

“என்னப்பா ! எப்போ பார்த்தாலும் வீட்டிலே இருக்கச் சொல்றே ; எல்லாரும் வெளியூர் போறாங்க ; ராமன் திருநெல்வேலி போறான்; அவன் அண்ணன் சங்கர் பம்பாய் போகிறான் ; நான் மட்டும் வீட்டிலேயே....., எப்போ பார்த்தாலும். . . .”

“எங்கேடா நாம் போகிறது ? வெளியூர் போகப் பணம் வேணுமடா ; நம்ம வருவாய்க்கு அப்படியெல்லாம் போக முடியுமா?”

“என்னப்பா இது? எப்போதும் ஏதாவது சாக்குப் போக்குச் சொல்லுறே ; பணமில்லை ; பணமில்லைன்னு நீ சொல்லிக்கிட்டே இருக்கிறே ; சரி. ரொம்ப தூர ஊருக்குப் போக வேண்டாம் ; பக்கத்து ஊருக்கு எங்கேயாவது போகலாமா ?”

“சரி ; நீ விடமாட்டே ! வேடன் தாங்கல் போகலாமா?”

“அப்படீன்னா ! அது எங்கே இருக்கு ?”

“அதுவா ? அது நம்ப பட்டணத்திலிருந்து 52 மைல் தூரத்திலே இருக்குது ; அங்கே போகலாம்”

“அங்கே கடல்இருக்கா ? மலையிருக்கா ? சினிமா பார்க்க முடியுமா ? என்ன ஊரப்பா அது ?”

“அடே சாமிநாதா ! அங்கே கடலும் இல்லை ; மலையும்இல்லை; பரந்து விரிந்த கடல்போன்ற ஏரி; கரையை மோதும் அலைகள் ; 30 ஏக்கர் பரப்புள்ள தோப்பு; அத்தோப்பிலே 550க்கும் மேற்பட்ட எத்தனையோ வகையான மரங்கள் ; அவற்றிலே பல தண்ணீரிலே சாய்ந்து பாதிக்கும் மேலாக மூழ்கிக் கிடக்கும் தோற்றம் ; அந்தப் பெரிய மரங்களின் கிளைகளிலே கண்ணைக் கவரும் வண்ண வண்ணப் பறவைகள் ! அவை நீரிலே மூழ்கி இரைகளைப் பிடிப்பதும், பல வகை ஒலிகளை எழுப்பி வானிலே பறப்பதும், குஞ்சுகளோடு கொஞ்சிக் கொண்டு இரை ஊட்டுவதும் எவ்வளவு அழகான காட்சி தெரியுமா ?”

“அப்பா! அப்பா! இந்த வேடன்தாங்கல் எங்கே இருக்கிறது ? நாம் போய் வரலாமா?”

“பொறுடா சாமி ! அவசரப்படாதே ; இது செங்கற்பட்டு மாவட்டத்திலே இருக்கிறது; தலைநகரிலிருந்து 52 மைல் என்று முன்னரே சொன்னேனல்லவா ? இந்த வேடன் தாங்கலிலுள்ள சிற்றேரியின் இடையே கடப்ப மரத் தோப்பு இருக்கிறது ; அந்தக் கடப்ப மரங்கள் இருபதடிக்குமேலே உயரமுள்ளவை ; பரந்து பருத்த கிளைகளை உடையவை ; இக் கிளைகளில் சரஞ்சரமாய்த் தொங்கும் சின்னஞ்சிறுபூக்களைக் காண இனிமையாய் இருக்கும்”

“அப்பா ! கடப்பமரம் என்றாயே ! அது என்ன மரம் ? தினந்தோறும் - ‘கந்தா ! கடம்பா ! ‘கதிர்வேலா’ என்று கண்ணை மூடிக் கொண்டு யாரையோ கூப்பிடுவாயே ! அந்தக் கடம்ப மரமா ?”

“போடா ! குறும்புக்காரப் பயலே ! இது அந்தக் கந்தனுக்குரிய கடம்ப மரமில்லை ! கடம்பு என்று ஒரு மரம் உண்டு ; உண்மைதான் ; கடம்புப் பலகை படுக்க நல்ல பலகை ; உழைத்து வந்தவர்க்கு ஓய்வு கொடுக்கக் கடப்ப மரம் மிகவும் உதவியாக இருக்கும். ‘உடம்பை முறித்துக் கடம்பிலேபோடு’ என்று சொல்வார்கள்.”



“சரியப்பா ! அது இருக்கட்டும் ; வேடன் தாங்கலில் என்ன என்ன பறவைகள்இருக்கின்றன?

இரட்டிப்பு லாபம்!

இன்ப வாழ்வுக்காக
நீங்கள் தரப்போவதோ மிக மிகச் சொற்பம்

நீங்கள் வாங்கும் பரிசுச் சீட்டு; உங்கள் வாழ்க்கையில் வாய்க்க இருக்கும் வளத்துக்கு ஏணிப்படி! உங்கள் லட்சியக் கனவில் மலர்ந்துள்ள சொகுசு இல்லம்!

தமிழ் நாடு அரசு பரிசுச் சீட்டுத் திட்டத்தில் பரிசு பெறுவதற்கு அதிக வாய்ப்புகள் இருக்கின்றன. நீங்கள் லட்சாதிபதியாகும் பேற்றினை நழுவ விடாதீர்கள்!

அதிக உணவு, உடை, நல்ல வீடுகள், இலவசக் கல்வி, தேவையான மருத்துவ வசதிகள் எல்லாம் சரிவரக் கிடைப்பதற்காக தேசிய திட்டங்களில் உங்கள் முதலீடு செலவழிக்கப்படுகிறது.

தேசம் வளமாக உங்கள் பணம் பயன்படட்டும்.

அடுத்த குலுக்கலுக்கான
பரிசுகளின் மொத்தத் தொகை : ரூ. 17,50,000
ஒவ்வொரு வரிசைக்கும் முதல் பரிசு : ரூ. 1,00,000
குலுக்கல் தேதி: 25-9-1970
தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டுத் திட்டம்
இதுவரை உருவாக்கிய புதிய லட்சாதிபதிகள் = 181 பேர்

பரிசுச் சீட்டுகள் விற்பனை விறுவிறுப்பாக நடைபெறுகிறது. ஒரு சீட்டின் விலை ஒரே ஒரு ரூபாய்தான்!

இன்றே வாங்குங்கள்
தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு



வெளியீடு: இயக்குநர், தமிழ்நாடு அரசு
செய்தி விளம்பரத்துறை, சென்னை-9

எத்தனை பறவைகள் இருக்கின்றன ?''

'' சாமிநாதா ! இங்கே தண்ணீரில் வாழும் பறவைகளில் மட்டும் பதினான்கு வகைகள் இருக்கின்றன ; அவை நீர் மட்டத்தின் மேலுள்ள கிளைகளில் அடுத்தடுத்துக் கூடுகட்டிக் கூட்டம் கூட்டமாய் வாழ்கின்றன; மொத்தம் எத்தனை பறவைகள் என்று எப்படிச் சொல்ல முடியும் ? மக்களைப்போல நிலையாகப் பறவைகள் வாழ்வதில்லையே ! இயற்கை அன்னை அவற்றிற்கு இறகு கொடுத்திருக்கிறாள். வானிலே பறந்து ஊர் ஊராக, தேசம் தேசமாக அவை செல்லுவது இயல்பு ; 'விட்டு விடுதலையாகி நிற்பாய் சிட்டுக் குருவியைப் போலே ' என்று நீ பாடப் புத்தகத்தில் படித்திருக்கிறாயல்லவா ? ஆனாலும் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட பறவைகள் இருப்பதாகப் பறவை நிபுணர்கள் சொல்கிறார்கள்''

'' பத்தாயிரமா ? அப்பப்பா ! இந்தப் பத்தாயிரமும் நம் ஊர்ப் பறவைகளா? வெளியூரிலிருந்தும் ஏதாவது வருவதுண்டா ?''

'' என்ன கேள்வியடா இது ? நாம் சிறகில்லாமலே வெளியூர் போக விரும்புகிறோம் ; போயும் வருகிறோம் ; பறக்க வசதியான இறகும், சிறகும், உள்ள பறவைகள் இங்கிருந்து வெளியூர் செல்வதும், வெளி நாடுகளிலிருந்து நமது ஊருக்கு வருவதும் இயற்கைதானே ! வட நாட்டிலிருந்து வருகின்றன ; சைபீரியா, ரஷ்யா முதலிய நாடுகளிலுமிருந்தும் வருகின்றன ; இங்கே சில மாதங்கள் தங்குகின்றன. பின் தம் தாய்நாடு நோக்கித் திரும்பியும் போகின்றன.''

'' என்னப்பா இது ? ரஷ்யாவிலிருந்து பறவை வருகிறது என்பதை எப்படி நம்ப முடியும் ? சும்மா ஏனப்பா கதை சொல்கிறாய் ? அவ்வளவு தூரத்திலிருந்து வருகிறது என்பதை எப்படி நீ சொல்கிறாய் ?''

'' ஆதாரமில்லாமலா நான் சொல்வேன் ? ஏறக்குறைய இருபதாண்டுகட்கு முன்பு நடந்த ஒரு நிகழ்ச்சியை நான் சொல்கிறேன். வேடன் தாங்கலிலே குண்டுபட்டுக் கிளுவைப் பறவை ஒன்று கீழே வீழ்ந்தது ; அதை எடுத்தபோது அதன் காலிலே காப்பு ஒன்று பூட்டப்பட்டிருந்தது : அதைப் பார்த்த போது அதில் 'மாஸ்கோ' என எழுதப்பட்டிருந்தது; 'மாஸ்கோ' ரஷ்யாவின் தலை நகரமல்லவா ? ஆகவே இந்தக் கிளுவைப் பறவை ரஷ்யாவிலிருந்து இங்கே வந்திருக்க வேண்டுமெனப் பறவை நிபுணர்கள் முடிவு செய்தனர் ''.

'' ஏனப்பா, இந்தப் பறவைகளின் கால்களில் பெயர் பொறித்துக் காப்புக் கட்டுகிறார்கள் ?''

'' உன் தம்பி செயராமன் எங்கெல்லாம் போகிறான் என்பதை மாலையில் அம்மா துப்புத் துலக்குவதில்லையா? அதுபோலப் பறவைகள் செல்லுமிடங்களை அறியப் பறவை நிபுணர்கள் விரும்புகிறார்கள். அவர்கள் பறவைகள் குஞ்சுகளாக இருக்கும்பருவத்திலேயே அவற்றின் கால்களில் அந்த ஊரின் பெயர் எழுதிய காப்புக்களைக் கட்டுவது வழக்கம்.''

'' ஏனப்பா. [illegible] வேண்டும் ?''

'' சரியான கேள்வி[illegible] இது ; இப்படிப் பெயர் எழுதிய காப்புக் கட்டப்பட்ட பறவை ஏதாவது அயல் நாடுகளில் சுட்டுக் கொல்லப்பட்டால் இன்ன இடத்தில் அது சுடப்பட்டது என்ற குறிப்புடன் அந்தக் காப்பை அதில் குறித்துள்ள ஊருக்கு அனுப்புவது வழக்கம்''

'' ஆமாம் அப்பா ! போன மாதம் நானும் அண்ணன் வேலுவும் நம் தோட்டத்தில் ஒரு நாள் உட்கார்ந்திருந்த போது கிணி கிணி' என்று சின்ன மணி ஓசை கேட்டது ; திரும்பிப் பார்த்தோம் ; ஒரு காக்கை மரக்கிளையில் வந்து உட்கார்ந்தது ; அதன் காலில் இரு சிறு மணிகள் தொங்கின. யாரப்பா அந்த மணிகளைக் கட்டினார்கள் ? ஏன் கட்டினார்கள் ?''

வாழைக்கு நிகரேது?

அந்நியச் செலாவணியைத் திரட்டித் தருவதில் வாழைக்கு நிகரான பயிர் எதுவுமில்லை. தற்பொழுது அந்நியச் செலாவணியை அள்ளிக்கொடுத்திடும் மிளகு, முந்திரிப்பருப்பு, சர்க்கரை, காப்பி ஆகியவைகளைக் காட்டிலும் வாழை அதிக அளவு அந்நியச் செலாவணியை அளித்திடும். 1,000 ஏக்கரில் விளைந்த மிளகு 4·3 லட்சம் ரூபாயையும், முந்திரிப்பருப்பு 12 லட்சம் ரூபாயையும், சர்க்கரை 16·6 லட்சம் ரூபாயையும், காப்பி 19·7 லட்சம் ரூபாயையும் அந்நியச் செலாவணியாகக் கொடுத்திடும். ஆனால் 1,000 ஏக்கரில் விளைந்த வாழைப்பழமோ ஏறத்தாழ 1 கோடி ரூபாய் அந்நியச் செலாவணியைத் தேடித்தரும்.

எனவேதான் தமிழ்நாடு அரசு, தூத்துக்குடியைச் சுற்றியுள்ள உவர்மண் நிலப் பகுதிகளைப் (தேரி நிலங்கள்) பண்படுத்திப் படிப்படியாக 6,000 ஏக்கர் பரப்பளவுக்கு மேல் '' மோரிஸ் '' வாழை இனத்தைப் பயிரிடத் திட்டமிட்டுள்ளது. இத்திட்டத்திற்கு வேளாண்மைக் கடனுதவிக் கழகம் ரூபாய் 443 லட்சம் கடனுதவியளிக்க முன்வந்துள்ளது. தூத்துக்குடித் துறைமுக வேலை முடிந்த பின், 15 நாட்களுக்கு ஒரு கப்பல் வீதம் வாழைப் பழங்களைத் தூத்துக்குடியிலிருந்து ஜப்பானுக்கு அனுப்ப முடியும். இதனால் 6000 ஏக்கர் வாழையிலிருந்து ரூபாய் 6 கோடி அந்நியச் செலாவணியாக ஆண்டு தோறும் கிடைத்திடக்கூடும். இத்திட்டத்தினால் தூத்துக்குடித் துறைமுகம் மேம்பாடு அடையும் ; உழவர்களும் நல்ல லாபம் பெறுவார்கள் ; தமிழ்நாட்டின் தொழில் வளத்தைப் பெருக்க அந்நியச் செலாவணியும் கிடைக்கும்.

'' யார் கட்டினார்கள் என்பது எப்படிச் சொல்ல முடியும்? வேடிக்கைக்காக யாரேனும் கட்டியிருக்கலாம்; அல்லது பறவை நிபுணர்கள் குறிப்பிட்ட அந்தக் காக்கையைப் பற்றி ஆராய அப்படி மணிகளைக் கட்டியும் இருக்கலாம்.''

'' இருக்கட்டும் அப்பா; இவை எத்தனை நாளாய் இங்கே இருக்கின்றன; நாம் போகும்போது அவையெல்லாம் அங்கே இருக்குமா? பறந்து போய்விடுமே; சீக்கிரம் போகலாம்ப்பா; நாளைக்கே போகலாமா?''

'' அவசரப்படாதே சாமி; இந்தப் பறவைகள் இன்றல்ல, நேற்றல்ல, ஏறக்குறைய இருநூறு ஆண்டுகளுக்குக் குறையாமல் இங்கே பரம்பரையாய் வாழ்கின்றன என்று சொல்லலாம்; இந்த வேடன்தாங்கலைத் தவிர வேறு சில இடங்களிலும் பலவகைப் பறவைகள் கூடுகட்டிக் குஞ்சு பொரித்து வாழ்கின்றன; ஆனாலும் முப்பது ஏக்கர் பரப்புள்ள இவ்வளவு பெரிய இடத்தில் பத்தாயிரம் பறவைகளைப் பார்க்க முடியாது.''

'' ஏனப்பா இங்கு மட்டும் ஏன் அவ்வளவு பறவைகள் வாழ வேண்டும்?''

''இந்த வேடன் தாங்கலில் அமைந்துள்ள ஏரியின் நடுவே அழகிய பெரிய மரங்கள் அடிப்பாகம் நீரிலே மூழ்கியும், கிளைகள் மேலோங்கியும் நிற்கின்றன என்று முன்னேயே நான் சொன்னேனல்லவா, தண்ணீரில் மூழ்கி நிற்கும் மரங்களைத் தேடுவது நீர்ப்பறவைக்கு இயல்பு; இதனால் அவற்றிற்குச் சில பாதுகாப்புகள் ஏற்படுகின்றன; நிலத்தில் வாழும் பறவைகளைத் தின்னும் பூனை, கீரி போன்றவற்றால் தண்ணீர் சூழ்ந்த மரங்களை நெருங்க முடியாது. மக்களாலும் எளிதில் அவற்றின் பக்கம் செல்ல இயலாது. வேடன் தாங்கல் பக்கமுள்ள மதுராந்தகம் முதலிய ஊர்களருகே ஏரிகள் இருந்தாலும் இப்படிப்பட்ட மரச் சூழ்நிலை கிடையாது. பறவைகளும் தம் குஞ்சுகளுக்கு இரை தேடுவதைக் கடமையாகவே கருதுகின்றன. மீன்கள், தவளைக் குஞ்சுகள் நத்தைகள் போன்றவையே இவற்றின் நல்ல உணவு; இவை வேடன்தாங்கலைச் சுற்றியுள்ள மருத நிலச் சதுப்பு நிலங்களில் ஏராளமாகக் கிடைக்கும். இதனாலும் வேடன்தாங்கலைப் பறவைகள் விரும்புகின்றன என்றும் சொல்லலாம்.''

என்னய்யா, பத்திரிகையிலே போட போட்டோ எடுத்திட்டு வரச்சொன்னா தலையில்லாமே உடம்பை மட்டும் எடுத்திட்டு வந்திருக்கீங்க?

நீங்கதானே சார் சொன்னீங்க! தலைகளா போட்டு அலுத்துப் போச்சு! புதுமாதிரியா எடுத்துட்டுவான்னு!

''அப்பா! அப்பா! என்னென்ன பறவைகள் இங்கிருக்கின்றன என்று நீ சொல்லவில்லையே! ஏதோ நீர்ப்பறவை என்று சொன்னாய்; நிலப் பறவை என்று சொன்னாய்.''

'' இந்த வேடன்தாங்கலில் நத்தைக்குத்தி, நாரை, கங்கணம், நீர்க்காக்கை, நரையான், வெண் கொக்கு, பாம்புத் தாரா, சிறிய வெண் கொக்கு, உண்ணிக் கொக்குகள், துடுப்பு மூக்கு நாரை, இளம் வக்கா, மடையான் முதலிய பல் வகைப் பறவையினங்களைப் பார்க்கலாம்.''

'' என்னப்பா! நாரை, கீரை என்று என்னவெல்லாமோ சொல்கிறாயே! அவை எப்படி இருக்கும்? சொல்லமாட்டாயா?''

'' சாமிநாதா! நாமே நேரிலே பார்க்கப் போகிறோமே, அந்தப் பறவைகளின் வடிவை, வண்ணத்தை, அழகை எல்லாம் எப்படிச் சொல்ல முடியும்? ஆனாலும் சொல்லுகிறேன், பாம்புத் தாரா என்று ஒரு பறவை; இது பெரிய நீர்க்காக்கை அளவு இருக்கும்; அதற்கு நீண்ட கழுத்து உண்டு; அதன் அடிப்பாகம் வளைந்திருக்கும். சற்று நீண்ட வாலும் உண்டு. நீருள் மூழ்கி நீந்தி இரை பிடிப்பதிலே இது திறமை வாய்ந்தது. வெண் கொக்கு மற்றொரு பறவையினம்; இதன் நிறம் தூய வெள்ளை, இதன் நிறத்தையும் அளவையும் கொண்டே இதனைத் தூரத்திலிருந்தே இனம் கண்டுகொள்ள முடியும்.''

''இந்தப் பறவைகள் எப்போது இந்த வேடன்தாங்கலுக்கு வரும்; அதை மட்டும் சொல்லேன்.''

'' ஆவணி மாதத்தில் நல்ல மழையிருந்தால் வேடன் தாங்கலில் புரட்டாசிக்கு முன்பே பறவைகள் வந்து சேரும்; புரட்டாசியில் பெரு மழை பெய்யாமல் லேசாக மழை தூறிய காலங்களில் சில பறவைகளே இங்குக் காணப்படும்; ஆனால் வேடன் தாங்கலில் ஐப்பசி கார்த்திகை மாதங்களில்தான் பறவைகள் கூடுகள் கட்டுகின்றன. சில கூடுகளில் கார்த்திகையிலே குஞ்சுகள் இருக்கும்; சித்திரை மாதப்பிறப்பின் போதும் சில பறவைகளைக் காணலாம். நம் நாட்டில் மழைக்காலமாகவும், குளிர் மிகுந்த வட நாடுகளில் வெண்பனிக்காலமாகவும் இருக்கும்போது குள்ளவாத்து, உள்ளான் வகைகள், சில வகை வாலாட்டிக் குருவிகள், வேறு சில பறவைகளும் தூர தேசங்களிலிருந்து புறப்பட்டுத் தெற்கேயுள்ள இங்கே வந்து சேரும்.''

''அப்பா, வேடன் தாங்கல் வேடன் தாங்கல்' என்று சொன்னாயே; எப்படி அப்பா அந்தப் பெயர் வந்தது?''

''வேடன் என்ற பறவை முதலில் இங்கே கூடு கட்டித் தங்கி வந்ததால் 'வேடன் தாங்கல்' என்ற பெயர் வந்தது என்று சிலர் சொல்கிறார்கள். வேடர்களிடமிருந்து காப்பாற்றிப் பறவைகளுக்கு அடைக்கலம் கொடுத்துத் தாங்குவதால் இப்பெயர் வந்ததாகவும் சொல்வார்கள். ஆனால் 'தாங்கல்' என்ற சொல் மருத நிலத்துக் குளத்தையோ, தடாகத்தையோ குறிப்பதாக நினைவு. ஆனால் வேடர்களோ மற்றவர்களோ பறவைகள் சுடாமல் தாங்கும் இடம் இது என்பதை வரலாற்றுச்சான்றுகள் நிரூபிக்கின்றன. சரி சரி நேரமாச்சு! நாளைக்குப் பேசிக்குவோம்.''

தமிழக அரசின் சாதனை பாரீர்!
சட்டத்தின் துணையோடு பட்டா பெற்றோர் தொகை.
[illegible] வழங்கித் [illegible] பல உண்டு!
நிலையான நலம்பெற்றிட [illegible]

சேலம்

மாவட்டத்தில் மட்டும்....

அன்று 7 ஆண்டுகளில் (1960 முதல் 1967 மார்ச் வரை) ஏழையர்க்கு வழங்கப்பட்ட நிலம் 21,818 ஏக்கர்

இன்று கடந்த 3 ஆண்டுகளில் (1967 முதல் 1970 வரை) ஏழை உழவர்க்கு வழங்கப்பட்ட நிலம் 22,374 ஏக்கர்

அன்று 7 ஆண்டுகளில் நிலப்பட்டா பெற்றோர் [illegible] பேர்

இன்று 3 ஆண்டுகளில் நிலப்பட்டா பெற்றோர் [illegible] பேர்

அன்று 7 ஆண்டுகளில் வீட்டுமனைப் பட்டா பெற்றோர் 1580 பேர்

இன்று 3 ஆண்டுகளில் வீட்டுமனைப் பட்டா பெற்றோர் 5263 பேர்

வட ஆர்க்காடு

மாவட்டத்தில் மட்டும்....

அன்று 7 ஆண்டுகளில் (1960 முதல் 1967 மார்ச் வரை) ஏழையர்க்கு வழங்கப்பட்ட நிலம் 16,037 ஏக்கர்

இன்று கடந்த 3 ஆண்டுகளில் (1967 முதல் 1970 வரை) ஏழை உழவர்க்கு வழங்கப்பட்ட நிலம் 34,884 ஏக்கர்

அன்று 7 ஆண்டுகளில் நிலப்பட்டா பெற்றோர் 6566 பேர்

இன்று 3 ஆண்டுகளில் நிலப் பட்டா பெற்றோர் 19,164 பேர்

அன்று 7 ஆண்டுகளில் வீட்டு மனைப் பட்டா பெற்றோர் 4517 பேர்

இன்று 3 ஆண்டுகளில் வீட்டு மனைப் பட்டா பெற்றோர் 14,330 பேர்

தென் ஆர்க்காடு

மாவட்டத்தில் மட்டும்...

அன்று 7 ஆண்டுகளில் நிலப்பட்டா பெற்றோர் 11294 பேர்

இன்று 3 ஆண்டுகளில் நிலப்பட்டா பெற்றோர் 13687 பேர்

அன்று 7 ஆண்டுகளில் வீட்டுமனைப் பட்டா பெற்றோர் 2662 பேர்

இன்று 3 ஆண்டுகளில் வீட்டுமனைப் பட்டா பெற்றோர் 30241 பேர்

ராமநாதபுரம்

மாவட்டத்தில் மட்டும்....

அன்று 7 ஆண்டுகளில் (1960 முதல் 1967 மார்ச் வரை) ஏழையர்க்கு வழங்கப்பட்ட நிலம் 5115 ஏக்கர்

இன்று கடந்த 3 ஆண்டுகளில் (1967 முதல் 1970 வரை) ஏழை உழவர்க்கு வழங்கப்பட்ட நிலம் 41384 ஏக்கர்

அன்று 7 ஆண்டுகளில் நிலப்பட்டா பெற்றோர் 2157 பேர்

இன்று 3 ஆண்டுகளில் நிலப்பட்டா பெற்றோர் 15,220 பேர்

அன்று 7 ஆண்டுகளில் வீட்டுமனைப் பட்டா பெற்றோர் 702 பேர்

இன்று 3 ஆண்டுகளில் வீட்டுமனைப் பட்டா பெற்றோர் 1793 பேர்

திருச்சி

மாவட்டத்தில் மட்டும்...

அன்று 7 ஆண்டுகளில் (1960 முதல் 1967 மார்ச் வரை) ஏழையர்க்கு வழங்கப்பட்ட நிலம் 20,504 ஏக்கர்

இன்று கடந்த 3 ஆண்டுகளில் (1967 முதல் 1970 வரை) ஏழை உழவர்க்கு வழங்கப்பட்ட நிலம் 29,166 ஏக்கர்

அன்று 7 ஆண்டுகளில் நிலப்பட்டா பெற்றோர் [illegible] பேர்

இன்று 3 ஆண்டுகளில் நிலப்பட்டா பெற்றோர் [illegible] பேர்

அன்று 7 ஆண்டுகளில் வீட்டுமனைப் பட்டா பெற்றோர் [illegible] பேர்

இன்று 3 ஆண்டுகளில் வீட்டுமனைப் பட்டா பெற்றோர் 20,117 பேர்

கோவை

மாவட்டத்தில் மட்டும்....

அன்று 7 ஆண்டுகளில் (1960 முதல் 1967 மார்ச் வரை) ஏழையர்க்கு வழங்கப்பட்ட நிலம் 9981 ஏக்கர்

இன்று கடந்த 3 ஆண்டுகளில் (1967 முதல் 1970 வரை) ஏழை உழவர்க்கு வழங்கப்பட்ட நிலம் 14,105 ஏக்கர்

அன்று 7 ஆண்டுகளில் நிலப்பட்டா பெற்றோர் [illegible] பேர்

இன்று 3 ஆண்டுகளில் நிலப்பட்டா பெற்றோர் [illegible] பேர்

அன்று 7 ஆண்டுகளில் வீட்டுமனைப் பட்டா பெற்றோர் 8578 பேர்

இன்று 3 ஆண்டுகளில் வீட்டுமனைப் பட்டா பெற்றோர் 14,309 பேர்

குறுகிய காலத்தில்
விரைவாக வழங்கிய
நிலப்பட்டா விவரங்கள்-
மாவட்டந் தோறும்
சுவரொட்டி
வாயிலாக
விளக்கியுள்ளது
தமிழ்நாடு அரசு.

செங்கல்பட்டு

மாவட்டத்தில் மட்டும்....

அன்று 7 ஆண்டுகளில் (1960 முதல் 1967 மார்ச் முடிய) ஏழையர்க்கு வழங்கப்பட்ட நிலம்
1989 ஏக்கர்

இன்று கடந்த 3 ஆண்டுகளில் (1967 முதல் 1970 வரை) ஏழை உழவர்க்கு வழங்கப்பட்ட நிலம்
18,259 ஏக்கர்

அன்று 7 ஆண்டுகளில் நிலப்பட்டா பெற்றோர் 894 பேர்

இன்று 3 ஆண்டுகளில் நிலப்பட்டா பெற்றோர் 7646 பேர்

அன்று 7 ஆண்டுகளில் வீட்டு மனைப்பட்டா பெற்றோர்
1280 பேர்

இன்று 3 ஆண்டுகளில் வீட்டுமனைப் பட்டா பெற்றோர்
13,621 பேர்

திருநெல்வேலி

மாவட்டத்தில் மட்டும்....

அன்று 7 ஆண்டுகளில் (1960 முதல் 1967 மார்ச் முடிய) ஏழையர்க்கு வழங்கப்பட்ட நிலம்
1270 ஏக்கர்

இன்று 3 ஆண்டுகளில் (1967 முதல் 1970 வரை) ஏழை உழவர்க்கு வழங்கப்பட்ட நிலம்
10132 ஏக்கர்

அன்று 7 ஆண்டுகளில் நிலப்பட்டா பெற்றோர்
462 பேர்

இன்று 3 ஆண்டுகளில் நிலப்பட்டா பெற்றோர்
3709 பேர்

மதுரை

மாவட்டத்தில் மட்டும்....

அன்று 7 ஆண்டுகளில் (1960 முதல் 1967 மார்ச் முடிய) ஏழையர்க்கு வழங்கப்பட்ட நிலம்
12567 ஏக்கர்

இன்று 3 ஆண்டுகளில் (1967 முதல் 1970 வரை) ஏழை உழவர்க்கு வழங்கப்பட்ட நிலம்
18855 ஏக்கர்

அன்று 7 ஆண்டுகளில் நிலப்பட்டா பெற்றோர்
4578 பேர்

இன்று 3 ஆண்டுகளில் நிலப்பட்டா பெற்றோர்
7527 பேர்

சிட்டுக் குருவிகள் சிரிக்கின்றன

கீச்......கீச்......கீச்......

மெல்லோசைகளின் சிட்டுச் சிலிர்ப்பு காற்றலைகளிலே மிதந்து வருகிறது.

அதைக் கேட்டதும், சுமை இறங்குவதுபோல்—சூடு தணிவதுபோல்—ஏதோ ஓர் இனம் விளங்காத ஆறுதல்! உடையாமல் வலிகொடுத்துப் பழுத்துக்கொண்டிருக்கும் கட்டியை ஒரு பிஞ்சுவிரல் சுற்றிச் சுற்றி வருடிக் கொடுப்பது போன்ற ஓர் இதமான உணர்வு!

எத்தனை நாழிகைதான் படுக்கையிலேயே வெடிக்கும் நெஞ்சுடன் புழுவாய் நெளிவது?

நிர்மலா கட்டிலைவிட்டுக் கீழே இறங்குகிறாள்; கலைந்து சிதறிய கருங்குழலை அள்ளிச் செருகியவாறே மெள்ள நடக்கிறாள்; சன்னல் அருகே செல்கிறாள்; அதன் கம்பிகளைப் பற்றி நின்றவாறே தன் விழி வலையை வெளியே விசிறுகிறாள்.

அவளது கைக்கு எட்டக்கூடிய தூரத்தில் வேப்பந் தளிர்கள் கண்ணுக்குக் குளுமை தந்து பொன்னூஞ்சல் ஆடுகின்றன; உழைத்துக் களைத்து ஓய்ந்துபோன பாட்டாளிப் பகலவனின் மஞ்சள் ஒளியில் நீராடித் தங்கத் தகடுகளாகவே அவை பளபளக்கின்றன.

சற்று அப்பால், அதே வேப்பமரக் கிளையில் இரண்டு சிட்டுக்குருவிகள் எதையுமே இலட்சியம் செய்யாத இளங் காதலர்களாகச் சிரிக்கின்றன; சிணுங்குகின்றன; குதிக்கின்றன; கிசுகிசுக்கின்றன. அவற்றின் இல்லற நுழைவுக்கு "நலங்கு" பாடுவதுபோல, எங்கிருந்தோ ஒரு திரைப்படப் பாட்டு மெள்ள இழைந்து வருகிறது.

'சிட்டுக் குருவி முத்தங்
கொடுத்துச்
சேர்ந்திடக் கண்டேனே !..'

—அந்தப் பாட்டும், இந்தக் குருவிகளும்....

அவற்றின் கும்மாளத்தைக்—குதியாட்டத்தைப் பார்க்கப் பார்க்க, நிர்மலாவின் நெஞ்சு விம்முகிறது; நெடுமூச்செறிகிறது.

ஒருவேளை பொறாமையோ? இல்லை, புழுக்கமோ?

இருக்கலாம்.

இன்று காலைவரை அவளும் இப்படிக் கும்மாளமிட்டுக் குதியாட்டம் போட்டவள் தானே! ஆனால் இனி..?

அ.மறைமலையான்

அதை நினைத்தாலே நெஞ்சு 'பகீர்' என்கிறது!

அவளது மேலாடை தோளை விட்டு நழுவுகிறது.

அவளது தன்னம்பிக்கை—தைரியம்—கனவுகள் — திட்டங்கள் எல்லாமே இதயத்தை விட்டும் நழுவுமோ?

அவள் யாரையும் கெடுத்ததும் இல்லை; கெடுக்க வேண்டும் என்று நினைத்ததும் இல்லையே! 'தான் கெட்டாலும் மற்றவர்களைக் கெடுக்கக் கூடாது, தான் ஏமாந்தாலும் மற்றவர்களை ஏமாற்றக் கூடாது'—என்பதையே இலட்சியமாக—இரும்புப் பிடியாகப் பற்றி நிற்பவள் தானே! அவளுக்குப் போய் இப்படி ஒரு சோதனையா? அவளது எண்ணங்கள்—ஏற்பாடுகளுக்கு இப்படி ஒரு அவலம்—திருப்பம்—அழுகை—அழிவா?

அவளைப்பற்றி அந்தக் குருவிகளுக்கு என்ன கவலை? அவை 'கீச் கீச்' என்று சிரிக்கின்றன; சிரித்துக்கொண்டே இருக்கின்றன.

அந்தச் சிரிப்பொலியையும் மீறி, அவளது காதற் கனவுகள் அவளைப் பார்த்துக் கேலியாகச் சிரிக்கின்றனவோ ?

அந்தத் தங்கும் விடுதியின் முதல் மாடியிலுள்ள ஓர் அறையில் நெஞ்சொடிந்து நிற்கும்

நிர்மலாவின் நீள விழிகள், இப்போது சிட்டுக் குருவிகளின் மாளிகையான வேப்பமரத்தோடு திரும்பவில்லை; அதோ, அந்த அசோக மரங்கள், அவற்றுக்கு அடியில் பூஞ்செடிகள் புடைசூழ, தாமரைப் பூக்கள் மலர்ந்து சிரிக்கும் சிறிய தடாகம், விடுதியின் சுற்றுச் சுவர் எல்லாவற்றையும் தாண்டி, நெடுஞ்சாலையை நோக்கிச் செல்கின்றன.

அங்கே, தன் அங்கப் பூரிப்பையெல்லாம், மற்றவர்களின் பார்வைக்குப் பொதுவுடைமை ஆக்கிப் பகட்டாக உடையணிந்த ஓர் இனம் பெண்ணும் ஆடவனும் ஒருவரையொருவர் இடித்துக் கொண்டு சிரிப்பலைகளை எழுப்பிச் செல்வது தெரிகிறது.

ஏன், இவளும்கூடத்தான், தன் மனத்துக்கினிய மணவாளனின் கையைக் கோர்த்துக் கொண்டு, தோளோடு தோள் உராய்ந்த வண்ணம் அந்தச் சாலையிலே எத்தனையோ தடவைகள் உற்சாகமாக நடந்திருக்கிறாள்.

ஆனால் இனி... ?

அதற்குமேல் அவளால் சன்னலருகே நிற்க முடியவில்லை. கட்டிலுக்குத் திரும்பிவந்து ' பொத் ' தென்று விழுகிறாள். அழுகையோ, ஆடிப் பதினெட்டாம் பெருக்குப் போலப் பொங்கிப் பொங்கிவருகிறது; தலையணையையும் தெப்பம் தெப்பமாக நனைக்கிறது. தன்னை அடித்துச் செல்லும் துயர வெள்ளத்திற்கு அணைபோடத் தெரியாமல் — அதிலிருந்து கரையேறவும் முடியாமல் நிர்மலா துடியாய்த் துடிக்கிறாள். குப்புற விழுந்து கிடக்கும் அவளது முதுகுப்புறம் குலுங்கிக் குலுங்கி அதிர்கிறது.

முப்பது வயதுவரை தன் இதயக் கூட்டை, இடுகாடாக—இடிவிழுந்த பனையாக—வெறுமைப் படுத்தி வைத்திருந்தவள் தான் அவள் ; உணர்ச்சிகளின் கழுத்தை நெரித்துவிட்டு, உயிரில்லாத சிலையாக உலா வந்தவள் தான் அவள்.

அப்படியே கடைசிவரை தன் காலத்தை ஓட்டியிருக்கக் கூடாதா? தன்வைராக்கியத்தைக் காப்பாற்றியிருக்கக் கூடாதா ? அந்த மணவாளனைச் சந்திக்காமலே தவிர்த்திருக்கக் கூடாதா ?

ஆனால் மணவாளனைப் பொறுத்தவரை நிர்மலா அவசரப்பட்டு ஆற்றில் இறங்கி விட்டாள் என்று தூற்றவே முடியாது. பத்து ஆண்டுகளுக்கு மேலாகவே அவனைத் தெரிந்திருந்தும், கடந்த பத்து வாரங்களாகத்தான் அவனோடு நெருங்கிப் பழகுகிறாள்; அவனைத்தன் நெஞ்சக் கோவிலின் நிலையான தெய்வமாகவும் ஏற்றிருக்கிறாள்.

அதற்குள் . . . ?

அழுகை மீண்டும் மீண்டும் பொங்கிப் பீரிடுகிறது.

இவளுடைய துயரத்தைப்பற்றியெல்லாம் கவலையே படாமல் அதோ அந்தச் சிட்டுக் குருவிகள் சிரிக்கின்றன ; ' தேனிலவில் ' திளைக்கின்றன..!

அதேசமயம், பழைய நிகழ்ச்சிகள் சில, படத் துணுக்குகளாக நிர்மலாவின் மனத் திரையிலே நிழலாடுகின்றன.

பெண்கள் மட்டுமே பயிலக்கூடிய அந்த ஆசிரியைப் பள்ளிக் கட்டடத்திலே தான் அடி வைத்த பொழுது, அங்கே ஒரு பாரதியார் தன்னை வரவேற்கக் கூடும் என்று நிர்மலா நினைக்கவே இல்லை ! தலையிலே முண்டாசும், முகத்திலே (பெரிதாக இல்லாவிட்டாலும்) மீசையும், எதையுமே ஊடுருவித் துழாவக் கூடிய கரிய பெரிய விழிகளும், கம்பீரமான முறுவலுமாக ஓரளவுக்குப் பாரதியாரின் சாயலையே உரித்து வைத்துக் கொண்டு நின்றிருந்தான் மணவாளன். அவன்தான் முதன் முதலில் அவளைத் தலைமை ஆசிரியையிடம் அழைத்துச் சென்று வழிகாட்டியவன். பிற்காலத்தில் தன் வாழ்க்கைக்கே வழிகாட்டியாவான் என்று அப்போதெல்லாம் அவள் எண்ணியதே இல்லை!

' என்ன இருந்தாலும் அவன் சாதாரணப் பணியாள், (பியூன்) தானே?'—என்கிற அலட்சியமும் அவள் மனத்தினுள் கரும் புள்ளியாய்ப் பதிந்திருந்ததையும் மறைப்பதற்கில்லை. ஆனால் அவளுடன் ஒன்றாகப் பயின்ற பல பெண்கள், அவனுடைய பார்வைக்கும் பேச்சுக்கும் கிறங்கித் தவிப்பதையும் அவள் அறிவாள் ; அவன் வாயைப் பிடுங்கி வயிற்றெரிச்சலைக் கொட்டிக்கேலி செய்து அவனைத் திணற அடித்தவர்களும் உண்டு.

1969-ஆம் ஆண்டு சனவரி 6-ஆம் நாள். அண்ணா மறைவதற்கு ஒரு திங்களுக்கு முன்னால் ; தமிழகத்தின் மூலை முடுக்குகளிலெல்லாம், பட்டி தொட்டிகளில் எல்லாம் சிங்கநாதம் செய்து மக்களைத் தட்டி எழுப்பிய—அத் தானைத் தலைவன் நோய்வாய்ப்பட்டு மெலிந்து போய்ப், படுத்த படுக்கையாக இருக்கிறார். அண்ணாவைப் பார்க்க, அவர் இல்லமான '' தாயகத் '' தினுள் நுழைகிறார் திரு. நிஜலிங்கப்பா. அண்ணாவைப் பார்த்ததும் அவரது உள்ளம் நெகிழ்ந்து விட்டது. "போதுமான ஓய்வு எடுக்காமல் விட்டு விட்டீர்களே ! " என்று அண்ணாவிடம் வருத்தப்பட்டுக் கொண்டார். ''கட்சி அரசியல் இருக்கட்டும். அதற்கெல்லாம் அப்பாற்பட்ட, இந்த நாட்டுக்கு, நாட்டின் எதிர்கால நல்வாழ்வுக்கு, நீங்கள் கிட்டரிய தலைவர். . . . '' என்றார்.

அவர் அண்ணாவைப் பார்த்துவிட்டுப் புறப்படுவதற்கு முன்னால் அருகில் நின்று கொண்டிருந்த திரு. கஜேந்திரனிடம் " அண்ணா நல்ல உள்ளம் படைத்தவர். பார்வையாளர்கள் வந்து அவரைத் தொந்தரவு செய்யாமல் பார்த்துக் கொள்ளுங்கள். அண்ணா மிகவும் அருமையான தலைவர். அவர் இந்த நாட்டின் விலைமதிக்க முடியாத சொத்து" என்று உள்ளம் நெகிழக் கூறிவிட்டுச் சென்றார்.

பொதுவாக எந்தப் பெண்ணையும், அவளுடைய பெயருக்குப் பின்னால் ' அம்மா ' என்பதையும் சேர்த்துச் 'சரசம்மா, சரளம்மா, அனுசூயாம்மா, அகிலாம்மா' என்று மரியாதையாக அழைப்பதுதான் மணவாளனுக்கு வழக்கம். அந்த மரியாதையின் அருமையை அறியாத அந்தப் பெண்களோ அவனை எப்படி மடக்கினார்கள் தெரியுமா ?

'' இந்தா மணவாள்! எங்களைப் பார்த்தா 'அம்மா' மாதிரி தான் உனக்குத் தோணுதா ?''—என்று கேட்டாள் ஒருத்தி.

'' ஏதோ ஒரு மரியாதைக்கு அழைச்சா நீங்க என்னம்மா இப்படிக் கோவிச்சுக்குறீங்க ? ஆனா,உங்களைப் பார்த்தா எனக்கு உண்மையிலேயே எப்படித் தோணுது தெரியுமா ?"—என்று நமுட்டுச் சிரிப்புடன் வினயமாக வினவினான் மணவாளன்.

''ஏன், எப்படித் தோணுகிறோமாம் ?''—ஏழெட்டுப்பேர்களின் கூட்டுக் குரல்.

'' அசல் 'பாட்டி' மாதிரி ?''

''ஐயோ ! உனக்கு அவ்வளவு கிண்டலா ? அப்போ நாங்களும் உன்னை இனிமே தாத்தான்னு தான் அழைப்போம். ''

பெண்கள் ஒன்றை நினைத்துவிட்டால் அடுத்த கணமே அதை அவர்கள் செயல்படுத்திவிட மாட்டார்களா ?

'' என்ன மணவாள் தாத்தா?"

" ஏன் சரசுப்பாட்டி ? என்ன சக்குபாய்—பாட்டி? . .''

ஒரே சிரிப்பு வெடிதான். அதற்குப் பிறகு ' தாத்தா—பாட்டி ' வார்த்தைகள் அங்கே மிகச்சரளமாகத் தவழலாயின.

அண்ணா முதலமைச்சராக இருந்த நேரம். குறிப்பிட்ட தினத்தில் என்னென்ன நிகழ்ச்சிகள் உள்ளன என்பது பற்றி முன் கூட்டியே அவர் கேட்டுத் தெரிந்து கொள்ள மாட்டார். அலுவலக வேலை முடிந்து, மாலையில் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளக் காரில் செல்லும்பொழுதுதான் அண்ணாவிடம் சொல்வேன். '' அண்ணா எழும்பூர் புத்தர் சொசைடியில் முதல் நிகழ்ச்சி... இன்னார் இன்னார் பேசுகிறார்கள்....'' என்று நான் சொல்வேன். உடனே அண்ணா கேட்டுக் கொள்வார். நுங்கம்பாக்கம் அவின்யூ ரோடிலிருந்து காரில் எழும்பூர் வருவதற்குள், அந்தச் சில நிமிடங்களுக்குள், அந்த நிகழ்ச்சிக்குத் தயாராகி விடுவார் அண்ணா! புத்தரைப் பற்றி, அவர் கொள்கைகள் பற்றி அருமையான சொற்பொழிவினை ஆற்றி விடுவார். அந்த நிகழ்ச்சி முடிந்து, அடுத்த நிகழ்ச்சி பல்கலைக் கழக நூற்றாண்டு மண்டபத்தில் ! காரில் போகும் பொழுதுதான், அந்தச் சில நிமிடங்களுக்குள் அதற்கான சொற்பொழிவு தயாராகி விடும் ! எந்த நிகழ்ச்சிக்கும் முன்கூட்டியே சொற்பொழிவினைத் தயாரித்துக்கொள்வதில்லை அவர். ஒருசில முக்கிய நிகழ்ச்சிகள் தவிர, அவர் கலந்து கொண்ட கூட்டங்கள் அனைத்திலும் அண்ணா முன்னேற்பாடின்றி, அங்கு வந்து மனத்தில் பட்டதைத்தான் பேசினார் !

தகவல்—கஜேந்திரன்.

இதில் வேடிக்கையென்னவென்றால்; மற்ற பெண்களெல்லாம் அவனை முற்றுகையிட்டுக் கேலியும் கிண்டலுமாகச் சூழ்ந்த நிலையிலும், எந்த ஒரு சந்தர்ப்பத்திலும், மணவாளனும் இவளைப் ' பாட்டி ' என்று கூப்பிட்டதும் இல்லை ; இவளும் அவனைத் 'தாத்தா'—என்று மடக்கியதும் இல்லை. நிர்மலா ஒதுங்கியேதான்—ஒட்டாமலேதான்—நின்றாள்.

இன்னொரு சமயம். கீதா என்பவள் கேட்கிறாள் :

'' நாங்கள்தான் இங்கே எல்லாரும் பெண்களாக இருக்கிறோமே ! இங்கே ஒரு பெண்ணைப் பியூனாகப் போடாமல் உன்னை ஏன் போட்டிருக்காங்க? இப்படித் தனியா வந்து மாட்டிக்கிட்டது உனக்குச் சங்கடமா இல்லே?''

'' நீங்க கேட்கிற கேள்வியைத்தான் நானும் அதிகாரிங்ககிட்டே கேட்கிறேன். ஆனா, அவங்க எங்கே நான் சொல்றதைக் காதிலே வாங்கிக்கிறாங்க ?''

'' ஒருவேளை போன சென்மத்திலே பெண்வாடையே இல்லாமல், 'டார்சான்' மாதிரி காட்டிலே கிடந்திருக்கலாம் ; அந்த ஏக்கந் தீர வேண்டாமா ? அதற்காகவும் இப்படிக் கொண்டு வந்து போட்டிருக்கலாம்''—என்று, ' பொடி ' வைத்துப் பேசுகிறாள் புவனா.

'' ஊம் . . அப்படி இருந்திருக்காது. போன பிறவியிலே நான் பெண்ணாகவே பிறந்திருப்பேன்; பல ஆண்களைப் பாடாய்ப் படுத்தியிருப்பேன் ; ஏங்க விட்டிருப்பேன் ; ஏமாத்தியும் இருப்பேன்; அலட்சியம் செய்து அவமானமும் படுத்தியிருப்பேன்; அதுக்கெல்லாம் வட்டியும் முதலுமாகச் சேர்த்துதான் 'முழியோ முழியென்று முழிடா'ன்னு இங்கே கொண்டுவந்து போட்டிருக்காங்க நீங்களும் கொஞ்சம் ஆண்கள் கிட்டே இரக்கத்தோடேயே நடந்துக்கங்க ;.... இல்லே,

அடுத்த பிறவியிலே நீங்க கண்டிப்பா ஆணாப் பிறந்து அவதிதான் படுவீங்க ?''

சாபமே கொடுக்கிறான் மணவாளன் அதனைக் கேட்டுப் பெண் சிட்டுக்கள் அத்தனையும் பெருத்த குரலில் சிரிக்கின்றன ?

ஆண்டு விழா வருகிறது.

இப்போதுதான் ‘கெரோ’— என்பது புதிதாக அரசியலில் அடிபடுவதாக நினைக்க வேண்டாம். அந்தக் காலத்திலேயே மணவாளனிடம் அதைக் காட்டத் தொடங்கி விட்டார்கள் பெண்கள் ! எதற்குத் தெரியுமா ? மாறுவேடப் போட்டியில் அவன் பெண்ணாக வரவேண்டுமென்று?

வேறு வழியில்லை. தழையத் தழையப் புடைவை உடுத்தி, வயிறுதெரிய இடையைநெளித்து விழியைச் சுழற்றி, மோவாயை இடித்து அவன் நடந்துவந்த நளினம் இருக்கிறதே, அதற்கு எந்தப் பெண்தான் ஈடாக முடியும்? எல்லாருமே கையொலி எழுப்பி அவன் அழகைப் பருகும் இனிய வேளையில் இந்த எஸ்தர் குட்டி சும்மா இருக்கக் கூடாதா?

'' அய்யோ ! மீசை ! மீசை !''
—என்று கத்தியே விட்டாள்.

உடனே மணவாளன் எப்படிச் சமாளித்தான் தெரியுமா ?

'' நானும் உங்க மாதிரி மஞ்சள் பூசிக் குளிக்க மறந்திட்டேன் ; அதனாலேதான் எனக்கு இந்த கதி !''

—என்று சொன்னானே பார்க்கலாம் ! அந்தப் பள்ளிக்கட்டடமே இடிந்துவிடும் போல் அதிர்ந்தது சிரிப்பின் எதிரொலி !

:: :: ::

ஆண்டுகள் பல ஆவியாகப் பறக்கின்றன.

நிர்மலா இப்போது வெறும் ‘ சகண்டரிகிரேட்’ ஆசிரியை அல்லள்; பி. ஏ., பி. டி., பட்டம் பெற்ற உயர்நிலைப் பள்ளி ஆசிரியை. கல்வித் துறையில் நுழைந்து விட்டால் தான் படித்துப் படித்து முன்னேறிக் கொண்டே போகலாமே !

ஒருநாள் தான் கணக்குவைத்திருக்கும் வங்கியில் (பேங்கில்) பணம் போடச் செல்கிறாள் நிர்மலா, அங்கே பொருளாளருக்கு உரிய இடத்தில் அமர்ந்திருக்கும் புதிய மனிதனைக் கண்டதும் அவளுக்கு ஒரே வியப்பாக இருக்கிறது.

அவனிடமிருந்து பணத்தை வாங்கி எண்ணியவாறே,

'' என்னைத் தெரிகிறதா ? '' என்று மெல்லக் கேட்கிறான் மணவாளன்.

முன்னைவிடச் சற்றுப் பருத்த மாதிரி, கொழுகொழுப்பாக புதுப் பொலிவோடு மாறி இருந்தாலும், அவனுடைய அந்தப் பெரிய விழிகள், இளஞ் சிரிப்பு, வீணையின் நாதம் போன்ற கம்பீரக் குரல் இவற்றை அவளால் மறக்கமுடியுமா ?

'' ஊம்..........''

—தனக்கே உரிய அடக்கத்துடன் ஆனால் உற்சாகத்துடன் தலையை ஆட்டுகிறாள் அவள்.

‘இந்த அளவுக்கு அவனால் எப்படி உயர முடிந்தது ? ’

—என்று நிர்மலாவின் நெஞ்சினுள் ஓடும் நினைவோட்டத்தை ஆருடமாய் அறிந்தவனைப்போலத் தன்னைப் பற்றித் தானே முந்திக்கொண்டு சொல்கிறான் மணவாளன்.


கண்ணே!
மணியே!!
டார்லிங்!!!
அப்பா..வ்...
சீ! நாயே!
தூரப் போ!!

'' அங்கே இருந்தபோதே மெட்ரிக் எழுதியிருந்தேன். அப்புறம் டெல்லிப் பல்கலைக் கழகத்தில் அஞ்சல் மூலமாகவே பி.ஏ., பட்டமும் பெற்று விட்டேன்..........நாட்கள்தான் ரொம்ப வேகமா ஓடுதே !''

—அவன் குறிப்பிடும் கால விரைவுக்குச் சாட்சியம் பகர்வது போல அவனது காதோரத்தில் இளநரையும் தெரிகிறது.

அதற்குப் பிறகு...... ?

அந்தப் பேங்கிலே பணத்தை எடுக்கவும் பணத்தைக் கொடுக்கவும்தான் நிர்மலா சென்றாளா? இல்லை ; மனத்தை எடுக்கவும், மனத்தைக் கொடுக்கவுமே சென்றாள் !

இப்போது இருவரும் முன்போல ஒரே ஊரில் அலுவல் பார்க்கவில்லை. இவன் ஒரு நகரத்தில், அவன் ஒரு நகரத்தில். இடையிலுள்ள ஒரு பெரிய நகரத்தில் விடுமுறை நாட்களில் இருவரும் வந்து சந்திக்கிறார்கள்; சங்கமம் ஆகிறார்கள். விரைவிலேயே திருமணம் செய்யத் திட்டமிட்டு இருக்கிறார்கள். எங்கே, எப்படி என்பதெல்லாம் இன்னும் முடிவாகவில்லை. அதைப்பற்றி ஒரு தீர்மானத்திற்கு வந்துவிட வேண்டும் என்கிற எண்ணத்தோடுதான் இன்று காலை தாங்கள் வழக்கமாகத் தங்குகிற அந்த விடுதிக்கு வந்து சேர்ந்தாள் நிர்மலா.

அதற்குள் ;

மணவாளன் வெளியே போய் விட்ட சமயத்தில் ஒரு மூன்றாவது மனிதன் அறையிலே புகுந்து அவளுடைய மூளையையே சிதற அடித்து விட்டானே ! தென்றல் தவழ வேண்டிய வாழ்க்கையில் புயலைக் கிளப்பி விட்டுப் போய் விட்டானே !

நினைக்க, நினைக்க, மீண்டும் அழுகை பொங்குகிறது.

அழுது தீர்த்து விட்டால் இதயத்தை அழுத்திய இரும்புச் சுமை சற்று இறங்கி விட்ட தெளிவு ஏற்படுமல்லவா ? அந்த வலி குறைந்த நிலையில், நிர்மலாவின் சஞ்சல நெஞ்சில் ஓர் உறுதிப்பாடு மெள்ளத் தலையெடுக்கிறது.

'' ....அவர் வந்ததும் உண்மையைச் சொல்லிவிட வேண்டியதுதான் ; என்னுடைய தன்னல இன்பத்திற்காக அவரை ஏன் நான் பாழடிக்க வேண்டும் ? நான் சொல்லப் போவதைக் கேட்டு, அவர் இடிந்துதான் போவார். அதைப் பற்றியெல்லாம் நான் அலட்டிக் கொள்ளக் கூடாது ; என்னை வாழ வைக்க வந்தவர்க்கு நானே எமனாக மாறலாமா ? ''

விட்டு விட்டுப் பெய்யும் மழையைப் போல அழுகை மீண்டும் மீண்டும் பீறிடுகின்றது. வெளியிலோ வேப்பமர மாளிகையில் குடியிருக்கும் அந்தச் சிட்டுக்குருவிகள் சிலுசிலுவென்று சிரித்துக் கொண்டுதான் இருக்கின்றன.

:: :: ::

அறைக்கதவு தட்டப்படும் ஓசை. புடைவைத் தலைப்பினால் முகத்தை அழுத்தித் துடைத்துக் கொண்டு, கூந்தலை ஒடுக்கிக் கோதியவாறே நிர்மலா கட்டிலை விட்டு இறங்குகிறாள்.

‘ அவரிடம் இந்தச் சிக்கலை பற்றி எப்படித் தொடங்குவது, எப்படி ஒரு முடிவுக்கு வருவது ?’ என்னும் திகைப்பு அவளது மனக் கூட்டை ‘ நங்கு ...... நங்கு ’ என்று அடிக்கிறது. அந்த வேதனையின் விம்மல் தாளாமல் கால்கள் பின்னுகின்றன. எனினும் கதவைப்போய்த் திறக்கிறாள்.

பிற்பகல் இரண்டு மணிக்கு, அவளைத் தன்னந்தனியாகத் தவிக்க விட்டு விட்டுத் தன் நண்பனைப் பார்க்கச் சென்றிருந்த மணவாளன்தான் நான்கு மணிநேரங்கழித்து இப்போது திரும்பியிருக்கிறான்.

'' என்ன நிர்மலா, ஒரு மாதிரியா இருக்கிறே ? உடம்புக்கு முடியவில்லையா ? ''

—என்று கேட்டவாறே அவன் உள்ளே நுழைகிறான்.

அவள் பதில் ஏதும் பகராமல் அறைக் கதவைச் சாத்தித் தாழ் போடுகிறாள்.

'' நன்றாக இருட்டி விட்டது. விளக்கைக் கூடப் போடாமல் இருக்கிறாயே !''

—என்றவாறே தான் வாங்கி வந்த இரண்டு ஆப்பிள் பழங்களையும், துணிப் பொட்டலத்தையும் அறைநடுவே கிடக்கும் சிறிய மேசையில் வைக்கிறான்.

அவள் விளக்கைத் தட்டி விடுகிறாள்.

அந்தப் ' பளீர் ' என்னும் வெளிச்சம் அவளுடைய சோகமயமான முகத்தையும், நிலையையும் துல்லியமாகக் காட்டுகிறது.

அவளது அழுகைக் கோலம் மணவாளனைத் திடுக்கிட வைக்கிறது. கட்டிலில் வந்து அமர்ந்து விட்ட அவளின் அருகே சென்று நெற்றியைத் தொட்டுப் பார்க்கிறான். அவளது மனத்தின் பிரதிபலிப்பாக அது கொதிக்கிறது.

'' நான் போகும்போது நன்றாகத்தானே இருந்தே ? அதற்குள்ளே இப்படிக் காய்ச்சல் வந்து விட்டதே !''

—என்று பதறியவன், மின் மணிக்கு உரிய பொத்தானை அழுத்துகிறான்.

பையன் வந்ததும்;

'' சூடா இரண்டு காப்பியும், இரண்டு கோடாபைரின் மாத்திரையும் வாங்கி வா '' என்கிறான்.

பையன் சென்றதும், நிர்மலாவின் அருகில்போய் அமர்ந்து அவளை ஆரத்தழுவித் தன் மார்பிலேயே சாய்த்துக் கொள்கிறான். அவளது கண்ணீர் முத்துக்கள் அவனது நெஞ்சப் பரப்பிலே சொட்டுச் சொட்டாய் விழுகின்றன ; ' சுள் ' ளென்று சுடுகின்றன.

மேலாடை நழுவிட்ட அவளது முதுகை வருடிக்கொடுத்தவாறே, அவளுடைய பூங்கழுத்து ஓரமாகத் தன் உதடுகளை மிதக்க விட்ட அவன்,

'' டாக்டரையே, அழைத்து வந்து விடவா ? ''

—என்று கலக்கமடைந்து போய்க் கேட்கிறான்.

' தேவையில்லை !'—என்பதற்கு அறிகுறியாக, அவள் தலையை ஆட்டுகிறாள்.

'' அந்தப் படுபாவி எப்போதுமே இப்படித்தான் ; பேச்சிலே பிடித்துக் கொண்டால் ஆளை விடவே மாட்டான். இல்லையென்றால் முன்னாலேயே வந்திருப்பேனே !''

—என்று புலம்புகிறான் மணவாளன்.

சிறிது நேரத்தில் பையன் கொண்டு வந்த காப்பியும் மாத்திரையும் நிர்மலாவின் வயிற்றில் இடம் பிடிக்கின்றன.

அவை உள்ளே சென்றதாலோ என்னவோ, ஒருவிதக் கலகலப்பு உண்டாகிறது, அவளிடம்.

இலேசாக, ஆனால் வலிந்துதான் புன்னகை பூக்கிறாள் அவள்.

அவனது மார்பிலே சாய்ந்து பின்னர் மடியிலே தலைவைத்துப் படுத்திருந்தவள், நிமிர்ந்து எழுகிறாள் ; அவனை விட்டுச் சற்றுத் தள்ளியே உட்காருகிறாள். அவனையே விழுங்கிவிடுவது போல் தன் விழிகளால் தழுவுகிறாள். குரலைக் கனைத்துக் கொண்டு மெள்ளக் கேட்கிறாள்:

1968 செப்டம்பர் 8-ம் நாளில் அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாப் பேருரையை அண்ணா நிகழ்த்தினார். அன்று அவர் ஆற்றிய உரை புத்தறிவுப் பேருரை; கருத்துக் கருவூலம்;

அவ்வுரை அண்ணாவின் கைப்பட எழுதியது. கையெழுத்தில் சுமார் 120 பக்கங்கள் அண்ணாவே ஒரே மூச்சில் அந்த நீண்ட பொருள் செறிந்த உரையினைத் தயாரித்து விட்டார்.

இரவு பன்னிரண்டு மணி அளவில் அண்ணா உரையை எழுதத் தொடங்கினார். அவர் அதை எழுதி முடித்தபொழுது காலை 5 மணி ! ஒரே மூச்சில், தொடர்ந்து இரவு பூராவும் உட்கார்ந்து தன் கைப்படவே அப்பேருரையை எழுதி முடித்தார் அண்ணா !

'' ஆமா, இந்தச் சோதிடம் — கைரேகை — இவைகளைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்? எல்லாம் உண்மைதானே ?''

—அவள் இப்படிக் கேட்டதும், மணவாளன் ' ஓ ' வென்று உரக்கச் சிரிக்கிறான்.

'' ஏன் சிரிக்கிறீர்கள் ? அவைகள் எல்லாம் உண்மை இல்லையா ? ''—மீண்டும் கேட்கிறாள் அவள்.

'' உண்மையோ பொய்யோ ? ஆனால் அவற்றால் நன்மையே இல்லை. பிறகு ஏன் அவற்றை நாம் கட்டிக்கொண்டு அழ வேண்டும் ?''

'' என்ன அப்படிச் சொல்கிறீர்கள் ?''

'' எனக்குப் பட்டதைத்தான் சொல்கிறேன். அவைமட்டும். நன்மையளிக்கும் உண்மைகளாக இருக்குமானால், இந்த நாட்டில் எந்தப் பெண்ணுமே விதவையாக நடமாடக் கூடாதே ? எந்த விபத்துமே ஏற்படக் கூடாதே ! ஏன். கொலை, களவுகளைக் கண்டு பிடிக்கும் துப்பறியும் துறைக்கே வேலை இருக்கக் கூடாதே ? ஆனால் என்னைப் பொறுத்தவரை, சோதிடக்கலை என்பது விண்வெளி ஆராய்ச்சிக்குரிய அரிச்சுவடி; அதைச்சரியான முறையில் நாம் பயிலவும் பயன்படுத்தவும் தவறிவிட்டோம். முன்னேற வேண்டிய மனிதன் வெறும் அரிச்சுவடியிலேயே ஆழ்ந்துகிடக்கலாமா ? அதற்கும் மேலே என்ன ? என்று நம் தமிழர்கள் அப்போதே சிந்தித்து முற்பட்டிருந்தால் இன்று அமெரிக்காவையும், ரஷ்யாவையும் விட நாம்தானே விஞ்ஞானத்தில் முன்னணியில் நின்றிருப்போம் ? முதன்முதலாக வெண்ணிலாவிலும் அடிவைத்திருப்போம் ! ஒரு சிலர், தங்களுடைய வயிற்றை வளர்ப்பதற்காக மனித மனத்தில் புரையோடிப்போயிருக்கும், அச்சத்தை — அவநம்பிக்கையைப் பயன்படுத்திக்கொண்டு சோதிடத்தின் தத்துவத்தையே திசை திருப்பி விட்டு விட்டார்கள்.''

'' அப்படியானால் அது முழுக்க முழுக்கப் பொய் இல்லை என்பதை ஒப்புக் கொள்கிறீர்கள் இல்லையா ?''

'' அது ஒரு கணக்கியல் அறிவு என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால் இன்று அதனால் நன்மையே இல்லை என்பதுதான் என்னுடைய வாதம். சோதிடம் என்பது எதிரே தெரியும் பொருளைக் காட்டும் கண்ணாடியாக இருக்கலாம் ; ஆனால் அதுவே அந்தப் பொருளை இடம் பெயர்த்து வைக்கக்கூடிய கருவி இல்லை. நமக்கு ஏற்படக்கூடிய ஒரு விபத்தை நாம் முன்கூட்டியே தெரிந்துகொள்ளலாமே சோதிடக்தால் என்று நீ கேட்கலாம். அப்படித் தெரிந்து கொண்டதால் நீ சஞ்சலத்திற்கு ஆட்பட்டுச் சாகாமல் சாவாயே தவிர அந்த விபத்தை உன்னால் தவிர்த்துவிட முடியுமா ? கண்டிப்பாக முடியாது. அதுமட்டுமல்ல சோதிடத்தில் உனக்குப் பிடிப்பு அதிகமாக ஏற்பட ஏற்பட உன் தன்னம்பிக்கை தளர்கிறது ; சோம்பல் தலையெடுக்கிறது ; முயற்சி முனை மழுங்குகிறது ; எதையும் சாதிக்க முடியும் என்கிற ஆர்வமே அழிந்து போகிறது. இப்படி நன்மையளிக்காதது மட்டுமல்ல, தீமையையும் கொடுக்கக்கூடிய ஓர் உண்மையினால் நமக்கு என்ன இன்பம் வரப் போகிறது ? ஏற்றம் ஏற்படப் போகிறது ? ஆகையால் தீமையையே தருகின்ற ஓர் உண்மையை விட நன்மையைத் தருகின்ற பொய்யே கூடத் தேவலாமே என்று தோன்றவில்லையா ?....''

—அடுக்கடுக்காக மணவாளன் சொல்லிச் செல்லும் வாதங்களைக் கேட்ட பிறகு நிர்மலாவின் சஞ்சல நெஞ்சிலும், மூட்டம் போட்டிருந்த வானம் வெளி வாங்கியதைப் போல், ஒரு வகையான தெளிவு அரும்பி வருகிறதோ ?

''ஆமாம், எதற்காக நிர்மலா, என்றைக்கும் இல்லாமல், இன்று வந்து சோதிடத்தைப் பற்றி அக்கறையோடு கேட்கிறாய் ?''

'' ஒன்றுமில்லை ; சும்மா தெரிந்து கொள்வோமே என்றுதான் கேட்டேன் .''

சஞ்சீவியார் உள்ளம்.

திருப்பதியில் 1969-ஆண்டு சனவரியில் திரு. சஞ்சீவி ரெட்டியின் மகன் திருமணம். அண்ணாவுக்கு அழைப்பிதழ் கொடுத்து நேரில் அழைக்க வந்தார் சஞ்சீவி ரெட்டி. அண்ணா நோய்வாய்ப்பட்டிருந்தநேரம். '' அண்ணா.... இந்த நிலையில் தாங்கள் நேரில் திருமணத்திற்கு வரவேண்டுமென நான் கேட்கமாட்டேன். உடம்பைப் பார்த்துக் கொள்ளுங்கள். நீங்கள் வாழ வேண்டும். இந்த நாட்டிற்கு, சிறப்பாகத் தென்னகத்திற்கு உங்கள் உழைப்பு, பணி எல்லாம் மிக மிகத் தேவையானது '' என்று நெக்குருகக் கூறிவிட்டு, அண்ணாவிடம் விடை பெற்றுக்கொண்டார். போவதற்கு முன்னால் திரு. சஞ்சீவி ரெட்டி சொன்ன வார்த்தைகள் : '' நீங்கள் நெடு நாள் வாழவேண்டும். அரசியல் வேறுபாடுகள் எவ்வளவுதான் இருந்தாலும் இந்த நாட்டின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் தலைவர் நீங்கள்.... ''.

'' ஊஹூம்.. நீ எதையோ மறைக்கிறாய் ? உன் முகத்தைப் பார்த்தாலே தெரிகிறதே !

'' சொன்னால் கோபிக்கமாட்டீர்களே !''

'' என் செல்லக் கண்ணே நான் என்றைக்காவது கோபித்திருக்கிறேனா ? ''

—அவளுடைய மடியிலே தலையை வைத்து மல்லாந்து படுத்திருந்த மணவாளன், அவளது மாதுளம் பட்டுப் போன்ற கன்னத்தைத் தன் விரல்களால் அதுக்கிப் பற்றி உலுக்கியவாறே கொஞ்சலாகக் கேட்கிறான்.

அவனது நெடுங் கரத்தை, வளையல் குலுங்கும் தன் இரு குருத்துக்களாலும் கன்னத்தோடு சேர்த்து அணைத்துக் கொண்ட நிர்மலா, மனத்தைத் திடப்படுத்திக் கொண்டவளாகப் பேசத் தொடங்குகிறாள் :

'' சரி, உங்களிடம் சொல்லாமல் நான் எதற்குத்தான் மறைக்கணும் ? நீங்கள் மத்தியானம் வெளியே போன பிறகு, பக்கத்து அறையில் தங்கியிருக்கிறாளே ஒரு நாட்டியக்காரி — —அவள்தான் நளினா— அவள் அவசரம் அவசரமாக ஒரு வயதான ஆளை அழைத்து வந்தாள். '' இவர் ரொம்ப அற்புதமா கைரேகை பார்க்கிறார் ; நீங்களும் உங்கள் கையைக் காட்டுங்களேன் ; எப்படி இருக்கிறது என்று பார்ப்போம்!'' —என்றாள். எனக்கும் ஓர் ஆசை வந்து விட்டது. கையைக் காட்டினேன்.''

'' ஓகோ !அப்படியா சங்கதி? அந்த ஆள் என்ன சொன்னார்?''

'' ......அவர் சொன்னதையெல்லாம் இப்பச் சொன்னா நீங்க அதிர்ச்சி அடைவீங்களோன்னு எனக்குப் பயமா இருக்கு !''

—சட்டென்று நிர்மலாவின் முகம் இருண்டு வருகிறது ; விழிகள் பளபளக்கின்றன ; குரலும் தழுதழுக்கிறது.

'' நான் ஏன் அதிர்ச்சி அடைகிறேன் ? என்னுடைய குறுகிய கால வாழ்க்கையில் நான் அனுபவிக்காத துன்பம், அடையாத தோல்வி, சந்திக்காத ஏமாற்றம், சகித்துக் கொள்ளாத அவமானம் ஒன்றா ? இரண்டா ? அதனாலே, பழுக்கப் பழுக்க அடிக்கப்பட்ட இரும்புத் தகடாகத்தான் என் உள்ளம் இறுகிப் போய் இருக்கிறது. அறிஞர் அண்ணா சொன்னாரே அந்த ' எதையும் தாங்கும் இதயம் '..எனக்கும் ஓரளவுக்கு அமைந்திருக்கிறது. ஆகையாலே எந்த அதிர்ச்சியையும் என்னால் தாங்கிக் கொள்ள முடியும். நீ எதுவாக இருந்தாலும் தயங்காமல் சொல்.''

—விரக்திச் சிரிப்போடு அவளுக்குத் தைரியமூட்டுகிறான் மணவாளன்.

ஆற்றோரம்

படைகிழிக்கும் பேராற்றல் பெற்றிருந்த
பகவனொரு சிற்றரசன்; மதத்தால் புத்தன்.
வடகிழக்கே அவன்நாடு; சிறிய நாடு.
மலையுண்டாம் அதனாலே குறிஞ்சி நாடு.
நடைவழுக்கும் மழைஇரவில் ஓர்நாள், அந்த
நல்லவனைப் பிச்சுக்கள் காண வந்தார்.
குடிசெழிக்க வழிவகுத்தோன் வணங்கி நின்று
குறையுண்டோ? முறையுண்டோ? என்று கேட்டான்.

மயில்விழித்து விளையாடிப் பொழுது போக்கும்
மலைச்சாரல் மன்னவனே! அகரம் போன்ற
உயிரெழுத்தாய் நீயிருந்து வருவ தாலே
ஒரு குறையும் எமக்கில்லை; நேற்று நாங்கள்
வெயில்விழித்த வேளையிலோர் செடியைக் கண்டோம்
விதைகண்டோம்; அவ்விதையில் எண்ணெய்கண்டோம்;
இயல்விழித்தால் காவியங்கள் விழிக்கும்; அந்த
எள்விழிக்க அதில்கண்டோம் எண்ணெய் வெள்ளம்!

இலுப்பையிலும் நெய்யுண்டு; செடியில் தோன்றும்
எள்ளினிலும் நெய்யுண்டு வேந்தே! அந்த
இலுப்பைதரும் நெய்யைவிடப் புள்ளி போன்ற
எள்வழங்கும் நறுநெய்யே சிறந்த தாகும்.
கலப்படமே இல்லாத எண்ணெய் என்னும்
காரணத்தால் நல்லெண்ணெய் எனப்பே ரிட்டோம்
எலிப்புழுக்கை எள்ளோடு சேரு மாயின்
எள்ளினது தனிப்பெருமை குன்றிப் போகும்.

ஆத்திரத்தின் உச்சியிலே நிமிர்ந்து நின்றால்
அழிவுவரும் என்றுணர்த்தும் வேந்தே! இந்தப்
பாத்திரத்தில் குடியிருக்கும் எண்ணெய், இங்கே
பலர்தலையில் குடியேறு மாயின், அன்னார்
நேத்திரத்தில் ஒளிபெருகும்; மேனி மின்னும்;
நிச்சயமாய் உடற்சூடும் தணிந்து போகும்
கூத்தடிக்கும் கபவாத பித்த மெல்லாம்
குளிர்நாளில் பாதிரிப்பூப் போலே வாடும்!

கிண்ணத்தில் சந்தனத்தைப் பார்க்கும் போதும்;
கிளிமூக்கு வெற்றிலையை மெல்லும் போதும்;
பண்ணத்தி என்னுமிசை கேட்கும் போதும்;
பருவவெறி உண்டாகும்; எண்ணெய் தேய்த்துக்
கொண்டிங்கே தலைமுழுகும் நாளில் மட்டும்
கொஞ்சுவதோ கூடுவதோ ஆயத் தாகும்!

புண்ணென்று தெரிந்தாலும், ஈக்கள் அந்தப்
புண்மீது மொய்த்திடுமோ இரவில்? என்றான்.

கொடைபழகும் கரமுடையான் அதனைக் கேட்டுக்
குதூகலித்தான்; பிறர்க்கதனை எடுத்து ரைத்தான்.
படைபழகும் வீரர்களும் அவனும், பச்சைப்
பசலைநிலாச் சிறுவர்களும் பிறரும்; முல்லைக்
கொடிபழகும் கோதையரும் எண்ணெய் தேய்த்துக்
கொண்டெழுந்து நதிநீரில் குளித்தெ ழுந்தார்.
அடிபழகும் அன்னத்தைப் போன்ற பெண்கள்
ஆற்றோரம் எண்ணெய்விளக் கேற்றி வைத்தார்.

தைப்பனி நீர் போலுள்ளம் குளிர்ந்த மன்னன்
தாமரையைப் போல்மலர்ந்தோர் தம்மை நோக்கி
ஐப்பசியில் சதுர்த்தசியாம் திதியில் மெச்சும்
அறிவுடையோர் எள்கண்டு பிடித்த தாலே,
நெய்ப்பசையின் பயனறிந்தோம்! எண்ணெய் தேய்த்து
நீராடி ஆனந்தக் களிப்பும் கண்டோம்!
பொய்ப்பசியை வளர்க்காதீர்! வையம் போற்றும்
புகழ்ப்பசியை வளர்த்திடுவீர்! இதுதான் தேவை.

பனித்திருநாள் நமக்குண்டு; வேங்கை வீரர்
படைத்திருநாள் நம்நாட்டில் வளர்ப்ப துண்டு
கனித்திருநாள் நாமறிவோம்; போதி புத்தர்
கதைத் திருநாள் நமக்கெல்லாம் பெருநா ளாகும்;
மனைத்திருநாள் ஆகட்டும் இனிமேல் இந்நாள்
வரநதியில் மிதக்கட்டும் எண்ணெய்த் தேமல்!
தனித்திருநாள் புதுத்திருநாள் இந்நாள்! எள்ளின்
சரித்திரந்தான் நல்லெண்ணெய்த் திருநாள் என்றான்.

தள்ளாடும் கிழவர்களும் பிறரும்; புத்த
சங்கத்துச் சான்றோரை வாழ்த்த லானார்.
எள்ளே நீ நீடூழி வாழ்க! எங்கே
இருந்தாலும் நீ வாழ்க! என்றார் மாதர்!
கள்ளேநீ நாட்டை விட்டே ஒழிக! எள்ளின்
கண்ணீரே நீ வாழ்க!—என்றார் மேலோர்
உள்ளீடாம் கருத்தமைந்த கவிதை போலே
ஒளித்திருநாள் வாழட்டும் என்றான் வேந்தன்.

''எனக்குத் தாலி பாக்கியமே இல்லையாம்!....''

—என்ற நிர்மலா

''உங்களைப் பறி கொடுத்திட்டு நான் எப்படி அத்தான் உயிரோடு இருப்பேன்?''

—என்று ஒரேயடியாக அலறியவாறே மணவாளன் மீது அப்படியே சரிந்து விழுகிறாள். அவன் மார்பிலே தன் முகத்தைப் புதைத்துக் கொண்டு தன்னுடைய தளிருடலே நடுநடுங்க, விம்மி விம்மி அழுகிறாள்.

''அடிப் பைத்தியமே! இதுக்கா இப்படி அழுவுறே? எவனோ ஒரு அரை வேக்காட்டுக்காரன் எதையோ வந்து உளறினான் என்றால் உடனே அதை நீ நம்பி விடுவதா? அதற்காக மனசையே உடைய விடுவதா? நான் சொன்னது சரியாகி விட்டது பார்த்தாயே? வாதத்திற்காகக் கைரேகை சோதிடம் என்னில் உண்மைதான் என்று ஒப்புக் கொண்டாலும் அது எவ்வளவு மோசமாக உள்ளத்தையே ஒடித்து நொறுக்கி நாசமாக்கி விடுகிறது? படித்தவளாகிய நீயே இப்படி ஆராயாமல் அழுது புலம்பினால் சாதாரணப் பாமர மக்களின் கதியெல்லாம் என்ன ஆவது? சரி அப்படியே... அப்படியே உனக்குத் தாலி பாக்கியமே இல்லை என்று வைத்துக்கொள்; அந்தக் கைரேகைக்காரன் பேச்சை மீறி நான் உனக்குத் தாலி கட்டுவதால் உடனே இறந்து போகிறேன் என்றும் வைத்துக்கொள். அதனால் இந்த உலகமே கவிழ்ந்துபோய் விடுமா? ''ஒரு நாளாவது ஒரு கணமாவது அவரோடு நெஞ்சார நிம்மதியாக வாழ்ந்தேன்; அதுவே எனக்குப் போதும்''— என்கிற நிறைவோடு நீ மற்றவர்களுக்கு உதவியாக வாழக் கூடாதா? முடியாதா? இந்தக் காதல் — கத்தரிக்காய் — திருமணம்—குடும்பம் என்பதெல்லாம் எதற்காக? ஓர் ஆணும் ஒரு பெண்ணும் தாங்கள் மட்டுமே இன்பம் அனுபவித்துக் குதியாட்டம் போடவா? மற்ற மற்ற மனிதர்களுக்கும் உயிர்களுக்கும் உதவியாக இருக்கத்தானே? இரண்டு பேர் சேர்ந்தும் சமுதாயத்திற்குப் பயன்படலாம்; முடியாதபோது தனித்து நின்றும் தன்னால் ஆனதைச் செய்யலாம்.

''என்ன இருந்தாலும் நானே உங்களுக்கு எமனாக மாறலாமா? எனக்குத் தாலி கட்டாமல் இன்னொருத்திக்கு நீங்கள் தாலி கட்டினால் நீங்கள் உயிரோடு வாழலாம் இல்லையா?"

"வாதத்திற்காக" உன்னைவிட்டு விட்டு நான் இன்னொருத்திக்குத் தாலி கட்டுவதால் சாகமாட்டேன் என்றே வைத்துக்கொள்வோம். அது ஒரு நிம்மதியான வாழ்க்கை ஆகிவிடும் என்று நினைக்கிறாயா? ஒரு மனிதன் உயிரோடு வாழ்ந்தால் மட்டும் போதுமா? அவன் தன் இதயத்திற்கு உண்மையுள்ளவனாகவும் வாழ வேண்டாமா? நீ என் மனைவியாக ஆகாததாலேயே உன்னை என்னால் மறந்துவிட முடியும் என்று நினைக்கிறாயா?"

மணவாளன் இப்படிச் சொன்னதும் துவண்டு கிடந்த நிர்மலா துள்ளியெழுந்து சட்டென்று அவனது வாயைப் பொத்துகிறாள்.

அவளுக்கும் ஒரு துணிவு— உறுதிப்பாடு—வந்து விட்டதோ?

''சரி, அத்தான், இனிமேல் நாம் இப்படியெல்லாம் சாவைப் பற்றியே பேசிக்கொள்ள வேண்டாம். என்ன ஆனாலும் சரி; நீங்கள் எனக்குத்தான் தாலி கட்ட வேண்டும்; ஒரு நாளாவது நீங்கள் சொன்னமாதிரி ஒன்றாகவே வாழ்வோம்; ஒன்றாகவே சாவோம்!"

''ஆனால் நிர்மலா, நான் உனக்கு இனிமேல் தாலி கட்டப் போவதில்லை'' என்று சிரிக்கிறான் அவன்.

''நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?" திடுக்கிட்டுக் கேட்கிறாள் அவள்.

''என்னதான் நீ துணிவை வரவழைத்துக் கொண்டாலும், நான் அணிவிக்கின்ற தாலியைக் காணும்பொழுதெல்லாம், நான் எங்கே இறந்து விடுவேனோ என்கிற அச்சம் உன் நெஞ்சை நெருடிக்கொண்டு இருக்காதா? அதனாலே....!?"

''அதனாலே....?''

''ஒரு புதிய திட்டத்தில் இறங்கப்போகிறேன்.''

''புதிய திட்டமா?''

''ஆமாம். நம்முடைய தமிழ் இன மக்கள் மடமை இருட்டை விட்டு வெளிச்சத்திற்கு வருவதற்காக அயராது பாடுபடுகிறாரே 'அய்யா' (பெரியார்), அவர் வகுத்த அருமையான திட்டந்தான் அது. அந்தப் புரட்சிகரமான திருமண முறைக்கு அண்மையில்தான் தமிழக அரசு சட்ட வடிவமும் கொடுத்துவிட்டது. அந்தத் திட்டப்படி, தாலி கட்ட வேண்டிய அவசியமில்லை, மாலை மாற்றிக்கொண்டாலேபோதும்!"

''அப்படியா? ரொம்ப ரொம்ப, நல்லதாப் போச்சே! அப்ப நான் கொடுத்து வைத்தவள் தான், அத்தான்!''

—என்றவாறே ஆசைபொங்க அவனை ஆரத் தழுவிக்கொள்கிறாள் நிர்மலா.

''அப்புறம், இன்னொரு உண்மையை உனக்குச் சொல்லப் போகிறேன்; அதைக் கேட்டு நீ இப்போது அதிர்ச்சி அடையக் கூடாது.''

—என்று அவளைத் தன் மார்போடு இறுகப் பிணைத்துக் கொண்டவாறே அவள் காதோரத்தை உதடுகளால் வருடுகிறான் அவன்.

''என்ன அத்தான், அது?'

—திகைப்பு மேலிட அவள் முகத்தை நிமிர்த்திப் பார்க்கிறாள்.

''பக்கத்து அறையில் தங்கியிருக்கிறாளே நளினி அவளுக்குப் பல ஆண்டுகளாகவே என் மீது ஒரு கண்; அவள் வலையில் நான் சிக்கவில்லை. அந்த ஆத்திரத்தில் நீ என்னை அடையக்கூடாது என்பதற்காக அவள் சூழ்ச்சி செய்திருக்கிறாள் என்று நினைக்கிறேன். அவளைப் பற்றிச் சொல்லி உன் மனத்தைச் சலனப்படுத்த வேண்டாம் என்று நினைத்தேன்.''

''அப்படியா, அத்தான்?'' நிர்மலாவுக்கு வியப்பு மட்டுமல்ல, மகிழ்ச்சியும் தாங்க வில்லை.

தம்மை மறந்து சிட்டுக்குருவிகள் சிரிக்கின்றன. வெளியே வேப்பங்கிளையில் மட்டுமா? அந்த அழகான அறையிலேயுந்தான்.

◆ ◆ ◆

அண்ணா மொழி கேளீர்!



என்ன வேணும்?
என்ன இருக்கு?

இங்கே எல்லாம் கிடைக்கும்!

காஞ்சிபுரம், காஞ்சீ, காஞ்சி, கச்சி, கச்சிப்பேடு, கச்சியம்பதி, காஞ்சீபுரம், காஞ்சனபுரம், காஞ்சீபுரி, பல்லவேந்திரபுரி என்று பல பெயர்கள் காஞ்சீபுரத்திற்கு வழங்கி வந்திருக்கின்றன. காஞ்சி என்னும் சொல் எண்கோவையுள்ள மகளிர் இடையணி என்ற பொருளையும், எதிர்த்துப் பொருதல் என்ற பொருளையும் உடையது. காஞ்சி மரங்கள் மிக்கிருந்த இடமாதலால், இவ்வூர் காஞ்சீபுரம் எனப் பெயர் பெற்றது என்பர்.

* * *

ஜப்பான் மொழியில் உள்ள ஒரு செய்தியை, ரஷ்ய மொழியில் ஒரு நிமிட நேரத்தில் மொழி பெயர்த்து விடுகிறது ஒரு புதுவகைக் கருவி. மனிதர்கள் கூட மொழிபெயர்க்கும் பணியில் தவறிவிடுகிருர்கள். ஆனல் இந்தப் புதுவகைக் கருவி தவறுவதில்லை. மொழியின் பொருள் சிறிதும் தவருத வண்ணம் விரைவாகவும் தெளிவாகவும் மொழி பெயர்த்து விடுகிறதாம். மாஸ்கோவில் உள்ள பௌதிகப் பொறியியல் நிலையம் இந்தக் கருவியைக் கண்டுபிடித்திருக்கிறதாம்.

* * *

250 வருடங்களாகப் பலன் தந்து வரும் ஆப்பிள் மரம் ஒன்றினை சோவியத் விஞ்ஞானிகள் கண்டு பிடித்திருக்கிருர்கள். தெற்கு கிர்க்கிசிய மலைகளில் இந்த மரம் இருக்கிறதாம். ஆப்பிள் மரம் இத்தனை ஆண்டுகள் இருப்பது உலக அதிசயங்களில் ஒன்று என்று கருதப்படுகிறது. உயர்ந்த மலைப்பகுதியிலும், நல்ல சூரிய வெளிச்சத்திலும் அந்த மரம் அமைந்திருந்ததுதான் அதன் 250 ஆண்டு வாழ்வுக்குக் காரணம் என்று விஞ்ஞானிகள் கருதுகிருர்கள்.

* * *

நியூயார்க் நகரத்திலே விநயகர் ஆலயம் ஒன்று நிறுவுவதற்கு அங்கே உள்ள இந்தியர்கள் முயற்சி செய்கிருர்கள். அந்த ஆலயப்பணிக்கு, தமிழ் நாட்டிலுள்ள தெய்வீகப் பேரவை என்னும் மன்றம் 25 ஆயிரம் ரூபாய் நன்கொடை தரப்போகிறதாம்!

* * *

இங்கிலாந்தில் உள்ள அர்சில் பீஸ்லி என்பவர், கடந்த 46 ஆண்டுகளாகத் தினமும் ஒரு தவளையை விழுங்கி வருகிருராம். அவருக்கு எந்த விதத் தீங்கும் ஏற்படவில்லையாம். அவர் தின்னும் தவளையின் அளவு சுமார் ஒரு அங்குலத்துக்கும் குறைவானதாம். “தவளைக்குஞ்சு எனது குடலைச் சுத்தம் செய்கிறது” என்கிருர் அவர்.

* * *

சந்திரனிலிருந்து கொண்டு வரப்பட்ட பாறையில் இருந்து ஓர் உப்புக் கண்டு பிடித்திருக்கிருர்களாம். அதற்கு ஆர்மல் கோலைட் என்றுபெயர்வைத்திருக்கிருர்கள். அப்பாலோ 11-ன் துணைகொண்டு, சந்திரனைத் தொட்டு வந்த விஞ்ஞானிகள் ஆர்ம்ஸ்ட்ராங், ஆல்டரின், கோலின்ஸ் என்ற மூவரின் பெயர்களின் முதற்பகுதிகளை இணைத்துத்தான் ஆர்மல்கோலைட் என்ற பெயரை உருவாக்கியிருக்கிருர்கள்.

* * *

பிரிட்டனில் கடற்படை, விமானப்படை, தரைப்படை ஆகிய முப்படைகளில் ஆடவர் மட்டுமல்ல, பெண்களும் அங்கம் வகிக்கிருர்கள்—நாட்டுப் பாதுகாப்புக்கு நல்ல விதத்தில் பணி புரிகிருர்கள்.

* * *

கிரீஸ் நாட்டில் மிகமிகப் பழங்காலத்திலேயே கிறிஸ்து பிறப்பதற்கு ஆயிரம் வருடங்களுக்கு முன்னதாகவே, நானூறு பேர் அமரக்கூடிய நாடக அரங்கம் ஒன்றினை உருவாக்கியிருந்தார்களாம். அந்த அரங்கத்தில் அமர்ந்து நாடகங்களைக் கண்டு அகமகிழ்ந்து வந்தார்களாம் அந்நாட்டுச் செல்வந்தர்கள்.

* * *

ராஜஸ்தானத்திலே ஒரு புது வகைக் கோதுமையைக் கண்டு பிடித்திருக்கிருர்கள். மிகவும் குள்ளமாகக் காணப்படும் அந்தக் கோதுமை ரகத்திற்கு லால் பகதூர் என்று பெயரிட்டிருக்கிருர்களாம்.

* * *

1922-ம் ஆண்டில் இந்தியாவின் மக்கள் தொகை 25 கோடியாக இருந்தது. 1947-ல் இந்தியா விடுதலை அடைந்தபோது, பாகிஸ்தானையும் சேர்த்து, மக்கள் தொகை 30 கோடி; 1951-ல் (பாகிஸ்தானில்லாமல்) இந்தியாவின் மக்கள் தொகை 36 கோடி; பின்பு 1961-ல் 44 கோடியாகப் பெருகியது; 1966-ல் 50 கோடியை எட்டிப் பிடித்து, 1968-ல் 52 கோடியாக மாறியது. தற்போது 55 கோடியை எட்டிப் பிடித்துக் கொண்டிருக்கிறது.

* * *

தென் இந்திய வரலாற்றில் சிறப்பிடம் பெற்றுள்ள பலருடைய வாழ்க்கை காஞ்சீபுரத்தோடு ஒன்றியது. திப்புவும், ஹைதரும் இங்கே படு தோல்வி அடைந்தனர். கிளைவ் இவ்வூரில் போரிட்டுப் புகழ் பெற்ருர். சீரும் சிறப்பும் பெற்றிருந்த கருநாடக நவாப் சாதத் உல்லாகான் சமாதியடைந்தது இவ்வூரிலேதான்.

நல்ல குடும்பம் ஒரு பல்கலைக் கழகம்

மழலையின் சொல்லில் குழலிசையையும் யாழிசையையும் கேட்க வேண்டுமெனில், மக்கட் செல்வம் அளவுக்குட்பட்டிருத்தல் அவசியம்.

பெற்ற குழந்தைகளுக்கு ஏற்றமிகு கல்வி தர, வளமான வாழ்வு அளித்திடத், திட்டமிட்ட குடும்பத்தால்தான் முடியும்.

இதனைக் கருத்தில் கொண்டுதான், குடும்ப நலத் திட்டத்தில் தீவிரமாக ஈடு பட்டிருக்கிறது, நமது அரசு!

குடும்ப நலத் திட்டத்தின் முதல்படி, அத்திட்டத்தின் நன்மைகளை வாழ்க்கைத் தரத்தின் பல் வேறு படிகளிலும் மக்களுக்கு எடுத்துரைப்பது, அதில் அவர்களை ஈடுபடத் தூண்டுவது.

அதற்காக, அத்துறையில் ஈடுபடும் பல்வேறு அலுவலர்களுக்கும்—டாக்டர்கள், நர்சுகள் சுகாதார அதிகாரிகள், குடும்ப நலக் களப் பணியாளர்கள் போன்றவர்களுக்கும்— தனிப் பயிற்சி வழங்கப்படுகிறது. இதற்காகத் தமிழ் நாட்டில் மூன்று இடங்களில் (சென்னை, சேலம், காந்திகிராமம்) வட்டாரக் குடும்ப நலப் பயிற்சி நிலையங்கள் உள்ளன.

அதில் முக்கியத்துவம் வாய்ந்தது சென்னை எழும்பூரில் உள்ள பயிற்சி நிலையம். அமெரிக்கா சென்று அங்குள்ள பல்வேறு பல்கலைக் கழகங்களில் குடும்ப நலத் திட்டத்தின் பல்வேறு துறைகளில் பயிற்சி பெற்றுத் திரும்பியவர், இந்தப் பயிற்சி நிலையத்தின் முதல்வர் டாக்டர் சம்பூரணம். பயிற்சி நிலையப் பணிகள் பற்றி,

டாக்டர் சம்பூரணம் விளக்குகிருர் :

“ஒரு கோடி மக்கள் தொகைக்கு ஒரு பயிற்சி நிலையம் என்ற அடிப்படையில் இந்தியா முழுமைக்கும் 46 பயிற்சி நிலையங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன. அதில் தமிழகத்தில் 3 நிலையங்கள் இயங்குகின்றன.

தமிழகத்தில் உள்ளவற்றில் எழும்பூரில் உள்ள இந்தப் பயிற்சி நிலையத்திற்குத் தனித்தன்மை உண்டு. இங்குதான் தமிழகம் முழுவதுமுள்ள டாக்டர்களுக்கும் நர்சுகளுக்கும் லூப் முறைகள், வில்லைகளைப் பயன்படுத்தும் முறைகள் ஆகியவைகளில் பயிற்சி அளிக்கப்படுகின்றன.

அவர்கள் மட்டுமின்றி, சுகாதார ஆய்வாளர்கள், வட்டாரப் பயிற்றுவிப்போர், குடும்ப நலப் பணியாளர்கள் ஆகியோரும் இங்கு பயி[illegible] மக்கள் தொ[illegible] திட்டம், பா[illegible] வைகளில் [illegible] அளிக்கப்படுகிறது.

வகுப்புகளில் பாடங்களை [illegible] வித் தருவதோடு, [illegible] களுக்கும் நகரப் [illegible] கும் சென்று இத் திட்டம் செயல்படும் முறையை நேரில் கண்டறியவும் ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

1-4-66 முதல் 31-3-70 வரையுள்ள 4 ஆண்டுகளில் பயிற்சி பெற்ருேர் 1837 பேர். இந்த ஆண்டு (1969-70) 875 பேருக்குப் பயிற்சியளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

தொழிற் கூடங்களைச் சேர்ந்த குழுத் தலைவர்களைப் பொறுக்கி எடுத்து அவர்களுக்காகக் குடும்ப நலக் கருத்தரங்குகள் நடத்துகிருேம்.

இங்குள்ள விரிவுரையாளர் தவிர சென்னை மாநகரிலுள்ள பல்வேறு மருத்துவ நிலையங்களைச் சேர்ந்த நிபுணர்களை அழைத்து விரிவுரை ஆற்ற ஏற்பாடு செய்கிருேம்.

சமீபத்தில் தாய்லாந்து நாட்டைச் சேர்ந்த குடும்ப நலத்திட்ட நிபுணர் டாக்டர் மாக்டோனல்ட் இங்கு வந்து பயிற்சியாளர்களுக்கு விரிவுரையாற்றினர், ஊசி முறை பற்றி.

தற்போது இங்கு பயிற்சி பெறுபவர்கள் தங்குவதற்கு விடுதி வசதியில்லை. மேலும், மருத்துவமனை அனுபவம் (Clinical Experience) பெறப் பக்கத்திலுள்ள தாய்-சேய் மருத்துவமனையை நாட வேண்டியுள்ளது.

இக்குறைபாட்டை நீக்கிடத் தற்போது ஐந்து இலட்ச ரூபாய் செலவில் இந்த இடத்தில் புதிய கட்டடங்கள் நிறுவப்படுகின்றன. அதில் ‘லூப்’ முறை, அறுவைச் சிகிச்சை ஆகியவற்றிற்கான கூடங்கள், பயிற்சி

கிராமத்துப் பெண்கள், குடும்பநலத் திட்டத்தை ஆவலோடு கேட்கிறார்கள்.

ாளருக்கான விடுதிகள் அனைத் ும் இருக்கும். அதோடு இரண்டு லட்ச ரூபாயில் கருத்தரங்கு ண்டபமும் இங்கு நிறுவப் டும்''

இதோ! சேலம் தலைமை ிலைய மருத்துவமனையைச் சேர்ந்த தவி-சர்ஜன் டாக்டர் எஸ். ராஜ ட்சுமி—தற்போது பயிற்சி பெறும் லேடி டாக்டர்களில் இவரும் ஒரு வர்; உங்களுடன் உரையாடுவார் :

டாக்டர் ராஜலட்சுமி.

நான் ஆகஸ்டு 1-ம் தேதியில் பயிற்சிக்காக வந்தேன். எங்கள் குழுவில் சுமார் 30 பேர் இருக்கிறார்கள். எங்களுக்கு 30 நாட்கள் பயிற்சி. அதில் 7 நாட்கள் நேர் முகப் பயிற்சி. நான் பெரியபாளையம், பூந்தமல்லி ஆகிய இடங்களிலுள்ள சுகாதார நிலையங்களுக்குச் சென்று வந்திருக்கிறேன். அடுத்ததாக சைதாப்பேட்டைக்கும் நந்தனம் பகுதிக்கும் செல்லவிருக்கிறோம்.

பொதுவாக எம். பி. பி. எஸ். படிப்பில் குடும்பக் கட்டுப்பாடு பற்றித் தனியாகப் பயிற்சி அளிப்பது கிடையாது. எனவே இந்தப் பயிற்சி எங்களுக்கு மிகவும் பயன் தருமென நான் கருதுகிறேன்.

குடும்பக் கட்டுப்பாடு, நமது நாட்டிற்கு மிகவும் இன்றியமையாத ஒன்று. நமது பொருளாதார நிலைக்கு இரு குழந்தைகளுக்குமேல் தாங்காது. எனவே, இத்திட்டம் நமக்கு மிகமிகத் தேவை.

மற்ற நோய்களெனில் மக்கள் டாக்டரைத் தேடி வருகிறார்கள். ஆனால் குடும்ப நலத்திட்டத்திற்கு டாக்டர்களும், திட்ட ஊழியர்களும் மனுநீதித் திட்டம் போல் மக்களை நாடிச் சென்று எடுத்துரைக்க வேண்டியுள்ளது.

இந்நிலை மாற வேண்டும். குடும்ப நலத் திட்டத்தின் அவசியத்தை மக்கள் உணர வேண்டும்.

பெண் டாக்டர்களுக்குச் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

ஏனெனில் குடும்பத்தைப் பெருக்குவதோ, குறைப்பதோ அவர்கள் கையில்தான் இருக்கிறது. மக்களின் பரிபூரண ஒத்துழைப்பு இதற்கு மிகவும் தேவை.

குடும்ப நல ஊழியர்கள் பதின் மூவரை ஏற்றிக்கொண்டு ஓர் ஊர்தி பெரியபாளையம் செல்கிறது. அதில் எழுவர் பெண்கள். அறுவர் ஆடவர். மிகவும் உற்சாகத்தோடு பணியாற்றப் புறப்படுகின்றனர். அவர்கள் உள்ளமறிந்து வண்டியும் கடிது செல்கிறது. குழுவினரில் ஆண்கள் இரு பிரிவுகளாகவும் பெண்கள் இருபிரிவுகளாகவும் சென்று பெரியபாளையம் மக்களிடம் குடும்ப நலத்திட்டம் பற்றி எடுத்துரைக்கின்றனர். மக்களும் ஆர்வத்தோடு அவர்களின் உரைகளைச் செவி மடுக்கின்றனர்.

குழுவினை நடத்திச் செல்லும் சுகாதார ஆய்வாளர் ராஜேந்திரன் கூறுகிறார் :—

''ஆந்திர மகிளசபா, குஜராத்தி சகாய் மருத்துவமனை, ரெயினி மருத்துவமனை, வி.எச்.எஸ். ஆகியவற்றைச் சேர்ந்தவர்கள் இந்த குடும்பநலப் பணியாளர்கள். இவர்களுக்கு 15 நாட்கள் பயிற்சி தரப்படுகிறது. அதில் 5 நாட்கள் இப்படி வெளி கிராமங்களுக்கும், நகர்ப்புறங்களுக்கும் அழைத்துச் சென்று பயிற்சி அளிப்போம். மருத்துவமனைகளிலிருந்து பயில்வது, வீடுவீடாகச் சென்று, பெண்களையும், ஆடவரையும் சந்தித்துக் குடும்ப நலத்திட்டம் பற்றி எடுத்துரைத்து, அதனைக் கடைப்பிடிக்கத் தூண்டுவது ஆகியவற்றிலும் இவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

ஊழியர்களை ஏற்றிக் கொண்டு ஊர்தி கிராமங்களுக்குச் செல்கிறது.

பெரியபாளையம் முதல் நிலை மருத்துவ நிலைய டாக்டர் ரமாதேவியின் அனுபவம்:—

''நான் இந்த மருத்துவ நிலையத்திற்கு வந்து ஓராண்டுக் காலமாகிறது. மருத்துவ நிலையத்திற்கு மற்ற நோய்களுக்காக வருவதோடு குடும்ப நல ஆலோசனைக்கும் வருகின்றனர். அதோடு நானும் அவ்வப்போது சுற்றுப்புறக் கிராமங்களுக்குச் சென்று மகளிர் மன்றங்கள் மூலமாகப் பெண்களைச் சந்தித்துக் குடும்பநலத் திட்டம் பற்றி எடுத்துரைப்பது உண்டு :

'லூப்' மற்றும் பிற கருத்தடை முறைகளுக்கு இங்கேயே ஏற்பாடுகள் செய்கிறோம். அறுவைச் சிகிச்சைக்கு மட்டும் சென்னை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்கிறோம்.

பொதுவாக எனது அனுபவத்தில் இப்பகுதியில் பெண்கள் குடும்பநலத் திட்டத்தில் மிகுதியாக ஈடுபாடு காட்டுகின்றனர். நாம் மிகுந்த முயற்சி எடுத்தால் அதற்குத் தக்கபடி பலனும் கிடைக்கிறது.

ஊத்துக் கோட்டையில் ஒரு பெண், குடும்பநல ஆலோசனைக்கு வந்தாள். நான் அறுவைச் சிகிச்சைக்கு ஆலோசனை கூறினேன். அவள் முதலில் இணங்கவில்லை. மற்றைய கருத்தடை முறைகளைப் பின்பற்றி வந்தாள். ஆனால் அதனை ஒழுங்கான முறையில் கடைப்பிடிக்காததால் கர்ப்பமாகி விட்டாள். அதன்பின் என்னிடம் மிகவும் வருத்தப்பட்டாள். அடுத்த குழந்தை பிறந்ததும், முதல் வேலையாக அறுவைச் சிகிச்சைக்கு ஒப்புக்கொண்டாள். இப்போது மகிழ்ச்சியோடு குடும்பம் நடத்துகிறாள்.

பாகல்மேட்டில் ஒரு அம்மையாருக்கு, ஓர் ஆண் குழந்தையும் 2 பெண் குழந்தைகளும் இருந்தன. இருப்பினும், இன்னொரு ஆண் குழந்தை வேண்டுமென்று விரும்பினார். குடும்ப நலத் திட்டத்திற்கு இணங்கவில்லை.

ஓர் இளம் தாய்க்கு, குடும்பநல முறைகளை விளக்குகிறார் டாக்டர்.

அடுத்ததும் பெண் குழந்தையே பிறந்தது. உடனே அறுவைச் சிகிச்சைக்குச் சம்மதம் தெரிவித்து விட்டார் அந்த அம்மையார்.

ஆண்பிள்ளை வேண்டும் என்ற வீண் பேராசையினால் பலர் தங்களது குடும்பத்தை அளவுக்கு மீறிப் பெருக விட்டுவிடுகின்றனர். அவர்களைச் சம்மதிக்க வைப்பது தான் மிகவும் சிரமமாகவுள்ளது.

வேறு சிலர் மற்றவர்களின் பேச்சைக் கேட்டு மனம் தடுமாறுகின்றனர். அவர்களுக்குக் குடும்பநலத் திட்டத்தில் ஆர்வம் இருப்பினும், அறுவைச் சிகிச்சை செய்திடும் எண்ணம் இருந்தாலும், கடைசிவரை முடிவு எடுப்பதில்லை. அறுவைச் சிகிச்சைக்கு வந்து, படுத்துத் தயாரான பிறகு கூட, மனக் குழப்பம் அடைந்து, முடிவை மாற்றிக் கொள்ளும் குழப்பவாதிகளும் உண்டு. இவர்களைச் சமாதானப் படுத்துவதற்குள் போதும் போதுமென்றாகி விடும்.

இதற்கு அடிப்படைக் காரணம் கல்வியறிவுக் குறைவும் ஒன்று. அதோடு குடும்ப நலத் திட்டத்தின் பலனை நன்கு உணராமல், இங்கொன்றும் அங்கொன்றுமாக நிகழும் சில சிறு தவறுகளைப் பெரிதாக்கிக் கற்பனை செய்து பார்ப்பதும் ஒரு காரணம்.

ஐயப்பாடுகளை நீக்க இந்தக் குடும்ப நலப் பயிற்சித் திட்டம் ஊழியர்களுக்கும், அவர்கள் மூலமாக மக்களுக்கும் பெரிதும் உதவுகிறது.

இது சமூகப் பிரச்சினை— மனோதத்துவப் பிரச்சினை. எனவே பக்குவமாக, லாவகமாகக் கையாண்டால்தான் நல்ல பலன் கிடைக்கும். இதில் மிகவும் அக்கறையோடு, நல்லுணர்வோடு ஈடுபட்டால், நல்ல பலன் கிடைக்கும் என்ற நம்பிக்கை. எனக்கு நிரம்பவும் இருக்கிறது''

பெரியபாளையம் தனம் சொல்கிறார்:—

நாங்க ஏழைப்பட்ட குடும்பங்க! எங்க வீட்டுக்காரர் தான் சம்பாதிக்கிறாரு! எங்களுக்கு ஒரு ஆணும் ஒரு பெண்ணும் இருந்திச்சு. வயிற்றிலே கர்ப்பம். இந்தப் பிள்ளைகளை வைச்சுக்கிட்டே ரொம்பக் கஷ்டப்படுகிறோம். இனிமே பிள்ளை பிறந்தா எப்படின்னு எனக்கு ரொம்பக் கவலை. எங்க வீட்டுக்காரருக்கும் அப்படித்தான். இதே கவலையிலே அவரு தாடியும் மீசையும் வைச்சுட்டு அலைவாரு! எனக்கு மிகுந்த மனக் கஷ்டமாப்போயிடும்.

அப்போ ஒரு நாள் இந்தக் குடும்பநல ஐயா வந்தாங்க. இந்தமாதிரி அறுவைச் சிகிச்சை செய்திடலாம்னு சொன்னாங்க.

நாங்க டாக்டரம்மாவைப் பார்த்துப் பேசினோம். அவங்களும் குழந்தை பிறந்ததும் செய்திடலாம்னாங்க. அவங்க பேச்சின்படி எனக்கு மூன்றாவது குழந்தை பிறந்ததும் கர்ப்பத் தடை பண்ணிக்கிட்டேன். இப்போ ஒரு பயமும் இல்லே. சவுக்கியமா இருக்கிறோம்.

கதர் - கிராமத் தொழில்கள்

விவசாயிகளுக்கு ஊதியத்துடன் கூடிய வேலைவாய்ப்பளிக்கின்றன

தமிழ் நாட்டுக் கதர் - கிராமத்தொழில் வாரியத்தின் நிறுவனங்களில் உற்பத்தி செய்யப் பெற்ற பற்பல கைநுட்பப் பொருள்கள்.

கதர் கிராமத் தொழில்களை ஆதரிப்பது உணவு உற்பத்திக்கு உழைக்கும் கிராம மக்களுக்கு உதவுவதாகும்

கதர் ~ கதர்ப்பட்டு
சோப்பு ~ தேன்
செக்கெண்ணெய்
தோல்பொருள்கள்
பனைவெல்லம் சர்க்கரை
மண்பாண்டம் ~ வார்ப்படங்கள்
மண்பொருள்கள்
பனைபொருள்கள்
பித்தளை. வெண்கலப்
பாத்திரங்கள்

மேலும்
பற்பல கைநுட்பப் பொருள்கள்

கதர் கிராமத்தொழில்
விற்பனை நிலையங்களில்
கிடைக்கும்.

வெளியீடு:

கதர் கிராமத் தொழில் துறை
உ, சர் தேசிகாச்சாரி ரோடு சென்னை-4.

அவரது 62-வது பிறந்த தின விழாவின் போது
அமரர் அண்ணாவிற்கு
எமது அஞ்சலி!

அவர் நினைவிற்கு எமது நிரந்தரக் காணிக்கை!!
அறிஞர் அண்ணாவின் அழகிய உருவம் தாங்கிய

அண்ணா பிளாஸ்க்

"மனைவி, மக்களுடன் வீட்டில் உணவு உண்டு மகிழும்போதும், உல்லாசப் பிக்னிக்குகளின் போதும், அறிஞர் அண்ணாவை நினைக்கவும், அவரது இலட்சியங்களான 'கடமை, கண்ணியம், கட்டுப்பாடு' ஆகியவற்றை எண்ணவும் உதவுபவை இந்த 'அண்ணா பிளாஸ்குகள்'

Jg

Jg கிளாஸ் இண்டஸ்ட்ரீஸ்
பிரைவேட் லிமிடெட்
பிம்பிரி—பூனா.

இன்றே வாங்குங்கள்
அண்ணா பிளாஸ்க்
எங்கும் கிடைக்கும்

பிறந்த மண்ணுக்குப்
பெரும் புகழ் ஈட்டித்தந்த
பேரறிஞர் அண்ணாவின்
பிறந்தநாளில்
அவரை நினைவு கூர்ந்து
வாழ்த்துரைத்துப்
பெருமை கொள்ளும்
காஞ்சிபுரத்து
நிறுவனங்கள்

தொலை பேசி எண்: 457

எஸ்வி சர்வீஸ் ஸ்டேஷன்

ரெயில்வே ரோடு,
காஞ்சிபுரம்.

குமரன் ரைஸ்மில்

L. No. *118* H. *கணபதி முதலியார்*
L. No. *154* K. *சுப்பிரமணிய நாயகர்*
L. No. *53* L. *செல்வராஜ்*
L. No. *153* S. *மாணிக்கம்*

நெல் & அரிசி வியாபாரம்

7. கைலாசநாதர் கோயில் தெரு,
காஞ்சிபுரம்.

தந்தி: ட்ருத் தொலை பேசி எண்: 559

ஏ. சபாபதி முதலியார் & கோ.

நெல், அரிசி, பருப்பு வியாபாரம்

24. பஞ்சுபேட் பெரிய தெரு,
காஞ்சிபுரம்–2.

தொலை பேசி எண்: 38

A. குப்புசாமி
நெல், அரிசி வியாபாரம்

3/5 சரவண முதலி தெரு,
வாலாஜாபாத்,
செங்கற்பட்டு மாவட்டம்.

கடமை—கண்ணியம்—கட்டுப்பாடு

என்ற மூன்று தாரக மந்திரங்களை
இத்தரணிக்கு விட்டுச் சென்ற தானைத்தலைவா!
நின் இறவாப் புகழ் வாழ்க!
உன் நினைவு எங்கள் நெஞ்சங்களில்
நிலைத்து நிற்க
உன் பாத மலர்களை வணங்குகிறோம்.

ஆர்வீஸ் காபி
காஞ்சிபுரம்–2.

உரிமையாளர் : இரா. வெங்கடேசன்

இருபதாம் நூற்றாண்டின் ஒளிவிளக்கே!
உலகப் புகழ்பெற்ற உத்தமத் தலைவா!
உன் புகழ் வாழ்க!

அரசூஸ் ராணி காபி
534. 537 B, காந்தி ரோடு,
காஞ்சிபுரம்–1.

உரிமையாளர் : R. திருநாவுக்கரசு.

தொலைபேசி எண் : 763

A. D. ராஜா அரிசி ஆலை
நெல் & அரிசி வாணிபம்

உரிமையாளர் : A. தேவராய முதலியார்.
64 B, சாலைத் தெரு,
காஞ்சிபுரம்-2.

தொலைபேசி எண் : 113

அசோகா ரைஸ் மில்
உரிமையாளர் : S. P. ஜெகதீசன்
நெல், அரிசி, வியாபாரம்

வெள்ள குளம் தெரு,
பெரிய காஞ்சிபுரம்-2.

தந்தி : திருகோசில்க்   தொலைபேசி எண் : 222

பட்டு, கைத்தறிக்காக அரும்பாடு பெற்ற
அறிஞர் பெருந்தகை அண்ணாவின்
திருநாமம் வாழ்க ! வாழ்க !

காஞ்சிபுரம் திருவள்ளுவர் பட்டு கைத்தறி
நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி
விற்பனைச் சங்கம் லிட். நெ. G· 2054
207, காந்தி ரோடு (தேரடி எதிரில்)
காஞ்சிபுரம்.

அறிஞர் பெருந்தகையால் திறந்து வைக்கப் பெற்ற எங்கள் புதிய விற்பனை நிலையத்திற்கு தங்கள் தேவைகளுக்கு வருகை தாருங்கள்.

தொலைபேசி எண் : 410

அரங்கசாமி அரிசி ஆலை
நெல் & அரிசி வாணிபம்
உரிமையாளர் : R. ஜானகிராமன்

64-D, சாலைத் தெரு,
காஞ்சிபுரம்-2.

குடும்ப நலத் திட்ட இரு வார விழா!

இந்தியத் துணைக் கண்டத்தில் ஒரு சதுர மைலுக்கு மக்கள் நெருக்கம் சராசரி 340 ஆகும். ஆனால், தமிழகத்தில் ஒரு சதுர மைலுக்கு 600-க்கு மேலெனக் கணக்கிடப்பட்டுள்ளது.

* * *

இந்தியத் துணைக் கண்டத்தில் குழந்தைகள் பிறப்பு விகிதம் 1,000-க்கு 40 ஆக உள்ளது. அதனை 1,000 க்கு 25 ஆகக் குறைத்திட வேண்டுமென்பது குடும்ப நலத் திட்டத்தின் குறிக்கோள்.

* * *

வேளாண்மை பெருகி உணவு உற்பத்தி வளர்ந்துள்ளது ; தொழில் துறையில், உற்பத்திப் பெருக்கம் 150 சதவிதம் உயர்ந்துள்ளது ; தேசிய வருமானம் 75 சதவீதம் உயர்ந்திருக்கிறது. இருந்தும், நாட்டில் இல்லாமை அகலாதது ஏன் ? மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தாததே காரணம் !

* * *

குடும்ப நலத் திட்டத்தில் இந்தியத் துணைக் கண்டத்தில் தமிழகம்தான் முன்னணியில் நிற்கின்றது. தமிழ் நாட்டில் இதுவரை சுமார் 8,50,000 ஆண்களும், 68,700 பெண்களும், குடும்ப நல அறுவைச் சிகிச்சை செய்துகொண்டுள்ளனர். இந்தியா முழுவதற்கும் இவ் வகையில் அறுவைச் சிகிச்சை பெற்றிருப்போரின் எண்ணிக்கை 70 லட்சம்.

* * *

தமிழகத்தில் 566 அறுவைச் சிகிச்சை நிலையங்கள் உள்ளன. இவை ஆண்களுக்கான 'வாசக்டமி' என்ற அறுவைச் சிகிச்சையையும், பெண்களுக்கான 'டுபெக்டமி' என்ற அறுவைச் சிகிச்சையையும் செய்கின்றன.

* * *

இவற்றில் 212 மருத்துவ மனைகளிலும், 292 ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், 38 தனியார் மருத்துவ நிலையங்களிலும், 9 தேயிலைத் தோட்டப் பகுதிகளிலும், 8 நிலையங்கள் நகராட்சிகளின் கீழும், 7 ரெயில்வே துறையிலும் இயங்கி வருகின்றன.

* * *

உலகத்தின் மொத்த நிலப் பரப்பில் 2·4 சத விகிதம் நிலப் பரப்புத்தான் இந்தியாவிடமுள்ளது. ஆனால், உலக மக்கள் தொகையில், 14 சத விகிதம் பேர் இந்தியாவில் இருக்கிறார்கள்.

நம் நாட்டில் ஒவ்வொரு ஒன்றரை வினாடிக்கும் ஒரு குழந்தை பிறக்கிறது. ஆண்டுக்கு இரண்டு கோடியே பத்து லட்சம் குழந்தைகள் பிறக்கின்றன.

* * *

ஒவ்வோர் ஆண்டும் நம் நாட்டில் இறப்பவர்களின் எண்ணிக்கை 80 லட்சம். ஆகையால் ஒவ்வோர் ஆண்டும் நம் நாட்டின் மக்கள் தொகை ஒரு கோடியே முப்பது லட்சம் என்ற கணக்கில் கூடுதலாகிறது. இவ்வெண்ணிக்கை ஆஸ்திரேலியாவின் மொத்த மக்கள் தொகையை விட அதிகமாகும்.

* * *

மக்கள் தொகை 1966 ஆம் ஆண்டு 50 கோடியை அடைவதற்குப் பல்லாயிரம் ஆண்டுகள் பிடித்தது.

* * *

1968 ஆம் ஆண்டு மக்கள் தொகை 52 கோடியாகும். இப்போதுள்ள விகிதத்தில் மக்கள் தொகை பெருகுமானால் இன்னும் இருபத்தாறே ஆண்டுகளில் அது 100 கோடியாகிவிடும்.

தொகுப்பு—தோன்றல்.

செப் 14ஆம் நாள் முதல் 27ஆம் நாள் முடிய


உங்களுக்கு எத்தனை குழந்தைகள்?
ஆறு! அஞ்சு பொண்ணு! ஒரு பையன்!
ஏன்? குழந்தைகள் எல்லாம் மெலிஞ்சு போய் நோஞ்சான்களா இருக்கு?
அளவோடு இருந்தாத்தானே கவனிச்சு வளர்க்க முடியும் தம்பி!
யாரு அந்தப் பாட்டியம்மா? உங்க அம்மாவா?
உஸ்.. அவள் காதிலே விழுந்தா சோறு கிடைக்காது! அவள் என் மனைவி!


மன்னிக்கணும்! உங்களுக்குப் பிறந்தது எத்தனை குழந்தைகள்?
பிறந்தது பத்துங்க! ஒன்பது பொண்ணும் பிறந்துச்சு! எப்படியும் பையன் வேணும்னு இவரு பிடிவாதமா இருந்தாரு! கடைசியில் பையன் பிறந்தான்!
ஆஸ்திக்கு ஒண்ணு வேணும்னு எண்ணி இருந்திருக்காரு!
நீங்க ஒண்ணு! சொந்தத்திலே வீடு கிடையாது! கழுத்திலே பொட்டுத் தங்கம் கிடையாது! பிள்ளையைப் பெத்து பெத்து என் உடம்புதான் ஓடாப் போச்சுது! 40 வயசிலே 60 வயசு கிழவியாய் ஆகிட்டேன்!
அவள் கிடக்கிறா தம்பி! எங்க தேவைகள் என்னன்னு கேட்க வந்ததா சொன்னீங்க! அதை விட்டுட்டு....
உங்களது முதல் தேவை குடும்பக் கட்டுப்பாடு!
அதைக் கடைப்பிடிக்காததால்தான் இந்தத் தட்டுப்பாடு!

குடும்ப நலக் குறள் பத்து!

— புலவர் மு.சிக்கந்தர் —

குடும்ப நலத்திட்டம் கூறும் முறையால்
இடும்பை தவிர்த்தல் எளிது.

கருவுரு வாகாமல் காக்கும் முறைதான்
அறுவைச் சிகிச்சை முறை.

இருமல், வலிப்புநோய், தொண்டைநோய் மூன்றும்
வருமுன் தடுப்பூசி நாடு.

இடைவெளி இன்றிக் குழந்தைகள் ஈன்றால்
உடல்நலங் குன்றும்; உணர்.

அளவாகப் பெற்று வளமாக வாழ
நலங்கூறும் திட்டத்தை நாடு.

திட்டமிட்ட நற்குடும்பம் தேய்வுறு இன்பத்தைக்
கட்டாயம் நல்கல் கடன்.

எற்றுக்கு வேண்டும்? இரண்டு குழந்தைகள்
பெற்றபின் மீண்டும் தொடர்ந்து.

உறைகொண்டும் நல்ல நுரைகொண்டும் இன்பம்
குறைவின்றிச் செய்தல் சிறப்பு.

தாய்சேய் நலம்பெறவும் தாய்நாடு மேம்படவும்
ஆய்ந்தறிந்த திட்டம் அறி.

அளவான நற்குடும்பம் ஆனந்த இல்லம்
அளவினை விஞ்சேல் அறிந்து.

பண்டங்கள்
தரம் நிறைந்தவை
விலை குறைந்தவை
எல்லாம் ஒரே இடத்தில்
அலைச்சல் மிச்சம்
செலவு மிச்சம்
பணத்தைச் சிந்தாமல் சிதறாமல்
செலவு செய்ய..
நாடுங்கள்
காமதேனு
கூட்டுறவு சூப்பர் மார்க்கட்
தேனாம்பேட்டை,
சென்னை 18
(டி. யூ. சி. எஸ். நிறுவனம்)

கலைத்திறன் கொண்ட வெள்ளிப் பொருள்களுக்கும்
வெற்றிச் சின்னங்களுக்கும்
தங்க நகைகளுக்கும்
நம்பிக்கையான இடம்
உம்மிடியார் ஜுவல்லர்ஸ்
உம்மிடி ராமையா செட்டி, குருசாமி செட்டி & கோ.,
வைர நகை, வெள்ளிப் பொருள் விற்பனை நிலையம்,
23-25, N. S. C. போஸ் ரோடு, சென்னை-1.

ஆசிரியர், வெளியிடுபவர்: செய்தித்துறை இயக்குநர், தமிழ்நாடு அரசு. அச்சிடுபவர்: அச்சக எழுதுபொருள்
இயக்குநர், அரசினர் அச்சகம், சென்னை-1.

எதிர்காலத்தை நோக்கி இன்ப ஊஞ்சலில்

செல்வனும் செல்வியும்

[illegible]மான வாழ்வு. எதிர்காலம் பற்றிய [illegible]ச்சமில்லை. புன்னகையுடன் வருங்[illegible]த்தை வரவேற்கக் காத்திருக்கும் [illegible]ழந்தைகளுக்கு மட்டும் [illegible] இன்பச் சூழ்நிலை எப்படி [illegible]? பிறக்கும் போதே [illegible]ட்டத்தை அமைத்துக் [illegible]டா பிறந்தனர்? இல்லை. [illegible] காக்கும் வகையறிந்த [illegible]க் பெற்றோர், திட்டமிட்டுப் [illegible]ச் சேர்த்தனர், திட்டமிட்டே [illegible]த்தைக் காத்தனர். வருவாய் [illegible]ாக இருப்பினும், குடும்பம் விரிவாகவில்லை. திட்டமிட்ட குடும்பமே தெவிட்டாத இன்பம் என்பதை உணர்ந்து போற்றினர்; பின்பற்றினர்.

உங்கள் இன்பமும் உங்கள் குழந்தைகளின் வருங்கால இன்பமும் உங்கள் கரத்திலேயே உள்ளது. திட்டமிட்டுக் குடும்பத்தை அமையுங்கள். மட்டில்லா இன்பம் பெறுவீர்கள்.

தமிழகத்தில் பத்து லட்சம் பேர் குடும்ப நலத் திட்டத்தால் பயனடைந்துள்ளனர். வளமிக்க நிறைவாழ்வும் எழில் குன்று இன்றுடலும் பெற்று மகிழ்கின்றனர். பெற்றோரும் குழந்தைகளும் இனிமைமிக்க எதிர்காலத்தை இப்போதே அமைத்துக் கொண்டனர்.

உங்கள் வாழ்வையும் குழந்தைகளின் எதிர்காலத்தையும் பாழ்படுத்திட வேண்டாம்; பாதுகாத்திடுங்கள்! உங்கள் மருத்துவரைச் சந்தியுங்கள்; நண்பர்களிடம் கேளுங்கள்!

குடும்ப நலத் திட்டப் பணியகத்திற்குச் செல்லுங்கள். பயிற்சி பெற்ற பணியாளர்கள் கனிவு காட்டுவர்; கருத்துரை தருவர்; கருவிகளும் கிடைக்கும்; பயன் பெறுக!

▼

திட்டமிட்ட குடும்பம் தெவிட்டாத இன்பம்

வெளியீடு: இயக்குநர், தமிழ்நாடு அரசு செய்தி விளம்பரத்துறை, சென்னை-9



ஜெட்டார் 2011-25HP (செக்கோஸ்லோவேக்கியா)
வரியுட்பட ரூ. 16,700

பெலாரஸ் 50HP (ரஷ்யா)
வரியுட்பட விலை ரூ. 16,500

எங்களிடம், இவ்வாண்டு (1970-71) இறக்குமதியான டிராக்டர்களும், அவைகளுக்கான உதிரி
இணைப்புப் பாகங்களும் விற்கக் கிடைக்கும்.
மற்றும் செக்கோஸ்லோவேகியா 35HP ஜெட்டார் 3511 டிராக்டரும் (விலை ரூ. 24,000), 35HP [illegible] டிராக்டரும், 35HP [illegible]
கிடைக்கும்.

யூ 650-65HP (ருமேனியா)
வரியுட்பட விலை ரூ 26,500

ஆர்.எஸ்.09-20HP (கிழக்கு
வரியுட்பட ரூ. 14,500

விவரங்களுக்கு:

நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு வேளாண்மைத் தொழில் கழகம்,
122, மவுண்ட் சாலை,
சென்னை-6.